

நெஞ்சுக்கு நீதி

(ஐந்தாம் பாகம்)

கலைஞர்



தி.மு.க. செயல் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களது 65வது பிறந்த நாளையொட்டி அவர் விடுத்த வேண்டுகோளை ஏற்று அவருக்கு அளித்து வரும் புத்தகங்களில் சில புத்தகங்கள் தங்கள் நூலகத்திற்கு வழங்கப்படுகிறது.

தி.மு.க. தலைமைக் கழகம்,
அண்ணா அறிவாலயம்,
சென்னை

திமு.க. அறக்கட்டளை
அறிவாலயம்

நெஞ்சுக்கு நீதி

(ஐந்தாம் பாகம்)

தலைவர் **கலைஞர்**

திருமகள் நிலையம்
புதிய எண்: 13, பழைய எண்: 28
சுகான்ஸ் அப்பார்ட்மெண்ட்ஸ்,
சிவப்பிரகாசம் சாலை,
தி.நகர், சென்னை - 600 017.
☎: 24342899, 24327696
Fax: 91 - 44 - 24341559
email: enquiry@thirumagalnilayam.com

முதற்பதிப்பு: ஜூன், 2013
உரிமை: தமிழ்க்கனி பதிப்பகம் ©

NENCHUKKU NEETHI - PART 5

By: **Kalangar M. Karunanthi**

347#4
B 923.254111
நெஞ்சு.5

First Edition: June, 2013

No. of Pages: 1040

Paper used: 18.6 White Maplitho

விலை ரூ. 600/-

THIRUMAGAL NILAYAM
New No: 13, Old No: 28,
Sugans Appartments,
Sivaprakasam Salai,
T.Nagar, Chennai-600 017.
Phone: 044-24342899, 24327696
email: enquiry@thirumagalnilayam.com
website: www.thirumagalnilayam.com

Laser Typeset By: Sivaa Graphics, Chennai-94. Ph: 8939475707



நெஞ்சுக்கு நீதி (ஐந்தாம் பாகம்)

முன்னுரை

''நெஞ்சுக்கு நீதி'' ஐந்தாம் பாகம் இதோ புத்தகமாக வெளிவரவுள்ளது. இதன் நான்காம் பாகத்திற்கு 15-6-2003 அன்று முன்னுரை எழுதினேன். அதற்குப் பிறகு ஒன்பதாண்டு முடிந்து பத்தாம் ஆண்டில் ஐந்தாவது பாகம் தயாராகி உள்ளது.

உலகத்தில் எத்தனையோ பேர் தங்களுடைய சுயசரிதையை நூலாக எழுதியிருக்கிறார்கள். நான்காம் பாகம் வரை மொத்தம், 2,586 பக்கங்கள்- ஐந்தாம் பாகம் மட்டும் மொத்தம் 1030 பக்கங்கள். 1996ஆம் ஆண்டு முதல் 1999 ஆம் ஆண்டு வரையிலான என்னுடைய வாழ்க்கைச் சரித்திரத்தையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாற்றையும் இந்த ஐந்தாம் பாகத்தில் தொகுத்திருக்கிறேன். 1996ஆம் ஆண்டு முதல் 1999ஆம் ஆண்டு வரையிலான காலம், கழகம் ஆட்சிக் கட்டிலிலே இருந்த காலம் என்பதால் நிகழ்ச்சிகள் அதிகமாகி விட்டன. ஐந்தாம் பாகம் நூலாக தயாரான நிலையிலேயே ஆறாவது பாகத்தினை இரண்டு மாதங்களாக எழுதத் தொடங்கி விட்டேன்.

நான்காம் பாகத்திற்கான முன்னுரையை எழுதும்போது ''காலம் இடம் தந்தால்; அந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு, விட்டுப் போனவைகளையும் இணைத்து ''ஐந்தாம் பாகம்'' தருவதற்கு முயற்சி எடுப்பேன்'' என்று சொல்லியிருந்தேன்.

காலமும் இடம் தந்து, அதை வாய்ப்பாக ஆக்கிக் கொண்டு ஐந்தாம் பாகத்தையும் முடித்து, ஆறாவது பாகத்தையும்

தொடங்கி விட்டேன். ஐந்தாம் பாகம் நூலாக வெளி வருகிறது. ஐந்து பாகங்கள் வரை மொத்தம் 3,616 பக்கங்கள் எழுதியுள்ளேன். இத்தனை பக்கங்களை எழுதியிருக்கிறோமா என்று பார்க்கும்போது எனக்கே மலைப்பாக உள்ளது.

என் வாழ்க்கைச் சரித்திரத்தில் இதுவரை ஆறு பாகங்களை எழுதியுள்ள நான் 12 முறை சட்டப் பேரவைத் தேர்தலிலே நின்று அனைத்திலும் வெற்றி பெற்றிருக்கிறேன். ஒரு முறை மேலவைத் தேர்தலில் நின்று வெற்றி பெற்று அங்கேயும் பணியாற்றியிருக்கிறேன். சற்று விவரமாக அதுபற்றி எழுத வேண்டுமேயானால், முதன் முதலில் 1957ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் நின்று 1962வரை குளித்தலை தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றினேன். 1962ஆம் ஆண்டு தஞ்சாவூர் தொகுதியில் நின்று வெற்றி பெற்று, எதிர்க்கட்சித் துணைத் தலைவராக ஐந்தாண்டு காலம் 1967 வரை பணியாற்றியிருக்கிறேன். 1967ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் சைதாப்பேட்டை தொகுதியிலே நின்று, வெற்றி பெற்ற போது, 1969ஆம் ஆண்டு வரை பேரறிஞர் அண்ணா அவர்களின் அமைச்சரவையிலே பொதுப்பணித் துறை அமைச்சராகப் பணி புரிந்தேன். 1969ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்த பிறகு 1971ஆம் ஆண்டு வரை கழக உறுப்பினர்களின் கட்டளையை ஏற்று முதல் முறையாக முதலமைச்சராகப் பணியாற்றினேன். 1971ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் மீண்டும் சைதாப்பேட்டை தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று 1976ஆம் ஆண்டு வரை இரண்டாவது முறையாக முதல் அமைச்சராகப் பணியாற்றினேன். 1976ஆம் ஆண்டு கழக ஆட்சிக் கலைக்கப் பட்டு ஓராண்டு காலம் ஆளுநர் ஆட்சி நடைபெற்றது. அதன் பிறகு 1977ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலும், 1980ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலும் அண்ணாநகர் தொகுதியில் நின்று வெற்றி பெற்று 1983ஆம் ஆண்டு வரை எதிர்க்கட்சித் தலைவராக பணியாற்றினேன். 1983ஆம் ஆண்டு இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக பேராசிரியரோடு இணைந்து சட்ட மன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தேன். 1984ஆம் ஆண்டு மேலவை

உறுப்பினராகி, அங்கே எதிர்க்கட்சித் தலைவராகப் பணியாற்றினேன். நான் மேலவை உறுப்பினரான காரணத்தினாலேயே 1986இல் மேலவையே கலைக்கப்பட்டது. 1989ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் துறைமுகம் தொகுதியிலே போட்டியிட்டு, வென்று, மூன்றாவது முறையாக முதலமைச்சர் பொறுப்பேற்றேன். 1991ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் மீண்டும் துறைமுகம் தொகுதியிலே போட்டியிட்டு வெற்றி பெற்றேன் என்ற போதிலும், சில நாட்களுக்குப் பிறகு அந்தப் பதவியை ராஜினாமா செய்து விட்டேன். 1996ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் சேப்பாக்கம் தொகுதியிலே போட்டியிட்டு, வெற்றி பெற்று நான்காவது முறையாக முதலமைச்சரானேன். 2001ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் மீண்டும் சேப்பாக்கம் தொகுதியிலே போட்டியிட்டு எதிர்க்கட்சியில் அமர்ந்தேன். 2006ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் மீண்டும் சேப்பாக்கம் தொகுதியில் நின்று வெற்றி பெற்ற போது ஐந்தாம் முறையாக முதலமைச்சராக 2011ஆம் ஆண்டு வரை பணியாற்றினேன். 2011இல் நடைபெற்ற தேர்தலில் திருவாரூர் தொகுதியிலே நின்று வெற்றி பெற்று, சட்டமன்ற உறுப்பினராக உள்ளேன். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமேயானால் ஐந்து முறை முதலமைச்சராக இருந்திருக்கிறேன். இரண்டாண்டுகள் பொதுப்பணித் துறை அமைச்சராக அண்ணாவின் அமைச்சரவையில் பணியாற்றியிருக்கிறேன். 24ஆண்டுகள் எதிர்க்கட்சி வரிசையிலே அமர்ந்திருக்கிறேன். 1957ஆம் ஆண்டு பேரவையிலே நுழைந்த நாள் முதல் 55 ஆண்டுகள் தொடர்ந்து சட்டமன்ற பணிகளை ஆற்றியிருக்கிறேன்.

திராவிட இயக்கத்தின் 100வது ஆண்டுத் தொடக்க விழாவினை நடத்தி முடித்திருக்கிறோம். அந்த நூறாண்டு வரலாற்றில் 90 ஆண்டுகளைக் கழித்தவர்கள் என்று எடுத்துக் கொண்டால் நானும், பேராசிரியரும் அதிலே இடம் பெற்றிருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகம் 1949இல் பிறந்தது. அதற்கு வயது 63 ஆகிறது. அண்ணா அவர்கள் மறைந்த 1969ஆம் ஆண்டிலிருந்து 43 ஆண்டுகளாக இந்த இயக்கத்தின் தலைவனாக இருக்கும் அரும்பெரும்

பேற்றினையும் பெற்றிருக்கிறேன். இயற்கை அளித்த இந்தக் காலத்தில் நான் ஆற்றிய பணிகளின் ஒட்டுமொத்தத் தொகுப்பு தான் இந்த ''நெஞ்சுக்கு நீதி'' மீண்டும் கூறுகிறேன், இது என்னுடைய வாழ்க்கை வரலாறு மட்டுமல்ல; நமது கழகத்தின், தமிழகத்தின் வரலாற்றையும் இணைத்தே எழுதியுள்ளேன். எனக்குப் பிறகும், ஏன் இப்போதும் கூட, இளைஞர் சமுதாயத்திற்கு இந்தத் தொடர் நிச்சயம் பயன்படும் என்பதால் அவர்கள் மனமுவந்து வரவேற்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. எனது இந்த முயற்சிக்கு ஒத்துழைப்பு நல்கி வரும் தமிழ்ச் சமுதாயத்திற்கும், வரலாற்று ஆய்வாளர் களுக்கும், என் உயிரனைய கழக உடன்பிறப்புக்களுக்கும், இந்த ஐந்தாம் பாகத்தை நூலாக வெளியிடும் திருமகள் நிலையத்தாருக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

அன்புள்ள

29/9/2012

(மு.கருணாநிதி)

நெஞ்சுக்கு நீதி
(ஐந்தாம் பாகம்)
நிகழ்ச்சி சுருக்கம்

1. முன்னுரை
2. 1996 பொதுத் தேர்தல் முடிவுகள் 26 - 39
3. வாஜ்பாய், தேவகவுடா பதவியேற்பு 43
4. அம்பேத்கர் பல்கலைக் கழகம் 56
5. சூப்பர் ஸ்டார் சூளுரை 63
6. மதுவிலக்கு - எம்.ஜி.ஆர். கருத்து 81 - 86
7. 2001இல் கலைஞர் கைதான சம்பவங்கள் 97
8. பெரியார் வழங்கிய பிறந்த நாள் வாழ்த்து 117
9. நேபாள மன்னர் குடும்பத்தில் நடைபெற்ற கொலை 119
10. வங்க தேசத் தேர்தல். 126
11. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு 132
12. சதாம் உசேன் - கோமெனி - ஈரான் 136
13. தண்ணீர் தேசம் வெளியீடு 154
14. நூல்கள் வெளியான பட்டியல் 156
15. எம்.ஜி.ஆர். திரைப்பட நகர் 180
16. மாவட்டங்களுக்குப் பெயர் மாற்றம் 186
17. வழக்கறிஞர் சண்முகசுந்தரம் மீது தாக்குதல் 187

18. மத்திய அமைச்சரவையில் டி.ஆர், பாலு, என்.வி.என்.சோமு. 192
19. திராவிடப் பல்கலைக் கழகம் 195
20. நெல்சன் மண்டேலா 200
21. திரைப்பட விருதுகள் வழங்கும் விழா 206
22. காவல் துறை தலைவர் அலுவலகம் 212
23. சிறைக் கைதிகள் விடுதலை 217
24. கலைவாணர் நினைவு நாள். 218
25. மாநகராட்சி மன்றத் தேர்தல் - மேயர் மு.க.ஸ்டாலின் 222
26. கிருஷ்ணா நதி நீர் வருகை 237
27. கரும்பு தேசத்து இரும்பு மனிதன் பிடல் காஸ்ட்ரோ 242
28. உ.வே.சா.நூலகம் 258
29. திருவாரூர் தேரும், திருவள்ளூர் கோட்டமும் 261
30. சாய்பாபா வருகை - மஞ்சள் சால்வை 265
31. நாகையில் மாதா அமிர்தானந்தமயி - நாராயணி பீடம் 271
32. விஜயகாந்த் கட்டுரை - முப்பெரும் விழா 275
33. திட்டக் குழுவில் மது தண்டவதே 283
34. நீலநாராயணன், பெரியண்ணன், சென்னா ரெட்டி மறைவு 292
35. ஜெயின் கமிஷன் விசாரணை 303
36. விடுதலைப் புலிகள் பிரச்சினை 313
37. ஜெயலலிதா மீதான தீர்ப்பு, பாதுகாப்பு, சோதனை 322
38. கழக ஆட்சியில் தொழில் வளர்ச்சி 335
39. சிங்கார வேலர் மாளிகை 339
40. முரசொலி அறக்கட்டளை விருதுகள் 343

41. டெல்லி தமிழ்ச் சங்க விழா 350
42. மதுரை லீலாவதி மீது நடவடிக்கை 359
43. ஐ.கே.குஜ்ரால் பிரதமர் 370
44. சி.வி.எம்.அண்ணாமலை மறைவு 378
45. கபாலி கோவிலில் சமபந்தி விருந்து 384
46. சாதிக் கலவரங்கள் 390
47. மாவட்டங்களுக்கு பெயர் மாற்றம். 400
48. முரசொலி மாறன் கடிதம் 405
49. 74வது பிறந்த நாள் விழா 416
50. கே.ஆர்.நாராயணன், குடியரசு தலைவர் 425
51. கட்சித் தேர்தல் 432
52. தஞ்சைக் கோவிலில் தீ 435
53. கலந்து கொண்ட விழாக்கள் 438
54. திறந்து வைத்த நினைவிடங்கள் 440
55. கேரளத்தில் திருவிழாவில் யானை 446
56. 356வது பிரிவை நீக்க கடிதம் 448
57. ஏ.கே.வில்வம் மறைவு 453
58. சேலம் கழக மாநாடு 455
59. திரைப்படத் துறையினர் சந்திப்பு 466
60. சந்தனக் கடத்தல் வீரப்பன் ராஜ்குமாரைக் கடத்தல் 480
61. மனோன்மணீயம் சுந்தரனார் பெயரில் பல்கலைக் கழகம் 487
62. தங்கபாண்டியன் மறைவு 492
63. சுதந்திர தின பொன்விழா 496

64. கக்கன் சிலை திறப்பு 503
65. கனிமொழி மணவிழா 507
66. டயானா விபத்து 519
67. அன்னை தெரசா 515
68. டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது 532
69. பெரியார் பல்கலைக் கழகம் திறப்பு 538
70. நெஞ்சுக்கு நீதி 3ம் பாகம் வெளியீடு 548
71. செங்கல்வராயன் வாழ்த்து 549
72. பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம் 552
73. ராணி எலிசபெத் தமிழகம் வருகை 558
74. என்.வி.என். சோமு விபத்தில் மரணம் 559
75. ஜெயின் கமிஷன் இடைக்கால அறிக்கை 565
76. பாமக அதிமுகவுடன் உறவு 591
77. மூப்பனார் பேட்டி 592
78. நாடாளுமன்றத் தேர்தல். 595
79. கோவை வெடிகுண்டு சம்பவங்கள் 600
80. வாஜ்பாய் அரசுக்கு அதிமுக ஆதரவு 608
81. நிதிநிலை அறிக்கை மீது விவாதம் 620
82. திமுக அரசைக் கலைக்க அதிமுக முயற்சி 626
83. ராமகிருஷ்ண ஹெக்டே பேட்டி 630
84. பாபர் மசூதி பிரச்சினை 639
85. பா.ஜ.க.வுடன் தோழமை பற்றி பேட்டி 640
86. பக்தவத்சலனார் நினைவிடம் 649
87. பா.ஜ.க. அ.தி.மு.க. நெருக்கம் 651

88. எம்.ஜி.ஆர்.சிலை 660
89. சின்னத்திரையில் தென்பாண்டிச் சிங்கம் 671
90. முரசொலி விருதுகள் 673
91. ஜீவானந்தம் சந்திப்பு 679
92. மூலதனம் வெளியீடு 690
93. நூல்கள் நாட்டுடமை 692
94. பவள விழா 698
95. காவிரி நடுவர் மன்றம் 714
96. சுதந்திரத் திருநாள் பொன் விழா 733
97. தூர்வாரும் பணி 740
98. குமாரசாமி ராஜா சாலை 747
99. பிற்படுத்தப்பட்டோர் நலன் 751
100. ஜெயின் கமிஷன் பற்றி வி.பி. சிங் 765
101. எம்.ஜி.ஆர். பல்கலைக் கழகம் திறப்பு 771
102. ஓமந்தூரார் நூற்றாண்டு விழா 774
103. டி.என்.ராஜரத்தினம் 783
104. அஞ்சுகச் செல்வி திருமண விழா 789
105. நெல்லை சிறப்பு மாநாடு 791
106. நேரு அரங்கில் கலை விழாவா? 800
107. இந்தியன் எக்ஸ்பிரஸ் பேட்டி 816
108. மூன்றாவது அணி 829
109. ஆடம்பரம் கூடாது. 830
110. டெல்லியில் ஜெயலலிதா தேநீர் விருந்து 835
111. ரூசோ கொலை 837

112. வேலூர் தேவராஜ் மறைவு	840
113. குமுதம் பேட்டி	842
114. பரிமளம் நிச்சயதார்த்தம்.	847
115. பொன்முடி புத்தகம் வெளியீடு	848
116. காஞ்சிபுரம் ரயில்வே நிகழ்ச்சி	853
117. நான்கு மாநிலத் தேர்தல்	857
118. ஈரான் ஈராக் போர்	862
119. சிப்பாய்க் கலகம் நினைவுத் தூண்	870
120. உயர்நீதி மன்றத்தில் தமிழ்	871
121. தமிழ் பயிற்று மொழி	881
122. விசுவநாததாஸ் நினைவகம்	889
123. பூலித்தேவன் மாளிகை திறப்பு விழா	898
124. சிறப்பு நீதிபதிகள் நியமனம்	904
125. சிறு வணிகக் கடன் திட்டம்	911
126. சிங்கப்பூர் பயணம் - பேட்டி	918
127. மலேசியாவில் நிகழ்ச்சிகள்	926
128. தமிழ்நெட் 99	929
129. வாஜ்பாய் அமைச்சரவை	931
130. முத்தமிழ்ப் பேரவை 24வது ஆண்டு இசை விழா	933
131. நடிகர் திலகம் பாராட்டு	936
132. மணவழகர் மன்ற விழா	940
133. அய்யணன் அம்பலம் மணிமண்டபத் திறப்பு விழா	941
134. வடுகபட்டியில் நூலகம் திறப்பு	943
135. மதுரையில் மண விழாக்கள்	945

136.	பீகார் ரன்வீர்சேனா அமைப்பு	950
137.	ஆளுநர் உரையில் அருந்தியருக்கு சலுகை	954
138.	திருநாவுக்கரசர் பேரவையில் விளக்கம்	959
139.	டாக்டர் ராமதாஸ் கைது	970
140.	தலைமைச் செயற்குழுவில் தீர்மானம்	974
141.	வாஜ்பாய் அரசு குறித்து கலைஞர் பேட்டி	978
142.	பாஜக அரசுக்கு அதிமுக பரிந்துரைகள்	980
143.	நாடாளுமன்றத்தில் முரசொலி மாறன் உரை	986
144.	செங்குன்றம் ஏரி உடைப்பு	994
145.	பாஜக. உறவு குறித்து கலைஞர் பதில்கள்	997
146.	நிர்வாகக் குழு நாடாளுமன்றத் தேர்தல் பற்றி தீர்மானம்	1014
147.	வாழப்பாடி ராமமூர்த்தி, ராமதாஸ் சந்திப்புகள்	1021
148.	தேசிய ஜனநாயகக் கூட்டணி உதயம்	1023
149.	கழகப் பொதுக் குழு	1028
150.	ஐந்தாம் பாகம் நிறைவு	1035

விரலாறு வரைந்த வரலாறு!

- கவிஞர் வாலி

ஆம்;
ஆரம்பம் ஆகிறது - இவ்
ஆங்கில
ஆண்டு...

அஞ்சாம் மாதம் நாலாம் தேதி-
அஞ்சாம் பாகம் 'நெஞ்சுக்கு நீதி'!
எம்மனோர்க் கெல்லாம்
ஏது - இதனினும்
அக்கார அடிசிலாய்
அண்ணிக்கும் சேதி?

★ ★ ★

முன்னம்
முகிழ்த்த-
நான்கு பாகங்களைப் படித்தோர்
நன்கு அறிவர்...
இந்த நூல்
இருபதாம் நூற்றாண்டின்
உன்னத வரலாறு என்று - இது
உண்மை - வெறும் புகழ்ச்சி அன்று!


★ ★ ★

தமிழ் வாழ்வு;
தமிழர் வாழ்வு;
இவ்
இரண்டிலிருந்து-
தலைவர் கலைஞர் வாழ்வைத்
தனியே பிரிக்க இயலாது!
சரித்திரம் - அவரைச்
சான்றாகக் கொள்ளாமல்-
தன்னிச்சையாய் - ஒரு
தப்படி எடுத்து வைக்க முடியாது!

★ ★ ★

ஏந்தும்
எழுதுகோலையும் -சேர்த்து
எண்ணும் பட்சத்தில்
எந்தை கலைஞர் பெருமானுக்கு...
வலக்கையில்
விரலாறு; அவ்
விரலாறு வரைகிறது - மீண்டும் தன்
வரலாறு!

★ ★ ★


கவிஞர் வாலி

தமிழினத்
தலைவர் -
எழுதுகோலை
எடுத்து...

எவ்வப்பொழுது
எவ்வப்பொழுது எழுதுகிறாரோ-
அவ்வப்பொழுது
அவ்வப்பொழுது...
தமிழ்
தன்னைப் புதுப்பித்துக் கொள்கிறது!
சுருங்கச்
சொன்னால்...
தமிழே- கலைஞரின்
தமிழ்மேல் புதுப் 'பித்து'க் கொள்கிறது!

★ ★ ★


நெஞ்சை யள்ளவல்ல - இந்த
''நெஞ்சுக்கு நீதி''...
ஒரு-
புதினமல்ல; புனைக் கதையல்ல; தமிழ்
நிலத்தில் நிகழ்ந்த - நேற்றைய
நிகழ்வுகளின் தொகுப்பு; இதனைப்
பாடமாகப்
படித்தால் -
பயன்பெறும்
பள்ளி வகுப்பு!

★ ★ ★

1. ஓய்வுக்கு ஓய்வு

''85 வயதில் ஐந்தாம் பாகம் படைக்கப் பொதுவாழ்வின் ''லகான்'' எல்லார் கையிலும் இருப்பதில்லை'' என்று கவிப்பேரரசு தம்பி வைரமுத்துவின் வியப்பு, இதோ வாழ்த்தாக வந்துள்ளது. அந்த ''லகான்'' என் கையில் இல்லாமல், என் பொதுவாழ்வின் கையில் இருப்பதால்தான் ஓய்வுக்கு ஓய்வு கொடுத்து விட்டு இந்த வண்டி ஓடிக் கொண்டிருக்கிறது.

வேதனைகளையும், சோதனைகளையும் கடந்திடாத சாதனைகள் இருக்க முடியுமா? அப்படியிருந்தால், அவை சாதனைப் பட்டியலில்தான் இடம் பெற முடியுமா? இதோ, இந்த 5ஆம் பாகத்தை எழுதிடத் தொடங்கும் சமயத்தில், என்னைச் சுற்றியுள்ள இந்திய நாட்டின் தமிழ் மாநில வட்டத்துக்குள்ளிருந்து; என் தமிழர்களை வட்டத்துக்கு வெளியேயும் பல்வேறு நாடுகளில் பார்க்கிறேன்.



அவற்றில் ஒன்று இலங்கை என்பதையும், அங்கே ஏறத்தாழ ஐம்பதாண்டு காலத்திற்கும் மேலாக தமிழ் மக்கள் உரிமைக் குரல் எழுப்பி வருவதையும் -உயிர்ப்பலி கொடுத்து வருவதையும் -நினைத்து நினைத்து நித்தம் நித்தம்- நெஞ்சு வெடித்திடும் நிலை இன்னமும் நீடிப்பதா என்ற ஏக்கத்தின் எதிரொலியாக, 2008 ஏப்ரல் 23ஆம் நாள் தமிழகச் சட்டப் பேரவையில், ''இலங்கையில்



இலங்கையில் அமைதி காண மத்திய அரசு உதவ வேண்டுமென்ற தீர்மானத்தை முன்மொழிந்து, தாங்கள் ஆற்றிய உருக்கமான உரை உலகத் தமிழர் வரலாற்றில் நிலைத்து நிற்கும்!

-தமிழறிஞர் வா.செ.குழந்தைசாமி


அமைதியை ஏற்படுத்துவதற்காக அங்கே மோதலில் ஈடுபட்டுவரும் இரு பிரிவினரிடையேயும் பேச்சு வார்த்தைகளுக்கு இந்திய அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். இலங்கையில் அமைதியை ஏற்படுத்த, முறையான தொரு அரசியல் தீர்வு எட்டப்படுவதற்காகப் பயனுள்ள பேச்சு வார்த்தைகளுக்கு ஏற்பாடு செய்ய மத்திய அரசு முன்வர வேண்டும்'' என்றத் தீர்மானம் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டது. தீர்மானத்தை முன்மொழிந்தும் - மற்ற கட்சியினர் எடுத்துரைத்த கருத்துக்களை வழிமொழிந்தும் -அப்போது நான் ஆற்றிய உரை குறித்து சிறந்த தமிழறிஞரும், சிந்தனையாளருமான முனைவர் வா.செ.குழந்தைசாமி அவர்கள் எனக்கு எழுதியுள்ள கடிதம் வருமாறு:-

''இலங்கையில் அமைதி காண மத்திய அரசு உதவ வேண்டும் என்ற தீர்மானத்தை முன்மொழிந்து, தாங்கள் ஆற்றிய, உருக்கமான, சொற்பொழிவைப் படித்தேன். ஈழத்தமிழர் தலைவிதியை எண்ணிக் கலங்கி இருக்கும் உலகத் தமிழ் நெஞ்சங்கள், தங்கள் சொற்பொழிவைப் படிக்கும் போது மௌனமாகத் தேம்பி இருக்கும். தமிழர் ஒரு மொழியினர்; பல நாட்டினர். எல்லா நாட்டிலும்



85வயதில் 5ஆம் பாகம் படைக்கப் பொதுவாழ்வின் ''லகான்'' எல்லார் கையிலும் இருப்பதில்லை... உங்கள் பெருவாழ்வு தனிமனித நிகழ்வல்ல - சரித்திரத்தின் பதிவு!

- கவிப்பேரரசு வைரமுத்து



கலைஞர் ஆற்றல் மிகுந்த தலைவர்! எத்தனை சோதனைகள் வந்தாலும் பாறைபோல் உறுதி உடையவர்!

- ப.சிதம்பரம்

சிறுபான்மையர். இலங்கையில் தங்கள் நிலத்தை ஆண்ட தமிழர், இன்று சிறுபான்மை ஆகிவிட்ட ஆதிக்குடியினர், தங்கள் உரிமைக்காக அறவழியில் போராடினர்; அரசியல் பிழைத்தோர் ஆட்சி நடந்ததால், அற வழியினரைப் புறந்தள்ளி ஆயுதம் தாங்கியோர் தலைமை ஏற்கும் சூழ்நிலையை ஆட்சியிலிருந்தோர் உருவாக்கினர். எது எப்படி இருப்பினும் தமிழர்தம் கோரிக்கை எவ்வளவு நியாயமானது; அவர்கள் உரிமை எவ்வளவு புனிதமானது; உலகின் ஒருமித்த ஆதரவுடன் தங்கள் வேட்கைக்கு வெற்றி கண்டிருக்க வேண்டியவர்களுடைய இன்றைய நிலையை எண்ணிக் கலங்கியிருக்கும் தங்கள் சொற்பொழிவு, ஒரு கட்சித் தலைவனின் சட்ட மன்றச் சொற்பொழிவு அன்று; அது ஒரு தமிழ் உள்ளம் படைத்த கவிஞனின் ஏக்கத்தின் எதிரொலி. சூழல் வேறாயினும், அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஆப்ரகாம் லிங்கனின் புகழ்மிக்க ''கெட்டிஸ் பர்க்'' சொற்பொழிவு போன்ற இந்த உரை, உலகத் தமிழர் வரலாற்றில் நிலைத்து நிற்கும்.''

இது போன்ற பாராட்டுரைகள்தான் - என் பாலைவனப் பயணத்தில் பசுஞ்சோலையாகவும் - பத்தரை மாற்றுத் தங்கப் பதக்கங்களாகவும் -எனக்கு உற்சாகமூட்டுகின்றன.

தி.மு.கழகத்தின் தலைவர் பணி - தமிழகத்தின் முதலமைச்சர் பணி - சட்டப் பேரவை நிதிநிலை அறிக்கை கூட்டத் தொடர் - கட்சியிலே கிளைக் கழகச் செயலாளர் முதல் தலைமைக் கழகம் வரை பொதுத் தேர்தல் - எழுத்துப் பணி - சுற்றுப் பயணங்கள் - இவற்றுக்கிடையே ''நெஞ்சுக்கு நீதி'' ஐந்தாம் பாகம் தொடங்கும் என்று ஏடுகளில் அறிவிப்பு செய்து விட்டேன். நேரம் கிடைக்குமா? என்ற கவலை பெரிதாக




கருணாநிதி ஆதரித்தாலும் உறுதியாக ஆதரிப்பார் - எதிர்த்தாலும் உறுதியாக எதிர்ப்பார்!

- இந்திரா காந்தி

உள்ளது. தொடங்கி விட்டால் பின்னர் எப்படியும் எழுதித்தானே தீர வேண்டும் என்ற உறுதியோடு அறிவிப்பு வெளி வந்துவிட்டது. ஐந்தாம் பாகத்தைத் தொடங்குவதற்கு முன்பு, இதுவரை வெளிவந்துள்ள நான்கு பாகங்களைச் சற்றுத் தொட்டுப் பார்த்துச் செல்வது நலம் என்று கருதுகின்றேன்.

நான்காம் பாகத்தினை 55 அத்தியாயங்களோடு முடித்திருந்தேன். அதனை முடிக்கும்போது, கடைசி பத்தியாக ''ஐந்தாம் பாகம் எழுதும் வாய்ப்பை எனக்கு இயற்கை வழங்காவிடில்; அதனை யாரேனும் எழுதி வெளிவந்தால், அத்துடன் இணைத்துக் கொள்ளத்தான் 1996 முதல் 2001 வரையிலான கழக ஆட்சி சாதனைகளை, **''சாதனைச் சரித்திரம்''** என்ற பெரிய புத்தகமாக வெளியிட்டிருக்கிறேன்'' என்று முடித்திருந்தேன். முதல் அமைச்சர் பொறுப்பிலே அமர்ந்து, 1996ஆம் ஆண்டு முதல் 2001ஆம் ஆண்டு வரை கழக அரசின் சார்பிலே துறை வாரியாக செய்யப்பட்ட சாதனைகளின் தொகுப்பே **''சாதனைச் சரித்திரம்''**. அந்த ஆவணத் தொகுப்பு இன்றளவும் ஆராய்ச்சிக்குரிய தொகுப்பாக - கடந்தகால கழக ஆட்சியில் தமிழ், தமிழர், தமிழ்நாட்டின் நலனுக்கும், மேம்பாட்டுக்கும் எவற்றையெல்லாம் செய்தோம் என்று இன்றைக்கும் எடுத்துப் பார்த்து ஒப்பீடு செய்து தெளிவு பெறக்கூடிய அளவிற்கு சாதனைக் காவியமாக விளங்கிக் கொண்டுள்ளது.

''**நெஞ்சுக்கு நீதி**''யின் முதல் பாகம் என்பது நான் பிறந்த 1924ஆம் ஆண்டு முதல் 1969ஆம் ஆண்டு, நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்கும் வரையில், தந்தை பெரியார் அவர்களின் அடியொற்றிய தொண்டனாகவும், பேரறிஞர் அண்ணா அவர்களின் அன்புக்குப் பாத்திரமான



ஆயிரம் காலத்துப் பயிரான இந்தக் கழகத்தைத் தொடர்ந்து காப்பாற்ற வேண்டும் என்பதே எனக்கு என்றுமே தணியாத ஆசை!

தம்பியாகவும் இருந்து ஆற்றியப் பணிகள் பற்றிய சம்பவங்களை உள்ளடக்கியதாகும். அந்த முதல் பாகம் மொத்தம் 755 பக்கங்களைக் கொண்டது. 141 அத்தியாயங்களோடு முடிந்தது. அண்ணா அவர்கள் மறைந்தபோது, நான் எழுதி வானொலியில் படித்த இரங்கல் கவிதை பற்றி மறைந்த எஸ்.எஸ்.வாசன் அவர்கள், ''அண்ணாவின் இதயத்தை இரவலாகக் கேட்டிருக்கிறீர்கள். அது இதுவரை எந்தக் கவிஞருக்கும் தோன்றாத கற்பனை'' என்று எழுதிய மடலுடனும், அந்த இரங்கல் கவிதையுடனும் முடித்திருந்தேன்.

''நெஞ்சுக்கு நீதி''யின் இரண்டாம் பாகம் 1969 முதல் 1976 வரையிலான ஏழாண்டு காலத்தில், என் வாழ்க்கை சம்பந்தப்பட்ட - மற்றும் கழக வரலாறு சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளின் தொகுப்பாக அமைந்தது. ''நெஞ்சுக்கு நீதி''யின் முதற்பாகத்தை அருமை நண்பர் மறைந்த சாவி அவர்களின் விருப்பத்தின் பேரில் அவர் ஆசிரியராகப் பணியாற்றிய ''தினமணி கதிர்'' வார இதழில் தொடர்ந்து எழுதினேன். அவர் பின்னர் ''தினமணி கதிர்'' இதழிலிருந்து விலகி ''குங்குமம்'' இதழில் பணியாற்றியபோது, ''நெஞ்சுக்கு நீதி''யின் இரண்டாம் பாகத்தினை ''குங்குமம்'' இதழிலே எழுதினேன்.



நானும் கருணாநிதியும் ஒரே ராசி. அது எங்களை இணைத்து வைக்கும் - நாங்கள் சேர்ந்தே இருப்போம்!

-சென்னா ரெட்டி

இரண்டாம் பாகத்தினை நான் எழுதி முடிக்கும்போது அறுபது வயதைக் கடந்து விட்டேன். அதுவே நூலாக வெளிவர முயற்சி எடுத்து, அதற்காக என் முன்னுரையைக் கேட்டபோது, என் வயது 62. இரண்டாம் பாகத்திற்கான என் முன்னுரையில், ''இந்த அறுபத்து இரண்டு ஆண்டுகளில் - மிகப் பெரும் பகுதி - பொது வாழ்வுக்கே செலவாகியிருக்கிறது என்பது, என் இதயத்துக்கு ஆறுதலைத் தரவல்ல தாகும். எஞ்சியிருக்கும் நாட்களும் சிறப்பாக தமிழுக்கும், தமிழின மக்களுக்கும் - பொதுவாக மக்கட்பணிக்கே பெரிதும் பயன்பட வேண்டுமென்பது என் தணியாத ஆசை'' என்று எழுதியிருந்தேன். அந்த ஆசை முற்றிலும் நிறைவேறியுள்ளது என்ற மன திருப்தியோடுதான் ஐந்தாம் பாகத்தைத் தொடங்குகின்ற இந்த நேரத்தில் என் எண்ண ஓட்டம் அமைந்துள்ளது.

இரண்டாம் பாகம் 586 பக்கங்களைக் கொண்டது. 81 அத்தியாயங்கள். நெருக்கடி நிலை முடிந்தும் முடியாத நிலையில் - அதனையொட்டி கைது செய்யப்பட்டவர்கள் எல்லாம் விடுதலை செய்யப்பட்ட நிலையில் - மிசாக் கைதியாக சிறையில் வாடிய மாவீரன் சிட்டிபாபுவின் மரணத்தோடு இரண்டாம் பாகத்தை நிறைவு செய்திருந்தேன்.


1976க்குப் பிறகு 1991 வரையிலான 15 ஆண்டு கால சரித்திர நிகழ்வுகளைத் தொகுத்து, மூன்றாம் பாகத்தை எழுதியபோது 1988ஆம் ஆண்டு வரையிலான சம்பவங்கள் தான் அதிலே முழுமையாக எழுதப்பட்டன. இந்த மூன்றாவது பாகம் நூலாக வெளியிடப்பட்டபோது, 16.5.1997 அன்று எழுதிய முன்னுரையில், ''நான்காவது பாகத்தை நானே எழுதுவேனா? அல்லது நான் எழுதாமலே நாட்டு மக்கள் இதயத்தில் இந்த

வரலாற்றுக் குறிப்புகள் வரிகளாக வடிவங் கொள்ளுமோ என்பதை நிர்ணயிக்கப் போவது இயற்கை தானே?'' என்று எழுதியிருந்தேன். ஆனால், அந்த நான்காவது பாகத்தை நானே எழுதி, அதுவும் புத்தகமாக வெளியிடப்பட்டு, தற்போது ஐந்தாவது பாகத்தையும் நான் எழுதத் தொடங்குகின்ற அளவிற்கு இயற்கை இடம் கொடுத்துள்ளது. மூன்றாம் பாகம் 612 பக்கங்களைக் கொண்டது. மொத்தம் 74 அத்தியாயங்கள். அந்த மூன்றாம் பாகத்தை முடிக்கும்போது, ''ஆயிரம் காலத்துப் பயிராம் இந்தக் கழகத்தைத் தொடர்ந்து காப்பாற்ற வேண்டும் என்பதே எனக்கு என்றுமே தணியாத ஆசை'' என்று முடித்திருந்தேன். அந்த ஆசையை நிறைவேற்றியுள்ளேனா இல்லையா என்பதை தமிழ்நாட்டு மக்கள்தான் கூற வேண்டும்.

1989 முதல் 1996ஆம் ஆண்டு வரையிலான நிகழ்வுகள் முறையாகத் தொகுக்கப்பட்டு - 1996ஆம் ஆண்டுக்குப் பிறகு நடந்த சில முக்கிய நிகழ்வுகள் கடைசி அத்தியாயத்தில் இணைக்கப்பட்டு வெளி வந்திருப்பதே நான்காம் பாகம். 2003ஆம் ஆண்டு நான்காம் பாகம் நூலாகவே 633 பக்கங்களைக் கொண்டு 55 அத்தியாயங்களோடு வெளி வந்துள்ளது. ஆக, இந்த நான்கு பாகங்களிலுமாகச் சேர்ந்து என் வாழ்க்கை வரலாறு 2586 பக்கங்கள் இதுவரை எழுதப்பட்டு, 2587ஆவது பக்கத்திலிருந்து ஐந்தாம் பாகமாக தொடங்கப் படுகிறது.

நான்காம் பாகத்தை என் எண்பதாவது அகவையில் அடியெடுத்து வைத்தபோது நூலாகத் தந்த நான், ஐந்தாம் பாகத்தை 84ஆம் வயதில் எழுதத் தொடங்குகிறேன். 1996ஆம் ஆண்டு முதல் என் வாழ்க்கையில் நடைபெற்ற சம்பவங்களும் - நான் தலைவனாகப் பொறுப்பேற்றுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தில் நடைபெற்ற சம்பவங்களும் இணைந்து வெளிவரவிருப்பது தான் ''நெஞ்சுக்கு நீதி'' தொடரின் ஐந்தாம் பாகம் ஆகும்.

எனது வாழ்க்கை வரலாற்று நூல் என்று இது அழைக்கப்பட்டாலும், என் வாழ்க்கை வேறு, தி.மு.கழகத்தின் வாழ்க்கை வேறு என்ற வித்தியாசம் இல்லாமல் இரண்டுமே



கலைஞரும் சென்னா ரெட்டியும் இரண்டு சிங்கங்கள். இருவரும் சேர்ந்தே இனி கர்ஜனை புரிவார்கள்!

-முரசொலி மாறன்

இரண்டறக் கலந்த ஒன்று என்பதால், இந்த இரண்டையும் கலந்துதான் இந்த நான்கு பாகங்களும் எழுதப்பட்டு வெளி வந்துள்ளன. நான்காம் பாகத்தின் இறுதியில், 1995ஆம் ஆண்டு டிசம்பர் வரை விரிவாக எழுதி விட்டு, இறுதியாக முடிக்கும்போது, 1996ஆம் ஆண்டுக்குப்பின் நடைபெற்ற ஒரு சில வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளைப் பற்றிச் சுருக்கமாக சில பத்திகள் மட்டுமே எழுதியிருந்தேன்.

1996ஆம் ஆண்டு பொதுத் தேர்தல்கள் முடிவுற்ற நிலையில் தமிழகத்திலே தி.மு.கழக ஆட்சி அமைந்தது குறித்தும், பதவியேற்ற பின் நான் டெல்லி சென்று, மத்தியிலே ஆட்சி அமைக்கும் பணியிலே ஈடுபட்டது குறித்தும் எழுதி முடித்திருந்தேன். அவற்றின் தொடர்ச்சியாக தற்போது **''நெஞ்சுக்கு நீதி''**யின் ஐந்தாம் பாகம் தொடங்குகின்றது.

1996ஆம் ஆண்டு மத்திய அரசுக்கும், தமிழக மாநில அரசுக்கும் இணைந்தே பொதுத் தேர்தல் நடைபெற்றது என்பதும், அந்தத் தேர்தலில் தமிழக காங்கிரஸ் இரு பிரிவாகப் பிரிந்து, **மூப்பனார்** தலைமையில் தமிழ் மாநிலக் காங்கிரஸ் என்ற ஒரு புதிய அமைப்பு உருவாகி, அந்த காங்கிரஸ் தி.மு.கழக அணியை ஆதரித்தது. அந்த உறவுக்கு வித்திட்டவர் நண்பர் **'துக்ளக்'' சோ** என்றுதான் சொல்ல வேண்டும். காங்கிரசின் மற்றொரு பிரிவு, அப்போது டெல்லியில் பிரதமராக இருந்த நரசிம்மராவ் அவர்களின் விருப்பப்படி அ.தி.மு.க. அணியை ஆதரித்தது.

அப்போது நான் போட்டியிட்ட சேப்பாக்கம் தொகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்தில் கலந்து கொண்ட போது, நண்பர் **ப.சிதம்பரம்** அவர்கள், ''கலைஞர் ஆற்றல் மிகுந்த தலைவர். ஐம்பதாண்டு கால அரசியல் அனுபவம். எத்தனை



கே.ஆர். நாராயணன்

சோதனை வந்தாலும் பாறை போல் உறுதி உடையவர். ''கருணாநிதி ஆதரித்தாலும் உறுதியாக ஆதரிப்பார் - எதிர்த்தாலும் உறுதியாக எதிர்ப்பார்'' என்று முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி கூறுவார். கலைஞர் தலைமையில் நல்ல அரசு அமையும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. அடுத்த பிரதமர் யார் என்பதை இந்தியாவில் உள்ள ஏழு, எட்டுத் தலைவர்கள் கூடிப் பேசப் போகிறார்கள். தமிழ் மாநிலக் காங்கிரஸ் எம்.பி.க்கள் 20 பேர், தி.மு.க. எம்.பி.க்கள் 17 பேர், இந்திய கம்யூனிஸ்ட் எம்.பி.க்கள் 2 பேர் - ஆக 39 பேரும் டெல்லி செல்வோம். அங்கிருந்து இரண்டு தமிழர்களுக்கு அழைப்பு வரும். ஒருவர் கலைஞர், மற்றொருவர் மூப்பனார். இந்த வேட்டி கட்டிய தமிழர்கள் யாரைச் சுட்டிக் காட்டுகிறார்களோ அவர்தான் இந்தியாவின் அடுத்த பிரதமராக வருவார்'' என்று குறிப்பிட்டார்.


தேர்தலுக்கு முன்பு இவ்வாறு சொன்னதோடு மட்டுமல்லாமல், தேர்தலுக்குப் பிறகு அவர் அளித்த பேட்டியிலும், மத்தியில் புதிய பிரதமரைத் தீர்மானிக்கும் மாபெரும் சக்தியாக கலைஞரும், மூப்பனாரும் விளங்குவார்கள் என்றும், தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சி படுதோல்வி அடைந்ததற்கு நரசிம்மராவ்தான் முழு முதற்காரணம் என்றும், அதற்கு அவரே முழுப் பொறுப்பேற்க வேண்டும் என்றும் தெரிவித்திருந்தார்.

தேர்தல் நாள் நெருங்க, நெருங்க பல்வேறு கருத்துக் கணிப்புகள் ஏடுகள் வாயிலாக வெளி வந்தன. அந்தக் கருத்துக் கணிப்பில் எனக்கு நம்பிக்கையில்லை என்று நான் தெரிவித்தபோதிலும், பெரும்பாலான கருத்துக் கணிப்புகள் தி.மு.கழகக் கூட்டணி வெற்றி பெறும் என்றே வெளியிட்டன. ''எகனாமிக் டைம்ஸ்'' நாளேடு வெளியிட்ட ''சி.எம்.எஸ். -டைம் போல்'' கருத்துக் கணிப்பில், 220 இடங்களில் தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்று அரசு அமைக்கும் என்று செய்தி


ஜி.கே.மூப்பனார்


பீட்டர் அல்போன்ஸ்


லல்லு பிரசாத் யாதவ்


ஜோதி பாசு

வெளியிட்டார்கள். பிரபல நாளேடான **''டைம்ஸ் ஆப் இந்தியா''** அகில இந்திய அளவில் வெளியிட்ட கருத்துக் கணிப்பில், அ.தி.மு.க. கூட்டணிக்கு மக்களவைத் தேர்தலில், தமிழகத்தில் ஒரு இடம்கூடக் கிடைக்காது என்றும், இந்தியாவிலேயே பொது மக்களின் வெறுப்புக்கு ஆளான ஒரே அரசியல்வாதி ஜெயலலிதாதான் என்றும் தெரிவித்திருந்தது.

இந்தக் கருத்துக் கணிப்புகள் குறித்து - தி.மு.க.வுடனும் இல்லாமல், அ.தி.மு.க. வுடனும் இல்லாமல் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியோடு இணைந்து, 96ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில், ம.தி.மு.க. போட்டியிட்டது. அந்தத் தேர்தல் குறித்து, ம.தி.மு.க.வின் பொதுச் செயலாளர் வை.கோ. செய்தியாளர்களிடம் கூறும்போது, உண்மையான தி.மு.க. எது என்பதைக் காலம் விரைவில் தீர்மானிக்கும் என்றும், ம.தி.மு.க. கூட்டணி பெரும்பாலான இடங்களில் வெற்றி பெறும் என்றும் ம.தி.மு.க. வெற்றி பெற்றால் கூட்டணி ஆட்சி அமைக்கும் என்றும், **முரசொலி மாறன்** மூலமாக தி.மு.க. தலைவர் தயாரித்த கருத்துக் கணிப்பு எத்தகைய மோசடி என்பதைத் தேர்தல் முடிவுகள் நிரூபிக்கும் என்றும் கூறியதோடு மாத்திரமல்லாமல், அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா பற்றிக் கூறும்போது, ''முதல்வர் ஜெயலலிதாவை தேர்தலில் தோற்கடித்தால் மட்டும் போதாது -அவரும், அவருடன் இருப்பவர்களும் முறைகேடாகச் சேர்த்த சொத்துக்களையும் பறிமுதல் செய்ய வேண்டும்'' என்றும் தெரிவித்தார்.

அந்தத் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக பிரார்த்தனை செய்து கொள்ள, ஜெயலலிதாவும், அவரது உடன் பிறவா சகோதரி என அவரால் கூறப்பட்ட சசிகலாவும், 31.3.1996 அன்று சென்னையிலிருந்து அரசுக்குச் சொந்தமான ஹெலிகாப்டரில் திருப்பதி சென்று திரும்பினார்கள். இதற்காக அ.தி.மு.க. கட்சியிலிருந்து ஒரு லட்சத்து 85 ஆயிரம் ரூபாய் அரசுக்கு செலுத்தப்பட்டது மாத்திர மல்லாமல், அந்தத் தேர்தலில் தேர்தல் பிரச்சாரம் செய்ய ஹெலிகாப்டரைப் பயன் படுத்திய வகையில், ஒரு கோடியே 75ஆயிரம் ரூபாயை அ.தி.மு.க. முன்தொகையாகக் கட்டி, பின்னர் அதற்காக 45 லட்சம் ரூபாய் போக, மீதத் தொகையாக 55 லட்சம் ரூபாயைத் திரும்பப் பெற்றுக் கொண்டதாக செய்திகள் வெளியாயின.


சென்னை சேப்பாக்கத்தில் போட்டியிட்ட நான், ஒன்பதாவது முறையாக சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெற்றேன். 1957ல் திருச்சி மாவட்டம் குளித்தலையிலும், 1962ல் தஞ்சாவூரிலும், 1967ல் சென்னை சைதாப் பேட்டையிலும் 1971ல் மீண்டும் சைதாப்பேட்டையிலும், 1977ல் அண்ணாநகரிலும், 1980ல் மீண்டும் அண்ணாநகரிலும், 1989ல் துறைமுகத்திலும், 1991ல் மீண்டும் அதே துறைமுகத்திலும், 1996ல் சென்னை சேப்பாக்கம் தொகுதியிலும் வெற்றி பெற்றேன்.

தமிழகத் தேர்தல் முடிவுகள் குறித்து 10 - 5-1996 தேதிய **"தினமணி"** நாளிதழில் வெளிவந்த தலையங்கம் முக்கியமாக நினைவில் கொள்ள வேண்டிய ஒன்றாகும். அதன் முக்கியப் பகுதிகள் மட்டும் வருமாறு:-

"தமிழகத் தேர்தல் அரசியல் பிரளயமாக மாறி, அராஜக - ஆர்ப்பாட்ட ஆட்சியை விழுங்கி விட்டது. ஜனநாயகம் பிழைத்தது. ஊழல்மயமான - ஊதாரித்தன அரசு அஸ்தமித்து விட்டது. தி.மு.க. - தமிழ் மாநிலக் காங்கிரஸ் கூட்டணி இந்த நம்ப முடியாத சாதனையைப் படைத்திருக்கிறது."


வி.பி.சிங்

''தமிழ் மாநில காங்கிரசை கடைசி நிமிடத்தில் மூப்பனார் முன்னின்று உருவாக்கியதே ஓர் அபூர்வ சாதனை. தமிழ்நாட்டின் எல்லாத் துறைகளையும் அரித்து வரும் ஊழலாட்சியை நடத்தி வந்த ஜெயலலிதாவுடன் கூட்டுச் சேருவதென நரசிம்மராவ் எதேச்சாதிகாரத்துடன் திணித்த முடிவை எதிர்த்து, தமிழ்நாட்டையும், தமிழரின் மானத்தையும் காப்பதற்காக புதிய தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியை மூப்பனார் துவக்கினார். உடனடியாக தி.மு.க.வுடன் கூட்டணியும் அமைத்தார். அப்பொழுதே தமிழக அரசியலில் பிரம்மாண்டமான புதிய சக்தி பிறந்து விட்டது.''


தேவகவுடா

''இக்கூட்டணிக்கு நடிகர் ரஜினிகாந்த் முழு ஆதரவைத் தந்தவுடனே இக்கூட்டணி அரசியல் சூறாவளியாக மாறிவிட்டது. கடைசி நேரத்தில், தம்மை வந்தடைந்த மூப்பனாருக்கு 20 மக்களவைத் தொகுதி களையும், 40 சட்டசபைத் தொகுதி களையும் அளித்ததன் மூலம், இதை உயிர்ப்புடைய அணியாக ஆக்கிய கருணாநிதியின் அரசியல் மதிநுட்பம் குறிப்பிடத்தக்கது. மொத்தத்தில் தி.மு.க., த.மா. காங்கிரஸ் கூட்டணி தமிழக வரலாற்றில் மகத்தான திருப்புமுனையை ஏற்படுத்தி விட்டது. ஊழல், எதேச்சாதிகார, அராஜக ஆட்சியிலிருந்து தமிழகத்துக்கு விடுதலை பெற்றுத் தந்துவிட்டது. அதோடு தேசிய அளவிலும், இக்கூட்டணி மகத்தான பணியாற்றுவதற்குரிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அகில இந்திய கட்சிகளில் எதற்கும் மக்களவையில் அறுதிப் பெரும்பான்மை


சந்திரபாபு நாயுடு


முலாயம் சிங் யாதவ்

கிடைக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இச்சூழ்நிலையில், மக்களவையில் கணிசமான இடங்களைப் பெற்றுள்ள இக்கூட்டணி - மத்தியில் புதிய ஆட்சியை அமைப்பதிலும் சிறந்த பங்காற்ற முடியும். ஆக, தமிழக அளவில் தமிழரின் மானத்தை மீட்ட இக் கூட்டணி, தேசிய அளவில் புதிய பாத்திரத்தை ஏற்க இருப்பது தமிழ் மக்கள் பெருமையடையத் தக்கதாகும்.''

அப்போது நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் தமிழகத்தில் மொத்தம் உள்ள 39 தொகுதிகளிலும், தி.மு.க., த.மா.கா. அணியே வெற்றி பெற்றது.

சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில், 175 இடங்களில் போட்டியிட்ட தி.மு.க. 167 இடங்களிலும்; 40 இடங்களில் போட்டியிட்ட த.மா.கா.39 இடங்களிலும்; 11 இடங்களில் போட்டியிட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 8 இடங்களிலும்; அப்துல் லத்தீப் தலைமையிலான இந்திய தேசிய லீக் 5 இடங்களில் போட்டியிட்டு ஐந்து இடங்களிலும்; அகில இந்திய பார்வர்டு பிளாக் 2 இடங்களில் போட்டியிட்டு ஒரு இடத்திலும் வெற்றி பெற்றன.

ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. 163 இடங்களில் போட்டியிட்டு 4 இடங்களிலும், பா.ம.க. 140 இடங்களில் போட்டியிட்டு 4 இடங்களிலும், பா.ஜ.க. 145 இடங்களில் போட்டியிட்டு 1 இடத்திலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி 1 இடத்திலும், ஜனதாதளம் 1 இடத்திலும், தேவேந்திர குல வேளாளர் கூட்டமைப்பு 1 இடத்திலும், சுயேட்சை 1 இடத்திலும் வெற்றி பெற்றன. குறிப்பாக, ம.தி.மு.க.அந்தத் தேர்தலில் 175 இடங்களில் போட்டியிட்டு, 168 இடங்களில் (ஆம்) டெபாசிட் தொகையை பறிகொடுத்தது. 1994ஆம் ஆண்டு மயிலாப்பூர் தொகுதியில் நடைபெற்ற இடைத் தேர்தலில் ம.தி.மு.க. தனித்துப் போட்டியிட்டு, சுமார் 10,000 வாக்குகளைப் பெற்றிருந்தது. அந்த மயிலாப்பூர் தொகுதியில் 1996ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில், ம.தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிட்ட

ஜனதாதள வேட்பாளர் 2,332 வாக்குகளைப் பெற்றார். அதைப் போலவே பெருந்துறை இடைத் தேர்தலில் ம.தி.மு.க. வேட்பாளர் 22,000 வாக்குகள் பெற்று, இரண்டாவது இடத்திற்கு வந்ததால், அடுத்து தமிழ்நாடே தங்களுடைய ஆட்சியின் கீழ் தான் என்றார்கள். ஆனால் 96ஆம் ஆண்டு தேர்தலில், அதே தொகுதியில் ம.தி.மு.க. வேட்பாளர் 7,992 வாக்குகளைப் பெற்று மூன்றாவது இடத்திற்குச் சென்றார்.

அந்தத் தேர்தலில் ஒவ்வொரு அணியும் வாங்கிய வாக்குகள் என்று எண்ணிக்கையில் பார்த்தபோது, தி.மு.க., த.மா.கா. அணி 1 கோடியே 40 லட்சத்து 40 ஆயிரத்து 494 வாக்குகளை (55.02 சதவிகிதம்)யும்; அ.தி.மு.க. அணி 70 லட்சத்து 95 ஆயிரத்து 650 வாக்குகளை (26.12 சதவிகிதம்)யும்; ம.தி.மு.க., மார்க்சிஸ்ட், ஜனதா தள அணி 21 லட்சத்து 31 ஆயிரத்து 592 வாக்குகளை (7.85 சதவிகிதம்)யும்; பா.ம.க. திவாரி காங்கிரஸ் அணி 11 லட்சத்து 81 ஆயிரத்து 351 வாக்குகளை (4.43 சதவிகிதம்)யும்; பா.ஜ.க. தனித்துப் போட்டியிட்டு 7 லட்சத்து 94 ஆயிரத்து 251 வாக்குகளை (2.92 சதவிகிதம்)யும் பெற்றன.

ஆளுநராக இருந்த சென்னா ரெட்டிக்கும், முதல்வராக இருந்த ஜெயலலிதாவிற்கும் இடையே ஒரு வெறுப்புணர்வு தான் அதுவரை நீடித்து வந்தது. பொது நிகழ்ச்சிகளில் சந்திக்கும் போதுகூட ஒருவரோடொருவர் பேசிக் கொள்வதில்லை- வணக்கம் கூட கூறிக் கொள்வதில்லை என்ற நிலையிலேயே தான் இருந்தார்கள்.

12-5-1996 அன்று தி.மு.க.வின் சட்டப் பேரவை கூட்டத்தில் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நான், கவர்னரைச் சந்திக்கச் சென்றபோது, என்னைப் பெரிதும் மன மகிழ்ச்சியோடு வரவேற்ற ஆளுநர் சென்னா ரெட்டி அவர்கள், செய்தியாளர்களிடம் கூறும் போது, ''நானும் கருணாநிதியும் ஒரே ராசி. அது எங்களை இணைத்து வைக்கும். நாங்கள் சேர்ந்தே இருப்போம்'' என்று தெரிவித்தார். அப்போது அங்கிருந்த முரசொலி மாறன் ''இந்த இரண்டு சிங்கங்களும்

(கருணாநிதியும், சென்னா ரெட்டியும்) சேர்ந்தே இனி கர்ஜனை புரியும்'' என்று கூறினார்.

தி.மு.க. சட்டப் பேரவை உறுப்பினர்கள் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட நான் எனது நன்றியுரையில், ''நல்லாட்சியை நடத்த சட்டப் பேரவை தி.மு.க. உறுப்பினர்கள் மனமார்ந்த இதயம் நிறைந்த தூய்மையான ஒத்துழைப்பை எனக்கு வழங்க வேண்டும். அப்படி வழங்கும் வரையில் நான் இப்பொறுப்பில் நீடிப்பேன். யாரேனும் வழங்கத் தவறினால் அதற்குப் பிறகு இப்பொறுப்பில் நான் நீடிக்க மாட்டேன் என்பதைத் தெரிவித்துக் கொள்ள உரிமையும், கடமையும் எனக்கு உள்ளது'' என்று கூறியதோடு, ''நேர்மை, நியாயம், ஒழுங்கு, தூய்மை, வாய்மை ஆகியவைகளைக் கொண்ட ஒரு நல்லாட்சியைத் தருவோம். *1989 -1991*ல் நாம் வழங்கிய ஆட்சியை இத்தரணி போற்றிக் கொண்டிருக்கிறது. எதிரிகள்கூட அந்த இரண்டாண்டு கால ஆட்சியைப் பற்றி எக்குற்றமும் சொல்லவில்லை. அதைப் போன்ற தூய்மையான குற்றமற்ற ஆட்சியைத் தர அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்'' என்றும் தெரிவித்தேன்.

13-5-1996 அன்று பதவியேற்பு முடிந்ததும், அன்று மாலையிலேயே சென்னை கடற்கரை காந்தி சிலை அருகில் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டம் நடைபெற்றது. மாநில மாநாடு ஒன்றுக்குக் கூடுவதைப் போல தமிழ்நாட்டு மக்கள் எல்லாம் அந்தக் கூட்டத்திலே திரண்டிருந்தார்கள். கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அந்தக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். அந்தக் கூட்டத்தில் நான், த.மா.கா. தலைவர், அருமை நண்பர் மூப்பனார், அப்போது நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த பீட்டர் அல்போன்ஸ், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவரான ஆர். நல்லக்கண்ணு, அப்துல் லத்தீப், ஆர்.எம்.வீரப்பன், மக்கள் நல உரிமைக் கழகத் தலைவராக இருந்த பண்ருட்டி ராமச்சந்திரன், பார்வர்டு பிளாக் கட்சியின் தலைவர் அய்யணன் அம்பலம், சுப்ரீம் ஸ்டார் சரத்குமார், ரஜினிகாந்த்

ரசிகர் மன்றத் தலைவர் சத்திய நாராயணன், இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ஆர்., ஆகியோர் உரையாற்றினோம். இசைமுரசு நாகூர் அனிபாவின் கழக இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

இந்தத் தேர்தல் முடிவுகள் குறித்து அ.தி.மு.க. தலைவி **''இந்தியன் எக்ஸ்பிரஸ்''**நாளிதழுக்கு அளித்த பேட்டியில், தேர்தலில் மிகப்பெரிய தில்லுமுல்லு நடந்ததாகவும், அதனால்தான் அ.தி.மு.க. படுதோல்வி அடைந்ததாகவும், தி.மு.க. வுக்கும் அவர்களது கூட்டணி கட்சிகளுக்கும் கிடைத்தது உண்மையான வெற்றி அல்ல என்றும், தேர்தல் ஆணையத்தின் தலைமைப் பீடத்தில் இருப்பவர் துணையோடுதான் சதிவேலை நடந்துள்ளது என்றும் கூறினார். அப்போது தேர்தல் ஆணையத்தின் தலைமைப் பீடத்தில் இருந்தவர் **சேஷன்** அவர்களாவார்.

சுப்பிரமணியசாமி, ஜெயலலிதா மீது கொடுத்த ஊழல் புகாரை, அப்போது ஆளுநராக இருந்த சென்னாரெட்டி அவர்கள், தேர்தல் ஆணையரான சேஷனுக்கு அனுப்பி வைத்திருந்தார். அந்த மனுவை சேஷன் விசாரித்தால், தனக்கு நியாயம் கிடைக்காது என்று கூறி, உயர்நீதி மன்றத்தில் ஜெயலலிதா முறையீடு செய்து, அந்த மனுவினை சேஷன் விசாரிக்க முடியாமல் தடையாணை பெற்றார். இந்த வழக்கை விசாரித்த உச்சநீதி மன்றம், ஜெயலலிதா மீதான ஊழல் புகாரை தேர்தல் கமிஷனின் ஏனைய இரு ஆணையர்களான **கிருஷ்ணமூர்த்தியும், கில்லும்** விசாரிக்கலாம் என்றும், அந்த இரண்டு பேரும் விசாரித்து எடுக்கின்ற முடிவினை ஆளுநர் சென்னா ரெட்டிக்கு அனுப்பி வைக்கலாம் என்றும், இரண்டு பேருக்குமிடையில் ஒருமித்த கருத்து ஏற்படாமல் போனால், அப்போது சேஷனே அதில் தலையிட்டு தனது கருத்தைக் கூறலாம் என்றும் தீர்ப்பு அளித்தது.

இதனை மனதிலே வைத்துக் கொண்டு தான், ஜெயலலிதா அப்போது சேஷன் தேர்தலில் முறைகேடு செய்தார் என்று அறிக்கை விடுத்தார் என்று **''தினமணி''** எழுதியது.

13-5-1996அன்று பதவியேற்றுக் கொண்டு, தலைமைச் செயலகத்திற்கு சென்று, நான் முதல் கையெழுத்தாக தேர்தல் அறிக்கையிலே கூறியிருந்தவாறு, ஒரு கோடியே 25 லட்சம் குடும்பங்கள் பயன் பெறத்தக்க வகையில் மனைவரி, தலவரி போன்றவைகளை ரத்து செய்து கையெழுத்திட்டேன்.

15-5-1996 அன்று அவ்வை சண்முகம் சாலையில் உள்ள அ.தி.மு.க. அலுவலகத்திற்கு ஜெயலலிதா வரப்போகிறார் என்று கூறப்பட்டு, அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் நூற்றுக்கணக்கிலே அங்கே திரண்டனர். முன்னாள் அமைச்சர்களும் கட்சியின் மூத்த தலைவர்களுமான நாவலர், சேடப்பட்டி முத்தையா, மதுசூதனன், இந்திரகுமாரி, எஸ்.திருநாவுக்கரசு, கண்ணப்பன், செங்கோட்டையன், செல்வகணபதி போன்றவர்கள் எல்லாரும் அங்கே வந்து காத்திருந்தனர்.

ஆனால், ஜெயலலிதா தொண்டர்களைத் தன் வீட்டிலேயே சந்திக்க இருக்கிறார் என்று வந்த தகவலை யொட்டி அனைவரும் அங்கே சென்றனர். அங்கே திரண்ட அ.தி.மு.க.வினர் சசிகலாவிற்கு எதிராகக் குரல் கொடுத்தனர். ''ஒரு குடும்பத்துக்காக ஒரு கோடி அ.தி.மு.க. தொண்டர்களை அனாதையாக்கி விட்டாயே'' என்று எம்.ஜி.ஆர். தொண்டர்கள் பெயரில் சுவரொட்டிகள் நகரெங்கும் ஒட்டப்பட்டிருந்தன. மேலும் ''புரட்சித் தலைவி அவர்களே! லட்சக்கணக்கான தொண்டர்கள் சார்பாகக் கழகத்தைக் காப்பாற்ற கண்ணீருடன் வேண்டுகிறோம் -சசிகலாவை வெளியேற்றுங்கள் - அல்லது நீங்கள் கழகத்தை விட்டு வெளியேறுங்கள் - இப்படிக்கு எம்.ஜி.ஆர். தொண்டர்கள்'' என்ற சுவரொட்டியும் ஒட்டப்பட்டது.

முன்னால் அமைச்சர் எஸ்.டி. சோம சுந்தரத்தை அ.தி.மு.க. தொண்டர் ஒருவர் ஜெயலலிதா இல்லத்தின் வாசலிலேயே தாக்கினார். அவரை எதிர்த்துக் கடுமையாக அ.தி.மு.க. வினர் குரல் எழுப்பினர்.

மக்களவைத் தேர்தலில் எந்தவொரு கட்சிக்கோ, அணிக்கோ தனித்த பெரும்பான்மை கிடைக்கவில்லை. மொத்தம் 545

இடங்களில் 535 இடங்களுக்கு அப்போது தேர்தல் நடைபெற்றது. அதில் பா.ஜ.க. தனித்து 160 இடங்களிலும், அதன் தோழமைக் கட்சிகள் 26 இடங்களிலும் வெற்றி பெற்றார்கள். இந்திரா காங்கிரஸ் 136 இடங்களில் வெற்றி பெற்றது. தேசிய முன்னணி மற்றும் இடதுசாரி கூட்டணியின் சார்பில் 111 இடங்களில் வெற்றி பெற்றிருந்தார்கள். இவை தவிர, தி.மு.கழகமும், த.மா.கா.வும் முறையே 17 இடங்களிலும், 20 இடங்களிலும் வெற்றி பெற்றிருந்தன. மேலும் தெலுங்கு தேசம் 16 இடங்களிலும், அகாலிதளம் 8 இடங்களிலும், பகுஜன் சமாஜம் 11 இடங்களிலும் வெற்றி பெற்றன.

மத்தியிலே ஆட்சி அமைப்பது யார் என்ற பிரச்சினை அந்தக் காலக் கட்டத்தில் பூதாகாரமாக எழுந்தது. பா.ஜ.க. தலைவர் **அத்வானி** தலைமையில் தூதுக்குழு ஒன்று அப்போது குடியரசுத் தலைவராக இருந்த **சங்கர்தயாள்** சர்மா அவர்களைச் சந்தித்து, தங்கள் கட்சியை ஆட்சி அமைக்க அழைக்குமாறு வேண்டுகோள் விடுத்தது. தேசிய முன்னணி, இடது சாரி கூட்டணிக் கட்சிகள் தனியாக குடியரசு தலைவரைச் சந்தித்து, தங்களையே ஆட்சி அமைக்க அழைக்க வேண்டுமென்றும் அவ்வாறு அழைத்தால், மக்களவையில் தங்கள் பலத்தை நிரூபித்துக் காட்டுவதாகவும் கூறினார்கள்.

13-5-1996 அன்று தமிழகத்திலே பதவிப் பிரமாண நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு, தொடர்ந்து டெல்லியிலிருந்து பல்வேறு கட்சித் தலைவர்களிடமிருந்து வந்த அழைப்பினையேற்று, 14-5-2006 அன்று காலையில் டெல்லி சென்றேன். ஆந்திர மாநில முதலமைச்சராக அப்போது இருந்த நண்பர் சந்திரபாபு நாயுடு, கர்நாடக முதலமைச்சராக இருந்த தேவகவுடா, த.மா.கா. தலைவர் மூப்பனார், ப.சிதம்பரம், எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம், பீட்டர் அல்போன்ஸ் ஆகியோர் என்னைச் சந்தித்தார்கள். முரசொலிமாறன், ப.சிதம்பரம், சந்திரபாபு நாயுடு ஆகியோர் அப்போதே சென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின்

பொதுச் செயலாளராக இருந்த சுர்ஜித்சிங்கைச் சந்தித்து ஆலோசனை நடத்தினர். 14ஆம் தேதி மாலையில் தமிழ்நாடு இல்லத்திற்கு மேற்கு வங்க முதல்வராக இருந்த ஜோதிபாசு, சுர்ஜித்சிங், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் இந்திரஜித் குப்தா, பீகார் முதல்வராக இருந்த லல்லு பிரசாத் யாதவ், உத்தரப்பிரதேச முன்னாள் முதல்வர் முலாயம் சிங்யாதவ், முன்னாள் மத்திய அமைச்சர் மாதவராவ் சிந்தியா, மூப்பனார், சந்திரபாபு நாயுடு, ப.சிதம்பரம் ஆகியோர் வருகை தந்து ஆலோசனை நடத்தினோம். அந்த ஆலோசனையின் விளைவாக, வி.பி.சிங் அவர்களின் இல்லத்திற்கு நானும், முரசொலி மாறன், லல்லு பிரசாத் யாதவ், சந்திரபாபு நாயுடு, தேவகவுடா ஆகியோரும் நேரில் சென்று, வி.பி.சிங் அவர்களைத் தலைமை அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டோம். ஆனால், அவர் உறுதியாக அதற்கு மறுப்பு தெரிவித்து விட்டார்.

அதன் பின்னர், மீண்டும் தமிழ்நாடு இல்லத்தில் நான் மேலே குறிப்பிட்ட அனைத்துத் தலைவர்களும், ஒன்றுகூடி ஆலோசித்து, அனைவரும் கர்நாடக முதல்வராக இருந்த தேவகவுடா அவர்களைப் பிரதமர் பதவிக்கு உரியவராக முடிவு செய்து, குடியரசுத் தலைவர் அவர்களைச் சந்தித்து இந்த முடிவினைத் தெரிவித்தோம்.

அன்றிரவு 11 மணியளவில், திடீரென தமிழ்நாடு இல்லத்திற்கு திரு.வி.பி.சிங் அவர்கள் வருகை தந்து, என்னைச் சந்தித்தார். அப்போது பிரதமர் பதவிக்கு அவரது பெயரை வலியுறுத்தியதற்காக நன்றி கூறி, ஆனால் அதனை ஏற்க இயலாமைக்காக வருத்தம் தெரிவிப்பதாகவும் கூறினார். டெல்லிக்குச் சென்ற நான், குடியரசுத் தலைவராக இருந்த **கே.ஆர்.நாராயணன்,** காங்கிரஸ் தலைவர் **பி.வி.நரசிம்ம ராவ்** ஆகியோரையும் மரியாதை நிமித்தமாகச் சந்தித்தேன்.

குடியரசுத் தலைவர் சர்மா அவர்கள், மக்களவைத் தேர்தலில் அதிக இடங்களைப் பெற்ற கட்சி என்ற முறையில்,

பா.ஜ.க.வின் தலைவரான **திரு.வாஜ்பாய்** அவர்களுக்கு ஆட்சி அமைக்க அழைப்பு விடுத்ததோடு, அந்த மாத இறுதிக்குள்ளாக பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டுமென்றும் கூறினார். தேசிய முன்னணி, இடதுசாரிக் கட்சிகளை உள்ளடக்கிய மூன்றாவது அணியின் சார்பில் பிரதமர் பதவிக்குத் தேர்வு செய்யப்பட்ட **தேவகவுடா** அவர்களுக்கு தங்கள் கட்சியின் நிபந்தனையற்ற ஆதரவு உண்டு என்றும், அவரது தலைமையிலான அரசை வெளியிலிருந்து ஆதரிப்போம் என்றும் காங்கிரஸ் கட்சி அறிவித்ததோடு, குடியரசுத் தலைவருக்கும் அதற்கான கடிதத்தை அனுப்பி வைத்தது.


பாரதீய ஜனதா கட்சியை மத்தியில் ஆட்சி அமைக்க குடியரசுத் தலைவர் அழைப்பு விடுத்தது, மக்கள் விருப்பத்திற்கு எதிரானது என்று நானும், ஏனைய மூன்றாவது அணித் தலைவர்களும் இணைந்து கூட்டறிக்கை ஒன்றினை வெளியிட்டோம்.

18-5-1996 அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் என்னுடைய தலைமையில் நாடாளுமன்ற மக்களவை கழக உறுப்பினர்களின் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களும், பொருளாளர் ஆர்க்காடு வீராசாமியும், வெற்றி பெற்ற நாடாளுமன்ற கழக உறுப்பினர்களும் புதிய அமைச்சர்கள் துரைமுருகன், ரகுமான்கான், ஆலடி அருணா, எஸ்.பி. சற்குணம் ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

அந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவராக முரசொலி மாறன் அவர்களை, என்.வி.என். சோமு முன்மொழிய, டி.ஆர். பாலுவும் மற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களும் வழிமொழிய ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். துணைத் தலைவராக என்.வி.என்.சோமு அவர்களை, கோவை மு.ராமநாதன் முன்மொழிய, பி.சண்முகம்

வழிமொழிந்து ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். நாடாளுமன்ற தி.மு.க. கொறடாவாக டி.ஆர். பாலுவை முரசொலி மாறன் முன்மொழிய, திருச்சி என்.சிவா வழிமொழிய ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் ஜி.வெங்கட்ராமன் அவர்களைக் துணைக் கொறடாவாகவும், தி.மு.க. நாடாளுமன்றப் பொருளாளராக கோவை மு.இராமநாதன் அவர்களும், நாடாளுமன்ற தி.மு.க. செயலாளராக டி.நாகரத்தினம் அவர்களும் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அதே *18-5-1996* அன்று மாலையில் புதுவை மாநில தி.மு.கழகச் சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் தி.மு.கழகச் சட்டமன்றக் கட்சித் தலைவராக - அதாவது புதுவை மாநில முதல்வராக ஆர்.வி.ஜானகிராமன் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.



உயிர்மெய் எழுத்து!
உன் கையெழுத்து!

-வித்தகக் கவிஞர் பா.விஜய்

நெஞ்சுக்கு நீதி!

இது நவீனப் புறநானூறு!

இது சிவப்பதிகாரம்!

இது ஐந்தாவது பாகமுள்ள
ஐம்பெரும் காப்பியம்!

முரசு கட்டிலில்
தமிழ்க் கவிஞனை வைத்து
விசிறிவிட்டான்
அன்றொரு மன்னன்!

அரசு கட்டிலில்
தமிழையே வைத்து
கவரி வீசுகின்றார்.
இன்றொரு கவிஞர்

கலைஞர்!

ஆறுகோடி தமிழரை
சுமப்பதற்காக
ஒரு ஆணின் இதயம்
கருவறையானது!

அந்தக் கருவறை தனது
கதை சொன்னதெல்லாம்
நெஞ்சுக்கு நீதிஎனும்
விரிவுரையானது!

நெஞ்சுக்கு நீதி!
செம்மொழியில்
செதுக்கப்பட்டிருக்கும்
தமிழின வரலாறு!
தன்னம்பிக்கை சரித்திரம்!

அடடா...
பூமிப் பந்து
கைதட்டுகிறது-
உலகின் நீளமான
சுயசரிதம் இதுவென்று!

இங்கர்சாலின் இதயம்!
சாக்ரடீசின் நுண்ணறிவு!
ஐன்ஸ்டீனின் ஆற்றல்!
இம்மூன்றின் கலவையல்லவா
கலைஞரின் வாழ்க்கை!

நெஞ்சுக்கு நீதி என்பது
85 ஆண்டு வயது
தனி மனித வரலாறல்ல!
85 ஆண்டு
தமிழகத்தின் குரல்!
அரசியலின் அசரீரி!

இலக்கிய வேட்கை
இதயம் கனக்கும்போது
ஊற்றிய உயிர்த்தேன்
உயிரெழுத்தானது!

சூல்கொண்ட போராட்டம்
சுவாசத்தை நெரிக்கையில்

எழுந்த அழுத்தம்
மெய் எழுத்தானது!

ஆயிரம் துரோகங்கள்
அடிமனதைக் குத்தியது!
கசிந்த ரத்தத் துளிகள்
கையெழுத்தானது!

அதுதான்
நெஞ்சுக்கு நீதிஎனும்
நேரெழுத்தானது! - அது
தமிழ் விருட்சத்தின்
வேரெழுத்தானது!
தமிழினத்தின்
தலையெழுத்தானது!

திருக்குறள் படித்தால்
ஓர் இளைஞன்
நெடுவாழ்க்கை வாழலாம்!
நெஞ்சுக்கு நீதி கற்றால்
ஓர் இளைஞன்
போராடப் பழகலாம்!


அணுக்களில் எல்லாம்
அறிவுணர்ச்சி ஏற வேண்டுமா?

நுரையீரல் நிரம்ப
நம்பிக்கை காற்று வேண்டுமா?

உயிர்ச் சக்கரத்தை
உருட்ட விசை வேண்டுமா?

வாழ முடியுமா? என்போர்முன்
வாழ்ந்து காட்ட வேண்டுமா?

வாசிக்க வேண்டும்
நெஞ்சுக்கு நீதி!



வித்தகக் கவிஞர்
பா.விஜய்

2. அம்பேத்கர் கண்ட வழி

"அண்ணல் அம்பேத்கர் அறிவார்ந்த புரட்சிக்காரர்"


குடியரசுத் தலைவர் சங்கர் தயாள் சர்மா அவர்களின் அழைப்பினையேற்று இந்தியாவின் 11ஆவது பிரதமராக அடல் பிகாரி வாஜ்பாய் அவர்கள், 16.5.1996 அன்று பதவியேற்றார். அவரைத் தொடர்ந்து பா.ஜ.வின் துணைத் தலைவராக இருந்த சிக்கந்தர் பக்த், சூரஜ்பான், ராம் ஜேத் மலானி, முரளி மனோகர் ஜோஷி, தனஞ்சய் குமார், பிரமோத் மகாஜன், கரியா முண்டா, சுரேஷ் பிரபாகர் பிரபு, சர்தஜ் சிங், ஜஸ்வந்த் சிங் ஆகிய 11 பேர் மத்திய அமைச்சர்களாகப் பொறுப்பேற்றுக் கொண்டனர்.



வி.பி.சிங்

அமைச்சரவை அமைந்ததும், மத்தியில் பேரவைத் தலைவராக யார் என்ற பிரச்சினையும், அமைச்சரவை அமைக்க அழைக்கப்பெற்ற வாஜ்பாய் அவர்களின் கட்சியின் சார்பில் பேரவைத் தலைவராக வேட்பாளர் நிறுத்தப்பட்டால், அவர் வெற்றி பெறுவாரா என்ற நிலைமையும் அரசியல் வட்டாரத்தில் பெரிதாகப் பேசப்பட்டது. மக்களவைத் தலைவர் தேர்தலில் காங்கிரஸ் மற்றும் ஐக்கிய முன்னணியின் சார்பில், பொது வேட்பாளராக பி.ஏ. சங்மா அவர்களை நிறுத்துவதென்று முடிவெடுத்து அறிவிக்கப்பட்டது. பிரதமர் வாஜ்பாய் அவர்களைச் செய்தியாளர்கள் லக்னோ விமான நிலையத்தில் சந்தித்து, ''உங்கள் அணியின் சார்பில் யாரை சபாநாயகர் வேட்பாளராக நிறுத்தப் போகிறீர்கள்?'' என்று கேட்டபோது, ''காங்கிரசும், ஐக்கிய முன்னணியும் இணைந்து, பொது வேட்பாளராக சங்மாவை நிறுத்துமானால், பா.ஜ.க.வும் அவரையே ஆதரிக்க எந்த விதமானத் தயக்கமும் இல்லை. சபாநாயகர் பதவி போன்ற பொறுப்புமிக்க பதவிக்கு அனைவரும் ஒப்புக் கொள்ளக் கூடிய ஒருவரையே தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதுதான் எங்கள் குறிக்கோள்'' என்று குறிப்பிட்டிருந்தார். இப்படிப் பொது வேட்பாளர் ஒருவரை ஏற்றுக் கொள்ளும் பரந்த மனப்பான்மை ஒரு கட்சியில் பெரும்பான்மை இழுபறியாக இருக்கும் போது, பேசப்படுவது இன்றைய அரசியலில் இயற்கைதானே.

இதைப் பற்றி எழுதும்போது, 1991ஆம் ஆண்டு நடை பெற்ற தேர்தல் நேரத்தில், நடந்தவற்றை நினைவு கூர்வது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன். 1991 தேர்தலில் - பி.வி. நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரஸ் கட்சிக்கு - அரசு அமைக்கப் போதுமான பெரும்பான்மை பலம் இல்லை. 1996இல் தனிப் பெரும் கட்சி என்ற அளவில் எவ்வாறு ஆட்சி அமைக்க பா.ஜ.க. அழைக்கப்பட்டதோ, அதைப் போலவே 1991இல் தனிப் பெரும் கட்சி என்ற அளவில் ஆட்சி அமைக்க காங்கிரஸ் கட்சி அழைக்கப்பட்டது. 1996ஆம் ஆண்டு எவ்வாறு காங்கிரஸ் கட்சி பா.ஜ.க.விற்கு அடுத்த பெரிய கட்சியாக நாடாளுமன்றத்தில் இருந்ததோ, அதைப்போலவே



பி.வி.நரசிம்மராவ்

1991ஆம் ஆண்டும் பா.ஜ.க., காங்கிரசுக்கு அடுத்த பெரிய கட்சியாக நாடாளுமன்றத்தில் இருந்தது.

1996ஆம் ஆண்டு மக்களவை சபாநாயகராக இரண்டாவது பெரிய கட்சியாக இருந்த காங்கிரஸ் கட்சியின் சார்பில் எவ்வாறு பொது வேட்பாளராக சங்மா நிறுத்தப்பட்டாரோ, அதைப்போலவே 1991ஆம் ஆண்டும் பா.ஜ.க.சார்பில் ஒரு பொது வேட்பாளர் நிறுத்தப்பட வேண்டும் என்ற கருத்து எதிர்க் கட்சிகள் மத்தியிலே இருந்தது.


ஆனால், பா.ஜ.க.வும், காங்கிரஸ் கட்சியும் ஒரு உடன்பாடு செய்து கொண்டு, சபாநாயகர் பதவிக்கு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சிவராஜ் பாட்டில் அவர்களும், துணை சபாநாயகர் பதவிக்கு மல்லிகார்ஜுன் என்ற பா.ஜ.க.வைச் சேர்ந்தவரும் போட்டியிட்டு வெற்றி பெற்றனர். 1991ஆம் ஆண்டு இரண்டாவது பெரிய கட்சியாக இருந்தபோது, துணை சபாநாயகர் பதவி தங்களுக்கு வேண்டுமென்று நிபந்தனை விதித்துப் பெற்ற பா.ஜ.க. 1996ஆம் ஆண்டு தேர்தலில் துணை சபாநாயகர் என்பது பற்றியெல்லாம் பேசாமல், தான் ஆளும் கட்சியாக இருந்த நிலையிலும், காங்கிரஸ் வேட்பாளரையே பொது வேட்பாளராக ஏற்றுக் கொள்ளத் தயார் என்று அறிவிக்கும் அளவிற்கு நிலைமை உருவாயிற்று.

வாஜ்பாய் அவர்களின் அமைச்சரவை பெரும்பான்மையை மே மாதத்திற்குள்ளாக நிரூபித்துக் காட்ட வேண்டுமென்று குடியரசுத் தலைவர் சொல்லியிருந்ததன் அடிப்படையில், 27.5.1996 அன்று நம்பிக்கைத் தீர்மானம் ஒன்றினை ஆளுங்கட்சியின் சார்பில், மக்களவையில் முன்மொழிந்து, அதன்மீது விவாதம் நடைபெற்றது. அந்தத் தீர்மானத்தை எதிர்த்து ஐக்கிய முன்னணியின் சார்பிலும், காங்கிரஸ் கட்சியின் சார்பிலும், வாஜ்பாய் தலைமையிலான அரசு பதவி விலக வேண்டுமென்று பேசினர்.

காங்கிரஸ் கட்சியின் சார்பில் சரத்பவார், மீரா குமாரி ஆகியோரும், சிரோண்மணி அகாலிதளம் சார்பில் சுர்ஜித் சிங் பர்னாலா அவர்களும், தி.மு.க.சார்பில் முரசொலி மாறன் அவர்களும், ஜனதா தளம் சார்பில் ராம்விலாஸ் பஸ்வான் அவர்களும், சமதாக் கட்சி சார்பில் ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சோம்நாத் சாட்டர்ஜி அவர்களும், பி.எஸ்.பி.சார்பில் கன்ஷிராம் அவர்களும், தமிழ் மாநிலக் காங்கிரஸ் சார்பில் ப.சிதம்பரம் அவர்களும், மற்றும் பலரும் பேசினர். கழகத்தின் சார்பில் அந்தத் தீர்மானத்தில் பேசிய தம்பி மாறனின் உரை அனைவராலும் அப்போது பாராட்டப்பட்டது.

அதன் சுருக்கம் வருமாறு:-

''மக்களவைத் தலைவர் அவர்களே! பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் கொண்டு வந்துள்ள தீர்மானத்திற்கு எதிராகப் பேச வேண்டியிருப்பதற்காக நான் மிகவும் வருந்துகிறேன். நான் வாஜ்பாயை குறைவாக நேசிக்கவில்லை. ஆனால், என்னுடைய மக்களை, என்னுடைய மொழியை, என்னுடைய கலாச்சாரத்தை, சகோதர சகோதரிகளை, சமுதாயத்தை நான் அதிகமாக நேசிக்கிறேன். குடியரசுத் தலைவர் அவர்கள் வாஜ்பாயை பிரதமராக நியமிப்பதற்குப் பதிலாக, பெரும்பான்மை பெறுவதற்கான வாய்ப்புகளை ஆராயும்படிக் கேட்டிருந்தால், நிலைமை வேறு வகையாக இருந்திருக்கும். துரதிர்ஷ்டவசமாக அவ்வாறு நடைபெறவில்லை. நாங்கள் வாஜ்பாய் மீது தனியான மரியாதையும், மதிப்பும்



நான் வாஜ்பாயை குறைவாக நேசிக்கவில்லை. எங்கள் தலைவர் கலைஞர் குறிப்பிட்டதைப்போல அவர் ஒரு மாபெரும் மனிதர் - தவறான கட்சியில் இருக்கிறார்! நம்பிக்கை வாக்கெடுப்பில் தோற்பதைவிட, அவர் ராஜினாமா செய்துவிடுவது நல்லது!

-முரசொலி மாறன்

வைத்துள்ளோம். எங்கள் கட்சியின் தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, அவர் ஒரு மாபெரும் மனிதர். ஆனால், அவர் தவறான கட்சியில் இருக்கிறார். அவர் உயர்வான நாடாளுமன்றவாதி. அவர் மிகச் சிறந்த பிரதமருக்குரிய தகுதிகள் பெற்றவர். ஆனால், அவரை முன் நிறுத்தியுள்ள கொள்கைகள் நாங்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியவை. அதனால் நாங்கள் அவற்றிலிருந்து விலகி தீர்மானத்தை எதிர்க்கிறோம்.''

இவ்வாறு தனது உரையைத் தொடங்கி, ''குடியரசுத் தலைவர் சொன்னார் என்பதற்காக திறமை வாய்ந்த வாஜ்பாய் போன்றவர்கள் எப்படி அமைச்சரவை அமைத்து, தொடர்ந்து ஆள முடியும் என்று கேட்க விரும்புகிறேன். இது போன்ற நகைச்சுவை நாடகத்திற்கு உடனடியாக முற்றுப் புள்ளி வைப்போம். வாக்கெடுப்பில் தோற்பதை விட ராஜினாமா செய்து விடுவது அவருக்கு நல்லது'' என்று முடித்தார்.

அப்போது அவரது பேச்சு இந்திய அரசியலில் உள்ள மூத்த தலைவர்களால் பெரிதும் பாராட்டப்பட்டது. குறிப்பாக தம்பி மாறன் பேசும் போது, ''அரசைக் காப்பாற்றிக் கொள்வதற்காக பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கும் முயற்சியிலே ஈடுபடவில்லை'' என்று சொல்லியிருந்தார். வாஜ்பாய் அவர்கள் தன் பதில் உரையின் போது அதைக் குறிப்பிட்டு, ''ஒரு சிலர் அரசியல் உள்நோக்கத்தோடு நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்குவதற்கான முயற்சியிலே பா.ஜ.க.ஈடுபட்டது என்று சொல்லி வந்தார்கள். அவர்களின் கூற்றையெல்லாம் முரசொலி மாறனின் பேச்சு

வலுவிழக்கச் செய்தது'' என்று கூறி நன்றி தெரிவித்துக் கொண்டார்.

முரசொலி மாறன் அப்போது பேசியதுபோல்தான் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. வாக்கெடுப்பு நடைபெற்று, ஆளுங்கட்சி தோற்க வில்லை. அதற்கு முன்னதாகவே ராஜினாமா செய்து விட்டார்கள். ஆம், அடல் பிகாரி வாஜ்பாய் தலைமையிலே ஆட்சி செய்த பாரதீய ஜனதா சிவசேனா கூட்டணி அரசு 13 நாள் ஆட்சிக்குப் பிறகு பதவி விலகியது. மக்களவையில் பெரும் பான்மையைத் திரட்ட முடியாததால், தாங்கள் கொண்டு வந்த நம்பிக்கைத் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடத்துவதற்கு அவசியமின்றி, ராஜினாமாவை வாஜ்பாய் மக்களவையில் 28.5.1996 அன்று அறிவித்தார். அந்த அறிவிப்புக்குப் பிறகு மக்களவை சபாநாயகரால் மறு தேதி குறிப்பிடப் படாமல் ஒத்தி வைக்கப்பட்டது.



ஒரு சிலர் அரசியல் உள்நோக்கத்தோடு எம்.பி.க்களை விலைக்கு வாங்க பாரதீய ஜனதா முயற்சிப்பதாக சொன்னார்கள். அவர்களின் கூற்றை முரசொலி மாறனின் பேச்சு வலுவிழக்கச் செய்துவிட்டது.

– வாஜ்பாய்

முன்னதாக, நாடாளுமன்றத்தில் தீர்மானத்தின் மீது பேசிய வாஜ்பாய் அவர்கள், தனக்கடுத்து ஆட்சிக்கு வரும் அரசு ஐந்தாண்டுகளும் பதவியில் நீடிக்க வேண்டும் என்று விரும்புவதாகக் கூறினார். அன்றைய தினம் அவர் பதில் உரையாற்றும்போது, **மகாகவி பாரதியாரின்** பாடலான ''முப்பது கோடி முகமுடையாள், உயிர் மொய்ம்புற ஒன்றுடையாள், செப்புமொழி பதினெட்டுடையாள் எனில் சிந்தனை ஒன்றுடையாள்'' என்ற வரிகளைத் **தமிழிலேயே** அவையிலே எடுத்துக் காட்டினார்.

நாடாளுமன்றத்திலிருந்து வெளியே வந்த வாஜ்பாய் அவர்களைச் செய்தியாளர்கள் அணுகியபோது, ''13 நாட்களாக



21.5.1996 அன்று சட்டப் பேரவைத் தலைவராக பி.டி.ஆர்.பழனிவேல் ராஜன் தேர்ந்தெடுக்கப்பட்டார்

பறிக்கப்பட்ட சுதந்திரம் மீண்டும் கிடைத்து விட்டது!'' என்றார். மக்களவையில் வாக் கெடுப்புக்கு முன்பாக பதவியை ராஜினாமா செய்த இரண்டாவது பிரதமர் வாஜ்பாய் ஆவார்.

அதற்கு முன்பு 1991ஆம் ஆண்டு சந்திரசேகர், குடியரசுத் தலைவரின் உரை மீதான தீர்மானம் வாக்கெடுப்புக்கு வந்தபோது, இப்படித்தான் ராஜினமா செய்தார். பாரதீய ஜனதாவின் அடிப்படைக் கொள்கைகளை ஏற்க மறுக்கும் பல்வேறு அரசியல் தலைவர்களும்கூட - அனுபவக் கனிவும், ஆழ்ந்த புலமையும், நா நயமும் ஒருங்கே இழைந்த வாஜ்பாயின் தலைமை மீது தனிப்பட்ட முறையில் தனி மதிப்பு காட்டக் கூடியவர்கள் என்றாலும், வாஜ்பாய்க்காக பா.ஜ.க. ஆட்சி நீடிப்பதை விரும்பவில்லை. மக்களவையில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை பலம் இல்லாத நிலையில், மரபையொட்டி தனிப் பெரும் கட்சியான பா.ஜ.க.வுக்கு அரசமைக்கும் வாய்ப்பைக் குடியரசுத் தலைவர் அளித்தார். அது ஒரு விதத்தில் முறையானதாக இருக்கலாம். அதை அவசரப்பட்டு வாஜ்பாய் ஏற்றுக் கொள்ளாமல் இங்கிதமாக மறுத்திருக்கலாம். பா.ஜ.க.விற்கு மக்களவையில் 194 இடங்களே இருந்த நிலையில், அறுதிப் பெரும்பான்மை பலத்தைப் பெறுவதற்கு எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 70க்கும் மேற்பட்ட உறுப்பினர்களின் ஆதரவு தேவை என்பது தெரிந்திருந்தும், குடியரசுத் தலைவரின் அழைப்பை ஏற்று அரசமைத்தது வாஜ்பாய் போட்ட அவசரக் கணக்கு என்றே அப்போது கருதப்பட்டது.

ஆட்சி கவிழ்ந்த 28.5.1996 அன்று இரவே குடியரசுத் தலைவர் சங்கர் தயாள் சர்மா அவர்களை, ஐக்கிய முன்னணித்

தலைவர் **தேவகவுடா** சந்தித்து, அரசமைக்கும் உரிமையைத் தனக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அதன்படி தேவகவுடா அவர்களை ஆட்சி அமைக்கலாம் என்றும், அவருக்குப் பெரும்பான்மை ஆதரவு இருப்பதை 12.6.1996க்குள் நிரூபிக்க வேண்டுமென்றும் குடியரசுத் தலைவர் நிபந்தனை விதித்தார். இதற்கிடையில், அகில இந்திய காங்கிரஸ் தலைவராக அப்போதிருந்த **பி.வி.நரசிம்மராவ்** அவர்கள் குடியரசுத் தலைவரைச் சந்தித்து, தேவகவுடா தலைமையிலான ஐக்கிய முன்னணி, அரசமைக்க காங்கிரஸ் ஆதரவு அளிக்கும் என்பதை உறுதி செய்தார்.

இதைத் தொடர்ந்து தேவகவுடா அவர்கள் சென்னையிலிருந்த என்னிடம் தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு, நிலைமைகளை விளக்கினார். டெல்லியில் ஐக்கிய முன்னணியின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் தேவகவுடா தலைமையில், 29.5.1996அன்று நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் முரசொலி மாறன், சந்திரபாபு நாயுடு, மூப்பனார், அர்ஜுன்சிங், இந்திரஜித் குப்தா, ஹர்கிஷன் சிங் சுர்ஜித், மாதவராவ் சிந்தியா ஆகியோர் கலந்து கொண்டனர். மாநில கட்சிகள் அமைச்சரவையில் இடம் பெறுவது குறித்தும், ஐக்கிய முன்னணி அரசின் சார்பில் குறைந்த பட்ச பொதுவான செயல் திட்டம் ஒன்றினைத் தயாரிப்பது குறித்தும் அந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. ஆந்திர முதலமைச்சராக இருந்த சந்திரபாபு நாயுடு டெல்லியிலிருந்து என்னைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, ''கூட்டணி அரசில் தி.மு.க.வும் இடம் பெற வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.



சட்டப் பேரவை துணைத் தலைவராக பரிதி இளம்வழுதி தேர்ந்தெடுக்கப்பட்டார்.


29ஆம் தேதி காலையில் சென்னையில் என்னைச்

செய்தியாளர்கள் சந்தித்து, ''மத்தியில் ஐக்கிய முன்னணி அமைச்சரவையில் தி.மு.க. பங்கேற்குமா?'' என்று கேட்டபோது, அதைப் பற்றி எந்த முடிவும் அதுவரை எடுக்கவில்லை என்றும், மே 30ஆம் தேதி மாலையில் டெல்லி சென்று தலைவர்களுடனும், தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் கலந்து பேசி முடிவெடுப்பேன் என்றும் கூறினேன்.

31ஆம் தேதி காலை விமானத்தில் டெல்லி சென்றேன். என்னுடன் தம்பி மாறன், என்.வி.என்.சோமு ஆகியோர் வந்தனர். விமான நிலையத்தில் வரவேற்பினைப் பெற்றுக் கொண்டு தமிழ்நாடு இல்லத்திற்குச் சென்றேன்.

அங்கே நடைபெற்றக் கூட்டத்தில், அருமை நண்பர் மூப்பனார், அசாம் கணபரிட்சத் தலைவர், மகந்தா, சந்திரபாபு நாயுடு, தம்பி மாறன் ஆகியோர் நீண்ட நேரம் உரையாடினோம். பிரதமராகப் பொறுப்பேற்க விருந்த தேவகவுடா அவர்களும் வந்து கூட்டத்தில் கலந்து கொண்டார்.

ஐக்கிய முன்னணி அரசின் புதிய அமைச்சரவையில் த.மா.கா.வைச் சேர்ந்த ப.சிதம்பரம் இடம் பெறுவதைக் காங்கிரஸ் கட்சி எதிர்க்காது என்றும், ஐக்கிய முன்னணியின் புதிய அமைச்சரவை விஷயத்தில் எந்த விதத்திலும் குறுக்கிடப் போவதில்லை என்றும் காங்கிரஸ் கட்சி அறிவித்தது.



''அம்பேத்கருக்கு, என் இளம் வயதுக் கனவான ஒரு மணிமண்டபம் அமைந்ததைக் கண்டு நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை!''



31.5.1996 அன்று மாலையில் ஐக்கிய முன்னணியின் உயர்மட்டக் குழுக் கூட்டம் நடைபெற்றது. ஐக்கிய முன்னணியில் அங்கம் வகித்த கட்சிகளின் தலைவர்களும், பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். முன்னாள் பிரதமர் வி.பி.சிங் அவர்களும் அந்தக் கூட்டத்திற்கு வருகை தந்தார்.

கூட்டத்திற்குப் பிறகு செய்தியாளர்கள் சந்திப்பு நடைபெற்றது. அப்போது சந்திரபாபு நாயுடு, ''ஐக்கிய முன்னணியின் அமைச்சரவையில் தி.மு.கழகம், த.மா.கா., தெலுங்கு தேசம் ஆகிய கட்சிகள் இடம் பெறும்'' என்று அறிவித்தார். அவர் மேலும் கூறும்போது, ''தி.மு.க., த.மா.கா., தெலுங்கு தேசம், அசாம் கணபரிட்சத் ஆகிய நான்கு கட்சிகளும் இணைந்து கூட்டமைப்பாக இயங்கும் என்றாலும், இந்தக் கூட்டமைப்பு ஐக்கிய முன்னணியின் ஓர் அங்கமாகவே திகழும்'' என்றார்.

இந்த அறிவிப்புக்குப் பின், இரவு 10 மணியளவில் டெல்லியில் உள்ள தமிழக அரசின் தமிழ்நாடு இல்லத்தில் நான், தேவகவுடா, சுர்ஜித்சிங், மூப்பனார், ஜோதிபாசு, சந்திபாபு நாயுடு, மெகந்தா, இந்திரஜித் குப்தா, முரசொலி மாறன், லல்லு பிரசாத் யாதவ், முலாயம் சிங் யாதவ் ஆகியோர் கூடி நீண்ட நேரம் உரையாடினோம்.

இதற்கிடையே கர்நாடக மாநில முதல்வராக இருந்த தேவகவுடா அவர்கள் பிரதமராக ஆனதையொட்டி, கர்நாடக மாநிலத்தில் புதிய ஜனதா தள அமைச்சரவை 31.5.1996 அன்று பதவியேற்றது. முதல் அமைச்சராக ஜே.எச்.பட்டேல் அவர்களும், துணை முதல் அமைச்சராக சித்தராமையாவும் பதவியேற்றனர்.

1.6.1996 அன்று இந்தியாவின் 12ஆவது பிரதமராக தேவகவுடா பதவியேற்றார். அவருடன் தி.மு.கழகத்தின் சார்பில் தம்பி முரசொலிமாறன் மத்திய தொழில் அமைச்சராகவும், முதன் முதலாக தமிழகத்தின் சார்பில் ஒரு வன்னியரை கேபினட் அந்தஸ்துடன் கூடிய மத்திய அமைச்சராக, ஆக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் தரைவழி போக்குவரத்துத் துறை பொறுப்பில் திண்டிவனம் வெங்கட்ராமன் ஆகியோரும், த.மா.கா. சார்பில் நிதி அமைச்சராக அருமை நண்பர் ப.சிதம்பரமும், நகர்ப்புற மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சராக மறைந்த எம். அருணாசலம் ஆகியோர் உட்பட 20 பேர் கொண்ட அமைச்சரவை பொறுப்பேற்றது. அனைவருக்கும் குடியரசுத் தலைவர் சங்கர் தயாள் சர்மா அவர்கள் பதவிப் பிரமாணமும், ரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார். பதவியேற்பு விழாவில் நானும், வி.பி.சிங், நரசிம்மராவ், சந்திரசேகர், வாஜ்பாய், சோனியா காந்தி, சந்திரபாபு நாயுடு, ஜோதிபாசு, மெகந்தா, லல்லு பிரசாத் யாதவ், பைரோன் சிங் செகாவத் உட்பட பலரும் கலந்து கொண்டோம்.

ஐக்கிய முன்னணி அரசு சார்பாக குறைந்தபட்ச பொதுவான கொள்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு, அதனை பிரதமர் தேவகவுடா அவர்கள் 5.6.1996 அன்று வெளியிட்டார். அந்தத் திட்டம் பற்றி நான் கருத்துக் கூறும்போது, மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்க - அதிக ஆதாரங்களை மாநிலங்களுக்குத் தருவது; மத்திய மாநில உறவு பற்றிய சர்க்காரியா கமிஷன் அறிக்கையில் காலத்திற்கேற்றவாறு மாறுதல்கள் செய்வது போன்றவைகள் வரவேற்கத்தக்கவை என்று கூறினேன்.



எனக்காக – அரசின் சார்பில் துரைமுருகன்
அமைத்த மாளிகை, குடியரசுத் தலைவர்
கே.ஆர்.நாராயணன் தொடங்கி வைக்க, அம்பேத்கர்
பல்கலைக் கழக அலுவலகமாகத் திகழ்கிறது.

மத்தியில் இந்த அளவிற்கு அரசியல் மாற்றங்கள் நடைபெற்ற நேரத்தில் தமிழகத்திலே என்ன நடைபெற்றது?

21.5.1996 அன்று தமிழகத்தைச் சேர்ந்த தி.மு.கழக சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம், பேரவைத் தலைவராக யாரைத் தேர்ந்தெடுப்பது என்பது குறித்து முடிவெடுப்பதற் காக, அண்ணா அறிவாலயத்தில் என்னுடைய தலைமையில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில், பேரவைத் தலைவர் பதவிக்கு கழகத்தின் சார்பில் பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்களையும், பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கு பரிதி இளம்வழுதியையும் நான் முன்மொழிய, அனைவரும் ஒருமனதாக வழி மொழிந்தனர். அரசு கொறடாவாக புதுக்கோட்டை பெரியண்ணன் அவர்கள் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதைப் போலவே, தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டம் அவர்கள் அலுவலகத்திலே நடைபெற்று, சட்டமன்றக் கட்சித் தலைவராக முதுகுளத்தூர் எஸ்.பாலகிருஷ்ணன் அவர்களும், துணைத் தலைவராக வி.கே. லெட்சுமணன் அவர்களும், கொறடாவாக ஆர். சொக்கர் அவர்களும், துணைக் கொறடாவாக வேலூர் சி.ஞானசேகரன் அவர்களும், பொருளாளராக ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்களும், செயலாளராக பி.ரெங்கநாதன் அவர்களும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

நான் நான்காம் முறையாக முதல்வர் பொறுப்பை ஏற்றதும், மூன்று முறை முதலமைச்சராக இருந்தபோது - நான் தொடர்ந்து வாழ்ந்துவரும் கோபாலபுரம் இல்லத்திலேதான் அப்போதும் வசித்து வந்தேன் என்ற போதிலும், 1996ஆம் ஆண்டு அமைச்சர்களும், கட்சியின் மூத்த தலைவர்களும், அரசு அதிகாரிகளும் இடப் பற்றாக்குறையை மனதிலே கொண்டு, அரசு இல்லத்திற்கு என் வீட்டை மாற்றிக் கொள்ளலாமா என்று யோசித்து, அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. குறிப்பாக கோபாலபுரத்தில் நான் இருப்பதால், அந்தத் தெருவிலும், பகுதியிலும் உள்ள பொது மக்களுக்கு போக்குவரத்து நெரிசல் இடையூறாக இருந்ததை மனதிலே கொண்டுதான், எனக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட புதிய அரசு வீட்டினை நான் சென்று பார்க்க ஒப்புக் கொண்டேன்.

தம்பி துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் என்ற முறையில், தனக்குள்ள நிர்வாக வசதிகள், வாய்ப்புகளைப் பயன்படுத்தி நான் குடும்பத்துடன் வாழ்வதற்கென்று அழகும் அலங்காரமும் மிகுந்த வசீகரமான வசந்த மாளிகை யொன்றையே நிர்மாணித்து, ''அண்ணே! நீங்கள் இந்த வீட்டுக்கு வந்து விட்டால், காலையிலும் மாலையிலும் நடைப் பயிற்சிக்குக் கூடக் கடற்கரையென்று செல்ல வேண்டிய அவசியமே இல்லை. இதோ வீட்டைச் சுற்றி பூங்கா அமைந்த பாதையிலேயே நீங்கள் அந்தப் பயிற்சியைப் பெறலாம். கார்கள் நிற்பதற்கும் ஏராளமான இடம் இருக்கிறது. நீங்கள் விரும்பினால், ஒரு நீச்சல் குளம் கூட ஏற்பாடு செய்யலாம்.'' என்றெல்லாம் மளமளவென்று ஆரம்பித்து, ''மாளிகை'' போல் விளங்கும் இந்த வீட்டை விட்டு விடாதீர்கள்'' என்று விடாப்பிடியாகப் பொழிந்து தள்ளினார்.

''வா! வா என்னோடு! இந்த வீட்டை எதற்குப் பயன்படுத்தலாம் என்று சொல்லுகிறேன் வா'' - என்று அவர் தோளில் கை வைத்தவாறு காருக்குள் சென்று அமர்ந்து கொண்டேன் -கார் சாலைகளைக் கடந்து சென்று கொண்டிருக்கும்போது, என் சிந்தனை அந்தப் பெரிய எழில் மாளிகையை எதற்குப் பயன்படுத்தினால் பொருத்தமாக இருக்கும் என்பதாகவே இருந்தது.

இளமைப் பருவத்தில் இலட்சிய வெறியுடன், திராவிட இயக்கத்தில் என்னை இணைத்துக் கொண்டு, ஆரூருக்கு அருகில் உள்ள கிராமங்கள் - அதனைத் தொடர்ந்து அருகாமையில் உள்ள ஊர்கள் - பின்னர் நகர்கள் என்று - பொதுத் தொண்டாற்றிடச் சென்றாலும் - திருமண விழாக்களில் தலைமை வகித்திடவோ; வாழ்த்துரை கூறிடவோ சென்றாலும் - அந்த இடம் பெரும்பாலும் ஆதி திராவிடக் காலனிகளாகத் தானிருக்குமென்று குறிப்பிட்டிருக் கிறேனல்லவா? அதனால் என் நெஞ்சில் பதிந்த பெரியார், அண்ணா, பாரதிதாசன், அழகிரிசாமி என்ற புரட்சி யாளர்களின் சித்திரங்களுடன், அண்ணல் அம்பேத்கர் திருஉருவும் அழியாத ஓவியமாகவே இருந்தது.

அதனால்தான் நான் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், வட சென்னையில் திருமதி சத்தியவாணி முத்து அம்மையார் தொகுதியில் அம்பேத்கர் அரசு கல்லூரியொன்றை அமைத்திட்டேன். அதனைப் பின்பற்றி, தொடர்ச்சியாக அம்பேத்கர் பெயரால் சட்டக் கல்லூரிகள் - மாவட்டக் கழகப் பொறுப்புகளிலும் மாநிலக் கழக நிர்வாகப் பொறுப்புகளிலும் ஆதிதிராவிட உடன்பிறப்புகளுக்கு உரிய இடம்- என் மகன் அழகிரிக்கு காந்தியைத் திருமணம் செய்து வைத்த வகையிலும், என் பேத்தி கலைச்செல்வியை ஒரு ஆதிதிராவிடருக்குக் கலப்புத் திருமணம் செய்து வைத்த வகையிலும், அந்தச் சமூகத்தின் சம்பந்தி என்ற பெருமையும் பெற்றவன் நான் - தமிழக ஆட்சிப் பொறுப்பில் இருக்கும்போது நாளேடு ஒன்றில் ஒரு செய்தி - மராட்டிய மாநிலத்தில் ''மரத்வாடா''பல்கலைக் கழகத்துக்கு அம்பேத்கர் பெயர் சூட்டச் சொல்லி அந்த மாநில அரசோடு போராட்டம் நடப்பதாக - அதைப் பார்த்தவுடன் அக்கோரிக்கையை வலியுறுத்தி மராட்டிய கவர்னருக்கு ஒரு லட்சம் தந்திகள் தமிழ்நாட்டிலிருந்து தி.மு.க. சார்பில் கொடுக்கப்பட்டு; அதன் விளைவாக மராட்டிய கவர்னர் திரு.அலெக்சாண்டர், கோரிக்கை ஏற்கப்பட்டதாக எனக்குப் பதில் தகவலே அனுப்பினார் என்றால் - ''ஒரே இரத்தம்'' என்ற திரைப்படத்தின் மூலம் அம்பேத்கரின் இளமைத் துடிப்பையும் இலட்சியத் தாகத்தையும் நாட்டுக்கு விளக்க முற்பட்டேன்

என்றால் - எனக்கு அந்த அறிவார்ந்த புரட்சிக்காரர் மீது எத்துணை பற்றும் பாசமும் இருக்கும்?

இந்தக் கடந்த கால நினைவுகளும், நிகழ்வுகளும் ஒன்று திரண்டு; எனக்காக அரசின் சார்பில் துரைமுருகன் அமைத்த அந்த மாளிகைக்குள் ''அம்பேத்கர் பல்கலைக் கழக அலுவலக''த்தை ஆரம்பித்தால் என்ன? அந்தக் கேள்வி; என் தலைமையிலான அரசின் ஆணையாயிற்று - இந்தியாவில், குறிப்பாக தமிழகத்தில் அண்ணல் அம்பேத்கர் பெயரால் உருவான முதல் சட்டப் பல்கலைக் கழகம் அது!

அவர் பெயரால் பெரிய மணிமண்டபம் ஒன்றும் 4 கோடி ரூபாய் செலவில் சென்னையில் கட்டிய அந்தப் பெரும் தொண்டினையும் நானே ஆற்றிப் பேறு பெற்றேன்.

அவரை அறிஞர்களில் ஒருவர் என்றோ - தலைவர்களில் ஒருவர் என்றோ- பொதுவாகக் குறிப்பிட முடியாதே!

அறிஞர்க்கெல்லாம் அறிஞர் - தாழ்ந்து போ என்று தள்ளிவிடப்பட்ட மக்களின் தன்மானம் காக்க வந்த தலைவர்க்குத் தலைவர் - அவர் கொண்ட கருத்தும் - அண்ணாவும் பெரியாரும் பதித்த கருத்தும் -

''சாதியிலே மதங்களிலே
சாத்திரச் சந்தடியிலே சாயாதே.''

என்று வடலூர் வள்ளலார் போல மக்களை எச்சரித்த கருத்துக்கள் அல்லவா?

''பாதிக்குதே பசியென்றுரைத்து
வீதியிலே புரளுகின்ற பாழும் பரதேசிக்கு - உங்கள்
சாதி சாதித்த
நீதி என்ன?''

''வேதியர்க்கு வெண்பட்டும்
வெண் பொங்கலும், அளித்த
சாதி; அவர்கள் வைத்த
மீதியை யாவது
நாதியற்றோர்க்கு அளிக்க நினைத்ததா?

பேதியும் பீதியும் நம் சேரிக்கு விடுத்தது
சாதியல்லவா?''

போதி மரத்து புத்தன் புலம்பியதும்
ஆதிமகனாம் வள்ளுவன் அலறியதும்
சாதி ஒழிய வேண்டு மென்றுதானே!''

என்று 1940களிலேயே உருக்கமிகு உரையாடல் எழுதி நாடகம் தயாரித்தவன் நான்!

ஆம், அந்த நான்தான்; வீழ்த்தப்பட்ட மக்களை விடிவை நோக்கி எழுப்பி விட்ட வீராதி வீர விவேகப் பெட்டகம் அம்பேத்கர் வழியில் பயணிக்கச் செய்திட விரும்பி; அவர் பெயரால் பல கல்லூரிகளை - சிலைகளை - பல்கலைக் கழகங்களை - மணி மண்டபங்களை உருவாக்கிட எடுத்துக் கொண்ட சபதம்தான் - பெரியார் பெயரால் அமைந்து வரும் **சமத்துவ புரங்கள்** என்றால், அதனை மறுக்க இயலுமோ? மறக்கத்தான் முடியுமோ?

அண்ணல் அம்பேத்கர் அவர்கள் சாதி ஒழிப்புக்கு ஒரே வழி சொல்லியிருக்கிறார். ''சாதி ஒழிப்புக்கு உண்மையான வழி கலப்புத் திருமணம்தான் என்று நான் உறுதியாக நம்புகிறேன். ரத்தக் கலப்பின் மூலம்தான் உற்றார் உறவினர் என்ற உணர்வு ஏற்படும். இந்த உறவு, இந்த உணர்வு ஏற்பட்டு வலுவடைந்தாலன்றி சாதியினால் ஏற்பட்டிருக்கும் வேற்றுமை உணர்வு ஒருவருக்கொருவர் அன்னியராக நினைப்பது மறையவே மறையாது. சாதியை உடைப்பதற்கு உண்மையான தீர்வு கலப்புத் திருமணமே. வேறு எதுவும் சாதியை கரைக்க முடியாது'' என்று எழுதியிருக்கிறார். அதனை நெஞ்சில் பதிய வைத்துத்தான், என்னுடைய குடும்பத்திலேயே பல கலப்புத் திருமணங்களை நடத்தி வைத்துள்ளேன்.

அம்பேத்கர் சொல்லுகிறார் - "There is no doubt, in my opinion, that unless you change your social order, you can achieve little by way of progress. you cannot mobilize anything of the foundations of Caste. You cannot build up a Nation, you cannot build up a Morality. Anything that you will build on the foundations of caste, will crack and will never be a whole."

அதாவது, உங்களுடைய சமூக அமைப்பை மாற்றாமல், நீங்கள் சிறிதுகூட முன்னேற்றம் காண முடியாது. சாதியை அடிப்படையாக வைத்து நீங்கள் எதையும் உருவாக்க முடியாது. தேசிய இனத்தை உருவாக்க முடியாது. ஒரு ஒழுக்கப் பண்பை உருவாக்க முடியாது. சாதியை அடிப்படையாக வைத்து, நீங்கள் எதை உருவாக்கினாலும், அது உடைந்து சிதறி உருப்படாமல் போய்விடும்.

அதனால்தான் நான் எப்போதெல்லாம் ஆட்சியிலே இருக்கிறேனோ அப்போதெல்லாம் அம்பேத்கர் பெயரில் ஏதாவது செய்து வருகிறேன். அம்பேத்கர் பெயரால் சட்டப் பல்கலைக் கழகம் கண்டு, 20-9-1997 அன்று, குடியரசுத் தலைவராக இருந்த **கே.ஆர்.நாராயணன்** அவர்களை அழைத்து வந்து, அதனைத் தொடங்கி வைத்தேன். அதிலே கூட தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம் தொடங்குவதற்கான சட்ட முன் வடிவு தமிழகச் சட்டப் பேரவையிலே, நிறைவேற்றப்பட்டு, ஏறக்குறைய ஓராண்டு ஆகியும், அதற்காக மத்திய அரசின் அனுமதி கிடைக்காமல் இருந்த நிலையில், அதைப்பற்றி நான் குடியரசுத் தலைவருக்கு கடிதம் எழுதியதைத் தொடர்ந்துதான் அன்றைய மத்திய அரசின் அனுமதியே கிடைத்தது.

இந்த அத்தியாயத்தை எழுதி முடிக்கும்போது, என் நெஞ்சில் எழுந்த நினைவலைகளைத் தொகுத்துக் கூறுவதுகூட **''நெஞ்சுக்கு நீதி''**யின் இந்த அத்தியாயத்திற்குப் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். ஐந்தாவது முறையாக, தி.மு.கழகம் ஆட்சிக்கு வந்த இந்த இரண்டாண்டு காலத்தில்தான், பல ஆண்டு காலமான பஞ்சாயத்துத் தேர்தலில் நின்று வெற்றி பெற்றால், உயிருக்கு ஆபத்து- தலை போய்விடும் என்று பயந்து - நடுங்கி - பெற்ற பதவிகளை ராஜினாமா செய்து விட்ட சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்ற கிராமங்கள் கீரிப்பட்டி, பாப்பாப் பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக் கச்சியேந்தல் ஆகிய ஊர்களில் பதவிக்குப் போட்டியிடாமலே - போட்டியிட்டு வெற்றி பெற்றால், அந்தப் பதவியை அவர்களே ராஜினாமா செய்தும்,

சாதி வெறிக்கு அஞ்சி செயல்பட்ட ஊர் மக்கள் இந்த ஆண்டில் நடைபெற்ற பஞ்சாயத்துத் தேர்தலில் தான் நெஞ்சு நிமிர்த்திப் போட்டியிட்டு, வெற்றி பெற்று, பெற்ற பதவியைத் துறக்காமல் இருந்தார்கள் என்பதும், உத்தபுரம் என்ற ஊரில் 20 ஆண்டு காலமாக மேல் வகுப்பினரையும், ஆதி திராவிட வகுப்பினரையும் பிரித்து வைத்துக் கட்டப் பட்டிருந்த நீண்ட நெடிய சுவர் கழக அரசினால் இடிக்கப்பட்டு, இடதுசாரிகளின் ஆதரவோடு, இழிவு துடைக்கப்பட்டது என்பதையும் குறிப்பிடுவது, சாதி ஆதிக்கத்தின் வலிய கரங்கள் எப்படியெல்லாம் விளையாடின என்பதற்கும் - இன்னும் கூட விபரீதமாக விளையாடிக் கொண்டிருக்கின்றன என்பதற்கும் சான்றுகளாகும்.

நெஞ்சுக்கு நீதி - என்றும் நெகிழ்வூட்டும் 'சரிதச் சேதி'

-கவிவேந்தர் கா.வேழ வேந்தன்.

''நெஞ்சுக்கு நீதி'' தீட்டும்
நேரிலாத் தலைவா! தங்கள்
கொஞ்சிடும் எழுத்து வண்ணக்
கோலத்தை என்ன சொல்வேன்?
தஞ்சையின் கரும்பை விஞ்சும்
தனிச்சுவை இனிப்பைத் தேக்கி,
எஞ்ஞான்றும் நின்று பேசும்
ஈடிலாப் 'புதையல்' அன்றோ?


சேரரின் தீரம், ஈரம்
செப்பிடும் 'பதிற்றுப் பத்து'!
நேருவின் 'கடித நூலோ'
நிலவர லாறே கூறும்!
யாரிங்கே தங்களைப்போல்
எழிற்சுவை யழகைக் கூட்டிச்
சீரிய நயத்தைச் சேர்த்தே
செதுக்கினார் 'சரித' மெல்லாம்?

நடந்திட்ட கால் சுவட்டை
நளினமாய் விளக்கு கின்றீர்!
உடன்வந்தோர் தம்மை எல்லாம்
ஒருபோதும் மறந்தி டாமல்
விடுபடா தெழுது கின்றீர்;
விம்மிடும் எங்கள் மார்பும்!
அடடா! உம் நினைவின் ஆற்றல்
யார்பெற்றார் இந்த மண்மேல்?

வாழ்க்கையில் போராட் டங்கள்
வரும் போகும்; அறிவோம்; ஆனால்
வாழ்க்கையே போராட் டத்தின்
வன்களம் ஆக்கிக் கொண்டீர்!
ஆழ்கடல் முத்தும் கூட
அணியாகி முடங்கும் காதில்;
தாழ்விலா முத்தின் முத்தே!
தங்களின் ஒளியா மயங்கும்?

பிரதமர் அல்லர் தாங்கள்;
பிரதமர் தம்மை யெல்லாம்
நிரல்நிர லாக ஆக்கி
நெடும் வரலாற்றில் நின்றீர்!
வரங்கேட்டுத் தில்லி ஓடும்
வாடிக்கை மாற்றி, அன்னோர்
கரத்திற்கே கரங் கொடுக்கும்
காதையைப் படைத்திட் டீர்கள்!

தன் வரலாறா ஈது?
தாயகம் தாண்டி வந்த
பொன்வர லாறே அன்றோ?
புகழ்பூத்த தங்கள் பேனா
இன்றிங்கே குனிந்து தீட்டும்
இணையிலா இப்ப டைப்பே
என்றென்றும் நிமிர்ந்தே தங்கள்
எழில்மாட்சி முழங்கும்; ஆணை!



வேழவேந்தன்

3. சூப்பர் ஸ்டார் சூளுரை

1996ஆம் ஆண்டு , மே திங்களில் பதவிப் பொறுப்பை ஏற்றதன் தொடர்ச்சியாக, **''இந்தியன் எக்ஸ்பிரஸ்''** ஆங்கில ஏடு என்னைச் சந்தித்து நீண்ட பேட்டி ஒன்றினை எடுத்து வெளியிட்டது. அந்தப் பேட்டியில் சில முக்கிய கேள்விகளும், அதற்குநான் அளித்த பதில்களும் இந்தத் தொடரில் இடம் பெறுவது முக்கியமெனக் கருதுகிறேன். அவை வருமாறு-

செய்தியாளர்:- இந்தத் தேர்தலில் ரஜினிகாந்த் பங்குபற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்? ஏனென்றால், ரஜினி அலை என்று எதுவும் இந்த மாநிலத்தில் கிடையாது என்று ஜெயலலிதா கூறியிருக்கிறாரே?

நான்:- தி.மு.க., தமிழ் மாநிலக் காங்கிரஸ், ரஜினிகாந்த் மற்றும் முற்போக்குக் கூட்டணியில் உள்ள அனைத்து அமைப்புகள், எம்.ஜி.ஆர். மன்றம் என அனைத்திற்கும் இந்த வெற்றியில் சமமான பங்கு உண்டு.

செய்தியாளர்:- அப்படியானால் ரஜினிகாந்த் முக்கியப் பங்கு ஆற்றியிருக்கிறார் அல்லவா?

நான்:- தேர்தல் பிரச்சாரத்தில் அவர் நேரடியாக ஈடுபடவில்லை என்றாலும், வாக்காளர்களுக்கு அவர் வேண்டுகோள் விடுத்ததன் காரணமாக, மாநிலம் முழுவதும் ரஜினி மன்றத்தினர் மிகப் பொறுப்பாக வேலை செய்துள்ளனர்.

இந்தப் பேட்டியினைத் தொடர்ந்து தமிழகத்தில் உள்ள பல்வேறு நாளேடுகளும், கிழமையேடுகளும் மட்டுமன்றி, வட மாநிலங்களைச் சேர்ந்த ஏடுகள் எல்லாம் முதலமைச்சர் என்ற முறையில் என்னை அணுகி பேட்டி கண்டார்கள்.

ஐந்தாண்டு கால இடைவெளிக்குப் பிறகு தமிழகத்தில் புதிய அரசு பொறுப்பேற்றதும், நிர்வாகத்தில் பல்வேறு சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டிய நிலையில் அரசு இயந்திரம் இருந்தது. அரசுப் பணிகளை நிறைவேற்ற 'காண்ட்ராக்ட்டு'கள் விடுவதில் உள்ள முறைகேட்டினைத் தவிர்ப்பதற்காக வேண்டி, புதிய டெண்டர் முறை ஒன்று அறிவிக்கப்பட்டது. அதுவரை அ.தி.மு.க. ஆட்சியில் பொதுப்பணித் துறை மற்றும் அரசின் பல்வேறு துறைகளில் பொதுப் பணிகளுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரும்போது, விதிகளுக்கு முரணாக ''ஒரேயொரு ஒப்பந்தப்புள்ளிதான் ஒரு வேலைக்கு வழங்கப்படும்'' என்ற நிலை இருந்தது. இதன் காரணமாக, ''அமைச்சர் யாரைச் சுட்டிக் காட்டுகிறாரோ அவருக்குத்தான் பணிகள் தரப்படும்'' என்றிருந்த நிலையை மாற்றி, எந்தத் துறையைச் சார்ந்த எந்தப் பணியாக இருந்தாலும், திறந்தவெளி ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டது.

இதைப்பற்றி *18.5.1996* அன்று ''தினமணி'' இதழ் எழுதிய தலையங்கத்தில், ''தூய்மையான நிர்வாகத்தை உருவாக்கும் நோக்கத்துடன், அதிகார வர்க்கத்தில் அப்பழுக்கு இல்லாதவர்களாகப் பார்த்து, தேர்ந்தெடுத்து, நிர்வாக இயந்திரத்தைப் புதுப்பித் துள்ளார் கருணாநிதி. அடுத்த நடவடிக்கையாக, ஊழல்களின் ஊற்றுக்கண் போல - கடந்த ஆட்சியில் விளங்கி வந்த ஒப்பந்தப் புள்ளிகள் கோரும் முறையை மாற்றி அமைத் திருக்கிறார். இதன் மூலம் ஊழலுக்கு இடம் இல்லாத நிர்வாகத்தை ஏற்படுத்துவதில் முதல்வருக்குள்ள கவலை நன்றாகத் தெரிகிறது. இது பாராட்டத் தக்க நல்ல திருப்பம்'' என்று எழுதியது.




மரபை மதித்து ஜானகி அம்மையார் படம் மாட்டப்பட்டது!

96ஆம் ஆண்டு, தி.மு.கழகம் வெற்றி பெற்ற பிறகு அமைச்சரவை கூட்ட அறைக்குச் சென்ற நான் அங்கே முதலமைச்சராக சில மாதங்கள் இருந்த **ஜானகி அம்மையாரின்** புகைப்படம் மட்டும், அதற்கு முன்பிருந்த ஆட்சியில் தவிர்க்கப்பட்டதைக் காண நேரிட்டது. பொதுவாக எல்லா முதல் அமைச்சர்களின் படமும் அமைச்சரவைக் கூட்ட அறையில் வரிசையாக மாட்டப்பட்டிருக்கும். ஆனால் **ஜானகி அம்மையாரின்** படம் அங்கே இல்லாததைக் கண்டு, உடனடியாக அவர்களின் படத்தை அங்கே மாட்ட வேண்டுமென்று கூறி, அது இன்றளவும் அமைச்சரவைக் கூட்ட அறையில் மாட்டப் பட்டுள்ளது. மரபுகளுக்கு ஊனம் வந்து விடக் கூடாது என்பதில் நாங்கள் காட்டிய அக்கறைக்கு இது ஓர் உதாரணமாகும்.

சட்டமன்ற உறுப்பினர்கள் பதவியேற்பு, பேரவைத் தலைவர், துணைத் தலைவர் தேர்தல் ஆகியவை முடிந்த பிறகு, தமிழகச் சட்ட மன்றத்தில் அன்றைய **ஆளுநர் சென்னா ரெட்டி** அவர்கள் அவை மரபுப்படி அரசின் கொள்கைகளை வெளியிடும் உரையினை ஆற்றினார். கழக அரசின் சார்பில் அவசர அவசரமாகத் தயாரிக்கப்பட்டு, ஆளுநர் அவர்களால் அவையிலே படிக்கப்பட்ட உரை எத்தகையது என்பதற்கு, அந்த நேரத்தில் ''தினமணி'' நாளிதழில் 25.5.1996 அன்று எழுதப்பட்ட தலையங்கத்தில் இருந்தே தெரிந்து கொள்ள முடியும். அந்தத் தலையங்கத்தின் சில பகுதிகள் வருமாறு:-

''தி.மு.க. அரசு இந்த ஆண்டு நிறைவேற்ற இருக்கும் திட்டங்களை ஆளுநர் சென்னாரெட்டி சட்டப் பேரவையில் கோடிட்டுக் காட்டியுள்ளார். சமுதாய மேம்பாட்டிற்கான பல நல்ல வழிமுறைகளும் அவரது உரையில் இடம் பெற்றுள்ளன. பருவ மழை பொய்த்ததால் மாநிலத்தின் பல பகுதிகள் வறட்சியின் பிடியில் சிக்கியுள்ளன. இந்நிலையில் நிலவரி ரத்து செய்யப்பட்டு, உரிய கடன் நிவாரணமும் வழங்கப்படும் என்று உரையில் குறிப்பிடப்பட்டிருப்பதை விவசாயிகள் நிச்சயம் வரவேற்பர்.''



இவர் உங்களவரும் இல்லை - எங்களவரும் இல்லை நம்மவர்!

தமிழகத்திற்கும், அதற்குப் பக்கத்தில் உள்ள ஆந்திரா, கர்நாடகா, கேரளா ஆகிய அண்டை மாநிலங்களோடு தண்ணீருக்காக போராடிக் கொண்டிருக்க வேண்டிய நிலை இருந்த போதிலும், தி.மு.கழகத்தைப் பொறுத்த வரை அண்டை மாநிலங்களோடு அனுசரித்துப் போக வேண்டுமென்பதையே குறிக்கோளாகக் கொண்டு வீண்வம்பை விலை கொடுத்து வாங்கிடாமல், விட்டுக் கொடுத்து, அனைத்து மாநில மக்களும் அமைதியோடு வாழ்ந்திட வேண்டுமென்பதில் நாட்டம் உடையதாய் செயல்பட்டு வந்துள்ளது. குறிப்பாக 1996ஆம் ஆண்டு தி.மு.கழகம் பதவிப் பொறுப்புக்கு வந்தபோது, ஆந்திர முதலமைச்சர் நண்பர் **சந்திரபாபு நாயுடு** அவர்கள், அடிக்கடி என்னுடன் தொடர்பு கொள்ளவும், நான் அவருடன் தொடர்பு கொள்ளவும், அகில இந்தியப் பிரச்சினைகளிலே இருவரும் ஒன்றுபட்டு செயல்படவுமான நிலைமை இருந்தது.

அந்த நிலையில், நான் பொறுப்பேற்ற மே 25ஆம் தேதியன்றே சந்திரபாபு நாயுடு அவர்கள், சென்னை வந்து என்னை இல்லத்தில் சந்தித்தார். தமிழகத்திற்கு அரிசி வழங்க ஆந்திர அரசின் சார்பில் ஒப்புதல் தெரிவித்ததோடு, டிசம்பருக்குள் கிருஷ்ணா நீர் சென்னைக்கு வர ஏற்பாடு செய்வதாகவும் உறுதி கூறினார்.

ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் காழ்ப்புணர்ச்சியோடு கடுஞ்சொல் வீசி அவையே அமளிக்காடாக இருந்த நிலைமாறி, 96ஆம் ஆண்டு மே திங்களுக்குப் பிறகு, தமிழகச் சட்டப் பேரவை அமைதிப் பூங்காவாகவும், கருத்தாழம் மிக்க விவாதங்கள் நடைபெறும் அவையாகவும் விளங்கியதோடு, நகைச்சுவை ததும்பும் உரையாடல்கள் அதிகமாக நடைபெறும். உதாரணமாக ஒருசில சம்பவங்களைக் குறிப்பிடலாம்.

ஆளுநர் உரை விவாதத்தின்போது உரையாற்றிய த.மா.கா. உறுப்பினர் **சிதம்பரம் அழகிரி** பேசும்போது, ''முதல்வரும் பேரவை முன்னவரும், இந்த வயதான காலத்திலும் எப்படி இளமையாக இருக்கிறார்கள் என்ற இரகசியத்தை எங்களுக்கும் தெரிவித்தால் நாங்களும் அவ்வாறே இருக்க முயற்சிப்போம்'' என்று கேட்டபோது, ''நாட்டையும், சமுதாயத்தையும் காக்க உங்களைப்போல இளைஞர்கள் இருக்கிறார்கள் என்ற தைரியத்தாலும், நம்பிக்கையாலும் நாங்கள் இளமையாக இருக்கிறோம்'' என்று பலத்த சிரிப்பொலிக்கிடையே கூறினேன்.

ஆளுங்கட்சி சார்பில் அதே நாளில், கடலூர் தம்பி **புகழேந்தி** பேசும்போது என்னை மிகவும் புகழ்ந்து பேசினார். அப்போது நான் எழுந்து ''சிதம்பரம் த.மா.கா. உறுப்பினர் அழகிரி பேசும்போது ஒரு பாடலைச் சொன்னார். அந்தப் பாடலில், அதிகமாகப் புகழ்ந்து கொண்டே இருந்தால், புகழ்ச்சிக்குரியவர்கள் நிலை குலைந்து போய் விடுவார்கள் என்றார். எனவே ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் என்னை நிலை குலையச் செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்- அதாவது என்னைப் புகழ்வதன் வாயிலாக'' என்று பதிலளித்தேன்.

30.5.1996 அன்று, பேரவையில் கழக உறுப்பினராக இருந்த **டி.ராஜேந்தர்** உரையாற்றி முடித்ததும், தமிழ் மாநிலக் காங்கிரஸ் உறுப்பினர் சிதம்பரம் அழகிரி எழுந்து, ''பேசியவர் உங்களவரா? அல்லது எங்களவரா? என்பதைத் தெரிவிக்க வேண்டும்'' என்றார். அப்போது நான் குறுக்கிட்டு, ''அவர் உங்களவரும் இல்லை - எங்களவரும் இல்லை, நம்மவர்'' என்று பல சிரிப்பொலிக்கிடையே கூறினேன்.

இதே நாளன்று காங்கிரஸ் உறுப்பினராக இருந்த **ரங்கநாதன்** தனது பேச்சில் ''பொய்'' என்று உச்சரித்தபோது, அ.தி.மு.க. தலைவராக இருந்த **திருநாவுக்கரசு** குறுக்கிட்டு, பொய் என்ற வார்த்தை ''அன்பார்லிமெண்டரி''ஆகும் என்றார். அதற்கு விளக்கம் அளிக்கும் வகையில் நான் எழுந்து ''பொய் என்ற வார்த்தை எப்பொழுது பாராளுமன்ற



கிருஷ்ணா நதி நீர் சென்னைக்கு வர ஏற்பாடு செய்வதாக
சந்திரபாபு நாயுடு உறுதி கூறினார்!

வார்த்தையாகப் பயன்படுத்தப்படக்கூடாது என்று பொருள்படும் என்றால், ஒரு உறுப்பினர் சொன்னது பொய் என்று குறிப்பிட்டுச் சொல்லும் போதுதான் பொய் என்ற வார்த்தை ''அன்பார்லிமெண்டரி'' என்றாகும். பொய் என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதே தவறு அல்ல. அப்படியானால் ''பொய்மையும் வாய்மையிடத்த'' என்ற வள்ளுவருடைய குறளைக்கூட நாம் சொல்ல முடியாமல் போய்விடும். எனவே ஒருவர் சொன்னது பொய் என்று இங்கே உள்ள ஒரு உறுப்பினரைப் பார்த்துக் குற்றம் சாட்டினால்தான் அப்பொழுது பொய் என்ற வார்த்தை அன்பார்லிமெண்டரி ஆகும். ஆகவே பொய்யான குற்றச்சாட்டு என்று சொல்வது தவறல்ல'' என்று கூறினேன்.

1989-90ஆம் ஆண்டில் தி.மு.கழகம் ஆட்சியிலே இருந்தபோது, ''பாட்டாளி மக்கள் கட்சி மற்றும் வன்னியர் சங்கத்தினர் மீது அதற்கு முன்பு இருந்த ஆட்சியில் போடப்பட்டிருந்த வழக்குகள் எல்லாம் திரும்பப் பெறப்படும்'' என்று நான் கூறி, அதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. அனைத்து வழக்குகளும் திரும்பப் பெறப்படுவதற்கு முன்பாக, தி.மு.கழக ஆட்சி 1991 ஜனவரி மாதமே கலைக்கப்பட்டு விட்ட காரணத்தினால், அதற்குப் பின்பு வந்த ஆட்சியிலே திரும்பப் பெறப்படாத வழக்குகள்

எல்லாம் அப்படியே இருந்து வந்தன. 96ஆம் ஆண்டு மீண்டும் தி.மு.கழக ஆட்சி பொறுப்பேற்ற பின்னர், பா.ம.க. சார்பில் அப்போது அவையிலே பேசிய பேராசிரியர் தீரன் இந்த வழக்குகளை எல்லாம் திரும்பப் பெற வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார். மேலும் தமிழகத்தில் உள்ள மற்ற கட்சிகளின் சார்பிலும், இது போன்ற வேண்டுகோள்கள் பா.ம.க.வினர் மீதும் மற்ற அரசியல் கட்சிகளின் மீதும் அதற்கு முன்பிருந்த ஆட்சிக் காலத்திலே அரசியல் ரீதியாகப் போடப்பட்ட வழக்குகளையெல்லாம் திரும்பப் பெற வேண்டுமென்று என்னிடம் பல கோரிக்கைகள் வந்திருந்தன.

அந்தக் கோரிக்கைகளையெல்லாம் ஏற்றுக் கொண்டு, அதற்கு முன்பிருந்த ஆட்சியில் போடப்பட்டிருந்த 722வழக்குகளில், ஒன்றிரண்டு கொலை வழக்குகளைத் தவிர, ஏனைய வழக்குகள் அனைத்தையும் திரும்பப் பெற வேண்டுமென்று 1996ஆம் ஆண்டு ஜூன் திங்களில் ஆணை பிறப்பித்தேன்.

29.5.1996 அன்று கொரியா நாட்டைச் சேர்ந்த ஹுண்டாய் கார் தயாரிக்கும் தொழிற்சாலையின் தலைவர் பார்க் அவர்கள் தலைமையில், எக்சிகியூட்டிவ் மேனேஜிங் டைரக்டர் என்.எம்.கின் என்பவரும், இன்னொரு இயக்குநர் ஒய்.கே.ஜங்க் என்பவரும் வந்திருந்தார்கள். அந்தத் தொழிற்சாலை சார்பில் சென்னையில் ஒரு கார் தொழிற்சாலை தொடங்குவது குறித்து அன்றுதான் முதன் முதலாகப் பேசப்பட்டது.

அந்தத் திட்டத்திற்கு ஆரம்ப முதலீடு 2450 கோடி ரூபாய் என்றும், பின்னர் மேலும் 1400 கோடி ரூபாய் அளவிற்கு விரிவாக்கம் செய்யப்படும் என்றும் தெரிவித்தார்கள்.

தமிழ்நாட்டில் ஏப்ரல் 27ஆம் தேதி நடைபெற்ற தேர்தலின்போது, வாக்குப் பதிவு நடைபெற வேண்டிய மொடக் குறிச்சி தொகுதியில், 1033 வேட்பாளர்கள் போட்டியிட்டதால், அந்தத் தொகுதியின் வாக்குப் பதிவை ஜூன் மாதம் முதல் தேதிக்கு தேர்தல் ஆணையம் ஒத்தி வைத்திருந்தது. 1033 வேட்பாளர்கள் களத்தில் இருந்ததால்,

அவர்களுக்காக 65 பக்கங்களைக் கொண்ட வாக்குச் சீட்டுகள் புத்தக வடிவில் அச்சடிக்கப்பட்டு, வாக்குச் சாவடிகள் அதிகரிக்கப்பட்டு, மிகப் பெரிய வாக்குப் பெட்டிகள் எல்லாம் தயாரிக்கப் பட்டு, வாக்குப் பதிவு நடைபெற்றது. வாக்கு எண்ணிக்கை 2.6.1996 அன்று நடைபெற்று, கழக வேட்பாளராகப் போட்டியிட்ட சுப்புலட்சுமி ஜெகதீசன் 40 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

1.6.1996 அன்று, மூத்த சுதந்திரப் போராட்ட தியாகிகளில் ஒருவரும், முன்னாள் குடியரசுத் தலைவரும், தமிழகத்தின்பாலும், என்பாலும் மிகுந்த அக்கறை கொண்டவருமான **நீலம் சஞ்சீவ ரெட்டி** அவர்கள் பெங்களூரில் தனது 82ஆவது வயதில் மறைந்தார். நுரையீரல் கோளாறு காரணமாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவர், உடல் நிலை தேறாமலே இயற்கை அடைந்தார்.

காமராஜர் - நிஜலிங்கப்பா - சஞ்சீவ ரெட்டி ஆகிய மூவரும் அகில இந்திய காங்கிரசின் தலைமைப் பீடத்தை அலங்கரித்தவர்கள் மட்டுமல்ல, பொது வாழ்க்கையில் தூய்மையையும் நேர்மையையும் கட்டிக் காத்தவர்கள். மூவரும் நெருங்கிய நண்பர்களும்கூட. ஒரு கால கட்டத்தில் தமிழகத்தில் காமராஜரும், ஆந்திராவில் சஞ்சீவ ரெட்டியும், கர்நாடகத்தில் நிஜலிங்கப் பாவும் முதல்வர்களாக ஆட்சி புரிந்தார்கள். அப்பொழுது தென்னக மாநிலங்களிடையே அற்புதமான நல்லுறவு நிலவியது. அகில இந்திய காங்கிரஸ் இரண்டாகப் பிளவு பட்டதற்கு, ஒரு விதத்தில் சஞ்சீவ ரெட்டியே காரணம்.



1033 வேட்பாளர்கள் போட்டியிட்ட மொடக்குறிச்சி தொகுதியில் வென்றார் சுப்புலட்சுமி ஜெகதீசன்


1969ஆம் ஆண்டு நடைபெற்ற குடியரசுத் தலைவர் தேர்தலில், காங்கிரஸ் மேலிடத்தில் மற்ற தலைவர்களுடன் சேர்ந்து கொண்டு

அன்றைய பிரதமர் இந்திரா காந்தி சஞ்சீவ ரெட்டியைக் காங்கிரஸ் வேட்பாளராக நிறுத்தி வைத்தார். ஆனால் தேர்தல் வந்தபோது, கடைசி நிமிடத்தில், மனசாட்சியைக் காரணமாகக் காட்டி, ரெட்டியை எதிர்த்துப் போட்டியிட்ட சுயேச்சை வேட்பாளர் வி.வி.கிரியைப் பகிரங்கமாக ஆதரித்தார். இதன் விளைவாகவே காங்கிரஸ் இரண்டாகப் பிளவுபட்டது. அந்த நேரத்தில் நான் டெல்லியிலே இருந்த காரணத்தால், கழகத்தின் சார்பில் பேராசிரியர் அவர்களையும், தம்பி துரைமுருகனையும் பெங்களூர் சென்று இறுதி அஞ்சலி செலுத்திடச் செய்தேன்.

1989 ஆம் ஆண்டு தி.மு.கழகம் ஆட்சி பொறுப்பிலே இருந்தபோது, நீலம் சஞ்சீவரெட்டி அவர்கள் சென்னைக்கு வந்திருந்தார். அப்போது அவர் என்னிடம்தான் சென்னை தலைமைச் செயலகத்தில், கோட்டையில், தான் அமர்ந்து அமைச்சராகப் பணியாற்றிய அந்த அறையைப் பார்க்க வேண்டுமென்று கூறினார். நானும், பேராசிரியர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் அவர் தங்கியிருந்த இடம் சென்று, அவரை அழைத்து வந்து, கோட்டையில் விருந்தளித்து, அவர் தங்கிப் பணியாற்றிய அமைச்சர் அறையைக் காட்டிய போது, நின்ற நிலையிலேயே நெகிழ்ந்து போனார். குழந்தைபோல, அந்த நாற்காலியிலே சற்று நேரம் உட்கார்ந்து விட்டு, ''எழுந்திருக்கிறேனப்பா'' என்று என்னிடம் சொல்லி விட்டு, அவ்வாறே செய்தார். அவர் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும்கூட, தமிழகத்தின் மீது ஒரு பாச உணர்வை மனதிலே பதிய வைத்திருந்தார்.

அவர் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு எத்தனை முறை சிறை சென்றார் என்ற எண்ணிக்கை அவருக்குக்கூடத் தெரியாது. பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய திருவுருவப் படத்தைத் திறப்பதற்காக அன்னாள் முதலமைச்சர் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களால் அழைக்கப்பட்டு, அவர் தமிழகச் சட்ட மன்றத்திற்கு வருகை தந்த நேரத்தில், நான் எதிர்க்கட்சித் தலைவராக அமர்ந்திருந்தேன்.

அப்போது காமராஜரின் படத்தைத் திறந்து வைத்த சஞ்சீவ ரெட்டி அவர்கள் என்னைப் பற்றியே அதிகமாகப் பேசினார்.



இந்தியாவிலேயே சுதந்திரக் காற்றை சுவாசிக்கும் இடம் தமிழகம்தான் என்றார் காமராஜர்!

காமராஜர் மறைந்தபோது நெருக்கடி நிலை அமலில் இருந்தால், அவர் மறைவுச் செய்தி கேட்டதும், உடனே தன்னால் சென்னைக்கு வர முடியவில்லை என்றும், சாதாரண சஞ்சீவ ரெட்டிக்கு விமான டிக்கெட் எப்படிக் கிடைக்கும் என்றும், இருந்தாலும் கடைசி நேரத்தில் தாமதமாக சென்னை வந்து சேர்ந்ததாகவும், கருணாநிதியும் அவருடைய அரசும் தன்னை விமான நிலையத்திலிருந்து காமராஜருடைய இறுதி யாத்திரை நடைபெற்ற இடத்திற்கு அழைத்துச் செல்ல உதவினார்கள் என்றும், காமராஜருக்காக அனந்தபூரில் ஓர் இரங்கல் கூட்டம் நடத்த விரும்பி ஏற்பாடு செய்தபோது, அதற்கு அங்கே அனுமதி வழங்கப்படவில்லை என்றும், அந்தக் கூட்டத்தை சென்னையிலே நடத்தியிருந்தால் அப்போது முதல்வராக இருந்த கருணாநிதி அனுமதி வழங்கியிருப்பார் என்றும், அந்த நிகழ்ச்சியையும் பத்திரிகையிலே இடம் பெறச் செய்திருப்பார் என்றும் பேசினார்.

இந்தியாவில் நெருக்கடி நிலை அமலில் இருந்தபோது, ஆட்சிப் பொறுப்பிலே இருந்த நான், பெருந்தலைவர் காமராஜரிடமும், நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்களிடமும் தொடர்பு கொண்டு நெருக்கடி நிலையை எதிர்த்து, தமிழக அமைச்சரவையே பதவி விலகத் தயாராக உள்ளது என்று சொன்னபோது, சஞ்சீவ ரெட்டி அவர்கள், காமராஜரிடமும் கலந்து கொண்டு கூறுவதாகச் சொல்லிவிட்டு - அவ்வாறு



29.5.1996 அன்று சென்னையில் ஹுண்டாய் கார் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க பேச்சுவார்த்தை!

கலந்து பேசிவிட்டு, பிறகு என்னை அழைத்து ''காமராஜர் சொல்கிறார், இப்போது இந்தியாவிலேயே சுதந்திரக் காற்றை சுவாசிக்கக்கூடிய இடமாக தமிழகம் தான் இருக்கிறது. அதையும் கெடுத்துவிடக்கூடாது என்று கருணாநிதியிடம் சொல்லுங்கள் என்று என்னிடத்திலே காமராஜர் சொன்னார்'' என்று குறிபிட்டார்.

15.7.1996 அன்று, தமிழகச் சட்டமன்றத்தில் சஞ்சீவ ரெட்டி அவர்களுக்கு இரங்கல் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. அந்த நிகழ்ச்சியிலே நானும் கலந்து கொண்டு மறைந்த அந்த பெருமகனுக்கு புகழாரங்களைச் சூட்டினேன்.

ஆண்டுதோறும் என்னுடைய பிறந்தநாளை, ஜூன் 3ஆம் தேதியன்று, தமிழகமெங்கும் கழகத் தோழர்கள் கொண்டாடுவதைப் போல அந்த ஆண்டிலும் மிகச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை செய்து வருவதை ஏடுகளின் மூலம் அறிந்த நான், உடனடியாக நான் விடுத்த அறிக்கையில், என்னுடைய பிறந்த நாள் விழாவினை ஆடம்பரமாகக் கொண்டாட வேண்டாமென்று கேட்டுக் கொண்டேன். அதைத் தொடர்ந்து அந்த ஆண்டு என்னுடைய பிறந்த நாள் ஆடம்பரம் எதுவும் இல்லாமல், கொடியேற்று விழாக்கள், இலவச மருத்துவ முகாம்கள், கண் தானம், இரத்த தானம் வழங்கும் நிகழ்ச்சிகள், ஏழை எளியோருக்கு அன்னதானம், இலவச வேட்டி, சேலைகள் வழங்கும் நிகழ்ச்சிகள், மாணவர்களுக்கு இலவசச் சீருடைகள், புத்தகங்கள் வழங்கும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதோடு, குறிப்பாக எனது



ஆந்திர மாநிலத்தலைவராக இருந்தாலும், தமிழகத்தின்மீது மிகுதியான பாச உணர்வைக் கொண்டிருந்தார் நீலம் சஞ்சீவரெட்டி

வேண்டுகோளினையேற்று மாநிலம் முழுவதும் மரக்கன்றுகள் நடும் விழாக்கள் பெருமளவில் நடைபெற்றன.

அப்போது தமிழக ஆளுநராக இருந்த சென்னா ரெட்டி அவர்கள் என் பிறந்த நாளையொட்டி வீட்டிற்கே வந்திருந்து கட்டிப் பிடித்து வாழ்த்துத் தெரிவித்தார்.

பிறந்த நாளினை யொட்டி, தி.மு.கழக அறக்கட்டளைக்காக சிவானந்தா குருகுலம் மற்றும் ஆதரவற்றோர்க்கான நிதியாக கழகத் தோழர்கள், மற்றும் அமைப்புகள் சார்பில் தனித்தனியே என்னிடம் உண்டியல் மூலமாக வழங்கிய நிதி மட்டும் ரூ. 6,86,277. இதில் காட்டாங் குளத்தூர் சிவானந்தா குருகுலத்திற்கு மட்டும் ஐந்து இலட்சம் ரூபாயும், உதவும் கரங்கள் நிறுவனத்திற்கு ஒரு இலட்சம் ரூபாயும் வழங்கப்பட்டது. இது தவிர, முதல் அமைச்சரின் பொது நிவாரண நிதிக்காக என் பிறந்த நாளையொட்டி ரூ.9,14,002 குவிந்தது.

அந்தக் காலக் கட்டத்தில், தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர் சம்மேளனத்தினரின் ஊதிய உயர்வு சம்பந்தமான பிரச்சினையில் தீர்வு ஏற்படாததால், பொதுத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்பிருந்தே படப்பிடிப்புகள் நடைபெறாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. தி.மு.கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றதும், திரையுலகப் பிரமுகர்கள் சிலர் என்னைச் சந்தித்து திரையுலகத்தினரின் பிரச்சினையைத் தீர்த்து வைக்க முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர்.

அப்போது செய்தித்துறை அமைச்சராக இருந்த முல்லைவேந்தனிடம் கூறி, மூன்று தரப்பினரையும் அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்திடுமாறு கூறினேன். அந்தப்



ஆளுநர் சென்னா ரெட்டி எனது பிறந்த நாளன்று வீட்டிற்கு வந்து வாழ்த்து தெரிவித்தார்!

பேச்சுவார்த்தையில் உடன்பாடு வராத நிலையில், இந்தப் பிரச்சினை குறித்து, 4-6-1996 அன்று மாலையில், தென்னிந்திய திரைப்பட வர்த்தகச் சபைப் பிரதிநிதிகள், தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் மற்றும் தமிழ் திரைப்பட இயக்குநர்கள் சங்கப் பிரதிநிதிகள், தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர் சம்மேளனப் பிரதிநிதிகள் ஆகிய மூன்று தரப்பினரையும் தலைமைச் செயலகத்தில் சந்தித்து, நான்கு மணி நேரத்திற்கு மேல் உரையாடினேன். குறிப்பாக, தென்னிந்தியத் திரைப்பட வர்த்தக சபை பிரதிநிதிகள் என்ற முறையில் தாசரி நாராயணராவ், புண்டரி காட்சய்யா, கே.ஆர்., தமிழ்த் தயாரிப்பாளர்கள் சங்கத்தின் சார்பில் கே.ஆர்.ஜி., இப்ராகிம் ராவுத்தர், முக்தா சீனிவாசன், கே.எஸ்.பிரகாசம் மற்றும் தமிழ்த் திரைப்பட இயக்குநர்கள் சங்கத்தின் சார்பில் கே.பாலச்சந்தர், ஏ.வி.எம்.சரவணன், சி.வி.ராஜேந்திரன், பாலு மகேந்திரா, பி.வாசு, விசு. கே.எஸ்.ரவிக்குமார், ராம.நாராயணன், தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர் சம்மேளனத்தின் சார்பில் விஜயன், மோகன் வர்மா ஆகியோர் கலந்து கொண்டனர்.

அந்தப் பேச்சுவார்த்தையின்போது சம்பளப் பிரச்சினை குறித்து மூன்று பிரிவினரும் தெரிவித்த சம்பள விகிதங்கள் பற்றி



திரைப்படத் தொழிலாளர் பிரச்சினையைத் தீர்க்க, திரையுலகப் பிரமுகர்களுடன் கலந்தாய்வு!

அனைத்துத் தரப்பினரும் கலந்து பேசி சில நாட்களில் தீர்த்துக் கொள்வதென்றும், அடுத்த நாள் முதல் படப்பிடிப்பைத் தொடங்குவதற்கு மூன்று தரப்பினரும் முன்வந்ததோடு, அரசுக்கு முன்னறிவிப்புக் கொடுக்காமல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட மாட்டோம் என்றும் உறுதியளித்தனர்.

அன்றைய கூட்டத்தில்தான் முக்கிய முடிவான சண்டைப் பயிற்சியாளர்கள் பணி நேரத்தின்போது உயிரிழக்க நேரிட்டால், முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்ச ரூபாய் வழங்கப் படும் என்று அறிவிக்கப்பட்டது. அன்றைய தினம் நான் எடுத்த முயற்சிக்காக திரைப்படத் துறையினர் அனைவரும் எனக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

தேர்தல் நேரத்தில் வெளிநாடு சுற்றுப் பயணம் சென்று விட்டு சென்னை திரும்பிய சூப்பர் ஸ்டார் **ரஜினிகாந்த்** அவர்கள் தலைமைச் செயலகத்திற்கு வந்து மலர்ச்செண்டு கொடுத்து, தேர்தலில் பெற்ற வெற்றிக்காக வாழ்த்து தெரிவித்துக் கொண்டார். புகைப்படக்காரர்கள் எங்கள் இருவரையும் பார்த்து ''க்ளோஸ்'' ஆக வரவேண்டுமென்று சொன்னார்கள். அவர்களிடம் ''நாங்கள் இருவருமே ஏற்கனவே

''க்ளோஸ்''ஆக இருந்து வருகிறோம்'' என்று சிரித்துக் கொண்டே கூறினேன்.

என்னைப் பார்த்த பிறகு ரஜினி வெளியே செல்லும்போது, செய்தியாளர்கள் அவரைப் பார்த்தபோது, ''தேர்தலுக்கு முன்பே, வெற்றி பெற்ற பின் கோட்டையிலே கலைஞரைச் சந்திப்பேன், என்று கூறியிருந்தேன். அவ்வாறே இன்று சந்தித்து வாழ்த்து தெரிவித்தேன்'' என்று கூறினார்.

மேலும் அவர் கூறும்போது, ''தேர்தலில் தி.மு.க. வெற்றி பெற்றதற்கு ஜெயலலிதா மீதான எதிர்ப்பு அலை மட்டும் ஒரு காரணம் அல்ல; கருணாநிதி, மூப்பனார் மீது மக்கள் வைத்திருந்த நம்பிக்கையும் இன்னொரு காரணம். மக்களை யாரும் விலை பேச முடியாது. ஏமாற்ற முடியாது. இந்த மகத்தான வெற்றிக்கு என்னை வாழ வைத்த தெய்வங்களான தமிழக மக்கள்தான் காரணம். தி.மு.க. ஆட்சி நன்றாக இருக்கிறது. போகப் போகப் பாருங்கள். கலைஞர் நல்லாட்சி நடத்துவார்.'' என்று கூறினார்.

அண்ணாவின் கணையாழிக்கு மேலாக...

-அருட்தந்தை வின்சென்ட் சின்னதுரை

''நெஞ்சுக்கு நீதி'' ஐந்தாம் பாகம் ஆரம்பமாகி விட்டது.

அண்ணாவின் இதயம் வரைகின்ற
தமிழோவியம் தமிழ் நிலத்திற்கு
தவமாக வந்துவிட்டது.

கோடானு கோடி தமிழர்களின்
முகவரியும் - அகவழியும்
ஒரு தலைவனின் இதயத்திலிருந்து
இறங்கி வருகிறது.

பஞ்சுப் பொதியில் பதுங்குவதற்கு
நெருப்புத் துண்டுகள் நேரம் பார்க்கும்
அரசியல் களத்தில் இருந்து கொண்டு...

உதடுகள் காயப்பட்டாலும்,
உண்மைகள் காயப்பட்டுவிடக்
கூடாதென்கிற
கவனக் காப்போடு...



''நெஞ்சுக்கு நீதி''யை
நெய்து முடிக்க ஏது நேரம்?
இமைகளை நனைத்து விட்டுப்
போனது
நான்கு பாகங்கள்!
இதயத்தைத் துவைத்துவிட
வருகிறது
ஐந்தாம் பாகம்!

பனிப்புயல் ஏரியில்
பனி நாட்டுப் பறவையின்
பாடல் அல்ல... **''நெஞ்சுக்கு நீதி''**

இரண்டு நூற்றாண்டுகளை
இணைத்துக் கட்டியிருக்கிற
யுகப் பொழுதில்,

பொது வாழ்வு - அரசியல்-
திரைக்கதை - இலக்கியம்-
என விரிந்து பரந்து
85 ஆண்டுகளைக் கடந்து நிற்கிற
காவியத் தலைவனின்
காலடித் தடங்கள்தான்-
''நெஞ்சுக்கு நீதி''

ஒரு தலைவனின் இதயத்தில்
இத்தனை இடிகளா?
ஒரு தலைவனின் முதுகில்
இத்தனை சுமைகளா? என்று
ஒரு தலைவனின்
குணங்களையும் -
ரணங்களையும்
பதிவு செய்கிற பட்டயம்தான்-
''நெஞ்சுக்கு நீதி''

ஒரு நதியின் நீளம்
அறிகிற ஆய்வு அல்ல;
ஒரு மாமனிதனின் மனதின்
ஆழம் அறிகிற நேயம்தான்-
''நெஞ்சுக்கு நீதி''

சங்கத் தமிழ் படித்தோம்-
தமிழின் இனிமை
அறிந்தோம்!

குறளோவியம் படித்தோம் -
தமிழின் வலிமை அறிந்தோம்!

தொல்காப்பியப் பூங்கா
படித்தோம்
தமிழன் தன்னை அறிந்தான்!

உலக வரலாறுகளே!
உற்றுக் கேளுங்கள்
ஆறுகோடித் தமிழர்களின்
அடையாளம்
ஐந்தாவது பாகத்திலும்
பதிவாகிறது!

திருக்குவளை தந்த திருக்குறளே!
தீந்தமிழ் தேனெனும் பெருங்கடலே!
விடுமுறைக்குப் போகாத
நதி நீங்கள்!

அறுவடை முடியாத
நிலம் நீங்கள்!
ஓய்வு அறியாத
பறவை நீங்கள்!

வெளிச்சத்தின் கருவறையான
கிழக்கு நீங்கள்!

முடிவு இல்லாத
வானம் நீங்கள்!

ஊன்றுகோல் விரும்பாத
எழுதுகோல் நீங்கள்!

எங்களுக்காக வாழும்
வரலாறு நீங்கள்!

உங்கள் ''நெஞ்சுக்கு நீதி''
எங்கள் நெஞ்சுக்கு நிதி!

உங்களுக்கு நாங்கள்
என்ன தந்துவிட முடியும்,
'அண்ணாவின்
கணையாழி'க்கு மேலாக?



அருட்தந்தை
வின்சென்ட் சின்னதுரை

4. மதுவிலக்கு மாயை

மகாத்மா காந்தியின் பேரனாக இருந்தால்கூட மதுவிலக்குக் கொள்கையில் இவ்வளவு பிடிவாதமாக இருக்க முடியாது என்ற பாராட்டைப் பெறுகிற அளவுக்கு சிலர், இன்று தமிழக அரசியல் அரங்கில் உரத்த குரல் எழுப்பிக் கொண்டிருக்கும் நேரத்தில், இந்தத் தொடரில் சிறிது, ''மதுவிலக்கு'' புராணம் பாடலாம் என்று கருதுகிறேன்.

''மது வீட்டையும் கெடுக்கும்- நாட்டையும் கெடுக்கும்'' என்று பளிச்சிடும் அறிவிப்புகளைப் பார்க்கும்போது, அந்த வாசகத்தில் ஓர் எழுத்துக்கூட தவறு என்று எண்ணுகிறவனல்லன் நான் - ஒருவன் குடிக்கத் தொடங்கி; பிறகு குடியே அவனைக் குடிக்கத் தொடங்கி, பின்னர் அதுவே அவன் வாழ்வை முடிக்கச் செய்த கொடுமைகளை நான் அனுபவரீதியாகவே அறிந்து அழுது புலம்பியிருக்கிறேன் - அப்படி நாசமானவர்கள் நண்பர்களாகவும் - நல்ல உறவினர்களாகவும் கூட இருந்திருக்கிறார்கள் - மதுப் பழக்கம் எப்படியெல்லாம் மனித உயிர்களைப் பிராண்டி வீழ்த்துகிறது என்பதையும், விழித்துக் கொண்டோர் அதன் பிடியிலிருந்து மீண்டு பிராணனைக் காப்பாற்றிக் கொள்வதையும்கூட கண்டிருக்கிறேன்.

அண்ணாவின் இயக்கத்தில் இணைந்திருந்து பின்னர் இரண்டு இயக்கங்களாகப் பிரிந்து, அவற்றில் ஒன்றான அ.தி.மு.க.வின் தலைவர் அருமை நண்பர் **எம்.ஜி.ஆர்.** அவர்களும், தி.மு.க. தலைவராகிய நானும் மதுவிலக்குக் கொள்கையை மனப்பூர்வமாக ஆதரிப்பவர்கள் தான் - ஆனால் நாட்டு நடப்பும், மனிதர்களின் மனப்போக்கும் எங்கள் உறுதிக்கு உரமாக அமையவில்லையே?

அதை விளக்கவும், விமர்சிக்கவும் இந்தக் கட்டுரைத் தொடரில் சில விஷயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த ''ஐந்தாம் பாகம்'' தொடரை நான் எழுதிக் கொண்டிருக்கும் போதே; மதுவிலக்குச் சட்டம் கொண்டு வர வேண்டுமென்று ''திடீர் மகாத்மாக்கள்'' திடுமெனப் புறப்பட்டுள்ள இந்த நேரத்தில், மூன்று நாட்களாக தமிழகத்தில் வெளி வரும் அனைத்து ஏடுகளிலும், பரபரப்பான ஒரு செய்தி பற்றி கவனத்தைத் திருப்ப வேண்டி வந்துவிட்டது. விஷச் சாராயத்துக்கு 19 பேர் பலி - 24 பேர் பலி - 50 பேர் பலி- என்று தொடர்ந்து ஒவ்வொரு பத்திரிகையிலும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. தமிழகத்தின் எல்லையோரப் பகுதி ஒசூர். அங்கே பின்னமங்கலம் என்ற கிராமத்திலும் - அதற்கு மிக அருகில் உள்ள கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த இரண்டு கிராமங்களிலும், விஷச் சாராயத்தைக் குடித்தவர்கள் -தமிழ்நாட்டைச் சேர்ந்த 51 பேரும் - கர்நாடகத்தைச் சேர்ந்த 106 பேரும் பலியாகியுள்ளார்கள். 157 பேரைப் பலி கொண்ட இந்த ''மது சுனாமி'' மையம் கொண்டது கர்நாடக மாநிலத்தில்! மரண ஓலம் தமிழகத்திலும்!

சம்பவம் நடந்த பின்னமங்கலம் கிராமத்தில், மருத்துவர்கள் அசோகன் மற்றும் அமரேஷ்வதி ஆகியோர் முகாமிட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிகிச்சை அளித்து, முடிந்தவரை மீட்க முயற்சித்துக் கொண்டிருக்கின்றார்கள். கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு) நாகராஜன், ஒசூர் சார்



ஆட்சியர் நாகராஜன், தேன்கனிக்கோட்டை டி.எஸ்.பி. சின்னராஜு தளி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் டி.ராமச்சந்திரன் மற்றும் கழகத்தின் சார்பில் மாவட்டச் செயலாளர் செங்குட்டுவன், நாடாளுமன்ற உறுப்பினர் சுகவனம் மற்றும் ஒன்றியச் செயலாளர்கள், மேலும் அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த முன்னணியினர் அங்கே முகாமிட்டு உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு ஆறுதல் கூறியும், உதவிகளை வழங்கியும் வருகிறார்கள்.

விஷச் சாவுகள் குறித்து டி.ஐ.ஜி. செண்பகராமன் விசாரணை நடத்தி, தளி காவல் நிலையத்தில் பணியாற்றி வந்த சப் - இன்ஸ்பெக்டர் கபிலன் உட்பட 12 பேரைக் கூண்டோடு கிருஷ்ணகிரி ஆயுதப் படைக்கு இடமாற்றம் செய்து உத்தரவிட்டுள்ளார். போலீசார் நடத்திய விசாரணையில் பலியான அனைவரும் கர்நாடக மாநில எல்லையில் விற்கப்பட்ட சாராயத்தை வாங்கிக் குடித்துவிட்டுப் பலியானார்கள் என்று தெரிய வந்துள்ளது.

பின்னமங்கலத்தைச் சேர்ந்த பார்வதி என்ற பெண் கர்நாடக மாநிலம் ஆனைக்கல் அருகே உள்ள கல்லுப்பள்ளியிலிருந்து சாராயம் கொண்டு வந்து விற்பனை செய்தது தெரிய வந்துள்ளது. இவரது கணவர் ஏற்கனவே கைது செய்யப்பட்டு, சேலம் மத்திய சிறையிலே அடைக்கப்பட்டுள்ளார். விஷச் சாராயத்தைக் காய்ச்சி விற்றவர் கர்நாடக ஆனைக்கல்லைச் சேர்ந்த எல்லப்பா என்றும், அவர் தலை மறைவாகி விட்டதாகவும், அவரைக் காவல் துறையினர் தேடி வருவதாகவும் செய்திகள் வந்துள்ளன.

'யார் ஆட்சியிலே இருக்கிறார்கள்' என்ற பாகுபாடு பார்க்காமல், எந்த ஆட்சி பொறுப்பிலே இருந்தாலும் ஒருசில ஆண்டுகள் இடைவெளியில் இது போன்ற விஷச் சாராயம் அருந்தி 30 பேர் இறந்தார்கள் - 40 பேர் இறந்தார்கள் என்ற செய்திகள் வந்துகொண்டுதான் உள்ளன. உடனே அதனை எடுத்து வைத்துக் கொண்டு மதுவிலக்கைத் தீவிரமாக அமல் நடத்த வேண்டுமென்று எதிர்க்கட்சிகள் குரல் எழுப்புவார்கள்.

அண்மையிலேகூட நம் தமிழகத்திலே மதுவிலக்கினைக் கொண்டுவர வேண்டுமென்ற குரல் ஒலிப்பதற்குப் பதிலளிக்கும் வகையில், அந்தக் குரலுக்கு எதிரொலியாக மத்திய அமைச்சர் தம்பி டி.ஆர்.பாலு 3.3.2008 அன்று விடுத்த அறிக்கையில்,

''மதுவிலக்குப் பிரச்சினை தமிழகத்திற்கு மாத்திரம் உரியதோ அல்லது வருவாயை மட்டும் பொறுத்ததோ அல்ல. இது அகில இந்தியப் பிரச்சினை. இந்தியாவில் அனைத்து மாநிலங்களிலும் மது விற்பனை செய்யப்படும்போது, தமிழ் நாட்டில் மட்டும் ரத்துச் செய்தால் தமிழகமெங்கும் கள்ளச் சாராயம் பெருகும். இதனால் பல உயிர்களை இழக்க நேரிடும்'' என்று கூறியிருந்தார்.



மது அருந்தக் கூடாதுதான்! ஆனால், மதுவிலக்கைவிட மனமாற்றத்தை உண்டாக்குவதே சிறந்தது!

கடந்த காலத்தில் மதுவிலக்கு கடுமையாக அமல் நடத்தப்பட்டபோது - மதுவிலக்குச் சட்டத்தை மீறியதற்காக இலட்சக்கணக்கானவர்கள் சிறை வாசம் அனுபவிக்க நேர்ந்ததை - அருமை நண்பர் எம்.ஜி.ஆர். தந்த புள்ளி விவரத்தைச் சுட்டிக்காட்டி இருந்தார், டி.ஆர்.பாலு தனது அறிக்கையிலே!

''மதுவிலக்கினை அமல்படுத்தியதால், கள்ளச் சாராய வழக்கில் தமிழகத்தில் இரண்டு இலட்சம் பேர் சிறை புகுந்ததாக அறிவித்து, தமிழகத்தில் மீண்டும் மது விற்பனை செய்வதைத் தவிர வேறு வழியில்லை'' என்று 'ஆனந்த விகடனி'லே எம்.ஜி.ஆர். எழுதிய கட்டுரையை ஆதாரம் காட்டியிருந்தார், தம்பி பாலு.

எம்.ஜி.ஆர். தந்த புள்ளி விவரம் என்ன? அவர் அப்படி ஒரு புள்ளி விவரத்தை ஆனந்த விகடனிலே எழுத வேண்டிய அவசியம் என்ன?

28.3.1990 அன்று, தமிழக சட்டப் பேரவையிலேயே ஆனந்த விகடனில் எம்.ஜி.ஆர். எழுதிய கருத்துக்களையெல்லாம் எடுத்து வைத்து நான் உரையாற்றியிருக்கிறேன். அதில் ஒரு பகுதி வருமாறு:

"மிக முக்கியமாக அவையிலே பேசப்பட்டது மதுவிலக்குப் பிரச்சினையாகும். *1971*ஆம் ஆண்டு கருணாநிதிதான் இந்த அநியாயத்தைச் செய்தான். அது வரையிலே மது என்றால் என்ன என்று ஒரு தலைமுறைக்கே தெரியாமல் இருந்தது" என்று எதிர்க்கட்சித் தலைவர் உட்பட - இலக்கியச் செல்வர் குமரி **அனந்தன்** உட்பட - மற்றும் மதுவிலக்கைத் தீவிரமாக ஆதரிக்கின்ற நண்பர்கள் அனைவரும் உணர்ச்சிப் பூர்வமாக இங்கே எடுத்துக் கூறியிருக்கின்றார்கள்.

"*1971*ஆம் ஆண்டிலேதான் மது விலக்கை கொஞ்ச நாளைக்கு ஒத்தி வைக்கின்ற ஒரு அறிவிப்பை நான் அறிவித்தேன். *71*-இல் என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொருளாளராக இருந்தார். எதிர்க் கட்சித் தலைவர் குறிப்பிட்டதைப் போல - கோவையிலே நடைபெற்ற பொதுக்குழுவிலேதான் மதுவிலக்கை ஒத்தி வைப்பது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அது அரசுக்கு அனுப்பப்பட்டு, அது ஆராயப்பட்டு, பிறகு அந்தத் தீர்மானம் செயல் வடிவம் பெற்றது.

"*1971*-க்கு முன்பே, *13.9.69* "மாலைமுரசு" பத்திரிகையில் நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் வெளியிட்ட ஒரு அறிக்கையை இந்த அவையிலே உறுப்பினர்களுடைய கவனத்திற்கு கொண்டு வருவது நலம் என்று கருதுகின்றேன். அவரின் இந்த அறிக்கை ஆனந்தவிகடன் வார இதழில் வெளியான "நான் ஏன் பிறந்தேன்?" என்ற தொடர் கட்டுரையில் *62*ஆவது அத்தியாயத்தில் இடம் பெற்றுள்ளது.

"மதுவிலக்கு குறித்து *13.9.1969*இல் எம்.ஜி.ஆர். வெளியிட்ட அறிக்கை வருமாறு:-



மதுவிலக்குக் கொள்கையில் முதல்வர் கலைஞருக்கு அதிக அக்கறையும் பிடிப்பும் உண்டு!

''மதுவிலக்கு அமலில் இருந்தாலும் 'பர்மிட்' உள்ள பணக்காரர்கள் சட்டத்தின் உதவியோடு சாதாரணமாகக் குடிக்கிறார்கள். ஏழைகளும் மதுக்கஷாயம் போன்றவற்றைச் சட்டத்தின் உதவியோடு குடிக்கிறார்கள். இவை இரண்டையும் மதுவிலக்குச் சட்டம் தடை செய்ய இயலவில்லை. 'பர்மிட்'டுக்கு மாநில அரசும், மதுக்கஷாயத்துக்கு மத்திய அரசும் தடை போடவில்லை. இருந்தாலும் மதுவிலக்குச் சட்டம் அமல்படுத்தப்படுகிறது. இதில் சிலருக்கு தண்டனைகூட கிடைக்கின்றது. ஆனால், மதுவிலக்கினால் எந்தத் தீமையும் குறையவில்லை. எந்தத் தீமையைப் போக்க மதுவிலக்கு கொண்டு வரப்பட்டதோ, அது முன்பைவிட இப்போது அதிகமாக உள்ளது. குடிப்பவர்கள் தங்களையும் கெடுத்து, தங்கள் குடும்பங்களையும் கெடுத்துக் கொள்கிறார்கள்.

''மதுவிலக்கு பூரணமாக அமல்படுத்தப்பட, 'பர்மிட்'டுகளையும் மதுக்கஷாயத்தையும் உடனடியாகத் தடுக்க வேண்டும். தமிழ்நாட்டில் மதுவிலக்கு அமலில் இருந்தாலும், அதைச் சுற்றியுள்ள மாநிலங்களில் மதுவிலக்கு தளர்த்தப் பட்டிருக்கிறது. அந்த மாநிலங்கள்

மதுவிலக்கைக் கைவிட எம்.ஜி.ஆர். முன்வந்தார். அது அவராக எடுத்த முடிவல்ல. மதுவிலக்கினால் ஏற்பட்ட தோல்வி, அவரை அந்த முடிவுக்குத் துரத்தியது.

மதுவினால் கோடிக்கணக்கான ரூபாய் வருமானம் பெற்று வருகின்றன. ஆனால், தமிழ் நாடு அந்த நட்டத்தை ஏற்றுக் கொண்டே வருகிறது. ஆனால், யாருமே மது அருந்தாதிருக்கச் செய்ய முடியாத நிலையில் உள்ளது. பணம் இருந்தாலும் இலட்சியம் பூரணமாக நிறைவேறியபாடில்லை.

''மேலே கூறப்பட்ட கருத்தும் கொள்கையும் என்னுடையவை மட்டுமல்ல - தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கும் இவைகள் உடன்பாடானவையே ஆகும். அவருக்கு மாறுபாடு இருக்குமானால், எனது அந்த அறிக்கைக்கு மாற்று அறிக்கை விடுத்திருப்பார். ஆகவே கலைஞர் அவர்களின் கொள்கையும் என்னுடைய கொள்கையும் ஒன்றுதான். இதை எல்லோரும் உணர்ந்து கொள்ளவேண்டும்.''

''மதுவிலக்குக் கொள்கையில் தமிழகத்தில் மட்டுமல்ல - இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள எந்தத் தனி மனிதனுக்கோ, எந்தக் கட்சிக்கோ உள்ள அக்கறையைவிட, அந்தக் கொள்கை மக்களுக்குத் தேவையானது என்ற லட்சியப் பிடிப்பைவிட, தி.மு.கழகத் தலைவரும், தமிழக முதல்வருமான கலைஞருக்கு அதிக அக்கறையும் அதிகப் பிடிப்பும் உண்டு என்பதை மற்றையோரைவிட அழுத்தமாக என்னால் துணிந்து கூற முடியும்!''



மதுவிலக்குப் பிரச்சினை தமிழகத்துக்கு மட்டும் உரியதோ - அல்லது வருவாயைப் பொறுத்தோ அல்ல. அது அகில இந்தியப் பிரச்சினை.

- என்று என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அன்றைக்குச் சொன்னார்.

அந்த நீண்ட தொடரில் அப்போதே, புள்ளி விவரங்களைக் கொடுத்து, 1971க்குப் பிறகுதான் மக்களே குடிக்க ஆரம்பித்தார்கள். ஒரு தலைமுறைக்கே கள் என்றால் என்ன வென்று தெரியாது என்றெல்லாம் சொல்லப்பட்ட வாதங்கள் பொடிப்

பொடியாக நொறுங்க, எம்.ஜி.ஆர். அவர்கள் ஆனந்த விகடன் பத்திரிகையிலே எழுதிய புள்ளி விவரங்களையும் இங்கே குறிப்பிடுகிறேன்.

மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் போலீசாரால் கண்டுபிடிக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கையை எம்.ஜி.ஆர். எழுதியிருக்கின்றார். கண்டு பிடிக்காத குற்றங்கள் வேறு. பதிவு செய்யப்படாத குற்றங்கள் வேறு. கண்டுபிடிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை:

*1961*இல் *1,12,889* குற்றங்கள் (அதாவது நான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வராததற்கு முன்பே மதுவிலக்கு அமலில் இருந்தபோது, *61*ஆம் ஆண்டு *1,12,889* பேர் குற்றங்களிலே சிக்கியிருக்கின்றார்கள். சிக்காதவர்கள் வேறு). இதில் தண்டனை வழங்கப்பட்ட குற்ற வழக்குகளின் எண்ணிக்கை *91,955*.

ஆண்டு	பதிவு செய்த குற்றங்கள்	தண்டனை தரப்பட்டவை
1962	1,29,977	1,10,701
1963	1,23,006,	1,12,760
1964	1,37,714	1,19,302
1965	1,65,052	1,45,056
1966	1,89,548	1,72,528
1967	1,90,713	1,71,541
1968	2,53,607	2,23,276
1969	3,06,555	2,55,997
1970	3,72,472	3,37,966

இப்படியொரு கணக்கை அன்றைக்கே நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆனந்த விகடன் பத்திரிகையிலே எழுதியிருக்கிறார். எனவே ''71க்குப் பிறகுதான் ஒரு தலை முறைக்கே ''மது'' என்றால் என்னவென்று தெரியும். அதற்கு முன்பெல்லாம் அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் சோமா, சுரா என்ற பானங்களின் பெயர்கள்தான்! கள்ளையும், சாராயத்தையும்

தமிழ்நாட்டிற்கு அறிமுகப்படுத்தியது கருணாநிதிதான்'' என்று சொன்ன வாதத்தை நொறுக்குகின்ற வகையிலேதான் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்தப் புள்ளி விவரத்தை அன்றைக்கே ஆனந்த விகடன் பத்திரிகையில் தந்திருக்கிறார்.

1971-ஆம் ஆண்டிலேதான் சட்டம் வருகின்றது. 69ஆம் ஆண்டிலேயே அதைப்பற்றி எம்.ஜி.ஆர். கூறியிருக்கிறார் என்றால், இது கலைஞருக்கும் உடன் பாடான விஷயம்தான் என்று எம்.ஜி.ஆரே எழுதியிருக்கிறார் என்றால் - அது ஆழமாகவும் அக்கறையுடனும் அறிவுப் பூர்வமாகவும் விவாதிக்கப்பட்ட விஷயம் என்று தெளிவாகிறதல்லவா?

1971லே தி.மு.கழக ஆட்சியிலே சிறிது காலம் மதுவிலக்கு ஒத்திவைக்கப்பட்டது. பின்னர் மீண்டும் அமலுக்குக் கொண்டு வரப்பட்டு, கடைகள் மூடப்பட்டன.

தொடர்ந்து, 1977லே ஆட்சிக்கு வந்த எம்.ஜி.ஆர். ஒரு சில ஆண்டுகள் மது விலக்கை அமல்படுத்தப்படாத பாடுபட்டார். மதுவிலக்கைக் கடுமையாக நடைமுறைப்படுத்த அவரது ஆட்சியில் மதுவிலக்குச் சட்டத்தில் திருத்தத்திற்கு மேல் திருத்தம் கொண்டு வரப்பட்டது!

மதுவிலக்கு சட்டத்தின்கீழ் ஒருமுறை பிடிபட்டால் 3 வருடம் சிறைத்தண்டனை - இரண்டாவது முறையாக அதே குற்றத்தை செய்தால் 7 வருட சிறைத் தண்டனை - மூன்றாவது முறை குற்றம் செய்து பிடிபட்டால் நாடு கடத்தப்படுவார்கள் - என்றெல்லாம் மிக மிக மிகக் கடுமையாகச் சட்டமன்றத்திலேயே பேசினார்.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தினை விடக் கடுமையாக மதுவிலக்கை அமல் செய்ய தன்னால் ஆன அனைத்து முயற்சிகளையும் செய்து பார்த்தார் எம்.ஜி.ஆர்.

என்ன நடந்தது? மதுவிலக்கு அமலில் படுதோல்வியை ஏற்றுக் கொண்டு, சாராயக்கடை ஏலம் என்ற நிலைக்கு வந்து சேர்ந்தார் எம்.ஜி.ஆர்.



"குடித்தவனைத் திருத்துவது என்பது தண்ணீருக்குள் மறைந்திருப்பவனை விளக்கு கொண்டு தேடுவது மாதிரி- எனவே, இது முடியாத காரியம்" என்கிறார் வள்ளுவர்!

அதேசமயம் அவரது அரசின் அமைச்சர்களான நாவலர் நெடுஞ்செழியன், எஸ்.டி. சோமசுந்தரம் போன்றவர்கள் மதுவிலக்கை அமல் நடத்துவதில் ஏற்படும் சங்கடங்களையும் - எவ்வளவுக் கெவ்வளவு தீவிரமாக அமல் நடத்த முயற்சிக் கப்படுகிறதோ அவ்வளவுக் கவ்வளவு குடிப் பவர்கள் - கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் எண்ணிக்கை அதிகரிப்பதாகவும் - மது விலக்கை முழுமையாக அமல் நடத்த முடியுமா என்பது சந்தேகத்துக்கு உரியதாகி வருகிறது என்றும் பேச ஆரம் பித்தார்கள்.

அதன் பிறகு ஒரு காலகட்டத்தில் - 1981இல் எம்.ஜி.ஆரும் பல்வேறு நடவடிக்கைகள் தோல்வி அடைந்ததன் எதிரொலியாக மதுவிலக்கைக் கைவிட முன் வந்தார்! அது அவராக எடுத்த முடிவு என்பதை விட - மதுவிலக்கின் தோல்வி அவரை அந்த முடிவுக்குத் துரத்தியது என்பதே சரியாக இருக்கும்!

அ.தி.மு.க. ஆட்சியிலே ஒரு அவசரச் சட்டமல்ல - இந்த மதுவிலக்குக் கொள்கையிலே ஐந்து அவசரச் சட்டங்கள் கொண்டு வந்திருக்கின்றார்கள். 23.5.1981 அன்று ஒரு அவசரச் சட்டம், தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாவது திருத்த) அவசரச் சட்டம், 1981 என்பது அதற்குப் பெயர்! அதையடுத்து 20.7.1981 அன்று மீண்டும் ஒரு அவசரச் சட்டம். தமிழ்நாடு மதுவிலக்கு (மூன்றாவது திருத்த) அவசரச் சட்டம். இந்த இரண்டு அவசரச் சட்டங்களும் பின்னர் சேர்ந்து ஒரே சட்டமாக கொண்டு வரப்பட்டது.

பின்னர், 1.12.1982இல் மீண்டும் ஒரு அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அது தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாவது திருத்த) அவசரச் சட்டம் 1982 என்பதாகும். இது மாநிலங்களுக்கிடையே மதுவகைகள் கடத்தப்படுவதைத் தடுக்கவும் - அதன் மூலமாக ஏற்படும் ஆயத்தீர்வை, மற்றும் விற்பனை வரி இழப்பைத் தடுத்து நிறுத்தவும் - இதற்கான சோதனைச் சாவடிகளை நிறுவுவதற்கும் - நீதி மன்றங்கள் இதுகுறித்து தடை ஆணை வழங்குவதற்கான அதிகாரத்தை தடுத்து நிறுத்தவும் வழிவகை செய்தது.

அடுத்து 27.5. 1983 அன்று ஒரு அவசரச் சட்டம் - தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாவது திருத்த) அவசரச் சட்டம். பிறகு 8.10.1985இல் ஒரு அவசரச் சட்டம் - இப்படி ஐந்தாறு அவசரச் சட்டங்கள் அவர்களுடைய ஆட்சியிலே பிறப்பிக்கப்பட்டன.

21.3.1981இல் அ.தி.மு.க. அரசின் சார்பாக நிதிநிலை அறிக்கை நாவலர் நெடுஞ்செழியன் அவர்களால் படிக்கப்பட்டது. அதிலே அவர்கள் என்ன கூறியிருக்கிறார்கள் என்றால் -

"மதுவிலக்குக் கொள்கையை செம்மையாகச் செயற்படுத்த வேண்டும் என்பதில் இந்த அரசும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், உறுதியாகவே இருந்து வந்ததையும், என்றாலும் கூட சட்ட விரோதமாகக் கள்ளச் சாராயம் காய்ச்சப்பட்டும், கள்ளத்தனமாகக் குடிக்கப்பட்டு வந்ததையும், அனுமதியின்றிக் கள்ளச் சாராயம் காய்ச்சுவதையும், குடிப்பதையும், கடுமையாகத் தண்டிக்கும் வகையில் சட்டம் இயற்றப் பட்டதையும் மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். ஆனால் எதிர்பார்த்ததற்கு மாறாக, ஏழை எளிய குடும்பங்கள் பல இன்னல்களுக்கு உள்ளானதைக் கண்டு, நடைமுறையில் சில மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. அனுமதிச்சீட்டு பெற்று மதுவகைகள் அருந்தும் முறையில் மாற்றங்கள் செய்யப்பட்டன. மதுவிலக்கு கொள்கையில் இந்த அரசு

"மது வீட்டையும் கெடுக்கும் - நாட்டையும் கெடுக்கும்" என்று பளிச்சிடும் அறிவிப்புகளில் ஓர் எழுத்துகூட தவறென்று எண்ணுகிறவன் நானல்லன்!


முரசொலி

மதுவிலக்குக் கொள்கையில் மாற்றம்:

நிதிக்காக அல்ல
சமூக நீதிக்காகத்தான்!

சட்டப்பேரவையில் ஆதாரங்களை எடுத்துக்காட்டி
முதல்வர் கலைஞர் உருக்கமான பேச்சு!

அழுத்தமான நம்பிக்கை கொண்டிருக்கிறது என்பதை வலியுறுத்துவதோடு மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்வதாக இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறது. மதுவிலக்குச் சட்டத்தை திருத்துவதன் மூலம், சமூக விரோதிகள் சிலரின் கைக்குச் செல்லுகின்ற பணத்தை அரசுக்குக் கிடைக்க வழிவகை செய்ய முடியும் என்று இந்த அரசு கருதுகிறது''

இதனையொட்டிதான் மதுவிலக்கை தளர்த்தி, சட்டம் கொண்டு வரப்பட்டது. விவாதங்கள் நடைபெற்றன. 30.3.1981இல் நாவலர் நெடுஞ்செழியன் விவாதத்திற்குப் பதில் அளிக்கும்போது கூறிய வாசகம்:

''மதுவிலக்கு கொள்கையை அமல்படுத்துவதிலே தோல்வி ஏற்பட்டது என்பதுதான் எங்களுடைய எண்ணம். அந்த எண்ணம் ஈடேறவில்லை. யார் யாரோ முயன்றும் அந்த எண்ணம் ஈடேறவில்லை. புத்தர் முயன்று பார்த்தார், முடியவில்லை. மகாவீரர் முயன்று பார்த்தார், முடியவில்லை. நாயன்மார்கள், ஆழ்வார்கள் முயன்று பார்த்தார்கள், முடியவில்லை. பட்டினத்தடிகள் - இராமலிங்க அடிகள் முயன்று பார்த்தார்கள், முடியவில்லை. மகாத்மா காந்தி அடிகளும் முயன்று பார்த்தார்கள், முடியவில்லை. பேரறிஞர்

அண்ணா அவர்கள் முயன்று பார்த்தார்கள், முடியவில்லை. வள்ளுவர் கூட முயன்று பார்த்தார், முடியவில்லை.

''களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று''

- என்று கூறுகிறார் வள்ளுவர். அதாவது 'குடித்தவனைத் திருத்துவது என்பது எப்படியிருக்கும் என்றால், தண்ணீருக்குள் மறைந்திருப்பவனை விளக்கு கொண்டு தேடுவது மாதிரி' என்று சொல்கிறார். எனவே இது முடியாத காரியம் என்று அவரே சொல்லிவிட்டார்.''

என்று நாவலர் நிதிநிலை அறிக்கை விவாதத்திற்கு பதிலளிக்கும்போது குறிப்பிட்டார்.

இதைத் தொடர்ந்துதான் அ.தி.மு.க. ஆட்சியில் எம்.ஜி.ஆருடைய தலைமையில் மதுவிலக்கு சம்பந்தமாக சட்டங்கள், திட்டங்கள் இவைகள் எல்லாம் மாற்றப்பட்டன. இந்த அறிவிப்புகளை யொட்டி, 1.5.1981இல் சாராயம் மற்றும் கள்ளுக் கடைகள் கூட திறக்கப்பட்டன.

1981- வரை தமிழ்நாட்டில் இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுபானங்கள் உற்பத்தி செய்கின்ற தொழிற் சாலைகள் இல்லை. 1981-க்குப் பின்பு இந்த மதுபானங்களைத் தயாரிக்கின்ற உரிமையை நான்கு தனி நபர்களுக்கும், கூட்டுறவுத் துறை நிறுவனத்திற்கும் அரசு அளித்தது.

ஐ.எம்.எப்.எஸ்., கள் சாராயம் ஆகிய மதுபானங்களின் விற்பனை 1.5.1981 முதல் தொடங்கியது.

ஆனால், குடிப்பவர்கள் 'பெர்மிட்' ஒன்று பெற வேண்டுமென்று விதிமுறைகளில் கூறப்பட்டது. இருப்பினும் இந்த 'பெர்மிட்' இறுதிவரை சரியாகச் செயல்படவில்லை என்பதை உறுப்பினர்கள் நன்கறிவார்கள்.

கள்ளுக்கடையில் ஏலம் முறையில் அனுமதிக்கப்பட்டன.

சாராய உற்பத்தி 10 தனிப்பட்ட நபர்களுக்கு கொடுக்கப் பட்டன.

சாராயத்தை விநியோகம் செய்கின்ற மொத்த வியாபாரம் 15 தனிப்பட்ட நபர்களுக்குக் கொடுக்கப்பட்டன.


தனி நபர்களால் உற்பத்தி செய்யப்பட்டு, தனி நபர்கள் மொத்த வியாபாரிகளாக விநியோகம் செய்யும் இந்தத் திட்டத்தின்கீழ் ஆரம்பத்தில் சில்லறைக் கடைகள் ஏலம் மற்றும் டெண்டர் முறையில் விடப்பட்டன.

இவ்வாறு 1983 ஜூலை 27க்கு முன்பு சில்லறை வியாபாரம் ஏலம் மற்றும் டெண்டர் முறையில் விடப்பட்டு வந்தது. பிறகு 'டாஸ்மாக்' எடுத்துக் கொண்டது.

மதுவிலக்கு பற்றி மக்கள் மன்றமெனும் மத்திய நாடாளுமன்றத்திலே விவாதம் 30.7.1980 அன்று நடைபெற்றபோது, அன்றைய செல்வாக்கு மிக்க பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களைப் பார்த்து, ரத்தன்சிங் என்ற ஓர் உறுப்பினர், ''இந்த அரசு மதுவிலக்கை ஆதரிக்கிறதா அல்லது எதிர்க்கிறதா என்பது தெளிவாக்கப்படவில்லை. மதுவிலக்குக் கொள்கையைப் பொறுத்தவரை இதுவரை குழப்பமான ஒரு நிலையே நீடித்து வந்திருக்கின்றது. பம்பாய் உல்ஹாஸ் நகரைச் சேர்ந்த ஒரு சாராய வியாபாரி வெளியிட்டுள்ள விளம்பரத்தின் மத்தியிலே பிரதம அமைச்சரின் படம் இடம் பெற்றுள்ளது. இது மக்களை மேலும் குடிக்க அழைப்பதைப் போன்ற ஒரு எண்ணத்தை ஏற்படுத்துகின்றது. அரசு தனது மதுவிலக்குக் கொள்கையைத் தெளிவாக்குமா?'' என்று கேட்டபோது, பாராளுமன்றத்தில் திருமதி இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் அளித்த பதிலில், ''மக்கள் மது அருந்தக் கூடாது என்பதுதான் எங்கள் கட்சியின் கொள்கை. இதுவரை பின்பற்றப்பட்டுவரும் மதுவிலக்குக் கொள்கை இந்த விளைவை ஏற்படுத்தியிருக்கிறதா? மதுவிலக்கைவிட மனமாற்றத்தை உண்டாக்குவது சிறந்தது. இதுவரை மதுவிலக்குக் கொள்கை எந்த இடத்திலும் வெற்றி பெற பெரும் முயற்சிகள் மேற்கொண்டும், குஜராத் மாநிலத்திலே கூட மதுவிலக்கு வெற்றி பெறவில்லை என்பதைச் சொல்ல நான் வருந்துகிறேன்'' என்று கூறியிருக்கிறார்.

இந்திரா காந்தி அம்மையார் அப்போது மட்டுமல்ல; 1976ஆம் ஆண்டிலேயே குமாரி மணிபென் என்ற அம்மையார் மதுவிலக்கு சம்பந்தமாக ஒரு கேள்வி கேட்டபோது, ''குமாரி மணிபென் பொது மக்கள் குடிப்பதைப் பற்றிப் பேசினார். உங்களுக்கெல்லாம் தெரியும் - நாங்கள் குடிப்பழக்கத்திற்கு எதிராக ஒரு இயக்கத்தை ஏற்படுத்த முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், மது விலக்குக் கொள்கையிலே மாதிரி மாநிலம் எனப் பேசப்படும் குஜராத்தில் என்ன நிலைமை? சட்டமன்ற தேர்தலின்போது ''டேங்கரில்'' கொண்டு வந்து சாராயம் விநியோகம் செய்யப்பட்டதென எனக்குச் சொன்னார்கள். சூரத்தில் சமீபத்தில் கள்ளச் சாராயம் அருந்திப் பலர் மரணமடைந்ததைச் செய்தித் தாள்களிலே படித்தோம்'' என்று பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் கூறியதையும், இந்த நேரத்தில் நினைவு கூர்ந்திட விரும்புகிறேன்.

1989இல் ''ப்ரோப் இண்டியா'' என்ற ஆங்கில இதழில், மிஸ்ரா என்பவர் எழுதிய ஒரு கட்டுரையை அப்போதே நான் பேரவையில் படித்துக் காட்டினேன். அது, ''போர்பந்தரில் - மகாத்மா காந்தியின் சொந்த ஊரில் - ஒரு கள்ளச் சாராய வியாபாரி, தரைக்கு அடியில் பெட்ரோலை சேமிப்பது போல



- பெரியகுளம் கட்டி, அதில் 50 ஆயிரம் லிட்டர் சாராயத்தை தேக்கி வைத்திருக்கிறார். பெட்ரோல் பங்குகள் போலவே - இவரது கடையில் ஒரு கைப்பம்பு இருக்கிறது. கைப்பம்பை அடித்தால் - பாதாளத்திலிருந்து பாய்ந்து வருகிறது சாராயம். எங்கோ தொலைதூரத்தில் டெல்லி ராஜ்காட்டில் மகாத்மா காந்தி தனது சமாதியில் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருக் கிறார்கள். தனது பிறந்த வீட்டுக்குப் பக்கத்திலேயே, 4 ரூபாய் தந்தால் கள்ளச் சாராயம் ஒரு முழு கிளாஸ் அளவுக்குக் கிடைக்கிறது என்பதை காந்தி அறிய நேர்ந்தால் சமாதியின் அடியிலேயே நெளிவார்'' என்பதாகும்.

5. கறுப்பு நாள்

"அந்தக் கொடிய சம்பவம் பொது வாழ்வில் கிடைத்த பொற்பதக்கப் பரிசு"

நாட்குறிப்பையே விரிவுபடுத்தி, வாரக் குறிப்பாக, மாதக் குறிப்பாக, ஆண்டுக் குறிப்பாக என் பொது வாழ்க்கை வரலாற்றை - ''நெஞ்சுக்கு நீதி''யாக்கும் நிலையில் - ஒரு சில சம்பவங்கள் - நாள் கணக்கில் வரிசைப்படி தொடர்ச்சியாகவும் வரலாம் - சில சம்பவங்கள் பின்னால் நடந்தவை முன்னாலும் வருவதற்கான மாறுதலும் ஏற்படலாம். எடுத்துக்காட்டாக, அத்தகைய ஒரு சம்பவத்தைத்தான் இந்த அத்தியாயத்தில் குறிப்பிடவுள்ளேன்.

96ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்புக்கு கழகம் வந்தபோது நடந்த நிகழ்ச்சிகளைத் தொகுத்து எழுதிக் கொண்டு வந்த நான், இந்த அத்தியாயத்தில் 2001ஆம் ஆண்டு நடைபெற்ற ஒரு கொடிய சம்பவத்தை நினைவு கூர்ந்திட விரும்புகிறேன்.


2001ஆம் ஆண்டு ஜூன் 29ஆம் தேதி நள்ளிரவில் நான் கைது செய்யப்பட்டு, என் கண் எதிரிலேயே என் துணைவியார் **ராஜாத்தியும்**, மகள் **கனிமொழியும்** கடுமையாக மிரட்டப்பட்டு, எங்குதான் கொண்டு சென்றார்கள் என்னையென்று அறியாமல் துணைவியர் **தயாளுவும்**, **ராஜாத்தியும்**, தம்பிகள் **முரசொலி மாறன்**, **டி.ஆர்.பாலுவும்** மற்றும் மருமகன் **அரவிந்தும்** என்னை இழுத்துச் சென்ற போலீஸ் வண்டியைப் பின்பற்றி ஓடிவந்தபோது; அவர்களை முன்னேற விடாமல்; போலீஸ் அதிகாரிகள் தடுத்து முட்டியைக் குறி பார்த்துத் தாக்கிடவே; மாப்பிள்ளை அரவிந்த் சாலையிலே உருண்ட காட்சியை நான்

காண நேரிட்டது. கனிமொழி கடுங்கோபத்துடன் ஓடிப்போய் கணவனைக் காப்பதற்கும், என்னைத் தொடர்வதற்கும் பட்டபாடு, மீண்டும் நினைத்துப் பார்க்க இயலாத நெஞ்சைப் பிளக்கும் நிகழ்ச்சியாகும். என் மூத்த மகள் **செல்வியும், தயாளுவும், ராஜாத்தியும்** ஒருவரோடொருவர் போட்டி போட்டுக் கொண்டு போலீஸ் வண்டிக்குப் பின்னால் ஓடிவந்த காட்சியையும் - அவர்களின் பதற்றத்தையும் - இந்த அல்லோலகல்லோலத்திற்கிடையே சி.பி.சி.ஐ.டி. அலுவலகத்திற்குள் தன்னந்தனியாக அந்த இருளில் போலீசார் என்னைத் தள்ளி விட்டுச் சென்ற கொடுமையையும் - பொது வாழ்வில் கிடைத்த ''பொற் பதக்கப் பரிசு'' என்று எண்ணிக் கொண்டே; அங்கிருந்த ஓர் ஓட்டை நாற்காலியில் உட்கார்ந்து எனக்குள்ளாகப் புன்னகை புரிந்த வண்ணமிருந்தேன்.

வீட்டில் கைது செய்யப்பட்டபோது, காவல் துறை அதிகாரிகள் சிலரால் முறுக்கப்பட்ட கையில் வலி தாங்க முடியவில்லை. அந்தப் பெரிய அலுவலகத்தின் மாடிப்படிகள் குலுங்கும் அளவுக்குப் போலீசாரின் முரட்டுப் பூட்சுகளின் ஓலிகள். அங்கிருந்து மற்றொரு வண்டியில் எங்களை மாற்றி அழைத்துச் செல்ல போலீசார் ஏற்பாடு - ''எங்கே கொண்டு போகிறீர்கள்?'' என்று மாறன் கேட்ட குற்றத்திற்காக அவரை



கதவை உடைத்து, காட்டுமிராண்டித்தனமாக இழுத்துச் செல்லும் காவலர்



வாஜ்பாய் தலைமையில் தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கூட்டம், ஜெயலலிதா அரசை டிஸ்மிஸ் செய்ய வேண்டும் என்று அரசுக்குப் பரிந்துரை செய்தது.

வண்டியிலிருந்து மல்லாக்கத் தள்ளி விட்ட அந்த மாபாதகச் செயல் இருக்கிறதே; அதை யார் மன்னித் தாலும் அவர்களை அவர்தம் மனச் சாட்சி மன்னிக்காது.

அந்த நாளைப் பற்றித்தான் அன்றைக்கே **''மாலை முரசு''** நிர்வாக ஆசிரியர் **திரு. பா. இராமச் சந்திர ஆதித்தன்** அவர்கள், அந்த இதழின் முதல் பக்கத்திலேயே தானே கையொப்பமிட்டு ஒரு கண்டன அறிக்கை வெளியிட்டிருந்தார். அந்த அறிக்கை வருமாறு:

''ஜூன் 30. சுதந்திர இந்தியச் சரித்திரத்தில் ஒரு கறுப்பு நாள். தன் மனைவியுடன் தூங்கிக் கொண்டிருந்த தமிழகத்தின் மூத்த தலைவர் கலைஞரைத் தட்டி எழுப்பி, அவரை அரக்கத்தனமாக போலீஸ் உயர் அதிகாரிகள் அடித்து இழுத்துச் சென்று சிறையில் தள்ளிய கொடுமை நிகழ்ந்த நாள். அந்தக் காட்சியை தொலைக் காட்சியில் பார்த்த மக்கள் பரிதவித்தனர். பெண்கள் ஒரு திகில் காட்சியைப் பார்த்த பீதியுடன் அலறித் துடித்தனர். கதறி அழுதனர். அரசியல் சட்டம் ஒரு மாநில முதல் அமைச்சருக்கு வழங்கியுள்ள அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து, ஜனநாயக மரபுகளையும் சட்ட விதிகளையும் மீறி முதல்வர் ஜெயலலிதா, கலைஞர் மீது வரம்பு மீறிய இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறார். நடந்து முடிந்த தேர்தலில் தமிழக மக்கள் ஜெயலலிதா மீது கொண்டிருந்த அபரிமிதமான நம்பிக்கை, இன்று ஒரே நாளில் உருக் குலைந்துபோய்விட்டது. தமிழக கவர்னர் பாத்திமா பீவி அவர்கள் அரசியல் சட்டரீதியான அறிக்கையை உடனடியாக மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டும். உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியது மத்திய அரசின் கடமை. மத்திய அரசு தலையிட்டு கலைஞர் மீது


மூர்க்கத்தனமாக நடந்து கொண்ட உயர் போலீஸ் அதிகாரிகள் அனைவரது மீதும் வன்மையான நடவடிக்கை எடுக்க வேண்டும்''

அவரது இந்த அறிக்கையுடன் தான் ''நெஞ்சுக்கு நீதி'' நாலாம் பாகம் நிறைவுற்றது என்று முடித்திருந்தேன் என்பதை மறந்திருக்க முடியாது.

காயங்களுடனும் - கை கால்களை அசைக்க முடியாத வலியுடனும் சிறையில் அடைப்பட்டிருந்த என்னைப் பல்வேறு கட்சித் தலைவர்களும் வந்து பார்த்தார்கள் - அனுதாபம் தெரிவித்தார்கள் - ஆறுதல் கூறினார்கள் - அந்த நாளையொட்டி தமிழகத்து சிறைச்சாலைகள் நிரம்பி, மேலும் இடமில்லாத அளவுக்கு வழிந்தன என்று ஏடுகளில் செய்திகள் வரும் வண்ணம் கழகத்தினர் ஆங்காங்கு களம் கண்டனர்.

என்னைக் கைது செய்வதற்கு எந்த விதமான ''**வாரண்டை**''யும் போலீசார் கொண்டு வரவில்லை. நள்ளிரவில் நான் கைது செய்யப்பட்டது குறித்து பிரதமர் **வாஜ்பாய்** தனது கண்டனத்தை தமிழக முதல்வராக இருந்த **ஜெயலலிதா**வுக்குத் தெரிவித்ததாக பிரதமர் அலுவலகச் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். தமிழகத் தலைமைச் செயலாளராக இருந்த பி. சங்கருடன் பிரதமர் தொலைபேசி வாயிலாக தனது கண்டனத்தைத் தெரிவித்து, கைது குறித்து முழுமையான தகவல்களை உடனடியாக அனுப்ப வேண்டுமென்றும் உத்தரவிட்டார்.

துருக்கி நாட்டில் பயணம் செய்து கொண்டிருந்த **அத்வானி**க்குத் தகவல் தெரிவிக்கப்பட்டு, அவர் ''கருணாநிதி கைது செய்யப்பட்ட விதம் கவலை அளிப்பதாக உள்ளது - ஜனநாயக நாட்டில் இது போன்ற கொடூரமான தனி மனிதப் பழி வாங்கும் நடவடிக்கைக்கு இடம் இல்லை'' என்று கூறினார். தேசிய ஜனநாயகக் கூட்டணியின் கூட்டத்தை டெல்லியிலேயே அவசரமாகக் கூட்ட வேண்டுமென்று பிரதமரிடமும் தொலைபேசியிலே அத்வானி கேட்டுக் கொண்டார்.



"எங்கே கொண்டு
போகிறீர்கள்?"
என்று கேட்ட முரசொலி மாறனை
மல்லாக்கத் தள்ளிவிட்ட
மாபாதகச் செயல்!

அப்போது அ.தி.மு.க.வின் கூட்டணிக் கட்சியாக இருந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயலாளராக இருந்த டி.ராஜா மற்றும் அந்தக் கட்சியின் அகில இந்தியப் பொதுச் செயலாளர் பரதன் ஆகியோர் "போலீஸ் நிர்வாகத்தில் தமிழக அரசின் அணுகுமுறையில் மாற்றம் தேவை" என்றும், மத்திய சட்ட அமைச்சராக இருந்த அருண் ஜெட்லி "போலீசார் கைது செய்த விதம் கண்டிக்கத்தக்கது" என்றும், வெங்கய்ய நாயுடு அவர்கள் என்னைக் கைது செய்தது "காட்டுமிராண்டித் தனமானது, கொடூரமானது, ஜனநாயக நாட்டில் மக்கள் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்" என்றும், மத்திய தொலைத் தொடர்புத் தகவல் துறை அமைச்சராக இருந்த ராம்விலாஸ் பாஸ்வான் அவர்கள் நான் கைது செய்யப்பட்டது "சட்டவிரோதமானது" என்றும் கருத்துத் தெரிவித்தனர்.

காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர்கள் திரு. ஜெய்பால் ரெட்டி மற்றும் அம்பிகா சோனி ஆகியோர், தமிழகப் போலீஸார் அத்துமீறி நடந்த விதத்தைக் கண்டித்து அறிக்கைக் கொடுத்தார்கள். ஐக்கிய ஜனதா தலைவரும், மத்திய அமைச்சராக இருந்தவருமான சரத்யாதவ் அவர்கள் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. அரசு உடனடியாகக்


34 774
B 923.25411
DBA.K

கலைக்கப்பட்டு, தமிழகத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்த வேண்டுமென்று கருத்து தெரிவித்தார்.

முன்னாள் பிரதமர் **வி.பி.சிங்**, முன்னாள் பிரதமர் **சந்திரசேகர்**, பா.ஜ.க. தலைவர் **ஜனா கிருஷ்ணமூர்த்தி**, சிவசேனை தலைவர் **பால்தாக்கரே** ஆகியோரும் தங்களது கண்டனங்களைத் தெரிவித்தனர்.

தமிழகத் தலைவர்கள் எல்லாம் நான் கைது செய்யப்பட்டது குறித்துத் தொடர்ந்து கண்டன அறிக்கைகளை விடுத்தனர். குறிப்பாக, த.மா.கா. தலைவர் **ஜி.கே. மூப்பனார்**, காங்கிரஸ் ஜனநாயகப் பேரவைத் தலைவர் **ப.சிதம்பரம்**, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் **என். சங்கரய்யா**, பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் **வை.கோ**, தமிழக பாரதிய ஜனதா கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த **இல. கணேசன்**, குமரி **அனந்தன்**, எம்.ஜி.ஆர். கழகத் தலைவர் **ஆர்.எம். வீரப்பன்**, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தலைவர் பேராசிரியர் **கே.எம். காதர் மொகிதீன்**, உழவர் உழைப்பாளர் கட்சித் தலைவர் **கு.செல்லமுத்து**, **எஸ்.திருநாவுக்கரசு**, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் **ஆர். நல்லக்கண்ணு**, அகில இந்திய மூவேந்தர் முன்னேற்றக் கழக நிறுவனத் தலைவர் **டாக்டர் சேதுராமன்**, புதிய தமிழகம் கட்சியின் தலைவர் **டாக்டர் கிருஷ்ணசாமி**, தமிழர் தேசிய இயக்கத் தலைவர் **பழ.நெடுமாறன்**, தமிழ் பா.ம.க. தலைவர் **பேராசிரியர் தீரன்**, பெருங்கவிக்கோ **வா.மு.சேதுராமன்**, மக்கள் தமிழ் தேசத் தலைவர் **எஸ். கண்ணப்பன்**, **பேராயர் எஸ்றா சற்குணம்** போன்றவர்கள் அ.தி.மு.க. அரசுக்கு தங்களது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

திரைப்படத் துறையினர் பலரும் நான் கைது செய்யப்பட்டது குறித்து அறிக்கைகள் மூலமாக தங்கள் கண்டனங்களைத் தெரிவித்தனர். சூப்பர் ஸ்டார் **ரஜினிகாந்த்** ''தென்னிந்தியாவின் மூத்த அரசியல் தலைவரை, 78 வயது முதியவரை, 60 ஆண்டுகளுக்கு மேலாகத் தன்னை சமூகப் பணியில் ஈடுபடுத்திக் கொண்டவரை அநாகரிகமான



நான் கைது செய்யப்பட்டு இழுத்துச் செல்லப்பட்டதை நேரில் கண்ட அதிர்ச்சியில் மரணமடைந்த என் மாமியார் சிவபாக்கியம் அம்மையார் உடலுக்கு மரியாதை செலுத்துகிறார் ஜார்ஜ் பொன்னாண்டஸ்!

முறையில் கைது செய்திருப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. கலைஞர் அவர்கள் கைது செய்யப்பட்டது என்னை மட்டுமல்லாமல், உலகெங்கும் வாழும் ஒவ்வொரு தமிழ் உள்ளத்தையும் கலங்க வைத்துள்ளது'' என்று தனது அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

கலைஞானி கமல்ஹாசன் விடுத்த அறிக்கையில், ''ஒரு சாதாரண குடிமகனுக்குக் கிடைக்க வேண்டிய நியாயங்கள் கூட இல்லாமல் கலைஞர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் கைது செய்யப்பட்ட நேரமும், விதமும் அநாகரிகமாகத் தெரிகிறது. மூத்த தலைவர் என்றில்லாவிட்டாலும், மூத்த தமிழன், இந்தியக் குடிமகன் என்ற முறையில் அவருக்குக் கிடைக்க வேண்டிய மரியாதைகள்கூட நிராகரிக்கப்பட்டதாகத் தெரிகிறது. கட்சி சார்பற்ற என் இந்தக் கருத்து எந்த அரசாங்கம் ஆட்சியில் இருந்தாலும் இவ்வாறாகவே இருக்கும். ஜனநாயகத்தில் இன்னமும் கொஞ்சம் நம்பிக்கை வைத்திருக்கும் என் போன்றவர்களின் பெரும்பான்மை கருத்தும் இதுவாகவே இருக்கும் என்றே நம்புகிறேன்'' என்று எழுதியிருந்தார்.




ராஜாத்தி அம்மையாருக்கும் கனிமொழிக்கும் ஆறுதல் சொல்லும் தயாளு அம்மாள், செல்வி, சாந்தா ஸ்டாலின், மோகனா தமிழரசு.

கவிப்பேரரசு **வைரமுத்து,** ''இதை எப்படிச் சொல்வதென்றே எனக்குத் தெரியவில்லை. இரண்டு நிமிடம்கூட தொடர்ந்து நிற்க முடியாத வயது முதிர்ந்த தலைவருக்கு நேர்ந்துள்ள கொடுமையை என்னவென்று சொல்வது? இது தமிழுக்கு நேர்ந்த அவமானம்! தேசிய அவமதிப்பு!'' என்று கூறினார்.

சுப்ரீம் ஸ்டார் நடிகர் **சரத்குமார்** கூறும்போது, ''தமிழகமே வேதனையான கண்ணீரோடு நிற்கிறது. கலைஞர் அவர்கள் 78 வயது முதுபெரும் தலைவர். மாபெரும் தமிழறிஞர். நான்கு முறை தமிழக முதல்வராகப் பதவி வகித்த முன்னாள் முதல்வர். 60 ஆண்டுகளுக்கு மேல் தமிழ் மக்களுக்காகப் பாடுபட்ட அற்புத மனிதர். அவரை அடித்துப் பலவந்தமாக இழுத்துச் சென்றதைத் தொலைக்காட்சியில் பார்த்து என் நெஞ்சம் வெடித்துச் சிதறியது. ரத்தம் உறைந்து போனது. தமிழகத்தின் தன்மானத்தை தரம் தாழ்த்தி இழுத்துச் சென்றார்கள். நீதியை நிலைகுலைய வீழ்த்தி, ஜனநாயகத்தின் பெருமையைச் சிறுமைப்படுத்தி இழுத்துப் போனார்கள். அந்தத் தமிழ்ப் பெருமகன் நலத்தோடு திரும்பும் வரை தமிழகம் தேங்கிய கண்ணீரோடு நிற்கும்'' என்று சொல்லியிருந்தார்.

தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் **பாரதிராஜா** வெளியிட்ட அறிக்கையில், ''ஓர்




ஜனநாயக நாட்டில், இதுபோன்ற கொடூரமான தனி மனித பழிவாங்கும் நடவடிக்கை மிகுந்த கவலை அளிக்கிறது.

அரசியல் தலைவர் கைது செய்யப் படுவதையோ அதற்கான முகாந்தரங்களையோ இயக்குனர்கள் சங்கம் கேள்விக்கு உள்ளாக்கவில்லை. ஆனால், கலைஞர் கைது செய்யப் பட்ட போது அவர் நடத்தப்பட்ட முறையைத்தான் எங்கள் சங்கம் கண்டிக்கிறது'' என்று தெரிவித்து இருந்தார்.

நடிகர்கள், பார்த்திபன், சிவ குமார், நெப்போலியன், விஜய குமார், மணிவண்ணன், நாசர், வடிவேலு, பாண்டியன், சந்திர சேகர், தியாகு, குமரிமுத்து, நடிகைகள் ராதிகா, ரேவதி, லதா, ஸ்ரீபிரியா ஆகியோர் கையெழுத்து இட்டு வெளியிட்ட அறிக்கையில், ''மக்களின் நல்வாழ்வுக்காக தன்னை அர்ப் பணித்துள்ள கலைஞரைக் கைது செய்தபோது மனிதாபிமானம் இல்லாமல் காவல் துறையினர் நடந்து கொண்டதை வன்மையாகக் கண்டிக்கிறோம்'' என்று தெரிவித்திருந்தனர்.

எழுத்தாளர்கள் மற்றும் படைப்பாளிகள் சார்பில் எஸ்.வி.ராஜதுரை, இரா.பாலசுப்பிரமணியன், பா.ஜெயப் பிரகாசம், எஸ்.அருண்மொழி, சுப.வீரபாண்டியன், இந்திரன், வ.கீதா, மருது, அப்துல் ரகுமான், சரஸ்வதி, இன்குலாப், ஈரோடு தமிழன்பன், பழ.கருப்பையா, பிரபஞ்சன், இராம.சிவசங்கர், அன்பு தென்னரசன், சுந்தர ராமசாமி, ரவிக்குமார், பேராசிரியர்கள் ஆ.சிவசுப்பிர மணியன், தி.சு.நடராஜன், நா.முத்துமோகன், இ.முத்தையா, காஞ்சனை, சீனிவாசன், மனுஷ்யபுத்திரன், குட்டி ரேவதி, இரா.அமுதன் ஆகியோர் கையெழுத்திட்டு என்னை உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர்.



நீதிபதியின் உத்தரவை மீறிய காவல்துறையினரின் போக்கைக் கண்டித்து, சிறைச்சாலை வாயிலில் கட்டாந்தரையில் அமர்ந்து உண்ணாவிரதம் மேற்கொள்ளும் கலைஞர். அருகே கனிமொழி.

பிரபல பத்திரிகையாளர் **'இந்து'** ராம் அவர்கள், ''என்மீது நாகரிகமற்ற முறையில் தாக்குதல் நடத்த உத்தரவிட்டவர் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டு''மென்று தெரிவித்தார். மேலும் **இந்து** நாளேட்டில் 1.7.2001 அன்று எழுதிய தலையங்கத்தில் **''அராஜகத்தின் ஓர் அதிர்ச்சி யூட்டும் செயல்''** என்று வர்ணித்திருந்தார். ''தமிழகத்தில் வெளிப்படையான அதிகார துஷ்பிரயோகம்'' என்று **இந்தியன் எக்ஸ்பிரஸ்** தலையங்கம் தீட்டியது. ''கை வசம் பதவி இருக்கும் ஆணவத்தில், வஞ்சம் தீர்க்கும் வன்மத்தோடு எதிரிகளை வீழ்த்த நினைக்கும் சர்வாதிகாரப் போக்கு என்றுமே - எங்குமே ஜெயித்ததாக வரலாறு இல்லை'' என்று 8.7.2001 தேதிய **ஆனந்த விகடன்** தலையங்கத்தில் எழுதியது.

முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி **வி.ஆர்.கிருஷ்ணய்யர்** விடுத்த நீண்ட அறிக்கையில், தமிழக அரசையும் காவல் துறையினரையும் கடுமையாகச் சாடியதோடு, ''உச்சநீதிமன்றம் தானாகவே முன்வந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று எழுதியிருந்தார்.



ஜெயலலிதா ஆட்சியை உடனடியாகக் கலைத்துவிட்டு, தமிழகத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்த வேண்டும்! -சரத்யாதவ்

கர்நாடக முதலமைச்சராக இருந்த நண்பர் **எஸ்.எம்.கிருஷ்ணா** அவர்கள் ''தமிழகத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல் செய்வது தான் நியாயம்'' என்று கூறினார். ஆந்திர முதலமைச்சர் **சந்திரபாபு நாயுடு** ''கலைஞர் சித்திரவதை செய்யப்பட்டது, ஜெயலலிதாவின் பழி வாங்கும் நடவடிக்கை தான் - அதிகாரம் நிரந்தரமானதல்ல- பொது வாழ்வில் கௌரவமாக நடந்து கொள்ள வேண்டும்!'' என்றும் செய்தியாளர்களிடம் கூறினார். ஓரிசா முதல்வராக இருந்த **நவீன் பட்நாயக்** என்னைக் கைது செய்தது ''துரதிருஷ்ட வசமானது, கண்டனத்திற்குரியது'' எனக் கூறினார்.


என்ன காரணத்திற்காக கைது என்று முதலில் யாருக்கும் தெரியாத நிலையில், பின்னர் அரசின் சார்பில் ஒரு காரணத்தைக் கூறினார்கள். சென்னையில் மேம்பாலங்கள் கட்டியதில் ஊழல் நடந்ததாகக் கூறி, சென்னை மாநகராட்சி ஆணையாளராக அப்போதிருந்த ஆச்சார்யலு என்ற அதிகாரி மூலம் புகார் மனு ஒன்றினைக் கொடுக்குமாறு செய்து, அதன் மீதுதான் நான் கைது செய்யப்பட்டதாகக் கூறினார்கள். அதே வழக்கின் காரணமாக, சென்னை மாநகராட்சி மன்ற மேயராக இந்த **மு.க.ஸ்டாலின்** முதலாவது குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டு, அவரும் கைது செய்யப்பட்டு, மதுரை மத்திய சிறைச்சாலையிலே அடைக்கப்பட்டார்.

சி.பி.சி.ஐ.டி. அலுவலகத்தில் என்னை ஒரு மணி நேரத்திற்கும் அதிகமாக வைத்திருந்தனர். என்னைப் பார்ப்பதற்குக்கூட யாரையும் காவல் துறையினர் அனுமதிக்கவில்லை. நான் அப்போது வைக்கப்பட்டிருந்த சி.பி.சி.ஐ.டி. அலுவலகம், தற்போது நான் இந்த ஐந்தாம் பாகத்



மு.க.ஸ்டாலின் முதல் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டு, அவரும் கைது செய்யப்பட்டு, மதுரை சிறையிலே அடைக்கப்பட்டார்.

தொடரை எழுதிக் கொண்டிருக்கும்போது; இடிக்கப்பட்டு வருகிறது. ஏன் தெரியுமா? அந்த இடத்திலேதான் தமிழக அரசின் புதிய தலைமைச் செயலகமும், சட்ட மன்றப் பேரவைக்கான அலுவலகமும் கட்டப்படவிருக்கின்றன. அவைகளைக் கட்டுவதற்கான உலகளாவிய ஒப்பந்தப்புள்ளி (க்ளோபல் டெண்டர்) கோரப் பட்டு - அதற்கான வரை படங்களை யெல்லாம் பரிசீலித்து - தற்போது ஜி.எம்.பி. இண்டர் நேஷனல் என்ற ஜெர்மன் கம்பெனி ஒன்றுக்கு அந்தப் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே தற்போது அங்கேயுள்ள பழைய கட்டிடங்களை இடிக்கும் வேலைகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. ஆனால், அன்றைய தினம் அந்த அலுவலகத்தின் இருண்ட அறையிலே, தனிமையிலே நான் என் அவயவங்களின் வலி தாங்காமல் அமர்ந்திருந்ததையும் - தற்போது அந்தக் கட்டிடத்தை இடித்து விட்டு, அதே இடத்தில் தமிழக வரலாற்றில் இன்னும் பல நூற்றாண்டுகளுக்கு தலைமைச் செயலகமாகவும், சட்டமன்ற அலுவலகமாகவும் பிரம்மாண்டமான அளவில் விளங்கிடப் போகும் கட்டிடங்களைக் கட்டுவதற்கான கோப்பிலே கையெழுத்திடக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளதையும் எண்ணிப் பார்க்கின்றேன். ஆனால், தனிமையில் அப்போது




கலைஞரை அநாகரிகமான முறையில் கைது செய்திருப்பது, வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. உலகம் எங்கும் வாழும் ஒவ்வொரு தமிழ் உள்ளத்தையும் இக்கொடிய நிகழ்வு கலங்க வைத்துள்ளது.

உடைந்த நாற்காலியிலே அமர்ந்திருந்தபோது, எனக்கு மீண்டும் இத்தகைய வாய்ப்பு வந்திடும் என்று நினைத்திடக்கூட இல்லை. ஆனால், அன்றைய தினம் நான் கொடுமைப் படுத்தப்பட்டதைப் புகைப்படங்களிலும், தொலைக் காட்சியிலும் கண்ட இந்திய நாட்டு மக்கள் எல்லாம் எனக்காகக் கண்ணீர் சிந்தியதை நான் நன்றாகவே அறிவேன்.

முதன்மை செஷன்ஸ் நீதிபதியாக அப்போதிருந்த எஸ்.அசோக்குமாரின் இல்லத்திற்கே காவல் துறையினர் என்னை அழைத்துச் சென்றிட, ஜூலை 10ஆம் தேதி வரை காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார். மேலும் அவர் எனது உடல் நிலையைக் கருதி, என்னை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று, மருத்துவர்கள் பரிசோதனைக்குப் பிறகே சிறைக்கு அழைத்துச் செல்ல வேண்டுமென்று நீதிபதி கூறினார். ஆனால், காவல் துறையினர் என்னை மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லாமல், நேராக சென்னை மத்திய சிறைச்சாலைக்கே அழைத்துச் சென்றனர்.

அங்கே அழைத்துச் சென்ற பிறகு, காவல் துறையின் உயர் அதிகாரி ஒருவர் என்னிடம் வந்து, உடனடியாகத் தயாராகும் படியும், வேலூர் சிறைச்சாலைக்குச் செல்ல வேண்டுமென்றும் கூறினார். ''நீதிபதி அவ்வாறு கூறவில்லையே! சென்னை பொது மருத்துவமனையிலே டாக்டர்களைப் பார்த்த பிறகு சென்னை சிறைச் சாலையில்தானே இருக்க வேண்டுமென்று கூறினார்கள்'' என்று நான் கூறியதை அவர் ஏற்க மறுத்தபோது, நான் சிறைச் சாலைக்குள் செல்ல மறுத்து, சிறைச்சாலை வாயிலிலேயே காலவரையற்ற உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்து விட்டு, அங்கேயே அமர்ந்து விட்டேன். என்னோடு டாக்டர் **கோபால்**, **கனிமொழி** இருவரும் அந்த மணல் வெயிலிலேயே உட்கார்ந்து கொண்டனர்.



கலைஞர் கைது செய்யப்பட்ட நேரமும், விதமும் அநாகரிகமாகத் தெரிகிறது. மூத்த தமிழன், இந்தியக் குடிமகன் என்ற முறையில் அவருக்குரிய மரியாதை நிராகரிக்கப்பட்டுள்ளது.

நான் கைது செய்யப்பட்ட செய்தி சென்னை நகருக்குள் பரவி, அந்த விடியற்காலை நேரத்தில் சென்னை சிறைச்சாலைக்கு வெளியே பல்லாயிரக் கணக்கில் பொது மக்கள் திரளத் தொடங்கி விட்டார்கள். ஆனால், அவர்களையெல்லாம் ஒரு பர்லாங்க் தொலைவிற்கு அப்பால் இருந்தவாறு காவல் துறையினர் தடியடி நடத்தி விரட்டி அடித்தார்கள். அவர்களின் தடியடிக்கு பத்திரிகையாளர்களும், தொலைக்காட்சியினரும் தப்ப முடியவில்லை. புகைப்படம் எடுக்க வந்தவர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டார்கள்.

மத்திய அரசின் சார்பாக உள்துறை சிறப்புச் செயலாளர் எம்.பி., கௌஷல் தலைமையில் உயர்மட்ட அதிகாரிகள் தமிழகத்திற்கு வருகை தந்து நிலைமைகளை ஆய்ந்து மத்திய அரசுக்கு அறிக்கை தரவும் ஆணையிடப் பட்டது.

தமிழக தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சித் தலைவர்களின் அவசரக் கூட்டம், கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் தலைமையில், 30.6.2001 அன்று அண்ணா அறிவாலயத்தில் கூடி, ஜெயலலிதா அரசுக்குக் கண்டனம் தெரிவித்ததோடு, 2.7.2001 அன்று தமிழகம் முழுவதும் பொது வேலை நிறுத்தம் நடத்துவதென்று தீர்மானம் நிறைவேற்றியது. அந்தக் கூட்டத்தில் கழகத்தின் சார்பில் பேராசிரியர், வீரபாண்டி ஆறுமுகம், ஆலடி அருணா, இரகுமான்கான் ஆகியோரும், பா.ஜ.க. சார்பில் இல.கணேசன், மத்திய அமைச்சர் பொன். இராதா கிருஷ்ணன் ஆகியோரும், எம்.ஜி.ஆர்., அ.தி.மு.க. சார்பில் எஸ்.திருநாவுக்கரசர், எம்.பி. எம்.ஜி.ஆர். கழகம் சார்பில் ஆர்.எம்.வீரப்பன், ஜெகத்ரட்சகன் எம்.பி., காங்கிரஸ் கட்சியின் சார்பில் குமரி அனந்தன், விடுதலைச் சிறுத்தைகள்

கட்சியின் சார்பில் **பாவெல், அய்யாசாமி,** மக்கள் தமிழ்த் தேசம் சார்பில் **எஸ்.கண்ணப்பன்,** தமிழக ஐக்கிய முஸ்லீம் ஜமாத் கட்சியின் சார்பில் **எஸ்.கே.நவாஸ்** ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அதே நாளில், டெல்லியிலும் பிரதமர் **வாஜ்பாய்** அவர்கள் தலைமையில், அவரது இல்லத்திலேயே தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சியின் தலைவர்கள் கூட்டம் கூடி, தமிழக நிலவரம் குறித்து விவாதித்ததோடு, என்னைக் கைது செய்தது பற்றிய அறிக்கையை தமிழக ஆளுநர் உடனடியாக மத்திய அரசுக்கு 1.7.2001 அன்று காலை 9 மணிக்குள் அனுப்பி வைக்க வேண்டுமென்றும் மத்திய அரசின் சார்பில் கேட்டுக் கொண்டார்கள். மேலும், **ஜார்ஜ் பெர்னாண்டஸ்,** மத்திய அமைச்சர் **சுக்தேவ்சிங் திண்ட்ஷா,** மூத்த பா.ஜ.க. தலைவர் **வி.கே.மல்கோத்ரா** ஆகியோர் 1ஆம் தேதியன்று காலையில் சென்னை சென்று, நிலைமைகளை ஆய்வு செய்து அறிக்கை தர வேண்டுமென்றும், அது தவிர அதிகாரிகள் கொண்ட குழு ஒன்றினை உள்துறை அமைச்சகத்தின் சார்பில் அனுப்பவும் பிரதமர் உத்தரவிட்டார்.

ஜார்ஜ் பெர்னாண்டஸ் குழுவினர் சென்னை சிறைச் சாலைக்கு வருகை தந்து என்னைச் சந்தித்தனர். வெளியே சென்றபோது அவரைச் சந்தித்த பத்திரிகையாளர்களிடம் ''மத்திய சிறையில் கலைஞர் அவர்கள் மிகச் சிறிய அறையில் அடைக்கப்பட்டுள்ளார். அங்கு அவருக்கு எந்த வசதியும் செய்து கொடுக்கப் படவில்லை. அவருக்கு ஏ.சி. வசதி செய்யப்பட்டுள்ளது என்று சில பத்திரிகைகள் கூறுவது பொய்யான தகவல். அங்கு ஒரே ஒரு மின் விசிறி மட்டுமே இயங்கிக் கொண்டிருக்கிறது. அனல் காற்று வீசுகிறது. கலைஞர் அவர்களது உடல்நிலை நன்றாக உள்ளது. முழுத் தகவலையும் பிரதமரிடம் தெரிவிப்பேன்'' என்று கூறினார்.


அந்தக் குழுவினர் என்னைச் சந்திக்க வருவதற்கு முன்பு அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த மத்திய அமைச்சர் மாறனைச் சந்தித்தார்கள். அப்போது அங்கேயிருந்த **முரசொலி செல்வத்தையும்,** மாறனின் மகள் டாக்டர்

அன்புக்கரசியையும் உடன் வருமாறும், கலைஞரை சிறையிலே சந்திக்கலாம் என்றும் கூறி அழைத்து வந்தனர். மத்திய அரசினால் அனுப்பப்பட்ட குழுவினர் சிறைச்சாலைக்கு என்னைப் பார்க்க வந்தபோது, அவர்களை மட்டும் பார்க்க அனுமதித்துவிட்டு, செல்வத்தையும், என் பேத்தி அரசியையும் என்னைப் பார்க்க அனுமதிக்க வில்லை.

என்னை விடுதலை செய்யக்கோரி 2.7.2001 அன்று தமிழகம், புதுவை மாநிலங்களில் முழு அடைப்பு நடைபெற்றது. டெல்லியில் வாஜ்பாய் தலைமையில் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் கூட்டம் நடை பெற்று, தமிழ் நாட்டில் சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்ட அ.தி.மு.க. அரசை டிஸ்மிஸ் செய்ய வேண்டுமென்று மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்தது. ஆனால், 4ஆம் தேதியன்று சென்னையில் நூறுக்கு மேற்பட்ட செய்தியாளர்கள் கூடி பெரியதோர் நிருபர் கூட்டத்தில், ''அ.தி.மு.க. ஆட்சியை மத்திய அரசு அரசியல் சட்டம் 356ஐப் பயன்படுத்திக் கலைக்கலாமா?'' என்று என்னிடம் கேட்டபோது, ''அரசியல் சட்டப்பிரிவு 356ஐப் பயன்படுத்துவதை என்றுமே நான் ஏற்றுக்கொள்ள முடியாது; அது எங்கள் கொள்கை'' என்று விடையளித்தேன்.

நள்ளிரவில் வீட்டுக் கதவுகளை உடைத்துக் கொண்டு காவலர் உள்ளே நுழைந்து, என்னைத் தாக்கி கைது செய்து இழுத்துச் சென்றதை நேரில் கண்ட எனது மாமியார், ராஜாத்தியின் அன்னையார் திருமதி **சிவபாக்கியம் அம்மாள்** அந்த அதிர்ச்சியிலிருந்து மீளாத நிலையில், நான் கைது செய்யப்பட்டதற்கு அடுத்த நாள் விடியற் காலையில், ஜூலை 1ஆம் தேதி அதிகாலையில் இயற்கை எய்தினார். என்னிடம் மிகப் பெரிய மரியாதை கொண்டவர். அவர் உடலை அடக்கம் செய்யக்கூட நான் செல்ல முடியாமல் சிறையில் அடைப்பட்டிருந்தேன். என் கண் எதிராக வருவதுகூட மரியாதை அல்ல என்று நினைத்த பெருமாட்டியின்

கைவசம் பதவி இருக்கும்
ஆணவத்தில் - வஞ்சம்
தீர்க்கும் வன்மத்தோடு
எதிரிகளை வீழ்த்த
நினைக்கும் சர்வாதிகாரப்
போக்கு எங்குமே
ஜெயித்ததாக வரலாறு
இல்லை!
-ஆனந்த விகடன்



நாகரிகமற்ற முறையில் கலைஞர்மீது தாக்குதல் நடத்த உத்தரவிட்டவர் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.
-இந்து ராம்

இறுதி யாத்திரையைக்கூட நான் காண முடியவில்லை. சிறையிலே என்னைக் காண வந்த பொன்னாண்டஸ் அவர்கள் இந்தச் செய்தியைக் கேள்வியுற்று, அவர் அங்கிருந்து நேரடியாக என் இல்லத்திற்குச் சென்று, அந்த அம்மையாருக்கு மரியாதை செய்த தோடு, ராஜாத்திக்கும், கனிமொழிக்கும் ஆறுதல் கூறிவிட்டு, நான் படுத்து உறங்கிய அறை, அங்கே என்னைக் கைது செய்து அழைத்துச் சென்ற விதம் பற்றியெல்லாம் அங்கிருந்தவர் களிடம் நேரடியாக விசாரித்தறிந்தார். பக்கத்தில் இருந்த செய்தியாளர் களிடம் ''ஒரு பெண் ஆட்சியில் இப்படிப்பட்ட கொடுமையான சம்பவம் நடந்திருப்பது அதிருப்தியும் வேதனையும் அளிக்கிறது'' என்றார். பின்னர் அந்தக் குழுவினர் அண்ணா அறிவாலயம் சென்று தேசிய ஜனநாயகக் கூட்டணிக் குழுவினரைச் சந்தித்து ஆலோசனை நடத்தினர்.

நான் கைது செய்யப்பட்டதை தொலைக் காட்சியில் கண்ட உழவர் உழைப்பாளர் கட்சியின் நிறுவனத் தலைவர் **வன்னிய அடிகளார்** உடனடியாகக் கடுமையான மாரடைப்பால் பாதிக்கப்பட்டு, ''கலைஞருக்கா இந்தக் கதி?'' என்று கேட்டவண்ணமே இயற்கை யடைந்த செய்தியினை ஏடுகள் வாயிலாக சிறையிலே இருந்த நான் படித்துக் கண்ணீர் சிந்தினேன்.

நான் கைதான செய்தியைக் கேட்டு திருவாரூர் அரசவனங்காட்டினைச் சேர்ந்த **சம்பந்தப் பத்தர்,** கரூர் பஞ்சமாதேவி **தீர்த்தம் தனம்மாள்,** விருதாசலம் தொலார் கிராமத்தைச் சேர்ந்த **பூமாலை** ஆகியோர் தீக்குளித்து இறந்தார்கள். உடுமலைப்பேட்டை **குமார்** என்பவர் தீக்குளித்து கவலைக்கிடமான சூழ்நிலையில் மருத்துவ

மனையில் அனுமதிக்கப்பட்டார். ''அதிர்ச்சியடைந்த கோவை மாவட்டம், காளப்பட்டி பேரூராட்சி மன்ற உறுப்பினராக இருந்த **ஞானவேல்** என்ற கழகத் தோழர் அதிர்ச்சியின் காரணமாக மூளை நரம்பு வெடித்து சிகிச்சை பலனின்றி உயிர் துறந்தார்'' என்ற செய்தியும் எனக்கு சிறைச் சாலைக்கு வந்தது.

நான் ஆட்சியிலே இருந்தபோது, தமிழக அரசின் தலைமைச் செயலாளராக இருந்தவரும், திறமைக்கும், நேர்மைக்கும் எடுத்துக்காட்டாக, மத்திய மாநில அரசுகளின் பல்வேறு பொறுப்புக்களில் சிறப்பாகப் பணியாற்றியவருமான **திரு.நம்பியார்**, ஐ.ஏ.எஸ்., அவர்களையும் ஜெயலலிதா அரசு என்னைக் கைது செய்த அன்றே கைது செய்தது. அவர் பதவி ஓய்வு பெற்ற பிறகு என்னைச் சந்திக்காமல் கூட இருந்தார். நீதிபதியின் இல்லத்தில் அவரைச் சந்தித்ததும், ''ஓய்வு பெற்ற பிறகு என்னைச் சந்திக்காமல் கூட இருந்தீர்களே, உங்களை இப்போது சந்திக்க வைத்துவிட்டார்கள் பார்த்தீர்களா?'' என்று நான் அவரிடம் கேட்டபோது, அந்த நேர்மையான அதிகாரி, ''அய்யா, நீங்கள் நலமாக இருக்கிறீர்களா?'' என்று மட்டும் கேட்டுவிட்டு சிறைக்குள் போய்விட்டார். நான் கைது செய்யப்பட்ட அதே வழக்கில் சம்பந்தப்பட்டதாகக் கூறி, சேப்பாக்கம் **ஏ.கே.ஜெகதீசன்**, **சைதை ஸ்ரீதரன்** மற்றும் சில அதிகாரிகளும் கைது செய்யப்பட்டனர்.

நான் கைதான சம்பவத்தில் தொடர்ந்து தமிழக ஆளுநர் மத்திய அரசுக்கு உரிய தகவலை, உரிய நேரத்தில் தராமல் இருந்ததையொட்டி, அவரைத் திரும்பப் பெற மத்திய அமைச்சரவை முடிவு செய்தது. மத்திய அரசின் பரிந்துரையின் பேரில் குடியரசுத் தலைவர் தமிழக ஆளுநர் **பாத்திமா பீவியை** திரும்ப அழைக்க உத்தரவிட்டதோடு, ஆந்திர மாநில ஆளுநராக இருந்த **ரங்கராஜனுக்கு** தமிழக ஆளுநராகக் கூடுதல் பொறுப்பினை அளித்து உத்தரவிட்டார். அந்தச் செய்தியினைக் கேள்விப்பட்ட **பாத்திமா பீவி** தனது பதவியை ராஜினாமா செய்ய முன்வந்தார். அவர் தமிழகத்திற்கு ஆளுநராக வர வேண்டுமென்று 1997ஆம் ஆண்டு விரும்பி பரிந்துரை செய்த நானே, அவர் பதவி விலகிச் செல்வதற்கும்

காரணமாக அமைந்து விட்டேன். 2.7.2001 அன்று **''அநாகரிகத்தின் உச்சம்''** என்ற தலைப்பில் தலையங்கம் தீட்டிய **''தினமணி''** அதனை முடிக்கும்போது ''ஜெயலலிதாவை முறையற்ற விதத்தில் முதல்வராக்கி வைத்த பாத்திமா பீவி, கடைசியில் ஜெயலலிதா அரசின் வரைமுறை கடந்த நடவடிக்கையினாலேயே பதவியை இழக்க நேரிட்டிருக்கிறது'' என்று எழுதியது.

சட்டம் - ஒழுங்கு - சமநீதி பற்றியெல்லாம் கவலைப் படாமல், தன் சொந்த வாழ்வுக்கு மட்டுமே வழி வகுத்துக் கொண்டு - முரண்பட்ட நிர்வாகம் நடத்தி, என் போன்றோரின் வியப்புக்கும், வெறுப்புக்கும் ஆளானார் என்றாலும்கூட; கவர்னர் பாத்திமா பீவி அவர்கள் அவரை அறியாமல் ஒரு நற்காரியம் செய்தார்.

அவர் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர் என்பதால், சென்னையில் வாழும் கேரள மக்களின் அன்பைப் பெற்றிட ''ராஜ்பவன்'' மாளிகையில் ஓணம் பண்டிகையைக் கொண்டாடினார். கவர்னரே முன் நின்று **ஓணம்** பண்டிகையை நடத்தி எங்களுக்கெல்லாம் அழைப்பு அனுப்பியிருந்தார். இசை மேதை **ஜேசுதாஸ்** அவர்களின் இசை விழாவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதுவரை ஓணம் பண்டிகையைப் பற்றிய முழு விபரம் நான் அறிந்திருக்கவில்லை. அந்த விழாவில் அச்சிட்ட ஒரு சிறு புத்தகம் போன்ற வெளியீடு வழங்கப்பட்டது. அதைப் படித்த பிறகுதான் ''ஓணம் பண்டிகை'' பற்றிய வரலாறு எனக்கு முழுமையாக விளங்கிற்று. மலையாள மொழியிலும், ஆங்கிலத்திலும், தமிழிலும் அந்த வெளியீடு அச்சிடப் பட்டிருந்தது. ''மகாபலி'' என்ற அசுரச் சக்கரவர்த்தியை மகா விஷ்ணு வாமனாவதாரம் எடுத்து வதைத்த கதைதான் ''ஓணம்'' என்று சொல்லப்பட்டதற்கு மாறாக; அந்த வெளியீட்டில் பின்வரும் சுருக்கமான வரலாறு எழுதப் பட்டிருந்தது.

"மலையாள ராஜ்யத்தை **மாவலி** என்ற மாமன்னன் ஆண்டு வந்தான். அவன் ஆட்சிக் காலம் மக்களுக்குப் பொற்காலமாக இருந்தது. அவனை அப்படியே விட்டுக் கொண்டிருந்தால், இன்னும் பல சாதனைகளைச் செய்து சரித்திர புருஷனாகி விடுவான், ஆகவே அவனை இப்போதே ஒழிக்க வேண்டும்- ஒழித்தால்தான் தேவர்கள் எனப்படும் பூசுரர்கள் வாழ முடியும் என்று மகாவிஷ்ணுவிடம் சென்று முறையிடுகிறார்கள். அதைக் கேட்ட **விஷ்ணு;** வாமனாவதாரம் எடுத்து, வஞ்சகச் சூழ்ச்சியால் மாவலி மன்னனை மண்ணோடு மண்ணாகும்படி வதைத்து விடுகிறார், நல்லவன் ஒருவன் ஆட்சி நடத்துவதும் - அது தொடர்வதும் பிடிக்காமல் பூசுரராம் தேவர்கள் அவனை வீழ்த்தி விட்டார்கள். உயிர் விடும்போது அந்த மாவலி மன்னன் மகாவிஷ்ணுவிடம் கேட்ட வரம்தான்; அவன் நினைவாக ஓணம் பண்டிகை கொண்டாடப்படுவதாகும்.

எனவே, ஆளுநர் மாளிகையில் நடத்தப்பட்ட அந்த ஓணம் பண்டிகை - ஒரு நல்ல விஷயத்தை - அதாவது நமது இனத்தை எப்படியெல்லாம் சூழ்ச்சியினால் தீர்த்துக் கட்டி; அதைத் திருவிழாவாகவும் கொண்டாடி மகிழ்ந்தார்கள் என்ற உண்மையை எனக்கு உணர்த்திட உதவிற்று!

மக்களோடு மக்களாக இருந்து, அவர்களுக்காகவே சாதனை புரிந்து நல்லாட்சி நடத்துகிறவர்களின்மீது காழ்ப்பு மிகுதியால் எதிர்ப்புக் கிளம்புவதையும்- அந்த நல்லோர் வீழ்ந்தால் தான் நிம்மதி என்ற நினைப்புடனே அந்த எதிரிகள் செயல்படுவதையும் எனக்குச் சுட்டிக்காட்டி **"துணிந்து தொண்டாற்றுக!"** என எனது 49ஆவது பிறந்த நாளிலேயே என்னை வாழ்த்தி தந்தை பெரியார் அவரது கையெழுத்திட்டு வெளியிட்ட அறிக்கையை தமிழர் தலைவர் வீரமணி அவர்கள் என்னிடம் பத்திரப்படுத்திக் கொடுத்திருந்தார்.

6. நேபாளத்தில் ஒரு பூபாளம்

நான் வேண்டுகோள் விடுத்தும் கேட்காமல் எனது 85ஆவது பிறந்த நாளை பல்வேறு அமைப்புகளும் கொண்டாடிக் கொண்டிருக்கும் வேளையில், கடந்த வாரம் தொடரின் ஐந்தாவது அத்தியாயத்தை முடிக்கின்றபோது தந்தை பெரியார் அவர்கள் என்னுடைய 49ஆவது பிறந்த நாள் விழாவிற்கு அவர் கையெழுத்திட்டு எழுதிய வாழ்த்துச் செய்தியை தாய்க் கழகத் தலைவர் வீரமணி அவர்கள், பாதுகாத்து வைத்திருந்து என்னிடம் கொடுத்தது பற்றி எழுதியிருந்தேன். அந்த வாழ்த்துச் செய்தியிலே தந்தை பெரியார் அவர்கள்; பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்:-

"மாண்புமிகு கலைஞர் டாக்டர் கருணாநிதி அவர்களுக்கு 49ஆவது ஆண்டு பிறந்த நாள் விழா நடப்பது குறித்து நான் மிகுதியும் மகிழ்ச்சியடைந்தேன். டாக்டர் அவர்களது வாழ்நாள் ஒவ்வொன்றும் மக்கள் நலம் பற்றி சிந்திப்பதிலும், தொண்டாற்றுவதிலுமே நடந்து கழிவதை நான் மனப்பூர்வமாக உணர்கிறேன். மனம் பூரித்து திருப்தி அடைந்து வருகிறேன்.

டாக்டர் செய்து வருகிற காரியங்கள் பெரிதும் மற்றவர் சிந்திக்கக்கூட பயப்படும்படியான காரியங்கள் என்பதோடு, அவைகளை வெகு எளிதிலே செய்து முடித்து விடுகிறார். இதன் பயனாகவே அரசியல் உலகில் அவருக்கு எதிர்ப்பாளர்கள் அதிகமாகி வருகிறார்கள். காரணம் டாக்டர் அவர்களது ஆட்சி நீண்ட நாளைக்கு நிலைத்து விடுமோ என்கின்ற பொறாமையும், வேதனையும்தான் என்றாலும், டாக்டர் அவர்கள் யாருடைய எதிர்ப்புக்கும் பயப்படாமல், எப்படிப்பட்ட


தொல்லைக்கும் சளைக்காமல், துணிந்து காரியமாற்றி வருகிறார்.

பொதுவாகவே சமுதாயத் துறையில் சீர்திருத்தத் தொண்டு ஆற்றினால் யாருக்கும் சுயநலக் காரருடையவும், பழமை விரும்பிகளுடையவும் எதிர்ப்பு ஏற்பட்டுத் தான் தீரும். கலைஞர் டாக்டர் அவர்களுடைய புரட்சிகரமான தொண்டுக்கு எதிர்ப்பும், தொல்லையும் ஏற்படுவது அதிசயமல்ல. அவற்றைப் பற்றி சிறிதும் இலட்சியம் செய்யாமல், துணிந்து தொண்டாற்றி வரும் டாக்டர் அவர்களை மனதாரப் பாராட்டி, அவர் வாழ்வு எல்லையற்று நீண்டு மக்களுக்கு புதிய உலகம் ஏற்பட வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்''

தந்தை பெரியார் அவர்கள் இவ்வாறு என்னை வாழ்த்தியது 1972ஆம் ஆண்டு என் 49ஆவது பிறந்த நாள் விழாவினை யொட்டியாகும். இதே 1972ஆம் ஆண்டுதான் - இன்று பிரச்சினையாகப் பேசப்படுகின்ற நேபாளத்தின் மன்னராக **பீரேந்திரர் வீர விக்கிரம ஷா தேவ்** பட்டத்திற்கு வந்தார். மன்னர் பீரேந்திராவிற்கும், அந்த நாட்டில் நடைபெற்று வந்த மன்னராட்சிக்கும் ஏற்பட்ட முடிவு பற்றி எழுதுவதில், எனக்குத் தனி உற்சாகம்!



டாக்டர் கலைஞர் அவர்களை மனதாரப் பாராட்டி, அவர் வாழ்வு எல்லையற்று நீண்டு மக்களுக்குப் புதிய உலகம் ஏற்பட வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்!



தந்தை பெரியாரின் வாழ்த்துச் செய்தியை தாய்க் கழகத் தலைவர் வீரமணி என்னிடம் தந்தார்!

1972ஆம் ஆண்டு நேபாளத்தின் மன்னராக பீரேந்திரா பொறுப்புக்கு வந்தபின், வாரத்தில் வெள்ளிக் கிழமைதோறும் அரண்மனையில் விருந்தளிக்கும் வழக்கம் தொடங்கிற்று. அந்த விருந்தினை ஒவ்வொரு வாரமும் அளிப்பவர்கள் சுற்று முறைப்படி தேர்ந்தெடுக்கப்படுவார்கள். 2001ஆம் ஆண்டு ஜூன் திங்கள் முதல் நாள் வெள்ளிக்கிழமை விருந்தினை அளிக்க வேண்டியவர் இளவரசர் தீபேந்திரா. ஆனால் அவரோ; தன் குடும்பத்தினர் அனைவருக்கும் துப்பாக்கிக் குண்டுகளையே விருந்தாகப் படைத்தார்.

1.6.2001 அன்று காட்மாண்ட் நாராயண் ஹிட்டி அரண்மனையின் ''த்ரிபுவன் ஸதன்'' மண்டபத்தில் வழக்கமான வாராந்தர விருந்துக்கு ஏற்பாடாகி இருந்தது. இரவு 8 மணிக்குத்தான் தீபேந்திரா அரண்மனைக்கு வந்து சேருகிறார். மற்ற அரச குடும்பத்தினர் அருகிலேயிருந்த வேறொரு அறையில் இருக்கிறார்கள். அங்கே சென்று தாயுடன் தன் காதலியான **தேவயானி ராணாவை** மணந்து கொள்ள ஒப்புதல் கேட்டு வாக்குவாதம் செய்கிறார். அப்போது இளவரசர் தீபேந்திராவிற்கு வயது 29. காதலி தேவயானிக்கு வயது 32. ராணி ஐஸ்வர்யா, ஜோதிடர்கள் இளவரசருக்கு 35 வயதான பிறகே திருமணம் செய்ய வேண்டுமென்றும், அதற்கு முன்பு அவருக்குக் குழந்தை பிறந்தால் மன்னரின் உயிருக்கு ஆபத்து என்று சொல்லியிருப்பதாகக் கூறி எதிர்ப்பு தெரிவித்து வந்தார். மகனை அமைதிப்படுத்த அறைக்குச் செல்லும்படி தாயார் கூறுகிறார். இளவரசர் தீபேந்திரா போதையில் இருந்திருக்கிறார். கீழே விழுவதும், உளறுவதுமான நிலை. தீபேந்திராவை குடும்பத்தினர் மூவர் அவருடைய அறைக்குக் கூட்டிச் செல்கிறார்கள். அங்கே சென்றதும் கதவை உள் பக்கமாக சாத்திக் கொண்டு மேலும் விஸ்கியையும்,

கஞ்சாவையும் இளவரசர் தீபேந்திரா பயன்படுத்திக் கொண்டதாக செய்திகள். காதலி தேவயானிக்கு போன் செய்ததை அவருடைய மொபைல் போன் பதிவு செய்திருந்தது.

இரவு 9 மணி. தீபேந்திரா படிகளில் இறங்குகிறார். முன்னறையில் இளவரசர் **பாரஸ்**, இளவரசி **பூஜா, ஷாஹி**, ஜெனரல் **ரவி ஷம்ஷேர் ராணா**, ராஜ மாதா **ரத்னா**வின் சகோதரியை மணந்த இந்தியாவைச் சேர்ந்த **மகேஷ் குமார் சிங்** ஆகியோர் இளவரசர் துப்பாக்கியுடன் நுழைவதைப் பார்த்து அதிர்ச்சியடைகிறார்கள். இளவரசர் பாரஸ் எதிரே சென்று தடுக்க முயலுகிறார். அவரை "வெளியே போ" என்று பிடித்துத் தள்ளிவிட்டு உள் அறைக்குள் தீபேந்திரா நுழைகிறார். அங்கே அரசரும், அரசியும் இருக்கிறார்கள். தீபேந்திரா அரசர் பீரேந்திராவை நோக்கிச் சுடுகிறார். மீண்டும் தன் அறைக்குச் சென்றுவிட்டுத் திரும்புகிறார். இந்த முறை அவர் கையில் இருந்தது 5.56மி.மீ. **ஹெக்லர் அண்ட் கோச் ரைஃபிள்**. தீபேந்திரா வெறி பிடித்தவர் போல் கண்மூடித்தனமாகச் சுட ஆரம்பித்து விடுகிறார். உறவினர்களான **ஷார்தா, ஷாந்தி, ஜயந்தி** ஷார்தாவின் கணவர் குமார் கட்கா எல்லோரும் சுருண்டு விழுந்து விடுகின்றனர்.



தீபேந்திரா அத்துடன் திருப்தி அடையவில்லை. தோட்டத்திற்கு வருகிறார். அவருடன் வாக்குவாதத்தில் இறங்க தாய் ஐஸ்வர்யா இளவரசரை நோக்கி வருகிறார். எதையும் கேட்கின்ற நிலையில் இல்லாத அவர், தாய் **ஐஸ்வர்யாவையும் நீரஜன் ராணியையும்** நோக்கிச் சுடுகிறார்.

இறுதியாக அவர் துப்பாக்கியை திருப்பி தன்னையும் இரண்டு முறை சுட்டுக் கொள்ள, அதன் காரணமாக கீழே விழுகிறார். எனினும் கோமா நிலையில் அவர் இருந்ததால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, இரண்டு நாட்கள் நினைவில்லாமல் இருந்து அப்படியே அவரும் இறந்து விடுகிறார்.

மன்னர் பீரேந்திரா சுடப்பட்டதும், அடுத்துப் பட்டத்திற்கு வர வேண்டிய இளவரசரும் தனக்குத் தானே சுட்டுக் கொண்டு கோமா நிலையில் இருந்ததால், மன்னரின் தம்பியாகிய **ஞானேந்திரா** மன்னராக நியமிக்கப்படுகிறார். நேபாள மன்னர் குடும்பத்தினர் உட்பட 11 பேர் கொல்லப்பட்ட அந்தச் சம்பவம் உலகம் முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

1768ஆம் ஆண்டு காட்மாண்ட் மீது மன்னர் **பிருத்வி நாராயண் ஷா** படையெடுத்து வெற்றி கண்டதைத் தொடர்ந்து நேபாளத்தில் மன்னர் ஆட்சி தொடங்கியது. இடையில் 1846ஆம் ஆண்டு **ஜங் பகதூர் ராணா** என்பவர் பிரதமரானபோது, மன்னர்களின் அதிகார மையம் ஆட்டம் காணத் தொடங்கியது. 1960ஆம் ஆண்டு அந்த நாட்டில் அரசியல் கட்சிகளுக்கெல்லாம் தடை விதிக்கப்பட்டது. 1972இல் புதிய மன்னராக **பீரேந்திரா** பதவியேற்றார். 1990இல் அங்கே அரசியல் கட்சிகளுக்கு இருந்த தடை நீக்கப் பட்டது. 1996ஆம் ஆண்டு, நேபாளத்தில் மன்னராட்சிக்கு எதிராக **மாவோயிஸ்டுகள்** பெரும் போராட்டத்தை தொடங்கினர்.

2006ஆம் ஆண்டு அதிகாரத்தை மன்னர் விட்டுக் கொடுத்தார். பிரதமராக **கிரிஜா பிரசாத் கொய்ராலா**



மன்னர் பீரேந்திராவும் சுட்டுக் கொல்லப்பட்ட ராணி ஐஸ்வர்யாவும் மற்றும் குடும்பத்தினரும்

பதவியேற்றார். மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுடன் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது. கடந்த 2007இல் இடைக்கால நாடாளுமன்றம் அமைக்கப்பட்டு, மன்னரின் அதிகாரங்கள் பறிக்கப்பட்டன.


கடந்த மாதம் ஏப்ரல் 10ஆம் தேதி அங்கே நடைபெற்ற தேர்தலில் மொத்தமுள்ள 601 இடங்களில், மாவோயிஸ்ட் தீவிரவாத இயக்கம் பங்கேற்று 220 இடங்களில் வெற்றி பெற்று, தனிப் பெரும் கட்சியானது. வேறு இரண்டு கட்சிகளின் ஆதரவுடன் அங்கே கூட்டணி ஆட்சி அமையவுள்ளது புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் 27.5.2008அன்று பதவி யேற்றனர். காட்மாண்டில் உள்ள பீரேந்திரா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அரசியல் நிர்ணய சபையின் முதல் கூட்டம் 28.5.2008 அன்று தொடங்கியபோது மன்னராட்சி நேபாளத்தில் ஒழிக்கப்பட்டு, குடியரசு நாடாக அறிவிக்கப் பட்டது. அதைத் தொடர்ந்து 3 நாட்கள் அரசு விடுமுறை அறிவிக்கப்பட்டு, மக்கள் அனைவரும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தனர்.

இதன் தொடர்ச்சியாக தற்போதுவரை அங்கே மன்னராக இருந்த ஞானேந்திரரும் சாதாரணக் குடிமகன் என்ற நிலையை அடைந்தார். இதுவரை பிரமாண்ட அரண்மனையில் வசித்து வந்த அவர் இனி எங்கே குடியேறப் போகிறார் என்பதெல்லாம் தெரியவில்லை. மாவோ இயக்கம் அவர் அரண்மனையை விட்டு வெளியேற வேண்டுமென்று வலியுறுத்துகிறது. மன்னர் அதற்கு செவிசாய்க்க மறுத்ததால், புதிய ஆளும் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் அவர் அரண்மனையைக் காலி செய்ய 15 நாட்கள் கெடு விதித்துள்ளனர். அவர் அரண்மனையைக் காலி செய்த பிறகு அதை அருங்காட்சியகமாக மாற்றவும் புதிய அரசு திட்டமிட்டுள்ளது. மன்னரைப் போற்றிப் பாடும் கீதம் தடை செய்யப்பட்டு, தேசிய கீதம் பாடப்பட உள்ளது. அரண்மனையில் மன்னரது கொடி இறக்கப்பட்டு, தேசியக் கொடி ஏற்றப்பட்டுள்ளது. ''குடை நிழலிருந்து ''குஞ்சரம்'' ஊர்ந்தோர் நடை மெலிந்து ஓரூர் நண்ணினும் நண்ணுவர்'' என்று ''வெற்றி வேற்கை''யில் வரும் தமிழ்ப் பாடல் எவ்வளவு பொருத்தமாக ஒலிக்கிறது!

இதற்கிடையில் 28ஆம் தேதி அரசியல் நிர்ணய சபையின் கூட்டம் தொடங்குவதற்கு சிறிது நேரத்திற்கு முன்பு, கூட்டம் நடக்கவிருந்த இடத்தின் வெளியே வெடி குண்டு தாக்குதல்



கொல்லப்பட்ட மன்னரின் குடும்பம் எரியூட்டப்பட்ட காட்சி.



இறுதியில் மன்னராக நியமிக்கப்பட்ட ஞானேந்திரா

ஒன்று நடைபெற்ற போதிலும், நல்ல வேளையாக அதிலே யாரும் காயமடையவில்லை.

2001ஆம் ஆண்டு நேபாளத்தில் நடைபெற்ற இந்தச் சம்பவங்களை நினைவூட்டுகையில், 1996ஆம் ஆண்டு தி.மு.கழகம் பதவிப் பொறுப் பேற்ற அந்த ஆண்டு, அதே காலக் கட்டத்தில், உலக அளவில் நடை பெற்ற சில முக்கிய தேர்தல்களையும், நிகழ்வுகளையும் பற்றி இத்தொடரில் நினைவூட்டுவது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன்.

வல்லரசு நாடுகளான அமெரிக்கா, ரஷ்யா ஆகியவற்றில் அந்த 1996ஆம் ஆண்டுதான் அதிபர் தேர்தல் நடைபெற்றது. ''நெஞ்சுக்கு நீதி''யின் நான்காம் பாகத்தில் அமெரிக்க அதிபர் தேர்தல் பற்றி நான் விரிவாக எழுதியிருக்கிறேன் என்றபோதிலும் 96ஆம் ஆண்டு அங்கே நடைபெற்ற அதிபர் தேர்தலைப் பற்றி சுருக்கிச் சொல்லிட விரும்புகிறேன்.

அமெரிக்காவில் அதிபரை மக்களே தேர்ந்தெடுக்கின்றனர். 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நவம்பர் மாதத்தில், முதல் செவ்வாய்க்கிழமை அன்று இந்தத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்று அரசியல் சாசனத்தில் எழுதி வைக்கப்பட்டுள்ளது. 96ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் இரண்டாவது முறையாக **வில்லியம் ஜெஃபர்சன் கிளிண்டன்** ஜனநாயகக் கட்சியின் சார்பில் போட்டியிட்டார். அவருடன் அப்போது துணை அதிபராக இருந்த **ஆல்பர்ட் கோர்**, துணை அதிபர் பதவிக்குப் போட்டியிட்டார். குடியரசுக் கட்சியின் சார்பில் **பாப் டோல்** என்பவர் அதிபர் பதவிக்கும், **ஜாக் கெம்ப்** என்பவர் துணை அதிபர் பதவிக்கும் போட்டியிட்டனர்.

அமெரிக்க அதிபர் தேர்தலில் ஒரு முக்கியமான அம்சம்- தேர்தலுக்கு முன்பு போட்டியிடுபவர்கள் ஒரே மேடையில்

வாக்காளர்களுக்கு முன்பு வாதிட வேண்டும். 6.10.1996அன்றும், 16.10.1996 அன்றும் கிளிண்டனுக்கும், பாப் டோலுக்கும் இடையே ஹார்ட்போர்டு என்ற இடத்திலும், 9.10.1996 அன்று துணை அதிபருக்குப் போட்டியிடுபவர்களுக்கு இடையேயும் விவாதங்கள் நடைபெற்றன. பரபரப்பாக நடந்த அமெரிக்க அதிபர் தேர்தல் முடிவுகள் நவம்பர் மாதம் 3ஆம் தேதி வெளியானது. பில் கிளிண்டன் 4 கோடியே 74 லட்சத்து 2 ஆயிரத்து 357 வாக்குகள் பெற்று - 49.2 சதவிகித மக்கள் ஆதரவுடன் வெற்றி பெற்றார். இவருக்கு அடுத்து, பாப் டோல் 3 கோடியே 91 லட்சத்து 98 ஆயிரத்து 755 வாக்குகள் பெற்று தோல்வி அடைந்தார். சிறு கட்சியினரில் **ராஸ் பெரோட்** என்பவர் மட்டும் குறிப்பிடத்தக்க வகையில் 80 இலட்சத்து 85 ஆயிரத்து 402 வாக்குகள் பெற்றார். எஞ்சிய வேட்பாளர்கள் யாரும் ஒரு சதவிகித வாக்குகள் கூடப் பெறவில்லை. துணை அதிபராக அல்கோர் தேர்வு பெற்றார். ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த அதிபர் ஒருவர் இரண்டாவது முறையாக அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. அதற்கு முன் **பிராங்க்ளின் ரூஸ்வெல்ட்** 1936இல் அந்தப் பெருமையைப் பெற்றார்.

16.6.1996அன்று ரஷ்ய அதிபர் பதவிக்கான தேர்தல் நடைபெற்றது. அதிபர் தேர்தலுக்கு பத்துப் பேர் போட்டியிட்ட போதிலும், ரஷ்ய அதிபர் **போரிஸ் எல்த்சின்** அவர்களுக்கும், கம்யூனிஸ்ட் தலைவர் **ஜென்னடி ஸூய்கனோவ்** ஆகிய இருவருக்கிடையே தான் பலத்த போட்டி. 80 சதவிகித மக்கள் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்தனர். தேர்தலில் முறைகேடு நடைபெற்றதாக அங்கும் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் குறை கூறிக் கொண்டனர். வாக்கு எண்ணிக்கையில் முதல் சுற்றில் யாருக்கும் பெரும்பான்மை கிடைக்க வில்லை. அதனால் முதல் இரண்டு இடத்தைப் பிடித்த எல்த்சின் மற்றும் கம்யூனிஸ்ட் தலைவர் ஸூய்கானோவ் இடையே மீண்டும் இரண்டாவது சுற்றுத் தேர்தல் நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டது. அமெரிக் காவில் பில் கிளிண்டன் இரண்டாவது முறையாகத் குடியரசுத்

தலைவராக எப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டாரோ, அதைப் போலவே ஜூலை 3ஆம் தேதி நடைபெற்ற தேர்தலில், போரிஸ் எல்த்சின் ரஷ்ய அதிபராக இரண்டாவது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆகஸ்ட் 9ஆம் தேதியன்று பதவியேற்றார்.

அமெரிக்காவிலும், ரஷ்யாவிலும் இவ்வாறு அதிபர்கள் இரண்டாவது முறையாகப் போட்டியிட்டு தேர்ந்தெடுக்கப் பட்ட கால கட்டத்தில்தான் தென்னாப்பிரிக்காவில் **நெல்சன் மண்டேலா** அவர்கள் அதிபர் தேர்தலில், தான் இரண்டாவது முறையாகப் போட்டியிட விரும்பவில்லை என்று அறிவித்தார்.

96ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 12ஆம் தேதி **பங்களாதேஷில்** பொதுத் தேர்தல் நடைபெற்றது. **கலீதா ஜியாவின்** தலைமையிலான வங்க தேச தேசிய கட்சியும், **ஷேக் ஹசீனா** தலைமையிலான வங்க தேச அவாமி லீக் கட்சிக்கும் இடையேதான் கடுமையான போட்டி. தேர்தலுக்கு முந்தைய **வன்முறைச்** சம்பவங்களில் இரு தரப்பையும் சேர்ந்த பலர் பலியாகவும், பலர் காயமடையவுமான நிகழ்ச்சிகள். அரசியல் கட்சிகளிடையே துப்பாக்கி மோதல்கள் வரை நடைபெற்றன. வன்முறை அதிகரிக்கலாம் என்று எதிர்பார்த்து அரசியல் கட்சிகள் எதுவும் பேரணி நடத்தக் கூடாதென தடை விதிக்கப்பட்டது. தேர்தல் களத்தில் மொத்தம் 2574 பேர் வேட்பாளர்களாகப் போட்டியிட்டனர். 60 சதவிகிதம் வாக்குப் பதிவு நடைபெற்றது. ஆனால் வாக்கு எண்ணிக்கையின்போது, எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலைமை ஏற்பட்டது. **ஷேக் ஹசீனா** தலைமையிலான **அவாமி லீக்** 133 இடங்களிலும், முன்னாள் பிரதமர் பேகம் **கலீதாஜியா** தலைமையிலான **வங்க தேச தேசிய கட்சி** 102 இடங்களிலும், அப்போது சிறையிலே இருந்த முன்னாள் அதிபர் **எர்ஷாத்** தலைமையிலான **ஜாதீயக் கட்சி** 29 இடங்களிலும், **ஜாமாத் இ இஸ்லாமி** கட்சிக்கு 5 இடங்களிலும் வெற்றி கிடைத்தது. 23.6.1996 அன்று வங்க தேசப் பிரதமராக அவாமி லீக்கின் தலைவர் **ஷேக் ஹசீனா** பதவியேற்றார்.

வங்க தேச முன்னாள் சர்வாதிகார அதிபர் **ஹுசைன் முகமது எர்ஷாத்** சிறையிலிருந்து பரோலில் வெளிவந்து நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டார். சிறையில் இருந்தவாறே ஐந்து இடங்களில் போட்டியிட்டு, ஐந்து இடங்களிலும் அவர் வெற்றி பெற்றார்.

தென் அமெரிக்காவின் **பிரெஞ்சு கயானா**விலிருந்து 96ஆம் ஆண்டு ஜூன் திங்களில் ஏவப் பட்ட ராக்கெட்டு தறிகெட்டுச் செல்லத் தொடங்கியதால் விஞ்ஞானிகளே அதை வெடித்துச் சிதற வைத்தனர். ஆள் இல்லாமல் அனுப்பப்பட்ட அந்த ராக்கெட் வெடித்துச் சிதறியது, விஞ்ஞானிகளுக்கு பெருத்த பின்னடைவாகக் கருதப்பட்டது.



மன்னரின் சிலைமேல் நின்று "அரண்மனையை காலி செய்!" என்று வலியுறுத்தும் ஒரு போராட்ட வீரர்!

96ஆம் ஆண்டு ஜூன் திங்கள் தொடக்கத்தில் அமெரிக்க நாடாளுமன்ற மக்கள் சபையில் இந்தியா குறித்து ஒரு முக்கியமான தீர்மானம் காரசாரமாக விவாதிக்கப் பட்டது. எதிர்க் கட்சியான குடியரசுக் கட்சியைச் சேர்ந்த **டான் பர்ட்டன்** என்பவர் இந்தியாவிற்கு எதிராக ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார். 1997ஆம் ஆண்டிற்கு இந்தியாவிற்கு வளர்ச்சி நிதியாக 5 கோடியே 70 லட்சம் டாலர் வழங்க அமெரிக்க அரசு திட்டமிட்டிருந்தது. அதிலே 60 லட்சம் டாலரைக் குறைக்க வேண்டுமென்று கூறித்தான் **டான் பர்ட்டன்** தீர்மானம் கொண்டு வந்தார். அதற்கான விவாதம் நடைபெற்றபோது தான் பெரும் பாலான உறுப்பினர்கள் இந்தியாவின் மீது எந்த அளவிற்கு பற்று

கொண்டிருந்தார்கள் என்பது தெரிய வந்தது. தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது இந்தியாவிற்கு எதிராக 120 உறுப்பினர்களும், ஆதரவாக 297 உறுப்பினர்களும் வாக்களித்தனர்.


1996ஆம் ஆண்டு ஜூன் திங்களில் **ஐ.நா. சபையின்** பாதுகாப்புக் குழுவில் ஈராக் நாட்டிற்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரி அமெரிக்கா குரல் எழுப்பியது. ஆனால் அதற்கு உலக நாடுகளில் ஆதரவு கிடைக்கவில்லை.

ஈராக் என்பதுதான் பண்டைக் காலத்தில் **"மெசபடோமியா"** என்று அழைக்கப்பட்டதாகும். 1958ஆம் ஆண்டு அந்த நாட்டின் மன்னராக 23 வயதான **இரண்டாம் ஃபைசல்** என்பவர் இருந்தபோது, ஜெனரல் **அப்துல் கரீம் காசிம்** தலைமையில் நடைபெற்ற ராணுவப் புரட்சியில் மன்னர் கொல்லப்பட்டார். ராணுவ ஆட்சியை ஈராக்கில் முக்கிய கட்சியாக இருந்த **"பாத்"** கடுமையாக எதிர்த்தது. அந்தக் கட்சியிலேதான் **சதாம் உசேன்** முக்கிய உறுப்பினர்.

1963ஆம் ஆண்டு பாத் கட்சியினருடைய ஆதரவுடன் ராணுவ அதிகாரிகள் அப்துல் கரீம் காசிம் தலைமையிலான அரசாங்கத்தைக் கவிழ்த்து விட்டு, **அப்துல் சலாம் ஆரிப்**



240 ஆண்டு கால முடியாட்சி ஒழிந்து, குடியாட்சி மலர்ந்ததை நேபாள மக்கள் கொண்டாடுகிறார்கள்.



1996ஆம் ஆண்டு அமெரிக்க அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வில்லியம் ஜெபர்சன் கிளிண்டன்!

என்பவரை அதிபராக்கினர். அவர் சதாம் உசேன் உட்பட தன் கட்சியினரையே கைது செய்து சிறையிலே அடைத்தார். 1968இல் நடைபெற்ற ''ரத்தம் சிந்தாத புரட்சி''யில் ஆரிப் பதவியிலிருந்து அகற்றப்பட்டு, **அகமது ஹசன் அல் பக்கர்** அதிபராகவும், சதாம் உசேன் துணை அதிபராகவும் பதவியேற்றனர். சதாம் உசேன் துணை அதிபராக இருந்த போதிலும், கட்சியைத் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொண்டு பல்வேறு சமூக நலப் பணிகளை மேற்கொண்டார். 1979இல் அந்த நாட்டின் அதிபராகப் பொறுப்பேற்றார். வளைகுடா பகுதியில் **இஸ்லாமிய ஷரியத்** சட்டத்தைப் பின்பற்றாத ஒரே நாடாக ஈராக் நாட்டினை மாற்றினார்.

ஈராக் நாட்டின் ஒரு பகுதியில் வாழ்ந்த குர்த் **இனப் போராளிகள்** அண்டை நாடான **ஈரான்** உதவியுடன் போரிட்டதை சதாம் உசேன் கடுமையாக எதிர்த்து, ஐயாயிரத்திற்கும் மேற்பட்டோர் இறப்பதற்குக் காரணமாக இருந்தார். 1979 முதல் 1988 வரை சதாம் உசேன் தலைமையிலான ஈராக் நாட்டிற்கும் **கோமெனி** தலைமையிலான ஈரான் நாட்டிற்கும் இடையே போர் தொடர்ந்த வண்ணமே இருந்தது.

குவைத் நாட்டிடம் வாங்கியிருந்த 3000 கோடி டாலர் கடனை ரத்து செய்ய சதாம் உசேன் கோரி, குவைத் மறுத்த காரணத்தினாலும் எண்ணெய் உற்பத்தியைக் குறைத்து அதன் விலையை உயர்த்த மறுத்த காரணத்தினாலும், அந்த நாட்டுடன் படையெடுத்து குவைத் நாட்டினைக் கைப்பற்றினார்.

ஈரான் நாட்டுடன் போர் புரிய உதவி புரிந்த **அமெரிக்கா, குவைத்** நாட்டை சதாம் உசேனிடமிருந்து மீட்க ஐ.நா.




ரஷ்ய அதிபராக வெற்றி பெற்ற போரீஸ் எல்த்சின்!

சபையின் கூட்டணிப் படைகளுக்கு தலைமையேற்று 1991ஆம் ஆண்டு போரிட்டு - குவைத்தை விட்டு ஈராக்கை விரட்டியது. இதன் தொடர்ச்சியாகத்தான் ஈராக் நாட்டின் மீது பல்வேறு பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா ஐ.நா.சபையின் மூலமாகக் கொண்டு வந்தது. 1996ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஐ.நா. அமைப்பினைச் சேர்ந்த ஆய்வாளர் **ஸ்காட் ரிட்டர்** என்பவர் ஈராக் விமான நிலையத்தில் உள்ள பாதுகாப்பு அமைப்பை திடீர் சோதனையிட முயன்றபோது ஈராக்கிய அதிகாரிகளால் தடுத்து நிறுத்தப்பட்ட நிகழ்ச்சி நடைபெற்றது. இதன் தொடர்ச்சியாக ஈராக் பற்றியும் அதன் அதிபர் சதாம் உசேன் பற்றியும் இந்தத் தொடரின் பின் பகுதியில் எழுதுகிறேன்.

சூடான் நாட்டில் 1996ஆம் ஆண்டு பெரும் பஞ்சம் ஏற்பட்டு சுமார் 7 இலட்சம் பேர் பட்டினியால் வாடிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் பின்னர் புரட்சிக்காரர்களாக மாறி, ரொட்டித் துண்டுக்காக தெருவில் இறங்கி போராட்டத்தைத் தொடுத்தார்கள்.

உலக அளவில் நான்காண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் ''ஒலிம்பிக்'' விளையாட்டுப் போட்டிகள் **அமெரிக்காவில் ஜார்ஜியா** மாநிலத்தில் உள்ள **அட்லாண்டா** நகரில் 96ஆம் ஆண்டு ஜூலையில் தொடங்கியது.

தலிபான் தீவிரவாதிகள் **ஆப்கானிஸ்தான்** நாட்டில் தலைநகரான காபூல் நகரை 27.9.1996 அன்று கைப்பற்றினர். அந்த நாட்டின் தலைவர், **முகமது நஜீபுல்லா** தீவிரவாதிகளால் தூக்கிலிடப்பட்டார். **அதிபர் ரப்பானி** நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டார். தூக்கிலிடப்பட்ட முன்னாள் அதிபர் நஜீபுல்லா இந்திய நாட்டின் சிறந்த நண்பராக விளங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.



தென்னாப்பிரிக்க அதிபர் தேர்தலில், 2ஆவது முறையாகப் போட்டியிட மறுத்த நெல்சன் மண்டேலா!

2.10.1996அன்று ஐரோப்பிய நாடான **பல்கேரியாவில்** அந்த நாட்டின் முன்னாள் பிரதம மந்திரி **ஆண்ட்ரேய் லூக்கானோவ்** சுட்டுக் கொல்லப்பட்டார்.

உலக நிகழ்ச்சிகளை சற்று ஒதுக்கி வைத்து விட்டு, தமிழகத்தில் ஆட்சியைத் தொடங்கிய தி.மு.க.வின் செயல்பாடுகள் சிலவற்றைத் தொடருகிறேன். **96**ஆம் ஆண்டு, மே திங்களில் கழக அரசு பொறுப்பேற்றதும், மதுபான வகையறாக்களுக்கு **95** ரூபாய் என்று வரி உயர்த்தப்பட்டது. அதற்கு முன்பு ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் **45** ரூபாய் மட்டுமே வரியாக வசூலித்து வந்தார்கள். அதைப் பற்றி செய்தியாளர்கள் என்னிடம் 'மீதி **50** ரூபாய் இதுவரை எங்கே போச்சு' என்று கேட்டார்கள். நான் அவர்களிடம் நாகரிகமாக **"தோத்துப் போச்சு"** என்று கூறினேன். ஆனால் அதைப்பற்றி ஜெயலலிதா அந்நிய நாட்டு மதுவிற்கு தனது ஆட்சியிலே குறைந்த அளவிலே வரியை வசூலித்ததிலே தவறு இல்லை என்று அறிக்கையில் குறிப்பிட்டார். அவர் அப்படிக் கூறியதால் அதுகுறித்து நான் விளக்கமளிக்க வேண்டியவனானேன். அந்த ஐந்தாண்டு காலத்தில் அந்தத் தொகை தனியார் தோட்டத்துக்குத்தான் சென்றது. அந்த ஐந்தாண்டுகளில் மட்டும் சுமார் **350 கோடி ரூபாய்** - இந்த ஒன்றில் மட்டும் அரசாங்கத்திற்கு வர வேண்டிய Vend Fee வழி தவறிப் போயிருக்கின்றது என்றும், அந்தத் தொகை தான் தற்போது அரசாங்கத்திற்கே கிடைக்கும் விதத்தில் திருப்பி விடப்பட்டுள்ளது என்றும் கூறிய பிறகு எந்தப் பதிலும் வரவில்லை.

தொடர்ந்து செய்தியாளர்கள் என்னிடம்; ஜெயலலிதா அடிக்கடி தேர்தலில் தில்லு முல்லு நடந்ததாகச் சொல்கிறாரே, அதற்கு உங்கள் பதில் என்னவென்று கேட்டார்கள். அதற்கு



வங்கதேசத் தேர்தலில் போட்டியிட்ட ஷேக் ஹசீனா, கலீதா ஜியா



நான் அளித்த பதில், ''தேர்தல் நடந்தபோது தமிழகத்திலே ஆட்சியிலே இருந்தவர் ஜெயலலிதாதான். அவருடைய காவல் துறைதான் பொறுப்பிலே இருந்தது. மத்தியிலே ஆட்சியிலே இருந்ததும் ஜெயலலிதாவோடு தேர்தல் உடன்பாடு கொண்டிருந்த நரசிம்மராவ் அவர்கள் தான். மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சியிலே இருந்து கொண்டு தேர்தலில் தில்லுமுல்லு என்றால் எப்படிச் சரியாக இருக்கும்?'' என்று கூறினேன்.

ஜூன் 11 மற்றும் 12 ஆகிய நாட்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகளின் மாநாடு தலைமைச் செயலகத்தில் என்னுடைய தலைமையிலே நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் நான் பேசும் போது என்னுடைய துவக்க உரை இவ்வாறு அமைந்தது.

''புதிய ஆட்சி அமைந்தவுடன் கூட்டப்படுகின்ற முதல் மாநாடு இது. இங்கே பங்கு பெறுபவர்கள் பலருக்கு அந்தத் துறையில் அவர்கள் எதிர் கொள்கின்ற பல பிரச்சினைகளை எப்படிச் சந்திப்பது என்று முடிவெடுக்க வேண்டிய மாநாடாகவும் இது அமைந்திருக்கின்றது. முக்கியமாக நிர்வாகச் சீர்திருத்தத்தையும், தூய்மையான ஆட்சியையும் தருகின்ற சூழ்நிலையை நாங்கள் மேற்கொண்டதன் அடிப்படையில், பல்வேறு நிலைகளில் தேவையான பணி

மாற்றங்களைச் செய்து, அரசின் நிலைப்பாடுகளை வலுப்படுத்துவதற்காக பல முயற்சிகளை மேற்கொண்டபிறகு, அவற்றின் பயன், மக்களுக்கு முழுவதுமாய்ப் போய்ச் சேர வேண்டும் என்பதற்காக இந்த மாநாடு கூட்டப்பட்டுள்ளது.

தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைந்த போது, நன்றி அறிவிக்கின்ற கூட்டத்தில் **''எந்தத் தவறு நடந்தாலும் அதைச் சகித்துக் கொள்ள மாட்டேன்''** என்று நான் உறுதிபடக் கூறியது உங்களுக்கெல்லாம் நினைவில் இருக்கலாம். மக்கள் இந்த ஆட்சியிடம் நியாயமான, நேர்மையான, தூய்மையான, ஊழலற்ற ஒரு நிர்வாகத்தை எதிர்பார்க்கிறார்கள். வாக்களித்தவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவது இந்த அரசின் கடமை. புல்லுக்குப் போய்ச் சேர வேண்டும் என்பதற்காகவே நெல்லுக்கு நீர் திறந்து விடப்பட்ட மாய் மால நிலை மாறி, நெல்லுக்கு மட்டும்தான் போய்ச் சேர வேண்டும் என்பது தான் இந்த மாநாட்டின் குறிக்கோள்'' என்று கூறினேன்.

காவல் துறை அதிகாரிகள் மத்தியிலே பேசும்போது, ''காவல் நிலையங்கள் குற்றவாளிகளைக் கண்டிப்பதற்காகவே தவிர, தண்டிப்பதற்காக அல்ல. காவல் நிலையங்களே குற்றக் கூடங்களாக மாறக் கூடாது. காவல் துறை இதில் மிகுந்த எச்சரிக்கையுடனும் கவனத்துடனும் செயல்பட வேண்டும். பொது மக்களைப் பொறுத்தவரை தங்களுடைய உயிருக்கு பாதுகாப்பு என்று காவல் துறையையே நம்பியிருக்கிறார்கள். சீருடை அணிந்த சிப்பாயாக நின்று பாமர மக்கள் சுதந்திரத்துடனும், நிம்மதியுடனும் வாழ்வதற்கு காவல் துறைதான் உத்தரவாதம் அளிக்க வேண்டும். சட்டம் மட்டும் இருக்கிறது, ஒழுங்கு இல்லை என்கிற நிலை கூடாது. பிரச்சினைகள் தோன்றிய பிறகு அவற்றைச் சரி செய்ய முனைவதை விட வரும் முன் காப்பதே நிர்வாகத்தின் அணுகு முறையாக இருக்க வேண்டும். சட்டம் ஒழுங்குப் பிரச்சினையைத் தூண்டுபவர்கள் யாராக இருந்தாலும் பாரபட்சமின்றி காய்தல், உவத்தல் அகற்றி அவர்களைச் சட்டத்தின் கீழ் கொண்டு வந்து தகுந்த தண்டனை வழங்க வேண்டும்'' என்று கூறினேன்.

அந்தக் கூட்டத்தில் அன்றைய டி.ஜி.பி.யாக இருந்த ராஜ்மோகன் பேசும்போது நடுங்கிய நிலையிலே பேசினார். பேசி முடித்தபின் தான் முதல்வர்முன் பேசுவதால் நடுங்கிக் கொண்டு பேசுவதாக நினைக்க வேண்டாம் என்றும், ''ஏ.சி.யினால் தான் நடுங்குகிறேன் என்றும் சொன்னார். உடனே நான் குறுக்கிட்டு, ''ஒரு டி.ஜி.பி., ''ஏ.சி.''க்கு நடுங்கலாமா?'' என்று குறிப்பிட்டதும் மாநாட்டிற்கு வந்திருந்து அனைவரும் அந்த ''ஜோக்''கை மிகவும் ரசித்தனர்.

மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இறுதியாக நான் வலியுறுத்திய மற்றொரு கருத்து - அனைத்து அதிகாரிகளும் அன்றாடம் பத்திரிகைகளை முறையாகப் படிக்க வேண்டுமென்பதாகும். அதைப் பற்றி 15.6.1996 தேசிய ''தினமணி'' தனது தலையங்கத்தில்,

★ ''காமராஜரிடம் இருந்த ஒரு பழக்கம் கருணாநிதியிடமும் இருப்பது குறிப்பிடத்தக்கது. அது அன்றாடம், செய்திப் பத்திரிகைகளை ஒழுங்காகப் படிப்பது - அடுத்து, பத்திரிகையாளர்களுடன் தாராளமாகப் பழகும் குணம். நாள்தோறும் அரை மணி நேரமாவது பத்திரிகைகளை அதிகாரிகள் கட்டாயம் படிக்க வேண்டும் என்று முதல்வர் அறிவுறுத்தியுள்ளார். மாவட்ட ஆட்சியாளர்கள் மாநாட்டில்



1996ஜூன் திங்கள் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில், ''காவல் நிலையங்கள் குற்றவாளிகளை கண்டிப்பதற்காகவே தவிர, தண்டிப்பதற்காக அல்ல... சட்டம் மட்டும் இருக்கிறது - ஒழுங்கு இல்லை என்கிற நிலை கூடாது!'' என்கிறார், கலைஞர்!

நிறைவுரையாற்றிய கருணாநிதி, பத்திரிகை உலகம் **'ஜனநாயகத்தின் நான்காவது தூண்'** என்பதையும் நினைவுபடுத்தத் தவறவில்லை.''

★ ''பத்திரிகைகளின் சக்தி என்ன என்பதை முன்னாள் முதல்வர் ஜெயலலிதா - தேர்தலுக்குப் பிறகு புரிந்து கொண்டது - உண்மையிலேயே பரிதாபகரமானது தான். அவரை முன்னாள் ஆக்கியதில் பத்திரிகை உலகுக்கும் நிச்சயம் பங்கு உண்டு என்பதை அவரே ஒப்புக் கொண்டிருக்கிறார்.''

★ ''கருணாநிதி பத்திரிகைகளைப் படிப்பதோடு நின்று கொள்வதில்லை. அவருடைய நிர்வாகம் அல்லது அதிகாரிகள் வரம்பு மீறியதாகச் செய்திகள் எதிர்ப்பட்டால், உடனடியாகத் தலையிட்டு குறைபாடுகளைப் போக்குகிறார். இதைப் போலவே பத்திரிகைச் செய்திகளுக்கு தகுந்த மரியாதை அளிக்குமாறு அதிகாரிகளை அவர் கேட்டுக் கொண்டிருக் கிறார். பழைய ஆட்சியில் நிருபர்களைப் பார்த்தாலே, அதிகாரிகள் பயந்து ஓடிப் பதுங்கிக் கொள்வது வழக்கம். கருணாநிதியின் இந்தப் புதிய கண்ணோட்டத்தையொட்டி பத்திரிகையாளர்களுக்கும் அதிகார வர்க்கத்துக்குமிடையே பரஸ்பர நட்புறவு மலரும் வாய்ப்புண்டு'' என்று எழுதியிருந்தது.

7. பழி போட்டு வளர்த்த பகை

அவசரத்தில் தீர்ப்பு - ஆத்திரத்தில் அநீதி!

ஈராக் அதிபர் சதாம் உசேனைத் தவிர்த்து விட்டு, ஈராக் நாட்டு வரலாற்றை எழுத முடியாது; இரண்டும் பின்னிப் பிணைந்திருப்பவை; இரண்டறக் கலந்திருப்பவை. வீரமும், சோகமும், எழுச்சியும், இரங்கலும் ததும்பிடும் அவருடைய வரலாற்றைப் பற்றி இந்த அத்தியாயத்திலேயே எழுதிட முற்படுகின்றேன்.

உலகத்தில் ஒரு பிரிவினருக்கு சதாம் உசேன் கொடுங்கோலன்- ஆனால் மற்றொரு பிரிவினருக்கு அவர் ஒரு காவிய நாயகன். அமெரிக்க வல்லரசுக்கே சிம்ம சொப்பனமாக விளங்கியவர்தான் சதாம் உசேன். அண்டை நாடுகளான ஈராக்கும்- குவைத்தும் ஒன்றுக்கொன்று 1991ஆம் ஆண்டு சண்டையிட்டுக் கொண்டபோது - குவைத்துக்கு நண்பர் என்று கூறி, ஈராக்மீது அமெரிக்கா போர் தொடுத்தது. அந்தப் போரில் சதாம் உசேனின் போர் வீரர்கள் காட்டிய துணிச்சலை, அதன் தோல்விக்குப் பிறகும் உலகமே பாராட்டியது. போரில் அமெரிக்கா வெற்றி பெற்றபோதும், அதற்குப் பிறகு அமெரிக்காவில் நடைபெற்ற தேர்தலில் ஆளுங்கட்சி தோல்வியைச் சந்தித்தது.


28.4.1937 அன்று ஈராக் நாட்டின் திக்ரித் நகருக்கு அருகில் உள்ள கிராமம் அல் ஆஜா. அந்த ஊரின் கடைக்கோடியில் இருந்த மண் குடிசையில் வறுமையெல்லாம் திரண்ட உருவமாக அமர்ந்திருந்தாள் சுபா தல்ஃபா. திருமணம் ஆகாதவள். ஆனாலும் நிறைமாத கர்ப்பிணி. பிள்ளையைக் கொடுத்த காதலன் உசேன் அல் மஜீத் காணாமல்

போய்விட்டான் - இல்லை - ஓடிவிட்டான். கருவினைக் கலைக்க சுபா எடுத்த முயற்சியெல்லாம் பலிக்கவில்லை. தற்கொலை செய்து கொள்ள அவள் முயன்றும் கடைசி நேரத்தில் காப்பாற்றப்பட்டு விடுகிறாள். தாய்க்கே பிடிக்காத பிள்ளையாய்ப் பிறந்தவன்தான் **சதாம் உசேன்.** பின்னர் வளர்ப்புத் தந்தையின் அடக்குமுறைக் கொடுமைகள். பள்ளிக்கே அனுப்பப்படவில்லை. பிறந்தது முதல் வெறுப்பையே நுகர்ந்த காரணத்தினால்தானோ என்னவோ சதாம் உசேனின் வாழ்க்கை முழுவதுமே வெறுப்பு நிறைந்ததாகவே கழிந்தது. இளம் வயதிலேயே வீட்டிலிருந்து வெளியேறி தாய் மாமன் **கைரல்லா தல்ஃபா** என்பவரிடம் சதாம் அடைக்கலம் புகுந்தான். அப்போதுதான் அவனுக்கு சதாம் என்ற பெயர் சூட்டப்பட்டது. சதாம் என்றால் அரபு மொழியில் **''எதையும் எதிர்கொள்பவன்''** என்று பொருள். கைரல்லா ஒரு ராணுவ அதிகாரி. ஈராக்கில் மன்னர் ஆட்சிக்கு எதிராகப் புரட்சி நடந்தபோது கைரல்லா கைது செய்யப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்டார்.

தாய்மாமா சிறைப்பட்டதும் சதாம் மீண்டும் தாயிடம் வந்தபோது, அவள் வேறொரு கணவனுடன் வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தாள். அந்தக் கணவன் சதாமுக்குச் செய்த கொடுமைகள் கொஞ்ச நஞ்சமல்ல. சில நாட்கள் மட்டுமே சதாமினால் அந்தக் கொடுமைகளை அனுபவிக்க முடிந்தது. பின்னர் வீட்டை விட்டு விரட்டப்பட்டு வீதிகளிலே வாழத் தொடங்கி விட்டான். ரயில்வே ஸ்டேஷனில் தர்ப்பூசணி பழங்களை விற்றான். சிறையிலிருந்து வெளி வந்த தாய்மாமா கைரல்லா, ஒரு நாள் புகை வண்டியில் வந்து இறங்கியதைக் கண்ட சதாம், ஓடிப் போய் அவரது கையைப் பற்றிக் கொண்டான்.



அரபு மொழியில் சதாம் என்றால், ''எதையும் எதிர்கொள்பவன்'' என்று பொருள்!



ஈரான் அதிபர் அயதுல்லா கோமெனி

கைரல்லா பிறகு பாக்தாத் நகர மேயர் ஆனார். அப்போது கைரல்லாவிற்கு எதிராக தலை தூக்கிய கம்யூனிஸ்ட் தலைவர் ஒருவரை சதாம் உசேன் சுட்டுக் கொன்றார். இதுதான் அவர் செய்த முதல் கொலை. அப்போது அவருக்கு வயது 20தான். ஆனால் வழக்கிலிருந்து தப்பி விட்டார். ஈராக் நாட்டில் இருந்த "பாத்" கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டு மன்னர் ஆட்சிக்கு எதிராகப் போராட்டங் களில் கலந்து கொண்டார்.

1958ஆம் ஆண்டு ஈராக் நாட்டில் மன்னர் ஆட்சி முடிவுக்கு வந்தது. **அப்துல் கரீம் கசீம்** என்பவர் பிரதமராகப் பொறுப்பேற்றார். அவர் பாத் கட்சியினரைக் கொன்று குவித்தார். எனவே அவரைக் கொலை செய்ய பாத் கட்சியினர் திட்டமிட்டனர். அதை நிறைவேற்றும் பொறுப்பு சதாம் உசேனிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஆனால் இந்தக் கொலை முயற்சியில் தோல்வியடைந்து, காலில் காயமடைந்த சதாம், வெளிநாட்டுக்குத் தப்பியோடி விட்டார். 1959ஆம் ஆண்டு இந்தச் சம்பவம் நடைபெற்றது. நான்காண்டுகளுக்குப் பிறகு ஈராக்கில், ராணுவப் புரட்சியின் மூலம் பாத் ஆட்சியைக் கைப்பற்றியபோது, சதாம் ஈராக் திரும்பினார்.

ஆனால், எட்டு மாதங்களில் பாத் கட்சியின் ஆட்சி கவிழ்ந்தது, பாத் கட்சியினர் சிறையிலே அடைக்கப்பட்டனர். சதாமும் சிறையிலே அடைக்கப்பட்டார். அவர் சிறையிலே இருந்தபோது, அந்தக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிறகு 1968இல் சதாம் உசேன் மூளையாகச் செயல்பட மீண்டும் புரட்சி நடந்தது. அதில் மீண்டும் பாத் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது. **அகமது ஹாசன் அல் - பஹர்** தலைமையில் மீண்டும்

ஆட்சிக்கு வந்தது. ஹாசன் மைத்துனர்தான் சதாம். அதனால் 1973ஆம் ஆண்டு துணை அதிபராகப் பதவியேற்றார்.

பெயருக்குத்தான் துணை அதிபர் - ஆனால் அதிகாரம் அனைத்தும் சதாம் உசேன் கையில் தான். ஈரானைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான **ஷியா பிரிவு** மக்களை நாடு கடத்தினார். நாட்டில் இருந்த எண்ணெய்க் கிணறுகளை தனது நேரடிக் கண்காணிப்பின்கீழ் கொண்டு வந்தார். அதிபரான தனது மைத்துனரையே கட்டாயப்படுத்தி, உடல் நலக்குறைவு என்று கூறி பதவி விலகச் செய்துவிட்டு, 1979ஆம் ஆண்டு தானே அதிபராகப் பிரகடனப்படுத்திக் கொண்டார். அவர் வைத்தது தான் சட்டம் என்ற நிலைமை, கட்சிக்குள் தனக்கிருந்த எதிர்ப்பாளர்களை யெல்லாம் இவரே கொன்றுவிட்டதாகவும் கூறப்பட்டது.

1979இல் ஈரானில் **அயதுல்லா கோமெனி** ஆட்சியைக் கைப்பற்றினார். 1980இல் செப்டம்பர் 22ஆம் தேதி ஈராக் படை ஈரான்மீது கொடூரமாகத் தாக்குதல் நடத்தியது. ஈரானும் கடுமையாகத் திருப்பித் தாக்குதல் நடத்தியது. இந்தப் போர் எட்டாண்டு காலம் நீடித்தது.




எட்டாண்டு காலம் நீடித்த ஈரான் – ஈராக் போர்!

சதாம் உசேன் அதிபராக இருந்தபோது, 1982ஆம் ஆண்டு **துஜைல்** என்ற நகரத்திற்குச் சென்றிருந்தார். அப்போது அவரைக் கொல்ல அங்கே முயற்சி நடைபெற்றது. ஆனால் அந்தச் சதித் திட்டத்திலிருந்து அவர் தப்பி விட்டார். அந்த நகரத்தில் **ஷியா முஸ்லீம்கள்** அதிகம். அவர்கள்தான் தன்னைக் கொல்ல முயன்றதாக சதாம் உசேன் நினைத்து, தனது சந்தேகத்திற்குரிய 148 ஷியா முஸ்லீம்களை ஒரே நேரத்தில் ஈவு இரக்கமில்லாமல் கொன்று புதைத்தார்.

ஈரானின் தாக்குதலைச் சமாளிக்க ஆயுதங்கள் வழங்குமாறு **அமெரிக்கா, பிரான்ஸ்** மற்றும் **பிரிட்டன்** நாடுகளுக்கு சதாம் உசேன் வேண்டுகோள் விடுத்தார். சதாமின் இரக்கமற்ற தாக்குதலைக் கண்டும் காணாமல் அந்த நாடுகள் ஆயுத உதவிகளை வழங்கின. ஆனால் இரண்டே ஆண்டுகளில் தாங்கள் செய்தது தவறு என்பதை அந்த நாடுகள் உணர்ந்தன.

1990ஆம் ஆண்டு ஆகஸ்ட் 2ஆம் தேதி **குவைத்** நாட்டை சதாம் உசேன் ஆக்கிரமித்தார். அதனால் ஈராக்மீது ஐ.நா.பொருளாதாரத் தடை விதித்தது. 1991ஆம் ஆண்டு ஜனவரி 17ஆம் தேதி ஈராக்மீது அமெரிக்கா உள்ளிட்ட பன்னாட்டுப் படைகள் போர் தொடுத்தன. அமெரிக்கா நாட்டின் நவீன ஆயுதங்கள் குவைத் நாட்டிற்கு உதவியாக இருந்ததால், ஈராக் அந்தப் போரில் தோல்வி அடைந்தது.



அமெரிக்கா குவித்து வைத்துள்ள ஆட்கொல்லி ஆயுதங்கள்!

1995 மற்றும் 2002ஆம் ஆண்டுகளில் சதாம் உசேன், ஈராக் அதிபராகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். குவைத்தை ஆக்கிரமித்ததற்காக, 2002ஆம் ஆண்டு டிசம்பர் 7ஆம் தேதி சதாம் உசேன் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். ஆனால், அதை குவைத் நிராகரித்தது.

இதற்கிடையே, ஈராக் நாட்டில் பேரழிவு ஆயுதங்கள் இருப்பதாக அமெரிக்கா குற்றம் சாட்டியது. இதைக் கண்டறிவதற்காக அனுப்பப்பட்ட ஐ.நா. குழுவினரை நாட்டுக்குள் அனுமதிக்க சதாம் உசேன் மறுக்கவே, ஈராக் மீது அமெரிக்கா 2003ஆம் ஆண்டு மார்ச் 20ஆம் தேதி போர் தொடுத்தது.

10.2.2003 அன்று **''அய்யோ; பாவம் அமெரிக்காவிடம் ஆட்கொல்லி ஆயுதம் எதுவுமில்லை!''** என்ற தலைப்பில் நான் எழுதிய கவிதை இதோ:-

இராக் நாட்டில் இருக்கின்றதாம்
''இம்'' என்றவுடன் பேரழிவு ஏற்படுத்தும்
எண்ணற்ற ஆயுதங்கள்!
இப்படிச் சொல்லி அமெரிக்க நாடு,
ஆடு விழுங்கத் துடிக்கும் ஓநாய்போல்
''ஆ'' வென வாய் பிளந்து நிற்குது காண்!
அய்யோ; பாவம் அமெரிக்காவிடம்
ஆட்கொல்லி ஆயுதங்கள் எதுவுமில்லை!
இராக்கிடம்தான் பேரழிவுப் போர்க் கருவி!
இங்கே ''புஷ்'' வைத்திருப்பதெல்லாமே;
ஜெபமாலை உத்திராட்சம் துளசிமணி!
இந்த ஜெகம் வாழ நினைப்பதல்லால்
வேறு நினைவில்லை!
'அய்நா சபை அனுமதிக்க இயலாது போர்' என
அறுதியிட்டு உறுதியாகச் சொன்னவுடன்
ஆவேசம் வந்த பூசாரி 'ஆடு கோழி ரத்தம்
ஆத்தாளுக்குப் படைக்க வேண்டும் பக்தா
அவற்றை உடனே கொண்டு வா' என்பதுபோல்
அமெரிக்க அதிபர் ஆணையிட்டுக் கேட்கின்றார்;

எண்ணை தேசத்தின்மீது போர் தொடுக்க
மண்ணையாளும் மற்ற நாடுகள்
வரவில்லை யென்றால்
கண்ணை விற்றுச் சித்திரம் வாங்கவா?
விண்ணைக் கிழிக்கும் ஏவுகணைகளை
என்னை நம்பி நானே விடவா என்று,
அன்னை பூமி முழுவதிலும் ஆதிக்கம் தேடும்
அமெரிக்க நாடு விடுகின்ற அறைகூவல்
அமைதி குலைக்கின்ற அர்த்தமற்ற சவால்!
எத்தனை பூவும், பிஞ்சுகளும்,
எத்தனை மலரும், மொட்டுகளும்,
எத்தனை காயும், கனிகளும்,
எத்தனை கொடிகளும், செடிகளும்
வாடி வதங்கி மரணக் குழிகளை
தேடிப் போவதற்கு வழி வகுக்கும்!
வேண்டுமென்று போருக்கு அழைப்பு விடுப்போர்.
காண்பதற்கு மியலாத கற்கோட்டையில்
காவல் பலத்துடன் காத்துக் கொள்வர் தம்முயிரை-
நம் உயிரோ நடுத்தெருவில் பந்தாடப்படும்-
வேலையின்மை யெனும் நெருப்புத் தகிக்கின்ற
வையத்தில்
வேலைக்கு ஆள் தேடும் நிலை தோன்ற
வேலி சூழ் இவ்வுலகின் நாடுகளில்
காலியாகும் மனிதக் கூடுகள் கணக்கில் அடங்கா-
வந்த சண்டை கண்டு விலகுவது வீரமல்ல; அதற்காக
வலுவில் சண்டைக்குப் பாக்கு வைப்பது விவேகமல்ல!
'விவேகபுரி விஞ்ஞானபுரி' என்று அமெரிக்கா
விளம்பரங்கள் செய்தால் மட்டும் போதாது;
விவேகமும், விஞ்ஞானமும் ஆக்கப் பணிகள்
வேர் விட்டு விழுது விட்டுக் கிளைப்பதற்குத் தான்
வேலி, விழுதில், விஷநீர் ஊற்றி
வீழ்த்த அல்ல; உலகை விசாரத்தில் ஆழ்த்த அல்ல!

இந்தக் கவிதை மட்டுமல்ல; 7.4.2003 அன்று ''முரசொலி''யில் கடிதம் ஒன்றும் ''ஈராக் பற்றி எழுதியிருந்தேன். அது வருமாறு:-

உடன்பிறப்பே, பேரழிவு ஏற்படுத்தக் கூடிய ஆயுதங்களை ஏராளமாகக் குவித்து வைத்திருக்கிறது ஈராக் - எனவே அந்த ஆயுதங்களை ஈராக் ஒப்படைக்கத் தயாராக இருக்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்தது அமெரிக்கா.

அதற்கு ஐ.நா. மன்றம் முதலில் தயங்கி; பிறகு தலையசைத்தது - ஐ.நா. செயலர் கோபி அன்னான் அவர்களும் தன் மனதுக்குள் 'இது தேவையா' என்று கேட்டுவிட்டு; அதன் பின்னர், அமெரிக்காவின் சோதனைக்கு ஈராக் இணங்க வேண்டும் என்று கருத்துதிர்த்தார்.

இராணுவத் துறை அதிகாரிகள் என்ன; விஞ்ஞானிகள் என்ன; ஆராய்ச்சியாளர்கள் என்ன; இப்படி பல்வேறு துறையைச் சார்ந்த அமெரிக்கப் பிரமுகர்கள் ஈராக்கிற்குச் சென்று ஆராய்ச்சியில் ஈடுபட்டனர் - சோதனை நடத்தினர். முடிவாக அவர்கள் கூறியது, ''எமது சோதனையில் பேரிழப்புப் போர் ஆயுதங்கள் எதுவும் காணப்படவில்லை'' என்பதாகும். ஆனால், அந்தச் சோதனையின் முடிவு பற்றிய அறிவிப்புகளை அமெரிக்கா நம்பத் தயாராக இல்லை!

எனவே மீண்டும் மீண்டும் அந்தப் பயங்கர ஆயுதங்கள் பற்றியே பேசப்பட்டது.

போதாதற்கு அந்த நேரம் ஈராக்கின் வீர முழக்கங்கள்; அமெரிக்கா மீதும் அந்த நாட்டுடன் இந்தப் போருக்காக இணைந்த நாடுகள் மீதும் வீசப்படும் குண்டுகளாக வெடிக்கத்



பேரழிவு ஆயுதங்களை ஈராக் குவித்து வைத்திருப்பதாக அமெரிக்கா தொடுத்த போர்

தொடங்கின. ''ஒரு நாயைக் கொல்வதாக இருந்தால் கூட, அதற்குப் பைத்தியம் பிடித்து விட்டது என்று காரணம் கூறு'' எனப் பழமொழி இருக்கிறதல்லவா? அந்தப் பழமொழியை அப்படியே பின்பற்றி அமெரிக்கா, ஈராக்கின் வசம் உள்ள பேரழிவுப் போர்க் கருவிகள் குறித்தே தனது குற்றச்சாட்டைத் தொடர்ந்து எடுத்து வைத்து வந்தது.

ரசாயனப் பொருட்களைப் பயன்படுத்தி, உயிர்க் கொல்லிக் கருவிகளைப் போரில் பிரயோகித்து ஈராக் போரிடப் போகிறது - அதனாலேதான் ஈராக்கை அழிக்க விரும்புகிறது அமெரிக்கா என்று உலகம் முழுவதும் செய்தி பரப்பப்பட்டது.

'அப்படியொரு திட்டம் தன்னிடமில்லை' யென்று ஈராக் இடைவிடாது சொல்லி வந்தபோதிலும்; ஐ.நா.மன்றத்தின் அபிப்பிராயத்தையும், பல்வேறு நாடுகளின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் அமெரிக்கா; ஈராக் களத்தில் கால் வைத்து விட்டது.

ஆரம்பப் பள்ளிகளில் **ஆட்டுக்குட்டி ஓநாய்** கதை படித்திருக்கிறோம்.

''நான் குடிக்கும் தண்ணீரை ஏன்
கலக்கினாய்?'' - இது ஓநாய் கேள்வி

''வீண் பழி போடுகிறாய்! நீ வாய்க்காலின்
மேட்டுப் பகுதியிலிருந்து
தண்ணீர் குடிக்கிறாய். நான் கீழ்ப்
பகுதியிலிருந்து குடிக்கிறேன். எப்படிக்
கலக்க முடியும்?'' - இது ஆட்டுக் குட்டி பதில்.

''எந்தப் பகுதியானால் என்ன? நான்
குடிக்கும் நீரை, நீ கலக்குகிறாய்!
கலங்கிய நீரையே நான் குடிக்க வேண்டியுள்ளது.''

''யாரை வேண்டுமானாலும் கேட்போம்.
அவர்கள் நியாயத்தைச் சொல்லட்டும்.
வாய்க்காலில் கீழே தண்ணீர் குடிக்கும்
நான் மேலே நிற்கும் தாங்கள் குடிக்கும்
தண்ணீரைக் கலக்க முடியுமா?''

''அடேய்; அற்பப் பதரே! நான் குடிக்க
வேண்டிய தண்ணீரை இன்றைக்கு நீ
கலக்காமல் இருக்கலாம்- ஆனால்
உன்னுடைய பாட்டனோ பாட்டியோ
அந்தப் பகுதியில் தண்ணீரைக் கலக்கி
யிருக்கலாம் அல்லவா? அதற்கான
தண்டனையை நீ இப்போதே ஏற்பதே முறை.''

என்று சொல்லிக் கொண்டே ஓநாய், ஆட்டுக்குட்டியின்மீது பாய்ந்து, அதை விழுங்கி ஏப்பமிட்டது. இந்தக் கதை இப்போது ஈராக் - அமெரிக்கா நடத்தும் போருக்கும் பொருந்துகிற தல்லவா?

ஏறத்தாழ ஈராக்கை ஏப்பம் விட்ட நிலையில்தான் போரின் போக்கு போய்க் கொண்டிருக்கிறது. ''ஈராக் பேரழிவு ஆயுதங்களை வைத்திருக்கிறது. அதனால்தான் போர் நடத்துகிறோம்'' என்று அமெரிக்கா சொன்னது ஓநாய்க்குக் கிடைத்தது போன்ற ஒரு போலிக் காரணமே தவிர, உண்மைக் காரணமல்ல.

உண்மையிலேயே ஈராக்கிடம் அத்தகைய பேரழிவு ஆயுதங்கள் இருந்தால், அவற்றில் ஒன்றிரண்டையாவது அந்த



சதாம் உசேனின் 12 ஆடம்பர அரண்மனைகளில் இதுவும் ஒன்று!

நாட்டுப் போர்ப் படையினர் பயன்படுத்தியிருப்பார்கள் அல்லவா?

அப்படிப் பயன்படுத்தியதாகவே செய்தி இல்லை - இதிலிருந்தே ஈராக்கிடம் பேரழிவு ஆயுதம் எதுவும் எப்போதும் இல்லை என்பது தெளிவாகிறது.

அத்தகைய அழிவு ஆயுதம் இருந்திருந்தால் ஈராக் இந்த நிலைமையில் அதைப் பயன்படுத்தியிருக்குமே! அந்த ஆயுதம் இல்லை - ஆகவே பயன்படுத்தவில்லை! அழிவுக்கான எந்த ஆயுதத்தையும் ஈராக் பயன்படுத்தாததிலிருந்து, இது அமெரிக்காவும் சில நாடுகளும் போர் நடத்துவதற்காகப் புனையப்பட்ட பொய் என்றே கருத வேண்டியிருக்கிறது. இக்கடிதம் உன் கைக்கு வந்து சேருவதற்குள்ளாக ஈராக் ஒரு முடிவு எடுக்க வேண்டிய நிலைக்கு உள்ளாகலாம், அல்லது மேலும் சில நாட்களாகலாம்.

முடிவாக சதாம் உசேன் சங்கிலியில் பிணைக்கப்படலாம்- அல்லது ஆவி போக்கப்படலாம்- அதற்காக அவர் கவலைப்பட்டுக் கொண்டிருக்கவில்லை. ஆனால் ஈராக் மக்களின் எதிர்கால வாழ்வு எந்த அளவு அஸ்தமித்து விட்டிருக்கிறது என்பதையும் - எத்தனை குடும்பங்கள்



அமெரிக்கப் படையினால் அழிக்கப்பட்ட சதாம் உசேனின் அரண்மனைகளில் ஒன்று!

கணவனையோ - தந்தையையோ - தமையனையோ - தனயனையோ - தாய் தமைக்கைகளையோ - குழந்தை களையோ இழந்து விட்டு குமுறிக் கொண்டிருக்கின்றன என்பதையும் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை.

நெஞ்சில் விழுந்துள்ள அந்தத் துன்பச் சுமையைத் தாங்கும் வலிமை ஒரு சிறிதுமில்லை என்பதுதான் உண்மை.

''போரிடும் உலகத்தை
வேருடன் சாய்ப்போம்''

என்ற புரட்சிக் கவிஞரின் கவிதை வரிகள், என் காதுகளில் ரீங்காரம் செய்து கொண்டிருக்கின்றன.

'அமைதியான வளம் நிறைந்த புதிய ஈராக்கை
அந்த மக்களுக்கு அமைத்துத் தருவோம்' என்று
அமெரிக்காவும் அதன் துணை நாடுகளும்
அறிவித்துள்ளன.

நாளை வரப்போகிற அமைதிக்காக, வளத்திற்காக இன்றுள்ள அமைதியை அழித்து வளத்தை வீழ்த்த வேண்டுமா?

கண்ணை விற்றுச் சித்திரம்
வாங்குகிற கதை போலன்றோ ஆயிற்று!

இதற்குப் பின்னர் ஈராக்கில் கடுமையாகப் போர் நடைபெற்றது. போரின் முடிவாக, 2003 ஏப்ரல் 9ஆம் தேதி ஈராக் நாடு அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் வந்தது. உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக சதாம் உசேன் தப்பித்து ஓடினார். எட்டு மாதங்கள் எங்கிருக்கிறார் அவர் என்றே தெரியவில்லை. ஈராக்கைக் கூட்டுப்படைகள் ஆக்கிரமித்தபின், சதாம் உசேன் மற்றும் அவரது மகன்கள் ஒளிந்துள்ள இடங்களைத் தேடி அழிப்பதில் தீவிர கவனம் செலுத்தப்பட்டது. 2003 ஆம் ஆண்டு ஜூலையில் சதாமின் இரண்டு மகன்களும் கொல்லப்பட்டபோதே, சதாமும் பிடிபட்டு விடுவார் என்று கருதப்பட்டது. எனினும் அவரது இருப்பிடத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

சதாம் உசேன் மூன்று திருமணங்கள் செய்தவர். அவருக்கு ஆறு பிள்ளைகள். அதிபராக இருந்தபோது, சதாம் உசேனுக்கு 12 ஆடம்பர அரண்மனைகள் இருந்தன. அவர் எப்போது எங்கு தங்கியிருக்கிறார் என்பது ரகசியமாக வைக்கப்பட்டு இருந்தது. சதாம் உசேன் புத்தகப் பிரியர். தொலைக்காட்சி பார்ப்பதிலும் அலாதிப் பிரியம் கொண்டவர். அவர் அதிகமாகப் பார்ப்பது அமெரிக்காவின் சி.என்.என். மற்றும் பி.பி.சி. ஸ்கை ஆகிய தொலைக்காட்சிகளைத்தான்.

14.12.2003 அன்று அமெரிக்க அரசின் சார்பில் **''லேடீஸ் அண்ட் ஜென்டில்மேன்! நாங்கள் அவரைப் பிடித்துவிட்டோம். அந்த சர்வாதிகாரி இப்போது ஒரு கைதி!''** என்று பத்திரிகையாளர்களிடையே திரையில் ஒரு காட்சி ஒளிபரப்பப்பட்டு - சிக்குப் பிடித்த தலை -கறுப்பும் வெள்ளையுமான தாடி - புருவத்திலே ரத்தக் காயத்தோடு அந்த உருவத்தைக் காட்டியபோது, இருபது ஆண்டுகளுக்குமேல் ஈராக்கைக் கட்டியாண்ட அதிபர் சதாம் உசேன்தானா அவர் என்பதை பத்திரிகையாளர்களே நம்ப மறுத்தனர். 'எட்டு மாதங்களுக்கு மேல் தலைமறைவாக இருந்த அவர் எப்படி பிடிபட்டார்' என்பதே உலகம் முழுவதும் பேச்சாக இருந்தது.


படையினரிடம் பிடிபட்ட சதாமின் ஆட்கள், சதாமின் உறவினர்கள், சதாமுக்கு எதிராகப் போராடிய குர்த் மக்கள்



சுட்டுக் கொல்லப்பட்ட சதாம் உசேனின் இரண்டு மகன்கள்

மூலமாக சதாமின் இருப்பிடத்தைக் கண்டுபிடிக்க எடுத்த முயற்சி பலன் கொடுத்தது. திக்ரித் நகரிலிருந்து 15 கி.மீ. தூரத்தில் ஒரு பண்ணை வீட்டருகே இருந்த சுரங்க வீட்டிற்குள் இறங்கிய படையினர், அழுக்கடைந்த தோற்றத்துடன் இருந்த அந்த மனிதரை நோக்கி துப்பாக்கி முனையை நீட்டிட - ''நான் சதாம் உசேன் - ஈராக் குடியரசின் அதிபர்'' என்று கம்பீரமாகக் குரல் ஒலித்தது. சதாம் பிடிபட்ட செய்தியை உடனடியாக அமெரிக்கா வெளியிடவில்லை. அவரைப் போன்ற உருவ ஒற்றுமை கொண்ட பல பேர் இருக்கலாம் என்றும், எனவே இவர் உண்மையானவர்தானா என்பதை அறிந்திட டி.என்.ஏ. சோதனை நடத்தினர்.

சதாம்மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் கூறப்பட்டு வழக்கு தொடரப்பட்டது. அதில் முக்கியமானது. துஜைல் நகரத்தில் 148 ஷியா முஸ்லீம்களைக் கொலை செய்தார் என்பதாகும். இந்தப் படுகொலை தொடர்பாக சதாம் உசேன், துணை அதிபராக இருந்த தாகா யாசின் ரமதான், சதாமின் ஒன்றுவிட்ட தலைவருமான பர்சான் இப்ராகிம், இராக்கில் முன்பு இருந்த புரட்சிக் கோர்ட்டின் தலைவர் அவாத் ஹமீத் அல் - பந்தர் உள்ளிட்ட எட்டு பேர்மீது பாக்தாத் நகரில் உள்ள நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. தலைமை நீதிபதி ராப் அப்துல் ரகுமான் தலைமையிலான 5 நீதிபதிகள் கொண்ட தனி நீதி மன்ற பெஞ்ச் சதாம் உசேன் மீதான வழக்கை பத்து மாதங்கள் விசாரித்து - இறுதியாக 5.11.2006 அன்று அந்த வழக்கில் சதாம் உசேனுக்கு மரண தண்டனை விதித்துத் தீர்ப்பு கூறப்பட்டது.



பதுங்குக் குழியிலிருந்து கைது செய்யப்பட்ட சதாம் உசேன்

தீர்ப்பு வழங்கப்படுவதை யொட்டி நீதிமன்றத்தில் அவரை எழுந்து நிற்குமாறு தலைமை நீதிபதி தெரிவித்தார். ஆனால், சதாம் அதைக் கேட்காமல் உட்கார்ந்தே இருந்தார். எனவே இரண்டு நீதிமன்ற அலுவலர்கள் அவரைத் தூக்கி நிறுத்தினார்கள். 'மரண தண்டனை' என்று நீதிபதிகள் கூறியதும், ''இறைவன் மிகப் பெரியவன்! ஈராக் தேசமும் மக்களும் நீடுழி வாழ்க! எதிரிகளுக்கு மரணம் நிகழட்டும்!'' என்று உரத்த குரல் எழுப்பினார்.

தனக்கு மரண தண்டனை விதிக்கப்படும் என எதிர்பார்த்து, அவர் வெளியிட்ட அறிக்கை ஒன்றில், ''எனக்கு மரண தண்டனை விதிப்பது பற்றி எனக்குக் கவலையில்லை. பயம் ஏதும் இல்லாமல் மரணத்தை நான் சந்திப்பேன். கவுரவத்தோடும், பயம் இல்லாமலும் நான் எனது நாட்டுக்காகவும், அரபு நாடுகளுக்காகவும் மரணத்தைத் தழுவுவேன். ஆனால் ஒரு நாள் ஈராக்கில் இருக்கும் அமெரிக்கப் படைகள் தோல்வியடைந்து புறமுதுகிட்டு ஓடும். வியட்நாமில் தோல்வி அடைந்தது போல ஈராக்கிலும் அமெரிக்கப் படைகள் தோல்வி அடையும். இன்னும் சில நாட்களில் ஈராக்கில் ரத்த ஆறு ஓடும். வியட்நாமில் அமெரிக்கப் படைக்கு ஏற்பட்ட தோல்வியை, ஈராக்கில் ஏற்பட விருக்கும் தோல்வி சிறியதாக்கிவிடும். ஏதோ பிக்னிக் போவது போல வந்த அமெரிக்கர்கள் இப்போது அதிக சேதம் அடைந்து தவிக்கிறார்கள். ஈராக்கின் வரலாற்றை வைத்துச் சொல்கிறேன். ஈராக் மக்கள் என்றுமே தங்கள் மீதான ஆக்கிரமிப்பை ஏற்க மாட்டார்கள்'' என்று குறிப்பிட்டிருந்தார்.

அமெரிக்க அதிபர் புஷ் ''ஈராக் மக்களுக்கு நல்ல நாள்'' என்று கூறினார்.

இந்தியா சார்பில் மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜி கருத்து கூறும் போது, ''இந்த வழக்கில் விதிக்கப் பட்ட ஆயுள் மற்றும் மரண




பிடிபட்டது உண்மையான சதாம் உசேனா? அமெரிக்கா நடத்திய டி.என்.ஏ. சோதனை!


தண்டனைகள், வெற்றி பெற்றவர் வைத்ததே சட்டம் என்பது போலத் தோன்றக்கூடாது. நம்பத் தகுந்த சட்ட வழிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். ஈராக் மக்கள் மற்றும் உலக நாடுகள் ஏற்றுக் கொள்ளத் தக்கதாக இருக்க வேண்டும். ஈராக் பிரச்சினைகளுக்கு அமைதித் தீர்வு காண வேண்டும் என்பதில் இந்தியா உறுதியாக இருக்கிறது. இந்தத் தீர்ப்பு ஈராக் மக்களின் துன்பங்களை அதிகரித்து விடாது என்று நம்புகிறோம்'' என்று கூறினார்.

தீர்ப்பை எதிர்த்து சதாம் உசேனும் மற்றும் மூவரும் மேல் கோர்ட்டில் அப்பீல் செய்தார்கள். அதனை ஒன்பது நீதிபதிகள் கொண்ட மேல் கோர்ட் பெஞ்ச் விசாரித்து, 26.12.2006அன்று சதாம் உசேனுக்கு அளிக்கப்பட்ட தூக்கு தண்டனையை உறுதி செய்து, 30 நாட்களுக்குள் தண்டனையை நிறைவேற்ற தீர்ப்பு கூறப்பட்டது.

ஆனால், முப்பது நாட்கள் காத்திருக்கக்கூட பொறுமையில்லை. 30.12.2006 அன்று காலையில் சதாம் உசேனை அவர் தங்கியிருந்த அறையிலிருந்து தூக்குமேடைக்கு அழைத்துச் சென்றனர். தாடியுடன் காணப்பட்ட அவர் கோட்டு சூட்டு அணிந்திருந்தார். தூக்கு மேடைக்குச் சென்றதும், அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது பற்றிய அறிக்கை படித்துக் காட்டப்பட்டது. அது முடிந்ததும், சதாம் உசேனின் கழுத்தில் தூக்குக் கயிறு மாட்டப்பட்டது. தூக்குக் கயிறை மாட்டும் முன், அவரது கழுத்தைச் சுற்றி



பயம் ஏதும் இல்லாமல் மரணத்தை நான் சந்திப்பேன். அமெரிக்க படைகள் ஒருநாள் ஈராக்கை விட்டு தோல்வியடைந்து புறமுதுகிட்டு ஓடும்.



அவசரத்தில் தீர்ப்பு- ஆத்திரத்தில் அநீதி

பட்டை போன்ற கறுப்புத் துணி ஒன்றைப் போட்டு முகத்தை மூட முயன்றனர். ஆனால், அவர் தன்னை அவ்வாறு மூடக் கூடாது என்றும், முகத்தை மூடாமலேயே தூக்கில் போடுமாறும் கூறி, பின்னர் அதிகாரிகள் சைகை செய்ததும், தண்டனை நிறைவேற்றப் பட்டது. தூக்குக் கயிற்றில் தொங்கிய சிறிது நேரத்தில் அவரது உயிர் பிரிந்தது. அப்போது ஈராக்கில் நேரம் காலை 6 மணி - இந்திய நேரம் காலை 8.30 மணி.



மரண தண்டனை மனித வாழ்நாளின் சில பக்கங்களைக் கிழித்து விடுகிறது.

சதாம் தூக்கிலிடப்பட்டதற்கு ஷியா முஸ்லீம்கள் மகிழ்ச்சி தெரிவித்த போதிலும், சன்னி முஸ்லீம்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். கார் குண்டு வெடிப்புகள் நடந்தன. 50க்கு மேற்பட்டவர்கள் பலியானார்கள். நூற்றுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். இந்திய அரசு தனது அதிருப்தியை தெரிவித்தது.

சதாம் உசேனுக்கு விதிக்கப்பட்ட தூக்கு தண்டனை குறித்து நான் 30.12.2006 அன்று எழுதியது.

"மரண தண்டனை
மனித வாழ்நாளின்
சில பக்கங்களைக் கிழித்து விடுகிறது.
பிழை மலிந்த
அப்பக்கங்களுக்குப் பதிலாக
திருத்தப்பட்ட புதிய பதிப்பு
வெளிவர முடியாமலேயே செய்து விடுகிறது.
இது, சாதாரண மனிதருக்கு மட்டுமல்ல;
சர்வாதிகாரிகளுக்கும் பொருந்தக்கூடிய வாசகம்தான்-
சதாம் உசேனுக்கும்கூட!

என்று கடந்த நவம்பர் மாதம் முதல் வாரத்திலேயே (7.11.2006) "முரசொலி"யில் எழுதினேன்.

மறு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு, கைவிடப்பட வேண்டிய அந்த மரண தண்டனை - சதாம் உசேனை மாவீரனாக்கிவிட்டது. அவர் ஆட்சியில் மலைபோல மனித உடல்கள் குவிக்கப்பட்டதே என்பர்; கலிங்கத்துப் போரிலே கணக்கற்ற உயிர்களைப் போக்கிய பிறகுதானே **அசோகர்** பௌத்தரானதாக வரலாறு? அந்த **அசோகச் சின்னம்** தானே இந்தியாவின் கீர்த்தியைப் பாடிக் கொண்டிருக்கிறது?



ஈராக் கொடியை இறக்கி விட்டு அமெரிக்கக் கொடியை ஏற்றும் அமெரிக்க ராணுவம்

போரில் தோற்ற போரஸ் மன்னனிடம் **அலெக்ஸாண்டர்** நடந்து கொண்ட முறையை; சதாம் உசேன் பிரச்சினையில் அமெரிக்கா பின்பற்றியிருக்கலாம். வெறி குணத்தைக் காட்டி வெகு மக்களின் வெறுப்புக்கு ஆளாகியிருக்க வேண்டியதில்லை. **"அவசரத்தில் தீர்ப்பு - ஆத்திரத்தில் அநீதி!"**

"எது வந்தாலும் வரட்டும் - அந்நியருக்கு அடி பணியோம்" என்ற சுதந்திர தாகத்துடன் போரிட்ட ஈராக் நாட்டைப் பற்றியும் - அந்த நாட்டிற்காக தன் வாழ்நாள் முழுவதும் பாடுபட்ட அதிபர் சதாம் உசேன் தண்டனையுடன் முடிந்தும் முடியாத அந்த வரலாற்றை தற்காலிகமாக நிறுத்திவிட்டு, மீண்டும் 96ஆம் ஆண்டிற்கு அடுத்த அத்தியாயத்தில் வருகிறேன்.

8. காவியக் கருவூலம்

தமிழ்ப் பகைவர்களின் உள்ளத்தை மாய்க்கின்ற அறிவுக் கருவூலம்தான் கலைஞரின் எழுத்தோவியங்கள்!
-பேராசிரியர்


10.6.1996 அன்று, கவிப்பேரரசு தம்பி **வைரமுத்து** எழுதிய **''தண்ணீர்தேசம்''** நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டேன். அந்த நூலின் முதற்படியை என்னிடமிருந்து பெற்றுக் கொண்டவர்கள் அளித்த ஒரு லட்சத்து மூன்று ரூபாயை, தம்பி வைரமுத்து என் கையிலே கொடுத்து, அவருடைய சொந்தக் கிராமத்தில் என்னுடைய ஆரூயிர் நண்பர் **கவிஞர் கண்ணதாசன்** பெயரால் ஒரு நூல் நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். காரைக்குடியில் கண்ணதாசனுக்கு **நினைவாலயம்** கட்டிய கை என்னுடைய கைதான் என்பது வைரமுத்துவிற்கு நன்றாகத் தெரியும். ஆனால், அதன் பிறகு ஆட்சி மாறி, காரைக்குடியில் அமைக்கப்பட்டுள்ள நினைவாலயத்தை, சிவகங்கையிலே இருந்தவாறே திறந்து வைத்தது வேறொரு கை என்பதும் அவருக்குத் தெரியும்.

எனவே, தன்னுடைய நூலுக்காக தரப்பட்ட ரூபாயை என்னிடம் கொடுத்து, நூலகம் ஒன்றினை அரசின் சார்பிலே, அவரது சொந்த ஊரிலே அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அவரது விருப்பம் நிறைவேறும் வண்ணம், நானே பின்னர் அந்த ஊருக்குச் சென்று அந்த நூலகத்தையும் திறந்து வைத்தேன்.

அந்த விழாவில் தம்பி வைரமுத்துவின் குடும்பத்தினர் நான்கு தலைமுறையினர் கலந்து கொண்டு எனக்கு மாலை

அணிவித்தனர். முதலில் வைரமுத்துவின் பாட்டனார் **துரைசாமித் தேவரும்,** அடுத்து இரண்டாவது தலை முறையைச் சேர்ந்த வைரமுத்துவின் தந்தை **ராமசாமித் தேவரும்,** மூன்றாவது தலைமுறை சார்பில் வைரமுத்துவும், தொடர்ந்து வைரமுத்துவின் இரண்டு புதல்வர்களும் நான்காவது தலைமுறை சார்பிலும், எனக்கு மாலை அணிவித்தனர். சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருந்த **ப.க.பொன்னுசாமி,** இயக்குநர் **பாரதிராஜா,** முன்னாள் துணைவேந்தர் **வ.செ.குழந்தைசாமி,** எழுத்தாளர் **சிவசங்கரி,** இயக்குநர் **பாலச்சந்தர்** ஆகியோர் விழாவிலே கலந்து கொண்டனர்.

1996ஆம் ஆண்டு கவிப்பேரரசு எழுதிய நூல்களின் வெளியீட்டு விழா பற்றி இந்த அத்தியாயத்தில் நான் எழுதி, இந்தக் கட்டுரை **''முரசொலி''**யில் வெளிவரும் இதே நாளில், 12 ஆண்டுகளுக்கு முன்பு, அந்த விழாவிலே கலந்து கொண்டு நான்காம் தலைமுறை சார்பில் எனக்கு மாலை அணிவித்த, வைரமுத்துவின் அருமைச் செல்வன் டாக்டர் **மதன் கார்க்கி**யின் மணவிழா என்னுடைய தலைமையிலே நடைபெறுகிறது என்பது எவ்வளவு பொருத்தமான செய்தி.



மூன்றே மாதங்களில் 8 பதிப்புகளை வெளியிட்டு, தி.மு.கழக அறக்கட்டளைக்கு 37 இலட்சம் ரூபாய் வழங்கிய நூல், எனக்குத் தெரிந்தவரை ''தொல்காப்பியப் பூங்கா''தான்!

பொதுவாக தம்பி வைரமுத்துவின் இல்லத்து நிகழ்ச்சிகள், அது புத்தக வெளியீட்டு விழாக்களாக இருந்தாலும் சரி - பிறந்தநாள் விழாக்களாக இருந்தாலும் சரி - இல்லத்து மண விழாக்களாக இருந்தாலும் சரி - அதிலே எனக்கு முக்கியமான பங்குண்டு என்பதை நிரூபிக்கும் செயல்களாக இந்த இரண்டு நிகழ்ச்சிகளும் அமைந்துள்ளன.

மன்னர்கள் ஆட்சிக் காலத்தில், புலவர் பெருமக்கள் நூல்களை எழுதுவார்கள் - பாடல்களை இயற்றுவார்கள் - அவற்றை எல்லாம் மன்னர்கள் முன் அரங்கேற்றம் செய்வார்கள். அந்த முறை கொஞ்சம் கொஞ்சமாக மாறி, இப்போதெல்லாம் புத்தகங்களை எழுதுபவர்கள் அதனை வெளியிடும் விழாவினை ஏற்பாடு செய்து, அதிலே ஒருவர் வெளியிட, வேறு சிலர் பெற்றுக் கொள்ள, அந்தப் புத்தகங்களில் உள்ள கருத்துக்கள் பற்றி பலர் விமர்சிக்க, இறுதியாக புத்தகம் எழுதியவர் ஏற்புரையாற்ற என்ற முறை கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அந்த வரிசையில் நான் எழுதிய சில முக்கிய புத்தகங்களின் வெளியீட்டு விழாக்களும், அதுபோல் மற்றவர்கள் எழுதிய புத்தகங்களை நான் வெளியிடும் விழாக்களும் என்று பல உண்டு. அவற்றில் ஒரு சில நிகழ்ச்சிகளை நினைவுபடுத்த முயலுகிறேன்.

30.4.1975 அன்று நடைபெற்ற **''நெஞ்சுக்கு நீதி''** முதல் பாகத்தின் வெளியீட்டு விழாவே சுவாரஸ்யமான ஒன்று. இரண்டாம் பாகத்தின் முதல் அத்தியாயத்திலேயே அதைப் பற்றி விவரமாக எழுதியிருக்கிறேன்.

19.5.1983 அன்று, அதாவது சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு, பேராசிரியர் **டாக்டர் வ.சுப.மாணிக்கம்** தலைமையில், நான் எழுதிய **''தென்பாண்டிச் சிங்கம்''** நூல், பேராசிரியர் அவர்களால் வெளியிடப்பட்ட, பழம் பெரும் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான **உ.சுப்பிரமணியம்** பெற்றுக் கொண்டார்.

அந்த விழாவில் எனது ஏற்புரையில், ''உலகப் புகழ்பெற்ற பரிசுகளைவிடத் தமிழ் வளர - தமிழ்ச் சமுதாயம் வளரப் பாடுபடும் தமிழ்ச் சான்றோர்களின் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களே என் நெஞ்சுக்கு நிறைவு தருபவை!'' என்று குறிப்பிட்டேன்.

17.2.1985 அன்று, நான் எழுதிய **''குறளோவியம்''** நூல் வெளியீட்டு விழா, **பேராசிரியர்** அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

26.8.1987 அன்று, நான் எழுதிய **''சங்கத் தமிழ்''**நூல் வெளியீட்டு விழா மதுரையில் நடைபெற்றது. விழாவில் நானும் ஏனைய சான்றோர் பெருமக்கள் பலரும் கலந்து கொண்டோம்.

அந்த விழாவில் பேராசிரியர் அவர்கள், ''தமிழினம் தன்னை உணர்ந்த தினமாக, மாறினார், பின்னர் வீழ்ச்சியே இல்லை - வீழ்ச்சியற்ற மறுமலர்ச்சியைத் தோற்றுவிக்கும் சிறந்த உருவிலே கலைஞரின் ''சங்கத் தமிழ் விளங்குகிறது'' என்று பாராட்டியதும், ''குடத்துக்குள் விளக்காக இருக்கும் நம்முடைய மொழி உணர்வும், இன உணர்வும் தமிழ்ப் பேரறிஞர்கள் - சான்றோர்கள் - வெளியிடும் கருத்துக்களின் அடிப்படையில் கோபுரத்தின்மேல் ஒளிவிடும் சுடர் விளக்காக மாற வேண்டும்!' என்று ஏற்புரையில் நான் குறிப்பிட்டதும் நினைவுக்கு வருகிறது.

1988ஆம் ஆண்டு, டிசம்பர் திங்களில் அனைத்துக் கட்சிகளும் பொதுத் தேர்தலுக்கான பணியில் ஈடுபட்டிருந்த நேரத்தில் 17.2.1988 அன்று, நான் எழுதிய **''பொன்னர் - சங்கர்''** நூல் வெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றது. பொதுச் செயலாளர் **பேராசிரியர்** அவர்கள் நூலினை வெளியிட, **டாக்டர் நன்னன்** அவர்கள் தலைமையில் - முதல் பிரதியை டாக்டர் வா.செ.குழந்தைசாமி அவர்கள் பெற்றுக் கொண்டார்.



கவியரசருக்கு கவிப்பேரரசு அளித்த காணிக்கை! என்னிடம், தன் சொந்த செலவில் கண்ணதாசன் பெயரால், தன் ஊரில் ஒரு நூலகம் அமையுங்கள் என்றார், வைரமுத்து!



உலகப் புகழ்பெற்ற பரிசுகளை விட, தமிழ்ச் சான்றோரின் வாழ்த்துக்களே என் நெஞ்சுக்கு நிறைவு தரும்!

அந்த விழாவில், ''வணங்கிப் போற்றுகின்ற அண்ணன் மார்களின் வீரவரலாறு எதிர்காலத் தமிழகத்திற்கு - தமிழர்களுக்கு - தமிழ் இனத்திற்குப் பயன்படும் என்ற நம்பிக்கையில்தான் இந்தப் பொன்னர் - சங்கர் உருவானது!... தன் குழந்தையை இழந்தாவது, மற்ற குழந்தைகளைக் காப்பாற்றத் துணிந்த இக்கதைப் பாத்திரமான ராக்கியண்ணனின் விட்டுக் கொடுக்கும் பரந்த மனப்பான்மை நம் அனைவருக்கும் தேவை!' என்று நான் குறிப்பிட்டதை மறக்க இயலாது.


நான் எழுதிய **''பாயும் புலி பண்டாரக வன்னியன்''** நூல் வெளியீட்டு விழா, *20.5.1991* அன்று கலைவாணர் அரங்கில் முன்னாள் தலைமை **நீதிபதி மு.மு. இஸ்மாயில்** அவர்கள் தலைமையில் நடைபெற்றது. முதல் பிரதியை முன்னாள் தமிழ்நாடு தேர்வாணைக் குழுத் தலைவர் **ஜே.ஏ.அம்பா சங்கர்** பெற்றுக் கொண்டார்.

நான் எழுதிய **''கலைஞரின் கவிதைகள்''** என்ற நூலின் நான்காம் பதிப்பு வெளியீட்டு விழா சென்னை ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் *24.3.1995* அன்று **டாக்டர் நன்னன்** அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அந்த விழாவில், ''எழுத்துத் தணிக்கை - நாடகத்திற்குத் தடை - என்று என் வாழ்க்கையிலும் எத்தனையோ சோதனைகள், வேதனைகள் - அந்த வேதனைகள்தான் என் கைக்கு வேல்களாயின!'' - என்று நான் ஏற்புரையில் பேசியது குறிப்பிடத்தக்கது.

15.4.1996 அன்று, நான் பல நாட்கள் ஆய்வு செய்து எழுதிய **''திருக்குறள் உரைநூல்''** வெளியீட்டு விழா சென்னை

ராஜேஸ்வரி மண்டபத்தில் நடைபெற்றது. பொதுச் செயலாளர் பேராசிரியர் தலைமையில், பேராசிரியர் அ.ச.ஞான சம்பந்தனார் நூலினை வெளியிட, திருமதி ராஜேஸ்வரி அம்மையாரும், நல்லி குப்புசாமி செட்டியாரும், நூலினைப் பெற்றுக் கொண்டார்கள். மக்கள் தலைவர் மூப்பனார், பீட்டர் அல்போன்ஸ், தமிழ்க் குடிமகன், திருமதி சக்தி பெருமாள், முனைவர் நன்னன், கவியரசு வைரமுத்து ஆகியோர் என்னைப் பாராட்டி பேசினர். அந்த விழாவிற்கு காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயேந்திர சரஸ்வதி வாழ்த்துச் செய்தி ஒன்றை அவராகவே எழுதி அனுப்பியிருந்தார்.



குடத்துக்குள் விளக்காக இருக்கும் எமது மொழி உணர்வும், கோபுரத்தின் மேல் ஒளிவிடும் சுடர்விளக்காக மாற வேண்டும்!

''திருக்குறளின் மூலம் அடியாக நான் - இரண்டாவது அடியாக மூப்பனார் - நாங்கள் இருவரும் இப்படி ஈரடியாக இருக்கிற காரணத்தால்தான், இந்த விழாவிலே அவர் கலந்து கொண்டார்!'' - என்று நான் ஏற்புரையிலே குறிப்பிட்டது என் நினைவுக்கு வருகிறது.

8.10.1997 அன்று சென்னை ராஜா முத்தையா மன்றத்தில் - ''நெஞ்சுக்கு நீதி'' மூன்றாம் பாகத்தின் (முதல் பதிப்பு) இரண்டாம் பாகத்தின் (மூன்றாம் பதிப்பு) முதல் பாகத்தின் (ஐந்தாம் பதிப்பு) நூல்கள் வெளியீட்டு விழா நடைபெற்றது. இனமானப் பேராசிரியர் அவர்கள் தலைமையேற்று அந்த நூல்களை வெளியிட, திரு.டி. செங்கல்வராயன் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

இந்த விழாவில் பேராசிரியர் அவர்கள் தலைமை உரையில், ''எதிர்காலத்தில் இந்த நாடு பயன்படுத்திக் கொள்ள வேண்டியவர் கலைஞர்!'' என்றார், அண்ணா! வருங்காலச் சமுதாயத்தை - அரசியலைத் தெளிவாகப் படம் பிடித்துள்ள



தன் குழந்தையை இழந்தாலும், மற்றக் குழந்தைகளைக் காப்பாற்றத் துணியும் "பொன்னர் - சங்கர்" பாத்திரமான ராக்கியண்ணனின் பரந்த மனப்பான்மை நம் அனைவருக்கும் தேவை!


"நெஞ்சுக்கு நீதி" திராவிட இயக்கக் கொள்கைகளைப் பாதுகாக்கும் கேடயமாகும்!'' என்று குறிப்பிட்டதையும் - "நெஞ்சுக்கு நீதி"யை வாழ்த்தியதை ஊட்டச் சத்தாக ஏற்றுக் கொண்டு வாழ்வேன் - உழைப்பேன்!'' என்று ஏற்புரையில் நான் சொல்லியதையும் மறக்க முடியுமா?

நான் எழுதிய **"மீசை முளைத்த வயதில்..."** என்ற நூலின் வெளியீட்டு விழா 2.6.2002 அன்று, கலைஞர் அரங்கில் நடைபெற்றது. ஏற்புரை வழங்கிய நான், "திராவிட முன்னேற்றக் கழகம் பனங்காட்டு நரி -சலசலப்புக்கு அஞ்சாது! யாரோ ஓரிருவர் அடக்குமுறைக்கு அஞ்சலாம் - அதற்காக கழகப் பாசறையே கோழைகளின் பாசறை என்று கருதுபவன் பைத்தியக்காரன்! சோதனைகளையும் - வேதனைகளையும் வென்றெடுக்கும் ஆற்றலும் - திறமையும் - வலிவும் கழகத்திற்கு உண்டு!'' என்று குறிப்பிட்டேன்.

நான் எழுதிய பெரிய நூல்களுள் அதிகப் பதிப்புகள் குறைந்த காலத்தில் விற்றுத் தீர்ந்தது என்றால், அது "தொல்காப்பியப் பூங்கா" நூல் தான். நான் அதனை எழுதத் தொடங்கியது. 1.9.2002 அன்று கோவாவில். நூலை நிறைவு செய்தது 3.10.2002 ஆமாம், 33 நாட்களில் நான் எழுதிக் குவித்ததுதான் 532 பக்கங்களைக் கொண்ட அந்தக் காப்பிய நூல். அந்நூல் இரண்டே மாதங்களில் புத்தகமாகி - முதல் பதிப்பு வெளியீட்டு விழா 11.1.2003 அன்று சென்னையில் நடைபெற்றது. அதில் பொதுச் செயலாளர் **பேராசிரியர்**, மத்திய அமைச்சர் **டி.ஆர்.பாலு**, தவத்திரு **குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்**, முனைவர் **தமிழண்ணல்**,

முனைவர் சாலமன் பாப்பையா, முனைவர் நன்னன், கவிக்கோ அப்துல் ரகுமான், பெருங்கவிஞர் வாலி, முனைவர் அவ்வை நடராசன் ஆகியோர் கலந்து கொண்டனர். முதல் பதிப்பில் அச்சிடப்பட்ட 3000 புத்தகங்களும் ஒரே மாதத்தில் விற்றுத் தீர்ந்தன.

''தொல்காப்பியத்தைப் பற்றி 100 நூல்களாவது எனது நூலகத்தில் உள்ளன. அவ்வளவையும் படித்து - ஆய்ந்து - தெளிந்து - அதற்குப் பிறகுதான் - அதில் உள்ள கடுமையான சொற்களை எளிமையாக்கி - எழிலார்ந்த நடையிலே 'தொல்காப்பியப் பூங்கா'வை உருவாக்கினேன்!'' என்று அந்த விழாவில் என் அனுபவத்தை விளக்கினேன்.



பெண்ணின் பெருமை - நாட்டுப் பற்று- இன உணர்வு தமிழ்ப் பண்பாடு அத்தனையும் தெவிட்டாத தேன் தமிழில் அமைந்ததுதான் ''பாயும் புலி பண்டாரக வன்னியன்''

''தமிழ்ப் பகைவர்களின் உள்ளத்தை மாய்க்கின்ற அறிவுக் கருவூலம்தான் இந்தத் தொல்காப்பியப் பூங்கா!'' என்று பேராசிரியர் கூறிய புகழுரை என் நெஞ்சை விட்டு அகலவே அகலாது!

உடனடியாக இரண்டாம் பதிப்பு தயாரிக்கப்பட்டு, அடுத்த மாதமே, அதன் வெளியீட்டு விழா மதுரையில் 23.2.2003 அன்று நடைபெற்றது. மு.க.அழகிரி முயற்சி எடுத்து நடைபெற்ற அந்த விழாவில், அச்சிட்ட புத்தகங்கள் அனைத்தும் ஒரே நாளில் விற்றுத் தீர்ந்துவிட, அடுத்து அச்சிட்டு வழங்குமாறு கேட்டு, பலர் பணத்தை முன்னதாகவே கொடுத்து பதிவு செய்து கொள்ள, பிறகு 3ஆம் பதிப்பை அவசர அவசரமாக ஒரே வாரத்தில் அச்சிட்டு, மதுரையில் பதிவு செய்து கொண்டவர்களுக்கெல்லாம் மு.க.அழகிரி மூலமாக நூல் வழங்கப்பட்டது.



என் வாழ்க்கையில் எத்தனையோ வேதனைகள்- சோதனைகள் அந்த வேதனைகள்தான் என் கைகளுக்கு வேல்களாயின!

''எவ்வளவு கவலை - துன்பங்கள் - தொல்லைகள் வந்தாலும் - எழுத்திலே சுவை குறையாத அந்தச் சூழ்நிலை எனக்கு எப்போதும் உண்டு! அது ஒன்றுதான் நான் பெற்ற அழியாத செல்வம்! அதை யாராலும் பறிக்க முடியாது! அது இருக்கும்வரை எனக்குத் தோல்வி இல்லை- துன்பமும் இல்லை!... நான் ஒரு படைக்குத் தலைவனாக இருந்தாலும், ''தொல்காப்பியப் பூங்கா'' போன்ற படைப்புகள் அந்தப் படைக்குரிய போர்க் கருவிகளாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் எழுது கிறேன்!'' என்று நான் அந்த விழாவில் குறிப்பிட்டது என் நினைவுக்கு வருகிறது.

நான்காம் பதிப்பு திருச்சி மாநகரில் **கே.என்.** நேரு அவர்களின் முயற்சியால், *22.3.2003* அன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அங்கும் அச்சிடப்பட்ட புத்தகங்கள் வாங்க வந்தவர்களுக்குப் போதாமல், ஐந்தாம் பதிப்பு, ஆறாம் பதிப்பு என்று புத்தகங்களைப் பிறகு அச்சிட்டு, திருச்சி விழாவிலே பதிவு செய்து கொண்டோருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

திருச்சி விழாவின் இறுதியிலே நான் பேசியது இப்போதும் என் நினைவில் இருக்கிறது. ''தோல்வி என்னைத் தொட்டதுண்டு - நான் தோல்வியைத் தொட்டதில்லை - அதன் காரண மாகத்தான் தமிழைக் காப்பாற்றப் போராட வேண்டிய - வாதாட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது! ஆன்றோர் - சான்றோர் வழங்கும் உற்சாக உரைகளால் ஊக்கம் பெற்று, தமிழுக்கு - தமிழர்களுக்கு - தமிழ் நாட்டிற்கு என்றென்றும் தொடர்ந்து உழைப்பேன்!' என்று குறிப்பிட்டேன்.

20.4.2003 அன்று **வேலூர்** நகரத்தில் ''தொல்காப்பியப் பூங்கா'' வின் 7ஆவது பதிப்பினை தம்பி **துரைமுருகன், காந்தி, முகமது சகி** ஆகியோரின் முயற்சியினால் நடைபெற்ற விழாவில் வெளியிட்டேன். திருமண மண்டபம் ஒன்றில், காலை 10 மணியளவில் அமர்ந்த நான், 12.30 மணிவரை வரிசையாக வந்தவர்களுக்கெல்லாம் புத்தகங்களை வழங்கிக் கொண்டே இருந்தேன்.


26.4.2003 அன்று, **கோவை** மாநகரில், மாவட்டக் கழகச் செயலாளர் **பொங்கலூர் பழனிச்சாமி** எடுத்துக் கொண்ட முயற்சியின் காரணமாக, ''தொல்காப்பியப் பூங்கா'' எட்டாம் பதிப்பு வெளியீட்டு விழா நடைபெற்றது.

காலை 10 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை இடைவிடாமல் வரிசையாக வந்தவர்களுக்கு நூல்களை வழங்கிக் கொண்டே இருந்தேன். பதிப்பாளர் கொண்டு வந்த அனைத்து நூல்களும் விற்றுத் தீர்ந்தன. ஆனால் வரிசையில் நின்றவர்கள் வந்து கொண்டே இருந்தனர்.

''தொல்காப்பியப் பூங்கா'' இந்த அளவிற்குத் தமிழகத்தில் விற்ற பெருமை மட்டுமல்ல; அதற்கு மற்றுமோர் பெருமையும் உண்டு. கழகத்தின் உடன்பிறப்புகள் நலிந்த நிலையில் உள்ளோருக்கு அவர்களின் பிள்ளைகளின் மேல்நிலைக்




திருக்குறளின் முதல் அடியாக நான் - இரண்டாவது அடியாக மூப்பனார் - நாங்கள் இருவரும் ஈரடியாக வாழ்கிறோம்!




"நெஞ்சுக்கு நீதி"யைப் பற்றி அறிஞர் பெருமக்கள் வாழ்த்தியவைகளை ஊட்டச் சத்தாக ஏற்றுக் கொண்டு நான் வாழ்வேன் - உழைப்பேன்!

கல்விக்காகவும், உடல் நலிவுற்ற - வசதியற்ற கழகத் தொண்டர்களின் மருத்துவச் செலவிற்காகவும் உதவி செய்திட - திராவிட முன்னேற்றக் கழக **அறக்கட்டளை** ஒன்றினை நிறுவி, அதன் சார்பில் நிதி உதவி அளிக்கப்படும் என்று நான் அறிவித்து, அதற்காக மதுரையில் "தொல் காப்பியப் பூங்கா" இரண்டாம் பதிப்பு வெளியீட்டு விழாவின் போது வசூலான தொகையில் பத்து இலட்சம் ரூபாயை அறக்கட்டளைக்கு வழங் கினேன். பிறகு, திருச்சியில் நடை பெற்ற நான்காம் பதிப்பு வெளியீட்டு விழாவின் போது வசூலான தொகையில் ஒன்பது இலட்ச ரூபாயை தி.மு.கழக அறக்கட்டளைக்கு வழங்கினேன். வேலூரில் 7ஆம் பதிப்பு வெளியீட்டு விழாவிலே வசூலான தொகையில் மூன்று இலட்ச ரூபாய் அறக்கட்டளைக்கு வழங்கப்பட்டது. கோவையில் நடைபெற்ற 8ஆம் பதிப்பு வெளியீட்டு விழாவிலே வசூலான தொகையில் பதினைந்து இலட்சம் ரூபாய் தி.மு.கழக அறக்கட்டளைக்கு வழங்கப்பட்டது. இந்த ஒரு நூலின் விற்பனையிலிருந்து மட்டும் 37 இலட்சம் ரூபாய் தி.மு.கழக அறக்கட்டளைக்கு ஒதுக்கப்பட்டது.

எனக்குத் தெரிந்த வரையில், ஒரு நூல் வெளியிட்ட மூன்றே மாதங்களில் எட்டு பதிப்புகள் வெளியிடப்பட்டு, அதன் மூலம் கிடைக்கப்பட்ட நிதியிலிருந்து, கழகத்தின் அறக்கட்டளைக்கு 37 இலட்சம் ரூபாய் வழங்கும் அளவிற்குப் புத்தகங்கள் விற்றன என்ற சரித்திரம், வேறு எந்த நூலுக்கும் தமிழகத்திலே இருந்ததாகக் கேள்விப்பட வில்லை. இதுவரை 13 பதிப்புகள் "தொல்காப்பியப் பூங்கா" நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.





பல நேரங்களில், தமிழினம் பெற வேண்டியதை இழந்துள்ளது, அதை உணர்ந்து, துரோகம் தலையெடுக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும், ஏனெனில், துரோகம் மொத்த சமுதாயத்தையே வீழ்த்திவிடும்!

11.7.2004 அன்று பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் தலைமையில், நான் எழுதிய **''கவிதை மழை''** நூலும், **''தாய்''** காவியம் நூலும் வெளியீட்டு விழா நடை பெற்றது. ''கவிதை மழை'' நூலை கவிக்கோ **அப்துல் ரகுமான்** வெளியிட, மத்திய அமைச்சர் **டி.ஆர்.பாலு** முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார். **''தாய்''**காவியம் நூலை கவிப்பேரரசு வைரமுத்து வெளியிட, மத்திய அமைச்சர் **ஆ.இராசா** முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

2.6.2005 அன்று பொதுச் செயலாளர் **பேராசிரியர்** அவர்கள் தலைமையில் நான் எழுதிய **''வான்புகழ் கொண்ட வள்ளுவம்''** நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. முனைவர் **வா.செ.குழந்தைசாமி** அவர்கள் நூலினை வெளியிட, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் **வை.கோ.** முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார். **துரைமுருகன்** வரவேற்புரையாற்ற, கவிப்பேரரசு **வைரமுத்து** வாழ்த்துரை வழங்கினார். **கனிமொழி** நூல் அறிமுக உரையாற்றினார். இறுதியாக நான், எனது ஏற்புரையிலே ''திருவள்ளுவர் - அண்ணா என்ற இரண்டு சொற்கள் என் ஊனோடும், குருதியோடும், உயிர் மூச்சோடும்

கலந்து விட்ட சொற்கள்!'' என்று குறிப்பிட்டதை நினைவு கூர்கிறேன்.

20.8.2005 அன்று, கலைஞர் அரங்கத்தில் நீதியரசர் **எஸ்.ரத்தினவேல் பாண்டியன்** தலைமையில், நான் தமிழில் எழுதி ஏற்கனவே வெளியிடப் பட்ட **''தாய்''** காவியத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பு நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. மக்களவைத் தலைவர் **திரு.சோம்நாத் சாட்டர்ஜி** அவர்கள் நூலினை வெளியிட்டு சிறப்புரை யாற்றினார். மத்திய நிதி அமைச்சர் **ப.சிதம்பரம்** அவர்கள் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டு உரையாற்றினார்.

2.6.2006 அன்று, நான் எழுதிய **''சிந்தனையும் செயலும்''** மற்றும் **''காலப்பேழையும் கவிதைச் சாவியும்''** ஆகிய இரண்டு நூல்கள் வெளியீட்டு விழா பொதுச் செயலாளர் **பேராசிரியர்** அவர்கள் தலைமையில் நடைபெற்றது. **''சிந்தனையும் செயலும்''** என்ற நூலினை தமிழர் தலைவர் மானமிகு **கி.வீரமணி** அவர்கள் வெளியிட, காவியக் கவிஞர் வாலி முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார். **''காலப்பேழையும் கவிதைச் சாவியும்''** நூலினை தோழர் **தா.பாண்டியன்** வெளியிட, முதல் நூலினை முனைவர் அவ்வை நடராசன் பெற்றுக் கொண்டார். மத்திய அமைச்சர் **ஆ.இராசா, கோ.க. மணி, தமிழருவி மணியன், டி.கே. ரெங்கராஜன்** ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். **கனிமொழி** வரவேற்புரையாற்றினார். நான் ஏற்புரை ஆற்றினேன்.

எனது ஏற்புரையிலே, ''துரோகத்தால் பல நேரங்களில் தமிழினம் பெற வேண்டியதை இழந்துள்ளது - அதை உணர்ந்து துரோகம் தலையெடுக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும் - ஏனெனில் துரோகம் மொத்த சமுதாயத்தையே வீழ்த்திவிடும்!'' என்று குறிப்பிட்டேன்.

1957ஆம் ஆண்டு, நான் தமிழகச் சட்ட மன்றத்திற்குச் சென்றது முதல், ஆற்றிய உரைகளையெல்லாம் தொகுத்து நூலாக வெளியிட முடிவு செய்து, 2007ஆம் ஆண்டு

நடைபெற்ற சட்டமன்றப் பொன்விழாவின்போது **''கலைஞரின் சட்டமன்ற உரைகள்''** என்ற தலைப்பில் 6 பாகங்கள் நாடாளுமன்ற அவைத் தலைவர் மேதகு **சோம்நாத் சாட்டர்ஜி** அவர்களால் வெளியிடப்பட்டது. எஞ்சிய 6 பாகங்கள் அச்சிடப்பட்டு வெளியிடப்படத் தயாராக என்னுடைய தேதிக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றன.

தமிழகத்தில் இருக்கிற - இருந்த சிறந்த பத்திரிகை ஆசிரியர்களில் ஒருவர், **''இதயம் பேசுகிறது''** இதழின் **ஆசிரியர் மணியன்**. அதற்கு முன்பு **''ஆனந்த விகடன்''** இதழில் நீண்ட நாட்களாகப் பணியாற்றியவர். அடிக்கடி பயணக் கட்டுரைகள் எழுதி, பின்னர் அதனை நூலாக வெளியிடுவார். 1989ஆம் ஆண்டு அமெரிக்கா பற்றி மணியன் எழுதிய **''பயணக் கட்டுரை''** நூலினை எழுத்தாளர் **திரு.வாசவன்** தலைமையிலே நான் வெளியிட்டு உரையாற்றினேன்.

9.3.1991 அன்று, மதுரை ராஜா முத்தையா மன்றத்தில் கவிப்பேரரசு வைரமுத்து எழுதிய 4 நூல்களும், அவரது துணைவியார் பொன்மணி வைரமுத்து எழுதிய ஒரு நூலும் வெளியிடப்பட்ட விழா சிறப்பாக நடைபெற்றது. ஐந்து நூல்களையும் நான் வெளியிட்டு வாழ்த்துரை வழங்கினேன்.

5.2.1993 அன்று **கே. சுப்பு** அவர்கள் **''நக்கீரன்''** வார இதழில் தொடர்ந்து எழுதிய **''இங்கே ஒரு இட்லர்''** தொடர் கட்டுரைகளின் **இரண்டாவது பாகம்** வெளியிடும் விழா நடைபெற்றது. விழாவிற்கு நான் தலைமையேற்று நூலினை வெளியிட, பத்திரிகையாளர் **சாவி** முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

''சர்வாதிகார இட்லர் ஆட்சிதான் தமிழகத்தில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது - இந்த ஆட்சியைப் போக்கிட வேண்டுமானால், மக்கள் உள்ளத்திலே ஜனநாயகப் புரட்சியை உருவாக்க வேண்டும்!'' என்று நான் அந்த விழாவிலே குறிப்பிட்டேன். (அப்போது ஜெயலலிதாவின் ஆட்சி நடைபெற்று வந்தது)

23.2.1993 அன்று, **கவிஞர் வேழவேந்தன்** எழுதிய **''ஏக்கங்களின் தாக்கங்கள்.''** **''தூறலும், சாரலும்''** என்ற இரண்டு கவிதைத் தொகுதிகளின் வெளியீட்டு விழா டாக்டர் **சிலம்பொலி செல்லப்பன்** தலைமையிலே நடைபெற்றது. இரண்டு நூல்களையும் நான் வெளியிட்டு உரையாற்றினேன்.

கழகத் துணைப் பொதுச் செயலாளராகப் பணியாற்றிய **நாஞ்சிலார்** அவர்கள், அவ்வப் போது எழுதிய கதைகளை எல்லாம் தொகுத்து, அதனை நூலாக வெளியிடும் விழா 23.4.1993 அன்று சென்னை ராஜேஸ்வரி மண்டபத்தில் **விஜயா தாயன்பன்** இன்னிசை நிகழ்ச்சியுடன் தொடங்கியது. நூலினை நான் வெளியிட, **''தினகரன்''** நிறுவனர் **கே.பி. கந்தசாமி** அவர்கள் பெற்றுக் கொண்டார்.

2.9.1993 அன்று **கவிஞர் இளவேனில்** அவர்கள் எழுதிய **''ஆத்மா என்றொரு தெருப் பாடகன்''** எனும் நூலினை அண்ணா அறிவாலயம் கலைஞர் மண்டபத்தில் நான் தலைமையேற்று வெளியிட, முதல் பிரதியை பகுத்தறிவாளர் **நா.அருணாசலம்** பெற்றுக் கொண்டார்.

''பேச முடியாதவர்களின் பெருமூச்சு ஒரு பிரளயத்துக்கு முன்னறிவிப்பாகிறது! சமத்துவ - சமதர்ம - சமுதாயப் புரட்சிக்கு சத்தியமான உள்ளமும் செயல்பாடும் தேவை!'' என்று அந்த நிகழ்ச்சியிலே நான் குறிப்பிட்டது நினைவுக்கு வருகிறது.

28.6.1995 அன்று திரைப்பட இயக்குநர் **முக்தா சீனிவாசன்,** அவர்கள் எழுதிய **''இது 20ஆம் நூற்றாண்டின் கதை''** என்ற நூலை நான் வெளியிட, மக்கள் தலைவர் **மூப்பனார்** அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.



''தி யோகா ஆப் தி யோகி'' நூலை வெளியிடுகிறார், கலைஞர்

26.7.1995 அன்று, கவியரசு நா.காமராசன் எழுதிய ''காட்டுக் குறத்தி' ''கறுப்பு மலர்கள்'' ஆகிய நூல்களை நான் வெளியிட்டு வாழ்த்துரை வழங்கினேன்.

26.7.1996 அன்று எழுத்தாளர் சு.சமுத்திரம் அவர்கள் எழுதிய ''ஒரு மாமரமும் மரங்கொத்திப் பறவைகளும்'' ''எனது கவிதைகளின் கதைகள்'' ஆகிய நூல்கள் வெளியீட்டு விழாவில் நூல்களை நான் வெளியிட, அம்மையார் ஏ.வி.எம்.ராஜேஸ்வரி அவர்கள் முதல் பிரதிகளைப் பெற்றுக் கொண்டார்கள்.

''இந்த நூல்களை இயற்றியவர் சமுத்திரம். சமுத்திர நீர் உப்புக் கரிக்கும் - ஆனால், சூரியனின் ஒளிபட்டால், அது நீராவியாகி மழையாகப் பொழியும் - அந்த மழை நீர் தூய தண்ணீராக இருக்கும் - உப்புக் கரிக்காது -ஆகவே சூரியனின் ஒளிபட்டால் உப்பு நீர் நல்ல நீராகிறது!'' என்று நான் பேசியது, பெரும் கைதட்டலைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

28.7.1996 அன்று திருமதி ஏ.வி.எம்.ராஜேஸ்வரி அம்மையார் எழுதிய ''ஏ.வி.எம்.என் கணவர்'' என்ற நூலினை நான் வெளியிட்டேன்.

3.1.1997 அன்று ''ராணி'' வார இதழின் ஆசிரியர், அ.மா.சாமி அவர்கள் எழுதிய ''தமிழ்க் கிறிஸ்தவ இதழ்கள்'' என்ற நூலினை பேராயர் ம.ஆரோக்கிய சாமி அவர்கள் தலைமையில், நான் வெளியிட்டு உரையாற்றினேன்.

அப்போது, ''நான் சிலுவை அணியாத கிறித்துவன் -லுங்கி அணியாத முஸ்லீம் - திருநீறு அணியாத சைவன் - இதைத்தான் திருமூலர் 'ஒன்றே குலம் - ஒருவனே தேவன்' என்று குறிப்பிட்டார்'' என்று பேசியது நினைவுக்கு வருகிறது.

10.3.1997 அன்று, திரைப்பட இயக்குநர் பாரதிராஜா அவர்கள் எழுதிய ''ஞாபக நதிக் கரையில்'' என்ற நூலினை மக்கள் தலைவர் மூப்பனார் தலைமையில் சென்னையில் நான் வெளியிட்டேன்.

அப்போது பாரதி ராஜாவை வாழ்த்திய நான், ''தேனிக்கு அருகே உள்ள அல்லி நகரிலே பிறந்தவர், பாரதி ராஜா - நான் திருக்குவளையிலே பிறந்தவன் - அல்லியும் மலர்தான் - குவளையும் மலர்தான் - அல்லி மலரை குவளை மலர் வாழ்த்துகிறது!'' என்று பேசியது சிரிப்பலைகளைப் பெற்றது.

25.5.1997 அன்று அண்ணா இலக்கியப் பேரவை சார்பில் நடைபெற்ற விழாவில், **டாக்டர் பரிமளம்** தொகுத்த பேரறிஞர் அண்ணாவின் **''தன் வரலாறு''** நூலினை நான் வெளியிட, **இராம. அரங்கண்ணல்** முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

''கண்ணீர்த் துளிகள்'' என்று பெரியார் நம்மை ஆத்திரமாக அவமதித்தபோதுகூட - அதையும் நற்சான்றாக எடுத்துக் கொண்டு - **''கண்ணீர்த் துளிகளே! நாட்டின் கண்மணிகளே!''** என்று அழைத்து நமது இயக்கத்தை உருவாக்கியவர் அண்ணா!'' என்று பேரறிஞர் அண்ணாவை நான் குறிப்பிட்டது என் நெஞ்சில் நிழலாடுகிறது.

6.6.1997 அன்று, பழம்பெரும் பத்திரிகையாளர், எழுத்தாளர் எல்லாவற்றிற்கும் மேலாக என்னுடைய அருமை நண்பர் சாவி அவர்கள் எழுதிய **''நவகாளி யாத்திரை''** **''என்னுரை''**, **''வாஷிங்டனில் திருமணம்''** ஆகிய நூல்களை நான் வெளியிட்டு சாவி அவர்களைப் பாராட்டிப் பேசினேன்.

''வாழ்க்கையில் இன்ப துன்பங்கள் - வேதனைகள் - சோதனைகள் - சூறாவளிகள்- போன்ற சோகக் கட்டங்கள் வருகிற போதெல்லாம், சமமாகக் கருதுகிற ஒரு நிலை தோழமைக்கு இடையிலே ஏற்பட்டால், அதுதான் உண்மையான தோழமை - உண்மையான நட்பு! அப்படி ஒரு உண்மையான நண்பர்தான் சாவி!'' என்ற எனது பாராட்டுரை சாவியை நெகிழச் செய்தது.

அதே சாவி அவர்களின் வாழ்க்கை வரலாற்றை **''சாவி -85''**என்ற ஒரு நூலாக **ராணி மைந்தன்** தொகுத்து, அதன் வெளியீட்டு விழாவினையும், பிறந்த நாள் விழாவினையும் இணைத்து நடத்த ஏற்பாடு செய்து, 20.1.2001 அன்று அந்த

நிகழ்ச்சியிலே நான் கலந்து கொண்டேன். அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியோடு **சாவி** அவர்களை வாழ்த்தக் காத்திருந்தபோது, சாவி அவர்கள் தனது வரவேற்புரையில் மிகுந்த உணர்ச்சிவயப்பட்டுப் பேசினார்.

தான் **''தினமணி கதிர்''** பத்திரிகையின் ஆசிரியராக இருந்ததாகவும், அப்போது தி.மு.கழக ஆட்சி கலைக்கப் பட்டதால், எனக்கு ஆதரவான நிலை எடுத்ததாகவும், அதனால் அந்தப் பத்திரிகையின் உரிமையாளருக்கும், எனக்கும் மனக்கசப்பு ஏற்பட்டு, தான் விடுமுறையில் அமெரிக்கா சென்றதாகவும், அந்த நேரம் பார்த்து அந்தப் பத்திரிகை, சாவிக்கு வயதாகி விட்டதாகக் கூறி, வீட்டிற்கு அனுப்பிவிட்டார்கள் என்றும் - அதனைக் கேள்விப்பட்ட நான் ''குங்குமம்'' வார இதழை புதிதாகத் தொடங்கி, சாவி அவர்களை ஆசிரியராக ஆக்கினேன் என்பதையும் உருக்கத்தோடு எடுத்துக் கூறினார்.



நான் அவ்வப்போது 'சாரல்'களாக வீசிய மழைத்துளிகள், 'கவிதை மழை'யாக உங்கள் கரங்களில்! மழையில் நனையுங்கள்! வெப்பம் தணிந்தால் மனம் மகிழுங்கள்!

அதாவது ''அர்ச்சுனன் வில் வித்தையில் மிகச் சூரனாக இருக்கிறான். துரோணாச்சாரியார் தான் அர்ச்சுனனுக்கு வில் வித்தை கற்றுக் கொடுக்கிறார். அர்ச்சுனன் சிறந்த வீரனாக இருப்பதில் துரோணாச்சாரியாருக்கு மிகவும் பெருமை. அதே நேரத்தில் கர்ணன், அர்ச்சுனன் செய்யும் வித்தைகளை யெல்லாம் செய்து காட்டுகிறான். அது துரோணாச்சாரியாருக்குப் பிடிக்க வில்லை. அர்ச்சுனனுக்கு சமமாக அவனை ஆக்கக்கூடாது - எப்படி யாவது கர்ணனை மட்டம் தட்ட வேண்டுமென்ற எண்ணத்தோடு, துரோணர் கர்ணனைப் பார்த்து, ''நீ யார்? உன்னுடைய அப்பா, அம்மா பெயர் என்ன? நீ பெரிய சூரனா?''

என்றெல்லாம் கேட்டு, மட்டம் தட்டுகிறார். கர்ணன் தலை குனிந்து வெட்கத்தோடு அவஸ்தைப்படுகிறான். அங்கே துரியோதனன் இருக்கிறார். அவர் கர்ணனைப் பார்த்து, ''அவர்கள் கிடக்கிறார்கள், நீ பெரிய சூரன்! உன்னை நான் அங்க தேசத்திற்கு ராஜாவாக ஆக்குகிறேன்! நீ என்னுடன் வா!'' என்று கூறி அழைத்துச் சென்று, அவனுக்கு முடி சூட்டி ராஜாவாக ஆக்கினார்.

அந்த மாதிரி எனக்காக ''குங்குமம்'' தேசத்தை உருவாக்கி, அதற்கு என்னை ராஜாவாக ஆக்கியவர் கலைஞர். குங்குமம் என்ற புதிய பத்திரிகையைத் தொடங்கி, அதற்கு என்னை ஆசிரியராக ஆக்கி, என்னை கர்ணனுக்குச் சமமாக ஆக்கியவர் கலைஞர்! இதைச் சொல்லத்தான் நான் விரும்பினேன். இதற்குமேல் பேச முடியவில்லை. இதயம் வலிக்கிறது. நிறுத்திக் கொள்கிறேன்!'' என்று கூறி, உடல் நிலை திடீரென்று பாதிக்கப்பட்டு, அவசர அவசரமாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. விழாவிலும் நீண்ட நேரம் அனைவரும் பேச இயலாமல், நான் மட்டும் ''எனது பாசமிக்க தோழர் - அருமை நண்பர் - எழுத்துலகிலே பல எழுத்தாளர்களை உருவாக்கிய பிதாமகன் சாவி வாழ்க!'' என்று ஒரு சில நிமிடங்கள் அவரை வாழ்த்திட, நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அதற்குப் பிறகு சாவி நீண்ட நாட்கள் உயிரோடு இருக்கவில்லை.

13.7.1997அன்று கவிஞர் **வைரமுத்து** எழுதிய **''தமிழுக்கு நிறம் உண்டு''** என்ற கவிதைத் தொகுப்பு நூலை வெளியிட்டு வாழ்த்துரை வழங்கினேன்.

அப்போது நான், ''பாரதிதாசன் - அண்ணா சொன்னதுபோல், நானும் வைரமுத்துவுக்குச் சொல்கிறேன் - ''ஏடா தம்பி! எடுடா பேனா! உன் பேனாவிற்கு என்றும் வெற்றியே கிடைக்கும்!'' என்று வாழ்த்தினேன்.

9.11.2001 திரைப்படங்களில் புகழ்க் கொடி நாட்டி, சின்னத்திரையிலும் தனி முத்திரை பதித்த நடிகர் **ஜெமினி கணேசன்** அவர்களின் சுயசரிதை நூலான **''வாழ்க்கைப்**

படகு'' வெளியீட்டு விழா ஒரு குடும்ப விழாவாக, அவருடைய குடும்பத்தினர் மட்டுமே கலந்து கொள்கின்ற அளவிற்கு தாஜ் கோரமண்டல் ஓட்டலில் நடைபெற்றது. அவருடைய குடும்பத்திற்கும் எனக்கும் உள்ள நெருங்கிய தொடர்பின் அடிப்படையில், குடும்பத்தினர் அனைவரும் வருகை தந்து, என்னை வலியுறுத்தி அந்த விழாவிற்கு அழைத்துச் சென்று, அந்த நூலினை வெளியிடச் செய்தார்கள்.

''ஒரு ஆணின் சாதனைகளுக்குப்பின் ஒரு பெண் தூணாக இருப்பாள் என்பார்கள். ஆனால், ஜெமினி கணேசனின் பின்னால் அம்மா - சின்னம்மா - அத்தை - மனைவி - மகள்கள் என்று எத்தனையோ **தூண்கள்**'' என்று நான் பாராட்டியது என் நினைவுக்கு வருகிறது.

1.3.2003 அன்று, அண்ணா அறிவாலயத்தில், கவிச் செல்வர் மறைந்த **சிங்கார சடையப்பன்** அவர்களின் கவிதைத் தொகுப்பு நூலை வெளியிட்டு நான் பேசும்போது, ''உவமைகள் கூறுவதில் பாரதிதாசனுக்கு நிகரானவர் சிங்காரச் சடையப்பன் - தந்தை பெரியாரின் கருத்துக்கள் - அறிஞர் அண்ணாவின் அறிவுரைகள் அழிந்திட என்றும் சம்மதிக்க மாட்டேன்!'' என்று குறிப்பிட்டேன்.

5.10.2003 அன்று கலைஞர் அரங்கில், கவிஞர் **இளையபாரதி** எழுதிய ''**பட்டினப் பாலை**'' உள்ளிட்ட ஏழு நூல்களை வெளியிட்ட நான், ''இளையபாரதியை திராவிட இயக்க கவிஞனாக - கலைஞனாக - இலக்கியவாதியாக இந்த விழாவில் பிரகடனப்படுத்துவதில் மகிழ்ச்சி அடைகிறேன்...! இன்று அவரது 7 நூல்களை வெளியிடுகிறேன் - எதிர்காலத்தில் 700 நூல்களாக - 7000 நூல்களாக வெளியிடக்கூடிய ஆற்றலும் -வசதியும் - வாய்ப்பும் இளையபாரதி பெறுவார் என்று நம்புகிறேன்!'' என்று வாழ்த்தினேன்.

5.4.2004 அன்று **வீரபாண்டியன்** தொகுத்த ''**ஆகட்டும் பார்க்கலாம்**'' என்ற **காமராஜர்** வாழ்க்கை நிகழ்வுகள் நூலினை காமராஜர் அரங்கத்தில் நான் வெளியிட்டேன். தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவரான தம்பி.

ஜி.கே.வாசன் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார். அப்போது, ''அறிஞர் அண்ணா அவர்கள் தன் திராவிட நாடு இதழில் **''குணாளா - குலக் கொழுந்தே!** என்று காமராஜரைப் பாராட்டி ஒரு கட்டுரையே எழுதியிருந்தார்!'' என்பதை நினைவுபடுத்தினேன்.

16.8.2004 அன்று கவிஞர் மு.மேத்தா அவர்கள் எழுதிய **''கண்ணீர்ப் பூக்கள்''** கவிதை நூலின் வெள்ளி விழாப் பதிப்பு - **''ஆகாயத்துக்கு அடுத்த வீடு''** எனும் புதிய கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு, ''தமிழகத்தில் புதுக் கவிதைகள் உலா வருவதற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தவர்களில் ஒருவர் மு.மேத்தா!'' என்று பாராட்டி, நூலினை வெளியிட்டேன், முதல் பிரதியை **இசைஞானி இளையராஜா** அவர்களும், மலேசியாவைச் சேர்ந்த **ஆதி.குமணனும்** பெற்றுக் கொண்டனர்.

4.1.2005 அன்று **கவிப்பேரரசு வைரமுத்து** அவர்கள் எழுதிய **''கொஞ்சம் தேநீர், நிறைய வானம்''** என்ற கவிதை நூலும், **''ஒரு கிராமத்துப் பறவையும்; சில கடல்களும்''** எனும் பயண இலக்கியம் மற்றும் நாற்பத்து நான்கு அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகளுடன் **''வைரமுத்து இலக்கியத் தடம்''** ஆகிய நூல்களின் வெளியீட்டு விழா நடைபெற்றது. விழாவிற்கு நான் தலைமையேற்று நூல்களை வெளியிட்டேன்.

அப்போது, ''கவிப்பேரரசு வைரமுத்துவின் இலக்கியங்கள் உலக எழுத்துத் தரத்திற்குச் சமமாக உலவிக் கொண்டிருக்கின்றன. நான் அவரது திறமையை - கற்பனை வளத்தை - கவிதைச் செறிவை - துளித் துளியாகத் துய்த்தவன் - அங்குலம் அங்குலமாக சுவைத்தவன்!'' என்று பாராட்டினேன்.

வைரமுத்து ஏற்புரை நிகழ்த்தியபோது, ''நோயுற்ற நிலையிலும், எனக்காகவும் தமிழுக்காகவும் **வலிதாங்கி** வந்திருக்கும் தமிழகத்தின் **சுமைதாங்கி** கலைஞர்

அவர்களுக்கு நனைந்த கண்களுடன் நன்றி கூறுகிறேன்!'' என்று உணர்ச்சியுடன் குறிப்பிட்டதை மறக்க முடியுமா?

25.2.2005அன்று சென்னையில் **கிருஷ்ணமாச்சார்யா யோகா மந்திர்** சார்பில் நடைபெற்ற - **தேசிகாச்சார்** அவர்கள் எழுதிய **''தி யோகா ஆப் தி யோகி''** என்னும் நூல் வெளியீட்டு விழாவில் நான் கலந்து கொண்டு நூலை வெளியிட்டதோடு, ''எந்த நிலையை எடுத்தாலும், அந்த நிலையில் உறுதியாக இருக்க வேண்டும் என்பதுதான் தியானத்தின் சிறப்பு'' என்று யோகா பற்றிய எனது கருத்துக்களை எல்லாம் தெரிவித்தேன்.

1.7.2005 அன்று வித்தகக் கவிஞர் **பா.விஜய்** எழுதிய 12 கவிதை நூல்களையும் 6.5.2007 அன்று 10 நூல்களையும் நான் வெளியிட்டு வாழ்த்துரை வழங்கினேன்.

3.9.2005 அன்று, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் **வை.கோ.** எழுதிய **''சிறையில் விரிந்த மடல்கள்''** நூல்கள், அந்தக் கட்சியின் அவைத் தலைவர் **எல்.கணேசன்** தலைமையில் நடைபெற்றது. ஆங்கில நூலை **பிரதமர் மன்மோகன்சிங்** வெளியிட, முதல் பிரதியை **ஹர்கிஷன் சிங் சுர்ஜித்** பெற்றுக் கொண்டார். தமிழ்ப் பதிப்பை நான் வெளியிட, டாக்டர் **எம்.ஏ.எம்.ராமசாமி** பெற்றுக் கொண்டார்.

29.12.2005 அன்று, முனைவர் **உ.சீனிவாச ராகவன்** எழுதிய **''புத்தரெனும் பேரொளி''** என்ற நூலினை நான் வெளியிட்டேன்.

பேராசிரியர் **அ.இராமசாமி** அவர்கள் எழுதிய ஆங்கில நூலான **"Struggle for Freedom of Languages in India"** - **''மொழிப்போராட்ட வரலாறு''** என்ற நூலினை 23.1.2006 அன்று ராணி சீதை மன்றத்தில், முனைவர் **மு.பி.பாலசுப்பிரமணியம்** தலைமையேற்றிட, நான் வெளியிட்டேன்.

அப்போது, ''மொழிதான் ஒரு நாட்டின் உயிர் - நாட்டைக் காப்பாற்றக் கூடிய அரண்- எனவே இந்தியாவின் ஆட்சி

மொழிகளில் தமிழும் ஒன்று என்ற நல்ல செய்தி தியாகத்திற்குக் கிடைத்த வெற்றியாக அமையும்!'' என்று நான் பேசினேன்.

பேராசிரியர் மு.நாகநாதன் எழுதிய **''இந்தியப் பொருளாதாரம்- இருளில் ஒளி''** என்ற நூல் வெளியீட்டு விழா, 10.3.2006 அன்று ராணி சீதை மன்றத்தில் நடைபெற்றது. விழாவில் நான் கலந்து கொண்டு நூலினை வெளியிட்டு உரையாற்றும் போது, ''ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் என்ன தான் ஏற்றமிருந்தாலும் - குன்றுபோல் செல்வம் குவிந்திருந்தாலும் - சுய மரியாதை இல்லாத நாட்டிலே குடிமக்களாக இருப்பதிலே சிறப்பில்லை. இந்தச் சிந்தனையிலே வல்லவர்களில் ஒருவர் நமது நாகநாதன். அவர் எழுதிய இந்த நூலை வெளியிடுவதில் நான் பெருமைப் படுகிறேன்!'' என்று குறிப்பிட்டேன்.

17.4.2006 அன்று மத்திய இணை அமைச்சர் **திரு.ஜி.கே.வாசன்** அவர்கள் தலைமையில், **திரு.ஏ.கோபண்ணா** அவர்கள் எழுதிய **''அராஜக ஆட்சியை அகற்றுவோம்''** என்ற தேர்தல் பிரச்சார நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு, ''கோபண்ணா எழுதியது நூல் அல்ல - வாள்!'' என்று சொல்லி, நூலினை வெளியிட்டேன். தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் **திரு.எம்.கிருஷ்ணசாமி** முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

16.12.2006 அன்று **கவிப்பேரரசு வைரமுத்து** எழுதிய **''கருவாச்சி காவியம்''** நூலினை நான் வெளியிட, உச்சநீதிமன்ற நீதியரசர், **ஏ.ஆர்.லெட்சுமணன்,** முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

5.1.2007 அன்று இலண்டன் பல்கலைக் கழக ஆங்கிலப் பேராசிரியர் உத்ரா நடராஜன் தொகுத்த ஆங்கில நூலான **Plain Speaking: A Sudra's Story''** வெளியீட்டு விழா, சென்னையில் பிரிட்டிஷ் கவுன்சில் அரங்கில் நடைபெற்றது. விழாவிற்கு நான் தலைமையேற்க, மத்திய அமைச்சர் **மணி சங்கர அய்யர்** நூலினை வெளியிட்டார்.


28.2.2007 அன்று காவியக் கவிஞர் வாலி இயற்றிய **"கலைஞர் காவியம்"** எனும் நூல் வெளியீட்டு விழா எனது முன்னிலையில் கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்றது.

அப்போது பேசிய நான், "கலைஞரைப் பற்றிப் பாட நான் பிறவி எடுத்திருக்கிறேன்!" என்று வாலி சொன்னது பெரிய வார்த்தை - "இந்த வாலி பாடுவதற்கேற்ப நான் பிறவி எடுத்திருக்கிறேன்!" என்று குறிப்பிட்டேன்.

2.3.2007 அன்று, **நீதியரசர் எஸ்.மோகன்** அவர்கள் எழுதிய ஆங்கிலக் கவிதை நூலான **"Singing Sparrow"** என்ற நூலினை நான் வெளியிட்ட போது, "இந்த ஆங்கிலச் சொற்றொடருக்குப் **பாடுகின்ற பைங்கிளி** என்று பொருள்! சிட்டுக்குருவி பாடாது- ஆனால் நீதியரசர் மோகன் வீட்டுச் சிட்டுக் குருவியை, அவரது கவிதை நயத்தால் பாட வைத்திருப்பார் போலும்!" என்று குறிப்பிட்டேன்.

24.3.2007 அன்று, **ம.சிங்காரவேலரின் சிந்தனைக் களஞ்சியம்** மூன்று தொகுதிகளை நான் வெளியிட, **தா.பாண்டியன், என். வரதராசன்** ஆகியோர் முதல் படிகளைப் பெற்றுக் கொண்டனர்.

28.4.2007 அன்று, **"ஆனந்த விகடன்"** குழுமத்தின் சார்பில் உருவாக்கப்பட்ட **பிரிட்டானிகா தகவல் களஞ்சியம்**



நூல்கள் வெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றது. நூல்களை நான் வெளியிட, முதல் பிரதியை **பொள்ளாச்சி மகாலிங்கம்** பெற்றுக் கொண்டார். நூல்களை நான் வெளியிட்டது மாத்திரமல்ல; விகடன் பெருமுயற்சி எடுத்து அந்த தகவல் களஞ்சியத்தை உருவாக்கியதைப் பாராட்டி பேசியதோடு, அரசு நூலகங்களில் வைப்பதற்காக 4500 நூல்கள் வாங்கிக் கொள்ளப்படும் என்று அறிவித்தேன். அந்த நூலினை வெளியிட ஆனந்த விகடன் குழுமத்தின் சார்பில் **எஸ்.எஸ்.வானின்** பேரன் **சீனிவாசன்** என்னைச் சந்தித்து அழைத்த போது, **குடியரசுத் தலைவர்** அவர்களைக் கொண்டு அதனை வெளியிடுவதுதான். பொருத்தமாக இருக்குமென்று நான் கூறினேன். ஆனால், அவர்கள் குடியரசுத் தலைவரை அணுக வழி தெரியாமல் இருந்த போது, நானே குடியரசுத் தலைவருக்குப் பரிந்துரைக் கடிதம் எழுதி, அந்த விழாவில் கலந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். ஆனால், குடியரசுத் தலைவர், ''வெளியூர் செல்லவிருப்பதால் நான் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள இயலாது'' என்று கூறிவிட்டார். அதன் பின்னர் ஆனந்த விகடன் குழுமத்தின், குடியரசுத் தலைவர் வராவிட்டால் பரவாயில்லை என்றும், நான் வந்து அதனை வெளியிட்டால் போதும் என்று கூறியதன் பேரில், அந்த விழாவிலே கலந்து கொண்டு ஆனந்த விகடனைப் பெரிதும் பாராட்டி உரையாற்றினேன்.

4.8.2007 அன்று கவிவேந்தர் **வேழவேந்தன்** எழுதிய ''**அனல் மூச்சு**'' எனும் கவிதைத் தொகுதி நூலினை நான் வெளியிட்டு பாராட்டுரை வழங்கினேன்.

என் வாழ்க்கைப் பாதையில் நூல் வெளியீட்டு விழாக்களும், அவற்றில் நான் ஆற்றிய உரைகளும், தனிப் புத்தகமாகவே வெளியிடக் கூடியவைகளாகும் என்பதைப் பெருமித உணர்வுடன் குறிப்பிட விரும்புகிறேன். எழுதுவதும், படிப்பதும் ஒரு மனிதனின் அறிவுக்கு ஊற்றுப் பெருக்காக அமையுமல்லவா! நான் எழுதிய நூல்களின் வெளியீட்டு விழாக்கள் - மற்ற எழுத்தாளர்கள், சான்றோர்கள் எழுதி நான் வெளியிட்ட நூல்களின் விழாக்கள் ஆகியவை பற்றி என்

நினைவில் இருந்தவரையில் ஞாபகப்படுத்தி இருக்கிறேன். ஒரு சில விடுபட்டுக்கூடப் போயிருக்கலாம்.

நூல்களைப் பற்றி நான் எழுதும் இந்த நேரத்தில், பேரறிஞர் அண்ணா அவர்களைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். இடைவிடாது படிக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்த அறிஞர் அண்ணா, அவரது வாழ்வின் முடிவை அறிந்து மருத்துவமனையில் அறுவை சிகிச்சைக்கு அழைத்துச் செல்லப்படும் அதே நேரத்திலே கூட, அவர் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை முடித்துவிட்டுத்தான் அறுவை சிகிச்சை அறைக்குப் புறப்பட்டார் என்பது நேரில் கண்ட காட்சியாகும். அதுவும் மறக்க முடியாத காட்சிகளில் ஒன்றாகும்.

9. திராவிடப் பல்கலைக் கழகம்

1996ஆம் ஆண்டு, தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதும், அதற்கு முன்பிருந்த அ.தி.மு.க. ஆட்சியில் நடைபெற்ற சில தவறான செயல்பாடுகளையெல்லாம் உடனடியாகக் களைந்திட வேண்டுமென்ற கோரிக்கைகள் ஒன்றன் பின் ஒன்றாக வரத் தொடங்கின.

அவற்றிலே ஒன்றுதான் - 1991ஆம் ஆண்டு முதல் 1996 வரை ஆட்சியிலே இருந்த **ஜெயலலிதா,** எங்கும் தனது பெயர் - எதிலும் தனது பெயர் இருக்க வேண்டும் என்பதற்காக விதிமுறைகளையெல்லாம் மீறிச் செயல்பட்டார் என்பதாகும். உயிரோடு இருப்போர் பெயர்களை எந்தவொரு அரசு நிறுவனத்துக்கும் சூட்டக் கூடாது என்ற அரசு விதிக்கு மாறாக, பல நிறுவனங்களுக்குத் தன் பெயரைத் தானே சூட்டிக் கொண்டார்.

உதாரணமாக, 89-90ஆம் ஆண்டுகளில் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சியில் இருந்தபோது - திரைப்பட நகர் ஒன்றினை நிறுவிட, சென்னையை அடுத்த தரமணியில் இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு - அப்போது மத்திய அமைச்சராக இருந்த நண்பர் **உபேந்திரா** அவர்களை வைத்து, அந்தத் திரைப்பட நகருக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

ஆனால் ஜெயலலிதா ஆட்சிக்கு வந்த பிறகு, திரைப்பட நகர் உருவானதே தன் சாதனையால்தான் என்பது போல ஒரு தோற்றத்தை உருவாக்கி - அந்தத் திரைப்பட நகருக்கு **எம்.ஜி.ஆர்.** அவர்களின் பெயரைச் சூட்ட வேண்டுமென்று பல்வேறு தரப்பிலிருந்தும் கோரிக்கை எழுப்பப்பட்ட போதிலும், அதையெல்லாம் அலட்சியப்படுத்திவிட்டு, அந்தத்

திரைப்பட நகருக்கு **''ஜெ.ஜெயலலிதா திரைப்பட நகர்''** என்று தன் பெயரையே வைத்துக் கொண்டார். 1996ஆம் ஆண்டு தி.மு.கழகம் ஆட்சிக்கு வந்ததும், ஜெ.ஜெயலலிதா திரைப்பட நகர் என்ற பெயரை **''எம்.ஜி.ஆர். திரைப்பட நகர்''** என்று பெயர் சூட்டுவதாக அறிவித்தேன். மேலும், எம்.ஜி.ஆர். திரைப்பட நகரின் புதிய தலைவராக த.மா.கா.வில் முக்கிய பிரமுகராக இருந்தவரும், திரைப்படத் தயாரிப்பாளருமான **முக்தா சீனிவாசன்** அவர்களை நியமனம் செய்து அறிவித்தேன்.

அதைப் போலவே, ஜெயலலிதா ஆட்சியில் **''ஜெ.ஜெயலலிதா போக்கு வரத்துக் கழகம்''** என்று பெயர் சூட்டப்பெற்ற போக்குவரத்து நிறுவனத்தை - ராஜீவ் காந்தியின் நினைவு தினமான 21.5.1996 முதல், **''ராஜீவ் காந்தி போக்குவரத்துக் கழகம்''** என்ற பெயரால் அழைக்கப்படும் என்றும் அறிவித்தேன்.

மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த யாரும் தமிழகத்தின் காவல்துறை தலைவராக - அதாவது டி.ஜி.பி.யாக அதுவரை இருந்த தில்லை என்ற குறையைப் போக்கிடும் வண்ணம், **ஏ.ராஜ் மோகன்** என்ற மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் டி.ஜி.பி.யாக நியமிக்கப் பட்டார். அதுபோலவே, தமிழக அரசின் தலைமைச் செயலாளராக **திரு.கே.ஏ.நம்பியார்** நியமிக்கப்பட்டார். அதுவரை அவர் டெல்லியில் பாதுகாப்புத் துறையின் செயலாளராகப் பதவி வகித்து வந்தார். அதற்கு முன்பு தமிழகத்தில் பல்வேறு பதவிகளில் சிறப்பாகப்



பணியாற்றியவர். உள்துறை செயலாளராகவும், தொழில் வளர்ச்சித்துறை செயலாளராகவும் இருந்தவர்.

கண்ணியத்திற்குரிய **காயிதே மில்லத்** அவர்களின் நூற்றாண்டு நிறைவு நாள் நிகழ்ச்சி *5.6.1996* அன்று கலைவாணர் அரங்கத்தில் இந்திய தேசிய லீகின் தமிழ் மாநிலத் தலைவராக இருந்த அப்துல் லத்தீப் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருப்பூர் அல்தாப் வரவேற்புரையாற்றினார். அந்த விழாவில், நானும் இந்திய தேசிய லீகின் அகில இந்தியத் தலைவர் **இப்ராகிம் சுலைமான் சேட், மூப்பனார், ஆர்.எம்.வீரப்பன், ஆர்.நல்லக்கண்ணு, பேராயர் எஸ்றா சற்குணம், அப்துல் ஜபார்** ஆகியோரும் கலந்து கொண்டோம். அந்த விழாவில் நான் உரையாற்றும்போது, ''மறைந்த தலைவர்களுக்கு விழா எடுப்பது அவர்களின் பெயர்களை உச்சரிப்பது மாத்திரம் நமது கடமையல்ல; **''பெரியார், அண்ணா, காயிதே மில்லத்** போன்ற தலைவர்களின் அடியொற்றி நடந்து அவர்கள் விரும்பிய வெற்றியைப் பெறுவோம்'' என்று கூறினேன். இந்திய தேசிய லீகின் அகில இந்தியத் தலைவர் சுலைமான் சேட் பேசும்போது, **''காயிதே மில்லத் கண்ட கனவுகளை எல்லாம் கலைஞர் நிறைவேற்றி வருகிறார்!''** என்று கூறினார்.

16.6.1996 அன்று சென்னை ராமாவரம் தோட்டத்தில் உள்ள எம்.ஜி.ஆரின் இல்லத்தில், அவரது மனைவியும் முன்னாள் முதல்வருமான திருமதி ஜானகி அம்மையாரின் உருவப் படத்தினை நான் திறந்து வைத்தேன். அந்த விழாவில் சகோதரர் **ஆர்.எம்.வீரப்பன், ராமசாமி உடையார்,** வழக்கறிஞர் **என்.சி.ராகவாச்சாரி, ஏ.வி.எம். சரவணன்** ஆகியோர் கலந்து கொண்டனர்.

எம்.ஜி.ஆருடன் எனக்கு இருந்த பழைய நட்புகளைப் பற்றிய தகவல்களையெல்லாம் அந்த நிகழ்ச்சியிலே எடுத்துக் கூறினேன். என்னுடைய அந்த உரையின் சுருக்கம் வருமாறு:-

''இந்தப் படத்தைத் திறப்பதற்கு முதலமைச்சர் என்ற முறையிலே நான் வந்திருப்பதாக உங்களிலே யாராவது கருதக்



காயிதே மில்லத்தின் கனவுகளை எல்லாம் நிறைவேற்றி வருகிறார், கலைஞர் - சுலைமான் சேட்

கூடும். நிகழ்ச்சி நிரலில் அப்படித்தான் என்னுடைய பெயருக்கு முன்னால் அந்தப் பதவியின் பெயர் பொறிக்கப்பட்டிருக்கிறது. என்றாலும், அருமை நண்பர் எம்.ஜி.ஆர். முதல் அமைச்சராக இல்லாமல் இருந்திருந்தாலும், மறைந்த சகோதரி ஜானகி அம்மையார் முதலமைச்சராக இல்லாமல் இருந்திருந்தாலும், நம்முடைய வீட்டுக் கடமையை ஆற்ற நான் இங்கே வந்திருப்பேன். நீங்கள் இந்த ''முன்னாள்'' - ''இன்னாள்'' -ஏன்ற சொற்றொடர்களை எல்லாம் எடுத்து விட்டு, எம்.ஜி.ஆருடைய சகோதரர் - எம்.ஜி.ஆரின் துணைவியாருடைய மறைவை ஒட்டி, அவருடைய திருவுருவப்படத்தை திறந்து வைக்க வந்திருக்கிறார் - அவருடைய பெயர் கருணாநிதி- அவன் ராமாவரம் தோட்டத்திலே மாத்திரம் எம்.ஜி.ஆரை சந்தித்தவனல்லன் - சென்னை ஏழுகிணறு பகுதியில், ஒரு மூலையிலே வெள்ளைச் சுண்ணாம்பு அடிக்கப்பட்ட அந்த வீட்டுக்குள் ஒரு குறுகிய இடத்தில், எம்.ஜி.ஆர். அவர்களையும், அவர்களுடைய அன்னையையும் சந்தித்து- அந்த பத்தடி, பதினைந்து அடி நீள அகலமுள்ள அறைக்குள் எம்.ஜி.ஆருக்குப் பக்கத்திலே அமர்ந்து - காசிலிங்கத்துக்குப் பக்கத்தில் அமர்ந்து - அவர்களுடைய அன்னையார் இட்ட உணவை, ஒரு வேளை அல்ல, இரு வேளை அல்ல, பல நேரங்களில் உண்டவன் - உண்டு மகிழ்ந்தவன்.''

''அன்று தொடங்கி, பிறகு இந்த ராமாவரம் தோட்டத்திலே எத்தனை நாட்கள் எம்.ஜி.ஆர். அவர்களோடு அமர்ந்து நான் உணவு அருந்தியிருப்பேன் - எனக்கும் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும், சகோதரி ஜானகி அம்மையார் எத்தனை

நாட்கள் உணவு பரிமாறி இருப்பார்கள்! என்னுடைய வீட்டில் எனது அன்னையார் பரிமாறி நான் சாப்பிடுவதைவிட, அதிகமாக ராமாவரம் தோட்டத்திலே - அதிக அளவு சாப்பிட்டேன் என்றால், அதற்கு எம்.ஜி.ஆர். என்னிடத்திலே காட்டிய பிடிவாதமும், சகோதரி ஜானகி அம்மையார் என் இலையில் இட்டதை சாப்பிட்டுத்தான் தீர வேண்டும் என்று உறுதி பொங்க என் முன்னால் அவர்கள் நின்று கொண்டு சாப்பிடச் செய்ததும்தான் காரணம். இவைகள் எல்லாம் சாதாரண நிகழ்ச்சிகளாக இருந்தாலுங்கூட, எவ்வளவு பெரிய நட்பின் ஆழத்திலே எண்ணிப் பார்க்கக் கூடிய நிகழ்ச்சிகள் என்பதை நினைக்குந் தோறும் நெஞ்சு நெகிழ்ந்து போகிறது.''

''அதைப்போல என் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள், அடிக்கடி என்னுடைய இல்லத்திற்கு வருவதும் - என்னோடு பழகுவதும் இல்லத்திலே உள்ள பிள்ளைகளோடு, என் தாயாரோடு இவர்களோடெல்லாம் பழகுவதும் என்றைக்கும் மறந்து விடக் கூடிய நிகழ்ச்சிகள் அல்ல.''

''27 ஆண்டு கால நெருங்கிய நட்புக்கு பிறகு, எம்.ஜி.ஆருக்கும் எனக்கும் இடையே ஒரு பிளவு ஏற்பட்டது. அந்தப் பிளவை உண்டாக்கியவர்கள் நல்ல வேளையாக இங்கே வரவில்லை. இந்தப் பிளவு கூடாது என்று என் கரம் பிடித்துக் கண்ணீர் விட்டு, என் கரங்களைக் கண்ணீரால் நனைத்த ஆர்.எம்.வீரப்பன் இங்கே வந்திருக்கிறார். நானும், எம்.ஜி.ஆரும் தொடர்ந்து இந்த இயக்கத்திலே இருந்திட வேண்டும் என்றுதான் இருவரும் விரும்பினோம் - ஆனால் அன்றைக்குச் சதி செய்து சில பேர் எங்களைப் பிரித்தார்கள்.''

-இப்படித் தொடங்கிய எனது பேச்சு, அன்றைய தினம் தொடர்ந்து, அவருக்கும் எனக்கும் உள்ள நட்பை, பாசத்தை, அன்பை அகிலத்திற்கு உணர்த்துவதாக அமைந்தது.

96ஆம் ஆண்டு, மே திங்களில் நான் பொறுப்பேற்றுக் கொண்ட போதிலும், எனது அன்னை **அஞ்சுகம்** அம்மையார் அவர்களின் நினைவிடத்திற்குச் சென்று வர வேண்டுமென்று வீட்டார் தொடர்ந்து வற்புறுத்தியதின்



கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் நூற்றாண்டு நிறைவு விழாவில், மூப்பனாருடன்...

பேரில், ஜூன் திங்களில்தான் எனக்கு அந்த வாய்ப்பும் நேரமும் கிடைத்தது. 18.6.1996 அன்று விடியற்காலை புகைவண்டியில் திருவாரூர் சென்றடைந்தேன். என்னுடன் எப்போதும் போல **ஆர்க்காடு வீராசாமி, கே.என்.நேரு, மு.க.ஸ்டாலின், மு.க.தமிழரசு, இயக்குநர் அமிர்தம்** ஆகியோர் வந்தார்கள். அதிகாலை வேளையிலே கூட என்னால் புகை வண்டியிலிருந்து இறங்க முடியாத அளவிற்கு கூட்டம். காவல் துறை பாதுகாப்பு ஏற்பாடுகளை அதிக அளவிற்குச் செய்திருந்த டி.ஐ.ஜி.யை நான், என்னருகே அழைத்து, உடனடியாகப் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் குறைக்க வேண்டுமென்றும், என் பின்னால் ஐந்து கார்களுக்கு மேல் வரக்கூடாது என்றும் தெரிவித்தேன்.

காலையில் நான் தங்கியிருந்த இடத்திலேயே செய்தியாளர்களைச் சந்தித்தேன். அதன்பின் காட்டூரில் உள்ள என் அன்னையின் நினைவிடத்திற்குக் குடும்பத்தினருடன் சென்று, அங்கே மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினேன். என்னுடன் **தயாளு**, சகோதரிகள் **பெரிய நாயகம், சண்முகசுந்தரம்** மற்றும் குடும்பத்தினர் வந்திருந்தார்கள்.

மாலை 5 மணி அளவில், திருவாரூரிலிருந்து திருக்குவளைக்குக் கார் மூலம் புறப்பட்டேன். அது எத்தனையோ முறை இளம் வயது முதல் நான் சென்று வந்த பாதைதான். ஆனால், அன்றைய தினம் மக்கள் கடலுக்குள் புகுந்துதான் திருக்குவளை நோக்கி நான் செல்ல



ராமாவரம் எம்.ஜி.ஆர். இல்லத்தில் ஜானகி அம்மையாரின் உருவப்படத் திறப்பு விழாவில்...

வேண்டியிருந்தது. எனது வரவேற்புரை நிகழ்ச்சியைக் காண பெரு மழையும் வந்துவிட்டது. அந்த மழையைப் பற்றிக் கவலைப்படாமல் அந்த மக்கள் கூட்டம் என்னை வரவேற்றது. கொட்டும் மழையிலும் அந்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்து நான் பேசும்போது, ''ஓடி விளையாடிக் கொண்டிருக்கின்ற ஒரு குழந்தை தாயின் மடிக்கு வந்ததும் எப்படி தாயின் முகத்தையே பார்த்துக் கொண்டிருக்குமோ - விளையாட்டை, பேச்சை நிறுத்திவிட்டு தாயின் முகத்தையே பார்த்துக் கொண்டிருக்குமோ - அதைப் போலத்தான் நான் உங்களை யெல்லாம் கண்டு பேசினாலும், சுற்றுப் பயணங்களில் கலந்து கொண்டாலும், சட்ட மன்றத்தில் உரையாற்றினாலும், டெல்லிக்குச் சென்று அரசியல் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டாலும், தாயின் மடிக்கு வந்த நேரத்தில் பேச முடியாது தவிக்கின்ற அந்தக் குழந்தையைப் போல உங்கள் முன்னால் இன்று நான் நின்று கொண்டிருக்கிறேன்'' என்று குறிப்பிட்டேன்.

18.6.1996 அன்று திருவாரூரில் செய்தியாளர்களைச் சந்தித்தபோது, நிர்வாக வசதிக்காக சில மாவட்டங்கள் பிரிக்கப்படும் என்று கூறியிருந்தேன். அதன்படி, 22.6.1996 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் மாவட்டங்கள் எல்லாம் பிரிக்கப்பட்டு, அறிவிக்கப் பட்டதோடு, சில மாவட்டங்களுக்குப் புதிய பெயர்களும் அறிவிக்கப்பட்டன. குறிப்பாக காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு

செங்கை அண்ணா மாவட்டம் என்றும் - திருவள்ளூர் மாவட்டத்திற்கு செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம் என்றும்- திண்டுக்கல் மாவட்டத்திற்கு மன்னர் திருமலை மாவட்டம் என்றும் - தேனி மாவட்டத்திற்கு வீரன் அழகுமுத்து மாவட்டம் என்றும் - நாமக்கல் மாவட்டத்திற்கு ராஜாஜி மாவட்டம் என்றும்- திருவாரூர் மாவட்டத்திற்கு ஏ.டி.பன்னீர் செல்வம் மாவட்டம் என்றும் - நாகை மாவட்டத்திற்கு நாகை காயிதே மில்லத் மாவட்டம் என்றும் பெயர் சூட்டப் பட்டன.

ஆனால், 1998ஆம் ஆண்டில், தென் மாவட்டங்களில் ஏற்பட்ட சாதிக் கலவரங்களை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கத்துடன், கழக அரசால் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் சென்னையில் 22.10.1998 மற்றும் 26.10.1998 ஆகிய இரு தினங்களிலும் கூட்டப் பட்டது. அந்தக் கூட்டத்தில் ஒருமனதாக மேற்கொள்ளப்பட்ட முடிவினையொட்டி, மாவட்டங்களுக்கு வைக்கப்பட்ட தலைவர்கள் பெயர்கள் திரும்பப் பெறப்பட்டு, அந்தத் தலைவர்களின் பெயர்களில், பல்கலைக் கழகங்களில் அறக்கட்டளைகள் தொடங்கப் பட்டன.




ஜெயலலிதாவுக்கு எதிராக வழக்கு தொடர ஆவணங்கள் தயாரித்த போது, தாக்கப்பட்ட வழக்கறிஞர் சண்முக சுந்தரம்!

அ.தி.மு.க. ஆட்சியில் கழகத்தினர் மீது போடப்பட்ட வழக்குகளில் கழகத்தினருக்கு ஆதரவாக வாதாடிய தற்காகவும், டான்சி நில வழக்கில் ஜெயலலிதாவுக்கு எதிராக வழக்குத் தொடர ஆவணங்கள் தயாரித்துக் கொண்டிருந்த போது வழக்கறிஞர் சண்முக சுந்தரம் அவர்கள் மிகக் கடுமையாகத் தாக்கப்பட்டார். உயிருக்கு ஆபத்தான நிலையில் அவர் மருத்துவ மனையிலே சேர்க்கப்பட்ட போது, நான் நேரில் சென்று பார்த்தேன். இரண்டு கைகளிலும், இரண்டு கால்களிலும், மூக்கிலும் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது.

நரம்புகள் அறுந்து இரத்தம் ஆறாகக் கொட்டி அந்தத் தாழ்வாரத்தில் பெருக்கெடுத்தது. அவரது இடது கையில் சுண்டுவிரல் துண்டிக்கப் பட்டுக் கீழே விழுந்தது. அருகில் இருந்த வழக்கறிஞர்கள் **மோகன்,** குமாஸ்தா **பாஸ்கர்** ஆகியோர் வன்முறைக் கும்பலைப் பிடிக்க முனைந்தபோது, பாஸ்கருக்கும் தலையிலே பலத்த வெட்டு விழுந்தது. பிழைப்பாரா, மாட்டாரா என்ற நிலையில்தான் அப்போதிருந்தார். மருத்துவமனையிலே ஒரு மணி நேரத்திற்குமேல் நான் அமர்ந்திருந்து, சண்முக சுந்தரம் அவர்களின் துணைவியாருக்கும், குடும்பத்தினரும் ஆறுதல் கூறிவிட்டுத் திரும்பினேன்.

அதன் பின்னர், 1996ஆம் ஆண்டில் நான் பதவிப் பொறுப்பேற்றதும், சென்னை உயர்நீதிமன்றத்தில் அரசு வழக்கறிஞராக -பப்ளிக் பிராசிக்கியூட்டராக - **சண்முகசுந்தரம்** அவர்களை நியமிப்பதா - அல்லது கழகத்திற்காக பல ஆண்டு காலம் பாடுபட்டவரும், மிசா சிறையிலே ஓராண்டு காலம் இருந்தவருமான வழக்கறிஞர் **ஏ.ஏ.ஜின்னாவை** நியமிப்பதா என்பதிலே ஒரு குழப்பம் ஏற்பட்டபோது, ஜின்னாவே முன்வந்து சண்முகசுந்தரம் அவர்களை நியமிக்கும்படி கூறியதன் பேரில், அரசு வழக்கறிஞராக சண்முகசுந்தரம் நியமிக்கப்பட்டார். அதைப் போலவே அட்வகேட் ஜெனரலாக வழக்கறிஞர் **கே.வி.வேங்கடபதி** நியமிக்கப்பட்டார். ஜின்னா அந்தக் காலத்தில் பெருந்தன்மையோடு விட்டுக் கொடுத்ததைக் கழகம் மறந்துவிடவில்லை என்பதற்கு அடையாளம்தான், அண்மையில் அவரே கேட்காத நிலையில், அவரைத் தேடிப் பிடித்து மாநிலங்களவை உறுப்பினர் பதவியை கழகம் அளித்தது.

23.6.1996 அன்று, பிரதமர் **தேவகவுடா** தலைமையில் டெல்லியில் நடைபெற்ற உயர்மட்டக் குழுக் கூட்டத்தில், நானும் **மூப்பனாரும்,** தம்பி **முரசொலி மாறனும்,** **சந்திரபாபு நாயுடுவும்,** மற்ற ஐக்கிய முன்னணி கட்சிகளின் தலைவர்களும் கலந்து கொண்டோம்.




எம்.ஜி.ஆர். இல்லத்தில் நானும், என் இல்லத்தில் அவரும் உணவருந்திய நாட்கள் ஏராளம்

மத்திய அரசிலும், தமிழக ஆட்சியிலும், அந்தக் கால கட்டத்தில் ஏற்பட்ட மாற்றம் - இலங்கை அரசுக்கு ஒரு திகைப்பை உண்டாக்கியது. அதன் விளைவாக இலங்கையின் வெளி நாட்டமைச்சர் **கதிர் காமர்** டெல்லிக்கு வந்து, பிரதமர் **தேவகவுடா** அவர்களையும், அப்போது இந்திய வெளி விவகாரத் துறை அமைச்சராக இருந்த **ஐ.கே. குஜ்ரால்** அவர்களையும், மத்திய தொழில் அமைச்சராக இருந்த தம்பி முரசொலி மாறனையும் சந்தித்துப் பேசினார்.

பின்னர் டெல்லியில் அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, டெல்லி பேச்சு வார்த்தைகளில் தனக்குத் திருப்தி ஏற்பட்டுள்ளது என்றும், ''இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் இந்தியா தலையிடாது'' என்று உறுதிமொழி அளித்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

மத்திய கூட்டணி அரசில் அப்போதும் இடம் பெற்றிருந்த தி.மு.க. சார்பில் என்னிடம் செய்தியாளர்கள் கேட்டபோது, ''இலங்கைப் போராளிகள் வேறு - இலங்கைத் தமிழர்கள் வேறு. இலங்கைத் தமிழர்கள் - குறிப்பாக ஈழத் தமிழர்கள் அமைதியாகவும், அவர்களுக்கு உரிய உரிமைகளோடும் வாழ வேண்டுமென்பதில் தி.மு.க.வுக்கும், அதன் தலைவனாகிய எனக்கும் எவ்விதக் கருத்து மாறுபாடும் இல்லை. அதிலும் குறிப்பாக அப்பாவித் தமிழர்கள் - ஈழத்தில் கொல்லப்படுவதும் - வாழ முடியாத சூழ்நிலையில் அவதிப்படுவதும் - நீண்ட காலமாகவே கவலையை அளிக்கக்கூடிய நிகழ்ச்சிகள் ஆகும். அதற்காக நாங்கள் தொடர்ந்து குரல் கொடுப்போம்'' என்று கூறினேன். அந்த நிலைதான் இன்றளவும் நீடித்துக் கொண்டு வருகிறது.



எம்.ஜி.ஆருக்கும் எனக்கும் பிளவு ஏற்படக் கூடாது என்று என் கரம் பிடித்து கண்ணீர் விட்டார், ஆர்.எம். வீரப்பன்!

விடுதலைப் புலிகள் பற்றி ஏடுகளில் செய்திகள் வந்ததைத் தொடர்ந்து, 28.6.1996 அன்று தலைமைச் செயலகத்தில் தலைமைச் செயலாளர், உள்துறை செயலாளர், டி.ஜி.பி., ஐ.ஜி. (புலனாய்வு) டி.ஐ.ஜி. (க்யூ பிரிவு) ஆகிய அதிகாரிகளை அழைத்துப் பேசினேன். விடுதலைப் புலிகள் நடமாட்டம் இருப்பதாகச் சொல்லப் பட்ட பகுதிகளுக்கு, போலீஸ் ஐ.ஜி (சட்டம் - ஒழுங்கு) பொறுப்பில் இருந்த **காளிமுத்துவை** அனுப்பி வைத்தேன். தொடர்ந்து கடற்படை, கடலோரக் காவல்படை, மத்திய புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் ஆகியோரையும் அழைத்துப் பேசினேன்.

பின்னர் செய்தியாளர்களிடம் கூறும்போது, ''தமிழ் நாட்டில் எந்த இடத்திலும் எல்.டி.டி.ஈ.யினரின் ஊடுருவலோ, கடத்தலோ தலை காட்டக் கூடாது. அதற்குரிய முன் எச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும். மீறிச் செயல்படுவோர் போராளிகள் ஆனாலும், அவர்களுக்கு உதவி செய்கிற தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க காவல் துறைக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது!'' என்று கூறினேன்.

96ஆம் ஆண்டு கழக அரசு பொறுப்பேற்ற பின்னர், தமிழகத்தில் அதற்கு முன்பிருந்த அ.தி.மு.க. ஆட்சியால் சீர்குலைக்கப்பட்டு விட்ட நிர்வாகத்தை சீர்படுத்துவதில் தீவிரமாக ஈடுபட்டது. ஒவ்வொரு துறையிலும் முந்தைய அரசால் நியாயமற்ற முறையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் ரத்து செய்யப்பட்டு, நேர்மையான - மக்களுக்கு நலம் பயக்கக் கூடிய நடவடிக்கைகளைக் கழக அரசு மேற்கொண்டது. அதன் ஒரு கட்டமாக, அ.தி.மு.க. ஆட்சியில் நியமனம் செய்யப்பட்ட பரம்பரை அல்லாத அறங்காவலர்

களின் பதவிக் காலத்தை முடிவுக்குக் கொண்டு வர குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்று ஆளுநர் சென்னாரெட்டி அவர்கள் அவசரச் சட்டம் பிறப்பித்தார். அந்த அவசரச் சட்டத்தின் மூலம், அ.தி.மு.க. அரசால் நியமனம் செய்யப் பட்ட பரம்பரை அல்லாத அறங்காவலர்களின் பதவிக் காலம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டத்தில், அ.தி.மு.க. ஆட்சியில் 1995ஆம் ஆண்டு கொடியங்குளம் கிராமத்தில், தாழ்த்தப்பட்ட மக்கள் காவல் துறையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டார்கள். அப்போது நடைபெற்ற அடக்குமுறைக் கொடுமைகள் குறித்து சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட வேண்டுமென்று கோரி, ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தார். இந்த வழக்கு விசாரணை 96ஆம் ஆண்டு தி.மு.கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு விசாரணைக்கு வந்தது. அப்போது அரசு வழக்கறிஞர், ''கொடியங்குளம் சம்பவம் பற்றி சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட கழக அரசு ஏற்கெனவே முடிவு செய்துள்ளது'' என்ற தகவலைத் தெரிவித்ததும், ''மனுமீது எந்த முடிவும் எடுக்கத் தேவையில்லை'' என்று நீதிபதி அறிவித்தார்.

1990ஆண்டு ஆண்டு, தமிழகத்தில் விடுதலைப் புலிகள் என்ற காரணத்தைக் காட்டி, தி.மு.கழக ஆட்சியைக் கலைத்தது பற்றி நாடே அறியும். அந்த அனுபவம் காரணமாக, 96ஆம் ஆண்டு தி.மு.கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததும், ஒரு சில பத்திரிகைகள் வேண்டுமென்றே, தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் கடத்தல் மற்றும் தீவிரவாதச் செயல்கள் நடைபெறுவதாகச் செய்திகளை வெளியிட்டார்கள். அந்தச் செய்தியின் அடிப்படையில் எதிர்க் கட்சித் தலைவர்கள் அறிக்கை மீது அறிக்கை விடத் தொடங்கினார்கள். எனவே 28.6.1996 அன்று, இந்தச் செய்திகளையொட்டி எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தலைமைச் செயலகத்தில், தலைமைச் செயலாளர், உள்துறைச் செயலாளர், காவல் துறையின் முக்கிய அதிகாரிகளையெல்லாம் அழைத்து ஆலோசனை நடத்தினேன்.

அதைப்பற்றி பின்னர் செய்தியாளர்கள் கேட்ட போது, ''இது மாதிரி கடத்தல்களோ - ஊடுருவல்களோ - தீவிரவாதிகளின் நடமாட்டமோ - தமிழ்நாட்டில் எந்த இடத்திலும் தலை காட்டக் கூடாது'' என்றும், அதற்குரிய முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும், மீறிச் செயல்படுவோர் தமிழீழ விடுதலைப் போராளிகளானாலும், அல்லது அவர்களுக்கு உதவி செய்கின்ற வகையில் தமிழ் நாட்டில் உள்ளவர்களானாலும் அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு காவல் துறைக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது'' என்றும் கூறினேன்.

தமிழகத்தில் சட்டம் -ஒழுங்கு பற்றி கூட்டம் நடைபெற்ற அதே நாளில். மத்திய அமைச்சரவையில் விரிவாக்கம் நடைபெற்றது. 14 பேர் புதிய அமைச்சர்களாக நியமிக்கப் பட்டனர். அதைப் பற்றி செய்தியாளர் ஒருவர் என்னிடம், ''மத்திய அமைச்சரவை விரிவாக்கத்தில் தமிழ் மாநில காங்கிரசுக்கு இரண்டு மாநில அமைச்சர் பதவிகள் கொடுக்கப்பட்டுள்ளதே - தி.மு.க.விற்குக் கொடுக்கப்பட வில்லையே?'' என்று என்னைக் கேட்டபோது, ''தி.மு.க.கழகத் திற்கும் இரண்டு மாநில அமைச்சர் பதவிகள் தருவதாக பிரதமர் தேவ கவுடா கூறியிருக்கிறார். அது பற்றிப் பேச என்னை டெல்லிக்கு வருமாறு தொலை பேசியிலே அழைத்தார். எனக்குத் தமிழகத்திலே வேலை இருப்பதால், முரசொலி மாறனிடம் கலந்து பேசுமாறு சொல்லியிருக்கிறேன். மாநில அமைச்சர்கள் கழகத்தின் சார்பில் யார், யார் என்பதை பொதுச் செயலாளர் பேராசிரியரைக் கலந்து கொண்டு கூறுவதாக இருக்கிறேன்'' என்று பதில் கூறினேன்.

மத்திய அமைச்சரவையில் தி.மு.கழகத்தைச் சேர்ந்த **டி.ஆர்.பாலு** மற்றும் **என்.வி.என்.** சோமு ஆகியோர் 5.7.1997 அன்று இடம் பெற்று, பதவிப் பொறுப்பேற்றனர். டி.ஆர். பாலுவுக்கு பெட்ரோலியம் துறையும், என்.வி.என். சோமுவுக்கு பாதுகாப்புத் துறையும் ஒதுக்கப்பட்டது. அதற்கு முன்பிருந்தவர்களையும் சேர்த்து மத்திய அமைச்சரவையில் தி.மு.க. சார்பில் நான்கு பேரும், த.மா.கா. சார்பில் 4 பேருமாக,



காட்டூரில் அன்னை அஞ்சுகத்தம்மையாரின் நினைவிடத்தில்,
சகோதரிகளுடன் அஞ்சலி!

8 பேர் தமிழகத்தின் சார்பில் இடம் பெற்றனர். தமிழகத்தின் சார்பில் மிகப் பெருமளவுக்கு மத்திய அமைச்சரவையில் பிரதிநிதித்துவம் கிடைத்தது அதுவே முதல் முறையாகும் என்பது வரலாறு.

நான் பதவியேற்ற ஒரு மாத காலத்தில், காலை டெல்லி செல்வதற்காக விமான நிலையத்திற்குப் புறப்பட்டுச் சென்று கொண்டிருந்தேன். வழியில் ''**தினமணி**'' நாளிதழைப் பார்த்தேன். அதிலே முதல் பக்கத்தில் ஒரு செய்தி. மதுரையிலே உள்ள பிரசன்ன வெங்கடாசலபதி திருக்கோவிலில் குடமுழுக்கு விழா நடைபெறுவதாகவும், அதற்கான அழைப்பிதழில் என்னுடைய புகைப்படத்தையும் வெளியிட்டிருப்பதாகவும், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் **வாழப்பாடி ராமமூர்த்தி** குற்றஞ்சாட்டியிருந்தார். விமான நிலையம் செல்லும் வழியிலே, தலைமைச் செயலாளரைத் தொடர்பு கொண்டு, உடனடியாக அதற்குக் காரணமான அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், அது போன்ற செயல்களை இனி யாரும் தொடரக் கூடாது என்றும் கண்டிப்பாகக் கூறினேன். அந்தக் கோவில் நிர்வாக அதிகாரியாக அப்போதிருந்த **தேனய்யா** என்பவர் பணியிலிருந்து இடை நீக்கம் செய்யப்பட்டார்.

நான் அவ்வாறு எடுத்த நடவடிக்கை பற்றி, ''முதல் அமைச்சரைக் குளிர்விக்கத் துடிப்பவர்களுக்கு அது ஒரு நல்ல படிப்பினை!'' என்றும்-

''விழித்துக் கொண்டிருக்கும் முதல்வரிடம் நெருங்கும் தைரியம் இனி எவருக்கும் அவ்வளவு சுலபத்தில் வர முடியாது!'' என்றும் - அதற்கெல்லாம் காரணம், அதற்கு முன்பிருந்த ஜெயலலிதாவை கன்னிமேரி அம்மையின் சாயலோடும், அம்மன் கோலத்தில் கையில் சூலத்துடன் சுவரொட்டிகள் ஒட்டியதுதான்!'' - என்றும் நாளேடு ஒன்று தலையங்கத்தில் குறிப்பிட்டிருந்தது.

இதுகுறித்து பொதுவாகவே அப்போது அரசின் சார்பிலேயே ஓர் அறிக்கையையும் வெளியிட்டேன். அந்த அறிக்கையில் -

''அரசு விழாக்கள், அவற்றிற்கு ஒதுக்கப்பட்ட தொகைக்கு மிகாமல் நடத்தப்பட வேண்டும். அழைப்பிதழ்களை ஆடம்பரமாக அச்சிடக் கூடாது. அவற்றில், விழா குறித்த சித்திரங்களுக்கும், புகைப்படங்களுக்கும் முதலிடம் தர வேண்டும். மாவட்டங்களில் நடைபெறும் மாநில அளவில் முக்கியத்துவம் வாய்ந்த விழாக்களுக்கு அழைப்பிதழ்களை செய்தித் துறை இயக்குநருடைய அனுமதி பெற்று, தமிழரசு அச்சகத்தில் அச்சிட்டுக் கொள்ள வேண்டும். மற்ற விழாக்களுக்கு அரசு கூறியுள்ள அறிவுரைகளின்படி எளிமையான முறையில் அழைப்பிதழ்களை அச்சிட்டுக் கொள்ளலாம். ஆடம்பரச் சுவரொட்டிகள் - வண்ண விளக்கு அலங்காரம் - கட்அவுட்கள் - சுவர் விளம்பரங்கள் - போன்றவை முற்றிலுமாகத் தவிர்க்கப்பட வேண்டும். விழா மேடையைச் சிக்கனமாகவும் - எளிமையாகவும் அமைக்க வேண்டும். தர்பார் நாற்காலிகள் போடுவதைத் தவிர்க்க வேண்டும். தேவைப் படும்போது நிழல் தருவதற்கு ''ஷாமியானா'' போன்ற ஏற்பாடுகளை எளிமையான முறையில் செய்து கொள்ளலாம். மலர் அலங்காரம் செய்வது - முக்கியப் பிரமுகர்களும் விருந்தினர்களும் வரும்போது, மலர் தூவி வரவேற்பது - போன்றவற்றை எக்காரணம் கொண்டும் செய்யக்கூடாது. அரசு விழாக்களில் நிறையப் பேர் மேடையில் ஏறி மாலை அணிவிப்பது, சால்வை போர்த்துவது போன்றவற்றைச் செய்து அந்த விழாவின் தன்மையைப் போக்குவதைத் தவிர்க்க வேண்டும். விழாவிற்கும்,

நிகழ்ச்சிக்குமான வேறு பாடுகளை முழுவதுமாகக் கடைபிடிக்க வேண்டும். அரசு நிகழ்ச்சிகளை விழாக் களைப் போல் நடத்தக் கூடாது. மனுநீதித் திட்டம்- ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் - விழிப்புணர்வு முகாம் - போன்றவற்றை விழாக்களைப்போல நடத்துவது நிறுத்தப்பட வேண்டும். அலங்கார வளைவுகள் - தோரணங்கள், மின் விளக்குகள் - இடம்பெறக் கூடாது. வளைவுகள் அமைப்பது என்ற பெயரில் சாலைகளில் குழிகளைத் தோண்டி சேதப்படுத்துவதற்கு அனுமதிக்கக் கூடாது. தனி நபர்களிட மிருந்தும், தனியார் நிறுவனங்களிடமிருந்து விழாவிற்காக எந்தவொரு அன்பளிப்போ, அல்லது பிற வகையில் உதவிகளோ பெறக்கூடாது. அது வேறு வகையில் அந்த நபர்களுக்கு சலுகைகள் செய்வதற்கு வழிவகுத்து விடும் என்பதால், அவற்றை முற்றிலுமாகத் தவிர்க்க வேண்டும். விழாக்களுக்கு செய்தித் தாள்களில் பெரிய விளம்பரங்கள் தருவது கூடாது'' என்று சொல்லப்பட்டிருந்தது.




மத்திய அமைச்சரவையில் இடம் பெற்ற டி.ஆர்.பாலுவும், என்.வி.என்.சோமுவும்

திராவிடப் பல்கலைக் கழகம் ஒன்றை நிறுவிட ஆந்திர அரசு திட்டமிட்டு, மத்திய அரசிடம் அதற்கான ஒப்புதலைப் பெற்றது. கல்வி மேம்பாடு - திராவிட மக்களுடைய கலைப் பண்பாடு - இலக்கியம் - அவர்களுடைய சமூக உணர்வு - ஆகியவற்றை வெளி உலகத்திற்குப் பறைசாற்றும் மையமாக அந்தப் பல்கலைக் கழகம் திகழும் என்றும், மத்திய அரசின் நிதி உதவி, மற்றும் தென் மாநில அரசுகளின் நிதி உதவி ஆகியவற்றுடன் இந்தப் பல்கலைக் கழகம் செயல்படும் என்றும் கூறப்பட்டது. 1996ஆம் ஆண்டு தி.மு.கழக அரசு பொறுப்பேற்ற பின்பு, ஆந்திர முதல்மைச்சராக இருந்த திரு.சந்திரபாபு நாயுடு தமிழக அரசு இந்தப் பல்கலைக் கழகத்திற்கு நிதி உதவிட வேண்டுமென்று எழுதிய கடிதத்தை உடனடியாக நான் ஏற்றுக் கொண்டு, முதல் தவணையாக 50

இலட்சம் ரூபாய் தமிழக அரசின் சார்பில் அனுப்பி வைத்தேன். அப்போது தொடங்கப்பட்ட அந்த திராவிடப் பல்கலைக் கழகம் இன்றளவும் திறம்பட செயலாற்றி வருகிறது.

3.7.1996 அன்று ஒரு மணவிழாவிலே கலந்து கொண்டேன். திராவிட இயக்கத்தின் வைரத் தூண்களில் ஒருவராகவும், என்னுடைய அன்புக்குரிய நண்பர்களில் ஒருவராகவும், இயக்கத்தின் மூத்த முன்னோடிகளில் ஒருவராகப் பணியாற்றியவருமான **சி.வி.எம். அண்ணாமலை** அவர்களின் இல்லத்தில் அவருடைய பேரன் எழிலரசனின் மணவிழாதான் அது. அந்த மண விழாவில் என்னோடு இலட்சிய நடிகர் **எஸ்.எஸ்.ஆர்., நாஞ்சிலார், தம்பி துரைமுருகன்** ஆகியோர் கலந்து கொண்டனர். அவரது இல்ல மணவிழாவில் கலந்து கொண்ட நிகழ்ச்சியை இங்கே நான் குறிப்பிடும் போது, அவரைப்பற்றி இந்தத் தொடரில் குறிப்பிட வேண்டியது மிகவும் முக்கியம் என்று கருதுகிறேன்.

காஞ்சிபுரம் சென்றாலும், அல்லது அண்ணா சென்னைக்கு வந்தாலும், கழகம் சம்பந்தமான எந்தவொரு செயலானாலும், எந்தவொரு திட்டம் ஆனாலும், எந்தவொரு விவகாரமானாலும் அதிகம் குறிப்பாக செங்கல்பட்டு மாவட்டத்தை அல்லது அதைச் சார்ந்த தென்னார்க்காடு வடார்க்காடு மாவட்டங்களைப் பின்னிப் பிணைந்துள்ள செய்திகளாக இருக்குமானால், ''அண்ணாமலையிடம் அதைப் பற்றிக் கலந்து கொள்ளுங்கள்'' - ''அண்ணாமலையை வரச் சொல்லுங்கள்'' என்று அண்ணா அவர்கள் அடிக்கடிச் சொன்னதைக் கேட்டு பழகியவர்கள் நாங்கள். அந்த அளவிற்கு இந்த இயக்கத்தினுடைய நன்மை தீமைகள் - செயல்பாடுகள் - அதில் அண்ணா அவர்களுடைய வழிகாட்டுதல் - அந்த வழிகாட்டுதலையொட்டி



ஆந்திர அரசால் நிறுவப்பட்ட திராவிடப் பல்கலைக் கழகத்திற்கு, தமிழக அரசு சார்பில் ரூ.50 இலட்சம் உதவினேன்!

எங்களுக்கு எல்லாம் அன்றைய செங்கல்பட்டு மாவட்டத்தில் பெருந் துணையாக விளங்கியவர் சி.வி.எம். என்று அனை வராலும் அழைக்கப்பட்ட சி.வி.எம். அண்ணாமலை அவர்கள்.



மாறன் எதைச் செய்தாலும், அது என் உள்ளத்திற்கும், உடலுக்கும் நலமே பயக்கும்!

1949ஆம் ஆண்டு, அண்ணா அவர்கள் தி.மு.கழகத்தை உருவாக்கி, அதன் மூலம் மாநில மாநாட்டினை சென்னை எஸ்.ஐ.ஏ.ஏ.திடலில் 1952ஆம் ஆண்டு நடத்தியது பற்றி நான் ஏற்கனவே எழுதியிருக்கிறேன். அப்போது அங்கே மாநில மாநாட்டினை நம்மால் நடத்த முடிந்தது. இப்போது நமது மாவட்ட மாநாட்டினைக்கூட அங்கே நடத்த இடம் போதாது. அப்போது அந்த மாநாட்டை நடத்துவதற்கு செலவுக்குப் பணம் திரட்ட வேண்டிய பெரும் சங்கடம் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும், எங்களுக்கும் ஏற்பட்டது. அப்போது ஒவ்வொரு நாளும் அண்ணா அவர்கள் சென்னையிலே தோழர்களோடு அமர்ந்து மாநாட்டுப் பந்தல் வேலைகளை அவரே கவனித்துக் கொண்டிருப்பார். சி.வி.எம். அண்ணாமலை அவர்கள் என்னை அழைத்துக் கொண்டு செங்கல்பட்டு மாவட்டத்தில் கூட்டங்களுக்குத் தேதி தந்து, ஒவ்வொரு கூட்டத்திலும் இருநூறு ரூபாய் மாநாட்டு நிதியாக அன்றைக்கு வாங்கித் தருவார். ஒரு நாளைக்கு ஏழு கூட்டம், எட்டு கூட்டம் இருக்கும். கூட்ட முடிவில் மொத்தமாக கிடைப்பது ஆயிரத்து அறுநூறு அல்லது ஆயிரத்து எண்ணூறு ரூபாய் என்ற அளவில் நிதி திரளும். விடியற்காலை இரண்டு அல்லது மூன்று மணிக்குத்தான் இரவு சாப்பாடு போடுவார்.

நானும், சி.வி.எம். அவர்களும் அந்தக் கூட்டங்களை யெல்லாம் முடித்துவிட்டு, ஆயிரம்ரூபாய், இரண்டாயிரம்

ரூபாய் பணத்தோடு நேராக எஸ்.ஐ.ஏ.ஏ.திடலுக்குத் தான் வருவோம். அங்கே குவிக்கப்பட்டிருந்த மணலிலே அண்ணா அமர்ந்திருப்பார். தோழர்கள் சுற்றிலும் அமர்ந்திருப்பார்கள். **ஈ.வி.கே.சம்பத், நாவலர், பேராசிரியர், நாஞ்சிலார்** என்று அவர்கள் எல்லாம் அமர்ந்து பேசிக் கொண்டிருப்பார்கள். அண்ணாவிடம் பெருமையோடு பணத்தைக் கொடுப்போம்.

அண்ணா பணத்தை வாங்கிக் கொண்டு, ''எங்கே சாப்பிட்டாய்?'' என்று கேட்பார்.

''உத்திர மேரூரில் அண்ணா!'' என்று சொல்வேன். ''என்ன சாப்பாடு?'' என்று கேட்டுவிட்டு, நான் பதில் கூறுவதற்குள் அண்ணாவே, ''அண்ணாமலைக்கு வேண்டியதையெல்லாம் உன் பெயரைச் சொல்லி தயாரித்து வைக்கச் சொல்லியிருப்பாரே?'' என்று வேடிக்கையாகச் சொல்வார்.

இரவு இரண்டு மணிக்கும் மூன்று மணிக்கும் கோழி வறுவல், கோழிக் குழம்பு, ஆட்டுக் கால், என்று இன்னோரன்ன அசைவ பதார்த்தங்களோடு எனக்காக என்று, உணவு வகைகளைக் கூட்டம் நடைபெறுகின்ற ஊர்களிலே உள்ள கழகத் தோழர்களிடம் கூறித் தயாரிக்கச் சொல்லி, என்னை அருகே உட்கார வைத்துவிட்டு, அவர் நன்றாகச் சாப்பிடுவார். நான் பக்கத்தில் அவர் ரசித்துச் சாப்பிடுவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பேன்.

தந்தை பெரியார் அவர்கள்கூட நிறைய சாப்பிடுவார். அளவுக்கு மீறிக்கூடச் சாப்பிடுவார். தள்ளாத வயதிலும்கூட, ''செரிக்காது - சாப்பிடாதீர்கள்'' என்று டாக்டரே சொன்னாலுங்கூட, ஆட்டுக்கறி சாப்பிடுவார். கோழிக்கறி, மீன் எல்லாம் சாப்பிடுவார். ராஜாஜி எதுவும் சாப்பிட மாட்டார். ஒரு அல்வா துண்டுதான் எடுத்துக் கொள்வார். ஆனால், பெரியாரும் 95ஆண்டு காலம் வாழ்ந்தார். எதுவும் சாப்பிடாமல் குறைவாகச் சாப்பிட்ட ராஜாஜியும் ஏறத்தாழ அந்த வயது வரையிலேதான் வாழ்ந்தார்.

அதைப் போலவே குறைவாகச் சாப்பிட்ட நான் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். அதிகமாகச் சாப்பிட்ட சி.வி.எம். விரைவிலே நம்மை விட்டு மறைந்து விட்டார்.

தம்பி முரசொலி மாறன்கூட அசைவ உணவுகளை - குறிப்பாக மீன் வகைகளை மிகவும் ரசித்துச் சாப்பிடுவார். ஒரு முறை - சில ஆண்டுகளுக்கு முன்பு - நான், மாறன் ஆகியோர் மாமல்லபுரம் சென்றிருந்தோம். அங்கே அனைவரும் ஒன்றாக அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த போது, மீன் வைத்தார்கள். ஐந்தாண்டுகளுக்கு முன்பு எனக்கு வயிற்றில் ஒரு பெரிய கோளாறு ஏற்பட்டு, அறுவை சிகிச்சையைத்தான் செய்து கொள்ள வேண்டுமென்று டாக்டர்கள் வற்புறுத்தினார்கள்.

ஆனால், டாக்டர் சுரேந்தர் மட்டும், ''உணவுக் கட்டுப்பாடாகச் சாப்பிட வேண்டும் - அதாவது காரமே கூடாது - புளி கூடாது - அசைவம் கூடாது - வெறும் ரசம் சாதம் மட்டுமே சாப்பிடலாம்!''என்றெல்லாம் கூறியபோது, நான், ''அறுவை சிகிச்சை தேவையில்லை - உணவிலே கட்டுப்பாடாக இருக்கிறேன்'' என்று கூறினேன்.

அவ்வாறுதான் கடந்த ஐந்தாண்டு காலமாக சாப்பிட்டும் வருகிறேன். ஒரு காலத்தில் மதியம் கோழி குழம்பு, இரவு விரால் மீன் குழம்பு என்றுதான் அன்றாடம் என் சாப்பாடு இருக்கும். ஆனால், தற்போது வெறும் ரசம்தான், ஒரு சில நாட்களில் உப்புச் சப்பில்லாத சாம்பார் - தயிர் சாதம் என்று அளவிலேதான் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன்.

அதனால் மாமல்லபுரத்தில் நானும், மாறனும் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, எனக்கு மீன் பரிமாற வந்தார்கள். அப்போது நான், ''எனக்கு வேண்டாம், தம்பிக்கு மட்டும் வையுங்கள்'' என்று கூறினேன். நான் மீன் சாப்பிடாமல் இருப்பதை மாறனால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. ''ஏன் மாமா? மீன் வைத்துக் கொள் - ஒன்றும் செய்து விடாது'' என்று என்னை வலியுறுத்தி, அதனைப் பரிமாறச் செய்து சாப்பிடச் செய்தான்.

அவனது அன்பின் காரணமாகவோ என்னவோ, அன்று நான் மீன் சாப்பிட்ட போதிலும், என் உடல் நலனுக்கு எந்தப் பாதிப்பும் வரவில்லை. மாறன் எதைச் செய்தாலும், எனது உள்ளத்திற்கும், உடலுக்கும் நலம் பயக்குமா என்று தெரிந்துதான் செய்வான் என்பதற்கு இதுவும் ஓர் உதாரணம்.

10. கறுப்பு நிலாவும், கலைவாணர் நினைவும்!

27-3-1997 அன்று, தென்னாப்பிரிக்க அதிபர் **நெல்சன் மண்டேலா** இந்தியாவில் மூன்று நாட்கள் சுற்றுப் பயணமாக டெல்லி வந்தார். குடியரசுத் தலைவராக இருந்த சங்கர் தயாள் சர்மா அவர்கள் மண்டேலாவிற்கு வரவேற்பு விருந்து அளித்தார். குடியரசுத் துணைத் தலைவராக இருந்த **கே.ஆர். நாராயணன்,** வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்த **ஐ.கே.குஜ்ரால்** ஆகியோரையும் மண்டேலா சந்தித்துப் பேசினார். 28ஆம் தேதியன்றி பிரதமர் **தேவகவுடா** அளித்த விருந்தில் கலந்து கொண்டதோடு, இரண்டு நாடுகளின் உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்தியாவுக்கும் தென்னாப்பிரிக்காவுக்கும் இடையே வரலாற்றுச் சிறப்புமிக்க **செங்கோட்டைப் பிரகடனம்** 28-3-1997 அன்று டெல்லியில் கையெழுத்தாகியது. அதில் இந்தியப் பிரதமர் தேவகவுடா அவர்களும், தென் ஆப்பிரிக்க அதிபர் மண்டேலா அவர்களும் கையெழுத்திட்டனர்.

அதற்கு ஏழு ஆண்டுகளுக்கு முன்பு, சரியாகச் சொல்ல வேண்டுமேயானால், 1990ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள், 11ஆம் நாள் காலை, திருச்சியில் திராவிட முன்னேற்றக் கழக மாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, இடையிலே ஒரு பெருக்கியின் முன்னால் வந்து நின்று நான் கூறினேன்.

''தமிழ்ப் பெருங்குடி மக்களே! கழக உடன்பிறப்புக்களே! எல்லையற்ற மகிழ்ச்சியை ஏந்தி வந்துள்ள செய்தி - 27 ஆண்டு காலம் சிறையில் அடைப்பட்டுக்கிடந்த தென் ஆப்பிரிக்க நாட்டின் கறுப்பர் இனத் தலைவன் நெல்சன் மண்டேலா

விடுதலை செய்யப்பட்டு விட்டார் - இந்த மகிழ்ச்சியைக் கொண்டாட மாநாட்டுப் பந்தலில் குழுமி இருக்கும் அனைவரும் எழுந்து நின்று, தொடர்ந்து கையொலி செய்யுங்கள்.''


''நான் போதும் போதும்'' என்று கையமர்த்தும் வரையில்; கடலில்லா திருச்சியில் கடலலைகளின் முழக்கத்தைச் செய்தனர்.

1918 ஜூலை 18 மண்டேலா பிறந்த நாளாகும் - கறுப்பின மக்களிடையே நெல்சன் மண்டேலா குடும்பத்தினர் **ஃகோஸா** இன வகையைச் சேர்ந்தவர்கள். அக்குலத்தின் தலைவராக மண்டேலாவின் தந்தை இருந்தார். அவர் பெயர் **ஹென்றி கான்யிஸ் வா காட்லா** என்பதாகும். அவருக்கு நான்கு மனைவிகள் - பனிரெண்டு குழந்தைகள் - மூன்றாம் மனைவியின் மகன்தான் நெல்சன் மண்டேலா.

குடிசையில் பிறந்து, குடிசையில் வளர்ந்தவர்! குடும்பத்துக்கு மொத்தம் மூன்று சின்னஞ்சிறு குடில்கள் - ஒன்று சமைத்திட! ஒன்று பொருள்களைச் சேமித்திட - ஒன்று உறங்கிட! பாய்களில் தான் படுக்கை அவர்கள் அனைவருக்கும்!



இந்தியா வந்த நெல்சன் மண்டேலாவை வரவேற்கும்
சங்கர் தயாள் சர்மா, தேவகவுடா



நெல்சன் மண்டேலா பிறந்த குடில்


ஆரம்ப வயதில் ஆடு மாடுகள் மேய்க்கிற வேலை மண்டேலாவுக்கு - அவர் அன்னை எழுதப் படிக்கத் தெரியாதவர் - ஆயினும் மகனைப் பள்ளிக் கூடத்துக்கும் அனுப்பி வைத்தார்.

1928ஆம் ஆண்டுக்குள் மண்டேலாவின் தந்தை இறந்துவிடவே, அந்தத் தந்தையின் மைத்துனரான **ஜோன் கிண்டாபா** என்பவர், மண்டேலாவின் படிப்பைக் கவனித்துக் கொண்டார்.

க்யூனு எனப்படும் மண்டேலா பிறந்த ஊரில், ஓய்வு நேரங்களில் பெரியோர்கள் கூறும் தமது இனத்தவர் பற்றிய பழைய கதைகளையும், வெள்ளையர்களால் தம்மின வரலாறுகள் மறைக்கப்பட்டதையும், வெள்ளையர் நுழைவுக்கு முன்பு அங்கிருந்த கலை - கலாச்சாரம் - வாழ்க்கை முறைகளையும் - பெரியோர்கள் கூறிடக் கேட்டு புத்துணர்ச்சி பெற்ற மண்டேலா, படிப்பையும் விடவில்லை - ஆடு, மாடு மேய்க்கும் வேலையையும் தொடர்ந்தார்.

அதே சமயம் தமது இனத்தாரின் துயர் துடைத்து, உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டுமென்று அந்த இளம் வயதிலேயே அழுத்தமான உறுதி பூண்டார், மண்டேலா.

1938ஆம் ஆண்டு அவரது உறவினர் ஜோன் கிண்டாபா முயற்சியினால், மண்டேலா முதலில் ''கெல்ட் டவுன்'' கல்லூரியிலும் - பிறகு ''போர்ட்ஹேர்'' கல்லூரியிலும் சேர்க்கப்பட்டார்.



27ஆண்டு காலம் மண்டேலா அடைக்கப்பட்டிருந்த சிறைச்சால

அப்போதுதான் அவரது முதல் போராட்டத்துக்கான துளிர்விடத் தொடங்கியது. அங்கே வெளிப்பட்ட இன வேற்றுமைக் கொடுமையை எதிர்த்து இளைஞர் மண்டேலா தலைமையில் வேலை நிறுத்தம் அறிவிக்கப்படவே கல்லூரி நிர்வாகம் மண்டேலாவை வெளியேற்றியது! ஆம் - மண்டேலாவுக்கு அவர் நடத்திய உரிமைப் போரில் கிடைத்த முதல் தண்டனை அது!

''மன்னிப்பு கேட்டுக் கொண்டால் மீண்டும் கல்லூரியில் சேரலாம்'' என்று கூறப்பட்டது. அதை ''மானப் பிரச்சினை'' என்று கூறி மறுத்துவிட்டார் மண்டேலா.

பின்னர் தனது மாமன் மகன் **ஜஸ்டிஸ்** என்பவருடன் சேர்த்து **ஜோகன்ஸ்பெர்க்** நகருக்குச் சென்று, தங்கச் சுரங்கத்தில் வேலை பார்த்தார். அங்கிருந்தும் அவரது உறவினர் தூண்டுதலால் வெளியேற்றப்பட்டதால், மண்டேலா சட்டம் படித்திட முனைந்தார். **லாசா சிடிங்ஸ்கி** என்ற வெள்ளைக்கார வழக்கறிஞரிடம் சட்டக் கல்வியில் பயிற்சி பெற்று திறமையாளர் ஆனார்.

மண்டேலா வாழ்க்கை கட்டுப்பாடு மிக்கது என்றும் - அதிகாலையில் எழும் வழக்கமுடையவர் என்றும் - நாளும் தவறாமல் நடைப் பயிற்சி மேற்கொண்டவர் என்றும் - எளிமையான உணவே அருந்தி, எப்போதும் சுறுசுறுப்புடன் பணியாற்றுபவர் என்றும் - பெண்களுக்குத் துணையாக அடுக்களை வேலைகளில்கூட ஈடுபடுவார் என்றும் - அவரது சரித்திரக் குறிப்புகள் கூறுகின்றன.

கறுப்பர் இன மக்களுக்கும் வெள்ளையருக்குமிடையே கடுமையான புகைச்சலும் - மோதுதல்களும் இருந்தபோதிலும் மண்டேலா இரு தரப்பு மாணவர்களிடமும் பரந்த மனத்துடனும் பண்பாட்டுடனும் நேசமாகப் பழகி, அமைதியாகக் காந்திய வழியிலே அறப்போர் நடத்தி இன வேற்றுமைக் கொடுமையை அகற்ற நினைத்தார்!

1948ஆம் ஆண்டு மண்டேலா **இளைஞர் அணியின்** பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட

காலகட்டத்தில் கறுப்பின மக்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடைகள் அவர் கண்களை உறுத்தின. ''காஃபிர்'' என்ற இழிந்த வார்த்தையினால் கறுப்பின மக்கள் அழைக்கப்பட்டதையும் - தெருக்களில் நடமாட முடியாமல் தடுக்கப்பட்டதையும் - மண்டேலாவினால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அது மட்டுமா? கறுப்பின மக்களின் நிலங்களை வெள்ளையர் பறித்துக் கொண்டனர் - வெள்ளையர் கறுப்பரிடையே காதல் மற்றும் கலப்பு மணங்கள் சட்ட விரோத மாயின - இனப்பகை பெரும்பகை - கறுப்பினத்தாருக்கு வேலைகள் மறுக்கப் பட்டன - கேளிக்கை இடங்களில் அவர்களுக்கு அனுமதி இல்லை - மீறினால் கடும் தண்டனை!

இந்தக் கொடுமைகளை எதிர்த்து, 1948ல் இளைஞர் அணியின் செயலாளரான மண்டேலா, 1949ல் கூட்டிய மாநில மாநாடு ஒன்றில், வெள்ளையர் ஆட்சிக்கு எதிராக ஒத்துழையாமை இயக்கத்தை நடத்தத் தீர்மானம் நிறைவேற்றினார்.

அதைத் தொடர்ந்து, அவர் 1951ல் இளைஞர் அணியின் தலைவராகவே தேர்வு செய்யப்பட்டார். அப்போது அவருக்கு வயது முப்பத்து மூன்றுதான்!

வெள்ளையர் வெறித்தனத்தை எதிர்த்து அமைதியாக அரும்பிய மண்டேலாவின் அறப்போர், புரட்சி மலராகவும் பூத்திடத் தவறவில்லை.

புரட்சிகள் - கிளர்ச்சிகளின் விளைவாக - சிறைப்பட்ட மண்டேலாவை நாட்டைவிட்டு வெளியேறுவதாக இருந்தால், விடுதலை செய்வதாக தென்னாப்பிரிக்கா வெள்ளையர் அரசு கூறியது.

அதற்கு மண்டேலா மறுப்புரைத்து, ''எங்களுக்குச் சுதந்திர உரிமை இல்லையென்றால், நான் அடைபட்டுள்ள சிறைச் சாலையே திருப்தி அளிக்கக்கூடியது'' என்று கூறிவிட்டார்.

அவர் நடத்திய போராட்டங்களின் தொடர்ச்சியாக நீண்ட கால சிறை வாழ்க்கையைத்தான் அவர் ஏற்றுக் கொள்ள நேர்ந்தது. சிறையில் ஆரம்ப நிலையில் கேவலமான உணவு -

அதுவும் பசியை அடக்கக் கூடியதல்ல - கல் தரையின்மீது உறங்குவதற்கு ஒரு பாய் - நாளேடுகள் வைத்திருந்தால் சிறை சட்டப்படி தண்டனை - நாள் முழுவதும் வேலை - ஒவ்வொரு நாளும் வேலை முடிந்ததும் உடைகள் அவிழ்க்கப்பட்டு சோதனை - இவ்வளவு கொடுமைகளையும் அனுபவித்த மண்டேலா, இளமை முதல் அவர் கொண்ட வைராக்கியத்தின் எதிரொலியாக, சிறைக் கொடுமைகளைப் பற்றி அவர் சொன்ன வாசகம் பின் வருமாறு :

"சிறைக் கொடுமை என்னை இன்னலுக்கு ஆளாக்கவில்லை. சிறைக்கு வெளியே என் மக்கள் அனுபவிக்கும் துன்ப துயரங்களை எண்ணித்தான் நான் வேதனையைத் தாங்கிக் கொள்ள முடியாமல் இருக்கிறேன்"

- என்பதாகும்.

தேச விடுதலைப் போராட்ட வீரர்கள் கைது செய்யப்பட்டு, சுமார் 27 மாதங்களுக்குப் பிறகுதான் அவர்கள் மீதான வழக்கு விசாரணைக்காகவே எடுத்துக் கொள்ளப்பட்டது. குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்பட்ட விடுதலைப் போராட்ட வீரர்கள் அனைவரும் தாங்கள் எந்த விதமான குற்றமும் செய்யவில்லை என்று மறுப்பு தெரிவித்தனர். அவர்களுக்குத் தரப்பட்ட குற்றப் பத்திரிகை மட்டும் 2000 பக்கங்கள் கொண்டதாக இருந்தது. 210 சாட்சிகள் விசாரிக்கப்பட்ட வேண்டுமென்று கோரப்பட்டத்தில், 200 பேர் காவல் துறையைச் சார்ந்தவர்கள்.

வழக்கு விசாரணை திருச்சபை அமைந்துள்ள பழைய காலக் கட்டிடம் ஒன்றிலே தொடர்ந்து நடைபெற்றது. அந்தத் திருச்சபையின் பாதிரியாருடைய அறைதான் உணவருந்தும் இடமாகப் பயன்படுத்தப்பட்டது. அந்த நேரத்தில் திருமதி தையநாயகி பிள்ளை என்ற ஒரு அம்மையார்தான் தொண்டர் அணியினருடன் இணைந்து, இந்திய முறைப்படி உணவுப் பொருட்களைத் தயாரித்து விசாரணைக் கைதிகளுக்கு அளித்து வந்திருக்கிறார். முற்பகலில் வடையும் தேநீரும் என்றும் - பிற்பகலில் அது போலவே ஏதாவது சிற்றுண்டியும் தேநீரும் என்றும் - மதியம் இந்திய முறைப்படியான உணவு என்றும் -

அந்த அம்மையார் பரிமாறியிருக்கிறார். இவ்வாறு தென்னாப்பிரிக்கப் போராட்டத்தில் ஈடுபட்ட போராட்ட வீரர்களுக்கு வழக்கு நடைபெற்ற நாட்களில் எல்லாம் உணவளித்து - உபசரித்த அந்த திருமதி தையநாயகி பிள்ளை என்பவர் யார் தெரியுமா? அவர் தமிழ்நாட்டில் பிறந்த ஒருவரின் வழி வந்தவர் என்பதை நெல்சன் மண்டேலா பற்றிய வாழ்க்கை வரலாற்றுப் பக்கங்களில் காணும்போது, நம்மையும் அறியாமல் ஒரு மகிழ்ச்சி நம் உள்ளத்தில் ஏற்படத்தான் செய்யும்.

மாவீரன் நெல்சன் மண்டேலா இந்தியாவிற்கு வருகை தந்ததை இந்தத் தொடரில் குறிப்பிடுகின்ற நேரத்தில், 2007ஆம் ஆண்டு **''வெள்ளை இருட்டை விலக்க வந்த கறுப்பு நிலா''** என்ற தலைப்பில், நான் எழுதிய மண்டேலாவின் வாழ்க்கை வரலாற்றில் சில பக்கங்களைப் புரட்டினேன். அவ்வளவுதான் தொடர்ந்து தொடருக்கு வருகிறேன்.

தமிழக அரசின் சார்பில், 1994ஆம் ஆண்டுக்கான சிறந்த கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கும் விழா 18-8-1996 அன்று மாலையில், சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடைபெற்றது. அப்போது ஆளுநராக இருந்த **சென்னாரெட்டி** அந்த விழாவிற்குத் தலைமை வகித்தார். விழாவில் சிறப்பு விருந்தினராக சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார். மேலும் விருது





1994ஆம் ஆண்டின் சிறப்பு நடிகராகத் தேர்வு செய்யப்பட்ட சரத்குமார்!

பெற்றவர்கள் சார்பில் **விஜயகாந்த், சரத்குமார்** ஆகியோர் உரையாற்றினர். துறையின் அமைச்சர் என்ற முறையில் **முல்லைவேந்தன்** வரவேற்பு உரையாற்றினார். விருதுகளை அனைவருக்கும் வழங்கி நான் பாராட்டினேன்.

சிறந்த படத்திற்கான விருது முதல் பரிசாக **''நாட்டாமை''** படத்திற்கு வழங்கப்பட்டது. அதனை அந்தப் படத்தின் தயாரிப்பாளர் **ஆர்.பி. சவுத்ரி** பெற்றுக் கொண்டார். இரண்டாம் பரிசு **''நம்மவர்''** படத்திற்கு வழங்கப்பட்டது. மூன்றாம் பரிசு **''பவித்ரா''** படத்திற்கு வழங்கப்பட்டது. சிறப்புப் பரிசு **''கருத்தம்மா''** படத்திற்கு வழங்கப்பட்டது. விருதினை இயக்குநர் **பாரதிராஜா** பெற்றுக் கொண்டார்.

கலைத்துறை வித்தகர்களுக்கான விருதாக அறிஞர் அண்ணா விருதினை வசனகர்த்தா **ஆரூர்தாசிற்கும்** - பாவேந்தர் பாரதிதாசன் விருது பாடலாசிரியர் **வாலிக்கும்** - ராஜா சாண்டோ விருது இயக்குநர் **எஸ்.பி.முத்துராமனுக்கும்** - கலைவாணர் விருது நகைச்சுவை நடிகர் **செந்திலுக்கும்** - எம்.ஜி.ஆர். விருது எழுச்சிக் கலைஞர் **விஜயகாந்திற்கும்** வழங்கப்பட்டது.

சிறந்த நடிகருக்கான விருது **சரத்குமாருக்கும்** - சிறந்த நடிகைக்கான விருது ''கருத்தம்மா'' படத்தில் நடித்த **ராஜஸ்ரீக்கும்** - சிறந்த நடிகர், சிறப்பு விருதினை **''நம்மவர்''** படத்தில் நடித்தற்காக **நாகேஷுக்கும்** - சிறந்த நடிகை சிறப்பு விருதினை ''மகளிர் மட்டும்'' படத்தில் நடித்த **ஊர்வசிக்கும்** - சிறந்த இயக்குநர் விருதினை நாட்டாமை பட இயக்குநர் ரவிக்குமாருக்கும், சிறந்த கதாசிரியர் விருதினை **ஈரோடு சௌந்தருக்கும்,** சிறந்த உரையாடல் ஆசிரியர் விருது **பாலகுமாரனுக்கும்**, சிறந்த இசையமைப்பாளர் விருது **ஏ.ஆர்.ரகுமானுக்கும்,** சிறந்த பாடலாசிரியர் விருது கவிப்பேரரசு **வைரமுத்துவுக்கும்,** சிறந்த பின்னணிப் பாடகர் விருது **எஸ்.பி.பாலசுப்பிரமணியத்திற்கும்** மற்றும் பலருக்கு பல தலைப்புகளிலும் வழங்கப்பட்டன.

1994ஆம் ஆண்டுக்கான இந்த விருதுகள் எல்லாம் 1995ஆம் ஆண்டிலே வழங்கப்பட்டிருக்க வேண்டும். என்ன காரணத்தாலோ, அந்த ஆட்சியிலே இந்த விருதுகள் வழங்கப்படாத காரணத்தினாலே, 96ஆம் ஆண்டில் தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு வழங்கப்பட்டது. இன்னும் சொல்லப்போனால், 1994ஆம் ஆண்டுக்கான திரைப்படத் தேர்வுக் குழு அ.தி.மு.க. ஆட்சியால் அறிவிக்கப்பட்டு, அந்தக் குழு யார் யாருக்கு விருதுகளை வழங்க வேண்டுமென்று தேர்வு செய்து, அவர்களின் முடிவுகளை ஒரு உறையிலிட்டு அரசிடம் ஒப்படைத்தும், அந்த உறை பிரிக்கப்படாமலே அப்படியே கிடந்தது. கழக ஆட்சியில்தான் அந்த உறை பிரிக்கப்பட்டு, விருதுகள் அறிவிக்கப்பட்டு, முறைப்படி விழாவும் நடைபெற்றது.

அந்த விழாவில் **சூப்பர் ஸ்டார் ரஜினி** பேசும் போது, ''முதல்வர் கலைஞர் அவர்களை வாழ்த்திப் பேசுவதற்கு எனக்கு வயதோ அறிவோ இல்லை. ஆண்டவன் ரூபத்தில் வந்து இந்தத் தமிழ்நாட்டை கலைஞர்தான் காப்பாற்றியிருக்கிறார். இப்போது கலைஞர் எப்படி ஆட்சி நடத்திக் கொண்டிருக் கிறார் என்பதை மயிலாப்பூரிலும், சைதாப் பேட்டையிலும், டெல்லி நாடாளுமன்ற வட்டாரத்திலும் பேசிக்



''கழகம்தான் கலைஞரின் மூச்சு - உடம்பு - உயிர் - கோவில் - எல்லாமே'' என்றார், ரஜினிகாந்த்!

கொண்டிருக்கிறார்கள். நாடாளுமன்றத்திற்குள் பேசுகிற காலமும் வரும். ஒரு பெரிய அரசியல் தலைவர், அவருடைய பெயரை இங்கே சொல்லக் கூடாது - ''இந்த மாதிரி சூழ்நிலையில் - கால கட்டத்தில் கலைஞர் அவர்கள் மாதிரி ஒரு அறிவாளி - ஒரு அனுபவ சாலி ஆட்சிக்கு வரவில்லை என்றால், ஒன்றுமே செய்திருக்க முடியாது. அவரை வாழ்த்துவதற்கு அரசியல்ரீதியாக நான் எதுவும் சொல்ல முடியாது. ஆனால், அவரை நான் பாராட்டுகிறேன் என்று மட்டும் சொல்லுங்கள்!'' என்று சொன்னார். ''இந்த மாநில நிர்வாகத்தை சீர்படுத்துவதற்கே இரண்டு மூன்று வருடங்கள் ஆகிவிடும். ரொம்ப கஷ்டம்!'' என்றும் அவர் சொன்னார். நான் அவருடைய பெயரை கலைஞர் அவர்களிடம் தனியாகச் சொன்னேன். தி.மு.கழகத் தொண்டர்களுக்கு கழகம் என்பது தோளில் போடும் துண்டு அல்ல - உடலில் ஓடுகிற ரத்தம். தொண்டர்களுக்கே ரத்தம் என்று சொன்னால், தலைவருக்கு? அந்தக் கழகம்தான் மூச்சு - உடம்பு - உயிர் - கோயில் - குடும்பம் எல்லாமே! அந்தக் கலைஞர் அவர்கள் நல்ல ஆரோக்கியத்துடனும் - நல்ல மன நிம்மதியுடன் வாழ்கிற வரையிலும் முதலமைச்சராகவே வாழ்ந்து மக்களுக்கு நல்லதைச் செய்ய வேண்டும் என்று ஆண்டவனை வேண்டிக் கொள்கிறேன்!'' என்று கூறினார்.

பிரதமராகப் பொறுப்பேற்ற பிறகு, முதன் முதலாக **24-8-1996** அன்று தமிழகத்திற்கு வருகை தந்த இந்தியப் பிரதமர் **தேவகவுடா** அவர்கள், சென்னை கலைவாணர்



சிறந்த நடிகைக்கான விருதினைப் பெறுபவர் நடிகை ராஜஸ்ரீ!

அரங்கத்தில் நடைபெற்ற ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் ''ஜீவன் சுரக்ஷா'' என்ற புதிய திட்டத்தைத் தொடங்கி வைத்தார். அதற்கு முன்பு சென்னை விமான நிலையத்தில் பிரதமருக்கு தமிழகத்தின் சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. ஆளுநர் **சென்னா ரெட்டி** அவர்களும், நானும், அமைச்சர் பெருமக்களும், த.மா.கா. தலைவராக இருந்த அருமை நண்பர் **மூப்பனார்** அவர்களும், மத்திய நிதி அமைச்சராக இருந்த **ப.சிதம்பரம்** அவர்களும் விமான நிலையத்தில் பிரதமரை வரவேற்றோம்.

என்னையும், மூப்பனார் அவர்களையும் அழைத்து பக்கத்தில் நிறுத்தி வைத்துக் கொண்டு, புகைப்படக்காரர்களை அழைத்து, படம் எடுக்கும்படி பிரதமர் தேவகவுடா அவர்களே கேட்டுக் கொண்டார். விமான நிலையத்தில் வரவேற்பு நிகழ்ச்சி முடிந்ததும் நானும், பிரதமரும், ஆளுநரும் ஒரே காரில் கலைவாணர் அரங்க நிகழ்ச்சிக்குச் சென்றோம்.

கலைவாணர் அரங்க விழாவில் என் பேச்சை முடிக்கும்போது, ''ஐந்தாண்டு காலம் இருட்டிலே கிடந்த மாநிலம் இந்த மாநிலம் - இன்றுதான் அதற்கு உதய சூரியனின் வெளிச்சம்

கிடைத்திருக்கிறது! ஐந்தாண்டு காலம் இருட்டிலே வீசிய ஊழல் புயல் - மழை - வெள்ளம் காரணமாக இந்த மாநிலம் சேறும் சகதியுமாகப் போய் - நடப்பதற்குக்கூட சாலை வசதி இல்லாமல் போய்விட்டது. சைக்கிளிலே போகின்ற ஒற்றையடிப் பாதைதான் இருக்கின்றது. உதயசூரியன் வெளிச்சத்தில் நான் நடந்தும், மூப்பனார் சைக்கிளிலும், அந்த ஒற்றையடிப் பாதையில் சென்று, புதிய தமிழகத்தை உங்கள் முன்னால் இன்றைக்குக் காட்டுகின்றோம். இந்த சவலைப் பிள்ளைமீதும் உங்களுடைய கண்பார்வையை வையுங்கள் என்று பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறன்'' என்று கூறினேன்.

பிரதமர் தேவகவுடா அவர்கள் தனது உரையில், ''இந்தியா சுதந்திரமடைந்த பிறகு முதன் முதலாக இப்போதுதான், மத்தியிலே அகில இந்தியக் கட்சிகளும், மாநிலக் கட்சிகளும் கூட்டணி சேர்ந்து ஆட்சியை அமைந்திருக்கின்றன. அதுதான் **ஐக்கிய முன்னணி அரசு.** இந்த ஆட்சி அமைய கலைஞர் கருணாநிதியும், மூப்பனாரும் பெரும் பங்கேற்றனர். அவர்கள் இருவரும் மத்திய ஆட்சிக்கு வலுவான இரண்டு தூண்கள் என்றால் மிகையாகாது. மாநிலக் கட்சிகளின் ஒத்துழைப்போடு, நாங்கள் மத்தியிலே ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறோம். இதனால் உங்கள் மாநிலத்தின் நலன்களைக் கைவிட்டு விடுவோம் என்று கேள்விக்கே இடமில்லை!'' என்றுரைத்தார்.

1996ஆம் ஆண்டு தமிழகச் சட்டப் பேரவையில் எதிக்கட்சித் தலைவராக இருந்தவர் அருமை நண்பர் சோ.பாலகிருஷ்ணன் அவர்கள். எதிர்க்கட்சித் தலைவர் என்றால், எதையும் எதிர்ப்பதுதான் கொள்கை என்று இல்லாமல், நல்லவைகளை ஆதரிப்பார். நல்லது என்றால் அரசுக்கு நல்ல ஆலோசனைகளை வழங்கிடுவார். அவையிலே அதிகம் பேசமாட்டார் ஆனால், பேசுகிற ஒவ்வொரு நேரத்திலும் ஆழமான பல கருத்துக்களை - பல செய்திகளை - அகழ்ந்தெடுத்துத் தருவார். பேரவை இல்லாத நேரங்களில், அவர் சந்திக்கும் பொதுமக்கள் அவரிடம் தருகின்ற கோரிக்கை மனுக்களை எல்லாம் முறையாகத்



சிறந்த பாடலாசிரியர் விருதினைப் பெறுகிறார், கவிப்பேரரசு வைரமுத்து!


தொகுத்து, அதைப்பற்றிப் பேரவையில் உரிய நேரத்தில் எடுத்துக் கூறி, அவைகளைப்பற்றி கவனித்திட வேண்டுமென்று கூறுவார். அவர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த நேரத்தில் அவை அமைதியாக நடைபெறும்.

காவல்துறை மானியத்தின் மீதான விவாதம் 96ஆம் ஆண்டு நடைபெற்ற போது, டி.ஜி.பி. அலுவலகக் கட்டிடத்தை இடிக்க அ.தி.மு.க. ஆட்சியில் நடைபெற்ற முயற்சிகளையெல்லாம் எடுத்துக் கூறியது எனக்கு நினைவிருக்கிறது. மூதறிஞர் ராஜாஜி அவர்கள் சென்னை கடற்கரைமீது அளவு கடந்த ஆசை கொண்டவர். ''சென்னை மெரீனா கடற்கரைதான் சென்னை மாநகரத்திற்கே சுவாசப் பை'' என்று அடிக்கடி சொல்வார். கடற்கரை ஓரத்திலே உயரமான கட்டிடங்கள் கட்ட யாராவது முற்பட்டால், உடனே அதற்கு எதிர்ப்பு தெரிவித்து அவர் அறிக்கை வெளியிடுவார்.

ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த போது, கடற்கரை சாலையிலே டி.ஜி.பி. அலுவலகத்தை இடிப்பதற்கான முயற்சியிலே ஈடுபட்டபோது, பலரும் தெரிவித்த

எதிர்ப்புகளையெல்லாம் அவர் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. அந்த நேரத்தில் சிலர் நீதிமன்றம் சென்று, ''அந்தக் கட்டிடத்தை இடிக்கக்கூடாது'' என்று தடையாணை பெற்ற காரணத்தால், அந்தக் கட்டிடம் இடிக்கப்படாமல் தப்பியது. காவல் துறையின் தலைவராக ஒரு காலத்தில் இருந்த, புகழ்பெற்ற அதிகாரி **எப்.வி.அருள், ஐ.பி.எஸ்.,** அவர்கள் தான் எழுதிய புத்தகம் ஒன்றில் ''விரிந்த நீலக் கடலைப் பார்த்தவாறு அமைந்திருக்கும் நமது அலுவலகத்தைப்போல - காவல் துறையின் தலைமை அலுவலகத்தைப்போல - இந்தியாவில் மட்டுமல்ல - உலகில் எந்தப் போலீஸ் தலைமை அலுவலகமும் இவ்வளவு அழகான சூழ்நிலையிலே அமையவில்லை'' என்று குறிப்பிட்டிருந்தார். மேலும் அவர், அந்தப் புத்தகத்தில் ''அந்த அலுவலகத்திற்கு அருகில் ''மசானிக் லாட்ஜ்'' என்று ஒன்று இருந்ததாகவும் - அதாவது ரோட்டரிக் கிளப் போன்று உலகம் முழுவதும் கிளைகள் உள்ள ஒரு அமைப்பாகவும் இருந்தது என்றும் - 1850இல் இருபத்து ஐயாயிரம் ரூபாய் கொடுத்து, அந்தக் கட்டிடத்தை பிரிட்டிஷ் அரசு விலைக்கு வாங்கியது'' என்றும் எழுதியிருக்கிறார்.

இத்தகைய புகழுக்குரிய கட்டிடத்தைத் தான் அ.தி.மு.க. ஆட்சியில் இடிப்பதற்கு முன்வந்து, நீதிமன்றத் தடையாணை காரணமாக, அந்தப் பணியை நிறுத்தி வைத்திருந்தார்கள். 96ஆம் ஆண்டு தி.மு.கழக ஆட்சி வந்த போது, இதைப் பற்றியெல்லாம் அதிகாரிகளை அழைத்துக் கலந்து பேசி, ''புகழுக்குரிய அந்தக் கட்டிடம் இடிக்கப்படக்கூடாது - காவல் துறையின் தலைமை அலுவலகம் அந்தக் கட்டிடத்திலேதான் தொடர்ந்து இயங்க வேண்டும் - இடப் பற்றாக்குறை இருக்குமேயானால், தற்போதுள்ள கட்டிடத்திற்குப் பின்புறமுள்ள காலி இடத்திலே தனியாக ஒரு கட்டிடத்தைக் கூடுதலாகக் கட்டிக் கொள்ளலாம்!'' என்று சட்டப் பேரவையில் அறிவித்தேன். அந்த நடவடிக்கை இன்றளவும் நடைமுறையிலே இருந்து வருவதோடு, புகழுக்கும் பழமைக்கும் உரிய அந்தக் கட்டிடம் இன்றளவும் அந்த இடத்திலே நீடித்து வருகிறது.



''ஜீவன் சுரக்ஷா'' திட்டத்தினை தொடங்கி வைக்க வருகை தந்த பிரதமர் தேவகவுடாவை, என்னுடன் இணைந்து வரவேற்கும் மூப்பனார், ப.சிதம்பரம்!

1996ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு முன்பு தேர்தல் அறிக்கையிலே கூறியவைகளையும், அதன் பின்னர் ஆட்சிக்கு வந்து ஆளுநர் உரையிலும், நிதிநிலை அறிக்கையிலும் தெரிவித்த அறிவிப்புகளையும் பட்டியலிட்டு, துறை வாயிலாக ஒவ்வொரு அமைச்சருக்கும் அவற்றை அனுப்பி, அவர்களின் துறை சார்பில் அந்த அறிவிப்புகளுக்கான அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டு விட்டனவா - என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது - எடுக்கப்படவில்லை என்றால் அதற்கு என்ன காரணம் - என்பதைப் பற்றியெல்லாம் முதல் அமைச்சர் அலுவலகத்திற்கு ஒவ்வொரு அமைச்சரும் விளக்கமளிக்க வேண்டுமென்று கோரி, நானே எல்லா அமைச்சர்களுக்கும் கடிதம் எழுதினேன்.

தி.மு.கழகம் ஆட்சிக்கு வந்ததற்காகவும், வரலாறு படைத்த நிதி நிலை அறிக்கையைத் தாக்கல் செய்ததற்காகவும், தலைமைச் செயலகச் சங்கத்தின் சார்பில் 27-8-1996 அன்று, தலைமைச் செயலகத்திலே எனக்கொரு பாராட்டுக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார்கள்.

அந்தக் கூட்டத்தில் வரவேற்புரை ஆற்றிய அந்தச் சங்கத்தின் செயலாளர் **பத்மநாபன்**, என்னை யாரோடு ஒப்பிடுவது - எதோடு ஒப்பிடுவது - என்றெல்லாம் தேடி, நிலவோடு ஒப்பிட முடியுமா என்று அவரே கேட்டு - இறுதியாக இதயத்தோடு ஒப்பிட்டு, ''நீங்கள் எங்களின் இதயம்'' என்று அந்த விழாவிலே கூறினார்.,

அதைப்பற்றி நான் கூறும்போது, ''என்னதான் இதயம் துடித்துக் கொண்டிருந்தாலும், இதயம் மாத்திரம் துடித்துக் கொண்டிருந்தால் மனிதனுக்கு உயிர் இருக்கும்! அதே நேரத்தில், மூளை பணியாற்றாமல் இருந்தால் - மூளை வேலை செய்யாமல் இருந்தால் - மனிதன் ''கோமா'' நிலையிலேதான் இருப்பான். அவனால், செயல்பட முடியாது. எனவே தலைமைச் செயலகத்து அலுவலர்களே! நான் இதயம் என்றால், நீங்கள் தான் மூளை!'' என்று பலத்த கையொலிக்கிடையே தெரிவித்தேன். ''தலைமைச் செயலகத்திலிருந்து கிளம்புகின்ற அரசாணைகள் - அதனால் பயனடைபவர்களுக்குச் சென்றடைய வேண்டுமேயானால் - தலைமைச் செயலகம் என்கின்ற மூளை ஒழுங்காக இருக்க வேண்டும் - சிறப்பாகப் பணியாற்ற வேண்டும்!'' என்றும் அந்த விழாவிலே நான் கேட்டுக் கொண்டேன்.

மேலும், ''அரசாங்கத்தின் கோப்புகள் சிகப்பு நாடாவினால் கட்டப்பட்டு, உறங்கிக் கொண்டிருந்தால், ஊழல் எழுந்து நின்று ஊர் கற்றக் கிளம்பிவிடும்!'' என்றும் தெரிவித்து, அதற்கு முன்பிருந்த அ.தி.மு.க. ஆட்சியினால் எத்தனை கோப்புகள் தேக்கி வைக்கப்பட்டிருந்தன என்பதற்கான விவரங்களையும் அங்கே தெரிவித்தேன். ஆண்டு வாரியாகக் கணக்கெடுத்து, நான்கரை ஆண்டுகளாக தேங்கிக் கிடந்த கோப்புகளின் எண்ணிக்கை 60 என்றும் - 4 ஆண்டுகளாகப் பார்க்கப்படாமல் இருந்த கோப்புகளின் எண்ணிக்கை 120 என்றும் - மூன்றரை ஆண்டுகளாகக் கையெழுத்திடாமல் கிடந்த கோப்புகளின் எண்ணிக்கை 150 என்றும் - 3 ஆண்டு காலம் தூங்கிய கோப்புகள் 457 என்றும் - இரண்டரை ஆண்டு காலம் ஒய்வெடுத்த கோப்புகள் 238 என்றும் - 2 ஆண்டுகள் மட்டுமே

கவனிக்கப்படாமல் இருந்த கோப்புகள் 229 என்றும் - ஒன்றரை ஆண்டுகளாக ஏங்கிக் கிடந்த கோப்புகளின் எண்ணிக்கை 276 என்றும் - ஓராண்டு காலம் மட்டுமே ஓய்விலே இருந்தவை 184 கோப்புகள் என்றும் -இப்படி மொத்தத்தில் 2681 கோப்புகள் அ.தி.மு.க. ஆட்சியில் கிடப்பிலே போடப்பட்டிருந்தன என்றும் - அந்த நிகழ்ச்சியிலே குறிப்பிட்டுக் காட்டினேன். அதே நேரத்தில் ஒரு சில கோப்புகள் மின்னல் வேகத்தில் கையெழுத்தாகித் திரும்பியுள்ளன. இன்னும் சொல்லப் போனால், ஒரே நாளில் கீழேயிருந்து மேலேவரை அதிகாரிகளும், அமைச்சர்களும், முதல் அமைச்சரும் கையெழுத்திட்ட கோப்புகளும் இருந்தன.

1996ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள், 31ஆம் நாள் தமிழகச் சட்டப் பேரவையில், சென்னை நகரை அனைத்து மொழிகளிலும் **''சென்னை''** என்றே அழைக்க வகை செய்யும் சட்ட முன் வடிவு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. ''நாம் பிறந்த மண்ணுக்கு ''தமிழ்நாடு'' என்று பெயர் அமைத்த பேரறிஞர் அண்ணா வழியில் வந்துள்ள இந்த அரசு, இந்த நகரத்திற்கு மெட்ராஸ் என்ற பெயரை மாற்றி சென்னை என்ற சிங்காரத் தமிழிலே அழைக்கின்ற நிலையை உருவாக்கியிருக்கிறது!'' என்று குறிப்பிட்டேன். இந்த மசோதாவிற்கு அனைத்துக் கட்சிகளும் ஒருமனதாகத் தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர்.



''நீங்கள் எங்களின் இதயம்'' என்று என்னைப் பாராட்டிய தலைமைச் செயலக அலுவலர்கள்

தி.மு.கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, விடுதலை நாள் போன்ற முக்கியமான நாட்களிலும், முக்கியத் தலைவர்களின் நூற்றாண்டு விழாக்களிலும், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளையொட்டியும், சிறைக் கைதிகள் - ஒரு குறிப்பிட்ட காலத்திற்குத் தண்டனையை அனுபவித்தவர்களுக்கு விடுதலை - தண்டனைக் குறைப்பு - என்றெல்லாம் வழங்கப்பட்டு வந்தது. பேரறிஞர் அண்ணா அவர்கள் உயிரோடு இருந்தபோதே - 1967ல் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டையொட்டி, சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டார்கள். 1977ல் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளையொட்டி, எம்.ஜி.ஆர். அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோது, சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டார்கள். அதன் பின்னர் மூதறிஞர் ராஜாஜி அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டார்கள்.


1989ல் நான் முதலமைச்சராக இருந்த போது, அண்ணா அவர்களின் பிறந்தநாளையொட்டியும் 1990ல் தி.மு.கழக ஆட்சியில் டாக்டர் அம்பேத்கர், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஆகியோரின் நூற்றாண்டு விழாக்களை யொட்டியும் சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டார்கள்.

இப்படி விடுதலை செய்வதற்குச் சில நிபந்தனைகள் உண்டு. என்னவென்றால், சிறையில் இருந்த காலத்தில் அவர்களது பொதுநடத்தை திருப்திகரமாக இருந்திருக்க வேண்டும் - அவர்கள் விடுவிக்கப்பட்ட பிறகு, அவர்களது உயிருக்கு எந்த ஆபத்தும் வெளியில் இல்லை என்ற நிலை இருக்க வேண்டும் - விடுதலை செய்யப்படுபவர்கள் கடுங்குற்றங்களான கற்பழிப்பு, கொள்ளை, கொடூரமான குற்றங்கள், ஏமாற்று வேலை, கள்ளக் கடத்தல், பொருளாதாரக் குற்றங்கள், பதுக்கல், அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துதல், விபச்சாரம், மருத்துவச் சட்டம், மற்றும் உணவுக் கலப்படச் சட்டங்களின் கீழ் குற்றம் புரிதல் ஆகிய குற்றங்களில் ஈடுபட்டிருக்கக்கூடாது - அவர்கள் விடுவிக்கப்படமாட்டார்கள்.

இந்த நிபந்தனைகளுக்குட்பட்டு, 15-9-1996ல் பேரறிஞர் அண்ணா அவர்களின் 88வது பிறந்தநாளையொட்டி, அந்தத் தேதியில் புத்தாண்டுகள் தண்டனையை அனுபவித்து முடித்த ஆயுள் தண்டனைக் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என்று அரசின் சார்பில் அறிவிக்கப்பட்டது. அந்த வகையில் 419 சிறைக் கைதிகள் அந்த ஆண்டு விடுவிக்கப்பட்டனர்.

1992, 1993, 1994 ஆகிய மூன்று ஆண்டுகளில் ஜெயலலிதா முதல் அமைச்சராக இருந்தபோது, அவருடைய பிறந்த நாளையொட்டி, அவரே சிறைக் கைதிகளை விடுதலை செய்வதாக அறிவித்தார்.

1996ஆம் ஆண்டு, 3-9-1996 அன்று சென்னையில் **கலைவாணர் என்.எஸ்.கே.** அவர்களின் நினைவு நாள் விழா தமிழக அரசின் சார்பில் என்னுடைய தலைமையில் நடைபெற்றது. பொதுப்பணித்துறை அமைச்சர், **துரைமுருகன்**, தமிழ் ஆட்சி மொழி மற்றும் பண்பாட்டுத் துறை அமைச்சர் முனைவர் **தமிழ்க்குடிமகன்** ஆகியோர் விழாவிற்கு முன்னிலை வகித்தனர். நடிகர் **சிவக்குமார்**, **வி.கே.ராமசாமி**, தொலைக் காட்சி இயக்குநராக இருந்த **ஏ.நடராசன்**, நடிகர் **செந்தில்**, **சந்திரசேகர்**, திருமதி **அரசு மணி மேகலை**, நடிகர் **ராதாரவி**, **சாரதா நம்பி ஆரூரன்**, நடிகை **எம்.என்.ராஜம்**, நடிகர் **நாகேஷ்**, நடிகர் **விஜயகாந்த்**, கவிஞர் **வாலி**, இயக்குநர் **பாலச்சந்தர்** ஆகியோர் என்.எஸ்.கே. அவர்களின் பெருமை களைப்பற்றி உரையாற்றி னார்கள்.




கலைவாணர் சிலை திறப்பு விழாவில் எடுக்கப்பட்ட உண்மையான புகைப்படம்!

கலைவாணர் அவர்களுடன் எனக்கு நீண்ட நாட்கள் நெருக்கமுண்டு. கலைவாணர் அனைவரையும் சிரிக்க வைத்தார் - சிந்திக்க வைப்பதற்காகச் சிரிக்க வைத்தார் என்று சொன்னால் மாத்திரம் போதாது - அவர் சிரிக்க வைத்ததே சிந்திக்க வைப்பதற்காகத்தான் - அதுதான் பேருண்மையாகும்!

13-9-1944 அன்று என்னுடைய மண விழா. எனக்கும் இசைச் சித்தர் **சிதம்பரம் ஜெயராமன்** அவர்களின் தங்கைக்கும் திருமணம் நடைபெற்றது. அப்போது ஒரு வழக்கிலே சிக்கி, சிறைச்சாலையில் இருந்து - ஜாமீனில் வெளியே வந்திருந்த **கலைவாணர் என்.எஸ்.கே.** அவர்கள், அந்தத் திருமண விழாவிற்கு வந்தது மாத்திரமல்லாமல், அன்றிரவு திருவாரூரில் தெரு வீதியில் திருமணத்தை முன்னிட்டு, கிந்தனார் கதாகாலட்சேபத்தையும் நடத்தினார்.

அதே நாளில்தான் சிதம்பரம் ஜெயராமன் அவர்களுக்கும் திருமணம். எனக்கு நடைபெற்றது சுயமரியாதைத் திருமணம். அவருக்கு நடைபெற்றது. வைதீக முறை திருமணம். அந்த இரண்டு திருமணங்களுக்கும் சேர்த்துத்தான் கலைவாணர் என்.எஸ்.கே. அவர்களின் நிகழ்ச்சி. அதிலே வேடிக்கை என்ன வென்றால், கலைவாணரின் நிகழ்ச்சியைக் கேட்க, பல்லாயிரக் கணக்கான மக்கள் குழுமிய காரணத்தால், மாப்பிள்ளையான நானும், என் மைத்துனரும் கூட கச்சேரி நடந்த இடத்திற்கு அருகே செல்ல முடியாமல், பக்கத்திலே உள்ள ஒரு வீட்டின் இடிந்த சுவரிலே உட்கார்ந்து கொண்டுதான்



பண்ருட்டியால் உருவாக்கப்பட்ட மோசடியான புகைப்படம்!

கலைவாணருடைய கதாகாலட்சேபத்தைக் கேட்டோம் என்றால், எந்த அளவிற்கு செல்வாக்கு அந்த நகைச்சுவை அரசருக்கு அப்போது இருந்திருக்கும் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

1944-45ஆம் ஆண்டுகளில் அவர் மீண்டும் வழக்கின் தொடர்பாக சிறைபுக நேரிட்டபோது எனக்கு இன்னமும் நினைவிருக்கிறது - **தந்தை பெரியார்** அவர்களுடைய தலைமையில் நாகர்கோவிலுக்கு அருகிலுள்ள **வள்ளியூர், கள்ளிக்குளம்** ஆகிய இரண்டு ஊர்களில் கலைவாணரை விடுதலை செய்ய வேண்டும் என்று கோரி நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் - பெரியாரிடத்திலே ''குடியரசு'' அலுவலகத்திலே பணியாற்றிக் கொண்டிருந்த நான், பெரியார் தந்தி வாயிலாக என்னை அழைத்ததன் காரணமாகச் சென்று, கலைவாணரை விடுதலை செய்ய வேண்டுமென்று அந்தக் கூட்டங்களிலே கலந்து கொண்டு உரையாற்றினேன்.

தற்போது சென்னையில் உள்ள **''கலைவாணர் அரங்கம்''** அதற்கு முன்பு **''பாலர் அரங்கம்''** என்ற பெயரிலேதான் இருந்தது. அந்த அரங்கத்தின் வடிவத்தையே மாற்றி அமைத்து, **''கலைவாணர் அரங்கம்''** என்று அதற்குப் பெயர் சூட்டியவன் நான்தான். அந்த அரங்கத்திற்குப் பெயர் வைப்பதற்கு முன்பே, பேரறிஞர் அண்ணா தலைமையில் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த நான் குற்றாலம் சென்றிருந்தேன். அங்கேயிருந்த ஒரு மன்றத்திற்கு கலைவாணர் பெயரைச் சூட்டச் செய்தவனும் நான்தான். காரணம், குற்றாலம் என்றால் கலைவாணருக்கு மிகவும் பிடிக்கும். ஆண்டுதோறும் குற்றாலம் சென்று அந்தச் சாரலை அனுபவிப்பதில் அவருக்குத் தனி மகிழ்ச்சி உண்டு. அதை அறிந்திருந்த நான், அங்கேயிருந்த மன்றத்திற்கு அவருடைய பெயரைச் சூட்டி, **''கலைவாணர் மன்றம்''** என்று அழைத்திடச் செய்தேன்.

உலகத் தமிழ் மாநாட்டினை அண்ணா அவர்கள் முன்னின்று நடத்தியபோது, கலை உலகப் பெருமக்கள் எல்லாம் அண்ணா அவர்களுக்குத் துணையாக இருந்து, அந்த மாநாட்டை

நடத்திட உதவி செய்து, அதிலே இருபதாயிரம் ரூபாய் கலை உலகத்தினரிடம் **வசூல் செய்த தொகை** மீதப்பட்டது. அந்தத் தொகையை என்ன செய்யலாம் என்ற கேள்வி எழுந்தபோது, அதனை நல்ல வழியில் செலவழிக்க வேண்டுமென்று எண்ணி **எஸ்.எஸ்.வாசன்** அவர்களிடத்திலும், என்னுடைய அன்பிற்கினிய நண்பர்களில் ஒருவராக இருந்த **ஏ.எல். சீனிவாசன்** அவர்களிடத்திலும், ஏனைய கலையுலக நண்பர்களிடத்திலும் எடுத்துச் சொல்லி - அந்த இருபதாயிரம் ரூபாயைக் கொண்டு, கலைவாணருக்கு ஒரு சிலை வடிக்கலாம் என்று என் விழைவினைத் தெரிவித்து - அவர்களையெல்லாம் ஒப்புக் கொள்ள வைத்தேன்.

அந்த வேண்டுகோள் வீண்போகாமல், உடனடியாக சிலை செய்யப்பட்டு - அதுவும் கலைவாணருடைய இல்லத்திற்கு அருகிலே - அவர் உயிரோடு இருந்தபோது பல நாடகங்களை நடத்திய வாணி மகாலுக்கு எதிரிலே - கலைவாணரின் சிலை இன்றளவும் நிற்கக் காரணமாகஇருந்தேன். அதிலேகூட ஒரு வேடிக்கை. அந்தச் சிலை திறப்பு விழாவின் போது, சிலைக்குக் கீழே நின்று அண்ணா அவர்களுடன் நானும், அருமை நண்பர் **எம்.ஜி.ஆர்.** அவர்களும், **வாசன், ஏ.வி.எம். செட்டியார்** பிரபல இந்தி நடிகர் **திலீப்குமார்** போன்றவர்களும் புகைப்படம் எடுத்துக் கொண்டு -அந்தப் புகைப்படம் ஏடுகளில் எல்லாம் வெளிவந்தது.

ஆனால் அதற்குப் பின்னர் வந்த ஆட்சியிலே சிலையைப் புதுப்பிக்கிறோம் என்று கூறி, கல்வெட்டிலே இருந்த என்னுடைய பெயரை அகற்றுவதற்கான முயற்சியிலே ஈடுபட்டதும் - பண்ருட்டி ராமச்சந்திரன் பொறுப்பில் விழா மலர் ஒன்றினைத் தயாரித்தபோது - ஏற்கனவே கலைவாணர் சிலை திறப்பு விழாவின் போது எடுக்கப்பட்ட புகைப் படத்திலே இருந்த என்னுடைய உருவத்தை மட்டும் நீக்கிவிட்டு, மற்றவர்களைக் கொண்ட புகைப்படத்தினை அந்த மலரிலே வெளியிட்ட சூழ்ச்சியும் நடைபெற்றது.

11. சென்னைக்குக் கிருஷ்ணா!

மக்களால் நேரடியாகத் தேர்வு செய்யப்பட்ட முதல் மேயர் என்ற சிறப்பைப் பெற்ற தளபதி மு.க.ஸ்டாலின்

தி.மு.கழகம் தேர்தல் அறிக்கையில், ''நாங்கள் ஆட்சிக்கு வந்தால், உள்ளாட்சித் தேர்தல்களை உடனடியாக நடத்துவோம்'' என்று அறிவித்ததற்கிணங்க, 96ஆம் ஆண்டு அக்டோபர் 9 மற்றும் 12 தேதிகளில் நடத்தப்படும் என்று தமிழ்நாடு தேர்தல் ஆணையர் மூலமாக அறிவிப்பு செய்யப்பட்டது. இதற்கான வேட்புமனு செப்டம்பர் 3ஆம் தேதி முதல் 10ஆம் தேதி வரை தாக்கல் செய்யலாம் என்றும் அறிவிக்கப்பட்டது. தேர்தல், ஊராட்சி மன்றம் - ஊராட்சி ஒன்றியம் - மாவட்ட ஊராட்சி - என்ற மூன்றடுக்கு முறையில் நடத்தப்பட்டது.


தமிழ்நாட்டில் நீண்ட இடைவெளிக்குப் பிறகு 6 மாநகராட்சிகள் - 104நகராட்சிகள் - 635 பேரூராட்சிகள் - 12,584 ஊராட்சிகள் - ஆகியவற்றுக்கு 96ஆம் ஆண்டு அக்டோபரில், 9 மற்றும் 12ஆம் தேதிகளில் இரண்டு கட்டமாக தேர்தல் நடத்துவதென்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப் பட்டது.

இந்தத் தேர்தலில் முக்கியமான அம்சம் என்னவென்றால், தமிழகத்தில் உள்ளாட்சித் தேர்தல்களில் முதல் முறையாக பெண்களுக்கு இடஒதுக்கீடு செய்யப்பட்டு தேர்தல் நடத்தப் பட்டதுதான். மொத்தமுள்ள ஆறு மாநகராட்சிகளில், திருச்சி மாநகராட்சி மேயர் பதவி பெண்களுக்காக ஒதுக்கப்பட்டது. திருநெல்வேலி மாநகராட்சி தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பெண்களுக்காக ஒதுக்கப்பட்டது. மொத்தம் 474 மாநகராட்சி வட்டங்களில், பெண்களுக்கு 161 என்றும்,

தாழ்த்தப்பட்டவர்களுக்கு 35 என்றும் - மாவட்ட பஞ்சாயத்துத் தலைவர் பதவிகள் மொத்தம் 28இல் பெண்களுக்கு 10 என்றும், தாழ்த்தப்பட்டவர்களுக்கு 4 என்றும் - மாவட்ட பஞ்சாயத்து வார்டுகள் பதவிகள் மொத்தம் 649-ல் பெண்களுக்கு 242 என்றும், தாழ்த்தப் பட்டவர்களுக்கு 97 என்றும் - நகராட்சித் தலைவர்கள் பதவிகள் மொத்தம் 106-ல் பெண்களுக்கு 35 என்றும், - தாழ்த்தப் பட்டவர்களுக்கு 6 என்றும் - இவ்வாறே ஒவ்வொரு பதவியிலும், பெண்களுக்கு 33 சதவிகிதம் என்ற அளவிற்கு தொகுதிகள் பிரிக்கப்பட்டன.

உள்ளாட்சித் தேர்தல்கள் குறித்து மாவட்டக் கழகச் செயலாளர்கள், பொறுப்பாளர்களின் கூட்டம் அண்ணா அறிவாலய கழக அலுவலகத்தில் என்னுடைய தலைமையில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் பொதுச் செயலாளர் **பேராசிரியர்,** பொருளாளர் **ஆர்க்காடு வீராசாமி** முன்னிலை வகிக்க, அமைச்சர்களும், தலைமைக் கழகச் செயலாளர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் சிறப்பழைப்பாளர்களாகக் கலந்து கொண்டனர்.

உள்ளாட்சித் தேர்தல் பற்றி முடிவு செய்ய, கழகத் தோழமைக் கட்சிகளின் பூர்வாங்கக் கூட்டத்தினை, 3.9.1996 அன்று நடத்துவதென்று இந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப் பட்டது. அதன்படி நடைபெற்ற கூட்டத்தில், த.மா.கா.சார்பில்



கழகத்தாருடன் வேட்புமனு தாக்கல் செய்கிறார், மு.க.ஸ்டாலின்!

அருமை நண்பர் **மூப்பனார்,** எதிர்க்கட்சித் தலைவர் **சோ.பாலகிருஷ்ணன்,** இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் **ஆர்.நல்லக்கண்ணு, எஸ்.எஸ்.தியாகராசன், ஏ.எம்.கோபு, ஜி.பழனிச்சாமி** எம்.எல்.ஏ., இந்திய தேசிய லீக் சார்பில் **அப்துல் லத்தீப்** எம்.எல்.ஏ., **திருப்பூர் அல்தாப், கமுதி பஷீர்,** அகில இந்திய பார்வர்டு பிளாக் சார்பில் **அய்யணன் அம்பலம், இல. சந்தானம்** எம்.எல்.ஏ. **பி.என்.வல்லரசு** எம்.எல்.ஏ., ஆகியோர் கலந்து கொண்டார்கள். கழகத்தின் சார்பில் **நானும், பொதுச் செயலாளரும், பொருளாளர் ஆர்க்காடு வீராசாமியும்** அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டோம்.

கூட்டத்தில் தி.மு.க., த.மா.கா., இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய தேசிய லீக், அகில இந்திய பார்வர்டு பிளாக் ஆகிய கட்சிகள் நடந்து முடிந்த சட்டமன்ற - நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டது போலவே, உள்ளாட்சி மன்றத் தேர்தலிலும் கூட்டணி அமைத்துப் போட்டியிடுவதென்றும் - சட்டமன்றப் பொதுத் தேர்தலில் இந்தக் கூட்டணிக்கு ஆதரவு தந்த எம்.ஜி.ஆர். மன்றம் போன்ற கட்சிகளையும் சேர்த்து கொள்வதென்றும் முடிவு எடுக்கப்பட்டது.

தோழமைக் கட்சிகளுடனான பேச்சு வார்த்தையில், முதலில் த.மா.கா. வுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு அவர்களுக்கு உள்ளாட்சித் தேர்தலில் *36* சதவிகித இடங்களை ஒதுக்கீடு செய்வதென்று முடிவெடுக்கப்பட்டது. அதுபோலவே, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு *3* நகராட்சிகள், *24* பேரூராட்சி மன்றங்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டன. இந்திய தேசீய லீக் கட்சிக்கு *2* நகராட்சிகளும், *7* பேரூராட்சிகளும் பகிர்ந்து உள்ளாட்சித் தேர்தல்களில் போட்டியிடும் கழக வேட்பாளர்களின் முதல் பட்டியல் *8.9.1996* அன்று வெளியிடப்பட்டது.

சென்னை மாநகர மேயர் பதவிக்கு **மு.க.ஸ்டாலின்** - மதுரை மாநகர மேயர் பதவிக்கு **பெ.குழந்தைவேலு** - சேலம் மாநகர மேயர் பதவிக்கு டாக்டர் **சூடாமணி** - ஆகியோர்



மேயராக பொறுப்பேற்கும்
மு.க.ஸ்டாலின்!

பெயர்கள் முதல் பட்டியலிலேயே வெளியிடப் பட்டன. அ.தி.மு.க. சார்பில் சென்னை மாநகராட்சி மேயர் பதவிக்கு ஜெயக்குமரும், மதுரை மாநகராட்சிக்கு காளிமுத்துவும் என்று செய்திகள் வெளிவந்தன. அதைத் தொடர்ந்து 9.9.1996 அன்று சென்னை மாநகர மேயர் பதவிக்கு தி.மு.க. சார்பில் **மு.க.ஸ்டாலினும்,** அ.தி.மு.க. சார்பில் **ஜெயக்குமாரும்** மாநகராட்சி ஆணையரிடம் தங்கள் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தனர். சென்னை மேயர் பதவிக்கு தமிழக ஜனதா கட்சித் தலைவராக அப்போதிருந்த திருமதி **சந்திர லேகாவும்,** ம.தி.மு.க. சார்பில் நடிகர் **எஸ்.எஸ்.சந்திரனும்** வேட்பு மனுவினைத் தாக்கல் செய்தனர்.

ஆனால் இரண்டொரு நாட்களிலேயே அ.தி.மு.க. திடீரென ஒரு முடிவினை எடுத்தது. சென்னை மேயர் தேர்தலில் தி.மு.கழக வேட்பாளர் மு.க.ஸ்டாலினை எப்படியாவது தோற்கடிக்க வேண்டுமென்ற நல்ல (?) எண்ணத்தோடு, மேயர் தேர்தலில் தங்களது வேட்பாளராக ஜெயக்குமாரை அறிவித்து, வேட்பு மனுவையும் தாக்கல் செய்த பிறகு, அ.தி.மு.க. வேட்பாளர் சென்னை மாநகர மேயர் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்றும், ஜனதா கட்சி வேட்பாளர் சந்திரலேகாவை அ.தி.மு.க. ஆதரிக்கும் என்றும், இரண்டு கட்சிகளும் இணைந்து ஸ்டாலினை எதிர்த்தால் சுலபமாக வெற்றி பெற்று விடலாம் என்றும் திட்டமிட்டு அறிவித்தார்கள். தாங்கள் போட்டியிலிருந்து விலகியது மாத்திரமல்லாமல், தி.மு.கழகத்தைத் தவிர்த்த ஏனைய கட்சிகளும் போட்டியிலிருந்து விலகிக் கொண்டு, ஜனதா வேட்பாளரை ஆதரிக்க வேண்டுமென்றும், தி.மு.கழக வேட்பாளரைத் தோற்கடிக்க வேண்டுமென்றும் ஜெயலலிதா அறிக்கை விடுத்தார்.

ஜெயலலிதா இவ்வாறு அறிக்கை விடுத்த நேரத்தில், தமிழகத்திலே உள்ள முக்கிய ஏடுகள் எல்லாம் ஜெயலலிதாவுக்கு எதிராக ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி நான்கு வழக்குகளைத் தாக்கல் செய்து - வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில், ஜெயலலிதாவின் அறிவிப்பு பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்துவதாக எழுதின. மேலும் சில ஏடுகள் - ஜெயலலிதா அ.தி.மு.க. வேட்பாளரை போட்டியிலிருந்து விலக்கிக் கொண்டிருப்பது அவரது பலவீனத்தையே காட்டுகிறது என்றும் அ.தி.மு.க. உடைந்துள்ள நிலையில், ஜெயலலிதா அணிக்கு வெற்றி வாய்ப்பு குறைவாகவே உள்ளதால் அந்த முடிவை எடுத்திருக்கிறார் என்றும், என்றும், தோல்வியைத் தவிர்க்கவே அந்த முடிவினை எடுத்திருக்கிறார் என்றும், சுப்பிரமணியம் சுவாமியின் தீவிரத்தைக் குறைப்பதற்காகக்கூட அந்த முடிவினை எடுத்திருக்கலாம் - என்றும் எழுதின.

சந்திரலேகா மீது திராவகம் வீசியவர் ஜெயலலிதாதான் என்று வழக்கு தொடர்ந்து சுப்பிரமணியம் சுவாமி, தனது வேட்பாளருக்கு ஜெயலலிதா ஆதரவு தருகிறார் என்றதும் அதனை ஏற்றுக் கொண்ட விசித்திரத்தை அப்போது தமிழ் நாடு கண்டது. இருவரும் எத்தனை சந்தர்ப்பவாதிகள் என்பதையும் தமிழ் மக்கள் புரிந்து கொண்டார்கள்.

சென்னை மேயர் தேர்தலில் பிரச்சாரம் மிகவும் கடுமையாக இருந்தது. எதிர்க் கட்சிகள் எல்லாம் இணைந்து, எப்படியாவது ஸ்டாலினைத் தோற்கடிக்க வேண்டுமென்ற வெறியோடு பணியாற்றிய போதிலும், ஸ்டாலினைப் பொறுத்த வரையில் கடுமையாக உழைத்தார். ஒவ்வொரு நாளும் மக்களை நேரில் சென்று சந்தித்து வாக்குக் கேட்பதிலேயே குறியாக இருந்தார்.

சென்னை மேயர் தேர்தல் நடைபெற்று இருபதாண்டு களுக்குப் பின்னர், அந்தத் தேர்தல் நடைபெற்றதால் பிரச்சாரம் மிகவும் கடுமையாக இருந்தது. மேலும் முதல் முறையாக மேயரை வாக்காளர்களே நேரடியாக வாக்களித்துத் தேர்ந்தெடுக்கின்ற முறை அப்போதுதான் நடைபெற்றது.

சென்னையில் மேயர் பதவிக்கு மொத்தம் எட்டுப் பேர் போட்டியிட்டனர். 155 கவுன்சிலர்களைத் தேர்ந்தெடுக்க 1136 பேர் களத்திலே நின்றனர். தி.மு.க., த.மா.கா. கூட்டணி சார்பில் போட்டியிட்ட மு.க. ஸ்டாலினை ஆதரித்து நானும், **பேராசிரியரும், மூப்பனார்** அவர்களும், **ஆர். நல்லக் கண்ணு** அவர்களும், **அப்துல் லத்தீப்** அவர்களும் பிரச்சாரம் செய்தோம்.

மத்திய அமைச்சர்கள் தம்பி முரசொலி மாறன், **எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம், டி.ஆர்.பாலு, என்.வி.என்.** சோமு ஆகியோர் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிரச் சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டனர்.

மு.க. ஸ்டாலினையும், தி.மு.க., த.மா.கா- வேட்பாளர் களையும் ஆதரித்து பிரச்சாரம் செய்த நடிகர் சரத்குமார் - ''பொதுத் தேர்தலில் மகத்தான வெற்றியைப் பெற்ற தி.மு.க., த.மா.கா. கூட்டணிக்கு உள்ளாட்சித் தேர்தலிலும் மக்கள் மகத்தான வெற்றியை அளிக்க வேண்டும். பொதுத் தேர்தலின்போது அளித்த வாக்குறுதிக்கேற்ப, உள்ளாட்சித் தேர்தலை தற்போது முதல்வர் நடத்துகிறார். குடும்ப அரசியல் நடத்துகிறது என்று சிலர் பேசுகிறார்கள். அது சரியல்ல. ஸ்டாலினைப் பொறுத்தவரை நல்ல அரசியல் குடும்பத்தின் வழியில் வந்தவர். ஸ்டாலினும் அரசியல்வாதி தான். அவரும் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றிருக்கிறார். அவரைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் நல்ல பணிகளை மாநகராட்சியில் நிறைவேற்ற முடியும்'' என்று குறிப்பிட்டார்.



மூப்பனாரிடம் வாழ்த்து பெறும் மு.க.ஸ்டாலின்

ஸ்டாலின் மேயர் தேர்தலில் போட்டியிடுவது பற்றி பத்திரிகையாளர் சோ அவர்கள் தனது ''துக்ளக்'' இதழில் **''சென்னை மேயர் தேர்தலில் உங்கள் ஓட்டு யாருக்கு? ஏன்?''** என்ற கேள்விக்கு பதில் அளித்த

போது, ''ஸ்டாலினுக்கு! அவருக்கு எதிராக நிற்பவர்களின் அணுகுமுறைகளைப் பார்க்கும்போது இருப்பதற்குள் நல்ல வேட்பாளர் ஸ்டாலின்தான் என்ற முடிவுக்கு நான் வருகிறேன். அவர், கலைஞரால் திணிக்கப்படுவதாகவும் நான் நினைக்கவில்லை. இருபதாண்டுகளாக அரசியலில் இருக்கிறார். கட்சியில் பொறுப்புகளை; வகித்திருக்கிறார். இப்போதும்கூட மக்கள் ஆதரவிருந்தால் தான் அவர் மேயராக முடியும். ஆகையால் இதில் திணிப்பு என்ற பேச்சுக்கே இடமிருப்பதாக நான் நினைக்கவில்லை. தன்னுடைய தொகுதியில் அவருக்கு நல்ல பெயரே இருக்கிறது. மேயர் தேர்தலில் என் ஓட்டு அவருக்கே!' என்று எழுதியிருந்தார்.

சென்னையில் மேயர் தேர்தலில் போட்டியிலிருந்து விலகிக் கொண்டு, சந்திரலேகாவுக்கு ஆதரவு தெரிவிப்பதாக ஜெயலலிதா அறிக்கை விடுத்த போதிலும், அந்தக் கட்சியின் மூத்த தலைவர்கள் யாரும் சந்திரலேகாவுக்காக பிரச்சாரம் செய்யவில்லை.

உள்ளாட்சி மன்றத் தேர்தலையொட்டி, 96ஆம் ஆண்டு அக்டோபர் 1ஆம் தேதியன்று விழுப்புரம், 2ஆம் தேதி கடலூர், 3ம்தேதி தஞ்சாவூர், 4ஆம் தேதி புதுக்கோட்டை மற்றும் காரைக்குடி, 5ஆம் தேதி மதுரை, 6ஆம் தேதி கோயம்புத்தூர், 7ஆம்தேதி சேலம், 8ஆம் தேதி திருச்சிராப்பள்ளி, 9 மற்றும் 10ஆம் தேதிகளில் சென்னை மாநகரம் என்ற அளவில் நிகழ்ச்சிகளை வகுத்துக் கொண்டு தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டேன்.



''மக்களின் எதிர்பார்ப்புகளை ஸ்டாலின் நிச்சயமாகப் பூர்த்தி செய்வார் என்ற நம்பிக்கை எனக்குண்டு'' என்றார், ரஜினிகாந்த்!

6ஆம் தேதியன்று கோவைக்கு நான் சென்றது

குறித்து, 7.10.1996 தேதிய "தினமணி" நாளிதழ் "முதல்வர் வருகை" - "அன்றும், இன்றும்" என்ற தலைப்பிலே ஒரு ஒப்பீட்டுச் செய்தியை வெளியிட்டிருந்தது.

"முதல்வர் வருகை என்றால், பஸ் போக்குவரத்து நிறுத்தப்பட்டு, எந்த வழியிலும் செல்ல முடியாமல், ஐந்து ஆண்டுகளாக அவஸ்தைப்பட்டு வந்த கோவை நகர மக்களுக்கு தற்போது வித்தியாசமான அனுபவம் காத்திருந்தது. ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது, சென்னையில் அவர் புறப்படுகிறார் என்றால், கோவையில் போக்குவரத்து நிறுத்தப்பட்டு விடும்! அந்த அளவுக்குக் கெடுபிடிகள் இருக்கும். பொதுத் தேர்தலின்போது, பிரச்சாரத்துக்காக உடுமலைக்கு ஹெலிகாப்டரில் வந்த ஜெயலலிதா, அங்கிருந்து உடுமலை, ஆனைமலை, பொள்ளாச்சி, கிணத்துக் கடவு வழியாக கோவை வந்தார். உடுமலையில் மாலை 6.30 மணிக்கு ஹெலிகாப்டரில் இறங்கினார். ஆனால் கோவையில் 6 மணிக்கே பஸ் போக்குவரத்து நிறுத்தப்பட்டுவிட்டது. நேரம் செல்லச் செல்ல, இரு சக்கர வாகனங்கள் கூடச் செல்ல அனுமதிக்கப் படவில்லை. இதனால் பல இடங்களில் பொது மக்களுக்கும், போலீசாருக்கும் மோதல் ஏற்பட்டது. கோவை சுந்தரா புரத்தில் பஸ் டிரைவர் ஒருவர் அ.தி.மு.க.வினரால் தாக்கப்பட்டார். பெண்கள் கைக்குழந்தையுடனும், மூட்டை முடிச்சுகளுடனும் நடந்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. போக்குவரத்து 6 மணிக்கே நிறுத்தப்பட்டாலும், ஜெயலலிதா கோவை வந்து சேர்ந்தபோது இரவு 12.30 மணி."



வெற்றி பெற்ற ஸ்டாலினை வாழ்த்துகிறார் பேராசிரியர்

"ஞாயிற்றுக்கிழமை நிலைமை தலைகீழாக இருந்தது. கருணாநிதி முதல்வராகப் பதவியேற்ற பிறகு முதல் முறையாக ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கோவை வந்தார். ஆனால் பஸ் போக்குவரத்து

வழக்கம்போல் இயங்கிக் கொண்டிருந்தது. உக்கடத்தில் முதல்வரின் வாகனம் நின்று கொண்டிருந்த போதிலும், மறுபுறம் பஸ்கள் சென்று கொண்டிருந்தன. பல பேருக்கு முதல்வர் வந்திருக்கிறார் என்பதையே நம்ப முடியவில்லை! இதேபோல், உடுமலையிலும், பொள்ளாச்சியிலும் வழக்கமான போக்குவரத்து தடைபடவில்லை. கோவை உக்கடத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் முதல்வரைப் பார்க்கவும் அவரது பேச்சைக் கேட்கவும் காத்திருந்தனர்!''

- இந்தச் செய்தியை நான் ஏதோ பெருமைக்காக வெளியிட்டுள்ளேன் என்று நினைக்கத் தேவையில்லை. மக்களுக்காகத்தான் நாமிருக்கிறோம் - நமக்காக அவர்கள் இல்லை என்ற எண்ணம் பொறுப்பிலே உள்ளவர்களுக்கு வர வேண்டும். இதைத்தான் இப்போதுகூட நாம் சென்னையில் வெளியிலே செல்கின்ற நேரத்தில், ''போக்குவரத்தை எந்தக் காரணத்தாலும் நிறுத்தக்கூடாது'' என்று எனது பாதுகாவலர்களிடம் கண்டிப்பாகச் சொல்லியிருக்கிறேன். சென்னை வாழ் மக்கள் பல முறை இதைக் கண்டிருக்கலாம்.

14.10.1996 அன்று உள்ளாட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் எண்ணி அறிவிக்கப்பட்டன. தி.மு.க., த.மா.கா. கூட்டணியே மிகப் பெரிய வெற்றியைப் பெற்றது.

மேயர் தேர்தலில் சென்னையில் ஒவ்வொரு கட்சியின் வேட்பாளரும் பெற்ற வாக்குகள்-

மு.க.ஸ்டாலின் (தி.மு.க.) *8,24,526*

வெற்றி பெற்ற தோழமைக் கட்சி மேயர்கள்




பெ.குழந்தை வேலு (தி.மு.க.) மதுரை



டாக்டர் சூடாமணி (தி.மு.க.) சேலம்



உமா மகேஸ்வரி (தி.மு.க.) நெல்லை



கோபால கிருஷ்ணன் (த.மா.கா) கோவை



புனிதவள்ளி (த.மா.கா.) திருச்சி

சந்திரலேகா (ஜனதா) 3,87,401

எஸ்.எஸ்.சந்திரன் (ம.தி.மு.க.) 86,135

வே.கருப்பன் (சுயேட்சை) 27,958

இரா.சு.சிவப்பிரகாசம் (சுயேச்சை) 4,808

பூ.விசுவநாதன் கக்கன் (சுயேச்சை) 4,473

கே.இ.விசுவநாதன் (சுயேச்சை) 3,290

மதுரையில் மேயராக தி.மு.க. வேட்பாளர் **குழந்தைவேலு** 1,80,122 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். முன்னாள் அமைச்சர் **காளிமுத்து** அ.தி.மு.க. சார்பில் அங்கே போட்டியிட்டு, 1,06,098 வாக்குகளைப் பெற்று வெற்றி வாய்ப்பை இழந்தார்.

மாநகராட்சி கவுன்சிலர்கள் தேர்தலைப் பொறுத்த வரையில், சென்னையில் மொத்தம் 155 இடங்களில், தி.மு.க., த.மா.கா., இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கூட்டணி 150 இடங்களிலும், அ.தி.மு.க. 2 இடங்களிலும், சுயேட்சைகள் 3 இடங்களிலும் வெற்றி பெற்றார்கள். ஏனைய மாநகராட்சி களிலும் இதே போன்ற நிலைமைதான். அதுபோலவே தமிழகத்தில் தேர்தல் நடைபெற்ற 102 நகராட்சிகளில் தி.மு.க. 48 இடங்களிலும், த.மா.கா. 28 இடங்களிலும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 2 இடங்களிலும் கூட்டணி சார்பில் வெற்றி பெற்றன.

திருநெல்வேலியில் மேயராக தி.மு.க. வேட்பாளர் **உமா மகேஸ்வரியும்** - சேலத்தில் மேயராக தி.மு.க. வேட்பாளர் டாக்டர் **சூடாமணியும்,** கோவையில் மேயராக த.மா.கா., வேட்பாளர் **கோபால கிருஷ்ணனும்,** திருச்சியில் மேயராக த.மா.கா. வேட்பாளர் **புனிதவள்ளியும்** வெற்றி பெற்றார்கள். தமிழகத்தில் மொத்தம் உள்ள ஆறு மாநகராட்சிகளிலும் தி.மு.க., த.மா.கா. கூட்டணியின் வேட்பாளர்களே மேயர் தேர்தலில் மகத்தான வெற்றியைப் பெற்றனர்.

சென்னை மேயர் தேர்தலில் வெற்றி பெற்ற மு.க.ஸ்டாலின் தலைநகரிலே உள்ள கூட்டணிக் கட்சித் தலைவர்களையும்

முக்கிய பிரமுகர்களையும் சந்தித்து நன்றி தெரிவித்த நேரத்தில் - சூப்பர் ஸ்டார் **ரஜினிகாந்த்** இல்லத்திற்கும் சென்று வாழ்த்துப் பெற்றார்.

ஸ்டாலினை அன்புடன் வரவேற்று வாழ்த்திய ரஜினி, ''மு.க.ஸ்டாலினிடம் மிகப்பெரிய பொறுப்பு ஒப்படைக்கப் பட்டுள்ளது. மக்கள் அவரிடம் நிறைய எதிர்பார்க்கிறார்கள். மக்களின் எதிர் பார்ப்புகளை மு.க.ஸ்டாலின் பூர்த்தி செய்வார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. மு.க.ஸ்டாலின் யார் - அவரது திறமை என்ன -என்பதை நிரூபிக்க இது ஒரு பெரிய சந்தர்ப்பம்'' என்று செய்தியாளர்களிடம் கூறினார்.

தேர்தல் முடிவுகள் குறித்து ஏடுகள் எழுதும்போது-

''அ.தி.மு.க. எதிர்ப்பு அலை தமிழகத்தில் தொடர்கிறது என்பதை உள்ளாட்சித் தேர்தல் முடிவுகள் தெளிவாகக் காட்டுகின்றன. கடந்த ஐந்து மாத கால ஆட்சியில், தி.மு.கழக அரசு குறிப்பிடத்தக்க தவறு எதையும் செய்யவில்லை. இதனால் இந்த அரசுமீது மக்கள் தங்கள் நம்பிக்கையை இழக்கவில்லை என்பதையும் தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்துகின்றன. ''பொதுத் தேர்தலில் பெரிய தோல்வியைச் சந்தித்த அ.தி.மு.க. தோல்விக்கு தங்கள் ஆட்சியில் நடந்த தவறுகளே காரணம்'' என்பதை ஒப்புக் கொள்ளவில்லை. ''இந்திய தேர்தல் கமிஷனின் சதி'' என்றும், தங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களின் ''குழி பறித்தல் நடவடிக்கை'' என்றும் துவக்கத்தில் ஜெயலலிதா காரணங்களைக் கூறினார். சசிகலாவுக்கு எதிராகக் கட்சியில் போர்க்கொடி உயர்ந்தவுடன் அவரது உறவைத் துண்டிப்பதாகக் கூறினார். ''நடந்து விட்ட தவறுகள் இனிமேல் நடக்காது'' என்று ஜெயலலிதா கூற முன்வரவில்லை. ''அரசியல் உள்நோக்கத்துடன் பழிவாங்கும் வகையில் பொய்யான வழக்குகளைத் தொடர்கிறார்கள்!'' என்று ஜெயலலிதா புகார் தெரிவித்தார். அவரது இப்புகாரை மக்கள் ஏற்கவில்லை என்பதை தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்துகின்றன. ''அவர் மீதும், தவறு செய்த முன்னாள் அமைச்சர்கள் மீதும் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுப்பதில் தவறில்லை'' என்று மக்கள் தீர்ப்பளித்திருப்பதாகக் கருதலாம். சென்னை மாநகராட்

சியைப் பொறுத்த வரையில், தி.மு.க. தலைவர்மீது வாரிசு அரசியல் - குடும்ப அரசியல் என்ற புகார்கள் எடுபடவில்லை! அ.தி.மு.க., காங்கிரஸ், ம.தி.மு.க., சி.பி.எம்., ஜனதா, பாரதிய ஜனதா ஆகிய கட்சிகள் எல்லாம் ஒரே அணியில் நின்று தேர்தலைச் சந்தித்திருந்தாலும், மேயர் தேர்தலில் வெற்றி பெற்றிருக்க முடியாது என்பதையே தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன!'' - என்றெல்லாம் எழுதின.


குறிப்பாக **''தினமணி''** நாளிதழ் தனது *16.10.1996* தேசிய தலையங்கத்தில்-

''தமிழகத்தில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தல்களில் தி.மு.க., த.மா.கா. கூட்டணி மகத்தான வாகை குடியிருப்பது எதிர்பாராததல்ல. ஐந்து மாதங்களுக்கு முன் நடைபெற்ற பொதுத் தேர்தலில், இக்கூட்டணி - ஊழல் மலிந்த அ.தி.மு.க. அரசைத் தூக்கி எறிந்ததுடன், தமிழக அரசியலில் ஒரு திருப்புமுனையைத் தோற்றுவித்தது. இந்த உள்ளாட்சித் தேர்தல்களோ - அரசியலின் அடித்தளமே மாற்றத்துக்குள்ளாகி இருப்பதற்கான அடையாளங்களைக் காட்டுகிறது. ஆறு மாதத்திற்கு முன்புவரை பூதாகார ஆளும் கட்சியாக தர்பார் நடத்தி வந்த அ.தி.மு.க. பொதுத் தேர்தலில் நொறுங்கி விழுந்ததிலிருந்து எழுந்து நிற்க முடியவில்லை. ஜெயலலிதாவை நாலாபுறங்களிலும் விதவிதமான கிரிமினல் வழக்குகள் முற்றுகையிட்டுக் கொண்டிருக்கின்றன. அவருடைய வீட்டிலேயே இயங்கிக் கொண்டிருந்த அதிகார மையம் -



நானும், சந்திரபாபு நாயுடுவும் கிருஷ்ணா நதிநீர்த் திட்டத்தை துவக்கினோம்.

நடத்திய திருவிளையாடல்கள் - நாள்தோறும் ஒரு கிரிமினல் வழக்காக வெளிச்சத்துக்கு வந்து கொண்டிருக்கின்றன. ஜெயலலிதாவின் முக்கிய அமைச்சர்கள் ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகி சிறைவாசம் அனுபவித்து வருகிறார்கள்.''



தமிழக எல்லையில் பாய்ந்து வரும் கிருஷ்ணா நீர்!

''பத்து ஆண்டுகளுக்கும் மேலாக - அ.தி.மு.க. ஆட்சி பலப்பல சாக்குபோக்குகளைக் கூறியபடியே - உள்ளாட்சித் தேர்தல்களை தவிர்த்து வந்தது. டெல்லியிலிருந்து எத்தனையோ எச்சரிக்கைகள் வந்தபோதும், ஜெயலலிதா அசைந்து கொடுக்கவில்லை, அப்படியிருக்க, அதிகாரப் பொறுப்பை ஏற்ற ஆறே மாதத்துக்குள் இத்தேர்தல்களை நடத்தி முடித்ததே - தி.மு.க. அரசின் சாதனை''

-என்று எழுதியது.

25.10.1996 அன்று சென்னை மாநகர மேயராக **மு.க.ஸ்டாலின்** பதவியேற்றார். சென்னை மாநகரின் 44ஆவது மேயராக பதவியேற்றபோதிலும், **மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மேயர்** என்ற பெருமையை ஸ்டாலின்தான் பெற்றார். சென்னை மாநகராட்சி அலுவலகமான ரிப்பன் மாளிகையில் உள்ள மாநகராட்சி மன்றத்தில், சம்பிரதாய முறைப்படி நடைபெற்ற விழாவில் சென்னைப் பெருநகர முதன்மை நீதிபதி **ராமமூர்த்தி** அவர்கள் ஸ்டாலினுக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

அந்த விழாவில் நானும், **மூப்பனார்** அவர்களும், மத்திய மாநில அமைச்சர்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டோம். எளிமையாகவும், அதே நேரத்தில் எழுச்சியை வெளிப்படுத்தும் வகையிலும் அந்த விழா நடைபெற்றது. சென்னை மாநகராட்சி தி.மு.க. வின் பொறுப்பிலே இருந்தபோதுதான், *1973*ஆம் ஆண்டு

முதலமைச்சராக இருந்த நானே அதனைக் கலைப்பதாக பேரவையில் அறிவித்தேன். அதே மாநகராட்சிக்கு 23 ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெற்ற தேர்தலில் தி.மு.கழகம் வெற்றி பெற்று மேயர் பொறுப்பேற்றது.

பதவியேற்பு விழாவிற்கு மக்கள் தலைவர் மூப்பனார் அவர்கள் நேரில் வந்ததோடு, குழுமியிருந்தவர்களிடையே பொறுமையாக நடந்து வந்து மூப்பனார், ஸ்டாலின் அருகே சென்று, தன் கையில் வைத்திருந்த பரிசுப் பொருளை அவருக்கு பரிசளித்து, தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

அந்த நிகழ்ச்சியிலே மட்டுமல்ல- என்னுடைய இல்லத்து நிகழ்ச்சிகள் எதுவாக இருந்தபோதிலும், மூப்பனார் அவர்கள் குடும்பத்தில் ஒருவர் என்ற உணர்வோடு வாழ்த்தத் தயங்கியதே இல்லை. குறிப்பாக, என் மகள் கனிமொழி கர்ப்பமாக இருந்தபோது, அதற்காக வளைகாப்பு வளையல்களைக்கூட அவரே வாங்கியனுப்பியிருந்தார்.

எம்.ஜி.ஆர். மன்றத் தலைவர், சகோதரர் ஆர்.எம்.வீ. அவர்களின் 71ஆவது பிறந்த நாளையொட்டி, ஆழ்வார்கள் ஆய்வு மையத்தின் சார்பில் விருதுகள் வழங்கும் விழாவில், 9.9.1996 அன்று கலந்து கொண்டு அவரை வாழ்த்தினேன். அதே விழாவில் த.மா.கா. தலைவர் அருமை நண்பர் மூப்பனார் அவர்களும் கலந்து கொண்டு ஆர்.எம்.வீரப்பன் எழுதிய ''புதிய சிந்தனைகள்'' என்ற நூலினை வெளியிட்டு, உரையாற்றினார்.

''உரையாற்றினார்' என்று நான் இங்கே எழுதினாலும், அவர் என்ன உரையை அந்த விழாவிலே ஆற்றினார் என்றால், ''அடுத்து கலைஞர் பேச இருக்கிறார் - எனவே நான் இத்துடன் முடித்துக் கொள்கிறேன்'' என்பதுதான் அவர் அன்று ஆற்றிய உரை.

அந்த விழாவிலே அண்ணா பெயரால் அமைந்திருந்த விருதினைப் பெற்ற பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தனார் அவர்கள் ஆற்றிய உரை சிறப்பானது. அண்ணா அவர்களின் நினைவைப் போற்றியும், அண்ணா அவர்களுக்கும், ராமானுஜர் அவர்களுக்கும் உள்ள வேறுபாடுகள்,

உடன்பாடுகள் - அவர்களுடைய காலத்தில் இருந்த ஒற்றுமை, வேற்றுமை- இவை பற்றியெல்லாம் எடுத்துச் சொல்லி, ''அண்ணா அவர்களின் வழித் தோன்றலாக நான் இருக்கிறேன்!'' என்று ஞானசம்பந்தனார் கூறினார். கூறினார் என்பதை விட எச்சரிக்கை செய்தாரென்றுதான் நான் எடுத்துக் கொண்டேன். ''அண்ணாவின் வழித் தோன்றல் என்று உன்னைச் சொல்லி இருக்கிறேன் - அதற்கேற்ப நடந்து காட்டு!'' என்று அறிவுரை கூறியதாகத் தான் நான் எடுத்துக் கொண்டு, அதற்கேற்பப் பணிகளையாற்றி வருகிறேன்.

அந்த விழாவில் அ.ச.ஞா. அவர்கள் என்னைத் தொடர்ந்து வாழ்த்தியபோது - அவரது வாழ்த்துரைகள் அங்கே தமிழாக வழிந்தபோது - அண்ணாவை நான் கண்டேன். அவருடைய உருவத்தைக் கண்டபோது, தந்தை பெரியாரைக் கண்டேன். அவர்கள் இருவரும் அந்த விழாவிற்கு வந்து என்னை வாழ்த்தியதாகவே எண்ணிக் கொண்டேன். அந்த விழாவில் சுப்பு ரெட்டியாருக்கும், மணவை முஸ்தபாவுக்கும் விருதுகள் வழங்கப்பட்டன.

அந்த விழாவில், ஆர்.எம்.வீ. அவர்களை நான் வாழ்த்தியபோது - ''ஆர்.எம்.வீ.யைப் பொறுத்த வரையில் அவருடைய பிறந்தநாள் விழா என்பது விசுவாசத்திற்கு நடைபெறுகிற விழா - அவருடைய பிறந்தநாள் விழா உறுதி குலையாத நெஞ்சத்துக்கு நடைபெறுகிற விழா - அவருடைய பிறந்த நாள் விழா என்பது தவறு செய்தாலும் அதைத் திருத்திக்கொண்டு மற்றவர்கள் தவறு செய்யாமல் இருப்பதற்கு வழி காட்டுகின்ற ஒரு விழா - அந்த விழாதான் ஆர்.எம்.வீ. அவர்களுடைய 71ஆவது பிறந்தநாள் விழாவாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது! ஆர்.எம்.வீ. என்னைவிட வயதிலே இரண்டு வயது இளையவர். எனவே வாழ்த்துகின்ற தகுதி எனக்கு உண்டு என்பதால் வாழ்த்துகிறேன். முதலமைச்சர் என்பதால் வாழ்த்தவில்லை - அவரோடு பழகியவன் - தந்தை பெரியாருடைய கரம் பிடித்து வளர்ந்தவர்கள் - அறிஞர் அண்ணாவினுடைய கரம் பிடித்து வளர்ந்தவர்கள் - எம்.ஜி.ஆருடைய தோளோடு தோள் நின்று தோழமை

கொண்டு வளர்ந்தவர்கள் நாங்கள்! இந்த இயக்கத்திலிருந்து எம்.ஜி.ஆர். அவர்கள் பிரிய வேண்டிய காலம் வந்த நேரத்தில், தன்னுடைய கண்ணீர்த் துளிகளால் அந்தக் காலத்தை வென்றிட முடியாதா என்று எண்ணியவர் ஆர்.எம்.வீரப்பன் அவர்கள். அதை முடியாமல் செய்தவர்கள் இன்றைக்கு எங்கே இருக்கிறார்கள் என்பது நாட்டுக்குத் தெரியும் - வரலாற்றுக்குத் தெரியும் - ஆர்.எம்.வீ. அவர்களுக்கும் தெரியும்! எனவே இந்த இயக்கத்திலே அன்றைக்கு நானும், எம்.ஜி.ஆரும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று விரும்பிய ஆர்.எம்.வீ. அவர்கள் நீண்ட காலத்திற்குப் பிறகு - ஒரு இடைவெளிக்குப் பிறகு - இன்றைக்கு எம்.ஜி.ஆர். இயக்கமும், தி.மு.கழகமும் இணைந்து பணியாற்றுகின்ற ஒரு நிலையைக் காணுகின்ற அளவுக்கு வெற்றி பெற்றிருக்கின்றார் என்பதற்காக நான் அவரை வாழ்த்துகின்றேன். ஒரு பிரிவுக்குப் பிறகு ஏற்பட்டுள்ள கூடல் இது. அதிக இன்பமான நிகழ்ச்சி; அந்த இன்பமான நிகழ்ச்சியில் என்னுடைய இளவலை வாழ்த்த என்னுடைய இதயம் விரிகிறது - மேலும், மேலும் விரிகிறது. இந்த விரிந்த இதயத்தால் இளவல் ஆர்.எம்.வீ. அவர்களை வாழ்த்துகின்றேன்!'' என்று குறிப்பிட்டேன்.



''என்றைக்கும் கருணாநிதியே எனக்குத் தலைவர்'' என்றார், சந்திரபாபு நாயுடு, அருகே முரசொலி மாறன்.

சென்னை வாழ் மக்களின் நீண்ட நாள் கனவாக இருந்த கிருஷ்ணா நீர் 29.9.1996 அன்று பகலில், தமிழக எல்லைக்குள் நுழைந்தது. அதனை யொட்டி, சென்னையில் பெருவிழா நடைபெற்றது.


தமிழகத்தின் ஊத்துக் கோட்டை வட்டம், தாமரைக்குப்பம் அருகே ஆந்திர எல்லையை அது கடந்து, அங்கிருந்து கால் வாய் மூலம் பூண்டி நீர்த்

தேக்கத்துக்கு வந்து பயணம் வந்தது. சென்னைக்கு கிருஷ்ணா நதி நீரைப் பெற்று - வழங்கும் விழா தாமரைக்குப்பம் கிராமத்தில் கோலாகலமாக நடைபெற்றது. விழா மேடையில் இருந்தபடி பொத்தானை அழுத்தி, கிருஷ்ணா நதி நீர்க் கால்வாயில், தமிழக ஆந்திர எல்லையில் அமைந்திருந்த தலை மதகை ஆந்திர முதலமைச்சராக அப்போதிருந்த **சந்திர பாபு நாயுடு** திறந்து வைத்தார். சம்பிரதாய முறைப்படி அவர் இப்படி அளித்த நீரைப் பெற்றுக் கொள்ளும் வகையில், நினைவுத் தூணை நான் திறந்து வைத்தேன். ஆந்திரக் கால்வாயிலிருந்து தமிழகக் கால்வாய்க்கு நீர் திறந்து விட்ட போது, நானும் நாயுடுவும் உற்சாகம் மிகுந்த நிலையில் காணப்பட்டோம். நிகழ்ச்சிக்கு வந்திருந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் பலத்த கரவொலி செய்து கிருஷ்ணா நதி நீரை வரவேற்றனர்.

''தமிழ்நாடு - ஆந்திரத்தைப்போல அனைத்து மாநிலங்களும் ஒன்றுக் கொன்று விட்டுக் கொடுத்து மக்களுக்குப் பயன்தரக் கூடிய பணிகளை நிறைவேற்ற வேண்டும்- அப்போதுதான் நாடு வாழ முடியும்!'' என்று நான் கூறினேன்.

மேலும் நான் பேசும்போது-

''சென்னைக்கு கிருஷ்ணா நதி நீரைக் கொண்டு வரும் திட்டம் பல்லாண்டு காலத்திட்டம்! அதற்கு 1983ல் அடிக்கல் நாட்டியவர்கள் முன்னாள் முதல்வர்கள் எம்.ஜி.ஆரும். என்.டி.ராமாராவும் என்பதை எண்ணி மெய் சிலிர்த்துப் போகிறேன். கலை, அரசியல் துறைகளில் ஈடுபட்ட இரண்டு நண்பர்கள் தொடங்கிய திட்டம் இது. இதை கலை அரசியல் துறையில் ஈடுபட்ட நான் வந்து



கிருஷ்ணா நதிநீர்த் திட்ட விழாவில் நான் திறந்து வைத்த நினைவுத் தூண்!

நிறைவேற்றி முடிக்க சந்திரபாபு நாயுடு உதவியுள்ளார்!'' என்று தெரிவித்தேன்.

மேலும் அந்த விழாவில் பேசும்போது-

''ஆந்திரத்திலிருந்து தண்ணீர் வருகிறது - எனக்கும் ஆனந்தக் கண்ணீர் வந்து கொண்டிருக்கிறது! வாழ்விலோர் திருநாள் என்பார்கள் - அதைப்போல என்னுடைய பொது வாழ்க்கையில் இன்று ஒரு திருநாள்! இந்தத் திருநாள் என் திருமண நாளைவிட மகிழ்ச்சியைத் தருகின்ற நாள்! இந்த நாளில் என்னுடைய அருமைச் சகோதரர், ஆந்திரத்தினுடைய முதல் அமைச்சர் சந்திரபாபு நாயுடு அவர்கள் மிக உருக்கமாக - ஆனால் உண்மையான உளத் தூய்மையோடு தமிழகத்திற்கு இன்று வாரி வழங்கியுள்ள கிருஷ்ணா தண்ணீர் மாத்திரமல்ல - அவருடைய இனிய உள்ளத்தையும் நமக்கு வழங்கியிருக்கிறார். என்னைத் தன்னுடைய தலைவனாக அவர் இங்கே ஏற்றுக் கொண்டு, **''என்றைக்கும் கருணாநிதி எனக்குத் தலைவர்''** என்று அவர் குறிப்பிட்ட அந்தச் சொற்றொடர் என்னுடைய உள்ளத்தில் என்றும் பசுமையாக இருக்கும். இப்படிப்பட்ட ஒரு நல்ல தளபதியைப் பெறுவதற்கு நான் பெரும் பாக்கியம் செய்திருக்க வேண்டும். இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்தினுடைய பிரதமராக தேவகவுடா வீற்றிருக்கிறார் என்றால் - அந்தப் பெரு முயற்சியிலே ஈடுபட்டவர்களின் பெயர்கள் குறிப்பிடப் படும்போது என்னுடைய பெயரும், த.மா.கா.வின் தலைவர் மூப்பனாருடைய பெயரும் பெரும்பாலும் குறிப்பிடப் பட்டாலும்கூட - எங்கள் இருவரையும் அதற்காக உசுப்பி விட்டு, அந்தக் காரியத்தை கடைசி நிமிடம் வரையிலே அயராமல் - ஓய்வு கொள்ளாமல் - உறக்கம் கொள்ளாமல் - உண்ணாமல் - ஓடியாடிப் பணியாற்றி வெற்றிகரமாக செய்து முடித்தவர் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு என்று சொன்னால், அதை இந்திய நாட்டுச் சரித்திரம் என்றைக்கும் மறக்காது - மறைக்கவும் செய்யாது'' என்றுதான் எனது பேச்சைத் தொடங்கினேன்.

அந்த விழாவில் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு அவர்கள் பேச்சின் ஒரு பகுதி வருமாறு:-

"இன்றைய தினம் தமிழகத்திற்கும் - ஆந்திர மாநிலத்திற்கும் - ஏன், இந்த தென்னிந்தியாவிற்கே ஒரு சரித்திர பூர்வமான நாள்! இன்று சென்னைப் பட்டிணத்திற்கு கிருஷ்ணா நதியிலிருந்து 3 டி.எம்.சி. தண்ணீர் கொடுக்கின்றோம். இது 1983-ல் நினைத்த திட்டம். இதனுடைய மூலம் என்னவென்றால், முதன் முதலாக 15 டி.எம்.சி. தண்ணீர்விட வேண்டுமென்று, மத்திய அரசுக்கு கடிதம் எழுதிய ஒரே மனிதர் திரு.டாக்டர் கருணாநிதி அவர்கள். எல்லோருடைய அன்புக்கும் பாத்திரமான தலைவர் என்.டி.ஆர். அவர்களின் காலத்தில்தான் இந்தத் திட்டம் தொடங்கப் பெற்றது. அன்றைய முதல்வர்கள் எம்.ஜி.ஆர். அவர்களும், என்.டி.ஆர். அவர்களும் இந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினர். இப்படித் தொடங்கப்பெற்ற இந்தத் திட்டம் கொஞ்ச நாள் தாமதமாகியது. இந்தத் திட்டத்திற்கு சுமார் ஆயிரம் கோடி ரூபாய் செலவு என்பது நிர்ணயிக்கப்பட்டு, இதில் தமிழ்நாட்டின் பங்காக சுமார் 510 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டது. இதை ஒரு வார்த்தையில் சொல்ல வேண்டுமென்றால், திரு.கருணாநிதி அவர்கள் முதல்வராக வேண்டுமென்பதற்காகவே இந்தச் சென்னைப் பட்டிணத்திற்கு



ஆளுநர் சென்னாரெட்டி, தலைமையில், கிருஷ்ணா நதிநீரை என்னிடம் வழங்குகிறார், சந்திரபாபு நாயுடு!

தண்ணீர் விடும் திட்டம் காத்துக் கொண்டிருந்தது என்றுதான் சொல்ல வேண்டும். என் கைகளால் சென்னைப் பட்டினத்திற்கு தண்ணீர் விடுவதை என் பாக்கியமாக - என் பூர்வ ஜென்ம சாபல்யமாக - நினைத்து மகிழ்ச்சியடைகிறேன்.

நான் பெருமகிழ்ச்சியோடு டாக்டர் கருணாநிதி அவர்களை - ''கருணாநிதிகாரு'' என்று அன்பாக அழைக்கும் அவர்களை - நிரந்தர முதல்வராக வாழ வேண்டுமென்று வாழ்த்துகிறேன். நாம் ஒன்றாக இருக்கிறோம். வருங்காலத்திலும் நாம் ஒன்றாக இருப்போம். ஒருங்கிணைந்து செயல் படுவோம். நமது நட்பு நிரந்தரமானது. அரசியலில் பண்புள்ள தலைவர் டாக்டர் கருணாநிதி அவர்களை என்னுடைய தலைவர் என நான் நீண்ட நாட்களாகக் கூறி வருவதுண்டு. எப்பொழுதும் எனக்கு டாக்டர் கருணாநிதிதான் தலைவர்! அவர் என்றென்றும் எங்களுக்குத் தலைவராக விளங்க வேண்டும்!'' என்று உணர்ச்சியுடன் குறிப்பிட்டார், **சந்திரபாபு நாயுடு.**

காலையில் நடைபெற்ற விழாவினைத் தவிர்த்து, அதே நாள் மாலையில் சென்னையில் கிருஷ்ணா நீரைப் பெற்றுக் கொள்ளும் விழா ராஜாஜி மண்டபம் எதிரில் உள்ள திடலில், தமிழக ஆளுநராக அப்போதிருந்த **சென்னா ரெட்டி** அவர்களின் தலைமையில் நடைபெற்றது. ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு கிருஷ்ணா நதி நீரை வழங்கி உரையாற்றவும் - நான் அதனைப் பெற்றுக் கொண்டு ஏற்புரையாற்றவுமாக விழா அமைந்தது. பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்த தம்பி **துரைமுருகன்** வரவேற்புரையாற்றினார். மத்திய அமைச்சர்கள் **முரசொலி மாறன், அருணாசலம்,** ஆந்திர மாநிலம் நீர்ப்பாசனத்துறை அமைச்சர் **சிவ பிரசாத் ராவ்,** தமிழக உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்த **கோ.சி.மணி** ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

12. கரும்பு தேசத்து இரும்பு மனிதன்!


போராட்டங்கள் -அடக்குமுறைகள் - சோதனைகள் - தியாகத் தீ - இத்தனையும் தாண்டிடவும், தாங்கிடவும் தங்களைத் தயார் படுத்திக் கொண்டு வாழ்பவர்களுக்கு, அவர்ளைப்போலவே வாழ்ந்து காட்டுகிறவர்கள் தான் வழி காட்டுகிறார்கள், வரலாறுகளாக விளங்கி! அந்த வரலாறுகளில் நேரிடையாக இடம் பெறுகிற வாய்ப்பில்லாமற் போய்விடினும், வேறு ஏதோ ஒரு வகையில் - அதே வழியில் நடந்து தீர வேண்டிய நிலைக்கு ஆளான என் போன்றோர் இருக்கத்தான் செய்கிறார்கள்.

தந்தை பெரியார் அவர்களின் அறிவாற்றலால் - அயராத உழைப்பால் - அணுவளவும் அவிழ்ந்து போகாத கட்டுப்பாடு காத்திடும் உணர்வால் - அவர் தொடங்கிய தன்மான இயக்கம், தமிழகத்தில் மட்டுமின்றி, தரணியெங்கும் தழைத்துச் செழித்து தமிழகத்தை ஆளுகின்ற வாய்ப்பையும் பெற்று, அந்த இயக்கத்தின் இலட்சியங்களைச் செயல் வடிவில் வெற்றிபெறச் செய்துள்ள இந்தக் காலகட்டத்தில், அறிஞர் அண்ணா வழி நின்று, அவற்றின் பயன்களைத் தமிழ் மக்கள் அனுபவிக்கும் உயர்நிலை கண்டு - உவகை கொண்டு - உற்சாகம் பெறும் இந்த வேளையில், இருபதாம் நூற்றாண்டின் மிகச் சிறந்த புரட்சியாளர்களில் ஒருவரான **பிடல் காஸ்ட்ரோவின்** அந்தக் கம்பீர உருவம் என் கண்முன்னே காட்சியளிக்கிறது.

கரீபியன் கடலில், அமெரிக்காவின் மியாமி கரையிலிருந்து 90 கிலோ மீட்டர் தொலைவில், இரண்டு பெரிய தீவுகளையும் 1500 சிறிய தீவுகளையும் கொண்ட ஒரு சிறு நாடுதான் **கியூபா**. அதன் மக்கள்தொகை சுமார் ஒரு கோடிக்குமேல் இருக்கும்.

ஐரோப்பாவிலிருந்து வந்து குடியேறிய பெரும்பான்மை மக்களையும் - கருப்பின சிறுபான்மை மக்களையும் கொண்ட **கியூபா- ஸ்பெயின்** நாட்டின் காலனியாக பல ஆண்டு காலம் இருந்து - அதனை எதிர்த்து வீரம் செறிந்த போராட்டத்தை நடத்தியது. 1898ஆம் ஆண்டு **அமெரிக்காவுக்கு** எதிரான போரில் ஸ்பெயின் தோற்றது. அதன் தொடர்ச்சியாக, கியூபாவைவிட்டு ஸ்பெயின் வெளியேறியது. ஆயினும் கியூபாவிற்கு சுதந்திரம் கிடைக்காமல், அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் இருந்தது. அமெரிக்கா அதனைத் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்ததற்குக் காரணமே, வளம் நிறைந்த கியூபாவின் இயற்கைச் செல்வங்களின்மீது கொண்ட பற்றினால் தான்! உலகின் **கரும்பு வயல்** என்றும், **சர்க்கரைக் கிண்ணம்** என்றும் அழைக்கப்படும் நாடுதான் கியூபா!

1940 முதல் 1944 வரை ஜனாதிபதியாக இருந்த **பாடிஸ்டா** என்பவர், 1952இல் ராணுவப் புரட்சியின் மூலம் ஆட்சியை மீண்டும் கைப்பற்றினார். அவரது ஆட்சியில் ஊழலும், வறுமையும் தலைவிரித்தாடியது. எதிர்த்துக் குரல் கொடுத்தவர்கள் சிறையிலே அடைக்கப்பட்டு, சித்ரவதைக்கு ஆளாக்கப்பட்டனர். அந்த நேரத்தில் கியூபாவின் சுதந்திரப் போராட்ட வீரர் **ஜோஸ்மார்ட்டியின்** கருத்துக்களால் ஈர்க்கப் பட்டு மனம் கொதித்து எழுந்த இளைஞன்தான் பிடல் காஸ்ட்ரோ.



பேரறிஞர் அண்ணாவின் வழி நின்று ஆட்சி நடத்தும் இந்த வேளையில், மிகச் சிறந்த புரட்சியாளரான பிடல் காஸ்ட்ரோவின் கம்பீர உருவம் என் கண்முன் காட்சி அளிக்கிறது.

பிடல் காஸ்ட்ரோ, இருபத்தோராவது வயதில் **ஹவானா** தன்னாட்சிப் பல்கலைக் கழகத்தில் சட்டக் கல்லூரியில் பயின்று வந்தார். அவர் 400 மீட்டர் ஓட்டப் பந்தயத்திலும்,



காஸ்ட்ரோவின் தந்தை
எஞ்சல் காஸ்ட்ரோ

உயரம் தாண்டுவதிலும் பிறரைத் தோற்கடித்தவர். எனவே, மாணவர்கள் மத்தியில் கவர்ச்சியுள்ள ஒருவராகவே இருந்தார். ஆனால், நான்கு பேரோடு சேர்ந்து வேலை செய்யும் பக்குவம் பெறாதவராக இருந்ததால், அவர் தனித்தே நடமாடிக் கொண்டிருந்தார். கம்யூனிஸ்ட் மாணவர்கள் உட்பட எல்லோரும் அவருடன் நட்பாகப் பழகுவது வழக்கம். பிடல், சட்டக் கல்லூரியில் இறுதி வகுப்பில் படித்துக் கொண்டிருந்தபோது, ஏராளமான புத்தகங்களை வாங்கிப் படிக்கும் வழக்கமுடையவராக இருந்தார். அந்தப் பருவத்தில் அவர் மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின் நூல்களை நிறையப் படித்தார்.

ஆர்த்தோடக்சோ கட்சி அலுவலகத்திற்கு நாள்தோறும் பிடல் போய் வந்தார். இளைஞர்கள் கூட்டம் அவரைச் சுற்றியே வளையமிட்டது. "இந்தத் தேர்தல் நாடகங்கள் மூலம் கியூபாவை என்றைக்கும் விடுவிக்க முடியாது! இப்போதுள்ள அரசியல் சட்டத்தை வைத்துக் கொண்டு எந்த அடிப்படை மாற்றத்தையும் கொண்டு வர முடியாது. புரட்சி ஒன்றுதான் வழி! புரட்சியின் மூலம் அமையும் அரசினால்தான் ஏழைகளை வாழ்விக்க முடியும்!" என்று பேசி வந்தார். ஆர்த்தோடக்சோ கட்சியின் முக்கியப் பிரச்சாரகர்களில் இவரும் ஒருவராக ஆனார். பின்னர் ஆர்த்தோடக்சோ கட்சியை விட்டு விலகி, புரட்சிகர இளைஞர் குழுக்களை உருவாக்கினார்.

1953ஆம் ஆண்டு, ஜூலை மாதம், 26ஆம் தேதி இரவு 120 இளைஞர்களுடன் பாடிஸ்டாவின் மான்கடா படைத் தளத்தின்மீது தாக்குதலை நடத்தி, அதிலே தோல்வியடைந்து, சிறை பிடிக்கப்பட்டனர் காஸ்ட்ரோவும் அவரது தோழர்களும்! சாண்டியாகோ நகரின் ஒதுக்குப் புறத்தில் இருந்த மான்கடா இராணுவ முகாமை 120 போராளிகளுடன் தாக்குதல் நடத்தியபோது பிடல் காஸ்ட்ரோவுக்கு இருபத்து


தாயார் லினா ரஸ்

ஏழு வயதுதான். சிறையிலே வைத்தே அவர்களைக் கொன்றுவிட முயற்சிகள் நடந்த போதும், நாட்டிலே நடை பெற்ற மக்கள் இயக்கங்கள் காரணமாக பிடல் காஸ்ட்ரோ விடுதலையாகி மெக்சிகோ சென்றார்.

அங்கேதான் அர்ஜெண்டைனாவைச் சேர்ந்த இளைஞன் சேகு வேராவின் நட்பு கிடைத்தது. இருவரும் இணைந்து புரட்சிப் பணியைத் தொடர்ந்தனர். 1956ஆம் ஆண்டு கிரான்மம் என்ற கப்பலில் பிடல் காஸ்ட்ரோ தலைமையில், கியூபாவிற்கு வந்த புரட்சிப் படை 3 ஆண்டுகள் தொடர்ந்து கொரில்லாப் போர் நடத்தி, பாடிஸ்டாவை நாட்டை விட்டுத் துரத்தியது. 1959ஆம் ஆண்டு, ஜனவரி மாதம், 1ஆம் தேதி, பிடல் காஸ்ட்ரோ புரட்சிகர அரசாங்கத்தை அமைத்தார்.

1961ஆம் ஆண்டு, டிசம்பர் 2ஆம் தேதி பிடல் காஸ்ட்ரோ "நான் ஒரு மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்! இறக்கும்வரை நான் அவ்வாறே இருப்பேன்!" என்று பிரகடனம் செய்தார்.

பிடல் காஸ்ட்ரோ புரட்சிக்காகத் தன்னை தயாரித்துக் கொண்ட முறையும், நம்பிக்கைக்குரிய இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குப் பயிற்சி கொடுத்த முறையும், ஒரு திட்டவட்டமான பாதையில் முன்னேறியது. அது இளமைச் சவடால் போர்வழிகளின் இயக்கமாக வளரவில்லை. திட்டமிடப்பட்ட புரட்சிகரக் குழுக்களாக வளர்ந்து கொண்டிருந்தது.

குழுக்களில் சேர்ந்து போராடுவதற்கு விரும்பும் தோழர்களுக்கு உள்ள வீரப் பண்புகள் குறித்து பிடல் கூறும்போது, "திறமை - தெளிவு- துணிவு - அர்ப்பணிப்பு - தன்னுயிரையும் பலியிடத் தயாராகும் தியாகம் - ஆகியவை இருத்தல் வேண்டும். சோதனைகள், தோல்விகள் வரும்போது

குழம்பாமல், குழப்பாமல், களத்தில் நிற்கும் வீரப் பண்பு வேண்டும்'' என்று தெரிவித்தார்.



பள்ளி மாணவனாக காஸ்ட்ரோ

1953ஜூலை மாதத் தொடக்கத்தில், மான்கடா ராணுவ முகாம்மீது தாக்குதல் நடத்துவது தொடர்பான இறுதித் தயாரிப்புப் பணிகள் முழு வேகமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. தாக்குதல் நடத்த ஜூலை 26ஆம் தேதி என்று நாள் நிர்ணயிக்கப்பட்டது. அதற்கு இரண்டு காரணங்கள் - ஒன்று, **ஜோஸ் மார்ட்டி** தனது முதல் சுதந்திரப் போராட்டத்தைத் தொடங்கிய நாள் ஜூலை 26. இரண்டாவது, ஜூலை மாதத்தில் இயேசு நாதர் உயிர்த்தெழுந்த பண்டிகை நாட்கள் என்பதால் - ராணுவ அதிகாரிகள் அந்த நாட்களில் முகாமைவிட்டு நிகழ்ச்சிக்குப் போய் விடுவார்கள் என்பதால் - அந்த நாள் தாக்குதலுக்கு ஏற்றது என்று முடிவு செய்தனர்.

ஜூலை 23ஆம் தேதி பயணம் புறப்படுவதற்கு முன்பு, தனது வீட்டிற்குச் சென்று நான்கு வயதான மகனை மடியில் தூக்கி வைத்து முத்தமிட்டார், காஸ்ட்ரோ. அப்போது அவரது கண்ணாடி நழுவி கீழே விழுந்ததைக் கவனிக்காமல் சென்று விட்டார். பாதி தூரம் சென்ற பிறகுதான் பத்திரிகை படிக்க கண்ணாடியைத் தேடியபோது தவறவிட்டது தெரிந்தது. திரும்பச் செல்ல நேரம் இல்லை. வழியிலே ஒரு கண் மருத்துவரைச் சந்தித்துப் புதிதாக கண்ணாடி ஒன்றைப் பெற்றுக் கொண்டார். தாமதத்தைத் தவிர்க்க காரை வேகமாக ஓட்டிச் செல்ல, காவல் துறையினரிடம் பிடிபட்டார். அப்படி பிடிபட்டதால், காவல் துறை அலுவலகத்திற்கே வண்டியை எடுத்துச் சென்று, சோதனை செய்த பிறகே, அபராதம் பெற்றுக் கொண்டு காரை விடுவித்தனர்.

பயணத்தின்போது மீண்டும் ஒரு ஆபத்து! பிடல் காஸ்ட்ரோ ஒரு நகரத்தைக் கடக்கிறபோது, ராணுவச் சோதனைச்

சாவடிக்கருகில் அவரது வண்டி தடுத்து நிறுத்தப்பட்டது. சோதனை செய்தால், ஆபத்தான ஆயுதங்கள் வண்டியிலே இருப்பது தெரிந்திருக்கும். ஆனால், ராணுவ வீரர்கள் இருவர் காருக்கு அருகே நெருங்கி வந்து கதவைத் திறக்குமாறு கூறினர். அந்த இரண்டு வீரர்களில் ஒருவர், காஸ்ட்ரோவின் கார் ஓட்டுனரான **மிட்சலின்** ஊரைச் சேர்ந்தவர். இருவரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டவுடன் காரை மறந்துவிட்டு, கட்டிப் பிடித்துக் கொண்டு சொந்த ஊர்ப் பிரச்சினைகளைப் பேசிட முற்பட்டு விட்டனர்.

அந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு பிடல் காஸ்ட்ரோ தப்பி ஓடுவதற்கு எண்ணிய நேரத்தில் - அந்த ராணுவ வீரர், ''நீ போகலாம், மிட்சல்!'' என்று கூறி காரை சோதனையிடாமல் அனுப்பி வைத்துவிட்டார். வாகன ஓட்டுநரால் அந்த ஆபத்து தவிர்க்கப்பட்டது.

1953 ஜூலை 26ஆம் நாள் நடைபெற்ற புரட்சிப் படையினரின் தாக்குதல் தோல்வியில் முடிந்தது. அப்போது பிடல் காஸ்ட்ரோ, ''நமது தாக்குதல் தோல்வி அடைந்து விட்டது. இனி அதைப் பற்றியே பேசிக் கொண்டிருக்க வேண்டாம் - மலைப் பகுதிகளுக்குச் சென்று அங்கிருந்து கொரில்லா யுத்தத்தைத் தொடங்க வேண்டும். இப்போது தோற்று விட்டோம் - ஆனால், இந்தத் தோல்விப் படியை வெற்றிக்கான படியாகக் கொண்டு வெற்றியை நோக்கி முன்னேறுவோம்!'' என்று கூறினாராம்.

1953 ஆகஸ்ட் முதல் தேதி. காவல் படையின் குழு ஒன்று **பெட்ரோ மானுவேல் சாரியா** தலைமையில் குடிசையில் பதுங்கியிருந்த பிடல் காஸ்ட்ரோவையும், அவருடன் இருந்த மூன்று புரட்சி வீரர்களையும் சுற்றி வளைத்தது. சாரியாவின் வீரர்கள் அவர்களைச் சுடுவதற்குத் துப்பாக்கியை நீட்டியபோது, சாரியா உரத்த குரலில், ''அவர்களைச் சுட வேண்டாம் - உயிருடன் பிடிக்க வேண்டும்!'' என்று கூறினார்.

காவலர்கள் சுட வேண்டுமென்று பிடிவாதமாகக் கூறியபோதும், சாரியா அதற்கு அனுமதி கொடுக்கவில்லை.

அவர்களைக் கைது செய்து காரில் ஏற்றச் செய்தார். பிடல் காஸ்ட்ரோவை முன் இருக்கையில் தன்னருகே சாரியா அமர்த்திக் கொண்டார்.

பிடல் காஸ்ட்ரோ சாரியாவின் காதருகில், ''நான்தான் நீங்கள் தேடிக் கொண்டிருக்கும் மனிதன்!'' என்று கூற, அதற்கு சாரியா அமைதியாக, ''அது எனக்குத் தெரியும்!'' என்றார்.

''பிறகு, ஏன் என்னைச் சுடவில்லை? சுட்டுக் கொன்றிருந்தால், பதக்கமும் பதவி உயர்வும் கிடைத்திருக்குமே!'' என்று பிடல் கேட்க - ''குற்றங்களைத் தடுக்க வேண்டிய காவல் துறையே, குற்றங்களை இழைக்கக்கூடாது என்பது என் கொள்கை'' என்று சாரியா பதிலளித்தார்.

எதிரே வந்து உப தளபதி கைது செய்யப்பட்டவர்களைத் தன்னிடம் ஒப்படைக்க வேண்டுமென்று கேட்க, அதற்கு சாரியா மறுத்துவிட்டார். அவனிடம் அவர்களை ஒப்படைத்தால், வழியிலேயே அவர்களைக் கொன்றுவிடக் கூடுமென்று நன்கு தெரியும். வழியில் வந்த பிஷப், புரட்சிக் காரர்களைச் சுட்டுவிட வேண்டாமென்றும், அவர்களைச் சரணடையச் செய்ய தான் தயாராக இருப்பதாகவும் உறுதி கூறி, அவ்வாறே சரணடையவும் செய்தார்.

பிடல் காஸ்ட்ரோ உயிரோடு இருக்கும் செய்தியை அவரது தோழர்களுக்கும், உறவினர்களுக்கும் பிஷப் தெரிவித்தார். ஏனென்றால், பிடல் காஸ்ட்ரோ கொல்லப்பட்டுவிட்டதாக, ஜூலை 30,31 ஆகிய தேதிகளில் வானொலியில் செய்தி ஒலிபரப்பப்பட்டிருந்தது.

பானியாட்டோ சிறையில் தனிக் கொட்டடியில் பிடல் காஸ்ட்ரோ அடைக்கப்பட்டார். அவர் சிறைப்பட்ட செய்தியைக் கேள்விப்பட்ட அவரது மனைவி மிர்தா, மகனுடன் சிறையில் அவரைச் சந்தித்தார். அவளது கண்கள் குளமாயின. துணிச்சலை சற்றும் இழக்காத பிடல், தனது மனைவிக்குத் தைரியமூட்டி அனுப்பி வைத்தார். விசாரணை அறிவிக்கப்பட்டது. இட்லரின் நீதிமன்றத்தை ஜார்ஜ் டிமிட்ரோவ் எப்படி மக்களின் கொள்கை விளக்க

மேடையாகப் பயன்படுத்திக் கொண்டாரோ, அதுபோலவே பாடிஸ்டாவின் நீதி மன்றத்தை பிடல் காஸ்ட்ரோவும் பயன்படுத்திக் கொண்டார்.

21.9.1953 நீதிமன்ற விசாரணை தொடங்கப்படும் என்று அறிவிப்பு! குற்றம் சாட்டப்பட்டவர்கள் 122 பேர் - அவர்களுக்காக வாதாட வந்திருந்த வழக்கறிஞர்கள் 22 பேர் - நீதிபதிகள் மூன்று பேர் - ஆறே ஆறு பத்திரிகையாளர்கள்! அவர்களுக்கான நிபந்தனை - விசாரணை முழுவதையும் காதால் கேட்கலாம் - ஆனால், கைகளால் ஒரு வரிகூட எழுதக்கூடாது - புகைப் படமும் கூடவே கூடாது!

விசாரணை நடத்த நீதிமன்றம் 50 அடி நீளமும், 15 அடி அகலமும் கொண்ட பரப்பளவு கொண்டது. கைதிகள் எல்லாம் கை விலங்குடன் நீதி மன்றத்தில் நிறுத்தப்பட்டனர். தளபதி சாவியானோ பிடல் காஸ்ட்ரோவை ஒரு ஜீப்பில் கை விலங்குடன் அழைத்து வந்திருந்தார்.



ஹவானா கல்லூரியில் காஸ்ட்ரோ

விசாரணை தொடங்குவதற்கு முன்பு, விலங்கு பூட்டப்பட்டிருந்த தன் கைகளை உயரத் தூக்கிக் காட்டியபடி, பிடல் உரத்த குரலில், ''கனம் நீதிபதி அவர்களே! இந்தக் காட்சியைப் பாருங்கள். இது நீதி வழங்கும் மன்றம். நீங்கள் நீதி வழங்க இங்கே வந்திருக்கிறீர்கள். கொடும் கைதிகளுக்குக்கூடத் தரப்படாத தண்டனையாக எங்களைக் கை விலங்குடன் வைத்து விசாரித்தால், அது நீதி ஆகுமா?'' என்று முதல் தாக்குதலைத் தொடுத்தார்.

உடனடியாக நீதிபதியின் உத்தரவுப் படி, கைதிகளின் விலங்குகள் அகற்றப் பட்டன. ''நீதிமன்ற வளாகத்திற்குள் விலங்குடன் யாரையும் அழைத்து



கியூபாவின் சுதந்திரப் போராட்ட வீரர் ஜோஸ் மார்ட்டி- காஸ்ட்ரோவின் வழிகாட்டி!

வரக்கூடாது'' என்றும் தீர்ப்பு கூறினார்.

பிடல் காஸ்ட்ரோ தனக்காக வழக்கறிஞர் யாரையும் வைத்துக் கொள்ளாமல், தானே வாதாடினார் மிக நீண்ட உரை அது. அதனை முடிக்கும் நேரத்தில், ''நீதிபதி அவர்களே! எனக்கு எவ்வளவு கடும் தண்டனை வழங்கினாலும் அதை நான் ஏற்பேன். ஏனெனில், பாடிஸ் டாவின் சட்டத்தை அல்ல - உங்களை நான் மதிக்கிறேன். அதற்காக, நீங்கள் என்னை ஏதாவது ஒரு காரணம் காட்டி விடுவித்தாலும், மீண்டும் ஆயுதம் ஏந்தி இந்த ஆட்சியைத் தூக்கி எறியப் போராடவே செய்வேன்!'' என்று கூறினார்.

மேலும் அவர் நீதிமன்றத்தில், ''நீதிபதி அவர்களே! இப்பொழுது நடைபெறும் அரசு ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதல்ல - இது சட்டவிரோத அரசு! நானும் எனது தோழர்களும் இதனை எதிர்க்கிறோம். பள்ளியில் படிக்கும்போது, தாய்நாட்டை நேசிக்கும்படி கற்பிக்கப் பட்டோம். சட்டம் பயிலும்போது, சட்ட மீறுதலை எதிர்க்கக் கற்பிக்கப் பட்டோம். இதன்படி சட்ட விரோத அரசை, தூக்கியெறியப் போராடினோம். எங்களுக்கு இராணுவ சர்வாதிகாரியைத் தூக்கியெறிய வழியில்லாமல் போய் விட்டது! தேர்தல் நடந்திருந்தால், தேர்தல் மூலம் தோற்கடிக்க வாய்ப்புக் கிடைத்திருக்கும். தேர்தலை ரத்து செய்து விட்டார். நாடாளுமன்றத்தைக் கலைத்து விட்டு, இராணுவத்தின் உதவியுடன் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டார். நாட்டையும், மக்களையும் காக்க நாங்கள் போராடுகிறோம்!'' என்று பிடல் காஸ்ட்ரோ வாதாடியது இன்றைக்கும் புகழ்பெற்று விளங்குகின்றது.

நீதிமன்றத்தில் காஸ்ட்ரோ வெளிப்படுத்திய கருத்துகளால், அவரது புகழ் கியூபா முழுவதும் பரவியது. பலர் விடுதலை பெற்றனர். ஆனாலும், காஸ்ட் ரோவுக்கு 15 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதித்துத் தீர்ப்புக் கூறினர். சிறை அமைந்த **பைன்ஸ் தீவு**, கியூபாவின் கடலில் இருந்து 50 மைல் தொலைவில் அமைந்திருந்தது. தன்னையும், தனது தோழர்களையும் தயாரித்துக் கொள்ளும் இடமாக அந்தச் சிறை வாழ்க்கையை பிடல் மாற்றியமைத்துக் கொண்டார். மக்களிடம் ஏற்பட்ட மாபெரும் எழுச்சியால், பிடல் 1955ஆம் ஆண்டில் - அதாவது அவரது இருபத்தொன்பதாவது வயதில் விடுதலை செய்யப்பட்டார்.

பைன்ஸ் தீவுச் சிறையிலிருந்து மீண்ட பிடல் காஸ்ட்ரோ **மெக்சிக்கோ** சென்றார். பிறகு, அங்கிருந்தபடியே புரட்சிக்குத் தயார் செய்தார். ஆள் வசதி - பண வசதி ஏதுமின்றி தன்னம்பிக்கையுடன் இயங்கி, கியூபாவிலிருந்தும், பிற பகுதிகளிலிருந்தும் நிதியையும், ஆட்களையும் திரட்டினார். கியூபா, மெக்சிகோ, அமெரிக்கா ஆகிய மூன்று இடங்களில் ஆயுதப் பயிற்சி பெற்ற குழுக்களை உருவாக்கினர்.




நீதிபதி அவர்களே! எனக்குக் கடும் தண்டனை விதித்தாலும் ஏற்பேன் - என்னை விடுவித்தால், மீண்டும் ஆயுதம் ஏந்தி ஆட்சியைத் தூக்கியெறியப் போராடுவேன்!

1956, நவம்பர் 26ல் **கிரான்மா** என்ற படகில் 81 பேர் ஆயுதங்களுடன் கியூபா வந்து சேர்ந்தனர். இராணுவ முகாமைத் தாக்கி பாடிஸ்டா இராணுவத்திற்குப் பெரும் சேதத்தை விளைவித்தனர். பாடிஸ்டா இராணுவத்தினரே பிடலுக்கு ஆதரவாகத் திரண்டனர். பிடல் காஸ்ட்ரோ தலைமை



யிலும், அவரது தம்பி ரால் காஸ்ட்ரோ, ஆருயிர் நண்பன் சேகுவேரா ஆகியோர் தலைமையிலும் மூன்று பிரிவுகளாகப் பிரிந்து, போரிட்டு சாண்டியா கோவைக் கைப்பற்றி ஹவானா நோக்கி முன்னேறினார்.



பிடல் காஸ்ட்ரோ இளம் பிராயத்திலேயே எழுச்சி முரசு! புரட்சிக் கனல்! இனங்கண்டு எதிரிகளை வீழ்த்திக் காட்டும் மூளைக்குச் சொந்தக்காரர்!

1958, டிசம்பரில் பாடிஸ்டா நாட்டை விட்டு ஓடினார். புரட்சி வெற்றி அடைந்தது. பிடல் தனது முப்பத்து இரண்டாவது வயதில் பிரதமராகப் பொறுப்பேற்றார். இவ்வாறு அந்தச் சின்னஞ்சிறிய நாட்டில், புரட்சிக்காரராக மலர்ந்து மனம் கமழத் தொடங்கினார்.

அந்த மாவீரன் இன்று வாழ்கிறார் என்றாலும் வாடிக் கொண்டுதான் இருக்கிறார், அவருடைய உடல் நலிவு காரணமாக! நலிவு நீங்கி நாடு மதித்திட - நானிலம் போற்றிட - அவருக்கு வாழ்த்துச் சொல்லி, அவரது உயிருக்குயிராய் இருந்த உத்தமத் தோழர் சே குவேராவின் வாழ்க்கை வரலாற்றின் சில பக்கங்களைப்

புரட்டிக் காட்டா விட்டால், கியூபாவின் புரட்சி வரலாறு முழுமை யானதாக ஆகாது என்பதால், அவரைப்பற்றியும் அடுத்தடுத்த தொடர்களில் எழுதுகிறேன் என்று கூறி, கியூபாவிலிருந்து உங்களை யெல்லாம் தமிழகத்திற்கு அழைத்து வருகிறேன். அதற்கு முன்பாக இரும்பு மனிதன் என்று அழைக்கப் பட்ட பிடல் காஸ்ட்ரோ பற்றி -



கியூபா சிறிய நாடு - ஆயிரக் கணக்கான தீவுகளைக் கொண்ட அழகிய தேன்கூடு! அமெரிக்கா கை வைக்கும் போதெல்லாம் கொட்டிவிடும் தேனீக்கள்தான் கியூபா மக்கள்!

''கியூபா நாட்டின் பெருமை போற்றும் விழா'' ஒன்று, 2006ஆம் ஆண்டு, ஜனவரி 21ஆம் நாள் சென்னையில் நடைபெற்றபோது, அந்த மாநாட்டில் நான் வழங்கிய கவிதையில் சில வரிகளை மட்டும் இந்த நேரத்தில் நினைவூட்டிட விரும்புகின்றேன்.

என்னிடம் -

''உயிரோடிருக்கும் உலகத் தலைவர்கள் வரிசையில் உங்களைக் கவர்ந்த ஒருவரின் பெயரைக் கூறுக'' என்றனர்.

''உயிரோடிருப்பவர் மட்டுமல்ல; என் உயிரோடும் மூச்சோடும் கலந்துள்ள ஒரு தலைவர் உண்டு; அவர்தான் பிடல் காஸ்ட்ரோ!'' என்றேன்.

இளம் பிராயத்திலேயே அவர் எழுச்சி முரசு! புரட்சிக் கனல்!
இனங்கண்டு எதிரிகளை வீழ்த்திக் காட்டும் மூளைக்குச் சொந்தக்காரர்!
இருளில் சர்வாதிகாரியாகவும், வெளிச்சத்தில் ஜனநாயகவாதியாகவும்
இரட்டை வேட அரசியல் நடத்திய 'பாடிஸ்டா' எனும்

பசுத்தோல் வேங்கை;
அந்த விலங்கின் வேஷத்தைக் கலைக்கத் துணிந்து - அதற்கோர்
அணியைத் தயாரித்துப் போரிட்டுத் தோல்வியுற்று - சிறைப்பட்டு;
நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட போதுதான்
''வரலாறு என்னை விடுதலை செய்யும்'' எனும்
வைர வரிகளைச் சரித்திரப் புத்தகத்தில்
வையம் புகழ் சித்திரமாகப் பதிய வைத்தார்; காஸ்ட்ரோ!

பாடிஸ்டா ஆட்சியில் பிடலுக்குப் பதினைந்தாண்டு சிறை என்றதும்-
பற்றி யெரிந்த மக்களின் புரட்சி நெருப்புக்கு
ஈடு கொடுக்க முடியாமல் இரண்டே ஆண்டுகளில்
சிறைக் கதவு திறந்தது-
சிங்கம் வெளியே வந்தது! அந்த
சிங்கத்துக்கோர் சிறுத்தை துணை சேர்ந்தது; அதன் பெயர்தான் சேகுவேரா!
தங்கத் தம்பியாம் ரால் காஸ்ட்ரோவையும், தம்பி போன்ற சேகுவோராவையும்,
அங்கம் வகிக்கச் செய்து, ஆர்த்தெழுந்து போரிட்டு முன்னேறவே;
பங்கமுற்ற பாடிஸ்டா பயந்து நடுங்கி - இனி
கியூபா மக்களிடம் தன் சேட்டைகள் செல்லாதென்று
நீயும் வா என்று ஆணவத்தையும் அழைத்துக் கொண்டு;
நாட்டை விட்டே ஓடி விட்டான்;
நல்லாட்சி மலர வழிவிட்டு!
கேட்டைக் களைத்தெறிந்த காஸ்ட்ரோ; தலைமை வழிகாட்டியானார்!
கடமையும் பொறுப்பும் வந்தவுடன்
கடந்த காலத்தை மறந்துவிடாமல்;
சோதனைகளைச் சந்தித்து மறைந்த
ஜோஸ் மார்ட்டியின் தலைமைக்கும்
சாதனைகள் புரிந்து மறைந்த
சிபாசின் வழிகாட்டுதலுக்கும்


மதிப்பும் மரியாதையும் அளித்திட
மறக்காத மாவீரர்தான் பிடல் காஸ்ட்ரோ!
''கியூபா'' சின்னஞ் சிறிய நாடு -
ஆயிரக்கணக்கான தீவுகள் கொண்ட அழகிய தேன் கூடு!
தேன் கூடென்று ஏன் சொல்கிறேன் தெரியுமா?
தெரியாமல் அமெரிக்கா கைவைக்கும் போதெல்லாம்
கொட்டி விடும் தேனீக்கள் கியூபாவின் மக்கள் -
அந்தக் கூடு காக்கும் காவல்காரர்தான் பிடல் காஸ்ட்ரோ!

நல்வாழ்வுச் சட்டங்கள் பலவும் - மக்கள்
நலம் பெருக்கும் சாதனைகள் பலவும்
இல்வாழ்வையும் துறந்து
இலட்சியத்துக்காக வாழ்ந்திடும் காஸ்ட்ரோவின்
புகழ்மிகு வரலாற்றின் பொன்னேடுகளாய்
புதிய புதிய பக்கங்களாய்ப்
புரண்டு கொண்டேயிருக்கின்றன!
உலகின் சர்க்கரைக் கிண்ணம் எனப் பேசுமளவுக்குக்
கரும்பு வயல்களைக் கொண்ட கியூபாவில்
சர்க்கரை வாங்குவதையே நிறுத்திப் பொருளாதாரச்
சரிவு ஏற்படுத்த அமெரிக்கா ஆயத்தமானபோது;
சீனாவும், சோவியத்தும்தான் சிநேக நாடுகளாய்க்
காஸ்ட்ரோவுக்குக் கை கொடுத்த கதை உலகறியும்!
''வாழை தென்னை மரங்களை வலிமைமிகு
துதிக்கையால்
யானை முறித்துப் போட்டு விடும்!
அந்த யானை போன்றதே அமெரிக்கா!'' என்றனர்.
அதற்கு காஸ்ட்ரோ அஞ்சி நடுங்கவில்லை.
வாழை மரம், தென் மரங்களை யானை
வாயிலே போட்டுக் கொள்ளலாம் எளிதாக!

ஆனால் அங்குசத்தை யானை விழுங்க முடியுமா?
அங்குசந்தான் கியூபா - அமெரிக்க யானைக்கு!
வெள்ளி விழா ஐ.நா. சபைக்கு நடந்தபோது - பல
நாடுகளின் தலைவர்களுக்கு மத்தியில்
முப்பத்தியிரண்டு வயது நிரம்பிய சிவப்பு நட்சத்திரமாக

முதுபெரும் தலைவர்களால் பாராட்டப் பெற்றவர்
பிடல் காஸ்ட்ரோ
முதற்கட்டமாக ஸ்பெயின் நாட்டின் காலனி கியூபா-
அடுத்த கட்டம் அமெரிக்காவின் காலுக்கு ஆணியாக
ஆக வேண்டும் கியூபா என்று ஆதிக்கபுரியினர்
முனைந்தபோது;
அதுதான் முடியாது; அந்தக் காலையே
முடமாக்குவோமென்று-
மக்களைத் திரட்டினார் பிடல் காஸ்ட்ரோ-
மலைப்புற்ற ஏகாதிபத்தியவாதிகள்
பின்னங்கால் பிடரியில் இடிபட ஓடினர் என்றால்; அது
பிடல் காஸ்ட்ரோவின் உறுதிக்கும் -அவரைப்
பின்பற்றும் மக்களின் மகத்தான சந்திக்கும்;
பின்பலமாய் மார்க்சின் தத்துவம் இருப்பதற்கும் -
அடையாளம் என்பதையே இந்த அவையோரும் அறிவீர் -
அடியேனும் அறிவேன்!

நான் எழுதிய இந்தக் கவிதை ஆங்கிலத்திலே மொழியாக்கம் செய்யப்பட்டு - இந்தியாவிலே உள்ள கியூபா நாட்டுத் தூதுவர்களால் பிடல் காஸ்ட்ரோ விற்கு அனுப்பி வைக்கப் பட்டதாகவும், அவர் அந்தக் கவிதையை ரசித்து விட்டு, தனது அலுவலக மேஜையில் அதனை வைத்திருப்ப தாகவும் எனக்கு பின்னர் தகவல்கள் கிடைத்தன! கம்யூனிஸ்ட் நண்பர்கள் இப்படிச் சொன்னார்கள்.



திறமை - தெளிவு - துணிவு - அர்ப்பணிப்பு - தன்னுயிரையும் பலியிடத் தயாராகும் தியாகம் - இவ்வளவும் ஒரு புரட்சி வீரனுக்குத் தேவை!

முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ்.ராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த தின விழா, சென்னை கலைவாணர் அரங்கத்தில், அரசு விழாவாக 7.9.1996 அன்று நடைபெற்றது. அந்த விழாவில் 230 தலைமை ஆசிரியர்கள் உட்பட 288



பிடல் காஸ்ட்ரோ பற்றி நான் எழுதிய கவிதையை வழங்கிய ''கியூபா நாட்டின் பெருமை போற்றும் விழா!''

ஆசிரியர்களுக்கும், பத்தாம் வகுப்பு, ப்ளஸ் 2 வகுப்புகளில் சிறப்பிடம் பெற்ற 178 மாணவர்களுக்கும், நல்லாசிரியர் விருது வழங்க வேண்டு மென்று கேட்டுக் கொண்டதன் பேரில், நான் வழங்கினேன்.

அந்த விழாவில் நான் பேசும்போது, ''இந்த விருதுக்கு நல்லாசிரியர் விருது என்று பெயர் இருப்பதால், விருது பெறாத மற்ற ஆசிரியர்கள் எல்லாம், ஏதோ கெட்ட ஆசிரியர்கள் என்பதைப் போல பொருள் வந்து விடக்கூடும். எனவே, டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்தநாளை யொட்டி **'ஆசிரியர் தினம்'** கொண்டாடப்பட்டு, அந்த நாளில் இந்த விருதுகள் எல்லாம் வழங்கப்படுவதால், நல்லாசிரியர்கள் விருது இனிமேல் **டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது** என்றே அழைக்கப்படலாம்!'' என்று அறிவித்தேன். அவ்வாறே அந்த விருது ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் அந்த விழாவில் தனித் தமிழ் இயக்கம் கண்ட தேவநேயப் பாவாணர் குடும்பத்துக்கு இருபது இலட்சம் ரூபாய் பரிவுத் தொகையை வாணரின் மருமகள் **மனோன்மணி,** மகன்கள் **செல்வராஜ், தெ.மணிமன்ற வாணன், அடியார்க்கு நல்லான்,** மகள் **மங்கையர்க்கரசி,** பேரன் **யோகவா எபனேசர்** ஆகிய ஆறு பேருக்கும் தலா 3 லட்சத்து 33 ஆயிரம் ரூபாய் வீதம் வழங்கினேன்.

★ ★ ★



டாக்டர் ராதாகிருஷ்ணனின் பிறந்தநாளன்று வழங்கப்படும் ''நல்லாசிரியர் விருது'' என்பதை ''டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது'' என்று மாற்றினேன்!

கலாஷேத்திரா நிறுவன வளாகத்தில் உள்ள நூல் நிலையத்தில், டாக்டர் உ.வே.சா. அவர்களின் சிலையைப் பீடத்தில் நிறுவிட ஐம்பதாயிரம் ரூபாய் தேவைப்படுவதாகத் தெரிவித்து, **''தினமணி''** நாளிதழ் ''பீடம் ஏறக் காத்திருக்கும் தமிழ்த் தாத்தா'' என்ற தலைப்பில் ஒரு செய்தியினை வெளியிட்டிருந்ததைக் கண்ட நான், உடனடியாக அன்றைய தினமே, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஐம்பதாயிரம் ரூபாய் அந்தப் பணிக்காக வழங்கப்படும் என்று அறிவித்து, அதனை வழங்கிடச் செய்தேன்.

மக்களவையிலும், மாநில சட்டப் பேரவையிலும் மகளிருக்கு 33 சதவிகித இட ஒதுக்கீடு அளிக்க வகை செய்யும் 81ஆவது அரசியல் சட்டத் திருத்த மசோதா மக்களவையில், 12.9.1996 அன்று பிரதமர் **தேவகவுடா** அவர்களால் தாக்கல் செய்யப்பட்டது. கட்சி வேறுபாடின்றி, அனைத்துப் பெண் உறுப்பினர்களும் அந்த மசோதாவை அன்றைய தினமே நிறைவேற்ற வேண்டுமென்று வலியுறுத்தினார்கள். அதற்காக அன்றைய தினம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பெண் உறுப்பினர்கள் எல்லாம் அவையிலே முதல் வரிசையிலே அமர்ந்திட அனுமதிக்கப்பட்டார்கள். மசோதாவைத் தாமதிக்காமல் நிறைவேற்ற வேண்டுமென்று மம்தா



பானர்ஜியும், விவாதமின்றி நிறைவேற்ற வேண்டுமென்று கீதா முகர்ஜியும் கோரினர். இந்த மசோதாவை அவையிலே தாக்கல் செய்வதற்காகக் கேள்வி நேரத்தையே மக்களவைத் தலைவர் பி.ஏ.சங்கா ரத்து செய்தார். மசோதாவை நிறைவேற்றுவதற்கு முன்னர், அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்தப்பட வேண்டுமென்று பிரதமர் தெரிவித்தார். அவ்வாறே பேரவைத் தலைவர் அறையில், அனைத்துக் கட்சித் தலைவர்களும் கலந்து கொண்ட கூட்டம் நடைபெற்றது.



"கலாஷேத்திரா" நிறுவனத்தில், முதலமைச்சர் நிவாரண நிதி உதவியுடன் நிறுவப்பட்ட டாக்டர் உ.வே.சா.வின் சிலை!

கேள்வி நேரத்தை ரத்து செய்ததால், அந்த நேரத்தில் இந்தத் தீர்மானம் குறித்து கருத்து தெரிவித்த அனைவரும் நடப்புக் கூட்டத் தொடரிலேயே அந்த மசோதாவை நிறைவேற்ற வேண்டுமென்பதை வலியுறுத்திப் பேசினார்கள்.

★ ★ ★

1996ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது, தி.மு.க.கழகத்துடன் காங்கிரஸ் கூட்டணி அமைக்கக் கூடாது என்பதிலும், ஜெயலலி

தாவுடன்தான் கூட்டணி அமைக்க வேண்டும் என்பதிலும் உறுதியாக இருந்தவர் பி.வி.நரசிம்மராவ் அவர்கள்தான். தமிழகக் காங்கிரஸ் கட்சியின் எண்ணத்தைப் புரிந்து கொள்ளாமலோ அல்லது புரிந்து கொண்டு வேறு காரணங்களாலோ டெல்லியிலே உள்ள காங்கிரஸ் செயல்பட்ட காரணத்தால் தான், 96ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது த.மா.கா. உதயமாகவே காரணமாயிற்று.

13. அன்பும் கருணையும்

திருவாரூர் தேரும் திருவள்ளுவர் கோட்டமும்

திராவிட முன்னேற்றக் கழகம், கடவுள் பற்றியும், மூட நம்பிக்கைகள் பற்றியும் கொண்டுள்ள கருத்துக்களை ஆட்சிப் பொறுப்பிலே இருந்த காலத்தில் எல்லாம், அரசின் செயல்பாடுகளில் திணிக்க எந்தவித முயற்சியையும் எப்போதும் எடுத்ததில்லை என்பதை ஆத்திகப் பற்றும், நம்பிக்கையும் உள்ளவர்கள் நன்கறிவார்கள். ஆன்மிகவாதி களையும், கடவுள் நம்பிக்கைக் கொண்டவர்களையும் கொண்டு திருக்கோயில் ஆலோசனைக் குழுவினை ஆட்சிக்கு வந்த போதெல்லாம் அமைத்து, முறைப்படி அவர்களின் கூட்டத்தைத் தலைமைச் செயலகத்திலே கூட்டி, கருத்துக்களை அறிந்து, அதன்படி செயல்படுவதை வழக்கமாகக் கொண்டுள்ளோம்.

அந்த வகையில் 96ஆம் ஆண்டு கழகம் ஆட்சிக்கு வந்ததும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் புலவர் செங்குட்டுவன், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் கே.ஏ.நம்பியார், குன்றக்குடி தவத்திரு பொன்னம்பல அடிகளார், அருள்மிகு திருவண்ணாமலை ஆதின கர்த்தர், அருள்திரு திருப்பனந்தாள் மடாதிபதி, அருள்திரு மாதவாச்சாரி சுவாமிகள், அருள்திரு ஆண்டவன் ஆஸ்ரமம், திருவரங்கம், அருள்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார், பேரூர் அருள்திரு தவத்திரு சுந்தர மூர்த்தி தம்பிரான் சுவாமிகள், திருவாவடுதுறை ஆதீனகர்த்தர், திருமதி சவுந்தரா கைலாசம், திருநெல்வேலி மேயர் திருமதி உமாமகேஸ்வரி, மதுரை கருமுத்து கண்ணன் மற்றும்

அதிகாரிகளைக் கொண்டு திருக்கோயில் குழு அமைக்கப்பட்டது.

அந்தக் குழுவின் முதல் கூட்டம் 4.3.1997 அன்று நடைபெற்றபோது, அதனைத் துவக்கி வைத்து நான் பேசும்போது, ''இந்த அரசுக்கு தலைமை தாங்குகின்ற நானும், அமைச்சர்களும் பெரியார் அவர்களாலும், அண்ணா அவர்களாலும் வளர்க்கப்பட்டவர்கள். எனவே பெரியார் வழியிலும், அண்ணா வழியிலும் நான் தொடர்ந்து பாடுபடுகிறவன் என்பதை ஒளிவு மறைவில்லாமல் ஒப்புக் கொள்கிறவன். இருந்தாலும் அவரவர்களுக்குரிய கொள்கையிலே அவரவர்கள் ஈடுபடுவதில் இந்த அரசு என்றைக்கும் குறுக்கிடாது என்பதை நான் திட்டவட்டமாகச் சொல்வது மாத்திரமல்ல - செயல்முறையிலே இந்த அரசு கடைப்பிடித்தும் வருகிறது.''

''கடந்த காலத்தில் கழக அரசு அண்ணா அவர்கள் தலைமையிலே தொடங்கி, பிறகு நான் பொறுப்பேற்றவுடன், நான் செய்த முதல் காரியம், திருவாரூரில் பல ஆண்டு காலமாக ஓடாமல் இருந்த தேரை, பக்தர்கள் பலர் வைத்த வேண்டுகோளுக்கிணங்க, ஓட வைத்தேன்.அந்தத் தேரின் வடிவிலேயே சென்னையில் வள்ளுவருக்குக் கோட்டமும் அமைத்தேன் - அதுமட்டுமின்றி, சென்னையிலே கபாலி கோயில் திருக்கோயில் திருப்பணியைச் செய்தது மாத்திரமல்லாமல், கபாலி கோயில் திருக்குளத்தைத் தூர் வாரிச் சுத்தப்படுத்தியதும் - அதன் தொடர்பாக பல



''கோயில் கூடாது என்பதல்ல - கோயில் கொடியவர்களின் கூடாரமாக இருக்கக் கூடாது'' என்பதுதான் என் கருத்து!

குடமுழுக்குகள் - பல கோயில் விழாக்கள் நடைபெற உதவி செய்ததும் இந்த அரசுதான் என்பதை நீங்கள் அறிவீர்கள்.''

''இப்போதுகூட திருவண்ணாமலையில் எரிந்து விட்ட ஆலயத்தின் ஒரு பகுதியைச் சீரமைக்க பல இலட்சம் ரூபாய் இந்த அரசின் சார்பில் வழங்கப்பட்டுள்ளது. நான் ஒரு படத்திலே எழுதியதைப் போல - ''கோயில் கூடாது என்பதல்ல, கோயில் கொடியவர்களின் கூடாரமாக இருக்கக் கூடாது - என்பது தான் என்னுடைய கருத்து. இந்த அரசின் கருத்து. அந்த விழாவில் ஆலயங்கள் நிர்வகிக்கப்பட - அறவழியில் மக்களைப் பயிற்றுவிக்க ஆலயங்கள் பயன்பட நாம் நம்முடைய ஒத்துழைப்பை நல்கிட வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டேன்.

பின்னர் அந்தக் குழுக் கூட்டத்தில் திருக்கோயில் நிலங்கள், காலி மனைகள் மற்றும் கட்டிடங்களின் பாதுகாப்பு - அதன் மூலம் திருக்கோயில் வருவாயைப் பெருக்குதல் - திருக்கோயில் கலைச் சிறப்பு - நித்தியபடி பூஜைகள் - திருவிழாக்கள் முதலியவற்றை ஒலி, ஒளி நாடாக்கள் தயாரித்தல் - திருமுறை ஓதுவார்கள், அர்ச்சகர்கள், நாதசுர இசைக் கலைஞர்கள் ஆகியோருக்குப் புத்தொளி பயிற்சி அளித்தல் - ஒரு கால பூஜைத் திட்டம் - திருக்கோயில் நகைகள் மற்றும் சிலைகள் பாதுகாப்பு - ஆகிய பொருட்கள் பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டு - தகுந்த ஆலோசனைகளைக் குழுவின் உறுப்பினர்கள் வழங்கினார்கள்.

இந்தக் கூட்டம் நடைபெற்ற அதே மாதத்தில், தி.மு.கழக அமைச்சரவையிலே இருந்த ஓர் அமைச்சரும், இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களும் பெரியார் மாவட்டம், சத்திய மங்கலம் அருகேயுள்ள பண்ணாரி அம்மன் கோயிலில் தீ மிதித்தலில் பங்கேற்றனர் என்ற செய்தி எனக்குக் கிடைத்த போது, அதற்கு என்னுடைய கடுமையான கண்டனத்தைத் தெரிவிக்கவும் நான் தவறவில்லை.

''பெரியார், அண்ணா வழி என்று வாயளவில் சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது - செயல்படுத்திக் காட்ட வேண்டும்

என்று எண்ணுகிறவர்கள்தான் நாம். ஆனால், இன்றைக்குப் பெரியார் வழியையும், அண்ணா வழியையும் கொஞ்சம் கொஞ்சமாகச் சில பேர் சிதைத்துக் கொண்டிருக்கிறார்கள். கடந்த காலத்திலேயே மூகாம்பிகையிலே தொடங்கி - பிறகு ஜெயலலிதா ஆட்சி நீடிக்க வேண்டுமே என்பதற்காக, அவருடைய அமைச்சர்கள் எல்லாம் தீ மிதித்து - வேப்ப இலைச் சேலைகளைக் கட்டிக் கொண்டு - மண் சோறு சாப்பிட்டு - அங்கப் பிரதட்சணம் செய்து - இத்தனை அலங்கோலமாக காட்டு மிராண்டித்தனமான காரியங்களை எல்லாம் செய்து - ஜெயலலிதா ஆட்சியை வாழ வைக்கப் போகிறோம் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். அது வாழ்ந்ததா, இல்லையா என்பது உங்களுக்குத் தெரியும். இன்றைக்குக்கூட காலையிலே ஒரு பத்திரிகையிலே என்னுடைய தலைமையிலே இருக்கிற ஒரு அமைச்சரே கூட தீ மிதித்தார் என்று கேள்விப்பட்டு, அவரிடம் கேட்டபோது, ''ஆட்சி நீடிக்க வேண்மென்பதற்காக தீ மிதித்தேன்'' என்று சொல்லியிருக்கிறார். கருணாநிதி ஆட்சி எத்தனை நாள் நீடித்தது என்பது எனக்குள்ள கவலை அல்ல - எத்தனை நாள் பகுத்தறிவோடு ஆட்சி இருந்தது என்பதுதான் என்னுடைய கவலை. இப்படிப்பட்ட அமைச்சர்கள் தங்களைத் திருத்திக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், இப்படிப் பட்ட அமைச்சர்களுக்கு என்னுடைய அமைச்சரவையிலே இடம் இல்லை.''



சென்னை கிருஷ்ணா நதிநீர் திட்டத்திற்கான 200 கோடி ரூபாய் செலவை ஏற்றார் சத்ய சாய்பாபா!


''சில பேருக்குக் கடவுள் நம்பிக்கை உண்டு. பெரியார் கடவுளே இல்லை என்று சொல்பவர்; கடவுள் உண்டா இல்லையா என்ற இந்த இரண்டு கருத்துக்களுக்கிடையில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் சொன்னார், ''உண்டென்பார் சிலர், இல்லை என்பார் சிலர், எனக்கில்லை கடவுள்

கவலை.'' என்று. என்னைப் பொறுத்தவரை நான் பெரியார் வழியில் வந்த நாத்திகன்தான். இன்றைக்கும் நாத்திகன்தான். ஆனால், அந்தக் கொள்கையை இன்னொருவருடைய உள்ளத்திலே திணிக்க வேண்டுமென்று எண்ணுகிற நாத்திகனல்லன். ஜவகர்லால் நேரு - வீரன் பகத்சிங் ஆகியோர் நாத்திகர்கள். இப்படிப் பல பேர் இருக்கிறார்கள். நாத்திகக் கருத்தை மற்றொருவர்மீது திணிப்பது தவறு என்ற எண்ணம் உடையவன் நான்.''

''பக்தி உள்ளவர்கள் இருக்கலாம். அவர்கள் தி.மு.க.விலே கூட இருக்கலாம். பகுத்தறிவு இயக்கம் என்பது வேறு. தி.மு.க. என்ற அரசியல் இயக்கம் வேறு. நான் தி.மு.க.விலே இருக்கிற பகுத்தறிவுவாதி. என்னைப் போன்றவர்கள் சில பேர் தி.மு.க.வில் இருக்கின்ற பகுத்தறிவுவாதிகள். தி.மு.கழகத்திலே கடவுள் நம்பிக்கை - பக்தி உள்ளவர்கள் சில பேர் இருக்கலாம். ஆனால், அதற்காக மூட நம்பிக்கைச் செயல்களை நான் அனுமதிக்க மாட்டேன்.''

- என்று விரிவாகவும், விளக்கமாகவும் உரையாற்றினேன்.

ஏன், கடந்த 2007ஆம் ஆண்டு ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் நான் சில நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டதைப் பற்றியும், சத்ய சாய்பாபா அவர்கள் என்னுடைய இல்லத்திற்கு வந்தது பற்றியும் பலர் விமர்சனம் செய்தார்கள். சத்ய சாய்பாபா அவர்கள் பத்தாண்டுகளுக்குப் பிறகு சென்னைக்கு வருகை தந்தார். அவர் சென்னைக்கு வருவதையொட்டி, அவருடைய பக்தர்கள் பெருமளவிற்கு வரவேற்பு ஏற்பாடுகளையெல்லாம் செய்திருந்தனர். சென்னைக்கு தட்டுப் பாடின்றி கிருஷ்ணா தண்ணீர் கிடைக்க ஆந்திர மாநிலம் கண்டலேறுவிலிருந்து பூண்டிவரை கால்வாய் அமைத்துத் தருவதாக சாய்பாபா ஏற்கனவே அறிவித்திருந்தார். அதன்படி, 150 கிலோ மீட்டர் தூரம் கால்வாய் அமைப்பதற்கு ஆகும் 200 கோடி ரூபாய் செலவுத் தொகையை சாய்பாபா அவர்களே ஏற்றுக் கொண்டார்.



எனது இல்லத்தில் சாய்பாபா

21.1.2007 அன்று, சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கில், சென்னை வாழ் மக்களுக்கு கிருஷ்ணா நதி நீர் கிடைக்கப் பெரிதும் உதவிகரமாக இருந்த அருள்மிகு சத்ய சாய்பாபா அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதற்காக நடைபெற்ற விழாவில், நான் கலந்து கொள்வதாக ஒப்புக் கொண்டிருந்தேன். 20ஆம் தேதி மாலையில் சாய்பாபா அவர்கள் என்னுடைய இல்லத்திற்கே வருவதாகக் கூறி, அதன்படி வருகை தந்தார்.

நான் எழுதிய **'குறளோவியம்'** மற்றும் **'தாய் காவியம்'** ஆகியவற்றின் ஆங்கில மொழி பெயர்ப்பு நூலை அவருக்கு வழங்கினேன். சுமார் ஒரு மணி நேரம் என்னுடன் அமர்ந்து பல்வேறு பொருட்கள் குறித்து சாய்பாபா அவர்கள் பேசிக் கொண்டிருந்தார். அதற்கடுத்த நாள் 21ஆம் தேதி காலையில் நேரு விளையாட்டு அரங்கில் நடைபெற்ற பிரம்மாண்டமான பாராட்டு விழாவில், நானும் சாய்பாபா அவர்களும் கலந்து கொண்டோம்.

அதாவது ஆதரவாளர்கள் மேடைக்கு எதிரே ஆங்கிலத்திலே ""Service to Man is Service to God" என்று எழுதி வைத்திருந்தார்கள். அதையே நான் அவர்களிடம் சுட்டிக் காட்டி, "அந்தப் பொன் மொழிக்கு மதிப்பளிக்கின்றவன்தான்!" என்று குறிப்பிட்டேன்.




சாய்பாபா செய்வது ''ஆண்டவன் பணி!'' என்றால், நான் செய்வது 'ஆளுகின்றவன் பணி'' என்றேன் நான்

மேலும் பேசும்போது, ''பல பேருக்கு ஆச்சரியமாக இருக்கக்கூடும், என்ன இந்த இரண்டு பேரும் ஒரு விழாவிலே கலந்து கொள்கிறார்கள் என்று! இது ஒன்றும் ஆச்சரியத்துக்குரிய தல்ல, காவேரியும், கொள்ளிடமும் ஒன்றாகப் போகிறதே, அது எப்படி ஆச்சரியத்திற்குரிய தில்லையோ, அதுபோல், **'காவேரி'** என்று பெயர் தனியாக இருக்கலாம், மற்றொன்றுக்கு **'கொள்ளிடம்'** என்று பெயர் தனியாக இருக்கலாம், ஆனால் இரண்டிலும் ஓடுவது தண்ணீர்தான்! அந்த இரண்டு தண்ணீரும் பாய்வது கழனிக்குத்தான் - அந்தக் கழனியிலே விளைவது கதிர்தான் - அந்தக் கதிரிலே கிடைப்பது நெல்தான் - அந்த நெல்லுக்குள் இருப்பது அரிசிதான் - அந்த அரிசிதான் எல்லோருக்குமே உணவு! அதைப்போலத்தான் காவேரியும், கொள்ளிடமும்போல இங்கே நாங்கள் இருவரும் அமர்ந்திருக்கிறோம்'' என்று தெரிவித்தேன்.

சென்னை சிட்டிசன் கான்கிளேவ் என்ற அமைப்பின் சார்பில் நடைபெற்ற அந்த விழாவில், தமிழகம், மராட்டியம், கர்நாடகம் ஆகிய மூன்று மாநிலங்களின் முதலமைச்சர்கள், தமிழக ஆளுநர் மற்றும் மத்திய மாநில அரசுகளின் அமைச்சர்கள் கலந்து கொண்டனர்.

அந்த விழாவில் பேசிய தொழிலதிபர் **வேணு சீனிவாசன்** அவர்கள், சாய்பாபா இலவசமாக ஏராளமானவர்களுக்கு உதவிகளைச் செய்து வருவதைப் பற்றியெல்லாம் விவரித்தார். அதுபற்றி என் பேச்சில் குறிப்பிட்டு, தமிழக அரசும் அவ்வாறுதான் இலவசமாக ஏராளமான உதவிகளைச் செய்து



உண்மை ஒன்றே தெய்வம்!

வருகிறது என்பதை ஒப்பிட்டுக் காட்டி, ''சாய்பாபா அந்தப் பணிகளை **'ஆண்டவன் பணி'** என்று கருதி நிறைவேற்றுகிறார். ஆனால், நானோ அவைகளை **'ஆளுகின்றவன் பணி'** என்று கருதி நிறைவேற்றிக் கொண்டிருக்கிறேன்!'' என்று சொன்னேன்.

★ ★ ★

நான் மேலே மஞ்சள் சால்வை அணிவது பற்றி, அது ஏதோ தெய்வீக மகத்துவத்திற்காக அணிந்து கொள்வ தாகப் பலரால் பிரச்சாரம் செய்யப் பட்டது உண்டு.

அதற்கு பல முறை நான் பதிலும் சொல்லியிருக்கிறேன்.

1994-95ஆம் ஆண்டில் ஒரு நாள் எண்ணெய் தடவி உடம்பு வழித்துக்கொண்டிருந்தபோது, என் வலது கன்னத்தில் மாம்பிஞ்சு அளவுக்கு ஒரு வீக்கம் ஏற்பட்டு, அது கொஞ்சம் கொஞ்சமாகப் பெரிதாகத் தொடங்கியது. நரம்பியல் நிபுணர் டாக்டர் ராமமூர்த்தி அவர்களும், டாக்டர் கோபால் அவர்களும் என்னை சென்னை மலர் மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்று பல்வேறு சோதனைகளைச் செய்தனர்.

வலது கன்னத்தில் உமிழ்நீர் சுரப்பியுடன் இணைந்துள்ள மெல்லிய நரம்புக் குழாயில் சிறிய அளவு வெடிப்பு ஏற்பட்டு, அதன் காரணமாக உமிழ்நீர்த் தேக்கம் ஏற்பட்டு, அதனால் அந்த வீக்கம் என்று கண்டறியப் பட்டது. வலதுபுறம் வாய்க்குள் அறுவை சிகிச்சை செய்து அந்த மெல்லிய குழாயை ஒட்ட வைக்கலாமென முடிவெடுத்த டாக்டர்கள், என்னை அறுவை சிகிச்சை அரங்கிற்கு அழைத்துச் சென்றனர்.

அறுவை சிகிச்சைக்கான முன்னேற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டன. அப்போது டாக்டர்களுக்குள் ஒரு சிறிய பிரச்சினை. அறுவை சிகிச்சையால் எதிர் விளைவுகள் ஏதும் ஏற்படுமோ என்ற சந்தேகம்- விவாதம் தொடர்ந்து

கொண்டிருந்தபோதே, வலது கன்ன வீக்கமும், சிறிது குறைந்து கொண்டு வந்திருக்கிறது. அதையும் விவாதமாக்கி, அறுவை சிகிச்சையே தேவையில்லை என்று மருத்துவர்கள் முடிவுக்கு வந்து, சில நாட்களில் சில மாத்திரைகள் மட்டும் நாள்தோறும் சாப்பிட வேண்டு மென்று கூறி, என்னை வீட்டுக்கு அனுப்பி வைத்து விட்டார்கள். அதற்குள்ளாகவே மலர் மருத்துவ மனை வாசலில் பெருங் கூட்டம்! தொடர்ந்து தொலைபேசி விசாரிப் புகள்! பத்திரிகையாளர்கள் படை யெடுப்பு!




உண்டென்பார் சிலர் - இல்லையென்பார் சிலர் - எனக்கில்லை கடவுள் கவலை!

அந்த நேரத்தில்தான் கழுத்துப் பகுதியும், முகம் உள்ளிட்ட தோள் பகுதியும் எப்போதும் கதகதப்பான வெம்மையுடன் இருக்க வேண்டுமென்றும், அதற்கு நான் வழக்கமாக அணியும் கைத்தறித் துண்டுக்குப் பதிலாக கம்பளிச் சால்வையை கழுத்தின் மேல் பட்டுக் கொண்டிருக்கும் படியாக அணிவது நல்லது என்றும் மருத்துவர்கள் கருத்து தெரிவிக்க, அதனை யேற்றுத்தான் நானும் சால்வை கொண்டு வரச் சொன்னபோது, அது மஞ்சள் சால்வையாக அமைந்து, அதைப் பார்த்த வீட்டாரும் நண்பர்களும் அந்த நிறம் அழகாகவும் எடுப்பாகவும் இருப்பதாகவும் கூறவே, அது முதல் அந்த நிறச் சால்வையைத் தொடர்ந்து அணிந்து வருகிறேன்.

ஆனாலும் சிலர் அதற்கு மூக்கு, காது எல்லாம் வைத்து, ஏதோ தெய்வீக மகத்துவத்திற்காக அதனை அணிந்து வருவதாகப் பிரச்சாரம் செய்கின்ற நேரத்தில், அதனைப் படித்து நான் எனக்குள்ளாகவே சிரித்துக் கொண்டு போய் விடுகிறேன். பதவியில் நிலைக்க வேண்டுமென்பதற்காகத் தான் நான் மஞ்சள் சால்வையை அணிவதாகவும் ஒரு பிரச்சாரம்.

1957ஆம் ஆண்டிலும், 1962ஆம் ஆண்டிலும் நான் தேர்தலில் நின்று வெற்றி பெற்றபோது, நான் அணிந்திருந்தது



ஒளியும் - தெளிவும் உள்ளவன் எவனோ அவன்தான் மஞ்சளாடை அணியலாம்!

வெள்ளை நிறத் துண்டுதான்! 1967இல் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்தபோதும், 1969இல் முதலமைச்சராக ஆனபோதும், 1971இல் தேர்தலில் நின்று வெற்றி பெற்றபோதும் நான் அணிந்திருந்தது வெள்ளை நிறத்துண்டு தான்! 1994ஆம் ஆண்டுதான் மஞ்சள் சால்வை அணியத் தொடங்கினேன். அது இன்றளவும் தொடருகிறது.

புத்த மதத்தினர் - குறிப்பாக புத்தர் மஞ்சள் ஆடை அணிந்தார் என்பதைப் பற்றியும் - ஓஷோ அவர்கள் எழுதிய ''தம்மபதம்'' என்ற நூலிலே உள்ள விவரத்தைப் பற்றியும் - நான் ஏற்கனவே பல முறை சுட்டிக் காட்டியிருக்கிறேன். மஞ்சளாடை பற்றி புத்தர் என்ன சொல்கிறாரோ அதையே நானும் சொல்ல விரும்புகிறேன்.

''சேறு படிந்த சிந்தனைகளும்
ஏமாற்றும் துணிவும் கொண்டவன்
மஞ்சளாடை அணிவது பொருந்துமா?
தன்னியல்பை ஆள்பவன் எவனோ,
ஒளியும் தெளிவும் உண்மையானவன் எவனோ
அவனே மஞ்சளாடை அணியலாம்.''

இதைத் தவிர, இந்த மஞ்சள் சால்வைக்கு வேறெந்த மூட நம்பிக்கைக் காரணமும் இல்லை என்பதை குறை தேடி அலையும் குட்டை மனம் படைத்தோர் தவிர்த்து, அறிவுப்பூர்வமாகச் சிந்திக்கும் அனைவரும் அறிந்தே இருக்கின்றனர்.

சாய்பாபா என்னைச் சந்தித்தபோது, ''இந்த மஞ்சள் துண்டை பல ஆண்டுகளாக அணிந்திருக்கிறீர்கள். யார் யாரோ என்னென்னவோ சொல்லியும் கவலைப்படாமல் அணிந்திருக்கிறீர்களே?'' என்று கேட்ட நேரத்தில்,

''புத்தருடைய அங்கவஸ்திரமே மஞ்சள் துண்டுதான்!'' என்று நான் பதில் சொன்னபோது, அவர் சிரித்துக் கொண்டார்.

சென்னையில் சாய்பாபா அவர்களுக்கு நடைபெற்ற பாராட்டு விழாவினைப் போலவேதான், அதே மாதத்தில், 31.1.2007 அன்று நாகப்பட்டினத்தில், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாதா அமிர்தானந்தமயி அவர்கள் சார்பில் கட்டப்பட்ட வீடுகளின் திறப்பு விழா நடைபெற்றபோது - அந்த அம்மையாரின் அழைப்பின் பேரில் மாதா அமிர்தானந்தமயி அவர்களும், நானும் அந்த விழாவிலே கலந்து கொண்டோம்.

ஏடுகளிலே அந்தச் செய்தி பரபரப்பாக வெளியிடப்பட்டது. அதைப் பற்றி நான் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல், அந்த விழாவிலே கலந்து கொண்டு, ஏழைகளுக்காகக் கட்டப்பட்ட அந்த இல்லங்களையெல்லாம் திறந்து வைத்ததோடு, அவைகள் கட்டப்பட உதவிய மாதா அமர்தானந்தமயி அவர்களுக்கு நன்றியையும் தெரிவித்துக் கொண்டேன்.

கழகத்தின் கடவுள் கொள்கை பற்றி குறிப்பிடுகின்ற இந்த நேரத்தில், அண்மையில் 16.2.2008 அன்று, வேலூரில் அமைந்துள்ள நாராயணி பீடம் சார்பில், ஏழை எளிய 320 குழந்தைகளின் இருதய அறுவை சிகிச்சைக்காக நிதி உதவி வழங்கும் திட்டத்தினைத் தொடங்கி வைத்த விழாவில், அதைப் பற்றி சற்று விரிவாகவே எடுத்துக் கூறினேன். அதன் சுருக்கம் வருமாறு:-

''அன்பு, கருணை என்ற இந்த இரண்டு அருமையான சொற்களுக்கு விடை கண்டு, அவற்றின் வேறுபாடு என்ன என்பதைப் புரிந்து கொண்டு, செயல்படுகின்ற இடங்களிலே ஒன்றாக இந்தக் கோயில் அமைந்திருக்கிறது. அன்பு என்பது



நாகையில் சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு, மாதா அமிர்தானந்தமயி கட்டிக் கொடுத்த வீடுகளைத் திறந்து வைத்தேன் நான்!

ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்வது- நான் அன்பு காட்டினால், அதைப்போல அன்பு காட்டப்படுகின்றவர் என்னிடம் அன்பு காட்டினால் அவ்விடம் பரிமாறிக் கொள்ளப்படுகின்ற ஒன்றாக ஆகிவிடுகிறது. கருணை என்பது ஒருவர் கொடுப்பது - அவர் திரும்பப் பெறுவதில்லை. திரும்பத் தராத நிலையில் ஒருவர் பெற்றுக் கொள்வது - அது கருணை.

''எனக்கும் இந்த பீடத்தினுடைய அதிபருக்குமிடையில் இருப்பது அன்பு. நான் அவரிடத்திலே அன்பு காட்டுகிறேன். அவரும் என்னிடத்திலே அன்பு காட்டுகிறார். நான் அன்பு காட்டுவதற்குக் காரணம், அவர் ஏழை, எளிய, நலிந்த மக்களிடத்திலே கருணை காட்டுகிறார். ஆகையால், நான் அவரிடத்திலே அன்பு காட்டுகிறேன். இப்போது, அன்புக்கும், கருணைக்கும் உள்ள வேறுபாடு உங்களுக்குப் புரிந்திருக்கும்.

''இங்கே பேசிய சில சொற்பொழிவாளர்களும், பீடத்தின் அதிபரும், ஆன்மிகம்- அறிவு என்ற இரண்டையும் இணைத்துப் பேசினார்கள். என்னைப் பொறுத்தவரையில் ஆன்மிகம், அறிவு இரண்டும் இரட்டைக் குழந்தைகள். அதிலே எந்தவிதமான வேறுபாடும் இல்லை. இரட்டைக் குழந்தைகளைத் தவிர, ஒட்டிப் பிறந்த குழந்தைகள் இல்லை - தனித்தனியான குழந்தைகள் - ஒரே தாயின் வயிற்றில் பிறந்த குழந்தைகள்!

ஒன்று ஆன்மிகம், ஒன்று அறிவியக்கம். ஆன்மிகத் துறை, அறிவியக்கத் துறை என்ற இரண்டு துறைகளும் ஒன்றுக்கொன்று மோதிக் கொள்ளக் கூடாது என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன்.''

''ஆனால், அதே நேரத்தில், ஓட்டிக் கொண்டிருக்க வேண்டுமென்றால், ஒன்றுமே செயல்பட முடியாமல் போய் விடும். ஏதாவது செயல்பட வேண்டுமேயானால், இரண்டும் தனித் தனியாக இருந்தால்தான் செயல்பட முடியும். அதனால்தான் சென்னையிலே அண்ணா அறிவாலயம் இருக்கிறது - வேலூரில் இந்த பொற்கோயில் இருக்கிறது - என்கின்ற முறையில் இரண்டும் தனித்தனியாக இருந்து மக்களுக்கு - ஏழைகளுக்குச் செய்ய வேண்டிய நல்ல காரியங்களைச் செய்கின்றன.''

''நாராயணி பீடத்திற்குக் கருணாநிதி வருகிறானே என்று சில பேர் அதிர்ச்சி அடைவார்கள் என்றெல்லாம் அடிகளார் சொன்னார். நாராயணி என்பதாலேயே - நான் நாராயணியின் உருவத்திலேஇருக்கின்ற கடவுளை ஏற்றுக் கொண்டேன் என்பதல்ல. பல மடாதிபதிகள், பண்டார சன்னதிகள், துறவிகள் எல்லாம் கலந்து கொண்ட ஒரு மாநாடு சென்னை கற்பகாம்பாள் மண்டபத்தில், 1970 ஆம் ஆண்டு வாக்கில் நடைபெற்றது. அப்போது அங்கே பேசிய ஒரு மடாதிபதி, ''முதல் அமைச்சர் கலைஞர் அவர்கள் கடவுளை ஏற்றுக் கொள்கிறாரோ இல்லையோ!'' என்று சொன்னார்.''

அதைப்பற்றி பிறகு நான் பேசும் போது, ''கருணாநிதி கடவுளை ஏற்றுக் கொள்கிறானா என்பதல்ல பிரச்சினை. கடவுள் கருணாநிதியை ஏற்றுக் கொள்கிற அளவிற்கு அவன் கடமை ஆற்றுகிறானா என்பதுதான் பிரச்சினை. நாம் நல்ல உள்ளத்தோடு நம்முடைய காரியங்களைச் செய்தால், அதுதான் கடவுள்!''

''உண்மை ஒன்றே தெய்வம்'' என்று பாரதி பாடினார். ராமலிங்க அடிகளும் அதைத்தான் சொன்னார் ''அருட் பெருஞ்சோதி, தனிப் பெருங் கருணை' என்று பொழிந்த



வடலூர் வள்ளலார், ''அறிவு ஒளியைத்தான், உண்மை ஒளியைத்தான் தெய்வம்'' என்றார்.''

''நட்ட கல்லை தெய்வம் என்று நாலு புட்பம் சாத்தியே, சுத்தி வந்து மொணமொண வென்று சொல்லும் மந்திரம் ஏதடா! நட்ட கல்லும் பேசுமோ, நாதன் உள்ளிருக்கையில்'' என்றார் சிவவாக்கியர். அவரை சிலர் சித்தர் என்கிறார்கள் - ஆனால் அதை நாங்கள் எடுத்துச் சொன்னால், எங்களைப் பித்தர் என்கிறார்கள்.''

''ஆண்மிகமும், அறிவாயுதமும் இரண்டும், ஒன்றுதான் என்கிறபோது - எப்போது இரண்டும் ஒன்று என்றால், ஒரு குறிக்கோளை நிறைவேற்றினால் -இரண்டையும் ஒரே மாதிரியாக நிறைவேற்றும்போது, இரண்டும் ஒன்றுதான். இதை வேறாக நிறைவேற்றி, அதை வேறாக நிறைவேற்றி, ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்டால், அப்போது இரண்டும் ஒன்றில்லை. அதனால்தான் சொல்கிறேன். அன்பு, பரிமாறிக் கொள்ளக்கூடியது. கருணை ஒருவர் கொடுத்து இன்னொருவர் பெற்றுக் கொள்ளக் கூடியது. அன்புக்கும், கருணைக்கும் வேறுபாடு தெரிந்து நடைபெறுவது தான் இந்த அருமையான ஆலயம்'' என்று குறிப்பிட்டேன்.

★ ★ ★

பேரறிஞர் அண்ணா அவர்களின் 88ஆவது பிறந்த நாளினை, 96ஆம் ஆண்டு செப்டம்பர் 15ஆம் நாளன்று சென்னையில் விமரிசையாகக் கொண்டாடினோம்.

எப்போதும்போல அண்ணா சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கும், வள்ளுவர் கோட்டத்தின் அருகேயுள்ள அண்ணா சிலைக்கும் நானும், பொதுச் செயலாளர் பேராசிரியரும், பொருளாளர் ஆர்க்காடு வீராசாமியும், துணைப் பொதுச் செயலாளராக இருந்த நாஞ்சிலாரும் மற்றும் கழக முன்னணியினரும் மாலை அணிவித்து வணங்கினோம். வள்ளுவர் கோட்டத்தின் முன்னால், கழகத் தொண்டரணியினரின் அணிவகுப்பு மரியாதையையும், மகளிர் தொண்டரணியினரின் அணிவகுப்பு மரியாதையையும், தனி மேடையில் இருந்தவாறு நான் ஏற்றுக் கொண்டேன்.

அண்ணா அவர்களின் பிறந்த நாளினை முன்னிட்டு, 15ஆம் தேதி காலையில் அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் திருமண மண்டபத்தில் பட்டி மன்றம் தொடங்கியது. தென் சென்னை, வடசென்னை மாவட்டக் கழக இளைஞரணி அமைப்பாளராக இருந்த மா. சுப்பிரமணியன் வரவேற்புப் பேசினார். பட்டிமன்றத்தை இளைஞர் அணிச் செயலாளர், தம்பி மு.க.ஸ்டாலின் துவக்கி வைத்து உரையாற்றினார். ''பேரறிஞர் அண்ணாவிடம் விஞ்சியிருப்பது ''அரசியல் விவேகமா? மனித நேயமா?'' என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது.

அமைச்சர் துரைமுருகன் நடுவர் பொறுப்பேற்றார். ''அரசியல் விவேகமே'' என்ற தலைப்பில் தம்பிகள் இரா.வெற்றி கொண்டானும், கோ.வி. செழியனும் வாதிட - ''மனித நேயமே'' என்ற தலைப்பில் தம்பிகள் புலவர் ஆடலரசு, நெல்லிக்குப்பம் புகழேந்தி ஆகியோர் வாதிட்டனர், ''அண்ணாவிடம் மனித நேயமும் இருந்தது. ஆனால், அதையும் விஞ்சியிருப்பது அரசியல் விவேகம் தான்'' - என்று பல்வேறு ஆதாரங்களை எடுத்துக் கூறி தீர்ப்பளித்தார்.

அந்த ஆண்டு அண்ணா பிறந்தநாள் விழாவினையொட்டி, நடிகர் திரு.விஜயகாந்த் அவர்கள் முரசொலியில், ''தமிழால் வளர்ந்தவர் - தமிழையும் வளர்த்தவர்'' என்ற தலைப்பில் ஒரு கட்டுரையினைத் தீட்டியிருந்தார். அந்தக் கட்டுரையில் சில பகுதிகள் நினைவிலே வைக்கத்தக்கவை அவை:-




''ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதம் தி.மு.க. நடத்துவது உணர்ச்சிப் பெருவிழா! நான் மதுரையிலே இருந்தபோது அங்கு நடைபெறும் சித்திரைத் திருவிழாவைப் பார்த்து பிரமித்திருக்கிறேன் - அது பக்தர்கள் கடவுள் மேல் வைத்திருக்கும் பக்தி! நடிப்பதற்காக சென்னை வந்த பிறகு தி.மு.க. நடத்தும் முப்பெரும் விழாவினைப் பார்த்து பிரமித்திருக்கிறேன் - இது தொண்டர்கள் கழகத்தின் மேல் வைத்திருக்கும் பக்தி!''

''பெரியார் - அண்ணா - தி.மு.க. மூன்றையுமே கலைஞர் உருவில் பார்த்துக் கொண்டிருக்கும் தொண்டர்களின் உற்சாகம்! மூன்றையுமே கலைஞர் உருவில் ஏற்றுக் கொண்டிருக்கும் தமிழ் உணர்வு கொண்டவர்களின் உற்சாகம்! எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும் -எத்தனை சோதனைகள் வந்தாலும் - எவராலும், எந்தச் சக்தியாலும் அழிக்க முடியாத இயக்கம் தி.மு.க. என்ற லட்சிய வெறி கொண்டவர்களின் உற்சாகம்! இவைகளின் சங்கமம்தான் முப்பெரும்விழா. வாழ்வு வந்த போதும், தாழ்வு வந்த போதும், வளர்த்து விட்டவர்களை மறக்காத இயக்கமும், மறக்காத தலைவனும் இந்த உலகத்தில் உண்டு என்றால், அது தி.மு.கவும் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களும்தான்!''

''அவர் எந்தச் சூழ்நிலையிலும் பெரியாரை மறந்ததில்லை - எந்தச் சூழ்நிலையிலும் அண்ணாவை மறந்ததில்லை - எந்தச் சூழ்நிலையிலும் தொண்டர்களை மறந்ததில்லை!''


''கலைஞர் அவர்களை தூரத்தில் இருந்து பார்த்து ரசித்துக் கொண்டிருந்த காலத்திலும் சரி, பக்கத்தில் இருந்து நேசித்துக் கொண்டிருக்கும் காலத்திலும் சரி, எனக்குத் தோன்றுவ தெல்லாம் ''தமிழன் என்று சொல்லடா... தலை நிமிர்ந்து நில்லடா'' என்று உணர்வினை வளர்த்துக் கொண்டிருக்கும்

இயக்கமாக - வாழ்ந்து மறைந்த முன்னோர்களின் பெருமை களைக் கட்டிக் காத்துக் கொண்டிருக்கும் இயக்கமாக - இன்பத்திலும், துன்பத்திலும் ஒருவருக்கு ஒருவர் துணையாக -ஆறுதலாக அரவணைத்துச் செல்லும் இயக்கமாக - தி.மு.க. இருந்து கொண்டிருக்கிறது. அதனால்தான் மக்களிடம் இருந்து தி.மு.க.வையும், தி.மு.க.விட மிருந்து மக்களையும் பிரிக்க முடியவில்லை. நிரந்தரமாக ஆட்சியில் இருந்து இறக்கவும் முடிவ தில்லை. மீண்டும், மீண்டும் விசுவரூபம் எடுக்கும் அதிசயம் தமிழகத்தில் மட்டும்தான் - அதை சாதித்துக் காட்டியது தி.மு.க. மட்டும்தான்!''



பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாளை யொட்டி அவரது சிலைக்கு மாலை அணிவிக்கும் நானும் கழக முன்னணியினரும்!

''நடந்து முடிந்த தேர்தலை மிகவும் சிறப்பாகவும், நேர்மையாகவும் நடத்திக் காட்டியதாக உலகமே பாராட்டிக் கொண்டிருக்கும் தேர்தல் கமிஷனர் **சேஷன்** அவர்களே, இன்று தி.மு.கவை பாராட்டிக் கொண்டிருக்கிறார், கட்டுக் கோப்பான கட்சி - கணக்குகளை ஒழுங்காக வைத்திருக்கும் கட்சி என்று! அந்த ஒட்டுமொத்தப் பெருமையும், தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களைத்தான் சாரும். அவர் தமிழால் வளர்ந்தவர் - தமிழையும் வளர்த்தவர்! தொண்டர்களால் வளர்ந்தவர்! தொண்டர்களையும் வளர்த்தவர்! மன உறுதியும், தளராத விடா முயற்சியும் அவரை நிகரில்லாத் தலைவராக ஆக்கி வைத்திருக்கிறது. இந்த இயக்கத்தில் உள்ளவர்களும் சரி - என்னைப் போல் அவரது இதயத்தில் உள்ளவர்களும் சரி -எங்கள் இல்லத்தில் நடைபெறும் விழாக்களைவிட பெரிதும் நேசிக்கும் விழா முப்பெரும் விழா! அந்த விழா சிறக்க வாழ்த்துகிறேன்!''



''உலகத்தில் எத்தனையோ பேர் 37வயதில் பிரதமராகி இருக்கும்போது, 44வயதில் ஸ்டாலின் மேயராவதில் என்ன தவறு?'' என்றார், பேராசிரியர்!

-இவ்வாறு தம்பி விஜயகாந்த் அந்த ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவிற்குத் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்திருந்தார். அதற்குப் பிறகு கால ஓட்டத்தின் சுழற்சியில், அவர் என்னைப் பற்றி தவிர்க்க முடியாத சூழ்நிலையில் ஒன்றிரண்டு கருத்துக் களைக் கூறியிருக்கலாம். ஆனால், அந்த வார்த்தைகள் எல்லாம் என் நினைவில் இல்லை. நினைவில் நிற்கும் வார்த்தைகளைத்தான் இந்தத் தொகுப்பிலே சுட்டிக் காட்டியிருக் கிறேன்.

அண்ணா அவர்களின் 88ஆவது பிறந்த நாளினையொட்டி, பத்தாண்டுகள் சிறையில் தண்டனை அனுபவித்த கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என்று அறிவிக் கப்பட்டு, அவ்வாறே மொத்தம் 419 சிறைக் கைதிகள் விடுதலை செய்யப் பட்டார்கள். சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட ஆண்டு - கைதிகள் தண்டனை அனுபவித்த காலம்- அவர்கள் நடவடிக்கை - ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு கைதிகள் விடுதலை செய்யப்பட்டார்கள்.

15ஆம் தேதி மாலையில், அண்ணா அவர்களின் புகழ் பாடும் கவியரங்கம், அப்போது தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சராக இருந்த தமிழ்க் குடிமகன் தலைமையிலே நடைபெற்றது. கவிக்கோ அப்துல் ரகுமான், கவிப்பேரரசு வைரமுத்து, பேராசிரியை அரசு மணிமேகலை, கவிச்சுடர் கவிதைப்பித்தன், கவிஞர் ஜவஹர்லால் ஆகியோர் கவியரங்கில் கலந்து கொண்டனர்.

கவியரங்கம் முடிந்த பிறகு, பொதுச் செயலாளர் பேராசிரியர் தலைமையில் அந்த ஆண்டிற்கான பெரியார் விருதை விருதாசலம் எம்.செல்வராசுவிற்கும், அண்ணா விருதினை மதுரை சொ.காவேரி மணியத்திற்கும், கலைஞர்

விருதினை போலீஸ் **வெ.கண்ணனுக்கும்** வழங்கி உரையாற்றினேன்.

அந்த விழாவில் தலைமையுரை ஆற்றிய பேராசிரியர் அவர்கள், அப்போது மாநகராட்சி மன்றத் தேர்தலில் மேயர் பதவிக்காகப் போட்டியிட்ட மு.க.ஸ்டாலின் பற்றி எதிர்க் கட்சியினர் ''குடும்ப அரசியல்'' என்று குறை கூறிப் பேசியதற்குப் பதிலளித்தார். குறிப்பாக குடும்பத்துக்காக அரசியல் நடத்துவோர் பலருண்டு ஆனால் குடும்பத்துக்காக ஒரு நாளில் ஒரு மணி நேரம் செலவிட்டு, நாட்டுக்காக 12 மணி நேரமும் உழைப்பவர் என்று என்னைப் பாராட்டியதோடு - ''ஸ்டாலின் தேர்தலில் நிற்பதை இன்றைக்கு குடும்ப அரசியல் என்கிறார்கள். ஸ்டாலின் என்ன பள்ளிக் கூடத்தில் படிக்கின்ற பையனா? இல்லை, கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கிறாரா? ஏறத்தாழ 44 வயது அவருக்கு. (1996இல்) உலகத்திலே எத்தனையோ நாடுகளில் 37 வயதில் பிரதமர் ஆகியிருக்கிறார்கள். ராஜீவ் காந்தி பிரதமராக வந்தாரே, என்ன 69 வயதில் வந்தாரா? அவர் அரசியல் பாரம்பரியத்தில், இந்திரா காந்தியின் மகன் இல்லை என்று யாராவது சொல்லத் தயாரா?''

''ஸ்டாலினுக்கு அரசியல் பின்னணி உண்டு. மாணவராக இருந்த காலத்திலே இருந்து தொடர்ந்து இந்த இயக்கத்தில், இளைஞராகவோ- இளைஞரணியின் அமைப்பாளராகவோ - கட்சியின் பேச்சாளராகவோ - கட்சி போராடுகிற போது சிறைக்குச் செல்பவராகவோ - திருமணமாகி இரண்டு மாதத்திற்கெல்லாம் மிசாக் கைதியாக இழுத்துச் செல்லப்பட்ட வராகவோ - கலைஞருடைய வரலாற்றை ஒதுக்கிவிட்டுப் பார்த்தால், ஸ்டாலினுக்கு என்று ஒரு வரலாறு உண்டு! கலைஞருடைய மகன் என்பதற்காக தூக்கி வைத்தால் அது தவறு. அவருக்குள்ள தகுதியை நாங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடாதா? தமிழ்நாடு ஏற்றுக் கொள்ளக் கூடாதா? செட்டிநாடு அரசர் முத்தையா அவர்கள் சென்னை மாநகராட்சி மன்றத்தினுடைய மேயராக இருந்தபோது அவருக்கு என்ன வயது? இளைஞராக இருந்தபோதுதான் அவர் மேயராக



முப்பெரும் விழாவில் மகளிர் தொண்டரணியின் அணிவகுப்பு!

வந்தார். ராமசாமி முதலியார் போன்றவர்கள் மேயரான போது என்ன வயது? மேயர் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டு மேயராக ஸ்டாலினைப் பார்க்கிறபோது அவருடைய சொந்தத் தகுதியினால் மேயராக இருக்கிறார் என்பதை எவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இதையெல்லாம் ஏன் அரசியல் ஆக்குகிறார்கள்? இதன் நோக்கம் என்ன? கலைஞருடைய செல்வாக்கு வளருகிறது, அதை நாங்கள் எப்படி பொறுத்துக் கொள்வோம் என்பது தான் அவர்கள் வேதனை. நீங்கள் பொறுத்துக் கொள்கிறீர்களோ இல்லையோ, உங்களுடைய தலையெழுத்து அது!'' என்று கர்ச்சித்தார்.

முப்பெரும் விழாவின் மற்றொரு சிறப்பாக, செப்டம்பர் 17ஆம் தேதியன்று, தந்தை பெரியாரின் 118ஆவது பிறந்த நாளினையொட்டி, அவரது திருவுருவச் சிலைக்கு நானும், பேராசிரியர் உள்ளிட்ட அமைச்சர்களும், மாலை அணிவித்து மரியாதை செலுத்தினோம். தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து விட்டு நேராகத் தலைமைச் செயலகத்திற்கு காலை 8.45 மணிக்கே சென்று விட்டேன். அப்போது 'லிப்ட் ஆப்பரேட்டர்' கூட வேலைக்கு வரவில்லை. அதைப் பற்றி, **''இந்தியன் எக்ஸ்பிரஸ்''** நாளேடு பலர் வருவதற்கு மிகவும் முன்கூட்டியே நான் அலுவலகத்திற்கு வந்து, பகல் 1.30 மணி வரையில் அங்கிருப்பதாகவும் எழுதியதோடு - கோப்புகளைப் பார்வை இடுவதிலும், முடிவுகளை எடுப்பதிலும், முதல் அமைச்சருக்கு ஈடு கொடுத்து செயல்பட சில அதிகாரிகளால் முடியவில்லை என்றும் எழுதியது.

இன்றைய தினம், அ.தி.மு.க.வின் சட்டப் பேரவை உறுப்பினராக உள்ள **எஸ்.வி.சேகர்** அவர்கள் சிறந்த நடிகர். தனக்கென ஒரு பாணியை வகுத்துக் கொண்டு நடிப்பவர். 1996ஆம் ஆண்டு என்னை அணுகி, தனது நாடகக் குழுவின் 3500ஆவது நாடக விழாவில் வாழ்த்த வேண்டுமென்று அவர் வலியுறுத்தினார்.

த.மா.கா. தலைவர் அருமை நண்பர் மூப்பனார் அவர்களும் என்னுடன் அந்த விழாவிலே கலந்து கொண்டார். பொதுவாக என்னுடன் இணைந்து கலந்து கொள்ளும் விழாக்களில் அவர் அதிகமாகப் பேச மாட்டார். அன்றும் மிகக் குறைவாகக் குறள் போலப் பேசிவிட்டு, நான் பேசுவதற்கு வழி விடுவதாகக் கூறி, அமர்ந்து விட்டார்.

அந்த விழாவிலே நான் பேசும்போது, ''சேகர் தனது நாடகங்களில், தமிழ்நாட்டிலே - இந்தியாவிலே நடக்கும் செய்திகளையெல்லாம் சேகரித்து நாடகமாக ஆக்கி நடத்துகிறார். எனவே தான் சேகர் என்று அழைக்கப்படுகிறார்!'' என்று குறிப்பிட்டேன்.



தந்தை பெரியாரின் பிறந்த நாளில், அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

எஸ்.வி.சேகரை பொறுத்த வரையில், அவரிடத்தில் நான் கண்ட ஒரு திறமை - ஆங்கிலத்தில் "Timely Wits" என்பார்களே, அதில் அவர் தேர்ந்தவர் - அதாவது ஒருவர் பேசிக் கொண்டிருக்கின்றபோது, ஒரு நொடிகூட தாமதிக்காமல், ''பளிச்'' என்று பதில் சொல்லி, அனைவரையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துவதில் வல்லவர்.

அதற்கு முன்பு நடைபெற்ற தேர்தலில் தி.மு.கழகத்தை எதிர்த்துப் போட்டியிட்டவர் என்ற போதிலும், அவர் அழைத்த நாடக விழாவில் கலந்து கொண்டு, அவரைப் பாராட்டி வாழ்த்தினேன்.

14. மறைந்த மாமணிகள்!

தென்னாப்பிரிக்கப் போராட்டத்தில் ஈடுபட்டு 16 வயதில் உயிர் நீத்த தில்லையாடி வள்ளியம்மை

திமிழக அரசின் 1996-97ஆம் ஆண்டுக்கான திட்ட ஒதுக்கீடு குறித்து மத்திய திட்டக் குழுவுடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்காக செப்டம்பர் 20 ஆம் தேதியன்று டெல்லி சென்றேன். என்னுடன் தலைமைச் செயலாளர் **நம்பியார்**, நிதித் துறை செயலாளர் **ராஜாராமன்**, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை செயலாளர் **கௌரி சங்கர்** மற்றும் அதிகாரிகள் வந்தனர்.

அப்போது திட்டக் குழுவின் துணைத் தலைவராக பேராசிரியர் **மதுதண்டவதே** இருந்தார். என்னிடம் மிகுந்த அன்பு கொண்டவர். என்னை அன்புடன் வரவேற்று, தமிழ்நாட்டின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற முழு ஒத்துழைப்பை நல்கியதோடு, 96-97ஆம் ஆண்டுக்கான தமிழ்நாட்டின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற, 3700 கோடி ரூபாய்க்கான நிதி ஒதுக்கீட்டிற்கு ஒப்புதலை வழங்கினார். அது அதற்கு முந்தைய ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையைவிட 500 கோடி ரூபாய் அதிகமாகும்.

திட்டக் குழுவின் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக டெல்லி சென்ற நான், 21.9.1996 அன்று மத்திய வெளியுறவுத் துறை அமைச்சராக அப்போதிருந்த **ஐ.கே. குஜ்ரால்** அவர்களைச் சந்தித்து, இலங்கையிலிருந்து ஈழத் தமிழ் அகதிகள் தமிழகத்திற்கு ஏராளமாக வருவதைப்பற்றி நீண்ட நேரம் பேசினேன். இலங்கையிலிருந்து அப்பாவி மக்களும், ஈழத் தமிழ்

அகதிகளும் வந்து குவிவதைத் தவிர்ப்பதற்கு, உகந்த சூழ்நிலையை இலங்கையிலே உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். அப்பிரச்சினை தொடர்பாக இலங்கை அரசுடன் பேச்சு வார்த்தை நடத்துமாறும் மத்திய அமைச்சரைக் கேட்டுக் கொண்டேன். என்னுடன் மத்திய தொழில் துறை அமைச்சராக இருந்த தம்பி **முரசொலி மாறன்** உடன் வந்திருந்தார். தற்போது சிலர் இலங்கை கடற் படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது குறித்து, நானே நேரில் சென்று பிரதமரைச் சந்திக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் 1996ஆம் ஆண்டிலேயே அப்போதிருந்த பிரதமரைச் சந்தித்து, தமிழக மீனவர்கள் குறித்து குரல் கொடுத்திருக்கிறேன் என்பதை அவர்கள் பழைய ஏடுகளைப் புரட்டிப் பார்த்தால் தெரிந்துகொள்ள முடியும்.

டெல்லிப் பயணத்தை முடித்துவிட்டு தமிழகம் திரும்பிய நான், ''**தினத்தந்தி**'' நாளிதழின் நிறுவனரும், முன்னாள் அமைச்சருமான **சி.பா. ஆதித்தனார்** அவர்களின் 91ஆவது பிறந்த நாளினையொட்டி, இலக்கியப் பரிசளிப்பு விழா ஒன்றினை சென்னையிலே ஏற்பாடு செய்து, அந்த விழாவில் என்னைக் கலந்துகொள்ள வேண்டுமென்று அவருடைய அன்பு மகன் **சிவந்தி ஆதித்தன்** என்னை அழைத்ததின் பேரில் 27.9.1996 அன்று, ராணி சீதை மண்டபத்தில் நடைபெற்ற அந்த விழாவிலே கலந்து கொண்டு, பேராசிரியர் **கு.அருணாசலக் கவுண்டருக்கு** சி.பா. ஆதித்தனார் தமிழ் மூதறிஞர் விருதையும் எழுத்தாளர் **சு.சமுத்திரத்திற்கு** 96ஆம் ஆண்டுக்கான சி.பா.ஆதித்தனார் இலக்கியப் பரிசையும் வழங்கி, தலா ஐம்பதாயிரம் ரூபாய் வீதம் பொற்கிழியும் வழங்கினேன். அந்த விழாவில் சிவந்தி ஆதித்தன் வரவேற் புரையாற்றிட, **அ.மா.சாமி** நன்றி கூறினார். **அவ்வை நடராசன், பாலசுப்பிரமணிய ஆதித்தன்** ஆகியோரும் அந்த விழாவிலே கலந்து கொண்டனர்.

அந்த விழாவிலே நான் உரையாற்றும்போது, ''மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை என்னோற்றான் கொல்



இலங்கைத் தமிழர் பிரச்சினைபற்றி வெளியுறவுத்துறை அமைச்சர் ஐ.கே.குஜ்ராலுடன் நானும், முரசொலி மாறனும் பேசினோம்!

எனும் சொல்' என்ற வள்ளுவர் குறளுக்கு எடுத்துக்காட்டாக இருப்பவர் சிவந்தி ஆதித்தன்'' என்று கூறியதோடு, ''ஆதித்தனார் குடும்பம், தமிழ் கற்ற குடும்பம் - தமிழைக் கற்பிக்கும் குடும்பம் - ஏழை எளியவர்களும் இனிய தமிழைப் புரிந்து கொள்வதற்குப் பணியாற்றிய குடும்பம் - பணியாற்றிக் கொண்டிருக்கின்ற குடும்பம்- சிவந்தி ஆதித்தனார் அவர்களானாலும், இராமச்சந்திர ஆதித்தன் அவர்களானாலும், அவர்களுடைய வீட்டு மாப்பிள்ளை மறைந்த கே.பி.கந்தசாமி அவர்களானாலும் சரி - ஏடுகள் மூலமாக தமிழ் நாட்டு மக்களுக்கு தமிழைக் கற்பித்தவர்கள்! இன்றைக்கும் அவர்கள் அந்த நாளேடுகள் வாயிலாக - கிழமை ஏடுகள் வாயிலாக தமிழைக் கற்பித்துக் கொண்டிருக்கிறார்கள்.''

''ஒரு காலத்தில் அவர்களால் பத்திரிகை நடத்த முடியுமா?'' என்ற கேள்வி பெரிதாக வளர்ந்து நின்றபோது, எங்களால்தான் மற்றவர்களைவிட அதிக அளவில் விநியோகமாகின்ற பத்திரிகையை நடத்திக் காட்ட முடியும் என்று நடத்திக் காட்டிய குடும்பம் ஆதித்தனார் அவர்களுடைய குடும்பம்'' என்று பாராட்டினேன்.

அந்த விழாவில் நான் உரையாற்றும் போது, என்னுடைய மனதில் இருந்த ஒரு உறுத்தலையும் வெளியிட்டது என் நினைவிலே உள்ளது. ஆதித்தனார் சிலை திறப்பு விழா நடைபெற்றபோது, ஆதித்தனாருடைய வாழ்க்கை வரலாறு


டெல்லியில் திட்டக்குழுத் துணைத் தலைவர் மதுதண்டவதே அவர்களுடன்...

வெளியிடப்பட்டது. அதிலே அண்ணா முதல் அமைச்சராக இருந்தபோது ஆதித்தனார் பேரவைத் தலைவராக இருந்தவர் என்று மட்டுமே எழுதப் பட்டிருந்தது. ஆனால் அதற்குப் பிறகு முதலமைச்சர் பொறுப்பை நான் ஏற்றவுடன், பேரவைத் தலைவராக இருந்த ஆதித் தனாரை, என்னுடைய அமைச் சரவையிலே கூட்டுறவு வேளாண்மைத் துறை அமைச் சராக இடம் பெறச் செய்து, அவரும் சிறப்பாக அந்தப் பணியினை ஆற்றினார். ஆனால் அந்தத் தகவல் ஆதித்தனாரின் வாழ்க்கை வரலாற்றில் இடம்பெறச் செய்யாமல் மறைக்கப்பட்டதை வெளிப்படையாக எடுத்துக் காட்டினேன்.

தமிழகச் சட்டப் பேரவையில் ஒருநாள், எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருந்த கோவை **வி.கே.லெட்சுமணன்** அவர்கள், தென் ஆப்பிரிக்க சத்தியாக்கிரக போராட்டத்தில் **அண்ணல் காந்தி அடிகளுக்கு** உறுதுணையாக இருந்த தமிழ் வீராங்கனை **தில்லையாடி வள்ளியம்மைக்கு** ஜோகன்ஸ் பர்க் நகரில் இருந்த நினைவுச் சின்னத்தை ஆப்பிரிக்க அரசு நீக்கி விட்டது என்றும் - அதை மீண்டும் நிறுவ ஒடுக்கப்பட்டவர்களின் தலைவராகி, அரசுப் பொறுப்பினை ஏற்றிருக்கும் நெல்சன் மண்டேலா அவர்களை மைய அரசின் மூலமாக தமிழக அரசு கேட்டுக் கொள்ள வேண்டுமென்றும் கூறினார்.

உடனடியாக தமிழக அரசின் சார்பாக நான் மத்திய அரசின் வெளி உறவுத் துறை அமைச்சராக இருந்த ஐ.கே.குஜ்ராலுக்குக் கடிதம் ஒன்று எழுதினேன். மத்திய அரசும் உடனடியாக அது பற்றி தென் ஆப்பிரிக்காவில் இருந்த இந்திய தூதுவர்

கோபாலகிருஷ்ண காந்தியை விசாரிக்குமாறு கேட்டுக் கொண்டது.

விடுதலை வீராங்கனை தில்லையாடி வள்ளியம்மை நினைவுச் சின்னம் அகற்றப் படவில்லை என்றும், இந்தியத் தூதுவரான கோபாலகிருஷ்ண காந்தியும், வள்ளியம்மா வினுடைய மருமகனான **கோபால்** (முதலியார்) அவர்களும் வள்ளி அம்மாளின் நினைவுச் சின்னத்தை பார்வையிட்ட தாகவும், அதற்குரிய கல்வெட்டுக் குறிப்புடன் நினைவுச் சின்னம் பாதுகாப்புடன் உள்ளதாகவும் தெரிவித்த தோடு, அதற்கான புகைப்படங்களையும் மத்திய அரசுக்கு அனுப்பினார்கள். அந்த விவரங்களை எல்லாம் மத்திய அமைச்சர் குஜ்ரால் அவர்கள் கடிதத்தின் மூலமாக எனக்கு தெரிவித்திருந்தார்.

1997இல்தான் இந்தச் சம்பவம் நடைபெற்றது என்ற போதிலும், 1971ஆம் ஆண்டிலேயே அண்ணல் காந்தியடிகள் நூற்றாண்டு விழாவை ஒட்டி, தியாகிகள் கோட்டமான தில்லையாடியை வள்ளியம்மை நகராக உருவாக்க கழக அரசு முன்வந்தது. ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில், செம்பனார்கோவில் அருகிலே உள்ள சிற்றூர்தான் தில்லையாடி. அண்ணல் காந்திஅடிகளுடன் தென்னாப்பிரிக்க நாட்டில் அறப்போராட்டத்தில் ஈடுபட்ட தமிழர்களான வள்ளியம்மை, **நாராயண சாமி, நாகப்பன்** ஆகியோர் பிறந்த மண்தான் தில்லையாடி.

அந்த ஊரில் காந்தியடிகள் நூற்றாண்டு விழாவினை யொட்டி, 1969ஆம் ஆண்டில் அமைக்கத் தொடங்கிய நினைவுச் சின்னங்களாக **வள்ளியம்மை நகர், வள்ளியம்மை மண்டபம், வள்ளியம்மை உயர்நிலைப் பள்ளி, நாராயண சாமி மாணவர் இல்லம், நாகப்பன் நகர்** முதலியவற்றை அன்றைய கல்வி அமைச்சர் **நாவலர்** அவர்கள் தலைமையில் 13.8.1971 அன்று நான் திறந்து வைத்தேன்.

வள்ளியம்மை தனது 16ஆவது வயதில் தென்னாப்பிரிக்கப் போராட்டத்தில் காந்தியுடன் பணி புரிந்து - சிறைச் சாலைக்குச்


சென்று - சிறைச் சாலையிலே கடுமையான நோய்வாய்ப்பட்டு - சிறைச் சாலையிலிருந்து விடுதலை பெற்ற பிறகும் மரணப்படுக்கையில் அந்த 16 வயது இளமங்கை கடைசி மூச்சு இழுத்துக் கொண்டிருந்த நேரத்தில் - காந்தியடிகள் வள்ளி அம்மையைப் பார்த்து, ''என்னால் அல்லவா, உனக்கு இந்தக் கஷ்டம்?'' என்று கேட்ட நேரத்தில்-

''இன்னும் இதுபோன்ற பல கஷ்டங்களை நாட்டுக்காக, நியாயத்துக்காக, அனுபவிக்க நான் தயாராக இருக்கிறேன்'' என்று கூறினாராம்.

தொடர்ந்து காந்தி அடிகள், ''மீண்டும் ஒருமுறை சிறை செல்ல உனக்குத் துணிவு இருக்கிறதா?'' என்று கேட்ட போது, ''ஒரு முறை அல்ல - பல முறை சிறை செல்லத் தயாராக இருக்கிறேன்'' என்று கூறிவிட்டு, 16 வயது நிரம்பிய வள்ளியம்மை தனது இறுதி மூச்சை விட்டார் என்று காந்தி அடிகளே எழுதிக் காட்டியிருக்கிறார். இந்த வள்ளியம்மை நகரை 1969-70ல் உருவாக்கியது மாத்திரம் அல்லாமல், 1997-ஆம், ஆண்டு அந்த வள்ளியம்மை நகர் தமிழக அரசின் சார்பில் 5.91 லட்சம் ரூபாய் செலவில் சீரமைக்கப்பட்டதும் தி.மு.கழக ஆட்சியிலேதான்.

96ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் கடலூர் நகரத்தில் பொதுக் கூட்டம் ஒன்றில் நான் உரையாற்றுகிறபோது பின்வருமாறு குறிப்பிட்டேன்.

''நான் இன்றைக்கு முதல் அமைச்சராக இருக்கிறேன் என்றால், அது எனக்குக் கிடைத்த பதவிப் பெருமை அல்ல. உங்களுக்குப் பணியாற்ற எனக்கு கிடைத்துள்ள ஒரு வாய்ப்பு - அவ்வளவுதான். உங்களுக்கு வேலை செய்ய எனக்கு வழங்கப்பட்டுள்ள ஒரு சந்தர்ப்பம். அப்படி கருதிக் கொண்டுதான் நான் இருக்கிறேன். அப்படி சந்தர்ப்பம் அங்கே இல்லாமல் போய்விட்டால், நான் நினைத்தபடி ஆட்சி நடக்காவிட்டால், என்னுடைய உடன் பிறப்புக்களோ- அல்லது அதிகாரிகளோ - அல்லது நமது கழகத்தில் உள்ளவர்களோ என்னோடு ஒத்துழைக்க மறுத்து விட்டால்



மத்திய திட்டக்குழுக் கூட்டத்தில் மாநிலத் திட்டங்கள்பற்றி விவாதம்.

துண்டை உதறித் தோளிலே போட்டுக் கொண்டு மறு நாளே அந்த இடத்தைக் காலி செய்து விட்டு போய்விடக் கூடியவன்தான் கருணாநிதி என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது. இதிலே நான் கண்டிப்பாக இருப்பேன்'' என்று குறிப்பிட்டேன்.

- இந்த என் அறிவிப்பு தமிழக அரசியலைக் கூர்ந்து கவனித்து வந்த படித்த மக்களிடையே அப்போதே பெரிதும் வரவேற்கப்பட்டது. எனது இந்தப் பேச்சினைத் தொடர்ந்து, 3.10.1996 தேசிய **''இந்தியன் எக்ஸ்பிரஸ்''** நாளேடு, தி.மு.கழக அரசு பதவிப் பொறுப்புக்கு வந்த 150ஆவது நாளினை முன்னிட்டு, தனது இதழில் ஒரு சிறப்புக் கட்டுரை வெளியிட்டது. அதன் சுருக்கத்தை மட்டும் கூறுகிறேன்.

''பொதுத் தேர்தலில் பெரிய அளவில் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்துள்ள தி.மு.க. அரசு கடந்த 150 நாட்களில், தனது பொது நிர்வாக செயல்பாட்டாலும், லஞ்ச ஊழலை எதிர்த்து செயல்பட வேண்டும் என்கிற முடிவோடு உள்ளதாலும், வாக்காளர்களை ஏமாற்றம் அடையச் செய்யவில்லை. லஞ்சத்திற்கு எதிராக அமைக்கப்பட்ட தமிஷன் -வருவாய்த் துறை கமிஷன் - போலீஸ் நிர்வாகத்தை மாற்றிச் சீராக அமைத்தது - உள்ளாட்சி மன்றம் மற்றும் கூட்டுறவு சங்கத் தேர்தல்களை நடத்தியது - கிருஷ்ணா நதித் திட்டத்தைக் கொண்டு வந்தது - லஞ்ச ஊழலில் ஈடுபட்ட முன்னாள் ஆட்சியாளர்கள், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மீது லஞ்ச ஊழல் தடுப்பு சட்டத்தின்கீழ் வழக்குப் பதிவு செய்தது - ஆகிய நடவடிக்கைகளின் காரணமாக இந்த அரசு மீது மக்கள்

நல்லெண்ணம் கொண்டுள்ளார்கள். முதலமைச்சர் கலைஞர் இந்த வயதிலும் அரசு நிர்வாகத்தை சீரமைக்க வேண்டும் என்பதற்காக தனது குடும்பத்திற்காக சிறிது நேரமே ஒதுக்கி, அதிக நேரத்தை அரசுப் பணிகளுக்கு ஒதுக்குகிறார்.''



ஏடுகள் மூலமாகத் தமிழ்ப்பணி
புரிந்துவரும் "தினத்தந்தி" சிவந்தி ஆதித்தன்

''1996மே மாதம் 13ஆம் தேதி ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, இதுவரை ஏறத்தாழ 8 ஆயிரம் கோப்புகளைப் பார்த்துக் கையெழுத்திட்டுள்ளார் என்று அவருடன் நெருக்கமாக உள்ள அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். கோப்புகளைப் பார்த்தல் - அமைச்சர்கள், அதிகாரிகள், முக்கிய விருந்தாளிகள் ஆகியோருடன் விவாதித்தல் - பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெறுதல் - ஆகியவற்றிற்காக ஒவ்வொரு நாளும் அதிக அளவில் நேரத்தை முதல்வர் ஒதுக்குகிறார்.''

''சென்னையிலிருந்து வெளியூருக்குச் செல்லும் நாட்களைத் தவிர - பொது விடுமுறை, வார விடுமுறை நாட்கள் உட்பட, அனைத்து நாட்களிலும் முதல்வர் தலைமைச் செயலகத்திற்கு வந்து செல்கிறார். தலைமைச் செயலகத்தில் பணிகள் ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே, காலை 9.30 மணி அளவில் முதல்வர் அவர்கள் அங்கு வந்து விடுகிறார். மதியம் வெகு நேரம் தலைமைச் செயலகத்தில் இருந்துவிட்டுப் பின்னர் பகல் உணவுக்காகவும் சிறிது நேர ஓய்வுக்காகவும் வீட்டிற்குச் செல்கிறார். அதன் பிறகும் முதல்வர் அரசு வேலைகளில் கவனம் செலுத்துகிறார். வீட்டிலிருந்து கொண்டோ அல்லது மீண்டும் மாலையில் தலைமைச் செயலகம் சென்றோ இரவு 8 மணிவரை அலுவலகப் பணிகளில் ஈடுபடுகிறார். மிகவும் எளிமையான நடவடிக்கைகளுக்கும், தேவையற்ற வீண் செலவினத்தைத் தவிர்ப்பதிலும், அரசுத் துறைகளில் உள்ள அதிகாரிகளுக்குத் தாமே ஒரு எடுத்துக்காட்டாக இருக்க

வேண்டுமென்பதில் முதலமைச்சர் தீவிரமாக இருக்கிறார். மதுரை, தஞ்சை, சேலம் பெங்களூர் போன்ற வெகு தொலைவில் இருக்கும் இடங்களுக்கும் கூட அவர் விமானத்தில் செல்வதைத் தவிர்த்து ரயிலிலேயே சென்று வருகிறார்.''

''சென்னையிலிருந்து 40 கி.மீ. தூரமே உள்ள எண்ணூருக்குக்கூட அரசு ஹெலிகாப்டரில் சென்றவர் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா. அவரது செயல்பாட்டுக்கு நேர் எதிராகச் செயல்பட்டு வரும் இந்த முதல்வர் அவர்கள் அரசின் விமானத்தையும் ஹெலி காப்டரையும் இதுவரை ஒரு முறைகூடப் பயன்படுத்தவில்லை என்று குறிப்பிடத் தக்கது.''

''ரயில் மூலம் அவர் பயணம் செய்யும்போதுகூட தம்முடன் முக்கிய கோப்புகளை எடுத்துச் செல்கிறார். ரயிலிலேயே துறை செயலாளர்களுடன் அந்தக் கோப்புகள் குறித்து விவாதிக்கிறார். கோப்புகள் மீதான பணி முடிவடைந்தவுடன், அந்த அதிகாரிகள் அடுத்த ரெயில்வே நிலையத்தில் கோப்புகளுடன் இறங்கி சென்னைக்குத் திரும்பி வந்து விடுகின்றனர்.''

''தி.மு.க. அரசின் செயல்பாட்டில் பொது மக்கள் ஏமாற்றம் அடையவில்லை'' என்று பத்திரிகையாளரான சோ.ராமசாமியும் கருத்துத் தெரிவித்துள்ளார். ''ஜெயலலிதா ஆட்சிக் காலத்தைவிட கருணாநிதியின் ஆட்சிக் காலம் திருப்தியாகவே உள்ளது'' என்றும் அவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.''

அகில இந்திய மாதர் சங்கத்தின் துணைச் செயலாளர் யு.வாசுகி குறிப்பிடுகையில், ''பெண்கள் வளர்ச்சித் திட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து - அதற்காகப் பல்வேறு திட்டங்களைத் தனது நிதி நிலை அறிக்கையில் இந்த அரசு அறிவித்துள்ளது'' என்று தெரிவித்துள்ளார்.

- இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேடு 1996 ஆம் ஆண்டு இவ்வாறு எழுதியது.

நீலம் - கழக வரலாற்றில் மறக்க முடியாத - மறைக்க முடியாத பெயர். கழக அலுவலகத்தை தன் வீடாகக் கருதி வாழ்ந்தவர் - கழகத்தின் அமைப்புச் செயலாளர் என்ற பெயருக்குப் பொருத்தமாக விளங்கியவர் - பேரறிஞர் அண்ணா அவர்களிடத்திலும், என்னிடமும் அளவற்ற பற்றும் பாசமும் கொண்டவர் **நீல நாராயணன்** என்ற பெயர் கொண்ட நீலம். தமிழகத்தின் மூலை முடுக்குகளில் உள்ள கிளைக் கழகங்கள் முதல் தலைமைக் கழகம் வரையிலே உள்ள விவரங்களைத் துல்லியமாகத் தன் மனதிலே வைத்திருப்பார். சில மாதங்களாக நோய்வாய்ப்பட்ட நிலையில், மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டிருந்த நீலநாராயணன் 7.10.1996 அன்று இரவு இயற்கை எய்தினார். மறைந்தபோது அவருடைய வயது 74. கழகம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து இயக்கத்தின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவர் அவர். சென்னை மாவட்டக் கழகச் செயலாளராக இரண்டு முறை பணியாற்றியவர். கழகம் அறிவித்த அத்தனைப் போராட்டங்களிலும் பங்கேற்றுச் சிறை சென்றதோடு, மிசா கைதியாகவும் ஓராண்டு காலம் சிறையிலே இருந்தவர். அவரது தியாகத்தைப் போற்றும் வகையில், நான் அவருக்கு பெரியார் விருதினை அளித்திருக்கிறேன். இரண்டு முறை சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் இருந்தவர் அவர்.

எனது பேச்சை எந்த அளவிற்கு மதிக்கக் கூடியவர் என்பதற்கு ஒரு உதாரணம் கூற வேண்டுமேயானால், கழகத்திலே ஒருவருக்கு ஒரு பதவிதான் இருக்க வேண்டுமென்று நான் ஒருமுறை தெரிவித்தேன். சென்னை மாவட்டக் கழகச் செயலாளராகவும், சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் இருந்த நீலநாராயணன், தனது கட்சிப் பதவியை இழக்க விரும்பாமல், மேலவை உறுப்பினர் பதவியைத் தானாகவே முன் வந்து ராஜினாமா செய்தார்.

அவரது மறைவு குறித்து நான் அப்போது எழுதிய இரங்கல் செய்தியில்-

''உறுதியின் வடிவமாக - உழைப்பின் உருவமாக - கொள்கைக் குன்றமாக - எளிமையின் சிகரமாக - ஆற்றலின்



ஆதித்தனார் விழாவில், சு.சமுத்திரத்திற்கு வழங்கிய இலக்கிய விருது

இருப்பிடமாக - நட்பின் இலக்கணமாகத் திகழ்ந்து "நீலம்" என்று நெஞ்சினிக்க நம்மால் அழைக்கப்பட்ட தலைமைக் கழக அமைப்புச் செயலாளர் நீலநாராயணன், நீடு துயில் கொண்டு விட்டார் எனும் செய்தி எம் இதயத்தைச் செந்தீயாகச் சுட்டெரிக்கிறது. இன்றைய சென்னைத் தலைநகரம், கழகத்தின் இரும்புக் கோட்டையாக எழுந்து நிற்பதற்கு எறும்பாகப் பணியாற்றி, எஃகுத் தூணாக நின்றது அந்தக் குள்ள உருவம்தான் என்பதை எண்ணும்போது கண்கள் குளமாகின்றன கழகத்திற்குச் சோதனைகள், வேதனைகள் வந்தபோதெல்லாம் தலைதாழாச் சிங்கமாக நின்றவர் களம் பல கண்டவர்- பலமுறை காராக் கிரகத்தில் அடைபட்டவர் - பெரியாரின் தொண்டர் - அண்ணாவின் தம்பி - எங்கள் தோளுக்குத் துணை நின்ற தோழர் - அவரது பிரிவு கழகக் குடும்பத்திற்கு மாபெரும் இழப்பு. ''அலுவலகப் பணி எதுவாயினும் கூப்பிடு நீலத்தை'' எனக் கூவி அழைத்துக் கொண்டிருந்தேனே, இனி எப்படிக் கூப்பிடுவேன் என ஏங்கித் தவிக்கிறேன். நமக்கு நாமே ஆறுதல் கூறிக் கொண்டு, அந்த நல்லவர் பெயரை மனத்தில் தாங்கி நம் பயணம் தொடர்வோம்'' - என்று குறிப்பிட்டிருந்தேன்.

உள்ளாட்சித் தேர்தல் பிரச்சாரச் சுற்றுப் பயணத்தில் இருந்த நான் **9.10.1996** அன்று காலையில் சென்னை திரும்பியதும் - புகைவண்டி நிலையத்திலிருந்தே நேராக நீலநாராயணன் இல்லத்திற்குச் சென்று அவரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினேன்.

8.1.1997 அன்று நீல நாராயணன் அவர்களின் படத்திறப்பு விழா நிகழ்ச்சி சென்னையில், ராணி அண்ணா திருமண மண்டபத்தில் நடைபெற்றது. அப்போது மேயராக இருந்த தம்பி **மு.க.ஸ்டாலின்** அனைவரையம் வரவேற்க -

அமைச்சர்கள் பேராசிரியர், நாஞ்சிலார், வீரபாண்டி ஆறுமுகம், துரைமுருகன், கோ.சி.மணி ஆகியோர் உரையாற்றினர்.



உறுதியின் வடிவம் -
உழைப்பின் உருவம் -
கொள்கைக் குன்றம் -
எளிமையின் சிகரம் -
நட்பின் இலக்கணம் -
இவர்தான் நீலநாராயணன்

'துக்கம் எப்போதும் துணையோடு வரும்' என்பார்கள். அதற்கொப்ப நீலநாராயணன் மறைந்த சில திங்களுக்கெல்லாம், புதுக்கோட்டை மாவட்டக் கழகச் செயலாளரும், அரசு கொறடாவுமான அ.பெரியண்ணன், உடல் நலக் குறைவுற்று சென்னை தனியார் மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தவர், பல நாட்கள் சிகிச்சை அளிக்கப் பெற்றும் பலனின்றி, 15.11.1996 அன்று இயற்கை எய்தினார். கழகம் சோதனைகளைச் சந்தித்த போதும், துரோகத்தால் தாக்குண்டபோதும், கழகத்தை விட்டு நீங்காமல் உடனிருந்து அயராப் பணி ஆற்றிய இரும்பு மனிதர் பெரியண்ணன்.

''கழகத்தால் உனக்கு என்ன பயன் என்று கருதாதே - நம்மால் கழகத்துக்கு என்ன பயன் என்று கருதி பணியாற்று'' என்ற மொழிக்கேற்ப - பதவி சுகத்தைப் பெரிதாகக் கருதாது இயக்கப் பணி ஆற்றிய பண்பாளர் பெரியண்ணன். 1974ஆம் ஆண்டு புதுக்கோட்டை மாவட்டம் உருவான காலத்திலிருந்து, அந்த மாவட்டக் கழகத்தின் செயலாளராக இருந்து, தொடர்ந்து பணியாற்றி மாவட்டக் கழகத் தோழர்களையெல்லாம் அன்பால் அவரணைத்து, அனைவரிடமும் இன்முகம் காட்டி, இயக்கம் வளர்த்த ஏந்தல் பெரியண்ணன். பலன் கருதாது இயக்கப் பணியாற்றிய பெரியண்ணன் அவர்களின் சேவையைப் போற்றி 17.9.1995 அன்று தலைமைக் கழகத்தின் அண்ணா விருதை அவருக்கு நான் வழங்கினேன். புதுக்கோட்டை தொகுதியிலிருந்து 1989ஆம் ஆண்டு, 96ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு

மக்கள் பணியாற்றியவர் பெரியண்ணன். 96ஆம் ஆண்டு அவரைச் சட்டமன்றத்தில் அரசு கொறடாவாக ஆக்கி மகிழ்ந்தேன். அவர் மறைவுச் செய்தி கேட்டதும், நானும், பேராசிரியரும் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினோம்.

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டத்திலுள்ள மேலக்கோட்டை கிராமம்தான் பெரியண்ணனின் சொந்த ஊர். அந்தக் கிராமத்தில் ஊராட்சி மன்ற உறுப்பினராகி, பின்னர் தலைவரானார். இந்தியாவிலேயே 109 ஊராட்சி மன்றங்களை உருவாக்கிய மிகப் பெரிய ஒன்றியமான திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தின் பெருந்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் அவர். 1976ஆம் ஆண்டு மத்திய அரசால் தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டு, நெருக்கடி நிலை அமல்படுத்தப் பட்டபோது, மிசா சட்டத்தில் அவரைக் கைது செய்து, திருச்சி மத்திய சிறையிலே அடைக்கப்பட்டார். இவரைக் காண இவரது தாயார் திருச்சி சிறைச்சாலைக்கு வந்தபோது விபத்துக் குள்ளாகி இறந்து விட்டார்.


பெரியண்ணன் மறைந்ததை யொட்டி, அப்போது நான் எழுதிய இரங்கல் செய்தியில், ''அந்தோ, புதுக்கோட்டை பெரியண்ணன் மறைந்தார்! இது செய்தி அல்ல! என் இதயத்தில் மட்டுமல்ல - கழக உடன்பிறப்புக்கள் எல்லோரின் இதயத்திலும் மூண்டுவிட்ட செந்தீ! இளமை முதல் நெருப்பாற்றில் நீந்தி பெரியாரின் கொள்கைகளை - அண்ணாவின் கோட்பாடுகளைக் காத்து, வளர்த்து, வலுவூட்டிய புதுக்கோட்டை மாவட்டத்தின் புலிப்போத்து அவர். உடல் நலிவுற்ற நிலையிலும், புதுக்கோட்டை நகரில் தோழமைக் கட்சியின் வெற்றிக்காக அவர் பம்பரமெனச் சுழன்று பணியாற்றியதை அண்மையில்தான் நேரிலே கண்டு, ஓய்வெடுத்துக் கொள்ளுமாறு உடன்பிறப்பு என்ற முறையில் உரிமையுடன் ஆணையிட்டேன். ஆனால் அதற்குள் இப்படியொரு முழு ஓய்வை எடுத்துக் கொண்டு நம்மை எல்லாம் சோக வெள்ளத்தில் மூழ்கடிப்பார் என்று நான் கனவிலும் கருதவில்லை. பெரியண்ணனின் குடும்பம் தனது தலைவனை இழந்து விட்டது. அவரால் வீறுகொண்ட கழகக்

காளையர் தமது ஒப்பற்ற தளகர்த்தனை இழந்து விட்டார்கள். நானோ என் நம்பிக்கைக்குரிய ஒரு நல்ல தம்பியை இழந்து தவிக்கிறேன். ஆறுதல் பெறுவோம். அவர் கட்டிக் காத்த கொள்கை உறுதி, அவர் உருவில் என்றும் நம்முடன் இருக்கும்'' - என்று குறிப்பிட்டிருந்தேன்.

பெரியண்ணன் மாவட்டக் கழகச் செயலாளராக இருந்து கழகம் வளர்த்த புதுக்கோட்டை மாவட்டத்தின் இன்றைய மாவட்டக் கழகச் செயலாளராக, பெரியண்ணன் அவர்களின் அன்பு மகன் **பெரியண்ணன் அரசு** தந்தை வழியில் தொடர்ந்து பணியாற்றி வருகிறார். தந்தை - தந்தைக்குப் பின் தனயன் - தனயனுக்குப் பிறகு பேரன் - என்று நம்முடைய கழகம் தொடர்ந்து பரம்பரை, பரம்பரையாக தொண்டாற்றி வருகிறது என்பதற்கு இதுவும் ஓர் உதாரணமாகும்.

இதற்கிடையிலே - பொதுத் தேர்தலுக்கு முன்பும், பின்பும் கடுமையான வேலை - தேர்தல் பிரச்சாரத்திற்கான அலைச்சல் - டெல்லியிலே ஆட்சி மன்றங்கள் - புதிய ஆட்சி பொறுப்பேற்றதும் தொடர்ந்து பணிகள் - இவை காரணமாக 96ஆம் ஆண்டு அக்டோபர் இறுதியில் என்னுடைய உடல் நிலை மிகவும் பாதிக்கப்பட்டது. கடுமையான வைரஸ் சுரம். மருத்துவர்கள் **கே.வி. திருவேங்கடம், பி.ராமமூர்த்தி, டாண்டி மருதநாயகம், வி.சொக்கலிங்கம், கோபால்** ஆகிய மருத்துவர்கள் பார்த்துவிட்டு, சில நாட்கள் ஓய்வெடுப்பது மிகவும் முக்கியம் என்று கூறியதோடு, ஒப்புக் கொண்ட சில நிகழ்ச்சிகளையும் ரத்து செய்ய வேண்டுமென்று கூறினார்கள்.

ஆளுநர் **சென்னா ரெட்டி,** தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சித் தலைவர் **மூப்பனார்,** மராட்டிய மாநில முன்னாள் ஆளுநர் **சி.சுப்பிரமணியம்,** அப்போது நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த **பீட்டர் அல்போன்ஸ்,** சட்டமன்ற உறுப்பினராக இருந்த **சொக்கர்,** சூப்பர் ஸ்டார் **ரஜினிகாந்த்,** நடிகர் **விஜயகாந்த்,** நடிகர் **சரத்குமார்,** பட அதிபர் **இப்ராகிம் ராவுத்தர், ஆர்.எம்.வீரப்பன், ஆர்.நல்லக் கண்ணு** ஆகியோர் நேரில் வீட்டிற்கு வந்து உடல் நலம் விசாரித்துச் சென்றனர்.



9.11.1996 அன்று சென்னை அண்ணா நகருக்கு பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த இந்தியப் பிரதமர் **தேவகவுடா** அவர்கள் என் இல்லத்திற்கு வந்து உடல் நலம் விசாரித்தார். அவருடன் **ஜெய்பால் ரெட்டி** அவர்களும் வந்திருந்தார். முன்னாள் பிரதமர் **வி.பி.சிங்** அவர்களும், மேற்கு வங்க ஆளுநராக இருந்த மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் **ஐ.கே. குஜ்ரால்** அவர்களும், ஆந்திர மாநில முதல் அமைச்சராக இருந்த **சந்திரபாபு நாயுடு** அவர்களும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உடல் நலம் கேட்டறிந்தனர்.

உடல் நிலை சற்றுத் தேறி அலுவலகத்திற்கு செல்வதற்குத் தயாரானபோது - தமிழக ஆளுநர் சென்னா ரெட்டி அவர்களின் பேத்தியின் திருமணம் ஐதராபாத் நகரில் நடை பெறுவதாகவும், அதற்கு நான் அவசியம் வரவேண்டுமென்றும் வலியுறுத்தியதன் பேரில், *27.11.1996* அன்று காலையில் ஐதராபாத் சென்று மணவிழாவில் கலந்து கொண்டேன். ஆந்திர மாநில முதலமைச்சராக இருந்த **சந்திரபாபு நாயுடு** அவர்கள் விமான நிலையத்திற்கே வருகை தந்து என்னை வரவேற்றார். மணவிழாவில் மண மக்களை வாழ்த்தி, திருமணப் பரிசினை அளித்து விட்டு சென்னை திரும்பினேன்.



பலன் கருதாது இயக்கப் பணியாற்றிய இரும்பு மனிதர் பெரியண்ணன்!

நான் மணவிழாவிற்குச் சென்ற போது மனமகிழ்ச்சியோடு என்னை வரவேற்று மகிழ்ந்த சென்னா ரெட்டி அவர்கள் அதற்குப் பிறகு சில கிழமைகள்கூட உயிரோடு இல்லை. 2.12.1996 அன்று காலை 7 மணி அளவில் ஐதராபாத் மருத்துவமனையில் இயற்கை எய்தினார். நவம்பர் திங்கள் இறுதியில்தான் சென்னா ரெட்டி அவர்களின் பேத்தியின் மண விழா நடைபெற்றது. டிசம்பர் திங்கள் 5ஆம் தேதியன்று சென்னா ரெட்டியின் பேரனுக்கு மணவிழா நடைபெறுவ தாக இருந்ததால் அவர் ஐதராபாத்திலேயே தங்கியிருந்தார். அப்போது 1.12.1996 அன்று இரவு ஒரு மணி அளவில் அவருக்குத் திடீரென நெஞ்சு வலி ஏற்பட்டது. உடனடியாக அவர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப் பட்டார். மருத்துவர்கள் பெரு முயற்சி எடுத்தும் அவரைக் குணப்படுத்த இயலவில்லை.

2ஆம் தேதி மாலையில் நடைபெற்ற தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில் ஆளுநர் சென்னா ரெட்டி அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அவரது மறைவை யொட்டி ஒருவார காலம் துக்கம் கடைப்பிடிக்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்தது. அரசு நிகழ்ச்சிகள் எல்லாம் ஒரு வாரத்திற்கு ரத்து செய்யப்பட்டன. சென்னா ரெட்டி அவர்கள் மறைந்தபோது அவரது வயது 78.

1952ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலில் அவர் போட்டியிட்டு, ஐதராபாத் மாநில சட்டமன்றத்துக்குத் தேர்வு செய்யப்பட்டு உணவு மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் ஆனார். 1962ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்று மாநிலத் திட்டம், பஞ்சாயத்து ராஜ், தொழில் மற்றும் நிதியமைச்சரானார். 1967ஆம் ஆண்டு பிரதமர் இந்திரா காந்தியின் அமைச்சரவையில் மத்திய அமைச்சரானார். 1974ஆம் ஆண்டிலிருந்து 1977வரை உத்தரப்பிரதேசம்,

பஞ்சாப் ஆகிய மாநிலங்களின் ஆளுநராகப் பொறுப்பேற்றார். 1978ஆம் ஆண்டு ஆந்திர மாநில முதல் அமைச்சராக ஆனார். 1990ஆம் ஆண்டும் ஆந்திர மாநில முதல்வராகப் பொறுப்பு வகித்தார். 1992ஆம் ஆண்டு ராஜஸ்தான் மாநில ஆளுநராகவும், 1993ஆம் ஆண்டு மே மாதம் தமிழக ஆளுநராகவும் பொறுப்பேற்றார்.

அவர் தமிழகத்தின் ஆளுநராக 93ஆம் ஆண்டு பொறுப்பேற்ற பின்னர், அப்போது தமிழகத்திலே ஆட்சிப் பொறுப்பிலே இருந்தவர்களின் கடும் கண்டனத்திற்கு ஆளானார். மரியாதைக்காகக் கூட முதலமைச்சர் ஆளுநரைச் சந்திக்காமல் இருந்தது அந்தக் காலம் தான். அவர் பயணம் மேற்கொண்ட போது, ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களால் கார் வழி மறிக்கப்பட்ட சம்பவங்களும் நடைபெற்றன. ஆனால் நான் முதல்வராகப் பொறுப்பேற்ற பிறகு, மன வருத்ததிலிருந்து மீண்டு, என்மீது நீங்கா அன்பு கொண்டு, பாசத்துடன் பழகி வந்தார். 96ஆம் ஆண்டு நவம்பர் திங்களில், நான் சில நாட்கள் உடல் நலம் பாதிக்கப்பட்டிருந்தபோது, என்னுடைய வீட்டிற்கு வந்து எனது நலம் குறித்து மிகுந்த கவலையோடு விசாரித்து விட்டுச் சென்றார்.

ஆந்திர மாநில ஆளுநராக இருந்த கிருஷ்ணகாந்த் அவர்களையே தமிழக ஆளுநர் பொறுப்பையும் கூடுதலாக கவனிக்கும்படி குடியரசு தலைவராக இருந்த சங்கர் தயாள் சர்மா 2.12.1996 அன்று உத்தரவிட்டார். சென்னாரெட்டி அவர்களுக்கு இறுதி அஞ்சலி செலுத்த ஐதராபாத் புறப்படத் தயாராக இருந்த நிலையில், தமிழக புதிய ஆளுநராக பொறுப்பேற்க ஆந்திர மாநில ஆளுநர் கிருஷ்ணகாந்த் அவர்கள் வருகை தந்ததன் காரணமாக எனது ஐதராபாத் பயணம் ரத்து செய்யப்பட்டது. 2ஆம் தேதியன்று இரவு 10.30 மணி அளவில்தான் ஆளுநர் கிருஷ்ணகாந்த் சென்னைக்கு விமானம் மூலம் வந்து சேர்ந்தார். அதன் பின்னர் ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற பதவியேற்பு விழாவில், சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதியாக இருந்த திரு.கே.ஏ.சாமி அவர்களால் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.



பெரியண்ணன்
வேலையைப் பாராட்டி
அண்ணா விருது

அதன் பின்னர் 3ஆம் தேதி காலையில் புறப்பட்ட முதல் விமானத்தில் நானும், அமைச்சர்கள் **துரைமுருகன், பொன்முடி, ஆலடி அருணா** ஆகியோரும் ஐதராபாத் சென்று அந்தப் பெருமகனுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினோம். பிரதமர் தேவகவுடா அவர்கள் ஐதராபாத்துக்கு வருகை தந்து அஞ்சலி செலுத்தினார்.

11.12.1996 அன்று தமிழக அரசின் சார்பில் டாக்டர் சென்னா ரெட்டி அவர்களுக்கு நினைவஞ்சலி கூட்டம் நடத்தப்பட்டது. அதிலே நான் கலந்து கொண்டு, அவரது திருவுருவப் படத்தினைத் திறந்து வைத்தேன். அந்த விழா நடைபெற்ற கலைவாணர் அரங்கம் அன்றைய தினம் கூட்டத்தினரால் நிரம்பி வழிந்தது. சென்னா ரெட்டி தமிழகத்திலே எந்த அளவிற்கு மக்கள் மனதிலே இடம் பெற்றார் என்பதற்கு உதாரணமாக அந்தக் கூட்டம் கூடியிருந்தது. அந்த விழாவிலே பேசிய அனைவரும் சென்னா ரெட்டி அவர்களின் பொறுமையைப் பற்றியே புகழ்ந்து பேசினார்கள். அவருடைய பொறுமைக்கு எடுத்துக்காட்டாக, நான் அன்று பேசியபோது ஒரு கதையை எடுத்துக் கூறியது நினைவிலே உள்ளது.

நபிகள் நாயகம் சாதாரணமாக எளிய மனிதராக - அவர் பெரிய மேதை என்றாலும் - பெருமகனார் என்றாலும் கூட -



எனது இல்லத்திற்கு வருகை தந்து, பிரதமர் தேவகவுடா உடல் நலம் விசாரித்தார்

எளிய வாழ்க்கையில் பற்றும் பாசமும் கொண்டவர் என்ற காரணத்தால் - ஒரு குறிப்பிட்ட தெருவிலே அன்றாடம் நடந்து செல்லும்போது - அவர் மீது வெறுப்புற்ற ஒரு மங்கை, மாடியிலே இருந்து அவர் தலையிலே குப்பையைக் கொட்டுவது வழக்கம். ஒவ்வொரு நாளும் இந்தக் காரியம் நடைபெற்றுக் கொண்டே இருக்கும். நபிகள் நாயகம் அதை உதறிவிட்டு தன்னுடைய பாதையிலே நடந்து செல்வார்.

ஒருநாள் அப்படி வரும்போது குறிப்பிட்ட அந்த வீட்டு மாடியிலே இருந்து குப்பை கொட்டப்படவில்லை. நபிகள் நாயகத்திற்கு ஒரே ஆச்சரியம். திகைத்துப்போய், அங்கே உள்ளவர்களிடம் ''நாள்தோறும் ஓர் அம்மையார் என் தலைமீது குப்பையைக் கொட்டுவார்களே, அவர்கள் என்ன ஆவார்கள்?'' என்று கேட்க-

''அவருக்கு உடல் நலம் இல்லை, படுக்கையில் இருக்கிறார்'' என்று அவர்கள் சொன்னதும்-

நபிகள் நாயகம் உடனடியாக மாடிப்படியிலே ஏறிச் சென்று, அந்த அம்மையாரிடம் உடல் நலம் விசாரித்து, அவரது நலிவு தீர மருந்தும் கொடுத்தார் - என்று நபிகள் நாயகத்தின்



ஐதராபாத்தில், ஆளுநர் சென்னாரெட்டியின் இல்ல மணவிழாவில்...

பொறுமைக்குச் சான்றாகக் கூறப்படுகிறது. சென்னா ரெட்டி அவர்கள் நபிகள் நாயகம் அல்ல என்றாலும் கூட, அவருடைய வழியைப் பின்பற்றி, அவர்மீது கொட்டப்பட்ட குப்பைகளை எல்லாம் உதறிவிட்டுவிட்டு, ஆளுநராகப் பணியாற்றினார் என்று கூறினேன்.

ஆளுநராக இருந்த சென்னா ரெட்டி அவர்களை தி.மு.கழகம் அந்த அளவிற்கு பெருமைப் படுத்தியபோது - ஆளுநர் பதவி என்ற ஒன்றே தேவை இல்லை என்று சொன்னவர்கள் இப்படியெல்லாம் செய்யலாமா- ஆளுநரைப் பாராட்டலாமா - என்றெல்லாம் தமிழகத்திலே பேசப் பட்டது. அதற்கும் நான் அந்தக் கூட்டத்திலே பதிலளிக்கும் போது, ''கவர்னர் பதவி தேவையா இல்லையா என்ற வினாவுக்கு தேவையில்லை என்பதுதான் தி.மு.கழகத்தின் கொள்கை. இருந்தாலும்கூட, அந்தப் பதவிப் பொறுப்பிலே ஒருவர் இருக்கின்றவரை அவரை மதிக்க வேண்டும் என்பது தான் எங்கள் தலைவர் பேரறிஞர் அண்ணா கற்றுத் தந்த பாடம். அந்தப் பாடத்தின் வழிதான் நாங்கள் நடை போடுகிறோம்!'' என்று கூறினேன்.



மறைந்த சென்னாரெட்டியின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி

15. ஜெயின் கமிஷன்


நேரு குடும்பத்திற்கும் எனக்குமுள்ள ஆழமான உறவும், நட்பும் என்றுமே மாறாது!

1997ஆம் ஆண்டு முதலமைச்சராக நான் இருந்த நேரத்தில், **ராஜீவ் காந்தி** கொலை பற்றி விசாரிப்பதற்காக அமைக்கப்பட்ட ஜெயின் கமிஷன் முன் நான் சாட்சியம் சொல்ல வேண்டுமென்று அழைக்கப்பட்டேன்.

ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட நேரத்தில் தி.மு.கழகம் பதவியிலே இல்லை என்றபோதிலும், அந்தக் காலக் கட்டத்தில் அந்தப் பழியைத் திட்டமிட்டு வேண்டுமென்றே தி.மு.க.மீது சுமத்துவதற்காக அகில இந்திய அளவில் பலரும் முயற்சித்தனர். எனவே ஜெயின் கமிஷன் முன் நான் சாட்சியம் கூறவேண்டுமென்பதில் பலரும் குறியாய் இருந்தனர். அந்தச் சாட்சியத்தின் போது என்னிடம் கேட்கப்பட்ட சில முக்கிய கேள்விகளும், அதற்கு நான் அளித்த பதில்களும் இந்தத் தொடரில் இடம் பெறுவது முக்கியமெனக் கருதுகிறேன்.

கேள்வி : நீங்கள் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் என்று குற்றச்சாட்டுக்கு தங்கள் பதில் என்ன?

பதில் : அந்தக் குற்றச்சாட்டு பொய் என்று கூறுகிறேன். நான் ஒரு தகவலைத் தர விரும்புகிறேன். 28-9-1993 அன்று மத்திய உள்துறை அமைச்சகம் தமிழக அரசுக்கு (அ.தி.மு.க. ஆட்சியில்) ஒரு கடிதம் எழுதுகிறது. அந்தக் கடிதத்தில் "According to unconfirmed report, the LTTE plans to eliminate M.Karunanidhi, Leader of the DMK. The above information is being shared with you for action as deemed appropriate to review and suitably augment the security arrangements with shri M. Karunanidhi" (உறுதி செய்யப்படாத ஒரு



தி.மு.க.மீது எந்தக் குற்றமும் காணாத சி.பி.ஐ.யிடம் தாக்கல் செய்யப்பட்ட ஜெயின் கமிஷனின் இறுதி அறிக்கை

தகவலின்படி, தி.மு.க. தலைவர் கருணாநிதி ஆயுளை முடித்துவிட எல்.டி.டி.ஈ. திட்ட மிட்டுள்ளது. இது உரிய முறையில் மறு ஆய்வு செய்து, திரு. எம். கருணா நிதியின் பாதுகாப்பு ஏற்பாடுகளை அதிகப் படுத்தல் அவசியம் என்பதால் இத்தகவல் தங்களுடன் பகிர்ந்து கொள்ளப் படுகிறது) என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்தக் கடிதத்தின் அடிப்படையில் தமிழக அரசின் பொதுத்துறை செயலாளர் **பாஸ்கரதாஸ்** எனக்கொரு கடிதம் எழுதியிருந்தார். அந்தக் கடிதத்தில், தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது என்று எனக்குத் தெரிவித்ததன்பேரில், அதனை ஏற்றுக் கொள்வதாக நானும் அறிவித்து விட்டேன். இந்தக் கடிதங்களிலிருந்து நான் விடுதலைப் புலிகளுக்கு ஒரு காலத்தில் வழங்கிய ஆதரவை விலக்கிக் கொண்டு விட்டேன் என்பதும், அவர்களுக்கு ஆதரவாளனாக நான் இல்லை என்பது தெளிவாகும்.

கேள்வி : **பத்மநாபா** கொலை வழக்கில் **நாகராஜன்** அளித்த வாக்குமூலத்தில், அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிற நேரத்தில், தாங்கள் வாய்மொழியாக உத்தரவிட்டுள்ளதன் மூலமாக தலையிட்டதாக உங்கள்மீது அவர் குற்றச்சாட்டு கூறியிருக்கிறாரே?

பதில் : நாகராஜனின் அந்த வாக்குமூலமே பத்மநாபாவின் கொலையைப் பற்றியதாகும். அந்த வாக்குமூலத்தில் நாகராஜன் கூறிய அனைத்தும் பொய்யானவை என்று நான் சொல்லுகிறேன். பத்மநாபா கொலை செய்யப்பட்ட செய்தி டெல்லியில் இருந்த எனக்குத் தெரிய வந்தது. உடனடியாக அப்போது உள் துறை செயலாளராக இருந்த நாகராஜனிடம் கூறி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்

கொண்டேன். அந்தச் செய்தியை மறுநாள் என்னைச் சந்தித்த பத்திரிகையாளர்களிடமும் கூறியிருக்கிறேன். டெல்லியில் நான் செய்தியாளர்களிடம் சொன்னது **"இந்து"** பத்திரிகையில் 20-6-1990 அன்று வெளிவந்திருக்கிறது. 30-11-1991 அன்று திரு. நாகராஜன் மாஜிஸ்திரேட்டிடம் கொடுத்த அந்த வாக்குமூலத்திலும் - இந்தக் கமிஷனில் அந்த வாக்கு மூலம் கொடுத்தது உண்மை தான் என்று உறுதிப்படுத்திச் சொல்வதற்கும் காரணம், முதல் அமைச்சராக இருந்த **ஜெயலலிதாவின்** தூண்டுதல் தான் என்பதற்கு என்னிடம் ஆதாரம் இருக்கிறது.

அவர் திருச்சியில் மாஜிஸ்திரேட்டிடம் வாக்குமூலம் கொடுத்தபோது, அவர் தடாக் கைதியாக கைது செய்யப்பட்டு திருச்சி சிறையில் இருந்த நேரமாகும். எங்கும் இல்லாத அதிசயமாக, தடாக் கைதியாக அவர் சிறை வைக்கப்பட்ட சில நாட்களிலேயே ஜாமீனில் விடப்பட்டார். மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். மருத்துவமனையில் அவர் இருந்த போதே, செய்தியாளர்களைச் சந்திக்கவும் அனுமதிக்கப்பட்டார். மாஜிஸ்திரேட்டிடம் அவர் இந்த பொய்யான வாக்கு மூலத்தைக் கொடுத்த அதே நேரத்தில், போலீசார் அந்த வாக்குமூலத்தை வெளியிலே பத்திரிகையாளர்களுக்கு திருச்சியில் வெளியிட்டுக் கொண்டிருந்தார்கள். அந்தச் செய்தி அன்றைய தினம் மாலையிலேயே வெளிவந்தது.



நாடாளுமன்றத்தில் வைப்பதற்கு முன்பே, தனது அறிக்கையை 'இந்தியா டுடே' ஆசிரியர் பிரபு சௌலாவிற்கு ஜெயின் தரும் காட்சி!

பகல் சுமார் 1 மணியளவில் அந்த ஸ்டேட் மென்ட் தரப்பட்டது. அவர் மாஜிஸ்திரேட்டிடம் ஸ்டேட்மென்ட் கொடுத்த அதே 30-11-1991 அன்று, அன்றைய முதல் அமைச்சர் ஜெயலலிதாவுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அந்தக் கடிதத்தை நான் தங்கள் அனுமதியுடன் படிக்க விரும்புகிறேன்.

R. Nagarajan, I.A.S.,
Tiruchirapalli,
Respected Madam chief Minister,


I have done my duty and i will stand by it all the time to come. I feel that I have unloaded a heavy weight from my heart. Once again i am grateful for your noble and kind gesture. Awaiting for your further orders and instructions.

My respectful regards,
Yours, sincerely,
R. Nagarajan.

(மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்களுக்கு,

நான் என்னுடைய கடமையை நிறைவேற்றி விட்டேன். வரும் காலத்தில் எப்போதும் நான் அதில் உறுதியாக இருப்பேன். என் இதயத்திலிருந்து ஒரு பெருஞ்சுமையை இறக்கி வைத்து விட்டதாக நான் உணர்கிறேன். உங்களுடைய மேன்மையான, அன்பான நல்லெண்ணத்திற்கு மீண்டும் நான் நன்றி கூறுகிறேன். மேலும் உங்களுடைய உத்தரவுகளுக்கும், அறிவுறுத்தல்களுக்கும் காத்திருக்கிறேன்.)

இந்தக் கடிதத்தை நான் படித்துக் காட்டியதும், நீதிபதி ஜெயின் குறுக்கிட்டு, ''அந்தக் கடிதத்தின் ஒரிஜினல் இருக்கிறதா?'' என்று கேட்க, நான் அதனை அவரிடம் ஒப்படைத்தேன். அதை வாங்கிப் பார்த்து விட்டு, அந்தக் கடிதத்தில் உள்ளவை நாகராஜன் எழுதியதுதானா என்று என்னிடம் கேட்டபோது, ''அந்த அதிகாரி என்னிடம் செயலாளராக இருந்திருக்கிறார். நான் ஆட்சியிலே இருந்த போது உள்துறை செயலாளராகவும் இருந்திருக்கிறார். அப்போதெல்லாம் அவருடைய கையெழுத்தை நான் பார்த்திருக்கிறேன். இது அவருடைய கையெழுத்துதான்'' என்று உறுதி கூறினேன்.



கொலை செய்யப்பட்ட பத்மநாபா

இந்த நேரத்தில் ஜெயலலிதாவிற்கு வேண்டிய வழக்கறிஞர் ஒருவர் எழுந்து, ''இந்தக் கடிதம் உங்களுக்கு எப்படி கிடைத்தது?'' என்றார்.

ஆனால் நீதிபதி ஜெயின் குறுக்கிட்டு ''அதையெல்லாம் கேட்கக்கூடாது. ஒரு வேளை ஜெயலலிதாவே கொடுத்திருப்பார்'' என்றார்.

தொடர்ந்து நான் கூறும்போது, ''நாகராஜன் இந்த அளவிற்கு கடிதம் எழுதியிருக்கக் காரணம், அ.தி.மு.க. ஆட்சியில் முதலில் அவரை ''தராசு'' பத்திரிகை அலுவலகத்தில் நடைபெற்ற ஒரு கொலை வழக்கில் சம்பந்தப்படுத்தி, அவரைக் கைது செய்தார்கள். தொடர்ந்து அவர்மீது துறை வாயிலாக பத்மனாபா கொலை போன்ற விவகாரங்களில் 'ஏன் சரியாக நடவடிக்கை எடுக்கவில்லை?' என்று விளக்கம் கேட்கப்பட்டபோது, அவர் அளித்த பதிலில், எந்த இடத்திலும் என்னைப் பற்றி எந்தவிதமான குற்றச்சாட்டினையும் கூறவில்லை'' என்று சொன்னேன்.

உடனே நீதிபதி ஜெயின் அவர்கள், ''இந்தக் கமிஷன் முன்பு அவர் கொடுத்த வாக்குமூலத்தில் அதைப்பற்றி எந்தப் புகாரும் சொல்லவில்லையே!'' என்றார்.

பின்னர் அ.தி.மு.க. வழக்கறிஞர் என்னிடம் குறுக்கு விசாரணை செய்தபோது, ''நாகராஜன் முதல் அமைச்சருக்கு எழுதிய ஒரு கடிதத்தை இன்று தாக்கல் செய்தீர்களே - அது தங்களுக்கு எப்படி கிடைத்தது?'' என்று கேட்டார்.

அதற்கு நான், ''நான் இந்நாள் முதலமைச்சராக இருக்கின்ற காரணத்தால் கோப்பிலிருந்து அந்தக் கடிதம் கிடைத்தது!'' என்று கூறினேன்.

அ.தி.மு.க. வழக்கறிஞர் மீண்டும் என்னிடம், ''ஜெயலலிதா தூண்டுதல் காரணமாகத்தான் உங்களுக்கு எதிராக நாகராஜன் குற்றச்சாட்டு கூறினார் என்று சொன்னது தவறு!'' என்றார்.

அதற்கு நான், ''அப்படித்தான் நான் கருதுகிறேன். நம்புகிறேன். ஏனென்றால் அந்தக் கடிதத்தில் ''நீங்கள்

சொன்னதை நான் செய்து முடித்து விட்டேன், அடுத்த ஆணையை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன்'' - என்றெல்லாம் எழுதியிருப்பதால், அதை நான் நம்புகிறேன்!'' என்று கூறினேன்.

4-5-1986 அன்று மதுரையில் நான் முன்னின்று நடத்திய டெசோ மாநாடு பற்றியும், அந்தக் கூட்டத்தில் நான் பேசும்போது, ''இலங்கைப் போராளிக் குழுக்கள் ஒன்றுபடும்வரை ஒற்றுமையாக இணைந்து செயல்படும்வரை, இலங்கைத் தமிழர் பிரச்சினையில் நான் தலையிட மாட்டேன்!'' என்று பேசியது பற்றியும் ஜெயின் கமிஷன் முன்னால் எடுத்துக் கூறினேன்.

1986ஆம் ஆண்டு என்னுடைய பிறந்த நாள் அன்று உண்டியலில் கிடைத்த 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய், ஒவ்வொரு போராளிக் குழுவிற்கும் ஐம்பதாயிரம் ரூபாய்வீதம் பகிர்ந்தளிக்கப்பட்டபோது, விடுதலைப் புலிகள் மட்டும் அதனை வாங்கிக் கொள்ள முன் வராததைப் பற்றியும் எடுத்துக் கூறினேன். இந்திரா காந்தி அம்மையாரின் குடும்பத்திற்கும் எனக்கும் இடையே உள்ள தொடர்புகளைப் பற்றியெல்லாம் கேட்கப்பட்ட பல கேள்விகளுக்கும் பதிலளித்தேன். 1986ஆம் ஆண்டு, ''தமிழ் ஈழம் என்பது சர்வாதிகார நாடாகத்தான் இருக்கும்'' என்று பிரபாகரன் கூறியதற்கு, ''அந்தக் கருத்தை நான் ஏற்கமாட்டேன்'' என்று நான் பதிலளித்ததையும் எடுத்துக் கூறினேன்.



''உங்கள் உத்தரவை முடித்து விட்டேன்-அடுத்த ஆணைக்குக் காத்திருக்கிறேன்'' என்று ஜெயலலிதாவிற்கு உள்துறை செயலாளர் நாகராஜன் கடிதம் எழுதினார்.

1987ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர். விடுதலைப் புலிகளுக்கு நான்கு கோடி ரூபாய் அரசின் சார்பில் நிதி வழங்கியதைப் பற்றியும் - 21-3-1988 தேதியில் ஜெயலலிதா ''இந்து'' நாளிதழுக்கு விடுதலைப் புலிகளை ஆதரித்துக்

கொடுத்த பேட்டி பற்றியும் - விடுதலைப் புலிகளுக்கு எம்.ஜி.ஆர். செய்த உதவி அளவுக்கு கருணாநிதி செய்தாரா? என்று **''இந்தியன் எக்ஸ்பிரஸ்''** கேள்வி கேட்டதற்கு, ''கருணாநிதி உதவியதாக எந்த ஆதாரமும் இல்லை'' என்று ஜெயலலிதா கொடுத்த பேட்டி பற்றியும் - 8-10-1990இல் ஜெயலலிதா விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக **'எக்ஸ்பிரஸ்'**க்கு அளித்த பேட்டி பற்றியும் ஜெயின் கமிஷன் முன்னால் பத்திரிகை ஆதாரங்களுடன் எடுத்து விளக்கினேன்.

ஜெயின் கமிஷன் முன்னால் நான் அப்போது அளித்த சாட்சியம் பற்றி பிரபல ஆங்கில ஏடான **''ப்ரண்ட் லைன்''** பின்வருமாறு எழுதியிருக்கிறது.

''முதல்வர் கருணாநிதி தமிழில் அளித்த சாட்சியம் தான் இந்தச் சுற்றில் கமிஷனில் நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சியாக அமைந்தது. அவர் உண்மைகளின் உச்சியில்இருந்து முரண்பாடில்லாத தொடர்ச்சியான - விளக்கமான - இடையிடையே நகைச்சுவையுடன் கூடிய கருத்தை விளக்கும் சொற்களைப் பயன்படுத்தி, காரசாரமான முறையில் சாட்சியம் அளித்தார். அவர் சாந்தமாகவும் - கேள்விகளுக்கு உடனுக்குடன் தெளிவாகவும் - சுருக்கமாகவும் பதில் அளித்தார். நவம்பர் 22ஆம் தேதி கமிஷன்முன் சாட்சியமளித்த தமிழக முதல் அமைச்சர், எல்.டி.டி.ஈ. மீதான மற்ற கட்சிகளுடன் பகிர்ந்து கொள்ளப்பட்ட தன்னுடைய அனுதாபம், மற்ற தமிழ் குழுக்கள் போராளிகள், பிற மிதவாதிகள் மீது எல்.டி.டி.ஈ.யால் கட்டவிழ்த்து விடப்பட்ட ஒவ்வொரு கொலைக்குப் பிறகு எவ்வாறு படிப்படியாக குறைந்து மங்கியது என்பதை விபரமாகத் தெரிவித்தார்.''

''கருணாநிதியின் வாக்குமூலமும், குறுக்கு விசாரணையில் அளித்த பதில்களும்; அவருடைய மூத்த வழக்கறிஞரும் புகழ்பெற்ற கிரிமினல் வழக்கறிஞருமான **என். நடராஜன்,** அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக் கூறியதும், இலங்கைத் தமிழர்களுக்கான இந்தியாவின் ஆதரவு அரசியலின் பரிணாம வளர்ச்சி பற்றிய பாடமாக அமைந்தது.''

''டெசோ கூட்டத்திற்கு அடுத்த நாளே அதாவது 1986மே 6ஆம் தேதி ''டெலோ'' தலைவர் சிறீ சபாரத்தினம் இலங்கையில் படுகொலை செய்யப்பட்டார்.அது விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்டதாக கூறப்பட்டது. எனவே போராளிகள் தங்கள் விரோதத்தைக் கைவிடும்வரை மவுனமாக இருப்பது என்று நான் முடிவு செய்தேன் என்று கருணாநிதி நினைவுகூர்ந்தார்.''

''இந்திய அமைதிப்படை தாயகம் திரும்பியபோது, அவர் ஏன் வரவேற்கச் செல்லவில்லை - என்று கேட்கப்பட்டபோது, ஒரு கிரிக்கெட் ரசிகரான அவர், கிரிக்கெட் தொடர்பான கற்பனையோடு பதிலளித்தார். ''பொதுவாக ஒரு கிரிக்கெட் அணி வெளிநாட்டுக்குச் சென்று வெற்றியோடு திரும்பும்போது, எல்லோரும் அதை வரவேற்கச் சென்று, அதைப் பாராட்டுவார்கள். ஆனால் ஒரு கிரிக்கெட் அணி மோசமாக தோல்வியடைந்து திரும்பும்போது, அதை விமான நிலையத்தில் வரவேற்க ஒருவரும் செல்ல மாட்டார்கள். அதுபோல, அமைதி காக்க அனுப்பப்பட்ட படை அதை நிறைவேற்றாமல் உண்மையில் அதற்கு மாறாக செயல்பட்டுத் திரும்பியது!'' என்று அவர் தெரிவித்தார்.

''இலங்கை இனப் பிரச்சினையில் உங்கள் கொள்கை எப்படி இருந்தது?'' என்று குறிப்பிட்டுக் கேட்டபோது, தான் எப்போதும் ஆதரித்து வரும் தேசியக் கொள்கையிலிருந்து தான் ஒருபோதும் விலகியதில்லை என்பதே அவருடைய பதிலாக இருந்தது.''

''கமிஷன் முன் சாட்சியம் அளித்த போது வெடிகுண்டு போல அதிர்ச்சி அளிக்கக்கூடிய ஆவண சாட்சியம் ஒன்றை கருணாநிதி வெளியிட்டார்.



பத்மநாபா உடலுக்கு மலரஞ்சலி

1990ம் ஆண்டு ஜூன் மாதம் நடைபெற்ற ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்த பத்மனாபாவும் மற்ற தலைவர்களும் சென்னையில் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணை நடக்காமல் தடுக்கும்படி, தான் வாய்மொழியாக உத்தரவிட்டதாக முன்னாள் உள்துறை செயலாளர் ஆர்.நாகராஜன் கூறியுள்ள குற்றச்சாட்டு பற்றிக் கேட்டபோது, நாகராஜனின் குற்றச் சாட்டுகள், 'முன்னாள் முதல் அமைச்சர் ஜெயலலிதாவால் தூண்டி விடப்பட்டது' என்று கருணாநிதி கூறினார். அது தொடர்பாக நாகராஜன் ஜெயலலிதாவுக்கு எழுதிய கடிதம் ஒன்றையும் ஆதாரமாக அளித்தார்.''

- ஜெயின் கமிஷன் விசாரணையும் அதில் என்னை விசாரணைக்கு அழைத்ததும் இந்திய அளவில் பெரிதாகப் பேசப்பட்டது. ஆனால் அந்த விசாரணையின்போது நான் அளித்த சாட்சியம் உலகத்திற்குத் தி.மு.கழகத்தின் மீது சாற்றிட நினைத்த ஒரு பெரிய குற்றச்சாட்டிற்கு பதில் அளிக்கும் வகையிலே அமைந்தது என்று சொன்னால் மிகையாகாது.

7-12-1991 தேதியிட்ட **''பிசினஸ் ஸ்டாண்டர்டு''** இதழில் **டி.வி.ஆர்.ஷெனாய்** எழுதும்போது ''முறையான காரணங்கள் இன்றி கருணாநிதிக்கு மேலும் தொல்லை கொடுத்தால், அதன் விளைவாகப் புதுடெல்லிக்குத்தான் மிகவும் தர்ம சங்கடமான நிலை ஏற்படும்'' என்று குறிப்பிட்டிருந்தார்.

ஜெயின் கமிஷனின் இடைக்கால அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட பிறகு, அதனைப் பற்றி **''இந்தியன் எக்ஸ்பிரஸ்''** நாளேடு 11-11-1997 தேதிய தலையங்கத்தில் ''ஜெயின் கமிஷனின் இடைக்கால அறிக்கையில் உள்ள கண்டுபிடிப்புகள் மிகவும் அற்பமானவை. உண்மையில் பொதுவான அபிப்பிராயங்களின் தொகுப்பாக அந்த அறிக்கை தெரிகிறதே தவிர, நீதி சார்ந்த ஒரு அமைப்பு ஆழ்ந்து பரிசீலித்து வெளியிட்ட கருத்தாகத் தோன்றவில்லை'' என்று எழுதியிருந்தது.

1997ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் **''இந்தியா டுடே''** இதழில் ஜெயின் கமிஷன் அறிக்கையில் உள்ள செய்திகள் என்ற

வகையில் சிலவற்றை வெளியிட்டன. ஆனால் ஜெயின் கமிஷன் இடைக்கால அறிக்கை என்ற ஒன்றை அரசிடம் தந்ததே தவிர, அதில் உள்ளவை பற்றி ஏடுகளுக்கு எதுவும் வெளியிடாத நிலையில், ''**இந்தியா டுடே**'' இதழ் வெளியிட்ட செய்திகளை நீதிபதி ஜெயின் அவர்களே மறுத்துக் கண்டனம் தெரிவித்தார். எனினும் பத்திரிகையாளர்கள் என்னைச் சந்தித்து, ''விடுதலைப் புலிகளுக்கு நீங்கள் ஆதரவு கொடுத்தது போல ஜெயின் கமிஷன் இடைக்கால அறிக்கையிலே கூறப்பட்டுள்ளது என்று **இந்தியா டுடே** ஏடு எழுதியிருக்கிறதே?'' என்று *9-11-1997* அன்று கேட்டார்கள். அதற்கு நான் நீண்டதோர் விளக்கமளித்தேன். அந்த விளக்கம் வருமாறு:

''ஜெயின் கமிஷன் முன் நானும் சாட்சியம் அளித்திருக்கிறேன். வேறு பலரும் சாட்சியம் அளித்திருக் கிறார்கள். ஏன், முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாகூட அங்கே சாட்சியமளித்திருக்கிறார். இந்தச் சாட்சியங்களைப் பொறுத்து, *1981*ஆம் ஆண்டிலிருந்தே - இந்திரா காந்தியில் இருந்து தமிழ் நாட்டில் உள்ள எல்லா கட்சிகளும், இலங்கைத் தமிழர்களுக்காக ஆதரவு கொடுத்ததோடு, போராளிகளுக்கும் ஆதரவு அளித்திருக்கின்றன. இந்திரா காந்தி காலத்தில் எத்தனை பயிற்சி முகாம்கள், விடுதலைப் புலிகள் உள்ளிட்ட விடுதலைப் போராளிகளுக்காக இந்தியாவில் இருக்கின்றன என்ற புள்ளி விவரத்தையும், வரைபடத்தையும் இதே இந்தியா டுடே பத்திரிகை அப்போதே வெளியிட்டுள்ளது. ''இந்து'' பத்திரிகையைச் சேர்ந்த ''பிரண்ட் லைன்'' இதழில் பிரபாகரனை சிம்மாசனத்தில் உட்கார வைத்து, அவரை தமிழ் ஈழத்தினுடைய தளபதி தலைவர் என்பது போல படத்தையே வெளியிட்டார்கள். இதை நான் குற்றச்சாட்டாகக் கூறவில்லை.அப்போதிருந்த நிலவரத்தையும் - எல்லாக் கட்சிகளும் பத்திரிகைகளும் இலங்கைத் தமிழர்களுக்காக நடைபெற்ற உரிமைப் போராட்டத்தை ஆதரித்தன என்பதை விளக்குவதற்காகத்தான் இதைக் குறிப்பிடுகிறேன்.''



நான் நடத்திய டெசோ மாநாட்டிற்கு வாஜ்பாய் - என்.டி.ராமாராவ் - கீ.வீரமணி உள்ளிட்ட தலைவர்களை வரவேற்கிறேன்.

''விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு என்ற பிரச்சினையை ராஜீவ் காந்தியின் கொலைக்கு முன் - கொலைக்குப்பின் என்று இரண்டு அத்தியாயங்களாகப் பிரித்துக் கொள்ளவேண்டும். விடுதலைப் போராளிகளுக்கு, ராஜீவ்காந்தியின் கொலைக்கு முன்பு தமிழ்நாட்டில் இருந்த ஆதரவு - கொலைக்குப் பின்பு அந்த ஆதரவில் ஏற்பட்ட மாற்றம் - என்று எண்ணிப் பார்ப்பதற்காகத்தான் இப்படி இரு வேறு அத்தியாயங்களாகப் பிரித்துக் கொள்ள வேண்டுமென்று சொல்கிறேன்.''

''21-3-1988 அன்று ஜெயலலிதா செய்தியாளர்கள் கூட்டத்தில், ''இந்தியா விடுதலைப் புலிகளுக்கு எதிரான தன்னுடைய ராணுவ நடவடிக்கைகளையெல்லாம் உடனடியாக நிறுத்திக் கொண்டு பிரபாகரனை பேச்சுவார்த்தைக்காக அழைக்க வேண்டும்.பிரபாகரனுக்கு இந்திய அமைதிப்படையினால் வேண்டுமென்றோ அல்லது எதிர்பாராத விதமாகவோ ஏதாவது தொந்தரவு ஏற்படுமேயானால் தமிழகத்தில் அது மோசமான விளைவுகளை ஏற்படுத்தும்'' என்றார்.

("India should immediately halt its military operations against the LTTE, and call its leader V. Prabakaran for discussions. If any harm comes to Mr. Prabakaran due to deliberate or accidental actions of the IPKF, it will have an adverse impact in Tamil Nadu" she warned.)

''1991ஆம் ஆண்டு ஜெயலலிதா ''இந்து'' இதழுக்கு அளித்த பேட்டியில், ''இனப் படுகொலை நிற்காமல் தொடருமேயானால், இந்திரா காந்தி வங்க தேசப் பிரச்சினையிலே எடுத்ததைப் போல இலங்கைப் பிரச்சினையிலும் இந்திய ராணுவத் தீர்வு காண்பதிலே எந்த விதமான தவறும் கிடையாதென்று நினைக்கிறேன்'' என்றார். (If the genocide continues unabated; I think there will be nothing wrong, if India thinks of a military option as indira Gandhi did in the case of Bangladesh")

''1990ஆம் ஆண்டு ஜூன் திங்களில் பத்மநாபா படுகொலை செய்யப்பட்டார். அந்தப் படுகொலைக்குப் பிறகும், 4-10-1990 அன்று ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' நாளேட்டுக்கு ஜெயலலிதா கொடுத்த பேட்டியில் - ''இந்தக் கடைசி இரண்டு மாதங்களில் தமிழகத்திற்கு தொந்தரவு தரக்கூடிய வகையிலே விடுதலைப் புலிகள் எந்த நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை. தற்போது விடுதலைப் புலிகள் ஒரு அரசாங்கத்தையே எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அது ஒரு இமாலயப் பணியாகும். விடுதலைப் புலிகள் ஒழிக்கப்பட்டு விட்டால், இலங்கையிலே உள்ள மொத்தத் தமிழ் இனமும் அழிந்து விடும் என்பதை நாமனைவரும் மனதிலே கொள்ள வேண்டும். விடுதலைப் புலிகளின் வெற்றி என்பது இலங்கைத் தமிழர்களின் வெற்றியாகும். அவர்களுக்கு உதவி செய்வதற்குப் பதிலாக திரு. கருணாநிதி தன்னைக் காப்பாற்றிக் கொள்வதில் முழுக் கவனத்தையும் செலுத்துகிறார். அவருடைய அதிகாரத்திற்கு உட்பட்ட அனைத்து உதவிகளையும் முதலமைச்சர் செய்ய வேண்டும். மத்திய அரசும் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலே ஒரு அமைதியான தீர்வு காண்பதற்கான முயற்சிகளிலே ஈடுபட வேண்டும்'' என்று கூறியிருக்கிறார்.

''இதற்குப் பிறகு எக்ஸ்பிரஸ் ஏட்டில் ''எம்.ஜி.ஆர். அளவிற்கு இல்லாவிட்டாலும் கருணாநிதி விடுதலைப் புலிகளுக்கு உதவியே செய்யவில்லையா?'' என்றுகேட்ட போது, ஜெயலலிதா "I see no evidence of it" என்று பதிலளித்திருக் கிறார்.''



டெசோ மாநாட்டில், ''இலங்கைப் போராளிக் குழுக்கள் ஒன்றுபடும்வரை இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தலையிட மாட்டேன்!'' என்று நான் பேசினேன்!

- இந்த நீண்ட என்னுடைய பதிலுக்குப் பிறகு, செய்தியாளர் ஒருவர், ''மத்திய அரசு உங்களிடம் தெரிவித்த ரகசியங்களை நீங்கள் வெளியிட்டு விட்டதாகக் கூறப்படுவதுபற்றி என்ன சொல்கிறீர்கள்?'' என்று கேட்டார்.

அதற்கு நான் அளித்த பதில், ''எந்த ரகசியமும் கிடையாது. இதே ஜெயின் கமிஷன் முன்னால், பிரதமராக இருந்த சந்திரசேகரின் முதன்மைச் செயலாளர் திரு. பி.ஜி.தேஷ்முக் அவர்கள் சாட்சியம் அளித்திருக்கிறார். அப்போது அவர் "To my knowledge, it did not come whether any information was leaked about the L.T.T.E. to the D.M.K. Government - I cannot say Whether any Governmental Information was leaked to L.T.T.E., by D.M.K. No one came to complain to me"

''என்னுடைய அறிவுக்குத் தெரிந்தவரையில் விடுதலைப் புலிகளைப் பற்றி தி.மு.க. அரசாங்கத்திற்கு எந்தச் செய்தியும் தெரிவிக்கப்பட வில்லை. அரசாங்கத்தின் எந்தச் செய்தியும் விடுதலைப் புலிகளுக்கு தி.மு.கழகத்தினால் வெளியிடப் பட்டதா என்று என்னால் கூற இயலாது. என்னிடம் இதுபற்றி புகார் செய்ய யாரும் வரவில்லை'' என்று சாட்சியம் அளித்தார் என்பதும் மனதில் கொள்ளத்தக்கது.

ஜெயின் கமிஷனின் இடைக்கால அறிக்கை குறித்து **எகனாமிக் டைம்ஸ், இந்தியன் எக்ஸ்பிரஸ், இந்துஸ்தான் டைம்ஸ், டைம்ஸ் ஆப் இந்தியா, தி ஸ்டேட்ஸ்மென்** போன்ற நாளிதழ்களும், பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களும் அதனைக் கண்டித்து தலையங்கங்களையும், கருத்துக்களையும் வெளியிட்டிருந்தார்கள். இந்திய அளவில்

உள்ள பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களும் கருத்து தெரிவித்தார்கள்.

குறிப்பாக தி.மு.க. அரசைக் கலைத்த **சந்திர சேகர்** அவர்கள் கூறும்போது, 'நான் தமிழகத்தில் தி.மு.க. அரசைக் கலைத்தது பற்றியும், முதல்வர் கலைஞர் அவர்களுடன் எனக்கு கருத்து வேறுபாடுகள் இருந்தது பற்றியும் எல்லோருக்கும் தெரியும். ஆனால், ராஜீவ் காந்தி கொல வழக்கில் நான் கலைஞர் அவர்களையோ, தி.மு.க.வையோ எப்போதும் சம்பந்தப் படுத்தியதில்லை. அதற்கான ஆதாரங்களும் என்னிடத்தில் இல்லை.''

மார்க்சிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் ஹர்கிஷன்சிங் அளித்த பேட்டியில், ''ஜெயின் கமிஷன் அறிக்கை வெளியானது குறித்து முழு விசாரணை நடத்தப்பட வேண்டும்'' என்றே கூறினார். மேலும் அவர் ''விடுதலைப் புலிகளுக்கு அடைக்கலம் கொடுத்ததாகக் குற்றச்சாட்டு சுமத்தி, தி.மு.க. அரசை மத்தியில் இருந்த சந்திரசேகர் அரசு கவிழ்த்ததை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கண்டித்தது என்பதை மறந்துவிடக் கூடாது'' என்றும் கூறினார்.

அப்போது ஆந்திர மாநில முதலமைச்சராக இருந்தவரும், ஐக்கிய முன்னணியின் அமைப்பாளராகச் செயல் பட்டவருமான **சந்திரபாபு நாயுடு** அவர்கள் என் இல்லத்தில் என்னை வந்து சந்தித்து, ஒரு மணி நேரத்திற்குமேல் உரையாடினார். அதன் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்தபோது, ''ராஜீவ் காந்தி படுகொலை நடைபெற்றபோது தி.மு.கழகம் ஆட்சியிலே இல்லை. குடியரசுத் தலைவர் ஆட்சிதான் தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. கலைஞர் அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோது, ராஜீவ் காந்தி பத்து முறை தமிழகத்திற்கு வருகை தந்து விட்டு, ஒவ்வொரு முறையும் பத்திரமாகத் திரும்பிச் சென்றிருக்கின்றார். குடியரசுத் தலைவர் ஆட்சியிலே நடைபெற்ற ஒரு சம்பவத்திற்கு அப்போது பதவியிலேயே இல்லாத கலைஞர் மீது குற்றம் சாட்டுவது என்ன நியாயம்?'' என்று கேட்டதோடு-

ஜெயின் அறிக்கை என்ற பெயரில் வெளியிட்ட இந்தியா டுடே பத்திரிகையின் ஆசிரியர் பிரபு சௌலா அவர்களும் நீதிபதி **ஜெயின்** அவர்களும் இணைந்து நின்று கொண்டிருக்கும் புகைப்படத்தையும் செய்தியாளர்களிடம் காட்டி, ''அதற்குமேல் அந்த அறிக்கை எவ்வாறு வெளிவந்தது என்பதைப் பற்றி நான் விளக்க விரும்பவில்லை'' என்றும் கூறினார்.

டைம்ஸ் ஆப் இந்தியா, தி ஸ்டேட்ஸ்மென், இந்துஸ்தான் டைம்ஸ் போன்ற மிகப் பிரம்மாண்டமான ஏடுகள் அனைத்தும் விடுதலைப் புலிகளுடன் தி.மு.க.விற்குத் தொடர்பு இருப்பதாகக் கூறப்பட்ட சந்தேகம் அறவே நீக்கப்பட்டு விட்டதாக எழுதின.

குறிப்பாக **''பயனீர்''** ஆங்கில ஏடு, ''ராஜீவ் காந்தி கொலையில் கலைஞருக்கோ, தி.மு.க.வுக்கோ தொடர்பு எனக் காட்ட ஆதாரம் எதுவும் ஜெயின் கமிஷன் அறிக்கையில் இல்லை என்று மத்திய அமைச்சரவையிடம் அளிக்கப்பட்டுள்ள சட்ட வல்லுநர் கருத்தில் கூறப்பட்டுள்ளது!'' என்று 19.11.1997 அன்று எழுதியது.

தமிழகத்தின் மூத்த அரசியல்வாதியும், மராட்டிய மாநில ஆளுநராக இருந்தவருமான திரு.சி.சுப்பிரமணியம் அவர்கள் ''ராஜீவ் காந்தி கொலையில் தி.மு.க.விற்கு எந்தவிதமான சம்பந்தமும் இல்லை!'' என்று திட்டவட்டமாகப் பேட்டியளித்தார்.

அகில இந்திய ஏடுகளும், அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஜெயின் கமிஷன் இடைக்கால அறிக்கையிலே கூறப்பட்டதற்கு எதிராக கருத்துக்களைத் தெரிவித்தபோதும், தி.மு.கழகத்தின் மீது வெறுப்பு கொண்ட அன்றைய ஒரு சில காங்கிரஸ் தலைவர்கள், மத்தியில் காங்கிரஸ் கட்சியின் ஆதரவுடன் நடந்து கொண்டிருந்த கூட்டணி அமைச்சரவையிலிருந்து தி.மு.கழகத்தை நீக்க வேண்டுமென்பதில் பிடிவாதமாக இருந்தனர்.



டெசோ மாநாட்டிற்கு மறுநாளே படுகொலை செய்யப்பட்ட சிறீ சபாரத்தினம்


30.11.1997 அன்று ''தீக்கதிர்'' நாளேட்டில் அன்றைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த **ஹர்கிஷன் சிங் சுர்ஜித்** எழுதிய நீண்ட கட்டுரையில் ''ஜெயின் கமிஷன் அறிக்கையில் எந்த வகையிலும் குற்றம் சாட்டப்படாத தி.மு.க.வை மத்திய அமைச்சரவையிலிருந்து நீங்க வேண்டுமென்ற கோரிக்கை நியாயமற்றது'' என்பதற்கு ஆதரவாக பல்வேறு வாதங்களை எழுப்பியிருந்தார்.

ஹர்கிஷன் சிங் சுர்ஜித் அவர்கள் மறைந்துள்ள இந்த நேரத்தில், 1997ஆம் ஆண்டு அவர் எழுதிய அந்தக் கட்டுரையின் சில வாக்கியங்களை இத்தொடரில் இணைப்பது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன்.

''ஜெயின் கமிஷனின் இடைக்கால அறிக்கையில் உள்ள விஷயங்கள் என்ன என்பதை முறைப்படி ஆராயாமல், காங்கிரஸ் கட்சி தானாகவே ஒரு முடிவுக்கு வந்தது. அந்த முடிவை மத்திய அரசின் மீதும் மக்கள் மீதும் திணித்தது. ஜெயின் கமிஷன் அறிக்கையில் என்ன இருக்கிறது என்பதைப் பற்றியெல்லாம் கவலைப் படாமல், தி.மு.க.வை அமைச்சரவையிலிருந்து விலக்க வேண்டும் என்று சில காங்கிரஸ் தலைவர்கள் கோரிக்கை எழுப்ப ஆரம்பித்து விட்டார்கள். ராஜீவ் காந்தி கொலையில் தி.மு.க.வுக்கோ - அதன் தலைவர்களுக்கோ எந்த வகையிலும் தொடர்



விடுதலைப் புலிகளுக்கு தமிழக அரசின் சார்பில் 4 கோடி ரூபாய் நிதியளித்த எம்.ஜி.ஆருடன் பிரபாகரன்!




விடுதலைப் புலிகளுக்கு அடைக்கலம் கொடுத்ததாக தி.மு.க.அரசைக் கவிழ்த்ததை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கண்டித்தது!


பிருப்பதற்கான ஒரு அறி குறியும் ஜெயின் கமிஷன் அறிக்கை இல்லை. அறிக்கையில் எந்த வகையிலும் குற்றம் சாட்டப்படாத தி.மு.க.வைத் தண்டிக்க வேண்டும் என்று காங்கிரஸ் கோரியது.''

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஜெயின் கமிஷன் இடைக்கால அறிக்கையே நாட்டு ஒற்றுமைக்கு இறையாண்மைக்கும் ஊறு விளை விப்பதாக அமைந்துள்ளது என்று தீர்மானம் நிறைவேற்றியது. பிரதமர் குஜ்ரால் அவர்கள், ''காங்கிரஸ் கோரிக்கையை ஏற்க இயலாது'' என்று பேட்டியளித்தார். ஜெயின் கமிஷன் இடைக்கால அறிக்கையில், தி.மு.க.வை மட்டுமல்ல - ஓட்டு மொத்த தமிழர்களையே குற்றஞ்சாட்டுவதைப் போலவும் எழுதியிருந்தார்.

ஆனாலும் ஐக்கிய முன்னணி அரசுக்கு அளித்து வந்த ஆதரவை 28.11.1997 அன்று காங்கிரஸ் விலக்கிக் கொண்டது. பிரதமர் குஜ்ரால், குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணனைச் சந்தித்து, தனது அமைச்சரவையின் பதவி விலகல் கடிதத்தை அளித்தார். அதனை ஏற்றுக் கொண்டு குடியரசுத் தலைவர் மாற்று ஏற்பாடுகளைச் செய்யும்வரை பதவியில் நீடிக்கும்படி பிரதமர் குஜ்ராலை எதுவும் சரியாக வராத நிலையில், 3.12.1997 அன்று இரவு பிரதமர் குஜ்ரால் தலைமையிலான ஐக்கிய முன்னணியின் அமைச்சரவை செய்த பரிந்துரையை ஏற்று, குடியரசுத்




ராஜீவ் காந்தி கொலையில் கலைஞரைப் பற்றியோ - தி.மு.கழகத்தைப் பற்றியோ - நான் சம்பந்தப் படுத்தவில்லை!



ராஜீவ் காந்தி கொலையில் தி.மு.க.வுக்கு எந்தத் தொடர்பும் இல்லை!

தலைவர் நாடாளுமன்றத்தின் 11ஆவது மக்களவையைக் கலைத்து உத்தரவிட்டார்.

அந்த உத்தரவு பற்றி ''அரசியலில் ஒழுங்கும் கண்ணியமும் ஜனநாயக மாண்பும் கட்டிக் காக்கப்பட வேண்டு மென்பதில் மிகுந்த அக்கறை கொண்டவரும் - ''ஆயாராம் காயாராம்'' போன்ற குதிரை வியாபாரத்தின் மூலம் எப்படியாவது ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டுமென்கிற முயற்சிகளுக்கு ஒரு துளியும் இடம் தராதவருமான நேர்மையாளர் ஒருவரைக் குடியரசுத் தலைவராகப் பெற்றுள்ள இந்திய நாட்டு மக்களும் - அவரது தேர்வுக்கு வாக்களித்த மக்களவை, மாநிலங்களவை, சட்டப்பேரவை ஆகியவற்றின் உறுப்பினர்களும் பெருமை கொள்ளத்தக்க முடிவாக இது அமைந்துள்ளது'' என்று நான் கருத்து தெரிவித்தேன்.



குடியரசுத் தலைவர் ஆட்சியிலே நடைபெற்ற ஒரு சம்பவத்திற்கு, பதவியிலே இல்லாத கலைஞரைச் சம்பந்தப்படுத்துவது என்ன நியாயம்?

எப்படியோ - கமிஷனின் இடைக்கால அறிக்கை என்ற பெயரால் தேவையில்லாமல் ஒன்றை யளித்து, அதன் காரணமாக சுமூகமாக நடைபெற்றுக் கொண்டிருந்த மத்திய ஆட்சியே கலைக்கப்படும் நிலைமை தான் ஏற்பட்டது.

11.12.1997 அன்று செய்தியாளர் களுக்கு பேட்டி அளித்த த.மா.கா. தலைவர் மூப்பனார் அவர்கள், ''ராஜீவ் காந்தி கொலையில் தி.மு.க.வுக்கு எந்தவிதமான தொடர்பும் இல்லை. ஜெயின் கமிஷன் அறிக்கைப் பிரச்சினையில், தி.மு.க.வுக்கு எதிராக

தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி செயல்படவில்லை!'' என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

இவ்வாறு ஜெயின் கமிஷனின் இடைக்கால அறிக்கையில் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சித்து மத்திய அரசைக் கவிழ்த்த போதிலும், 1998ஆம் ஆண்டு மார்ச் திங்களில் ஜெயின் கமிஷனின் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அதிலே தி.மு.க. வைப் பற்றியோ, என்னைப் பற்றியோ எந்த விதமான குற்றச்சாட்டுகளும் கிடையாது. இந்த உண்மையை உணர்ந்துள்ள காரணத்தினால் தான் அரசியல் வேறுபாடுகளுக்கிடையிலேயும், நேரு குடும்பத்தினருக்கும் எனக்குமுள்ள ஆழமான உறவும் நட்பும் ஒரு சிறிதும் மாறிவிடவில்லை என்பதற்கு எடுத்துக் காட்டாகத்தான், கொள்கை மாறுபாடு வேறு, குடும்ப உறவு வேறு என்ற நிலையில் - இன்றைய அரசியல் சூழலில் அரசியலுக்கு அப்பாற்பட்ட பற்று பாசத்துடன் ஒரு தூய்மையான நட்பும் உறவும் திருமதி சோனியா காந்தி அவர்களிடம் என்னால் கண்டுணர்ந்திட முடிகிறது - நாட்டுக்கும் அது புரிகிறது- நாட்டின் முன்னேற்றத்திற்காக இப்போது நாங்கள் ஓரணியில் இருப்பதும் தேவையாகிறது!

16. சிங்காரவேலர் மாளிகை

சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் பெயரால் கழக அரசு அமைத்த மாளிகை

5.12.1996 அன்று எனது தலைமையில் தமிழக அமைச்சரவைக் கூட்டம் கூடியது. அந்தக் கூட்டத்தில் ''1991 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டுவரை ஆட்சியிலே இருந்த முன்னாள் முதலமைச்சர் **ஜெயலலிதா,** அவருடைய அமைச்சர்கள், மற்றும் சில இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள், மற்றும் பிற பணி அலுவலர்கள்-முன்னாள் அமைச்சர்களின் நேர்முக உதவியாளர்கள்-வாரியத் தலைவர்கள்-ஆகியோர் அரசு அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தி சேர்த்த சொத்துக்கள் குறித்த வழக்குகளில் புலன்விசாரனை நடந்து வருகிறது. ஒவ்வொரு வழக்கிலும் புலன்விசாரணை முடிந்தவுடன் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும். இப்போது குற்றப் பத்திரிகைகள் ஒவ்வொன்றாக பதிவாகும் நிலைமை இருக்கிறது-பெரும்பாலான வழக்குகளில் குற்றப் பத்திரிகைகள் தாக்கலான பிறகு அவற்றை விசாரிக்க தனி நீதிமன்றம் அமைக்கலாம்'' என்று அமைச்சரவையில் முடிவெடுக்கப்பட்டது.

இந்த முடிவினை அரசு எடுப்பதற்குள் தமிழ்நாட்டில் உள்ள ஏடுகளும், எதிர்க்கட்சிகளும் ''ஏன் முன்னாள் ஆட்சியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை? தி.மு.கவுக்கும், அ.தி.மு.க. வுக்கும் இடையே சமரசம் ஏற்பட்டு விட்டதா?'' என்ற அளவிற்கு பேசவும் எழுதவும் முற்பட்டு விட்டனர். ஆனால் கழக அரசு அதிலே அவசரப்பட்டு எந்த முடிவினையும் எடுக்கவில்லை. ஒன்றுக்குப் பலமுறை நன்கு ஆராய்ந்து,

ஆதாரங்களை யெல்லாம் சரி பார்த்து, அதன் பிறகே நடவடிக்கை எடுக்க முன் வந்தது.

இந்த முடிவெடுக்கப்பட்ட அதே நாளில் சென்னை உயர்நீதி மன்றத்தில் ஜெயலலிதா தாக்கல் செய்திருந்த ஏழு முன் ஜாமீன் மனுக்களும் நீதிபதி சிவப்பா அவர்களால் தள்ளுபடி செய்யப் பட்டன. அரசுக்குச் சொந்தமான டான்சி நிலத்தை அதிகாரத்தைப் பயன்படுத்தி முறைகேடாக வாங்கியது-தெற்காசிய விளை யாட்டுப் போட்டி நடந்த போது விளம்பரம் செய்வதற்காக மீனா விளம்பர நிறுவனத்திற்கு சலுகை காட்டி ஊழல் செய்தது-கொடைக்கானல் பிளசண்ட் ஸ்டே ஓட்டலுக்கு சுயலாப நோக்கத்தோடு முறைகேடாக அனுமதி அளித்தது-உள்ளாட்சி மன்றங்களுக்கு தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்கியதில் கோடிக்கணக்கில் அன்னியச் செலவாணி சட்டத்திற்குப் புறம்பாக மூன்று இலட்சம் அமெரிக்க டாலர்களைப் பெற்றது-வருவாய்க்கு மீறி



''ஒரு யோக்கியரை இழந்துவிட்டோம்'' - என்று மூதறிஞர் ராஜாஜி குறிப்பிட்ட சிங்காரவேலரின் சிலை!



சிங்கார வேலர் மாளிகை திறப்பு விழாவில்...

அரசு அதிகாரத்தைப் பயன்படுத்தி சொத்துக்களை வாங்கிக் குவித்தது-நிலக்கரி இறக்குமதி செய்ததில் நடைபெற்ற ஊழலில் சம்பந்தப்பட்டது-ஆகிய 7 குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் ஜெயலலிதா மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்தன. இவற்றின் மீது ஒட்டுமொத்த ஜாமீன் மனு ஒன்றினை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்து ஏற்கனவே நீதிபதி அதனை நிராகரித்திருந்தார்.

மீண்டும் அதே உயர் நீதிமன்றத்தில் தனித்தனியாக ஏழு வழக்குகளையும் குறிப்பிட்டு, ஜாமீன் மனுக்களைத் தாக்கல் செய்து, அவற்றின் மீது தீர்ப்பு வழங்கிய நீதிபதி சிவப்பா அவர்கள்- ''வேண்டுமென்றே அரசியலில் காழ்ப் புணர்ச்சியோடு தன்மீது பொய் வழக்குகள் போடப் பட்டிருப்பதாக ஜெயலலிதா தரப்பில் கூறப்பட்ட வாதத்தை ஏற்க முடியாது. இந்தக் குற்றச்சாட்டுக்கான ஆரம்ப ஆதாரங்கள் உள்ளன. ஒரு முக்கியமான வழக்கில் குற்றம் சாட்டப் படுபவரை கைது செய்யக்கூடாது என்று கூற முடியாது. அப்படி கைது செய்து விசாரிப்பது காவல் துறையின் கடமையாகும். முக்கிய வழக்கில் சம்பந்தப்பட்டிருப்பவருக்கு முன் ஜாமீன் கொடுப்பதால் காலம் விரயமாகும். குற்றம் சாட்டப்பட்டவர் ஏமாற்றும் நடவடிக்கைகளில் ஈடுபடவும் வாய்ப்பு ஏற்படும். அரசுத் தரப்பு ஆவணங்களை ஆராய்ந்தபோது இந்த வழக்குகள் உள் நோக்கத்துடன் போடப்படவில்லை என்று தோன்றுகிறது. ஜெயலலிதாவை கைது செய்தால், அவருடைய அரசியல் நடவடிக்கைகள் பாதிக்கும் என்று கூறுவதை ஏற்க முடியாது. இந்த வழக்கில் ஆரம்ப ஆதாரங்கள் உள்ளன. அவருக்கு முன் ஜாமீன் கொடுத்தால் விசாரணைக்கு இடையூறு செய்யலாம். சாட்சிகளைக் கலைக்கும் முயற்சியில் ஈடுபடலாம்!'' என்றெல்லாம் குறிப்பிட்டு ஜாமீன் மனுக்களைத் தள்ளுபடி செய்தார்.

இதன் பின்னரும் ஜெயலலிதாவின் வழக்கறிஞர் பத்துநாட்கள் வரை ஜெயலலிதா மீது அரசு நடவடிக்கை எடுக்காமல் இருக்க தடை விதிக்க வேண்டுமென்று கோரிக்கை வைக்க, அதனையும் நீதிபதி ஏற்க மறுத்து விட்டார்.



1400 கோடி ரூபாய் முதலீட்டில்
ஹுண்டாய் கார் ஆலையின் பூமி பூஜை!

இந்த நிலையில் 8.5 கோடி ரூபாய் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்கியது தொடர்பான ஊழல் வழக்கில் ஜெயலலிதாவை தமிழகக் குற்றப்பிரிவு போலீசார் 7.12.1996 அன்று கைது செய்தனர். அன்றைய தினம் காலை 7.15 மணிக்கு டி.ஐ.ஜி. ராதாகிருஷ்ண ராஜா தலைமையில் போலீஸ் அதிகாரிகள் அவரது இல்லத்திற்குச் சென்றனர். அவர் கைது செய்யப்படும் செய்தி, அவருடைய கட்சியினருக்குத் தெரிவிக்கப்பட்டு, அந்தக் கட்சியின் முக்கிய பிரமுகர்கள் எல்லாம் அவரது இல்லத்திற்கு வருகை தந்ததோடு, ''ஜெயலலிதாவைக் கைது செய்யக்கூடாது!'' என முழக்கமிட்டனர்.

காலை 7.15 மணி அளவிலேயே காவல் துறையினர் சென்றபோதிலும், காலை 9.45 மணிக்குத்தான் ஜெயலலிதா மாடியிலிருந்து கீழே இறங்கி வர, அதன் பின்னர் அவர் கைது செய்யப்பட்டார். அன்றைய தினம் நீதிமன்ற விடுமுறை என்பதால், நீதிபதியின் வீட்டிற்கே அழைத்துச் செல்லப்பட்டு, டிசம்பர் 21 ஆம் தேதிவரை ஜெயலலிதாவை சிறையிலே அடைக்க நீதிபதி உத்தரவிட்டார்.

ஜெயலலிதா கைது செய்யப்பட்டதை தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பில் அதன் செய்தித் தொடர்பாளர் ஞானதேசிகன், எம்.ஜி.ஆர்.மன்றக் காப்பாளர் ஆர்.எம்.வீரப்பன், பா.ம.க.நிறுவனத்தலைவர் டாக்டர் ராம்தாஸ், கிறித்துவ ஐக்கிய ஜனநாயக முன்னணியின் தமிழ் மாநிலத் தலைவர் ஜேம்ஸ், தேவேந்திர குல வேளாளர் கூட்டமைப்பின் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி, ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வை.கோ., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் என்.சங்கரய்யா, ஜனதா தள

மாநிலத் தலைவர் **ஜி.ஏ.வடிவேலு** ஆகியோர் வரவேற்று அறிக்கைகளை அளித்தனர்.

''தினமணி'' நாளிதழ், தனது *7.12.1996* தேதிய தலையங்கத்தில் ஜெயலலிதாவைப் பற்றி மிகவும் கடுமையாக விமர்சனம் செய்திருந்தது.

அது வருமாறு:-

''அறிக்கைகள் மூலம் தன்னைத் தானே கேவலப்படுத்திக் கொள்ளக்கூடியவர் அரசியலில் ஒருவர் உண்டென்றால் அவர் ஜெயலலிதாவே. அவருடைய முன்னாள் உடன்பிறவாச் சகோதரி சசிகலாமீது பாசமழை பொழிந்தும், மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் மீது வசைமாரி பெய்தும் அவர் இப்பொழுது வெளியிட்டுள்ள அறிக்கை அவருடைய மனக் குழப்பத்தை - ஆத்திரத்தை - தவிப்பை - விரக்தியைப் பிரதிபலிப்பதாக அமைந்திருக்கிறது. மூன்று மாதங்களுக்கு முன், கட்சி நலனுக்காக சசிகலா உறவைத் துண்டித்துக் கொள்வதாகக் கூறினார். இப்பொழுதோ சசிகலாவுடன் இருந்து வந்த உன்னத நட்பை-பாசப் பிணைப்பை அறுத்துக்கொண்டதற்காக மனம் வருந்துகிறார். ''சசிகலா மென்மையான உணர்வுடைய குடும்பப் பெண். பொதுவாழ்வில் ஈடுபடுவதற்குரிய நெஞ்சுறுதியோ, துணிவோ இல்லாதவர். ஆங்கில அறிவோ, சட்ட நுணுக்கங்களோ அறியாதவர்'' என்பது அறிக்கையின் சுவையான பகுதி. சசிகலாவிடம் இல்லாததெல்லாம் அரசியலில் ஈடுபட்டுள்ள ஜெயலலிதாவிடம் இருக்கிறது என்று பொருள்படுகிறது. போயஸ் தோட்டத்தில் சசிகலா குடியேறுவதற்குமுன், சாதாரண அரசு ஊழியர் ஒருவரின் மனைவி. ஜெயலலிதாவின் ஐந்தாண்டுக் கால ஆட்சியில், இக்குடும்பப் பெண்ணுடன், அரசியல் பெண்மணியும் சேர்ந்து கூட்டாக சில சொத்துக்களை வாங்கியிருக்கிறார்கள். சென்னையிலிருந்து மகாபலிபுரம் வரையில் இந்திரலோகத்து அரண்மனைகளைப் போல, பல சொகுசு மாளிகைகள் எழுப்பப்பட்டுள்ளன. பல நூறு கோடி மதிப்புள்ள சொத்துக்கள் சேர்க்கப்பட்டுள்ளன.



ஹுண்டாய் ஆலை திறப்பு விழாவில்...

இவ்வளவையும் ஜெயலலிதாவின் வீட்டில் குடியிருந்தபடியே செய்ய முடிந்திருக்கிறது. அரசியல் தெரிந்த ஜெயலலிதா, ஆட்சி நடத்துவதிலேயே மூழ்கி இருந்ததால் இவையெல்லாம் அவருக்குத் தெரியாதாம். தன்னுடைய வீட்டில் நடப்பதே தெரியாமல் இருந்த எல்லாம் தெரிந்த பெண்மணி, எந்தவிதமாக ஆட்சி புரிந்திருப்பார் என்பது இதிலிருந்தே தெரிகிறது. தெரியாமல் நடந்ததாக எல்லோரும் நம்ப வேண்டுமென எதிர்பார்க்கிறார்.''

7.12.1996 அன்று ''தினமணி''யிலே இந்தத் தலையங்கம் வந்ததென்றால், அதற்கு மறுநாள் 8.12.1996 அன்று டெல்லியிலிருந்து வெளிவரும் **''தி ஆசியன் ஏஜ்''** என்ற இதழ் தனது தலையங்கத்தில் பின்வருமாறு எழுதியிருந்தது.

''சென்னை உயர்நீதி மன்றம் முன்னாள் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தாக்கல் செய்திருந்த ஏழு முன் ஜாமீன் மனுக்களையும் நிராகரித்த பிறகு, அவரது கைது தவிர்க்க முடியாததாகும். தன்னுடைய கைதுக்கு அரசியல் பழி வாங்கும் நடவடிக்கையைத் தவிர வேறு காரணமில்லை என்று அறிவித்து விட்டு, அவர் மத்திய சிறைக்குச் சென்றிருக்கிறார். அவரால் குவிக்கப்பட்ட பணம், அவர் இந்த மாநிலத்தின் அரசியல் தலைவராக பதவி வகித்தபோது அந்த அந்தஸ்திலே சேர்க்கப்பட்டதாகும். ஆனால் பதிலளிக்க வழியில்லாத நிலையிலே அரசியல்வாதிக்கு உள்ள ஒரே பதில் பழி வாங்கும் நடவடிக்கை என்று போலியாகக் கூறுவதுதான். செல்வி ஜெயலலிதா சட்டத்தின் நீண்ட கரங்களில் மாட்டிக்கொண்டு விட்டார். முடிவில்லாத லஞ்ச ஊழலுக்கு தனது நீண்ட

ஆட்சியை செலவிட்ட ஜெயலலிதாவிற்காக யாரும் கண்ணீர் வடிக்க மாட்டார்கள். ஜெயலலிதாவின் கைது அரசின்மீது களங்கம் ஏற்படுத்தாது. ஜெயலலிதா கட்சியிலே தன்னைத் தொடர்ந்து யாரும் தலைவராக உருவாவதை விரும்பாமல் சர்வாதிகாரப் போக்கிலே நடந்து கொண்ட காரணத்தால் அவருடைய கைதுக்குப் பிறகு அந்தக் கைதை அந்தக் கட்சி தாங்குமா என்ற நிலை உள்ளது. அ.தி.அ.தி.மு.க எப்போதுமே தனி நபரை அடிப்படையாகக் கொண்ட இயக்கம் என்பதால் தற்போது அதற்கான விலையை அது செலுத்தப் போகிறது.''

ஏடுகள் எல்லாம் இந்த அளவிற்கு எழுதியபோதிலும், சிறையில் இருந்த ஜெயலலிதாவிற்கு எந்தவிதமான வசதிகளோ-பாதுகாப்பு ஏற்பாடுகளோ செய்யப்படவில்லை என்ற குற்றச்சாட்டு அறிக்கை மூலமாக சொல்லப்பட்டு, அதற்கு அரசின் சார்பில் அவருக்கு சிறையிலே அளிக்கப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் வசதிகள் குறித்து விளக்க அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது.

ஜெயலலிதா வைக்கப்பட்டிருந்த பெண்கள் வார்டுக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள்-

★ போலீஸ் இன்ஸ்பெக்டர் அந்தஸ்தில் ஒரு பெண் அதிகாரி;

★ தலைமைக் காவலர் தகுதி பெற்ற பெண் தலைமை வார்டர்;

★ காவலர்கள் தகுதியில் ஏழு பெண் வார்டர்கள்;

★ இவர்கள் 24 மணி நேரமும் பெண்கள் வாடை காவல் புரிவார்கள்.

★ சப்-இன்ஸ்பெக்டர் அந்தஸ்தில் உள்ள ஒரு துணை ஜெயிலர்;

★ இரண்டாவது கிரேடு தகுதி பெற்ற ஏழு ஆண் வார்டர்கள்-ஆகியோரும் 24 மணி நேரமும் அங்கே பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப் பட்டிருந்தார்கள்.



ஜெயலலிதாவின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு சிறைச்சாலைக்கு வெளியே பின்வரும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

மாநகர காவல் துறையைச் சேர்ந்த ஒரு இன்ஸ்பெக்டர் - மாநகர காவல் துறையைச் சேர்ந்த இரண்டு தலைமைக் காவலர்கள்-ஆறு காவலர்கள் - ஆயுதப் போலீஸ் பிரிவைச் சேர்ந்த பத்து காவலர்கள்-ஒரு தலைமைக் காவலர்-மற்றும் ஒன்பது காவலர்கள்.

இந்தப் பாதுகாப்பு மட்டுமன்றி தமிழ்நாடு சிறப்புக் காவல் பிரிவைச் சேர்ந்த பின்வரும் அதிகாரிகள் இருபத்து நான்கு மணி நேர பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டார்கள்.

★ *2 சப் இன்ஸ்பெக்டர்கள்-2 ஹவில் தார்கள்-15 போலீஸ்காரர்கள் முழுக்க முழுக்க ஆயுதமேந்தி பாதுகாப்புப் பணியில் உட்படுத்தப்பட்டார்கள்.*

நீதிபதியால் சிறையில் சாதாரண வகுப்பு மட்டுமே ஜெயலலிதாவுக்கு அளிக்கப்பட்டிருந்தும் கூட, அவருக்கு ஒரு கட்டிலும் - அவர் தன் வீட்டிலிருந்து கொண்டு வந்த ஒரு மெத்தை - இரண்டு தலையணைகள்-அமர்வதற்கு ஒரு நாற்காலி-எழுதுவதற்கு வசதியான ஒரு மேஜை- பைகள்-புத்தகங்களை வைத்துக் கொள்ள வசதியாக ஒரு சிறு பெஞ்ச்-ஒரு மின் விசிறி-அத்துடன் நின்ற நிலையில் இயங்கும் ஒரு மின் விசிறி-இரவு நேரங்களில் பயன்படுத்த கொசு விரட்டிச் சுருள்கள் போன்றவைகளும் அளிக்கப்பட்டன.

மேலும் ஜெயலலிதா இருந்த அறை, குளியல் அறை-நவீன கழிப்பிட வசதியும் செய்யப்பட்ட அறையாகும். அவர் குடிப்பதற்காக தேவையான அளவு நல்ல குடிநீர் பாட்டில்கள் அனுமதிக்கப்பட்டன. பார்வையாளர்களை அவருடைய விருப்பப்படி சந்திக்க அவருக்கு முழு உரிமை தரப்பட்டிருந்தது. அன்றாடம் ஒரு மருத்துவர் அம்மையாரைப் பரிசோதனை செய்வதற்காக அனுமதிக்கப்பட்டார். அவர் தனது அறையிலிருந்து பார்வையாளர்களைச் சந்திக்க வருகின்ற நேரத்தில், அவருடைய பாதுகாப்பிற்காக ஜெயில் சூப்பிரண்டே உடன் வரவும், அவருடன் துணை சூப்பிரண்டு-பணியிலே உள்ள ஜெயிலர்கள்-தலைமை பெண்வார்டன் மற்றும் பெண் வார்டர்கள் உடன் வரவும் பணிக்கப்பட்டிருந்தார்கள். 7.12.1996 அன்று கைது செய்யப்பட்ட அவருக்கு 8ஆம் தேதியிலிருந்தே இந்த வசதிகள் எல்லாம் செய்து தரப்பட்டன.

இவைகள் எல்லாம் அப்போதே ஏடுகளில் வெளிவந்த செய்திகள். ஏடுகளில் வராத செய்தி ஒன்றையும் இப்போது தெரிவிக்கின்றேன். அவர் கைது செய்யப்பட்ட அன்றைய தினம் சிறைத்துறை அதிகாரியை நானே தொலைபேசியிலே தொடர்பு கொண்டு, ''கைது செய்யப்பட்டவர் முன்னாள் முதலமைச்சர். ஒரு அரசியல் கட்சியின் தலைவர். அவர் மரியாதையுடன் நடத்தப்பட வேண்டும். அவர் இருக்கும் அறையில் எந்தவிதமான வசதிக் குறையும் இல்லாத வகையில் பார்த்துக் கொள்ளப்பட வேண்டும். அவைகள் எல்லாம் இருக்கின்றனவா என்று பார்த்துவிட்டு, எனக்கு தொலைபேசியில் மீண்டும் தகவல் தெரிவிக்க வேண்டும்'' என்று கூறி, அந்த அதிகாரியும் அதையெல்லாம் சரி பார்த்துவிட்டு, பிறகு என்னிடம் தொடர்பு கொண்டு, ''அந்த வசதிகள் எல்லாம் செய்து தரப்பட்டுள்ளன'' என்று தெரிவித்தார்.

ஜெயலலிதா கைதானதைத் தொடர்ந்து அவருடைய இல்லத்தில் ஐந்து நாட்கள் நடைபெற்ற சோதனையில் கண்டறியப்பட்ட பொருட்களின் சிலவற்றின்

பட்டியலை-சென்னை முதன்மை செசன்ஸ் நீதிமன்றத்தில் -நீதிபதி ஏ.ராமமூர்த்தி முன்பாக புலனாய்வுப் போலீசார் தாக்கல் செய்தார்கள். அவையாவன:-

★ 28 கிலோ தங்க நகைகள், (மதிப்பு 3.5 கோடி ரூபாய்)

★ 800 கிலோ வெள்ளி, (மதிப்பு 40 லட்சம் ரூபாய்)

★ 10,500 சேலைகள், (90 லட்ச ரூபாய் மதிப்பு)

★ 750 ஜோடி காலணிகள் (2.25 லட்ச ரூபாய் மதிப்பு)

★ 25 கோடி ரூபாய்க்கு சொத்துக்கள் வாங்கியதற்கான ஆவணங்கள்.

★ 70 சொத்துக்கள் வாங்கப்பட்டதற்கான ஆவணங்கள்.

★ 91 விலை உயர்ந்த கைக்கடிகாரங்கள் (7.61 லட்ச ரூபாய் மதிப்பு)

★ 13.2 லட்ச ரூபாய் மதிப்புள்ள 44 குளிர்சாதன இயந்திரங்கள்.

★ 40 லட்ச ரூபாய் மதிப்புள்ள 19 கார்கள்.

★ 3 வெள்ளித் தட்டுகள்

★ 1 லட்சத்து 65 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பணம்.

வீட்டைச் சோதனையிடும்போது தனது செயலாளர் வி.பாஸ்கர், தனி உதவியாளர் விஜயன் ஆகியோர் உடனிருக்க வேண்டுமென்று ஜெயலலிதா எழுதிக் கொடுத்தார். அதன்படி **7.12.1996** அன்று போயஸ் தோட்டத்தில் வி.பாஸ்கர், மற்றும் ஜெயலலிதாவின் தாய் வழி சித்தி திருமதி ஜெயலட்சுமி கண்ணன் ஆகியோர் முன்னிலையிலும் - ஐதராபாத் பண்ணையில் விஜயன், சேதுராமன் ஆகியோர்



எம்.ஜி.ஆர். ஜானகி மகளிர் கல்லூரி திறப்பு விழா

முன்னிலையிலும் தொடங்கியது. சோதனைக்குப் பின்னர் பட்டியல் தயாரிக்கப்பட்டு, அவற்றில் அனைவரது கையெழுத்துக்களும் பெறப்பட்டன.

வருமானத்தை மீறி அதிக அளவில் சொத்து சேர்த்துள்ளதாக ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோருக்கு எதிராக லஞ்ச ஒழிப்புத்துறை இயக்குநரகம் வழக்கு தொடர்ந்திருந்தது. அவர்களது மனுவை ஏற்றுக்கொண்ட நீதிபதி **டேவிட் கிறிஸ்டியான்** 5.2.1997 அன்று ஜெயலலிதா, சசிகலா ஆகியோர் தொடர்புள்ள 43 கோடி ரூபாய் மதிப்புள்ள 39 சொத்துக்களைத் தற்காலிகமாக முடக்கி வைக்க உத்தரவிட்டார்.

ஜெயலலிதா வீடு சோதனை இடப்பட்டது பற்றிய செய்திகளை வெளியிட பத்திரிகைகளுக்கு தடை விதிக்க வேண்டுமென்று ஜெயலலிதா சார்பில் சென்னை உயர்நீதி மன்றத்திலே தாக்கல் செய்யப்பட்ட வழக்கை நீதிபதி **ஜே.கனகராஜ்**- ''பத்திரிகை சுதந்திரத்தில் நீதி மன்றம் தலையிட விரும்பவில்லை'' என்று கூறி தள்ளுபடி செய்தார்.

ஜெயலலிதாவின் ஜாமீன் மனுக்கள் (நிலக்கரி இறக்குமதி-வருமானத்துக்கு அதிகமான சொத்து) மீதான விசாரணை 2.1.1997 அன்று சென்னை உயர்நீதி மன்றத்தில் நடைபெற்றது. அப்போது ஜெயலலிதாவை விடுவிக்கக் கோரி நீதி மன்ற நடவடிக்கைகளை அ.தி.மு.கவினர் மோசமாக விமர்சனம் செய்திருப்பதை நீதிபதியின் கவனத்துக்கு அரசு வழக்கறிஞர் **நடராஜன்** அவர்கள் கொண்டு சென்றார். ''ஜெயலலிதாவை வெளியே விடவில்லையெனில் ரத்த வெள்ளம் ஓடும்'' என்றும், ''ஆளுங்கட்சியின் கைப்பாவையாகப் புலனாய்வுத் துறையினரும், அரசு வழக்கறிஞரும் செயல்படுகின்றார்கள்'' என்றும் அ.தி.மு.க.வினர் செய்த விமர்சனங்களையெல்லாம் ஆதாரமாக அவர் எடுத்துக் காட்டினார்.

அப்போது நீதிபதி குறுக்கிட்டு, ''ஒருபெரிய கட்சியின் பொதுச் செயலாளராக ஜெயலலிதா செயல்படுகிறார்,



வாகன உதிரி பாகங்கள் தயாரிக்கும் கொரிய நிறுவனத்துடன் ஒப்பந்தம்!

தொண்டர்களை அவர் கட்டுப்படுத்த வேண்டும்- ஜாமீனில் விட வேண்டும் என உண்ணாவிரதம் இருந்தால் நீதி மன்றம் செயல்படுவதன் பயன் என்ன? இத்தகைய செயல்கள் மிகவும் வேதனை தருகின்றன'' என்றார்.

இறுதியாக 3.1.1997 அன்று 28 நாட்கள் சிறைக்குப் பிறகு ஜெயலலிதாவை சென்னை உயர்நீதி மன்றம் ஜாமீனில் விடுதலை செய்தது. நிபந்தனையாக ''விசாரணைக்கு அழைக்கும்போது வரவேண்டும்- நீதிமன்ற உத்தரவு இல்லாமல் சென்னையை விட்டு வெளியே செல்லக்கூடாது- சாட்சிகளைக் கலைக்கக் கூடாது- புலனாய்வைத் தடுக்கக் கூடாது-சட்டத்தின் செயல்பாடுகளைக் குறித்து நேரடியாகவோ, மறைமுகமாகவோ விமர்ச்சிக்கக் கூடாது'' என்று நீதிபதி கூறினார்.

இது குறித்து செய்தியாளர் என்னிடம் கருத்து கேட்டபோது ''முன் ஜாமீன் கேட்டு சிறைக்குப் போனார்-இப்போது நிபந்தனை ஜாமீனில் வெளியே வந்திருக்கிறார்'' என்று கூறினேன்.


கழக ஆட்சிக் காலத்தில் ஜெயலலிதாவின் கைது படலம் இவ்வாறு முடிவடைந்தது. இதற்கிடையில் 10.12.1996 அன்று சென்னையை அடுத்த இருங்காட்டுக் கோட்டையில், 2,450 கோடி ரூபாய் முதலீட்டில் தொடங்கப்பட்ட ஹூண்டாய் புதிய கார் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டும் விழாவிலே நானும், மத்திய தொழில் துறை அமைச்சராக இருந்த முரசொலி மாறனும், மத்திய நிதி அமைச்சராக இருந்த ப.சிதம்பரமும் கலந்து கொண்டோம்.

தி.மு.கழக அரசு பொறுப்பேற்ற போதெல்லாம் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியைப் பெருக்க

வேண்டுமென்ற எண்ணத்தோடு ஒவ்வொரு முறையும் செயல்பட்டது என்பதை பல்வேறு தொழிற் சாலைகளையும் தொழில் வளாகங்களையும் எடுத்துக் காட்டி விளக்கிட முடியும். அந்த வரிசையில் 96 ஆம் ஆண்டு நான்காம் முறையாக நான் ஆட்சிக்கு வந்தபோது தொடங்கப் பட்ட அந்தத் தொழிற்சாலைதான் இன்றளவும் சிறப்பாக இயங்கி வருகின்ற ஹூண்டாய் தொழிற்சாலை. ஆண்டு ஒன்றுக்கு தொடக்கத்தில் ஒரு லட்சம் கார்களையும், இரண்டாவது கட்டம் தொடங்கிய பிறகு, ஆண்டு ஒன்றுக்கு இரண்டு இலட்சம் கார்களையும் தயாரிக்கக்கூடிய அளவிற்கு அந்தத் தொழிற்சாலை தொடங்கப்பட்டு இயங்கி வருகிறது.

96ஆம் ஆண்டு பதவிக்கு வந்த பிறகு 550 கோடி ரூபாய் முதலீட்டில் இங்கிலாந்து நாட்டின் பில்கிங்டன் நிறுவனத்தின் மிதக்கும் கண்ணாடி தொழிற்சாலை- மறைமலைநகரில் ஜப்பானைச் சேர்ந்த பியூஜிகுரா நிறுவனம் ஏற்படுத்திய பைபர் கேபிள் தொழிற்சாலை - 350 கோடி ரூபாய் முதலீட்டில் கொரியாவைச் சேர்ந்த கும்ஹா டயர் கம்பெனி ஏற்படுத்தும் ரீ டயல் டயர் தொழிற்சாலை என்று இந்தப் பட்டியல் அந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் தொடர்ந்து கொண்டே வந்தது. குறிப்பாக திராவிட முன்னேற்றக்கழகம் எவ்வெப்போ தெல்லாம் ஆட்சிக்கு தமிழகத்திலே வருகிறதோ அப்போ தெல்லாம் தமிழகத்தில் தொழில் வளம் பூத்துக் குலுங்கியது.

1996 ஆம் ஆண்டுக்கு முன்பு நடைபெற்ற அ.தி.மு.க.ஆட்சியில் தமிழ்நாட்டின் தொழில்துறை எப்படிப்பட்ட பின்னடைவுகளை எல்லாம் சந்திக்க நேர்ந்தது- தொழில்துறை எப்படி அடியோடு நாசமாகிப் போனது என்பதை, அந்தக் காலத்திலேயே, ''பிசினஸ் இந்தியா'' என்ற ஒரு ஆங்கிலப் பத்திரிகையில் 1994 ஆம் ஆண்டு வெளிவந்த ஒரு கட்டுரையில், ''சென்னையைச் சார்ந்த தொழில் அதிபர் சொல்வது எனக் குறிப்பிட்டு குப்பன், சுப்பன், முனியனை எல்லாம் நீங்கள் தாஜா செய்ய வேண்டிய அவசியம் இல்லை. மூலவிக்கிரகத்தை-ஜெயலலிதாவை தாஜா செய்து விட்டாலே போதும்-உங்களுடைய நலன்கள் பாதுகாக்கப்படும்.



மாதம் ஒரே ஒரு ரூபாய் சம்பளத்தில், நகைக்கடையாக நடமாடிய சகோதரிகள்!

அதிலிருந்து தவறி விட்டாலோ உங்களுடைய வாழ்க்கை முழுவதுமே கூட குழப்பம்தான். ஜெயலலிதாவின் நிர்மூலமான குணாம்சங்கள் பல பெரிய தொழிலகங்களை வரவிடாமலேயே செய்து விட்டன'' என்று அந்த ஆட்சியின் தொழில்துறை அலங்கோலத்தை விமர்சித்து விளக்கியுள்ளது. இன்னும் இது போன்ற ஏராளமான சான்றுகள் அ.தி.மு.க. ஆட்சியின் தொழில் வளர்ச்சிக்கு(?) இருந்த போதிலும், ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதைப் போல இது ஒன்றை மட்டும் எடுத்துக் காட்டியுள்ளேன்.

1996,மே மாதம் கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னர், தொழில் முன்னேற்றத்திற்கு முன்னுரிமையும், முக்கியத்துவமும் அளித்திட முடிவு செய்யப்பட்டது. இந்தியாவின் தொழில் மயமான மாநிலம் என்ற பெருமையை மீண்டும் அடைதல்-இந்தியா மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் விரும்பும் இடமாகத் தமிழ்நாட்டை உருவாக்குதல்-தொழில் முனைவோருக்கு உலகத் தரம் வாய்ந்த அடிப்படை வசதிகளைத் திட்டமிட்டு ஏற்படுத்துதல்-தொழில் முதலீடுகளை ஊக்குவிக்க விதிகள் மற்றும் நடைமுறைகளை எளிமையாக்குதல் - முதலீட்டாளர்கள் விரும்பும் ஒளிவுமறை

வில்லாத நடைமுறையைப் பின்பற்றுதல்-மாநிலத்தில் உள்ள அளப்பரிய மனித சக்தியை உகந்தவாறு பயன்படுத்துதல்-என்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு புதிய தொழில் கொள்கை ஒன்றை வகுத்து அமல்படுத்த முற்பட்டது.

தமிழகத்தின் தொழில் வரலாற்றில், ஒரே இடத்தில் பல தொழில்கள் உருவாவதற்கு வகை செய்யும் தொழில் வளாகங்களை முதன்முதல் அமைத்த பெருமை கழக அரசிற்குத்தான் உண்டு. இதற்காக 1971 ஆம் ஆண்டில் கழக அரசு, தமிழகத்தில் "சிப்காட்" என்னும் தமிழ்நாடு தொழில் மேம்பாட்டு நிறுவனத்தை (State Industrial Promotion Corporation of Tamil Nadu) உருவாக்கியது.

★ அதன்மூலம், 1973 ஆம் ஆண்டில் இராணிப் பேட்டையில் 729.78 ஏக்கர் பரப்பில் ஒரு தொழில் வளாகம் உருவாக்கப்பட்டு, அங்கே 168 கோடி ரூபாய் முதலீட்டில் 107 புதிய தொழில்கள் அப்போதே தொடங்கப்பட்டன.

★ 1974 ஆம் ஆண்டில், ஓசூரில் 1236 ஏக்கர் நிலப்பரப்பில் இரண்டாவது தொழில் வளாகம் அமைக்கப்பட்டு, அதில் 500 கோடி ரூபாய் முதலீட்டில் 186 தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டன. இந்த இரண்டு தொழில் வளாகங்களிலும் ஏறத்தாழ 20 ஆயிரம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் அளிக்கப்பட்டன.

★ 1989 ஆம் ஆண்டில் கழக ஆட்சியில் இராணிப் பேட்டையில் இரண்டாம் பிரிவு தொழில் வளாகம் 133 ஏக்கர் நிலப்பரப்பில் உருவாக்கப்பட்டு, அங்கே 99 புதிய தொழில்கள் தொடங்கப்பட்டு 3400 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டது.

★ ஓசூரிலும் இரண்டாம் பிரிவு தொழில் வளாகம் 457 ஏக்கர் நிலப்பரப்பில் 64 புதிய தொழில்களுடன் தொடங்கப்பட்டு, அங்கே ஏறத்தாழ 6 ஆயிரம் இளைஞர்கள் வேலை வாய்ப்பைப் பெற்றனர்.

★ *1996 இல் நான்காவது முறையாக கழக அரசு அமைந்த பின், திருப்பெரும்புதூர், இருங்காட்டுக் கோட்டை, கும்மிடிப்பூண்டி ஏற்றுமதி வளாகம் ஆகிய இடங்களில் சிப்காட் நிறுவனத்தால் புதிய தொழில் வளாகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.*

தமிழகம், குறிப்பாகச் சென்னை மாநகரம் **"இந்தியாவின் டெட்ராய்டு"** என்று சொல்லக் கூடிய அளவிற்கு சென்னையிலும், அதைச் சுற்றியுள்ள பகுதியிலும் பிரம்மாண்டமான கார் தொழிற்சாலைகளும், வாகன உதிரிபாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளும் தொடங்கப்பட்டது தி.மு.கழக ஆட்சிக் காலத்திலேதான். **ஹூண்டாய்** மோட்டார் நிறுவனம்-திருவள்ளூரில் **மிட்சுபிசி லேன்சர்** கார் தொழிற்சாலை-போர்டு மோட்டார் தொழிற்சாலை ஆகியவை இதற்குச் சான்றாகும். லண்டனில் இருந்து வெளிவரும் **"பைனான்சியல் டைம்ஸ்"** என்ற பத்திரிகை, 1997, ஏப்ரல் மாதத்தில் "சென்னை-இந்தியாவின் டெட்ராய்ட்" என்று வர்ணித்தது. மார்க் நிக்கல்சன் என்கிற தலைசிறந்த பத்திரிகையாளர் அந்தப் பத்திரிகையில் 10.4.1997 அன்று "Tamil Nadu Raise Upto achieve car ambitions" எனும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அதில் அவர் "Tamil Nadu's car industry is perhaps the most spectacular result of the race between states to attract foreign investment and develop new industries" அதாவது, "வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்து, புதிய





தினமணி

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

மலர் 63 இதழ் 86 சனிக்கிழமை 7-12-1996
நாது கார்த்திகை 22 ஜிஞ்ஞி 1417 ரஜபு 25

விரக்தியும் ஆத்திரமும் பீறிடும் அறிக்கை

ஜெயலலிதா பல நூறு கோடி சொத்து சேர்த்தது பற்றி "தினமணி" தலையங்கம்

தொழில்களை உருவாக்கி வளர்ப்பதில் மாநிலங்களுக்கு இடையேயான போட்டியில், தமிழ்நாட்டின் கார் தொழில் வியக்கத்தக்க முன்னேற்றத்தைக் கண்டுள்ளது'' என்று குறிப்பிட்டிருந்தார்.

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி *1994-95*ல் *8.7* சதவீத அளவிற்கு இருந்தது. கழக அரசு எடுத்த தொடர்ச்சியான தொழில் முனைவோர் நேயமிக்க நடவடிக்கைகளின் காரணமாக, ***1999-2000*** ஆண்டில் தொழில் வளர்ச்சி *15.02* சதவீதம் என்ற அளவிற்கு உயர்ந்தது.

''இன்டஸ்ட்ரியல் ஹெரால்ட்'' *(ஏப்ரல் 2000)* என்ற ஆங்கில நாளிதழ், ''வாகன உற்பத்தி-வாகன உதிரி பாகங்கள் உற்பத்திப் பிரிவுகள் அமைப்பதில் மிகுந்த கவனம் செலுத்திடும் சென்னை மாநகரம் இந்தியாவின் டெட்ராய்ட்'' எனக் குறிப்பிட்டு பாராட்டியுள்ளது.

7.2.2000 நாளிட்ட ''எகனாமிக் டைம்ஸ்'' நாளிதழில், ''இந்தியாவில் பெரிதும் தொழில்மயப் படுத்தப்பட்ட மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு விளங்குகிறது. நாட்டின் ஏற்றுமதிக்கு தமிழ்நாட்டின் பங்களிப்பு மிகவும் பெரியதாகும்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

1996-2001 ஆம் ஆண்டுகளில் தமிழகத்தில் தொழில் வளர்ச்சிக்காக எந்த அளவிற்கு தி.மு.கழக அரசு பாடுபட்டதோ, அதே அளவிற்குத்தான் *2006* ஆம் ஆண்டு மீண்டும் பொறுப்புக்கு வந்த பிறகு தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கான அத்தனை முயற்சிகளிலும் கழக அரசு ஈடுபட்டுள்ளது.

1996, டிசம்பர் 10 ஆம் தேதியன்று ஹூண்டாய் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டு விழா என்றால், அதற்கு முந்தைய நாள் 9ஆம் தேதியன்று அருமை நண்பர் எம்.ஜி.ஆர். பெயரால் அமைந்த **"டாக்டர் எம்.ஜி.ஆர்-ஜானகி அம்மையார் பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி"** யின் திறப்புவிழாவிலே கலந்து கொண்டேன். அப்போது கல்வி அமைச்சராக இருந்த **பேராசிரியர்** அவர்கள் அந்த விழாவிற்கு தலைமை வகித்தார். அந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டபோது என் மனதில் எத்தனையோ நினைவுகள் நிழலாடின. எந்த இடத்தில் நானும், எம்.ஜி.ஆர் அவர்களும் மணிக்கணக்கிலே அமர்ந்து பேசினோமோ-எந்த இடத்தில் அவரும் நானும் கலைப் பணிகளை ஒன்றாக இருந்து ஆற்றினோமோ-அதே இடத்தில் எம்.ஜி.ஆருடைய பெயராலும், அவரது துணைவியார் பெயராலும் மகளிர் கல்லூரியைத் தொடங்கி வைத்தபோது பழைய எண்ணங்கள் எல்லாம் தோன்றின. அந்த நினைவுகளை எல்லாம் அந்த விழாவிலே நான் உரையாற்றும்போது எடுத்துரைத்தேன்.

தொடர்ந்து 11.12.1996 அன்று சிங்காரவேலர் பெயரில் அமைந்த சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகக்கட்டிடத்தை அமைச்சர்கள் **பேராசிரியர், ஆர்க்காடு வீராசாமி, நாஞ்சிலார், துரைமுருகன்,**



சோதனையில் சிக்கிய
ஜெயலலிதாவின் ஹைதராபாத்
மாளிகைகளில் ஒன்று!



ஊழல் குற்றங்களுக்காக கைது செய்யப்பட்ட ஜெயலலிதா!

என். வி. என். சோமு, சற்குணப் பாண்டியன் மற்றும் சென்னை மாநகர மேயர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொள்ள திறந்து வைத்தேன்.

இதனைக் கூறும்போது அந்தக் கட்டிடம் பற்றிய வரலாற்றினைக் கூறலாமென நினைக்கிறேன். 1793ஆம் ஆண்டில் கட்டப்பட்ட கட்டிடம் புதுப்பிக்கப்பட்டது என்பதைவிட, முழுமையாகவே புதிதாக எழுப்பப்பட்டு திறப்பு விழா நடைபெற்றது.

அந்தக் கட்டிடத்தை இடித்து விட்டு புதிதாகக் கட்டப்பட வேண்டுமென்று தமிழக அரசின் சார்பில் ஆணை பிறப்பிக்கப்பட்ட நாள் 13.2.1990. ஆம், அப்போதும் தி.மு.கழக ஆட்சிதான். 91ஆம் ஆண்டு தி.மு.கழக ஆட்சி மாறிவிட்ட நிலையில் ஐந்தாண்டு காலம் இருந்த அ.தி.மு.க ஆட்சியில் அந்தப்பணி கிடப்பிலே போடப்பட்டு விட்டது. தொய்வுக்குக் காரணம், அந்தக் கட்டிடத்தை ஆரம்பித்தவரே வந்து திறந்து வைக்க வேண்டுமென்ற எண்ணம்தான். மாவட்ட ஆட்சியருக்குரிய அந்தக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பிறகு, அதற்கு என்ன பெயர் வைப்பதென்று கேட்டு, அப்போது வருவாய்த் துறை அமைச்சராக இருந்த நாஞ்சிலார் அவர்கள் எனக்கொரு கோப்பினை அனுப்பி வைத்திருந்தார். அந்தக் கோபிப்பிலே, ''வில்லியம் பெண்டிங் பிரபு காலத்திலே கட்டப்பட்ட கட்டிடம் அது. அவர் மிகவும் நல்லவர். அவருடைய நிர்வாகம், நேர்மைத் திறன் போற்று தற்குரியது.


காவல் துறை வாகனத்தில்

எனவே அவருடைய பெயரையே அந்தக் கட்டிடத்திற்கு வைத்து விடலாமா?'' என்று நாஞ் சிலார் எழுதியிருந்தார்.

வில்லியம் பெண்டிங் அவர்கள்மீது நாஞ்சிலார் வைத்திருந்த அன்பைப் போல் நானும் அன்பு கொண்டவன்தான். அதிலே எந்தக் கருத்து மாறுபாடும் எனக்கில்லை. ஆனால் அந்தக் கட்டிடத்திற்கு ''பெண்டிங் பில்டிங்'' என்று பெயர் அமைந்து விடுமேயானால்- அதன் பின்னர் அந்த அலுவலகத்திற்கு அனுப்பப்படும் மனுக்கள் எல்லாம் ''பெண்டிங்''காக வைக்கப்பட்டு விடுமோ என்ற சந்தேகம் ஏற்படும். ''பெண்டிங் பில்டிங்கிற்கா? அவ்வளவுதான், பதில் ''பெண்டிங்'' காகத்தான் வரும்'' என்று கிண்டல் செய்வார்கள். எனவே அந்தப் பகுதியிலே அந்தக் கட்டிடம் அமைந்துள்ள வட்டாரத்திலே- தொழிலாளர்களின் துணைவனாக விளங்கிய- சட்டமேதையாக உலவிய பகுத்தறிவுப் பாசறையாக ஒளிவிட்ட சிந்தனைச் சிற்பி சிங்காரவேலருடைய பெயரை அந்தக் கட்டிடத்திற்கு சூட்டலாம் என்றும்-அந்தக் கட்டிடத்தின் வேறொரு புறத்திலே ஒரு சுவரிலே வில்லியம் பெண்டிங் பிரபுவினுடைய சிறப்பியல்புகளை எல்லாம் கல்வெட்டாக எழுதி வைக்கலாம் என்றும் நான் கூறி, அதன் பின்னர் அந்தக் கட்டிடத்திற்கு சிங்காரவேலர் மாளிகை என்று பெயர் சூட்டப்பட்டு, இன்றளவும் அது நல்ல முறையிலே இயங்கி வருகிறது.

அந்த மாளிகை இருந்த இடத்திலே தான் 1817 ஆம் ஆண்டு முதல் 1862 ஆம் ஆண்டு வரையில் நீதிமன்றமும்

இயங்கிவந்தது. 1862 முதல் 1892 வரையில் உயர் நீதிமன்றமாகவும் அந்தக் கட்டிடம் பயன்படுத்தப்பட்டது. 1892 க்கு பிறகு தான் மாவட்ட ஆட்சியர் அலுவலகமாக மாறியது. அந்தக் கட்டிடத்திற்கு சிங்காரவேலர் பெயரை நான் சூட்டினேன் என்ற பெருமை எனக்கிருந்த போதிலும்-அந்தப் பெருமைக்குரிய சிங்காரவேலர் அவர்கள் மறைந்தபோது மூதறிஞர் ராஜாஜி ''ஒரு யோக்கியரை இழந்து விட்டோம்'' என்று கூறியதும்-அந்த யோக்கியருடைய பெயரால் அமைந்துள்ள கட்டிடத்தில் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் இயங்கி வருவதும் மகிழ்ச்சிக்குரியதுதானே?

17. நடுநிலை தவறாத நல்லாட்சி!

முரசொலி அறக்கட்டளை சார்பில் 1997-ஆம் ஆண்டுக்கான விருது பெற்ற கலைஞர்கள்.

தமிழ்ச் சான்றோர்களையும் ஆன்றோர்களையும் தமிழக அரசின் சார்பில் கௌரவிக்கும் வகையில் ஆண்டுதோறும் விருதுகள், பொற்கிழிகள் வழங்கப்பட்டு வருகின்றன. தி.மு.கழக அரசு எவ்வெப்போதெல்லாம் பொறுப்பிலே இருக்கிறதோ, அப்போதெல்லாம் இத்தகைய விழாக்கள் முறையாக நடத்தப்பட்டு, சான்றோர் பெருமக்கள் கௌரவிக்கப்படுகிறார்கள். அந்த வரிசையில், 96 ஆம் ஆண்டு டிசம்பர் 25 ஆம் தேதியன்று, தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் **தந்தை பெரியார், திரு.வி.க. பாவேந்தர்** ஆகியோர் பெயரிலான விருதுகள் வழங்கும் விழா சென்னையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

96ஆம் ஆண்டு தந்தை பெரியார் விருது **திருவாரூர் தங்கராஜ்** அவர்களுக்கும், திரு.வி.க.விருது பேராசிரியர் **முனைவர் மா.நன்னன்** அவர்களுக்கும், பாவேந்தர் விருது **கவிப்பேரரசு வைரமுத்து** அவர்களுக்கும் வழங்கப்பட்டது. பொற்கிழியாக வைரமுத்துவிற்கு அளிக்கப்பட்ட 20 ஆயிரம் ரூபாயுடன் கையிலிருந்த 5 ஆயிரம் ரூபாயைச் சேர்ந்து, முதலமைச்சர் என்ற முறையில் என்னிடமே அதனை வெள்ள நிவாரண நிதிக்காக அளித்து விட்டார்.

பெரியார் விருதினைப் பெற்ற திருவாரூர் தங்கராசு தனக்கு அளிக்கப்பட்ட 20 ஆயிரம் ரூபாயைத் திருச்சியிலே உள்ள பெரியார் குடிலுக்கு நன்கொடையாக வழங்குவதாக அறிவித்தார்.

அரசின் சார்பில் இவ்வாறு விருதுகள் வழங்குவதைப் போலவே, **முரசொலி அறக்கட்டளை** சார்பில் ஒவ்வொரு ஆண்டும், தமிழ்மொழி, இலக்கியம், கலை, கலாச்சாரம் ஆகியவற்றில் சிறந்தோரைத் தேர்ந்தெடுத்து, முரசொலி மற்றும் முரசொலி அறக்கட்டளை நிறுவனர் என்ற முறையில் என் பெயரால் விருதும், ஒரு இலட்சம் ரூபாய் பொற்கிழியும் வழங்குவதென்று **முரசொலி மாறன்** உயிரோடு இருந்த போதே முடிவெடுத்து, அதன்படி ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி 1997 ஆம் ஆண்டு ஜனவரி திங்களையொட்டி, சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், பழம்பெரும் திரைப்பட இயக்குநர் **கிருஷ்ணன்(பஞ்சு)** அவர்களுக்கும், பிரபல தமிழறிஞர் **கவிக்கோ அப்துல் ரகுமான்** அவர்களுக்கும், கழகப் பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்கள் தலைமையில் **கலைஞர் விருதினையும்,** தலா ஒரு இலட்சம் ரூபாய்க்கான பொற்கிழியினையும் வழங்கினேன்.

1997 ஆம் ஆண்டு ஜனவரி 14ஆம் தேதியன்று தமிழக அரசின் சார்பில் திருவள்ளுவர் திருநாள் கலைவாணர் அரங்கத்தில் கொண்டாடப்பட்டது. ஆண்டுதோறும் நடத்தப்படுகின்ற விழாதானே, இந்த ஆண்டை மட்டும் ஏன் சிறப்பாக குறிப்பிட வேண்டுமென்று நினைக்கலாம். அதற்கொரு காரணம் உண்டு. அந்த ஆண்டு நான் உரையாற்றும்போது, ''திருவள்ளுவர் விழாவைக் கொண்டாடுகின்ற இந்த நாள், தமிழர்கள் பொங்கல் திருநாளைக் கொண்டாடுகின்ற நாள். பொங்கல் திருநாள் கொண்டாடுகின்ற அந்த நாள்தான் தமிழர்களுடைய ஆண்டு தொடக்க நாள் என்ற குறிப்பை நானல்ல-இங்கே வீற்றிருக்கின்றவர்களல்ல-கடந்த காலத்தில் பல ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்ச் சான்றோர், ஆன்றோர் பலர் கூடிக் கலந்து விவாதித்து, தமிழர்கள் திருவள்ளுவர் ஆண்டைத்தான் தங்களுடைய ஆண்டுக் கணக்காகக் கொள்ள வேண்டும். பொங்கல் திருநாள் என்பது தமிழர் திருநாள்-தமிழர்களுடைய புத்தாண்டுத் தொடக்க நாள் என்று அறிவித்திருக்கின்றார்கள். ''அதை ஏன் நடைமுறைப்படுத்தவில்லை?'' என்று நீங்கள்



1996ஆம் ஆண்டுக்கான பாவேந்தர் விருதினைப் பெறும் கவிப்பேரரசு வைரமுத்து

கேட்கக் கூடும். படிப்படியாகச் செய்யப்பட வேண்டிய செயல்களில் இதுவும் ஒன்று. படிப்படியாக என்றால் அடுத்த ஆண்டா? அதற்கடுத்த ஆண்டா? இன்றைக்கு விதைக்கப் படுகின்ற இந்த விதை முளைத்து செடியாகி, மரமாகி, கிளைகள் விட்டு தருவாக செயல்படக்கூடிய காலம் வர வேண்டுமென்பதற்காகத் தான் இந்த விதையை நான் இங்கே விதைக்கின்றேன். இது நான் தயாரித்த விதையல்ல- பேராசிரியர் தயாரித்த விதையல்ல-இந்த விதை பல தமிழ்ச் சான்றோர்களும், ஆன்றோர்களும் ஏற்கனவே தயாரித்த விதை, இதற்கு மேல் இதை வைத்துக் கொண்டே இருந்தால் விதை வீணாகி விடும் என்பதற்காகத் தான், இந்த நேரம் பார்த்து திருவள்ளுவர் நாளில் தமிழர்கள் தங்களுடைய ஆண்டுத் தொடக்கத்தைக் குறிப்பிடுகின்ற ஒரு பொன்னாள் வந்திட வேண்டுமென்ற என்னுடைய ஆசையை இந்த விழாவில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று குறிப்பிட்டேன்.

1997 ஆம் ஆண்டு நான் தெரிவித்த ஆசை-விருப்பம் நிறைவேற பத்தாண்டுகளாகிவிட்டது. ஆம், 2008 ஆம் ஆண்டு தான் 97 ஆம் ஆண்டு நான் தெரிவித்த கருத்து நடைமுறைக்கு வந்துள்ளது. தமிழக அரசின் கொள்கை அறிவிப்பாக ஆளுநர் அவர்கள் 23.1.2008 அன்று ஆற்றிய உரையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

''பெரும் புலவரும், தனித் தமிழ் இலக்கியத்தைத் தோற்று வித்தவருமான மறைமலை அடிகளார் தலைமையில்



முனைவர் மா.நன்னன் திரு.வி.க. விருதினைப் பெறுகிறார்

ஐநூறுக்கும் மேற்பட்ட புலவர் பெரு மக்கள், 1921 ஆம் ஆண்டு சென்னை, பச்சையப்பன் கல்லூரியில் ஒன்று கூடி, தமிழார்களுக் கென்று ஒரு "தனி ஆண்டு" தேவை என்று கருதி, அய்யன் திருவள்ளுவர் பெயரில் தொடர் ஆண்டு ஒன்றினைப் பின்பற்றுவதென்றும், அதையே **"தமிழ் ஆண்டு"** எனக் கொள்வதென்றும், திருவள்ளுவர் பிறந்த ஆண்டு கி.மு.31 என்றும் முடிவெடுத்தார்கள். அந்தக் கருத்தினை 37 ஆண்டுகளுக்கு முன்பே மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஏற்றுக்கொண்டு, 1971 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு நாட்குறிப்பிலும் 1972 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசிதழிலும் நடைமுறைப்படுத்திட ஆணை பிறப்பித்தார். திருவள்ளுவர் ஆண்டு பிறக்கும் தைத்திங்கள் முதல் நாள்தான் தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் என்பது ஒட்டுமொத்தமாக எல்லாத் தமிழ் அறிஞர்களும் ஒப்புக்கொண்டுள்ள உண்மை என்பதால், கைத் திங்கள் முதல் நாளையே தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் என அறிவித்து நடைமுறைப் படுத்திட இந்த அரசு முடிவு செய்துள்ளது."

ஆளுநர் உரையில் கொள்கை அறிவிப்பாக இதைச் செய்ததோடு விட்டு விடாமல், அரசாணையாக இதை அறிவித்தால் மட்டும் போதாது எனக்கருதி 1.2.2008 அன்று தமிழகச் சட்டப்பேரவையிலே இதனை அரசினர் மசோதாவாகக் கொண்டு வந்து சட்டமாகவே ஒருமனதாக நிறைவேற்றியிருக்கிறோம்.

★ ★ ★

1996 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் புதுக்கோட்டை தொகுதியில் தேர்தலில் வெற்றி பெற்ற **பெரியண்ணன்** ஒரு சில மாதங்களிலே மறைந்துவிட்ட காரணத்தினால், அந்தத் தொகுதியில் இடைத்தேர்தல் நடப்பதற்கான தேதி 8.2.1997

என்று அறிவிக்கப்பட்டது. தி.மு.கழக மாவட்டச் செயலாளர் பெரியண்ணன், கழக வேட்பாளராக த.மா.கா. ஆதரவுடன் போட்டியிட்ட போது, 79.205 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். அ.தி.மு.க.ஆதரவுடன் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் சுவாமிநாதன் 36,422 வாக்குகளையும், ம.தி.மு.க. வேட்பாளர் வி.என்.மணி 14,165 வாக்குகளையும் பெற்றுத் தோல்வியடைந்தனர். அ.தி.மு.க. வினர் மீது, தி.மு.கழக ஆட்சியில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் சரியா அல்லவா என்பதைப் பற்றி பொதுமக்களே முடிவு செய்யக் கிடைத்த வாய்ப்பாக அந்த இடைத் தேர்தல் ஏடுகளால் விமர்சிக்கப்பட்டது. மேலும் தி.மு.க. அரசு பொறுப்பேற்ற பிறகு நடைபெறும் முதல் இடைத்தேர்தல் என்ற முறையில் அந்தத் தேர்தல் மக்களால் பெரிதும் எதிர் பார்க்கப்பட்டது.

97 ஆம் ஆண்டு பிப்ரவரி 1 மற்றும் 2ஆம் தேதிகளிலும், பிறகு 4,5 மற்றும் 6ஆம் தேதிகளிலும் புதுக்கோட்டையில் முகாமிட்டு இடைத்தேர்தல் பிரச்சாரத்தில் நானும் மக்கள் தலைவர் மூப்பனார் அவர்களும் ஈடுபட்டோம். இம்முறை கழக வேட்பாளராக நிறுத்தப்பட்ட **மாரிஅய்யாவை** ஆதரித்து ஒவ்வொரு கிராமமாகச் சென்று வாக்குகளைச் சேகரிக்கும் பணியிலே நான் ஈடுபட்டேன்.

11ஆம் தேதி புதுக்கோட்டையில் வாக்குகள் எண்ணப்பட்டு, அந்தத் தொகுதியை தி.மு.க. மீண்டும் கைப்பற்றியது. கழகக் கூட்டணி வேட்பாளர் மாரிஅய்யா 12,024 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். ''கழக அரசின் எட்டு மாத கால சாதனைகளுக்கு மக்கள் அளித்த தீர்ப்பு!'' என ஏடுகள் அதனை பாராட்டி எழுதின.

குறிப்பாக **இந்தியன் எக்ஸ்பிரஸ்** நாளேடு ''புதுக்கோட்டையில் தி.மு.கழக அணிக்குக் கிடைத்த இடைத் தேர்தல் வெற்றி, தி.மு.கழக அரசு ஜெயலலிதாமீது எடுத்த ஊழல் ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு மக்கள் அளித்த அங்கீகாரம்!'' என்று எழுதியது.

★ ★ ★



தந்தை பெரியார் விருதினைப் பெறும் திருவாரூர் தங்கராசு

இதற்கிடையில், 1997 ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் தமிழகத்தின் புதிய ஆளுநராக நீதிபதி **பாத்திமா பீவி** நியமிக்கப்பட்டார். உச்ச நீதிமன்ற நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்ற அவர் தேசிய மனித உரிமை கமிஷன் உறுப்பினராக இருந்தார். அந்தக் காலக்கட்டத்தில் நான் டெல்லிக்கு ஒரு கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகச் சென்றிருந்தேன். அப்போது தம்பி **முரசொலி மாறன்** என்னிடம் பாத்திமா பீவியைப் பற்றிக் கூறி, என்னைச் சந்திக்க விரும்புவதாகத் தெரிவித்தார். நானும் அவரைச் சந்தித்தேன். மகளிருக்கு முன் உரிமை எதிலும் வழங்கப்பட வேண்டும் என்பதை முக்கிய கொள்கையாகக் கொண்ட நான், தமிழக ஆளுநராக முதன் முதலாக ஒரு பெண் வருவது சிறப்பாக இருக்குமென்று எண்ணினேன். மேலும், உச்சநீதிமன்றத்தில் நீதியரசராக இருந்து ஓய்வு பெற்ற ஒருவர் ஆளுநராகப் பொறுப்பேற்றதும் அதுதான் முதல் முறை. இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் ஆளுநராகப் பொறுப்பேற்றதும் அதுதான் முதல் முறை.

தமிழக ஆளுநராக இருந்த டாக்டர் **சென்னா ரெட்டியின்** திடீர் மறைவு காரணத்தால் பாத்திமா பீவி தமிழக ஆளுநராக நியமிக்கப்பட்டார். 24.1.1997 அன்று பாத்திமா பீவி

தமிழகத்தின் 16 வது ஆளுநராகப் பொறுப்பேற்றார். உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருந்த **கே.ஏ.சுவாமி** பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

தமிழக முதல் அமைச்சராக இருந்த என்னுடைய பரிந்துரையோடு நியமிக்கப்பட்டு பொறுப்பேற்றுக் கொண்ட அவரை **''அரசியல் வாடை இல்லாத ஆளுநர்''** என்று 27.1.1997 அன்றைய தலையங்கத்தில் ''தினமணி'' எழுதி வரவேற்றது.

ஆனால் 2001 ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் முடிவுக்குப் பிறகு அதே ஆளுநரைப்பற்றி தமிழக ஏடுகள் எல்லாம் ஆளுநரின் செயல்பாடுகள் எந்த அளவிற்கு முறை தவறியது என்பதைப் பற்றி எழுதியதை இந்தத் தொடரில் 2001 ஆம் ஆண்டு பற்றிய என் வரலாற்றை எழுதும்போது விளக்குகிறேன்.

★ ★ ★

திரை உலகச் சேவையில் பாடகர் **எஸ்.பி.பாலசுப்பிர மணியத்தின்** 30 ஆண்டு காலச் சாதனையையும், 39 ஆயிரம் திரைப்பாடல்களைப் பாடியதையும் பாராட்டி, 9.2.1997 அன்று சென்னையில் நடைபெற்ற விழாவில் நான் கலந்து கொண்டு, **''பாடும் நிலா பாலு''** என்ற நூலை வெளியிட்டு வாழ்த்துரை வழங்கினேன். **லதா மங்கேஷ்கர், ஏ.வி.எம்.சரவணன், எம்.எஸ்.விசுவநாதன், கே.பாலச்சந்தர், கமலஹாசன்,**



''முரசொலி'' அறக்கட்டளை சார்பில், கலைஞர் விருதுடன் லட்சம் ரூபாய் பொற்கிழி பெறும் இயக்குநர் கிருஷ்ணன் (பஞ்சு)

வாலி, இளையராஜா, ரஜினிகாந்த்-ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்திப் பேசினர். அந்த விழாவில் உரையாற்றிய ரஜினியும், கமலும் அவரைப் பாராட்டியதைவிட, என்னை அதிக அளவிற்குப் பாராட்டியது என் நினைவிலே உள்ளது. அந்தக் காலத்திலிருந்தே இதுபோன்ற திரைப்பட நிகழ்ச்சிகளுக்கு என்னை அழைப்பதும், அதிலே நான் கலந்து கொள்வதும் இயற்கையான ஒன்று என்றபோதிலும், அப்போதெல்லாம் அதைப் பற்றி யாரும் எதுவும் சொன்னதில்லை. ஆனால் அண்மைக் காலத்தில் ஒருசிலர் நான் திரைப்பட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதைப் பற்றிக் கூட விமர்சனம் செய்திருக்கிறார்கள்.

★ ★ ★

97ஆம் ஆண்டு பிப்ரவரி 21,22 ஆகிய நாட்களில் டெல்லி சென்ற நான் திட்டக்குழுவின் துணைத்தலைவராக அப்போதிருந்த **மதுதண்டவதே** அவர்களையும், உறுப்பினர்களையும் சந்தித்து 97 -98 ஆம் ஆண்டிற்கான திட்டங்களுக்காக 4,334 கோடி ரூபாய்க்கான ஒதுக்கீட்டிற்கு அனுமதி பெற்றேன். அதற்கு முந்தைய ஆண்டினைவிட 17 சதவிகிதம் அது அதிகமாகும் இதைப்பற்றி **"இந்து"** நாளேடு பாராட்டு தெரிவித்திருந்தது.

அமெரிக்காவில் சிகிச்சை பெற்று அப்போது தான் டெல்லி திரும்பியிருந்த முன்னாள் பிரதமர் **வி.பி.சிங்** அவர்களையும் டெல்லியிலே சந்தித்து உடல் நலம் விசாரித்தேன்.

அன்றைய தினம் மாலையில் புதுடெல்லி தமிழ்ச் சங்கப் பொன்விழாவையொட்டி நடைபெற்ற **திருவள்ளுவர் கலையரங்கத் திறப்பு** விழாவிலும் கலந்து கொண்டேன். மத்திய இணை அமைச்சராக இருந்த **எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியம்** அவர்களும் அந்த விழாவில் என்னுடன் பங்கேற்றார். டெல்லி தமிழ்ச் சங்கக் கட்டிட, நிதிக்காக தமிழக அரசின் சார்பில் பத்து இலட்சம் ரூபாய்க்கான காசோலையை அந்த விழாவிலே தமிழ்ச் சங்க நிர்வாகிகளிடம் வழங்கினேன்.

★ ★ ★



கவிக்கோ அப்துல் ரகுமானுக்கு கலைஞர் விருதும் பொற்கிழியும் வழங்கப்படுகிறது.

1957 ஆம் ஆண்டுதான் தி.மு.கழகம் முதன் முதலாக சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட முடிவு செய்தது. அந்தத் தேர்தலில் நாகப்பட்டினம் தொகுதியில்தான் போட்டியிட தீர்மானித்து-அந்தத் தொகுதியிலே உள்ள இடங்களை யெல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு-அண்ணாவிடம் அதனைத் தெரிவிக்கலாம் என்று சென்னை வந்த நேரத்தில் அண்ணா அவர்கள் என்னிடம், ''உன்னைக் குளித்தலை தொகுதியில் நிறுத்தியிருக்கிறேன்'' என்று கூறினார். மறு பேச்சு பேசவில்லை. அந்தத் தேர்தலில் கன்னியாகுமரியிலிருந்து திருச்சிவரை தி.மு.கழகத்தின் சார்பில் நான் ஒருவன்தான் வெற்றி பெற்றேன் என்பதும், அது முதல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல்களில் **1962இல் தஞ்சை தொகுதியிலும், 1967இல் சைதாப்பேட்டை** தொகுதியிலும், **1971இல் அதே சைதாப்பேட்டை** தொகுதியிலும், **1977இல் அண்ணாநகர்** தொகுதியிலும், **1980** இல் மீண்டும் அதே அண்ணா நகர் தொகுதியிலும், **1989இல் துறைமுகம்** தொகுதியிலும், **1991இல்** மீண்டும் **துறைமுகம்** தொகுதியிலும், **1996இல் சேப்பாக்கம்** தொகுதியிலும், 2001இல் மீண்டும் **சேப்பாக்கம்** தொகுதியிலும், 2006இல் மீண்டும் **சேப்பாக்கம்** தொகுதியிலும் என்று **11 தடவைகள்** சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு, ஒருமுறைகூட தோற்காமல், **அனைத்துத் தேர்தல்களிலும் வெற்றி பெற்றவன்** என்ற பெருமையும் எனக்கு உண்டு என்பதை தமிழகம் நன்கறியும்.



திருவள்ளுவர் நாள்தான் தமிழர்களின் ஆண்டுத் தொடக்க நாள்'' என்று அறிவிக்கிறார், ஆளுநர் பர்னாலா

அதுபோலவே வேறு சில பெருமைகளும் எனக்கு உண்டு. தமிழகத்திலே பல முதலமைச்சர்கள் இருந்திருக்கிறார்கள். ஆனால் இதுவரை வந்த முதல் அமைச்சர்களில் **அதிக ஆண்டுகள் முதலமைச்சராகப் பதவி வகித்தவன்** என்ற பெருமை எனக்குத்தான் உண்டு. அது மாத்திரமல்ல; 1976 ஆம் ஆண்டு நெருக்கடி நிலை பிரகடனம் செய்து-ஆட்சி கவிழ்க்கப்பட்டு-என் மீது பல வழக்குகள் தொடுக்கப்பட்டு-கழகத்தினர் 500 க்கு மேற்பட்டவர்கள் மிசா சட்டத்தின் கீழ் சிறையிலே அடைக்கப்பட்ட பிறகு ''நான் **இனிமேல் தமிழ்நாட்டு அரசியலில் மீண்டும் பதவிக்கு வரமுடியாது**'' என்று கூறப்பட்டது. ஆனால் 1989 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் முதல் அமைச்சராக மூன்றாவது முறையாகப் பதவியேற்றேன்.

ஆனால் இரண்டாண்டு காலத்தில் ஏதோவொரு காரணத்தைக் கூறி ஆட்சியைக் கலைத்தார்கள். பிறகும் ''என்னுடைய கதை அவ்வளவுதான்'' என்றார்கள்.

★ ★ ★

1991ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் இந்தியாவின் இளந்தலைவர் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட காரணத்தினால்-கழகத்தின் மீது மாப்பழி சுமத்தப்பட்டதால், தேர்தலில் வெற்றி வாய்ப்பை இழக்க நேரிட்டது. ஆனால் அப்போதும்கூட நான் மட்டும் வெற்றி பெற்றேன். பின்னர் 1996 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தி.மு.க.மகத்தான

வெற்றி பெற்று நான்காவது முறையாக மீண்டும் முதலமைச்சர் பொறுப்பிற்கு வந்தேன். ஐந்தாண்டு கால ஆட்சிக்குப் பிறகு, 2001 ஆம் ஆண்டு தேர்தலில் தி.மு.கழகத்தை எதிர்த்து மிகப்பெரிய கூட்டணி அமைக்கப்பட்டதால், தி.மு.க.வெற்றி வாய்ப்பை இழந்தது. அப்போதும்கூட **''அவ்வளவுதான் நான்''** என்று கூறப்பட்டது. ஆனால் 2006 ஆம் ஆண்டு தேர்தலில் தி.மு.கழகம் வெற்றி பெற்று ஐந்தாவது முறையாக நான் முதல் அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ளேன்.

இவ்வாறு ஐந்து முறை மாறி, மாறி ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவன் என்று பார்த்தால், அந்தப் பெருமையும் எனக்கு மட்டுமே உரிய ஒன்றாகும்.

அரசின் சார்பில் வைக்கப்படும் நிதிநிலை அறிக்கைகள், ஆளுநர் உரைகள் போன்றவை எந்த ஆட்சிக் காலத்திலுமே துறையின் அதிகாரிகளால் தயாரிக்கப்பட்டு-முதல்வர், ஆளுநர் துறையின் அமைச்சர் ஆகியோரின் ஒப்புதலுக்காக மட்டுமே வைக்கப்படும். ஆனால் நான் பொறுப்பிலே இருந்த எல்லா காலத்திலும் ஆளுநர் உரையாக இருந்தாலும் சரி, நிதி நிலை அறிக்கையாக இருந்தாலும் சரி ஒவ்வொன்றுக்கும் பல நாட்கள் மூத்த அதிகாரிகளுடன் விவாதித்து, நானே பக்கம் பக்கமாக எழுதி-முடியாத நேரத்தில் ''டிக்டேட்'' செய்து, அதனை பலமுறை படித்துப் படித்து திருத்தித்தான் தயாரிக்கப்பட்டது என்பதை தலைமைச் செயலகத்தில் உள்ள மூத்த அதிகாரிகளும் அமைச்சர்களும் நன்கறிவார்கள்.

இந்த வரிசையில் மற்றும் ஒரு சிறப்பு தமிழகச் சட்டமன்றத்தில் 13 முறை நிதி நிலை அறிக்கையைத் தாக்கல் செய்த ஒருவன் என்ற பெருமையும் எனக்கு மட்டுமே உரிய ஒன்றாகும். 25.3.1971, 1.3.1972, 26.2.1973, 4.3.1974, 1.3.1975, 25.3.1989, 17.3.1990, 17.7.1996, 5.3.1997, 27.3.1998, 17.3.1999, 24.3.2000, 29.1.2001 என்று 13 முறை நிதிநிலை அறிக்கையை நானே தாக்கல் செய்தேன். இது தவிர 2006,2007,2008 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைகள் தயாரிப்புக்கு நான் முழு முதல் காரணம் என்றபோதிலும்,

பேரவையில் என் சார்பாக நிதியமைச்சர் பேராசிரியர் அவர்கள் அதனைத் தாக்கல் செய்தார் என்பதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இவ்வளவு முன்னுரையும் எதற்காக என்றால் 1997 ஆம் ஆண்டு மார்ச் 5 ஆம் தேதியன்று தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையை அவையிலே அளித்தேன். அந்த நிதிநிலை அறிக்கை குறித்து அதற்கடுத்த நாளே **''சலுகைகள் நிறைந்த தமிழக பட்ஜெட்''** என்ற தலைப்பில் **''தினமணி''** நாளேடு எழுதிய தலையங்கத்தின் சில வரிகளைப் படித்தாலே நன்றாகத் தெரிந்துகொள்ளலாம்.

''சென்ற ஆண்டைப் போலவே 1997-98ஆம் ஆண்டுக்கான தமிழக அரசின் பட்ஜெட்டும், சாமானிய மக்கள் மற்றும் மத்தியதர வகுப்பினர் நலனைக் கருத்திற்கொண்டு தயாரிக்கப்பட்டிருக்கிறது. சமுதாயத்தின் நலிந்த பிரிவினர் பயன்படுத்தும் பல்வேறு பொருள்களின் மீது விற்பனை வரியை முதல்வர் கருணாநிதி குறைத்திருப்பதுடன் உள்ளாட்சி அமைப்பு களுக்கான நிதி ஆதாரங்களை அதிகரிக்கச் செய்துள்ளார்.

''தமிழகத்தில் வேளாண்மை-தொழில் துறை-வணிகம் ஆகியவற்றின் நலனைக் கருத்திற் கொண்டு, விற்பனை வரிச் சீரமைப்புக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில், பல இனங்கள் மீது விற்பனை வரி குறைக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகள் பயன்படுத்தும் யூரியா உரத்துக்கு விற்பனை வரி 4 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது. அதோடு, சொட்டு நீர்ப்பாசன சாதனங்களுக்கு வரி 11 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது. கால்நடைத் தீவனங்களுக்கு முழு வரி விலக்கு அளிக்கப்படுகிறது. அடுத்து கிராமியத் தொழில் புரிவோருக்கும் பல சலுகைகள்-மூங்கிலால் செய்யப்படும் தட்டி, முறம், கூடைகள், சீயக்காய் பொடி, தொன்னை, சாம்பிராணி, சிப்பியினால் செய்யப்படும் பொருட்கள், உயிர் காக்கும் மருந்துகள், 39 வகையான நாட்டு மருந்துகள், ஊனமுற்றோர்



எனது பரிந்துரையோடு தமிழக ஆளுநராக நியமிக்கப்பட்ட பாத்திமா பீவி

பயன்படுத்தும் சைக்கிள் வாகனங்கள், செங்கல்-ஓடு செய்யப் பயன்படும் களிமண், வெள்ளியினால் ஆன மெட்டி, கொலுசு, அரைஞாண் கயிறு, ரூ.50க்குக் குறைவான காலணிகள் ஆகிய பல இனங்கள் மீது வரிகள் ரத்து செய்யப்படுகின்றன. இது போலவே கைப்பெட்டிகள், ஆயில் என்ஜின் பாகங்கள், மேஜை, நாற்காலி, பனியன், பின்னலாடைகள் போன்றவற்றின் மீது வரிகள் கணிசமாகக் குறைக்கப்படுகின்றன.''

''புதிய திக்கில், முக்கிய நடவடிக்கை ஒன்றை முதல்வர் கோடிட்டுக் காட்டியுள்ளார். மக்களுக்கு நிர்வாகம் பற்றிய தகவல்களைத் தெரிந்து கொள்ளும் உரிமையை வழங்க (அரசிடமிருந்து) தகவல் பெறும் உரிமைச் சட்டம் இயற்றப்படும் என்பது சாதாரண நடவடிக்கை அல்ல. பல நிலைகளில் உள்ள அரசு அலுவலர்கள் எடுக்கும் முடிவுகள் பற்றிய தகவல்கள் பொது மக்களுக்குக் கிடைக்குமாறு செய்வது இச்சட்டத்தின் நோக்கம். இதன் மூலம், மக்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய கடமையை அலுவலர்கள் ஏற்றுத் தீர வேண்டும்.

''சமுதாய சீர்த்திருத்த இயக்கத்தலைவர் பெரியார் ஈ.வே.ரா.வின் பெயரில் சேலத்தில் புதிய பல்கலைக்கழகம் இந்த ஆண்டில் நிறுவப்படும் என்றும் முதல்வர் அறிவித்துள்ளார். பெரியாரின் சீடர்களின் பெயர்களில் பல்கலைக்கழகங்கள் அமைந்திருக்கும் பொழுது, அவருடைய பெயரில் பல்கலைக் கழகம் அமையாததை ஒரு குறையாக பெரியாரின் இயக்கத்தவர் கூறி வந்தார்கள். அந்தக் குறையையும் முதல்வர் சாதுரியமாகக் களைந்து விட்டார்.

(''பட்ஜெட் என்றாலே என்ன புது வரியோ என்ற அச்சம் ஒரு காலத்தில் இருந்தது. ஆனால் அது தற்போது மாறி, என்ன



டெல்லியில், திட்டக்குழு துணைத் தலைவர் மது தண்டவதே அவர்களுடன் நான்

சலுகைகள் என எதிர்பார்க்கும் நிலை உருவாகி வருகிறது.'' என்றது **தினமணி.**)

''தினமணி'' நாளிதழ் மட்டுமல்ல, வேறுபல ஏடுகளும் நிதிநிலை அறிக்கையை வெகுவாகப் பாராட்டியிருந்தன.

97 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் கடைசி பத்தியை இவ்வாறு எழுதியிருந்தேன்.

''பேரவைத் தலைவர் அவர்களே! இந்தியத் திருநாட்டின் தென்கோடி முனையில்-சோழ சாம்ராஜ்யத்தின் புலிக்கொடி பட்டொளி வீசிப் பறந்த தஞ்சைத் தரணியில்- திருக்குவளை என்ற கிராமத்தில் -வேளாண் தொழில் ஈடுபாடும், இசைத் திறனும் கொண்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட ஒரு குடும்பத்தில் பிறந்து இளம் வயதிலேயே தன்மான உணர்வும், தமிழ்மொழிப் பற்றும் மிகக் கொண்டு, தந்தை பெரியாருக்குத் தொண்டனாகவும் அறிஞர் அண்ணாவுக்குத் தம்பியாகவும், தமிழ்ப் பெருங்குடி மக்களுக்காக உழைக்கும் உடன்பிறப்பாகவும் என்னை ஆக்கிக் கொண்டுள்ள இந்த அறுபதாண்டு காலப் பொது வாழ்வில் எழுபத்து மூன்று வயதுடைய நான் ''வீழ்வது நாமாக இருப்பினும், வாழ்வது தமிழாக இருக்கட்டும்'' என்ற சூளுரையுடனும், **''கடலில் தூக்கி எறிந்தாலும், தமிழ் மக்கள் ஏறிச் சவாரி செய்யும் கட்டு மரமாக மிதப்பேன்''** என்ற கடமை உணர்வுடனும், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப் பட்ட, அடக்கப்பட்ட மக்களின் உரிமை வாழ்வு ஒன்றையே

அல்லும் பகலும் நினைவிற் கொண்டு-அவர்களின் அணிவகுப்பில் ஒரு சிப்பாயாகப் பணியாற்றும் பேறு பெற்று, அவர்களின் உயர்வுக்கும், உரிமைக்கும் வழிவகுக்கும் ஆற்றலும், அக்கறையும் உள்ளவர்கள் முன்னேறிய பிரிவினரில் இருப்பின், அவர்களையும் அடையாளம் கண்டு, அரவணைத்து அவர்தம் துணையுடன் ஒடுக்கப்பட்டோர் உன்னத வாழ்வுக்காகவும், **''ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்''** எனும் சபதம் என்றைக்கு நிறைவேறும் என்ற என் ஏக்கத்தை, தூக்கத்திலும் கனவாகக் கண்டு, அக்கனவை நனவாக்க வேண்டுமென்பதற்காகவும், என் காலத்தில் அமைதியானதும், அரிய வளம் கொழிப்பதும், அறிவாற்றல் சிறந்தோங்குவதுமான தமிழ்ச் சமுதாயத்தைக் காண வேண்டுமென்பதில் தணியாத ஆர்வத்தின் காரணமாகத் தயாரிக்கப்பட்டதே இந்த நிதிநிலை அறிக்கை. இதனை நாட்டு மக்களும், கட்சித் தலைவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் விமர்சிக்கும்போது,

> ''எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப் பொருள் காண்ப தறிவு''

எனும் குறளுக்கேற்ப வரவேற்று மகிழ்ந்து குறை திருத்தி, நிறைதோன்ற பாடுபடுவேன் என்று உறுதி கூறி இந்த நிதி நிலை அறிக்கையை அவை முன் வைக்கிறேன்'' இவ்வாறு குறிப்பிட்டிருந்தேன்.

★ ★ ★

24.4.1997 அன்று தமிழகச் சட்டமன்றத்தில் காவல்துறை மானியம் மீதான விவாதத்தில் கலந்து கொள்ள வேண்டுமென்ற நிலையில், டெல்லியில் அமைந்திருந்த கூட்டணி ஆட்சியில் ஏற்பட்ட பிரச்சினைக்காக அங்கே தங்கியிருந்த நான்



டெல்லியில் திறக்கப்பட்ட திருவள்ளுவர் கலையரங்கம்

சென்னை திரும்பினேன். காவல்துறை மானியம் மீதான விவாதத்தில் பேசிய சில உறுப்பினர்கள் **சர்க்காரியா கமிஷன்** விசாரணை குறித்தெல்லாம் ஏடுகளில் எதிர்க்கட்சிக்காரர்கள் கடுமையாக விமர்சித்திருப்பதைக் குறிப்பிட்டு கேள்வி எழுப்பினர்.

அப்போது நான் குறுக்கிட்டு, ''சர்க்காரியா கமிஷனுடைய அறிக்கை அப்போதே அளிக்கப்பட்டது. அதைப் பற்றிய பிரச்சினை வரும் என்று தெரிந்துதான் ஆதாரத்தோடு வந்திருக்கிறேன். சர்க்காரியா கமிஷனின் அறிக்கையின் அடிப்படையில் அப்போதிருந்த முதலமைச்சர் **எம்.ஜி.ஆர்** அவர்கள் என்மீது வழக்குத் தொடர்வதற்காக இரண்டு முறை முயற்சித்தார். அப்போது அட்வகேட் ஜெனரலாக இருந்த **வி.பி.இராமன்** அவர்கள் அந்த அறிக்கையை முழுவதும் படித்துப் பார்த்து விட்டு, ''வழக்கு தொடர்வதற்கான எந்த ஆதாரமும் கிடையாது'' என்று எம்.ஜி.ஆர் அவர்களுக்கு அறிக்கை கொடுத்தார்.

''அவர் கொடுத்த அந்த ஆலோசனை அறிக்கையை-ஏற்கனவே இங்கே த.மா.கா.உறுப்பினர்களுக்குக் கூட படித்துக் காட்டியிருக்கிறேன். திரு.சொக்கர் அவர்கள் அதை முழுவதும் படித்துப் பார்த்திருக்கிறார். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடத்திலும் இதைக் காட்டியிருக்கிறேன்.

''திரு.எம்.ஜி.ஆர். அவர்கள் என்மீது வழக்குப் போட-சர்க்காரியா கமிஷன் விசாரணையின் அடிப்படையில் வழக்குப் போட இரண்டு முறை முயற்சித்தார். 15.11.1977 அன்று ஒரு முறையும், 24.10.1979 அன்று ஒரு முறையுமாக இரண்டு முறை முயற்சித்து - அன்றைக்கிருந்த அட்வகேட் ஜெனரல் வி.பி.இராமன் அவர்கள் அந்தக் கோப்பிலே கருத்துத் தெரிவிக்கிறார்-

I have already expressed my opinion vide opinion 18/77 dated 15.11.1977. I Will not see any reason to modify thei position'' (அதாவது ''என்னுடைய கருத்தை நான் மாற்றிக் கொள்ள இரண்டாவது முறையிலும் விரும்பவில்லை. இதிலே வழக்குப் போட எதுவுமே இல்லை'' என்று அட்வகேட் ஜெனலராக

இருந்த வி.பி.இராமன், அப்போது முதல் அமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர். அவர்களுக்கே அறிக்கை கொடுத்திருக்கிறார்'' என்று விளக்கினேன்.)

ஆனால் இதை மறந்துவிட்டு, ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் இந்தக் குற்றச்சாட்டை திரும்பத் திரும்பக் கூற முற்படுவதும், அதற்குப் பிறகு வி.பி.இராமன் எழுதிய கருத்துக்களை யாராவது கவனத்திற்குக் கொண்டு வந்ததும் வாயை மூடிக்கொள்வதுமான நிலைக்கு ஆளானார்கள்.

★ ★ ★

தி.மு.கழகம் பொறுப்பிலே இருந்த காலத்தில், ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் யாராவது தவறு செய்து, அது குறித்து என் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்ட நேரங்களில் எல்லாம் நான் அவர்கள் கட்சிக்காரர்கள் என்று பார்க்காமல் நடவடிக்கை எடுத்திருக்கிறேன் என்பதற்குப் பல எடுத்துக்காட்டுகள் உண்டு. ஏன், சென்னை மாநகராட்சி தி.மு.கழகத்தின் பொறுப்பிலே இருந்தபோது, அங்கே மஸ்டர் ரோல் ஊழல் பற்றிய புகார் கூறப்பட்டு, அதிலே ஓரளவு உண்மை இருக்கிறது என்று தெரிந்தவுடன் மாநகராட்சி தி.மு.கழகத்தின் ஆளுகையின்கீழ் இருந்த நிலையிலும், மாநகராட்சி மன்றமே கலைக்கப்படும் என்று பேரவையிலேயே அறிவித்து, அவ்வாறே நடைமுறைப்படுத்தியவன் நான் என்பதை தமிழகம் நன்றாகவே அறியும்



சிவகாசியில் மதக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து ஆறுதல்

அந்த வகையிலேதான் 1997 ஆம் ஆண்டு பேரவை நடந்து கொண்டிருந்த போதே, சரியாகச் சொல்ல வேண்டுமானால், பேரவையிலே காவல்துறை மானியத்தின் மீதான விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில்-மதுரை மாநகரில், மாநகராட்சி மன்ற உறுப்பினராக இருந்த திருமதி **லீலாவதி** என்பவர் தி.மு.கழகத்தினரால் கொலை செய்யப்பட்டார் என்று ஏடுகளில் செய்தி வந்தவுடன், அதைப்பற்றி பேரவையிலே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் சிறப்புக் கவன ஈர்ப்பு தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்தார்கள். 23.4.1997 அன்று காலை சுமார் 8.15 மணி அளவில் மதுரை மாநகர 59ஆவது வார்டு உறுப்பினர் திருமதி லீலாவதி கொலை செய்யப்பட்டார். அந்தச் சம்பவத்தைக் கண்ட அவருடைய கணவர் **திரு.குப்புசாமி** காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். அந்தப் புகாரில் தனது மனைவியைத் தேர்தல் விரோதம் காரணமாக கருமலையான் என்கின்ற அண்ணாதுரையும், அவரது சகோதரர் முத்துராமலிங்கமும், மற்றும் நான்கு பேரும் சேர்ந்து தாக்கியதாகவும், அதன் காரணமாக அவர் மனைவி இறந்து விட்டதாகவும் தெரிவித்திருந்தார்.

இதைப் பற்றி 24ஆம் தேதியன்று நான் பேரவையில் நிலைமையை விளக்கியதோடு-

"இந்தக் கொலையிலே சம்பந்தப்பட்டவர்கள் ஆளும் கட்சியைச் சேர்ந்த தி.மு.க.வினர் என்றாலும்கூட, எந்தவிதமான தயவு தாட்சண்யமும் காட்டாமல் பாரபட்ச மின்றி அரசு காவல்துறை நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது. ஆனால் கடந்த கால ஆட்சியின்போது குடவாசலில் **தங்கய்யன்** என்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர் கொலை செய்யப்பட்டபோது, குற்றவாளிகள் அந்த ஆட்சியிலே அமைச்சருடைய காரிலே பாதுகாக்கப் பட்டார்கள். தி.மு.கழக ஆட்சி வந்த பிறகு அந்த வழக்கையும் எடுத்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மதுரை நிகழ்ச்சியைப் பொறுத்தவரை-குற்றவாளிகள் எந்தக் கட்சியாக இருந்தாலும், குற்றம் செய்தவர்கள் கண்டிப்பாகத் தண்டிக்கப்

படுவார்கள். நடவடிக்கை எடுக்கப்படுவார்கள்'' என்று உறுதி கூறினேன்.

அன்று நான் அளித்த உறுதிமொழி எந்த அளவிற்குக் காப்பாற்றப்பட்டது என்பதை அந்தக் கட்சியின் நண்பர்கள் அனைவரும் அறிவார்கள். அந்த வழக்கிலே குற்றஞ் சாட்டப்பட்ட தி.மு.கழக வட்டச் செயலாளர் **முத்துராமலிங்கம்** உட்பட ஆறு பேர் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டனர். எனினும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளராக இருந்த **என்.சங்கரய்யா** அவர்கள் அந்த வழக்கினை சி.பி.ஐ.இடம் ஒப்படைக்க வேண்டுமென்றும், அதற்காக நீதிமன்றத்திலே வழக்கு தொடுக்கப் போவதாகவும் தெரிவித்து-அதைப்பற்றி செய்தி யாளர்கள் என்னிடம் கேட்டபோது ''சி.பி.ஐ.விசாரணை கோரி என்.சங்கரய்யா நீதிமன்றத்திற்குச் செல்லத் தேவையில்லை, மாநில அரசிடம் அதுபற்றி கடிதம் மூலம் கேட்டுக் கொண்டாலே, அதற்கான பரிந்துரை செய்யப்படும்'' என்று கூறினேன். அதனையொட்டி, என். சங்கரய்யா அவர்கள் 16.5.1997 அன்று அந்த வழக்கினை மத்திய புலனாய்வுத் துறையிடம் ஒப்படைக்குமாறு தமிழக முதல்வர் என்ற முறையில் எனக்கொரு கடிதம் எழுதினார்.

அந்தக் கடிதத்தை ஏற்றுக்கொண்ட நான் 17.5.1997 அன்றே மத்திய அரசிற்கு எழுதிய கடிதத்தில், அந்த வழக்கு



பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியத்தின் 30 ஆண்டு காலச் சாதனையைப் பாராட்டி நடைபெற்ற விழாவில், லதா மங்கேஷ்கர் - கமல் - ரஜினியுடன்

விசாரணையை சி.பி.ஐ. இடம் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொண்டேன். அவர்கள் சார்பில் நீதிமன்றத்திலே வாதாட இன்னாரைத்தான் நியமிக்க வேண்டுமென்று வைத்த கோரிக்கைகூட கழக அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதாவது தி.மு.கழகத்தினருக்கு எதிராக வாதாட தங்களுக்கு வேண்டிய மூத்த வழக்கறிஞர் ஒருவரை நியமிக்க வேண்டுமென்று தி.மு.கழக அரசிடமே கோரிக்கை வைத்து, அதனையும் ஏற்றுக்கொண்டு, அவர்கள் விரும்பிய வழக்கறிஞரையே நியமிக்கவும் ஏற்பாடு செய்தவன்தான் நான். அந்த வழக்கிலே குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் எல்லாம் இன்றளவும் சிறையிலே இருக்கின்றார்கள்.

★ ★ ★

28.5.1997 அன்று மதுரைக்கு சாதிக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நான் பார்வையிடச் சென்றபோது, மதுரையில் படுகொலை செய்யப்பட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மாநகராட்சி மன்ற உறுப்பினர் லீலாவதியின் இல்லத்திற்குச் சென்று, அவரது கணவர் குப்புசாமி மற்றும் மகள்களிடம் ஆறுதல் கூறிவிட்டு வந்தேன். காவல்துறை அதிகாரிகள் நான் நேரடியாக அந்த வீட்டிற்குச் செல்வது சரியாக இருக்காது என்று தடுத்த போதிலும், நான் கேட்காமல் அந்த வீட்டிற்குச் சென்று வந்தேன். அது மாத்திரமல்ல; அந்த வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் எனது கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் முறையாக நீதி கிடைத்திட ஒத்துழைப்பேன் என்று உறுதியும் அளித்து விட்டு வந்தேன். அது மாத்திரமல்ல, லீலாவதியின் குடும்பத்திற்கு உதவியளிக்க வேண்டுமென்று எண்ணி நிதியையும் அளித்தேன். அப்போது நிதியினை என்னிடமிருந்து பெற்றுக்கொண்ட போதிலும், பின்னர் ''அந்த நிதியை ஏற்றுக்கொள்ள அவர்கள் கட்சி அனுமதிக்கவில்லை'' என்று கூறி வாங்கிக் கொண்ட நிதியைத் திருப்பிக் கொடுத்து விட்டார்கள்.

18. நிவாரணம் வழங்கிட நீதிபதி நியமனம்

மூப்பனாருக்கும் எனக்கும் இருந்த நட்பு - நீண்ட கால ஆழமான நட்பு!

தேவகவுடா தலைமையிலான ஆட்சிக்கு காங்கிரஸ் கட்சியின் தலைவராக நரசிம்மராவ் இருந்தவரை அளித்து வந்த ஆதரவை-நரசிம்மராவ் அவர்களுக்குப் பிறகு காங்கிரஸ் கட்சியின் தலைவராக சீதாராம் கேசரி வந்தவுடன், திடீரென்று 97ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் தேதியின்று திரும்பப் பெற்றுக்கொள்ளப் போவதாக அறிவித்தார்.

அதனைத் தொடர்ந்து ஏப்ரல் 11 ஆம் தேதிக்குள் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டுமென்று பிரதமர் தேவகவுடா அவர்களுக்கு குடியரசுத் தலைவர் அறிவித்தார். காங்கிரஸ் கட்சி தனது ஆதரவினைத் திரும்பப் பெறுவது பற்றி செய்தியாளர்கள் என்னைக் கேட்டபோது, ''அது துரதிருஷ்டவசமானது'' என்று கூறினேன். டெல்லியிலிருந்து வரிசையாக வந்த தொலைபேசியினை அடுத்து 31.3.1997 அன்று காலை விமானத்தில் டெல்லிக்குப் புறப்பட்டுச் சென்றேன். நான் சென்ற அதே விமானத்தில் மத்திய தொழில் அமைச்சராக இருந்த முரசொலி மாறன், பாதுகாப்புத் துறை இணை அமைச்சராக இருந்த என்.வி.என்.சோமுவும் என்னுடன் வந்தனர். த.மா.கா. தலைவர் அருமை நண்பர் மூப்பனாரும், மத்திய இணை அமைச்சராக இருந்த தனுஷ்கோடி ஆதித்தன், பீட்டர் அல்போன்ஸ் எம்.பி., ஜெயந்தி நடராசன் எம்.பி., ஆகியோரும் அதே விமானத்தில் வந்தனர். டெல்லி விமான நிலையத்தில் மத்திய அமைச்சர்கள் டி.ஆர்.பாலு, டி.ஜி.வெங்கட்ராமன், நாடாளுமன்ற



தேவகவுடா இல்லத்தில் நடைபெற்ற வழிகாட்டும் குழுக் கூட்டத்தில் என் கருத்துரைகளைக் கூறினேன்

உறுப்பினர்கள் **கோவை ராமநாதன், கே.பி.ராமலிங்கம்** ஆகியோர் என்னை வரவேற்று தமிழ்நாடு இல்லத்திற்கு அழைத்துச் சென்றனர்.

நான் வந்தது அறிந்ததும் ஆந்திர முதல்வராக இருந்த **சந்திரபாபு நாயுடு** தமிழ்நாடு இல்லத்திற்கு வந்து அரசியல் நிலவரங்களை விளக்கிச் சென்றார். பீகார் முதல்வராக இருந்த **லல்லு பிரசாத் யாதவ்** அவர்களும், காஷ்மீர் முதல்வராக இருந்த **பரூக் அப்துல்லா** அவர்களும் நான் கூறிய மாதிரியே காங்கிரசின் முடிவு துரதிருஷ்டவசமானது என்று கருத்து தெரிவித்திருந்தார்கள்.

1.4.1997 அன்று டெல்லியில் பிரதமர் **தேவகவுடா** அவர்கள் இல்லத்தில் ஐக்கிய முன்னணியின் வழிகாட்டும் குழுவின் கூட்டம் நடைபெற்றது. **நான், பிரதமர் தேவகவுடா, மூப்பனார்,** மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் **ஹர்கிஷன் சிங் சுர்ஜித்,** ஆந்திர மாநில முதல்வர் **சந்திரபாபு நாயுடு,** பீகார் முதல்வர் **லல்லு பிரசாத் யாதவ்** ஆகியோர் கலந்து கொண்டோம். அன்று பிற்பகல் தமிழ்நாடு இல்லத்தில் என்னை அஸ்ஸாம் மாநில முதல்வர் **மகந்தா** சந்தித்தார்.

டெல்லியில் என்னைச் செய்தியாளர்கள் சந்தித்தபோது, ''நாடாளுமன்ற இடைத் தேர்தலை நாட்டு மக்களே

விரும்பவில்லை, அதையும் மீறி தேர்தல் வந்தால் சந்திக்கத் தயார்'' என்று கூறினேன்.

மீண்டும் 9.4.1997 அன்று டெல்லியில் பிரதமர் தேவகவுடா அவர்களின் இல்லத்தில் நடைபெற்ற ஐக்கிய முன்னணியின் வழிகாட்டும் குழுக்கூட்டத்தில் நான் கலந்து கொண்டேன். பிரதமர் **தேவகவுடா, நான், மூப்பனார்,** மேற்கு வங்க முதல்வர், **ஜோதிபாசு,** மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் **ஹர்கிஷன் சிங் சுர்ஜித்,** காஷ்மீர் முதல்வர் **பரூக் அப்துல்லா,** ஆந்திர மாநில முதல்வர் **சந்திரபாபு நாயுடு,** பீகார் முதல்வர் **லல்லு பிரசாத் யாதவ்,** மத்திய அமைச்சர் தம்பி **முரசொலி மாறன்,** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த **பரதன்** ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அன்று மாலையில் தமிழ்நாடு இல்லத்திற்கு பஞ்சாப் மாநில முதல்வரும், அகாலி தளக் கட்சியின் தலைவருமான **பிரகாஷ் சிங் பாதல்** அவர்களும், அகாலிதள நாடாளுமன்றக் குழுத் தலைவராக அப்போது இருந்தவரும், தற்போது தமிழக ஆளுநராக இருப்பவருமான **பர்னாலா** அவர்களும், **சிரோன்மணி** குருத்துவாரா பிரபந்த கமிட்டியின் தலைவரான **குர்சரன் சிங் டோரா** அவர்களும் வருகை தந்து அப்போதுள்ள நிலவரங்கள் குறித்து விவாதித்தார்கள்.

11.4.1997 அன்று பிரதமர் தேவகவுடா அவர்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு நம்பிக்கை கோரும் தீர்மானத்தை முன்மொழிந்தார். தீர்மானத்தை முன்மொழிந்து பேசுகையில், ஐக்கிய முன்னணி அரசின் சாதனைகள் பற்றியும், காங்கிரஸ் கட்சி திடீரென்று எடுத்த நிலைகள் குறித்தும் சுருக்கமாக உரையாற்றினார். தீர்மானத்தின் மீது பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் 11 மணி நேரம் பேசினர். அதற்குப் பின் பிரதமர் தேவகவுடா சுமார் ஒன்றரை மணி நேரம், பத்து மாதங்களில் ஐக்கிய முன்னணி அரசு மேற்கொண்ட நலத் திட்டங்களையெல்லாம் விவரித்தார். அதன் பின் மக்களவைத் தலைவர் **சங்மா** தீர்மானத்தை வாக்கெடுப்புக்கு விடப்போவதாக அறிவித்தார். வாக்கெடுப்பில் தீர்மானத்



புதுடெல்லியில், தமிழ்நாடு இல்லத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த து.ராஜா என்னைச் சந்தித்து உரையாடினார்.

திற்கு ஆதரவாக 158 உறுப்பினர்களும், எதிர்ப்பாக 292 உறுப்பினர்களும் வாக்களித்தனர். 6 பேர் நடுநிலை வகித்தனர். நம்பிக்கை வாக்கெடுப்பில் தேவகவுடா அரசு தோல்வி அடைந்ததாக அறிவிக்கப்பட்டது. மக்களவை காலவரையின்றி ஒத்தி வைக்கப்பட்டது. மத்திய அமைச்சரவை அடுத்துக்கூடி விவாதித்த பின், தேவகவுடா அவர்கள் அன்றிரவே குடியரசுத் தலைவரைச் சந்தித்து பதவி விலகல் கடிதத்தை அளித்தார்.

12.4.1997 அன்று காலையில் நானும், தம்பி மாறனும் டெல்லியில் உள்ள அப்போலா மருத்துவனைக்குச் சென்று, அங்கே சிகிச்சை பெற்று வந்த முன்னாள் பிரதமர் வி.பி.சிங் அவர்களைச் சந்தித்து நலம் விசாரித்தோம். அதன்பின் அவரிடம் நீண்ட நேரம் இந்திய அரசியல் நிலவரங்கள் குறித்துப் பேசினோம்.

ஐக்கிய முன்னணி தலைமையில் எந்தவித மாற்றமும் செய்வதில்லை என்றும், பா.ஜ.க.வோ, காங்கிரஸ் கட்சியோ மத்தியிலே ஆட்சி அமைக்க ஐக்கிய முன்னணி ஆதரவு அளிப்பதில்லை என்றும் 12.4.97 அன்று காலையில் நடைபெற்ற வழிகாட்டுக் குழுக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. ஐக்கிய முன்னணியின் வழி காட்டுக் குழுக் கூட்டம் அன்று மாலையிலும் நடைபெற்றது. இதற்கிடையே காங்கிரஸ் கட்சி ஐக்கிய முன்னணியின் தலைமையில் மாற்றம் செய்ய வேண்டுமென்று ஒரு நிபந்தனை தெரிவித்திருந்ததால், அதைப்பற்றி வழிகாட்டுக் குழுவிலே விவாதித்து, காங்கிரஸ் விதித்துள்ள நிபந்தனையின்படி ஐக்கிய முன்னணியின் தலைமையில் மாற்றம் செய்ய இயலாது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

எப்படியோ, விளைவை அறியாத குழந்தை விளக்கை எடுத்து வீட்டுக்குள்ளேயிருக்கும் திரைச் சீலையின் மீது பிடித்து விட்டதைப் போன்றதொரு நிகழ்ச்சி டெல்லிப் பட்டினத்தில் நடைபெற்றது-தீயைத் தடுக்கும் பணியிலும்-வீட்டைக் காப்பாற்றும் பணியிலும் பொறுப்பை உணர்ந்து ஈடுபடுவதற்காக-ஒரு சில நாட்கள் டெல்லியிலேயே தங்கியிருந்தேன்.

அதற்கிடையிலே தமிழகத்தில் இருந்த சில ஏடுகள் எனக்கும் மூப்பனாருக்கும் மனத்தாங்கல் என்றும்- நான் பா.ஜ.க. பக்கம் போகப் போவதாகவும்-தங்கள் தங்கள் கற்பனைக்கேற்றவாறு செய்திகளை வெளியிட்டன. அதிலே வேடிக்கை என்னவென்றால் நானும், மூப்பனார் அவர்களும் ஒன்றாகவே அமர்ந்து, விடிய விடிய விவாதித்துக் கொண்டிருக்கும் போதுதான் இப்படிப்பட்ட செய்திகள் வந்தன.

13.4.1997 அன்று இரவு ஐக்கிய முன்னணியின் வழி காட்டுக் குழுக் கூட்டம் மீண்டும் தேவகவுடா இல்லத்தில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் பேசிய தேவகவுடா அவர்கள், பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வு காணப்பட வேண்டுமென்ற அடிப்படையில், ஐக்கிய முன்னணித் தலைவர்கள் எடுக்கும் நடவடிக்கைகள் எதுவாக இருந்தாலும், அதற்கு முழு ஒத்துழைப்பு கொடுக்கத் தயாராக இருப்பதாகவும், பதவி விலகவும் தான் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார். 17.4.1997 அன்று மீண்டும் டெல்லியில் ஐக்கிய முன்னணியின் வழி காட்டுக்குழு கூட்டத்தைக் கூட்டுவதென்ற முடிவோடு சென்னை திரும்பினேன்.

மீனம்பாக்கம் விமான நிலையத்தில் செய்தியாளர்கள் சந்தித்து கேட்ட முதல் கேள்வியே ''மூப்பனார் பிரதமராக ஆவாரா?'' என்பதுதான்.

''இப்போது எதுவும் சொல்ல இயலாது, 17ஆம் தேதி மறுபடியும் ஐக்கிய முன்னணியின் வழி காட்டுதல் கூட்டம் கூடுகிறது. அதன் பிறகுதான் எதுவும் அறிவிக்கப்படும்'' என்று கூறினேன். ''ஐக்கிய முன்னணி ஆட்சி நீடிக்க வாய்ப்புகள்

எப்படி இருக்கிறது?'' என்று செய்தியாளர் கேட்டபோது, ''ஐக்கிய முன்னணி ஆட்சி நீடிக்க எல்லாம் வல்ல ஜனநாயகம் அருள் புரியுமாக!'' என்று சிரித்தவாறே கூறினேன்.

17ஆம் தேதி டெல்லியில் நடைபெற்ற ஐக்கிய முன்னணியின் வழி காட்டுதல் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகப் புறப்பட்ட நேரத்தில், மீனம்பாக்கம் விமான நிலையத்தில் என்னைச் சந்தித்த செய்தியாளர்கள், ''நீங்கள் தமிழர் நலனுக்காகத் தொடர்ந்து அதிகமாகப் பாடுபட்டுக் கொண்டு வருகிறீர்கள்-ஒரு தமிழர் இப்போது முதன் முறையாக பிரதமராக வர வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாகவும்-மூப்பனார் வரப் போகிறார் என்றும் வெளியே பேச்சு நடைபெறுகிறது-அதில் தங்களின் கருத்து என்ன?'' என்று கேட்டபோது, ''பிரதமர் பதவிக்கு தமிழ்நாட்டிற்கு ஒரு வாய்ப்பு கிடைக்குமேயானால், தி.மு.கழகம் மூப்பனாரின் பெயரைத் தவிர வேறு யார் பெயரைச் சொல்லும் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?'' என்று பதில் கூறினேன்.

டெல்லி சென்றதும் ஒரு துயரச் செய்தி. ஓரிசா மாநில முன்னாள் முதல்அமைச்சரும், என்னுடைய நெருங்கிய நண்பர்களில் ஒருவரும், ஜனதாதளக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், எம்.ஜி.ஆர். உயிரோடு இருந்த நேரத்தில் தமிழகத்திற்கு வருகை தந்து தி.மு.க.வையும் அ.தி.மு.க.வையும் ஒன்றாக இணைக்க வேண்டுமென்று அரும்பாடுபட்டவரும், அதற்காக என்னைப் பலமுறை சந்தித்து வலியுறுத்தியவருமான **பிஜு பட்நாயக்** அவர்கள், டெல்லி மருத்துவமனையிலே இயற்கை அடைந்து விட்டார் என்று செய்தி கிடைத்தது. உடனடியாக நானும், மத்திய அமைச்சர்கள் முரசொலி மாறன், டி.ஆர்.பாலு, டி.ஜி.வெங்கட்ராமன், என்.வி.என்.சோமு மற்றும் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.பி.ராமலிங்கம், சண்முகசுந்தரம், டி.எஸ்.ஏ.சிவப்பிரகாசம் ஆகியோரும் டெல்லியிலே இருந்த பட்நாயக் அவர்களின் இல்லத்திற்குச் சென்று, அவரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினோம்.



லல்லு பிரசாத் யாதவ், ஜனதாதளத் தலைவர் சரத் யாதவ் ஆகியோருடன் நான்

ஐக்கிய முன்னணியின் நிலைக்குழுவின் அவசரக் கூட்டம் 18.4.1997 அன்று டெல்லியில் அதன் கட்சி அலுவலகத்தில் கூடியது. ''ஐக்கிய முன்னணிக்கு புதிய தலைவர் தேர்ந் தெடுக்கப்பட்டால், அந்தத் தலைவரை காங்கிரஸ் கட்சி ஆதரிக்கும்!'' என்று காங்கிரஸ் கட்சியின் தலைவர் **சீதாராம் கேசரி** அவர்கள் குடியரசுத் தலைவருக்கு அனுப்பியிருந்த கடிதத்தின் நகலை ஐக்கிய முன்னணியின் நிலைக்குழுவிற்கும் காங்கிரஸ் கட்சி அனுப்பி வைத்திருந்தது. அந்தக் கடிதம் குறித்து ஐக்கிய முன்னணியின் நிலைக் குழு விவாதித்தது. ''காங்கிரஸ் கட்சி தருகிற ஆதரவு மீது ஐக்கிய முன்னணி தலைவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுமேயானால், புதிய அரசு அமைப்பதற்கு தான் குறுக்கே தடையாக இருக்க மாட்டேன்!'' என்று பிரதமர் தேவகவுடா அந்தக் கூட்டத்தில் கூறினார்.


புதிய தலைவரைத் தேர்ந்தெடுப்பது தொடர்பாக தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் பல கட்டங்களில் நடைபெற்றன. பல மாநில முதல் அமைச்சர்களும், கட்சிகளின் தலைவர்களும் என்னைத் தனித்தனியாகச் சந்தித்து அவரவர்களின் கருத்துக்களைத் தெரிவித்தனர். வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்த **ஐ.கே.குஜ்ரால்**, நிதியமைச்சர் **ப.சிதம்பரம்**, த.மா.கா. தலைவர் **ஜி.கே.மூப்பனார்**, மத்திய அமைச்சர் **அருணாசலம்**, பீகார் முதல்வராக இருந்த **லல்லு பிரசாத் யாதவ்**, **சந்திரபாபு நாயுடு** ஆகியோர் என்னைச் சந்தித்து விவாதித்தனர்.

இறுதியாக ஐக்கிய முன்னணியின் வழிகாட்டுக் குழுக் கூட்டம் 19.4.97 அன்று இரவு 7.30 மணியளவில் கூடியது.

அதில் ஐக்கிய முன்னணியின் புதிய தலைவராக ஐ.கே.குஜ்ரால் பொதுக் கருத்தின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்ட தகவலை காங்கிரஸ் கட்சியின் தலைவர் சீதாராம் கேசரிக்கு ஐக்கிய முன்னணியின் அமைப்பாளர் சந்திரபாபு நாயுடு தெரிவித்தார்.

20.4.1997 அன்று காலையில் டெல்லியிலுள்ள ஆந்திர பவனில் ஐக்கியமுன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம் கூடி, முறைப்படி **குஜ்ரால்** தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் நானும், ஏனைய ஐக்கிய முன்னணித் தலைவர்களும் குடியரசுத் தலைவரைச் சந்தித்து விவரங்களை விளக்கினோம். சந்திரபாபு நாயுடு காங்கிரஸ் தலைவர் சீதாராம் கேசரியைச் சந்தித்துப் பேசினார். ஐக்கிய முன்னணியின் புதிய அரசின் செயல்பாடுகள் பற்றி உறுதி செய்ய பத்துப் பேர் கொண்ட ஒருங்கிணைப்புக் குழு அமைப்பதென்று அப்போது தீர்மானிக்கப்பட்டது. பிரதமர் குஜ்ரால் தலைமையிலான இந்தக் குழுவில் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த ஐந்து பேரும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஐந்து பேரும் இடம் பெறுவதென்று முடிவு செய்யப்பட்டது.

ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்றக் குழுத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐ.கே.குஜ்ரால் குடியரசுத் தலைவர் **சர்மா** அவர்களை 20 ஆம் தேதி இரவு குடியரசுத் தலைவர் மாளிகையில் சந்தித்து உரையாடினார். அப்போது அவரை பிரதமராக நியமித்ததற்கான கடிதத்தை குடியரசுத் தலைவர் அளித்ததாகவும், 22 ஆம் தேதியன்று மக்களவையிலே பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதாகவும் குஜ்ரால் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். ஐக்கிய முன்னணியின் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்ட குஜ்ரால், டெல்லி தமிழ் நாடு இல்லத்திற்கு வருகை தந்து, என்னைச் சந்தித்து பொன்னாடை போர்த்தி நன்றி தெரிவித்துக் கொண்டார். நானும் அவருக்குப் பொன்னாடை போர்த்தி வாழ்த்துக் கூறினேன்.



புதுடெல்லி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த வி.பி.சிங் அவர்களைச் சந்தித்து நலம் விசாரித்தேன்

இதற்கிடையில் "மத்தியில் ஐக்கிய முன்னணி அரசில் பங்கேற்க மாட்டோம், வெளியிலிருந்து ஆதரவு தருவோம்!'' என்று த.மா.கா. சார்பில் ஒரு அறிக்கை வெளியிடப் பட்டது. அதைப்பற்றி செய்தியாளர்கள் என்னைக் கேட்டபோது, ''எதிர் பாராதது- வருந்தத்தக்கது- மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஐக்கிய முன்னணியின் வழிகாட்டுக் குழுக்கூட்டத்திலேயே மூப்பனாரிடம் கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறது. தொடர்ந்து கேட்டுக் கொள்ளப்படும். நாட்டின் நன்மைக்காக அவர்கள் எடுத்துள்ள முடிவை திரும்பப் பெறுமாறு வேண்டுகிறேன்'' என்று கூறினேன்.

21.4.1997 அன்று காலையில் ஐக்கிய முன்னணி அரசின் புதிய பிரதமராக ஐ.கே.குஜ்ரால் அவர்கள் பதவியேற்றார். அவருடன் முரசொலி மாறன் உள்ளிட்ட 33 பேர் அமைச்சர்களாகப் பதவியேற்றனர். குடியரசுத் தலைவர் சங்கர் தயாள் சர்மா பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். பதவியேற்பு விழாவில் நானும் கலந்து கொண்டு விட்டு சென்னை திரும்பினேன்.

ஆனால் அதற்குள் ''மூப்பனாரை பிரதமராக்க இடதுசாரிகள் ஒப்புக்கொள்ளவில்லை!'' என்ற ஒரு கருத்தும், தி.மு.க.மீது குறை கூறி மற்றொரு கருத்தும் தமிழகத்தில் பரவலாக ஒரு சில ஏடுகளில் வெளி வந்திருந்தது. விமான நிலையத்திலேயே செய்தியாளர்கள் என்னைச் சந்தித்து இந்தப் பிரச்சினை குறித்தே முதல் கேள்வியைக் கேட்டார்கள்.

அதற்கு நான், ''பிரச்சினைகளை உருவாக்கியதும், உருவாக்கிக் கொண்டிருப்பதும் சில பத்திரிகைகள்தான். நான் எல்லா பத்திரிகைகளையும் சொல்லவில்லை. ஏடுகளில் வெளி

வந்துள்ள செய்திகள் எல்லாம் வதந்திகள்தான். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தங்களுடைய ஆதரவை மூப்பனாருக்குத் தரவில்லை. வேறு ஒரு வேட்பாளருக்குத் தந்தார்கள். அப்படி ஆதரவு கொடுக்கும் போது அவர்களுடைய நிலையைச் சொன்னார்களே தவிர, தனிப்பட்ட முறையில் தமிழ்மாநிலக் காங்கிரசைப் பற்றியோ-மூப்பனாரைப் பற்றியோ-எதுவும் சொல்லவில்லை. அப்படியிருந்தும் சில பத்திரிகைகள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய நேர்மையைச் சந்தேகிப்பதைப் போல செய்தியை வெளியிட்டார்கள். அதுபற்றி ஜோதிபாசு அவர்களும், நானும், சந்திரபாபு நாயுடு அவர்களும் வழிகாட்டும் கூட்டத்திலும் சொல்லியிருக்கிறோம்.

"நேற்றையதினம் இரவு 11 மணியிலிருந்து சுமார் 12 மணிவரையில் நானும், ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடுவும், முரசொலி மாறனும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தோழர் **சீத்தாராம் எச்சூரி** அவர்களும் மூப்பனாரை அவர் தங்கியிருக்கும் இடத்தில் சந்தித்து, பத்திரிகைகளில் தவறாக வந்த செய்திகளைப் பொருட்படுத்த வேண்டாமென்று எடுத்துக்கூறி-மத்திய அமைச்சரவையிலே தமிழ் மாநிலக் காங்கிரசார் பங்கு கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். இன்று காலையில் 8.30 மணி அளவில் மூப்பனார் அவர்கள் என்னுடன் தொலைபேசியில் பேசுவதாகச் சொன்னார். அதன்படி இன்று காலையில் தொலைபேசியில் பேசினார். அவருடைய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களையும், மற்றும் அவருடைய கட்சியையும் கலந்து கொண்டு சொல்வதாக என்னிடம் குறிப்பிட்டிருக்கிறார். அவர்கள் மத்திய அரசில் பங்கு கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. நான் சென்னையிலிருந்து புறப்பட்டுச் சென்றபோதே, நாங்கள் மூப்பனாரை ஆதரிப்பதாகக் கூறி விட்டுத்தான் டெல்லி சென்றேன். அதன்படி முயற்சி எடுத்துக் கொண்டு டெல்லியிலே மார்க்சிஸ்ட் கட்சியைச் சந்தித்தேன்- ஜனதா தளத்தைச் சந்தித்தேன்- எல்லாக் கட்சிகளையுமே சந்தித்தேன்- அங்கேயுள்ள சூழ்நிலைக் கேற்ப பல வேட்பாளர்கள்



ஐக்கிய முன்னணித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐ.கே. குஜ்ரால் அவர்களுக்கு முரசொலி மாறன் மரியாதை

போட்டியிட்டதில், இறுதியாக ஒருமித்த கருத்து குஜ்ராலுக்கு என்று முடிவானபோது அந்தக் கருத்தை வழி காட்டும் கூட்டத்தில் எல்லோரும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டோம்'' என்று விரிவாகப் பதில் சொன்னேன்.

தொடர்ந்து செய்தியாளர் ஒருவர், ''த.மா.கா.வைச் சேர்ந்த சித்தன் போன்றவர்கள், நீங்களும் சந்திரபாபு நாயுடுவும் முடிவு பண்ணியிருந்தால், மூப்பனாரைத் தேர்ந்தெடுத்திருக்கலாம் என்று கடுமையாகப் பேசுகிறார்களே?'' என்று கேள்வி கேட்டதற்கு-

''ஐக்கிய முன்னணியில் 13 கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. மூப்பனாருக்காக மற்ற கட்சிகளோடு பேசத்தான் நான் 17ஆம் தேதி டெல்லிக்கு வந்தேன். அன்று பிஜு பட்நாயக் காலமானதால் எந்தத் தலைவர்களையும் சந்திக்க இயலவில்லை. எனினும் இரவில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைவர் சுர்ஜித் போன்றவர்களை அவர்களது இல்லத்துக்கே சென்று சந்தித்தேன். லல்லு பிரசாத் யாதவ், சரத் யாதவ் ஆகியோரை மறுநாள் சந்தித்து, மூப்பனாருக்காக ஆதரவு கேட்டேன். ஜனதா கட்சியைச் சேர்ந்த பிரதமர் தேவகவுடா பதவி விலகுவதால், அவருக்குப் பதிலாக ஜனதாதளத்தைச் சேர்ந்தவர்தான் பிரதமராக வர வேண்டுமென்று அவர்கள் உறுதியாக இருந்தனர். பெரிய அணியாக இருந்த இடதுசாரி அணியும், ஜனதாதள அணியும் வேறு கருத்து கொண்டிருக்கும் போது நான் என்ன செய்ய இயலும்? இதற்கிடையே அஸ்ஸாம் மாநில முதல்வர் மகந்தாவும் என் கருத்துக்கு இணங்க வில்லை. முலாயம் சிங் யாதவ் தனக்கே ஆதரவு தரவேண்டுமென தமிழ்நாடு இல்லத்துக்கு வந்து என்னிடம் கேட்டுக் கொண்டார். நான் மூப்பனாருக்கு ஆதரவு




குஜ்ராலுக்கு நான் வாழ்த்து தெரிவித்தேன். அருகே சந்திரபாபு நாயுடு.

திரட்டுவதற்காகத்தான் கடந்த ஆண்டைப்போல தமிழ்நாடு மாளிகையில் அனைவரையும் சந்தித்து முடிவெடுக்கிற நிலையைத் தவிர்த்தேன். அதாவது நானே ஒரு வேட்பாளரை-மூப்பனாரை ஆதரித்து ஆதரவு கேட்கும் போது மற்ற கட்சித் தலைவர்களை தமிழ்நாடு இல்லத்துக்கு அழைத்துப் பேசுவது முறையல்ல என்பதால் நானே அவர்கள் இருக்கும் இடங்களுக்குச் சென்று ஆதரவு கோரினேன்'' என்று விளக்கமாகப் பதில் கூறினேன்.

தொடர்ந்து செய்தியாளர், ''முடிவாக குஜ்ரால் பெயர் எப்படி வந்தது?'' என்று கேட்டதற்கு, ''அந்தப் போட்டியிலே இறுதியாக ஒரு நடுநிலையான வேட்பாளர் என்ற வகையில் அவருடைய பெயர் சொல்லப்பட்டது. ஒவ்வொரு கட்சியாக அழைத்து ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு பேசியதில் குஜ்ரால் பெயர் ஒருமித்த கருத்தாக உருவானது. வழிகாட்டும் கூட்டத்தில் அவரது பெயரை சந்திரபாபு நாயுடு அறிவித்தார். அது ஏற்கப்பட்டது'' என்று சொன்னேன்.

22.4.1997 அன்று நாடாளுமன்ற மக்களவை கூடியபோது, பிரதமர் குஜ்ரால் அவர்கள் நம்பிக்கை கோரும் தீர்மானத்தை முன்மொழிந்து உரையாற்றினார். அந்தத் தீர்மானத்தின் மீது 8 மணி நேரம் விவாதம் நடைபெற்றது. விவாதத்திற்கு குஜ்ரால் பதில் கூறினார். நம்பிக்கை கோரும் தீர்மானத்தை மக்களவைத் தலைவர் பி.ஏ.சங்மா குரல் வாக்கெடுப்புக்கு விட்டார். பா.ஜ.க. மட்டும் தீர்மானத்தை எதிர்த்தது. எனினும் அந்தக் கட்சியும் டிவிஷன் வாக் கெடுப்பு கோரவில்லை. நம்பிக்கை கோரும் தீர்மானம் நிறைவேறியதாக மக்களவைத் தலைவர் அறிவித்து, அவையை ஏப்ரல் 30ஆம் தேதிக்கு ஒத்தி வைத்தார்.

மூப்பனாருக்குக் கிடைக்க விருந்த வாய்ப்பினை நான் ஏதோ கெடுத்து விட்டதாக எதிர்க்கட்சியினர் உறுதியாகப்



ஐ.கே.குஜ்ரால் பிரதமராக குடியரசுத் தலைவர் சங்கர்தயாள் சர்மாவின் முன் பதவிப் பிரமாணம் ஏற்கிறார்.

பிரச்சாரம் செய்து, அதனைக் கேட்டு த.மா.கா.விலே உள்ள ஒரு சிலர் அதில் உண்மையிருக்குமோ என்ற வகையில் நினைத்த போது, தொடர்ந்து நான் அது குறித்து செய்தியாளர் களிடம் விளக்கம் அளித்து வந்தேன். நான் டெல்லி யிலிருந்து திரும்பிய பின் அதற்கு அடுத்த நாளே, 'குமுதம்'வார இதழுக்காக அதன் பொறுப்பாசிரியராக அப்போதிருந்த **மாலன்** என்னை ஒரு பேட்டி கண்டார். அந்தப் பேட்டி முழுவதுமே மூப்பனார் பிரச்சினை குறித்தே அமைந்தது என்பதால் அந்தப் பேட்டியின் சாராம்சத்தை இதிலே இணைப்பது நம்மை பயங்குமென்று எண்ணுகிறேன்.

குமுதம்:- தமிழர் ஒருவர் பிரதமராவதற்கு நீங்கள் தீவிர முயற்சி எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டுக்கு உங்கள் பதில் என்ன?

நான்:- அது அப்பட்டமான பொய். எல்லாவிதமான முயற்சிகளையும் நான் மேற்கொண்டேன். ஆனால் அந்த முயற்சி எனக்கு வெற்றி அளிக்கவில்லை என்பது தான் வருந்தத் தக்க விஷயம்.

குமுதம்:- என்ன முயற்சிகளை மேற்கொண்டீர்கள்?

நான்:- முதலில் மூப்பனார் அந்தப் பதவிக்குப் போட்டியிடுகிறாரா என்று தெரிந்து கொள்வதற்கே நான் பெரிய முயற்சியில் ஈடுபட வேண்டியதாயிற்று. நான் நேரடியாகக் கேட்டால் சொல்வதற்குக் கூச்சப்படுவார் என்பதற்காக, முரசொலி மாறனை விட்டுக் கேட்கச் சொன்னேன். மாறன் கேட்டபோது கூட, அவர் ''என்னுடைய தோழர்கள் அப்படிச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நான் ஒன்றும் சொல்லவில்லை. அவர்களது மனம் புண்படும் என்பதற்காக வாயை மூடிக் கொண்டிருக்கிறேன்'' என்று

சொன்னார். அதன் பிறகு நானே, 14ஆம் தேதியன்று டெல்லியிலிருந்து சென்னைக்குத் திரும்பும் போது, ''என்ன? உங்களுக்கு அந்தக் கருத்திருக்கிறதா?'' என்று கேட்டேன். ''என்ன, மூன்று மாதப் பதவி-விடுங்கள்'' என்று சொல்லி விட்டார்.

புதிய பிரதமரைத் தேர்ந்தெடுப்பதற்காக மீண்டும் 17 ஆம் தேதியன்று டெல்லி போய்ச் சேர்ந்தேன். அன்றைக்கு பிஜு பட்நாயக் இறந்து விட்டதால், டெல்லியிலுள்ள பல தலைவர்கள் பிஜு பட்நாயக் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக புவனேஸ்வர் சென்று விட்டார்கள். அவர்கள் சென்ற பிறகுகூட நான் சும்மாயிராமல், இரவு 11 மணி அளவில் நானும் மாறனும், சுர்ஜித் அவர்களது இல்லத்திற்குச் சென்று பேசினோம். மறுநாள் காலை அவர் ரஷ்யா போவதாக இருந்தது. அதற்குள் அவரைச் சந்தித்துப் பேசிவிட வேண்டும் என்பதற்காக அந்த நேரத்தில் அவர் வீட்டுக்குச் சென்று பேசினோம்.

மூப்பனார் அவர்களை ஆதரிக்க வேண்டுமென்ற என் கருத்தினை அவரிடத்திலே வற்புறுத்திச் சொன்னேன். அப்போது அவர் ''மூப்பனார் இடத்திலே தனிப்பட்ட முறையிலே எங்களுக்கு வேறுபாடு கிடையாது. ஆனால் கொள்கை அளவில் முடிவெடுத்து விட்டோம். முலாயம் சிங் இல்லாவிட்டால் குஜ்ரால் என்பது அந்த முடிவு. இது



முரசொலி மாறன் - டி.ஜி.வெங்கட்ராமன் - என்.வி.என்.சோமு - டி.ஆர்.பாலு ஆகியோர் மத்திய அமைச்சர்களாகப் பதவியேற்றனர்

எங்களுடைய முடிவு மட்டுமல்ல. இடது சாரி முன்னணியிலே உள்ள 52 பேரும் இப்படி முடிவெடுத்து விட்டனர்!'' என்று அவர் என்னிடத்திலே சொன்னார்.

மறுநாள் காலையில், ஜனதாதளத்தினுடைய தலைவர், பீகார் முதல் அமைச்சர் லல்லு பிரசாத் யாதவ் இல்லத்திற்குச் சென்று பேசினோம். அப்போது சில த.மா.கா.உறுப்பினர்கள் கூட அங்கிருந்தார்கள். அப்போது அவர் கர்நாடக மாநில முன்னாள் முதல்வர் பொம்மை அவர்களைப் பிரதமராக ஆக்க வேண்டுமென்ற கருத்தை வெளியிட்டார்.

''நான், இப்போதுதானே கர்நாடகம் ஒரு பிரதமரைப் பெற்றிருந்தது. ஆகவே ஏன் இப்போது தமிழ்நாட்டிற்கு அந்த உரிமையைக் கொடுக்கக் கூடாது?'' என்று அவரிடத்திலே வலியுறுத்திக் கேட்டபோது, அவர் அதை ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை.

அதற்குப் பிறகு முலாயம் சிங் அவர்கள் தமிழ்நாடு இல்லத்திற்கே என்னைச் சந்திக்க வந்தார். அவரிடத்திலே 17 எம்.பி.க்கள் இருக்கிறார்கள். அவர் தன்னையே ஒரு வேட்பாளராகக் குறிப்பிட்டுத் தனக்கு ஆதரவு கொடுக்க வேண்டுமென்று கேட்டார். அவரிடத்திலேயும் நான் மூப்பனார் பெயரைக் குறிப்பிட்டுச் சொன்னேன். அவர், ''நானே ஒரு வேட்பாளராக இருக்கிறேன்- என்னிடத்திலேயே ஆதரவு கேட்கிறீர்களே'' என்று தட்டிக் கழித்துவிட்டார். இந்தச் சூழ்நிலைகளையெல்லாம் பார்த்த பிறகு இதற்குமேல் ஆதரவு திரட்டுவதிலோ யாரையும் வலியுறுத்துவதிலோ பயனில்லை என்று எனக்குத் தோன்றியது.

குமுதம்:- பிரதமர் தேர்வில் எழுந்த மனத்தாங்கல்கள் காரணமாகத் தமிழ்நாட்டு அரசியல் போக்குகளில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்படும் என்று எதிர்பார்க்கிறீர்களா?

நான்:- இந்தப் பிரச்சினையை வைத்து மாத்திரம் அல்ல. சமீப காலமாகவே மூப்பனாரும், நானும் ஒன்றாக இருக்கக் கூடாது என்று கருதுகிற சில நல்லவர்கள் சிண்டு முடிகிற வேலைகளில் இற்கியிருக்கிறார்கள். அது உங்களுக்கு நன்றாகத் தெரியும். நாட்டுக்கும் தெரியும். அதற்கேற்றாற்போல் சில

நிகழ்வுகளும் நடைபெறுகின்றன. குறிப்பாக உள்ளாட்சி மன்றத் தேர்தலில் சில இடங்களில் இரு கட்சிகளிலும் இருக்கிற அடிமட்டத் தொண்டர்களிடையே அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டுப் பரஸ்பரம் வேட்பாளர்களைத் தோற்கடிக்கிற சம்பவங்கள் நடந்திருக்கின்றன. இதெல்லாம் சாதாரணமான விஷயங்கள். அவற்றைப் பெரிதுபடுத்த வேண்டிய அவசியம் எனக்கும் இல்லை. மூப்பனாருக்கும் இல்லை. மேல் மட்டத்தில் நாங்கள் சரியாக இருந்தால் இதுபற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டியதில்லை. ஆனால், என் மனதையோ-மூப்பனார் மனதையோ கலக்குகிற அளவிற்கு ஒரு முயற்சி மேற்கொண்டு, பத்திரிகைகளிலே சில பேர் திட்டமிட்டு எழுதி வருகிறார்கள். இந்தப் பிரதமர் பதவி நிகழ்ச்சிகள் அவர்களுக்கு உச்சகட்டமாகக் கிடைத்திருக்கிறது. ஆனால் என்னைப் பொறுத்தவரையில் அவர்கள் செய்கிற கலகங்களுக்கு நான் நிச்சயமாகச் செவிசாய்க்க மாட்டேன். உறுதியாக இருக்கிறேன். ஏனென்றால், எனக்கும் மூப்பனாருக்கும் உள்ள நட்பு இன்று நேற்று ஏற்பட்டதல்ல-நீண்ட காலமாக இருந்து வருகிற ஆழமான நட்பு.

இவ்வாறு விளக்கமாக நான் பேட்டி அளித்த பிறகு தமிழக மக்கள் அனைவருக்கும், ஏன் த.மா.கா.வில் உள்ள அனைத்து நண்பர்களுக்கும் உண்மை நிலை புரிந்தது. எனினும் நம்மை எப்போதும் பிடிக்காத ஒரு சிலர் மட்டும் அந்தப் பிரச்சினை குறித்து திரும்பத் திரும்ப தாங்கள் நினைத்ததையே சொல்லி வந்தார்கள்.

★ ★ ★

நான் இந்தத் தொடரின் 9ஆவது அத்தியாயத்தில் காஞ்சிபுரம் **சி.வி.எம்.அண்ணாமலை** அவர்களைப் பற்றி விளக்கமாக எழுதியிருந்தேன். திராவிட இயக்கத்தின் தூண்களில் ஒருவர். பேரறிஞர் அண்ணா அவர்களோடு நெருங்கிப் பழகியவர்களில் ஒருவர். எனது அமைச்சரவையில் அமைச்சராக இருந்தவர். எங்களால் **''சி.வி.எம்.''** என்று அன்பொழுக அழைக்கப்பட்டவர். நான் டெல்லியில் பிரதமரைத் தேர்ந்தெடுக்கும் பணியிலே ஈடுபட்டிருந்த போது,

20.4.97 அன்று காலையில் காஞ்சிபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் இயற்கை எய்தினார்.

பெரியாரின் பகுத்தறிவுக் கருத்துக்களைப் பாமரரும் படித்தோரும் உணர்ந்து ஒரு மறுமலர்ச்சித் தமிழகம் உருவாக்கிட அறிஞர் அண்ணா அவர்கள் எழுதி நடித்த **''சந்திரோதயம்''**, **''நீதி தேவன் மயக்கம்''** ஆகிய நாடகங்களிலும், நான் எழுதி நடித்த **''தூக்குமேடை''**, **''பரப்பிரம்மம்''** நாடகங்களிலும் முக்கிய பாத்திரமேற்று நடித்து, தமிழகம் முழுவதும் சுயமரியாதை இயக்க வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவர் சி.வி.எம்.அண்ணாமலை.

பெரியார், அண்ணா ஆகியோர் அறிவித்த போராட்டங்கள் அனைத்திலும் - அடுத்து என்னுடைய தலைமையில் கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் ஈடுபட்டு-சிறைப் பறவையாக விளங்கியவர் அவர். அவருக்கு ஆறு மகன்கள், மூன்று மகள்கள்.

டெல்லியிலிருந்தவாறே நான் விடுத்த இரங்கல் செய்தி வருமாறு:-

''கழகத்தின் பெரும் தலையொன்று உருண்டு விட்டது. திராவிட இயக்கத்தின் வலிவுமிக்க தூண்களில் ஒன்று சாய்ந்து விட்டது. தி.மு.க என்ற மூன்று எழுத்துக்களில் நம்மவர் கொண்டுள்ள பாசத்தையும், நேசத்தையும் போலவே-சி.வி.எம். என்ற அந்த மூன்று எழுத்துக்களில் நம்மவர் அனைவருக்கும் பாசம் உண்டு. இந்த இயக்கத்தில் ஒவ்வொரு அங்குல வளர்ச்சிக்கும் தங்களின் தியாகச் செயலாலும், ஓயாத உழைப்பினாலும் காரணமாக இருந்தவர்களில் முக்கிய மானவராகவும், மூத்த முன்னோடித் தளகர்த்தராகவும் விளங்கியவர்தான் காஞ்சி சி.வி.எம். அண்ணாமலை அவர்கள். அவர் மறைந்து விட்டார் எனும் செய்தி கேட்கும்போது, அந்தோ! எத்தனை எத்தனையோ நினைவுகள் என் நெஞ்சில் நிழலாடுகின்றன.''

''இயக்கத்தின் கொள்கைகளை எடுத்துரைத்திட அண்ணா அவர்கள் நடத்திய எழுச்சிமிகு நாடகங்களில் அவர் நடித்ததை

மறக்க முடியுமா? என்னுடன் நூற்றுக்கணக்கான கொள்கைப் பிரச்சார நாடகங்களில் நடிப்பதற்காக தமிழகம் முழுதும் சுற்றுப் பயணம் செய்து, ஒரு தாயைப்போல என்னைப் பாதுகாத்த அந்தப் பரிவுமிக்க உள்ளத்தை மறக்க முடியுமா? எந்தச் சோதனை கழகத்திற்கு வரினும் ''அஞ்சாதே! நான் அருகிருக்கிறேன்!'' என்று தோள் உயர்த்தித் துணை நிற்பாரே அந்த உறுதியைத் தான் மறக்க முடியுமா?

தன்மானத் தங்கமாக-

தமிழ் உணர்வுச் சிங்கமாக-

திகழ்ந்த அந்தத் தீரரை-வீரரை இழந்து நின்று கண்ணீர் வடிப்பது அவரது குடும்பம் மட்டுமல்ல; கழகக் குடும்பமே கண்ணீரில் மிதக்கிறது என்பேன்.

''அவரது அஞ்சா நெஞ்சத்தையும், அயரா உழைப்பையும், தொண்டு செய்யும் தூய உள்ளத்தையும், இதயத்தில் பதிய வைத்துக் கொண்டு-அந்த இனியவர் விட்டுச் சென்றுள்ள பணிகளைத் தொடருவோம்'' என்று அந்த இரங்கல் செய்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

★ ★ ★



என் நெருங்கிய நண்பரான ஒரிசா
மாநில முன்னாள் முதல்வர் பிஜு
பட்நாயக் உடலுக்கு மலர் அஞ்சலி



கழகக் குடும்பத்தையே கண்ணீரில் மிதக்க விட்டு மறைந்த தன்மானத் தங்கம் - தமிழ் உணர்வுச் சிங்கம் சி.வி.எம். அண்ணாமலை

1991 ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் நாள், இந்தியாவின் முன்னாள் பிரதமர், இந்தியாவின் இளம் தலைவர், ராஜீவ்காந்தி அவர்கள் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து தமிழகத்தின் பல பகுதிகளிலே கலவரங்கள் ஏற்பட்டு-பொதுமக்கள் பலருடைய கோடிக்கணக்கான ரூபாய் சொத்துக்கள் நாசமாகின. அவர்களின் இழப்பைச் சரிக்கட்ட, பாதிக்கப் பட்டவர்களுக்கெல்லாம் அரசின் சார்பிலே இழப்பீடு கொடுக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை தமிழகம் எங்கும் இருந்தது. அ.தி.மு.க. ஆட்சியினர் அந்தக் கோரிக்கையை ஏற்காத காரணத்தினால், தி.மு.க.சார்பில் பொதுச் செயலாளர் பேராசிரியர் சென்னை உயர் நீதிமன்றத்தில் 1991 ஆம் ஆண்டு ரிட் மனு ஒன்றினைத் தாக்கல் செய்தார்.

அந்த மனுவில், ''விசாரணைக் கமிஷன் ஒன்றினை அமைத்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணத் தொகை வழங்கிட ஏற்பாடு செய்ய வேண்டும்'' என்ற கோரிக்கை வைக்கப்பட்டது. அ.தி.மு.க. அரசு தாக்கல் செய்த பதிலில் அந்தக் கோரிக்கையை ஏற்க முன் வரவில்லை. ஆனாலும் சென்னை உயர்நீதி மன்றம், கழகத்தின் சார்பில் போடப்பட்ட வழக்கினை ஏற்று முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி, கே.ஜெ.எம்.ஷெட்டி அவர்களை சிறப்பு ஆணையராக நியமித்து, பாதிக்கப்பட்டவர்களின் கோரிக்கைகளை எல்லாம் பரிசீலித்து நிவாரணத் தொகை குறித்து பரிந்துரை செய்ய வேண்டுமென்று ஆணையிட்டது.

தமிழகத்திலே அ.தி.மு.க ஆட்சி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில்-கே.ஜெ.எம்.ஷெட்டி அவர்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த முறையீடுகளை விசாரித்து-மாவட்ட ஆட்சியர்களால்



டெல்லியில் பணிகளை முடித்து சென்னை திரும்பிய என்னை வரவேற்ற கழகத்தார்

பரிந்துரை செய்யப்பட்ட 6328 மனுக்களைப் பரிசீலனை செய்து மொத்தம் 2 கோடியே 34 லட்சத்து 18 ஆயிரத்து 309 ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டது. ஆனால் இந்த இழப்பீட்டுத் தொகையை-நாசத்தின் அளவோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது-மிக மிகக் குறைவாக இருந்ததால், பாதிக்கப்பட்ட பலர் அந்த இழப்பீட்டுத் தொகையை ஏற்றுக் கொள்ள மறுத்து நீதி மன்றத்திற்குச் சென்றார்கள். மேலும் கே.ஜெ.எம். ஷெட்டி பாதிக்கப்பட்டவர்களில் பலருக்கு எவ்வித இழப்பீட்டுத் தொகையுமே பரிந்துரைக்காமல் விட்டு விட்டார். அவர்களும் நீதி மன்றத்தில் முறையிட்டுக் கொண்டார்கள்.

இந்த மனுக்கள் எல்லாம் நீதி மன்றத்தினால் ஏற்கப்பட்டு-அரசின் பதிலை நீதி மன்றம் கோரியது. அ.தி.மு.க. அரசு நீதி மன்றத்திற்கு தெரிவித்த தகவலில், அந்தக் கோரிக்கை மனுக்களையெல்லாம் நிராகரிக்கலாம் என்றது. வழக்கு நீதி மன்றத்திலே இருந்த நிலையில்-தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. தி.மு.கழகம் பொறுப்புக்கு வந்தது. எனவே பாதிக்கப்பட்டவர்களின் முறையீடுகளை மனதிலே கொண்டு 11.2.1997 அன்று அமைச்சரவையிலே இது பற்றி விவாதித்து-அ.தி.மு.க.அரசு தாக்கல் செய்த மனுவினைத் திரும்பப்பெற்று-புதிதாக பதில் மனு தாக்கல் செய்யலாம் என்ற முடிவு எடுக்கப்பட்டது. அந்த முடிவு நீதிமன்றத்திற்கும் அரசு வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டு, சென்னை உயர்நீதி மன்றம் அதனை ஏற்றுக் கொண்டது.

அதற்கேற்ப வழங்கிய நிவாரணத்தொகை போதாதென்று கூறி, தொகையைப் பெற்றுக் கொள்ளாத நிலையில் நீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்தவர்களின் கோரிக்கைகளையும்-

குறைந்த அளவு நிர்ணயிக்கப்பட்ட நிவாரணத் தொகையை பெற்றுக் கொண்டு, மேலும் நிவாரணத்தொகை வழங்கப்பட வேண்டுமென்று மனு தாக்கல் செய்தவர்களின் கோரிக்கைகளையும் பரிசீலித்து, நிவாரணம் வழங்கிட உச்ச நீதி மன்ற முன்னாள் நீதிபதி **எஸ்.மோகன்** அவர்களைக் கொண்டு ஒரு நபர் கமிஷன் நியமிக்கப்படும் என்று தமிழகச் சட்டப் பேரவையில் 4.4.1997 அன்று அறிவித்தேன்.

இந்தக் கமிஷன் 1065 பேர்களின் மனுக்களை விசாரணை செய்து ஒரு கோடியே 46 லட்சத்து 70 ஆயிரத்து 751 ரூபாய் மேலும் நிவாரணத்தொகையாக வழங்கிட ஆணையிட்டு, அந்தத் தொகையும் மாவட்ட ஆட்சியர்கள் மூலம் உரிய நபர்களுக்கு வழங்கப்பட்டது.

19. மனித நேயம் வளர்த்திட!


மனித நேயம் வளர்த்திட மயிலை கபாலி கோயிலில் கழக அரசு நடத்திய சமபந்தி விருந்து

1989, 1990 ஆம் ஆண்டுகளிலே நடைபெற்ற தி.மு.கழக ஆட்சியிலே ஊழல் நடைபெற்று விட்டதாகக் கூறி, அதன்மீது விசாரணை நடத்துவதற்காக ஜெயலலிதா ஆட்சியிலே விசாரணைக் கமிஷன் ஒன்று *13.8.1992* அன்று அமைக்கப்பட்டது. விசாரணைக் கமிஷன் நியமித்ததோடு மட்டுமல்லாமல், அதுபற்றி ஒரு முழுபக்க விளம்பரம் அனைத்து ஏடுகளிலும் *21.9.1992* அன்று காலையில் வெளியிடப்பட்டது. விசாரணைக் கமிஷன் நியமித்தது குறித்து அரசு செலவில் பத்து இலட்சம் ரூபாய் செலவழித்து முழுப்பக்க விளம்பரங்கள் செய்தது, அதற்கு முன்பும் நடந்ததில்லை, அதற்குப் பிறகும் நடந்ததில்லை. *21*ந் தேதி வெளிவந்த விளம்பரத்திற்குப் பிறகும், கழக அரசின்மீது புகார்கள் எதுவும் எதிர்பார்த்த அளவிற்கு வராத காரணத்தால், மீண்டும் ஒருமுறை அதுவும் முழுப்பக்க விளம்பரமாகவே செப்டம்பர் *28*ஆம் தேதியன்றும் வெளியிடப்பட்டது என்றால், எந்த அளவிற்குப் பழி வாங்கும் தன்மையோடு அ.தி.மு.க. ஆட்சியினர் நடந்து கொண்டனர் என்பதை அறிந்து கொள்ளலாம்.

குற்றச்சாட்டுகள் தொடர்பான தகவல்கள் அடங்கிய வாக்குமூலத்தைத் தர விரும்புகின்றவர்கள், *15.10.1992* க்கு முன்னர் தாக்கல் செய்யலாம் என்றும் அந்த இரண்டு விளம்பரங்களிலும் தெரிவிக்கப்பட்டது. அதிகம் பேர் முன் வராததால், கால வரம்பு *5.11.1992* வரை என்று மீண்டும் ஒரு

முறை நீடிக்கப்பட்டது. அதற்குப் பிறகும் ஆறு உறுதி மொழிப்பத்திரங்கள் தான் வரப்பெற்றன.

அந்தக் கமிஷன் நீதி பதியாக உயர்நீதி மன்ற ஓய்வு பெற்ற நீதிபதி எஸ். சிவசுப்ரமணியம் அவர்களும் நியமிக்கப் பட்டு, விசாரணைக் கமிஷன் விசாரணை நடத்தியது.



சமபந்தியில் விருந்தினர்க்கு உபசரிப்பு

1996 மே திங்களில் மீண்டும் தி.மு.கழக ஆட்சி தமிழகத்திலே பதவியேற்ற போதும், அ.தி.மு.க. அரசு அமைத்த அந்த நீதி விசாரணைக் கமிஷனை கலைக்காமல்- அந்தக் கமிஷன் தொடர்ந்து நடைபெற்று-கழக ஆட்சிமீது தரப்பட்ட அனைத்துப் புகார்களையும் விசாரித்து அரசாங்கத்திற்கு அறிக்கை தந்தது. 15.3.1997 அன்று நீதிபதி சிவசுப்ரமணியம் அரசிடம் அளித்த 75 பக்கங்களைக் கொண்ட அறிக்கையைப் பேரவையிலேயே வைக்கும்படி தெரிவித்தேன். அந்த அறிக்கையின் முடிவுகளைப் பற்றி தலைமைச் செயலாளர் கையெழுத்திட்டு அரசாணை ஒன்றையே வெளியிட்டார்.

அந்த விசாரணைக் கமிஷன் முன்பாக - என்மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளும், அந்தக் குற்றச்சாட்டுகள் பற்றி நீதிபதி சிவசுப்பிரமணியம் அவர்களின் முடிவுகளும் வருமாறு-

1. தொழில்முறை பொறுப்பையும் வகித்த முதலமைச்சர் திரு.மு.கருணாநிதி தனது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி, மகன்-மருமகன் ஆகியோருக்கு கிரானைட் தொழில் நடத்துவதற்கு சலுகை காட்டினார் என்பது முதல்

குற்றச்சாட்டு. இந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்று நீதிபதி சிவசுப்பிரமணியன் கமிஷன் முடிவு.

2. இரண்டாவது குற்றச்சாட்டும் தொழில்முறை பற்றியதுதான் - அதிலும் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதுதான் கமிஷன் முடிவு.

3. மூன்றாவது குற்றச்சாட்டு - தமிழ்நாடு ஓட்டல் உரிமையாளர்கள் சங்கத்திடமிருந்து 75 லட்சம் ரூபாய் விற்பனை வரிச்சலுகை காட்டுவதற்காக கையூட்டுப் பெற்றதாக-இந்தக் குற்றச்சாட்டும் நிரூபிக்கப்படவில்லை. இது ஒரு ஆதாரமற்ற குற்றச்சாட்டு என்று நீதிபதி கருத்து தெரிவித்தார்.

4. மருத்துவக் கல்லூரிகளில் இடம் வாங்கித் தருவதாக 40 லட்சம் கையூட்டுப் பெற்றதாக ஒரு குற்றச்சாட்டு. இதுவும் ஆதாரமற்ற குற்றச்சாட்டு என்று நீதிபதி தீர்ப்பு கூறினார்.

இதே போன்றுதான் மொத்தம் ஒன்பது குற்றச்சாட்டுகள் விசாரிக்கப்பட்டதில் ஒன்றுகூட நிரூபிக்கப்படவில்லை என்றும், குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்றும் நீதிபதி முடிவுகளை அளித்தார்.

இந்த முடிவுகள் அறிவிக்கப்பட்ட பிறகு, முன்னாள் முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா விடுத்த அறிக்கையில், 1969 முதல் 1976 வரை உள்ள ஆட்சிக் காலத்திலும், 1989-1990 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற ஆட்சிக் காலத்திலும் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று அறிக்கை விடுத்தார். அதைப்பற்றி செய்தியாளர்கள் என்னிடம் கேட்டபோது, ''சுதந்திரம் கிடைத்த நாளிலேயிருந்தே விசாரணை நடத்தலாம்'' என்று பதில் கூறினேன்.

சிவசுப்பிரமணியம் கமிஷன் குறித்து முழுப்பக்க விளம்பரங்கள் செய்யப்பட்ட கட்டணம் மட்டும் 10 லட்சத்து 74 ஆயிரத்து 783 ரூபாய் - இது தவிர விசாரணைக் கமிஷன் நீதிபதியின் சம்பளம் மற்றும் தொலைபேசிக் கட்டணம்



சென்னை வடபழனி முருகன் கோயிலில் கலந்து கொண்ட தளபதி ஸ்டாலின்

போன்ற செலவினங்கள் 20 லட்சத்து 41 ஆயிரத்து 270 ரூபாய்-இந்த விசாரணைக் கமிஷனிலே பணிபுரிந்த ஏனைய அதிகாரிகளுக்கான ஊதியம் மற்றும் அவர்களுக்கான செலவுகள் என்ற முறையில் 20 லட்சத்து 21 ஆயிரத்து 330 ரூபாய் - இது தவிர, இந்தக் கமிஷனால் நியமிக்கப்பட்ட புலனாய்வுத்துறை அதிகாரிகளின் செலவுகள் 46 இலட்சத்து 429 ரூபாய் ஆக மொத்தச்செலவு 97 இலட்சத்து 37 ஆயிரத்து 812 ரூபாய்!

அ.தி.மு.க ஆட்சியிலே கூறப்பட்ட நிலக்கரி இறக்குமதி ஊழல் குறித்து விசாரணை செய்வதற்காக சந்துர்கர் கமிஷன் ஒன்றை நியமித்தார்கள். ஆனால் அந்தக் கமிஷனின் விதிமுறைகள் குறித்து எந்தப் பத்திரிகையிலும், ஏன் ஒரு பத்திரிகையிலேகூட முழுப் பக்க விளம்பரம் கொடுக்கப்பட வில்லை. ஆனால் தி.மு.க. அரசுமீது ஜெயலலிதா பிறப்பித்த கமிஷனுக்காக அனைத்து ஏடுகளிலும் முழுப்பக்க விளம்பரங்களுக்கான செலவு உள்ளிட்ட மொத்தச் செலவு 97 இலட்சம் ரூபாய்!

★ ★ ★

எதிர்க்கட்சிகளைப் பழி வாங்க இந்த அளவிற்கு வீண் விரயம் செய்யப்பட்டதைப் போலவே, பேரவையில் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதங்களின் போதும்-கேள்வி நேரங்களின் போதும்-அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஒரு புதிய

நடைமுறை ஏற்பட்டது. அ.தி.மு.க. உறுப்பினரோ, அல்லது அமைச்சர்களோ பேச்சினைத் தொடங்குவதற்கு முன்பு, ஜெயலலிதா குறித்து ஒரு நீண்ட புகழாரத்தைத் தொடுத்து, அதற்குப் பிறகு பேச்சைத் தொடங்குவது என்ற பழக்கத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தப் பழக்கம் இன்றளவும் அ.தி.மு.க உறுப்பினர்களால் பேரவையிலே நடைபெற்றுக் கொண்டு தான் உள்ளது.

அ.தி.மு.க. ஆட்சிக்குப் பிறகு, 1996 ஆம் ஆண்டு தி.மு.கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, தி.மு.கழகத்தைச் சேர்ந்த அமைச்சர்களும், ஆளுங்கட்சி உறுப்பினர்களும் அ.தி.மு.க.வைப் போல பேச முற்பட்டு தங்கள் உரையை ஆரம்பிப்பதற்கு முன்பாக, என்னைப் பற்றி பலபடப் புகழ்ந்துரைத்து, அதற்குப் பிறகே பேச்சினைத் தொடங்க முற்பட்டார்கள். நானும் சில நாட்கள் பொறுத்துப் போனேன்.

15.4.1997 அன்று ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம். அப்போது அந்தத் துறையின் அமைச்சராக இருந்த சமயநல்லூர் "செல்வ ராஜ் - தனது பேச்சினை இவ்வாறு தொடங்கினார்- சாதாரண மிகச் சாதாரண - சாமானிய-ஏழை எளிய குடும் பத்தில் பிறந்த என்னை-நன்றி நதிக்கரையாம் வைகை நதி தீரத்தில் பிறந்த என்னை- சரஸ்வதி பூஜையன்று மட்டுமே புத்தகத்தைத் தேடுகின்ற முழுக் கல்வி அறிவு பெறாத சமுதாயத்தில் பிறந்த என்னை- பொதுவாழ்வில் பொன்விழா கண்ட கலைஞருடைய அரசியல் வயதை எட்டிப்பிடிக்காத என்னை- ஆதி திராவிடர்



பழிவாங்கும் வெறியோடு - விசாரணைக் கமிஷன் ஒன்றை அமைத்து - 10 இலட்சம் ரூபாய் செலவிட்டு - ஏடுகளில் முழுப் பக்க விளம்பரங்கள் தந்தார், ஜெயலலிதா!

நலத்துறை அமைச்சராக இந்த மாமன்றத்தில் அமரச் செய்து, இத்துறைக்கான மானியக் கோரிக்கையினைச் சமர்ப்பிக்கின்ற பெரும் வாய்ப்பினை வழங்கிய ஈடில்லா கழகத்தின் தலைவர், இணையில்லா கழக ஆட்சியின் முதல்வர்'' என்று பேசிக்கொண்டேயிருந்த நிலையில்-

நான் எழுந்து குறுக்கிட்டு, ''அமைச்சர்கள் தங்களுடைய மானியக் கோரிக்கை அல்லது உரை இவைகளை நிகழ்த்தும் போது என்னைப் பற்றி ஒரு ஐந்து நிமிடமாவது பேசினால்தான் அது அவையின் மரபு என்று தவறாகக் கருதிக் கொண்டிருக்கிறார்கள். பொருத்தமான நேரத்தில், எப்போதாவது தேவைப்படுகின்ற நேரத்தில், குறிப்பிட வேண்டிய சமயத்தில் பெயரைக் குறிப்பிட்டால் போதுமானது. முதல்வரைக் குறிப்பிட்டால் போதுமானது. ஒரு சாங்கியமாகவே ஒரு புத்தகத்திற்கு முன்னுரை எழுதுவதைப் போல என்னைப் பற்றி அவர்கள் முன்னுரை எழுதிவிட்டு- இவர்கள் நல்ல எண்ணத்தோடு முன்னுரை எழுதுகிறார்கள். ஆனால் பலர், பத்து நாள் அதற்காக பல பத்திரிகைகளில் என்னைத் திட்டுகிறார்கள். இவர்களுடைய முன்னுரையை வைத்துக்கொண்டு-ஒரு வேளை அப்படி திட்டப்படுவதற்காக முன்னுரை எழுதுகிறார்களோ அமைச்சர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. எனவே தங்களை நான் மிகுந்த பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். இப்போது அவர் பேசிய வாசகங்களில் என்னைப் பற்றி குறிப்பிட்ட வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படித் தங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்!'' என்று பேரவைத் தலைவரை நோக்கிக் குறிப்பிட்டேன்.

பேரவைத் தலைவர் எனக்கு சமாதானம் அளிக்கும் வகையில், ''ஆண்டுக்கு ஒரு முறைதான் அமைச்சர்களுக்கு வாய்ப்பு. முதல் அமைச்சர் சொன்னதை எச்சரிக்கையாக எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த முறை போனால் போகிறது. இந்த அளவிலே குறிப்பிலே இருக்கலாம்!'' என்று தீர்ப்பளித்தார். அதன் பிறகு தான் கழகத்தின் சார்பில்




பேசுபவர்களால் இவ்வாறு புகழாரங்கள் சூட்டப்பட்டது முடிவுக்கு வந்தது.

★ ★ ★

1995 ஆம் ஆண்டில் அ.தி.மு.க. ஆட்சியில் தென் மாவட்டங்களில் மிகப்பெரிய சாதிக் கலவரங்கள் ஏற்பட்டு, அதன் பின்னர் அந்தப் பிரச்சினை சற்று அடங்கியிருந்த நிலைமாறி, 1997 ஆம் ஆண்டு மே திங்கள் வாக்கில், ''மீண்டும் சாதிக் கலவரங்கள் தென்மாவட்டங்களில் விசுவரூபம் எடுத்தன'' என்ற செய்திகள் எனக்கு வரத் தொடங்கின.

95ஆம் ஆண்டில் கடைசி ஆறு மாதங்களில் திருநெல்வேலி-கட்டபொம்மன், சிதம்பரனார், காமராஜர் ஆகிய மாவட்டங்களில் இரு வெவ்வேறு சமூகங்களைச் சேர்ந்த மக்களிடையே மோதல் ஏற்பட்டது. அப்போது இரண்டு தரப்பிலும் பலர் கொல்லப்பட்டனர். சொத்துக்களுக்கும் பெருத்த சேதம் ஏற்பட்டது.

1997ஆம் ஆண்டில் மீண்டும் சாதிக் கலவரம் தோன்றியது. ஒரு சிறிய சம்பவம் நடந்தாலே, உடனே அதை ஊதிப் பெரிதாக்கிட சில சுயநலவாதிகள் திட்டமிட்டுச் செயல்பட்டார்கள். கலவரங்களுக்கு சாதி உணர்வு மட்டுமல்லாது, சமூகப் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளும் காரணமாக அமைந்தன. உதாரணமாக அதுவரை பொருளாதார ரீதியில் பின்தங்கியிருந்த அடித்தள மக்கள்,



சாதிக் கலவரங்கள் பற்றி விவாதிக்க நான் கூட்டிய அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம்

வசதியான நிலையை எட்டும்போது அது பிற சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மனதில் பொறாமை உணர்வை ஏற்படுத்தியது. சில சாதி சங்கத் தலைவர்கள் தங்களுடைய சுயநல லாபத்திற்காக கிராம மக்களிடையே ஏற்பட்டுள்ள இந்த மன வேற்றுமையைப் பெரிதாக்கி, ஆதாயம் தேடத் தலைப்பட்டுள்ளதால்தான் கலவரத்தை அடியோடு ஒழிக்க முடியவில்லை.

தென் மாவட்டங்களில் முக்கிய அமைச்சராக இருந்த தம்பி **தங்கபாண்டியன்** அவர்களை உடனடியாக அந்தப் பகுதிகளுக்கு அனுப்பி, பாதிக்கப்பட்ட இரண்டு பிரிவினரையும் அழைத்துப் பேசி, அமைதி திரும்புவதற்கான வழிவகைகளைக் காணுமாறு பணித்தேன். ''அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தை சென்னையிலோ மதுரையிலோ விரைவில் கூட்டுவேன்'' என்றும் அறிவித்தேன்.

போராட்டத்திற்கான ஆரம்பக் காரணம் **தேவர்சிலை** அமைப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து ஒரு சாரார் போராட்டம்-இன்னொரு தரப்பினர் **சுந்தரலிங்கனார்** போக்குவரத்துக் கழகத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து ஒரு போராட்டம். மாவட்டந் தோறும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் அனைத்துத் தரப்பினரையும் கொண்டு அமைதிக் குழுக்கள் உடனடியாக அமைக்கப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தினேன். 10.5.1997 தேதிய **''தினமணி''** தலையங்கத்தில் ''முதலமைச்சரின் முயற்சிகள் வரவேற்கத்தக்கது. மாவட்ட ஆட்சித் தலைவர்களும், காவல்துறையினரும் மிகவும் நிதானத்துடன் சிக்கலான

நிலைமையை கையாளுகின்றனர்-அப்படியிருந்தும்கூட துப்பாக்கிச்சூடு நடத்தும் நிலை ஏற்பட்டு சிலர் உயிரிழந்துள்ளனர்'' என்று எழுதியது.

தென் மாவட்டங்களில் அமைதி திரும்ப சமூகத்தின்பால் பற்றுள்ள அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென்று த.மா.கா. தலைவர் **மூப்பனார்** அவர்கள் அறிக்கை விடுத்தார். மேலும் அந்தக் கட்சியின் ஐந்து மூத்த தலைவர்கள் **சோ.பால கிருஷ்ணன், பாரமலை, அரு.சங்கர், கே.எஸ்.எம்.ராமச்சந்திரன், கடையநல்லூர் மஜீத்** ஆகியோரைக் கொண்ட குழு ஒன்றினை பதற்றம் நிலவிய பகுதிகளுக்கு அனுப்பி வைத்தார்.

மே திங்கள் 5ஆம் தேதியன்று திருநெல்வேலிக்கு அருகேயுள்ள துறையூரில் இரு தரப்பினரிடையே ஏற்பட்ட கலவரத்தை ஒடுக்க துப்பாக்கிச் சூடு வரையில் சென்று, இரண்டு பேர் உயிரிழக்க நேரிட்டது. மே 10ஆம் தேதியன்று கலவரம் ராஜபாளையம் பகுதியில் பரவி, அங்கே ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டார். அதற்கு முன்பு தொடர்ந்து டெல்லிப்பயணம், சட்டப்பேரவை என்று இடைவிடாத பணிகள் காரணமாக, ஓய்வே கிடைக்காத நிலையில், உதகையில் அப்போது நடைபெற்ற 102 வது மலர் கண்காட்சியையொட்டி சில நாட்கள் அங்கே தங்கி ஓய்வெடுக்கலாம் என்ற எண்ணத்தோடு சென்றிருந்தேன்.

ஆனால் நான் போய்ச் சேர்ந்த முதல்நாளே, தென் மாவட்டங்களில் சாதிக் கலவரம் முற்றுகிறது என்ற செய்தி வந்த காரணத்தால், உடனடியாகச் சென்னைக்குத் திரும்ப முடிவு செய்தேன். அங்கிருந்தவாறே டெல்லியில் இருந்த திரு.மூப்பனாரிடமும், சென்னையில் இருந்த தோழர் **நல்லகண்ணு**விடமும் தொலைபேசியிலே பேசினேன். சென்னைக்குத் திரும்பியவுடன் அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று அதிகாரிகளுக்கு போனிலேயே அறிவுரை கூறிவிட்டு, ஓய்வுக்கு ஓய்வு கொடுத்து விட்டு சென்னை திரும்பினேன்.



கலவரங்களைத் தடுப்பது பற்றி தேவர் - தேவேந்திரகுல சமூகத் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தினேன்.

11.5.1997 அன்று திருவில்லிப்புத்தூர் அருகே மம்சாபுரத்தில் வன்முறைச் சம்பவங்கள் இரு தரப்பினரிடையே நடைபெற்று, *13* வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டதோடு, ஆறு பேருக்கு அரிவாள் வெட்டும் விழுந்தது. *12*ஆம் தேதி ராஜபாளையத்தில் செந்தட்டியாரபுரத்தில் தி.மு.க.ஒன்றியச் செயலாளர் **தங்கச்சாமியின்** தந்தை **பரமசிவம்** வன்முறைக் கும்பலால் வெட்டிக் கொல்லப்பட்டார்.

14.5.1997 அன்று சென்னை ராஜாஜி மண்டபத்தில் தென் மாவட்டங்களில் ஏற்பட்ட கலவரம் குறித்து விவாதிக்க அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டினேன். அதற்கிடையே மக்கள் தலைவர் மூப்பனார் அவர்கள் ''சாதித் தலைவர்கள் பெயரில் மாவட்டங்களை அமைப்பதற்குப் பதிலாக, அவர்கள் பெயரில் மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கலாம்'' என்று யோசனை தெரிவித்தார்.

நாளேடுகள் சிலவும், ''திராவிடக் கட்சிகளின் ஆட்சிக் காலத்தில்தான் மாவட்டங்களுக்கும் போக்குவரத்துக் கழகங்களுக்கும் சாதிப் பெயர்கள் சூட்டப்பட்டன. பெயர் வைக்கும் விஷயத்தில் ஆட்சியாளர்கள் துணிச்சலுடன் செயல்பட வேண்டும். தேவைப்பட்டால் ஏற்கனவே வைத்த பெயர்களைப் பொதுக்கருத்து அடிப்படையில் விலக்கிக் கொள்ளவும் அரசு தயங்கக்கூடாது'' என்று எழுதின.

சிவகாசியில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காகவும், கண்டமனூரில் தேவர் சிலை

உடைப்பைக் கண்டித்தும், தேவர் பேரவை சார்பில் அன்றைய தினம் தென்மாவட்டங்களில் ''பந்த்'' நடத்த கோரிக்கை அறிவிக்கப்பட்டது.

14ஆம் தேதி நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் அனைத்துக் கட்சித்தலைவர்களும், பல்வேறு இயக்கங்களின் தலைவர்களும் கலந்து கொண்டனர். அ.தி.மு.க.மட்டும் கலந்து கொள்ளவில்லை. கூட்டத்தில் த.மா.கா.தலைவர் அருமை நண்பர் ஜி.கே.மூப்பனார், எதிர்க்கட்சித் தலைவர் சோ.பாலகிருஷ்ணன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஆர்.நல்லகண்ணு, ஜி.பழனிச்சாமி, பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் டாக்டர் ராமதாஸ், பேராசிரியர் தீரன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் என்.சங்கரய்யா, கே.என்.லட்சுமணன், பா.ஜ.க.சார்பில் டாக்டர் மைத்ரேயன், எம்.ஜி.ஆர். கழகத்தின் சார்பில் ஆர்.எம்.வீரப்பன், ஜெகத்ரட்சகன், போட்டி அ.தி.மு.க.சார்பில் செ.அரங்கநாயகம், கே.கே.எஸ். எஸ்.ஆர். ராமச்சந்திரன், திராவிடர் கழகத்தின் சார்பில் ஜி.சாமிதுரை, கலிபூங்குன்றன், இந்திய தேசிய லீக் சார்பில் அப்துல் லத்தீப், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சார்பில் அப்துல் சமது, தேவேந்திர குலவேளாளர் கூட்டமைப்பு சார்பில் டாக்டர் கே.கிருஷ்ணசாமி, தேவர் பேரவை சார்பில டாக்டர் வி. ராமகிருஷ்ணன், சி.கே.தமிழரசன், ஜான் பாண்டியன், எஸ்ஆர்.சுப்பிரமணியம், ம.தி.மு.க.சார்பில் அப்போது அந்தக் கட்சியிலே இருந்த பொன்.முத்து ராமலிங்கம், தங்கவேலு, கந்தசாமித் தேவர், சீனிச்சாமித் தேவர், கே.வி.தங்கபாலு, அய்யணன் அம்பலம், கிருஷ்ணபறையனார், ஐக்கிய பொதுவுடைமைக் கட்சித் தலைவர் தா.பாண்டியன், அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் ஆண்டித்தேவர், திருவாரூர் தங்கராசு, ஜி.ஏ.வடிவேலு, பண்ருட்டி ராமச்சந்திரன், பொன்.பரமகுரு, எல்.இளையபெருமாள், கோவை ராமகிருஷ்ணன், ஆனூர் ஜெகதீசன், சக்திதாசன், வை.பாலசுந்தரம், கோபாலகிருஷ்ணயாதவ், திண்டிவனம் ஸ்ரீராமுலு, எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. சார்பில்



தலைவர்கள் பெயரால் அறக்கட்டளைகளைத் துவங்குவதாக அறிவித்ததற்கு மூப்பனார் எனக்கு போனா பரிசளித்து வாழ்த்தினார்

எஸ்.எஸ்.ராஜேந்திரன், எஸ்.பாலசுப்பிரமணியம், சே.நகைமுகன், எஸ்றா சற்குணம், கே.செல்ல முத்து, கோவை செழியன், கெங்கு சாமி நாயுடு, ப.நெடுமாறன், வன்னிய அடிகளார், குணங்குடி அனிபா, சந்தானம் எம்.எல்.ஏ., வல்லரசு, மணிகண்டன் ஆகியோரும் சட்டப்பேரவைத் தலைவராக இருந்த பி.டி.ஆர்.பழனிவேல் ராஜன், அமைச்சர்கள் பேராசிரியர் ஆர்க்காடு வீராசாமி, கோ.சி.மணி, பொன்முடி, தமிழ்க்குடி மகன், ஆலடி அருணா, ரகுமான்கான், வே.தங்க பாண்டியன், ஐ.பெரிய சாமி, சமயநல்லூர் செல்வராஜ் ஆகியோரும், தலைமைச் செயலாளர் கே.ஏ.நம்பியார், உள்துறை செயலாளராக இருந்த பூர்ணலிங்கம், பொதுத்துறை செயலாளராக இருந்த தேவராஜ், காவல் துறைத் தலைவராக இருந்த கே.கே.ராஜசேகரன் நாயர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அந்தக் கூட்டத்தில் சாதிக் கலவரங்களைத் தடுப்பது குறித்து, "தேவர் பேரவைக் கட்சிப் பிரிவுகள் மற்றும் தேவேந்திரர் சங்கப் பிரிவுகளைச் சேர்ந்த இரண்டு தரப்பினருடன் 15.5.1997 அன்று காலையில் தலைமைச் செயலகத்தில் நான் விரிவான ஆலோசனை நடத்துவேன்" என்று அறிவித்தேன். மேலும், சமூக நல்லிணக்கத்தை வலியுறுத்தும் நோக்கத்துடன் மதுரையிலே ஒரு மாநாடு நடத்தப்படும் என்றும், அதிலே சமுதாயத் தலைவர்கள் பங்கேற்பார்கள் என்றும் நான் செய்தியாளர்களிடம் தெரிவித்தேன். மாவட்டங்கள், போக்குவரத்துக் கழகங்களுக்கு சாதித்தலைவர்களின் பெயரை வைப்பதற்கு கூட்டத்தில் கலந்து கொண்ட பல அரசியல் கட்சித் தலைவர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

மேலும் அன்று நடைபெற்ற கூட்டத்தில் உயிரிழந்தோர்க்கும், உடைமைகளை இழந்தோர்க்கும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அதிகாரிகள் வாயிலாக முறையாக ஆய்வு செய்து போதுமான நட்ட ஈடு வழங்க உறுதி அளிக்கப்பட்டது. பிரச்சினைகள் எதுவாக இருந்தாலும், அதனைப் பேசித் தீர்த்துக் கொண்டு அமைதி காத்திட வேண்டுமென்றும், எந்தக் காரணத்தைக் கொண்டும் வன்முறை செயல்களிலே ஈடுபட வேண்டாமென்றும் அனைத்துச் சமுதாய மக்களையும் அந்தக் கூட்டம் கேட்டுக் கொண்டது. தீண்டாமை எனும் கொடுமை அணுகவிடாது எல்லோரும் ஓர் குலம் என்னும் கருத்தை உள்ளத்தில் பதித்து-சகோதர உணர்வுடன் சமத்துவம் காத்திட வேண்டும் என்று அனைத்துப் பிரிவு மக்களையும் அக்கூட்டம் வேண்டிக் கொண்டது.

14ஆம் தேதிய அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுத்த முடிவிற்கிணங்க, 15.9.1997 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் காலை 10.30 மணி முதல் பிற்பகல் 2 மணிவரையில், தென்மாவட்டங்களில் சாதிக் கலவரங்களைத் தடுப்பது தொடர்பாக தேவர் மற்றும் தேவேந்திர குல சமூகத் தலைவர்களையெல்லாம் அழைத்து தனித்தனியே பேச்சு நடத்தினேன். தேவர் சமுதாயம் சார்பாக **அய்யண்ணன் அம்பலம், ஆண்டித்தேவர், பொன்.பரமகுரு, டாக்டர். ராமகிருஷ்ணன், சீனிச்சாமி தேவர், அரப்பா, பி.என்.வல்லரசு, சந்தானம்** ஆகியோர் கலந்து கொண்டனர். தேவேந்திரர் குலத்தினர் சார்பாக **டாக்டர் கிருஷ்ணசாமி, ஜான் பாண்டியன், பசுபதி பாண்டியன்** ஆகியோர் கலந்து கொண்டனர்.

அரசு சார்பில் எடுத்த முயற்சியைப் பாராட்டி 16.5.1997 தேதிய ''தினமணி'' தலையங்கம் வருமாறு:-

''தமிழக முதல்வர் கருணாநிதி தலைமையில் சென்னையில் நடந்த அனைத்துக்கட்சி மற்றும் சமூகத் தலைவர்கள் கூட்டத்தில் சாதிக்கலவரங்களைத் தடுப்பது குறித்து சில நல்லமுடிவுகள் எடுக்கப்பட்டிருப்பது பாராட்டத்தக்கதாகும். ராஜாஜி மண்டபத்தில் நிலவிய நல்லிணக்கமும்,



தலைவர்கள் பெயர்களை மாவட்டங்களுக்குச் சூட்டியதை மாற்றியதற்காக, என்னை ஜனதாதளத் தலைவர் வடிவேலுவும் மற்றையோரும் வாழ்த்தினர்.

கருத்தொற்றுமையும் தென் மாவட்டங்களில் பிரதிபலிக்கும் என நம்புவோம். சமூக நல்லிணக்கத்தை வலியுறுத்தும் நோக்கத்துடன் மதுரையில் சமுதாயத் தலைவர்கள் மாநாடு நடத்தும் முடிவும் சரியானதே. அ.தி.மு.க.தவிர்த்து அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும், சமுதாயத் தலைவர்களும் இக்கூட்டத்தில் பங்கேற்று ஆக்கபூர்வமான கருத்துகளைத் தெரிவித்தது, நல்லிணக்கம் நிலவுவதில் அவர்களுக்குரிய ஆர்வத்தை வெளிப்படுத்துகிறது. நேரடி மோதலில் ஈடுபட்ட இரு சமூகத்தவருடனும் முதல்வர் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ராம்தாஸ் கூறிய யோசனையை ஏற்று, மறுநாளே இரு தரப்பினருடனும் தனித்தனியே முதல்வர் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இதன் மூலம் அரசுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே நேரடித் தொடர்பு ஏற்பட்டு, பதற்றம் வெகுவாகத் தணிய வழி ஏற்படும்.''

தலைநகரில் இவ்வாறு சமரசப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே, 16.5.1997 அன்று மதுரையில் ஒரு பகுதியில் சாதிக் கலவரம் ஏற்பட்டு, அதனை அடக்க போலீசார் மூன்றுமுறை வானை நோக்கித் துப்பாக்கியால் சுட நேர்ந்தது. கல் வீச்சில் காவல் துறை துணை ஆணையர் உட்பட 20 பேர் காயமடைந்தனர். ஏராளமான குடிசைகளுக்கு அங்கே தீ வைக்கப்பட்டது. 11 பேருந்துகள்

சேதப்படுத்தப்பட்டன. திடீர்நகர்காவல் நிலையம் தாக்கப்பட்டதில், மாநகர் காவல் துறை ஆணையராக இருந்த **சங்கர்ஜிவால்**, ஆய்வாளர் **கமாலுதீன்**, மற்றும் காவலர்கள் **கதிரவன்**, செல்லதுரை உட்பட ஏழு பேர் காயமடைந்தனர்.

16.9.1997 அன்று தலைமைச் செயலகத்தில் சமூக இயக்கத் தலைவர்களுடன் மீண்டும் மூன்றாவது நாளாகப் பேச்சுவார்த்தை நடத்தினேன். காமராஜர் மாவட்டத்தில் சுந்தரலிங்கம் பெயரில் போக்குவரத்துக் கழகம் ஏற்படுத்தப்பட்டதற்கு ஒரு பிரிவினர் எதிர்ப்பு தெரிவித்தனர். பூலித்தேவர் பெயரில் போக்குவரத்துக் கழகம் ஏற்படுத்த வேண்டுமென்று தேவர் பேரவையினர் வலியுறுத்தினார்கள். சிவகாசி, துறையூர் ஆகிய இடங்களில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடுபற்றி நீதிவிசாரணை நடத்த உத்தரவிட்டதோடு, மே திங்கள் 29 மற்றும் 30 ஆகிய நாட்களில் கலவரம் நடந்த பகுதிகளையெல்லாம் நானே சென்று பார்வையிடுவதாக அறிவித்தேன்.

★ ★ ★

29.5.1997 அன்று சாதிக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடுவதற்காக மதுரை சென்றடைந்தேன். அப்போது நடைபெற்ற கலவரத்தில் மொத்தம் 14 பேர் கொலை செய்யப்பட்டனர். அவர்கள் குடும்பத்தினருக்கு அரசின் சார்பில் ஒரு இலட்சம் ரூபாய் வீதம் நிதி உதவி அளிக்கப்பட்டது. குன்றக்குடி பொன்னம்பல தேசிக அடிகளார் அவர்கள் மதுரையிலே என்னைச் சந்தித்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு செய்யப்பட்ட நிவாரணம் போதாது என்றும், வேறு சில நிவாரண உதவிகள் வழங்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டதன் பேரில், உடனடியாக காமராஜர் மாவட்ட ஆட்சித் தலைவருடன் பேசி, அந்த மாவட்டத்திற்குக் கூடுதலாக பத்து இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. அது போலவே தேனி, கண்டமனூர் பகுதிகளிலே பாதிக்கப்பட்டவர்களுக்கு 28 லட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டது. ஒட்டுமொத்தமாக அந்த



எனது அறிவிப்பைப் பாராட்டிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் ஆர்.நல்லக்கண்ணு, ஏ.எம்.கோபு.


நேரத்தில் பல்வேறு நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 66 இலட்சம் ரூபாய் அரசு சார்பில் ஒதுக்கீடு செய்து தரப்பட்டது.

சுற்றுப் பயணத்தை முடித்து விட்டு சென்னை திரும்பிய என்னை விமான நிலையத்தில் சந்தித்த செய்தியாளர்கள், ''தென் மாவட்டப்பயணம் வெற்றிகரமாக அமைந்ததா?'' என்று கேட்டனர்.

''இதிலே வெற்றி கரம் என்றெல்லாம் சொல்வதற்கு என்ன இருக்கிறது? பொதுவாகப் பாதிக்கப்பட்ட மக்களையெல்லாம் சந்தித்து ஆறுதல் கூறியது நிம்மதியைத் தருகிறது. நான் சென்ற இடங்களில் எல்லாம் பொதுமக்கள் மகத்தான வரவேற்பு தந்தார்கள். பாதிக்கப்பட்ட மக்கள் தங்களுடைய குறைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்'' என்று பதிலளித்தேன்.

★ ★ ★

தென் மாவட்டங்களில் சாதிக்கலவரங்கள் நடைபெற்றதை யொட்டியும், அதற்காக கூட்டப்பட்ட அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அவர்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையிலும் 5.6.1997 அன்று ராஜாஜி மண்டபத்தில் என்னுடைய தலைமையில் அனைத்துக்கட்சித் தலைவர்களின் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் முக்கியமாக விவாதிக்கப்பட்ட பிரச்சினை, மாவட்டங்கள் போக்குவரத்துக்



கழகங்களுக்கு வைக்கப்பட்டுள்ள தலைவர்களின் பெயர்களைத் தொடரலாமா அல்லது மாற்றி விடலாமா என்பதைப் பற்றித் தான். அன்றைய விவாதத்தில் கருத்து தெரிவித்த 44 பேரில் 34 பேர் பெயர்களை மாற்றி விடலாமென்றும் 10 பேர் பெயர்களை மாற்றத் தேவையில்லை என்றும் பேசினார்கள். இறுதியாகப் பேசிய **மூப்பனார்** அவர்களும், **அப்துல் லத்தீப்** அவர்களும், உடனடியாக முடிவெடுக்கத் தேவையில்லை என்றும், எல்லோருடைய கருத்துக் களையும் ஆய்ந்து பார்த்து அரசின் சார்பில் முடிவினை பின்னர் அறிவிக்கலாம் என்றும் சொன்னார்கள். நம்மால் பெரிதும் மதிக்கப்பட்டு- நமக்குத் தலைவர்களாக இருந்தவர்களின் பெயர்களை எடுப்பதென்றால், எந்த அளவிற்கு அது வருத்தத்தைத் தரக்கூடியது என்பதையெல்லாம் விவரமாக அந்தக் கூட்டத்திலே நான் எடுத்துரைத்து- ''பெயர் நீக்கம் பற்றி அவசரப்பட்டு முடிவெடுக்க மாட்டோம் -மீண்டும் மீண்டும் உரியவர்களுடன் கலந்து பேசி விரைவில் நல்ல முடிவினை அறிவிப்பேன்'' என்றும் இறுதியாக நான் பேசினேன்.

இதனைத் தொடர்ந்து இந்தப் பிரச்சினையின் முதற்கட்டமாக தமிழ்நாட்டில் பல தலைவர்களின் பெயரால் தமிழகமெங்கும் நடைபெற்று வந்த 21 போக்குவரத்துக் கழகங்களையும் சீரமைத்து-ஏழு போக்குவரத்துக் கழகங்களாக மாற்றுவது என்று முடிவெடுக்கப்பட்டு-அந்த ஏழு போக்குவரத்துக் கழகங்களுக்கும் சென்னை போக்குவரத்துக் கழகம், தமிழ்நாடு போக்குவரத்து கழகம், கோவை போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் போக்குவரத்துக்கழகம், மதுரைப் போக்குவரத்துக்

கழகம், விழுப்புரம் போக்குவரத்துக் கழகம், சேலம் போக்குவரத்துக் கழகம் என்று பெயரிடுவது என்றும், அந்த ஏழு போக்குவரத்துக் கழகங்களின் கீழ் ஏற்கனவே நடைபெற்று வந்த 21 போக்குவரத்துக் கழகங்களையும் பகிர்ந்தளிப்பது என்றும் அரசின் சார்பில் முடிவு செய்து அறிவிக்கப் பட்டது.



சாதிக் கலவரங்கள்அடங்கி, அமைதி திரும்ப நான் அனுப்பிய அமைச்சர் தம்பி தங்கபாண்டியன்

1.7.1997 அன்று சென்னையில் அமைச்சரவைக் கூட்டம் நடை பெற்று, தலைவர்களின் பெயர் மாற்றம் விவாதித்து பின்வரும் முடிவெடுக்கப்பட்டது.

5.6.1997 அன்று நான் கூட்டியிருந்த அனைத்துக் கட்சி அரசியல் தலைவர்கள் மற்றும் சமுதாயத் தலைவர்கள் கூட்டத்தில் பெரும்பாலான தலைவர்கள் தெரிவித்த கருத்துக் கிணங்க- மாவட்டங்களுக்கும், போக்குவரத்துக் கழகங் களுக்கும் வைக்கப்பட்டுள்ள பெயர்களை அகற்றுவ தென்றும், அகற்றப்பட்ட தலைவர்களின் பெயர்களால்- ஒவ்வொரு தலைவரின் பெயராலும் 25 இலட்ச ரூபாய் மதிப்பு நிதி வைத்து-15 பல்கலைக்கழகங்களில் 28 அறக்கட்டளைகள் தொடங்குவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. ஒவ்வொரு தலைவர் பெயரிலும் வைப்பு நிதியாக வைக்கப்படும் 25 இலட்ச ரூபாயிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து அந்தப் பல்கலைக் கழகத்திற்கு உட்பட்ட கல்லூரிகளின் சிறந்த மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படும். இந்த உதவித் தொகையில் கல்விக் கட்டணம், புத்தகச் செலவு மற்றும் விடுதிக் கட்டணம் ஆகியவை அடங்கும்.

பல்வேறு பல்கலைக் கழகங்களில் தலைவர்களின் பெயரால் அறக்கட்டளைகள் தொடங்கப்பட்டன. தலைவர்களின் பெயரில் அமைந்துள்ள மாவட்டங்களின் பெயர்கள் அந்த



மாவட்டத் தலைநகரங்களின் பெயர்களால் மாற்றி அமைக்கப்பட்டன.

இந்த முடிவுகள் அறிவிக்கப்பட்ட அன்று மாலையில், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர் **மூப்பனார்** அவர்கள் என்னைச் சந்தித்து பாராட்டியதோடு, பேனா ஒன்றையும் பரிசாக அளித்து வாழ்த்தினார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலப் பொதுச் செயலாளர் **ஆர்.நல்லகண்ணு** அவர்களும், **ஏ.எம்.கோபு** அவர்களும் என்னைச் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

ஜனதா தளக் கட்சியின் தமிழ் மாநிலத்தலைவர் **வடிவேலு,** துணைத்தலைவர் **எம்.சி.டேவிட்,** பொதுச்செயலாளர் **ஜி.கே.தாஸ்,** பொருளாளர் **அய்யாத்துரை** ஆகியோரும் என்னைச் சந்தித்துப் பாராட்டினர்.

தாய்க் கழகத்தின் சார்பில் தமிழர் தலைவர் இனமான **வீரமணி** அவர்கள் அறிக்கை விட்டுப் பாராட்டினார். மற்றும் பல கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும், ஆன்மிகவாதிகளும், சமயங்களின் சான்றோர்களும், கவிஞர்களும், பத்திரிகைத் துறை நண்பர்களும் தமிழக அரசின் அந்த அறிவிப்புக்கு பாராட்டுகளைத் தெரிவித்துக்கொண்டனர்.

குறிப்பாக **''தினமணி''** ''மாவட்டங்களுக்கும் போக்கு வரத்துக் கழகங்களுக்கும் சூட்டப்பட்ட தலைவர்களின் பெயர்களை நீக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முடிவை தமிழக அரசு எடுத்துள்ளது. இப்படி அகற்றப்படும் தலைவர்களின் பெயர்களில் தமிழகத்தில் உள்ள 15 பல்கலைக் கழகங்களில் 28 அறக்கட்டளைகள் ஏற்படுத்தப்படும் என்ற அறிவிப்பு, மகிழ்ச்சியுடன் பாராட்டத்தக்கது. இப்பிரச் சினையில் கருத்தொற்றுமை ஏற்பட உதவிய அரசியல் கட்சிகள் மற்றும் சமுதாயத் தலைவர்கள் பாராட்டுக்குரியவர்கள். சாதித் தீயை அணைக்க உதவும் இந்நடவடிக்கை சுதந்திரப் பொன்விழா ஆண்டில் எடுக்கப் பட்டிருப்பது மிகவும் பொருத்தமானது. சாதிகளற்ற சமுதாயம் உருவாக இன்னும் பல ஆண்டுகள் பிடிக்கலாம். ஆனால் தேசத் தலைவர்களைச் சாதியின் பெயரால் இழிவுபடுத்தும் மடமைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முயற்சி தொடங்கப்பட்டுவிட்டது. இது போன்ற துணிவான முடிவுகளை அரசு எடுக்கப் பொதுமக்கள் தொடர்ந்து ஆதரவு தர வேண்டும்'' என்று எழுதியது.

கலைஞானி நடிகர் **கமலஹாசன்** இதைப்பற்றி செய்தியாளர்களிடம் கூறும்போது- ''மாவட்டங்கள் மற்றும் பேருந்துகளுக்கு பெயர் நீக்கம் செய்திருப்பதற்கு கலைஞருக்கு நன்றி சொல்லத் தெரியாமல் திகைக்கிறேன்-பெரியாரால் ஒழிக்கப்பட்ட சாதி மீண்டும் தலை தூக்காமல் தடுப்போம்'' என்று கூறினார்.

இந்த அறிவிப்பையொட்டி, இந்துக் கோயில்களிலும், கிறித்துவ ஆலயங்களிலும், இஸ்லாமியப் பள்ளிவாசல்களிலும் அனைத்துச் சமூகத்தினர், சமயத்தினர் கலந்து கொள்ளும் சமபந்தி விருந்துகள் ஏற்பாடு செய்யப்பட்டன. ''அந்த சமபந்தி விருந்துகளில் அமைச்சர்களும், அனைத்துக்கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும் கலந்து கொள்ள வேண்டும்'' என்று நான் கேட்டுக் கொண்டேன்.

பெயர் மாற்ற முடிவை இவ்வாறு பெரும்பாலான கட்சித் தலைவர்களும், கட்சி சார்பற்றவர்களும் வரவேற்றபோதிலும்,

பா.ம.க. தலைவரான டாக்டர் ராம்தாஸ், ''அந்த முடிவை வன்மையாகக் கண்டிக்கத்தக்கது'' என்று அறிக்கை கொடுத்தார்.

அ.தி.மு.க. சார்பில் ஜெயலலிதா அது ''மகிழ்ச்சி தரத்தக்கதல்ல'' என்று கருத்து தெரிவித்திருந்தார். இவர்கள் இருவரைத் தவிர தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளுமே அந்த முடிவினை அப்போது வரவேற்றன.

சாதிக் கலவரங்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு சென்னையில் 3.7.1997 அன்று மதியம் மயிலை கபாலீசுவரர் கோயிலில் நடைபெற்ற சமபந்தி விருந்தில் நான், ஜி.கே.மூப்பனார், ஆர்.நல்லக்கண்ணு, ஆர்.எம்.வீரப்பன், ஏ.எம்..கோபு, ஜி.பழனிச்சாமி எம்.எல்.ஏ., ஜெகத்ரட்சகன், ஏ.சி.சண்முகம், பீட்டர் அல்போன்ஸ் எம்.பி., குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், திருவாவடு துறை முத்துக் குமாரசாமி தம்பிரான், கே.என்.லட்சுமணன், இல.கணேசன், ஆர்.டி.சீத்தாபதி, சைதை கிட்டு, இராமஜெயம் எம்.எல்.ஏ., கராத்தே தியாகராசன், துறைமுகம் காஜா, ரெங்கநாதன் எம்.எல்.ஏ., சுதர்சனம் எம்.எல்.ஏ., இ.எஸ்.எஸ்.ராமன் எம்.எல்.ஏ., மற்றும் அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டோம். மற்றக் கோவில்களில் நடைபெற்ற சமபந்தி விருந்துகளில் மற்ற அமைச்சர்களும், நாடாளுமன்ற-சட்டமன்ற உறுப்பினர்கள், அனைத்துக் கட்சியினரும் கலந்து கொண்டனர்.

20. மாறனும், மாநில சுயாட்சியும்!

மாறன் என்றால் என்ன? சாமான்யமா?
என் தம்பியல்லவோ? -பேரறிஞர் அண்ணா.

தென் மாவட்டங்களில் நடைபெற்ற சாதிக் கலவரங்கள் பற்றி தமிழக அரசு முழு மூச்சோடு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த அந்தக் காலக் கட்டத்தில், 1997 ஆம் ஆண்டு மே திங்களில், பிரிட்டனில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஆட்சியில் இருந்த **கன்சர்வேடிவ்** கட்சியைத் தோற்கடித்து, பதினெட்டு ஆண்டுகளுக்குப் பிறகு வெற்றி பெற்ற தொழிலாளர் கட்சியின் சார்பில் இங்கிலாந்தின் புதிய பிரதமராக **டோனி பிளேர்** தேர்ந்தெடுக்கப்பட்டது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட்டது. அதற்கு முன்பு 18 ஆண்டுகள் தொடர்ந்து ஆட்சியிலே இருந்து வந்த கன்சர்வேடிவ் கட்சிக்கு இரண்டாம் இடமும், **லிபரல் டெமாகிரடிக்** கட்சிக்கு மூன்றாம் இடமும் கிடைத்தன.

அதற்கு முன்பு பிரதமராக இருந்த **ஜான் மேஜர்** நலிவுற்றிருந்த பிரிட்டிஷ் பொருளாதாரத்தைச் சீர்ப்படுத்தியவர் ஆவார். அவருக்கு முன்பு அந்தப் பதவியை வகித்த **தாட்சரின்** மிகக் கடுமையான கொள்கைகளை மேஜர் முற்றாக கைவிடா விட்டாலும், அவற்றைச் சிறிது எளிமைப்படுத்தினார். பெரும்பாலான பத்திரிகைகளும், தொலைக்காட்சிகளும் அந்த மேஜருக்கு எதிராகத் திரும்பின. ''மாற்றத்திற்கு வாக்களியுங்கள்'' என்பதே தேர்தல் முழக்கமாக ஒலித்தது. மேஜரின் கட்சி அந்த முறை கடுமையாக தேர்தல் பணியாற்றிய போதிலும், மக்களின் எழுச்சிக்கு முன் அது எடுபடவில்லை. மேஜர் வெற்றி பெற்றார் எனினும், அவரது நண்பர்கள் பலர் தோல்வி அடைந்தனர்.

தொழிற்சங்கங்களை மையமாக வைத்து இயங்கிக் கொண்டிருந்த இடதுசாரிக் கட்சியை அனைவரும் ஏற்கத்தக்க நடுநிலைக் கட்சியாக மாற்றி அனைத்துத் தரப்பினரின் ஆதரவையும் பெற்றார் **டோனி பிளேர்.**

இந்தியாவின் சார்பில் நேரில் அவரைச் சந்தித்து வாழ்த்து தெரிவிப்பதற்காகவும்-இந்திய-இங்கிலாந்து உறவுகளை மேலும் பலப்படுத்துவதற்காகவும்-பிரதமர் **ஐ.கே.குஜ்ரால்** அவர்கள், தனது பிரத்யேகத் தூதுவராக மத்திய தொழில் துறை அமைச்சர் **முரசொலி மாறன்** அவர்களை *18.5.1997* அன்று இங்கிலாந்துக்கு அனுப்பிவைத்தார்.

லண்டன் சென்ற முரசொலி மாறன், *20*ஆம் தேதியன்று இங்கிலாந்தின் பிரதமர் டோனி பிளேயரைச் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார். இந்தியாவுக்கு வரும்படி டோனி பிளேருக்கு அழைப்பும் விடுத்தார். மேலும் அந்த நாட்டின் லிபரல் கட்சித் தலைவர் **திரு.ஆஷ் டவுன்** அவர்களை பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் சந்தித்து உரையாற்றினார். முரசொலி மாறனின் அந்தப் பயணம் குறித்து ஆங்கில நாளேடுகள் எல்லாம் மிகப்பெரிய அளவில் பாராட்டி எழுதி இருந்தன. குறிப்பாக **''இந்துஸ்தான் டைம்ஸ்''** நாளேடு, ''காஷ்மீர் பிரச்சினை பற்றி முரசொலி மாறனைப்போல வேறு எந்த அமைச்சரும் இவ்வளவு தெளிவாக ஒரு போதும் விளக்கியதில்லை'' என்று எழுதியது.

இந்தப் பயணத்தின் போது லண்டனிலிருந்து *1997*ஆம் ஆண்டு மாறன் எழுதிய ஒரு கடிதம்-நான் முன்பே ஒருமுறை சொன்னதைப்போல - என்னிடத்தில் எந்த அளவிற்கு மாறன் அன்பு வைத்திருந்தார்-நான் அவரை வளர்த்ததற்கு-ஆளாக்கியதற்கு- அவர் அளித்த வெகுமதி-பரிசு அந்தக்கடிதம் தான். இலண்டனில் பிரதமரைச் சந்தித்த பிறகு முரசொலி மாறன் அங்கிருந்து எனக்கு எழுதிய கடிதம் இது:

முரசொலி மாறன்,

தொழில் அமைச்சர்,

இந்திய அரசு.

உயர்திரு மாமா அவர்கட்கு, வணக்கம்.



இந்தியப் பிரதமர் ஐ.கே.குஜ்ரால் அவர்களின் தூதுவராக லண்டன் புறப்படும் முன் அவரிடம் வாழ்த்து பெற்றார், முரசொலி மாறன்

லண்டனில் பிரிட்டிஷ் பிரதமரைச் சந்திக்க நான் புறப்பட்டுக் கொண்டிருந்த போது பேசினீர்கள். உங்கள் இனிய வாழ்த்து கிடைக்கவில்லை. (நான் பேசிய போது நான் செய்த தவறு, ''பிரதமரைச் சந்திக்கப் போகிறாயா? வாழ்த்துக்கள்'' என்று சொல்லாமல், செய்தியை மட்டும் கேட்டேன். ''வாழ்த்துக்கள்'' என்று சொல்லவில்லையாம் (தொலை பேசியைக் கீழே வைத்துவிட்டு அழுதேன்.)

(மாறன் எழுதுகிறார்)

நேற்று உங்கள் கடிதத்தைப் படித்து விட்டு அழுதேன்-அது ஆனந்தக்கண்ணீர்!

திருக்குவளையில் நான் சிறுவனாக இருந்தபோது, **சர்.ஏ.டி.பன்னீர்செல்வம்** மறைந்ததும், ''அய்யா சிறு பெண்'' என்ற சினிமாப் பாட்டு மெட்டில்

''எமது அண்ணலரே புகழும் பன்னீர் செல்வமே துரையே!


இந்தியாவின் யோசனைக்கே மந்திரியாகி

விண்ணுலகில் போய் மறைந்தீரே''

என்று கோடை விடுமுறைக்கு திருக்குவளை வந்திருந்த நீங்கள் எழுதிக் கொடுத்து நான் பாடியது நினைவிற்கு வந்தது.

10 முதல் 12 நிமிட நேரம் கொடுத்திருந்த பிரதமர், 20 நிமிடங்களுக்கு மேல் பேசிக் கொண்டிருந்தார். வெளியில் வந்ததும் என் உரையாடல் பற்றி நமது தூதுவர் "Great - Marvel -

Lous - Superb" என்று என்னைக் கட்டிப் பிடித்துக் கொண்டு சப்தமே போட்டார்.



லண்டனில் மத்திய அமைச்சர் முரசொலி மாறன் இங்கிலாந்து பிரதமர் டோனி பிளேரைச் சந்தித்தார்.

வெளிநாட்டு மந்திரி **ராபின்** குக் (மிகவும் முரட்டுப் பேர்வழி) ''காஷ்மீருக்கு சுயாட்சி வழங்குவது எந்த நிலையில் இருக்கிறது?'' என்று கேட்டார்.

''மாநில சுயாட்சிக் குரல் முதன் முதலில் எழுந்த பூமி தமிழ்நாடு! நான் அந்த தி.மு.க. கட்சியைச் சேர்ந்தவன். இப்போது இந்தியாவில் உள்ள 25 மாநிலங்களும் மாநில சுயாட்சி கோருகின்றன...'' என்று விளக்கிவிட்டு, ''நீங்கள் ஸ்காட்லாந்திற்கும் வேல்சிற்கும் என்ன செய்யப் போகிறீர்கள்? அந்த மக்கள் கோரிக்கை எழுப்பிக் கொண்டிருக்கிறார்களே?'' என்று நான் ஆரம்பித்ததும், அவர் சங்கடத்துடன் ''அதிகாரத்தைப் பரவலாக்குவது (Decentralization) பற்றிப் பேச ஆரம்பித்து விட்டார்.

அவ்வளவுதான். ''நான் கூட்டாட்சி முறையைப் பயிலும் மாணவன். அதிகாரத்தைப் பரவலாக்குவது வேறு, Autonomy என்கிற மாநில சுயாட்சி வேறு'' என்று ஒரு குட்டிப் பிரசங்கமே செய்து அவருக்கு தெளிவுபடுத்தினேன்.

என் உடன் வந்த தூதுவரும், அதிகாரிகளும் அசந்து விட்டனர்.

10 டவுனிங் தெருவிற்குள் நுழையும் போது தன்னம்பிக்கைக்காக, ''ஆத்தா, தாத்தா'' (அதாவது பாட்டி, பாட்டனார்) என்று மனதிற்குள் முனகிக் கொண்டே நுழைந்தேன். புறப்படுவதற்கு முன் திரு.குஜ்ராலைச் சந்தித்து ''எப்படிப் பேசுவது? என்ன பேசுவது?'' என்று கேட்பதற்காகப் போயிருந்தேன்.



இங்கிலாந்து நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் ராபின் குக்குடன் முரசொலி மாறன்

''எனக்கு நேரமில்லை-நீயே பார்த்துக் கொள்'' என்று குஜ்ரால் கூறிவிட்டார்.

''இது Policy Matter ஆயிற்றே, விளக்கம் வேண்டுமே'' என்றேன்.

''பரவாயில்லை-நீ சொல்வதுதான் பாலிசி'' என்று கூறிவிட்டுக் களைப் புடன் சென்று விட்டார்.

இந்த மாபெரும் பொறுப்பு என்னை மயக்கத்தில் ஆழ்த்திவிட்டது. என்னாலேயே நம்ப முடியவில்லை மாமா-இப்படி நான் வெற்றிகரமாகச் செயல்படுவேன் என்று. **என்ன இருந்தாலும் நான் உங்கள் தயாரிப்பல்லவா?**

என் சிந்தை-அணு ஒவ்வொன்றிலும் குடியிருந்து, என் இதயத் துடிப்புகளாக இருந்து என்னை ஆட்டுவிக்கும் உங்கள் காலடிகளில் அனைத்தையும் சமர்ப்பிக்கிறேன்.

இப்படி நீங்களும் நானும்தான் கண்ணீர் பெருக்கோடு உணர்ச்சிகளைப் பரிமாறிக் கொள்ள முடியும். ஏனெனில் இது இரத்த பாசம்- ''நமது திருக்குவளைப் பின்னணி''-நமது மாநிலக் கட்சியின் சூழ்நிலை!

ஆனால் பிரதமர் குஜ்ரால் என்ன சொன்னார் தெரியுமா?

எனக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்-நான் பிரமாதமாக இந்தியாவின் கருத்தை எடுத்துச் சொன்னதற்காக -நான் ஒப்புக் கொண்டு இலண்டன் சென்று வந்ததற்காக.

மீண்டும் தங்கள் காலடிகளைத் தொட்டு வணங்கி...

அன்பன்,
மாறன்

இப்படியொரு கடிதம். 97ஆம் ஆண்டு எழுதப்பட்டது. அந்த முரசொலி மாறன் பெயரால்தான் முரசொலி அறக்கட்டளை சார்பில் கடந்த ஆண்டு முதல் ஒரு விருது வழங்குவதென்று முடிவெடுத்து அந்த மிகச் சிறப்புக்குரிய விருது, நடிகர் தம்பி வாகை சந்திரசேகர் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

மாறனின் இந்த உருக்கமிகு கடிதம் வந்த அதே நேரத்தில், பிரபல ஆங்கில வார இதழான ''அவுட் லுக்'' 1997 ஆம் ஆண்டின் மிகச் சிறந்த மத்திய அமைச்சராக மத்திய தொழில் துறை அமைச்சராக இருந்த முரசொலி மாறனைத் தேர்வு செய்திருக்கிறது-என்ற செய்தி எனக்குக் கிடைத்து மேலும் மகிழ்ச்சியை உண்டாக்கியது. 5.1.1998 நாளிட்ட ''அவுட்லுக்'' இதழில் அதுபற்றிய அறிவிப்பு வெளிவந்தது. வெளிநாட்டு மூலதனம் எளிதில் கிடைப்பதற்குரிய முயற்சிகளை மேற்கொண்டதற்காகவும், பொதுத்துறை நிறுவனங்களை நிர்வகிக்கும் பத்தாம் பசலித்தனமான சட்ட விதிகளை ஒழித்ததற்காகவும், முரசொலி மாறன் 1997 ஆம் ஆண்டின் மிகச்சிறந்த அமைச்சர் விருதுக்குத் தேர்வு செய்யப் பட்டிருப்பதாக ''அவுட்லுக்'' அறிவித்திருந்தது.

மத்திய தொழில் துறை அமைச்சராகப் பதவியேற்றவுடனே தொழில் துறை அமைச்சகத்தின் செயல்பாட்டில் ''கிடு கிடு'' மாற்றங்களை மாறன் அறிமுகப்படுத்தினார். பிரதமரின் பிடியிலிருந்த ''அந்நிய முதலீடு மேம்பாட்டு வாரியத்தை'' தனது அமைச்சரகத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தார். வெளிநாட்டு முதலீட்டாளர்கள் விண்ணப்ப படிவங்களுடன் ''கியூ'' வில் காத்திருக்கும் முறைக்கும் முற்றுப் புள்ளி வைத்தார். குறிப்பிட்ட காலத்திற்குள் விண்ணப்பத்தின் மீது உரிய நடவடிக்கை எடுத்தே ஆகவேண்டும் என்று காலக் கெடுவை நிர்ணயித்தார். இதனால், அந்நிய முதலீட்டின் வருகை அதிகரித்தது. பல கோடி ரூபாய் இலாபம் ஈட்டித் தரும் பொதுத் துறை நிறுவனங்களின் தலைமை அதிகாரிகள், சின்ன சின்ன விஷயங்களுக்கெல்லாம் தொழில் துறை அமைச்சகத்தை எதிர்பார்க்கும் நிலையையும் ஒழித்துக் கட்டினார். ஒன்பது பொதுத்துறை நிறுவனங்களை அவர் தேர்ந்தெடுத்து,



"அவுட் லுக்" ஏடு முரசொலி மாறனை மிகச் சிறந்த மத்திய அமைச்சராகத் தேர்ந்தெடுத்தது.

"நவரத்தினங்கள்" என்று அறிவித்து, அவைகளுக்குச் சுயநிர்வாக அதிகாரங்களை வழங்கினார். இவ்வாறு தொழில் துறை வளர்ச்சிக்கு அதிரடி நடவடிக்கைகள் எடுத்த அமைச்சர் **முரசொலி மாறனை "ஃபார் ஈஸ்டர்ன் எகனாமிக் ரிவ்யூ"** போன்ற வெளிநாட்டு ஏடுகள் மட்டுமல்லாது, உள்நாட்டு ஏடுகளும் ஒருமித்த குரலில் பாராட்டின. தொழில் துறை பிரமுகர்களும் அவர் மேற்கொண்ட நடவடிக்கைகளை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

மாறனைப் பற்றி எழுதும்போது, அவர் எழுதிய, **"ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்?"** என்ற நூலிற்கு பேரறிஞர் அண்ணா 8.5.1957 இல் எழுதிய தனது அணிந்துரையிலே "மாறன் என்றால் என்ன சாமான்யமா? என் தம்பி அல்லவோ? அதனால் தான், ஏடு, கனிவும், தெளிவும், சுவையும், பயனும் குலுங்கும் நிலையில் இருக்கிறது" என்று எழுதிய வார்த்தைகள் மறக்கக் கூடியவைகளா?


லண்டனிலிருந்து முரசொலி மாறன் எழுதிய அந்த உருக்கமிகு கடிதத்திலும் அவரைப் பற்றிய பாராட்டுச் செய்திகளிலும் நான் மூழ்கியிருந்த நேரத்தில்-

16.5.1997 அன்று 1995 ஆம் ஆண்டுக்கான திரைப்பட விருதுகள் வழங்கும் விழா, சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்றது. கலைத்துறை விழாவில் மிகழ்ச்சியோடு பேச வேண்டிய நான் தென்மாவட்டக் கலவரங்கள் பற்றித் தான் பேச நேரிட்டது. அந்த விழாவில் **சூப்பர் ஸ்டார் ரஜினி காந்த்துக்கு** சிறந்த நடிகர் விருது வழங்கப்பட்டது. அதைப்பற்றி அவர் பேசும்போது, அந்த நாள் அவருடைய வாழ்க்கையில் பொன்னான நாள் என்றும், மறக்க முடியாத

நாள் என்றும், அவர் திரைப்பட உலகத்திற்குள் நுழைந்து 22 ஆண்டுகள் ஆகிவிட்டன என்றாலும், அதுவரை அவருக்குச் சிறந்த நடிகருக்கான விருது கிடைத்ததே இல்லை என்றும், தற்போது அவருக்கு மாநில அரசு சிறந்த நடிகருக்கான விருதை வழங்கியுள்ளது மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

ரஜினி முதலில் நடித்த **அபூர்வ ராகங்கள்** திரைப்படம் வெற்றி விழா கண்டு அதன் விழாகூட என்னுடைய தலைமையிலேதான் நடைபெற்றது. ஆனால் அந்த விழாவில் நான் கலந்து கொண்டபோது, வேறொரு நிகழ்ச்சிக்கு முதலமைச்சர் என்ற முறையில் செல்ல வேண்டியிருந்ததால், அபூர்வ ராகங்கள் படத்தில் நடித்த ஒரு சிலருக்கு மட்டும் நான் பரிசுகளைக் கொடுத்துவிட்டு, மற்றவர்களுக்கு அந்த விழாவிலே கலந்து கொண்ட **ஏ.வி.மெய்யப்ப செட்டியார்** அவர்களைவிட்டு பரிசுகளை வழங்குமாறுக் கூறிவிட்டுச் சென்று விட்டேன். அதனால் அந்த விழாவிலும் ரஜினி அவர்களுக்கு என் கையால் விருது கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டு, அது ரஜினி அவர்களை நீண்ட நாட்களாக உறுத்திக் கொண்டிருந்ததாகவும், அந்த எண்ணம் 22 ஆண்டுகளுக்குப் பிறகு, என் கையாலேயே சிறந்த நடிகர் என்பதற்கான விருதினைப் பெற்றிருப்பதாகவும் அவர் பேசும்போது குறிப்பிட்டுத் தெரிவித்தார்.

அந்த விழாவில் ரஜினி வேறொரு கருத்தையும் என்னைப் பற்றிச் சொன்னார். அவர் நடித்த **''அருணாச்சலம்''** திரைப்படத்தை வெளியிடுவதற்கு முன்பு, என்னை அழைத்துப் போட்டுக் காண்பித்தார். படம் மிகவும் நீளமாக இருந்தது. முடிந்தவரையில் நீளத்தை அவர்களே குறைத்துவிட்டு, பிறகு வேறொன்றும் செய்வதற்கில்லை என்று விட்டுவிட்டார்கள். நான் அந்தப் படத்தைப் பார்த்தபோது- அதிலே ஒரு வசனம்- ''படம் ரொம்ப குப்பை'' என்ற ஒரு சொற்றொடர்-அந்தப் படத்திலே இடம் பெற்றிருந்தது. நான் படம் பார்த்து முடித்த பிறகு ''அந்தச் சொற்றொடர் அந்தப் படத்திலே இருக்கத் தேவையில்லை'' என்று நான் கூறி



முரசொலி மாறன்

தொழில் அமைச்சர்
இந்திய அரசு
புது தில்லி - 110011

உயர்திரு மோடி அவர்கட்கு,

வணக்கம்.

லண்டனில் நீங்கள்
நிறுவனர்களைச் சந்தித்து
பேசி, உங்களுக்கு
நினைவில்லை. ஆங்கிலேயர்கள்
அடிமைப்படுத்தி
ஆண்டதை.

சேர்ந்து உலகை
வீட்டு அடிமைப்படுத்த
அழைத்தீர்கள் – ஆனால்
தான்!

"நான் உங்கள் தயாரிப்பல்லவா மாமா?"

என்று என்னை அழவைத்த,
லண்டனிலிருந்து மாறன் எழுதிய கடிதம்

அதனை எடுத்து விட்டார்கள். அதை ஞாபகத்திலே வைத்துக் கொண்டு, விருது வழங்கும் நிகழ்ச்சியிலே அதைப் பற்றியும், படம் பார்த்து முடிந்து வீட்டிற்குத் திரும்பிய பிறகு அவரிடம் நான் தொலைபேசி வாயிலாக வேறு சில காட்சிகளிலே கூறிய மாற்றங்கள் பற்றியும் அந்தக் கூட்டத்தில் பேசியதோடு, தென் மாவட்டங்களிலே நடைபெற்று வந்த சாதிக் கலவரங்கள் பற்றியும் விவரமாகக் குறிப்பிட்டு, அங்கே பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவி செய்வதற்காக முதல்வரின் பொது நிவாரண நிதிக்கு ஐந்து இலட்சம் ரூபாய்க்கான காசோலையையும் என்னிடம் வழங்கினார்.

எனவே, அந்த விழாவில் என்னுடைய பேச்சும் தென் மாவட்ட மக்களின் பிரச்சினைகள் குறித்தே அமைந்தது. அந்த விழாவில் கலைத்துறை வித்தகர்களுக்கான விருதுகளாக அண்ணா விருது, திரு.டி.ராஜேந்தருக்கும், கலைவாணர் விருது திரு.கவுண்டமணிக்கும், எம்.ஜி.ஆர் விருது திரு.சத்யராஜுக்கும், ராஜா சாண்டோ விருது இயக்குநர் திரு.வி.சேகருக்கும், கண்ணதாசன் விருது திரு.பூவை செங்குட்டுவன் அவர்களுக்கும் வழங்கப்பட்டது.

சிறந்த நடிகராக சூப்பர் ஸ்டார் **ரஜினிகாந்த்**-சிறந்த நடிகையாக **குஷ்பூ**- சிறந்த நடிகராக (சிறப்புப் பரிசு) விஜயகுமார்-சிறந்த நடிகையாக (சிறப்புப் பரிசு) ராதிகா-சிறந்த இயக்குநராக **வசந்த்**-சிறந்த உரையாடல் ஆசிரியராக **கே.எஸ்.அதியமான்**-சிறந்த கதையாசிரியராக **கே.பாக்யராஜ்**-சிறந்த இசை அமைப்பாளராக **தேவா**-சிறந்த பாடலாசிரியராக கவிப்பேரரசு **வைரமுத்து**-சிறந்த


நகைச்சுவை நடிகராக **மணிவண்ணன்**-என்ற வரிசையில் அவர்களுக்கும், மற்றும் பலருக்கும் அந்த ஆண்டு விருதுகள் வழங்கப்பட்டன.

1.6.1997 அன்று மாலையில், மத்திய ரயில்வே அமைச்சராக அப்போது இருந்த மாண்புமிகு **ராம் விலாஸ் பாஸ்வான்** அவர்கள் தலைமையில், பழவந்தாங்கல் புதிய சுரங்கப் பாதையினைத் திறந்து வைக்கும் விழாவிலே கலந்து கொண்டேன். மத்திய அமைச்சர்கள் **முரசொலி மாறன், டி.ஆர்.பாலு,** தமிழக அமைச்சர் **டாக்டர் பொன்முடி,** சட்டமன்ற உறுப்பினர் **கண்டோன்மென்ட் சி.சண்முகம்,** ஆலந்தூர் நகராட்சித் தலைவர் **ஆலந்தூர் பாரதி** ஆகியோர் அந்த விழாவில் கலந்து கொண்டனர்.

பழவந்தாங்கலில் அன்று திறந்துவைக்கப்பட்ட பாலம் 11 ஆண்டுகளாக எடுக்கப்பட்ட முயற்சி, நான்கு கோடி ரூபாய் செலவில் அந்தச் சுரங்கப்பாலம் கட்டப்பட்டது. அந்தப் பாலத்திறப்பு விழாவில் நான் உரையாற்றும்போது, ''பாலம் கட்டப்பட வேண்டியது பரங்கிமலையிலும், பழவந்தாங்கலிலும் மட்டுமல்ல-தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு சாதிகளுக்கிடையே பாலம் கட்ட வேண்டிய நிலைமைதான் உள்ளது'' என்று குறிப்பிட்டேன்.

அந்த விழாவிற்கு தலைமை தாங்கிய அருமை நண்பர் ராம் விலாஸ் பாஸ்வான் எனக்குப் பல ஆண்டுகளாகத் தெரிந்தவர். என்னிடம் மிகுந்த பரிவும் பாசமும் கொண்டவர். இந்தியாவிலேயே மிக அதிக வாக்குகள் வித்தியாசத்தில் நாடாளுமன்றத்தேர்தலில் வெற்றி பெறுபவர்களில் அவர் ஒருவர். அவர் என்னை பீகாருக்கே அழைத்துச் சென்று அங்கே நடைபெற்ற மாநாடு ஒன்றில் பேச வைத்தவர்.

2.6.1997 அன்று சென்னையில் இராகவேந்திரா திருமண மண்டபத்தில், கழகத்தின் பொதுக்குழுக் கூட்டம் என்னுடைய தலைமையில் நடைபெற்று, பல முக்கியமான தீர்மானங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டன. 2.6.1997 அன்று மாலையிலும் 3.6.1997அன்று முழுவதும் என்னுடைய 74ஆவது பிறந்த நாள் விழா நடத்தப்பெற்றது.



1995ன் சிறந்த நடிகராகத் தேர்வு செய்யப் பட்ட ரஜினிகாந்த், தென் மாவட்டக் கலவரங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவித் தொகையாக ரூ.5லட்சம் வழங்கினார்.

2.6.1997 அன்று பிற்பகலில், முதல் நிகழ்ச்சியாக கழகத்தின் மகளிரணி சார்பில் **பொற்செல்வி** இளமுருகு தலைமையில் ''மின்னும் கலைஞர்'' என்ற பொதுத் தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. அந்தப் பொதுத்தலைப்பின் கீழ், ''அரசியல் உலகில்'' என்ற தலைப்பில் **வண்ணை தேவகியும்**- ''ஆட்சித் திறனில்'' என்ற தலைப்பில் **நூர்ஜகான் பேகமும்**- ''இயக்கத் தலைமையில்'' என்ற தலைப்பில் **சங்கரி நாராயணனும்**- ''இலக்கிய உலகில்'' என்ற தலைப்பில் **புதுக்கோட்டை விஜயாவும்**- ''திரைஉலகில்'' என்ற தலைப்பில் **வாசுகி முருகேசனும்** உரையாற்றினர்.

அதனைத் தொடர்ந்து, கழக இளைஞரணி சார்பில் வழக்காடு மன்றம் நடைபெற்றது. கழக முதன்மைச் செயலாளர் **துரைமுருகன்** அதற்கு நடுவராக இருந்தார். ''அதிகமான சலுகைகளை அள்ளித் தந்த குற்றம்'' என்ற தலைப்பை வைத்து வழக்கு தொடுத்து, அரிய கருத்துக்களை எடுத்து வைத்து, அவையில் திரண்டிருந்த அனைவரையும் சிந்திக்கவும் வைத்து **இரா.வெற்றிகொண்டான்** வாதாடினார். அதனை மறுத்த, அடுக்கடுக்கான வாதங்களை எடுத்து வைத்து, அரங்கமே அதிரும் அளவிற்கு கைத்தட்டல்களைப் பெற்று உணர்ச்சி பொங்க வாதாடினார் முனைவர் **பொன்முடி.**

இளைஞரணியைத் தொடர்ந்து, மாணவரணி சார்பில் **திருச்சி சிவா** தலைமையில் பட்டி மன்றம் நடைபெற்றது. அதற்கு **சிலம்பொலி செல்லப்பன்** நடுவராக இருந்தார்.



''கலைஞரின் பணிகளில் விஞ்சி நிற்பது அரசியல் பணியா? இலக்கியப் பணியா?'' என்ற தலைப்பில் -அரசியல் பணியே என்று **விடுதலை விரும்பி, சற்குணப் பாண்டியன், பரிதி இளம்வழுதி** ஆகியோரும்- இலக்கியப் பணியே என்று **ரகுமான் கான், புலவர் செங்குட்டுவன், தாயகம் கவி** ஆகியோரும் வாதாடினார்கள்.

முதல் நாள் நிகழ்ச்சியில் இறுதியாக, இலக்கிய அணி சார்பில், கவி அரங்கம் நடைபெற்றது. அமைச்சராக இருந்த **தமிழ்க்குடிமகன்** நடுவராக இருந்தார். **கவிக்கோ அப்துல் ரகுமான், கவிப்பேரரசு வைரமுத்து, கவிச்சுடர் கவிதைப்பித்தன்,** கவிஞர் மு.மேத்தா, கவிஞர் **நிர்மலா சுரேஷ்** ஆகியோர் கவிதை வாயிலாக என்னை வாழ்த்தினர். அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் சென்னை மாவட்டக் கழகச்செயலாளர்களாக இருந்த **சைதை கிட்டு, எல்.பலராமன்** ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

3ஆம் தேதியன்று காலை 8 மணியிலிருந்தே தொண்டர்களைச் சந்தித்து அவர்களின் வாழ்த்துக்களைப் பெற்றுக் கொண்டேன். குடியரசு தலைவர் **சங்கர் தயாள் சர்மா,** குடியரசு துணைத்தலைவர் **கே.ஆர்.நாராயணன்,** மத்திய அமைச்சர்கள், மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த ஆன்றோர், சான்றோர் வாழ்த்துக்களை நேரிலும், தொலை பேசியிலுமாகத் தெரிவித்தனர். 74ஆவது பிறந்த நாளை யொட்டி, உண்டியல் மூல மாகவும், காசோலை யாகவும் என்னிடம் முதல் அமைச்சரின் பொது நிவாரண நிதிக்காக 16 லட்சத்து 12 ஆயிரத்து 976 ரூபாய் குவிந்தது.



சிறந்த பாடலாசிரியர் விருது பெற்ற கவிப்பேரரசு வைரமுத்து

பொதுச் செயலாளர் **பேராசிரியர்** அவர்கள் தலைமையில், அண்ணாநகர் புல்லா ரெட்டி அவென்யூவில், 3ஆம் தேதி மாலையில் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் நடை பெற்றது. பொருளாளர் **ஆற்காடு வீராசாமி,** மத்திய தொழில் அமைச்சர் **முரசொலி மாறன், துரைமுருகன், சத்தியவாணி முத்து, எ ன் . வி . எ ன் . சோ மு , டி.ஆர்.பாலு, கோ.சி.மணி, ஆலடி அருணா,** சென்னை மாநகர மேயர் **மு.க.ஸ்டாலின்,** பேராயர் எஸ்றா சற்குணம், முனைவர் **தமிழ்க்குடிமகன்** ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் சார்பில், மாத இதழான **''உழைப்பாளி''** இதழைப் **பேராசிரியர்** வெளியிட, முதல் பிரதியை நான் பெற்றுக்கொண்டேன். மாவட்டக் கழகச் செயலாளர் சைதை கிட்டு வரவேற்புரை ஆற்றினார். அண்ணா நகர்ப் பகுதிக் கழகச் செயலாளராக அப்போதிருந்த **சோ.மா.ராமச்சந்திரன்** அந்த நிகழ்ச்சியை ஒரு பெரிய மாநாடு போல அலங்காரம் செய்து சிறப்பாக நடத்தினார். இறுதியாக நான் ஏற்புரை ஆற்றினேன்.

74ஆவது பிறந்த நாள் என்பதால், **''மாலை மலர்''** நாளிதழ் 74 கேள்விகளுக்கு, ஓரிரு வார்த்தைகளில் பதில் கூற வேண்டுமென்று கேட்டு, நான் பதிலளித்தேன். அந்தக் கேள்வி பதில்கள் வருமாறு:-

1. மாலைமலர்:- அறிஞர் அண்ணா அவர்களிடம் பிடித்தது?

நான்:- அடிகளை அளந்து வைக்கும் நிதானம்.

2. மாலைமலர்:- பிடித்த உணவு?

நான்:- முன்பு அசைவம்-இப்போது சைவம்.

3. மாலைமலர்:- பிடித்த பழமொழி?

நான்:- ஆடுகள் முட்டிக் கொண்டால் ஓநாய் இரத்தம் குடிக்கும்.

4. மாலைமலர்:- பிடித்த நண்பர்?

நான்:- சோதனையிலும் இருப்பவர்.

5. மாலைமலர்:- பிடித்த எதிரி?

நான்:- முதுகில் குத்தாதவர்.

6. மாலை மலர்:- பிடித்த உடை?

நான்:- வெள்ளை வேட்டி, வெள்ளை சட்டை, மஞ்சள் சால்வை.

7. மாலைமலர்:- பிடித்த கலர்?

நான்:- கறுப்பும், சிவப்பும்.

8. மாலைமலர்:- பிடித்த நடிகர்?


நான்:- கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன்.

9. மாலைமலர்:- பிடித்த நடிகை?

நான்:- பி.கண்ணாம்பா.



சத்யராஜ் பாக்யராஜ் ராதிகா



முரசொலி மாறன் பெயரால், 'முரசொலி அறக்கட்டளை' விருதைப் பெற்ற நடிகர் வாகை சந்திரசேகர்

10. மாலைமலர்:- பிடித்த அறிவியல் கண்டுபிடிப்பு?

நான்:- அன்று வானொலி, இன்று கணிப்பொறி.

11. மாலைமலர்:-பிடித்த டி.வி. நிகழ்ச்சி?

நான்:- செய்திகள்

12. மாலைமலர்:- பிடித்த செய்தி வாசிப்பாளர்?

நான்:- ''ல'' கர ''ள'' கரத்தை சுத்தமாக உச்சரிப்பவர்.

13. மாலைமலர்:- பிடித்த எம்.ஜி.ஆர். படப்பாடல்?

நான்:- ''தூங்காதே தம்பி தூங்காதே!''

14. மாலைமலர்:- பிடித்த சிவாஜி படப்பாடல்?

நான்:- ''மனிதன் மாறி விட்டான்''

15. மாலைமலர்:- பிடித்த சினிமா படம்?

நான்:- ''தில்லானா மோகனாம்பாள்''

16. மாலைமலர்:- பிடித்த அறிஞர்?

நான்:- ஜார்ஜ் பெர்னாட்ஷா.

17. மாலைமலர்:- பிடித்த இந்திய அரசியல் தலைவர்?

நான்:- விசுவநாத் பிரதாப் சிங்.

18. மாலைமலர்:- பிடித்த உலக அரசியல் தலைவர்?

நான்:- ஆப்ரகாம் லிங்கன்.

19. மாலைமலர்:- பிடித்த நொறுக்குத் தீனி?

நான்:- ஓமப்பொடி.

20. மாலைமலர்:- பிடித்த நாடு?

நான்:- இந்தியா

21. மாலைமலர்:- மிகவும் பிடித்த பத்திரிகை?

நான்:- முரசொலி.

22. மாலைமலர்:- பிடித்த விளையாட்டு வீரர்?

நான்:- கவாஸ்கர்.

23. மாலைமலர்:- பிடித்த விளையாட்டு வீராங்கனை?

நான்:- ஸ்டெபி கிராப்.

24. மாலைமலர்:- பிடித்த கவிஞர்?

நான்:- புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

25. மாலைமலர்:- மூப்பனாரிடம் பிடித்தது?

நான்.- இனிமையாகப் பழகுவது.

26. மாலைமலர்:- மு.க.ஸ்டாலினிடம் பிடித்தது?

நான்:- உழைப்பு.

27. மாலைமலர்:- பேராசிரியர் அன்பழகனிடம் பிடித்தது?

நான்:- கொள்கை உறுதி.

28. மாலைமலர்:- எம்.ஜி.ஆரிடம் பிடித்தது?

நான்:- விருந்தோம்பல்.

29. மாலைமலர்:- உங்களுக்குப் பிடித்த திருக்குறள்?

நான்:- ''இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண நன்னயம் செய்து விடல்''



ராம்விலாஸ் பஸ்வான் தலைமையில் பழவந்தாங்கல் சுரங்கப் பாதை திறக்கப்பட்ட போது, ''பல்வேறு சாதிகளுக்கிடையேயும் பாலம் கட்ட வேண்டும்'' என்று நான் குறிப்பிட்டேன்

30. மாலைமலர்:- உங்களுடைய வசனத்தில் பிடித்த வரிகள்?

நான்:- ''மனச்சாட்சி உறங்கும் போதுதான், மனக்குரங்கு ஊர்சுற்றக் கிளம்பி விடுகிறது''

31: மாலைமலர்:- சுற்றுலாத் தலங்களில் பிடித்த இடம்?

நான்:- ஈரோடு, காஞ்சிபுரம்.

32. மாலைமலர்:- பிடித்த வாகனம்?

நான்:- கார்

33. மாலைமலர்:- பிடித்த பொய்?

நான்:- ''பொய்மையும் வாய்மையிடத்த'' என்ற குறளில் சுட்டிக் காட்டப்படும் பொய்.

34. மாலைமலர்:- முதல் மந்திரிகளில் பிடித்தவர்?

நான்:- பி.சி.ராய்.

35. மாலைமலர்:- பிடித்த காதல் ஜோடி?

நான்:- அன்றில் பறவைகளின் ஜோடி.

36. மாலைமலர்:- பிடித்த இசை?

நான்:- தமிழிசை

37. மாலைமலர்:- பிடித்த நாடகம்?

நான்:- நடிகவேள் எம்.ஆர்.ராதா நடித்த நாடகம்.

38. மாலைமலர்:- பிடித்த புது நடிகை?

நான்:- பேபி மோனிஷா

39. மாலைமலர்:- பிடித்த புது நடிகர்?

நான்:- மாஸ்டர் மகேந்திரா.

40. மாலைமலர்:- பிடித்த சிரிப்பு நடிகர்?

மாலை மலர்

எனது 74ஆவது பிறந்தநாளை முன்னிட்டு 'மாலை மலர்' ஏடு கேட்ட 74 கேள்விகளும் எனது பதில்களும்

நான்:- டணால் தங்கவேலு.

41. மாலைமலர்:- சிவாஜியிடம் பிடித்தது?

நான்:- பாத்திரமாகவே ஒன்றி விடும் நடிப்பாற்றல்.

42. மாலைமலர்:- பிடித்த மலர்?

நான்:- ரோஜா மலர்.

43. மாலைமலர்:- பிடித்த சர்வாதிகாரி?

நான்:- மார்ஷல் டிட்டோ.

44. மாலைமலர்:- சென்னையில் பிடித்த கட்டிடம்?

நான்:- அண்ணா அறிவாலயம்.

45. மாலைமலர்:- பிடித்த கிழமை?

நான்:- ஏழு கிழமைகளும் பிடிக்கும்.

46. மாலைமலர்:- பிடித்த உறவினர்?

நான்:- கழக உடன்பிறப்புகள்

47. மாலைமலர்:- பிடித்த தானம்?

நான்:- நிதானம்.

48. மாலைமலர்:- பெரியாரிடம் பிடித்தது?

நான்:- குறித்த நேரம் தவறாமை.

49. மாலைமலர்:- பிடித்த பறவை?

நான்:- காக்கை

50. மாலைமலர்:- பிடித்த விலங்கு?

நான்:- நாய்

51. மாலைமலர்:- பிடித்த போராட்டம்?

நான்:- கல்லக்குடி போராட்டம்.

52. மாலைமலர்:- பிடித்த பழம்?

நான்:- மாதுளை.

53. மாலைமலர்:- பிடித்த காய்கறி?

நான்:- கேரட்.

54. மாலைமலர்:- பிடித்த ஒப்பனைச் சாதனம்?

நான்:- சீப்பு.

55. மாலைமலர்:- பிடித்த ஆராய்ச்சியாளர்?

நான்:- தாமஸ் ஆல்வா எடிசன்.

56. மாலைமலர்:- பிடித்த அணிகலன்?

நான்:- அண்ணா அணிவித்த கணையாழி.

57. மாலைமலர்:- பிடித்த எண்?

நான்:- மூன்று (ஜூன் 3 என் பிறந்த நாள்)

58. மாலைமலர்:- பிடித்த சாதனை?

நான்:- ஏழைப்பெண்கள் திருமண உதவித் திட்டம்.

59. மாலைமலர்:- பிடித்த நதி?

நான்:- காவேரி.

60. மாலைமலர்:- பிடித்த புத்தகம்?

நான்:- காண்டேகர் நூல்கள்.

61. மாலைமலர்:- காமராஜரிடம் பிடித்தது?

நான்:- எளிமை.

62. மாலைமலர்:- பிடித்த எழுத்தாளர்?

நான்:- புதுமைப்பித்தன்.

63. மாலைமலர்:- பிடித்த பெண் எழுத்தாளர்?

நான்:- லட்சுமி.

64. மாலைமலர்:- பிடித்த விருது?

நான்:- பகுத்தறிவாளன் என்ற விருது.

65. மாலைமலர்:- பிடித்த விளையாட்டுகள்?

நான்:- கிரிக்கெட், கால்பந்து, டென்னிஸ்.

66. மாலைமலர்:- பேச்சாற்றலில் பிடித்தவர்?

நான்:- அறிஞர் அண்ணா.

67. மாலைமலர்:- பிடித்த பொழுது போக்கு?

நான்:- படிப்பதும், எழுதுவதும்.

68. மாலைமலர்:- தமிழர்களிடம் பிடித்தது?

நான்:- ஒற்றுமை (சிரிக்காதீர்கள்)

69. மாலைமலர்:- ரஜினியிடம் பிடித்தது?

நான்:- புகழேணியின் உச்சியிலும் அடக்கம் கடைப்பிடிப்பது.

70. மாலைமலர்:- ஆட்சியில் பிடித்தது?

நான்:- ஏழையின் சிரிப்பு.

71. மாலைமலர்:- பிடித்த எதிர்க்கட்சி?

நான்:- விரோத உணர்வின்றி விமர்சனம் செய்யும் கட்சி.

72. மாலைமலர்:- பிடித்த மாவட்டம்?

நான்:- எல்லா மாவட்டங்களுமே!

73. மாலைமலர்:- பிடித்த பண்டிகை?

நான்:- பொங்கல்.

74. மாலைமலர்:- பிடித்திருந்தும் பிடிக்காதது?

நான்:- முதல்வர் பதவி.

21. பூனைக் குட்டியும், யானையும்!

குடியரசுத் தலைவர் தேர்தலில் வெற்றி பெற்ற
கே.ஆர்.நாராயணனை நான் வாழ்த்தினேன் -
நட்புணர்வுடன் என்னைத் தழுவிக் கொண்டார்.

குடியரசுத் தலைவராக இருந்த சங்கர் தயாள் சர்மா அவர்களின் பதவிக் காலம் 1997 ஆம் ஆண்டு, ஜூலை திங்கள், 24 ஆம் தேதியோடு முடிவடைவதாக இருந்ததையொட்டி, குடியரசுத் தலைவர் தேர்தல் தொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்பு 9-6-1997 அன்று வெளியிடப்பட்டது. தேர்தல் ஆணையாளர்களாக அப்போது இருந்து டாக்டர் எம்.எஸ்.கில், ஜி.வி. கிருஷ்ணமூர்த்தி, ஜெ.எம். லிங்டோ ஆகியோர் குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காக ஜூலை மாதம் 14 ஆம் தேதி தேர்தல் நாள் அன்று அறிவித்தனர்.

மக்களவை உறுப்பினர்கள் 543 பேர் - மாநிலங்களவையின் 233 உறுப்பினர்கள் - அனைத்து மாநிலங்களின் சட்டமன்ற உறுப்பினர்கள் 4072 பேர் அந்தத் தேர்தலில் வாக்களிப்பார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

6-6-1997 அன்று இந்தப் பிரச்சினை குறித்து நான் வெளியிட்ட அறிக்கை ஒன்றில், ''ஜூலை மாதம் நடைபெற இருக்கின்ற குடியரசுத் தேர்தலில் வேட்பாளராக - அப்போது குடியரசுத் துணைத் தலைவராக இருந்த திரு.கே.ஆர். நாராயணன் அவர்களை தி.மு. கழகம் ஆதரிப்பதென்றும், அந்தக் கருத்தை ஐக்கிய முன்னணிக்கு பரிந்துரைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது'' என்று தெரிவித்தேன்.

ஐக்கிய முன்னணியின் வழிகாட்டுக் குழுக் கூட்டம் அதன் தலைவர் எச்.டி. தேவகவுடா அவர்களுடைய தலைமையில்,

16-6-1997 அன்று டெல்லியில் நடைபெற்று, குடியரசுத் தலைவர் தேர்தலுக்கான வேட்பாளர் பற்றி விவாதிக்கப் பட்டது. அந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த தேவகவுடா அவர்கள், தனக்கு குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிடும் ஆர்வம் இல்லை என்றும் - அதற்கான முயற்சிகளில் தாம் ஈடுபடவில்லை என்றும், திட்டவட்ட மாகத் தொடக்கத்திலேயே அறிவித்து விட்டார். சுமார் 2 மணி நேரம் நடைபெற்ற அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு உடனடியாக வெளியிடப்படவில்லை. ''ஏகமனதாக முடிவெடுக்கப்பட்ட போதிலும், காங்கிரஸ் கட்சியுடன் கலந்து ஆலோசித்த பிறகே முடிவு அறிவிக்கப்படும்'' என்று ஐக்கிய முன்னணியின் செய்தித் தொடர்பாளர் அமைச்சர் **ஜெய்பால் ரெட்டி** அறிவித்தார்.

ஐக்கிய முன்னணியின் அமைப்பாளரும், ஆந்திர முதல்வருமான **சந்திரபாபு நாயுடு** காங்கிரஸ் தலைவர் **சீதாராம் கேசரியை** சந்தித்துப் பேசினார். அப்போது ஐக்கிய முன்னணி காங்கிரஸ் கூட்டு வேட்பாளராக குடியரசுத் துணைத் தலைவர் கே.ஆர். நாராயணனை நிறுத்துவதென்று முடிவு செய்யப்பட்டு, அது ஏடுகளுக்கு அறிவிக்கப்பட்டது.

பி.டி.ஐ. செய்தியாளர் உடனடியாக என்னிடம் தொடர்பு கொண்டு, ''நீங்கள் தான் முதல் முதலாக கே.ஆர். நாராயணன் பெயரை அறிவித்திருந்தீர்கள். இப்போது அவருடைய பெயரையே ஐக்கிய முன்னணியின் வேட்பாளராக சந்திரபாபு நாயுடு அதிகாரப்பூர்வமாக அறிவித்திருக்கிறாரே?'' என்று கேட்டபோது,

''தி.மு.க. சார்பாக தலைமைக் குழு கூடி ஏற்கனவே ஐக்கிய முன்னணிக்கு திரு. நாராயணன் அவர்கள் பெயரைச் சிபாரிசு செய்துள்ளோம். அதேபோல த.மா.கா. தலைவர் **மூப்பனார்** அவர்களும் சிபாரிசு செய்தார். அந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டு ஐக்கிய முன்னணி அவரை வேட்பாளராக நிறுத்தியது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். ஐக்கிய முன்னணி மாத்திரமல்லாமல், காங்கிரஸ் கட்சியும் அவரை ஆதரிப்பது




1997 குடியரசுத் தலைவர் தேர்தலில் நான் வாக்களிக்க, அருகே மூப்பனார்.

வரவேற்கத் தக்கது - பாராட்டத்தக்கது. அந்த முடிவை எடுத்த காங்கிரஸ் தலைவர் சீதாராம் கேசரிக்கு நன்றி'' என்று கூறினேன்.

20-6-1997 அன்று ஐக்கிய முன்னணி - காங்கிரஸ் கூட்டு வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள குடியரசு துணைத் தலைவர் கே.ஆர். நாராயணன் தனது வேட்பு மனுவை பிரதமர் **குஜ்ரால்**, காங்கிரஸ் தலைவர் **சீதாராம் கேசரி** ஆகியோருடன் சென்று தாக்கல் செய்தார். தி.மு. கழகத்தின் சார்பில் மத்திய அமைச்சர் **முரசொலி மாறன்** முன்மொழிந்தார். மொத்தம் 60 பேர் வேட்பு மனுவை முன்மொழிய, 60 பேர் வழி மொழிந்திருந்தனர்.

14-7-1997 அன்று இந்தியாவின் 10ஆவது குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நடைபெற்றது. 17-7-1997 அன்று வாக்கு எண்ணிக்கை நடந்தது. கே.ஆர். நாராயணன் அவர்களை முதன் முதலாக வேட்பாளராக அறிவிக்க வேண்டுமென்றும், ஆதரவு தர வேண்டுமென்றும் கோரியது தி.மு.க. தான். அந்தத் தேர்தலில் பின்னர் அவரை ஐக்கிய முன்னணியிலே உள்ள கட்சிகள், காங்கிரஸ் கட்சி, த.மா.கா., பா.ஜ.க., பகுஜன் சமாஜ் கட்சி, அகாலி தளம் உள்ளிட்ட கட்சிகள் எல்லாம் ஆதரித்தன. சிவசேனா மற்றும்



ஐக்கிய முன்னணி வேட்பாளர் கே.ஆர்.நாராயணன் பெற்ற வாக்குகள் 94.97 சதவிகிதம்


சில சுயேச்சைகள் ஆதரவுடன் டி.என். **சேஷன்** அவர்கள் எதிர்த்துப் போட்டியிட்டார்.

பல்வேறு மாநிலச் சட்டப் பேரவைகளிலும் தேர்தல் நடைபெற்று, அந்த வாக்குப் பெட்டிகள் எல்லாம் டெல்லி நாடாளுமன்ற வளாகத் திற்குக் கொண்டு வரப்பட்டு, அங்கே தான் தேர்தல் அதிகாரி **எஸ்.கோபாலன்** முன்னிலையில் வாக்கு எண்ணிக்கை நடந்தது.

அந்தத் தேர்தலில் கே.ஆர். நாராயணன் அவர்கள், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட முன்னாள் தலைமைத் தேர்தல் கமிஷனர் டி.என். சேஷனைவிட பெருமளவிலான வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றார். கே.ஆர். நாராயணன் அவர்களுக்கு 4,231 வாக்குகளும், டி.என். சேஷனுக்கு 240 வாக்குகளும் கிடைத்தன. இந்த வாக்குகளுக்கான மதிப்பு என்ற அடிப்படையில் கணக்கிட்டபோது, நாராயணன் அவர்களுக்கு கிடைத்த வாக்குகளின் மதிப்பு 9,56,290. டி.என்.சேஷனுக்குக் கிடைத்த வாக்குகளின் மதிப்பு 56,631. அதாவது நாராயணன் அவர்களுக்கு 94.97 சதவிகித வாக்குகளும், டி.என். சேஷனுக்கு 5.03 சதவிகித வாக்குகளும் கிடைத்தன. அதிலே வேடிக்கை என்னவென்றால், நாடாளுமன்ற உறுப்பினர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் அளித்த வாக்குகளில் 171 வாக்குகள் செல்லாதவை என்றால், எந்த அளவிற்கு நமது உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்த்துக் கொள்ளலாம்.

வெற்றிச் செய்தி கிடைத்தவுடன் கே.ஆர். நாராயணனுக்கு நான் அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் ''உலகிலேயே மிகுந்த மக்கள் தொகை கொண்ட ஜனநாயகத் திருநாடான இந்தியாவின் குடியரசுத் தலைவராக, இதுவரை இல்லாத

அளவிற்கு மிக அதிகமான வாக்கு களைப் பெற்று தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளமைக்கு என்னுடைய இதய பூர்வமான வாழ்த்துக்களைத் தங்களுக்கு உரித்தாக்குகின்றேன். இந்தத் தேர்தல் இந்திய நாடாளு மன்றமும், மாநிலச் சட்டமன்றப் பேரவைகளும் தங்களுடைய அரசியல் நுட்பம் வாய்ந்த தலைமையில் கொண்டுள்ள நல்ல நம்பிக்கையை வெளிப்படுத்து வதாக அமைந்துள்ளது. மேலும் உங்கள் வெற்றி, நாட்டின் ஒருமித்த விருப்பத்தையும் நமது ஜனநாயகத்தில் நலிந்த பிரிவினரின் வெற்றிச் சரித்திரத்தையும் வெளிப்படுத்துகிறது. சமூக நீதி புதிய சகாப்தத்தை தொடங்கி வைத்திருப்பது எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. தங்களுடைய தலைமையில் நமது நாடு மேலும் வளர்ச்சியையும், அமைதியையும் பெற்று சிறந்து விளங்கும் என்று நம்புகிறேன்'' என்று வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தேன்.



சிவசேனா ஆதரவுடன் எதிர்த்து - தோல்வியுற்ற டி.என்.சேஷன் பெற்றது 5.03 சதவிகிதம்

குடியரசுத் தலைவர் பதவியேற்பு விழாவிற்கு நான் அவசியம் வரவேண்டுமென்று அழைத்ததின் பேரிலும் - தமிழ்நாட்டிற்கு ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட நிதி ஒதுக்கீடு குறித்து திட்டக்குழு துணைத் தலைவர் **மதுதண்டவதேயுடன்** விவாதம் நடத்த வேண்டியிருந்ததாலும், 24-7-1997 அன்று டெல்லி சென்றேன். டெல்லி சென்றதும், நேராக கே.ஆர். நாராயணன் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்து, பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவித்தேன். என்னுடன் வந்திருந்த முரசொலி மாறனும், ஆற்காடு வீராசாமியும் கே.ஆர். நாராயணன் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவித்துக் கொண்டனர்.

அந்தப் பயணத்தின்போது, திட்டக் குழுவினருடன் கலந்து பேசி ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழகத்தின்

திட்ட மதிப்பீட்டுத் தொகையை 25 ஆயிரம் கோடி ரூபாய் என்று கேட்டுப் பெற்றேன்.

தமிழ்நாடு இல்லத்திற்கு மார்க்சிஸ்ட் தலைவர் **சுர்ஜித்** அவர்கள் வருகை தந்து, என்னுடனும் த.மா.கா. தலைவர் மூப்பனார் அவர்களுடனும் நீண்ட நேரம் இந்திய அரசியல் குறித்து பேசிக் கொண்டிருந்தார்.

25-7-1997 அன்று மாலையில் பிரதமர் **ஐ.கே. குஜ்ரால்** அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்து, இலங்கை ராணுவத்தினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து சுட்டுக் கொல்லப்பட்டு வருவதைத் தடுத்து நிறுத்திட மத்திய அரசு உடனடியாகத் தலையிட்டு கடுமையாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும், காவிரி நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பின்படி தமிழகத்திற்கு தண்ணீர் கிடைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் வலியுறுத்தினேன்.

1997 ஆம் ஆண்டு என்று மாத்திரமல்ல - அதற்கு முன்பு பல ஆண்டு காலமாகவும், அதற்குப் பிறகு இன்றளவும் தமிழக மீனவர்கள் இலங்கை ராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்படுவதைப் பற்றி தமிழக அரசின் சார்பில் கோரிக்கை வைப்பது நின்றபாடில்லை. நாம் தொடர்ந்து இந்தக் கோரிக்கையை ஒவ்வொரு முறை தமிழக மீனவர்கள் சுட்டுக் கொல்லப்படுகின்ற நேரத்தில் மத்திய அரசுக்கு கடிதம் எழுதுவதும், கோரிக்கை வைப்பதும், ஆனால் நிற்காமல் அந்தச் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதும் இன்றளவும் இருந்து வருகின்றன.


அதை மனதிலே கொண்டுதான் தற்போது 17-7-2007 ஆம் நாளன்று, அதாவது 97 ஆம் ஆண்டு சம்பவம் நடைபெற்று பத்தாண்டுகளுக்குப் பிறகும் தற்போதும் அந்தச் சம்பவம் நடந்திருப்பதையொட்டி, உறுதியாக என்ன நடவடிக்கை எடுப்பது என்பதற்காக தி.மு.க. வின் தலைமை நிலைய உயர்நிலை செயல் திட்டக்குழுவினைக் கூட்டி விவாதித்து கடுமையான தீர்மானமும் நிறைவேற்றி அனுப்பி வைத்தோம்.

ஆனால் என்ன செய்தும் தமிழக மீனவர்கள் இலங்கை ராணுவத்தினரால் பாதிக்கப்படுவது நின்றபாடில்லை.

இந்தியாவின் குடியரசுத் தலைவராக கே.ஆர். நாராயணன் 25-7-1997 அன்று காலையில் நாடாளுமன்ற மைய மண்டபத்தில் நடைபெற்ற விழாவில், தலைமை நீதிபதியாக இருந்த **ஜே.எஸ். வர்மா** அவர்களால் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

பொறுப்பேற்ற பின் அவர் முதன் முதலாக நாட்டிற்காக ஆற்றிய உரையில் - ''சாதி மத பேதமின்றி அனைத்துப் பிரிவு மக்களும் அதிகாரத்தில் பங்கேற்கும் நிலை உருவாக வேண்டும் - பல்வேறு இனம், மொழி, கலாச்சாரம் கொண்ட இந்தியா வளமுடன் திகழ ஒன்றுபட்டு உழைப்போம்'' என்று கூறியதோடு - தன்னுடைய எல்லையற்ற நன்றி உணர்வை அவர் மீது வைத்துள்ள இந்திய மக்களுக்கும், அவரைத் தேர்ந்தெடுத்த அரசியல் கட்சிகளுக்கும் தெரிவித்துக் கொள்வதாகக் கூறினார்.

குடியரசுத் தலைவர் தேர்தலைத் தொடர்ந்து குடியரசு துணைத் தலைவர் தேர்தலில் ஐக்கிய முன்னணி - காங்கிரஸ் கட்சியின் பொது வேட்பாளராக திரு. கிருஷ்ணகாந்த் அவர்கள் நிறுத்தப்படுவதாக பிரதமர் குஜ்ரால் அவர்களும் சந்திரபாபு நாயுடு அவர்களும், சீதாராம் கேசரி அவர்களும் கூட்டாக அறிவித்தார்கள். அப்போது கிருஷ்ணகாந்த் அவர்கள் ஆந்திர மாநிலத்தின் ஆளுநராக இருந்தார். பொது வாழ்வில் நீண்ட அனுபவம் பெற்றவர். சுதந்திரப் போராட்ட வீரர். 1975 ஆம் ஆண்டு பிரகடனப்



தமிழக மீனவர்களை இலங்கை இராணுவம் சுட்டுக் கொல்வதைத் தடுத்து நிறுத்திட பிரதமர் குஜ்ராலிடம் வற்புறுத்தினேன்.

படுத்தப்பட்ட அவசர காலச் சட்டத்தை எதிர்த்த இளந்துருக்கியர் களில் கிருஷ்ணகாந்த் அவர்களும் ஒருவராவார்.

★ ★ ★

ஜனநாயகத்தில் கட்சித் தேர்தல்களை முறையாக நடத்துகின்ற ஒரே கட்சியாக திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் கட்டுக்கோப்போடு காட்சி அளிக்கின்றது என்று அகில இந்திய ஏடுகளால் பாராட்டப்படும் தி.மு. கழகத்தின் 10ஆவது பொதுத் தேர்தல், 1997 ஆம் ஆண்டு மிகுந்த எழுச்சியோடு, எதிர்பார்த்ததற்கு மாறாக அமைதியாக நடைபெற்றது. அந்த ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தான் முதன் முதலாக கணிப்பொறி மூலமாக கழக உறுப்பினர்கள் அட்டை தயாரிக்கப்பட்டு - 62 லட்சம் உறுப்பினர்களுக்கு லேமினேஷன் செய்யப்பட்ட அட்டைகள் முறைப்படி வழங்கப்பட்டன. முதன்முதலாக, இந்தியாவிலேயே கணிப் பொறி மூலம் கட்சி உறுப்பினர்களின் அட்டைகள் அச்சடிக்கப்பட்டு, விநியோகிக்கப் பட்டதும் திராவிட முன்னேற்றக் கழகத்திலே தான்.

இவ்வாறு உறுப்பினர் அட்டைகள் தயாரிக்கப்பட்டு, உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டபின், கிளைக் கழகச் செயலாளர்கள் தேர்தல் முறைப்படி நடைபெறத் தொடங்கி, அதன் அனைத்து முடிவுகளும் ஏடுகளில் விளம்பரப்படுத்தப் பட்டன. கிளைக் கழகச் செயலாளர்கள் தேர்தல் தொடங்கி, படிப்படியாக ஒன்றிய - நகர - பேரூர் - நகரியக் கழகத் தேர்தல்கள் நடந்து முடிந்தன. அதன் அடுத்த கட்டமாகத் தான் மாவட்டக் கழக - மாநகரக் கழகச் செயலாளர்கள், மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட 192 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அந்தத் தேர்தலில் 252 பொதுக்குழு உறுப்பினர்களும், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் 99 பேரும், ஒன்றிய - நகர - பேரூர் - நகரியக் கழக நிர்வாகிகள் 528 பேரும், மொத்தம் 1,071 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அந்தத் தேர்தலைக் கண்காணிக்க கண்காணிப்புக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டு,



7ஆவது முறையாக கழகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட என்னுடன் பொதுச் செயலாளர் க.அன்பழகன் - பொருளாளர் ஆர்க்காடு வீராசாமி

அவ்வப்போது ஏற்பட்ட சிறு பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தது.

தேர்ந்தெடுக்கப்பட்ட புது பொதுக் குழு உறுப்பினர்களும், மாவட்டக் கழகச் செயலாளர்களும் கலந்து கொண்டு, கட்சித் தலைமைக்கு உரியவர்களை தேர்ந்தெடுக்கும் தேர்தல் நடைபெறும் கூட்டம், 26-7-1997 அன்று கோடம்பாக்கம் ராகவேந்திரா திருமண மண்டபத்தில் புதிய பொலிவோடும், உற்சாகத்தோடும் கூடியது. அந்தக் கூட்டத்தில் தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர் மற்றும் நான்கு தணிக்கைக் குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

27-7-1997 அன்று நடைபெற்ற தேர்தலுக்கு மதுரை புறநகர் மாவட்டக் கழகச் செயலாளர் **அக்கினிராசு** அவர்கள் ஆணையாளராக இருந்து தேர்தலை நடத்த வேண்டுமென்று **துரைமுருகன்** முன்மொழிய, சைதை **கா. கிட்டு** அதனை வழி மொழிந்தார். கழகத்தின் தலைவராக நானும், பொதுச் செயலாளராக **இனமானப் பேராசிரியரும்**, பொருளாளராக **ஆர்க்காடு வீராசாமியும்** ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டோம். அமைச்சர் **நாஞ்சிலார்** கழகத்தின் துணைப் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

7ஆவது முறையாக கழகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட என்னை பல்வேறு கட்சித் தலைவர்களும், முன்னணியினரும்,

கலைத் துறையைச் சேர்ந்த வர்களும், கழக முன்னணி யினரும் நேரில் சந்தித்தும், தொலைபேசியின் வாயி லாகவும் வாழ்த்தினர்.



சட்டமன்றப் பவள விழாவில் பேராசிரியருக்கு விருது வழங்கினேன்

கழகத்தின் தேர்தல் இவ்வாறு கிளைக் கழகத் திலிருந்து படிப்படியாக நடைபெற்று, தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர்வரை முறைப்படி வேறு எந்தக் கட்சியிலாவது நடைபெறு கிறதா என்றால் எங்கேயும் கிடையாது.

அ.தி.மு.க. விலே சில நாட்களுக்கு முன்பு செய்தி வந்தது-பொதுச் செயலாளர் பொறுப்புக்கு மட்டும் தேர்தல் நடத்துகிறார் களாம், அதற்கு ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் ஜெயலலிதாவின் பெயரை முன் மொழிந்திருக்கிறார்களாம். ஆனால் அங்கே கிளைக் கழகச் செயலாளர் பதவிக்குத் தேர்தல் உண்டா? ஒன்றியச் செயலாளர் பதவிக்குத் தேர்தல் உண்டா? பொதுக் குழு உறுப்பினர் பதவிக்கு, மாவட்டக் கழகச் செயலாளர் பதவிக்கு தேர்தல் உண்டா என்றால் கிடையாது. எல்லாமே தன்னிச்சையான நியமனங்கள்தான். இன்று ஒருவர் மாவட்டக் கழகச் செயலாளராக இருப்பார். எத்தனை ஆண்டு காலம் என்று எந்த வரையறையும் கிடையாது. தலைமை ''கட்டம்'' கட்டுகின்றவரை அவர்தான் மாவட்டக் கழகச் செயலாளர். தலைமை எப்போது கட்டம் கட்டும் என்று எவருக்கும் தெரியாது. வேறொருவரை தலைமை விரும்பினால், அவர் பெயரை நியமனம் செய்துவிட்டு, ஏற்கனவே இருந்தவருக்கு கட்டம் கட்டப்பட்டு விடும். அடுத்து நடைபெறவுள்ள பொதுக்குழுவிற்கு யார் யாரை அழைக்கலாம் என்று தலைமையே முடிவு செய்து, அவர்களுக்கு மட்டும் அழைப்பு அனுப்புமாம். அவர்கள் அடுத்தப் பொதுக் குழுவிற்கு வர உரிமைப் படைத்தவர்களா என்றால் கிடையாதாம். அந்தப் பொதுக்குழுவுக்கு யார், யார் வரலாம்

என்பதைப் பற்றி அப்போது மீண்டும் தலைமை முடிவு செய்து, அவர்களுக்கு அழைப்பு அனுப்புமாம்! இப்படியும் ஒரு கட்சி! அவர்களும் தேர்தலில் நிற்கிறார்கள், அவர்களுக்கும் மக்கள் ஓட்டுப் போடுகிறார்கள்!

இந்தியாவின் குடியரசுத் தலைவர் தேர்தல், குடியரசு துணைத் தேர்தல், தி.மு.கழக கட்சித் தேர்தல் என்று வரிசையாக நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், 8-6-1997 அன்று தஞ்சை பெரிய கோவில் எனப்படும் பிரகதீசுவரர் கோயிலுக்கு குடமுழுக்கு நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டு, அதற்கான ஏற்பாடுகள் எல்லாம் நடைபெற்று வந்தன.

பல்வேறு பகுதிகளிலிருந்தும் அந்தப் புராதன கோவிலின் குட முழுக்கு விழாவைக் காணுவதற்காகப் பல்லாயிரக் கணக்கான மக்கள் தஞ்சை மாநகரில் திரண்டனர். குடமுழுக்கை ஒட்டி வான வேடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அப்போது அங்கு அமைக்கப்பட்டிருந்த யாகசாலையின் பந்தலில் திடீரென்று எதிர்பாராத வகையில் தீ விபத்து ஏற்பட்டு மக்கள் அலறிக் கொண்டு அங்குமிங்கும் ஓட முயற்சித்தபோது, பெரும் நெரிசல் ஏற்பட்டு - தீ விபத்தின் காரணமாகவும் நெரிசலின் காரணமாகவும் 50 பேர் பலியாகி விட்டார்கள் என்ற செய்தி 8-6-1997 அன்று நள்ளிரவில் எனக்குக் கிடைத்தது.



9முறை சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப் பட்டு பணியாற்றியதற்காக ஆளுநர் பாத்திமா பீவி எனக்கு விருது வழங்கினார்.

அதிகாலை 4 மணி அளவிலேயே சென்னையிலிருந்து புறப்பட்டு காரிலேயே தஞ்சைக்கு விரைந்தேன். என்னுடன்

ஆர்க்காடு வீராசாமியும், துரைமுருகனும் உடன் வந்தனர். நான் வருகின்ற செய்தி கிடைத்து, தஞ்சை மாவட்ட எல்லையில் அமைச்சர்கள் கோ.சி. மணி, பொன்முடி, கே.என்.நேரு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், செங்குட்டுவன், பழனிமாணிக்கம் எம்.பி., மத்திய அமைச்சராக இருந்த டி.ஜி. வெங்கட்ராமன், அப்போது தஞ்சை மாவட்ட ஆட்சியராக இருந்த ராமனாதன், மற்றும் கழக முன்னணியினர் என்னைச் சந்தித்தார்கள்.

தஞ்சையை அடைந்த நான் முதலில் மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெற்று வந்தவர்களையெல்லாம் சந்தித்து ஆறுதல் கூறியதோடு, தீவிர சிகிச்சைக்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்யும்படி அதிகாரிகளுக்கு ஆணையிட்டேன். பின்னர் அந்த விபத்தில் உயிர் இழந்தவர்களின் உடல்களுக்கெல்லாம் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினேன்.

அங்கிருந்து தீ விபத்து நடந்த யாக சாலையைச் சென்று பார்வையிட்டேன். தஞ்சைக் கோவிலின் பரம்பரை அறங்காவலர் ராஜா போன்ஸ்லே தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெறுகிறார் என்ற செய்தி கேட்டு, அங்கே சென்று அவரைப் பார்த்து ஆறுதல் கூறினேன்.

இதற்கிடையே தஞ்சை செய்தியாளர்கள் என்னைச் சந்தித்து விபத்து பற்றிய விவரங்களைக் கேட்டனர். 40 பேர் அதுவரை இறந்திருக்கிறார்கள் என்றும், அதிலே பெண்கள் 31 பேர் என்றும், ஆண்கள் 4 பேர் என்றும் குழந்தைகள் 5 பேர் என்றும் கூறியதோடு இறந்தவர்களின் குடும்பங்களுக்குத் தலா ஒரு இலட்ச ரூபாய் வீதம் முதலமைச்சர் நிவாரண நிதிலிருந்து உதவித் தொகை வழங்கப்படும் என்றும் - காயமடைந்தவர்களுக்கு 20 ஆயிரம் ரூபாயிலிருந்து 50 ஆயிரம் ரூபாய்வரை நிவாரணம் வழங்கப்படும் என்றும் - காயம் அடைந்தவர்கள் மொத்தம் 85 பேர் என்றும் விளக்கினேன்.

தஞ்சைக் கோயிலின் விபத்து காரணமாக ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுகட்டுவதற்காக தஞ்சை கோவில் திருப்பணிக்

குழுவிற்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக ஐந்து இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்றும் அறிவித்தேன். பிரதமர் ஐ.கே. குஜ்ரால் அவர்களும், ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு அவர்களும், தஞ்சை தீ விபத்து குறித்து கடிதம் எழுதியிருந்தார்கள்.

கோயிலில் தீ விபத்து ஏற்பட்ட இடம் கோவிலின் பின்புறம் என்பதால், நான் தீ விபத்தைப் பார்வையிடச் சென்றபோது, காவல் துறையினர் கோயிலின் பின்புற வழியாக அங்கே அழைத்துச் சென்றார்கள். அதையும் ஒரு பிரச்சினையாக ஆக்கி, கோயிலுக்குள் நேர் வழியாகச் சென்றால் அரசியல்வாதிகள் பாதிக்கப்படுவார்கள் என்பதற்காகத்தான் பின்புற வழியாகச் சென்றேன் என்றும் அப்போது ஒரு பிரச்சாரம் நடைபெற்றது.

அதைப் பற்றி செய்தியாளர்கள் என்னிடம் கேட்டபோது, ''நான் யாகசாலைக்கு விபத்தைக் காண்பதற்காக அழைத்துச் செல்லப்பட்டபோது, எது முன் பக்கம், எது பின்பக்கம் என்பதே எனக்குத் தெரியாது. பாதுகாப்புப் போலீசார் அழைத்துச் சென்ற வழியிலேதான் சென்றேன். அவர்களும் யாகசாலைக்கு மிகவும் குறைந்த தூரத்தில் எளிதாகச் செல்லக்கூடிய வழியில் அழைத்துச் சென்றார்கள். அது மாத்திரமல்ல, நான் தஞ்சை கோயிலுக்குள் போன பிறகுதான் ஆட்சிப் பொறுப்பிற்கே முதன் முதலில் வந்தேன். இன்னும் சொல்லப்போனால் அந்தக் கோயிலுக்குள் போய் வந்த பிறகுதான் குளித்தலை தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராகவே ஆனேன். தஞ்சை தொகுதியிலே போட்டியிட்டபோதும், அந்தக் கோயிலுக்குள் சென்றிருக்கிறேன். அப்போதும் வெற்றி பெற்றேன். பொதுவாக எனக்கு இதில் எல்லாம் நம்பிக்கை கிடையாது. மேலும் நான் ''சாரப்பள்ளம் சாமுண்டி'' அல்லது ''ஓர் உளியின் ஓசை'' என்ற குறு நாவல் எழுதினேன். அதுதான் தற்போது திரைப் படமாக வெளி வந்துள்ளது. அந்தக் கதையை நான் எழுதிய போது, அந்தக் கோவிலுக்குள் உள்ள சிற்பங்களையும், ஓவியங்களையும் அடிப்படையாக வைத்து எழுதிய குறுநாவல் என்பதால், அதற்காக அந்தக் கோயிலுக்குள் பலமுறை சென்றிருக்கிறேன். அதனால் எனக்கு எந்தக் கெடுதியும் ஏற்படவில்லை. அந்தக் கோயிலைக் கட்டிய

ராஜராஜனுக்கே எந்தக் கெடுதியும் ஏற்படாதபோது, வேறு யாருக்கு என்ன ஏற்பட்டு விடப் போகிறது?'' என்று பதில் அளித்தேன்.

★ ★ ★

தஞ்சையிலிருந்து அன்றைய தினமே சென்னைக்குப் புறப்பட வேண்டியிருந்தது. சட்டமன்ற பவள விழாவினைச் சிறப்பாக எப்படி நடத்துவது என்பது குறித்து கலந்தாலோசனைக் கூட்டத்திற்கு வரவேண்டியிருந்ததால், தஞ்சையிலே ஓய்வெடுக்கக்கூட நேரமில்லாமல் உடனடியாகச் சென்னைக்குத் திரும்பினேன். சட்டமன்ற பவளவிழா பற்றி எழுதுகின்ற நேரத்தில், அந்த விழாக்கள் பற்றிய ஒன்றை நான் ஞாபகப்படுத்த வேண்டும். தி.மு. கழகம் - குறிப்பாக நான் எப்போதெல்லாம் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிறேனோ, அப்போதெல்லாம் தமிழகத்தைச் சேர்ந்த முக்கியமான தலைவர்களை யொட்டிய நிகழ்ச்சிகள் - சம்பவங்கள் - விழாக்கள் நடைபெறுவது என்பது இயற்கையாகவே அமைந்த ஒன்றாகும். உதாரணத்திற்கு, இத்தொடரை எழுதிக் கொண்டிருக்கும் காலகட்டத்திற்கு முன்பும், பின்பும் நான் கலந்துகொண்ட விழாக்களில் ஒரு சிலவற்றை - என் நினைவிலே உள்ளவரை ஞாபகப்படுத்திட விரும்புகிறேன்.

2-10-1969 அன்று சென்னையில் அண்ணல் காந்தியடிகள் நூற்றாண்டு விழா - 15-8-1972 அன்று சுதந்திர தின வெள்ளி விழா (இந்த விழா தமிழகச் சட்டப் பேரவையில் நள்ளிரவு 12 மணி அளவில் நடைபெற்றது) - 9-8-1990 அன்று சிதம்பரத்தில் சுவாமி சகஜானந்தா நூற்றாண்டு விழா - 14-4-1990 அன்று அண்ணல் அம்பேத்கர் நூற்றாண்டு விழா - 29-4-1990 அன்று சென்னையில் பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு விழா - 1-5-1990 அன்று சென்னையில் மே தின நூற்றாண்டு விழா - 19-2-1997 அன்று சென்னையில் தமிழறிஞர்கள் இ.மு. சுப்பிரமணியப் பிள்ளை, மே.வி. வேணுகோபால் பிள்ளை ஆகியோரின் நூற்றாண்டு விழாக்கள் - 14-7-1997 அன்று சென்னையில் தமிழ்நாடு சட்டமன்றப் பவள விழா மற்றும் தமிழ்நாடு சட்டப் பேரவை வைரவிழா - 20-7-1997 அன்று



மதுரையில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் நூற்றாண்டு விழாவில் அணையா விளக்கை ஏற்றி வைத்தேன்

சென்னையில் பட்டதாரி ஆசிரியர் கழக வெள்ளி விழா - 4-8-1997 அன்று சென்னையில் மனோன்மணியம் சுந்தரனார் நூற்றாண்டு விழா - 5-8-1997 அன்று சென்னையில் நெடுஞ்சாலைத் துறை பொன் விழா - 7-8-1997 அன்று சென்னையில் ருக்மணி லட்சுமிபதி நூற்றாண்டு விழா - 15-8-1997 அன்று சுதந்திர தினப் பொன் விழா - 9-9-1997 அன்று சென்னையில் அன்னை வேளாங்கண்ணி ஆலய வெள்ளி விழா - 13-9-1997 அன்று சென்னையில் கன்னிமரா பொது நூலக நூற்றாண்டு விழா - 18-4-1998 அன்று மதுரையில் மதுரை வழக்கறிஞர் சங்க 125ஆவது ஆண்டு விழா - 18-7-1998 அன்று பேராயர் எஸ்றா சற்குணம் மணிவிழா - 19-7-1998 அன்று கவிக்கோ அப்துல் ரகுமானின் மணிவிழா - 27-8-1998 அன்று சென்னையில் டி.என். இராஜரத்தினம் பிள்ளை நூற்றாண்டு விழா - 28-11-1998இல் சென்னையில் கும்பகோணம் பிடில் இராஜமாணிக்கம் பிள்ளை நூற்றாண்டு விழா - 16.10.1999 அன்று சென்னையில் வீரபாண்டிக் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட 200ஆவது ஆண்டு நினைவு நாள் சிறப்பு அஞ்சல் தலை வெளியீடு - 30.10.1999 அன்று இராய. சொக்கலிங்கம் நூற்றாண்டு விழா - 13.3.2000 அன்று சென்னையில் முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் நூற்றாண்டு விழா - 26.1.2001 அன்று சென்னையில் இந்தியக் குடியரசு தினப் பொன் விழா - 1.7.2006 அன்று சிலம்புச் செல்வர் ம.பொ.சி. நூற்றாண்டு விழா - 10.7.2006 அன்று வேலூர் சிப்பாய்க் கழகம் 200ஆம் ஆண்டு நினைவு நாள் - 30.7.2006 அன்று சென்னையில் ஏ.வி. மெய்யப்பச் செட்டியார் நூற்றாண்டு விழா - 4.9.2006 அன்று சென்னைப் பல்கலைக்

கழக 150ஆவது ஆண்டு விழா - 1.12.2006 அன்று தமிழ் மாநிலம் அமைந்த பொன் விழா - 4.1.2007 அன்று சென்னையில், சென்னை மாநகரக் காவல் துறையின் 150ஆவது ஆண்டு விழா - 17.1.2007 அன்று சென்னை துறைமுகத்தின் 125ஆவது ஆண்டு விழா - 29.1.2007 அன்று மதுரையில் தியாகராயர் கல்லூரி பொன்விழா - 26.3.2007 அன்று அகில இந்திய கட்டுநர், வல்லுநர் சங்க வெள்ளி விழா - 2.7.2007 அன்று மின் வாரியப் பொன் விழா - 30.6.2007 அன்று புத்தர் மகாபரி நிர்வாணம் அடைந்த 2550ஆம் ஆண்டு நிறைவு விழா - 19.8.2007 அன்று இந்தியன் வங்கியின் நூற்றாண்டு விழா - 21.8.2007 அன்று சென்னையில் ஜீவா நூற்றாண்டு விழா - 30.10.2007 அன்று மதுரையில் பசும்பொன் தேவர் நூற்றாண்டு விழா - 17-1-2008 அன்று சென்னையில் எல்.வி. பிரசாத் நூற்றாண்டு விழா - 10.5.2008 அன்று சென்னையில் காரைக்குடி இராம. சுப்பையா நூற்றாண்டு விழா - 21.6.2008 அன்று இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் மணி விழா - 24.6.2008 அன்று தஞ்சை மாவட்ட நீதி மன்றத்தின் 200ஆவது ஆண்டு விழா என்று பட்டியல் நீண்டு கொண்டே செல்லும்.

அது போலவே, பெருந்தலைவர்கள் மறைந்தபோது அவர்களை அடக்கம் செய்கின்ற நிகழ்ச்சிகள் - நல்லதோ கெட்டதோ - நான் பொறுப்பிலே இருந்த போது நடைபெற்றுள்ளன. எடுத்துக்காட்டாக 24-12-1973 அன்று தந்தை பெரியார் அவர்கள் மறைந்தபோதும், 2-10-1975 அன்று பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் மறைந்தபோதும், 25-12-1972இல் மூதறிஞர் ராஜாஜி அவர்கள் மறைந்தபோதும், 4-4-1972 அன்று கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள் மறைந்தபோதும் நான் தான் பொறுப்பிலே இருந்துள்ளேன்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடம் - அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவிடம் - பெரியவர் பக்தவத்சலம் அவர்களின் நினைவிடம் - நாகர்கோவிலில் ஜீவா நினைவிடத்தில் மணி மண்டபம் - சென்னையில் 4 கோடி ரூபாய் செலவில் அம்பேத்கர் மணி மண்டபம் - காயிதே மில்லத் அவர்களின் மணி மண்டபம் - மதுரை திருமங்கலத்தில்



இந்தியக் குடியரசு பொன்விழாவை முன்னிட்டு சென்னை காமராசர் சாலையில், என்னால் திறந்து வைக்கப்பட்ட நினைவுத் தூண்

வீரத்தியாகி விசுவநாததாஸ் நினைவில்லம் - திருநெல்வேலி மாவட்டத்தில் நெல்கட்டும் செவல் கிராமத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் பூலித்தேவன் நினைவகம் - கட்டபொம்மனின் தளபதி வீரன் சுந்தரலிங்கம் நினைவாக அவரது கிராமத்தில் ஒரு கோடியே 5 லட்சம் ரூபாய் செலவில் சுந்தரலிங்கம் நகர் - காந்தி மண்டப முகப்பில் காந்தியடிகளுக்கு மார்பளவுச் சிலை அமைக்கப்பட்டதுபோல, ராஜாஜி, காமராஜர், அண்ணா, எம்.ஜி.ஆர். ஆகியோர் நினைவிடங்களின் முகப்பில் அவரவர்தம் மார்பளவுச் சிலைகள் திறப்பு - குமரி முனையில் பெருந்தலைவர் காமராசரின் பெயரில் 50 லட்சம் ரூபாய் செலவில் மணி மண்டபம், தியாகிகள் மணி மண்டப முகப்பில் சுதந்திரப் போராட்ட தியாகி ஆர்யா என்ற பாஷ்யம், மொழிப்போர் தியாகி சங்கரலிங்கனார் ஆகியோரின் சிலைகள் திறப்பு - டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழக வளாகத்தில் எம்.ஜி.ஆருக்குச் சிலைத் திறப்பு - திருச்சியில் வ.வே.சு. அய்யருக்கு நினைவில்லம் - பட்டுக்கோட்டையில் கல்யாண சுந்தரம் அவர்களுக்கு மணி மண்டபம் - உடுமலையில் நாராயண கவிராயர் மணி மண்டபம் என்று இத்தனைப் பணிகளையும் நான் பொறுப்பிலே இருந்த காலத்திலே நிறைவேற்றினேன் என்பதை பெருமைக்காகச் சொல்லவில்லை

- இவைகளையெல்லாம் உண்மையிலேயே எனக்குக் கிடைத்த பெரும் வாய்ப்பாகத்தான் கருதுகிறேன்.

இவை மாத்திரமல்ல, தியாகிகளுக்கு நினைவுச் சின்னங்கள் அமைப்பது என்ற பட்டியலை எடுத்துக் கொண்டால்கூட பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட பெருமை எனக்குண்டு. அதற்கும் சான்றுகள் இதோ:-

18-8-1974 அன்று பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மன் கோட்டையை எழுப்பி அதனை திறந்து வைத்தது நான்தான். 1997 ஆம் ஆண்டு கடற்கரை காமராஜர் சாலையில் போர் நினைவுச் சின்னம் அருகே சுதந்திரப் பொன் விழா நினைவுச் சின்னத்தை எழுப்பி அதனை திறந்து வைத்ததும் நான்தான். 2-10-1998இல் 30 லட்சம் ரூபாய் செலவில் கிண்டியில் தியாகிகள் மணி மண்டபத்தை அமைத்துத் திறந்து வைத்ததும் நான்தான். 25 லட்சம் ரூபாய் செலவில் பெரியவர் பக்தவத்சலம் அவர்களின் நினைவிடத்தை அமைத்து 13-3-1998 அன்று திறந்து வைத்ததும் நான்தான். மருதூரில் வள்ளலார் ராமலிங்க அடிகளார் வாழ்ந்த இல்லம் புனரமைப்பு - சிவகங்கை மாவட்டத்தில் தவத்திரு குன்றக்குடி தெய்வ சிகாமணி அருணாசல தேசிகர் மணிமண்டபம் - சென்னையில் மகாகவி பாரதியார் நினைவில்லம் புதுப்பிப்பு - மதுரையில் தியாகி கக்கன் அவர்களுக்கு சிலை திறப்பு - மதுரை மாவட்டம், தும்பைப்பட்டியில் தியாகசீலர் கக்கன் மணி மண்டபம் - சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் திருவுருவச் சிலை - சென்னை கிண்டியில் தீரன் சின்னமலை திருவுருவச் சிலை - புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மன்னர் ராஜகோபால தொண்டமானுக்கு சிலை - நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை வாழ்ந்த இல்லம் நினைவில்லமாக மாற்றம் - என்று எழுதிக் கொண்டே போகலாம்.

இந்த வரிசையில் 1997 ஆம் ஆண்டு சட்டமன்றத்தின் பவள விழா மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் வைர



விழாவினைக் கொண்டாட நேர்ந்தது. இந்த விழாக்களைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்காக விழாக் குழு ஒன்று சட்டமன்றப் பேரவைத் தலைவராக இருந்த **பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் அமைக்கப் பட்டது. அந்தக் குழுவில் **ஆர்க்காடு வீராசாமி, கோ.சி. மணி, பரிதி இளம்வழுதி, டி. சாலமன் ஜெயபால், எஸ். ராஜரத்தினம், சந்திரசூடன்** ஆகியோர் உறுப்பினர்களாக இடம் பெற்றனர். குழுவின் தலைவரும், உறுப்பினர்களும் *12-6-1997* அன்று என்னைச் சந்தித்து, விழாக்களை எந்த அளவிற்குச் சிறப்பாகவும், சீராகவும் நடத்துவதென்பது குறித்து கலந்துரையாடினார்கள்.

14-7-1997 அன்று சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் அப்போது தமிழக ஆளுநராக இருந்த **பாத்திமா பீவி** அவர்கள் தலைமையில், என்னுடைய முன்னிலையில் தமிழகச் சட்டமன்றப் பவள விழாவும் - பேரவையின் வைர விழாவும் நடைபெற்றது. சட்டப் பேரவைத் தலைவராக அப்போதிருந்த **பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் வரவேற்புரையாற்றினார். சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி **மன்மோகன் சிங் லிபர்ஹென்** அவர்கள் துவக்க உரையாற்றினார்.

சட்டமன்றப் பவள விழா மற்றும் பேரவை வைர விழா மலரினை நான் வெளியிட - குடியரசு முன்னாள் தலைவர் ஆர். **வெங்கட்ராமன்** அதனைப் பெற்றுக் கொண்டார். தமிழக அரசின் சார்பில் **ஆர். வெங்கட்ராமன், பாத்திமா பீவி, மன்மோகன் சிங் லிபர்ஹென்,** ஆளுநர்களாக இருந்த **சி.சுப்பிரமணியம், பா. ராமச்சந்திரன்,** அவை முன்னவர் **பேராசிரியர்,** சட்டப் பேரவை எதிர்க் கட்சித் தலைவர் **சோ.பாலகிருஷ்ணன்,** பேரவைத் துணைத் தலைவர் **பரிதி இளம்வழுதி** ஆகியோருக்கு முதலமைச்சர் என்ற முறையில் பொன்னாடை அணிவித்து நினைவுப் பரிசுகளை வழங்கினேன். தமிழகச் சட்டப் பேரவைக்கு 9 முறையும், மேலவைக்கு 1 முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டவன் என்ற முறையில் எனக்கு ஆளுநர் பாத்திமா பீவி அவர்கள் பொன்னாடை அணிவித்து, நினைவுப் பரிசு வழங்கினார்.

பேரவைக்கு 7 முறை தேர்ந்தெடுக்கப் பெற்றோர், 6 முறை தேர்ந்தெடுக்கப் பெற்றோர், 5 முறை தேர்ந்தெடுக்கப் பெற்றோர், 85 வயதிற்கு மேற்பட்ட முன்னாள் உறுப்பினர்கள், பேரவை முன்னாள் தலைவர்கள், முன்னாள் பேரவை, மேலவைத் துணைத் தலைவர்கள், முன்னாள் உறுப்பினர்கள் சங்கத் தலைவர், செயலாளர் என தனித்தனியாகப் பட்டியலிட்டு - மேடைக்கு அழைக்கப்பட்டு - அனைவருக்கும் என் கரங்களால் பொன்னாடை அணிவிக்கப் பெற்று, நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன. 85 வயதுக்கு மேற்பட்ட உறுப்பினர் என்ற பட்டியலில் திருமதி **லூர்தம்மாள் சைமன்** மேடைக்கு வர இயலாமல் எதிரே அமர்ந்திருந்ததால், அவரது இடத்திற்கே நான் சென்று விருதினை வழங்கினேன்.

விழா சிறப்பாக நடைபெறவும் மலர் சிறப்பாக வெளிவரவும் பாடுபட்ட பேரவைச் செயலக அதிகாரிகள், மற்றும் அலுவலர்கள் சார்பில் பேரவைச் செயலாளர் **சாலமன் ஜெயபாலுக்கு** நான் பொன்னாடை அணிவித்து, நினைவுப் பரிசு வழங்கினேன்.

அந்த விழாவில் நான் என்னுடைய உரையைத் தொடங்கும்போது - ''1972 ஆம் ஆண்டு இந்திய சுதந்திர

வெள்ளி விழாவைக் கொண்டாடும்போதும், நான்தான் இங்கே முதலமைச்சராக இருந்தேன் - 1989இல் சட்டமன்றப் பேரவையினுடைய பொன் விழாவைக் கொண்டாடிய போதும், நான்தான் முதல் அமைச்சராக இருக்கிறேன் - இன்று இந்தப் பவள விழா, வைர விழாவைக் கொண்டாடும் போதும் நான் முதல் அமைச்சராக இருக்கிறேன்! எனவே நீங்கள் எனக்கு **''விழா முதல் அமைச்சர்''** என்று பட்டம் கொடுக்கலாம்'' என்று பலத்த சிரிப்புக்கு இடையே கூறினேன்.

தமிழகச் சட்டமன்றத்திலே பணியாற்றி மிகப் பெரிய பொறுப்புக்கு பின்னர் வந்தவர்களைப் பற்றிய பட்டியல் ஒன்றையும் அன்றைய தினம் என் பேச்சில் குறிப்பிட்டுக் காட்டினேன். உதாரணமாக தமிழகச் சட்டமன்றத்தில் நிதி அமைச்சராக இருந்த **சி.சுப்பிரமணியம்** அவர்கள் மத்திய அரசுக்கே நிதி அமைச்சரானார். அதன் பின்னர் மராட்டிய மாநில ஆளுநராகவும் ஆனார். தமிழகத்திலே அமைச்சராக இருந்த **ஆர்.வெங்கட்ராமன்** அவர்கள் மத்திய அரசிலே அமைச்சரானார். பின்னர் இந்திய அரசின் குடியரசுத் துணைத் தலைவராகவும் குடியரசுத் தலைவராகவும் ஆனார். சென்னை மாகாணத்தின் முதல்வராக இருந்த மூதறிஞர் **ராஜாஜி** அவர்கள் வங்காள மாநில ஆளுநராகவும், முதல் இந்திய கவர்னர் ஜெனரலாகவும் ஆனார்கள். தமிழகச் சட்ட மன்றத்தில் மாநில அமைச்சராக இருந்த **வி.வி.கிரி** அவர்கள், இந்தியாவின் குடியரசுத் தலைவராக பின்னர் ஆனார்கள். தமிழகத்தில் மாநில அமைச்சராக இருந்த திருமதி **ஜோதி வெங்கடாசலம்** கேரள மாநில ஆளுநராக ஆனார்கள். ஒன்றாக இருந்த தமிழகத்தில் அமைச்சராக இருந்த **பிருமானந்த** ரெட்டி பின்னர் ஆந்திர முதலமைச்சராக ஆனார்கள். பின்னர் ஆளுநராகவும் ஆனார்கள். நீலம் **சஞ்சீவரெட்டி** இங்கே அமைச்சராக இருந்தார்கள். பின்னர் ஆந்திர முதல்வராகவும், பின்னர் இந்தியாவின் குடியரசுத் தலைவராகவும் ஆனார்கள் என்ற விவரங்களையெல்லாம் அந்த விழாவில் ஞாபகப்படுத்தினேன். இந்தியாவிலேயே பல குடியரசுத் தலைவர்களை உருவாக்கிய ஒரே சட்டமன்றம் தமிழகச் சட்டமன்றம்தான்.

எதிர்க் கட்சி பற்றி பேரறிஞர் அண்ணா அவர்கள் சட்டமன்றத்தில் எடுத்துக் கூறிய ஒரு கதையையும் அந்த விழாவிலே நான் நினைவூட்டினேன். அந்த கதை :

கேரளத்திலே ஒரு திருவிழா. அந்தத் திருவிழாவிலே யானையின் துதிக்கையிலே ஒரு கம்பத்தைக் கொடுப்பார்கள். அந்த யானை அந்தக் கம்பத்தை குறிப்பிடப்பட்ட குழியிலே கொண்டு போய் நடும். அது நட்டபிறகுதான் திருவிழா தொடங்கும். இப்படி ஒரு நாள் ஒரு திருவிழாவில் யானையின் துதிக்கையிலே இரும்புக் கம்பத்தைக் கொடுக்க - அந்த யானை குழிக்கு அருகே சென்று, அதை நட மறுத்துவிட்டது. எல்லோரும் ஆச்சரியத்தால் அதிர்ச்சி அடைந்தார்கள். அது நாட்டிற்கே நல்லதல்ல என்று கவலை கொண்டார்கள். பல முறை பாகன் யானையை அடித்தும்கூட, அதைக் குத்தியும்கூட - வதைத்தும்கூட அந்த அந்தக் குழியிலே அந்தக் கம்பத்தை நட மறுத்துவிட்டது. என்ன காரணம் என்று தெரியாத நிலையில் - கடைசியாக ஒருவர் அந்தக் குழி அருகே வந்து அதற்குள் எட்டிப் பார்த்தார். குழிக்குள்ளே ஒரு சிறிய பூனைக் குட்டி இருந்தது. அப்போதுதான் தெரிந்தது. அதனால் தான் யானை, அந்தக் குழிக்குள் பூனையை வைத்து அதன்மீது கம்பத்தை நட்டால் அது இறந்துவிடும் என்பதற்காக - அந்தக் கம்பத்தை நட அவ்வளவு தீவிரமாக மறுத்து விட்டது என்பது தெரிந்தது. இந்தக் கதையை பேரவையிலே சொன்ன அண்ணா அவர்கள், ''நீங்கள் யானையாக இருக்கின்ற ஆளுங்கட்சிக்காரர்கள் - பூனையாக இருக்கின்ற எங்களை - எதிர்க் கட்சியாக இருக்கின்ற எங்களை - அந்த யானை எப்படி மதித்ததோ அப்படி மதியுங்கள்'' என்று சுட்டிக் காட்டினார்கள்.

பெரும்பான்மைக்கும் - எதிர்க் கட்சிக்கும் இந்த உதாரணத்தைச் சொன்ன அண்ணா அவர்களே, தோழமைக் கட்சிக்கும் ஒரு முறை ஓர் உதாரணத்தைச் சொன்னார். அது - சுதந்திரா கட்சியில் திரு ஹண்டே அவர்கள் இருந்த நேரம் - ஆளுங்கட்சியாக இருந்த தி.மு.க. விற்குத் தேவையான கருத்துக்களை கொஞ்சம் மென்மையான முறையிலே எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தார். அதைக் கேட்டுக் கொண்டிருந்த

எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒரு நண்பர் எழுந்து, ''என்ன - ஹண்டே அவர்கள் இன்றைக்கு மிகவும் மென்மையாகப் பேசுகிறார், எப்போதும் வேகமாகப் பேசுபவர் ஆயிற்றே?'' என்று கேட்டார்.

அப்போது அண்ணா அவர்கள் எழுந்து, ''எப்போதும் எதிர்க் கட்சிதான் வேகமாகப் பேசும் - அது பூனை எலியின்மீது பாய்வதைப்போல இருக்கும். ஆனால் தோழமைக் கட்சி என்ற முறையில் ஹண்டே பேசுகிறார். அது பூனை, தன் குட்டியை வாயிலே கவ்விக் கொண்டு போவதைப் போல இருக்கிறது. சொந்தக் குட்டியை பூனை கவ்விக் கொண்டு போகும்போது மென்மையாகத்தான் போகும். எலியைக் கவ்விக் கொண்டு போகும்போது கடுமையாகப் பிடி இருக்கும். ஹண்டே அவர்கள் தன் குட்டியைத் தூக்கிக் கொண்டு போவதைப்போல எங்களைத் தூக்குகிறார்!'' என்று சொன்னார்கள். இவ்வாறு அண்ணா அவர்கள் எதிர்க்கட்சி, தோழமைக் கட்சி ஆகியவற்றுக்கெல்லாம் பேரவையிலே பலமுறை விளக்கமளித்துள்ளார்கள்.

22. ஒட்டு மாங்கனி

தேர்தல் நிதியாக நான் திரட்டிய ரூ 11 இலட்சத்தை அண்ணா அவர்களிடம் வழங்கினேன்.

17-6-1997 அன்று டெல்லியில் நடைபெற்ற மாநிலங்களுக்கிடையிலான குழுவின் கூட்டத்திலே - இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 356ஆவது பிரிவினை நீக்க வேண்டுமென்று கருத்தினைத் தெரிவித்து, சில மாநிலங்களின் முதலமைச்சர்கள் பேசினார்கள். அவர்களுக்கு நன்றி தெரிவித்தும், 356ஆவது பிரிவு குறித்து தி.மு.கழகத்தின் கருத்தினை தெளிவாக்கியும் நான் ஒரு நீண்ட கடிதம் எழுதினேன். அந்தக் கருத்து நீண்ட நாட்களாக என்னுடைய உணர்வுகளோடு ஒன்றுபட்ட கருத்து என்பதால், இந்தத் தொடரில் அந்தக் கடிதத்தின் சில முக்கிய பகுதிகள் இடம் பெறுவது பொருத்தமுடையதாகவே இருக்கும். அது வருமாறு:

''இதுவரை 105 முறை தகாத வழியிலும், தவறான வழியிலும் பயன்படுத்தப்பட்டுள்ள இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 356வது பிரிவைத் தொடர்ந்து வைத்திருப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து மாநிலங்களுக்கு இடையிலான கவுன்சிலின் நிலைக் குழுக் கூட்டத்தில் நீங்கள் கருத்து வெளியிட்டுள்ளது குறித்துக் கேள்விப்பட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

''நிலைக் குழுக் கூட்டத்தில் காங்கிரஸ் (இ) மற்றும் மார்க்சிஸ்ட் கட்சி மட்டுமே அரசியல் சட்டப் பிரிவு 356ஐ தொடர்ந்து வைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்று வலியுறுத்தியதாக எனக்குத் தெரிய வந்துள்ளது. இப்போதைய



புதுடெல்லி ஐக்கிய முன்னணி உயர்மட்டத் தலைவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டேன்.

நிலை தொடர்ந்த நீடிக்க அனுமதிக்கப்படுமேயானால், சீர்திருத்தங்களை எல்லாம் எதிர்க்கும் பிற்போக்குத்தனமான அரசு - அதுவும் தேவையான பெரும்பான்மை இல்லாத ஒரு அரசு மத்தியில், எதிர்காலத்தில் ஆட்சிக்கு வருமேயானால், இடதுசாரி கருத்துக்களைக் கொண்டிருக்கிற காரணத்தால் இடதுசாரி அரசை டிஸ்மிஸ் செய்யலாம். இது அனுபவ ரீதியில் இல்லாவிட்டாலும் நடக்கக் கூடிய ஒன்றாக இருக்கலாம்.

''17-6-1997 அன்று நிலைக் குழுக் கூட்டத்தில் - உங்கள் நிலை குறித்து கேள்விப்பட்டு நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். ஐக்கிய அமைப்பில் அதிக நம்பிக்கை கொண்டவன் என்ற முறையில், பின்வரும் கருத்துக்களை நீங்கள் பரிசீலிக்க வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.


''அரசியல் சட்டப் பிரிவு 356ல் உள்ள ''இல்லாவிடில்'' (Otherwise) என்கிற வார்த்தை நீக்கப்படவேண்டும். அளுநரிடம் மட்டுமே அறிக்கை பெற்று, ''தவறு செய்த அரசு'' என்று கருதப்படும் மாநில அரசுகளுக்கு மத்திய அரசு காரணம் கேட்டு அறிக்கை (Show cause Notice) அனுப்பப்படவேண்டும். எதிரி நாடுகளோடு எந்த ஒரு மாநில அரசாவது ரகசியத் தொடர்பு கொண்டிருப்பது போன்ற பரபரப்பு தகவல் ஏதாவது மத்திய அரசுக்குக் கிடைக்கப் பெற்றால், அப்போது சம்பந்தப்பட்ட மாநில அரசின் ஆளுநரை டெல்லிக்கு வரச் செய்து, கிடைத்த தகவல்களை அவரிடம் தெரியப்படுத்தி,

அவரை திருப்திப்படுத்தி, அதுகுறித்து அறிக்கை அனுப்ப ஆளுநரை மத்திய அரசு கேட்டுக் கொள்ளவேண்டும்.

''ஆளுநர் போன்ற ஒருவரை மத்திய அரசு திருப்திப்படுத்த முடியாவிட்டால், எப்படி நாடாளுமன்றத்தையோ, உலகத்தையோ மத்திய அரசு திருப்திப்படுத்த முடியும்?

''மாநில ஆளுநருக்கும், தெரிவிக்காமல் மத்திய அரசு மாநில அரசுக்குக் காரணம் கேட்டு நோட்டீஸ் அனுப்பினால், அப்போது சுயமரியாதை உள்ள எந்த ஒரு ஆளுநரும் தொடர்ந்து ஆளுநர் மாளிகையில் - ராஜ்பவனில் ஒரு நிமிடம்கூடத் தொடர்ந்து தங்கியிருக்கமாட்டார். மிகவும் முக்கியமாக, காரணம் கேட்டு நோட்டீஸ் அனுப்புவதற்கான அதிகாரம் ஆளுநரிடம் இருக்கக் கூடாது. அப்படி இருந்து விட்டால் ஆளுநர் பெரிய தடி வைத்துக் கொண்டிருக்கும் ஒரு சிறிய சர்வாதிகாரி போலவும், முதல் அமைச்சர்கள் எல்லாம் பள்ளி மாணவர்கள் நிலைக்கு தாழ்ந்தவர்கள் போலவும் இருக்கும் நிலை ஏற்பட்டு விடும்.

''எனவே, கடுமையான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய ''இல்லாவிடில்'' (Otherwise) என்கிறவார்த்தை நீக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 356ஆவது பிரிவை நீக்க வேண்டு மென்று நான் கடிதம் எழுதினேன்

''விபரீதகரமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய விபரங்கள் தொடர்பான காரணம் கேட்டு அனுப்பப்படும் அறிக்கைகளை விநியோகிப்பது தொடர்பாக சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்தப் பகுதி அனுமதிக்கப் பட்டால், காரணம் கேட்டு அனுப்பப்படுகின்ற அறிக்கைகளை ரத்து செய்ய அதுவே போது

மானதாக அமைந்து விடும். எதையுமே விபரீத விளைவுகள் ஏற்படுத்தக் கூடியவை என்று எடுத்துக் கொள்ளலாம்.

''அரசியல் அமைப்புப் பேரவையில் (Constituents Assembly) திரு. எம்.வி. காமத் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, தேநீர் கடையில் இரண்டு பேர் மோதிக் கொண்டால்கூட, விபரீத விளைவுகள் ஏற்படுத்தக் கூடிய சம்பவம் என்று அதை எடுத்துக் கொள்ளலாம். (உண்மையில் பல சாதிச் சண்டைகள் அவ்வாறு தான் ஆரம்பமாகின்றன) எனவே தான் விபரீத விளைவுகள் என்று குறிப்பிடப்படும் வார்த்தைகளை நீக்க வேண்டும் என்பதற்காக நாம் போராடியாக வேண்டும். எப்பேர்ப்பட்ட விளைவுகளானாலும், மத்திய அரசு ஒரு வாரம் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டும். இல்லாவிடில், அந்தப் பிரிவுக்காகக் காத்திராமல், தேவை ஏற்பட்டால் ராணுவத்தை அனுப்பி நிலைமையைச் சமாளிக்க மத்திய அரசு ஏற்பாடு செய்யலாம். எதுவும் அதை தடைபடுத்திவிட முடியாது. ''தவறு'' செய்யும் மாநில சட்ட மன்றங்களை மத்திய அரசு உடனடியாகக் கலைத்து விடக்கூடாது. மூன்றில் இரண்டு பங்கு மெஜாரிட்டியுடன் நாடாளுமன்ற ஒப்புதலுக்குப் பின்னரே அதைச் செய்ய வேண்டும். கவனிக்கத் தக்க மிக முக்கிய அம்சம் இதுதான்.

''மத்திய அரசின் அதிகாரப்பூர்வ அறிவிப்பு நாடாளு மன்றத்தின் இரு அவைகளிலும் குறிப்பிட்ட நான்கு வாரத்திற்குள், மூன்றில் இரு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப் படாவிட்டால், அந்த மாநில சட்ட மன்றம் தானாகவே உயிர் பெற்று செயல்பட்டதாகக் கொள்ள வேண்டும். முடக்கி வைக்கப்பட்ட சட்டமன்றம் தாமாக மீண்டும் செயல்படுவதற்காக நாடாளுமன்றத்தில் சிறப்புத் தீர்மானம் எதுவும் தேவையில்லை என்பதையும் நாம் வலியுறுத்த வேண்டும்.

''அரசியல் சட்டப் பிரிவு 356 தவறாகவும், முறையற்றும் பயன்படுத்தப்படாமல் தடுக்கப்பட மேற்காணும் முறைகள் மிகவும் அரசியம் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். எனவே, நடவடிக்கை குறிப்பேட்டில் முடிவுகள் எழுதப்படுவதற்குள்

நீங்கள் மாநிலங்களுக்கிடையேயான கவுன்சிலுக்கும், மத்திய உள்துறை அமைச்சருக்கும் மேற்காணும் வரிகளை வலியுறுத்தி கடிதம் எழுதுங்கள் என்று ஜனநாயகத்தின் பேரிலும் - ஐக்கிய அமைப்பின் பேரிலும் உங்களிடம் நான் கேட்டுக் கொள்கிறேன்.


''ஜனநாயகத்திற்கும், ஐக்கிய அமைப்பிற்கும் எதிரான அந்தப் பிரிவை நாம் நீக்கத் தவறிவிட்ட காரணத்தால், 356வது பிரிவு குறித்து விவாதிக்கப்பட்ட நிலைக் குழுக் கூட்டத்தில் நீங்கள் எடுத்த திடமான முடிவு குறித்து மீண்டும் ஒரு முறை நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய அரசுக்கு உடனடியாகக் கடிதம் எழுத உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்''

- இவ்வாறு நான் கடிதம் எழுதியதின் தொடர்ச்சியாக, 17-7-1997 அன்று டெல்லியில் நடைபெற்ற மாநிலங்களுக்கு இடையேயான குழுக் கூட்டத்தில், ''மாநில அரசுகளைக் கலைக்க வகை செய்யும் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 356ஆவது விதியை மத்திய அரசு தன்னிச்சையாகப் பயன்படுத்துவதற்கான எந்த விதியையும் நாங்கள் அனுமதிக்கத் தயாராக இல்லை'' என்றும், அதில் உள்ள ''அல்லது பிற காரணங்களுக்காக - என்ற சொற்றொடர் அடியோடு நீக்கப்பட வேண்டும்'' என்றும் வலியுறுத்திப் பேசினேன். மேலும் அந்தக் கூட்டத்தில் நான் பேசும்போது, ஒவ்வொரு பொருள் வாரியாகத் தனித்தனியாகக் கருத்துக்களை எடுத்து வைத்து அதனை வலியுறுத்தினேன். ஆனால் அந்தக் கருத்துக்கள் குறித்து இதுவரை மத்திய அரசு அளவில் எந்த வகையான தீர்வும் காணப்படாமல் உள்ளது என்பது என் மனதிலே இன்றளவும் உள்ள ஒரு குறைதான். அந்தக் குறை தீர்க்கப்படாத போதிலும், அப்போது நானும், என்னைப் போன்ற மாநில முதல் அமைச்சர்களும் தெரிவித்த கருத்துக்களின் காரணமாக, 356 விதியைப் பயன்படுத்தும் நிகழ்வுகள் மிகவும் குறைந்துவிட்டன என்பதும், அதற்கு என்னைப் போன்றவர்கள் எழுப்பிய கேள்வியும் காரணம்

என்பதும் ஓரளவிற்கு மனதிற்கு ஆறுதலைத் தரக் கூடியவையாக உள்ளன.

டெல்லியில் இந்த முக்கியமான கூட்டத்தில் கலந்து கொண்டு சென்னை வந்தவுடன், கழகத்தின் முன்னணி எழுத்தாளர்களின் ஒருவரும், மேலவையில் கழக உறுப்பினராக இருந்தவருமான **ஏ.கே. வில்வம், 21-6-1997** அன்று மறைந்து விட்டார் என்ற செய்திதான் என்னை வரவேற்றது. உடல் நலக் குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர், உடல் நலம் தேறாமலே மறைந்தார். அவர் இறக்கும்போது அவருடைய வயது 65. பேரறிஞர் அண்ணா அவர்களுடனும், என்னுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர். முரசொலி, முத்தாரம், தென்றல், முல்லை, தென்னகம் - ஆகிய ஏடுகளில் துணை ஆசிரியராகப் பணியாற்றியவர் அவர். 1974 முதல் 1980 வரை தமிழக சட்டமன்ற மேலவையில் உறுப்பினராகப் பணியாற்றியவர். சந்திரோதயம், ஓடும் நதி, நம்பிக்கை நட்சத்திரம் போன்ற திரைப் படங்களுக்கு கதை வசனம் எழுதியவர். அவருடைய சொந்த ஊர் வேலூர் மாவட்டம். அவருடைய துணைவியார் அருண்மொழி வில்வம், அவர் இறப்பதற்கு சில திங்கள்களுக்கு முன்பு



எழுத்தழகன் ஏ.கே.வில்வத்தின் உடலுக்கு மலரஞ்சலி



இயற்கை எய்தினார். இருவரும் காதலித்துத் திருமணம் செய்து கொண்டவர்கள். என்னுடைய தலைமையிலேதான் அவர்களுடைய திருமணம் 1956 ஆம் ஆண்டு கோகலே மண்டபத்தில் நடைபெற்றது.

கழகம் நடத்திய மாநில மாநாடுகளின் கவின்மிகு முகப்புத் தோற்றங்கள்


வில்வம் மறைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியும், வேதனையும் அடைந்த நான், அவரது இல்லம் சென்று அவரது உடலுக்கு மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினேன். மேலும் பொதுச் செயலாளர் பேராசிரியர், பொருளாளர் ஆர்க்காடு வீராசாமி, துணைப் பொதுச் செயலாளர் நாஞ்சிலார் உள்ளிட்ட அமைச்சர்கள் மற்றும் கழக முன்னணியினர் ஏ.கே. வில்வம் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அவரது மறைவு குறித்து நான் எழுதிய இரங்கல் செய்தியில்-


''எழுத்தழகன் ஏ.கே. வில்வம் இந்த இயக்கத்தின் ஈட்டி முனையாகப் பேனா முனையைப் பயன்படுத்திய தம்பி!''

''இன்று அவர் இல்லை - இயற்கையுடன் கலந்துவிட்டார்.''

''இன்னும் பல்லாண்டு இயக்கத் தொண்டும் - இனிய தமிழ்த் தொண்டும் ஆற்றிட வேண்டியவர். ஆயுட் காலத்தை அவரே சுருக்கிக் கொண்டு பூமிக்குள் சுருண்டுவிட்டார். அவர் எழுத்தின் புகழுக்கு இறப்பு இல்லை - அந்தச் சிறப்பு என் தம்பிக்கு உண்டு!'' - என்று குறிப்பிட்டிருந்தேன்.




இதற்கிடையிலே, 1997ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 27, 28, 29 ஆகிய நாட்களில், சேலம்



மாநகரில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில சிறப்பு மாநாடு என்னுடைய தலைமையிலே நடைபெற்றது. மாநாட்டு வளாகம் - பேரறிஞர் அண்ணா நகர் - சி.வி.எம். அண்ணா மலை பந்தல் - புதுக் கோட்டை பெரியண்ணன் அரங்கம் - நெல்லை இளைஞரணி கோட்டை யப்பன் கொடி மேடை - மாணவமணி ஷேக் தாவூது முகப்பு - சின்னசேலம் வாசுதேவன், நாட்ராம்பள்ளி என்.கே. ராஜா நுழைவு வாயில் - நீல நாராயணன் தியாகிகள் மணி மண்டபம் - கீரை தமிழ்ச் செல்வன் திராவிட இயக்க வரலாறு கண்காட்சிக் கூடம் - என்று பெயர்கள் முறையே சூட்டப்பட்டிருந்தன. மாநில மாநாடு என்ற முறையில் மாநாட்டுத் தலைவராக நானும் - திறப்பாளராக பொதுச் செயலாளர் இனமானப் பேராசிரியரும் - வரவேற்புக் குழுத் தலைவராக மாவட்டக் கழகச் செயலாளரான தம்பி வீரபாண்டி ஆறுமுகமும் பொறுப்பேற்றோம். 27-6-1997 அன்று மாபெரும் பேரணி நடைபெற்று பேரணியின் முடிவில் மாநாட்டுத் தலைவரான நான் கொடியேற்றி வைத்தேன்.

28-6-1997 அன்று இளைஞர் அணி மாநாடு; அப்போது சென்னை மாநகர மேயராக இருந்த தம்பி மு.க. ஸ்டாலின்



தலைமையிலே நடைபெற்றது. இளைஞர் அணி மாநாட்டின் திறப்பாளர் **வி.பி. இராசன்** எம்.எல்.ஏ., - வரவேற்புரை இரா. **இராசேந்திரன்** பி.ஏ.,பி.எல்., - நன்றியுரை **ஆ.செழியன்** (ஆமாம், இளம் வயதில் நம்மையும், தம்பி வீரபாண்டி ஆறுமுகத்தையும் கண்ணீரில் மிதக்க விட்டுச் சென்ற கழகத்தின் புலிப்போத்து செழியன்தான்). 27ஆம் தேதி இரவு **போலீஸ் கண்ணன்** குழுவினர் நடித்த நாடகமும், 28ஆம் தேதி இரவு **ராதாரவி** குழுவினர் நடித்த நாடகமும் சிறப்பாக நடைபெற்றன.

சேலத்தில் நடைபெற்ற அந்த மாநில மாநாடு பற்றி எழுதும்போது, 1951ஆம் ஆண்டு டிசம்பர் 13ஆம் தேதி முதல் 16ஆம் தேதி வரை நான்கு நாட்களுக்கு சென்னை எஸ்.ஐ.ஏ.ஏ. திடலில் **பேரறிஞர் அண்ணா** அவர்கள் முன்னின்று நடத்திய கழகத்தின் முதல் மாநாடு நினைவிற்கு வருகிறது. அதற்கு முன்பு மாவட்டந்தோறும் பனிரெண்டு மாநாடுகளை நடத்தி முடித்த கையோடு, சென்னையிலே மாநில மாநாடு நடைபெற்றது. அந்த மாநில மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலை வர் **என்.வி.நடராசன்**. அந்த மாநாட்டில் நான் எழுதி நடித்த **''இளைஞன் குரல்''** நாடகம் நடைபெற்றது. அப்போது எனக்கு வயது 27.

சென்னையில் நடைபெற்ற முதல் மாநில மாநாட்டிலே அண்ணா அவர்கள் பேசும்போது -

''நீங்கள் அனைவரும் என் மேல் வைத்துள்ள நம்பிக்கை கெடாமல் இதுவரை நடந்து வந்துள்ளேன். எதிர் காலத்திலும் நடந்து கொள்வேன் என்று உறுதி கூறுகிறேன். நான், நானாக ஏதும் செய்வதில்லை. உங்களில் பலரின் கருத்துக்களைக் கேட்கிறேன் - தொகுத்துப் பார்க்கிறேன் - பிறகு முடிவுக்கு வருகிறேன்.''

''உங்கள் பேராற்றலை நம்பித் தான் எனக்கு அளிக்கப்பட்டுள்ள பொறுப்பை ஏற்று நடத்தி வருகிறேன். அளவு கடந்த பொறுமையுடன் பணியாற்றுகின்றேன். நம்மைப் பற்றி ஆருடம் கணித்தவர்களின் ஆருடம் பொய்த்து விட்டது. அந்த அவசர ஆருடக் காரர்கள் நிச்சயம் மனம் வெதும்பிப்

போவார்கள். இதிலிருந்து நமக்குத் தெரிகிறது - அவர்களிடம் இருப்பது அவசர அகராதியே தவிர, அனுபவ அகராதி அல்ல...! சிலர் நம்மைச் சந்தேகிக்கிறார்கள் - ஐயம் அவர்களை வாட்டு கிறது. அவர்களுக்குத் தெளிவாகச் சொல்லிக் கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் கண்ணியத்திற்குத் தோழன் - கொள்கைக்கு நண்பன் - இடையிலே வரும் பிரச்சினை களுக்காக நாம் எதற்காக உருவாகி உழைத்து வருகின்றோமோ, அந்த அடிப்படை இலட்சியத்தை இழந்து விட மாட்டோம்'' - என்று உரைத்திட்ட வாசகங்கள், கழகக் கொள்கை கல்வெட்டுக்கள்.

சென்னை முதல் மாநில மாநாட்டிற்குப் பிறகு, ஐந்தாண்டுகள் கழித்துத்தான் திருச்சியிலே **அன்பில் தர்மலிங்கத்தின்** அயரா உழைப்பினால் இரண்டாவது மாநில மாநாடு - 1956ஆம் ஆண்டு, மே திங்கள், 17 முதல் 20ஆம் தேதி வரையிலே நடைபெற்றது. ''திராவிட முன்னேற்றக் கழகம் பொதுத் தேர்தலிலே போட்டியிடுவதா? புறக்கணிப்பதா?'' என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவு அந்த மாநாட்டிலேதான் எடுக்கப்பட்டது.

அதற்குப் பிறகு ஐந்தாண்டுகள் கழித்து 1961ஆம் ஆண்டு மதுரை மூதூரில் திருப்பரங்குன்றத்தில் **மதுரைமுத்து** அவர்களின் முயற்சியால் கழகத்தின் மூன்றாவது மாநில மாநாடு நான்கு நாட்கள் நடைபெற்றது.

அதற்கடுத்துத்தான் 1967ஆம் ஆண்டு சென்னையில் விருகம்பாக்கத்தில், டிசம்பர் 29, 30, 31 ஜனவரி 1 ஆகிய நான்கு நாட்கள் நடைபெற்ற மாநாடு. மாநாட்டின் தலைவர் பேரறிஞர் அண்ணா. மாநாட்டின் திறப்பாளராக நான். கழகப் பொருளாளர் என்ற முறையில் அந்த மாநாட்டில்தான் 11 **இலட்சம் ரூபாயை** தேர்தல் நிதியாகத் திரட்டி அண்ணா அவர்களிடம் நான் ஒப்படைத்ததும், கழக வேட்பாளர்களின் பெயர்களை அந்த மாநாட்டில் படித்த அண்ணா அவர்கள், ''சைதைத் தொகுதியின் வேட்பாளர்'' என்று கூறி விட்டு - சில நிமிடங்கள் யார் பெயரையும் அறிவிக்காமல் இருந்து - அதன் பிறகு **''சைதைத் தொகுதியில் தம்பி பதினொரு இலட்சம்''**

என்று லட்சக் கணக்கான மக்களின் கையொலிக்கிடையே அறிவித்ததும் ஆகும். அப்போது எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிதான் எத்தகையது? ஓ, அந்த நாட்கள்...!

இந்த வரிசையிலேதான் 1997ஆம் ஆண்டு சேலத்திலே மாநில மாநாடு. சேலம் என்றால் ஒரு காலத்தில் அண்ணன் சித்தையன் நினைவுதான் வரும். அவர் பேளுகுறிச்சிப் பெரியவர் **ஜி.பி.சோமசுந்தரம்** அவர்களுக்கு எழுதிய ஓர் அஞ்சலட்டையை ஒருமுறை என்னிடம் தம்பி **நாகநாதன்** கொண்டுவந்து காட்டினார். 28-10-1937 அன்று சேலத்தில் நடைபெற்ற மூன்றாவது மாவட்ட சுயமரியாதை மாநாட்டுக்கு ஜி.பி. சோமசுந்தரம் அவர்களை வர வேண்டுமென்று சித்தையன் எழுதிய அஞ்சலட்டைதான் அது. அந்தச் சேலம் மாநாட்டிற்கு எட்டு ஆண்டுகளுக்கு முன்பு, 1929இல் செங்கற்பட்டில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில்தான் தந்தை பெரியார் பெண்ணுரிமைக்கான தீர்மானத்தை நிறைவேற்றியதும் - அந்தத் தீர்மானத்திற்கு இணங்கத்தான் 1989இல் - அதாவது தந்தை பெரியார் நிறைவேற்றிய தீர்மானத்திற்கு - அதற்கு அறுபதாண்டுகளுக்குப் பிறகு - எனது முயற்சியினால் - பெண்களுக்கு சொத்தில் சம உரிமை என்ற சட்டத்தைச் சட்டப் பேரவையில் நான் நிறைவேற்றியதுமாகும். ஐந்து முறை பதவிப் பொறுப்புக்கு வந்துள்ள நான், அதை நினைத்து அதிக அளவிற்கு மகிழ்ச்சியோ, இறும்பூதோ எய்துவதில்லை என்ற போதிலும், இது போன்ற வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை சட்டமாக்குவதற்கான வாய்ப்புக் கிடைத்ததை எண்ணி மகிழ்ச்சி அடையத்தான் செய்கின்றேன்.

1997ஆம் ஆண்டு தி.மு. கழகத்தின் மாநில மாநாடு நடைபெற்ற அதே சேலத்தில்தான், 1944ஆம் ஆண்டு ஆகஸ்ட் 27ஆம் நாளன்று **தென் இந்திய நல உரிமைச் சங்கம்** என்னும் நமது திராவிடர் இயக்கம், **திராவிடர் கழகம்** என்று பெயர் சூட்டிக் கொண்ட மாநாடு தந்தை பெரியார் தலைமையில் நடைபெற்றது. அதே 27ஆம் தேதியன்றுதான் 97ஆம் ஆண்டு நடத்திய மாநில மாநாடும் சேலத்தில் தொடங்கியது.



சேலம் மாநாட்டில் மகளிரணியின் அணிவகுப்பு

சேலம் மாநாட்டிற்குச் செல்லும் வழியில் முதல் நாள் வேலூர் மாவட்டம், ராணிப் பேட்டை தொகுதி பொன்னை கிராமத்தில் முதன் முதலாகக் கழக அரசின் சமத்துவக் கொள்கைக் கான திட்டமான அண்ணா மறு மலர்ச்சித் திட்டத்தை முரசொலி மாறன், ஆர்க்காடு வீராசாமி, துரைமுருகன், கோ.சி. மணி, ராணிப் பேட்டை காந்தி எம்.எல். ஏ., வேலு எம்.பி., ஆகியோர் கலந்து கொள்ள தொடங்கி வைத்து விட்டுத்தான் அப்படியே சேலம் சென்றேன். இரவு 11 மணி அளவில் சேலத்தை சென்றடைந்த நான், நேராக உண விற்கோ - படுக்கைக்கோ சென்றுவிடவில்லை. நேராக மாநாட்டுப் பந்தலுக்குச் சென்று அங்கே தம்பி வீரபாண்டியின் ஏற்பாடுகளைக் கவனித்து விட்டுத்தான் உறங்கச் சென்றேன் - இல்லை; உறங்க அனுமதிக்கப்பட்டேன்.

அந்த சேலம் மாநாட்டுப் பேரணியைப் பற்றி சென்னை **மாலை முரசு** ஏடு எழுதும்போது, ''சேலம் தி.மு.க மாநாட்டுக்கு தி.மு.க. தலைவரும், முதல் அமைச்சருமான கலைஞர் எழுதிய கடிதத்தில் ''சேவலென நிமிர்ந்து வா - செங்கதிராய் கிளம்பி வா'' என்று குறிப்பிட்டு இருந்தார். அவரது அழைப்பை ஏற்று, தி.மு.க. தொண்டர்கள் சேவலென நிமிர்ந்து வந்தனர் - செங்கதிராய் பிரகாசித்தனர். அவர்கள் கம்பீரமாக வந்த பேரணியின்போது அதிகாலையில் சேவலும்

கூவிற்று - அதன் பிறகு செங்கதிரோனும் உதயமானது'' என்று எழுதியிருந்தது.

சேலம் பேரணியில் விவசாய அணியைச் சேர்ந்தவர்கள் மஞ்சள் தலைப்பாகை அணிந்து, அதில் கறுப்பு சிவப்பு நிற பார்டர் போட்ட துண்டுகளை அணிந்து வந்தது சிறப்பான காட்சியாக அமைந்தது. சுமார் 100க்கு மேற்பட்ட மாட்டு வண்டிகளில் மஞ்சள் தலைப்பாகை அணிந்து ஏர் கலப்பையுடன் விவசாய அணியினர் கலந்து கொண்டனர். விவசாய அணியின் செயலாளர் தம்பி **கே.பி.ராமலிங்கம்** பேரணியில் மஞ்சள் தலைப்பாகை அணிந்து மாட்டு வண்டி ஓட்டியபடி வந்தார். அந்தப் பேரணியில் சுமார் 30 லட்சம் பேர் பங்கேற்றனர். 4.30 மணிக்குத் தொடங்கிய பேரணியின் தலைப் பகுதி இரவு 9 மணி அளவில் தான் நாங்கள் அமர்ந்திருந்த தனி மேடையை அடைந்தது.

பேரணியை வரவேற்புக் குழுத் தலைவர் தம்பி **வீரபாண்டி ஆறுமுகம்** தொடங்கி வைத்தார். ஊர்வலத்திற்கு தலைமை தாங்கி, சென்னை மாநகர மேயராக இருந்த தம்பி மு.க. ஸ்டாலின் வழி நடத்தினார். திறந்த ஜீப்பில் வந்த ஸ்டாலினுடன் தம்பிகள் **அன்பில் பொய்யாமொழி, ஆ.செழியன்** ஆகியோர் உடன் நின்றிருந்தனர். (இன்று இருவருமே இல்லை) மேடையில் இருந்தவாறு இளைஞர் அணியின் அணிவகுப்பு மரியாதையை நான் ஏற்றுக் கொண்டேன். பேரணியைப் பார்வையிட 27-6-1997 அன்று மாலை 5.30 மணி அளவில் தனி மேடைக்கு நான் வருகை தந்தேன். 28-6-1997 அன்று காலை 8 மணிவரை அந்தத் தனி மேடையிலேயே விடிய, விடிய கண்விழித்துப் பேரணியைப் பார்த்துக் கொண்டே இருந்தேன். மாலை 5.30 மணிக்கு தனி மேடைக்கு வந்து நாங்கள்



தளபதி ஸ்டாலின் தலைமையில் இளைஞரணியின் பேரணி

எல்லாம் அமர்ந்தோம். பத்து மணிவரை நாஞ்சிலார் இருந்தார். பிறகு நாங்களே அவரை "உங்களுடைய உடம்புக்கு ஆகாது, ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறி அவரை அனுப்பி வைத்தோம். 12 மணி வரை பேராசிரியர் இருந்தார். மீண்டும் நான் திரும்பி அவரது இருக்கையை பார்த்தபோது அவர் இல்லை. அவருக்கும் உடல்நிலை தாங்காது என்பதால் அவரும் சென்று விட்டார். என்னுடைய இன்னொரு பக்கம் முரசொலி மாறன் அமர்ந்திருந்தார். அவர் இருக்கின்றாரா என்று நான் திரும்பிப் பார்த்தபோது, "மாமாவிடம் சொல்லாதீர்கள்" என்று வீராசாமியிடம் கூறிவிட்டு அவரும் போய் விட்டிருக்கிறார். நானும் வீராசாமியும், துரைமுருகனும், டி.ஆர்.பாலுவும், திண்டிவனம் வெங்கட்ராமனும், வரவேற்புக் குழுத் தலைவராக இருந்த வீரபாண்டி ஆறுமுகமும் காலை 8 மணிவரை இருந்துவிட்டு - ஊர்வலம் முடிகிறவரை இருந்து பார்த்து விட்டுத்தான் செல்ல வேண்டுமென்று நான் கூறியபோது, அதற்கு பிற்பகல் 1 மணி ஆகும் என்று கூறியதால் அங்கிருந்து புறப்பட்டோம்.

சேலம் மாநாட்டு வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த நீலநாராயணன் தியாகிகள் மணி மண்டபத்தையும், கீரை. தமிழ்ச் செல்வன் திராவிட இயக்க வரலாற்றுக் கண்காட்சிக் கூடத்தையும் நான் திறந்து வைத்ததோடு, அந்தக் கண்காட்சிக் கூடத்தையும் சுற்றிப் பார்த்தேன்.

முதல் நாள் நடைபெற்ற இளைஞர் அணி மாநாட்டைத் தொடங்கி வைத்து தம்பி ஸ்டாலின் பேசும்போது, "வேலியாக இருந்து இனத்தை, மொழியைக் காப்போம் - அதற்கு விலை உயிர்தான் என்றால் அதற்கும் தயாராவோம் - கலைஞர் தலைமையில் பொற்காலம் அமைந்திட திட்டமிட்டு உழைத்திடுவோம், வாரீர், வாரீர்" என்று அழைத்தார்.

வரவேற்புரையாற்றிய வீரபாண்டி ஆறுமுகமோ, "சேலத்தில் குவிந்தது வாடகைக் கூட்டம் அல்ல - செந்தமிழர் வாகை சூட உழைக்கும் கூட்டம் - உலகத் தமிழினத்தின் ஒப்பற்ற தலைவரே கட்டளையிடுக - காரியமாற்றக் காத்திருக்கிறோம்" என்று முரசறைந்தார்.

சிறப்பு விருந்தினரான சந்திரபாபு நாயுடு பேசும்போது, ''கலைஞருக்கு அறிஞர் அண்ணா எப்படித் தலைவரோ, அதைப்போல கலைஞர் எனக்குத் தலைவர் என்றும், ''மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி என்ற கலைஞரின் கனவு நனவாகி வருகிறது'' என்றும், உணர்ச்சி மிக்கதோர் உரையாற்றினார். தமிழ் இன உணர்வை - பகுத்தறிவுக் கொள்கையை வளர்த்து, சாதி வெறிக்கு அப்பாற்பட்ட தமிழகத்தை உருவாக்கிட இளைய சமுதாயம் சூளுரைத்துப் புறப்பட வேண்டுமென்றும், தாழ்ந்து கிடக்கின்ற தமிழர் உரிமைகளை ஓங்கி ஒலித்திட கலைஞரின் கரத்தைத் தமிழர்கள் எல்லாம் வலிமைப்படுத்துவீர் என்றும் கழகச் சிறப்பு மாநாட்டினைத் திறந்து வைத்துப் பேராசிரியர் உரையாற்றினார்.

வரவேற்புக் குழுத் தலைவராக இருந்து செயல்பட்ட வீரபாண்டி ஆறுமுகம் பற்றி நான் மாநாட்டிலே குறிப்பிடும்போது - ''வீரபாண்டி ஆறுமுகம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தளபதிகளில் ஒருவர். நெருக்கடி நிலை காலத்தில் திராவிட முன்னேற்றக் கழக முன்னணியினரை - நாடாளுமன்ற உறுப்பினர்களை - சட்டமன்ற உறுப்பினர்களை அடக்கு முறை வாட்டிய நேரத்தில், அதற்கு விதிவிலக்கு இல்லாமல் அந்த அடக்கு முறைக் கொடுமைக்கு ஆளான குடும்பம் தம்பி வீரபாண்டியின் குடும்பம். இந்த இயக்கத்திற்கு ஒரு மதுரை முத்து



''கட்டபொம்மனுக்கு ஊமைத்துரையைப்போல எனக்கு வீரபாண்டி ஆறுமுகம்!''

கிடைத்ததைப்போல - ஒரு மன்னை நாராயண சாமி கிடைத்ததைப் போல - ஒரு அன்பில் தர்மலிங்கம் கிடைத் ததைப்போல - தம்பி வீரபாண்டி ஆறுமுகம் கிடைத்திருக் கிறார். புராணிகர் பாஷையில் சொல்ல வேண்டும் என்றால், முருகனுக்கு வீரபாகுவைப்போல எனக்கு வீரபாண்டி ஆறுமுகம். வரலாற்று வரிகளிலே சொல்ல வேண்டுமென்றால், கட்டபொம்மனுக்கு ஊமைத்துரையைப் போல, எனக்கு வீரபாண்டி ஆறுமுகம்'' என்று கூறினேன்.

அவரை நோக்கி நான், ''மாநாட்டிலே மிச்சம் எவ்வளவு?'' என்றேன். ''உங்கள் வயதுதான்'' என்றார். அதாவது அப்போது என்னுடைய வயது 74 என்பதைக் குறிக்கும் வகையில், 74 இலட்சம் ரூபாய் தலைமைக் கழகத்திற்கு மாநாட்டு நிதியாக வழங்கப்பட்டது.

சேலம் மாநாட்டினைக் காண சிறப்பு விருந்தினராக ஆந்திர மாநில முதல் அமைச்சராக இருந்த சந்திரபாபு நாயுடு அவர்கள் வருகை தந்ததைப் பற்றி நான் பேசும்போது, ''அவருடைய வருகை என்னை மாத்திரமல்ல - திராவிட முன்னேற்றக் கழக முன்னணித் தலைவர்களை மாத்திரமல்ல - தமிழ்நாட்டு மக்களையே பெருமைப்படுத்துகின்ற வருகை என்று சொன்னால் அது மிகையாகாது'' என்று குறிப்பிட்டேன்.

அவர் மாநாட்டில் பேசும்போது, ''அவருடைய வாழ்க்கையில் - இதைப் போன்ற ஒரு மாநாட்டைக் கண்டதே இல்லை'' என்று குறிப்பிட்டார்.

சேலம் மாநாட்டில் நான் ஒண்ணே முக்கால் மணி நேரம் உரையாற்றினேன். மத்திய மாநில உறவுகள் - தமிழ்நாட்டில் அரசியல் நிலை - சேலம் மாநகரின் சிறப்புகள் - மாநாட்டின் பெருமைகள் பற்றிப் பேசினேன். என் பேச்சை இவ்வாறு முடித்தேன்.


''சேலம் சிறப்பு மாநாட்டுச் சிறப்புச் செய்தியாகச் சொல்கிறேன். தம்பிகளே! தங்கைகளே! உயிரினும் மேலான உடன் பிறப்புக்களே!

''சங்க காலத் தமிழ்ச் சமுதாயத்தை 21ஆம் நூற்றாண்டிற்கேற்ப அமைத்திட வாரீர்! சாதி சமூகக் கொடுமைகள் களைந்து, சமதர்மத் தமிழ்ச் சமுதாயம் சமைத்திட வாரீர்! இங்கே பிறந்த தமிழன் சிங்கப்பூரில் - மலேசியாவில் உலகப் பிரஜையாக வாழ்கிறான் - உழைத்து வாழ்கிறான். உல்லாசமாக வாழ்கிறான். ஆனால் பிறந்த நாட்டிலே விதியை நொந்து கொண்டு, சாதிச் சனியனில் அகப்பட்டுக் கொண்டு வறுமையில் வாழ வேண்டுமா? இதை மாற்ற வேண்டாமா? மாற்ற வேண்டும்; மாற்றியே தீர வேண்டும்; அதை இப்போதே துவக்குவோம், வாரீர்!

"Once again, I call upon my Dear D.M.K. Brothers and Sisters to re-&dedicate themselves to Social Reconstruction.

''ஆட்சி என்பது தூக்கி எறிந்து விடக்கூடிய ஒரு அங்கவஸ்திரம். நிலையானது, தமிழ்ச் சமுதாயத்தின் நல்வாழ்வுதான். தமிழ்ச் சமுதாயத்தைக் காப்போம்-

தமிழர்களாக வாழ்வோம் - தமிழகத்தை இழக்க மாட்டோம் - இழக்க மாட்டோம் - திராவிட முன்னேற்றக் கழகம் வளர்க! அண்ணாவின் புகழ் வெல்க, வெல்க என்று கூறி அமர்கிறேன்''.



''கலைஞருக்குப் பேரறிஞர் அண்ணா எப்படித் தலைவரோ - அதுபோல் கலைஞர் எனக்குத் தலைவர்!''- என சந்திரபாபு நாயுடு குறிப்பிட்டார்

எனது உரையைப் பற்றி 1-7-1997 தேதிய தினமணி நாளேடு ''**முதல்வரின் ஓட்டு மாங்கனி**'' என்ற தலைப்பில் எழுதிய தலையங்கத்தில், ''சாதி

களற்ற சமுதாயத்தை 21ஆம் நூற்றாண்டில் உருவாக்க வேண்டும் என்பதே சேலம் தி.மு.க. மாநாட்டின் சிறப்புச் செய்தி என தி.மு.க. தலைவரும், முதல்வருமான கருணாநிதி அறிவித்திருப்பது மிகவும் ஏற்புடையது. புதிய ஒட்டு மாங்கனியைத் தோற்றுவிக்க வேண்டும் எனக் கனவு காண்பதாகவும், இதற்கு மக்களைத் தயார்படுத்துமாறும் தி.மு.க. தொண்டர்களுக்கு அவர் அழைப்பு விடுத்திருக்கிறார். இந்த அழைப்பு அவரது கட்சியின் தொண்டர்களுக்கு மட்டுமின்றி, சமூக சீர்திருத்தக் கொள்கைகளில் நம்பிக்கை உள்ள அனைவருக்குமே பொருத்தமானது'' என்று குறிப்பிட்டிருந்தது.

23. கலைத்துறையினர் பிரச்சினையும் - காட்டு வீரப்பன் தேடலும்!

'பராசக்தி' திரைப்படத்தை உயிரோட்டமுள்ள திரைக் காவியமாக இயக்கிய இரட்டையர்கள் கிருஷ்ணன்-பஞ்சு

8-7-1997 அன்று காலையில் தலைமைச் செயலகத்தில், என்னைத் திரைப்படத் துறையைச் சேர்ந்த முன்னணியினர் சந்தித்தார்கள். நடிகர்கள் சார்பில் **ரஜினிகாந்த், கமல்ஹாசன், விஜயகாந்த், நெப்போலியன், கார்த்திக், தியாகு** ஆகியோரும்-

திரைப்பட இயக்குநர்கள் சார்பில் **கே. பாலச்சந்தர், பாரதிராஜா, எஸ்.ஏ. சந்திரசேகர், இராம. நாராயணன், பி. வாசு, வி. சேகர், விக்ரமன், கே. சுபாஷ்** ஆகியோரும் -

திரைப்படத் தயாரிப்பாளர்கள் சார்பில் **கே.ஆர்.ஜி., ஆர்.பி. சவுத்ரி, இப்ராகிம் ராவுத்தர், கே.ஆர்., கே. ராஜன், கோவை முருகேசன்** ஆகியோரும் -

திரைப்பட வர்த்தக சங்கத்தின் சார்பில் **எம்.பாலசுப்பிரமணியம், எல். சுரேஷ், கிருபாசங்கர்** ஆகியோரும் -

பெப்சி சார்பில் **விஜயன், எம்.டி. சுந்தர், ரோணி டேவிட், வி. சுந்தரம், எம். பிச்சுமணி** ஆகியோரும் -

காலை 10 மணி 1 மணி வரையில் என்னைத் தனித்தனியாகச் சந்தித்து, அவர்களது கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அந்தச் சந்திப்பின்போது அமைச்சர்கள் **ஆர்க்காடு வீராசாமி, முல்லை வேந்தன்** மற்றும் **கவிப்பேரரசு வைரமுத்து** மற்றும் துறையின் அதிகாரிகள்

இருந்தனர். இறுதியாக அறிவிக்கப்பட்டுள்ள முடிவு ''பெப்சி'' உள்ளிட்ட அனைத்துக் குழுவினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அந்த முடிவு:-


''தமிழ்நாடு திரைப்படப் படைப்பாளிகள் கூட்டமைப்பு என்றும், தமிழ்நாடு திரைப்படத் தொழிலாளர்கள் கூட்டமைப்பு என்றும் தனித்தனியாக அமைப்புகளை உருவாக்கிக் கொள்ளலாம். அந்த அமைப்புகளுக்கு ''பெப்சி'' ஆட்சேபணை தெரிவிக்காது. எனினும் ''பெப்சி'' அமைப்பிலே உள்ள தொழில் புரிவோர் புதிதாக உருவாகும் இரு அமைப்புகளின் சார்பில் நடக்கும் படத் தயாரிப்புகளில் இடம் பெற மாட்டோமென்று ''பெப்சி'' சார்பில் கூறியது ஏற்றுக் கொள்ளப்பட்டு - அதே சமயம் இந்த இரு புதிய அமைப்புகளிலும் பணியாற்ற அவர்களாகவே விருப்பத்துடன் வருகிறவர்களை மட்டுமே இரு புதிய அமைப்புகளும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றும், அவ்வாறு விருப்பப்படி புதிய அமைப்புகளில் சேருகிறவர்களை பெப்சி தடுத்திடக் கூடாது என்பதையும் பெப்சி ஏற்றுக்கொண்டது. பெப்சி, மற்றும் தமிழ்நாடு திரைப்படப் படைப்பாளிகள் கூட்டமைப்பு, தமிழ்நாடு திரைப்படத் தொழிலாளர்கள் கூட்டமைப்பு - ஆகிய மூன்று அமைப்புகளுக்கிடையே எந்த மோதுதலும் வரக்கூடாது என்றும், அப்படி வருமேயானால் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை எழாமல் கண்காணித்து பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கும் பொறுப்பை அரசு ஏற்றுக் கொள்ளும் என்றும் அறிவிக்கப்படுகிறது.''

-இந்த முடிவினை அனைத்துத் தரப்பினரும் ஒருமனதாக ஏற்றுக் கொண்டனர். ஆனால், இந்த முடிவை நடைமுறைப் படுத்துவதில் சிக்கல் ஏற்பட்டதால் ஒரு மாத காலத்திற்கு மேல் படப்பிடிப்பே நடைபெறாமல் இருந்தது.

அதனால் திரைப்படத் துறையில் பல கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது. இதற்கிடையே தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர் சம்மேளனத்தைச் (பெப்சி) சேர்ந்த தொழிலாளர்களைப் பயன்படுத்தி **''அவ்வை சண்முகி''** படத்தின் இந்திப் பதிப்பின் படப்பிடிப்பை கலைஞானி

கமல்ஹாசன் நடத்தி வந்தார். அதனால் அவர்மீது அதிருப்தி அடைந்த தமிழ்நாடு திரைப்படப் படைப்பாளிகள் கூட்டமைப்பினர் சிலர், வேண்டுமென்றே அவரைக் கேலி செய்யும் வகையில், பூச்செண்டு கொடுத்து வாழ்த்து தெரிவித்ததோடு, கமல்ஹாசன் ஓராண்டு காலத்திற்கு நடிக்கக் கூடாது என்று முடிவு செய்ததாகவும் ஏடுகளில் செய்தி வந்தன. அதனைக் கண்டித்து சினிமா ஆர்டிஸ்ட் யூனியனைச் சேர்ந்த நடிகர்கள் கூடினர். அந்தக் கூட்டத்தில் நடிகர்கள் **கமல்ஹாசன், சத்யராஜ், விஜயகுமார், பிரபு, கார்த்திக், முரளி, சந்திரசேகர், நெப்போலியன், ராம்கி, சின்னி ஜெயந்த்** உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

1-8-1997 அன்று நடிகர் சங்க வளாகத்தில் திரைப்பட நடிகர்கள் சிலரைக் கொண்டு ஒரு கூட்டம் நடத்தப்பட்டு, அந்தக் கூட்டத்தில் ''சினிமா ஆர்டிஸ்ட் யூனியன் தலைவர் விஜயகுமார் ஒரு சில நடிகர்களை மட்டுமே கலந்தாலோசித்து பெப்சிக்கு ஆதரவு என்று எதேச்சாதிகார முடிவு எடுத்ததை வன்மையாகக் கண்டிக்கிறோம். இதனால் இந்தக் கூட்டத்திற்கு வந்துள்ள நாங்கள் எல்லாம் அந்த யூனியனிலிருந்து விலகுகிறோம்'' என்று தீர்மானம் நிறைவேற்றினார்கள். அதிலே கலந்து கொண்ட **சரத்குமார், விஜயகாந்த், அர்ஜுன், பார்த்திபன், ஆனந்தராஜ், ராமராஜன், ராஜசேகர், விசு, ரேவதி, ரோஜா, குஷ்பு, ஊர்வசி, இந்து** உள்ளிட்ட 52 பேர் நடிக நடிகையர் ஆகும்.



திரைப்படத் துறையின் மோதல்களைத் தீர்க்க,
நடிகர்களைச் சந்தித்து ஆலோசனை நடத்தினேன்.

இந்த அணியினர் திரைப்படப் படைப்பாளிகள் - தொழிலாளர்கள் கூட்டமைப்புக்கு ஆதரவு தெரிவிப்பதென முடிவெடுத்தனர். இதற்கிடையே பெப்சி தொழிலாளர்கள் கூட்டம் ஒன்றை நடத்தி, நடிகர் ராதாரவி படங்களுக்கு பெப்சி ஒத்துழைக்காது என்று அறிவித்தனர்.

இருவருக்குமிடையே பிரச்சினைகள் ஏற்பட்டு மீண்டும் என்னைச் சந்திக்க வேண்டுமென்று திரைப்படத் துறையினர் கேட்டுக் கொண்டதன் பேரில், 7-8-1997 அன்று தலைமைச் செயலகத்தில் அவர்களைச் சந்திக்க ஒப்புக் கொண்டேன்.

அவ்வாறே 7ஆம் தேதி காலை 10 மணி முதல் பிற்பகல் 2.45 மணிவரையில் தலைமைச் செயலகத்தில், திரைப்படத் துறையைச் சேர்ந்த பல்வேறு பிரிவினரையும், முதலில் தனித் தனியாகவும், பின்னர் இறுதியாக ஒவ்வொரு பிரிவிலிருந்தும் மூன்று பேர் வீதமும் அழைத்துப் பேச்சு வார்த்தை நடத்தினேன். பெப்சி சார்பாக நடிகர்கள் கமல்ஹாசன், சத்யராஜ், கார்த்திக், பிரபு, நெப்போலியன், தியாகு, சந்திரசேகர், அஜித்குமார், விஜயகுமார் ஆகியோரும் - படைப்பாளிகள் சங்கத்தின் சார்பாக நடிகர்கள் விஜயகாந்த், சரத்குமார், ராதாரவி, அர்ஜுன், பார்த்திபன், ஆனந்த்ராஜ், சிவகுமார், நடிகைகள் ரேவதி, நக்மா, ஊர்வசி, மனோரமா ஆகியோரும் - தமிழ்நாடு படைப்பாளிகள் மற்றும் தொழிலாளர்கள் கூட்டமைப்பு சார்பில் இயக்குநர்கள் பாரதிராஜா, கே. பாலசந்தர், எஸ்.ஏ. சந்திரசேகர், ஆர்.கே. செல்வமணி, வி. சேகர், பாலு மகேந்திரா, இராம. நாராயணன், கங்கை அமரன், அகத்தியன், இராமதாஸ், பி.என்.சுந்தரம், ஹேமச்சந்திரன் ஆகியோரும் - தென்னிந்திய திரைப்படத் தயாரிப்பாளர்கள் சார்பில் கே.ஆர்.ஜி., கே.ஆர்., இப்ராகிம் ராவுத்தர், ஆர்.பி. சவுத்திரி, ஹென்றி, ஏ.எல். அழகப்பன், முரளீதரன், சீனிவாசன், பாரதிராஜா, இராமநாதன், எம்.ராஜாராம் ஆகியோரும் - அவுட்டோர் யூனிட் உரிமையாளர்கள் சார்பாக ரவி சங்கர் பிரசாத், சீமா சசி, மோகன், சுகுமாரன், சங்கையா, ஜாக்பாட் சீனிவாசன் ஆகியோரும் - தென் இந்திய திரைப்பட வர்த்தக சங்கம்

சார்பாக எம். பாலசுப்பிரமணியம், ஜி. வெங்கடேஸ்வரன், எல். சுரேஷ், எஸ்.வி.ஆர்.எம். இராமநாதன், எஸ். கிருபாசங்கர், கே.என். வெங்கடேஸ்வரன் ஆகியோரும் - பெப்சி சார்பாக விஜயன், எம்.டி. சுந்தர், கே.எஸ். சின்னத்தம்பி, பால்ராஜ், ரோணி டேவிட், டி. ராஜேந்திரன், வி. சுந்தரம், ஜி. சேகர், ஜூடோ ரத்தினம், முரளி ஆகியோரும் கலந்து கொண்டனர்.


ஒவ்வொரு தரப்பினருடன் தனித்தனியாகவும், பின்னர் ஒவ்வொரு தரப்பினரின் சார்பில் மூவர் வீதமும் அழைத்து பேச்சு வார்த்தை நடத்தியும், சமரச முடிவிற்கு வரவில்லை. எனவே அவர்கள் மத்தியில் நான் பேசும்போது -


''எடுத்த முயற்சி எதுவும் வெற்றி முகட்டை எட்டவில்லை. எனவே கடந்த முறை எடுத்த முடிவின்படி பெப்சி ஆதரவாளர்களும் - தமிழ்த் திரைப்பட படைப்பாளிகள் ஆதரவாளர்களும் - இரு சாராரும் தனித் தனியே இயங்குவது என்ற நிலைமை தான் இப்போது எடுக்கப்பட்டுள்ளது. இரு சாராரும் திரைப்படத் தொழிலில் ஒருவரோடொருவர் மோதிக் கொள்ளாமல், ஒருவர் தொழிலில் இன்னொருவர் இடையூறு விளைவிக்காமல், குறுக்கிட்டுத் தடைகளை ஏற்படுத்தாமல், தனித் தனியாக திரைப்படங்களை எடுக்கின்ற முயற்சியில் ஈடுபடலாம்.

''இரு சாராராக நீங்கள் பிரிந்திருந்தாலுங்கூட, பேரறிஞர் அண்ணா அவர்கள் அரசியல் சம்பந்தமாக சொன்ன ஒரு



திரையுலகப் பிரச்சினையைத் தீர்க்க,
தயாரிப்பாளர்களும் என்னைச் சந்தித்தனர்.





திரைப்படத் தொழிலாளர்கள் நலனுக்காக, ரஜினிகாந்த்தும் கமல்ஹாசனும் என்னைத் தொடர்பு கொண்டனர்.

உதாரணத்தைக் கூற விரும்புகிறேன். அண்ணா அவர்கள் பெரியாரிட மிருந்து பிரிந்து வந்த பிறகு - ''நாங்கள் இரட்டைக் குழல் துப்பாக்கி'' என்றார். நான் பெரியாரிடமிருந்து பிரிந்து விட்டேனென்றாலும், தனி யாக தி.மு.கழகத்தை ஆரம்பித்து விட்டேன் என்றாலும், திராவிடர் கழகமும், தி.மு. கழகமும் நாங்கள் தனித்தனியாக இயங்கினாலுங்கூட, சமுதாயத் துறையிலே இரட்டைக் குழல் துப்பாக்கியாகப் பாடுபடுவோம்'' என்றார்.

''ஒருவரையொருவர் சுடுகின்ற துப்பாக்கியாக இல்லாமல், இருவரும் சேர்ந்து நல்லதை உருவாக்கும் பணியிலே செயல்பட வேண்டும். அந்த வகையில் ஒருவர் பணியிலே இன்னொருவர் குறுக்கிடாமல், இடைஞ்சல் செய்யாமல், தடுத்திடாமல், வன்முறைக்கு சிறிதும் இடமில்லாமல், பணியாற்ற வேண்டும். எந்தத் தரப்பிலிருந்தாவது வன்முறைச் செயல்கள் அரும்புமேயானால், அதனைத் தடுக்க வேண்டிய கடமையும் - தடுத்த பிறகும் மீறி நடக்குமேயானால், அதனைச் சட்டப்படி அணுக வேண்டிய கடமையும் அரசாங்கத்திற்கு இருக்கிறது என்பதை, எந்தக் கலைத் துறையோடு நண்பனாக நான் இருக்கிறேனோ, அந்தக் கலைத் துறை நண்பர்களிடம் இதனைச் சொல்லும்போது எனக்கு மிகுந்த சங்கடமாகத்தான் இருக்கிறது என்பதை வேதனையோடு சொல்லிக் கொள்கிறேன்'' என்று கூறினேன்.

ஆனாலும் பிரச்சினை தீர்ந்தபாடில்லை. உண்மையில் பெப்சி அமைப்பு - மற்றும் புதிதாக உருவான தமிழ்த்

திரைப்படப் படைப்பாளிகள் சங்கம் - மற்றும் தமிழ்த் திரைப்படத் தொழிலாளர்கள் சங்கம் என்ற அமைப்புகளுக் கிடையே ஒரு ஒற்றுமை உணர்வை ஏற்படுத்த வேண்டு மென்பதற்காக நான் ஒரு நாள் முழுவதும் செலவிட்டு, அனைத்துத் தரப்பினரையும் தனித்தனியாகவும், ஒட்டு மொத்தமாகவும் அழைத்துப் பேசினேன். முடிவாக அவர்கள் விருப்பப்படியே ''திரைப்படத் துறை யில் தனித்தனியாக இயங்குவோம்'' என்று அவர்கள் சொன்ன கருத்தை ஏற்றுக் கொண்டு, ஒருவரோ டொருவர் மோதிக் கொள்ளாமல், ஒருவர் படப்பிடிப்பிற்கு மற்றவர் இடைஞ்சல் செய்யாமல், சட்டம் ஒழுங்கிற்குப் பாதகம் வராமல் நடந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன்.

அதற்குப் பிறகும் அவர்களுக்கிடையே பிரச்சினை தீராத காரணத்தால், கலைஞானி கமல்ஹாசன் என்னைச் சந்தித்து, மீண்டும் ஒரு முறை இரு சாராரையும் அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று கூறினார்.

அவர் விரும்பியவாறே ஆகஸ்ட் 7ஆம் தேதியன்று இரண்டு தரப்பிலும் உள்ள பல்வேறு குழுவினரோடு தலைமைச் செயலகத்தில் பேச்சுவார்த்தை நடத்தினேன். பெப்சி தொழிலாளர்கள் - தமிழ்த் திரைப்பட படைப்பாளிகள் படப்பிடிப்பிலே கலந்து கொள்வதில் தங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்றும், அதே சமயம் படைப்பாளிகள் சங்கத்தினுடைய கார்டை பெற்றுக் கொண்டால் போதுமானது என்றும் படைப்பாளிகள் சங்கத்தின் சார்பில் வலியுறுத்தப்பட்டது.

ஆனால் திரு. கமல்ஹாசன் அவர்கள் ''பெப்சி தொழிலாளர்கள், படைப்பாளிகள் சங்கத்தின் கார்டை பெறாமலேயே அங்கு பணியாற்ற அனுமதிக்கப்பட வேண்டும்'' என்ற கருத்தை என்னிடத்தில் சொன்னார்.

எல்லாக் குழுவினரையும் நான் அழைத்து இறுதியாக அதே நாளில் பேசியபோது, பெப்சி சார்பாக பேசிய விஜயன், ''படைப்பாளிகள் கார்டு வாங்க வேண்டுமென்ற நிபந்தனை

இல்லாவிட்டாலும்கூட, படைப்பாளிகள் சங்கச் சார்பில் உள்ளவர்கள் எடுக்கின்ற படப்பிடிப்புகளில் பெப்சி தொழிலாளர்கள் கலந்து கொள்ள மாட்டோம்'' என்று திட்டவட்டமாகக் கூறினார்.

இது முதலில் திரு. கமல் அவர்கள் சொன்னதற்கு முற்றும் மாறுபாடாக இருந்தது. எனவே ''பழைய நிலையிலேயே இரு சாராரும் ஒருவரோடு ஒருவர் மோதிக் கொள்ளாமல், சட்டம் ஒழுங்கு பிரச்சினைக்கு இடம் தராமல், திரைப்படத் துறையில் தங்கள் பணிகளை ஆற்றிக் கொள்ளலாம்'' என்று நான் குறிப்பிட்டேன்.

அதற்குப் பிறகு விஜயனும், அவருடன் நான்கைந்து தோழர்களும் என்னைச் சந்தித்து, ''கேமரா யூனிட் வைத்திருப்பவர்கள் பெப்சி கலந்து கொள்ளும் படப்பிடிப்புகளுக்குக் கேமரா தர மறுக்கிறார்கள் - அப்படி அதை அவர்கள் மறுக்கக் கூடாது என்று நீங்கள் சொல்ல வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்கள்.

மறுநாள் திரு. ரஜினிகாந்த் அவர்கள் தொலைபேசியிலே என்னோடு தொடர்பு கொண்டு அது பற்றிப் பேசினார். கேமரா யூனிட்காரர்கள் பெப்சிக்கும் கேமரா தரவேண்டுமென்று பெப்சி விரும்புவதாக என்னிடம் தெரிவித்தார். அப்போது அவர் வீட்டில் இருந்தே, அவருடன் பேசிக் கொண்டிருந்த பெப்சி அமைப்பைச் சேர்ந்த திரு. ஜூடோ ரத்தினம், அந்தத் தொலைபேசியிலேயே என்னோடு தொடர்பு கொண்டு, ''கேமரா யூனிட், பெப்சிக்கும் கேமரா கொடுத்தால் பிரச்சினை தீர்ந்து விடும் - அதுதான் எங்கள் கோரிக்கை'' என்று கேட்டுக் கொண்டார்.

நான் அந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதாக திரு. ஜூடோ ரத்தினம் அவர்களிடம் சொல்லிவிட்டு, உடனடியாக அதை திரு. ரஜினிகாந்த் அவர்களிடமும் தெரிவித்தேன். நான் வாக்களித்தவாறே அரசின் செய்தித் துறை அதிகாரி மூலமாக கேமரா யூனிட்டுக்குத் தொடர்பு கொள்ளச் செய்து, அவர்களும் பெப்சிக்கு கேமரா தருவதாக ஒப்புக் கொண்டு விட்டார்கள்.

ஆனால் வள்ளுவர் கோட்ட வாசலில் ஒரு உண்ணாவிரதம் நடைபெற்றது. அதனை கமல்ஹாசன் அவர்களை அழைத்துத் தொடங்கி வைக்குமாறு செய்தனர். உண்ணாவிரதத்தை நிறுத்துமாறு வேண்டுகோள் விடுத்து ரஜினிகாந்த் அனுப்பி வைத்த கடிதத்தைக்கூட உண்ணாவிரதம் இருந்த பெப்சி தொழிலாளர்கள் உண்ணாவிரதப் பந்தலிலே படித்துக் காட்ட மறுத்து விட்டார்கள் என்ற தகவல் எனக்கு வந்தது. இதற்கிடையில் திரைப்படத் துறையினர் பிரச்சினையிலே அரசியல்வாதிகள் சிலர் புகுந்துகொண்டு, அவர்களின் பிரச்சினை தீரவே கூடாது - அதனைப் பெரிதாக்கி அரசுக்கு பிரச்சினை தரலாம் என்ற எண்ணத்தோடு அறிக்கைகளைக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

★ ★ ★

திரைப்படத் துறையிலே இந்த அளவிற்கு காழ்ப் புணர்ச்சியும், மோதல்களும் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், 15-7-1997 அன்று என்னுடைய அன்பிற்குரிய இரட்டையர்களில் ஒருவரான திரைப்பட இயக்குநர் **கிருஷ்ணன்** (பஞ்சு) அவர்கள் இயற்கை எய்தினார். அதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்பே **பஞ்சு** அவர்கள் மறைந்து விட்டார். நான் எழுதிய **''பராசக்தி''** படத்தை உயிரோட்டமுள்ள திரைக் காவியமாக இயக்கி, அனைவரின்



மறைந்த இயக்குநர் கிருஷ்ணன் அவர்களுடைய
உடலுக்கு மலரஞ்சலி செலுத்தினேன்

உள்ளங்களிலும் என்றும் நிலைபெறச் செய்தவர்கள், இறுதிவரை இணை பிரியாதிருந்த இந்த இரட்டையர்கள் கிருஷ்ணன் - பஞ்சு.

கிருஷ்ணன் மறைந்தபோது அவருடைய வயது 88 தஞ்சையில் 1909ஆம் ஆண்டு பிறந்தவர். 1935இல் இயக்குநர் கே. ராம்நாத் அவர்களிடம் பிலிம் லேபரட்டரியில் சீப் பிரிண்டராக வேலை செய்தார். அதன் பிறகு புகழ் பெற்ற இயக்குநர்கள் ராஜா சாண்டோ, எல்லிஸ் ஆர். டங்கன் போன்றவர்களிடம் உதவியாளராகப் பணியாற்றியவர். அந்த நேரத்தில் பஞ்சு அவர்கள் எடிட்டிங் துறையில் பணி செய்து கொண்டிருந்தார்.

இருவரும் இணைந்து முதன் முதலில் இயக்கிய படம் **''பூம்பாவை''**.

என்னுடைய வசனத்தில் நடிகர் திலகம் முதன் முதலாக நடித்த ''பராசக்தி'' படம்தான் இயக்குநர்கள் கிருஷ்ணன் பஞ்சுவை தமிழகத்திற்கு அடையாளம் காட்டியது. நான் எழுதிய நாடகங்களிலும், கதைகளிலும் இருந்த சில காட்சிகளை பராசக்தியில் இணைத்துக் கொள்ள வேண்டுமென்று ஆலோசனை கூறி, சிறப்பாகச் சேர்த்த பெருமை கிருஷ்ணன் அவர்களுக்கு உண்டு.

அவர்கள் இருவரும் இணைந்து இயக்கிய திரைப்படங்களின் எண்ணிக்கை 80. அதிலே ஏ.வி.எம். தயாரிப்பில் மட்டும் இயக்கிய படங்கள் 22. இவர்கள் இயக்கி குடியரசுத் தலைவரின் வெள்ளிப் பதக்கம் பெற்ற படம் ''குழந்தையும் தெய்வமும்'' இந்திய அரசின் தகுதிச் சான்றிதழ் பெற்ற படங்கள் **குலதெய்வம், அன்னை, தெய்வப்பிறவி, சர்வர் சுந்தரம்.** தமிழ் மாநில விருது பெற்ற படம் **''உயர்ந்த மனிதன்.''** 1996ஆம் ஆண்டு தி.மு.கழக அறக்கட்டளை நிதியை இயக்குநர் கிருஷ்ணன் அவர்களுக்கு, நான் அளித்து கௌரவித்தேன். இயக்குநர் கிருஷ்ணன் அவர்களுக்கு 6 மகன்கள், 5 மகள்கள். இயக்குநர் **கே.சுபாஷ்** அவருடைய மகன்தான்.



டெல்லியில் ஐக்கிய முன்னணியில் லல்லு பிரசாத் யாதவ் அவர்களையும் இணைத்துக் கொள்ளவேண்டும் என்று வலியுறுத்தினேன்.

கிருஷ்ணன் மறைந்த செய்தி கிடைத்தவுடன், நான் அவருடைய இல்லத்திற்குச் சென்று மலர் மாலை வைத்து எனது இறுதி அஞ்சலியைச் செலுத்தினேன்.

★ ★ ★

இதற்கிடையே அகில இந்திய அரசியலில் என்னென்ன மாற்றங்கள் ஏற்பட்டன என்பது பற்றியும், அவற்றில் தி.மு.கழகம் எந்த அளவிற்குப் பங்கேற்றது என்பது பற்றியும் சுருக்கமாக இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

1988ஆம் ஆண்டு அக்டோபர் 11ஆம் தேதி ஜனதாதளகட்சி துவக்கப்பட்டது. அதன் முதல் தலைவரான **வி.பி.சிங், ராஜீவ் காந்தி** தலைமையில் செயல்பட்ட காங்கிரஸ் கட்சியைத் தோற்கடித்து நாட்டின் பிரதமராக ஆனார். 1990ஆம் ஆண்டு மே 19ஆம் தேதி ஜனதா தளத்தின் தலைவராக **எஸ்.ஆர். பொம்மை** தேர்ந்தெடுக்கப்பட்டார். 1990, நவம்பர் 5ஆம் தேதி **சந்திரசேகர், தேவிலால்** உள்ளிட்டோர் ஜனதா தளத்திலிருந்து பிரிந்து சென்று சமாஜ்வாதி கட்சியைத் துவக்கினர்.

அயோத்திப் பிரச்சினையின்போது மக்கள் அவையில் 1990 நவம்பர் 7ஆம் தேதி கொண்டு வரப்பட்ட நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தால், வி.பி.சிங் ஆட்சியை இழந்தார். ராஜீவ்

தலைமையிலான காங்கிரஸ் ஆதரவுடன் சந்திரசேகர் பிரதமர் ஆனார்.

மீண்டும் 1992 பிப்ரவரியில் **அஜித்சிங்** தனது ஆதரவாளர்களுடன் ஜனதா தளத்திலிருந்து வெளியேறினார். பின்னர் 1995ல் **ஜார்ஜ் பெர்னாண்டஸ், நிதிஷ் குமார்** ஆகியோர் ஜனதா தளத்திலிருந்து விலகி சமதாக் கட்சியைத் துவங்கினார். ஹவாலா வழக்கில் குற்றம் சாட்டப்பட்டதைத் தொடர்ந்து கட்சித் தலைவர் பதவியிலிருந்து எஸ்.ஆர். பொம்மை 1996, ஜனவரி 29ஆம் தேதி விலகினார். அவருக்குப் பதிலாக **லாலு பிரசாத் யாதவ்** தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அதே ஆண்டு மே 20ஆம் தேதி 14 கட்சிகள் கொண்ட ஐக்கிய முன்னணி உருவானது. **தேவகவுடா** பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரைத் தேர்ந்தெடுத்ததைக் குறை கூறிய **ராமகிருஷ்ண ஹெக்டே** கட்சியிலிருந்து ஜூன் 14ஆம் தேதி நீக்கப்பட்டார். ஜூலை 17ஆம் தேதி ஜனதா தளத்தின் செயல் தலைவராக **சரத் யாதவ்** நியமிக்கப்பட்டார்.

தேவகவுடாவை விமர்சித்த **மேனகா காந்திக்கு** 1996 ஜூலை 2ஆம் தேதி காரணம் கோரும் நோட்டீஸ் அனுப்பப் பட்டு- 6ஆம் தேதி கட்சியிலிருந்து நீக்கப் பட்டார். ஜூலை 30ஆம் தேதி **முப்தி முகமது சயீத்** கட்சியிலிருந்து விலகினார்.

இப்படி பல்வேறு மாற்றங்களைக் கண்ட ஜனதா தளத்திற்குத் தலைவரைத் தேர்ந்தெடுக்க 1997ஆம் ஆண்டு மே மாதம் தேர்தல் அறிவிப்பு வெளியானது. **லாலுவும், சரத் யாதவும்** களத்தில் குதித்தனர். மே 30ஆம் தேதி தனது ஆதரவாளர்கள் 50 பேரைக் கட்சிக் கமிட்டியில் லாலு சேர்த்தார். அவர்கள் கட்சித் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை உள்ளவர்கள் ஆனார்கள். கட்சித் தேர்தல் பிரச்சினையில் நீதிமன்றம் குறுக்கிட்டது. **மது தண்டவதே, ஜெய்பால் ரெட்டி** ஆகியோரை பிரச்சினைக்குத் தீர்வு காண யோசனை கூறுமாறு டெல்லி நீதிமன்றம் கேட்டது. ஜூன் 7ஆம் தேதி கட்சித் தேர்தலை நடத்தவும் டெல்லி உயர் நீதிமன்றம்




கர்நாடக முதல்வர் ஜே.எச்.படேல் அவர்கள் சந்தனக் கடத்தல் வீரப்பன் சரணடைவது பற்றி என்னிடம் ஆலோசித்தார்.

உத்தரவிட்டது. கட்சித் தேர்தல் அதிகாரி சமந்த் ராய் உச்சநீதிமன்றத்தை அணுகி அதற்குத் தடை உத்தரவு பெற்றார். பின்னர் ஜூலை 8க்குள் தேர்தலை நடத்தி முடிக்க வேண்டும் என்று உச்சநீதி மன்றம் உத்தரவிட்டு தேர்தல் அதிகாரியாக மது தண்டவதேயை நியமித்தது. தேர்தலை லாலு ஆதரவாளர்கள் புறக்கணித்தனர். லாலு ஆதரவாளர்கள் கூடி, **ராஷ்ட்ரிய ஜனதா தளம்** உதயமானது. அதன் தலைவராக லாலு பிரசாத் யாதவ் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஜனதா தளத்தில் புதிய தலைவராக சரத் யாதவ் தேர்ந்தெடுக்கப்பட்டார். பதிவான மொத்த வாக்கு கள் 758. அதில் சரத்யாத வுக்கு ஆதரவாக 691 வாக்குகளும், லாலுவுக்கு ஆதரவாக 58 வாக்குகளும் பதிவாயின.

பீகார் முதல்வர் லாலு பிரசாத் யாதவின் ராஷ்ட்ரீய ஜனதா தளத்தை ஐக்கிய முன்னணியில் சேர்த்துக் கொள்வது தொடர்பாக அப்போது பெரிய பிரச்சினை மத்திய அரசு அளவில் ஏற்பட்டது. ''லாலுவின் கட்சியை ஐக்கிய முன்னணியில் சேர்த்துக் கொள்ள வேண்டும்'' என்று அறிக்கை ஒன்றினை நான் விடுத்தேன். எனது கருத்தை பிரதமர் குஜ்ரால், த.மா.கா. தலைவர் மூப்பனார், கர்நாடக முதலமைச்சர் படேல் போன்றவர்கள் ஆதரித்தனர். தேவகவுடா, சரத் யாதவ், முலாயம் சிங் யாதவ், மற்றும் இடதுசாரிக் கட்சித் தலைவர்கள் லாலுவின் கட்சியை ஐக்கிய முன்னணியில் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்ற நிலையை எடுத்தனர். ஐக்கிய முன்னணித் தலைவராக இருந்த தேவகவுடா அவர்களையே மாற்ற வேண்டுமென்ற குரலும் தீவிரமாக எழுந்தது. ஐக்கிய முன்னணி அரசைக்



வீரப்பனைச் சந்திக்க தமிழக அரசு சார்பில்
அனுப்பி வைக்கப்பட்டார் ''நக்கீரன் கோபால்''

கவிழ்ப்பதற்கான அனைத்து திரைமறைவு வேலைகளிலும் தேவகவுடா அவர்கள் ஈடுபட்டதாக அப்போது செய்தி பல ஏடுகளில் வெளி வந்தது.

ஜனதா தளத் தேர்தலில் போட்டி ஏற்பட்டு, அதன் காரணமாக ராஷ்ட்ரிய ஜனதா தளக் கட்சியைத் தொடங்கிய அன்றே பீகார் மாநிலத்தில் லாலு அரசு சிறுபான்மை அரசாக ஆகிவிட்டது. பா.ஜ.க. எதிர்ப்பு என்ற வகையில் நம்பிக்கை வாக்கெடுப்பில் காங்கிரஸ் கலந்து கொள்ளாததால், லாலு எளிதாக வெற்றி பெற முடிந்தது.

பிரதமர் குஜ்ரால் மத்திய தொழில் அமைச்சராக இருந்த **முரசொலி மாறனை** அழைத்து, ''ஐக்கிய முன்னணி அரசிலிருந்து விலகும் முடிவை எந்தக் காரணத்தைக் கொண்டும் தி.மு.க. எடுத்து விடக்கூடாது'' என்று வலியுறுத்தினார்.

மாநிலங்களிடையேயான குழுக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக 17.7.1997 அன்று டெல்லி செல்வதற்காகத் திட்டமிட்டிருந்த என்னுடைய சுற்றுப் பயணத்தையொட்டி, அன்றைய தினமே ஐக்கிய முன்னணி வழிகாட்டுக் குழுக் கூட்டத்தை வைத்துக் கொள்ளலாம் என்றும் கூறினார்கள். ஐக்கிய முன்னணியின் ஒற்றுமைக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் - ஜனதா தளத்தில் உள்ள ஒரு சில தலைவர்களே செயல்பட்டு வருவது தி.மு.க.விற்குக் கவலையை அளித்துள்ளதாக நான் தெரிவித்த கருத்தினை முரசொலி

மாறன் பிரதமரிடம் நேரில் விளக்கினார். அதைப் பற்றி விசாரித்து உரிய நடவடிக்கை எடுப்பதாகப் பிரதமர் குஜ்ரால் மாறனிடம் உறுதியளித்தார்.

17.7.1997 அன்று நான் டெல்லி சென்றபோது ஐக்கிய முன்னணியின் மூத்த தலைவர்கள் எல்லாம் என்னைச் சந்தித்து, ஐக்கிய முன்னணியில் ராஷ்ட்ரிய ஜனதாதளத்தை ஏன் சேர்க்கக் கூடாது என்பதற்கான காரணங்களையெல்லாம் விளக்கினார்கள். அன்றைய கூட்டத்தின் முடிவில் நானும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைவர் **சுர்ஜித்** அவர்களும் இந்தப் பிரச்சினைகுறித்து விவாதித்துத் தீர்வு காண வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. நாங்கள் இருவரும் அவ்வாறே அனைத்துத் தலைவர்களிடமும் ஓரளவிற்கு பேசி சமாதானம் செய்து, வெறெந்த மாற்றமும் செய்யாத அளவில், மத்திய அரசு ஒரு சுமூகமான நிலையில் தொடர்ந்து நடைபெற வழி வகுத்தோம். ஆனால் அந்த அமைதி எத்தனை மாதங்களுக்கு நீடித்தது என்பதை பின்னர் எழுதுகிறேன்.

★ ★ ★

இதற்கிடையில் மைசூர் மாவட்டம், சாம்ராஜ் நகரில் உள்ள புரடே காட்டுப் பகுதியில் சந்தனக் கடத்தல் **வீரப்பன்** 10 வனத்துறை ஊழியர்களை 12.7.1997 அன்று கடத்திச் சென்ற தகவல் வந்தது. பின்னர் சில நிபந்தனைகளை விதித்து, ஒருவர் மட்டும் விடுவிக்கப்பட்டார். கடத்தப்பட்டவர்களை விடுவிக்க ரூ. இரண்டு கோடி நிபந்தனை என்று கூறப்பட்டது. கடத்தப்பட்டவர்களில் வனக் காவலர்கள் (பாரஸ்டர்கள்) 2பேர், வனத் துறை கார்டுகள் 6 பேர், ஜீப் ஓட்டுநர்கள் 2 பேர்.

விடுவிக்கப்பட்ட வனஊழியர் பெங்களூர் நகருக்கு அழைத்து வரப்பட்டு, உயர் அதிகாரிகளால் விசாரிக்கப்பட்டார். தனக்குப் பொது மன்னிப்பு அளிக்கா விட்டால் பிடிபட்ட வனத்துறை ஊழியர்களைச் சுட்டுக் கொன்று விடுவதாக வீரப்பன் எச்சரிக்கை விடுத்திருப்பதாகச் செய்திகள் ஏடுகளில் வெளிவந்தன.

அப்போது கர்நாடக முதலமைச்சராக இருந்த அருமை நண்பர் **படேல்** அவர்கள் என்னிடம் தொலைபேசியில்

தொடர்பு கொண்டு விவரங்களையெல்லாம் தெரிவித்தார். தான் விடுவித்த நபரிடம் வீரப்பன் இரண்டு ஆடியோ கேசட்டுகளைக் கொடுத்து, கர்நாடக முதல்வரிடம் அளிக்கும்படிக் கூறி இருந்தார். அந்த கேசட்டில், தான் சரணடைய விரும்புவதாகவும், தனது உயிருக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டுமென்றும் தன் மீதான எந்த நடவடிக்கையையும் தமிழக அரசிடம் விட்டுவிட வேண்டும் என்றும் வீரப்பன் கூறியிருந்தார். அந்தக் கேசட்டுக்கு பதிலளிக்கும் வகையில் - கர்நாடக முதலமைச்சர் படேல் செய்தியாளர்களிடம், ''வீரப்பன் சரணடைய விரும்பினால் அதனையேற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம் - ஆனால் சட்டரீதியாக விளைவுகளை அவர் சந்தித்தே ஆக வேண்டும் - சரண் அடைவதற்கு முன்பு கடத்திச் சென்றவர்கள் அனைவரையும் விடுவிக்க வேண்டும் - சரண் அடைவது தொடர்பான நடைமுறைகள் தமிழகத்திடம் விடப்படும்'' - என்றும் கூறினார்.

பொறுப்பை தமிழக அரசிடம் கர்நாடக அரசு ஒப்படைத்த நிலையில், தமிழக அரசின் சார்பில் வீரப்பனுடன் தொடர்பு கொள்வதற்கான முயற்சியில் தமிழக அரசு **''நக்கீரன் இதழின் ஆசிரியர் கோபால்** மூலமாக ஈடுபட்டது. அவரும் அந்த முயற்சியில் ஈடுபடுவதாக ஒப்புக் கொண்டார். சந்தனக் கடத்தல் வீரப்பனை தமிழக அரசு சார்பில் சந்திக்கச் சென்ற கோபால், 23.7.1997 புதன்கிழமை அன்று சென்னை திரும்பி, தலைமைச் செயலகத்தில் என்னைச் சந்தித்தார். வீரப்பன் கொடுத்தனுப்பிய வீடியோ கேசட்டையும் கொடுத்தார். கர்நாடக அரசு அலுவலர்கள் 9 பேரை விடுவிப்பதற்கான நிபந்தனைகளும் கேசட்டில் பதிவு செய்யப்பட்டிருந்தன. எனக்கும், கர்நாடக முதல்வருக்கும் அந்த 9 பேரும் அனுப்பிய கடிதங்களையும் நக்கீரன் கோபால் என்னிடம் கொடுத்தார். அவர்கள் அனைவரும் நலமாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

தனக்கு பொது மன்னிப்பு அளித்தால் தான் அரசு அலுவலர்கள் ஒன்பது பேரையும் விடுவிப்பேன் என்று வீரப்பன் வீடியோவில் தெரிவித்திடவே, இதற்கான

பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே, ''வீரப்பனுக்கு பொதுமன்னிப்பு கொடுக்கக் கூடாது'' என்று ஜெயலலிதா அறிக்கை விடுத்தார்.

26.7.1997 அன்று மாலையில் கர்நாடக முதலமைச்சர் ஜே.எச்.படேல் அவர்கள் சென்னைக்கு வருகை தந்தார். அவரும், நானும், மற்றும் அதிகாரிகளும் தலைமைச் செயலகத்தில் வீரப்பன் பிரச்சினை குறித்து இரவு 10 மணி வரையில் பேசினோம். பேச்சின் முடிவில் நாங்கள் இருவரும் சேர்ந்து வெளியிட்ட அறிக்கையில் -

''இரு மாநில முதல்வர்களும், இரு மாநில அரசுகளும் இப்பிரச்சினையை எவ்வளவு விரைவில் தீர்க்க முடியுமோ அவ்வளவு விரைவில் தீர்க்க முடியுமோ அவ்வளவு விரைவில் தீர்க்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். இதில் ஒரு முடிவைக் காணவும், நல்லெண்ணத்தின் அடையாளமாகவும் வீரப்பன் உடனடியாக ஒன்பது பேரையும் விடுதலை செய்ய வேண்டும். பொது மன்னிப்பு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்றுக் கொள்வதில் சிக்கலான சட்டப் பிரச்சினைகளும், தடைகளும் உள்ளன. வீரப்பன் சரணடைந்ததும், அவர் உயிரின் பாதுகாப்புக்கு இரு மாநில அரசுகளும் உத்தரவாதம் அளிக்கும். இரு மாநிலங்களிலும் வீரப்பனுக்கு எதிராக பல வழக்குகள் பதிவு செய்யப்பட்ட நிலையிலேயே உள்ளன. அவைகளை விசாரணைக்கு எடுத்துக் கொண்டாக வேண்டும். அந்த வழக்குகளைத் தமிழகத்தில் நடத்த தன்னுடைய ஒத்துழைப்பைத் தர கர்நாடக அரசு ஒப்புக் கொண்டுள்ளது. இதற்கு உச்சநீதி மன்றத்தின் ஒப்புதல் தேவைப்படுகிறது. இதற்குச் சிறிது காலமாகும். அதனால், பிடித்து வைக்கப் பட்டுள்ள ஒன்பது பேரையும் விடுதலை செய்ய வேண்டும் என்ற வேண்டுகோளுடன் நக்கீரன் கோபால் வீரப்பனைச் சந்திக்க அனுப்பப்படுவார்'' என்று கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

தமிழக மற்றும் கர்நாடக மாநில அரசுகள் கேட்டுக் கொண்டதன் பேரில், வீரப்பனைச் சந்திக்கச் சென்ற கோபால், அங்கே பிணைக் கைதியாக வைக்கப்பட்டிருந்த ஒன்பது பேரில்



கடத்தப்பட்ட வனத்துறை ஊழியர்களை மீட்டு வந்த கோபாலுக்கு பொன்னாடை அணிவித்துப் பாராட்டு தெரிவித்தேன்.

வனக்காவலர் ராஜு உடல் நலம் குன்றியிருந்த காரணத்தால், அவருக்கு சிகிச்சை அளிக்கும் பொருட்டு, அவரை மட்டும் 6.8.1997 அன்று அழைத்து வந்து என்னிடம் ஒப்படைத்தார். நான், சென்னையிலே அவரை ஒரு மருத்துவ மனையிலே சேர்த்து சிகிச்சை அளிக்கும் படிக் கூறினேன்.

9.8.1997 அன்று கர்நாடக மாநில சட்டத்துறை அமைச்சரும் - வனத்துறை அமைச்சரும் அந்த மாநில அதிகாரிகளுடன் என்னைச் சந்தித்து, வீரப்பனிடம் பிடிபட்டுள்ள கர்நாடக மாநில அலுவலர்களை விடுவிக்க தமிழக அரசு எடுத்துள்ள முயற்சிகளுக்கு தங்களுடைய நன்றியைத் தெரிவித்ததோடு, பணயக் கைதிகளை விடுவிக்க மேலும் தமிழக அரசு உதவி செய்ய வேண்டுமென்று கோரினார்கள். அனைத்து உதவிகளையும் செய்வதாக நானும் அவர்களுக்கு உறுதி கூறினேன். பணயக் கைதிகளை விடுவிக்க மேலும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி அந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. இரண்டு மாநில அரசுகளின் சார்பில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் - ''தமிழ்நாடு அரசும், கர்நாடக மாநில அரசும் ஆழ்ந்த பேச்சுவார்த்தைக்குப் பிறகு, நக்கீரன் கோபால் மூலமாக சந்தனக் கடத்தல் வீரப்பனிடம், ஏற்கனவே தெரிவித்த வேண்டுகோளை மீண்டும் தெரிவித்து, உடனடியாக பயணக் கைதிகளை விடுதலை செய்திட வேண்டும் என்ற கருத்தினைத் தெரிவிப்பது என்று முடிவு செய்திருக்கிறார்கள். எந்தக் காரணத்தை முன்னிட்டும் பிணைத் தொகை கொடுப்பதில்லை என்று அரசுகள்



வீரப்பன் கொடுத்தனுப்பிய 'கேசட்டை' என்னிடம் தந்தார் 'நக்கீரன்' கோபால்

முடிவெடுத்துள்ளன. வீரப்பன் சரண் அடைவாரேயானால், அவருடைய உயிருக்குப் பாதுகாப்பு தரப்படும் என்று ஏற்கெனவே தெரிவிக்கப் பட்டுள்ளது. மேலும், தமிழகத்திலே தனி சிறப்பு முகாமில் ஒரு குறைந்த அளவு காலக் கட்டத் திற்கே சட்டப்படி வீரப்பன் வைக்கப்பட நேரிடும். சட்ட விதிகளின்படி ஏற்கனவேயே அதிகபட்ச சலுகைகள் வீரப்பனுக்கு வழங்க அரசாங்கங்கள் ஒப்புக் கொண்டுள்ளன. எனவே பெருந்தன்மையோடு தெரிவிக்கப்பட்டுள்ள இந்த முறைகளையேற்று, பிணைக் கைதிகளை விடுவித்து, வீரப்பன் சரணடைய வேண்டும். இந்தப் பெருந்தன்மை யான அறிவிப்புகளை வீரப்பன் ஏற்க மறுத்தால், இரண்டு அரசாங்கங்களுக் கும் சட்டப்படி நட வடிக்கை எடுப்பதைத் தவிர்த்து வேறு வழி யில்லை. பிணைக் கைதி களின் உயிர்களுக்கு ஏதாவது ஆபத்து நேருமேயானால், அதற்கு வீரப்பன் மட்டுமே காரணம் என்பதோடு, அதற்கான விலையினை அவர்தான் தர வேண்டி இருக்கும்.'' என்று தெரிவிக்கப்பட்டது.

19.8.1997 அன்று சென்னையில் கர்நாடக மாநில அரசின் சார்பில் முதலமைச்சர் **ஜே.எச்.படேல்,** வனத் துறை அமைச்சர் குருபாதப்பா, உள்துறை அமைச்சர் **ரோஷன் பேக்,** சட்டத்துறை அமைச்சர் **எம்.சி. நானையா** மற்றும் அதிகாரிகள் என்னைச் சந்தித்து, வீரப்பன் சரண் அடைவது குறித்து நீண்ட நேரம் ஆலோசித்தனர். அந்த ஆலோசனைகளின் முடிவுகளை எடுத்துக் கொண்டு நக்கீரன் கோபால் வீரப்பனைச் சந்திக்க செல்வதென்றும், அதன் பின்னர் வீரப்பன் சரணடையும்

சிலருடைய எதிர்ப்புகளின் விளைவாக வீரப்பன் சரணடையும் திட்டம் நிறைவேறாமலேயே போய்விட்டது

நாளும், இடமும் அறிவிக்கப்படும் என்றும் முடிவெடுக்கப் பட்டது.

ஆறு வாரங்களாகப் பிடித்து வைக்கப்பட்டிருந்த கர்நாடக மாநில வனத் துறையைச் சேர்ந்த பிணைக் கைதிகளில் மீதமிருந்த எட்டு பேரையும், 24.8.1997 அன்று இரவு நக்கீரன் கோபால் வசம் ஒப்படைத்து விட்டதாகவும், விடுவிக்கப் பட்டவர்களுடன் 25ஆம் தேதி சென்னையில் சந்திப்பதாகவும் நக்கீரன் கோபாலிடமிருந்து எனக்குச் செய்தி கிடைத்தது. கர்நாடக முதல்வரையும் தொடர்பு கொண்டு செய்தியைத் தெரிவித்தேன். அவரும் மட்டிலா மகிழ்ச்சி அடைந்தார்.

25.8.1997 அன்று எட்டு பேருடன் சென்னை திரும்பிய நக்கீரன் கோபால், சென்னை தலைமைச் செயலகத்தில் என்னைச் சந்தித்து, அவர்கள் எட்டு பேரையும் என்னிடம் ஒப்படைத்தார்.

வீரப்பன் சரண் அடைவது குறித்து அவர் தெரிவித்த அத்தனை நிபந்தனைகளையும் அரசு சார்பில் ஒப்புக் கொள்ளாத காரணத்தால், அவர் சரண் அடைவதைப் பற்றி மறு பரிசீலனை செய்து கூறுவதாகச் சொன்னார்.

வீரப்பனால் விடுவிக்கப்பட்ட கர்நாடகத்தைச் சேர்ந்த 8 வனத்துறை அலுவலர்களும் என்னைச் சந்தித்து நன்றி தெரிவித்தனர். எட்டு பேரையும் பத்திரமாக அழைத்து வந்ததற்காக நக்கீரன் கோபாலுக்கு நான் பொன்னாடை போர்த்தி, பாராட்டு தெரிவித்தேன்.

கர்நாடக முதலமைச்சர் என்னைத் தொடர்பு கொண்டு, தனது உளப் பூர்வமான நன்றியைத் தெரிவிப்பதாக மீண்டும், மீண்டும் கூறினார்.

மேலும் அவர் எழுதிய கடிதத்தில் ''வீரப்பனால் பிடித்துச் செல்லப்பட்ட எட்டு பேரின் பாதுகாப்பு குறித்து கர்நாடக மாநில மக்கள் மிகுந்த கவலை கொண்டிருந்தனர். அவர்களைப் பத்திரமாக விடுவிக்க நீங்களும், தமிழக அரசு அதிகாரிகளும் இதயப்பூர்வமாக மேற்கொண்ட முயற்சிகள் மதிப்பிட

முடியாதவை. உங்களது இந்த உதவிக்காகவும், பல ஆண்டு கால குற்ற நடவடிக்கைகளுக்கு நல்ல முடிவு ஏற்படுத்தியதற்காகவும், தனிப்பட்ட முறையிலும், கர்நாடக அரசு சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்விஷயத்தில் முக்கிய பங்காற்றிய நக்கீரன் பத்திரிகை ஆசிரியர் கோபாலுக்கு எனது நன்றியைத் தெரிவியுங்கள்'' என்று குறிப்பிட்டிருந்தார்.

வீரப்பன் சரண் அடைவதைப் பற்றி - அப்படி சரண் அடைந்தால் தி.மு.கழக அரசுக்குப் பெயர் வந்து விடுமோ என்று நினைத்து அதற்கு ஒரு சாரார் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்தனர். ''வீரப்பனை தனிமுகாமில் வைத்தால் வழக்கு தொடருவேன்'' என்று ஒருவர் அறிக்கை விடுத்தார்.

மற்றொரு ஓய்வு பெற்ற போலீஸ் அதிகாரி, ''வீரப்பன் நீதிமன்றத்திற்கு வரும்போது துப்பாக்கியால் சுடுவேன்'' என்று பகிரங்கமாகக் கூறினார்.

அனைத்திற்கும் மேலாக, ஜெயலலிதா ''வீரப்பன் சரணடைவதை ஏற்கக் கூடாது'' என்றே கூறினார்.

இத்தகைய எதிர்ப்புகளின் விளைவாக வீரப்பன் சரணடைகின்ற திட்டம் நிறைவேறாமலே போய்விட்டது என்பதுதான் உண்மை.

24. தங்கமான தம்பி பாண்டியன்

மனோன்மணியம் சுந்தரனார் பெயரில் பல்கலைக்கழகத்தை நிறுவியது நமது கழக அரசு

மனோன்மணியம் சுந்தரனார் நினைவு நூற்றாண்டு விழா- மறைமலை அடிகளார் குடும்பத்தாருக்குப் பரிவுத் தொகை வழங்கும் விழா - தேவநேயப் பாவாணர் தொகுத்த அகரமுதலி மூன்றாம் தொகுதி வெளியீட்டு விழா - ஆகிய மூன்று விழாக்களும் இணைந்து 4.8.1997 அன்று சென்னை கலைவாணர் அரங்கத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறை அமைச்சர் முனைவர் தமிழ்க்குடிமகன் தலைமையில் நடைபெற்றது. அகரமுதலி மூன்றாம் தொகுதியை நான் வெளியிட, கல்வி அமைச்சராக இருந்த பேராசிரியர் பெற்றுக் கொண்டார்.

விழா நாயகர்கள் மூவரில் இருவரிடத்திலே நான் நெருங்கிப் பழகியவன். மறைமலை அடிகளாரை நன்கு உணர்ந்தவன். மறைமலை அடிகளாருடைய சிலையை நாகப்பட்டினத்தில் திறந்து வைத்த பெருமையும் எனக்குண்டு. தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்தான் அவர். அவர் மேடைகளிலே ஆற்றிய பல உரைகளை பல முறை நான் கேட்டிருக்கிறேந். பெண் குரல் - ஆனால் அது சிங்கமாகச் சீறுகின்ற குரலாக இருக்கும். தமிழுக்கு ஒரு இன்னல் என்றால், அந்தக் குரல் எவ்வளவு வலிவோடு ஒலிக்கும் என்பதை நான் பல நேரங்களிலே கேட்டிருக்கிறேன். அந்தத் தோற்றத்தின் கம்பீரத்தையும் கண்டிருக்கிறேன். அவருடைய நினைவைப் போற்றும் வகையில் பல இடங்களுக்கு அவருடைய பெயர்களை நான் சூட்டியிருக்கிறேன். "மர்மலாங் பிரிட்ஜ்" என்று அழைக்கப்பட்ட அந்த பாலத்தின் பெயரை,

''மறைமலை அடிகள் பாலம்'' என்று மாற்றி அமைக்கப்பட்டது கழக ஆட்சியிலேதான். ''மறைமலை நகர்'' என்ற பெயர்- பேராசிரியர் அவர்கள் சென்னை பெரு நகர வளர்ச்சிக் குழுமம் என்ற அந்தத் துறையின் பொறுப்பிலே இருந்த காலத்தில், அவரும் நானும் கலந்து பேசி வைத்தப் பெயராகும்.

தனித் தமிழ் இயக்கத்தின் தந்தை எனப் புகழப்படுவர் மறைமலை அடிகளார். அவர் எழுதிய நூல்கள் அனைத்தையும் அரசுடைமை ஆக்குவது குறித்து நிதி நிலை அறிக்கையில் அந்த ஆண்டு, ''நீடு துயில் நீக்கப் பாடி வந்த நிலாவாக தமிழ் வானில் ஒளி விட்டவரும், நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே எனச் சீறியெழுந்த செந்நாப் புலவருமான செந்தமிழ் வித்தகர் - இனமான ஏந்தல் தமிழறிஞர் மறைமலை அடிகளார் - அவர்கள் தமிழுக்கு அளித்துள்ள படைப்புகள் அனைத்தையும் அரசுடைமையாக்கவும் - அவரது குடும்பத்தினருக்குக் காப்பு நிதி வழங்கவும், ரூபாய் 20 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்'' என்று அறிவித்திருந்தேன். சேலம் மாநாட்டிலிருந்து திரும்பியதும், அந்த அறிவிப்பின்படி மறைமலை அடிகளாரின் வாரிசுகளாக இருந்த 11 பேருக்கு மொத்தம் 20 லட்சம் ரூபாய் காப்பு நிதியை வழங்கிட ஆணை பிறப்பித்தேன்.

மனோன்மணியம் சுந்தரனார் அவர்களைப்பற்றி நினைக்கும்போது - பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு காலத்திலே அண்ணாமலை பல்கலைக் கழகத்திலே ஆற்றிய பேருரையின் தலைப்புதான் என் நினைவிற்கு வரும். ''ஆற்றோரம்'' என்ற தலைப்பிலே அண்ணா உரையாற்றினார். அந்தத் தலைப்பிலே பேசும் போது அண்ணா அவர்கள், ''வின்சென்ட் ஸ்மித் இந்தியாவின் வரலாறு கங்கைக் கரையிலேயிருந்து எழுதப்பட்டிருக்கக்கூடாது - காவேரி ஆற்றங்கரையிலிலேயிருந்துதான் எழுதப்பட்டிருக்க வேண்டும்'' என்று சொன்னதையும் - அதையேற்று மனோன்மணியம் சுந்தரனார் எழுதியதையும் எடுத்துக் காட்டி பேசிய உரை வரலாற்றுப் புகழ்மிக்க உரையாகும்.

அந்த மனோன்மணியம் சுந்தரனார் பெயரிலேயே ஒரு பல்கலைக் கழகத்தை தி.மு.கழக ஆட்சியிலே நெல்லை மாவட்டத்திலே நிறுவியதையெல்லாம், கலைவாணர் அரங்கிலே நடைபெற்ற அந்த விழாவிலே நான் எடுத்துக்காட்டி உரையாற்றினேன்.

சுந்தரம் பிள்ளை அவர்கள் எழுதிய மனோன்மணியம் கதாபாத்திரங்கள் எல்லாம் என்னை மிகவும் கவர்ந்தவை. அதிலே ஜீவகன் என்று ஒரு கதாபாத்திரம் - அவன் பாண்டிய மன்னன். புருஷோத்தமன், என்று ஒரு கதாபாத்திரம்- அவன் சேர மன்னன். ஜீவகனுடைய ஆட்சியைக் கவிழ்த்து, தன் ஆட்சியைக் கொண்டு வருவதற்காக குடிலன் என்பவன் சூழ்ச்சி செய்கிறான். சேரனுக்கும், பாண்டியனுக்கும்- அதாவது புருஷோத்தமனுக்கும் ஜீவகனுக்கும் இடையிலே போர் நடைபெறுகிறது. அந்தப் போரில் புருஷோத்தமன் வெற்றி வாகை சூடக்கூடிய சூழ்நிலை. அப்போது ஜீவகன் ஒரு குகையிலே தங்கி, அங்கிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய நிலையில்; குடிலன் தன்னுடைய வஞ்சக சூழ்ச்சியினால் மன்னனை ஏமாற்றி, அவனுக்குத் தெரியாமல் அமைத்த குகை வழிப்பாதை ஒன்றின் வழியாக வெளியே சென்று, பகை மன்னனான புருஷோத்தமனைச் சந்தித்து - ''இந்த வழியாக நீ வந்தால், உடனடியாக ஜீவகனைப் பிடித்து விடலாம், கைது செய்து விடலாம், எனவே என்னோடு வா''



மனோன்மணியம சுந்தரனார் உருவாக்கிய கதாபாத்திரங்கள் எல்லாம் என்னை மிகவும் கவர்ந்தவை!

என்று அந்த ரகசிய வழியைக் காட்டுகிறான். எதிரி நாட்டு மன்னன் உடனடியாகக் குடிலனைப் பாராட்டிவிட்டு, அந்த வழியாகச் சென்று ஜீவகனைக் கைது செய்து வெற்றிக் கொடியை பறை சாற்றுவான் என்றுதான் அனைவரும் எண்ணுவார்கள்.

ஆனால் மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை படைத்த அந்தப் புருஷோத்தமனுடைய பாத்திரம் அவ்வாறு செயல் படவில்லை. வேறு என்ன செய்தான் தெரியுமா? குடிலன் தன்னை அணுகி, அவ்வாறு குகைப் பாதை பற்றி விவரங்களைச் சொன்னதும் - தன்னுடைய வீரர்களைக் கைதட்டி அழைத்து, ''துரோகி குடிலனை உடனடியாகக் கைது செய்யுங்கள்'' என்று கூறுகிறான்.

குடிலன் அசந்து போய், ''என்ன மன்னா? உனக்கு உதவி செய்வதற்காக வந்த என்னைக் கைது செய்யச் சொல்கிறாயே, இது நியாயமா?'' என்று கேட்கிறான்.

அப்போது மன்னன் புருஷோத்தமன் சொல்கிறான்: ''உன்னை நம்பி உன்னைத் தளபதியாக வைத்திருந்த ஜீவகனுக்குக் கஷ்டம் வந்த நேரத்தில் அவனுக்குத் துரோகம் செய்துவிட்டு, என்னிடம் வந்திருக்கின்ற நீ - எனக்குத் துரோகம் செய்ய எவ்வளவு நாளாகும்? நான் எப்போதும் துரோகிகளை ஆதரிக்க மாட்டேன்'' என்று கூறுவதாக மனோன்மணியத்தில் சுந்தரம் பிள்ளை எழுதியிருப்பார்.

அப்படிப்பட்ட கதாபாத்திரத்தைப் படைத்த மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை எழுதியது தான் ''நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும் சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்'' என்று தொடங்கும் பாடல். அந்தப் பாடல்தான் இன்று தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடலாக தமிழக முழுதும் பாடப்படுகிறது. அந்தப் பாடலை நான் தேர்ந்தெடுத்து, என்னுடைய அருமை நண்பர் மெல்லிசை மன்னர் எம்.எஸ். விசுவநாதன் அவர்களிடம் கொடுத்து, இதற்கான மெட்டினை அமைத்துத் தர வேண்டுமென்று கூறினேன். அவர் ஐந்து மெட்டுக்களில் இந்தப் பாட்டை



மறைமலை அடிகளாரின் வாரிசுகளுக்கு பரிவுத் தொகை ரூ. 20 இலட்சத்தை, 30 இலட்சமாக உயர்த்தி வழங்கினேன்.

அமைத்து - டி.எம்.சவுந்தர ராசன், பி.சுசீலா ஆகியோரைக் கொண்டு பாடச் செய்து - அதைக் கொண்டு வந்து என்னிடம் காட்டியபோது, தற்போது பாடப் படும் மெட்டினையும் நான்தான் தேர்ந்தெடுத்து, அதுதான் இன்றளவும் தமிழ்த் தாய் வாழ்த்தாகப் பாடப்படுகிறது. அது பற்றிக்கூட பலமுறை மெல்லிசை மன்னர் கொடுத்த பேட்டியிலே, அவருக்குப் பிறகும் அவர் மெட்டமைத்த இந்தத் தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடல் தமிழகம் முழுவதும் கேட்டுக் கொண்டிருக்கும் என்று தெரிவித்திருக்கிறார். அவருக்கு எப்படி அந்தப் புகழ் அவருக்குப் பின்னரும் இருந்து கொண்டிருக்குமோ - அதுபோலவே அந்தப் பாடலைத் தேர்ந்தெடுத்த என்னுடைய பெயரும் - எனக்குப் பின்னரும் இந்தத் தமிழகத்தில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் ஒலிக்கும்வரையில் நிலைத்திருக்கும்.

அந்தப் பாடலை எழுதிய சுந்தரம் பிள்ளை அவர்களின் நூற்றாண்டு விழாவினையும், மறைமலை அடிகளாரின் விழாவினையும் இணைத்துத் தான் அன்று விழா நடைபெற்றது. மறைமலை அடிகளின் நூல்களை யெல்லாம் நாட்டுடைமை ஆக்கிய போது அதற்குப் பரிவுத் தொகையாக இருபது இலட்ச ரூபாய் தமிழக அரசின் சார்பில் அளிக்கப்படும் என்று ஏற்கனவே நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப் பட்டிருந்ததை மாற்றி - அந்தக் குடும்பத்தினரின் வாரிசுகள் அதிகம்பேர் - என்று பிறகு அறிவிக்கப்பட்ட காரணத்தினால் - பரிவுத் தொகை இருபது இலட்சம் ரூபாயை, முப்பது இலட்சம் ரூபாயாக உயர்த்தி அந்த விழாவிலே அறிவித்தேன்.

மேலும் மறைமலை அடிகளாரின் நூலகத் திற்கு 1970ஆம் ஆண்டு முதல் அதுவரை வழங்கப் பட்டு வந்த பத்தாயிரம் ரூபாய் உதவித் தொகையை 1997ஆம் ஆண்டு முதல் ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்றும் அறிவித்தேன்.



அகர முதலி மூன்றாம் தொகுதியை நான் வெளியிட, பேராசிரியர் அதைப் பெற்றுக் கொண்டார்.

★ ★ ★

இதற்கிடையே, வணிக வரித் துறை அமைச்சரும் - விருதுநகர் மாவட்டக் கழகச் செயலாளரும் - என்னுடைய அன்பு உடன்பிறப்புக்களில் ஒருவருமான - பழகுதற்கு இனிய தம்பி வே.தங்கபாண்டியன் அவர்கள், 31.7.1997 அன்று திடீரென மாரடைப்பின் காரணமாக இயற்கை அடைந்தார்.

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையத்தில் தொடர்ந்து அமைதிக் குறைவு ஏற்பட்டதை யொட்டி, அமைச்சர் தங்கபாண்டியன் அமைதியை நிலைநாட்டுவதற்காக சொந்த மாவட்டம் என்ற முறையில் அங்கே சென்றிருந்தார். அங்கே எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவருடனும் - மற்றும் அதிகாரிகளுடனும் ஆலோசித்து அமைதியை நிலைநாட்டுவதற்கான பணிகளை அங்கேயே தங்கியிருந்து தங்க பாண்டியன் நிறைவேற்றிக் கொண்டிருந்தார். அப்போது திடீரென்று அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. உடனடியாக மருத்துவர்களுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டு, அவர்களும் விரைந்து வந்து அமைச்சருக்குச் சிகிச்சை அளித்தனர்.

தங்கபாண்டியனுக்கு உடல் நலம் சரியில்லை என்றதுமே எனக்குத் தொலை பேசி வாயிலாக உடனடியாகத் தகவல் தெரிவித்தார்கள். நான் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்த ஆர்க்காடு வீராசாமியிடம் கூறி, மதுரையிலிருந்து

மருத்துவ நிபுணர்களை யெல்லாம் விரைந்து ராஜபாளையம் செல்லுமாறு ஏற்பாடுகளைச் செய்தேன். என்ன செய்து என்ன? என் அன்புத் தம்பி - புன்னகை மாறாத முகத்துக்குச் சொந்தக்காரர் - என்னையும், அவனது குடும்பத்தினரையும் கண்ணீர்க் கடலிலே தள்ளிவிட்டு மீளாத் துயிலில் ஆழ்ந்து விட்டார்.

இப்போதிருக்கும் விருதுநகர் மாவட்டம், சிவகங்கை மாவட்டம், ராமனாதபுரம் மாவட்டம் - ஆகிய மூன்று மாவட்டங்களும் ஒன்றாக முகவை மாவட்டம் என்ற பெயரில் இருந்தபோதே - அந்தப் பெரிய மாவட்டத்தின் கழகச் செயலாளராகத் திறம்படப் பணியாற்றியவர் தங்க பாண்டியன்.

1974ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து மாவட்டக் கழகச் செயலாளராக இருந்து வந்து அவர், தென் பாண்டி மண்டலத்தில் கழகத்தை வளர்த்த முக்கிய தளகர்த்தர்களில் ஒருவர். பின்னர் அந்த மாவட்டம் மூன்றாகப் பிரிக்கப்பட்ட பிறகு, விருதுநகர் மாவட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றி, 1997ஆம் ஆண்டு நடைபெற்ற கழகத் தேர்தலிலும் விருதுநகர் மாவட்டக் கழகச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் தங்க பாண்டியன். 1968ஆம் ஆண்டு முதல் 1980ஆம் ஆண்டுவரை சட்டமன்ற மேலவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றினார்.

தனது வாழ்வில் தொடக்கத்தில் ஆசிரியராகப் பணியாற்றியவர். கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்ற பெருமைக்கு உரியவர். நெருக்கடி நேரத்தில் மிசா கைதியாகவும் ஓராண்டு காலம் சிறையிலே இருந்தவர். தொடர்ந்து 23 ஆண்டு காலம் மாவட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றியவர் தங்கபாண்டியன். கழகம் சோதனைகளைச் சந்தித்த நேரத்தில், மனம் தளராது, சலனத்திற்கோ, சபலத்திற்கோ இடம் தராமல், இரும்பு இதயத்துடன் நின்று இயக்கத்தைக் காத்து என் பேரன்பிற்குப் பாத்திரமானவர்.

காரியாபட்டி ஒன்றிய பெருந்தலைவராகவும் - மல்லாங்கிணறு பேரூராட்சி மன்றத் தலைவராகவும் பொறுப்பேற்று பணியாற்றிய தங்கபாண்டியன் 1989ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1996ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலும் அருப்புக் கோட்டை தொகுதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1996ஆம் ஆண்டு மே 13ஆம் நாள் கழக அரசு பொறுப்பேற்ற நேரத்தில், எனது தலைமையிலான அமைச்சரவையில் கூட்டுறவுத் துறை அமைச்சராகத் தங்கபாண்டியன் பதவியேற்றார். பின்னர் வணிக வரித்துறை பொறுப்பு அவரிடம் தரப்பட்டது.

அவரது மறைவுச் செய்தியறிந்த நான் பெரிதும் அதிர்ச்சியடைந்தேன். அமைச்சர்கள் ஆர்க்காடு வீராசாமியையும், துரைமுருகனையும் அழைத்துக் கொண்டு அந்த மாவீரனுக்கு இறுதி அஞ்சலி செலுத்த மல்லாங்கிணறு புறப்பட்டேன். ஆம், புறப்படுவதற்கு முன்பு - நான் என் கைப்பட எழுதிக் கொடுத்த கண்ணீர் அஞ்சலி இதோ:-

''என்னால் நம்பவே முடியவில்லை - என் தம்பி தங்கபாண்டியன் மறைந்து விட்டாராம்! அந்த இனிய முகம் - எதிரிகளிடமும் கனிவைப் பொழியும் அந்தக் கள்ளம் கபடமற்ற புன்னகை - என்னை ''அண்ணே'' என்றழைக்கும்போது பொங்கும் பாசம் - இத்தனைக்கும் மேலாக அந்தத் தம்பிக்கு இருந்த கொள்கை உறுதி - இலட்சிய உணர்வு - தியாக மனப்பான்மை - என் குடும்பத்தில் ஒருவராக ஒன்றிவிட்ட பாங்கு - இவற்றை யெல்லாம் எப்படி மறக்க முடியும் என்னால்? விருதுநகர் மாவட்டச் செயலாளர் பணியேற்று வீரமிகு பாண்டியனாகவும், அமைச்சர் பொறுப்பில் பத்தரை மாற்றுத் தங்கமாகவும் திகழ்ந்த தங்க பாண்டியனை இழந்து தவிக்கும் எனக்கும், யாருக்கும் ஆறுதல் கூறும் சக்தியில்லை. ஆற்றல்மிகு தளபதியின் இழப்பால் அதிர்ச்சியுற்று, மெல்ல மெல்ல மனத்தை ஆற்றிக் கொள்வோர், எனக்கும் ஆறுதல் கூறிட வேண்டுகிறேன். இனிய தம்பியின் மறைவால் வாடும்



சுதந்திரதினப் பொன்விழா பற்றி விவாதிக்க நடைபெற்ற உயர்மட்ட செயல்பாட்டுக் குழுக் கூட்டம்

குடும்பம்; அவர் குடும்பம் மட்டுமல்ல - இந்தக் கழகக் குடும்பமே கண்ணீர்க் கடலில் மிதக்கிறது.''

- என்று குறிப்பிட்டிருந்தேன்.


செத்தும் கொடுத்தான் சீதக்காதி என்பார்களே, அதைப்போல என் தம்பி தங்க பாண்டியன் மறைந்து விட்டாலும், இந்தக் கழகத்திற்காக தொடர்ந்து உழைத்திட தன் அன்புச் செல்வங்களை அர்ப்பணித்து, அவர் மகன் **தங்கம் தென்னரசும்**, மகள் **தமிழச்சியும்** இப்போது கழகத்திலே முக்கிய பொறுப்புகளிலே இருந்து பணியாற்றி வருகிறார்கள்.

1.8.1997 அன்று பகல் *12* மணி அளவில் நான் மல்லாங்கிணறு சென்றடைந்தேன். கழகத்தின் முன்னணியினர் அத்தனை பேரும், ஏன் - அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் அங்கே குழுமியிருந்து அந்த மாவீரனுக்கு தங்கள் அஞ்சலியைச் செலுத்தினர். தங்கபாண்டியனின் குடும்பத்திற்கு ஆறுதல் சொல்லும் நிலையிலே நானில்லை - காரணம் எனக்கே அதற்கு மற்றவர்கள் தேவைப்பட்டனர். அமைச்சர் என்ற முறையில் அரசு மரியாதையுடன், அவரது உடல் தேசியக் கொடி போர்த்தப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது.

★ ★ ★

தங்கபாண்டியனின் இறுதி நிகழ்ச்சியில் கலந்து கொண்டுவிட்டு, சென்னை திரும்பியதும், *1997*ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரம் பெற்ற ஐம்பதாண்டு என்ற வகையில்

சுதந்திரத் திருநாள் பொன் விழாக் கொண்டாட்டங்கள், மற்றும் பொதுமக்களுக்கு நிலையான பயன்தரத்தக்க திட்டங்கள் நிறைவேற்றுவது தொடர்பாக உயர்மட்டச் செயல்பாட்டுக் குழு ஒன்று உருவாக்கப்பட்டு - அந்தக் குழுவின் கூட்டம் 4.8.1997 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்றதில் கலந்து கொண்டேன். என்னுடைய தலைமையில் நடைபெற்ற அந்தக் கூட்டத்தில் அமைச்சர்கள் பேராசிரியர், கோ.சி. மணி, முனைவர் மு.தமிழ்க்குடிமகன், முல்லை வேந்தன், சமயநல்லூர் செல்வராஜ், தலைமைச் செயலாளர் கே.ஏ.நம்பியார், மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகளான எஸ்.நாராயணன், பி.வி.ராஜா ராமன், எஸ்.பி.இளங்கோவன், கௌரிசங்கர் எஸ்.மாலதி, வை.பழனிச்சாமி, கிறிஸ்துதாஸ் காந்தி, எஸ்.இராஜரத்தினம், டி.சபிதா, வி.கே.ராஜகோபாலன், நந்த கிஷோர், அதுல்ய மிஸ்ரா, அஷோக்வர்தன் ஷெட்டி, ஆர்.சிவகுமார், கே.இராமலிங்கம், தெய்வமணி, கே.கே.ராஜசேகரன் நாயர், தேவராஜ் - ஆகியோர் கலந்து, கொண்டனர்.



சுதந்திர தினப் பொன்விழாவை யொட்டி சென்னை கோட்டையில் தேசியக் கொடியை ஏற்றி, வணக்கம் செலுத்தினேன்.

பொன் விழா ஆண்டினையொட்டி நடைபெறும் கொண்டாட்டங் களுடன் தமிழகத் தைப் பொறுத்த வரை மலைவாழ் மக்கள், ஆதி திராவிட மக்கள், மற்றும் பொருளா தாரத்தில் பின் தங்கிய மக்களுக்கு நிரந்தரப் பயன்தரத்தக்க நிலையான பின்வரும் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதென்று முடி வெடுக்கப் பட்டது.

சுதந்திரத் திருநாள் பொன்விழா வினையொட்டி ஆதிதிராவிட மக்கள் உட்பட அனைத்துச் சமூகத்தினரும் நல்லிணக்கத்தோடு சமத்துவமாக ஒரே குடியிருப்பில் ஒற்றுமையாக வாழும்

வகையில், தலா 100 வீடுகளைக் கொண்ட 50 குடியிருப்புகள் தமிழகம் முழுவதும் ''சமத்துவபுரம்'' என்ற பெயரால் உருவாக்கப்படும். இந்த அறிவிப்பின் தொடர்ச்சியாகத்தான், தமிழகத்திலே இன்று 145 இடங்களில் பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் அமைந்துள்ளன. இந்த நிதியாண்டிலேகூட மேலும் 29 சமத்துவ புரங்களை அமைத்திட முடிவெடுக்கப்பட்டுள்ளதும் நினைவில் கொள்ளத் தக்கது.

டெல்லியிலே அந்த ஆண்டு நடைபெற்ற சுதந்திரப் பொன்விழாவின் தேசிய அணிவகுப்பில் பங்கேற்பதற்காக தமிழகத்திலிருந்து 50 விடுதலைப் போராட்ட வீரர்களைத் தமிழக அரசே தனது செலவில் அழைத்துச் சென்றிடுவதற்கான ஆணையினை அரசின் சார்பில் பிறப்பித்தேன்.

அவர்களை வழியனுப்பும் வகையில் 11.8.1997 அன்று சென்னை ராஜாஜி மண்டபத்தில் அவர்களுக்கெல்லாம் தேநீர் விருந்தளித்து, நானே கதராடை அணிவித்து மரியாதை செய்தேன். டெல்லி சென்ற தியாகிகளை டெல்லியில், மத்திய அமைச்சர் டி.ஆர்.பாலு வரவேற்று அவர்கள் தங்குவதற்கான அனைத்து உதவிகளையும் செய்தார். டெல்லியிலே நடைபெற்ற சுதந்திரப் பொன் விழா அணிவகுப்பிலே மகிழ்ச்சியோடு பங்கேற்ற பின்னர், அந்தத் தியாகிகள் தமிழகம் திரும்பினார்கள். திரும்பிய பிறகு என்னையும், கழக அரசையும் பெரிதும் பாராட்டி, அந்த தியாகிகள் நீண்ட அறிக்கை ஒன்றையும் வெளியிட்டார்கள். குறிப்பாக, ''சுதந்திரப் போராட்டத் தியாகிகளை மதிப்பதில் முதல்வர் கலைஞருக்கு ஈடானவர் எவருமில்லை'' என்று தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்திருந்தனர்.

பொன் விழா நிகழ்ச்சியின் தொடர்ச்சியாக 14.8.1997 அன்று மாலையில் நேரு விளையாட்டரங்கில் மாநில விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளின் தொடக்க விழாவும் நடைபெற்றது. அதே இடத்தில் அன்று மாலை 5 மணி அளவில் 50 நாதசுர மற்றும் 25 தவில் இசைக் கலைஞர்களின் இசை நிகழ்ச்சியும் சிறப்பாக நடைபெற்றது.

தொடர்ந்து 1000 விளையாட்டு வீரர்கள், மற்றும் மாணவ மாணவியரின் அணி வகுப்பும் நடைபெற்றது. இரவு 7 மணி அளவில் பிரபல பாடகர்கள் கலந்து கொண்ட தேசிய பாடல்கள் பாடும் நிகழ்ச்சியும் நடை பெற்றது. 7.30 மணியிலிருந்து இரவு 10.30 மணிவரை பிரபல திரைப்பட இசை அமைப்பாளர்கள் மற்றும் திரைப்பட பாடகர்கள் சுமார் 125 பேர்கள் கலந்து கொண்ட இசை நிகழ்ச்சியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



இந்திய சுதந்திரப் பொன்விழாவை முன்னிட்டு நடைபெற்ற மாநில விளையாட்டுப் போட்டிகளின் தொடக்க விழாவில் விளையாட்டுச் சுடரை தடகள வீரர்களிடம் வழங்கினேன்.

அந்த விழாவில் நானும் ஆளுநராக இருந்த **பாத்திமா பீவி** அவர்களும் கலந்து கொண்டு, விளையாட்டு வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்று- தேசிய விளையாட்டுப் போட்டிகளில் தங்கம் வென்றவர்களுக்கு விருதுகள் வழங்கிச் சிறப்பித்தோம். மேலும் கல்வி அமைச்சர் **பேராசிரியர்,** மேயர் **மு.க. ஸ்டாலின்** ஆகியோரும் விழாவில் கலந்து கொண்டனர்.

15.8.1997 அன்று காலை 8.30 மணிக்கு சென்னை கோட்டைக் கொத்தளத்தில் தேசியக் கொடியினை ஆயிரக்கணக்கில் குழுமியிருந்த பொது மக்கள் முன்னிலையில் ஏற்றி வைத்து, விடுதலை நாள் விழா உரையினை ஆற்றினேன். அதன்பின் முதுபெரும் சுதந்திரப் போராட்ட தியாகி **செங்கல்வராயன்** உட்பட, 50 சுதந்திரப் போராட்ட




பொன்விழா மேடையில் ஆளுநர் பாத்திமா பீவியுடன் நான்

தியாகிகளுக்கு கதராடைகள் அணிவித்து, பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கி கௌரவித்தேன். சுதந்திரப் பொன் விழாவினை முன்னிட்டு, 554 சிறைக் கைதிகள் விடுதலை செய்யப் பட்டார்கள். 3300 சிறைக் கைதிகளுக்கு தண்டனைக் குறைப்பு சலுகைகள் வழங்கப்பட்டன.

★ ★ ★

சுதந்திரத் திருநாள் பொன் விழாவை முன்னிட்டு, 31.8.1997 அன்று **தீண்டாமை ஒழிப்பு மாநாடு** என்னுடைய தலைமையில் மதுரையில் நடைபெற்றது. தமுக்கம் மைதானத்தில் நடைபெற்ற அந்த மாநாடு, த.மா.கா. தலைவர் **ஜி.கே.மூப்பனார்,** பேரவைத் தலைவர் **பி.டி.ஆர்.பழனி வேல்ராஜன்,** ஆகியோர் முன்னிலையிலே நடைபெற்றது.

மதுரை தமுக்கம் மைதானம் அன்றைய தினம் மக்கள் வெள்ளத்தால் நிரம்பி வழிந்தது. மைதானத்தில் இடம் இல்லாமல் வெளியேயும் ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தனர். அந்த மாநாட்டில் பா.ஜ.க. சார்பில் கோபால், மேயர் குழந்தைவேலு, குமரி அனந்தன், இளைய பெருமாள், சரோஜினி வரதப்பன், வை.பாலசுந்தரம், பேராசிரியர் தீரன், ஜி.கே.மூப்பனார், அப்துல் லத்தீப், ஆர்.எம்.வீரப்பன், அப்துல் சமத், கே.வி. தங்கபாலு, ஜி.ஏ.வடிவேலு, மதுரை பேராயர் ஆரோக்கியசாமி, குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், ஆர்.



சுதந்திரப் பொன்விழாவில் விளையாட்டு வீரர்களின் அணிவகுப்பு

நல்லக்கண்ணு, என்.சங்கரய்யா, எதிர்க்கட்சித் தலைவர் சோ. பாலகிருஷ்ணன், பேரவைத் தலைவர் பி.டி.ஆர்.பழனிவேல் ராஜன், கல்வி அமைச்சராக இருந்த பேராசிரியர் - ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். அதன் பிறகு நான் உரையாற்றினேன். அமைச்சர் சமய நல்லூர் செல்வராஜ் நன்றி கூறினார்.

மாநாட்டின் துவக்கத்தில் நான் தீண்டாமை உறுதி மொழியைப் படிக்கப் படிக்க கூடியிருந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் எழுந்து நின்று அந்த உறுதி மொழியை அவர்களும் வழி மொழிந்து ஏற்றுக் கொண்டனர். அந்த உறுதி மொழி வருமாறு:-

''இந்திய அரசியல் அமைப்பின்பால் இடைவிடாது உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான் நமது அரசியல் அமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பது அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு எவர்மீது சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று இதனால் உளமார உறுதி அளிக்கிறேன். அரசியல் அமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சாதி, சமய வேறுபாடற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும்.

''மேலும் தீண்டத்தகாதவர்கள் என்ற கொடுமைக்கு ஆளாகியுள்ள மக்களிடையே காணப்படும் தீண்டாமை



தியாகி செங்கல்வராயன் உட்பட 56 தியாகிகளுக்கு கதராடை அளித்து, பொறிகிழி வழங்கினேன்.

உணர்வையும் போக்குவது நமது சமூகக் கடமை என்பதையும் உணர்ந்து செயல்படுவேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப் பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக் காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமார உறுதி அளிக்கின்றேன்.''

விழாவிற்கு முன்னிலை வகித்த அருமை நண்பர், மக்கள் தலைவர் மூப்பனார் அவர்கள் பேசும்போது - ''சாதி மத வேறுபாடுகளைக் களைந்திட - தீண்டாமைக் கொடுமையை ஒழித்திட - தமிழக அரசு எடுக்கும் முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்பு அளித்திடுவோம் - இந்த நல்ல முயற்சியை எடுத்துள்ள முதல்வர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் நாம் எல்லோரும் துணை இருக்க உறுதி எடுத்துக் கொள்வோம்'' என்றும் கூறினார்.

அதே நாள் காலையில், மத நல்லிணக்கத்தையும், ஒற்றுமையையும் வலியுறுத்தி மதுரையில் **மனிதச் சங்கிலி, சமபந்தி விருந்து** போன்ற நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அரசு விடுத்திருந்த அழைப்பை ஏற்று அந்த மனிதச் சங்கிலியில் ஆயிரக் கணக்கான பொதுமக்கள், பல்வேறு அரசியல் கட்சியினர், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியர், என்.சி.சி. என்.எஸ்.எஸ். மாணவர்கள், கலந்து கொண்டனர். திருப்பரங்குன்றம் அருகே மனிதச் சங்கிலியை



கொள்கை உறுதி - இலட்சிய உணர்வு - தியாக மனப்பான்மை கொண்ட தம்பி தங்கபாண்டியனின் இறுதி ஊர்வலம்

காலையில் நான் துவக்கி வைத்தேன். திருப்பரங்குன்றத்தில் துவங்கி புதூர் வரையில் மனிதச் சங்கிலியை ஒன்றரை மணி நேரம் நான் பார்வையிட்டேன். திருப்பரங்குன்றம் காவல் நிலையம் அருகிலும், மதுரை கல்லூரி அருகே உள்ள மேம்பாலத்திலும், கோரிப்பாளையத்திலும் காரைவிட்டு இறங்கி, மனிதச் சங்கிலியில் நான் பங்கேற்றேன். திருப்பரங்குன்றம் சன்னதித் தெரு, பசுமலை, பழங்கானத்தம் மேம்பாலம், பெரியார் பேருந்து நிலையம், சிம்மக்கல், வைகை மேம்பாலம், கோரிப் பாளையம், புதூர் வரை மனிதச் சங்கிலி 13 கிலோ மீட்டர் தூரத்திற்கு நீண்டிருந்தது.

அப்போதைய சட்டப் பேரவைத் தலைவர் பி.டி.ஆர். பழனிவேல்ராஜன், பேராசிரியர் அன்பழகனார், பொன்முடி, ரகுமான்கான், தமிழ்க் குடிமகன், பொங்கலூர் பழனிச்சாமி, முல்லைவேந்தன் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்கள் இலக்கியச் செல்வர் குமரி அனந்தன், அப்துல் சமது, அப்துல் லத்தீப், ஆர். நல்லக்கண்ணு, அய்யணன் அம்பலம், ஜி.ஏ. வடிவேல், சந்தானம், வல்லரசு உள்ளிட்ட பல தலைவர்கள் அந்த மனிதச் சங்கிலியில் கலந்து கொண்டனர். பெரியார் பேருந்து நிலையம் அருகே மு.க.அழகிரி, மேயர் குழந்தைவேலு, வேலுச்சாமி, சிவராமன் ஆகியோருடன் கட்சியினரும் மனிதச் சங்கிலியில் பங்கேற்று நின்றனர். பசுமலை அருகில் தி.மு.க. விவசாய அணி சார்பில் சட்டப்பேரவை உறுப்பினர் செ.ராமச்சந்திரன் தலைமையில் கட்சியினர் பங்கேற்றனர். அண்ணா சிலை அருகே ஐ.பெரியசாமி, சுந்தரம், துணை மேயர் பாண்டியன் ஆகியோரும் - சிம்மக்கல் அருகே ராம்பாபு எம்.பி., தெய்வநாயகம் எம்.எல்.ஏ., சி.பி.எம். கட்சியைச் சேர்ந்த மோகன், நன்மாறன், ஜான் மோசஸ் ஆகியோரும் -



மதுரையில் தியாகி கக்கன் சிலையை திறந்து வைத்தேன்.

கட்டபொம்மன் சிலை அருகே மதுரை காமராஜர் பல்கலைக் கழக ஊழியர்களும் - பசுமலை அருகே நடிகர் விஜயகாந்த், நடிகர் சந்திரசேகர், இயக்குநர் இராம.நாராயணன் ஆகியோரும் மனிதச் சங்கிலியில் பங்கேற்றனர்.

★ ★ ★

மதுரை ராஜா முத்தையா மன்றத்துக்கு எதிரே தியாகச் செம்மல் **கக்கன்** சிலையை அன்று காலையில் நான் திறந்து வைத்தேன்.

மதுரை மாநகரில் நடைபெற்ற இந்த விழாக்களில் மகிழ்ச்சியோடு கலந்து கொண்டு விட்டு சென்னை திரும்பிய இரண்டு நாட்களுக்குள், மற்றொரு துயரச் செய்தி வந்து சேர்ந்தது. தர்மபுரி மாவட்டக் கழக முன்னோடிகளில் ஒருவரும், தம்பி முரசொலி மாறனின் நெருங்கிய நண்பர்களில் ஒருவர், முன்னாள் நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினருமான கிருஷ்ணகிரி தம்பி கமலநாதன் - சில நாட்கள் உடல் நலம் குன்றியிருந்தவர் - சென்னையிலே தனியார் மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டிருந்தவர் 17.8.1997 அன்று சிகிச்சை பலனளிக்காமல் இயற்கை அடைந்தார்.



பல போராட்டங்களைச் சந்தித்த கமலநாதனின் மறைவுக்குக் கதறியழும் துணைவியார் காஞ்சனா கமலநாதன்

சென்னையிலே மறைந்த அவரது உடல் உடனடியாக அவருடைய சொந்த ஊரான கிருஷ்ணகிரிக்கு எடுத்துச் செல்லப் பட்டது. 1962-67ஆம் ஆண்டுகளில் ஊத்தங்கரை தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும் கமலநாதன் இருந்திருக்கிறார். நெருக்கடி காலத்தில் ஓராண்டு கால மிசா கொடுமையில் சிறையில் இருந்தவர். பல போராட்டங்களில் ஈடுபட்டும் சிறையிலே இருந்தவர். இவரது துணைவியார் **காஞ்சனா கமலநாதன்** கணவரது மறைவுக்குப் பிறகு தொடர்ந்து அவர் விட்டுச் சென்ற பணிகளைச் செவ்வனே ஆற்றி வருகிறார்.

அவர் மறைவு குறித்து நான் விடுத்த இரங்கல் செய்தியில்:-

''கழகத்திற்குக் கிடைக்கும் வெற்றிகளில் மகிழ்ந்து, வேதனை சோதனைகளில் நெஞ்சுறுதியுடன் நிமிர்ந்து நின்று, நெருக்கடி காலக் கொடுமையில் ஓராண்டுக் கால ''மிசா'' கைதியாக இருந்தபோதும் கலங்காமல், துவளாமல் இயக்கம் காத்து நின்ற என்னருமைத் தம்பி கமலநாதன் சில காலமாக உடல் நலிவுற்றிருந்து சிகிச்சை பலனளிக்காமல் மறைந்துவிட்ட செய்து தர்மபுரி மாவட்டக் கழகக் கண் மணிகளையும், என்னையும் ஆழ்ந்த துயரத்தில் வீழ்த்திய செய்தியாகும். சட்டமன்ற உறுப்பினராக - மாநிலங்களவை உறுப்பினராக அவர் ஆற்றிய பணியும் - கழகத் தலைமையிட்ட கட்டளைகள்



ஏற்று களங்கள் பலவற்றைக் கண்ட அவரது இலட்சியப் பற்றும் என்றுமே மறக்க முடியாதவை.

''அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தாருக்கும் குறிப்பாக சட்டப் பேரவை உறுப்பினர் காஞ்சனா கமலநாதன் அவர்களுக்கும் கழகத்தின் சார்பிலும் என் சார்பிலும் இரங்கல் தெரிவிக்கிறேன். ஓர் இனிய சகோதரனை மட்டுமல்ல - இலட்சிய வீரனையும் இழந்த நிகழ்ச்சி, இடிமேல் இடி ஆயிற்று எனக்கு!'' - என எழுதியிருந்தேன்.

கமலநாதனை இழந்த அடுத்த சில மணி நேரங்களில், கழகத்தின் முன்னாள் அமைப்புச் செயலாளரும், தென் ஆற்காடு மாவட்டத்தில் கழகத்தை வளர்த்த முன்னோடிகளில் ஒருவரும், மாவட்டக் கழகச் செயலாளராக செயலாற்றியவருமான விருத்தாசலம் செல்வராஜ் அவர்கள் மறைந்துவிட்டார் என்ற செய்தி கிடைத்தது. அவரும் உடல் நலமின்றி தனியார் மருத்துவமனையிலே சிகிச்சை பெற்று வந்தார். சிகிச்சை பலனின்றி 19.8.1997 அன்று இயற்கை அடைந்தார். செய்தி அறிந்ததும், நான் நேராக மருத்துவ மனைக்கே சென்று இறுதி அஞ்சலி செலுத்தினேன்.

நான் விடுத்த இரங்கல் செய்தியில் ''விருத்தாசலம் என்றாலே நமது இயக்கத்தினருக்கு முதலில் நெஞ்சில் நிழலாடும் பெயர்

விருத்தாசலம் செல்வராஜ் என்பது தான். சென்னை மருத்துவமனையில் அவரைக் கண்டு உடல் நலம் விசாரித்தபோது கூட அவர் மிகுந்த நம்பிக்கையுடன் தான் இருந்தார். அப்படித்தான் என் கரங்களைப் பிடித்துக் கொண்டு பேசினார். ஆனால் இன்று அவர் இல்லை. கழகம் வளர்த்த தூண்களில் ஒருவர் - களம் பல கண்டவர் - மிசா கொடுமையில் சென்னைச் சிறையில் சித்ரவதைகளைத் தாங்கிக் கொண்டவர்களில் ஒருவர் - சட்டமன்ற உறுப்பினராக இருந்தும், பல்வேறு நிர்வாகப் பொறுப்புக்களில் இருந்தும் மக்கள் பணியாற்றியவர் - மாசற்றவர் எனும் பெயர் பூண்டவர் - தலைமைக் கழகத்தில் இணை அமைப்புச் செயலாளராக இருந்து அரும் பணியாற்றி உடல் நிலை காரணமாக ஓய்வு பெற்றிருந்தவர் - இவ்வளவு விரைவில் நீண்ட ஓய்வு எடுத்துக் கொள்வார் என யாரும் எதிர் பார்க்கவில்லை. மறைந்துவிட்டார் - எனினும் அவரது ஆர்வமிக்க இயக்கத் தொண்டு காரணமாக என்றென்றும் நமது நெஞ்சில் நிறைந்து விட்டார்'' என்று எழுதியிருந்தேன்.

25. அன்னை தெரசாவும், அன்னக்கிளி டயானாவும்!

21.8.1997 அன்று என்னுடைய அருமைச் செல்வி **கனிமொழிக்கும்** - தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை **கோவிந்தசாமி** அவர்களின் செல்வன் **அரவிந்தனுக்கும்** கழகப் பொதுச் செயலாளர் **பேராசிரியர்** அவர்கள் தலைமையில், சென்னையில், ஆலிவர் சாலையில் இருந்த எனது இல்லத்திலேயே, என் மகளின் விருப்பத்திற்கிணங்க மிகவும் எளிமையாகத் திருமணம் நடைபெற்றது. த.மா.கா.தலைவர் **மூப்பனார்,** சட்டப்பேரவைத் தலைவர் **பி.டி.ஆர்.பழனிவேல்ராஜன்,** மற்றும் மத்திய, மாநில அமைச்சர்கள், கழக முன்னணியினர் மணமக்களை வாழ்த்தினர். பிரதமர் **குஜ்ரால்** தொலைபேசியில் என்னைத் தொடர்பு கொண்டு மணமக்களுக்கு வாழ்த்து தெரிவித்தார். சூப்பர் ஸ்டார் **ரஜினிகாந்த்,** தனது துணைவியாருடன் நேரில் வந்திருந்து மணமக்களுக்கு வாழ்த்து தெரிவித்தார்.

மணவிழாவினைத் தொடர்ந்து சில நாட்களுக்குள் மற்றொரு விழா.

''தினமலர்'' நாளேடு நடத்திய விழா.

தி.மு.க.வையும், தி.மு.கழக ஆட்சியையும் பொதுவாக எதிர்க்கின்ற ஏடு ''தினமலர்'' என்று கூற முடியாது. பொதுவாக எதிர்ப்புச் செய்திகளை அது யாரைப்பற்றி வேண்டுமென்றாலும் இருக்கும் - அத்தகைய செய்திகளை வெளியிடுவதில் அக்கறை கொண்ட ஏடு என்று வேண்டுமானால் கூறலாம். ஆட்சிக்கு எதிரான செய்திகள் அதிகமாக அந்த ஏட்டிலே இடம் பெறும். அதனால் அந்த ஏட்டினை நான் படிக்காமல் விட்டு விடுவதில்லை.



அன்னை தெரசாவை சந்திக்க டயானா சென்ற போது...

குறிப்பாக நான் திருச்சிக்கோ, மதுரைக்கோ, கோவைக்கோ செல்கிறேன் என்றால் - நான் அந்த ஊருக்குச் சென்றதும் ''தினமலர்'' நாளிதழை எடுத்துப் பார்ப்பேன். அதிலே ஒரு பக்கமோ, இரண்டு பக்கமோ எனக்காகவே ஒதுக்கப்பட்டிருக்கும். அந்தப் பகுதியிலே அரசின் எந்தெந்த திட்டங்களிலே தாமதம் - எதெதில் தவறு - எந்தப் பள்ளியிலே காம்பவுண்ட் சுவர் இல்லை - எந்த மருத்துவ மனையில் குடி தண்ணீர் இல்லை - என்பன போன்ற விவரங்களையெல்லாம் சேகரித்து, நான் அந்தப் பகுதிக்குச் செல்லும்போது என் கண்ணிலே படுகின்ற விதமாகப் பிரசுரம் செய்வார்கள். அதைப் படித்துவிட்டு நான் வருத்தப்பட வேண்டுமென்பதற்காக அதை வெளியிடுகிறார்களோ அல்லது என் கவனத்திற்கு அவை கொண்டு வரப்பட வேண்டுமென்பதற்காக வெளியிடுகிறார்களோ எனக்குத் தெரியாது. ஆனால் நான் அந்தப் பக்கத்தைப் படித்துவிட்டு அதற்காக வருத்தப் படுவதில்லை. அந்தத் தவறுகள் உடனடியாகக் களையப்பட வேண்டும் என்பதற்காக அந்தப் பத்திரிகைகளைப் படித்த மறு நிமிடமே தொடர்புடைய அதிகாரிகளையோ, அமைச்சர்களையோ தொடர்பு கொண்டு, அந்தத் தவறுகள் குறித்து விவரங்களைக் கேட்டு, அதனை ஏடுகளில் வெளியிடச் செய்வதுதான் வழக்கமாக இருந்து வருகின்றது.

மதுரைக்கு நான் ஒரு முறை சென்றிருந்த போது, என் மகன் மு.க.அழகிரி வீட்டிற்குப் போயிருந்தேன். அப்போது பத்திரிகைகளைப் பற்றிய பேச்சு வந்தது.



வீட்டிலேயே எளிமையாக என் புதல்வி கனிமொழி அரவிந்தன் திருமணம் நடைபெற்றது.

அப்போது அழகிரி, ''அப்பா, இதோ இருக்கிற ''எதிர்த்த'' வீடுதான் தினமலர் ஆசிரியரின் வீடு'' என்று சொன்னார். நான் உடனே ''**எதிர்த்த**'' என்றால் எதிரிலே இருக்கின்ற வீடு என்ற பொருளிலே சொல்கிறாயா? அல்லது பத்திரிகையிலே நம்மை ''**எதிர்த்த**'' என்ற பொருளிலே சொல்கிறாயா?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டேன்.

அந்த அளவிற்குத் தி.மு.கழகத்தை எதிர்க்கும் பத்திரிகைதான் தினமலர். தினமலர் நாளேடு எதிர்த்து செய்தி வெளியிட்டாலும் அதிலே அரசுக்கான அறிவுரை இருப்பதால், அந்தப் பத்திரிகை எதிர்ப்பதை நான் குற்றமாகக் கருதி விடவில்லை.

97ஆம் ஆண்டில் ஒரு முறை தினமலர் ஆசிரியர் **கிருஷ்ணமூர்த்தி** என்னைச் சந்திக்க நேரம் கேட்பதாகச் சொன்னார்கள். வரச் சொன்னேன். வந்தபோது ''**சங்க காலத் தமிழ் நாணயங்கள்**'' என்று தான் எழுதிய புத்தகத்தை நான் வந்து வெளியிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். நான்ஒப்புக் கொள்ள மாட்டேன் என்று கருதி அழைத்தாரோ என்னவோ? ஆனால் அவரே எதிர்பாராத அளவிற்கு அவர் தேதி கேட்டவுடன் நான் ஒப்புதல் தந்துவிட்டேன். அவ்வாறே அந்தப் புத்தகத்தின் வெளியீட்டு விழா *1.9.1997* அன்று நடைபெற்றது.

அந்த விழாவிலே பேசிய தொல்பொருள் ஆய்வாளர் **நாகசாமி** அவர்கள், ''பழைய நாணயமான பாண்டியனின் சின்னத்திலே **புலிச் சின்னம்** இருக்கிறது- முதலமைச்சர் கலைஞர் எப்படியாவது மத்திய அரசை வலியுறுத்தி கப்பல் படையின் கொடியில் புலிச் சின்னத்தைப் பொறிக்கச் செய்ய

வேண்டும்'' என்று வலியுறுத்தியதை நான் குறிப்பிட்டு, ''நாகசாமி வேண்டுமென்றே என்னை வம்பில் இழுத்துவிட வேண்டுமென்று இந்த வேண்டுகோளை வைத்துள்ளாரா?'' என்று கேட்டேன். அவருக்குப் புரியவில்லை. பின்னர் நான் விளக்கமளித்தேன். ''நான் மத்திய அரசை அணுகி புலிச் சின்னத்தை பொறிக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டால், உடனே இங்கேயுள்ள சிலர் ''பாருங்கள் - விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் என்பதால்தான் புலிச் சின்னத்தைக் கேட்கிறார்'' என்று அறிக்கை விடுவார்கள். ''அதற்காகத்தான் அதனைக் கேட்கச் சொல்கிறாரோ'' என்று நான் கூறியதும், அந்த மண்டபமே சிரிப்பில் ஆழ்ந்தது என் நினைவிலே இன்றும் உள்ளது. அந்த விழாவிலே கலந்து கொண்டு அந்த நூலைப் பற்றியும், நூல் ஆசிரியர் பற்றியும் நீண்ட நேரம் உரையாற்றினேன்.

அந்த நூல் வெளியீட்டு விழாவிற்கு முதல் நாள் நடைபெற்ற ஒரு விபத்துச் செய்தி அகில உலக முக்கியத்துவம் வாய்ந்த செய்தி. ஆம், 31.8.1997 அன்று அதிகாலையில் பாரிஸில் நடந்த ஒரு பயங்கர கார் விபத்தில் உலகப் புகழ் பெற்ற வேல்ஸ் இளவரசி டயானா இறந்தார். அப்போது அவருடைய வயது 36 தான். டயானாவுடன் அவரது நண்பர் டோடிபயதும், கார் டிரைவரும் அந்த விபத்தில் பலியானார்கள். புகழ் பெற்ற ஈஃபில் கோபுரத்துக்கு அருகில் உள்ள அல்மா சுரங்கப் பாதையில் இந்த விபத்து நடந்தது.

டயானாவும், டோடி பயதும் 30.8.1997 அன்று நள்ளிரவு பாரிசில் உள்ள ரிட்ஸ் ஓட்டலில் விருந்தை முடித்துக் கொண்டு, மெர்சிடஸ் காரில் புறப்பட்டனர். டோடிக்குச் சொந்தமான ஓட்டல் அது. கார் கிளம்பிய சில நிமிடத்துக்குள்ளாகவே பத்திரிகை புகைப்படக்காரர்கள் மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்தனர். காரின் பின் இருக்கையில் டயானா உட்கார்ந்திருந்தார். புகைப்படக்காரர்கள் பின் தொடர் வதைப் பார்த்ததும், கார் அதிவேகமாகப் பறந்தது. பான்ட் டி லால்மா பாலத்தின் குறுகிய சுரங்கப் பாதைக்குள் கார் நுழைந்தபோது டிரைவர் கட்டுப்பாட்டை இழந்தார். சுரங்கப்



ரஜினிகாந்த் தனது துணைவியாருடன் மணமக்களை வாழ்த்தினார்

பாதையின் நடுவில் இருந்த தூணில் படு வேகத்தில் கார் மோதியது. அதே வேகத்தில் சுழன்று வலது பக்கச் சுவரில் மோதிச் சிதறியது. டோடி பயதும், அவரது கார் டிரைவரும் அதே இடத்தில் இறந்தனர். குருதி வெள்ளத்தில் மிதந்த இளவரசி டயானா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மருத்துவர்கள் குழு இரண்டு மணி நேரம் போராடியது. ஆனால் டயானா பிழைக்கவில்லை. டயானா காரை விரட்டிய ஏழு புகைப்படக்காரர்களும் கைது செய்யப் பட்டனர்.

டயனாவின் சடலத்தை லண்டன் கொண்டு வர இளவவசர் சார்லஸ், டயானாவின் இரு சகோதரிகள் ராணுவ விமானம் மூலம் பாரீஸ் சென்றனர். அலங்கரிக்கப்பட்ட சவப்பெட்டியில் டயானாவின் சடலம் வைக்கப்பட்டு ராணுவ விமானம் மூலம் லண்டனில் உள்ள நார்தோல்ட் ராணுவ விமான நிலையத்துக்குக் கொண்டு வரப் பட்டது. பிரிட்டிஷ் பிரதமர் டோனி பிளேர் அங்கு வநதிருந்தார். டயானா மரணச் செய்தியால் பிரிட்டன் முழுவதும் துயரில் மூழ்கியது. கைகளில் பூங்கொத்து - இரங்கல் வாசகம் எழுதிய அட்டைகளுடன் ஆயிரக்கணக்கானோர் லண்டனில் உள்ள டயானாவின் இல்லமான கென் சிங்டன் அரண்மனை முன் கூடினர். அவரது அகால மரணம் உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

டயானாவை பிரிட்டிஷ் இளவரசர் சார்லஸ் திருமணம் செய்து கொண்ட போது உலகமே அந்தத் தம்பதிகளை அதிசயத்துடன் பார்த்தது. சாமான்யராக இருந்து இளவரசியான டயானாவை கேமிரா கண்கள் பார்க்கும் போதெல்லாம் சரமாரியாகப் படம் பிடித்துத் தள்ளியிருக் கின்றன. பிரபலமாக இருப்பதால் வரும் பிரச்சினை

இவருக்கும் வந்தது. அவர்களது குடும்ப வாழ்க்கை காலப் போக்கில் கசந்து, டயானாவும், சார்லசும் 1996ஆம் ஆண்டு விவாகரத்து பெற்றனர்.

டயானாவின் அந்தரங்க வாழ்க்கையை வெளியிட்டு காசாக்க முயன்றன சில பிரிட்டிஷ் பத்திரிகைகள். அவரது விருப்பமின்றி அவருக்குத் தெரியாமல் எடுக்கப்பட்ட பல புகைப்படங்கள் பத்திரிகைகளுக்குத் தீனியாகின. யாருக்கும் கிடைக்காத படம் எடுத்தால், அதன் மூலம் ஏராளமான பணத்தைக் குவிக்கலாமே என்ற சில புகைப்படக்காரர்களின் சுயநல ஆசை டயானாவின் உயிரைக் குடிக்கக் காரணமாயிற்று. அனாதை இல்லங்கள், மருத்துவமனைக்கு நிதி திரட்டித் தருதல் - போன்ற பல்வேறு சேவைகளில் டயானாவிற்கு ஆர்வம் இருந்தது.

டயானாவின் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாகப் புரட்டினால், 1.7.1961 அன்று **ஆல்த்ராப் - துரை** தம்பதிகளுக்கு மகளாகப் பிறந்தவர்தான் டயானா பிரான்சஸ் ஸ்பென்சர். 1980ஆம் ஆண்டு கிண்டர் கார்டன் பள்ளியில் ஆசிரியையாகப் பணி புரிந்தபோது சார்லசுடன் காதல் மலர்ந்தது. 29.7.1981 அன்று இளவரசர் சார்லஸை மணந்தார். லண்டன் செயின்ட் பால்ஸ் கதிட்ரல் தேவாலயத்தில் நடந்த திருமணத்தை லட்சக்கணக்கான மக்கள் கண்டு களித்தனர். டயானாவைவிட சார்லஸ் 12 வயது மூத்தவர். 21.6.1982 அன்று வில்லியம் **ஆர்தர் பிலிப்பும்,** 15.9.1984 அன்று இரண்டாவது மகன் **ஹென்றி சார்லஸ் ஆர்பர்ட் டேவிட்டும்** பிறந்தார்கள்.

15.6.1992 அன்று **கமீலா** பார்க்கர் என்ற பெண்ணுடன் சார்லசுக்குத் தொடர்பு இருந்ததாகக் கூறி, டயானா தற்கொலை செய்து கொள்ள முயன்றார் என்று ஏடுகளில் செய்தி வெளிவந்தது. 25.8.1992 அன்று டயானாவும், அவரது காதலரும் ரகசியமாகப் பேசிய தொலை பேசி உரையாடலை ''சன்'' பத்திரிகை வெளியிட்டது. 9.12.1992 அன்று பிரிட்டிஷ் பிரதமர் **ஜான் மேஜர்** நாடாளுமன்றத்தில், அரச தம்பதியர்



தினமலர் ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி எழுதிய ''சங்க காலத் தமிழ் நாணயங்கள்'' என்ற நூலை வெளியிட்டேன்.


பிரிந்து வாழ்வார்கள் என்றும், ஆனால் **விவாக ரத்து** இல்லை என்றும் அறிவித்தார்.

12.1.1994 அன்று சார்லஸ் - கமீலா ஆகியோரின் காதல் ரசம் சொட்டும் தொலைபேசி உரையாடல்களை **''சன்''** பத்திரிகை வெளியிட்டது. *29.6.1994* அன்று சார்ல்ஸ் டி.வி. நிகழ்ச்சி ஒன்றில், மண உறவு முறிந்த பின்பு வேறொரு பெண்ணுடன் தான் உறவு கொண்டதாக ஒப்புக் கொண்டார்.

டயானாவிற்கும் அவரது குதிரையேற்றப் பயிற்சியாளர் **ஹெவிட்ஸ்க்கும்** ஐந்தாண்டுகளாகத் தொடர்பு உள்ளது என்று **அன்ன பாய்டர்லாக்** என்பவர் **''இளவரசியின் காதல்''** என்ற புத்தகத்தில் குறிப்பிட்டிருந்தார். *20.11.1995* அன்று தொலைக்காட்சி பேட்டி ஒன்றில் டயானா ஹெவிட்சுடன் உறவு இருந்ததாக ஒப்புக் கொண்டார். **பிரிட்டிஷ் மகாராணி எலிசபெத் சார்லசுக்கு,** டயானாவை விவாகரத்து செய்யும்படிக் கடிதம் எழுதினார். டயானா விவாகரத்துக்கு ஒப்புக் கொண்டார். *28.8.1996* அன்று முறையாக இருவரும் விவாகரத்து பெற்றனர். அதற்குப்பின் சரியாக ஓராண்டு காலம் மட்டுமே வாழ்ந்து *31.8.1997* அன்று பாரீசில் கார் விபத்தில் சிக்கி டயானா மறைந்தார்.

6.9.1997 அன்று டயானாவின் இறுதிச் சடங்கு நடைபெற்றது. அதற்கு முன்பு அவரது உடல் லண்டனில் உள்ள **செயிண்ட் ஜேம்ஸ்** அரண்மனையில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அங்கிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் இருந்த வெஸ்ட் மினிஸ்டர் கல்லறையில் டயானாவின் இறுதிச் சடங்கை நடத்த முதலில் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள வந்தவர்களின் எண்ணிக்கை *20* லட்சம் என்று


எதிர்பார்த்ததற்கு மாறாக 60 லட்சத்திற்கும் மேல் பெருகிவிட்ட காரணத்தால், வருகின்ற கூட்டத்தை ஒரு கிலோ தூரத்திற்குள் கட்டுப்படுத்த இயலாதென அறிந்து, செயின்ட் ஜேம்ஸ் அரண்மனையிலிருந்து இறுதி ஊர்வலம் புறப்படுவதற்குப் பதிலாக, டயானாவின் கிங்ஸ்டன் அரண்மனையிலிருந்து ஊர்வலம் புறப்பட முடிவு செய்யப்பட்டது.



இளவரசர் சார்லசை காதலித்து மணந்தார், டயானா

இங்கிலாந்து ராணி இரண்டாவது எலிசபெத் அவர்கள் மரபுகளை மீறி தொலைக்காட்சியில் தோன்றி டயானா மறைவுக்கு இரங்கல் தெரிவித்து உரையாற்றினார். இறுதி ஊர்வலத்தில் டயானாவின் இரு மகன்களான **வில்லியம், ஹாரி** இருவரும் நடந்தே வந்தனர். அவர்களுடன் இளவரசர் சார்லஸ், இளவரசர் **பிலிப்,** டயனாவின் சகோதரர் **ஸ்பென்சர் பிரபு** ஆகியோரும் நடந்து வந்தனர். டயானாவின் சவப்பெட்டி மீது அவருடைய இரண்டு மகன்களும், அவருடைய சகோதரரும் வைத்த மூன்று மலர் வளையங்கள் மட்டுமே வைக்கப்பட்டிருந்தன. அந்த மலர் வளையத்தில் **''மம்மி''** என்று எழுதப்பட்ட ஒரு அட்டை வைக்கப்பட்டது. உலகிலேயே மிக அதிகமாக புகைப்படம் எடுக்கப்பட்டவர் என்ற பெருமைக்குரிய டயனாவின் உடல் வெஸ்ட் மினிஸ்டர் தேவாலயத்திற்குக் கொண்டு வரப்பட்டு, அங்கு சிறப்பு வழிபாடு நடைபெற்றது.

புகழ் பெற்ற பாடகர் **எல்ட்டன் ஜான்** இரங்கல் கீதம் பாடினார். அப்போது இரண்டு மகன்களும் துக்கம் தாளாமல்



பிரமிப்பூட் டிய திருமண ஆடை

அழுதனர். அவர்களுக்கு ஸ்பென்சர் பிரபு ஆறுதல் கூறினார். பின்னர் அவரது உடல் காரில் வைக்கப் பட்டு, டயானாவின் ஸ்பென்சர் குடும்பத் துக்குச் சொந்தமான அல்தார்ப் பார்க் அமைந் துள்ள தீவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு நல்லடக்கம் செய்யப் பட்டது.

இந்த அளவிற்கு சீரோடும், சிறப்போடும் வாழ்ந்து இளம் வயதிலே டயானா மறைந்த நான்கு நாட்களுக்குள் இந்தியா வில் வாழ்ந்த புகழ் பெற்ற அன்னை தெரசாவின் மரணமும் நேர்ந்தது. அவரது வாழ்க்கை வரலாற்றையும் சற்று நினைவுகூர்வது இத்தொடருக்குப் பெருமை சேர்க்கும்.

5.9.1997 அன்று இரவு தூய்மை, தொண்டு இவற்றின் உறைவிடமாக வாழ்ந்தவரும், வெளிநாட்டில் பிறந்தவராக இருந்த போதிலும் சமுதாயத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு சேவை செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு கல்கத்தா நகரைத் தேர்ந்தெடுத்து, அங்கே நிறுவனம் ஒன்றை ஏற்படுத்தி, சுமார் 50 ஆண்டு காலம் சமூகத் தொண்டாற்றிய அன்னை தெரசா நெஞ்சு வலி காரணமாக இயற்கை எய்தினார். அவரது சமூக சேவையினைப் பாராட்டி, அவருக்கு உலகின் மிகப் பெரிய பரிசான நோபல் பரிசு 1979ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.

97ஆம் ஆண்டில் அவர் மறைந்ததைப் பற்றி இந்தத் தொடரில் எழுதும்போது வருங்கால இளைஞர் சமுதாயம்

அந்த அம்மையாரைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக அவரைப் பற்றி கொஞ்சம் விரிவாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

அன்னை மேரி தெரசா **யூகோஸ்லேவியாவில்** உள்ள ஸ்கோப்ஜி என்ற நகரில், 1910ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 26ஆம் நாள் பிறந்தார். 27ஆம் தேதி என்றும் ஒரு சிலரால் கூறப்படுகிறது. இவரது தந்தை **நிக்கோலாஸ் போஜாக் ஸ்யியு.** இவர் ஒரு கட்டிட ஒப்பந்தக்காரர். தாய் **ஆக்னெஸ் கோன்ஸ்ஹா போஜாக் ஸ்யியு.** இனிய குணம் படைத்தவர். எளிய பண்புகளுக்கு இருப்பிடமானவர். ஒரு தமையனும் - ஒரு அக்காவும் அவருக்கு உண்டு.

அன்னை தெரசா தன் தாயின்மீது மிகவும் அன்பு கொண்டவர். ''எங்கள் அன்னை பிறரை அன்பு செய்வது எப்படி என்று எங்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தார்'' என்று அன்னை தெரசா அவர்களே தன் தாயைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். தெரசா குழந்தையாய் இருந்தபோது அவரது பெயர் **ஆஞ்ஜெஸ்** மூன்று குழந்தைகளுடன் மகிழ்ச்சி வெள்ளத்தில் அந்தக் குடும்பம் வாழ்ந்து வந்தது. **ஆஞ்ஜெஸ்** என்றும் **அன்னை தெரசா** சிறு வயதிலே அழைக்கப்பட்டார்.

தெரசா 7 வயது சிறுமியாக இருந்தபோது, அவரது தந்தை மரணத்தைத் தழுவினார். அவருடன் இணைந்து வியாபாரம் செய்த நண்பர், நிறுவனத்தின் சொத்துக்களையெல்லாம் அபகரித்துக் கொண்டதால், விதவைத் தாயும், மூன்று குழந்தைகளும் நிராதரவான நிலையிலே இருந்தனர். தலைவனால் நிமிர்ந்து நின்ற வீடு, தலைவியின் ஆளுகையின்கீழ் வந்தது. குடும்பத்திற்கு வந்த துன்பம் சிறுமி ஆஞ்ஜெசைப் பெரிதும் பாதித்தது. சிறு வயதிலேயே ஆஞ்ஜெஸ் ஒரு புத்தகப் புழு. கல்வியில் படு சுட்டி. சிறு பிள்ளைகளைக் கூட்டி, அவர்களுக்கு மறை அறிவைச் சொல்லித் தருவதில் அலாதி பிரியம் கொண்டவர். இளம் வயதிலேயே எவருக்கும் உதவி செய்ய மறுக்காதவர்.



தனது புதல்வர்கள் ஆர்தர் பிலிப் - ஆல்ஃபர்ட் டேவிட் இருவருடன் டயானா

அவருக்கு 18 வயதாகும் போது, வீட்டை விட்டு வெளியேற வேண்டு மென்றும், ஏழைகளுக் காகத் தன் பணியை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டுமென்றும் முடிவு செய்தார். ஆஞ்ஞெஸ் வங்காளத்தில் உள்ள லொரேட்டோவுக்கு விண்ணப்பம் செய்தார். அயர்லாந்தில் உள்ள ராத்பர்மான் என்ற இடத்தில் இருக்கும் ஆதீனத்திற்கும் விண்ணப் பம் செய்தார்.

'வங்காளத்திற்கு வரலாம்' என்று உடனடி யாக பதில் கிடைத்தது. 26.9.1928 அன்று தாயா ரோடும், சகோதரி யோடும் ஸ்கோப்ஜியை விட்டு சாக்ரெப் போக புகைவண்டியில் ஏறினார்கள். உறவினர்களும், நண்பர்களும் திரண்டிருந்து வழியனுப்பி வைத்தனர். சாக்ரெப்பில் சில நாட்கள் தங்கி விட்டு - அங்கிருந்து புறப்பட்டபோது, தாயாரும், சகோதரியும் பிரியாவிடை கொடுத்தனர். ஆஞ்ஞெஸின் இதயம் வலித்தது. கண்களில் கண்ணீர் பெருகியது. சாக்ரெப் புகை வண்டி நிலையத்தில் அவரது தாயார் விடை பெற்ற போது, இருவருக்குமே அதுதான் ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்ளும் இறுதிப் பார்வை என்று தெரியாது.

அன்னை தெரசா இடையில் டப்ளினில் ராதர்பர்மான் என்ற இடத்தில் இருந்த லொரேட்டோவில் விருப்ப நிலையில் இரண்டு மாதங்களைக் கழித்துவிட்டு, 1928ஆம் ஆண்டு நவம்பரில் கப்பல் வழியாக இந்தியாவுக்குப் புறப்பட்டார்.

ஏழு வாரப் பயணத்திற்குப் பின் பம்பாயில் இறங்கி, அங்கிருந்து புகைவண்டி மூலமாக கல்கத்தாவில் சில நாட்கள் தங்கிவிட்டு - 16.1.1929 அன்று டார்ஜிலிங்கில் உள்ள லொரேட்டோ பயிற்சியகத்திற்கு அனுப்பப்பட்டார். கல்கத்தாவிற்கு வடக்கே 400 மைல் தூரத்தில் உள்ள **கஞ்சன் ஜங்கா** என்ற இடத்தில் தான் அன்னஐ தெரசா துறவற வாழ்வைப் பற்றிய பாடங்களையும், பயிற்சியையும் பெறும் சீடரானார்.

1931ஆம் ஆண்டு மார்ச் மாதம், சகோதரி ஆஞ்ஸ் தன் பெயரை மாற்றி **தெரசா மார்டின்** என்ற பிரான்ஸ் நாட்டுச் சகோதரியின் பெயரையே தன் பெயராக்கிக் கொண்டார். அந்தத் தெரசா மார்டின் அயல்நாடுகளில் மறைபணி புரியும் தொண்டர்களுக்காகப் பாடுபட்டவர். 24 வயதிலேயே காச நோய்க்குப் பலியானவர். இருவருக்கும் பெயரில் குழப்பம் வந்து விடக் கூடாது என்பதற்காக ஆஞ்ஸ், **'வங்காள தெரசா'** என்று அழைக்கப்பட்டார்.

கல்கத்தாவின் புறநகர் பகுதியான என்தல்லியில் உள்ள மரியன்னை பள்ளியில் ஆசிரியர் பணி புரிய அன்னை தெரசா அனுப்பப்பட்டார். அங்கே 17 ஆண்டுகள் பணியாற்றினார். அவரிடம் படித்த மாணவிகள், ''அன்னை தெரசாவின் வகுப்புகள் அலுப்பும், சோர்வும் தராது - எப்போதும் உயிர்த்துடிப்புடனும், ஆர்வமுடனும் இருக்கும்'' என்று தெரிவித்தனர்.

அன்னை தெரசா பாட்னாவில் மருத்துவமனை ஒன்றில் தொண்டாற்றிக் கொண்டிருந்த போது, பெற்ற மருத்துவ அறிவும், அனுபவமும் நீங்கலாக பொழுது போக்கு நேரங்களில் அவருடன் பணிபுரிந்த சகோதரிகளுடன் தன் புதிய திட்டங்களைப் பற்றி விரிவாகப் பேசி, அவர்களின் கருத்துக்களைக் கேட்டார்.

சகோதரிகளுடன் அவர் நடத்திய அந்தக் கருத்துப் பரிமாற்றம், அன்னை தெரசா துவக்கத்தில் கொண்டிருந்த சில கருத்துக்களை விட்டுக் கொடுக்க வழி வகுத்தது. தன்னுடைய

சபையைச் சேர்ந்த சகோதரிகள் ஏழைகளைப் போல வெறும் சோற்றில் உப்பு மட்டும் போட்டுச் சாப்பிட வேண்டும் என்ற கருத்தை மாற்றிக் கொள்ள வேண்டுமென்று, மற்றவரைத் தாக்கும் நோய்களைக் குணப்படுத்தும் பணியிலே ஈடுபடும் சகோதரிகள், அந்த நோய்க்குப் பலியாகாமல் இருக்க வேண்டுமென்றால், அவர்கள் நல்ல சத்தான உணவுப் பொருட்களைத்தான் சாப்பிட வேண்டுமென்றும், உணவு எளிமையாக இருந்தாலும், அது சத்துள்ளதாக இருக்க வேண்டுமென்றும், மேலும் சகோதரிகளுக்குப் போதுமான ஓய்வும் தேவை- வாரத்திற்கு ஒரு நாள் பணியிலிருந்து முழு ஓய்வு கட்டாயம் தேவை - ஆண்டிற்கொரு முறை சகோதரிகள் பணித்தளம் மாற்றம் செய்யப்படுவது விரும்பத்தக்கது என்றும், தெருக்களில் பணிபுரியும் எந்தச் சகோதரியும் தன்னுடைய உடல் நலத்தில் மிகவும் அக்கறை செலுத்த வேண்டுமென்றும், ஒவ்வொருவருக்கும் குறைந்தபட்சம் மூன்று புடவைகள் தேவைப்படும் என்றும், ஒன்று அணிவதற்கு - மற்றொன்று துவைத்துப் போட - இன்னொரு அவசரத் தேவைகளுக்கும், விசேஷ வைபவங்களுக்கும் என்றும் கருத்து தெரிவித்தார்.

பங்கு குருவாகப் பணியாற்றிய அருட் தந்தை **ஜூலியன் ஹென்றி** அவர்கள் சேரிப் பணியைத் தொடங்கிய போது, அந்தக் குழுவில் பணி யாற்றிய அன்னை தெரசா விற்கும் முதல் சேரிப் பணி தொடங் கியது. அருட் தந்தை **வான் எக்சம்** அவர்கள், அன்னைக்குத் தொடக்கம் முதல் ஞான குருவாக விளங்கினார்.



பிரிட்டிஷ் அரசி எலிசபெத்துடன் டயானா

1948ஆம் ஆண்டு நவம் பரில் **பாட்னாவிற்கு** வந்த தந்தை வான் எக் செம் அவர்களைச் சந்தித்த அன்னை தெரசா, தான் மீண்டும் கல்கத்தா விற்குத் திரும்ப வேண்டு மென்று கேட்டுக் கொண்டார். ஒப்புதல் கிடைத்து - நான்கு மாத இடைவெளிக்குப் பின் கல்கத்தா திரும்பிய அன்னை தெரசா **புனித சூசையப்பர் இல்லம்** என்ற புனிதமான இடத்தில் தங்கினார்.

டிசம்பர் 20ஆம் நாள் அன்னை முதல் முறையாக **மோத்திஜில்** குடிசைப் பகுதிக்குள் நுழைந்தார். அங்குள்ள பிள்ளைகளின் பெற்றோரைத்தான் அன்னை தெரசா முதல் நாள் சந்தித்தார். அங்கே ஒரு பள்ளி வரப்போகிறது என்பதை அறிந்த மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். அதற்குப் பள்ளியை நடத்திட கட்டிடமோ, கூரை வீடோ கூட அங்கே கிடைக்கவில்லை. அதனால் அன்னை சோர்வடைந்து விடவில்லை. சிறுவர்கள் பயன்படுத்துவதற்கான சிலேட்டுகளை வாங்கக்கூட அன்னையின் கையில் காசு கிடையாது. அன்னை இரண்டாம் நாள் அந்த இடத்திற்கு வந்தபோது, அங்கே அவரது வருகைக்காக ஐந்து பிள்ளைகள் காத்திருப்பதைக் கண்டார். பெரு மகிழ்ச்சி அடைந்தார். அங்கே மரத்தடி நிழல் மட்டுமே திறந்த இடமாக இருந்தது. அந்தத் தரையிலேயே கோடு கிழித்து, அங்கே தன் பணியினைத் தொடங்கி விட்டார், அன்னை தெரசா.

தான் செய்த பணிகள் பற்றிய விவரங்களைத் தொகுத்து புத்தக வடிவில் அன்னை தெரசா வைத்திருந்தார். ஒரு நாள் காலையில் அன்னை தெரசா **சியல்தாவில்** உள்ள பங்கு குருவைப் பார்க்கப் போயிருந்தார். அன்னை செய்து வரும் பணிகளைப் பற்றிக் கேட்டறிந்த அவர் அதற்காக மகிழ்ச்சி அடைந்தபோதிலும், உதவி செய்யவோ, உற்சாகம் அளிக்கவோ முன் வரவில்லை. பிறகு **பார்க் சர்க்கஸ்** கோயிலுக்குச் சென்று அங்கிருந்த பங்கு குருவை அன்னை சந்தித்தார். முன் சொல்லப்பட்டவருக்கு முற்றிலும் மாறாக இவர் அன்னையைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்ததோடு,

அவரை ஊக்குவிக்கும் வகையில் 100 ரூபாய் பணம் கொடுத்தார்.

அந்தப் பணம் கைக்குக் கிடைத்ததும், அன்னை நேரத்தை வீணாக்காமல், பள்ளிக்கான ஓர் இடத்தைக் கண்டு பிடித்தார். இரண்டு அறைகள் -அறை ஒன்றுக்கு ஐந்து ரூபாய் வாடகை. ஒரு அறையில் பள்ளிக்கூடம் - மற்றொரு அறையில் மருந்தகம். மாணவர்களின் எண்ணிக்கை 21ஆக உயர்ந்தது. அவர்கள் சுத்தமாக இல்லை. பாடம் சொல்லிக் கொடுப்பதற்கு முன் அன்னை தெரசா அந்த மாணவர்களையெல்லாம் நன்கு தேய்த்துக் குளிக்கச் செய்தார். சமூக சேவை மனம் உடையவர்கள் மூலம் விரைவிலேயே புத்தகங்களும், பலகைகளும் வந்து சேர்ந்தன. மக்களும் சில பல பொருட்களைக் கொடுத்து உதவினர். பணமும் கொடுத்தனர்.

அன்னையின் உதவிக்காக மூன்று ஆசிரியைகள் வந்தனர். அதற்குள் மாணவர்களின் எண்ணிக்கை 46ஆக உயர்ந்துவிட்டது. இதற்கிடையே மகளிருக்காக தையல் வகுப்புகளையும் தொடங்கினார். தான் தொடங்கிய பள்ளிக்கு **''நிர்மல் இர்தே''** என்று பெயரிட்டார் அன்னை தெரசா.

அன்னை தெரசா தனது இரண்டாவது பள்ளியை **திவ்ஜாலா** பகுதியிலே ஆரம்பித்தார். வீடு வீடாகச் சென்று பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பும்படிக் கெஞ்சியதாகவும், மாதம் நான்கு ரூபாய் வாடகைக்கு இடம் கிடைத்ததாகவும், அந்தப் பள்ளியையே மருந்தக மாகவும் பயன்படுத்திக் கொண்டதாகவும் தெரசா எழுதி வைத்துள்ளார்.



டயனாவின் உயிரைக் குடித்த - விபத்தில் சிக்கிய கார்

பாட்னாவிலிருந்து அன்னை திரும்பிய திலிருந்து மடம் திறப்பதற் காக ஒரு நல்ல இடத்தைத் தேடிக் கொண்டிருந்தார்.

கிடைத்த இடங்கள் எல்லாம் தவிர்த்துக் கொண்டே போயின. இறுதியாக பார்க் சர்க்கஸ் தெருவில் ஒரு இடத்தைக் கண்டுபிடித்தார். அந்த இடம் நகரத்திற்கு வெகு தூரத்தில் இருந்த போதிலும், வசதியாக இருந்ததால், அங்கேயே மடத்தைத் திறந்து விடலாம் என்று எண்ணிக் கொண்டிருந்தபோது, அந்த இடத்தின் உரிமையாளர் தன் மனதை மாற்றிக் கொண்டு விட்டார். அதைப் பற்றி மனம் நொந்து அன்னை தெரசா எழுதிய குறிப்பு வருமாறு:-

"பார்க் சர்க்கஸ் தெருவில் உள்ள வீட்டின் முதலாளியைப் பார்க்கப் போனேன். ஆனால் அந்த மனிதர் வரவே இல்ல. ஒருவேளை அந்த இடம் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது என்று நான் அவருக்கு முன் கூட்டியே வெளிப்படுத்தியதாலோ என்னவோ, அவர் வரவில்லை. நாம் ஆண்டவன் **இயேசு,** தன் சிலுவையின் வறுமையால் என்னையும் மூடி மறைக்க வேண்டுமென்று விரும்புகிறார். எவ்விதப் பற்றும் இல்லாதவராக என்னை உருவாக்க விரும்புகிறார். ஆனால் இன்று நல்ல பாடத்தைக் கற்றுக் கொண்டேன். வீடு தேடி நான் சுற்றி அலைந்தபோது, என் கால்களும், கைகளும் வலி எடுக்கத் தொடங்கின. வீடும், உணவும் தேடி அலையும் ஏழைகளின் உடலும், உள்ளமும் எவ்வளவு வலித்திருக்க வேண்டும் என்று நினைத்தேன்."

என்று எழுதியுள்ள அன்னை, இதற்காகத் தான் கண் கலங்காமலும், ஒரு துளி கண்ணீர் வெளிவராமலும் பார்த்துக் கொண்டதாகவும் எழுதியுள்ளார்.

19.3.1949 அன்னை தெரசாவை நாடி, புனித மரியன்னைப் பள்ளியில் பயின்ற முன்னாள் மாணவி **சுபாஷிணி** வந்தார். அன்னையின் கமலத் திருவடியை ஆராதித்தார். இதோ அவர்களிடையே நடைபெற்ற உரையாடல்:

"இனிய மகளே! மகிழ்ச்சியோடு இருக்கிறாயா?"

"அம்மா! உங்களோடு இணைந்து பணியாற்றுவதுதான் மகிழ்ச்சி திருநாள்."

"அதற்குப் போதிய நெஞ்சுரம் வேண்டுமே!"

''உங்கள் ஆசி, எனக்கு அதை வழங்கும்''

''பணக்கார, டாம்பீக உடையில் இருக்கிறாயே?''


''செல்வச் சீமாட்டியாகிய நீங்கள், எளிய உடைக்கு வரவில்லையா?''

''சுபாஷிணி...''

''அம்மா! நான் சுபாஷிணியாக வரவில்லை. இனி உங்கள் திருத்தொண்டில் உங்கள் திருப்பெயரை ஏற்றவளாக வாழ விரும்புகிறேன்.''

மகிழ்ந்த அன்னை, **''ஆக்னெஸ்''** என்ற பெயரை உச்சரிக்கிறார். அந்த நொடியிலிருந்து சுபாஷிணி, அருட்சகோதரி **''ஆக்னெஸ்''** ஆனார். இவரைத் தொடர்ந்து **மாக்டலினா கோம்ஸ், ஜெட்ரூட் செல்வி டோரத்தி, மார்கரெட் மேரி** ஆகிய ஐவருடன் தொடங்கி, பின்னர் அந்த எண்ணிக்கை படிப்படியாக உயர்ந்தது. அன்னை தெரசாவின் தொண்டுள்ளத்திற்கு சில சான்றுகள். கீழே -படியுங்கள்.

★ *தொழுநோயாளிகளின் இல்லத்திலே ஒரு நாள் - முற்றிய நிலையில் உள்ள ஒரு தொழு நோயாளியின் அருகே அன்னை சென்றிட, ''என்னைத் தொடாதிங்க சிஸ்டர் - என் புண்கள் எனக்கே நாறுகின்றன - என்னாலேயே பொறுக்க முடிய வில்லை! எப்படி உங்களாவ் என்னருகே வர முடிகிறது?''என்றார்.*


டயானாவின் இறுதி ஊர்வலத்தில் திரண்ட கூட்டம்

★ *அன்னை தெரசா பொய் சொல்ல வில்லை. ''ஆம், நாறத் தான் செய்கிறது. ஆனால் அதற்காக நான் நெருங்காது இருக்கலாமா? வலி*

பொறுக்காது துடிக்கின்றீர்களே, அதைப் பார்த்துக் கொண்டு நான் விலகி இருக்க முடியுமா? உன் வலியைவிட, உன் துர்நாற்றம் எனக்குப் பெரிதல்ல'' என்றெல்லாம் ஆறுதல் கூறி, அன்பினைப் பொழிந்து, அவனைத் தொட்டுத் தூக்கி, புண்களைத் துடைத்து மருந்திட்டு, முகம் சுளிக்காது உணவூட்டி விட்டுத் திரும்பினார்.

★ டெல்லி விமான நிலையத்தில் ஒரு நாள் - ஆளுநரின் செயலாளர் நாகின் சௌலா வேறு பணியாக அங்கே சென்றவர், ரோமில் இருந்து வரும் விமானத்தில் அன்னை வருவதை அறிந்து, காத்திருந்தார். ரோம் விமானம் மாலை 7.30 மணிக்கு வந்ததும், ஆளுநரின் செயலாளர் விரைந்து சென்று வணக்கம் கூறினார். அவரிடம் அன்னை உடனடியாக 8 மணிக்குப் புறப்படும் கல்கத்தா விமானத்திற்கு விரைந்திட வேண்டுமென்று கூற, சௌலா ''என்ன அவசரம்?'' என்று கேட்டபோது, ''என் பையில் சில மருந்துகள் உள்ளன - அங்கே ஒரு குழந்தை உயிருக்கு மன்றாடிக்கொண்டுள்ளது - எனவே விரைந்து செல்ல வேண்டும்'' என்று கூற, சௌலா அவ்வாறே விமானத்தில் அன்னையை ஏற்றி அனுப்புகிறார். விமானம் கல்கத்தாவில் இறங்கியதும், மருந்துகளை எடுத்துக் கொண்டு நேரடியாக மருத்துவ மனைக்குச் சென்று மருந்துகளைக் கொடுக்க, அதனை அந்தக் குழந்தைக்குக் கொடுக்க, செத்துக் கொண்டிருந்த குழந்தை உயிர் பிழைத்தது.

★ அன்னை தெரசாவைச் சந்திக்க ஒரு முறை அமெரிக்க செனட்டர் ராபர்ட் கென்னடி வந்தார். எங்கும் பரபரப்பு. அங்குமிங்கும் ஓடி அன்னை எங்கே இருக்கிறார் என்று தேடுகிறார்கள். அவர்களையெல்லாம் அமைதிப்படுத்திவிட்டு, அன்னையின் வருகைக்காகக் காத்திருக்காமல், ராபர்ட் கென்னடி அவர்களே அன்னையைத் தேடி உள்ளே செல்கிறார். அங்கே அவர் கண்டது என்ன தெரியுமா? தொழு நோயாளிகளின்

பிரிவிலே அந்த நோயாளிகளின் துணிகளை அன்னை தெரசா துவைத்துக் கொண்டிருந்திருக்கிறார்.

தொழுநோயாளிகளின் துணிகளை அலசியபடியே திரும்பிய அன்னை, எதிரிலே அமெரிக்காவின் புகழ் மகன் புன்னகை பூக்க நின்றது கண்டு திகைக்கிறார். அன்னையைப் பார்த்ததும், ஆர்வ மிகுதியால் கை குலுக்குவதற்காக ராபர்ட் கென்னடி தன் கையை நீட்டினார். அன்னையோ தன் கையைத் தாங்கியபடியே நீட்டி, ''என் கைகள் அழுக்காக உள்ளன'' என்றார்.

அப்போது கென்னடி, ''கருணைத் தாயே! சேவையால் அழுக்கடைந்துள்ள தாங்கள் கைகளில் புனிதத்தைக் காணுகிறேன். தொடத் துடிக்கிறேன் - சும்மா நீட்டுங்கள் - தாங்கள் புனிதக் கரங்களைத் தொடுவதே ஒரு பேறு - அதை எனது பேறாக - பெரும் பேறாகக் கருதுகிறேன்'' என்றாராம்.

★ *அனாதைச் சிறுவர், பெரியோர் பசி போக்கிட, கல்கத்தா வீதிகளிலே அன்னை தெரசா கையேந்தினார். ''அனாதைகளின் துயர் துடைக்க ஏதேனும் போடுங்கள் - ஏதாவது கொடுங்கள்'' எனஅறு ஒரு பணக்கார நகை வியாபாரியின் வீட்டின் முன்னால் நின்று இறைஞ்சினார். கஞ்சனான அந்த வியாபாரி ''போ, போ'' என்று விரட்டினார். ''அனாதைகள் துயர் தீர ஏதாவது தாருங்கள்'' என்று அன்னை மீண்டும் வேண்டவே, ஆத்திரம் அடைந்த அந்த வியாபாரி, வாயில் மென்று கொண்டிருந்த வெற்றிலை எச்சிலை அப்படியே அன்னையின் கைகளிலே உமிழ்ந்தான். அதைக் கண்டு சிறிதும் பதற்றமடையாமல், ''இதனை வழங்கியதற்கு நன்றி - ஏற்றுக் கொள்கிறேன். இது எனக்கு - ஆனால் அந்த அனாதைகளுக்கு ஏதாவது நிதி கொடுங்கள்'' என்றாராம். வியாபாரி தன் தவறுக்கு வருந்தி, நாணி, உள்ளே சென்று காசோலைப் புத்தகத்தைக் கொண்டு வந்து கொடுத்து - ''உங்களுக்கு விருப்பமான தொகையை எழுதி எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று கூறினானாம்.*

★ வீதியோர அனாதை ஒருவர் முதியோர் இல்லத்தில் நோயாளியாகச் சேர்ந்தார். ஒரு நாள் அவருக்குப் புத்தாடை தந்து அணிந்து கொள்ளச் சொன்னபோது, அந்த முதியவர், அன்னையின் கைகளைப் பற்றி தன் கண்களில் ஒற்றிக் கொண்டார். அப்போது அன்னை, ''என்னய்யா, என்ன வேண்டும்?'' என்று கேட்க, ''என் வாழ்நாள் விளிம்புவரை பகைமையையும், வெறுப்பையும் கண்டேனே அல்லாமல், பாசத்தைப் பார்த்ததே இல்லை. இங்கு வந்த பின்பே அன்பில் திளைக்கிறேன் - பாசத்தில் நனைகிறேன்'' என்று கூறி அழுதாராம்.

நாட்கள் நகர்ந்து. அவர் பிழைக்க முடியாத நிலை அடைந்தார். விலை உயர்ந்த மருந்து வரவழைக்கப்பட்டு, அவருக்குத் தரப்பட்டது. பக்கத்திலே இருந்த டாக்டர்கள் ''அம்மா, இவர் இன்னும் சில மணித் துளிகளில் மறையப் போவது உறுதி - அது தெரிந்தும் இவ்வளவு விலை உயர்ந்த மருந்தினை வீணாக்க வேண்டுமா?'' என்று கேட்டார்களாம். அதற்கு அன்னை, ''நீங்கள் நினைப்பது சரி- இவர் வாழ்நாள் முழுவதும் அன்பு என்றால் என்ன என்றே அறியாதவர். உண்மை அன்பினை உணராமலேயே இவர் சாக வேண்டுமா? முதலில் அவர் அன்பினை அனுபவிக்கட்டும் - அதனை அனுபவித்த பிறகு இறக்கட்டும் என்று தான் இந்த விலை உயர்ந்த மருந்தை அளித்தேன்'' என்றாராம்.

★ கல்கத்தாவில் சர்க்கரை கிடைக்காத காலம். பெரும் தட்டுப்பாடு. அப்போது மூன்று வயது சிறுவன் ஒருவன், தன் தாயிடம் ''அம்மா! பாலிலே சர்க்கரை போட வேண்டாம். அந்தச் சர்க்கரை மொத்தத்தையும், இதுவரை சர்க்கரை என்றாலே என்ன என்று அறியாத ஏழைக் குழந்தைகளுக்கு அளிப்போம், அன்னை தெரசா மூலமாக'' என்று சொல்லிக் கொடுத்தானாம். ''நான் பெற்ற கொடைகளிலேயே இது தான் பெரும் கொடை'' என்று அன்னை தெரசா அதனை ஏற்றுக் கொண்டாராம்.

★ மற்றொரு சிறுவனோ, தான் இனி காப்பியே அருந்தப் போவதில்லை என்றும், அதற்கான காசைச் சேர்த்து அன்னை தெரசாவிடம் அளிக்கப் போவதாகக் கூறித் தந்தானாம்.


★ கல்கத்தா பிச்சைக்காரர் ஒருவரோ, தான் பிச்சையெடுத்து சேர்த்த காசுகளை அப்படியே அன்னை தெரசாவிடம் பிறருக்கு உதவுவதற்காகக் கொடுத்தாராம்.

★ ஓர் இந்து திருமணத் தம்பதியர், மணம் புரிந்து கொண்டபோது, மண விருந்தை நிறுத்திவிட்டு, அந்தத் தொகையை அப்படியே அன்னை தெரசாவிடம் அளித்தனராம்.

★ சுப்ரோட்டா மித்ரா என்ற ஒரு வங்க இளைஞன். அன்னை இல்லத்தின் முன் ஒரு ஒரு மணி நேரம் காத்திருந்தான். அனைவரையும் பார்த்து முடித்த பிறகு, அன்னை அவனை அழைத்து, ''என்ன வேண்டும்?'' என்று கேட்டார். பதற்றத்தோடு அந்த இளைஞன், 'அன்னையே! இங்கு நான் வந்தது இதுவே முதல் முறை. நேற்று என் முதல் ஊதியம் பெற்றேன். அதை ஏழைகளுக்கு அளித்திட விழைகிறேன். இதோ அந்தப் பணம்''



''என்னைத் தொடாதீங்க சிஸ்டர்!'' என்று தடுத்த தொழுநோயாளிக்கும் சிகிச்சை அளித்தார் தெரசா.



"அன்னை தெரசா மறைவால் இலட்சக்கணக்கான இந்தியர்கள் அநாதைகளாகி விட்டனர்" என்றார் குஜ்ரால்

என்று கூறி அன்னை தெரசாவிடம் அதனை அளித்தானாம்.

அன்னை தெரசா அவர்கள் மறைந்தபோது அவருடைய வயது 87. டெல்லியில் மத்திய அமைச்சரவைக் கூட்டம் கூடி, அன்னை தெரசாவுக்கு அரசு மரியாதையுடன் உடல் அடக்கம் நடத்த முடிவு செய்தது. அவருடைய மறைவுக்கு இரங்கல் தெரிவித்து தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. நாடு முழுவதும் துக்கம் கடைப்பிடிக்கப்பட்டது. தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்டது. அரசு நிகழ்ச்சிகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டன. தெரசாவின் உடல் மிஷினரி ஆப் சாரிட்டியின் தலைமை அலுவலகமான அன்னை இல்லத்தின் முதல் மாடியில் உள்ள வழிபாட்டு மண்டபத்தில் வைக்கப்பட்டது.

6.9.1997 அன்று காலையில் தமிழக அமைச்சரவையும் எனது தலைமையிலே கூடி, தெரசாவின் மறைவிற்காக ஆழ்ந்த அதிர்ச்சியையும், வருத்தத்தையும் தெரிவித்தது.

7.9.1997 அன்று காலையில் பிரதமர் குஜ்ரால் அவர்கள் கல்கத்தா சென்று, அன்னை தெரசாவின் உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். "லட்சக்கணக்கான ஏழைகளின் அன்னையாக விளங்கிய தெரசா அவர்கள், அந்த ஏழைகளின் கண்ணீரைத் துடைப்பதில் தன் வாழ்நாளைக் கழித்துள்ளார் - அவரது மறைவால் லட்சக்கணக்கான இந்தியர்கள் அனாதைகளாகி விட்டார்கள்" என்று பிரதமர் குறிப்பிட்டார்.

தமிழ்நாடு - புதுவை கிறித்தவ ஐக்கியப் பேரவையின் சார்பில், அன்னை தெரசா அவர்களின் திருவுருவப் படத்

திறப்பு நிகழ்ச்சி 10.9.1997 அன்று சென்னை மயிலை சாந்தோமில் உள்ள செயின்ட் பீட்ஸ் பள்ளி வளாகத்தில், மதுரை பேராயராக இருந்த எம்.ஆரோக்கியசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அந்த நிகழ்ச்சியில் நான் கலந்து கொண்டு, அன்னை தெரசா அவர்களின் உருவப் படத்தைத் திறந்து வைத்தேன்.

அன்னை தெரசா மறைந்ததையொட்டி, சென்னைத் தொலைக் காட்சியிலும், வானொலியிலும் என்னிடம் இரங்கல் உரை கேட்டபோது நான் கூறியது-

''பருந்துகளும், கழுகுகளும் வட்டமிடும் இந்த உலகத்தில் - சமூக சேவை எனும் தடாகத்தில் நீந்திக் கொண்டிருந்த **அன்னப் பட்சி** மறைந்துவிட்டது'' என்று குறிப்பிட்டேன். அன்னம் ஒரு பறவையையும் குறிக்கும், அன்னம் அன்னை தெரசாவையும் குறிக்கும், அன்னம் அவர்கள் ஏழையெளிய மக்களுக்கு அளித்த உணவைக் குறிக்கும்.

1962ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் ஆசியாவின் ஜோதி **பண்டித ஜவகர்லால் நேரு** அவர்கள் பிரதமராக இருந்த அந்தக் காலத்தில், சிறந்த சமூக சேவகிக்கான ''பத்மஸ்ரீ'' விருது அன்னை தெரசாவுக்கு வழங்கப்பட்டது. அந்த விருது வழங்கப்பட்டது கூட பெரிதல்ல - அந்த விருதை வாங்கச் சென்ற அன்னை தெரசா அவர்களைப் பற்றி பண்டித நேரு அவர்கள், ''குடியரசுத் தலைவருடைய கையிலே இருந்து அன்னை தெரசா அவர்கள் விருதினை வாங்கிச் சென்ற காட்சி - கொடிய நோய்வாய்ப்பட்ட ஒரு குழந்தையை தன் இரு கைகளாலும் பரிவோடு ஏந்தி எடுத்துச் செல்வது போன்ற ஒரு காட்சியை நினைவுறுத்தியது'' என்று குறிப்பிட்டாராம்.

மேற்கு வங்க முதலமைச்சராக **பி.சி.ராய்** பண்டித நேரு அவர்களையே பெயர் சொல்லி அழைக்கக் கூடிய அளவிற்கு அவரிடம் பழகியவர். அவருடைய 80ஆவது பிறந்த நாளில் செய்தியாளர்களிடம் அவர் கூறும் போதும், ''இந்த என் பிறந்த நாளில் - இந்த முதிய வயதில் முதன் முதலாக யாரைப் பற்றிய நினைவு எனக்கு வந்தது தெரியுமா? நாட்டின் விடுதலைக்காக

எந்தத் தலைவரோடு ஒன்றி நின்று போராடினேனோ- அந்த என் அருமைத் தலைவர் மகாத்மா காந்தி அவர்களின் நினைவுகூட எனக்கு வரவில்லை. என் உயிருக்குயிரான உற்ற தோழர் ஜவகர்லால் நேரு அவர்களின் எண்ணமும் என் நெஞ்சில் எழவில்லை. ஏன் - எனக்கு நெருக்கமான என் உற்றார், உறவினர் எவரைப் பற்றிய சிந்தனையுமே எனக்கு வரவில்லை. ஆனால் எனது அலுவலகத்துக்குச் செல்லும் அந்த மாடிப்படிகளில் நான் காலடி வைத்து ஏறும்போது ஒரே ஒரு எளிய உருவம் மட்டுமே என் நெஞ்சம் முழுவதும் நிறைந்திருந்தது. திக்கற்ற ஏழைகளையும், நோயாளிகளையும், குழந்தைகளையும் காப்பாற்றுவதற்காக அவர்களின் கண்ணீரைத் துடைப்பதற்காக தம் வாழ்வையே ஒப்படைத்துக் கொண்டு அல்லும் பகலும் அயராது உழைக்கிறாரே அந்த தெரசா- அவரது மெலிந்த வடிவமே என் இதயம், மூளை



''பருந்துகளும் கழுகுகளும் வட்டமிடும் இந்த உலகில் சமூகசேவை எனும் தடாகத்தில் நீந்திய அன்னப்பட்சி மறைந்து விட்டது!''

எல்லாவற்றையுமே சுற்றி வளைத்துக் கொண்டுவிட்டது'' என்று தெரிவித்தாராம்.

அன்னை தெரசா பற்றி எழுதுவதென்றால் இன்னும் நீண்டு கொண்டே போகும். எனவே அவரது சரித்திரத்தை இத்துடன் நிறுத்திக் கொண்டு, அடுத்த வாரம் என் சரித்திரத்தைத் தொடருகிறேன்.

26. அண்ணாவே வந்து வாழ்த்தியதுபோல!

"நெஞ்சுக்கு நீதி" மூன்றாம் பாகம் வெளியீட்டு விழாவில், மூத்த காங்கிரஸ் தியாகி செங்கல்வராயன் என்னைப் பாராட்டியது, அண்ணாவே திரும்பி வந்து பாராட்டியதுபோல் இருந்தது.

செப்டம்பர் 5- ஆசிரியர் தினமாக நாடெங்கும் கொண்டாடப்படும் நாள். அந்த நாள் இந்தியாவின் முதல் துணைத் குடியரசுத் தலைவராகவும் - இரண்டாவது குடியரசுத் தலைவராகவும் திறமையாகப் பணியாற்றிய டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த நாள். 1997 ஆம் ஆண்டு ஆசிரியர் தினத்தைக் கொண்டாடுவதற்காக அரசின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டு, அதிலே நானும், கல்வி அமைச்சராக இருந்த பேராசிரியரும் வள்ளுவர் கோட்டத்தில் நடந்த சிறப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டோம்.

1989 - 90ஆம் ஆண்டுகளுக்குப் பிறகு 1997 ஆம் ஆண்டுதான் - சுமார் ஏழு ஆண்டுகளுக்குப் பின்னர் வள்ளுவர் கோட்ட நிகழ்ச்சியிலே நான் கலந்து கொண்டேன். ஆனால் இடைப்பட்ட காலத்தில் அந்த வள்ளவர் கோட்டம் என்னுடைய முயற்சியால் கட்டப்பட்டது என்பதற்காகவே, எந்த விதமான பராமரிப்புமின்றி, கேள்வி கேட்பாரற்ற நிலையில் இருந்தது. இன்னும் அதிலே வேதனை - அந்த வள்ளுவர் கோட்டம் அ.தி.மு.க. ஆட்சியிலே - வள்ளுவர் யாத்த முப்பாலில் மூன்றாவது பாலுக்குரிய இடமாகத்தான் செயல்பட்டது என்பதை நானல்ல - அந்தக் காலத்திய நடுநிலை

வார ஏடுகளே பல முறை புகைப் படங்களோடு வெளியிட்டன. ஆனால் 97 ஆம் ஆண்டு, வள்ளுவர் கோட்டம் புதுப்பொலிவு பெற்று புத்தொளியுடன் மாற்றப்பட்ட நிலையில்தான், நான் அந்த ஆசிரியர் தின நிகழ்ச்சியிலே கலந்து கொண்டேன்.

சர்வப்பள்ளி ராதாகிருஷ்ணன் என்றும், டாக்டர் ராதாகிருஷ்ணன் அழைக்கப்பட்ட அவர் தமிழகத்தில் திருத்தணியிலே பிறந்தவர். தெலுங்கு மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர். அவர் தனது இளமைக் காலத்தினை திருத்தணியிலும், திருப்பதியிலும் கழித்தார். பின்னர் சென்னைப் பல்கலைக் கழகத்தில்தான் முதுகலைப் பட்டம் பெற்றார். மிகச் சிறந்த தத்துவஞானி. மேற்கத்திய நாடுகளின் தத்துவங்களுக்கும், கிழக்கத்திய நாடுகளின் தத்துவங்களுக்கும் பாலமாகத் திகழ்ந்தவர்.

அவர் குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்றதும், அவரது மாணவர்கள் பலர் அவரைச் சந்தித்து, அவரது பிறந்த நாளான செப்டம்பர் 5 ஆம் தேதியைக் கொண்டாட வேண்டுமென்று அனுமதி கேட்டனர். அதற்கு அவர், ''என்னுடைய பிறந்த நாளைக் கொண்டாடுவதைவிட, அந்த நாளை **''ஆசிரியர் தினம்''** என அறிவித்து, அதற்காக விழா எடுத்தால் நான் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைவேன்'' என்று கூறியதற்கிணங்க - அவர் பிறந்த தினமான செப்டம்பர் 5 ஆம் தேதி - ஒவ்வொரு ஆண்டும் இந்தியாவில் ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்படுகிறது. 1954 ஆம் ஆண்டு அவருக்கு **''பாரத ரத்னா''** விருது வழங்கப்பட்டது.

அவரது நினைவாகக் கொண்டாடப்படும் நாளில் 1996- 97 வரை சிறந்த பணியாற்றிய சிறந்த பணியாற்றிய ஆசிரியப் பெருமக்களுக்கு **''நல்லாசிரியர் விருதுகள்''** ஒவ்வொரு ஆண்டும் தமிழகத்திலே வழங்கப்பட்டு வந்தது. 1997ஆம் ஆண்டு மேடையிலே நான் அமர்ந்திருந்தபோதுதான், எனக்கொரு யோசனை தோன்றியது. ஒரு சிலரைத்



சிறந்த ஆசிரியருக்கு ''டாக்டர் ராதாகிருஷ்ணன்'' விருது வழங்கினேன்.

தேர்ந்தெடுத்து அவர்களுக்கு ''நல்லாசிரியர் விருது'' வழங்குவதால், மற்ற ஆசிரியர்கள் எல்லாம் நல்ல ஆசிரியர் அல்லவா என்று கேட்கத் தோன்றுமே என எனக்கு நானே கேட்டுக் கொண்டு, அந்த ஆண்டு முதல் அந்த விருதுக்கு ''நல்லாசிரியர் விருது'' என்பதற்குப் பதிலாக **''டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது''** என்ற பெயரே இருக்கலாமென்று அறிவித்தேன். அந்த நடைமுறைதான் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

உலகப் புகழ் பெற்ற **''ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம்''** டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் பெயரால் விருதுகளும், மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகைகளும் வழங்கி வருவது இந்திய நாட்டிற்கும் - குறிப்பாக தமிழகத்திற்கும் பெருமை தரக்கூடிய ஒன்றாகும். பொதுவாக ஆசிரியர்கள் என்றால் அவர்கள் ஏணிகளாகப் பயன்படக் கூடியவர்கள் என்று சொல்வார்கள். டாக்டர் ராதா கிருஷ்ணன் அவர்கள் ஆசிரியராக இருந்து, தன்னுடைய அறிவுத் திறனால், ஆற்றலால் உயர்ந்து, உயர்ந்து இந்தியாவின் குடியரசுத் தலைவராகவே உயர்ந்தவர் என்பதை எண்ணும்போது, ஆசிரியர்கள் ஏணிகளாக மட்டுமல்ல - கோபுரத்தின் சிகரங்களாகவும், கலசங்களாகவும் ஆகக்கூடும் என்பதற்கு எடுத்துக் காட்டுதான் டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள்

ஆவார்கள். அவர் ஏணியாக இருந்து பல மாணவர்களை ஊக்கப் படுத்தினார் - ஏற்றி விட்டார். பிறகு அந்த ஏணியே கலசமாக மாறி, இந்தியத் திருநாட்டின் கோபுரக் கலசமாக ஒளிவிட்டது.



மாநில அளவில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ - மாணவியருக்குப் பரிசு வழங்கினேன்.

1949ஆம் ஆண்டில் டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் சோவியத் ரஷ்யாவின் இந்தியத் தூதராக நியமிக்கப்பட்டார். அந்த அறிவிப்பு இந்தியாவிலும், ராதாகிருஷ்ணனை நன்கறிந்த பல்வேறு வெளிநாடுகளிலும் வியப்பாக பேசப்பட்டது. காரணம், டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் மதம் தொடர்பான தத்துவங்களிலும், கருத்துமுதல் வாதத்திலும் ஆழ்ந்த நம்பிக்கையும் புலமையும் மிக்கவர். அப்படிப்பட்ட ஒருவர், பொருள்முதல் வாதத்தை அடிப்படை யாகக் கொண்ட கம்யூனிஸ்ட் ரஷ்யாவிற்குத் தூதராக நியமிக்கப்பட்டது பலருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

அவர் ரஷ்யாவிற்குச் சென்றதும், அப்போது ரஷ்யப் பிரதமராக இருந்த **ஜோசப் ஸ்டாலின்** அவர்களைச் சந்திக்க அழைக்கப்பட்டார். அவர்களது முதல் சந்திப்பே, மிகச் சிறப்பாக அமைந்தது.

ஸ்டாலினைச் சந்தித்ததும், டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள், ''எங்கள் நாட்டிலும் ஒரு பேரரசர் இருந்தார், அவர் பெருமளவுக்கு ரத்தம் சிந்தப்பட்ட போருக்குப் பிறகு, இனி போரே வேண்டாம் என்று போரை வெறுத்து புத்த மதத்தைத் தழுவினார். நீங்களும் பலத்தைப் பயன்படுத்தி ஆட்சியைக் கைப்பற்றியிருக்கிறீர்கள். எங்கள் பேரரசுக்கு நேர்ந்ததைப் போல உங்களுக்கும் நிகழலாம்.'' என்று கூறிட -

அதற்கு ஜோசப் ஸ்டாலின், ''நம்ப முடியாத நிகழ்ச்சிகள் சில நேரங்களில் வாழ்க்கையில் நடைபெறத்தான் செய்கின்றன. நானும் நான்கு ஆண்டுகள் மதம் தொடர்பான மடம் ஒன்றில் வேலை பார்த்தவன்'' என்றார்.

டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் மூன்றாண்டு காலம் ரஷ்யாவில் தூதராகப் பணியாற்றிவிட்டு, 1952இல் இந்தியாவிற்குத் திரும்புவதற்கு முன்பு - ஸ்டாலின் அவர்களைச் சந்தித்து விடை பெற நினைத்தார். டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் ஸ்டாலினைச் சந்தித்து அவர் கன்னத்திலும், முகத்திலும் தட்டிக் கொடுத்தார். அப்போது உணர்ச்சி வயப்பட்ட ஸ்டாலின், டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களிடம் ''என்னை மனிதனாக நடத்திய முதல் மனிதர் நீங்கள்தான், மற்றவர்கள் எல்லாம் என்னை ஒரு ராட்சசனாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து செல்வது தனிப்பட்ட முறையில் எனக்கு மிகுந்த வருத்தத்தைத் தருகிறது. நீங்கள் நீண்ட காலம் வாழ வேண்டும். எனக்கு நீண்ட நாள் வாழ விருப்பமில்லை'' என்று கூறினார்.

அதற்குப் பிறகு ஆறு மாதங்கள் கழிந்த நிலையில் ஜோசப் ஸ்டாலின் அவர்கள் இயற்கை எய்தினார். சோவியத் ரஷ்யாவிற்கும், இந்தியத் திருநாட்டிற்கும் பின் நாளில் ஏற்பட்ட நெருக்கமான உறவுக்கும், நட்புக்கும் அடித்தள மிட்டவர் டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள்தான்.

ராதாகிருஷ்ணன் பெயரால் அமைந்த அந்த விருதுகளை அந்த விழாவிலே வழங்கி, ஆசிரியர்களின் பெருமைகளைப் பற்றியும், கழக அரசு ஆசிரியர்களுக்கு எந்த அளவிற்குச் சலுகைகளை வழங்கியுள்ளது என்பதைப் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தேன்.


குறிப்பாக அந்த விழாவில் நான் பேசும்போது, என்னுடைய தலைமையில் அப்போது அமைந்திருந்த அமைச்சரவையில் ஆசிரியர்களாக இருந்தவர்கள் மட்டும் ஏழு பேர் என்றும் - அந்த அளவிற்கு எந்த அமைச்சரவையிலும் ஆசிரியர்களுக்குப் பிரதிநிதித்துவம் இருந்ததில்லை என்றும் குறிப்பிட்டதோடு,

அவ்வாறு ஆசிரியர்களாக இருந்த ஏழு பேர் என்று பேராசிரியர். முனைவர் தமிழ்க் குடிமகன், முனைவர் பொன்முடி, தங்கப்பாண்டியன், முல்லைவேந்தன், சமயநல்லூர் செல்வராஜ், புலவர் செங்குட்டுவன் என்று பெயர்களை சொல்லியபோது, நிகழ்ச்சிக்கு வந்திருந்த ஆசிரியப் பெருமக்கள் எல்லாம் தாங்களே அமைச்சர்களாக ஆனதைப்போல பெரிதும் மகிழ்ந்து அதனை வரவேற்றனர்.

செப்டம்பர் 5ஆம் தேதியன்று ஆசிரியர் தினத்தைச் சிறப்புடன் கொண்டாடிவிட்டு, செப்டம்பர் 15ஆம் தேதியன்று, வழக்கம்போல் **அண்ணா** அவர்களின் 89வது பிறந்த நாளினை சீரும் சிறப்புமாகத் தமிழகமெங்கும் கொண்டாடினோம். சென்னையில் நானும் பொதுச் செயலாளர் **பேராசிரியரும்**, மத்திய மாநில அமைச்சர்களும், கழக முன்னணியினரும் அண்ணா அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினோம். முன்னதாக, வள்ளுவர் கோட்ட வாயிலில் தென்சென்னை, வட சென்னை மாவட்ட தொண்டரணியினரும், மகளிர் தொண்டரணியினரும், வழங்கிய அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டேன். அணி வகுப்பையும் பார்வையிட்டேன். அதே மேடையில் கழகத் தொண்டரணியில் சிறப்பாகப் பணியாற்றிய **அபுபக்கர், அந்தோணி சேசு, செல்வம்** ஆகியோருக்கு வெள்ளிப் பதக்கங்கள் அணிவித்து கௌரவித்தேன்.

அதே நாளில், அரசு சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட விழா ஒன்றில் கலந்து கொண்டு அப்போது 13 கோடி ரூபாயில் வாங்கப்பட்ட 384 புதிய வாகனங்களைத் தமிழகத்திலே உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் பயன்படுவதற்காக வழங்கினேன்.

அப்போது பேசும்போது - ''இன்றைய தேதி செப்டம்பர் 15 - 384 ஒன்றியங்களுக்கும் வேன் வழங்கப்படுகிறது - 384 என்ற எண்கள் மூன்றையும் கூட்டினாலும் 15 தான் வரும் - அதுவே நல்ல பொருத்தம்!'' என்று கூறியது என் நினைவில் உள்ளது.



அண்ணா பிறந்த நாளில் அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினோம்.

முப்பெரும் விழாவினை யொட்டி தி.மு.கழக மகளிர் அணி, மாணவர் அணி, இலக்கிய அணி, இளைஞர் அணி ஆகியவற்றின் சார்பில் நடத்தப்பட்ட கருத்தரங்கம், வழக்காடு மன்றம், பட்டிமன்றம், மற்றும் கவியரங்கம் ஆகிய நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

முப்பெரும் விழாவில் அந்த ஆண்டு பேராசிரியர் **நன்னன்** அவர்களுக்குப் **பெரியார் விருதும்,** பெங்களூர் சோழன் அவர்களுக்கு **அண்ணா விருதும்,** புலவர் ஆடலரசு அவர்களுக்குக் **கலைஞர் விருதும்** வழங்கப்பட்டன.

தி.மு.கழக அறக்கட்டளை சார்பில் மேல்நிலைப்பள்ளி தேர்வில் முதல், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற மாணவிகளுக்குப் பரிசளிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. தொடர்ந்து முரசொலி அறக்கட்டளை சார்பில் - பாவேந்தர் பாடல் ஒப்புவித்தல் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசளிக்கும் விழா நடைபெற்றது.

அன்றைய தினமே திராவிட மறுமலர்ச்சி மாமன்ற அஞ்சல் வழிக் கல்லூரிப் பட்டயம் வழங்கும் விழா நடைபெற்றது. கல்லூரி முதல்வர் பேராசிரியர் நன்னன் அவர்கள் **"திராவிட இயல் மாணவர்"** என்ற பட்டம் பெறும் 77 மாணவர்களின் பெயர்களைப் படிக்க, அவர்களுக்கெல்லாம் நான் பட்டயம் வழங்கினேன்.

சென்னையில் அண்ணாவின் 89ஆவது பிறந்த நாள் விழாவினைக் கொண்டாடி விட்டு - 17ஆம் தேதி தந்தை பெரியாரின் 119ஆவது பிறந்த நாள் விழாவினைக் கொண்டாடுவதற்காக சேலம் மாநகருக்குப் புறப்பட்டுச் சென்றேன். அன்று காலையில் **நானும், பேராசிரியரும்,**

ஆர்க்காடு வீராசாமி, வீரபாண்டி ஆறுமுகம், துரை முருகன் ஆகியோரும் சேலத்தில் உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினோம்.

அதே நாளில் சேலத்தில் **பெரியார் பல்கலைக் கழகத்தின்** தொடக்க விழாவும் நடைபெற்றது. அதனையொட்டி சேலம் மாநகரமே விழாக் கோலம் பூண்டிருந்தது. சேலம் அரசினர் பொறியியல் கல்லூரி வளாகத்தில் பெரியார் பல்கலைக் கழக அலுவலகத் திறப்பு விழா நடைபெற்றது. மேடையிலிருந்த என்னிடம் பல்கலைக் கழகப் பதிவுப் புத்தகத்தை நீட்டினார்கள்.

அதிலே நான், ''இன்று பெரியார் பிறந்த நாள் - மனித சமுதாயத்திற்குச் சுயமரியாதை பிறந்த நாள் - இந்நன்னாளில் பெரியார் பல்கலைக் கழகம் சேலத்தில் தொடங்குவது பெரும் சிறப்பு'' என்று எழுதினேன்.

பெரியார் பல்கலைக் கழகத் தொடக்க விழாவினையொட்டி, சேலம் மாநகரில் பள்ளி, கல்லூரி மாணவர்களும், பொது மக்களுமாக பல லட்சம் பேர் பங்கேற்ற எழுச்சிமிகு அணிவகுப்பு ஒன்றும் நடைபெற்றது. தனி மேடையில் இருந்து 3 மணி நேரத்திற்குமேல் நானும், **அன்றைய ஆளுநர் பாத்திமா பீவி** அவர்களும், பேராசிரியரும், மற்ற அமைச்சர்களும் பார்வையிட்டோம்.

17ஆம் தேதி சேலத்தில் பெரியார் பல்கலைக் கழகத்தைத் திறந்து வைத்த நான், சென்னையில் 20ஆம் தேதி **டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தை** அப்போது குடியரசுத் தலைவராக இருந்த மேதகு கே.ஆர்.நாராயணன் அவர்களை அழைத்து வந்து, ஆளுநர் முன்னிலையிலே தொடங்கி வைக்கச் செய்தேன். பல்கலைக் கழகக் கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா உரையை நான் நிகழ்த்தினேன். அந்த விழாவில் மத்திய தொழில் அமைச்சராக இருந்த தம்பி **முரசொலி மாறன்,** சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருந்த **மன்மோகன் சிங் லிபரான்,**



முப்பெரும் விழாவில் தொண்டரணி அணிவகுப்பைப் பார்வையிட்டேன்.

மத்திய சட்டத் துறை அமைச்சராக இருந்த இராமகாந்த் டி.காலப் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம் தொடங்குவதற்கான சட்ட முன் வடிவு தமிழகச் சட்டப் பேரவையிலே நிறைவேற்றப்பட்டு - ஏறக்குறைய ஓராண்டு காலம் ஆகியும் மத்திய அரசின் அனுமதி கிடைக்காமல் இருந்த நிலையில் - அதற்கு உடனடியாக அனுமதி வழங்க வேண்டுமென்று நான்தான் குடியரசுத் தலைவர் அவர்களுக்கு 97ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் ஒரு கடிதம் எழுதினேன். அதனைத் தொடர்ந்துதான் மத்திய அரசு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்திற்கு அனுமதி அளித்தது. அதன் தொடர்ச்சியாகத்தான் 20ஆம் தேதியன்று பல்கலைக் கழகம் தொடங்கி வைக்கப்பட்டது.

அந்த விழாவில் குடியரசுத் தலைவர் மேதகு கே.ஆர்.நாராயணன் அவர்கள் தனது உரையை இவ்வாறு தொடங்கினார்:-

''குடியரசுத் தலைவர் என்ற முறையில் என்னை முதன் முறையாக சென்னைக்கு இந்தச் சிறப்பு வாய்ந்த சமூக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியான டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத் தொடக்க விழாவிற்கு அழைத்ததற்காக தமிழக அரசுக்கு - குறிப்பாக தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.சட்டத் துறை பணிகளிலும், சட்டக் கல்வியிலும் தமிழ்நாடு மிகச் சிறப்பான சாதனைகளைப் பெற்றுள்ளது. அது மாபெரும் வழக்கறிஞர்களை உருவாக்கியுள்ளது. இந்த வகையில் இந்தியாவிலே முதலாவது பல்கலைக் கழகமான

இந்தப் பல்கலைக் கழகத்தைத் தொடங்கி வைக்கும் மகிழ்ச்சியைநான் இன்று பெற்றிருக்கிறேன்.

''2000 ஆண்டுக்களுக்கு முன்பாக மனித குலத்துக்கு வழி காட்டி, நெறிகளை வகுத்துத் தந்த மாபெரும் புலவர் திருவள்ளுவரைப் பெருமைப்படுத்தும் வகையில், நம்முடைய முதல்வர் அவர்கள் தானே வடிவமைத்து, உருவாக்கப்பட்ட இந்த மங்களகரமான - அற்புதமான - பெரிய அளவிலான வளாகத்தில் இந்தத் தொடக்க விழா நடைபெறுவதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். தமிழ்நாட்டில்தான் சமூகப் புரட்சிக்கான முதல் குரல் கொடுக்கப்பட்டது. மாபெரும் தலைவர்கள் பெரியார், அண்ணாதுரை, காமராஜர், இப்போது கலைஞர் திரு.கருணாநிதி! இவர் சமூகப்புரட்சியின் பாரம்பரியத்தை நடைமுறை அரசியலிலும், அமைப்பு மற்றும் நிர்வாகத் துறைகளிலும்கூட கடைப்பிடித்து வருகிறார். இவரை நான் பாராட்ட விரும்புகிறேன். இவரும், இவருடைய சகாக்களும், தமிழ்நாடு அரசும் டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக் கழகம் தொடங்குவது என்றதொலை நோக்குப் பார்வையுடன் கூடிய முயற்சியை எடுத்ததற்காக நான்பாராட்டுகிறேன்.''

''இங்கேகுறிப்பிட்டதைப்போல இது ஒரு தனித்துவமான பல்கலைக் கழகம். இந்தியாவிலேயே இந்த வகையில் இதுதான் முதலாவது பல்கலைக் கழகம்.'' - என்று குறிப்பிட்டார்.

டாக்டர் அம்பேத்கர் பல்கலைக் கழகத் தொடக்க விழாவில், மத்திய தொழில் துறை அமைச்சராக இருந்த தம்பி **முரசொலி மாறன்** பேசும்போது ''குடியரசுத் தலைவர் **கே.ஆர்.நாராயணன்** வடிவில் நாங்கள் அம்பேத்கரைப் பார்க்கிறோம். சமூக நீதி பிறந்த இடம் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான். இந்தியாவிலேயே முதல் முறையாக துவக்க'ப்பட்டிருக்கிற ஒரு சட்டப் பல்கலைக் கழகத்தினை - அதுவும் அந்தச் சட்டப் பல்கலைக் கழகம் **பாபா சாகிப் அம்பேத்கர்** பெயரைத் தாங்கியுள்ள நிலையில் - குடியரசுத் தலைவர் திறந்து வைப்பது சாலப் பொருத்தமுடைய தாகும்.தமிழ்நாட்டிற்கு அவர்கள் வருகை தந்திருப்பதால்



பெரியார் விருது மா. நன்னனுக்கும், அண்ணா விருது பெங்களூர் சோழனுக்கும், கலைஞர் விருது புலவர் ஆடலரசுவுக்கும் வழங்கப்பட்டது.

நாங்கள் எல்லாம் வேறு யாரையும்விட பெரு மகிழ்ச்சி அடைகிறோம். ஏனென்றால், தமிழ்நாட்டில் இருந்துதான் அவர் குடியரசுத் தலைவராக ஆக வேண்டும் என்கிற குரல் புறப்பட்டது. எனவே அந்த விதத்திலே மகிழ்ச்சி அடைகிறோம். அது மட்டுமல்ல - சமூக நீதி பிறந்த இடமே இந்தியாவிலேயே தமிழ்நாடுதான்'' என்று குறிப்பிட்டார்.

அந்த விழாவில் நான் ஆற்றிய உரை வருமாறு -

''இன்று ஓர் இனிய நாள்.இதயமெலாம் பூரிக்கின்ற நாள். நீண்ட நெடுநாளைய கனவு நிறைவேறுகின்ற நாள். இந்த நாளை மேலும் சிறப்பிக்கின்ற வகையில் நம்முடைய குடியரசுத் தலைவர் மேதகு கே.ஆர். நாராயணன் அவர்கள் வருகை தந்துள்ளார்கள். நான் அவரை தமிழக மக்களின் சார்பாக ''வருக-வருக-வருக''வாயார - மனமார வரவேற்கிறேன்.

''நம் இந்தியாவினுடைய குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்று முதல் தடவையாகத் தமிழகத்திற்கு வந்துள்ள அவர்கள் இந்தியாவிலேயே முதன் முதலாகத் தொடங்கப்படுகின்ற - அண்ணல் அம்பேத்கர் பெயரால் தொடங்கப்படுகின்ற சட்டப் பல்கலைக் கழகத்தைத் தொடங்கி வைப்பது மேலும் ஒரு சிறப்பு. இந்தியாவிலே உள்ள மாபெரும் அரசியல் தலைவர்களில் பெரும் பொறுப்பில் இருந்தவர்கள் என்றில்லாமல், மக்கள் பாராட்டுகின்ற அரசியல் தலைவர்களில் இரண்டு நாராயணன்கள் என்னைக் கவர்ந்தவர்கள். ஒருவர் ஜெயப்பிரகாஷ் நாராயண்.

மற்றொருவர் **கே.ஆர்.நாராயணன்** இந்த இரு நாராயண்களுமே ஏழையெளிய மக்கள்பால் அன்பு கொண்டவர்கள் - எளிமையான வாழ்க்கையை மேற்கொண்டிருப்பவர்கள்.

''மேதகு கே.ஆர். நாராயணன் அவர்கள் இந்தியாவிலேயே பெரிய மாளிகையான ராஷ்டிரபதி மாளிகையில் இன்றைக்கு வாழ்ந்தாலும்கூட - அவருடைய எண்ணம் எல்லாம் - அன்றைக்குச் சொல்வார்களே - கிரெம்ளின் மாளிகையிலே உலவினாலும், லெனினுடைய எண்ணம் எல்லாம் ஏழை எளிய மக்கள்பால்தான் இருக்குமென்று! அதைப்போல இவருடைய எண்ணம் எல்லாம் இந்தியத் திருநாட்டிலே உள்ள சாதாரண - சாமான்ய - ஏழை எளிய - நடுத்தர - பிற்படுத்தப்பட்ட - மிகவும் பிற்படுத்தப்பட்ட - தாழ்த்தப்பட்ட மக்களையே சுற்றி வருகின்ற எண்ணங்களாகும். அப்படிப்பட்ட பெருமைக்குரிய குடியரசுத் தலைவர் அவர்கள் இன்று வருகை தந்திருப்பது நமக்கெல்லாம் பெரும் மகிழ்வைத் தருகின்ற ஒன்றாகும்.

''அம்பேத்கருடைய கருத்துக்களோடு எங்களுக்கு உள்ள ஈடுபாட்டிற்குக் காரணமே எங்களை ஆளாக்கிய தந்தை **பெரியார்** அவர்களும், வழி நடத்தி வழிகாட்டிய பேரறிஞர் **அண்ணா** அவர்களும், எந்தக் கொள்கைகளை எங்களுக்குக் கற்றுத் தந்தார்களோ அதே கொள்கைகளை உடையவர் அம்பேத்கர் என்ற காரணத்தினால், எங்களுக்கு அண்ணல் **அம்பேத்கர்** அவர்களிடத்திலே தணியாத ஆர்வமும், ஈடுபாடும் என்றென்றும் உண்டு.''

- இவ்வாறு நான் உரையாற்றிய அந்தச் சட்டப் பல்கலைக் கழகத் துவக்க விழாவிற்காக வருகை தந்த குடியரசுத் தலைவர் மேதகு கே.ஆர். நாராயணன் அவர்கள், சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற பாரதிய வித்யா பவனின் விருதுகள் வழங்கும் விழாவிலும் கலந்து கொண்டார். பாரதிய வித்யா பவனின் புத்தகங்களை அவர் வெளியிட - அதனை நான் பெற்றுக் கொண்டேன். அந்த விழாவிலே ஆளுநர் செல்வி **பாத்திமா பீவி** அவர்களும், முன்னாள் குடியரசுத் தலைவர்



ஊராட்சி ஒன்றியங்களுக்காக வாங்கப்பட்ட 384 வாகனங்களை அமைச்சர் கோ.சி. மணியிடம் வழங்கினேன்.

ஆர்.வெங்கட்ராமன் அவர்களும், முனனாள் ஆளுநர் **சி.சுப்பிரமணியம்** அவர்களும் கலந்து கொண்டார்கள்.

குடியரசுத் தலைவர் சென்னைக்கு வருகை தந்து விட்டுச் சென்ற அடுத்த வாரமே 28-9-1997 அன்று இரவு 11.50 மணி அளவில் இந்தியப் பிரதமராக இருந்த **குஜ்ரால்** அவர்கள் தமிழகத்திற்கு வருகை தந்தார். 29ஆம் தேதியன்று காலையில் ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து விண்ணில் செலுத்தப்படும் செயற்கைக்கோளைப் பார்ப்பதற்காக அவர் வருகை தந்தார். விமானம் நள்ளிரவில் வந்து சேர்ந்த போது நானும், மத்திய அமைச்சர்கள் **முரசொலி மாறன், டி.ஆர்.பாலு, ஜெயந்தி நடராசன், எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியன்,** மற்றும் தமிழக அமைச்சர்கள், சென்னை மாநகர மேயர் **மு.க.ஸ்டாலின்** ஆகியோர் விமான நிலையத்தில் காத்திருந்த போது - விமானத்திலிருந்து - இறங்கிய பிரமதர் குஜ்ரால் அவர்கள் ''இந்த நள்ளிரவு நேரத்தில் நீங்கள் வர வேண்டுமா?'' என்று அன்புடன் கேட்டு, என்னை அணைத்துக் கொண்டார்.

பிரதமரின் வருகையைப் பயன்படுத்திக் கொண்டு, அன்றைய தினம் ஆளுநர் மாளிகையில், பிரதமரை மாலையில் 4 மணி முதல் 5 மணி வரை சந்தித்து தமிழகத்தின் தேவைகள் பலவற்றை எடுத்துக் கூறினேன்.

குறிப்பாக தமிழக மீனவர்கள்மீது இலங்கை ராணுவ தாக்குதலைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று அன்றைக்கே நான் பிரதமரிடம் பேசும்போது குரல் கொடுத்து, அப்போதே

அது ஏடுகளில் எல்லாம் வெளிவந்துள்ளது. காவேரி பிரச்சினையில் சட்டப் பூர்வ ஆணையம் அமைக்கும் திட்டத்தில் உறுதியாக இருக்க வேண்டுமென்றும் - மண்டல் கமிஷன் பரிந்துரைப்படி மைய அரசின் கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவிகிதம் இட ஒதுக்கீடு மத்திய அரசு செய்ய வேண்டுமென்றும் - மத்திய அரசின் ஊதியக் குழுவின் பரிந்துரைப்படி மாநில அரசு அலுவலர்களுக்கும் ஊதிய உயர்வு அளிக்கத் தேவையான நிதியை மாநில அரசுக்கு மானியமாக அளிக்க வேண்டுமென்றும் -மற்றும் பல கோரிக்கைகளையும் பிரதமரிடம் விளக்கினேன்.

ஆளுநர் மாளிகையில் பிரதமர் அவர்களை நான் சந்தித்த நேரத்தில், த.மா.கா. தலைவர் **மூப்பனார்** அவர்களும் ஆளுநர் மாளிகையில்தான் இருந்தார். அவர் என்னை அங்கே சந்தித்தபோது, தமிழகத்தின் தேவைக்காக என்னென்ன தேவைகளை பிரதமரிடம் எடுத்துக் கூறினேன் என்பதையும் அவரிடம் தெரிவித்தேன்.

காங்கிரஸ் கட்சியின் முடிவிற்கு மாறாக - அ.தி.மு.க.வுடன் உறவு கொள்ள மறுத்த மக்கள் தலைவர், அருமை நண்பர் மூப்பனார் அவர்கள் தலைமையில், தமிழ்நாடு காங்கிரசிலிருந்து பெரும்பான்மையோர் பிரிந்து, **தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சி** என்றதோர் கட்சியினை உருவாக்கி, தேர்தலில் தி.மு.கழகத்தோடு உறவு கொண்டு போட்டியிட்டு மாபெரும் வெற்றியைப் பெற்ற பிறகு -

அப்போது மாநிலங்களவையில் காங்கிரஸ் கட்சியின் சார்பாக உறுப்பினராக வெற்றி பெற்றிருந்த **மூப்பனார், பீட்டர் அல்போன்ஸ், ஜெயந்தி நடராஜன்** ஆகியோரின் நிலை என்ன என்பது கேள்விக் குறியாக இருந்தது. அவர்கள் மூவர் மீதும் கட்சித் தாவல் தடைச் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சிவசேனை உறுப்பினர் **சஞ்சய் நிருபம்** மாநிலங்களவையில் ஒரு மனு கொடுத்திருந்தார்.



பெரியார் பல்கலைக் கழகத்தைத் திறந்து வைத்தேன்

அந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு கட்டும் வகையில், மாநிலங்களவையிலிருந்து மூவரும் ராஜினாமா செய்யலாமா என்று யோசித்து 9-9-1997 அன்று தங்கள் பதவி விலகல் கடிதங்கள் அப்போது மாநிலங்களவைத் தலைவராக இருந்த, குடியரசு துணைத் தலைவர் **கிருஷ்ணகாந்த்** அவர்களிடம் தாக்கல் செய்தனர். இதனால் மூன்று இடங்கள் காலியான நிலையில், இடைத் தேர்தல் வந்தால் அப்போது யாருக்கு எத்தனை இடங்கள் கிடைக்கும் என்பது தமிழகத்தில் பிரச்சினையாகப் பேசப்பட்டது.

அப்போது தமிழகச் சட்டமன்றத்தில் தி.மு.க. உறுப்பினர்களின் எண்ணிக்கை 164 பேர். த.மா.கா. உறுப்பினர்களின் எண்ணிக்கை 39. அந்த நிலையில் தி.மு.க.வின் ஆதரவு இருந்தால் மட்டுமே குறைந்த பட்சம் ஓர் இடத்தையாவது த.மா.கா. பெற முடியும். த.மா.கா. உறுப்பினர்கள் பதவி விலகி காலியான இடங்கள் என்பதால், தி.மு.க அந்தக் கட்சிக்கு ஓர் இடமாவது விட்டுக் கொடுக்குமா? அல்லது மாநிலங்களவையில் தி.மு.க. உறுப்பினர்களின் எண்ணிக்கை பலத்தை அதிகப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று எண்ணினால், அப்போது பதவி விலகியவர்களின் கதி என்னவாகும்? என்றெல்லாம் ஏடுகள் விரிவாக எழுதித் தள்ளின.

நிலைமை இவ்வாறிருந்தபோது, சென்னையில் என்னைச் சந்தித்த செய்தியாளர்களிடம் ''மாநிலங்களவை உறுப்பினர்களுக்கான தேர்தலில் தமிழ் மாநிலக் காங்கிரசுக்கு தி.மு.க. ஆதரவளிக்கும் - அதற்கான தேர்தல் நடக்கும்போது, ஆதரவு கேட்பது அவர்களது உரிமை - ஆதரவு தருவது தி.மு.க.வின் கடமை!'' என்று நானே பெந்தன்மையாகக் கூறினேன்.

தி.மு.க., அந்தத் தேர்தலில் தனக்குக் கிடைக்கக்கூடிய மாநிலங்களவை உறுப்பினர்கள் இடத்தை விட்டுக் கொடுக்காது - தி.மு.க.விற்கும் த.மா.கா.விற்கும் இடையே உறவு முறிவு ஏற்படும் - என்றெல்லாம் நப்பாசையோடு செயல்பட்ட **ஒரு சில கட்சிகள்** அந்த என்னுடைய அறிவிப்பின் காரணமாக மலைத்துப் போயின.

அவர்கள் மூன்று பேரும் மாநிலங்களவையிலிருந்து ராஜினாமா செய்ததால் ஏற்பட்ட காலி இடங்களுக்கான இடைத்தேர்தல் அக்டோபர் மாதம் 16ஆம் தேதி நடைபெறுமென்று அறிவிப்பு வெளிவந்தது. காங்கிரஸ் கட்சி தி.மு.கழகத்திடம் ஆதரவு கோரி வேண்டுகோள் எதுவும் விடுக்காத நிலையில், தி.மு.கழகத்தின் சார்பில் நான், ''மாநிலங்களவைத் தேர்தலில் ஆதரவைக் கேட்பது அவர்களது உரிமை, அதனைக் கொடுப்பது எங்கள் கடமை'' - என்று அறிவித்த பின்னர், மூப்பனார் அதற்காக தனது நன்றியை செய்தியாளர்களிடம் தெரிவித்துக் கொண்டார்.

அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த திரு. **சோ.பாலகிருஷ்ணன்** அளித்த ஒரு பேட்டியில் ''மாநிலங்களவை இடைத் தேர்தலில் மூன்று இடங்களையும் நினைத்திருந்தால் தி.மு.கழகமே எடுத்துக் கொண்டிருக்கலாம் - ஆனால் த.மா.கா.விற்குக் கொடுத்து விட்டனர். த.மா.க.வை எந்த அளவிற்குத் தி.மு.க. மதிக்கிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு'' என்று கூறினார்.


1997ஆம் ஆண்டு அக்டோபர் 1ஆம் தேதி காலையில் தலைமைச் செயலகத்தில், மத்திய அமைச்சராக இருந்த ஜெயந்தி நடராஜனும், மாநிலங்களவை உறுப்பினராக இருந்து பதவி விலகிய பீட்டர் அல்போன்ஸ்சும் என்னைச் சந்தித்து வாழ்த்துப் பெற்று, மாநிலங்களவைத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தவன். மாநிலங்களவைத் தேர்தலில் மூன்று இடங்களுக்கு வேட்பு மனு தாக்கல் செய்வதற்குப் பதிலாக இரண்டு இடங்களுக்கு மட்டுமே வேட்பாளர்களை த.மா.கா. தாக்கல் செய்தது. மூப்பனார் பதவி விலகிய இடத்தில் அவர் மீண்டும் நிற்பதற்கான வேட்பு மனு முதலில்

தாக்கல் செய்யப்படவில்லை. ஆனால் கடைசி நேரத்தில் மூப்பனார் மீண்டும் நிற்காமல், அவரது இடத்தில் **அப்துல் காதர்** வேட்பாளராக அறிவிக்கப்பட்டார். மூவரும் போட்டியின்றி மாநிலங்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இதற்கடுத்த வாரம், அதாவது 8-10-1997 அன்று நான் எழுதிய ''நெஞ்சுக்கு நீதி'' மூன்றாம் பாகத்தின் முதல் பதிப்பும் - இரண்டாம் பாகத்தின் மூன்றாம் பதிப்பும்- முதல் பாகத்தின் ஐந்தாம் பதிப்பும் மற்றும் எனது உரைகள் அடங்கிய ''வழி மேல் விழி வைத்து'' என்ற நூலும் சென்னையில் பேராசிரியர் தலைமையில் வெளியிடப்பட்டன.

நூல்களின் முதல் பிரதியை சுதந்திரப் போராட தியாகி **செங்கல்வராயன்** அவர்கள் பெற்றுக் கொண்டார். **துரை முருகன்** வரவேற்புரையாற்றினார். தவத்திரு **குன்றக்குடி அடிகளார்**, **கவிக்கோ அப்துல் ரகுமான்**, ஆசிரியர் **சாவி**, முன்னாள் துணை வேந்தர் **ஆனந்த கிருஷ்ணன்** ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இறுதியாக நான் ஏற்புரையாற்றினேன். அப்போது நான் பேசும்போது, அந்த மூன்றாம் பாகத்தின் முடிவில் ''நான்காம் பாகத்தை எழுதுவேன் என்ற நம்பிக்கை இல்லாமல் அதை எழுதுகின்ற சூழ்நிலையை இயற்கைக்கே விட்டு விடுகிறேன்'' என்று குறிப்பிட்டிருந்தேன். ஆனால் அதன் பின்னர் நான்காம்



டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தைத் திறந்து வைக்க வந்த குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணனை மூப்பனாரும், முரசொலி மாறனும் வரவேற்றனர்.

பாகத்தை நானே எழுதி முடித்து, அதன் வெளியீட்டு விழாவும் நடைபெற்று முடிந்து - தற்போது ஐந்தாவது பாகத்தையும் தொடர்ந்து எழுதி வருகின்றேன்.



கே.ஆர். நாராயணன் நட்புணர்வுடன் என்னைத் தழுவினார்.

மூன்றாம் பாகத்தின் வெளியீட்டு விழாவில், அண்ணாவின் நெருங்கிய நண்பரும், உண்மையான தியாகியும், கேட்கக் கேட்க இனிக்கும் விதத்தில் ஆங்கிலத்திலும், தமிழிலும் பேசக் கூடிய பேச்சாளருமான பெரியவர் **செங்கல்வராயன்** அவர்கள் பேசியது இத்தொடரில் இடம் பெற்றாக வேண்டிய பேச்சாகும். அது -

''இந்த இனிய விழாவில் இந்த முதல் நூலினைப் பெறும் வாய்ப்பினை எனக்குக் கொடுத்திருக்கிறார்கள். இந்தப் பெருமையை எப்படித் தாங்க முடியுமென்று நான் எண்ணிப் பார்த்தபோது, ஒரே ஒரு தகுதிதான் எனக்கு இருக்கிறதென்று தெரியவந்தது. அது என்னவென்றால், டாக்டர் கலைஞர் அவர்களின் மீது நான் கொண்டிருக்கின்ற மதிப்பும், மரியாதையும், அன்பும், பாசமும் தான்.''

''டாக்டர் கலைஞர் அவர்களைப் பற்றி நான் என்ன சொல்ல முடியும் என்றால், ஒன்றைத்தான் உங்களுக்குச் சொல்ல முடியும். அறுபத்தி ஐந்தாண்டு கால என்னுடைய அரசியல் வாழ்வில் நான் கண்ட அரசியல் தலைவர்களில் மிகப் பெரிய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள். கலைஞரைப் பற்றி என்னுடைய ஆத்ம நண்பர் பேரறிஞர் அண்ணா அடிக்கடி என்னிடத்திலே சொல்வதுண்டு, ''கலைஞர் கொள்கைப் பிடிப்பாளர் - எதையும் திறமையாகச் செய்யக் கூடியவர் -



''இந்த நள்ளிரவில் நீங்களும் வரவேண்டுமா?'' என்று கேட்டார், பிரதமர் குஜ்ரால்

மக்கள் சேவையே தொண்டு என்று நினைக்கக் கூடியவர்'' என்று கூறினார். அதெல்லாம் கலைஞரின் வாழ்க்கையில் எவ்வளவு உண்மையாக இருந்து வருகின்றதென்பதை கண்டு வருகிறேன்.''

''கலைஞர் அவர்கள் பெரியார் இயக்கத்தில் தன்னை அர்ப்பணித்து, அண்ணா தலைமையில் தொண்டாற்றி, சிறந்த முறையில் ஒரு அரசியல் பாதை வகுத்துக் கொண்டவர். கலைஞர் அவர்களின் துடிப்பு, திறமை அனைத்தையும் ஒன்று சேர்த்து தனக்கென்று வாழாமல் பொது மக்களின் முன்னேற்றத்திற்காக - தமிழ்நாட்டின் நல்வாழ்விற்காக அவர் எடுத்துச் செய்யும் மகத்தான காரியங்களைப் பார்க்கும்போது நான் மிகவும் பூரிப்படைந்து வருகிறேன்.''

''கலைஞர் அவர்கள் தனது வாழ்க்கையில் எவ்வளவு அடர்ந்த காடுகளைக் கடந்தார்? எவ்வளவு குன்றுகளில் ஏறி இறங்கினார்?காயும் வெயிலிலும், கொட்டும் மழையிலும் அவர் எப்படி தன்னுடைய அரசியல் பாதையைக் கடந்தார் என்பதைப் பார்க்கும்போது, அந்த வரலாற்றுப் பெருமை சிலருக்குத்தான் கிடைக்கும்.''

''அரசியல்வாதிகளுக்கு போராட்டங்கள் வருவதுண்டு - ஆனால் கலைஞர் அவர்களுக்கோ அவரது வாழ்க்கையே போராட்டமாக அமைந்தது. வேறு எந்த அரசியல் வாதிகளிடமும் அவர் துவண்டு விட்டாரா என்றால், இல்லை. கலைஞர் ஒரு பக்கம் கட்சியைக் கட்டிக் காத்து - இன்னொரு பக்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்று - மற்றொரு பக்கம் நிர்வாகத்தைத் திறமையாக நடத்தி -தேசிய அளவில் மேலான



''நெஞ்சுக்கு நீதி'' மூன்றாம் பதிப்பைப் பேராசிரியர் வெளியிட தியாகி செங்கல்வராயன் பெற்றுக் கொண்டார்.

யோசனைகளைச் சொல்லி வரும் வேலைகளுக் கிடையே இந்த நூலையும் எழுதினாரே, இதை எப்படித்தான் எழுதினாரோ என்று வியந்தேன்.''

''சரித்திரம் எழுதுகின்றவர்கள் பலர் இருக்கிறார்கள். ஆனால் சரித்திரத்தைப் படைத்த சிலரில் கலைஞர் முன்னணியில் இருக்கின்றார் என்று நூலின் மூலமாகத் தெரிகிறது. இந்திய அரசியல் வரலாற்றில் மிகச் சிறந்த - போற்றுதலுக்குரிய தலைவர் ஒருவரைப் பார்க்க முடியுமென்றால் அது என் ஆத்ம நண்பர் கலைஞர் அவர்கள்தான்.''

அண்ணாவின் சிந்தைக்கினிய நண்பர் செங்கல்வராயன் அவர்களின் வாழ்த்து, என்னை அண்ணாவே மீண்டும் வந்து வாழ்த்தியது போல் இருந்தது!

27. சாதனைச் சிகரம்; சமத்துவபுரம்!

தமிழன் மானத்தோடு வாழ்வதற்கு கலைஞரின் ஆட்சித்தான் தேவை - தந்தை பெரியார்

1997ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக அரசு அறிவித்து நடைமுறைப்படுத்திய ஒரு அற்புதமான திட்டம்தான் **''பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம்''**. அந்தத் திட்டம் தொடங்கப்பட்டபோது, புகழ்பெற்ற ஆங்கில வார ஏடான **''அவுட் லுக்''** இதழில் அதன் செய்தியாளர் ஏ.எஸ். பன்னீர்ச் செல்வம் திருநெல்வேலியிலிருந்து ஒரு கட்டுரை தீட்டியிருந்தார். அந்தக் கட்டுரையைப் படித்தாலே சமத்துவபுரம் திட்டம் என்றால் என்ன என்பதைப் பற்றி விளக்கிக் கொள்ளலாம். அந்தக் கட்டுரைக்குத் தலைப்பே "D.M.K. as Social Engineer - Chief Minister M. Karunanidhi flags off his dream project, Samathuvapuram - Villages of Harmony"

''இது திராவிட இயக்கத்தில் ஒரு புதிய திட்டம் என்று தி.மு.க. ஆதரவாளர்களால் கூறப்படுகிறது. ஏறக்குறைய எண்பது ஆண்டுகள் சமூக நீதிக்காகப் போராடியபின், தற்போது தி.மு.கழகம் தீண்டாமையையும், தலித்துகள் மீதான அடக்குமுறையையும் எதிர்த்துப் போராட தீர்மானித் திருப்பதாகத் தெரிகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதியால் 15 நாட்களுக்குமுன் அறிவிக்கப்பட்ட பேராவலுடன் கூடிய சமுதாய நிர்மாணத் திட்டமான **''சமத்துவபுரம்''** அந்தத் திசையில் எடுக்கப்பட்ட முதல் நடவடிக்கையாகும்.''

''மாநிலத்தின் தென் மாவட்டங்களில் கடுமையான சாதிக் கலவரங்கள் பீடித்திருந்த நேரத்தில் இந்த **''நல்லிணக்க கிராமங்கள்''** திட்டம் வந்தது. கருணாநிதியால் இந்த

மாபெரும் திட்டத்தின்படி அனைத்து சாதிகளைச் சேர்ந்தவர்களும் ஒற்றுமையுடன் வாழும் 100 கிராமங்கள் உருவாக்கப்படவுள்ளன. இந்தச் சமத்துவபுர கிராமங்களில் 100 குடும்பத்தினர் வாழ்வார்கள். அவர்களில் 40 பேர் தலித்துக்களாக இருப்பர். இந்தக் கிராமங்கள் ஒவ்வொன்றையும் 10 ஏக்கர் பரப்பளவில் உருவாக்க முடியும் என்று அரசு நம்புகிறது. ஒவ்வொரு ஒதுக்கீட்டாளரும் 5 சென்ட் நிலத்தையும், ஒரு வீட்டைக் கட்டிக் கொள்ள ரூ.35 ஆயிரம் மானியத்தையும் பெறுவர். ஒரு முக்கியமான முன் நிபந்தனை - அடுத்த வீட்டுக்காரர்கள் வெவ்வேறு சாதியைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும்.''

''இத்திட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முதல் கிராமம் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள **அழகிய பாண்டியபுரம்.** 3,321 மக்கள் தொகையைக் கொண்டது அந்தக் கிராமம். இந்த மாவட்டத்தில் சாதி வன்முறை தலை விரித்தாடியபோது ஒரு சமாதானத்திற்கான பாலைவனச் சோலையாகத் திகழ்ந்தது இந்தக் கிராமம். மிகவும் பாதிப்படையக்கூடிய இரு நகரங்களான ராஜ பாளையத்திற்கும், கொடியங்குளத்திற்கும் இடையில் இந்த ஊராட்சி சிக்கிக் கொண்டிருந்தாலும், அந்தக் கிராமத்தில் உள்ள முதியவர்கள் சகோதரத்துவ வன்முறையைத் தவிர்ப்பதற்கு முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் மேற் கொண்டதால் இந்த ஊராட்சி வன்முறை வெறியிலிருந்து தப்பியது.''

''இங்கே வசிப்பவர்கள் திருமணங்கள் மற்றும் சடங்குகளை இந்தக் கிராமத்தில் கட்டப்படும் சமுதாயக் கூடத்தில்தான் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். சமுதாயக் கூடம் ஒரு பொதுவான வழிபாட்டுத்தலமாக இருக்கும். அங்கே ஒரே ஒரு இடுகாடும், ஒரே ஒரு சுடுகாடும் மட்டுமே இருக்கும். அங்கே வசிக்கும் மக்கள் இந்தப் பொதுவான இடுகாடு அல்லது சுடுகாட்டைத்தான் பயன்படுத்த வேண்டும்.''

- கட்டுரை மிகவும் நீளமானது. இத்துடன் அதனை நிறுத்திக் கொள்கிறேன். இந்தச் சமத்துவபுரங்களை நிர்மாணிக்கும்

எண்ணம் எனக்குத் தோன்றியதற்கான மூல காரணம், நான் சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு எழுதிய ''ஒரே இரத்தம்'' என்ற புதினம். தம்பி மு.க.ஸ்டாலின் நடித்து அது திரைப்படமாகக்கூட வெளிவந்திருக்கின்றது. அந்தப் படத்தில் உயர் சாதிக்கார வாலிபன் ஒருவன் முற்போக்குக் கருத்துக்களைச் சொல்வான். ''சாதி கூடாது - மதம் கூடாது - எல்லோரும் ஓர் குலம் - ஒன்றே குரல் - ஒருவனே தேவன்'' என்ற கருத்தைச் சொல்வான்.


ஆனால் பிற்படுத்தப்பட்ட மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் ஒருவரோடொருவர் மோதிக் கொள்வார்கள். அவர்களுக்கிடையே நுழைந்து அந்த உயர் சாதிக்கார வாலிபன் சொல்வான் - ''என்னை - எங்களைக் குற்றம் சொல்கிறீர்களே, நீங்கள் உங்களுக்குள் மோதிக் கொள்கிறீர்களே, நியாயமா?'' என்று கேட்டு விட்டுத் தொடர்வான். ''ஐயா! புராண காலத்திலே புலியும், மானும் ஒரே துறையில் தண்ணீர் குடித்த தாகக் கதை எழுதுவார்கள். இந்தக் காலத்தில் புலியும், மானும் கூட ஒரே துறையிலே தண்ணீர் குடிக்க வேண்டாம் - மானும் மானுமாவது ஒரே துறையிலே தண்ணீர் குடிக்கக் கூடாதா?'' என்று கேட்பான். இதனை 25 ஆண்டுகளுக்கு முன்பு நான் எழுதியிருக்கிறேன்.

அந்த எண்ணத்தை மனதிலே வைத்துத்தான் தமிழகமெங்கும் சமத்துவபுரங்களை உருவாக்கும் திட்டத்தை



சாதி வன்முறை ஒழிய உருவாக்கப்பட்ட சமத்துவபுரங்கள் சாதனைச் சிகரம்!

அறிவித்தேன். அது மாத்திரமல்ல - என்னுடைய வீட்டை எடுத்துக் கொண்டால் அதுவே ஒரு சமத்துவ புரம்தான். என்னுடைய வீட்டில் நாடார் உண்டு - நாயுடு உண்டு - என்னுடைய மருமகள் ஆதி திராவிடப் பெண், அதைப் போலவே ஒரு ஆதி திராவிட வாலிபனுக்கு என் பேத்தியைத் திருமணம் செய்து கொடுத்திருக்கிறேன். எனவேதான் என் வீடே ஏறத்தாழ ஒரு சமத்துவ புரம் என்று கூறினேன். என் வீட்டைப் போலவே தமிழ்நாடே சமத்துவ புரமாக மாற வேண்டுமென்பதுதான் என் கனவு.



வேறு யாரும் செய்ய நினைக்காத காரியங்களை - யாராலும் செய்ய முடியாத காரியங்களை கலைஞர் உற்சாகமாக செய்து முடிக்கிறார்.

-தந்தை பெரியார்

1997ஆம் ஆண்டு என்னால் தொடங்கி வைக்கப்பட்ட இந்தப் பெரியார் நினைவு சமத்துவபுரத்திட்டம் 2001ஆம் ஆண்டு ஆட்சி மாறுவதற்கு முன்பு வரையில் 145 சமத்துவபுரங்கள் தமிழகத்திலே அமைந்தன. பிறகு அந்தப் புரட்சித் திட்டம் அப்படியே கிடப்பிலே போடப்பட்டு விட்டது. ஆனால் 2006ஆம் ஆண்டு தி.மு.கழக ஆட்சி அமைந்த பிறகு, பெரியார் வாழ்ந்த 95 வயதினை நினைவிலே கொண்டு, மேலும் 95 புதிய சமத்துவபுரங்களை அமைப்பதோடு - ஏற்கனவே அமைந்த, மற்றும் தற்போது அமையவுள்ள 240 சமத்துவபுரங்களின் முகப்பிலும் தந்தை பெரியார் அவர்களின் சிலைகள் நிறுவப்படும் என்று நான் அறிவித்ததின் அடிப்படையில் முதற்கட்டமாக 2008-2009இல் சென்னை, நீலகிரி மாவட்டங்கள் தவிர, அனைத்து மாவட்டங்களிலும் தலா ஒரு சமத்துவபுரம் வீதம் 29 சமத்துவபுரங்களை அமைப்பதற்கு அரசு முடிவு செய்து, அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்தச் சமத்துவபுரங்களின் வெளி முகப்பிலே வைப்பதற்கான தந்தை பெரியார் அவர்களின் சிலையின்

மாதிரி வடிவத்தை கடந்த சில நாட்களுக்கு முன்பு உள்ளாட்சித் துறை அமைச்சர் என்ற முறையில் தம்பி மு.க.ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில் கொண்டு வந்து காட்டினார். சிற்பி தீனதயாளனிடம் சில திருத்தங்களைச் செய்யச் சொல்லியிருக்கிறேன்.

பெரியார் நினைவு சமத்துவபுரங்களைப் பற்றி எழுதும்போது - தந்தை பெரியார் அவர்கள் நான் இரண்டாவது முறையாக முதலமைச்சராக இருந்த போது, புலவர் கா. முத்துசாமி அவர்கள் ஆசிரியராகக் கொண்டு மதுரையில் இருந்து வெளிவரும் **''நமது நல்லாசிரியர் குரல்''** என்ற இதழுக்கு அளித்த பேட்டி ஒன்றை சில நாட்களுக்கு முன்பு காணுகின்ற வாய்ப்பினைப் பெற்றேன். பெரியார் அளித்த பேட்டியில் சில பகுதிகள்:-

கேள்வி:- கலைஞர் அவர்கள் தங்களிடம் பணியாற்றியபோது, அவரிடம் தாங்கள் கண்ட நிறை என்ன? குறை என்ன?

பெரியார்:- சொன்னதை எல்லாம் ஒழுங்காகவும், சிறப்பாகவும் செய்வார். பாராட்டும்படி பணி புரிந்தார். அவரிடம் நிறைவைக் கண்டேன்- குறை இல்லை.

கேள்வி:- கலைஞர் அவர்களுடைய எழுத்தாற்றலைப் பற்றி தங்கள் கருத்து என்ன?

பெரியார்:- எந்த விஷயத்தையும் எழுதுவார். திறமையாகவும் எழுதுவார்.

கேள்வி:- கலைஞர் அவர்களுடைய கலைப் பணியைப் பற்றி தங்கள் கருத்து என்ன?

பெரியார்:- அவருடைய நாடகம், சினிமா எல்லாம் சிறப்பாக இருக்கு - மக்கள் கூட்டம் கூட்டமாக ரசிக்கிறார்கள் என்று பலர் என்னிடம் கூறியிருக்காங்க.

கேள்வி: - கலைஞர் அவர்கள் தங்களிடம் ஆலோசனைக் கேட்பது உண்டா?

பெரியார்:- நிறையக் கேட்பார்; கேட்டுக் கொண்டு இருக்கிறார்.

கேள்வி: - அவைகளில் முக்கியமானது எது?

பெரியார்:- எல்லாமே முக்கியம்தான்!

கேள்வி:- உங்களுடைய ஆலோசனைகளை ஏற்றுச் செயல் படுகிறாரா?

பெரியார்:- நான் சொன்னாலும் அவருக்குச் சரி என்று பட்டால்தான் செய்வார்.

கேள்வி:- கலைஞர் அவர்களுடைய செயல்களில் தங்களுக்கு விருப்பமானது எது?

பெரியார்:- நிறைய இருக்கு. அவருடைய தமிழ் உணர்வு - பகுத்தறிவு - மக்களுக்காக நிறைவேற்றும் திட்டங்கள் - எல்லாம் எனக்கு விருப்பமானவை.


கேள்வி:- கலைஞர் அவர்கள் மக்களில் ஒருவராக - மக்களோடு தொடர்பு கொண்டு செலாற்றுகிறார். அவரிடம் முதலமைச்சர் என்ற அதிகார வெறி இல்லை. ஆனால், சிலர் ஆர்ப்பாட்டம் செய்து அவர்களுக்குச் தொல்லை கொடுத்திருக்கிறார்களே ஏன்?

பெரியார்:- எதிரிகளுக்கு வேறு வழியில்லை. எப்படியாவது, யாரையாவது தூண்டி விட்டு, பதவிக்கு வர முயற்சி செய்கிறார்கள். அதனால் சிலரைத் தூண்டி விடுகிறார்கள். புரியாமல் சிலர் ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள்.

கேள்வி:- கலைஞர் அவர்களுடைய ஆட்சியைப் பற்றி தங்களுடைய கருத்து என்ன?

பெரியார்:- வேறு யாரும் செய்ய நினைக்காத காரியங்களை -வேறு யாராலும் செய்ய முடியாத காரியங்களை கலைஞர் உற்சாகத்தோடும். - ஊக்கத்தோடும் நன்றாகச் செய்கிறார். தமிழன் மானத்தோடு வாழ்வதற்கு கலைஞரின் ஆட்சிதான் தேவை.

★ ★ ★



''சாதி கூடாது - மதம் கூடாது- எல்லோரும் ஓர் குலம் - ஒன்றே குலம் - ஒருவனே தேவன்''- என்று நான் எழுதி, ஸ்டாலின் நடித்த திரைப்படம் 'ஒரே இரத்தம்'

இதற்கிடையே இங்கிலாந்து ராணி **எலிசபெத்** அவர்கள் தனது கணவர் **எடின்பரோ கோமகனுடன்** *15.10.1997* அன்று இரவு சென்னை வந்தார். விமான நிலையத்தில் சிறப்பான முறையில் அவருக்கு சிவப்புக் கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. தமிழகத்திற்கு மூன்று நாள் பயணமாக வருகை தந்த அவரை ஆளுநர் பாத்திமா பீவி, நான், மற்றும் தமிழக அமைச்சர்கள் வரவேற்றோம்.

அதற்கடுத்த நாள், *16.10.1997* அன்று **கலைஞானி கமல்ஹாசன்** நடித்து, தயாரிக்க முயற்சித்த **''மருத நாயகம்''** திரைப்படத்தின் தொடக்க விழாவில் நானும், மூப்பனார் அவர்களும், **ராணி எலிசபெத்** அவர்களும் கலந்து கொண்டோம். **வீரபாண்டிய கட்டபொம்மன்** கயத்தாறு புளிய மரத்தில் தூக்கில் தொங்கிவிடப்பட்ட நாள் அக்டோபர் *16*ஆம் நாள். கட்ட பொம்மனின் நினைவு நாளான அதே அக்டோபர் *16*ஆம் நாள் ''மருதநாயகம்'' திரைப்படத்திற்கான தொடக்க விழா நடத்தப்பட்டது. அந்த விழாவிலே பேசும்போதுதான் கமல்ஹாசன் அவர்களுக்கு **''கலைஞானி''** என்ற விருதினைச் சூட்டினேன். கமல் தொடங்கிய அந்த மகத்தான கலைச் சித்திரம் அவருக்கு நேரம் கிடைக்காத காரணத்தாலோ- அல்லது வேறு என்ன காரணத்தாலோ முழுமை பெறாமல் உள்ளது.

திராவிட இயக்கத்தின் மூத்த தலைவர்களில் ஒருவரான **என்.வி. நடராசன்** அவர்களின் மூத்த மகனும் - மத்திய அரசின் பாதுகாப்புத் துறை இணை அமைச்சராகத் திறம்படப் பணியாற்றிக் கொண்டிருந்தவரும் - என்னுடைய அருமைத் தம்பியுமான **என்.வி.என்.சோமு** அவர்கள் இந்தியாவின் வட கிழக்கு மாநிலங்களில் சுற்றுப் பயணம் மேற்கொள்வதற்காக

13.11.1997 அன்று டெல்லியிலிருந்து விமானத்தில் புறப்பட்டார். கொல்கத்தா வழியாக, அருணாசலப் பிரதேசம் சென்றடைந்த அவர், 14.11.1997 அன்று காலை 8.25 மணியளவில், அருணாசலப் பிரதேசத்தில் உள்ள சவாங் எனும் இடத்திலிருந்து விமானப் படையின் ''சேடக்'' ரக ஹெலிகாப்டர் மூலம் பணி காரணமாகப் புறப்பட்டார். காலை 9.05 மணியளவில் சோமு பயணம் செய்த ஹெலிகாப்டருக்கும், விமானக் கட்டுப்பாட்டு அறைக்கு மிடையேயிருந்த தொடர்பு அறுந்தது.

அதன் பின்னர் பகல் 12 மணி அளவில் தான் சோமு பயணம் செய்த ஹெலிகாப்டர் விபத்துக்கு உள்ளானது கண்டுபிடிக்கப் பட்டது. அடர்ந்த காட்டுப் பகுதியில் ஹெலிகாப்டர் விழுந்து நொறுங்கிக் கிடந்தது தெரிந்தது. அந்த விபத்தில் **என்.வி.என்.சோமு** அவர்களும், அவருடன் பயணம் செய்த **மேஜர் ஜெனரல் ஆர்.சி.நக்பால்,** விமானப் படையைச் சேர்ந்த விமான ஓட்டிகள் **அகர்வால், சர்மா** ஆகியோரும் உயிர் இழந்தனர்.

விபத்து நடந்த இடத்திலிருந்து என்.வி.என். சோமுவின் உடல் **தேஜ்பூர்** எனும் இடத்திற்குக் கொண்டுவரப்பட்டு, அங்கிருந்து விமானப் படை விமானம் மூலம் சென்னைக்கு 14.11.1997 அன்றிரவு கொண்டு வரப்பட்டது. சென்னை விமான நிலையத்தில் சென்னை மாநகர மேயராக இருந்த **மு.க.ஸ்டாலின்,** அமைச்சர் **ஆர்க்காடு வீராசாமி,** தரைப்படையின் தளபதி மேஜர் **ஜெனரல் நக்ரா** ஆகியோர் சோமுவின் உடலைப் பெற்று, புரசைவாக்கத்தில் உள்ள அவரது வீட்டிற்குக் கொண்டு சென்றார்கள்.

கழகத்தின் தலைமைச் செயற்குழு உறுப்பினர், முன்னாள் அமைப்புச் செயலாளர் என்ற முறையில் கழகக் கொடிகள் மூன்று நாட்களுக்கு அரைக் கம்பத்தில் பறக்க விடவும், கழக நிகழ்ச்சிகளை ரத்து செய்யவும் தலைமைக் கழகம் அறிவிப்பு செய்தது.



கலைஞானி கமல்ஹாசனின் மருதநாயகம் திரைப்படத்தின் தொடக்க விழாவில் கலைஞரும் - கமலும்

நான் விடுத்த இரங்கல் செய்தியில், முன்னேற்றக் கழகத்தின் முன்னணி வீரர்களில் ஒருவரும் - கழகத்தின் செயற்குழு உறுப்பினரும் - கழக அமைப்புச் செயலாளராக திறம்படப் பணியாற்றிய வரும் - மத்திய அரசின் பாதுகாப்புத் துறை இணை அமைச்சராக விளங்கியவருமான என்னுடைய அருமைத் தம்பி என்.வி.என். சோமு அவர்கள், அருணாசலப் பிரதேசத்திற்குப் பாதுகாப்புப் பணி குறித்த அலுவல் காரணமாகச் சென்றபோது, ஹெலிகாப்டர் விபத்துக்கு உள்ளாகி அவரும், அவருடன் நான்கு பேரும் உயிரிழந்தார்கள் என்ற செய்தி கேட்டு தாங்க முடியாத. அதிர்ச்சிக்கு ஆளாகியிருக்கிறேன். தம்பி சோமு இந்த இயக்கத்திற்கு இரத்த நாளமாக இருந்து ஆற்றியுள்ள அரும் பணியை யாராலும் மறக்க முடியாது. இனிய சுபாவம், எளிய வாழ்க்கை முறை, எல்லோரிடத்திலும் சகோதரப் பாசத்தோடு பழகுகின்ற பண்பு - இதற்கெல்லாம் உறைவிடமாக இருந்த என் உயிரனையே அந்த உடன் பிறப்பு இன்று இல்லை. திடீரென்று மரணம் அவரை மாயமாய்த் தழுவிக் கொண்டது. அவருடைய குடும்பத்தாருக்கும் - மனைவி, மக்களுக்கும் - அவரை இழந்து தவித்துக் கொண்டிருக்கின்ற இந்தப் பெரும் குடும்பமாம் கழகக் குடும்பத்தில் உள்ள உடன் பிறப்புகள் அனைவருக்கும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.''


தம்பி என்.வி.என். சோமுவை மத்திய அமைச்சராக ஆக்கியதே நான்தான். இன்னும் சொல்லப் போனால், அவர் இவ்வாறு அகால மரணமடைவதற்குச் சரியாக இரண்டு மாதங்களுக்கு முன்புதான் 11.9.1997 அன்று தான் என்.வி.என். சோமுவின் அன்பு மகள் கனிமொழியின் திருமணத்தை நான் சென்னையிலே தலைமையேற்று நடத்தி வைத்தேன். அந்த

மணவிழாவிற்கு வருகை தந்த முலாயம் சிங் யாதவ் அவர்கள் எனக்கு பக்கத்திலே அமர்ந்திருந்தபோது , ''சோமு உங்களுக்கு மிகவும் விசுவாசமானவர்'' (Somu is very loyal to you) என்று சொன்னார்.

அவரிடம் நான், ''அவர் எனக்கு விசுவாசமாக இருப்பது மாத்திரமல்ல, இந்தக் கட்சிக்கு விசுவாசமானவர், கொள்கைக்கு விசுவாசமானவர்'' என்று கூறினேன்.

அதையே மண விழாவில் பேசும்போதும் கூறி, ''நாமெல்லாம் சோமுவினுடைய மன உறுதியை, கொள்கை உறுதியைப் பாராட்டுவதைவிட - அவர் தலைமையிடத்திலே வைத்திருக்கின்ற விசுவாசத்தை நமக்கு நாமே பாராட்டிக் கொள்வதை விட - வடக்கே இருந்து வந்து முலாயம்சிங் யாதவ் போன்றவர்கள் பாராட்டுகின்ற நேரத்திலேதான் - நம்முடைய குழந்தையை நாம் எடுத்து கண்ணல்ல, ராஜா அல்ல, மணியல்ல என்று கொஞ்சும்போது பெறுகின்ற இன்பத்தைவிட, பக்கத்து வீட்டிலே உள்ளவர்கள் - எதிர் வீட்டிலே உள்ளவர்கள் எடுத்துக் கொஞ்சுகின்ற நேரத்திலே ஒரு தாய்க்குப் பிறக்கின்ற இன்பத்தைப்போல, தம்பி சோமுவைப் பற்றி முலாயம்சிங் யாதவ் இங்குக் குறிப்பிட்டபோது, நான் அந்த அளவிற்குப் பெருமை கொண்டேன்- பெருமிதம் கொண்டேன் - பெரு மகிழ்ச்சி கொண்டேன்'' என்றெல்லாம் பேசினேன்.

''மேலும் சோமுவைப் போன்றவர்கள் இந்த இயக்கத்திலே இருக்கின்ற காரணத்தால்தான் - அவருடைய தந்தையார் என்.வி.என். அவர்களைப் போன்றவர்கள் இருந்த காரணத்தினாலே தான் - எத்தனையோ சோதனைகள், சோதனைகள், சுழன்றடித்த சூறாவளிகள், குலுங்க வைத்த பூகம்பங்கள் எல்லாம் இந்த இயக்கத்திற்கு வந்த போதும்கூட அத்தனையையும் சமாளித்து இன்றைக்கு நிமிர்ந்து நின்று நடைபோடுகிறது என்றால், அதற்குக் காரணம் சோமுவைப் போன்ற ஏராளமான தொண்டர்கள், தூய உள்ளம் படைத்தவர்கள் இந்த இயக்கத்திலே இருப்பதால்தான்! என்.வி.என். அவர்களின் இறுதிக் கட்டத்தில் - கடைசியாக



மருதநாயகம் பட விழாவில் வருகை தந்த இங்கிலாந்து ராணி எலிசபெத்துடன் முதல்வர் கலைஞர்

அவர் நீள்துயில் கொள்ளப் போகிற அந்த நேரத்தில் - என்னை அழைத்து, அவருடைய குடும்பத் தாரையும் பக்கத்திலே வைத்துக் கொண்டு, தம்பி சோமுவின் கையையும் என்னுடைய கையையும் இணைத்து, சோமுவிடத்திலும், அவரது குடும்பத் தாரிடத்திலும் ஒரு உறுதிமொழியைச் சத்தியம் செய்து பெற்றார். ''கழகத்திற்கும், கலைஞருக்கும் எந்தக் காலத்திலும் நாங்கள் துரோகம் செய்யமாட்டோம் என்று சத்தியம் செய்து கொடுங்கள்'' என்று சொன்னார். அந்த உறுதியை கடைசிவரையிலே தம்பி சோமு ஒருவர்தான் காப்பாற்றி வருகிறார் - காப்பாற்றி வந்திருக்கின்றார். எனவே அந்த உறுதிக்கு என்னுடைய பாராட்டுக்களை - வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றெல்லாம் அந்த மணவிழாவிலே பாராட்டி உரையாற்றினேன்.

என்.வி.என்.சோமு அவர்கள் சின்னஞ் சிறு குழந்தையாக இருந்தபோதே, குழந்தைப் பருவத்திலேயே தன்னுடைய தாயாரோடு இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் 1938ஆம் ஆண்டு சிறைச்சாலையிலே இருந்தவர் என்ற பெருமைக்குரியவர். 1968ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1973ஆம் ஆண்டுவரை அந்தப் பொறுப்பிலே இருந்தவர். 1971-72ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சியின் துணை மேயராகவும் சோமு பொறுப்பேற்றிருந்தார். 1980 ஆம் ஆண்டு பூங்கா நகர் தொகுதியிலிருந்து தமிழகச் சட்டமன்றத்திற்குத் தேர்ந் தெடுக்கப்பட்டு - 84ஆம் ஆண்டுவரை சிறப்பாகப் பணியாற்றியவர் அவர்.

1984ஆம் ஆண்டு தமிழகச் சட்ட மன்றத்துக்கும், நாடாளுமன்றத்துக்கும் பொதுத் தேர்தல் நடத்தப் பட்டது. இந்திரா காந்தி மறைந்து, எம்.ஜி.ஆர். அவர்கள் நோய்வாய்ப் பட்டிருந்த நேரம் அது. அந்தத் தேர்தலில் வடசென்னை பாராளுமன்றத் தொகுதியில் போட்டியிட்ட என்.வி.என்.சோமு மட்டுமே தி.மு.கழகத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1996ஆம் ஆண்டு வட சென்னை நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட்டு, இரண்டாம் முறையாக வெற்றி பெற்று ஜூலை மாதம் 3ஆம் தேதியன்று, மத்தியில் தேவகவுடா அமைச்சரவையிலும், அதன்பின் ஐ.கே.குஜ்ரால் அமைச் சரவையில் பாதுகாப்புத் துறை இணை அமைச்சராகவும் இருந்த சோமு அவர்கள், நான்கரை மாதங்கள் மட்டுமே அந்தப் பதவியிலிருந்துவிட்டு இயற்கை எய்தினார்.

கழகப் பணியில் தீவிர ஆர்வத்துடன் பணி புரிந்த சோமு, தலை சிறந்த தொழிற்சங்கவாதியாகவும் திகழ்ந்தார். ''இந்து'' நாளேட்டின் தொழிற்சங்கத் தலைவராக 1967ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து பொறுப்பு வகித்து வந்த பெருமையும், சிறப்பும் அவருக்குண்டு. மேலும் ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' அசோக் லேலண்ட், எம்.ஆர்.எப்., சிம்சன் - உள்ளிட்ட பெரிய தொழிற்சாலைகளின் தொழிற்சங்கங்களிலும் தலைவராக இருந்து அரும்பணியாற்றியவர் அவர்.

என்.வி.என். சோமுவிற்கு இறுதி அஞ்சலி செலுத்த பிரதமர் **ஐ.கே.குஜ்ரால்,** திருமதி **ஷீலா குஜ்ரால்,** முன்னாள் பிரதமர் **வாஜ்பாய்** ஆகியோர் சென்னைக்கு வருகை தந்திருந்தனர். பிரதமர் குஜ்ரால் அவர்களும், வாஜ்பாய் அவர்களும், மத்திய அரசில் இருவரும் எதிரெதிர் கட்சிகளுக்குத் தலைவர்கள். எனினும் இருவரும் ஒரே விமானத்தில் சென்னைக்கு வந்து அதே விமானத்தில் திரும்பினர் எனும்போது எந்த அளவிற்கு ஜனநாயகமும், நட்புணர்வும் அந்த இரண்டு தலைவர்களிடத்திலும் இருந்தது என்பதற்கு அது உதாரணமாக விளங்கியது. இரண்டு தலைவர்களும் விமானத்திலிருந்து இறங்கி, நேராக என்னுடைய இல்லத்திற்கு வந்து எனக்கு ஆறுதல் கூறிவிட்டு - பிறகு என் வீட்டிலேயே சிறிது நேரம்



''பத்தரை மாற்றுத் தங்கக்கட்டி பறிபோனதே!'' -விபத்தில் காலமான என்.வி.என்.சோமுவைப் பற்றி கலைஞர்

ஓய்வெடுத்துக் கொண்டு பின்னர் சோமுவின் இல்லத்திற்குச் சென்று அஞ்சலி செலுத்தினோம்.

சோமுவின் உடலுக்கு மரியாதை செலுத்த மத்திய ராணுவத் துறை அமைச்சராக அப்போதிருந்த **முலாயம் சிங் யாதவ்** இந்திய விமானப் படையின் சிறப்பு விமானம் மூலம் சென்னை வருகை தந்து, அனைவருக்கும் ஆறுதல் கூறினார்.

பின்னர் சோமுவின் உடல் ராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டது. உடலைப் பெற்றுக் கொண்ட ராணுவ மூத்த அதிகாரிகள், சோமுவின் உடலைத் தோளில் சுமந்து, மலர்களால் அலங்கரிக்கப்பட்ட ராணுவ பீரங்கி வண்டியில் ஏற்றினர். அதிகாரிகளின் மற்றொரு குழு என்.வி.என். சோமு உடல் மீது தேசியக் கொடியைப் போர்த்தி, உடல் இருந்த பெட்டியின் அருகே அமர்ந்திருந்தனர். தொடர்ந்து ராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் சோமுவின் இறுதி ஊர்வலம் புறப்பட்டது. இந்திய ராணுவத் தளபதி **ஜெனரல் மாலிக்,** கடற்படைத் தலைமைத் தளபதி **விஷ்ணுபகத்,** விமானப்படை தலைமைத் தளபதி ஆகியோர் சென்றனர். ராணுவ அணிவகுப்பின் முன்னே கழகத் தோழர் ஒருவர் கழகத்தின் இரு வண்ணக் கொடியையும் - கறுப்புக் கொடியையும் ஏந்தி வந்தார்.

இறுதி ஊர்வலத்தில் எங்களுடன் த.மா.கா. தலைவர் **மூப்பனார்,** மத்திய மாநில அமைச்சர்கள் கலந்து கொண்டனர். ஊர்வலம் இடுகாட்டை அடைந்ததும் ராணுவ சோக கீதம் இசைத்தவாறு துப்பாக்கியைத் தலைகீழாகப் பிடித்துக் கொண்டு சோமுவின் உடலை அங்கே இருந்த சிதை மேடையில் ராணுவத்தினர் வைத்தனர். சோமுவின் அருமை

மகன் திருமாறன் தீ மூட்டினார். 21 குண்டுகளை முழங்க ராணுவ முறைப்படி மரியாதை செய்யப்பட்டது.

கழகம் வளர்க்க அரும்பாடுபட்டு, இளம் வயதிலேயே நம்மை விட்டுப் பிரிந்த என்.வி.என். சோமுவைப் பற்றி, ''பத்தரை மாற்றுத் தங்கக் கட்டி பறி போனதே'' என்ற தலைப்பில் ஒரு உடன்பிறப்பு மடல் எழுதி என்னை நானே தேற்றிக் கொள்ள முயன்றேன். அதன் பிறகு 27.11.1997 அன்று சென்னை ராஜா அண்ணாமலை மன்றத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் என்.வி.என்.சோமுவின் திருஉருவப் படத்தினைத் திறந்து வைத்து இரங்கல் உரையாற்றினேன். அந்த நிகழ்ச்சியில் என்னுடன் பேராசிரியர், ஆர்க்காடு வீராசாமி, சென்னை மாநகர மேயராக இருந்த தம்பி மு.க.ஸ்டாலின் மற்றும் தமிழக அமைச்சர்கள் கலந்து கொண்டார்கள்.

★ ★ ★

சென்னையில் என்.வி.என்.சோமுவிற்கு இறுதி மரியாதை செலுத்திவிட்டு, டெல்லியில் 17.11.1997 அன்று நடைபெற்ற ஐக்கிய முன்னணியின் வழிகாட்டுக் குழுக் கூட்டத்திற்குப் புறப்பட்டுச் சென்றேன். கூட்டம் பிரதமர் ஐ.கே.குஜ்ரால் அவர்களின் இல்லத்தில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் நானும், ஐக்கிய முன்னணி அமைப்பாளர் சந்திரபாபு நாயுடுவும், தேவ கவுடாவும், ஹர்கிஷன்சிங் சுர்ஜித்தும், ஏ.பி. பரதனும், மூப்பனாரும் மத்திய அமைச்சர்கள் ஜெய்பால் ரெட்டி, முரசொலி மாறன், முலயாம் சிங் யாதவ் ஆகியோரும் கலந்து கொண்டோம்.

ஜெயின் கமிஷன் அறிக்கை தொடர்பாகவும், அதனால் ஏற்படக் கூடிய நிலைகள் குறித்தும் காங்கிரஸ் தலைவர் சீதாராம் கேசரியிடம், தான் நடத்திய பேச்சு வார்த்தையின் விவரங்களைப் பிரதமர் குஜ்ரால் அவர்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர்களிடம் விளக்கினார். அதைப் போலவே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சுர்ஜித் அவர்களும் தான் சீதாராம் கேசரியோடும் நடத்திய பேச்சுவார்த்தை விவரங்களை விளக்கினார். ஜெயின்



என்.வி.என். சோமு மத்திய அரசின் பாதுகாப்புத்துறை இணை அமைச்சராகப் பதவியேற்கிறார்.

கமிஷனின் இடைக்கால அறிக்கையில் என்ன தெவிக்கப் பட்டுள்ளது என்பதைப் பொதுமக்கள் தெரிந்து கொள்ளும் வகையில், நாடாளுமன்றக் கூட்டத்திலேயே தாக்கல் செய்யலாம் என்று ஐக்கிய முன்னணியின் தலைவர்கள் அந்தக் கூட்டத்தில் தெரிவித்தனர்.

ஐக்கிய முன்னணியிலிருந்து தி.மு.கழகத்தை எப்படியாவது விலக்க வேண்டுமென்று தமிழகத்திலிருந்த சிலர் செய்த தூண்டுதல் காரணமாகவும் - 1996ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது காங்கிரசிலிருந்து மூப்பனார் தலைமையில் பெரும்பான்மையோர் விலகி, தி.மு.கழகத்தோடு உறவு கொண்டதை மனதிலே கொண்டும் - காங்கிரஸ் கட்சியிலே அப்போது முக்கிய இடத்திலே இருந்த ஒரு சிலர் ''ஜெயின் கமிஷனின் இடைக்கால அறிக்கையை வைத்து ஏதாவது செய்யலாமா?'' என்று நினைத்து, அதற்கேற்பச் செயல்பட்டார்கள்.

ஆனால் ஐக்கிய முன்னணியிலே உள்ள தலைவர்கள் அனைவரும் ஒட்டு மொத்தமாக எந்தக் காரணத்திற்காகவும் தி.மு.கழகத்தை ஐக்கிய முன்னணியிலிருந்து இழப்பதற்குத் தயாராக இல்லை. ''ஆட்சி போனாலும் பரவாயில்லை - ஒரு சிலரின் சூழ்ச்சிக்கு இரையாக மாட்டோம்'' என்று உறுதியாக இருந்தார்கள். இதற்கிடையே நாடாளுமன்றத்தின் குளிர் காலக் கூட்டம் 19.11.1997 அன்று கூடியது.

ஐக்கிய முன்னணியின் தலைவர்கள் கூட்டம் 19.11.1997அன்று மீண்டும் பிரதமர் குஜ்ரால் அவர்களின் இல்லத்தில் நடந்தது. அந்தக் கூட்டத்தில் ''காங்கிரஸ் கட்சியின் முடிவிற்கேற்ப ஐக்கிய முன்னணி தன் திட்டங்களை வகுக்கலாம்'' என்று பேசி முடிவெடுக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தில் ஜெயின் கமிஷனின் இடைக்கால அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஓர் அறிக்கை - ஜெயின் கமிஷன் அறிக்கையிலே இடம் பெறாத வார்த்தைகளையெல்லாம் குறிப்பிட்டுப் பழி சுமத்தியிருந்தார்கள். அதிலே எழுதப்பட்ட ஐயங்களுக் கெல்லாம் நான் டெல்லியிலே சந்தித்த செய்தியாளர்கள் பேட்டியில் விளக்கமாகப் பதில் அளித்தேன். **''ஜெயின் கமிஷன் அறிக்கையும் - புதைக்கப்பட்ட உண்மைகளும்''** என்ற தலைப்பில் சென்னையிலே உள்ள சிந்தனையாளர் மன்றத்தின் சார்பில் பல்வேறு செய்திகள் தொகுக்கப்பட்டு, அது அனைத்து ஏடுகளுக்கும் விநியோகிக்கப்பட்டு, அது அனைத்து ஏடுகளிலும் வெளிவந்தது.

டெல்லியிலிருந்து 20.11.1997 அன்று நான் வெளியிட்ட அறிக்கையில்,

''ஜெயின் கமிஷனின் இடைக்கால அறிக்கையின் சில பகுதிகளை நான் படித்தேன். தி.மு.க.மீது சாட்டப்பட்டுள்ள குற்றம் முற்றிலும் ஆதாரமற்றது - உள் நோக்கம் கொண்டது. உண்மையைச் சொல்வதென்றால், தமிழக மக்கள் அனைவரையுமே இந்த இடைக்கால அறிக்கை குற்றம் சாட்டுகிறது. ஜெயின் அறிக்கையிலிருந்து ஒரு பகுதியை எடுத்துக் காட்டுகிறேன்.

''விடுதலைப் புலிகளுக்கும் தமிழ் நாட்டில் உள்ள தமிழர்களுக்கும் இடையே ஆழமான உறவு...''

''இதற்கு என்ன அர்த்தம்? ஒட்டுமொத்தமாக எல்லா தமிழக மக்கள் மீதும் ஜெயின் குற்றம் சாட்டுகிறார்.''

''ஓர் அரசியல் கட்சி அல்லது ஓர் அமைப்பு ஜனநாயக வழியிலும் செயல்படலாம் - பாசிச வழியிலும் செயல்படலாம்.''

''தி.மு.க. முழுக்க முழுக்க ஜனநாயக வழியில் செயல்படும் கட்சி.''

''முழுமையாக ஒரு கட்சியின்மீது குற்றம் சாட்டுவதில் அர்த்தமே இல்லை - தனிநபர்கள் மட்டுமே குற்றம் இழைக்க முடியும்.''

''மத்திய அரசு அமைத்த சிறப்புப் புலனாய்வுக் குழு, திரு.ராஜீவ் காந்தி படுகொலைபற்றி முற்றிலும் புலன் விசாரணை நடத்தியுள்ளது. வழக்கு விசாரணையும் முடிந்துவிட்டது. 41 நபர்கள் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். அவர்களில் தி.மு.க.வைச் சேர்ந்தவர் ஒருவர்கூட கிடையாது. வரும் ஜனவரி 28ஆம் நாள் தீர்ப்பு வழங்கப்பட விருக்கிறது. எனவே அறிவுள்ள எவரும் தி.மு.க.மீது எப்படி குற்றம் சாட்ட முடியும் - அவ்வாறு எண்ணுவதே பயங்கரமானது - நினைத்துப் பார்க்கவும் இயலாதது - மனிதத் தன்மையற்றது. என்னுடைய ஆட்சிக் காலத்தில் திரு.ராஜீவ் காந்தி எட்டு முறை தமிழகத்திற்கு வந்து சுற்றுப் பயணம் செய்து விட்டு, பத்திரமாகத் திரும்பிச் சென்றார். ஆனால், குடியரசுத் தலைவர் ஆட்சியின்போது அவர் படுகொலை செய்யப்பட்டார், இதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. இப்போது நடப்பவை அனைத்தும் அரசியல் உள்நோக்கம் கொண்டவையே. நாங்கள் தவறேதும் செய்யவில்லை. எங்கள் மனசாட்சி தெளிவாக இருக்கிறது. எங்கள் அமைச்சர்கள் பதவி விலகச் சரியான காரணம் ஏதுமில்லை. நாங்கள் மக்களிடம் செல்வோம். மக்களே முடிவு செய்யட்டும்'' என்று தெரிவித்திருந்தேன்.

21.11.1997 அன்று நான் டெல்லியிலிருந்து சென்னை திரும்பியதும், சென்னை விமான நிலையத்திலேயே செய்தியாளர்கள் என்னைச் சந்தித்தார்கள். முதல் கேள்வியே, ''ஐக்கிய முன்னணியிலே உள்ள கட்சிகள் - ஏறத்தாழ எல்லாக் கட்சிகளும் தங்களுடைய ஒற்று மையைத் தெரிவிக்கும்



அருணாசலப் பிரதேசத்திற்குப் பாதுகாப்புப் பணி குறித்துப் பயணம் மேற்கொண்டார் என்.வி.என். சோமு

வகையிலே தி.மு.கழகத்தை ஐக்கிய முன்னணியிலிருந்து விலக்க மாட்டோம் என்பதில் உறுதியைத் தெரிவித்திருக்கிறார்களே?'' என்பதுதான். நான் இதற்கு அளித்த பதிலில்-



என்.வி.என். சோமு உடலுக்கு பேராசிரியர் அஞ்சலி செலுத்தினார்.

''ஏறத்தாழ என்பது சரியல்ல. ஐக்கிய முன்னணியிலே உள்ள எல்லாக் கட்சிகளும் ஒருமனதாக ஒரு முடிவு எடுத்துள்ள காரணத்தால், அந்த முன்னணியில் தி.மு.கழகம் இடம் பெற்றிருப்பதற்கு நான் பெருமையடைகிறேன். அதைப் போலவே ஐக்கிய முன்னணியில் உள்ள ஒவ்வொரு கட்சியும் பெருமை அடைகின்றது. இப்போது உருவான ஒற்றுமையும், உறுதிப்பாடும் தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்று விரும்புகிறேன்'' என்று கூறினேன்.

21.11.1997 அன்று நடைபெற்ற ஐக்கிய முன்னணியின் மையக்குழு ''ஐக்கிய முன்னணி அரசிலிருந்து தி.மு.கழகத்தை நீக்க வேண்டுமென்ற காங்கிரஸ் கட்சியின் கோரிக்கையை ஏற்க முடியாது'' என்று ஒருமனதாக முடிவு செய்தது.

கூட்டம் முடிந்து வெளியே வந்த **தேவகவுடா** அவர்களிடம் செய்தியாளர்கள் அணுகியபோது, ''ஐக்கிய முன்னணி, ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும், தி.மு.கழகத்தை வெளியேற்றும் கேள்வியே எழவில்லை'' என்று தெரிவித்தார்.

அருகேயிருந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரும் மத்திய அமைச்சருமான **சதுராணன் மிஸ்ரா** அவர்கள், ''எது வந்தாலும், நாங்கள் தி.மு.க.வைக் கைவிட மாட்டோம்'' என்று கூறினார்.

ஜெயபால் ரெட்டி அவர்கள், ''ஜெயின் கமிஷன் அறிக்கையை முழுமையாகப் படிக்காமல் உடனடியாகத் தி.மு.க. பற்றி குறை கூறுவது முறையல்ல'' என்றார்.



"ஜெயின் கமிஷன் அறிக்கையை முழுமையாகப் படிக்காமல், உடனடியாகத் தி.மு.க. பற்றி குறை கூறுவது முறையல்ல" என்றார், மத்திய அமைச்சர் ஜெயபால் ரெட்டி

கர்நாடக முதல்வராக இருந்த **ஜே.எச்.பட்டேல்,** "அரசைக் காப்பதற்காக தி.மு.கழகத்தைக் கைவிட முடியாதென்று ஐக்கிய முன்னணி முடிவு செய்துள்ளது" என்றார்.

22.11.1997 அன்று இந்தப் பிரச்சினை குறித்து **"தினமணி"** உள்ளிட்ட ஏடுகள் எழுதிய தலையங்கம் உண்மை நிலைமைகளை விளக்குவதாக இருந்தது. அதில் ஒரு பகுதி மட்டும் இதோ:-


★ *"ஜெயின் கமிஷனின் இடைக்கால அறிக்கையில் தி.மு.க.வுக்கு எதிராகக் கூறப்பட்ட கருத்துகள் அடிப்படையில், அக்கட்சியை மத்திய அரசிலிருந்து விலக்கும்படி காங்கிரஸ் விடுத்த கோரிக்கையை ஐக்கிய முன்னணி நிராகரித்து விட்டது. ஜனநாயக மரபுகளில் நம்பிக்கை உள்ளவர்களுக்கு இது மன நிறைவளிக்கும் என்பது நிச்சயம்.*

★ *"பாதுகாப்பு அம்சத்தில் உள்ள குறைபாடுகளையே ஜெயின் கமிஷன் சுட்டிக் காட்டியுள்ளதே தவிர, சதி அம்சம் குறித்து எதுவுமே அந்த அறிக்கையில் இல்லை. எனவே தி.மு.க.மீது நடவடிக்கை எடுக்கக் கூடிய அளவுக்கு அதில் எதுவுமே தெளிவாக இல்லை என்ற அரசின் வாதம் சரியானதே"*

"இந்தியன் எக்ஸ்பிரஸ்" அதே நாளில் எழுதிய தலையங்கத்தில்-

"கடந்த மூன்றாண்டுகளாக பல்வேறு அரசியல்வாதிகள் ஆதாரமின்றி பகிரங்கமாகச் சொல்லி வந்த குற்றச் சாட்டுகளைவிட நாடாளு மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஜெயின் கமிஷன் அறிக்கையில் பெரிதாக ஏதுமில்லை. பல

கோடி ரூபாய் செலவும், ஆண்டுக் கணக்கில் நடந்த விசாரணையும் 17 தொகுதிகளை நிறைக்கும் அளவுக்கு வார்த்தைகளைத் திரட்டித் தந்துள்ளன. ஆனால் அவற்றில் தெளிவும் இல்லை- நியாயமும் இல்லை என்பது அவமானகரமானதாகும். 1991மே மாதத்தில் ராஜீவ் காந்தி படுகொலை நடைபெற்றதற்குக் காரணமான முன் நிகழ்ச்சிகள், சூழ்நிலைகள் ஆகியவற்றை இந்தக் கமிஷன் மீண்டும் கட்டமைத்துச் சரியாகக் காட்டும் என்று இந்த நாடு பொறுமையுடன் காத்திருந்தது. ஆனால், நாட்டுக்கு வழங்கப்பட்டது என்னவென்றால், மித மிஞ்சிய - பொறுப்பற்ற முறையிலான வார்த்தைகள் - தவறான வாதம் - அறிக்கையில் அனாவசியமாகச் சேர்க்கப்பட்ட மிகையான சொற்கள் - எல்லாம் இருந்த போதிலும் அதில் பெரும் ஓட்டைகளும் தெரிகின்றன.



''அரசைக் காப்பாற்றிக் கொள்ள, தி.மு.கழகத்தைக் கைவிட முடியாது'' என்று கர்நாடக முதல்வராக இருந்த ஜெ.எச்.பட்டேல் கூறினார்.

★ *''இதுவரை வெளியிடப்பட்ட ஜெயின் கமிஷன் அறிக்கையின் பகுதிகளில் குறைபாடுகள் அனைத்தும் இருக்கின்றன. அறிக்கையில் காணப்படும் கவனக் குறைவு அதிர்ச்சி தருவதாக இருக்கிறது. மிகவும் பொறுப்பற்ற - எனவே மிகவும் அபாயகரமான வார்த்தைகளைப் பயன்படுத்தியிருப்பதற்கு உதாரணம், ''விடுதலைப்புலிகளுக்கும், தமிழ் நாட்டில் உள்ள தமிழர்களுக்கும் இடையிலான ஆழ்ந்த தொடர்பினை படுகொலையுடன் சம்பந்தப்படுத்தி,'' கோடிக்கணக்கான சாதாரண மக்களைச் சதிகாரர்களாக்கியிருப்பதாகும்.'' என்று குறிப்பிட்டிருந்தது.*

திராவிடர் கழகப் பொதுச் செயலாளர், தமிழ்த் தலைவர் சகோதரர் கி.வீரமணி அவர்கள் அப்போது இந்தப் பிரச்சினை குறித்து கொடுத்த அறிக்கை முக்கியமான ஒன்றாகும்.அந்த அறிக்கையில் முக்கியமாக,

''நீதிபதி ஜெயின் இடைக்கால அறிக்கை தான் தாக்கல் செய்திருக்கிறார். அந்த அறிக்கையில் அவர் எந்தப் பரிந்துரைகளையும் சொல்லவில்லை. கமிஷனின் இறுதி அறிக்கையை இன்னும் மூன்று மாதத்தில் தாக்கல் செய்வதாகவும் கூறியிருக்கிறார். ஜெயின் கமிஷன் ஆரம்பித்து இத்தனை ஆண்டுகளுக்குப் பின்னர், இறுதி அறிக்கை தாக்கல் செய்வதற்கு இன்னும் மூன்று மாதங்களே இருக்கும்போது, இந்த இடைக்கால அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் என்ன? இதற்கு அரசியல் ரீதியான காரணம்தான் இருக்க முடியும்.''

''ஜெயின் தனது அறிக்கையில் உளவுத் துறையின் அறிக்கைகளைப் பின்பற்றிதான் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார். உளவுத் துறை அறிக்கை அவர்களுக்கு யார் தலைவராக இருக்கிறார்களோ, அவர்களுக்குத் தகுந்த மாதிரிதான் இருக்கும் என்றும் அவரே குறிப்பிட்டிருக்கிறார். மேலும், இந்த அறிக்கை பத்திரிகைகளுக்குக் கிடைப்பதற்குக் காரணம், ஜெயின்தான் என்று உள்துறை அமைச்சர் **இந்திரஜித்** குப்தாவே குற்றம் சாட்டியிருப்பதைச் சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது.''

''தி.மு.க.மீது நடவடிக்கை எடுப்பதற்குரிய எந்த ஆதாரமும் ஜெயின் கமிஷன் அறிக்கையில் இல்லை. இந்தக் கமிஷன் உண்மைகளைக் கண்டறிவதற்காக அமைக்கப்பட்ட ஒரு கமிஷனே தவிர, இதுவே இறுதித் தீர்ப்பு கூறும் நீதிமன்றம் அல்ல. இந்த அறிக்கை ஏற்கப்படலாம்- ஏற்கப் படாமலும் போகலாம். தி.மு.க.மீது குற்றம் சாட்ட வேண்டும் என்று அரசியல் ரீதியாகத் திட்டமிட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது என்றுதான் கருத வேண்டியுள்ளது'' என்று அனைவருக்கும் புரியும் வகையில் நிலைமைகளை விளக்கியிருந்தார்.''

28. அலை மோதிய அரசியல்!

எனது பொது வாழ்க்கையில் என்மீது கற்கள் வீசப்படும் போதும், மலர்கள் தூவப்படும் போதும், இரண்டையும் ஒன்றாகக் கருதித்தான் என் பயணத்தைத் தொடர்கிறேன்.

24.11.1997 அன்று பிரதமர் அவர்கள், காங்கிரஸ் தலைவர் சீதாராம் கேசரிக்கு அனுப்பிய கடிதத்தில், தி.மு.கழகத்தை மத்திய அமைச்சரவையிலிருந்து நீக்க வேண்டுமென்ற சிலரது கோரிக்கையை நிராகரித்திருந்தார். **ஜெயின் கமிஷனின்** இடைக்கால அறிக்கையில், ஐக்கிய முன்னணியில் உள்ள எந்தவொரு கட்சியின்மீதும் எந்த ஒரு வழக்கும் கூறப்படவில்லை என்பதால், மத்திய அமைச்சரவையிலிருந்து தி.மு.க. அமைச்சர்களை நீக்கும் கேள்வியை எழவில்லை - என்று பிரதமர் அந்தக் கடிதத்தில் தெரிவித்திருந்தார்.

சி.பி.ஐ. முன்னாள் இயக்குநர் ராஜா **விஜய்** அவர்கள் **ராஜீவ் சர்மா** என்ற ஒரு பத்திரிகையாளர் எழுதிய **''புலிகளுக்கு அப்பால்''** என்ற புத்தகத்தின் முன்னுரையில் - ''ராஜீவ் காந்தி கொலை வழக்கில், தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதியையோ அல்லது தி.மு.க. வையோ தொடர்புபடுத்துவதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை'' என்று எழுதியிருந்தார். அந்த நூலில் அவர் மேலும் எழுதும்போது, ''நான் சி.பி.ஐ. இயக்குநராக இருந்தபோது, விசேஷப் புலனாய்வுக் குழுத் தலைவராக இருந்த **டி.ஆர்.கார்த்திகேயனுடன்**, அன்றைய தமிழக முதலமைச்சராக இருந்த அ.தி.மு.க. தலைவர் **ஜெயலலிதாவை** அவரது போயஸ் தோட்ட இல்லத்தில் சந்தித்தேன். அப்போது ராஜீவ் காந்தி கொலை வழக்குத்

தொடர்பான புலன் விசாரணையின் முக்கிய அம்சங்களை ஜெயலலிதாவிடம் விவரித்தேன்.''

''ஆனால், அவர் என்னிடம் ஆவலுடன் கேட்ட கேள்வி, ''கருணாநிதியை எப்போது கைது செய்யப் போகிறீர்கள்?'' என்பதுதான்.''

''இந்தக் கொலை வழக்கில் கருணாநிதிக்குத் தொடர்பு இருப்பதாக ஏதாவது ஆதாரங்கள் கிடைத்தால் அவரைக் கைது செய்யத் தயங்கமாட்டோம். என்று ஜெயலலிதாவிடம் நான் கூறினேன். மேலும், ''மிகவும் பரபரப்பான ஒரு வாழ்க்கை நாங்கள் ஒளிவு மறைவு இன்றி விசாரணை செய்து வருகிறோம். உங்களுக்கோ அல்லது வேறு எவருக்கோ ராஜீவ் கொலை வழக்கில் தி.மு.க.வுக்கோ அல்லது கருணாநிதிக்கோ தொடர்பு இருந்ததாக ஆதாரப் பூர்வமாகத் தெரிய வந்தால், அதை எங்களிடம் கூறுங்கள் - அதன் பிறகு நடவடிக்கை எடுக்கிறோம்'' என்று தெரிவித்தேன்.''

''ஆனால், ஜெயலலிதா அதற்கு எந்த பதிலும் கூறவில்லை. மேலும், சிறப்புப் புலனாய்வுக் குழுவுக்கும் இது தொடர்பாக எந்த ஆதாரப் பூர்வமான சாட்சியங்களும் கிடைக்கவில்லை. எனவே, ''ராஜீவ் கொலை வழக்கில் தி.மு.க. வுக்கோ, கருணாநிதிக்கோ தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை!'' என்று கரண் எழுதியிருந்தார். இந்தச் செய்தியினை ''**தினமணி**'' நாளிதழ் *31.7.1998* தேசிய இதழில் முதல் பக்கத்தில் பெரிதாக வெளியிட்டிருந்தது.

இதற்குப் பின்னர், ஜெயின் கமிஷன் அறிக்கையை நிபுணர்களைக் கொண்ட ஒரு குழுவிடம் ஒப்படைத்து, அவர்கள் அதைப்பற்றி அபிப்பிராயம் கூறும் வரையில், 'தி.மு.கழகம் ஐக்கிய முன்னணி - மத்திய அமைச்சரவையிலிருந்து விலகியிருந்தாலே போதும்' என்று ஒரு நிபந்தனை சிலரால் கூறப்பட்ட போதிலும், **ஜெய்பால்** ரெட்டி, அதற்குப் பதிலாக அந்தக் கோரிக்கையை ஏற்க முடியாதென்றும், வாழ்ந்தாலும், வீழ்ந்தாலும் தி.மு.க.வுடன்தான் ஐக்கிய முன்னணி செயல்படும் என்றும்



"ஜெயின் அறிக்கை தமிழ் மக்கள் மீதே குற்றம் சாட்டுகிறது" என்று நிருபர்களிடம் கலைஞர் விளக்கினார் அருகே முரசொலி மாறன்.

தெரிவித்தார். அதற்கான கடிதம் எழுதப்பட்டு விட்டதாகவும் அவர் செய்தியாளர்களிடம் கூறினார்.

மக்களவையில் நவம்பர் 20ஆம் தேதியன்று ஜெயின் கமிஷன் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அதில் தி.மு.க. மீது குறை சொல்லும் விதமாக சில வார்த்தைகள் இருப்பதாக ஒரு சிலரால் குற்றம் சாட்டப்பட்டது.

ஆனால், அதற்கு சில நாட்களுக்குப் பிறகு, தமிழகத்திலே உள்ளாட்சித் தேர்தல்களில் எஞ்சியிருந்த இடங்களுக்கும், காலியான இடங்களுக்கும் நடைபெற்ற தேர்தல்களில், தி.மு.கழகம் அதற்கு முன்பு நடைபெற்ற தேர்தலில் பெற்ற வாக்குகளை விட அதிக வாக்குகளைப் பெற்று வெற்றியடைந்து, கழகத்தின்மீது ஜெயின் கமிஷன் வாயிலாகச் சாட்டப்பட்ட குற்றச்சாட்டு உண்மைக்கு மாறானது என்பதை உலகத்திற்கு பறைசாற்றிக் காட்டியது.

ஜெயின் கமிஷன் அறிக்கை குறித்தும், அதனைப் பயன்படுத்தி தி.மு.கழகத்தை மத்திய ஐக்கிய முன்னணி ஆட்சியிலிருந்து விலக்க வேண்டுமென்றும், அப்போது சில காங்கிரஸ்காரர்கள் தீவிரமாக ஈடுபட்டதற்கு எதிரான கருத்து பொதுவாக இந்தியா முழுவதும் இருந்தது. அதைப்பற்றி

பல்வேறு ஏடுகளும் தலையங்கங்கள் தீட்டியிருந்தன. குறிப்பாக தமிழகத்திலே உள்ள நாளேடுகள், டெல்லியிலே உள்ள காங்கிரசார் மத்திய அரசைக் கலைக்க முற்பட்டதற்குக் கடும் எதிர்ப்பினைத் தெரிவித்தனர். அகில இந்திய அளவிலேகூட பா.ஜ.க. தலைவர் **ஏ.பி.வாஜ்பாய்** அவர்கள், **'ஜெயின் கமிஷனின்** இடைக்கால அறிக்கை வெறும் அரசியல். ஆவணம்தான். அதில் இடம் பெற்றுள்ளவை ஆபத்தானதும் நாட்டின் ஒற்றுமை, ஒருமைப் பாட்டுக்குத் தீங்கு விளைவிப்பதுமாகும். நாட்டின் நலனை நினைக்காதவர்களே ஜெயின் கமிஷன் அறிக்கையைக் கடுமையாகக் கருதுவர். ஒரு காலத்தில் பிரிவினை இயக்கமாகச் சித்தரிக்கப்பட்ட தி.மு.கழகத்தின் இப்போதைய நிலையே வேறு. வேற்றுமையில் ஒற்றுமையைக் காணும் வகையில் தேசிய நீரோட்டத்தில் இப்போது அது இணைந்து விட்டது'' என்றார்.

1996ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில், காங்கிரசின் முடிவுக்கு மாறாக தமிழகத்தில் ஒரு முடிவெடுத்து, தி.மு.கழகத்தோடு தோழமை கொண்டு, **தமிழ் மாநிலக் காங்கிரஸ்** கட்சியைத் தோற்றுவித்த **மூப்பனார்** அவர்களை, வட மாநிலங்களைச் சேர்ந்த காங்கிரஸ் தலைவர்கள் சிலர் சந்தித்து, ''தி.மு.க. இல்லாத ஐக்கிய முன்னணியும், காங்கிரசும் இணைந்து மாற்று அரசை மத்தியிலே அமைப்பது குறித்து பரிசீலிக்க வேண்டும்- மக்களவை கலைக்கப்படுவ்தை; தவிர்க்க வேண்டும்'' என்றெல்லாம் கேட்டுக் கொண்டார்கள்.

ஆனால், தி.மு.க.வை மத்திய அமைச்சரவையிலிருந்து விலக்கும் முடிவுக்கு ஐக்கிய முன்னணி ஒப்புதல் தர மூப்பனார் முயற்சிக்க வேண்டுமென்று அவர்கள் கேட்டதற்கு, மூப்பனார் - ''அது தொடர்பாக தன்னால் எதுவும் செய்ய இயலாது - தி.மு.கழகத்துடனான உறவை முறித்துக் கொள்வது குறித்து தன்னால் அப்போது முடிவெடுக்க முடியாது'' என்று கூறிவிட்ட தாகவும் அவரைச் சந்தித்த காங்கிரஸ் தலைவர்கள் செய்தியாளர்களிடம் கூறினார்கள்.

முதன் முறையாக மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் ஒன்று சேர்ந்து ''இரண்டு

ஆண்டுகளுக்குள் மற்றொரு தேர்தல் வேண்டாம்'' எனக் குடியரசுத் தலைவரிடம் கட்சி பேதமின்றி வலியுறுத்தினர்.

இருந்தாலும், **ஐ.கே.குஜ்ரால்** அமைச்சரவைக்கு அதுவரை காங்கிரஸ் கட்சி அளித்து வந்த ஆதரவை திரும்பப் பெற்றுக் கொள்வதாகவும், மக்களவையைக் கலைக்காமல் மீண்டும் ஆட்சி அமைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு, அப்போது காங்கிரஸ் கட்சியை ஆட்சி அமைக்க அழைக்க வேண்டுமென்றும், குடியரசுத் தலைவர் **கே.ஆர்.நாராயணனைச்** சந்தித்து காங்கிரஸ் தலைவர் கேட்டுக் கொண்டார். இதனைத் தொடர்ந்து ஐக்கிய முன்னணியின் மையக் குழுவின் கூட்டம் நடைபெற்று மத்திய அமைச்சரவையிலிருந்து தி.மு.க.வை விலக்க வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்க இயலாது- ராஜீவ் கொலையில் தி.மு.க.விற்கு எந்தச் சம்பந்தமும் இல்லை. எனவே, மத்திய அமைச்சரவை பதவி விலகுவதென்றும் முடிவெடுக்கப்பட்டது.

அதன் அடிப்படையில், பிரதமர் குஜ்ரால் குடியரசுத் தலைவரைச் சந்தித்து, தனது ராஜினாமாக் கடிதத்தை அளித்தார். அந்தப் பதவி விலகல் கடிதத்தில் பிரதமர் குஜ்ரால் எழுதியது வருமாறு:-



ஜெயலலிதா ஆவலுடன் கேட்ட கேள்வி ''கருணாநிதியை எப்போது கைது செய்யப் போகிறீர்கள்?'' என்பதுதான்!

''அன்பார்ந்த குடியரசுத் தலைவர் அவர்களுக்கு,

''முற்றிலும் நியாயமற்ற காரணங்களுக்காக தி.மு.க.வின் மூன்று அமைச்சர்களை நீக்குமாறு காங்கிரஸ் கட்சி என்னிடம் கேட்டுக் கொண்டது. எந்த விதமான முகாந்தரமும், விவரமும் இல்லாத ஜெயின் கமிஷன் அறிக்கையின் அடிப்படையில் ஒரு கட்சியைக் குற்றம் சாட்டுவது என்பதும், ஒரு கட்சியின் நல்ல பெயரை அழிக்கும் விதத்தில் செயல்படுவது என்பதும்,



''ராஜீவ் காந்தி கொலை வழக்கில், முதல்வர் கருணாநிதியையோ - தி.மு.க.வையோ தொடர்புபடுத்த எந்த ஆதாரமும் இல்லை'' என்றேன் நான்.

-டி.ஆர்.கார்த்திகேயன் (சி.பி.ஐ)

நியாயமற்றது - நீதியற்றது. அதுவும் தவிர, ஒட்டுமொத்த தமிழ் மக்களின்மீது குற்றம் சாட்டியிருப் பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துள்ளேன். நாட்டு நலனுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் உங்களிடம் என்னுடைய ராஜினாமா கடிதத்தைத் தருவது என்கிற முடிவிற்கு இப்போது நான் வந்துள்ளேன். நானும், எனது அமைச்சர்களும் எங்களுடைய ராஜினாமாக் கடிதங்களை உங்களிடம் அளிக்கிறோம். இது நாள் வரையில் எங்களுக்கு அளித்து வந்த ஒத்துழைப்பிற்காகவும், வழி காட்டு தல்களுக்காகவும், நான் உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

-ஜ.கே.குஜ்ரால், பிரதமர்''

இதன்பின் ஐக்கிய முன்னணித் தலைவர்கள் கூட்டமாகச் செய்தியாளர்களைச் சந்தித்து, ''மாற்று ஆட்சி அமைக்க எந்த வாய்ப்பும் இனி இல்லை - ஒரே அணியாக இருந்து தேர்தலைச் சந்திப்போம்'' என்று கூறினார்கள்.

ஒரு மாத கால இழுபறி நிலைக்குப் பிறகு, **29.11.1997** அன்று இரவு, **7.30** மணியளவில் காங்கிரஸ் கட்சித் தலைவர் **சீதாராம் கேசரி** அவர்கள், குடியரசுத் தலைவர் மேதகு **கே.ஆர்.நாராயணன்** அவர்களைச் சந்தித்து, ஐக்கிய முன்னணி அரசுக்கு அளிக்கும் ஆதரவைத் திரும்பப் பெறுவதற்கான கடிதத்தைக் கொடுத்தார். இந்தச் செய்தியினை அறிந்த பிரதமர் குஜ்ரால், அவர்கள் உடனடியாக அமைச்சரவையைக் கூட்டினார். ராஜினாமா செய்வதென்ற முடிவு அப்போது எடுக்கப்பட்டது. குடியரசுத் தலைவர் மாளிகைக்குச் சென்று தனது அமைச்சரவையின் ராஜினாமாக் கடிதத்தைப் பிரதமர்

அளித்தார். மாற்று ஏற்பாடுகள் செய்யப்படும்வரையில் பொறுப்பில் நீடிக்குமாறு குஜ்ராலிடம் குடியரசுத் தலைவர் கேட்டுக் கொண்டார். ஆனால், மக்களவையைக் கலைப்பது பற்றி அதிலே எந்தப் பரிந்துரையையும் பிரதமர் செய்யவில்லை.



''வாழ்ந்தாலும் - வீழ்ந்தாலும் தி.மு.க.வுடன்தான் மத்திய அரசு செயல்படும்'' என்றார், ஜெய்பால் ரெட்டி.

மாற்று ஆட்சி அமைப்பதற்கான வாய்ப்புகள் பற்றி உடனடியாக ஆலோசனை நடத்தத் தொடங்கிய குடியரசுத் தலைவர், ஐக்கிய முன்னணி - பா.ஜ.க.- காங்கிரஸ் ஆகிய மூன்று அணிகளின் தலைவர்களையும் தலா இரண்டு முறை நேரில் அழைத்து ஆலோசனை நடத்தினார்.

இதற்கிடையில், ஐக்கிய முன்னணிக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் இடையே சமரசம் செய்வதற்கான பேச்சு வார்த்தைகளும் நடைபெற்றன. எனினும் தி.மு.க.தொடர்பாக ஏற்கனவே எடுக்கப்பட்ட முடிவில் எந்தவிதமான மாற்றமும் இல்லை என்று ஐக்கிய முன்னணி திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டதால், அந்தப் பேச்சு வார்த்தை பலனளிக்கவில்லை.

அதற்குப் பிறகு 3.12.1997 அன்று பிரதமர் குஜ்ரால் தலைமையில் மத்திய அமைச்சரவை கூடி, மக்களவையைக் கலைக்கும்படி குடியரசுத் தலைவருக்குப் பரிந்துரை செய்ய முடிவெடுத்து, அவ்வாறே தெரிவிக்கப்பட்டது. அந்தப் பரிந்துரையைக் குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணன் அவர்கள் ஏற்று, 11ஆவது மக்களவையைக் கலைத்து 4.12.1997 அன்று உத்தரவிட்டார். இடைத் தேர்தல் நடைபெற்று, புதிய மக்களவை 1998 மார்ச் 15ஆம் தேதி அமையும் என்றும் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்புக்குப் பின்னர், மக்களவைத் தேர்தலில் யார் யாருடன் உறவு கொள்வது என்பது பற்றி ஏடுகள் தங்கள் தங்கள் விருப்பத்திற்கேற்ப செய்திகளை வெளியிட்டன. காங்கிரஸ் கட்சிக்கு 12 தொகுதிகளை விட்டுக் கொடுக்க அ.தி.மு.க

விருப்பம் தெரிவித்துள்ளதாக டெல்லியில் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்ததாக வட இந்திய நாளேடுகள் செய்தி வெளியிட்டிருந்தன.

ஜெயின் கமிஷன் இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பிறகு, தி.மு.கழகத்திற்கும் த.மா.காங்கிரசிற்கும் இடையே தோழமை பாதிக்கப்பட்டு, த.மா.கா. மீண்டும் காங்கிரஸ் கட்சியிலே இணைந்து விடும் என்று காங்கிரசார் எதிர்பார்த்தார்கள். ஆனால், சாதகமான பதில் கிடைக்க வில்லை. காங்கிரசுடன் உறவைப் புதுப்பித்துக்கொள்ள **ஜெயலலிதா** சம்மதம் தெரிவித்து, 12 தொகுதிகளை காங்கிரசுக்கு கொடுக்கத் தயாராக இருக்கிறார் என்று ஏடுகளில் செய்திகள் வந்தன.

செய்தியாளர்கள் த.மா.கா. தலைவர் மூப்பனாரைக் கண்டு, ''தி.மு.க., த.மா.கா. கூட்டணி மக்களவைத் தேர்தலிலும் தொடருமா?'' என்று கேட்டபோது, ''தி.மு.க., த.மா.கா. தேர்தல் கூட்டணி தொடர வேண்டுமா - வேண்டாமா என்று குறித்து தி.மு.க.தான் முடிவு செய்து அறிவிக்க வேண்டும் - தி.மு.க. வுடன் கூட்டணி இல்லை என நாங்கள் கூறவில்லை'' என்றார். தொடர்ந்து செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளும், அதற்கு மூப்பனார் அளித்த பதில்களும் வருமாறு:-

கேள்வி: - கலைஞருக்கும், உங்களுக்கும் இடையேயான நட்பின் முன்புபோல நெருக்கம் இல்லை என்று கூறப்படுகிறதே?

மூப்பனார்:- இது உங்களுடைய கற்பனை.

கேள்வி:- அப்படியானால் டெல்லியில் நீங்கள் இருவரும் ஏன் சந்தித்துக் கொள்ளவில்லை?

மூப்பனார்:- டெல்லியின் நாங்கள் நிறைய சந்தித்துப் பேசியிருக்கிறோம். நாங்கள் சந்திக்கவில்லையென யார் கூறியது? நீங்கள் திரித்துக் கூறுகிறீர்கள்.

கேள்வி:- கடந்த தேர்தலில் இருந்ததைப் போன்ற நல்லுறவு உங்களுக்குள் உள்ளதா?

மூப்பனார்:- எங்களுக்குள் ஒன்றும் கருத்துவேறுபாடு இல்லை. நாங்கள் உறவை முறிக்கவில்லை. ஆனால், முதல்வர்தான் உறவைப் பரிசீலனை செய்வதாகக் கூறினார். நாங்களாகக் கூட்டணியை முடிவு செய்ய முடியாது. நாங்கள் சிறிய கட்சிதான். இன்னும் சொல்லப்போனால், நேற்று பெய்த மழையில் முளைத்தவர்கள். நாங்களாகவே எப்படி முடிவு செய்ய முடியும்?


கேள்வி:- கூட்டணி தொடர்பாக கருணாநிதியுடன் பேசுவீர்களா?

மூப்பனார்:- அவருடன் எனக்கு எந்தச் சண்டையும் இல்லையே - எதிர்க்கட்சியாக இருக்கும்போதே அவருடன் பேசியுள்ளேன்.

கேள்வி:- அ.தி.மு.க.வுடன் கூட்டு வைப்பீர்களா?

மூப்பனார்:- காங்கிரசில் இருந்தபோது அ.தி.மு.க.வுடன் கூட்டு வைத்திருந்தோம். காங்கிரசிலிருந்து வெளியேறி, த.மா.கா.வை நாங்கள் தொடங்கினோம். அதற்கான அடிப்படைக் காரணம் அனைவருக்கும் தெரியும்.

இந்தப் பேட்டிக்குப்பின் மறுநாளே செய்தியாளர்கள் என்னைச் சந்தித்தனர். ''திராவிட முன்னேற்றக் கழகத் தலைமைக்கும், தமிழ் மாநிலக் காங்கிரஸ் தலைமைக்கும் இடையில் எந்தவிதமான பிரச்சினைக்கும் இடம் இருந்ததில்லை. ஆனால் இரு சார்பினர் இடையில் அடுத்தடுத்த நிலையில் உள்ளவர்களிடையே சிறு கசப்புணர்வு ஏற்பட்டது உண்மை. அந்தக் கசப்புணர்வுகூட மூப்பனார் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டிக்குப் பிறகு அறவே அகன்றுவிட்டது. அதற்குப் பிறகு, தி.மு.க.சார்பில் அனுப்பி வைக்கப்பட்ட **ஆர்க்காடு வீராசாமி** மூப்பனாரைச் சந்தித்துப்பேசினார். நானும் மூப்பனாரும்கூட தொலை பேசியில் பேசினோம். அந்த அடிப்படையில் **1996**இல்



"தி.மு.க.கழகம் வேற்றுமையில் ஒற்றுமை காணும் வகையில், தேசிய நீரோட்டத்தில் இணைந்து விட்டது!" என்றார் வாஜ்பாய்

ஆரம்பமான உறவு தொடருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று கூறினேன்.

அந்தத் தேர்தலில் தி.மு.கழகமும், த.மா.கா.வும் கூட்டணி அமைத்திட வேண்டுமென்பதில் அக்கறை காட்டி, அதற்கொரு காரணமாகவும் அமைந்த சூப்பர் ஸ்டார் **ரஜினிகாந்த்** அவர்கள், பொங்கல் வாழ்த்து தெரிவித்தபோது, வெளிப்படையாகவே அந்தத் தேர்தலில் தன்னுடைய ஆதரவு தி.மு.க.- த.மா.கா. கூட்டணிக்கே தொடரும் என்று அறிவித்தனர். தனது ரசிகர்களை யெல்லாம் தவறாமல் வாக்களிக்குமாறு அதிலே கேட்டுக் கொண்டார். நானும் அவருக்கு அன்றைய தினம் நடைபெற்ற விழா ஒன்றில் நன்றி தெரிவித்துக் கொண்டேன்.

இதன் தொடர்ச்சியாக, 14.2.1997 அன்று கழகத் தலைமைச் செயற்குழுக் கூட்டம் எனது தலைமையில் தேனாம் பேட்டையில் உள்ள ஸ்ரீலேகா ஓட்டலில் நடைபெற்றது. கூட்டத்தில் பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டதோடு, வரவிருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய முன்னணியின் ஆட்சி மத்தியில் மீண்டும் அமைவதற்கேற்ற வகையில் நம்முடன் ஒத்த கருத்துடைய கட்சிகளின் ஆதரவைப் பெறுவதற்கான அணுகுமுறைகளை மேற்கொள்வதற்கும், அணியில் உள்ள கட்சித் தலைமைகளுடன் கலந்து பேசி முடிவுகள் எடுப்பதற்கும், கழகத்தின் சார்பில் பொருளாளர் **ஆற்காடு வீராசாமி, துரைமுருகன்,** அமைப்புச் செயலாளர் **விடுதலை விரும்பி** ஆகிய மூவர் கொண்ட குழு ஒன்றும் அந்தச் செயற்குழுக் கூட்டத்தில் அமைக்கப்பட்டது.


செயற்குழு நடைபெற்ற அதே நாளில், அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் **கே.கே.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், மு.தென்னவன்**

ஆகியோர் பத்தாயிரத்திற்கும் மேற்பட்டவர்களுடன் அ.தி.மு.க.விலிருந்து விலகி என் முன்னிலையில் தி.மு.கழகத்தில் சேர்ந்தனர். வேறு கட்சிகளிலே பணியாற்றிவிட்டு, கழகத்திலே வந்து சேர்பவர்களுக்கு உரிய மரியாதை எப்போதும் தி.மு.கழகத்தில் வழங்கப்படும் என்பதற்கு பல்வேறு சான்றுகள் உண்டு. அவற்றில் ஒன்றாக, கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் கழகத்தில் இணைந்த அதே மாதத்தில், அவர் விருது நகர் மாவட்டக் கழக பொறுப்பாளராகத் தலைமைக் கழகத்தினால் அறிவிக்கப்பட்டார்.

அதைப்பற்றிக் கூட அ.தி.மு.க. தலைவர் ஜெயலலிதா அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் - அ.தி.மு.க.விலிருந்து விலகி தி.மு.கழகத்திலே சேர்ந்தவர்களுக்கு உரிய மரியாதை தரப்படுவதில்லை என்றும், அதற்கு உதாரணமாக **சேடப்பட்டி** அவர்களும், சேலம் **செல்வகணபதி** அவர்களும் என்று கூறி, மறுநாளே அதற்கு விளக்கமாகவும், விரிவாகவும் அவர்கள் இருவருமே மறுப்பு அறிக்கை வெளியிட்டிருந்தார்கள். அது மாத்திரமல்ல - அ.தி.மு.க.வில் இருந்து தி.மு.கழகத்தில் இணைந்தவர்களுக்கு எந்த அளவிற்கு மரியாதையும், மதிப்பும், உரிய பதவிகள் அளிக்கப்பட்டுள்ளன என்பதற்கும், அதே நேரத்தில் ஏற்கனவே கழகத்தில் தொடர்ந்து இருந்து வருபவர் களுக்கு உரிய மரியாதையும், மதிப்பும், பதவிகளும் வழங்கப்பட்டுள்ளன என்பதற்கும் எத்தனையோ சான்றுகள் உண்டு.

★ ★ ★

ஜெயின் கமிஷன் இடைக்கால அறிக்கையை வைத்து, மத்திய அரசு கவிழ்வதற்கே ஒரு சிலர் இந்திய அரசியலில் காரணமாக இருந்தார்கள். ஆனால், ஜெயின் கமிஷனின் இறுதி அறிக்கை என்ன கூறியது? *3.4.1998* அன்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரும், அப்போது தமிழகச் சட்டமன்றத்தில் உறுப்பினராக இருந்தவரும், என்னுடைய கெழுதகை நண்பர்களில் ஒருவருமான **சுப்பராயன்** பேரவையில் ஒரு முக்கியக் கேள்வியை எழுப்பினார். அவர் கூறியதாவது:-



''தி.மு.க. மீது குற்றம் சாட்டுவது நியாயமற்றது - நீதியற்றது'' என்று குடியரசுத் தலைவரிடம் ஐ.கே. குஜ்ரால் குறிப்பிட்டார்.

''இந்தியாவிலேயே மிகப் பெரிய அளவிற்குப் பாதித்த ஒரு விஷயமாக ஜெயின் கமிஷனுடைய அறிக்கை வந்தது நமக்குத் தெரியும். அது ஒரு இடைக்கால அறிக்கை என்று கூடக் கருதாமல், ஒரு நிர்ப்பந்தத்தை ஏற்படுத்திய காரணத்தால், மத்திய அரசில் ஐக்கிய முன்னணி அதிகாரத்தை இழந்து தேர்தல் நடைபெற்றதும், அந்தத் தேர்தலின் மூலம் கோடிக் கணக்கான ரூபாய் பொது மக்களுக்குச் செலவு ஏற்பட்டதும் நமக்குத் தெரியும். இப்போது முழு அறிக்கை மத்திய அரசிடம் கொடுக்கப்பட்டுவிட்டது.

''ஆனால் முழு அறிக்கை கொடுக்கப்பட்டுவிட்ட நிலையிலும், அதிகாரப்பூர்வமாக அது வெளியிடப்பட வில்லை. ''தினமணி'' ஒரு வால் போஸ்டர் வெளியிட்டிருக்கிறது. அதில் ''கருணாநிதிமீது குற்றம் இல்லை - ஜெயின் இறுதி அறிக்கை'' என்று இருக்கிறது. இதை தினமணி வெளியிட்டு, பின்னர் திரும்பப் பெற்றுக் கொண்டது ஏன் என்று புரியவில்லை. ஜெயின் அறிக்கை மத்திய அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுவிட்டது. ஜெயின் அறிக்கை சமர்ப்பிக்கப் பட்ட நிலையிலும் அதை வெளியிடவில்லை என்றால், அதிகாரப்பூர்வமாக அது வெளியிடப்படக்கூடாது என்ற நாகரிகமற்ற நிர்ப்பந்தம் மத்திய அரசுக்கு வந்திருக்கிறதா - அதுவும் டெல்லி சென்று திரும்பியிருக்கிற முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று பத்திரிகையாளர்களிடம் சொல்கிறபோது, ''ஜெயின் கமிஷன் அறிக்கை வந்துள்ளதே, அது பற்றி என்ன கருதுகிறீர்கள்?'' என்று கேட்டபோது, ஆட்சிக் கலைப்புக்கு மட்டும் நீட்டி முழங்குகிற ஜெயலலிதா ''இந்த விஷயம் பற்றி எனக்கு ஒரு விவரமும் தெரியாது.'' என்று

சொல்கிறார் என்றால், முழு விவரமும் தெரிந்து மத்திய அரசை நிர்பந்தித்து, தி.மு.க. அரசின் மீது குற்றம் சாட்டியது, வரலாற்றில் மிகப்பெரிய தவறு என்பது நிரூபிக்கப்பட்டு விட்டது. அவர்கள் அதை வெளியிடாமல் நிர்ப்பந்திக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். எனவே மாநில அரசுக்கு - முதலமைச்சர் அவர்களுக்கு - மத்திய அரசுக்கு - இப்படிப்பட்ட நிர்ப்பந்தம் இருக்கிறது என்கிற விவரம் ஏதாவது தெரியுமா? அப்படி மாநில அரசுக்கு தெரியுமானால், நாட்டு மக்களுக்கு அதுபற்றி அறிவிக்க வேண்டும்'' என்றார்.

அதற்கு நான் பதிலளித்தபோது, ''மத்திய அரசுக்கு எத்தனையோ நிர்ப்பந்தங்கள் இருக்கின்றன என்பது தெரியும். இந்த நிர்ப்பந்தம் இருக்கிறதா என்பது எனக்குத் தெரியாது. எனவே, வேறு தகவல் என்னிடத்திலே இல்லை. சுப்பராயன் அவர்கள் இங்கு சொன்ன தகவலைத் தவிர வேறு தகவல் எனக்குத் தெரியவில்லை'' என்று பதில் கூறினேன்.

செய்தியாளர்கள் என்னைச் சந்தித்து, ''உங்கள்மீது குற்றம் இல்லை என்று ஜெயின் கமிஷன் சொல்லியிருக்கிறதே, அதைப் பற்றி மகிழ்ச்சி அடைகிறீர்களா?'' என்று கேட்டபோது-

''என்னுடைய பொதுவாழ்க்கையில் என்மீது கற்கள் வீசப்படும்போதும், மலர்கள் தூவப்படும்போதும் இரண்டையும் ஒன்றாகக் கருதித்தான் என்னுடைய பயணத்தை நடத்திக் கொண்டிருக்கிறேன்'' என்று குறிப்பிட்டேன்.

இதே கேள்வியை த.மா.கா. தலைவர் மூப்பனார் அவர்களிடமும் செய்தியாளர் கேட்க, ''இந்தத் தகவல் எனக்கு அதிர்ச்சியையோ, ஆச்சரியத்தையோ தரவில்லை. ஜெயின் இறுதி அறிக்கை பற்றி எனக்கு கடந்த 20 நாட்களுக்கு முன்பே சில தகவல்கள் தெரிய வந்தது. அப்போதே தி.மு.க.மீது எந்தக் குற்றச் சாட்டும் இல்லை என்று கூறியிருப்பது எனக்குத் தெரியும்'' என்று கூறினார்.

16.12.1997 அன்று பா.ஜ.க. தலைவர்கள் ஜெயலலிதாவை அவரது இல்லத்தில் சந்தித்து அ.தி.மு.க.வுடன் கூட்டணி




தலைமைச் செயற்குழுவில், கூட்டணிக் கட்சிகளுடன் பேச ஆர்க்காடு வீராசாமி, துரைமுருகன், வீடுதலைவிரும்பி ஆகிய மூவர் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

அமைப்பது குறித்துப் பேசினார்கள். அத்வானி அவர்களும் ஜெயலலிதாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியதாகவும் ஏடுகளில் செய்தி வந்தது.

நாடாளுமன்ற மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க.வும், அ.தி.மு.க.வும் இணைந்து போட்டியிடப் போவதாகவும், இருவருக்குமிடையே உடன்பாடு ஏற்பட்டுவிட்டதாகவும், அ.தி.மு.க. தலைமைக் கழகம் அறிக்கை வெளியிட்டது. பா.ஜ.க.விற்கு எதிரிடையாக உள்ள காங்கிரஸ் கட்சியோடுதான் அ.தி.மு.க. கூட்டணி அமைக்கப்போகிறது என்றும், இருவருக்கும் மிடையே எத்தனை இடங்கள் என்றெல்லாம் கூட பேசப்பட்டு விட்டதாகவும் கருதப்பட்டு வந்த நிலைக்கு மாறாக, இந்த முடிவு தமிழகத்திலே பேசப்பட்டது.

இன்னும் சொல்லப் போனால், 1996ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது, மூப்பனார் உள்ளிட்ட தலைவர்கள் எல்லாம் தி.மு.கழகத்தோடுதான் உறவு வைத்துக்கொள்ள வேண்டுமென்று கடுமையாகக் கேட்டுக் கொண்டும்கூட, அதனைப் புறக்கணித்து விட்டு, ஜெயலலிதாவோடு தோழமை கொண்டு போட்டியிட்ட காங்கிரஸ் கட்சியின் முகத்தில் கரியைப் பூசுவதைப்போல, ஓராண்டு காலத்திற்குள் காங்கிரஸ் கட்சியை, **'அம்போ'**வென்று விட்டுவிட்டு அத்வானியோடு பேசி மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க.வுடன் தோழமை கொண்டார் ஜெயலலிதா.

செய்தியாளர்கள் ஜெயலலிதாவிடம் அது பற்றிக் கேட்டபோது, ''நாடு முழுவதும் காங்கிரஸ் துண்டு துண்டாக உடைந்து சின்னாபின்னமாகி பலவீனப்பட்டுக் கிடக்கிறது. கூட்டணி குறித்து காங்கிரசுடன் நான் ஒருபோதும்



சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் தனது ரசிகர்களையெல்லாம் தவறாமல் தி.மு.க. - தா.மா.கா. கூட்டணிக்கே வாக்களிக்க வேண்டும்! என்று கேட்டுக் கொண்டார்.

விவாதிக்கவில்லை. மரியாதை நிமித்தமாகத்தான் **விஜய பாஸ்கர ரெட்டி** என்னைச் சந்தித்துப் பேசினார். அப்போது கூட்டணி குறித்தும் அவர் பேசினார். கட்சி நிர்வாகிகளுடன் கலந்து பேசிய பிறகுதான் அது குறித்துப் பேச முடியும்என்று கூறினேன். கூட்டணி குறித்து ஒரு உறுதியான கருத்தை நான் அப்போது சொல்லவில்லை'' என்றார்.

★ ★ ★

பா.ம.க.வும் அந்தத் தேர்தலில் அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்தது. ஆனால், அதற்கு அந்தக் கட்சியின் சட்டமன்றத் தலைவராக இருந்த **பேராசிரியர் தீரன்** எதிர்ப்புத் தெரிவித்தார். ''மிகவும் பிற்படுத்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட- தாழ்த்தப்பட்ட - சிறுபான்மையின மக்களின் நலன் காக்கும் உரிமைக்குப் போராடும் இயக்கம்தான் பா.ம.க. என்று உருவாக்கிவிட்டு - அடிப்படைக் கொள்கைக்கே வேட்டு வைக்கும்படி, தேர்தல் சீட்டுக்காக யாருடன் வேண்டுமானாலும் சேரலாம் என்றால், பா.ம.க. வித்தியாசமான கட்சி என்று இது நாள் வரை நாம் சொன்னதற்கு அர்த்தமென்ன?'' என்று வேகமாக அறிக்கை விடுத்தார், பேராசிரியர் தீரன்.

''மேலும், ''இட ஒதுக்கீட்டிற்காக 25 உயிர்களைத் தொடர் சாலை மறியல் போராட்டத்தில் தியாகம் செய்து உருவான பா.ம.க.வை இட ஒதுக்கீடு, மதச் சார்பற்ற தன்மை இவைகளுக்கெல்லாம் எதிரான பா.ஜ.க.வோடு சேர்ந்து, தமிழ்நாட்டில் மாபெரும் வரலாற்றுக் களங்கத்தை ஏற்படுத்திய பழிக்கு நாம் ஆளாக வேண்டாம் என டாக்டர் அய்யாவை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்'' என்று அறிக்கை விடுத்தார். இவ்வாறு கருத்து வேறுபாடு முற்றிய நிலையில், பேராசிரியர் தீரன் பா.ம.க.விலிருந்து இடை நீக்கம் செய்யப்பட்டார்.

பா.ம.க.நிறுவனத் தலைவர் டாக்டர் ராமதாஸ் அவர்கள் அ.தி.மு.க.வுடன் தேர்தல் உடன்பாடு கொண்டவுடன் விடுத்த அறிக்கையில், தி.மு.க. புறக்கணித்ததால் அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்துக் கொண்டதாகத் தெரிவித்தார். 1996ஆம் ஆண்டு பொதுத் தேர்தலிலேயே தி.மு.கழகக் கூட்டணியுடன் பா.ம.க. இருந்திருக்க வேண்டும். அப்போது 2 நாடாளுமன்றத் தொகுதிகள் - 25 சட்டமன்றத் தொகுதிகள் என்று அந்தக் கட்சியின் சார்பில் அண்ணா அறிவாலயத்தில் பேசிவிட்டுச் சென்ற பிறகு - திரும்ப வந்து பதில் சொல்லாமலேயே, தி.மு.க.வுடன் கூட்டணி இல்லையென்று பா.ம.க.சார்பில் அறிவிக்கப்பட்டது.

ஆனால், அதற்குப் பிறகு ஆட்சி அமைந்தபின், டாக்டர் ராமதாஸ் அவர்களும், அந்தக் கட்சியின் சட்டமன்றத் தலைவராக இருந்த பேராசிரியர் தீரனும், அந்தக் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களும் அளித்த கோரிக்கையை தி.மு.கழக அரசு ஏற்று - பாட்டாளி மக்கள் கட்சியினர்மீது அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தொடரப்பட்டிருந்த 400க்கு மேற்பட்ட வழக்குகள் ஆய்வு செய்யப்பட்டு திரும்பப் பெறப்பட்டன. அந்த வழக்குகளில் சம்பந்தப்பட்டிருந்த பா.ம.க.வின் தொண்டர்கள் சுமார் 5000 பேர் இருக்கும் - அவர்கள் எல்லாம் தி.மு.கழக ஆட்சியிலேதான் விடுவிக்கப்பட்டார்கள்.

நாடாளுமன்றத் தேர்தலைப் பொறுத்தவரையில், பா.ம.க. சார்பில் பேராசிரியர் **தீரன்** அவர்களும், **கோ.க.மணி** அவர்களும் பேசுவதற்காக என்னிடம் வந்தார்கள். அதற்கு முதல் நாள், அவர்கள் கட்சியின் செயற்குழு வேலூரில் நடைபெற்று முடிந்தவுடன், செய்தியாளர்களைச் சந்தித்த டாக்டர் ராமதாஸ் அவர்கள், ''நாடாளுமன்றத் தேர்தலில் பா.ம.க. தி.மு.க.வுடனோ அல்லது அ.தி.மு.க.வுடனோ கூட்டு சேரும்'' என்று கூறி, அது ஏடுகளிலே வெளி வந்திருந்தது.

நான் அந்தச் செய்தியை தீரன் அவர்களிடம் காட்டி, ''இது எப்படிச் சரியாக இருக்க முடியும்? நேர் எதிரான இரண்டு கட்சிகளின் பெயர்களைச் சொல்லி, இரண்டில் ஒன்றுடன்

கூட்டணி என்பது பொருத்த மாகத் தெரியவில்லையே?'' என்று கேட்டேன்.

''ஏதோ நிருபர்கள் மடக்கி, மடக்கி கேள்வி கேட்டார்கள். அதனால், அப்படிச் சொல்ல வேண்டிய நிலை'' என்று தீரன் அவர்களும், மணி அவர்களும் சமாதானம் சொன்னார்கள்.




கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரனும், மு. தென்னவனும் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருடன் தி.மு.கழகத்தில் இணைந்தனர்.

அதையும் ஏற்றுக் கொண்டு, ''தேர்தல் அறிவிப்புக்கே இன்னும் நாட்கள் அதிகம் இருக்கின்றன. அறிவிப்பு வரவே இன்னும் இருபது நாட்களுக்கு மேலாகும். ஜனவரி முதல் வாரம்தான் அறிவிப்பு வரும். பிப்ரவரி இரண்டாவது வாரத்தில் தான் வேட்புமனு தாக்கல் என்பது இருக்கக்கூடும். மார்ச்சில்தான் தேர்தலே முடிவடையும் என்று கூறப்படுகிறது. எனவே நாம் கலந்து பேசிட நேரம் நிரம்ப இருக்கிறது. கடந்த முறைபோல் ஆகாமல் இந்த முறை நமது அணியில் பா.ம.க. நிச்சயம் இருக்கும் - இருக்க வேண்டும்.'' என்று நான் அவர்களிடம் கூறினேன்.

14.12.1997 அன்று கழகச் செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ள நான் புறப்பட்டுக் கொண்டிருந்தபோது, டாக்டர் ராமதாஸ் என்னைச் சந்திக்க விரும்புவதாகத் தொலைபேசிச் செய்தி வந்தது. அதற்கு நான் - ''செயற்குழுவில் கூட்டணி பற்றி எந்த முடிவும் எடுக்கப் போவதில்லை. எல்லா கட்சிகளுடனும் பேசி விட்டுத்தான் முடிவெடுக்க இருக்கிறோம். அதனால் இன்று செயற்குழு முடிந்ததும் சந்திக்கிறேன்''

குமுதம்

''மதவாதம் பேசும் பா.ஜ.க.வை ஆட்சியில் அமர்த்துவதா? என்று தொண்டர்களும், அனுதாபிகளும் யோசிக்க வேண்டும்'' என்றது 'குமுதம்'.


விளக்கமளிக்க விடுக்கும் நீட்டோலை!

அன்று எல்லாவற்றையும் கடந்த "நரித்தனம்" தி.மு.க. - பா.ம.க. இடையே புகுந்து பிரித்துவிட்டது - என்று நான் வருத்தினேன்.

என்று ராமதாஸ் அவர்களுக்கு அறிவிக்கச் சொல்லி விட்டு, செயற்குழுவிற்குச் சென்று விட்டேன்.

செயற்குழு முடிந்த பிறகு கழகப் பொருளாளர் ஆற்காடு வீராசாமியிடம் டாக்டர் ராமதாஸ் அவர்களுடன் சந்திப்புக்கான நேரம் கேட்குமாறு சொன்னேன். அவரும் பல முறை முயன்று, டாக்டர் ராமதாஸ் அவர்களைத் தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொள்ள இயலவில்லை என்றும் கூறினார்.

இதற்கிடையே எனக்கொரு செய்தி வந்தது. அதில் இரண்டு மாதங்களுக்கு முன்பே, பா.ம.க. சார்பில் ஒரு முக்கியமான தலைவர் மூலம் அ.தி.மு.க.வுடன் உடன்பாட்டுப் பேச்சுவார்த்தை முடிந்து விட்டதாகவும், தி.மு.க.வுடன் பேச்சு வார்த்தை முயற்சி, தி.மு.க. மதிக்கவில்லை என்ற குற்றச்சாட்டுகள் எல்லாம் கட்சியின் தொண்டர்களை நம்ப வைப்பதற்கான முயற்சி என்றும் கூறப்பட்டது.

இந்தச் செய்தியை நான் கேள்விப்பட்ட பிறகுகூட, நான் பா.ம.க. போய்விட்டது என்பதற்காக மகிழ்ச்சியடைய வில்லை. 2.1.1998 தேசிய ''முரசொலி''யில் **''விளக்கமளிக்க விடுக்கும் நீட்டோலை''** என்ற தலைப்பில் - நான் எழுதிய உடன்பிறப்பு மடலில் - அதனை முடிக்கும்போது, ''எல்லாவற்றையும் கடந்த ''நரித்தனம்'' இரு கட்சிகளுக்கு மிடையே புகுந்து அவரை நம்மிடமிருந்து மட்டுமல்ல - அவர் கட்டிக் காத்த புரட்சிகரமான கொள்கைகளிடமிருந்தும் பிரித்து

விட்டதே - கூடாதோர் நட்புக்குக் கூட்டி வைத்து விட்டதே என்ற கவலையுடன்தான் இந்தக் கடிதம் எழுதியுள்ளேன். கண்டன மடல் அல்ல இது - விபரமறியாமல் இருப்போர்க்கு விளக்கமளிக்க விடுக்கும் நீட்டோலை- அவ்வளவுதான்'' என்று குறிப்பிட்டிருந்தேன்.

பா.ம.க., அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்துக் கொண்டது பற்றி, 8.1.1998 தேதிய குமுதம் தனது தலையங்கத்தில் -

''தினந்தோறும் செய்தித்தாள்களைப் புரட்டும்போது, நேர்மையான எளிய இந்தியனின் மனதில் எழும் கேள்வி - இந்த அரசியல் கட்சிகளுக்கு மனசாட்சி என்று ஒன்று உண்டா? பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு என்ற லட்சியத்தை முன்வைத்து, அதற்காகச் சில உயிர்களையும் பலி கொடுத்து, தன்னை வளர்த்துக் கொண்ட கட்சி பா.ம.க.- வி.பி.சிங் அரசு மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமல்படுத்த முற்பட்ட போது, அதைத் தடுத்து நிறுத்துவதற்காக பாபர் மசூதிப் பிரச்சினையைக் கிளப்பி, ரத யாத்திரை துவக்கி, மசூதி இடிப்பு வரை கொண்டு சென்ற கட்சி பாரதீய ஜனதா கட்சி. இந்தத் தேர்தலில் இரண்டும் கைகோர்த்துக் கொண்டிருக்கின்றன. எதற்காக? ஒரு சில எம்.பி. சீட்டுக்களுக்காக.

''மதவாதம் பேசுகிற கட்சியைப் பதவியில் அமர்த்துவதற்காகவா பா.ம.க. துவக்கப்பட்டது? இத்தனை நாள் அதன் தொண்டர்கள் குடும்பத்தை, தொழிலை, சொந்த வாழ்வின் முன்னேற்றங்களைப் புறக்கணித்து உழைத்த தெல்லாம்சமூக விரோத சக்தி என்று கடந்த ஆண்டு வரை தங்கள் தலைவரால் கட்டிக் காட்டப்பட்ட கட்சியை உயிர்ப்பிக்கவா? தலைவர்கள் யோசிக்கமாட்டார்கள்- ஆனால் தொண்டர்களும், அனுதாபிகளும் யோசிக்க வேண்டும். ஏனெனில் அவர்களுக்கு மனசாட்சி உண்டு'' இவ்வாறு எழுதியிருந்தது.

29. சுய சொரூபம் வெளிப்பட்டது!

''எங்கள் கூட்டணியின் தலைவர், கலைஞர் தான் - அவரே கூட்டணியை வழி நடத்திச் செல்வார்'' என்றார் மூப்பனார்.

மக்களவைத் தேர்தலில் கூட்டணி கொண்ட அ.தி.மு.க. - பா.ஜ.க. - பா.ம.க. - ம.தி.மு.க., ஆகிய கட்சிகளின் தலைவர்கள் எல்லாம் கலந்து கொண்டு, 1998ஆம் ஆண்டு திருநெல்வேலியிலே மாநாடு ஒன்றை நடத்தினார்கள். அந்த மாநாட்டில் பேசிய தலைவர்கள் போட்டி போட்டுக் கொண்டு என்னைத் திட்டித் தீர்த்தார்கள். என்னைத் **''தீய சக்தி''** என்று விமர்சனம் செய்ததோடு, ''நோன்புக் கஞ்சி குடித்ததைத் தவிர, கருணாநிதி இஸ்லாமிய மக்களுக்காக என்ன செய்துவிட்டார்? தாழ்த்தப்பட்டவர்கள் தலைமைச் செயலாளர்களாக - காவல்துறை தலைவர்களாக வர அருகதை இல்லையா? வந்தால் கோட்டை வெடித்து விடுமா?'' என்றெல்லாம் வேகமாகப் பேசி, அந்தப் பேச்சு அப்போது ஏடுகளில் வெளிவந்தது.


அதற்கெல்லாம் அப்போதே நான் பதில் அளித்தேன். உருது பேசும் முஸ்லீம்களைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று முஸ்லீம்கள் கோரிக்கை வைத்தபோது, அந்தத் துறையின் அமைச்சராக இருந்த ராஜாராம் ''சட்டத்தில் அதற்கு இடமில்லை'' என்று கூறியபோது, ''சட்டத்திலே இடம் இல்லாவிட்டாலும், என் இதயத்தில் இடம் இருக்கிறது.'' என நான் பதில் அளித்து, அதனை அமல்படுத்தியதையெல்லாம் அவர்களுக்கு அப்போதே பதிலாக அளித்தேன்.

மேலும், 1989ஆம் ஆண்டு நான் முதலமைச்சராக ஆனபோது, ''மிக மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த **எம்.எம்.ராஜேந்திரன்** அவர்களைத்தான் தலைமைச் செயலாளராகவும், ஸ்பிக் நிறுவனத் தலைவராகவும் நியமித்தேன் என்பதையும், காவல் துறையில் டி.ஜி.பி.யாக ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்த **துரை** ஐ.பி.எஸ். அவர்களைத்தான் நியமித்திருந்தேன் என்பதையும், 1996ஆம் ஆண்டு முதலமைச்சரானபோது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணையத் தலைவராக ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்த முருகராஜ் ஐ.ஏ.எஸ். அவர்களைத்தான் நியமித்தேன். ஏன் என்னுடைய சிறப்புச் செயலாளராக **விசுவநாதன்** என்ற ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவரைத்தான் நியமித்துக் கொண்டேன். அதற்குப் பின்னரும் கூட, **ஏ.பி. முத்துசாமி** என்ற தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவரை தலைமைச் செயலாளராகவே நியமனம் செய்து கொண்டிருந்தேன்'' என்ற இந்த விளக்கங்களை எல்லாம் அளித்திருந்தேன்.

அ.தி.மு.க.வின் அவைத் தலைவராக இருந்த **நாவலர் நெடுஞ்செழியன்** அந்தத் தேர்தலில், ''பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால், தமிழகத்தில் தி.மு.க. அரசைக் கலைக்கக் கோருவோம்'' என்ற அறிவிப்பையும் செய்தார்.

அ.தி.மு.க. பா.ஜ.க.வுடன் உறவு கொண்டது பற்றி ம.தி.மு.க.வும் ''தமிழ்நாடு மக்கள் மகிழ்ச்சியோடு அதனை வரவேற்கின்றார்கள்'' என்ற அறிக்கை விடுத்தது. அந்தத் தேர்தலில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. ஏ.பி.பரதன் அவர்கள், ஐதராபாத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் குறிப்பிட்ட கருத்து நினைவிலே கொள்ளக் கூடியதாகும்.

''பாரதீய ஜனதாவுக்கும், காங்கிரசுக்கும் இடையே நேரடிப் போட்டி உள்ள இடங்களில், பா.ஜ.க.வை முறியடிக்க காங்கிரஸ் கட்சியை மறைமுகமாக ஆதரிப்பது சரியான நடவடிக்கையாக அமையும். எங்களுடைய முதல் முழக்கம் ஐக்கிய முன்னணிக்குப் பெரும்பான்மை பலம் என்பதுதான். அதேசமயம் தேர்தல் களத்தில் சில இடங்களில் முக்கிய



"மதவெறி காரணமாக குண்டு வெடிப்பு போன்ற வன்முறைச் செயல்களில் ஈடுபடுவது எவராக இருந்தாலும் எந்த மதத்தினராக இருந்தாலும்- கடுமையாக நடவடிக்கை எடுப்போம்"

போட்டி என்பது காங்கிரஸ் கட்சிக்கும், பாரதீய ஜனதாவுக்கும் இடையேதான் இருக்கும். அத்தகைய சூழ்நிலைகளில் மதச்சார்பற்ற வாக்குகளைப் பிரிப்பது முறையானதாக இராது. அப்படிப் பிரித்தால், அதன் பலனை பா.ஜ.க. அறுவடை செய்து கொண்டு போய்விடும். பல மாநிலங்களில் காங்கிரசுக்கும், ஐக்கிய முன்னணிக்கும் இடையேதான் முக்கிய போட்டி நடக்கும். ஆனால் சில பகுதிகளில் ஐக்கிய முன்னணிக் கட்சிகள் பலவீனமாக உள்ளன. அத்தகைய இடங்களில் காங்கிரசுக்கு முறைமுகமாக ஆதரவளிப்பதே சரியானதாக அமையும்" என்றார்.

7-1-1998 அன்று சத்தியமூர்த்தி பவனில் செய்தியாளர் களைச் சந்தித்த த.மா.கா. தலைவர் **மூப்பனார்** அவர்கள் முதலமைச்சர் கலைஞருடன் தற்போதுதான் பேசிவிட்டுத் திரும்புவதாகவும், தங்களது கூட்டணியின் தலைவர்கள் கலைஞர்தான் என்றும், அந்த வகையில் கூட்டணியைக் கலைஞரே வழி நடத்திச் செல்வாரென்றும், பேச்சுவார்த்தை சுமூகமாகப் போய்க் கொண்டிருக்கின்றது என்றும் தெரிவித்தார்.



நாடாளுமன்ற மக்களவைக்கான தேர்தல், பிப்ரவரி 16, 22, 28 மார்ச் 7 ஆகிய தேதிகளில் நான்கு கட்டமாக வாக்குப் பதிவு நடைபெறும் என்று அறிவிப்பு வந்தது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் பிப்ரவரி மாதம் 16 மற்றும் 22 ஆகிய நாட்களில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. வாக்கு எண்ணிக்கை மார்ச் 2ம் தேதி தொடங்கும் என்றும் தேர்தல் கமிஷன் அறிவித்திருந்தது.

ஐக்கிய முன்னணியின் சார்பில் தேர்தல் பிரச்சாரம் 19-1-1998 அன்று ஐதராபாத்தில் தொடங்கியது. அந்தக் கூட்டத்தில் கழகத்தின் சார்பில் நான் கலந்து கொண்டேன். என்னுடன் மத்திய தொழில் துறை அமைச்சராக இருந்த தம்பி **முரசொலி மாறனும்,** கழகப் பொறுப்பாளர் **ஆர்க்காடு வீராசாமியும்** வந்திருந்தனர். மேலும் அந்தக் கூட்டத்தில் இந்தியப் பிரதமர் **குஜ்ரால்,** முன்னாள் பிரதமர் **தேவ கவுடா,** ஆந்திர மாநில முதல்வர் **சந்திரபாபு நாயுடு,** மேற்கு வங்க முதல்வர் **ஜோதிபாசு,** கர்நாடக முதல்வர் **ஜெ.எச். பட்டேல்,** காஷ்மீர் முதலமைச்சர் **பரூக் அப்துல்லா,** அஸ்ஸாம் மாநில முதலமைச்சர் **மகந்தா,** மத்திய அமைச்சர் **ராம் விலாஸ் பஸ்வான்,** மார்க்சிஸ்ட் கட்சித் தலைவர் **ஹர்கிஷன் சிங் சுர்ஜித்,** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் **ஏ.பி. பரதன், அமர்சிங்** ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

ஐதராபாத்திலிருந்து சென்னை திரும்பியதும், வேட்பாளர் நேர்காணல் பணியில் தொடர்ந்து ஈடுபட்டேன்.



கூட்டணிக் கட்சியினரின் முதல் தேர்தல் பிரச்சாரம், ஐதராபாத்தில் துவங்கியது.

23-1-1998 அன்று காலையில் அண்ணா அறிவாலயத்தில் ம.தி.மு.க.வின் துணைப் பொதுச் செயலாளராக இருந்த **பொன்.முத்துராமலிங்கம்** அந்தக் கட்சியிலிருந்து விலகி, ஆயிரத்திற்கும் மேற்பட்ட தோழர்களுடன் கழகத்தில் மீண்டும் தன்னை இணைத்துக்கொண்டார். அவருடன் **போடி முத்து மனோகரன்,** ராமனாதபுரம் மாவட்டச் செயலாளராக இருந்த **இ.மோகன், பெ.மு.அப்பாசாமி, சே.பசும்பொன் பாண்டியன், தோடனேரி சுப்பிரமணியன்** உட்பட பல்வேறு பொறுப்புக்களிலே இருந்தவர்கள் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் மீண்டும் கழகத்திலே தங்களை இணைத்துக் கொண்டார்கள். அதற்குச் சில நாட்களுக்கு முன்பு, முன்னாள் அமைச்சர் **ச.தங்கவேலு** ம.தி.மு.க.விலிருந்து விலகி கழகத்திலே தன்னை மீண்டும் ஐக்கியப்படுத்திக் கொண்டார்.

அவரைத் தொடர்ந்து அடுத்த சில நாட்களில், ம.தி.மு.க. அரசியல் ஆலோசனைக் குழுச் செயலாளராக இருந்த **மதுராந்தகம் ஆறுமுகம்** தலைமையில் 5000க்கும் மேற்பட்டவர்கள் காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் ம.தி.மு.க.வை கூண்டோடு கலைத்து விட்டு, கழகத்திலே வந்து சேர்ந்தார்கள்.

அவரைத் தொடர்ந்து, ம.தி.மு.க.வின் ஆட்சி மன்றக் குழு உறுப்பினரும், நாகை மாவட்டச் செயலாளருமான வேதாரண்யம் **மா.மீனாட்சிசுந்தரம்,** முன்னாள் அமைச்சரும் எம்.ஜி.ஆர். முன்னணித் தலைவருமான **எஸ்.ஆர்.ராதா,** திருவாரூர் மாவட்ட ம.தி.மு.க. செயலாளர் **அய்யா தமிழரசன்** ஆகியோர் தலைமையில் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கழகத்திலே இணைந்தார்கள்.

தோழமைக் கட்சிகள் இடையே 40 இடங்களை எப்படிப் பகிர்ந்துகொள்வது என்பதில் பெரிய பிரச்சினை. 1996ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலின்பது, நாடாளுமன்றத்திற்கு 20 இடங்களில் த.மா.கா. போட்டியிடுவதென்றும், 18 இடங்களில் தி.மு.க. போட்டியிடுவதென்றும், 2 இடங்களில்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி போட்டியிடுவதென்றும் முடிவு செய்யப்பட்டிருந்தது. அதே நிலை 1998ஆம் ஆண்டு தேர்தலிலும் தொடரலாம் என்று எண்ணியபோது, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் இந்த அணியில் இணைந்து போட்டியிட முன்வந்தது. அதனால் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கான இரண்டு இடங்களில், ஒரு இடத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும், ஒரு இடத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் போட்டியிடலாம் என்றும், அதற்கு ஒத்துழைப்பு நல்கிட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டேன்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ''ஏற்கனவே 2 இடங்களைப் பெற்றிருந்ததை எப்படி விட்டுக் கொடுப்பது?'' என்று கேட்டபோது, நாகை தொகுதியிலும் போட்டியிடலாம் என்றும், சிவகாசி தொகுதிக்குப் பதிலாக சில மாதங்களில் வரவுள்ள மாநிலங்களவைத் தேர்தலில் ஓர் இடத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் தி.மு.க. சார்பில் உறுதியளித்தேன். ''இந்த அணியிலே புதிதாக இணைத்துக் கொள்ளும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி - அவர்கள் விரும்பிய கோவைத் தொகுதியிலே மாத்திரம் போட்டியிடலாம்'' என்று கூறினேன்.

ஆனால் அவர்கள் அதனை ஏற்காமல், ஐந்தாறு தொகுதிகளில் தனித்துப் போட்டியிடுவதாக அறிவிப்பு செய்தார்கள். அவர்கள் தங்கள் முடிவினைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டேன். மூப்பனார் அவர்களும் தங்கள் கட்சிக்கு மாநிலங்களவையில் ஒரு சில மாதங்களில் ஓர் இடம் கிடைக்க உள்ளது என்றும், அந்த இடத்தை மார்க்சிஸ்ட் கட்சிக்குக் கொடுக்க ஒப்புதல் தருவதாகவும், அதையேற்றுக் கொண்டு கூட்டணிக்கு வர வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுத்தார்.



''சூரிய ராகங்கள்'' எனும் பெயரில் பிரச்சார ஒலிநாடா தயாரித்த டி. ராஜேந்தரை கலைஞர் கௌரவித்தார்.



நாடாளுமன்றத் தேர்தலுக்கான தேர்தல் அறிக்கையை அண்ணா அறிவாலயத்தில் கலைஞர் வெளியிட்டார். அருகே பேராசிரியர்

அதனையும் ஏற்காமல், வட சென்னை, மதுரை ஆகிய இரண்டு தொகுதிகளில் மட்டும் சி.பி.எம். போட்டியிடுவது என்றும், மற்ற தொகுதிகளில் தி.மு.க. தா.மா.கா. வேட்பாளர்களைத் தனி மேடையிலிருந்து ஆதரிப்பதென்றும் முடிவெடுத்து அறிவித்தார்கள்.

24-1-1998 அன்று புதுவை உட்பட *18* மக்களவைத் தொகுதிகளில் கழகத்தின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலைப் படித்தேன். மத்திய சென்னையில் **முரசொலி மாறன்,** எம்.ஏ., தென் சென்னையில் **டி.ஆர்.பாலு,** பி.எஸ்.ஸி., வட சென்னையில் **செ.குப்புசாமி,** செங்கற்பட்டில் **கு.பரசுராமன்,** திருப்பெரும்புதூரில் **த.நாகரத்தினம்** பி.ஏ.,பி.எல், திண்டிவனத்தில் **டி.ஜி.வெங்கட்ராமன்** பி.ஏ.,பிஎல்., சிதம்பரத்தில் **வெ.கணேசன்,** எம்.ஏ.,பி.எட்., வேலூரில் **தி.அ. முகமது சகி,** பி.ஏ.பி.எல்., திருப்பத்தூரில் **த.வேணுகோபால்,** திருச்செங்கோட்டில் டாக்டர் **கே.பி.ராமலிங்கம்,** கோபிச்செட்டிப்பாளையத்தில் **ந.இராமசாமி,** பி.ஏ.பி.எல்., கோவையில் **க.ரா.சுப்பையன்,** பி.எஸ்ஸி., பி.எல்., தஞ்சையில் **பழனிமாணிக்கம்,** எம்.ஏ.,பி.எல்., புதுக் கோட்டையில் **என்.சிவா** எம்.ஏ., பெரம்பலூரில் **ஆ.ராஜா,** பி.எஸ்ஸி., எம்.எல். பெரியகுளத்தில் திருமதி **இரா.காந்திமதி,** பி.ஏ., திருநெல்வேலியில் **சரத்குமார்,** பி.எஸ்ஸி., பாண்டிச்சேரியில் **எஸ்.ஆறுமுகம்,** பி.காம்., பி.எல். ஆகியோர் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டனர்.

29-1-1998 அன்று கழகத்தின் சார்பில் *12*ஆவது நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை அண்ணா அறிவாயலயத்தில் வெளியிடப்பட்டது. அதே நிகழ்ச்சியில் இயக்குநர் தம்பி

டி.ராஜேந்தர் தயாரித்த தேர்தல் பிரச்சார ஒலிநாடாவும் வெளியிடப்பட்டது.

2-2-1998 அன்று பிரதமர் குஜ்ரால் அவர்கள் கலந்து கொள்ளும் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் சென்னை கடற்கரையிலே ஏற்பாடு செய்யப்பட்டு, அதிலே நானும் கலந்து கொண்டேன்.

3-2-1998 அன்று காலையில், அண்ணா நினைவு நாளையொட்டி அமைதி ஊர்வலத்தில் கலந்து கொண்டு விட்டு, அண்ணா நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திவிட்டு, தேர்தல் பிரச்சாரத்திற்குப் புறப்பட்டேன். 20-2-1998 வரை தேர்தல் சுற்றுப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அ.தி.மு.க. அணியின் சார்பில் அ.தி.மு.க. 23 இடங்களிலும் பா.ஜ.க. 5 இடங்களிலும், பா.ம.க. 5 இடங்களிலும், ம.தி.மு.க. 5 இடங்களிலும், தமிழ்நாடு ராஜிவ் காங்கிரஸ் ஒரு இடத்திலும், ஜனதா கட்சி ஒரு இடத்திலும் என்ற அளவில் போட்டியிட்டன.

அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்துக் கொண்டதுபற்றி பா.ஜ.க. தலைவர் வாஜ்பாய் அவர்கள் விளக்கம் அளிக்கும் வகையில் ''ஊழல் புகார்கள் கூறப்பட்டோர் மீதான குற்றங்கள் உரிய நீதி மன்றங்களில் நிரூபிக்கப்பட்டால் தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா உட்பட குற்றம் சாட்டப்பட்ட கட்சித் தலைவர்களுடனான உறவை பா.ஜ.க. முறித்துக் கொள்ளும்.'' என்று செய்தியாளர்களிடம் கூறினார்.

பா.ஜ.க.வின் பொதுச் செயலாளராக இருந்த கோவிந்தாச்சார்யா கூறும் போது, தமிழ்நாட்டில் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க.வுடன் பாரதீய ஜனதா தேர்தல் உடன்பாடு செய்து கொண்டது வழுவல்தான் என்றார். மேலும், ''உத்தரப்பிரதேச அமைச்சரவையில் தேவையற்ற நபர்களை அமைச்சர்களாக்கியது, அ.தி.மு.க.வுடன் தேர்தல் கூட்டணி வைத்தது என்று இரண்டு வழுவல்களை பா.ஜ.க. செய்து விட்டது. தற்காப்பின் பொருட்டு இந்த முடிவு எடுக்கப்பட்டது'' என்றார்.



தி.மு.கழக வேட்பாளர்கள் பட்டியலை கலைஞர் வெளியிட்டார். பேராசிரியர், துரைமுருகன், முரசொலி மாறன் உடன் உள்ளனர்.

தேர்தல் பிரச்சாரம் மிகவும் கடுமையாக நடை பெற்றுக் கொண்டிருந்த நேரத்தில்தான், தமிழகச் சரித்திரத்திலேயே இல்லாத அளவிற்குக் கோவையிலே 14-2-1998 அன்று மாலை 4 மணியளவில் குண்டு ஒன்று வெடித்தது. அதையடுத்து 13 இடங்களில் தொடர்ச்சியாக குண்டுகள் வெடித்து முப்பதுக்கும் மேற்பட்டவர்கள் தங்கள் இன்னுயிரை இழந்தனர். 50க்கு மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். பா.ஜ.க.தலைவர் **அத்வானி** அவர்கள் பேசுவதற்காக இருந்த மேடை அருகே இரண்டு குண்டுகள் வெடித்தது. அங்கே மட்டும் பத்து பேர் இறந்தனர். அத்வானி அவர்கள் அந்த நிகழ்ச்சிக்கு 3 மணி நேரம் தாமதமாக வந்த காரணத்தினால் அவர் தப்பினார். கூட்டம் சரியான நேரத்தில் நடைபெற்றிருக்குமேயானால் நூற்றுக்கணக்கானவர்கள் அந்த விபத்திலே மாண்டிருக்கக்கூடும்.

செய்தி கிடைத்ததவுடன் நான் விடுத்த அறிக்கையில் ''ஜனநாயகக் கடமையை நிறைவேற்றிட தமிழ்நாட்டு மக்கள் முதல் கட்டத் தேர்தலை 16ஆம் தேதியன்று சந்திப்பதற்கு இருக்கும் நேரத்தில், இத்தேர்தல் அமைதியாக நடக்கக்கூடாதென்ற கெடுமதியுடன் தீவிரவாத இயக்கத்தினர் ஒரு சிலர், கோவை மாநகரில் நடத்தியுள்ள குண்டு வெடிப்புச் சம்பவங்களும் - அதன் காரணமாக முப்பதுக்கு மேற்பட்ட அப்பாவி பொதுமக்கள் உயிரிழந்துள்ளதுமான கொடிய நிகழ்ச்சிகளும் - என்னைப் பெரும் அதிர்ச்சிக்கு ஆளாக்கி இருக்கின்றன.

''இந்தச் சம்பவத்தைப் பயன்படுத்திக் கொண்டு சமூக விரோதிகளும், சில அரசியல் கட்சியினரும்கோவை நகரில்

கலவரங்களைச் செய்வதும், தூண்டிவிடுவதுமான வன்முறைச் செயல்களில் ஈடுபட்டுள்ளது, வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல இருக்கின்றதென்பதையும் வேதனையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த வன்முறை நிகழ்ச்சிகள் பரவாதிருப்பதற்கும் - நடந்துவிட்ட வன்முறைகளுக்கு உரிய நடவடிக்கை எடுப்பதற்கும் அரசு சிறிதுகூட தயக்கம் காட்டப் போவதில்லை.''

''தமிழ்ப் பெருங்குடி மக்கள், அரசுடன் ஒத்துழைத்து - அரசு எடுத்திடும் சட்டப்படியான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்புத் தருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். மத வெறியும் அதன் காரணமாக விளையும் கொடுமைகளும் கூடாது என்பதுதான் நானும் என் தலைமையில் உள்ள கழக ஆட்சியும் நீண்ட காலமாக எடுத்துரைத்து வரும் கருத்தாகும். சிறுபான்மையினரோ - பெரும்பான்மையினரோ, இது போன்ற வன்முறைக் கொடுமையில் யார் ஈடுபட்டாலும், அதனை இந்த அரசு அனுமதிக்காது - அனுமதிக்க முடியாது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். பிரதமருடன் இது குறித்துத் தொடர்பு கொண்டு பேசியிருக்கிறேன். இந்தச் சதி வெளி நாட்டிலிருந்து தூண்டிவிடப்பட்டு, ஜனநாயக ரீதியில் இந்தியாவில் நடைபெறும் தேர்தலில் குழப்பம் ஏற்படுத்தும் நோக்கத்துடன் - செய்யப்படுவதாக சந்தேகம் கொள்வதில் தவறு இருப்பதாகத் தெரியவில்லை. இந்திய ஜனநாயகத்தைச் சீர்குலைக்கும் நோக்குடன் செய்யப்படும் வெளிநாட்டுச் சதி குறித்து மத்திய அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டிருப்பதாக பிரதமர் அவர்கள் தெரிவித்துள்ளார். எனவே, இந்தச் சூழ்நிலையில் தமிழ் மக்கள் அரசுடன் எல்லா வகையிலும் ஒத்துழைத்து, அமைதி நிலவிட துணை நிற்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கோவைச் சம்பவத்துக்கு என் ஆழ்ந்த கவலையை தெரிவிப்பதுடன், சதிகாரர்கள் நடத்தியுள்ள இந்த நாச வேலைக்கு கடும் கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு என் கண்ணீருடன் கூடிய இரங்கலைத் தெரிவிப்பதுடன் - அந்தக்



டெல்லியில் இப்படித் திலகமிட்டு வரவேற்ற வாஜ்பாய்க்கு...

குடும்பங்களுக்கு உரிய நிவாரணங்கள் அரசின் சார்பில் வழங்கப்படுமென்றும் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று தெரிவித்தேன்.

தமிழக அரசின் சார்பில் **அல் - உம்மா, ஜிகாத் கமிட்டி** ஆகிய இரண்டு தீவிரவாத இயக்கங்களும் சட்ட விரோதமான அமைப்புகள் என்று தமிழக அரசால் தடை செய்யப்பட்டன.

கோவையில் நடந்த சம்பவங்களையொட்டி எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப் பற்றியும், அமைதியைப் பாதுகாக்க மேலும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றியும் ஆய்வு செய்ய நானும், மூப்பனார் அவர்களும் மற்றும் தலைமைச் செயலாளர், சிறப்புத் தலைமைச் செயலாளர், காவல் துறையின் தலைமை இயக்குனர், உள்துறை செயலாளர் ஆகியோர் கோவைக்கு விரைந்தோம்.

கோவையில் குண்டு வெடிப்பு நடந்த பகுதிகளையெல்லாம் பார்வையிட்டு பாதிக்கப்பட்டோருக்கு ஆறுதல் வழங்கினோம். அதன் பின்னர் நான் செய்தியாளர்களைச் சந்தித்தபோது, ''கோவை மாநகரில் நடைபெற்றுள்ள இந்த வன்முறைச் சம்பவம் மிகவும் கொடுமையானது - கொடூரமானது. கடுகளவுகூட மனிதாபிமானமற்ற செயல். யுத்த காலங்களில் கூட மருத்துவமனைகளில் குண்டு போடுவதில்லை. ஆனால், இங்கே மருத்துவமனையிலும்



இப்படி மரியாதை செலுத்தினார், ஜெயலலிதா!

குண்டு வீசி மூன்று செவிலியர்கள் படுகாயமடைந்து ஒருவர் கொல்லப்பட்டிருக்கிறார். இன்னொருவர் ஆபத்தான கட்டத்தில் இருக்கிறார். இதை மிருகச் செயல் என்று சொல்வதைவிட வேறு வார்த்தையில்லை. 41 பேர் கொல்லப்பட்டிருப்பதாக அதிகாரப்பூர்வமாக எனக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. குண்டுகளைப் பதுக்கி வைத்திருந்த தீவிரவாதிகளின் வீடுகள் சோதனையிடப்பட்டபோது, அவர்கள் போலீசார் மீது எதிர்த் தாக்குதல் நடத்திய காரணத்தால் போலீசாருக்கும் காயம் ஏற்பட்டிருக்கிறது. அங்கே அவர்கள் தயாரித்து வைத்திருந்த குண்டுகளும் அந்த இடத்தில் வெடித்து தீவிரவாதிகள் ஆறு பேர் அந்த விபத்தில் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அதுமட்டுமின்றி அங்கேயிருந்த தீவிரவாதிகள் எட்டு பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். மத வெறி காரணமாகவோ அல்லது இதுபோன்ற வன்முறைச் செயல்களில் ஈடுபடுகின்ற வெறி காரணமாகவோ - இத்தகைய கொடூரங்கள் விளைவிப்பவர்கள் யாராக இருந்தாலும் - எந்த மதத்தைச் சேர்ந்த தீவிரவாதிகளாக இருந்தாலும், அவர்களை மிகக் கடுமையாக அடக்குவதற்கு சட்டரீதியில் முனைப்பான முயற்சிகள் தொடர்ந்து எடுக்கப்படும்'' என்று கூறினேன்.

நடைபெற்ற சம்பவங்கள் குறித்து பிரமதர் குஜ்ரால் அவர்களோடு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு விளக்கினேன்.

கோவைச் சம்பவம் குறித்து சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் பரபரப்பான பேட்டி ஒன்றினை 15-2-1998 அன்று கொடுத்தார். அந்தப் பேட்டியில், ''தி.மு.க. - த.மா.கா. கூட்டணி நல்ல முறையல் வந்து கொண்டிருக்கிறது. இதை எப்படியாவது தடுக்க வேண்டும் என்று சுயநலத்தின் காரணமாக இ தை ச் சி ல ர் செய்கிறார்கள். இந்தச் சம்பவத்தை வைத்து



பாரதீய ஜனதாவுக்கு ஜெயலலிதா விதித்த கொடிய நிபந்தனை

தி.மு.க. ஆட்சியைக் கலைக்கலாம் என்று சில பேர் நினைக்கிறார்கள். அப்படி நினைத்தால், தமிழ் நாட்டில் ஒரு புரட்சியே உருவாகும். மீண்டும் இதுபோன்ற சம்பவம் நடந்தால் அதை எதிர்த்து முதல் குரல் நானே கொடுப்பேன். முதல்வர் கலைஞர் அவர்கள், தன்மானமுள்ள தலைவர். எப்படி முடிவெடுக்க வேண்டும் என்று அவருக்குத் தெரியும்.

''ஜெயலலிதா என்னைப் பார்த்து, ''நீ கறுப்புப் பணம் வாங்கவில்லையா?'' என்று கேட்கிறார். சினிமாவில் இருந்தவர், இந்தக் கேள்வியைக் கேட்கிறார். இதனால் அவர் எவ்வளவு கீழ்த்தரமாக நடந்து கொள்கிறார் என்பது புரிகிறது. ஒரு பெரிய கட்சிக்கு இப்படிப்பட்டவர் தலைமை தாங்கியிருக்கிறார். அதை அங்குள்ளவர்கள் எப்படிச் சகித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றே தெரியவில்லை. இவ்வளவு நடந்த பிறகும்கூட ஜெயலலிதா அவர்கள் இன்னும் மாறவில்லை. இப்போது மாறாதவர், இப்போது நான் சொல்கிறேன், இனி அவர் வாழ்க்கையில் எப்போதும் மாறமாட்டார். ஜெயலலிதாவுக்கு முதலில் பணவெறி இருந்தது. இது முடிந்த பிறகு இப்போது பழிவெறி வந்திருக்கிறது. அது தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கு நன்றாகத் தெரியும். அவர் நினைப்பது நடக்காது. ரஜினிகாந்த் பேச்சு இனி எடுபடாது என்று சொல்லியிருக்கிறார். தமிழக மக்கள் அதற்கு அவர்களின் வாக்குகள் மூலமாகப் பதிலளிப்பார்கள்'' என்று கூறினார்.

கோவை வெடிகுண்டுச் சம்பவங்கள் பற்றி விசாரிப்பதற்காக தமிழக அரசின் சார்பில், நீதியரசர் **கோகுலகிருஷ்ணன்** தலைமையில் ஒரு விசாரணைக் கமிஷன் தலைமையில் ஒரு விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட்டு, மூன்று மாதங்களுக்குள் தனது அறிக்கையை அரசுக்குத் தாக்கல் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

14-2-1998 அன்று கோவையில் நடைபெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களில் உயிர் இழந்தோர் குடும்பத்தினருக்கும், மற்றும் காயம் அடைந்தோருக்கும் நிதி உதவி வழங்கிட, தமிழக அரசு சார்பில் முதலமைச்சர் நிவாரண



ம.தி.மு.க. விலிருந்து ஏராளமான தோழர்களுடன் தி.மு.க.வில் இணைந்த பொன். முத்துராமலிங்கத்தை வரவேற்கிறார், கலைஞர்

நிதியிலிருந்து ஒரு கோடியே 50 லட்சம் ரூபாயை உடனடியாக வழங்கியிருந்தேன். எனினும் இந்தச் சம்பவத்தின்போது உடைமைகளை இழந்தோருக்கு எந்தவிதமான நிதியும் வழங்கப்படாமல் இருந்தது. இழப்புத் தொகை எவ்வளவு என்பதை பரிந்துரை செய்திட நீதிபதி பி.ஆர். கோகுலகிருஷ்ணன் விசாரணைக் கமிஷன் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது. அந்த கமிஷனின் பரிந்துரைகள் வருவதற்கு மூன்று மாதங்களுக்கு மேலாகும் என்பதைக் கருத்தில் கொண்டு உடனடியாக இடைக்கால நிவாரணமாக உடைமை இழந்தோருக்கு நிவாரண நிதியிலிருந்து ஐந்து கோடி ரூபாயை ஒதுக்கி ஆணை பிறப்பித்தேன். மேலும் செய்தியாளர்களிடம் கூறும்போது, ''வெடிகுண்டு சம்பவத்தில் போலீசார் எடுத்த நடவடிக்கை திருப்திகரமாகவே உள்ளது. எனினும், விசாரணைக் கமிஷன் பரிந்துரை செய்தால் சி.பி.ஐ. விசாரணைப் பற்றியும் அரசு யோசிக்கும்'' என்று தெரிவித்தேன்.

கோவை குண்டு வெடிப்பு தொடர்பாக அரசின் சார்பில் மின்னல் வேக நடவடிக்கை எடுத்ததற்குப் பெரும் ஒத்துழைப்பு தந்து கடமையாற்றிய காவல் துறையினர், தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல், ஊண் உறக்கமின்றி, ஓய்வு சிறிதுகூட இல்லாமல் விழிப்புடன் இருந்து வன்முறைத் தீவிரவாதிகளைப் பெருமளவுக்குக் கட்டுப்படுத்தியும், கைது செய்தும், வெடிக்கவிருந்த குண்டுகளைக் கைப்பற்றியும் - அதிலும்

குறிப்பாகத் தேதி குறிப்பிட்ட அந்த நாளில் மேலும் வெடிகுண்டுச் சம்பவங்கள் நடைபெறுமென்று எச்சரிக்கப்பட்ட சம்பவங்கள் நடைபெறாமல் கவனமுடன் இருந்து பொது மக்களின் உயிரையும் உடைமைகளையும், பொதுச் சொத்துக்களையும் காப்பாற்றியதற்காக, காவல் துறையினருக்கு அரசின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொண்டேன். மேலும் ''எதிர் காலத்திலும் அதே விழிப்புணர்வோடு காவல்துறை பணியாற்றும் என்ற நம்பிக்கையுடன், அவர்கள் பணியாற்ற வேண்டுமென்ற ஆவலோடு, காவல் துறையில் சாதாரணக் காவலர் முதல் டி.ஜி.பி. வரையில் உள்ள 85 ஆயிரத்திற்கு மேற்பட்டவர் களுக்கும் தலா ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசாக அளிக்கப் படும்'' என்று சட்டப் பேரவையில் நான் அறிவித்ததோடு, அந்தத் தொகையும் அவர்களுக்கு அளிக்கப்பட்டது.

கோவை குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கும், தி.மு.க.விற்கும், தமிழக அரசுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்ற போதிலும், அந்த வெடிகுண்டு நிகழ்ச்சி பா.ஜ.க. தலைவர் **அத்வானி** அவர்கள் கலந்து கொள்ளவிருந்த கூட்டத்திற்கு மிகவும் அருகில், அதுவும் அவர் வருவார் என்று விளம்பரம் செய்யப்பட்டிருந்த அதே நேரத்தில் நடைபெற்ற காரணத்தினாலும், அதனால் அப்பாவிகள் பலர் இறந்த காரணத்தினாலும், பத்திரிகைகளில் பெரிதாகச் செய்திகள் வெளிவந்த காரணத்தினாலும், நாடாளுமன்றத் தேர்தல் வெற்றி தி.மு.கழகக் கூட்டணிக்குப் பெரிதும் பாதகமாக அமைந்தது. அந்தச் சம்பவத்திற்கு முன்பு வெளிவந்த தேர்தல் கருத்துக் கணிப்புகளில் தி.மு.கழக அணி மகத்தான வெற்றிபெறும் என்று வெளியிட்டதற்கு மாறாக, முடிவுகள் அமைந்தன.

1996ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் 55 சதவிகித வாக்குகளைப் பெற்ற தி.மு.க., த.மா.கா. கூட்டணி 12.26 சதவிகித வாக்குகளை இழந்து - 42.74 சதவிகித வாக்குகளை மட்டுமே பெற்று பத்து இடங்களில் வெற்றி பெற்றது. அ.தி.மு.க. கூட்டணி 47.23 சதவிகித வாக்குகளைப் பெற்று, 30



ம.தி.மு.க. அரசியல் ஆலோசனைக் குழுச் செயலாளராக இருந்த மதுராந்தகம் ஆறுமுகம் தி.மு.க.வில் இணைந்தார்.

இடங்களில் வெற்றி பெற்றது. மொத்த வாக்குகள் என்ற அடிப்படையில் பார்த்தால், அ.தி.மு.க. அணி 1 கோடியே 22 லட்சத்து 72 ஆயிரத்து 246 வாக்குகளையும், தி.மு.க., த.மா.கா. அணி 1 கோடியே 11 லட்சத்து 5 ஆயிரத்து 267 வாக்குகளையும், காங்கிரஸ் தனியாக அணி அமைந்து 16 லட்சத்து 44 ஆயிரத்து 143 வாக்குகளையும் பெற்றன.


நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளில் தி.மு.க.விற்கு வெற்றி வாய்ப்பு கிடைக்கவில்லை என்ற போதிலும், அந்தத் தேர்தலுடன் சேர்ந்து நடைபெற்ற அருப்புக்கோட்டை, குன்னூர் சட்டமன்ற இடைத் தேர்தல்களில் ஆளுங் கட்சியான தி.மு.க. அணிக்குப் பெரும் வெற்றி கிடைத்தது.

மக்களவைத் தேர்தலில் தி.மு.கழகக் கூட்டணிக்கு வாக்களித்த 1 கோடியே 11 லட்சத்து 5 ஆயிரத்து 267 வாக்காளர்களுக்கும் - அணியின் வெற்றிக்காக உழைத்த கூட்டணிக் கட்சிகளான த.மா.கா. இந்தியக் கம்யூனிஸ்ட், ஜனதாதளம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், எம்.ஜி.ஆர். கழகம், இந்திய தேசிய லீக், இந்திய யூனியன் முஸ்லீம் லீக், அகில இந்திய பார்வர்டு பிளாக், இந்திய மனித உரிமைக் கழகம், அம்பேத்கர் மக்கள் இயக்கம், தமிழ் தேசிய கட்சி, தீரன் அவர்களின் தலைமையிலான பா.ம.க., சிறுபான்மையோர் இயக்கம் ஆகிய கட்சிகளுக்கும், அதன் தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும் மேலும் குறிப்பாக அந்தத் தேர்தலில் தி.மு.க. அணிக்கு ஆதரவளித்த சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்களுக்கும், அரும்பாடுபட்டு உழைத்த ரஜினிகாந்த் ரசிகர்

மன்றங்களுக்கும், சுப்ரீம் ஸ்டார் சரத்குமார் ரசிகர் மன்றங்களுக்கும், புரட்சிக் கலைஞர் விஜயகாந்த் ரசிகர் மன்றங்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொண்டேன்.

அகில இந்திய அளவில் பா.ஜ.க. கூட்டணி 254 இடங்களிலும் - காங்கிரஸ் கூட்டணி 168 இடங்களிலும் - ஐக்கிய முன்னணி 93 இடங்களிலும் - மற்ற கட்சிகள் 17 இடங்களிலும் வெற்றி பெற்றன. 1996ஆம் ஆண்டு செப்டம்பரில் காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்து பதவி விலகிய **நரசிம்மராவ்** அவர்களின் இடத்திற்குத் தலைவராக வந்த **சீதாராம் கேசரி** அவர்கள், 98 இல் நடைபெற்ற மக்களவைத் தேர்தலுக்குப் பிறகு, தனது பதவியை ராஜினாமா செய்தார். நாடாளுமன்ற பா.ஜ.க. தலைவராக **வாஜ்பாய்** தேர்ந்தெடுக்கப்பட்டார்.

9-3-98 அன்று டெல்லி சென்று, பா.ஜ.க. தலைவர் வாஜ்பாய் அவர்களை ஜெயலலிதா அவரது இல்லத்திலே சந்தித்தார். பின்னர் செய்தியாளர்களிடம் கூறும்போது, ''பாரதீய ஜனதாவுக்கு அ.தி.மு.க. அளிக்கும் ஆதரவு நிபந்தனையற்றது - முழுமையானது. தமிழகத்தில் தி.மு.க. அரசை பதவியிலிருந்து நீக்க வேண்டும்'' என்றெல்லாம் கூறியதோடு, சோனியாகாந்தி பற்றிக் கேட்டபோது, ''இந்தப் பத்திரிகையாளர் கூட்டத்தின் மையக் கருத்தாக சோனியா காந்தி இருப்பதை நான் விரும்பவில்லை. அவரை அரசியல்வாதியாக நான் கருதவில்லை'' என்றார். ''காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பதவிக்கு சோனியா காந்தி வரும் வாய்ப்பு இருக்கிறதே'' என்று கேட்டதற்கு ''அத்தகைய நிலை ஏற்படுவது இந்த நாட்டுக்கு நேரும் துயரம். 98 கோடி மக்களைக் கொண்ட



கோவை குண்டுவெடிப்பில் காயமுற்றோருக்கு மூப்பனாருடன் ஆறுதல் கூறினார் கலைஞர்

இந்தியாவில் தலைமை வகிக்கும் திறமையும் தகுதியும் கொண்டவர்கள் எவரும் இல்லையா?'' என்று ஜெயலலிதா பதில் கூறினார்.

மத்தியில் அரசு அமைக்க நாடாளுமன்ற பா.ஜ.க. தலைவர் வாஜ்பாய்க்கு குடியரசுத் தலைவர் கே.ஆர்.நாராயணன் அவர்கள் 10-3-1998 அன்று அழைப்பு விடுத்தார். மேலும் நிலையான அரசு அமைப்பதற்கான ஆவணங்களையும், ஆதரவு எம்.பிக்களின் பட்டியலையும் 11ஆம் தேதியன்று அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

ஆனால் 11ஆம் தேதியன்று வாஜ்பாய் அந்தப் பட்டியலுடன் குடியரசுத் தலைவரைச் சந்திக்க வேண்டியது நடைபெறாமல் ஒத்தி வைக்க நேரிட்டது. காரணம், பா.ஜ.க. அரசுக்கு ஆதரவு தெரிவிப்பதாகக் கூறிய கட்சிகள் எல்லாம் தங்களது ஆதரவுக் கடிதங்களைக் கொடுத்த நிலையில், தமிழகத்தைச் சேர்ந்த அ.தி.மு.க., பா.ம.க., தமிழ்நாடு ராஜீவ் காங்கிரஸ், ஜனதா கட்சிகளிடமிருந்து பா.ஜ.க. அரசை ஆதரிப்பதாகத் தெரிவிக்கும் கடிதங்கள் வந்து சேராததால், வாஜ்பாய் குடியரசுத் தலைவரைக் குறிப்பிட்ட நேரத்தில் சந்திக்கவில்லை. பதவியேற்பு விழாவரை டெல்லியிலே தங்கும் எண்ணத்துடன் சென்ற ஜெயலலிதா, அத்வானி, வாஜ்பாய் ஆகியோரைச் சந்தித்தவுடன் சென்னை திரும்பி விட்டார். அவரிடமிருந்து ஆதரவுக் கடிதம் வராத நிலையில், அத்வானி தொலைபேசியிலே தொடர்பு கொள்ள முயன்று வருவதாக செய்திகள் வந்தன.

நிபந்தனையில்லாமல் பா.ஜ.க. அரசுக்கு ஆதரவு தருவதாகக் கூறிய ஜெயலலிதா, ஆதரவுக் கடிதம் தருவதற்கு முன்பு, தமிழகத்திலே தி.மு.க. அரசைக் கலைக்க பா.ஜ.க. உத்தரவாதம் தர வேண்டுமென்றும், தன்மீதுள்ள வழக்குகளையெல்லாம் திரும்பப் பெற வேண்டுமென்றும், சுப்பிரமணியன் சுவாமிக்கு நிதி அமைச்சர் பொறுப்பும், வாழப்பாடி ராமமூர்த்திக்கு சட்ட அமைச்சர் பொறுப்பும் வழங்கிட வேண்டுமென்றும் நிபந்தனைகளைத் தெரிவித்திருப்பதாகவும், ஆனால் அந்த நிபந்தனைகளையேற்க பா.ஜ.க. தலைமை திட்டவட்டமாக

மறுத்துவிட்டது என்றும், 13-3-1998 தேதியிட்ட ஏடுகள் கொட்டை எழுத்தில் செய்திகளை வெளியிட்டன. ஆனால் ஜெயலலிதா, தான் அதுபோல எந்த நிபந்தனையும் விதிக்கவில்லை என்றும், தமிழக அரசின் தேவைகள் குறித்து சாதகமான பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதால்தான், ஆதரவுக் கடிதம் கொடுப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்றும் செய்தியாளர்களிடம் கூறினார்.

ஜெயலலிதாவின் தூண்டுதலின் பேரில், அவரோடு, கூட்டணி அமைத்து வெற்றி பெற்ற பா.ம.க. ஜனதா கட்சி, தமிழக ராஜீவ் காங்கிரஸ் கட்சிகளும் ஆதரவுக் கடிதங்களைக் கொடுக்க மறுத்துவிட்டன. அது மாத்திரமல்ல, பா.ஜ.க. அரசுக்கு ஆதரவு தெரிவித்து குடியரசுத் தலைவருக்கு கடிதம் எழுதியிருந்த ம.தி.மு.க.வும் அந்தக் கடிதத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டதாக அறிவித்தது.

ஏடுகள் எல்லாம் கேலியாக பா.ஜ.க. ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு முன்பாகவே அதை இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டதாக எழுதியது. **''தினமணி''** போன்ற நாளிதழ்கள் அ.தி.மு.க.வுடன் தெரியாமல் கூட்டணி வைத்துக் கொண்டு விட்டதாக பா.ஜ.க. கருதுவதைப்போல கார்ட்டூன்களை வெளியிட்டன.

இந்த நிலையில், வாஜ்பாய் அவர்கள் குடியரசுத் தலைவரைச் சந்தித்து நிலைமைகளை விளக்கினார். குடியரசுத் தலைவர் அவரிடம் அரசியல் சட்ட நிபுணர்களுடன் ஆலோசனை நடத்தி, அடுத்த நாள் முடிவு தெரிவிப்பதாகக் கூறினார்.

ஜெயலலிதாவின் போக்கு குறித்து செய்தியாளர்கள் என்னைச் சந்தித்து என் கருத்துக்களைக் கேட்ட போது, ''நிலையான ஆட்சி டெல்லியில் அமைய வேண்டும் என்பதற்காகவும், பிரதமர் பதவிக்கு வாஜ்பாய்தான் தகுதியானவர் என்றும் அவர் பெயரைச் சொல்லி ஜெயலலிதா பிரச்சாரம் செய்து, தமிழக மக்களின் வாக்குகளைப் பெற்றார். இப்போது பழிவாங்கும் நோக்கத்தோடு, சுப்பிரமணியன் சுவாமி போன்றவர்களுக்கு குறிப்பிட்ட சில அமைச்சர்

பதவிகளைக் கேட்டு, அந்தக் கோரிக்கை நிறைவேறாத காரணத்தால், ஆதரவுக் கடிதத்தைக் கொடுக்க முடியாதென்று அடம் பிடிக்கிறார். இந்த உண்மையை பா.ஜ.க. தலைவர் வாஜ்பாய் வெளியிட்டதோடு, ஜெயலலிதா கேட்கும் குறிப்பிட்ட அமைச்சர் பொறுப்பு அளிப்பது பற்றியும், தி.முக. ஆட்சியைக் கலைப்பது பற்றியும், திட்டவட்டமாக ''முடியாது'' என்று மறுத்துள்ளார். அதன் பிறகு, 'தான் அத்தகைய நிபந்தனைகளை விதிக்கவில்லை. தமிழ்நாட்டு மக்களின் நலன்களுக்காக திட்டங்களைத்தான் நிபந்தனைகளாக விதித்தேன்'' என்று கூறி, மக்களை ஏமாற்ற முனைகிறார். ஜெயலலிதாவின் பேச்சை நம்பி வாக்களித்த மக்கள் இப்போதாவது அவருடைய உண்மை சொரூபத்தைப் புரிந்து கொண்டால் போதுமானது'' என்று கூறினேன்.

30. ஆட்சியைக் கலைக்க ஆடிய ஆட்டம்

வாஜ்பாயின் கட்சியுடன் எனக்கு வேறுபட்ட கருத்துகள் இருந்தாலும், அவரது குணநலன்கள் எனக்கு மிகவும் பிடிக்கும்!

ஜெயலலிதா *14.3.1998* அன்று செய்தியாளர்களைச் சந்தித்து, வாஜ்பாய் தலைமையிலான ஆட்சி மத்தியிலே அமைவதற்கு, அ.தி.மு.கவும், அவர்களின் கூட்டணிக் கட்சிகளும் ஆதரவுக் கடிதங்களைக் குடியரசுத் தலைவருக்கு அனுப்பிவிட்டதாகவும், ''ஆட்சி அமைக்க ஆதரவு உண்டு-ஆனால், அமைச்சரவையிலே சேர மாட்டோம்-என்னை பா.ஜ.க.மதிக்கவில்லை- அவமதித்து விட்டது பா.ஜா.கவின் அந்தப் போக்கு சரியில்லை'' என்றும் கூறினார்.

இந்தக் கருத்தும் அடுத்த நாளே மாறியது. *15.3.1998* அன்று ஜெயலலிதா செய்தியாளர்களைச் சந்தித்து, ''அமைச்சரவையில் அ.தி.மு.க, பா.ம.க, வாழப்பாடி காங்கிரஸ் ஆகிய கட்சிகள் பங்கேற்கும்'' என்று அறிவித்தார். முதல்நாள் ''பதவியேற்பு விழாவில் கலந்து கொள்ள மாட்டேன்'' என்று கூறியிருந்தார். அடுத்த நாளே பதவியேற்பு விழாவிற்குப் புறப்பட்டு விட்டார்.

இதற்கிடையே காங்கிரஸ் கட்சியின் அகில இந்திய தலைவராக திருமதி சோனியா காந்தி தேர்ந்தெடுக்கப் பட்டார். அவர் குடியரசு தலைவரைச் சந்தித்து, ''அரசு அமைக்க காங்கிரஸ் கட்சி உரிமை கோராது'' என்று கூறினார். நாடாளுமன்ற காங்கிரஸ் கட்சியின் அணித்தலைவராக சோனியா காந்தி தேர்ந்தெடுக்கப்பட்டார். மக்களவை காங்கிரஸ் கட்சித்தலைவராக சரத்பவாரும், மாநிலங்களவை

காங்கிரஸ் கட்சித்தலைவராக **மன்மோகன்சிங்** அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 15ஆம் தேதி வாஜ்பாய் குடியரசுத் தலைவரைச் சந்தித்தபோது, ஆட்சி அமைக்க அழைப்பு விடுக்கும் கடிதம் அவரிடம் தரப்பட்டது.

72 வயதான வாய்பாய் அவர்கள், 19.3.1998 அன்று இந்தியாவின் 13வது பிரதமராகப் பொறுப்பேற்றார். வாஜ்பாய் அவர்களின் கட்சியோடு எனக்கு வேறுபட்ட கருத்துக்கள் உண்டு என்றபோதிலும், தனிப்பட்ட வாஜ்பாய் அவர்களின் குணநலன்கள் எனக்கு மிகவும் பிடிக்கும். அவர் ஒரு சிறந்த கவிஞர் பத்திரிகையாளர்- அரசியல்வாதி- வாஜ்பாய் பிற்காலத்தில் பிரதமராக ஆவார் என்று, ஜவகர்லால் நேரு அவர்களால் ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டவர்-சிறந்த பேச்சாளர்-சிறந்த இலக்கியவாதி-இசை ரசிகர்- திரைப்படங்களையும் விரும்பிப் பார்க்கக் கூடியவர். அவர் பிரதமராக இரண்டாவது முறையாகப் பதவியேற்றார்.

முதலில் 1996 ஆம் ஆண்டு மே திங்களில் பிரதமரான வாஜ்பாய், 13 நாட்கள் மட்டுமே பிரதமராகப் பதவி வகித்தார். 1977 இல் நெருக்கடி நிலைக்குப் பிறகு, **மொரார்ஜி தேசாய்** தலைமையிலான ஜனதாகட்சி அரசில் வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்தவர் வாஜ்பாய்.

15.12.1926 அன்று குவாலியரில் வாஜ்பாய் பிறந்தார். தந்தை **கிருஷ்ண பிகாரி வாஜ்பாய்.** பள்ளி ஆசிரியர். தாயார் **கிருஷ்ணா தேவி.** மாணவராக இருந்தபோதே ராஷ்ட்ரீய ஸ்வயம் சேவக் சங்கத்தின் தலைவரான **பாபு ராவ் தேவரஸுடன்** தொடர்பு கிடைத்து ஆர்.எஸ்.எஸ். உறுப்பினராக ஆனார். கான்பூர் பல்கலைக் கழகத்தில் அரசியல் விஞ்ஞானத்தில் முதுகலைப்பட்டம் பெற்றவர். ''**ராஷ்ட்ர தாரம்**'' என்னும் ஆர்.எஸ்.எஸ். இதழில் பத்திரிகையாளராக வாழ்க்கையைத் தொடங்கினார். 1942 ஆம் ஆண்டு வெள்ளையனே வெளியேறு''போராட்டத்தில் ஈடுபட்டார். சிறையில் அடைக்கப்பட்டார். பா.ஜ.கவின் முந்தைய அரசியல் அமைப்பான 1951 இல் தொடங்கப்பட்ட ஜனசங்கத்தின்

நிறுவன உறுப்பினர்களில் வாஜ்பாய் அவர்களும் ஒருவர். அதன் நிறுவனர் சியாம பிரசாத் முகர்ஜியின் சீடர்.


1950 ஆம், ஆண்டு, முதன் முதலாக லக்னோ தொகுதியிலே போட்டியிட்டு வாஜ்பாய் தோல்வி கண்டார். 1957 இல் மீண்டும் தேர்தலில் போட்டியிட்டு, வென்று மக்களவைக்குள் அடியெடுத்து வைத்தார். அந்தத் தேர்தலில் வென்ற நான்கு ஜனசங்க உறுப்பினர்களில் வாஜ்பாய் அவர்களும் ஒருவர். 1962 ஆம் ஆண்டு தேர்தலில், மீண்டும் தோல்வி. பிறகு 1967 இல் வெற்றி பெற்றார். 1968 இல் ஜனசங்கத்தின் தலைவரானார். 1971இல் குவாலியர் தொகுதியில் வெற்றிபெற்றார். **இந்திரா காந்தியின்** அவசர நிலைப் பிரகடனத்தை எதிர்த்துச் சிறை சென்றார். காங்கிரஸ் ஆட்சியை எதிர்த்து தொடங்கப்பட்ட ஜனதா கட்சியில் ஜனசங்கத்தை இணைத்தார். 1977 தேர்தலில் மீண்டும் வெற்றிபெற்றார். ஜனதா கட்சி உடைந்து உருவான பாரதீய ஜனதா கட்சியின் தலைவராக ஆனார் வாஜ்பாய். 1984இல் நடைபெற்ற தேர்தலில் குவாலியர் தொகுதியில், மாதவராவ் சிந்தியாவிடம் வாஜ்பாய் தோல்வி கண்டார். அதையடுத்து லக்னோ தொகுதிக்கு மாறி அங்கே வெற்றி பெற்றார். வாஜ்பாய் **பத்ம விபூஷண்** விருது பெற்றவர்.

வாஜ்பாய் அமைச்சரவையில் 43 பேர் அமைச்சர்களாகப் பொறுப்பேற்றனர். அவர்களில் தமிழகத்தைச் சேர்ந்த **தம்பிதுரை, சேடப்பட்டி முத்தையா, வாழப்பாடி ராமமூர்த்தி, ரங்கராஜன் குமாரமங்கலம், தலித் எழில்மலை, ஜனார்த்தனம், ஆர்.கே.குமார்** ஆகியோர் அமைச்சர்களாகப் பொறுப்பேற்றனர்.

வாஜ்பாய் அவர்கள் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப் பட்டதற்கு, கழகத்தின் சார்பில் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டேன்.

டெல்லியிலே பா.ஜ.க வின் ஆட்சி ஏற்பட்டு, அ.தி.மு.க அணியைச் சேர்ந்தவர்கள் மத்திய ஆட்சியிலே அமைச்சர்

களாகப் பொறுப்பேற்ற பிறகு, ''தமிழகத்திலே தி.மு.கழக ஆட்சி, 356 வது அரசியல் சட்டப் பிரிவைப் பயன் படுத்தி, எந்த நேரத்திலும் கலைக்கப்படும்'' என்று தாங்கள் கலந்து கொள்ளும் கூட்டங்களில் எல்லாம் பேச முற்பட்டார்கள். ஏடுகள் சிலவும் ''அ.தி.மு.க.வைச் சேர்ந்த வர்கள் பிரதமரிடம் மறை முகமாகத் தமிழக அரசினைக் கலைத்திட வலியுறுத்திக் கொண்டுள்ளார்கள்'' என்று எழுதி வந்தன.



1988-இல் காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சோனியா காந்தி அம்மையார் ''அரசு அமைக்கக் காங்கிரஸ் உரிமை கோராது'' என்றார்.

2.4.1998 அன்று அ.தி.மு.க தலைவி ஜெயலலிதா டெல்லி சென்று, பிரதமரைச் சந்தித்தார். அவர் டெல்லி சென்றது பற்றி பல பத்திரிகைகள் தங்களுடைய யூகங்களையெல்லாம் செய்திகளாக்கின. டெல்லி சென்ற அதே நாளில், அவர் சென்னை திரும்பி விமான நிலையத்தில் தன்னைச் சந்தித்த செய்தியாளர்களிடம், ''தி.மு.க. அரசுமீது மக்கள் நம்பிக்கை இழந்து விட்டனர். தி.மு.க அரசின் நாட்கள் எண்ணப்பட்டு வருகின்றன. தி.மு.க. அரசைக் கலைக்க வேண்டும் என்பதுதான் அ.தி.மு.கவின் முக்கியமான கோரிக்கை. தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு பிரச்சினையை முன் வைத்து தி.மு.க. அரசைக் கலைக்க வேண்டும் என்று வலியுறுத்துவோம்'' என்றெல்லாம் கூறினார்.

ஆனால் அதே 2.4.1998 அன்று நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில், குடியரசுத் தலைவர் **கே.ஆர்.நாராயணன்** அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பிரதமர் பதில் அளித்தார். அப்போது காங்கிரஸ் கட்சியின் உறுப்பினராகவும், தற்போது மத்திய



வாஜ்பாய் இந்தியாவின் 13ஆவது பிரதமராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

அமைச்சராகவும் உள்ள பிரணாப் முகர்ஜி அவர்கள் குறுக்கிட்டு, ''தமிழ்நாட்டு மக்கள் விரைவில் தி.மு.க. ஆட்சியிலிருந்து விடுவிக்கப்படுவார்கள்'' என்று மத்திய அமைச்சர் ரெங்க ராஜன் குமாரமங்கலம் சென்னையிலே பேசியிருப்பதைச் சுட்டிக்காட்டி, அதுபற்றி பிரதமரின் கருத்து என்ன வென்று கேட்டார்.

அதற்கு பதிலளித்த பிரதமர் வாஜ்பாய் அவர்கள், ''அரசியல் சட்டம் 356ஆவது பிரிவை நாங்கள் தவறாகப் பயன்படுத்த மாட்டோம். எந்த மாநிலத்திலும் குடியரசுத்தலைவர் ஆட்சியை அமல்படுத்துவதை எங்கள் அரசு கடுமையாக எதிர்க்கும்'' என்று திட்டவட்டமாகப் பதில் கூறினார்.

அப்போது எதிர்க் கட்சி உறுப்பினர்கள் எல்லாம் மேஜையைத் தட்டி ஆரவாரம் செய்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

பிரதமர் வாஜ்பாய் அவர்கள் பாராளுமன்றத்தில் இவ்வளவு திட்டவட்டமாக தெரிவித்த பிறகும், ஜெயலலிதாவோ ''தி.மு.க. அமைச்சரவையை நீக்குவதற்கான நாட்கள் எண்ணப்பட்டு வருகின்றன'' என்று சொன்னதையே திரும்பத் திரும்ப அறிக்கை மேல் அறிக்கையாக விட்டுக் கொண்டிருந்தார். இதுபற்றி **''இந்துஸ்தான் டைம்ஸ்''** என்ற ஆங்கில நாளேடு எழுதிய **''வரவேற்கத்தக்க உறுதிமொழி''** என்ற தலையங்கத்தில்-


''அரசியல் அமைப்புச் சட்டத்தின் 356ஆவது பிரிவு தவறாகப் பயன்படுத்தப்படமாட்டாது என்று மாநிலங்கள் அவையில் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் உறுதி மொழி கொடுத்திருப்பது வரவேற்கக் கூடிய ஒன்றாகும். தமிழகத்தில்

தி.மு.க. அரசுக்கு எதிராக நிலவி வரும் தேவையற்ற எர்ச்சரிக்கைகளும், அதையடுத்து உருவாகியுள்ள வதந்திகளும் உள்ள இத்தருணத்தில் பிரதமரின் மேற்காணும் அறிவிப்பு குறிப்பிடத்தக்கதும், நம்பிக்கைக்கு உரியதாகவும் இருக்கிறது. தி.மு.க.அரசு நீக்கப்பட்டாக வேண்டும் என்று வெளிப் படையாகவே ஆளும்கட்சியின் முக்கிய கூட்டணிக் கட்சியான அ.தி.மு.க வலியுறுத்தி வந்த நிலையில், பிரதமரது உறுதிமொழி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்'' என்று எழுதியது.

மீண்டும் அதே **''இந்துஸ்தான் டைம்ஸ்''** ஆங்கில நாளேடு, **''மிரட்டல் அரசியல்''** என்ற தலைப்பில் *17.4.1998* அன்று எழுதிய தனது தலையங்கத்தில்-

''ஒருவரைக் கடத்திச் சென்றவன் பணயத் தொகை கேட்டு மிரட்டல் கடிதங்கள் அனுப்புவதுபோல, அடல்பிகாரி வாஜ்பாயின் பிரதமர் பதவி தன்னிடம் பணயமாக இருப்பதை அவர் மறந்துவி'_, ஜெயலலிதா அனுமதிப்பது இல்லை. தனக்கு ஆக வேண்டிய காரியங்கள் காலதாமதம் ஆவதையும், அ.தி.மு.க தலைவியால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. தமிழ்நாட்டில் கருணாநிதி அரசைப் பதவி நீக்கம் செய்ய மத்திய அரசுக்கு விருப்பம் இல்லாததினால் அவருக்குக் கோபம்.

''பொது வாழ்க்கையில் நெறிமுறைகளையும், நேர்மையையும் மதிக்காத காரணத்திற்காக ஜெயலலிதா மீதும் குற்றம் சாட்டப்படலாம். ஜெயலலிதா கட்சியின் ஆதரவு திரும்பப் பெறப் படுவதனால் நெருக்கடி ஏற்பட்டாலும், அவரது மிரட்டல்களுக்கு வாஜ்பாய் பணிந்து விடக் கூடாது. மேலும் நடவடிக்கை எடுப்பதில் வளைந்து கொடுக்கவோ- தட்டிக் கழிக்கவோ கூடாது. தி.மு.க. அமைச்சரவையை



மக்களை முட்டாள்கள் என நினைத்து, இன்றுபோல் அன்றும் ஜெயலலிதா அடித்த 'அந்தர் பல்டிகள்'

நீக்க வேண்டும் என்று இடைவிடாது வலியுறுத்தும் ஜெயலலிதாவின் கோரிக்கை விஷயத்திலும் இதேபோல வாஜ்பாய் நடந்து கொள்ள வேண்டும். முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளை 356ஆவது சட்டப் பிரிவைப் பயன்படுத்திப் பதவி நீக்கம் செய்யமாட்டோம் என்ற கொள்கையை, பாரதீய ஜனதா கட்சித் தலைமையிலான அரசு இதுவரை பேணிக் காத்து வருகிறது. துரதிருஷ்டவசமாக கடந்த சில வாரங்களாக, ஜெயலலிதாவின் கோரிக்கைகளை நிறைவேற்ற மத்திய அரசு வளைந்து கொடுப்பது போன்ற அறிகுறிகள் தெரிகின்றன. தமிழ்நாட்டில் உள்ள சட்டம் ஒழுங்கு நிலைமையை மதிப்பிடுவதற்காக மத்தியக் குழுவை அனுப்பியது தவறு'' என்று கடுமையாக எழுதியிருந்தது.

இந்துஸ்தான் டைம்ஸ் ஏடு தெரிவித்ததைப் போலவே, மத்திய அரசினால் அனுப்பப்பட்ட மத்தியக்குழு தமிழகத்தின் பல பகுதிகளையும் பார்வையிட்டு, பலரோடு கலந்து உரையாடிய பிறகு, என்ன அறிக்கை கொடுத்தது என்பதை அப்போது பல ஏடுகள் என்ன தலைப்புகளிலே செய்தி வெளியிட்டன தெரியுமா?



நன்றி : 'தி இந்து'

'தி.மு.க. ஆட்சியைக் கலைத்தால் தான், வாஜ்பாய் அரசுக்கு ஆதரவு' என்றார் ஜெயலலிதா

கொல்கத்தாவிலிருந்து வெளிவரும் ''தி டெலி கிராப்'' ஏடு, "Team gives Law and Order Certificate. Centre clean Chit to Karunanidhi" என்று பெரும் தலைப்பிட்டு செய்தி வெளியிட்டது.

ஐதராபாத்திலிருந்து வெளிவரும் ''நியூஸ் டைம்'' என்ற பிரபலப் பத்திரிகை, Set back for Jayalalitha's Campaign. Central Team's clean chit to Tamil

Nadu' என்ற தலைப்பிலே நீண்ட செய்தியை வெளியிட்டது.

டெல்லியிலிருந்து வெளிவரும் **''டைம்ஸ் ஆப் இந்தியா''** ஏடு, "Central Team Gives Clean Chit to D.M.K.Government" என்ற தலைப்பிலே செய்தியை வெளியிட்டிருந்தது.

''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' பத்திரிகை, "Central Team gives clean chit on Law and Order" என்ற தலைப்பில் செய்தியும், நீண்ட தலையங்கமும் தீட்டியிருந்தது.

''தினமணி'' ஏட்டில்- ''சட்டம், ஒழுங்கில் அதிருப்தி-பயங்கரவாத மாநிலம் என்பது நியாயமற்றது'' என்று அந்தக் குழுவினர் வெளியிட்ட கருத்தைத் தலைப்பிட்டு செய்தி வெளியிட்டதோடு, அந்த ஏடு எழுதிய தலையங்கத்தில், ''தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு நிலை மிகவும் மேம்பட்டிருக்கிறது. கோவை குண்டு வெடிப்பு குறித்து சி.பி.ஐ. விசாரணை தேவையில்லை. அரசியல் சாசன 356ஆவது பிரிவைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. இவை எல்லாம் தமிழக சட்டம் ஒழுங்கு நிலை குறித்து ஆராய்ந்து, இரண்டு உறுப்பினர் கொண்ட மத்திய அதிகாரிகள் குழு சென்னையில் தெரிவித்த கருத்துக்கள்'' என்று தொடங்கி-

இடையில் ''வெடி குண்டுகளைக் கைப்பற்றுவதிலும், தீவிரவாதிகளைக் கைது செய்வதிலும் முனைப்போடு செயல்படும் தமிழகக் காவல் துறையினருக்கு உதவ வேண்டிய கடமை மத்திய அரசுக்கு உள்ளது'' என்றும் குறிப்பிட்டிருந்தது.

த.மா.கா. தலைவர், அருமை நண்பர் **மூப்பனார்** அளித்த பேட்டியில், ''சட்டம் ஒழுங்கு தமிழ் நாட்டில் நன்றாக இருக்கிறது - ஆகவே, மத்திய அரசு ஆட்சிக் கலைப்பிலே ஈடுபட்டால், தமிழகத்தில் போராட்டம் நடத்திடத் தயங்கமாட்டோம்''



அதற்கு வாஜ்பாய் அளித்த பதில், ''முடியாது'' என்பது தான்.

என்றும் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

இதற்கிடையில், 27.3.1998 அன்று தமிழக அரசின் சார்பில், அந்த ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையினை அவையிலே நான் தாக்கல் செய்தேன். தமிழக மக்களின் அனைத்துப் பிரிவினராலும், பல்வேறு கட்சிகளாலும், ஆன்றோர்களாலும் சான்றோர்களாலும் பெரிதும் வரவேற்கப்பட்ட நிதிநிலை அறிக்கையாக அது அமைந்தது. அந்த அறிக்கையினைத் தயாரிக்க ஒவ்வொரு ஆண்டிலும் நான் பல நாட்கள் முயற்சி எடுத்துக் கொள்வதைப் போலவே, அந்த ஆண்டிலும் முயற்சி எடுத்துக்கொண்டேன். அப்போது நிதித்துறை செயலாளராக இருந்த திரு.பி.வி.ராஜாராமன் அவர்கள் பல நாட்கள் என்னோடு பகல் என்றும் இரவு என்றும் பாராமல் உழைத்தார்.

★ ஏழை எளிய மக்கள் பயன்படுத்தும் ஏராளமான உணவுப் பொருட்களுக்கான வரி விகிதங்கள் அப்போது குறைக்கப்பட்டன- அல்லது அறவே நீக்கப்பட்டன.

★ மத்திய அரசு அலுவலர்களுக்கு அளிக்கப்பட்ட திருத்திய ஊதிய விகிதங்கள் மாநில அரசு அலுவலர்களுக்கும் பொருந்தும் என்று அறிவித்த முதலாவது தென்னிந்திய மாநில அரசு தமிழக அரசுதான் என்ற பெருமைக்கு நிதி நிலை அறிக்கையிலே வழிவகுக்கப் பட்டது.

★ அந்த ஆண்டு சுதந்திரப் பொன்விழா ஆண்டு என்பதையும் மனதிலே கொண்டு, 1987ஆம் ஆண்டு மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக 20 சதவிகித இட ஒதுக்கீடு கோரி, போராடி, துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்த 23 பேருக்குக் குடும்ப நிதியாக தலா ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

★ சென்னையிலுள்ள காந்தி மண்டபம் அருகில் **தியாகிகள் மணி மண்டபம்** கட்ட 30 லட்ச ரூபாய் வழங்கப்பட்டது. சுதந்திரப் பொன்விழா ஆண்டு **நினைவுச் சின்னம்** ஒன்றும் காமராஜர் சாலையில், போர் நினைவுச் சின்னம் அருகே அமைக்கப்பட்டது.

★ தியாகி விஸ்வநாத தாஸ் வாழ்ந்த இல்லத்தைப் புதுப்பிக்கவும், அதில் திருமணமண்டபம், நூல் நிலையம் நிறுவவும், அரசு 50 லட்ச ரூபாய் அனுமதித்தது.

★ திருநெல்வேலி மாவட்டம், நெல்கட்டும் செவல் கிராமத்தில் இருந்த சுதந்திரப் போராட்ட வீரர் **பூலித்தேவன்** வாழ்ந்த மாளிகையினை பழமை மாறாமல் புதுப்பித்து, நினைவுச் சின்னமாக்கவும், திருமணமண்டபம், பூங்கா அமைக்கவும் 50 லட்ச ரூபாய் வழங்கப்பட்டது.

★ தூத்துக்குடி மாவட்டத்தில், பாஞ்சாலங்குறிச்சியை அடுத்துள்ள கவான்கிரியில் வாழ்ந்த விடுதலை வீரர் சுந்தரலிங்கம் வாரிசுகளுக்கு 200 வீடுகள் மற்றும் சாலை, பூங்கா, நூலகம், மின்சாரம் போன்ற வசதிகளை வழங்கும் "வீரன் சுந்தரலிங்கம் நினைவு கிராமம்" ஒன்றை கவான்கிரியில் அமைக்க ஒரு கோடியே 5 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

★ பொதுவுடைமை வீரர் ஜீவாவின் நினைவைப் போற்றும் வகையில் குமரிமாவட்டம், நாகர்கோவிலில் 15 லட்சம் ரூபாய் செலவில் நினைவிடம்-

★ நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் நூற்றாண்டையொட்டி, சென்னை காமராஜர் சாலையில், ரூ.7.40 லட்சம் செலவில் சிலை-

★ வள்ளுவர் கோட்டத்தைப் புதுப்பிக்க 85 லட்சம் ரூபாய்.

★ நெசவாளர்கள், மீனவர்கள், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், விதவைகள், ஆதரவற்ற பெண்கள், உடல் ஊனமுற்றோருக்கான ஓய்வூதியத்தொகைகள் உயர்வு-

★ அமைப்பு சாரா தொழிலாளர்களுக்காக நலவாரியம்-

★ சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்கு இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை வழங்கப்பட்ட முட்டை, வாரம் ஒருமுறை என்று வழங்குவதற்கு அறிவிப்பு-(இந்த

அறிவிப்புதான் இந்த ஆண்டு வாரம் மூன்று முட்டைகள் என்ற அளவிற்குப் படிப்படியாக உயர்ந்துள்ளது.)

★ தமிழ்த் தென்றல் திரு.வி.க அவர்களுடைய நூல்களை அரசுடைமையாக்கி, அவரது வழித்தோன்றல்களுக்கு 20 லட்ச ரூபாய் காப்பு நிதி.

★ கல்கி அவர்களின் நூல்களை அரசுடமையாக்கிட, இருபது இலட்ச ரூபாய் நிதி.

★ காரல் மார்க்சின் "மூலதனம்" மற்றும் "மிகை மதிப்பு" ஆகிய நூலினை தமிழில் புத்தகமாக வெளியிட வேலூர் க.ராகவன் ஜமதக்கினி அவர்களுக்கு ஐந்து இலட்ச ரூபாய் நிதி.

★ முதன் முறையாக ஜவுளிக்கொள்கை

இவ்வாறு பலப்பல திட்டங்களையும் அறிவிப்புகளையும் தாங்கி அந்த நிதி நிலை அறிக்கை வெளியிடப்பட்டது.

★ நிதி நிலை அறிக்கை மீதான விவாதம் பேரவையிலே நடைபெற்று, 6.4.1998 அன்று நான் பதிலளித்தேன்.

★ அப்போது மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இடஒதுக்கீடு கோரி நடைபெற்ற போராட்டத்தில் இறந்தவர்களுக்கு நிதிநிலை அறிக்கையிலே அறிவித்த தலா ஒரு இலட்சம் ரூபாய் என்பதை மூன்று இலட்சம் ரூபாயாக உயர்த்தினேன்.

★ மேலும் அந்தப் போராட்டத்திலே ஈடுபட்டு உயிர் நீத்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு மாதம் தோறும் 1500 ரூபாய் ஓய்வூதியும் வழங்கிடவும் உத்தரவிட்டேன்.


★ அந்த ஆண்டில் விவசாயிகளுக்கு நிலவரி அறவே ரத்து செய்யப்படும் என்றும் பிறிதோர் அறிவிப்பு செய்தேன்.

★ ★ ★

6.4.1998 அன்று பேரவையில் நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்து விட்டு, 7 ஆம் தேதியன்று புதிய பிரதமர் வாஜ்பாய் அவர்களை முதலமைச்சர் என்ற முறையில் மரியாதை நிமித்தம் சந்திப்பதற்காக டெல்லி சென்றேன்.

மாலை 4 மணி அளவில் நேரம் கொடுத்து, என்னை வாஜ்பாய் சந்தித்தார். தமிழகத்திற்குத் தேவையான மின் திட்டங்கள்-காவேரி பிரச்சினை-சேது சமுத்திரத்திட்டம்-இட ஒதுக்கீடு-மீனவர் பிரச்சினை போன்றவைகள் குறித்து பிரதமரிடம் எடுத்துக்கூறி, அவைகளுக்கெல்லாம் தீர்வு கண்டிட உதவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன்.

பிரதமர் வாஜ்பாய் அவர்கள் பண்பாட்டோடும், பழைய நாள் நண்பர்கள் என்ற உணர்வோடும் என்னிடம் பேசினார். டெல்லிப் பயணத்தையொட்டி குடியரசுத்தலைவர் **கே.ஆர்.நாராயணன்** அவர்களையும், மத்திய உள்துறை அமைச்சர் **எல்.கே.அத்வானி** அவர்களையும், முன்னாள் பிரதமர் ஐ.கே.குஜ்ரால் அவர்களையும், அப்போது உணவு அமைச்சராக இருந்த பர்னாலா அவர்களையும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் ஹர்கிஷன் சிங் சுர்ஜித் அவர்களையும் சந்தித்தேன்.



ஏராளமான ஊழல்களில் சிக்கிய ஜெயலலிதா சுப்பிரமணியன் சுவாமியின் உளறல்படி, மத்திய அமைச்சர்கள் சிலர் மீது ஊழல் குற்றம் சாட்டினார்.


நான் டெல்லி சென்றது குறித்தும், நான் அளித்த பேட்டி குறித்தும், அதனையொட்டிய சம்பவங்கள் குறித்தும் வட இந்திய நாளேடுகள் மிகவும் முக்கியத்துவம் கொடுத்து பல்வேறு செய்திகளைத் தொகுத்திருந்தன.

குறிப்பாக ''எகனாமிக் டைம்ஸ்''- ''தி பயனீர்''- ''இந்துஸ்தான் டைம்ஸ்''- ''டைம்ஸ் ஆப் இந்தியா'' - ''ஸ்டேட்ஸ்மென்''- ''தி ஏசியன் ஏஜ்'' போன்ற நாளேடுகள் நான் அளித்த பேட்டியை விரிவாக வெளியிட்டிருந்தன.

''ஸ்டேட்ஸ்மென்'' நாளேடு வெளியிட்ட செய்தியில்-

''மத்திய அமைச்சரவையில் ஜெயலலிதாவின் நியமனங்களாக இடம் பெற்றுள்ள நால்வரில், கட்சித் தலைவியின் கட்டளைகளை சிரமேற்கொண்டு நிறைவேற்றுவதில், சட்ட அமைச்சர் தம்பிதுரை தான் மற்ற மூவரைக் காட்டிலும் முனனணியில் இருக்கிறார்.''

''ஐதராபாத்தைச் சேர்ந்த ஒருவரை உறுப்பினராகக் கொண்டவருமான வரி மேல் முறையீடு தீர்ப்பாயத்தின் தனிப்பிரிவு ஒன்றை அமைக்க தம்பிதுரை உத்தரவிட்டிருக்கிறார். இவர்தான் சட்டத்துறை சார்பில் ஜெயலலிதாவின் வருமான வரி வழக்குகளை விசாரிக்கிறார். வருமான வரி ஏமாற்றுக்காரர்களை விடுவிப்பதில் அந்த உறுப்பினர் புகழ் பெற்றவர் என்பதால், வருமான வரித்துறை அதிகாரிகள் அவரது நியமனம் குறித்து ஆச்சரியப்படவில்லை. இதற்கு முன்னதாக சென்னை உயர்நீதி மன்றத்தில் மத்திய அரசின் வழக்குகளை நடத்த, ஜெயலலிதா தேர்ந்தெடுத்த 33 அ.தி.மு.க வழக்கறிஞர்களுக்கு தம்பிதுரை நியமன உத்தரவுகளை வாங்கிக் கொடுத்திருக்கிறார். இவர்கள் மூன்றாண்டு காலம் அல்லது மறு உத்தரவு வரும்வரை அந்தப் பதவியில் இருப்பார்கள். இந்திய அரசின் சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சகத்தின் கூடுதல் சட்ட ஆலோசகர் யு.கே.ஜா கையெழுத்திட்ட இந்த நியமனக் கடிதங்களை ஒட்டுமொத்தமாக ஜெயலலிதாவிடம் தம்பிதுரை வழங்கினார்.''



ஆதரவுக் கடிதம் தராமல், வாஜ்பாயைப் பெரும் குழப்பத்தில் ஆழ்த்தினார் ஜெயலலிதா


இந்த வழக்கறிஞர்கள் ஜெயலலிதாவின் போயஸ் தோட்ட இல்லத்திற்கு வரவழைக்கப்பட்டு, அங்கே ஒவ்வொருவருக்கும் அந்த நியமன உத்தரவை ஜெயலலிதா வழங்கினார்.''

''தேர்ந்தெடுக்கப்பட்ட 33 பேரில் ஒருவர் **ஆர்.முத்துக் குமாரசாமி** இவர் மூத்த வழக்கறிஞர் அல்ல-ஆனால் ஜெயலலிதா வழக்குகளில் அவருக்காக ஆஜரானவர். இன்னொரு வழக்கறிஞரான **எஸ்.பி.லோகநாதன்,** ஜெயலலிதாவின் தோழியான சசிகலாவுக்கு ஆஜராகி வருகிறார். மற்றொரு வழக்கறிஞரான **டி.வி.கணேஷ்** அ.தி.மு.க.வின் தலைவரான **இரா.நெடுஞ்செழியனுக்காக** ஆஜராகி வருகிறார். நீதித்துறையைக் கேலி செய்யும் விதத்தில், எதிரி வழக்கறிஞர்களாக இருந்தவர்கள், அதே வழக்கில்-ஒரே இரவில் அரசு வழக்கறிஞர்களாக மாறியிருக்கிறார்கள். ''நல்லாட்சி வழங்குவோம்'' என்று தேர்தலின்போது உறுதியளித்த வாஜ்பாயின் பாரதீய ஜனதா கட்சி அரசு, அ.தி.மு.க அமைச்சர்களால் ஒவ்வொரு நாளும் களங்கம் அடைந்து கொண்டே இருக்கிறது.''

இவ்வாறு **''ஸ்டேட்ஸ்மென்''** நாளேடு அ.தி.மு.க. விற்குப் பாராட்டு(?)மழை பொழிந்திருந்தது.

அ.தி.மு.க. சார்பில் **சேடப்பட்டி முத்தையா** மத்திய அமைச்சரவையில் இடம் பெற்றபோதிலும், ஒரு சில நாட்களிலேயே அவர் மீதுள்ள ஒரு வழக்கின் காரணமாக, அவர் பதவியிழக்க நேரிட்டது. அவருக்குப் பதிலாக அ.தி.மு.கவைச் சேர்ந்த **திண்டுக்கல் சீனிவாசன்** என்பவரை மத்திய அமைச்சராக்கிட ஒப்புக்கொண்ட ஜெயலலிதா, ''ஊழல் வழக்கிலே தொடர்புடையோர் அனைவரும் மத்திய அமைச்சரவையிலிருந்து விலக வேண்டும். இல்லாவிட்டால் அவர்களை அமைச்சரவையிலிருந்து பிரதமர் நீக்க வேண்டும்'' என்று 15.4.1998 அன்று செய்தியாளர்களிடம் கூறினார்.

மேலும் அவர், அந்த விஷயத்தில் சேடப்பட்டி முத்தையாவுக்கு ஒரு நீதியும், மற்றவர்களுக்கு ஒரு நீதியும் இருக்க முடியாதென்றும் கூறினார்.


Hindustan Times

'ஜெயலலிதா மிரட்டல்களுக்கு வாஜ்பாய் அரசு பணிந்துவிடக்கூடாது' என்று எச்சரித்தது 'இந்துஸ்தான் டைம்ஸ்' ஏடு




''தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு நன்றாகவே இருக்கிறது - மத்திய அரசு ஆட்சிக் கலைப்பில் ஈடுபட்டால், போராட்டம் நடத்துவோம்'' என்றார், மூப்பனார்

''தமிழகத்தில் தி.மு.கழக அரசைப் பதவியிலிருந்து நீக்குவதற்கு பாரதீய ஜனதா அரசு ஒப்புக்கொள்ளாததால் ஜெயலலிதா இப்படியெல்லாம் கூறுகிறார்'' என்று ஏடுகள் எல்லாம் விமர்சனம் செய்து எழுதின.

ஜெயலலிதா தெரிவித்த நிபந்தனையை அந்தக்கட்சி ஏற்க வேண்டுமென்றால், **அத்வானி, முரளிமனோகர் ஜோஷி, உமா பாரதி, பூட்டாசிங், ராம் ஜேத் மலானி** ஆகியோர் பதவியிலிருந்து நீக்கப்படவேண்டுமென்றும் ஏடுகள் தெரிவித்தன.

வேறு சில ஏடுகள் ''பா.ஜ.க. அமைச்சர்களை அமைச் சரவையிலிருந்து நீக்க வேண்டுமென்பது ஜெயலலிதாவின் உண்மையான நோக்கம் இல்லை. ஆனால் பூட்டாசிங், ஜேத்மலானி, ஹெக்டே போன்றவர்கள்தான் அவரது குறி'' என்றும் எழுதின. இந்தச் செய்திகளை உறுதியாக்குகின்ற வகையில் *18.4.1998* அன்று பிரதமருக்கு ஜெயலலிதா ஒரு கடிதம் எழுதிவிட்டு, அந்தக் கடிதத்தை ஏடுகளுக்கும் வழங்கினார். தோழமைக்கட்சியிலே உள்ள ஒருவர், அந்தக் கூட்டணியின் தலைவருக்கு - அதாவது பிரதமருக்கு எந்த அளவுக்கு மரியாதை கொடுத்தார் என்பதைத் தெளிவாக்கும் வகையிலே அந்தக் கடிதம் அமைந்தது. அந்தக் கடிதத்தின் சில பகுதிகள் இதோ:-



நன்றி : தினமணி


குரங்கு கையில் பூவைப்போல், அமைந்தது, பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணி

''வருமானத்துக்கு அதிகமாகச் சொத்து சேர்த்ததாக சேடப்பட்டி



ஜெயலலிதாவின் தொல்லை தாங்க முடியாமல் வருந்தினார் வாஜ்பாய்

முத்தையாமீது தமிழக அரசு வழக்குப் பதிவு செய்துள்ளது. அமைச்சராக மார்ச் 19 ஆம் தேதி முத்தையா பொறுப்பேற்ற போதே இந்த விவரம் பிரதமருக்கும் தெரியும். குற்றச்சாட்டை முழுமையான ஆதாரமாகக் கொள்ள முடியாது என்பதால் முத்தையாவும் அவரைப் போன்ற வேறு சிலரும் அமைச்சரவையில் சேர்க்கப்பட்டனர். முத்தையா மீது சென்னை சிறப்பு நீதிமன்றம் கடந்த 6 ஆம் தேதி குற்றப் பத்திரிகையைப் பதிவு செய்தது. இதையடுத்து அமைச்சர் பதவியிலிருந்து ராஜினாமா செய்யுமாறு முத்தையாவை நான் கேட்டுக்கொண்டேன். அதையேற்று முத்தையா உடனடியாக டெல்லிக்குச் சென்று சில மணி நேரங்களிலேயே ராஜினாமாவைச் சமர்ப்பித்தார். அந்த ராஜினாமா கடிதத்தை நீங்கள் உடனடியாக குடியரசுத் தலைவருக்கு அனுப்பினீர்கள். அவரும் அதை ஏற்றுக்



பல்வேறு கட்சிகளாலும் வரவேற்கப்பட்ட நிதிநிலை அறிக்கையை 27-3-1998 அன்று கலைஞர் தாக்கல் செய்தார்.



நாகர்கோவிலில் பொதுவுடைமை வீரர் ஜீவாவின் நினைவிடத்தைக் கலைஞர் திறந்து வைத்தார்.

கொண்டார். முத்தையா மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து 24 மணி நேரத்தில் இவையெல்லாம் நடந்து முடிந்தது. உங்களது நல்லாட்சி நிர்வாகத் தூய்மை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, முத்தையா ராஜினாமா செய்தார். ராஜினாமாவை ஏற்பதில் நீங்கள் காட்டிய வேகம், அரசாங்கத்தின் நன்மதிப்பைக் காப்பாற்றுவதில் உள்ள அக்கறையை வெளிப்படுத்தியது. ஆனால் இதே வேகத்தை இதேபோன்ற நிலைமையில் உள்ள மற்ற அமைச்சர்கள் விஷயத்தில் நீங்கள் காட்டாதது துரதிர்ஷ்டவசமானது-விநோதமானது.

உதாரணமாக ஜார்க்கண்ட் எம்.பி.க்களுக்கு லஞ்சம் கொடுத்தாக மத்திய அமைச்சர் பூட்டாசிங் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இச்சம்பவம் உலகறிந்த விஷயம். இதேபோல உச்சநீதிமன்றத்தின் பெஞ்ச் கடந்த 17ஆம் தேதி வெளியிட்ட தீர்ப்பில், பூட்டாசிங் மீதான விசாரணைத் தொடர வேண்டும் என்று குறிப்பிடத்தக்க தீர்ப்பை வழங்கியுள்ளது. சேடப்பட்டி முத்தையாவை நீக்கும்போது பின்பற்றப்பட்ட உயர்ந்த லட்சியங்கள் பூட்டாசிங் விஷயத்தில் ஏன் பின்பற்றப்படவில்லை? அவரை அமைச்சர் பதவியில் நீடிக்கச் செய்வதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. முத்தையா விஷயத்தில் கடைப் பிடிக்கப்பட்ட அளவுகோலே பூட்டாசிங் விஷயத்திலும் கடைப்பிடிக்க வேண்டுமென்று கோர உங்கள் கூட்டணி ஆட்சியில் அங்கம் வகிக்கும் அ.தி.மு.கவுக்கு உரிமை உள்ளது.

இதேபோல் ஹெக்டே ரூ.2.5கோடி ஊழல் புரிந்ததாகப் போலீசார் கண்டு பிடித்துள்ளனர். அவர்மீது வழக்கு வர விருப்பது தவிர்க்க முடியாதது. அவர் மத்திய அமைச்சரவையில் தொடர்வது ஆச்சரியத்தை அளிக்கிறது. ராம் ஜெத்மலானி வெளிநாட்டிலிருந்த போது 2 லட்சம் அமெரிக்க டாலர்களைச் சட்டவிரோதமாக வாங்கியதாக மும்பை மாஜிஸ்திரேட் கோர்ட்டில் ஒப்புக்கொண்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது. அவர் பதவியில் நீடிப்பது அதிர்ச்சியையும், ஆச்சரியத்தையும், தருகிறது. அமைச்சரவை விஷயத்தில் ஒரே சீரான - நிலையான அணுகுமுறையைப் பின்பற்ற வேண்டும். குற்றப்புகார்களில் உள்ள அமைச்சர்கள் உடனடியாக ராஜினாமா செய்ய வேண்டும். அவர்கள் விலகாவிட்டால் நீங்கள் அவர்களை விலக்க வேண்டும். வெறும் புகார்களே ஆதாரங்கள் ஆகாது என்று நீங்கள் நினைத்தால், முத்தையாவை அமைச்சரவையில் சேர்ப்பது நியாயமானது.''

- ஜெயலலிதாவின் இந்தக் கடிதத்தை ஏட்டிலே படித்து விட்டு, ராம் ஜெத்மலானி அவர்கள், ''அ.தி.மு.க ஆதரவு இல்லாமல் பா.ஜ.க அரசு நீடித்திருக்க முடியும். எனவே அ.தி.மு.க அமைச்சர்களை வெளியேற்றிவிட்டு, அந்தக் கட்சியுடனான உறவைத் துண்டித்து விடுங்கள்'' என்று பிரதமருக்கு வேண்டுகோள் விடுத்தார்.

மேலும் அவர், ''தி.மு.க. அரசைக் கலைக்கவேண்டும் என்ற கோரிக்கைக்கு சட்ட அடிப்படை ஏதும் கிடையாது- ஜெயலலிதா ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணியன்சுவாமி சொல்கிறபடி யெல்லாம் செயல்பட்டு வருகிறார்'' என்றும் கூறினார்.

31. ''கூனி மந்தரை'' என்று கூறியது ''தினமணி''

தி.மு.கழக அரசைக் கலைக்க வேண்டுமென்று அ.தி.மு.க.வினர் கூறுவது நகைப்புக் குரியது - ப.சிதம்பரம்

பிரதமர் **வாஜ்பாய்** அவர்களைக் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தி, கடுமையான நிபந்தனைகளை விதித்து, **ஜெயலலிதா** நேரடியாகப் பிரதமருக்கு எழுதிய கடிதம்பற்றி *20.4.1998* அன்று தலையங்கம் எழுதிய ''தினமணி'', ''ஜெயலலிதாவின் சொல்லிலும், செயலிலும் வேகம் காணப்படுகிறதே தவிர, விவேகம் இல்லை என்றும், தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு குறித்து ஆராய வந்த மத்திய அதிகாரிகள் குழு, தமிழக அரசுக்கு நற்சான்றிதழ் வழங்கிவிட்டுச் சென்றது ஜெயலலிதாவின் ஆத்திரத்தை அதிகப்படுத்தி விட்டது- எப்படியாவது தமிழகத்தில் தி.மு.க. அரசை நீக்க வேண்டும் என்பதே ஜெயலலிதாவின் குறிக்கோள்'' என்றும் எழுதியது.

ஆனாலும் வாஜ்பாய் அவர்கள் பிரச்சினைக்கு ஒரு முடிவுகாண வேண்டுமென்ற எண்ணத்தோடு, அமைச் சரவையிலிருந்து **பூட்டாசிங்** அவர்களை, *20.4.1998* அன்று நீக்கினார். மேலும் **ஹெக்டே, ஜெத்மலானி** ஆகியோரிடம் விளக்கம் கேட்கப்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டது.

இதைப்பற்றி தமிழக ஏடுகள் எழுதும்போது, ''தமிழகத்தில் தி.மு.க. அரசைக் கலைத்து விட்டால், தன் மீதுள்ள ஊழல் வழக்குகளை வாபஸ் பெறச் செய்து விடலாம் என்பதே ஜெயலலிதாவின் ஓர் அம்சத் திட்டம். பா.ஜ.க. ஜெயலலிதாவின் திட்டத்திற்குத் துணை போகலாமா?'' என்று எழுதின.

மத்திய வர்த்தகத் துறை அமைச்சராக இருந்த ராமகிருஷ்ண ஹெக்டே அவர்கள், ஜெயலலிதாவின் பிளாக் மெயில் வேலையைத் தடுக்க, மக்களவையைக் கலைத்து மீண்டும் தேர்தல் நடத்த பிரதமர் வாஜ்பாய் முன்வர வேண்டும்- தி.மு.க. அரசைக் கலைக்க மத்திய அரசு முடிவு செய்தால், அதற்கு எதிர்ப்பு தெரிவிப்போம்'' என்றும் கூறினார்.

அவரை அமைச்சரவையிலிருந்து உடனடியாக வெளியேற்ற வேண்டும் என்றும், இல்லாவிட்டால் வாயை மூடிக் கொண்டிருக்கச் சொல்ல வேண்டுமென்றும் அ.தி.மு.க.வினர் பிரதமரைச் சந்தித்து கோரிக்கை மனு கொடுத்தார்கள்.

25.4.1998 அன்று காலையில் மத்திய திட்டக்குழு துணைத்தலைவராக இருந்த **ஜஸ்வந்த் சிங்** அவர்கள், சென்னைக்கு வந்து ஜெயலலிதா அப்போது தங்கியிருந்த மாமல்லபுரம் அருகே உள்ள பையனூர் மாளிகைக்குச் சென்று சந்தித்தார். வெளியே வந்த அவர் செய்தியாளர்களிடம் கூறும்போது, விரைவில் கூடவுள்ள ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டத்தில் பங்கேற்க ஜெயலலிதா ஒப்புக் கொண்டதாகக் கூறினார். அந்தச் செய்தியைத் தாங்கி வெளிவந்த *26.4.1998* தேதிய ''தினமணி'' நாளிதழ், முதல் பக்கத்தில், **''கைகேயி வெற்றி - மக்களின் தோல்வி''** என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை வெளியிட்டிருந்தது. அந்தக் கட்டுரையின் சுருக்கம் இதோ:-

''மந்தரை என்கிற **கூனி** ராமாயணத்தில் இடம் பெறும் ஒரு சாதாரணமான கதாபாத்திரம்தான். இன்றைய மொழியில் சொன்னால்- ''மக்களவையில் ஓர் உறுப்பினர் கட்சி'' என்பதைப் போல! கைகேயிக்கு இந்தக் கூனி வெறும் வேலையாள் மட்டுமே. ஆனாலும் ஒரேயொரு முறை அவள் தன் இருப்பை உணர்த்தினாள். அவளது தனிப்பட்ட தலையீட்டினால், ''சூரிய'' வம்ச வரலாற்றின் போக்கே மாறியது. ''அயோத்தி'' **ராமனின்** வரலாறும் மாறியது. தனது தலைமகன் ராமனுக்கு முடிசூட்ட வேண்டும் என்று **தசரதன்** விரும்பினான். அயோத்தி நகர் முழுதும் கோலாகலம்.

கொண்டாட்டம். மக்கள் பங்கேற்புடன் முடிசூட்டு விழா நிகழ்ச்சிகள் மும்முரமாக நடந்தன. நாடு நகரமெல்லாம், ராமன் அரசனாகப் போவதை எண்ணி மகிழ்ந்திருக்க, ஒரு இதயத்திற்கு மட்டும் மனக் காய்ச்சல் கண்டது. அது மந்தரை என்கிற கூனி, ராமனை முடியேற்க விடாமல் செய்து விடுவதன் மூலம் திருப்தியடைய நினைத்தாள். வாழ்க்கையில் தனித்துப் போனதால் மக்களவையில் ஒரு உறுப்பினர் கட்சியைப்போல வெறுத்துப் போயிருந்தாளோ என்னவோ?

''தனது திட்டம் நிறைவேறினால் கைகேயிக்கு கிடைக்கும் நன்மைகளையெல்லாம் பட்டியலிட்டாள் கூனி. நன்மை தரும் முடிவுகளைக் காட்டி, கைகேயியின் பலவீனத்தில் கைவைத்தாள். **பரதனை** நினைவூட்டினாள். முன்பு தலை தப்பிக்கச் செய்த செயலுக்காக தசரதன் அளித்த இரு வரங்களுக்கு புதிய வடிவம் கொடுத்தாள் கூனி. கூனியின் புத்தி சாலித்தனம், ''ராமன் அரசனாவதைத் தடுப்பதோடு, பரதன் முடியேற்கும்போது ராமன் காட்டுக்குப் போக வேண்டும்'' என்றும் வரம் கேட்க வைத்தது. வரத்தினால் குழப்பங்கள் எழுந்தன. தசரதன் மனமுடைந்து மயங்கி விழுந்தான். மாண்டே போனான்.


''தாயைக் கொல்லாமல் கொன்ற பரதன், அவள் கோரிக்கையை புறந்தள்ளி, அண்ணனைத் தேடி காடு நோக்கிச் சென்றான். அண்ணனின் பாதக்குறடுகளுடன் நாடு திரும்பினான். காலணி ஆட்சி நடத்தினான். காடு சென்ற ராமனை மேலும் மேலும் துன்பங்கள் சூழ்ந்தன. மந்தரைக்கு இதுவெல்லாம் மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கும். **சுப்பிரமணியன் சுவாமிக்குப்** பிரதமர் பதவிக்குக் குறைவான எந்தவொரு சுயலாப ஆசையும் இல்லை என்று கற்பூரத்தில் அடித்துச் சொல்லலாம். இது வெறும் அலங்கரிப்பு வேலைதான். நவீன கைகேயியின் வேலையாளான அவருக்கு, மாற்றார் புண்படச் செய்வதும், சுற்றியிருப்போர் திடீர் பீதி கொள்ளச் செய்வதும் மகிழ்ச்சிக்கான ஒருவழி. அவர் கைகேயியை மதி நுட்பத்துடன் தூண்டி விட்டார். கைகேயி கொண்டிருந்த பலவீனத்தை (வழக்குகளை ஒன்றுமில்லாமல்

செய்தல்-எதிரியான தி.மு.க. அரசைக் கலைத்தல்) அறிந்திருந்தார்.

''முதல் வரம்-நிதி அமைச்சர் பதவி. கைகேயி கேட்ட வரங்கள் அநியாய முடிவுக்குக் கொண்டு செல்லும் என்ற அடிப்படையில், தசரதன் அவள் வரங்களை மறுத்திருக்கலாம். ஆனால், அவன் கடமை உணர்வு அவ்வாறு செய்யவிட வில்லை. தனது நேர்மையின் விளைவு துயரம்தான் என்பதை அறிந்திருந்த போதிலும், அவன் வரங்களை மறுக்கவில்லை. அன்றைய கைகேயி போன்றே சதுரங்க ஆட்டத்தில் அபத்தமான வெட்டுக்காய் நகர்த்தலை விளையாடுகிறாள், இன்றைய **நவீனராணி,** மற்றவர்கள் தோற்கும் போது மந்தரை வெல்வாள். கைகேயி வெற்றி பெறும்போது மக்கள் தோற்றுப் போவார்கள்.''

- ஜெயலலிதாவின் நடவடிக்கைகள் குறித்து அப்போதைய நாளேடுகள் எந்த அளவிற்கு விமர்சனம் செய்தன என்பதற்கு இது ஒன்றே போதும் என்று கருதுகிறேன்.

இதற்கிடையே அப்போது ராஜஸ்தான் மாநில முதலமைச்சரும், பா.ஜ.க.வின் மூத்த தலைவருமான **பெய்ரோன் சிங் ஷெகாவத்** பீகாரில் ராப்ரி தேவி தலைமையிலான ராஷ்ட்ரீய ஜனதா தள அரசையும்,



நன்றி : தினமணி



பிரச்சினைக்கு முடிவாக, பூட்டாசிங்கை அமைச்சரவையிலிருந்து நீக்கினார், வாஜ்பாய்

தமிழகத்தில் தி.மு.க.கழக அரசையும் கலைக்க வேண்டுமென்று அவருக்கு எந்தவிதமான சம்பந்தமும் இல்லாத பிரச்சினையில் செய்தியாளர்களிடம் பேட்டி கொடுத்தார்.

அதைப்பற்றி 27.4.1998 அன்று சட்டசபையில், ''ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் இன்னொரு மாநில முதலமைச்சரைப் பற்றி எந்தவிதமான ஆதாரமும் இல்லாமல் மனம் போன போக்கில் பேட்டிக் கொடுத்திருப்பது சரியல்ல'' என்று நான் பதில் அளித்தேன்.

5.5.1998 அன்று மத்திய அரசில் கூட்டணியிலே இருந்த ஜெயலலிதா, ''மின்வாரிய சீரமைப்புத் தொடர்பாக அவசரச் சட்டம் கொண்டு வருவது குறித்து தோழமைக் கட்சிகளோடு பா.ஜ.க. கலந்தாலோசிக்க வில்லை-மத்திய மின்சார சீரமைப்புக்குழு, மாநில மின்சாரச் சீரமைப்புக் குழு நிறுவவேண்டும் என்று ஓர் அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்திருப்பதை பத்திரிகையில் பார்த்துத்தான் நாங்கள் தெரிந்து கொண்டோம் - மத்திய அரசு கொண்டு வந்துள்ள அவசரச் சட்டம் எங்களுக்கு உடன்பாடானதல்ல'' என்று அறிக்கை விடுத்தார்.

அதற்கு அன்றைய தினமே மத்தியில் மின்துறை அமைச்சராக இருந்த ரெங்கராஜன் குமாரமங்கலம், ''அந்த அவசரச் சட்டம் குறித்து அமைச்சரவையிலே விவாதிக்கப் பட்டது-அமைச்சரவையிலே இடம் பெற்றிருந்த எல்லா கட்சிகளும் அந்த விவாதத்தில் பங்கெடுத்துக் கொண்டன!'' என்று பதிலளித்தார்.

மத்திய அரசு கொண்டு வந்த அந்த அவசரச் சட்டம், குறிப்பாக இலவச மின்சாரம் வழங்குவதைக் கட்டுப்படுத்து

வதற்கான சட்டம் என்று அப்போது கருதப்பட்டது. அதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்பதால்தான் ஜெயலலிதா முந்திக்கொண்டு, அந்த அவசரச் சட்டத்தை தங்களுக்குத் தெரியாமலே மத்திய அரசு கொண்டு வந்து விட்டதாக அவர்கள்மீது பழியைப் போட்டார். மத்தியமின்துறை அமைச்சரோ அ.தி.மு.க. சார்பில் அமைச்சரவையிலே பங்கு பெற்றதாக பதில் கூறினார். இதுகுறித்து என்னைக் கேட்டபோது, ''ஒரு அவசரச் சட்டம் கொண்டு வரப்படும் போது சட்டத்துறை அமைச்சருக்குத் தெரியாமல் கொண்டு வரமுடியாது. மத்தியில் சட்டத் துறையின் அமைச்சராக இருப்பவரே அ.தி.மு.க வைச் சேர்ந்த தம்பிதுரைதான். எனவே அவர்களுக்குத் தெரியாமல் விவசாயிகளைப் பெரிதும் பாதிக்கும் இந்த அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்க முடியாது!'' என்று கூறினேன்.

தமிழகச் சட்டப் பேரவையில் அனைத்துக்கட்சிகளும் இந்த அவசரச் சட்டத்திற்கு தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தபோது நான் குறுக்கிட்டு, தமிழக அரசின் எதிர்ப்பையும் எடுத்துக்கூறி, விவசாயிகளுக்கு ''இலவச மின்சாரம் தமிழகத்திலே எந்தக் காரணத்தைக் கொண்டும் ரத்தாகாது!'' என்று உறுதி கூறினேன்.

ஆனால் எந்த ஜெயலலிதா மத்திய அரசு அவசரச் சட்டத்தைத் தங்களுக்குத் தெரியாமலே கொண்டு வந்துவிட்டது என்று எதிர்ப்புத் தெரிவித்தாரோ, அவரே 6.5.1998 அன்று ''மத்திய அரசு கொண்டு வந்த அவசரச்சட்டம் விவசாயிகளுக்கு எதிரானது அல்ல'' என்று அறிக்கை மூலம் தெரிவித்தார்.

மத்திய அரசின் தோழமைக் கட்சியான அ.தி.மு.க. சார்பாக அமைச்சராக இருந்த மத்திய நிதித்துறை இணை அமைச்சர் **ஆர்.கே.குமார்** என்பவர், 7.5.1998 அன்று ஒரு ஆணை பிறப்பித்து, அது ஏடுகளில் எல்லாம் பெரிதாக வெளிவந்தது. அது என்ன உத்தரவு தெரியுமா? ''சென்னையில் ஜெயலலிதாவின் வருமான வரி வழக்குகளை விசாரித்து வரும் அதிகாரிகள் உட்பட, நாடு முழுவதும் வருமான வரித்துறை அதிகாரிகள் ஒட்டுமொத்தமாக இடமாற்றம் செய்யப்

பட்டுள்ளனர்'' என்ற உத்தரவாகும். மொத்தம் 89 துணை ஆணையர்களும், 108 உதவி ஆணையர்களும் இடமாற்றம் செய்யப்பட்டார்கள். அந்த இடமாற்ற நடவடிக்கை பற்றி, இணை அமைச்சர் ஆர்.கே.குமார் மூத்த நிதி அமைச்சரிடமோ-வருவாய்த் துறை செயலரிடமோ கலந்தாலோசிக்க வில்லை'' என்றும் ஏடுகள் எழுதின.

இதனைத் தொடர்ந்து 9.5.1998 அன்று டெல்லியில் நடைபெற்ற பாரதிய ஜனதா கூட்டணிக் கட்சிகளின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஜெயலலிதா, வாழப்பாடி ராமமூர்த்தி, டாக்டர் ராமராஸ், வைகோ போன்றவர்களும் கலந்து கொண்டதோடு, **பிரதமர் வாஜ்பாய்** அவர்களையும் கூட்டம் முடிந்த பிறகு தனியாகச் சந்தித்துப் பேசினர். அப்போது தமிழகத்திலே தி.மு.க. அரசு நீடித்தால் நிலைமை மோசமாகிவிடும் என்றும், அ.தி.மு.க அணியிலே உள்ள கட்சிகள் அனைத்தும் ஒற்றுமையாக இருப்பதாகவும் தெரிவித்தனர். உள்துறை அமைச்சர் **அத்வானி** அவர்களையும் அந்த அணியினர் சந்தித்து, ''தமிழகத்தில் தி.மு.க அரசை உடனடியாக நீக்க வேண்டியது அவசியமானது'' என்று வலியுறுத்தினார்கள். அதற்கு அவர்கள் முக்கிய காரணமாகக் கூறியது, கோவையில் நடைபெற்ற வெடிகுண்டு விபத்தைத்தான்.

ஆனால் அவர்களின் கேள்விகளுக்கெல்லாம் பதிலளிக்கும் வகையில் ''இந்து'' நாளிதழில் 30.4.1998 அன்று சென்னை வளர்ச்சி ஆய்வுக கழகத்தின் ஆலோசகராகப் பணியாற்றி வந்த **ஜெ.ஜெயரஞ்சன்**, (ஆமாம், அவரும் ஜெ.ஜெ.தான்) அந்த ஜெ.ஜெ. விற்குப் பதிலளித்து ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அந்தக் கட்டுரையின் முக்கிய பகுதிகளை மட்டும் இங்கே தொகுத்துத் தருவது அந்த நேரத்துப் பிரச்சினைக்கான பதில் என்பதற்காக மட்டுமல்லாமல், பொதுவாகத் தமிழகத்தின் நிலை குறித்தது அந்தக் கட்டுரை என்பதாலும் அவசியம் என்று கருதுகிறேன்.


''கோவையில் 55 அப்பாவி உயிர்களைப் பலி கொண்ட குண்டு வெடிப்புகளை தற்போதைய தி.மு.க. ஆட்சியில்


தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர் குலைந்து போன சம்பவமாக மட்டுமே ஜெயலலிதாவும், அவரது ஆதரவாளர்களும் கருதுகிறார்கள். சந்தர்ப்பவசத்தால் ஏற்பட்ட இந்தக் குறைபாடு, பலமுறை அநியாயமாகப் பயன்படுத்தப்பட்ட 356 சட்டப் பிரிவைப் பயன்படுத்தி, மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட தமிழ்நாடு அரசைப் பதவி நீக்கம் செய்யும்படி வலியுறுத்தும் அரசியல் ரீதியான வாய்ப்பை தி.மு.க.வின் எதிரிகளுக்கு வழங்கியிருக்கிறது. அதே நேரத்தில் இந்த மாநிலத்தில் தீவிரவாத இயக்கத்தின் வளர்ச்சிக்குக் காரணமாக முக்கிய அரசியல் நிகழ்வுகளை எவர் கண்ணுக்கும் புலனாகாமல் மறைக்கவும் செய்கிறது. இவை தெரியாமல் இருந்தால், எதிர்காலத் தமிழக அரசியலில் கடும் விளைவுகள் ஏற்படும்.''

''1980களிலும் 1990களிலும் அ.தி.மு.க. மாநிலத்தின் ஆட்சிப் பொறுப்பில் இருந்தது. மிக்ககுறைந்த காலம்தான் தி.மு.க. பதவியில் இருந்தது. அந்தக் கால கட்டத்தில் திராவிட இயக்கத்தின் சமயச் சார்பற்ற அரசியல்-மெதுவாக-ஆனால் தொடர்ந்து சிதைக்கப்பட்டது. இந்தச் சிதைவை திராவிட இயக்கத்தின் பெயரால் அ.தி.மு.க.வே உறுதி செய்தது. மேற்பார்வையிட்டது.''

''**அண்ணா, கலைஞர்** போன்ற தி.மு.க. தலைவர்கள் தங்களுக்கு எந்த மதத்தின் பாலும் ஒட்டுதல் இல்லை என்று மறுத்தார்கள். பல்வேறு மதங்களைச் சார்ந்தவர்களைத் **''தமிழர்கள்''** என்ற பரந்த உணர்வின் கீழ் ஒன்று படுத்தினார்கள்.''

''ஆனால், அ.தி.மு.க. தலைவர்கள் இந்து மத வெறியர்களைச் சேர்ந்தவர் களாக பகிரங்கமாகவே காட்டிக் கொண்டார்கள். மூகாம்பிகை பக்தர்கள் என்பதை அவர்கள் மறைக்க வில்லை. அவர்களது





"தி.மு.க. அரசைக் கலைக்க மத்திய அரசு முடிவு செய்தால், அதை எதிர்ப்போம்" -என்றார், ராமகிருஷ்ண ஹெக்டே

அமைச்சர்களில் பலர் இந்து மத வெறியர் என்பதில் பகிரங்கமாகவே பெருமைப்பட்டுக் கொண்டனர்."


"இந்தச் சூழ்நிலையில் **தாணு லிங்கம் நாடார், ராமகோபாலன்** ஆகியோரால் *1981*இல் நிறுவப்பட்ட **இந்து முன்னணி** தமிழ்நாட்டில் மத உணர்வு மிகுந்த தென்பகுதிகளில் வேரூன்றியது. அதன் விளைவாக, *1982*இல் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள **மண்டைக்காட்டில்** உள்ளூர் இந்துக்களுக்கும், கிறித்துவ மீனவர்களுக்கும் இடையே மதக்கலவரம் மூண்டது. தமிழர்களை மத அடிப்படையில் இந்து முன்னணி வெற்றிகரமாகப் பிரிப்பதற்கு முதல் வாய்ப்பாக அமைந்த பெரிய சம்பவம் அதுதான். அ.தி.மு.க. வின் ஆட்சி, தனது அரசியலுக்கு உதவிகரமாக இருப்பதையும் இந்து முன்னணி அறிந்துகொண்டது."

"*1984* சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. வேட்பாளர்களுக்கு இந்து முன்னணி ஆதரவு அளித்தது. முதல்வராகப் பதவியேற்றவுடனேயே கோயில் நிர்வாக வாரியம் அமைக்கப்படுவதாக ஜெயலலிதா அறிவித்தார். அதற்குத் தலைமை வகிக்கும் பொறுப்பையும் அவரே ஏற்றுக் கொண்டார். அதன் மூலம் ஜெயலலிதா தனக்குள்ள வேதம் சார்ந்த இந்து மத ஒட்டுதலை மக்களிடம் உறுதிப்படுத்தினார். அந்த நிதிக்குப் பணம் திரட்ட அ.தி.மு.க. தொண்டர்கள் வலியுறுத்தப்பட்டார்கள். கோடிக்கணக்கான ரூபாய் திரட்டப்பட்டு, மாநிலத்தின் உள்ள பல பெரிய, சிறிய கோயில்களின் புனரமைப்புக்குச் செலவிடப்பட்டன. கும்பகோணத்தில் நடந்த மகாமகத்தில் ஜெயலலிதா நேரடியாகப் பங்கேற்றது, காஞ்சி மடத்திற்குச் சென்றது (திராவிடக் கட்சிகளைச் சேர்ந்த எந்தத் தலைவரும் அங்கு சென்றது கிடையாது) ஆகியவை அவரது அரசியலுக்குத்

தெளிவான இந்து சாயத்தைப் பூசியது. கோயில் பூசாரிகளுக்கு வேதாமகப் பாடங்களில் பயிற்சி வகுப்புகளையும் அவர் அறிமுகப்படுத்தினார். தமிழ்நாடு வேத அறிவியல் கழகம் நிறுவப்படுவதாகவும் அவர் அறிவித்தார். கோயில் பூசாரிகளுக்கு வேதாகமப் பாடங்களில் பயிற்சி வகுப்புகள் நடத்துவதும், சமஸ்கிருதத்திலிருந்து ஆகமப் பாடங்களைத் தமிழில் மொழி பெயர்ப்பதும்தான் இந்தக் கழகத்தின் பிரதான பணிகளாகும்.''

''பாபர் மசூதி-ராமஜன்ம பூமி சர்ச்சை நாட்டில் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தபோது, ஜெயலலிதா மேற்கொண்டிருந்த இந்து ஆதரவு பகிரங்கமாக வெளிப்பட்டது. தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் அயோத்தியில் கரசேவை நடைபெறுவதற்கு ஆதரவாக ஜெயலலிதா வாதாடினார். பாதிக்கப்பட்டவர்களும், போதிய பாதுகாப்பின்றித் தவித்தவர்களும், சிறுபான்மையினருமான முஸ்லீம்களுக்கு ஆதரவாக ஜெயலலிதா பேசவில்லை. ''ராமர்கோயிலை கட்டியே தீரவேண்டும்!'' என்று வலியுறுத்தினார். பாரதிய ஜனதா கட்சி-சிவசேனை நீங்கலாக நாட்டில் உள்ள அரசியல் கட்சித் தலைவர்களில் ஜெயலலிதா ஒருவர் மட்டுமே அயோத்தியில் கரசேவை நடைபெறுவதற்கு ஆதரவு தந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. நீதித்துறை மேற்கொண்ட நிலைக்கு எதிரானது என்று தெரிந்தும் கரசேவையை ஆதரித்தார்.

''உத்தேச ராமர் கோயிலை ஆதரித்து, தமிழ்நாடு முழுவதும் ஒரு வார காலம் ஏராள மான பொதுக் கூட்டங் களையும் நடத்தவும் அவர் ஏற்பாடு செய்தார். கோயில் கட்டுவதற்கு ஆதரவு தெரிவித்து கையெழுத்து இயக்கம் நடந்தது. ஏராளமான அ.தி.மு.க. சட்டமன்ற



உறுப்பினர்கள் கோயில் கட்டுவதை ஆதரித்துக் கையொப்ப மிட்டார்கள். ராமர்கோயில் பிரச்சினையில் ஜெயலலிதா மேற்கொண்ட நிலைக்காகப் பெருமகிழ்ச்சி அடைந்த இந்து முன்னணி, அவருக்குத் தனது நன்றியைத் தெரிவித்தது. தமிழ்நாடெங்கும் நன்றி தெரிவிக்கும் போஸ்டர்களை ஒட்டியது.

''சட்டம் ஒழுங்கு சீர்குலைவுக்காக அல்லது தீவிரவாதம் தலைதூக்கியதற்காக தி.மு.க. அரசைப் பதவி நீக்கம் செய்ய வேண்டுமென்று வலியுறுத்துகிறவர்கள், அ.தி.மு.க. செய்த பாவங்களுக்கான விலையை, தி.மு.க. கொடுக்க வேண்டு மென்று கேட்கிறார்கள்.''

- இவ்வாறு **''இந்து''** நாளிதழில் அந்தக் கட்டுரை தீட்டப்பட்டிருந்தது.

''இந்து'' நாளிதழ் மட்டுமல்ல-பல நாளேடுகளும், வார ஏடுகளும் தமிழக அரசைக் கலைப்பதற்கு எதிரான கருத்துக்களை வேக வேகமாக எழுதின.

★ ★ ★

மத்திய அமைச்சரவையிலிருந்து அ.தி.மு.க. அமைச்சர் ஒருவர் ஒரே வார காலத்தில் வெளிவந்ததைத் தொடர்ந்து, இரண்டாவது மாதத்தில் மற்றொரு அமைச்சரவைப் பணியாற்றி வந்த ஆர்.கே.குமாரும் அமைச்சரவையிலிருந்து விலகினார் என்ற செய்தி வந்தது. அந்தச் செய்தியை வெளியிட்ட ''தினமணி'' நிதித்துறையிலே இணை அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த ஆர்.கே.குமார் நினைத்திருந்தால், ஜெயலலிதாவை வழக்குகளிலிருந்து தப்புவிக்கச் செய்திருக்கலாம் என்றும், அமைச்சர் அந்தப் பணியிலே சரியாக கவனம் செலுத்தவில்லை என்றும், அதனால் அவரைப் பதவியிலிருந்து விலகிக் கொள்ளும்படி வலியுறுத்தப்பட்டதாகவும், அப்போது சிகிச்சைக்காக மருத்துவமனையிலே இருந்த குமாரிடம் நிர்ப்பந்தம் செய்யப்பட்டதாகவும் தெரிவித்திருந்தது. ஆனால் அவர் வெளிநாட்டிற்குச் சிகிச்சைக்காகச் செல்ல அனுமதிக்க


வேண்டுமென்றும், அங்கிருந்து விலகல் கடிதத்தை அனுப்பி விடுவதாகவும் கேட்டுக்கொண்டதாகவும், ஆனால் அதனையேற்க ஜெயலலிதா மறுத்துவிட்டதாகவும் நாளேடுகள் செய்தி வெளியிட்டிருந்தன.

மத்திய அமைச்சரவையில் அங்கம் பெற்றிருந்த அ.தி.மு.க. உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தின் இரண்டு அவை களிலிருந்தும் இரண்டாவது நாளாக 5.6.1998 அன்று வெளிநடப்பு செய்தனர். அதற்குக் கூறிய காரணமே, ''தமிழ்நாட்டில் ஆளும் தி.மு.க. அரசு தீவிரவாதிகளின் நடவடிக்கையைக் கட்டுப்படுத்தத் தவறிவிட்டது'' என்பதாகும்.

மீண்டும் 8.6.1998 அன்றும் அதே கோரிக்கையை வைத்து இரண்டு அவைகளிலிருந்தும் அ.தி.மு.க வெளி நடப்பு செய்தது. 10.6.1998 அன்று காலையில் அ.தி.மு.க. மற்றும் அதன் தோழமைக் கட்சி உறுப்பினர்கள் பிரதமர் வாஜ்பாய் அவர்களைச் சந்தித்து, தமிழக ஆட்சிக் கலைப்பு குறித்து பேசிய பிறகும், இரண்டு அவைகளிலிருந்தும் வெளி நடப்பு செய்தனர். நான்காவது நாளாக 11.6.1998 அன்றும் வெளிநடப்பு செய்தனர்.

13.6.1998 அன்று சென்னையில் ப.சிதம்பரம் அவர்கள் அளித்த பேட்டியில், ''தி.மு.க அரசை டிஸ்மிஸ் செய்ய வேண்டுமென்று நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அ.தி.மு.க. சொல்லி வருகிறது. அவர்களைப் பொறுத்தவரை அது அவர்களுக்கு ஓர் அம்சத் திட்டம். அதற்காக எல்லாவிதமான சாம, பேத, தான, தண்டங்களையும் கையாள அவர்கள் தயார். அதற்கு பா.ஜ.க. அரசு பலியாகுமா இல்லையா என்பது தான் கேள்வி.

''ஆனால் பா.ஜ.க தலைவர்கள் ஒன்றைப் புரிந்து வைத்துள்ளார்கள். டிஸ்மிஸ் எளிது-ஆனால் சட்டப் பேரவையைக் கலைக்க முடியாது. கலைத்தால் உடனடியாக நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். மக்களவையில் தீர்மானம்



நிறைவேறுமா என்பதே கேள்விக்குறி. மாநிலங் களவையில் நிச்சயமாகத் தீர்மானம் நிறைவேற்ற முடியாது. அப்படி யென்றால் மீண்டும் சட்டப் பேரவைக்கு உயிர் வந்து விடும். மீண்டும் உயிர் வந்தால் கருணாநிதியை முதல்வராகச் சட்டப் பேரவை தேர்ந்தெடுக்கும். இதை பா.ஜ.க உணர்ந் திருக்கிறது. அதை அ.தி.மு.க.வுக்கு அக்கட்சி யால் உணர்த்த முடிய வில்லை. அதுதான் சிக்கல். பா.ஜ.க. ஏதோ நெறி முறைகளுக்கு உட்பட்ட கட்சி என்பதை நான் ஏற்கத் தயாராக இல்லை. சட்டப் பேரவையைக் கலைத்து அதை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியும் என்றால், அதை அக்கட்சி செய்துவிடும். சட்டம் தடையாக இருப்பதால் யோசிக்கிறது. தமிழகத்தில் பெருமளவு சட்டம் ஒழுங்கை நிலை நிறுத்தி உள்ளனர். குற்றவாளிகளை - அவர்களுக்கு உடந்தையாக இருந்தவர்களைக் கண்டு பிடித்துள்ளனர். தி.மு.க. அரசைக் கலைக்க வேண்டும் என்று கூறுவது நகைப்புக்குரியது'' என்று கூறினார்.

18.6.1998 அன்று ஜெயலலிதா விடுத்த அறிக்கையில் தமிழகத்தில் விடுதலைப்புலிகள் நடமாட்டமும், தீவிரவாதமும், தேச விரோதச் செயல்களும் பெருகி விட்டதாகவும், அந்தக் காரணங்களுக்காக தி.மு.க. அரசை உடனே டிஸ்மிஸ் செய்ய வேண்டுமென்றும் அறிக்கை விடுத்தார்.

அதற்கடுத்த நாள் செய்தியாளர்களிடம் ஜெயலலிதா கூறும்போது, ''தி.மு.கழகத்துடன் பா.ஜ.க.ரகசிய தொடர்பு

வைத்துள்ளது. அ.தி.மு.க.வைப் பிளக்க பா.ஜ.க. சதி செய்கிறது, எங்கள் கூட்டணிக்குள்ளும் பிளவை ஏற்படுத்த முயற்சிக்கிறது- இது நடக்காது. பா.ஜ.க. வின் மாநிலப் பொதுச் செயலாளர் **இல.கணேசன்** அதிகப் பிரசங்கித்தனமாகப் பேசியுள்ளார். முக்கிய முடிவுகள் எடுக்கும் போது கூட்டணிக் கட்சிகளுடன் பா.ஜ.க. அரசு ஆலோசனை நடத்தும் என்று எதிர் பார்த்தோம், ஆனால் பல விஷயங்கள் பத்திரிகை செய்தி வாயிலாகத்தான் நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது. ''பெரிய அண்ணன்'' தோரணையில் பா.ஜ.க நடந்து கொள்கிறது. கருணாநிதியுடன் ரகசிய தொடர்பை பா.ஜ.க. வைத்துள்ளது. ஆர்.எஸ்.எஸ். மற்றும் வி.எச்.பி.யுடன் கருணாநிதி நெருங்கிய தொடர்பு வைத்துள்ளார். கூட்டணிக் கட்சிகளின் கருத்தை அறிந்து பா.ஜ.க. செயல்பட வேண்டும்'' என்றெல்லாம் கூறினார்.

இதற்குப் பதிலளித்த பா.ஜ.க.வின் தலைவர்களில் ஒருவர், ''தி.மு.க. ஆட்சியை டிஸ்மிஸ் செய்வதாக எந்த வாக்குறுதியையும் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதாவுக்கு பா.ஜ.க. அளிக்கவில்லை. எமது கட்சியின் தோழமைக் கட்சி அ.தி.மு.க.தான். எனவே, நாங்கள் ஏன் தி.மு.க.வுடன் ரகசிய உறவு வைத்திருக்க வேண்டும்?'' என்று கேட்டார்.

பா.ஜ.க.வைப் நோக்கி மட்டுமல்ல-மற்றொரு தோழமைக் கட்சியான ம.தி.மு.க. வைப் பற்றியும் ஜெயலலிதா கருத்துக் கூறத் தவறவில்லை. அதிலே ''ஆரம்பத்தில், தி.மு.க. ஆட்சி போக வேண்டும்'' என்றார் வை.கோ. ஆனால் இப்போது, ''356ஆவது பிரிவைப் பயன்படுத்தக்கூடாது'' என்கிறார். தி.மு.க. ஆட்சியை நீக்க வேண்டும் என்பதில் முன்பு தீவிரமாக இருந்தார்-இப்போது முரண்பாடாக உள்ளார். இவரது பேச்சை மக்களாலும், அவரது கட்சித் தொண்டர்களாலும் புரிந்து கொள்ள முடியவில்லை. 356ஐப் பயன்படுத்தி ஆட்சியைக் கலைத்து தேர்தல் வந்தால் ம.தி.மு.க. தேர்தலில் நிற்கக் கூடாது'' என்றெல்லாம் வர்ணித்திருந்தார்.

அம்மையாரைவிட ஒருபடி மேலே போய் அ.தி.மு.க.வின் துணைப் பொதுச் செயலாளராக அப்போதிருந்த **செங்கோட்டையன்** மிகவும் கடுமையாக வை.கோ.வைத் தாக்கி அறிக்கை ஒன்றை வெளியிட்டார். ''நான் எந்தக் காலத்திலும் 356ஆவது பிரிவினை ஆதரித்ததில்லை'' என்று வை.கோ. வேலூர் பொதுக்கூட்டத்தில் அ.தி.மு.க. தலைவிக்குப் பதில் அளித்திருந்தார்.

இதற்கிடையே 21.6.1998 அன்று டெல்லியிலே மத்திய உள் துறை அமைச்சராக இருந்த **திரு.எல்.கே.அத்வானி** அவர்கள் அளித்த ஒரு பேட்டியில், ''மத்தியில் பா.ஜ.க. தலைமையிலான அரசு நீடிக்க வேண்டுமென்பதற்காக இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 356வது பிரிவைப் பயன்படுத்தி எந்த மாநில அரசையும் கலைக்க மாட்டோம்- தி.மு.க. அரசைக் கலைக்க வேண்டும் என்று கோரும் அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதாவுக்கு ''முடியாது'' என்பதுதான் பதிலாக இருக்கும், இது தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல-இதேபோல் 356 வது பிரிவைப் பயன்படுத்தி வேறு சில மாநிலங்களும் கலைக்கப்பட வேண்டுமென்று வலுவாக கோரிக்கை எழுப்புகின்றவர்களுக்கும் பொருந்தும்!'' என்று தெரிவித்தார்.


மேலும் அவர், ''ஜெயலலிதா கூறுவதைப்போல தி.மு.க. அரசைக் கலைப்பதாகத் தேர்தலுக்கு முன்பு அ.தி.மு.க.வுக்குப் பா.ஜ.க. உறுதி எதுவும் அளிக்கவில்லை. தனிப்பட்ட முறையில் பேசிக்கொண்டிருந்த போதுகூட ஒரு போதும் அவ்வாறு கூறியதாக எனக்கு நினைவில்லை. அது ஜெயலலிதாவினுடைய - அல்லது தமிழ்நாட்டில் உள்ள சிலருடைய எண்ணமாக இருக்கலாம். இந்தப் பிரச்சினையில் தேர்தலுக்கு முன்னும், பின்னும் மத்திய அரசு தெளிவாகவே உள்ளது. பா.ஜ.க-தி.மு.க. இடையே ரகசிய உறவு இல்லை-


தினமணி
26-4-1998

''நவீன கைகேயியாக'' ஜெயலலிதாவைச் சித்திரித்து ''கைகேயி வெற்றி - மக்களின் தோல்வி'' என்று கட்டுரை வெளியிட்டது, தினமணி

உறவு இருந்தால் அது வெளிப்படையாகத்தான் இருக்கும்'' என்றும் தெரிவித்தார்.

இந்தப் பேட்டி ஜெயலலிதா தரப்பினருக்கு மிகவும் கோபத்தை ஏற்படுத்தியது. அ.தி.மு.க.வினர் பிரதமராக இருந்த வாஜ்பாய் அவர்களின் கொடும் பாவியைத் தமிழகத்தில் ஆங்காங்கு கொளுத்துவதாக ஏடுகளில் செய்தி வரச் செய்தது. மத்திய அமைச்சரவையில் பங்கு வகித்துக் கொண்டே அத்தகைய மோசமான காரியங்களில் அ.தி.மு.க. ஈடுபட்டது.



''மின்வாரியச் சீரமைப்புச் சட்டத்தில் எனக்கு உடன்பாடில்லை - என்றார், ஜெயலலிதா. ஆனால், அப்போது சட்டத்துறை அமைச்சர் அ.தி.மு.க.வைச் சேர்ந்த தம்பிதுரைதான்

அத்வானி கொடுத்த பேட்டியைப் பற்றி ஜெயலலிதா, தேசிய பாதுகாப்பிலே அக்கறை இல்லாத ஒருவர் உள்துறை அமைச்சராக மத்தியிலே இருப்பதற்காக வேதனைப் படுவதாகத் தெரிவித்தார். அதற்குக் காரணம் தி.மு.கழக ஆட்சியைக் கலைக்காததுதான் என்றும் கூறினார்.

''தி.மு.க ஆட்சியைக் கலைக்கவில்லை என்பது தேசப் பாதுகாப்பிற்குக் குந்தகமான காரியமா?'' என்று செய்தியாளர்கள் என்னிடம் கேட்டபோது, ''தி.மு.க. ஆட்சியைக் கலைக்கவில்லை என்பதற்காக ஏற்கனவே தன்னால் புகழ்ந்து போற்றப்பட்ட தலைவர்களில் ஒருவரான அத்வானி அவர்களை தேச விரோதி என்பதும் - வாஜ்பாய் அவர்களின் உருவப்பொம்மையைக் கொளுத்துவதும் ஜெயலலிதாவின் இயல்பு என்ன என்பதை உலகத்திற்கு

THE HINDU

''அ.தி.மு.க.வினர், நாங்கள் இந்து மத வெறியர்கள்தான் என்பதில் பகிரங்கமாகவே, பெருமைப் பட்டுக் கொண்டனர்'' - என்றது இந்து நாளேடு



விடுதலைப் புலிகளைக் காரணம் காட்டி, தி.மு.கழக அரசின்மீது அபாண்டமாகக் களங்கம் சுமத்தினார், ஜெயலலிதா

உணர்த்தக் கூடியவை. அவை அவரது சுயமரியாதை என்று சிலர் வாதிடக்கூடும். அது அவரது சுயமரியாதை உணர்வு அல்ல-சுயநல உணர்வு என்பது தமிழ் நாட்டு மக்களுக்கு மட்டு மல்ல - இந்திய மக்கள் அனைவருக்குமே புரிந்த உண்மையாகும்'' என்று கூறினேன்.

நான் இவ்வாறு பேட்டி கொடுத்த அதே 24.6.1998 அன்று காலையில் எனது இல்லத்தில் எனது நண்பர்களில் ஒருவரும் மத்திய அமைச்சராக அப்போது இருந்த திரு.ராமகிருஷ்ண ஹெக்டே அவர்கள் என்னைச் சந்தித்து, தமிழகத்தில் வர்த்தகம் மற்றும் சரக்குப் போக்குவரத்து வளர்ச்சி குறித்து நீண்ட நேரம் ஆலோசனை நடத்தினார்.

அவர் என்னைச் சந்தித்தது பற்றியும் செய்தியாளர்கள் என்னைக் கேட்டனர். அதற்கு நான், ''ஹெக்டே அவர்கள் எனக்கு நீண்ட கால நண்பர். அவர் மத்திய அரசில் அமைச்சராக இருக்கிறார். பொதுவாக மத்திய அமைச்சர்கள் மாநிலங்களுக்கு வரும்போது அவர்கள் துறை குறித்த பிரச்சினைகளை அந்தந்த மாநில முதலமைச்சர்களைச் சந்தித்துப் பேசுவது என்பது மரபு. அவர் நீண்டகால அரசியல்வாதி என்பதால், அந்த ஆரோக்கியமான மரபினைப் பின்பற்ற வேண்டுமென்ற காரணத்தால் என்னைச் சந்தித்தார்'' என்று கூறினேன்.

தொடர்ந்து செய்தியாளர்கள் அன்றைய தினம் என்னிடம் கேட்ட சில முக்கிய கேள்விகளும், அவைகளுக்கு நான் அளித்த பதில்களும் வருமாறு:-

செய்தியாளர்:-ஜெயலலிதா இந்த அளவிற்குத் தரம் தாழ்ந்து அத்வானி அவர்களைப் பேசிய பிறகும், அவருடைய



முதல்வர் கலைஞர் அவர்களை அவரது இல்லத்தில் மத்திய அமைச்சரான ராமகிருஷ்ண ஹெக்டே சந்தித்து உரையாடினார்.

ஆதரவுடன் மத்தியிலே ஆட்சியிலே பி.ஜே.பி. தொடர்வது அவமானம் இல்லையா?



அயோத்தியில் கரசேவை நடை பெறுவதற்கு ஆதரவு தெரிவித்த ஜெயலலிதா ''ராமர் கோயிலைக் கட்டியே தீர வேண்டும்'' என்று போராடினார்.

நான்:- என்னைக் கேட்டால் நான் என்ன சொல்வது? உங்கள் கேள்வி நியாயமான கேள்வி-ஆனால் கேட்கப் பட்ட இடம் தவறு.

செய்தியாளர்:- மத்திய உள்துறை அமைச்சரையே தேச விரோதி என்கிறார். அதற்குப் பிறகும் மத்திய அரசு பொறுமையாக இருக்கிறது என்றால்...?

நான்:- மீண்டும் அதே பதில்தான்.

செய்தியாளர்:- தமிழக அரசை டிஸ்மிஸ் செய்யாமல் இருப்பது ஜெயலலிதா கூற்றின்படி தேசவிரோதமான காரியமா?

நான்:- தேசம் என்றால் என்ன? தேச பக்தி என்றால் என்ன? தேச விரோதம் என்றால் என்ன? இவற்றையெல்லாம் ஜெயலலிதா இனிமேல் பாலபாடமாகக் கற்றுக் கொள்ள வேண்டும். அவருடைய இலட்சியமே தி.மு.க. அரசை டிஸ்மிஸ் செய்ய வேண்டுமென்பதுதான். அதற்குக் காரணம் தி.மு.க. அரசு டிஸ்மிஸ் ஆனால், அவர்மீதுள்ள பல்லாயிரம் கோடி ரூபாய்க்கான ஊழல் வழக்குகள் டிஸ்மிஸ் ஆகிவிடும் என்பதுதான். மாநில அரசு தொடுத்துள்ள வழக்குகள் மாத்திரமல்ல-ஏற்கனவே மத்திய அரசின் மூலம் சில அன்னியச் செலவாணி வழக்குகளும் அவர்மீது இருக்கின்றன. அந்த வழக்குகளும் சரி-மாநில அரசு வழக்குகளும் சரி-தி.மு.க. அரசு டிஸ்மிஸ் மூலம் தன்னை விட்டு வேகமாக விலகி விடும் என்று ஜெயலலிதா கனவு கண்டு கொண்டிருக்கிறார். அதனால்தான், 'டிஸ்மிஸ், டிஸ்மிஸ்' என்று ஒவ்வொரு நாளும் உச்சரித்துக் கொண்டிருக்கிறார். அதற்கு இணங்காதவர்களையெல்லாம் கர்ணகடூரமான வார்த்தைகளால் தாக்கி வெளிப்படையான அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்.

செய்தியாளர்:- பா.ஜ.க. தரப்பிலிருந்து தூதுவர்கள் யாராவது வந்து உங்களைச் சந்தித்தார்களா?

நான்:- எந்தவிதமான தூதுவர்களும் வரவில்லை. பி.ஜே.பி.யில் உள்ள தலைவர்களும், தி.மு.கவிலே உள்ள தலைவர்களும் நீண்ட கால நண்பர்கள். ஆனால் பி.ஜே.பி.யும், தி.மு.க.வும் நண்பர்கள் அல்ல.

இவ்வாறு நான் செய்தியாளர்களிடம் விளக்கமளித்தேன்.

32. சிறந்த நிர்வாகி-திரு.பக்தவத்சலம்!

நான், தந்தை பெரியாரிடம் பகுத்தறிவையும் - பேரறிஞர் அண்ணாவிடம் அரசியல் பண்பாட்டையும் பெரியவர் பக்தவத்சலனாரிடம் நிர்வாகத்திறனையும் கற்றேன்.

தமிழகத்தில் பெரும்பான்மை பலத்தோடு இருந்த தி.மு.கழக ஆட்சியை எப்படியும் கலைக்க வேண்டுமென்று ஒரே குறிக்கோளுடன் செயல்பட்டு-அதற்காகவே மத்திய பா.ஜ.க. அரசுக்கு ஒவ்வொரு நாளும் தொந்தரவு கொடுத்த அ.தி.மு.க. தலைவிபற்றி- ''எடுபடுமா ஜெயலலிதா மிரட்டல்?'' என்ற தலைப்பில், ''தினமணி'' நாளிதழ் ஒரு செய்திக் கட்டுரையை வெளியிட்டது. 1998 ஆம் ஆண்டு மத்தியில் நிலவிய அரசியல் நிலைமைகளைப் புரிந்து கொள்ள அந்தக் கட்டுரை பயன்படுமென்று கருதுகிறேன். அந்தக் கட்டுரையின் சுருக்கம் வருமாறு:-

''மக்களவையில் இடங்களைப் பிடிப்பதற்காக சில கட்சிகள் செய்து கொண்ட கொள்கையற்ற சந்தர்ப்பவாதக் கூட்டணியின் சாயம் வெளுக்கத் தொடங்கியுள்ளது. ஆளும் கட்சியாக அமர்ந்த பா.ஜ.க.வுக்கு தேனிலவுக் காலமாக சில மாதங்களை ஓதுக்க எதிர்க்கட்சிகள் தயாராக உள்ளன. ஆனால், கூட்டணிக் கட்சியான அ.தி.மு.க.வுக்கு அத்தகைய கரிசனம் கிடையாது. ஜெயலலிதா அளித்த பேட்டி, அவரது சந்தேக மன நிலையை வெளிப்படுத்தியது. அ.தி.மு.க.வைப் பிளக்கச் சதி என்ற புகாரின் மூலம், பா.ஜ.க.வை சந்தேகிக்கத் தொடங்கியுள்ளார், ஜெயலலிதா.

''அவரது கட்சியில் உள்ள ஒரு பகுதி எம்.பி.க்கள் மீது ஜெயலலிதாவுக்குத் துவக்கத்தில் இருந்தே சந்தேகம் உள்ளது.

மத்திய அமைச்சரவையில் சேர்ந்தால் பதவி பெறும் எம்.பி.கள் ஓர் அதிகார மையமாக உருவெடுத்து விடுவார்கள் என்ற ஐயப்பாடும் அவருக்கு இருந்தது. அதனால் ஆட்சியில் பங்கேற்கத் தேவையில்லை என்ற முடிவுக்கு ஜெயலலிதா வந்தார். திருநாவுக்கரசு தலைமையை ஏற்று ஏழு மாநிலங்களவை உறுப்பினர்கள் அ.தி.மு.கவிலிருந்து கட்சி தாவியதைப்போல, மற்றொரு பிளவு ஏற்படக்கூடாது என்பதற்காகவே தனது கட்சி எம்.பி.க்களின் ராஜினாமா கடிதங்களை ஜெயலலிதா வாங்கி வைத்துள்ளதாகக் கூறப்படுவது உண்மையாகக்கூட இருக்கலாம்.

''தி.மு.க. அரசை நீக்குவதற்கான தீர்மானம் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேறப் போதுமான எண்ணிக்கை பலம் இல்லாத போதிலும், அப்பலத்தைத் தங்களால் பெற்றுத் தர முடியும் என்று ஜெயலலிதா கூறியுள்ளார். தன் நலத்திற்காக இவர் மட்டும் மாற்றுக் கட்சியினரைத் தங்கள் பக்கம் ஈர்ப்பதை ராஜதந்திரம் என்று அழைப்பார் போலும், அரசியல் ஒழுக்கமும் இரு வழிப் பாதையாக இருக்க வேண்டுமென்று ஜெயலலிதா கருதவில்லை.

''பா.ஜ.க. ஆட்சி அமைந்தால், தி.மு.க.ஆட்சி கலைக்கப்படும் என்று மக்களவைத் தேர்தலுக்கு முன்பே உடன்பாடு ஏற்பட்டதாக ஜெயலலிதா சொல்கிறார். ''அத்தகைய உடன்பாடு எதுவும் எட்டப்படவில்லை'' என்று பா.ஜ.க துணைத்தலைவர் கே.எல்.சர்மா தெளிவுபடக் கூறிவிட்டார்.

''தமிழகத்தில் சீர்கெட்டுக் கிடக்கும் அரசியல் நாகரிகத்தை மேலும் சீரழிக்கக் கூடிய கருத்தை ஜெயலலிதா முன் வைக்கிறார். கருணாநிதியின் பவளவிழா நிகழ்ச்சியில், அவருக்கு இல.கணேசன் பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்தது ஜெயலலிதாவுக்குப் பிடிக்கவில்லை. மாற்று முகாமில் இருந்தால் ஒருவர் முகத்தில் மற்றொருவர் விழிப்பதே தவறு என்ற கருத்தை அவர் கொண்டுள்ளார். விழாவில் இல.கணேசன் பங்கேற்றதை விமர்சித்து, அவரைப்

பொதுக்கூட்ட மேடைகளில் அ.தி.மு.க.வினர் திட்டித் தீர்த்தனர்.

''மத்தியில் பா.ஜ.க.அரசுக்கு அளித்து வரும் ஆதரவை வாபஸ் பெற்றால் அ.தி.மு.க.வை மக்கள் மன்னிக்க மாட்டார்கள்-என்று **இல.கணேசன்** கருத்து கூறினார். அதற்காக அவரை ''கருணாநிதியின் அடிவருடி, காவடி தூக்குபவர், துதிபாடி, துரோகி, சாமரம் வீசுபவர், கயமைத் தனமானவர், முகவரி இல்லாதவர், ஆளில்லாத கட்சிக்கு அசைக்க முடியாத தலைவர், பவள விழா வாழ்த்துச் சொல்ல கால் கடுக்க நின்ற கணேசனுக்கு கட்சி உணர்வு உண்டா?'' என்றெல்லாம் தெரிவித்து, **செங்கோட்டையன்** மூலம் ஜெயலலிதா அறிக்கை விட்டார்.

''தமிழகத்தில் வேரூன்றிவிட்ட அரசியல் சகிப்பின்மைக்கு மேலும் தூபம் போடுவது நல்லதல்ல. இந்தச் சகிப்பின்மையின் விளைவாகவே வாடகைக்கு ஜெயலலிதா எடுத்த விமானத்தில் ஏறி விட்ட மத்திய அமைச்சர் ஒருவர் கீழே இறக்கப்பட்டார். மற்ற மாநிலங்களிலோ, அகில இந்திய அளவிலோ இது போன்ற நிலைமை இல்லை. **வாஜ்பாய்** அவர்களும் **சோனியா காந்தி** அவர்களும்கூட கட்சிக்கு அப்பாற்பட்டு சந்தித்துப் பேசியுள்ளனர்'' இவ்வாறு தினமணி நாளிதழின் கட்டுரையாளர் **தி.சிகாமணி** என்பவர் எழுதிய இச்செய்திக் கட்டுரை அப்போது நிலவிய அரசியல் நிலைமைகளை விளக்கிடுவதாக அமைந்தது.



ரூ. 25 இலட்சம் செலவில் கிண்டியில் பெரியவர் பக்தவத்சலனாரின் நினைவிடத்தைக் கலைஞர் திறந்து வைத்தார்.

ஆனாலும், 21.6.1998 அன்று டெல்லியில் தொலைக்காட்சி பேட்டி ஒன்றில், மத்திய உள்துறை அமைச்சர் **அத்வானி** அவர்கள், **"தி.மு.க. அரசு கலைப்பு இல்லை"** என்று மீண்டும் திட்டவட்டமாக அறிவித்தார்.

அதற்கு அடுத்த இரண்டு நாட்களில்-அதாவது 23 ஆம் தேதியன்று 13 பக்கங்களில் ஜெயலலிதா மத்திய உள்துறை அமைச்சராக அப்போதிருந்த பா.ஜ.க.வின் பெருந் தலைவர்களில் ஒருவரான அத்வானி அவர்களை அர்ச்சனை செய்தார். அத்வானி அவர்களுக்கு ஜெயலலிதா சூட்டிய புகழாரங்களில் சிலவற்றை இப்போது நினைவுபடுத்துவது, அந்தக் கட்சியிலே இப்போது உள்ளவர்கள் அறிந்துகொள்ள உதவியாக இருக்கும்.

"ஆசியாவிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவுக்கு தேசப் பாதுகாப்பில் அக்கறை இல்லாத இப்படிப் பட்ட ஒருவர் உள்துறை அமைச்சராகக் கிடைத்திருக்கிறாரே என்ற வேதனைதான் ஏற்படுகிறது. பல பிரச்சினைகளை நினைவில் வைத்திருக்கும் பா.ஜ.க. தலைமை குறிப்பிட்ட சிலவற்றில் மட்டும் நினைவிழந்து **(செலக்டிவ் அம்னீஷியா)** பாதிக்கப்பட்டிருப்பது துரதிர்ஷ்டவசமானது."

- இவ்வாறு விமர்சனம் செய்ததோடு திருப்தி அடையாமல், அ.தி.மு.க.வினர் ஊருக்கு ஊர் வாஜ்பாய், அத்வானி



கலைஞர் திறந்து வைத்த பக்தவத்சலனாரின் சிலை அருகே சரோஜினி வரதப்பன், ஜெயந்தி நடராஜன்

ஆகியோரின் உருவ பொம்மைகளைக் கொளுத்துகின்ற பணியிலும் ஈடுபட்டனர். செய்தியாளர்கள் என்னிடம் அது பற்றிக் கேட்டபோது, ''ஜெயலலிதாவின் இலட்சியமே தி.மு.க.அரசை டிஸ்மிஸ் செய்ய வேண்டும் என்பதுதான். அதற்குக் காரணம் தி.மு.க. அரசை டிஸ்மிஸ் செய்தால், தன் மீதுள்ள பல்லாயிரம் கோடி ரூபாய் ஊழல் வழக்குகள் டிஸ்மிஸ் ஆகிவிடும் என்பதுதான். மாநில அரசு தொடுத்த வழக்குகள் மாத்திரமல்ல-மத்திய அரசு மூலமும் சில அன்னியச் செலாவணி வழக்குகள் அவர்மீது இருக்கின்றன. அந்த வழக்குகளும் சரி-மாநில அரசு வழக்குகளும் சரி-தி.மு.க. அரசு டிஸ்மிஸ் மூலம் தன்னை விட்டு வேகமாக விலகிவிடும் என்று ஜெயலலிதா கனவு கண்டு கொண்டிருக்கிறார். அதனால்தான் டிஸ்மிஸ், டிஸ்மிஸ் என்று ஒவ்வொரு நாளும் உச்சரித்துக்கொண்டிருக்கிறார். அதற்கு இணங்காதவர்களை எல்லாம் கொடூரமான வார்த்தைகளால் தாக்கி வெளிப் படையாக அறிக்கை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்'' என்று கூறினேன்.

★ ★ ★

நெருக்கடியான அந்த அரசியல் சூழ்நிலையில் பா.ஜ.க. கூட்டணிக்கட்சிகளின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் **27.6.1998** அன்று டெல்லியில் நடைபெற்றது. கூட்டணிக் கட்சிகளில் ஒருவரான ஜெயலலிதா மட்டும் அந்தக் கூட்டத்தைப் புறக்கணித்தார்.

3.7.1998 தேதிய ***''தினமணி''*** நாளேடு, ***''தமிழகத்துக்குத் தலைகுனிவு''*** என்ற தலைப்பில் எழுதிய தலையங்கத்தில்-

''பா.ஜ.க.கூட்டணி அரசில் நீடிப்பதா-இல்லையா என்பதை முடிவெடுப்பதில் சர்வ அதிகாரம் படைத்த அ.தி.மு.க. பொதுச்செயலர் ஜெயலலிதா காட்டும் ஊசலாட்டம்-திருப்பங்கள் நிறைந்த திரைப்படத்தைப் பார்ப்பதுபோல உள்ளது. அவரது மனப்போக்கைத் தோழமைக் கட்சித் தலைவர்களாலேயே அறிந்துகொள்ள முடியவில்லை. ஒளிவு மறைவின்றி இருக்க வேண்டிய கூட்டணி விவகாரங்கள் அனைத்துமே மூடு மந்திரமாக இருப்பது வருந்தத்தக்கது. தனது




கட்சியின் தேர்தல் அறிக்கையையே அலட்சியப்படுத்தும் வகையில்தான் ஜெயலலிதாவின் நிர்ப்பந்த தந்திரங்கள் அமைந்திருக்கின்றன. ஆட்சி நடத்துவதைவிட இவரைச் சமாளிப்பதில்தான் பா.ஜ.க. தலைவர்கள் அதிகக் கவனம் செலுத்தி வருகிறார்கள். தி.மு.க. ஆட்சியைக் கலைக்கும் தனது ஓர் அம்சத் திட்டத்தை நிறைவேற்றும் நோக்கத்துடன், அடாத செயல்கள் அனைத்தையும் கையாளுகிறார், ஜெயலலிதா. மத்திய அரசை நிலைகுலைய வைப்பதே அ.தி.மு.க.வின் கடந்த மூன்று மாத கால சாதனையாக இருக்கிறது. ஜெயலலிதாவின் திரைமறைவு நாடகங்களால் தமிழகத்துக்குத் தலைகுனிவு ஏற்பட்டு விட்டது. தங்களுக்கு வாக்களித்த பாவத்துக்காகத் தமிழக மக்களை இனி மேலும் கேவலப்படுத்தக் கூடாது'' என்று எழுதியிருந்தது.

15.7.1998 அன்று **''ஸ்டேட்ஸ்மேன்''** ஆங்கில நாளேடு வெளியிட்ட செய்தியில், ''மத்திய அரசுடன் ஜெயலலிதா செய்து கொண்டுள்ள தற்காலிக சமாதான உடன்பாட்டைத் தொடர்ந்து, அவர்மீது உள்ள வருமான வரி மற்றும் இதர வழக்குகளிலிருந்து அவரை விடுவிக்க வாஜ்பாய் அரசு வழிவகைகளை மேற்கொண்டுள்ளது. ஜெயலலிதாவுக்கு எதிரான வழக்குகளை - மேற்பார்வையிட்டு வந்த ஆணையாளர் **எஸ்.சி.ஜாதவ்** மும்பையில் சிறந்த பதவி எனக்கருதப்படும் ஒரு பதவிக்கு மாற்றப்பட்டார். அவருடைய பதவியை **கே.கோபாலன்** என்பவர் ஏற்றுக்கொண்டார். நேர்மையுடன் செயல்படக் கூடியவரான **பி.கே.ஸ்ரீதரன்** வேறு ஒரு முக்கிய பொறுப்புக்கு மாற்றப்பட்டார். அவரது இடத்திற்கு **என்.பி.திரிபாதி** என்பவர் நியமிக்கப்பட்டார். இப்படிப்பட்ட மாறுதல்கள் மூலம் ஜெயலலிதாவும், சசிகலாவும், அவருடைய உறவினர்களும் ஒரு தற்காலிக

விடுதலையை அடையக்கூடும் என்று வருமான வரித்துறை அதிகாரிகள் குற்றம் சாட்டினர்.


''மற்றொரு சம்பவத்தில், சசிகலாவின் அக்காள் மகனும், இந்திய ரிசர்வ் வங்கி ஊழியருமான **பாஸ்கரனின்** வங்கி லாக்கரை உடைத்து, வெளி நாட்டு முத்திரையுடன் கூடிய 80 தங்க பிஸ்கெட்டுகளைக் கைப்பற்றிய ''அமலாக்க இயக்குநரகம்'' டெல்லிக்கு அழைக்கப்பட்டு, தற்காலிகப் பணியிலிருந்து ஒதுங்கி இருக்கும்படி கூறப்பட்டுள்ளார்.



கலைஞரின் பவளவிழா நிகழ்ச்சியில் வாழ்த்து கூறிய இல.கணேசனை, ''கருணாநிதியின் அடிவருடி - காவடி தூக்குபவர் - சாமரம் வீசுபவர் - துதிபாடி - துரோகி'' என்று தூற்றினார், ஜெயலலிதா

''ஜெயலலிதாவைச் சமாதானப் படுத்தியதின் மூலம் பா.ஜ.க அரசு தனக்குத் தேவையான ஆதரவைப் பெற்றது. அதற்குப் பதிலாக தமிழ் நாட்டில் தி.மு.க. அரசைக் கலைக்க வேண்டும் என்ற கோரிக்கையைத் தற்காலிகமாக நிறுத்திக் கொண்டுள்ளனர்'' என்று எழுதியிருந்தது.

21.7.1998 தேசிய ***''எகனாமிக் டைம்ஸ்''*** நாளேடு எழுதிய கட்டுரை ஒன்றில் ''பா.ஜ.க., அ.தி.மு.க., இடையிலான மோதல், ஜெயலலிதா கோரியபடி முக்கிய அதிகாரிகள் மாற்றங்களுக்கு பா.ஜ.க ஒப்புக்கொண்டதன் மூலம் தீர்க்கப்பட்டுள்ளது. மத்திய வருவாய்த் துறைச் செயலாளர் **என்.கே.சிங்** மற்றும் அமலாக்கல் இயக்குநரகத் தலைவர் ஆகியோரை நீக்க அ.தி.மு.க. தலைவிக்கும் பிரதமரின் தூதர்களுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது முடிவு செய்யப்பட்டது. வருவாய்த் துறை செயலாளர் நீக்கப்படக் கூடிய நேரம் இன்னமும் தெளிவாகத் தெரியவில்லை என்றாலும், அந்த உயர்ந்த பதவியில் அவர் தொடர்ந்து நீடிப்பதை பொறுத்துக்கொள்ள முடியாது என்று ஜெயலலிதா கூறியிருப்பதால், அவரை நீக்குவதற்கான



ஏற்பாடுகள் தயாராகி விட்டன. இது தவிர, சூழ்நிலையும் சிங்குக்கு எதிராகவே உள்ளது. பா.ஜ.க.வில் செல்வாக்கு படைத்த ஒரு பிரிவினர் நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட போது, பெட்ரோலியப் பொருட்கள் விலை உயர்வு தொடர்பாக ஏற்பட்ட குழப்பத்திற்கு என்.கே.சிங்தான் பொறுப்பு என்று சந்தேகிக்கின்றனர். ஜெயலலிதாவும் அவரை நீக்க வேண்டுமென்று மிகவும் நெருக்கடி கொடுத்து வருவதால், அரசில் சக்தி வாய்ந்த பிரிவுகள் அவருக்கு எதிராக இணைந்து உள்ளன. தன்மீதான வழக்குகளை விசாரித்து வரும் சில அதிகாரிகளை மாற்றுவதற்குத் தான் எடுத்த முயற்சிகள் வெளியானதற்கு என்.கே.சிங்தான் காரணம் என்று ஜெயலலிதா கருதுவதால் அவர்மீது வருத்தமாக இருக்கிறார். என்.கே.சிங்குக்குப் பதிலாக அவருடைய இடத்தில் **வாசுதேவனை** நியமிக்க பிரதமருடைய ஒப்புதலை ஜெயலலிதா பெற்றுவிட்டார் என்று தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.''

''முக்கிய நிதி நிறுவனங்களின் தலைவர்கள் நியமனத்திலும், அமலாக்கப்பிரிவு இயக்குநரகத் தலைவர் நியமனத்திலும் ஜெயலலிதாவின் கோரிக்கைகள் நிறைவேறவிருக்கின்றன. **பேஜ்பரூவாவின்** பதவிக் காலம் முடியவிருந்தாலும், ஜெயலலிதாவைச் சமாதானப்படுத்தப் பயன்படுமானால் அவரை மாற்றவும் அரசு கவலைப்படாது.''

''இதற்கிடையில், முக்கிய நிதி நிறுவனங்களின் முக்கிய பொறுப்புகளின் நியமனத்தில் ஜெயலலிதா தனது செல்வாக்கை பிரயோகித்து வருகிறார் என்றும் அந்த

வட்டாரங்கள் கூறியுள்ளன. ஏற்கனவே அரசில் உள்ள தனது பிரதிநிதி **ஆர்.ஜனார்த்தனம்** மூலம் பிரதமரிடம் கொடுக்கப்பட்டுள்ள ஜெயலலிதாவின் முன்னுரிமைப் பட்டியலின்படி, தன்னுடைய நியமனதாரர் **சுப்பிர மணியனை** யு.டி.ஐ. யின் தலைவர், மற்றும் நிர்வாக இயக்குநராக நியமிக்க வேண்டும் என்பதில் ஜெயலலிதா தீவிரமாக இருக்கிறார். நான்கு மாத ஆட்சியின் மீது கவிழ்ந்துள்ள நிச்சயமற்ற தன்மையைப் போக்க ஜெயலலிதாவின் கோரிக்கைகளான சுப்பிரமணியம் நியமனமும், மற்றவர்களின் நியமனமும் சாதகமான பதிலைப் பெற்றுள்ளன. இந்த அதிகாரிகளின் மாற்றங்களுக்கு **ஜஸ்வந்த் சிங்** உறுதியளித்துள்ளார்.''

இவ்வாறு அந்த ஏடு எழுதியிருந்தது.

16.8.1998 அன்று பிரதமர் மீது பகிரங்கமாக குற்றஞ்சாட்டி, ஜெயலலிதா ஓர் அறிக்கையினை ஏடுகளுக்குக் கொடுத்தார். அந்த அறிக்கையில், ''மத்திய அரசின் அமலாக்கப்பிரிவு அதிகாரி பேஜ்பரூவாவை திடீரென்று மத்திய அரசு பணிமாற்றம் செய்திருக்கிறது. இதற்கு நான்தான் காரணம் என்று பரவலாக என்மீது பழி சுமத்தப்பட்டுள்ளது. மத்திய அரசுக்கு அளிக்கப்படும் ஆதரவு தொடர வேண்டுமானால், இந்த மாற்றத்தைச் செய்தாக வேண்டும் என்று பிரதமரின் தூதுவர்களாக என்னைச் சந்திக்க வந்த **பெர்னாண்டஸ், பிரமோத் மகாஜன்** ஆகியோரிடம் நான் நிர்ப்பந்தம் செய்ததாகவும் செய்திகள் வெளியிடப் பட்டிருக்கின்றன. இது முற்றிலும் பொய்யான- உண்மைக்கு மாறான செய்தி.

''பேஜ்பரூவா அப்பதவியிலிருந்து திடீரென்று மாற்றப் பட்டது, அந்த இலாகா பொறுப்பை வகிக்கும் அமைச்சர் கடம்பூர் **ஜனார்த்தனம்** ஒப்புதலைப் பெறாமலேயே நடைபெற்றுள்ளது. எனவே, அந்த அதிகாரியை மீண்டும் அதே இடத்தில் நியமிக்க வேண்டும் என்று பிரதமர் வாஜ்பாய்க்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். (அந்த அதிகாரியை மாற்றுவதற்கு, தான் பரிந்துரை எதையும் செய்யவில்லை என்று இந்த

அறிக்கையிலே ஒப்புக்கொண்ட ஜெயலலிதா, அந்த அதிகாரியை அதே இடத்தில் நியமிக்க வேண்டுமென்று பிரதமருக்கு கடிதமே எழுதியதாக தன் அறிக்கையிலே ஒப்புக்கொண்டிருக்கிறார். ஒரு அதிகாரியை மாற்றப்பட்ட அதே பதவியிலே நியமிக்க வேண்டுமென்று பிரதமருக்கு கடிதம் எழுதியது குற்றமா இல்லையா என்பதை வாசகர்களே புரிந்துகொள்வார்களாக) பிரபல பத்திரிகைகள் பலவற்றை வெளியிடும்-பெரிய நிறுவனத்தின் உரிமையாளர்கள் மீது பல 'பெரா' வழக்குகள் உள்ளன. பேஜ்பரூவா அந்த வழக்குகளைத் தீவிரப்படுத்தி அடிக்கடி அவர்களைக் கைது செய்யவும் வைத்துள்ளார். அந்தப் பத்திரிகை உரிமையாளர்கள் பேஜ்பரூவாவைப் பதவி மாற்றம் செய்வதற்காகப் பிரதமருக்கு நெருக்கமானவர்களுக்கு பெரிய அளவில் பணம் கொடுத்துள்ளனர். இச்சந்தர்ப்பம் அவர்களது எண்ணத்தை ஈடேற்றிக் கொள்வதற்குச் சாதகமாக அமைந்துவிட்டது. எனவே யாரோ சிலரை திருப்தி செய்வதற்காகப் பிரதமரைச் சுற்றி இருப்பவர்கள், யாரிடமோ கையூட்டுப் பெற்றுக் கொண்டு, இந்நடவடிக்கைகளை எடுத்துவிட்டு என்னைப் பலிகடா ஆக்க முயற்சித்துளதை வன்மையாகக் கண்டிக்கிறேன்'' என்று எழுதியிருந்தார்.

ஜெயலலிதாவின் இந்த அறிக்கையை அதே நாளில் மத்திய அரசு மறுத்து, அந்தக் குற்றச்சாட்டு துரதிருஷ்டவசமானது-ஆதாரமற்றது என்றெல்லாம் தெரிவித்திருந்தது. பிரதமர் வாஜ்பாய் அவர்களே ஜெயலலிதாவிற்கு எழுதிய கடிதத்தில், ''உங்களுடைய குற்றச்சாட்டை அறிந்து கடும் அதிர்ச்சி அடைந்தேன். உங்கள் குற்றச்சாட்டுக்கான ஆதாரத்தை அளித்தால், உயர்நிலை விசாரணைக்கு உத்தரவிட்டு, தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும், கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்'' என்று கூறியிருந்தார்.

இந்த நிலையில், செய்தியாளர்கள் என்னைக் கண்டு பேஜ்பரூவா மாறுதலையொட்டி பிரதமர் மீதே ஜெயலலிதா குற்றஞ்சாட்டியிருப்பது பற்றி என் கருத்தைக் கேட்டார்கள். அதற்கு நான் ''பிரதமர் மீதே பயங்கரமான ஊழல்


திமுக அரசு கலைப்பு இல்லை: அத்வானி

புதுதில்லி, ஜூன் 21— தில்லி பாதையில் நீங்க மும் என்னுடைய மாநில அரசையும் கும் எண்ணம் பாஜக இல்லை; எனவே தேவின் நிபந்தன வாங்து நிமுக அ மைச்சரவ

சட்டம்-ஒழுங்கு நிலைமையை மதிப்பீடு செய்வதற்காக ஒரு மாநிலத்துக்கும் குழுவை அனுப்பிவைக்க அரசுக்கு அதிகாரம் உள்ளது. அரசியல் சட்டத்தில் 355-வது விதி இதற்கான வழிவகை துள்ளது. எனவே தமிழ்ப் பிரச்சனை பேசித் வங்கம் மூன்று மாநிலங்களுக் லையில் நடை

வேண்டிய பணிகள் உள் வாட்சியினருக்கு துய ரியை ஏற்படுத்த பாரத பட்டு வருகிற பெட்ரோ நி ய மை ட இடைப்பே தி பெட்ரோல்

குற்றச்சாட்டை ஜெயலலிதா சொல்லியிருக்கிறார். அதற்குப் பிரதமர் விளக்கம் கொடுத்திருப்பதாகப் பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளது. மேலும் என்ன நடக்கும் என்பதை கவனித்துக்கொண்டிருக்கிறேன். தற்போது மேலும் அதுபற்றி ஒன்றும் சொல்ல முடியாது'' என்று கூறினேன்.

இதற்கிடையே பிரதமரின் முதன்மைச் செயலாளர் எழுதிய கடிதத்துக்கு - ஜெயலலிதா தனது கட்சி அலுவலகத்தில் உள்ள ஒரு செயலாளரைக் கொண்டு பதில் எழுதச் செய்தார்.

''பா.ஜ.க.வின் மூத்த தலைவர்களில் ஒருவரும், மாநிலங்களவை உறுப்பினருமான பிரமோத் மகாஜன் ஜெயலலிதாவிற்கு எழுதிய கடிதத்தில்-ஜெயலலிதா கூறிய குற்றச்சாட்டில் மறைமுகமாக தன்னைப் பற்றித்தான் எழுதியிருப்பதாகவும், தன்மீது குற்றச்சாட்டு என்றால் அதனை வெளிப்படையாகத் தெரிவித்தால் சட்டப்பூர்வமாக நடவடிக்கை எடுக்க உதவியாக இருக்கும் என்றும், மாறாக கண்ணாமூச்சி ஆடவேண்டாம்-என்றும் தெரிவித்தார்.


இந்தச் சூழ்நிலையில் மூத்த அதிகாரியான பேஜ்பரூவாவை மீண்டும் செயலாக்கப் பிரிவு இயக்குநராக ஜெயலலிதா கேட்டுக்கொண்டவாறே, மத்திய அரசு *9.9.1998* இல் நியமித்தது. அதன் மூலம் *13.8.1998* அன்று பேஜ்பரூவாவை

அந்தப் பதவியிலிருந்து இடமாற்றம் செய்து பிறப்பித்த உத்தரவை என்ன காரணத்தாலோ அரசு ரத்து செய்தது.

★ ★ ★

மத்தியில் ஆட்சி புரிந்த பா.ஜ.க. விற்கும் அதன் தோழமைக்கட்சியான அ.தி.மு.க.விற்கும் இடையே இந்த கண்ணாமூச்சி விளையாட்டு நடந்து கொண்டிருந்த நேரத்தில், தமிழகத்தில், சென்னையில், திரு.**எம்.ஜி.ஆர்.** அவர்களின் நினைவிடத்தை புதுப்பிக்கச் செய்து, எம்.ஜி.ஆரின் மார்பளவுச் சிலை ஒன்றையும் நிறுவி, கழக ஆட்சியில் அதனை நான் திறந்து வைத்ததைப் பொறுத்துக் கொள்ள முடியாமல், எம்.ஜி.ஆரின் விசுவாசிகளைக் கவருவதற்காகத்தான் நான் சிலை திறந்து வைத்தேன் என்று வார இதழ் ஒன்று எழுதியது. அதற்கு அப்போதே நான் பதில் அளித்தேன்.

''1989 ஆம் ஆண்டு தி.மு.கழக ஆட்சி அமைந்தவுடன், எம்.ஜி.ஆர். கழகத்தின் தலைவர் நண்பர் **ஆர்.எம்.வீரப்பன்** அவர்கள் எனக்கொரு கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தில் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகத் தொடக்க விழா நிகழ்ச்சி - எம்.ஜி.ஆர் அவர்களின் திடீர் மறைவு காரணமாக ஒத்தி வைக்கப்பட்டுவிட்டது. அந்தப் பல்கலைக்கழகத்தின் தொடக்க விழாவை உங்கள் அரசு முன்நின்று நடத்த வேண்டுமென்று அதிலே குறிப்பிட்டிருந்தார். எந்த விதமான தயக்கமும் இல்லாமல் டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத் தொடக்க விழாவை, அன்றைய குடியரசுத் தலைவராக இருந்த **ஆர்.வெங்கட்ராமன்** அவர்களை அழைத்து பல்கலைக்கழக நூற்றாண்டுவிழா மண்டபத்திலே நான் நடத்தினேனே, அது எம்.ஜி.ஆரின் விசுவாசிகளைக் கவருவதற்காகத் தான் செய்யப்பட்டதா?'' என்றும்-



''அறந்தாங்கி நகரில் எம்.ஜி.ஆர். சிலையை நிறுவி, அதனை நான் திறந்து வைக்க வேண்டுமென்று அ.தி.மு.கவின் மற்றொரு அணியின் பொதுச்செயலாளராக இருந்த திருநாவுக்கரசர் என்னைக் கேட்டுக்கொண்ட போது, நான் அதனையேற்று அந்த விழாவிலே கலந்து கொண்டதும், எம்.ஜி.ஆரின் தொண்டர்களைக் கவருவதற்காகத்தானா?'' என்றும் கேட்டு, நான் **'முரசொலி'** யில் எழுதினேன்.

1996ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் தி.மு.கழகம் வெற்றி பெற்று. நான் நான்காவது முறையாகப் பொறுப்பேற்ற போது- ஜெயலலிதா ஆட்சியில் **ஆர்.எம்.வீரப்பன்,** இலட்சிய நடிகர் **எஸ்.எஸ்.ஆர்.** மற்றும் திரைப்பட உலகத்தினர் எவ்வளவோ வற்புறுத்திக் கேட்டும் தமிழக அரசின் திரைப்பட நகருக்கு எம்.ஜி.ஆர் பெயரை வைக்க மறுத்து, தனது பெயரையே ''**ஜெயலலிதா பிலிம் சிட்டி**'' என்று வைத்துக்கொண்டதை, அறிக்கைகள் மூலம் எடுத்துக்கூறி, அந்தத் திரைப்படநகருக்கு எம்.ஜி.ஆர். பெயரை சூட்ட வேண்டும் என்று கோரியதை ஏற்றுக்கொண்டு, உடனடியாக **''எம்.ஜி.ஆர். திரைப்பட நகர்''** என்று பெயர் வைத்ததையும் அந்த வாரப்பத்திரிகையாளர் வசதியாக மறந்துவிட்டார். இப்போது நான் குறிப்பிட்ட எந்த நிகழ்வும் தேர்தல் நேரத்தில் நடைபெற்றதல்ல; எம்.ஜி.ஆர். ரசிகர்களை நான் வயப்படுத்திக் கொள்வதற்காக நடைபெற்றதும் அல்ல.

அது மாத்திரமல்ல எம்.ஜி.ஆர். நினைவிடத்தின் முகப்பிலே எம்.ஜி.ஆர். சிலையை அப்போது நான் வைத்ததற்கு வேறு ஒரு காரணமும் உண்டு. நாத்திகம் ராமசாமி அவர்கள் என்னைச் சந்தித்து, ''கிண்டி காந்தி மண்டபத்தில் காந்தி அடிகளின் மார்பளவுச் சிலை அதன் முகப்பிலே வைக்கப்பட்டுள்ளது- கிண்டி **ராஜாஜி** நினைவு மண்டபத்தில் ராஜாஜியின் மார்பளவுச் சிலையை வைத்துள்ளீர்கள் - அதைப்போல காமராஜர் நினைவு மண்டப முகப்பிலும் காமராஜர் சிலையை வைக்க வேண்டும்'' என்று கோரிக்கை வைத்தார்.

அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட போது, ''காந்தியடிகள் மார்பளவுச் சிலை காந்திமண்டபம் முகப்பில்

இருப்பதுபோல - ராஜாஜி நினைவு மண்டபத்தில் ராஜாஜியின் மார்பளவுச் சிலை இருப்பதுபோல -காமராஜரின் நினைவு மண்டப முகப்பிலும் அவரது மார்பளவுச் சிலை வைக்கப்படும். அதைப்போலவே அண்ணா சதுக்கத்து முகப்பிலும், எம்.ஜி.ஆர். சதுக்கத்து முகப்பிலும் **அண்ணா** சிலையும், **எம்.ஜி.ஆர்.** சிலையும் முறையே வைக்கப்படும்'' என்று கூறி, அந்தச்செய்தி ஏடுகளிலும் வெளிவந்தது.

அறிவித்தவாறே, ***1997*** அக்டோபர் 2ஆம் தேதியன்று, காமராஜர் நினைவு மண்டபத்தில் அவரது மார்பளவுச் சிலையை நான் திறந்து வைத்தேன். இந்த மூன்று சிலைகளும் அவரவர்களது நினைவிடங்களின் முகப்பில் அவர்களது நினைவு நாளன்று திறந்து வைக்கப்படும் என்று அறிவித்தது, நாடாளுமன்றத் தேர்தல் வருமென்று அறிவிக்கப்பட்ட காலத்திலே அல்ல என்பதையும், அதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பே நான் அறிவித்தவை என்பதையும் அப்போதே நான் அந்த வார இதழ் ஆசிரியருக்கு பதிலாகத் தெரிவித்தேன்.

சிலைபற்றி எழுதுகின்ற இந்த நேரத்தில் என் நினைவிலே உள்ள வேறு இரண்டு சிலைகளைப் பற்றியும் நான் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும். அதிலே ஒன்று- *1976*க்கு முன்பு கழக ஆட்சியில் நான் முதல்வர் பொறுப்பை ஏற்றிருந்தபோது- கோவை மாநகரில் அண்ணாவின் வெண்கலச் சிலை ஒன்றை முக்கியமான ஓர் இடத்தில் திறந்து வைத்தேன். அந்தச் சிலை ஜெயலலிதாவின் ஆட்சிக் காலத்தில், நள்ளிரவில் லாரி ஒன்று மோதி உடைந்து விட்டது. (ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில் இவ்வாறு நள்ளிரவில் லாரிகள் சிலைகள் மீது மோதி இடித்ததற்கு வேறு சில சான்றுகளும் உண்டு) கோவையில் சிலையிருந்த இடத்திலே வேறோரு சிலை வைக்க கழகத்தினர் முயற்சி மேற்கொண்டு அரசிடம் அனுமதி கோரினர். சிலையும் தயாராகி விட்டது. பல மாதங்கள் ஆனபோதிலும், ஜெயலலிதா அரசு அந்தச் சிலையை வைக்க அனுமதி கொடுக்கவில்லை. அதன் பின்னர் அந்தச் சிலையை வைப்பதற்காக கோவை மாநகரில் என்னுடைய தலைமையில் போராட்டம் ஒன்று நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்ட பின்னர், ஜெயலலிதா அரசு இறங்கி வந்து

-அப்போதும்கூட அந்த இடத்திலே சிலையை வைக்கக் கூடாது- வேறொரு இடத்திலே தான் வைக்கவேண்டு மென்று நிபந்தனை விதித்து, அதனையும் தி.மு.கழகம் ஏற்றுக் கொண்டு, வேறொரு இடத்தில் அந்தச் சிலையை நான் திறந்து வைத்தேன். இது ஒரு சிலைக் கதை.




மற்றொரு சிலை-திருநெல்வேலியில் எம்.ஜி.ஆர். சிலை வைப்பதற்காக மாவட்ட அரசு அதிகாரிகளிடம், அ.தி.மு.க. வினர் அணுகி, மூன்று இடங்களைக் குறிப்பிட்டுக் கேட்டுக்கொண்டனர். மூன்று இடங்களுமே போக்குவரத்து நெரிசல் மிகுந்த இடங்கள். எனவே அந்த இடங்களைத் தர மறுத்து கோப்பு என் கையெழுத்துக்காக வந்தது. நான் அந்தக் கோப்பிலே கூறப்பட்டிருந்த கருத்தை ஏற்றுக் கொள்ளாமல், ''அந்த மூன்று இடங்களில் எந்தவொரு இடத்தில் போக்குவரத்து சற்று குறைவாக இருக்கின்றதோ, அந்த இடத்திலே சிலையினை வைக்க அனுமதி கொடுக்கலாம்'' என்று நானே ஆணை பிறப்பித்தேன். நெல்லை மாநகரில், மிக முக்கியமான பகுதியில் போக்குவரத்து போலீசாருக்காக வைக்கப்பட்டிருந்த குடையை இடித்து அகற்றி விட்டு, அந்த இடத்திலே எம்.ஜி.ஆர். சிலை வைக்க அனுமதி கொடுத்தேன் என்பது வரலாறு. சிலை வைக்க அனுமதி கொடுத்ததில் தி.மு.க. அரசு நடந்து கொண்ட முறைக்கும், அ.தி.மு.க. அரசு நடந்து கொண்ட முறைக்கும் கோவையும், நெல்லையும் சரியான சான்றுகள் அன்றோ?

சிலையைப் பற்றி, அதுவும் எம்.ஜி.ஆர். சிலையைப் பற்றி எழுதுகின்ற நேரத்தில், இதே **1998**ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் ஈரோடு மாவட்டம் கோபிச்செட்டிப்பாளையத்தில், எம்.ஜி.ஆர். கழகத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விழாவில், எம்.ஜி.ஆர். கழகத் தலைவர் ஆர்.எம்.வீரப்பன்

தலைமையில், த.மா.கா. தலைவர் மூப்பனார் அவர்கள் முன்னிலையில், எம்.ஜி.ஆர். அவர்களின் சிலையினை நான் திறந்து வைத்தேன். அந்த விழாவில் **ஆற்காடு வீராசாமி, துரைமுருகன், பொன்முடி, என்.கே.கே.பெரியசாமி, பொங்கலூர் பழனிசாமி, ஆர்.நல்லகண்ணு, அந்தியூர் செல்வராஜ், ஜி.பி.வெங்கிடு எம்.எல்.ஏ., வி.பி.சண்முக சுந்தரம், அப்துல் லத்தீப், என்.ஆர்.திருவேங்கடம், கள்ளிப்பட்டி மணி, ஏ.சி.சண்முகம், ஜெகதீசன், ஏ.எஸ்.தேவேந்திரன், சந்திரசேகரராஜ்** ஆகியோர் கலந்து கொண்டனர்.

அந்த விழாவில் எம்.ஜி.ஆருக்கும் எனக்கும் இடையே ஏற்பட்ட நட்பு குறித்து பல செய்திகளைப் பேசினேன். எம்.ஜி.ஆருக்கு பல விருதுகள் உண்டு என்ற போதிலும், **புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர்.** என்பது நீண்ட காலமாக தமிழகத்திலே பரவிய பெயர். அந்தப் புரட்சி நடிகர் என்ற பட்டத்தை நான்தான் அவருக்கு திருச்சியிலே வழங்கினேன் என்ற மகிழ்ச்சியும் எனக்குண்டு.

எம்.ஜி.ஆர். நடித்த **மலைக்கள்ளன்** திரைப்படத்திற்கு நான் உரையாடல் எழுதியபோது-திருச்சியிலே மறைந்த **எம்.எஸ்.மணி** நடத்திய **''ஓவியன்''** என்ற நாடகத்திற்குத்



தன்மீதுள்ள வழக்குகள் வாபஸாக, தி.மு.க. அரசை டிஸ்மிஸ் செய்ய மிரட்டினார் ஜெயலலிதா

தலைமையேற்பதற்காக நானும், முன்னிலை வகிப்பதற்காக எம்.ஜி.ஆரும் பட்சிராஜா ஸ்டுடியோவின் காரை இரவல் வாங்கிக் கொண்டு திருச்சிக்குச் சென்றோம். அந்த நாடக நிகழ்ச்சியில் கலந்து கொண்டு நாங்கள் இருவரும் பேசினோம். நான் பேசும் போது, ''எம்.ஜி.ஆர். போட்டிருப்பது தான் கதர்ச்சட்டை-உள்ளேயிருப்பது கருப்புச் சட்டை'' என்று குறிப்பிட்டு விட்டு-அந்த விழாவில்தான் புரட்சி நடிகர் என்ற பட்டத்தை அவருக்கு நான் வழங்கி, அது முதல் எம்.ஜி.ஆரின் பெயரோடு அது நீடித்து நிலைத்தது.

★ ★ ★

முன்னாள் முதல்வர், பெரியவர் எம்.பக்தவத்சலம் அவர்களுக்கு, **1997-98**ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ''அரசின் சார்பில் நினைவுச்சின்னம் அமைக்கப்படும்'' என்று அறிவித்திருந்தேன். அந்த உறுதிமொழிக்கேற்ப ரூ.25 லட்சம் செலவில் சென்னை, காந்தி மண்டப வளாகத்தில் பக்தவத்சலம் நினைவிடம் அமைப்பதற்கு **6.5.1997** அன்று அரசாணை வெளியிடப்பட்டு, சென்னை கிண்டி, காந்திமண்டப வளாகத்தில் உள்ள பெரியவர் எம்.பக்தவத்சலத்திற்கு நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டது.

13.3.1998 அன்று காலையில் அந்த நினைவுச் சின்னத்தை நான் திறந்து வைத்தேன். மேலும், அந்த நினைவிடத்தில் அமைக்கப்பட்டுள்ள பக்தவத்சலம் அவர்களின் மார்பளவு வெண்கலச் சிலையையும் திறந்து வைத்தேன். பக்தவத்சலம் அவர்களின் செல்வி சரோஜினி வரதப்பன் வரவேற்றுப் பேசினார். அந்த நிகழ்ச்சியில் மத்திய இணை அமைச்சராக அப்போதிருந்த திருமதி ஜெயந்தி நடராசன், தமிழக அமைச்சர்கள் ஆர்க்காடு வீராசாமி, துரைமுருகன், பொன்முடி, கே.என்.நேரு, முல்லைவேந்தன், ஆலடி அருணா, ரகுமான்கான், கு.பிச்சாண்டி, ஐ.பெரியசாமி, எம்.ஆர்.கே.பன்னீர்ச்செல்வம், அந்தியூர் செல்வராஜ், சமயநல்லூர் செல்வராஜ், சுரேஷ்ராஜன் ஆகியோரும், செ.குப்புசாமி எம்.பி., வி.பி.துரைசாமி எம்.பி., பீட்டர் அல்போன்ஸ் எம்.பி., ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.



கலைஞர் திறந்து வைத்த காந்தியார் சிலை

பெரியவர் பக்தவத்சலம் அவர்களின் செல்வி சரோஜினி வரதப்பன் தனது வரவேற்புரையில், ''இன்று நாம் எல்லோரும் பத்து ஆண்டுகளாக மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஒரு பெரிய காரியத்தை நமது முதல் அமைச்சர் அவர்கள், அவருடைய காலத்தில் அதைப் பூர்த்தி செய்திருக்கிறார்கள். எனக்கு வார்த்தைகளே கிடைக்கவில்லை- எப்படி நன்றி சொல்வது என்று. மிக அற்புதமாக அழகிய இந்த மண்டபத்தை மிக நல்ல எண்ணத்துடன் இங்கு உருவாக்கி உள்ளே அவர்களின் உருவச் சிலையையும் வைத்திருக் கிறார்கள். கலைஞர் கருணாநிதி அவர்களின் எத்தனையோ பெரிய சாதனைகளில் இதையும் ஒரு பெரிய சாதனையாக நான் கருதுகிறேன். முதலமைச்சர் அவர்கள் முதலில் இங்கு பேசுவதாக இல்லை. ''நீங்கள் ஒரு சில வார்த்தைகள் சொன்னால் தான் எங்களுக்கு எல்லாம் திருப்தியாக இருக்கும்'' என நான் விடுத்த வேண்டுகோளுக்கு செவிசாய்த்து, இங்கே பேச அவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்'' என்று குறிப்பிட்டார்.

அந்த நிகழ்ச்சியில் நான் பேசும்போது, ''அம்மையார் சரோஜினி வரதப்பன் அவர்கள் இந்தச் செயலை நான் செய்து முடித்தமைக்காக நன்றி கூறினார்கள். அவர்கள் உங்கள் முன்னிலையில் இந்த மேடையில் நன்றி கூறியது மாத்திரமல்ல-நன்றி கூறி எனக்கு மடலும் வரைந்திருக்கிறார். இங்கே திறப்புவிழா நிகழ்ச்சி நான் நடத்தியபோதும், என் பக்கத்திலே நின்றுகொண்டு ''நன்றி- நன்றி'' என்று அவர்களும்,



காமராஜர் சிலையினையும் கலைஞர் திறந்து வைத்தார்

நம்முடைய ஜெயந்தி நடராஜன் அவர்களும் குறிப்பிட்டார்கள். இது நான் ஆற்ற வேண்டிய கடமைகளில் ஒன்று. அதைத்தான் ஆற்றியிருக்கிறேனே அல்லாமல், கடமையை ஆற்றிவிட்டு நன்றியை எதிர்பார்ப்பது தவறு என்பதை என்னுடைய அறிவுலக ஆசான் தந்தை பெரியார் அவர்கள் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். எனவே ஆற்றிய கடமைக்காக அவர்கள் கூறியிருக்கின்ற நன்றியானது, இன்னும் பல கடமைகளை ஆற்ற வேண்டும் என்பதற்கான ஊக்கமாக நான் எடுத்துக்கொள்கிறேன். பெரியவர் பக்தவத்சலம் அவர்கள்-அவரை நான் அப்படித்தான் அழைப்பது வழக்கம்-நான் அப்படி அழைத்த காரணத்தினாலேயே பெரியவர் பக்தவத்சலம் என்பது நிலைத்த ஒன்றாக இன்றைக்கு ஆகிவிட்டது.''

''பக்தவத்சலம் அவர்களுக்கும் எனக்கும் அரசியல் ரீதியாக எத்தனையோ கருத்து மாறுபாடுகள் உண்டு. கருத்து மாறுபாடுகள்-அரசியல் வேறுபாடுகள் போன்றவைகள் எல்லாம் என்றைக்கும் நிலையாக இருந்து, மனிதர்களுக்கு மனிதர் காட்ட வேண்டிய மரியாதைக்கு இடையூறாகவோ-அல்லது குறுக்கீடாகவோ இருக்கக்கூடாது என்பதிலே நான் அழுத்தமான நம்பிக்கை கொண்டவன். அதனால்தான் எத்தனை மனமாச்சரியங்கள் கருத்து வேறுபாடுகள் ஒரு காலத்தில் இருந்தாலும்கூட அவர்களால் நாட்டிற்கு விளைந்த



ஆர்.எம்.வீரப்பன் தலைமையில், மூப்பனார் முன்னிலையில்
கலைஞர் திறந்து வைத்த எம்.ஜி.ஆர். சிலை

நன்மைகள், சமுதாயத்திற்கு விளைந்த நன்மைகள், ஆட்சிக்கு ஏற்பட்ட நன்மைகள் ஆகியவைகளை மறந்துவிட இயலாது.

''1962 ஆம் ஆண்டு நான் தமிழகச் சட்டப் பேரவையில் எதிர்க் கட்சியின் துணைத் தலைவனாக இருந்தபோது, முதலமைச்சராக இருந்த பக்தவத்சலம் அவர்களை, ''நான் பிறந்த திருக்குவளையிலே என் தாயார் பெயரால் ஒரு **தாய் சேய் நல விடுதி** அமைத்திருக்கிறேன்-அதனைத் திறந்து வைக்க வரவேண்டும்'' என்று கேட்டுக் கொண்டேன். அவர் உடனடியாக ஒத்துக் கொண்டார். விழாவிற்கு ஏற்பாடுகள் நடைபெற்றபோது, தஞ்சை மாவட்டத்திலே உள்ள காங்கிரஸ் நண்பர்கள், ''எப்படி எதிர்க்கட்சிக்காரன் கருணாநிதியின் நிகழ்ச்சிக்கு நீங்கள் வரலாம்?'' என்று அவரை கடிந்து கொண்டு கண்டனக் கடிதங்கள் அனுப்பினார்கள். நேரிலேயே அவரைச் சந்தித்து சில பேர் வரக்கூடாதென்று தடுத்தார்கள். அவர்களிடம் பக்தவத்சலம் அவர்கள், ''எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கருணாநிதி அழைத்ததால் மாத்திரமல்ல, அவருடைய பிறந்த ஊர் என்பதாலும், அதைப் பார்ப்பதற்காக நான் வருகிறேன்'' என்று பதிலளித்து விட்டு, அதற்காக கட்சிக்காரர்கள் சிலர் கறுப்புக்கொடி காட்டியதையும் பொருட்படுத்தாமல், அந்த நிகழ்ச்சியிலே வந்து கலந்து கொண்டார்கள். அவருடைய அந்தப் பாங்கு, அரசியல் பகை

உணர்ச்சிகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட ஒரு மனிதாபிமான உணர்ச்சி-மனித நேய உணர்ச்சி அனைவரிடமும் இருக்க வேண்டுமென்பதை எடுத்துக்காட்டுகின்ற ஒன்றாகும்'' என்று நான் குறிப்பிட்டேன்.

மற்றொரு நிகழ்ச்சி, மொழிப் போராட்டத்தின்போது, பாளையங்கோட்டை தனிமைச் சிறைச் சாலையிலே பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான் நான் அடைக்கப்பட்டேன். சிறையிலிருந்து வெளியே வந்ததும், பக்தவத்சலம் அவர்கள் எனக்குத் தொலைபேசி மூலமாக அழைப்பு விடுத்து, அவருடைய இல்லத்திற்கு தொலைபேசி வாயிலாக அழைத்தார். அவர் முதலமைச்சர் - நான் எதிர்க்கட்சியின் துணைத் தலைவர், இருந்தாலும் முதலமைச்சர் என்னை அவருடைய அலுவலகத்திற்குக் கூட அல்ல - அவருடைய இல்லத்திற்கே தொலைபேசி வாயிலாக அழைத்தார்.

நானும் ''அவர் தானே நாம் சிறையிலே இருக்கக் காரணம்'' என்றும் எண்ணிடவில்லை. ''அவருடைய இல்லத்திற்கு நாம் செல்வதா?'' என்று கருதிடவில்லை. நேராக அவரது அழைப்பையேற்று அவரது இல்லம் சென்றேன்.

அப்போது ''உங்களை ஏன் சிறையிலே அடைத்தேன் தெரியுமா?'' என்று நீண்ட விளக்கங்களையெல்லாம் என்னிடம் கூறினார்.

அப்போது நான் அவரிடம், ''நான் சிறைபட்டது பற்றி பரவாயில்லை - வேறு சிலர் பாதுகாப்புக் கைதிகளாக சிறையிலே இருக்கிறார்கள்-அவர்களை விடுவிக்க வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டேன். உடனடியாக அந்தப் பட்டியலை என்னிடம் கேட்டுப் பெற்று, அவர்களையெல்லாம் விடுதலை செய்தார்.

இவ்வாறு அரசியல் ரீதியாகவும், தனிப்பட்ட முறையிலும் ஒரு மனிதாபிமான உணர்வோடு வாழ்ந்த பக்தவத்சலம் அவர்களுடைய நினைவுச் சின்னம் ஒன்று அவர் அடக்கம் செய்யப்பட்ட இடத்திலேயே அமைய வேண்டுமென்ற

எண்ணத்தோடு நடைபெற்ற காரியம்தான் அது என்பதை யெல்லாம் நினைவூட்டிய தோடு, என் பேச்சை முடிக்கும் போது, ''என்னைப் பொறுத்தவரையிலே நான் தந்தை பெரியார் இடத்திலே பகுத்தறிவைக் கற்றுக் கொண்டேன்- பேரறிஞர் அண்ணா அவர்களிடம் அரசியல் பண்பாட்டைக் கற்றுக்கொண்டேன்- பக்தவத்சலம் அவர்களிடம் நிர்வாகத் திறனைக் கற்றுக் கொண்டேன்'' என்று குறிப்பிட்டேன்.

33. ஜீவாவும்-ஈ.எம்.எஸ்.ஸும்!

"இந்தியாவில் சுதந்திரக் காற்றை சுவாசிக்க முடிந்த ஒரே ஒரு இடம் தமிழ்நாடுதான்" என்று கூறினார், நம்பூதிரிபாத்

சென்னை தொலைக்காட்சியில் நான் எழுதிய *"தென்பாண்டிச் சிங்கம்" 15.3.1998* முதல் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஒளிபரப்பப்பட்டது. "தென்பாண்டிச் சிங்கம்" "குங்குமம்" வார இதழில் வெளியாகி இலட்சக் கணக்கான வாசகர்களின் பாராட்டுதலைப் பெற்றதோடு, *1989* ஆம் ஆண்டு நான் எழுதிய வரலாற்றுப் புதினமான **"தென் பாண்டிச் சிங்கம்"** சிறந்த நாவலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் ஒரு இலட்ச ரூபாய் விருதான **மாமன்னன் இராஜ இராஜன்** விருதினையும் பெற்ற புதினமாகும். இதற்கான பரிசளிப்பு விழா *25.5.1990* அன்று தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் அப்போதும் தமிழக ஆளுநராக இருந்த **சுர்ஜித்சிங் பர்னாலா** அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்தியாவின் குடியரசுத் துணைத் தலைவராக அப்போது இருந்தவரும், ஆங்கிலத்தில் தலை சிறந்த புலமை பெற்றவருமான **திரு.சங்கர்தயாள் சர்மா** அவர்கள் அந்த விழாவிலே கலந்து கொண்டு **இராஜராஜன்** விருதினையும் படைப்பிலக்கியப் பரிசாக ஒரு இலட்சம் ரூபாயையும் எனக்கு வழங்கினார். அந்த விழா பற்றியும்-அதிலே சங்கர்தயாள் சர்மா பேசியது பற்றியும், அவர் எனக்கு தன் அன்பின் அடையாளமாக அழகிய **பேனா** ஒன்றை வழங்கியது பற்றியும், அந்த நிதியினை நான் பல்கலைக்கழகத்தில்

''அன்னை அஞ்சுகம் முத்துவேலர் அறக்கட்டளை'' நிறுவுவதற்காக அளித்தது பற்றியும், **''நெஞ்சுக்கு நீதி''**யின் நான்காம் பாகத்திலே எழுதியிருந்தேன்.

200 ஆண்டுகளுக்கு முன்பு வெள்ளையர்களை எதிர்த்து நின்ற **வீரபாண்டிய கட்டபொம்மன், சின்னமருது, பெரிய மருது, பூலித்தேவன், கோபாலநாயக்கர்** வரிசையில் வரும் **வாளுக்குவேலி, பாகனேரி நாட்டுத் தலைவன்.** அந்த வாளுக்கு வேலியின் வரலாற்றைத்தான் தென்பாண்டிச் சிங்கம் என்ற பெயரில் எழுதியிருந்தேன்.

சின்னத் திரையில் ஒளிபரப்பான அந்தக் காவியத்தில், நடிகர் நாசர் வாளுக்குவேலியாக நடித்தார். மேலும் **கீதா, கோடை மழை வித்யா, வினோதினி, மௌனிகா, பாலாசிங், அமரசிகாமணி, வாத்தியார் ராமன், கம்பர் ஜெயராமன், வி.கே.ஆர். ரமணி** போன்ற திரைப்பட முகங்களும், பேராசிரியர்களான **மு.ராமசாமி, இரா.இராஜூ, அ.ராமசாமி, கூத்துப்பட்டறை பசுபதி** ஆகியோரும்



கலைஞர் தீட்டிய ''தென்பாண்டிச் சிங்கம்'' புதினத்திற்கு ராஜராஜன் விருதினை அப்போதைய குடியரசுத் துணைத் தலைவர் சங்கர் தயாள் சர்மா வழங்கினார்.



2007ஆம் ஆண்டிற்கான முரசொலி அறக்கட்டளை வழங்கிய கலைஞர் விருதுகளை வா.செ. குழந்தைசாமி, நடிகர் நெப்போலியன், வாகை சந்திரசேகர், ஜே.பி.கிருஷ்ணா ஆகியோருக்குக் கலைஞர் வழங்கினார்.

நடித்தார்கள். இசைஞானி இளையராஜா அவர்கள் அந்தத் தொடருக்கு இசை அமைத்திருந்தார்.

★ ★ ★

''முரசொலி'' அறக்கட்டளை சார்பில் தமிழ் மொழி, இலக்கியம், கலை, கலாச்சாரம் ஆகியவற்றில் சிறந்தோரை ஒவ்வொரு ஆண்டும் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு முரசொலி நிறுவனர் மற்றும் முரசொலி அறக்கட்டளை நிறுவனர் கலைஞர் பெயரால் விருதும், தலா ஒரு இலட்சம் ரூபாய் பொற்கிழியும் வழங்குவதென்று தீர்மானித்து, 1996 ஆம் ஆண்டிற்கான விருதுகள் பழம்பெரும் இயக்குநர் கிருஷ்ணன் (பஞ்சு) மற்றும் தமிழறிஞர் கவிக்கோ அப்துல் ரகுமான் ஆகிய இருவருக்கும் 1.3.1997 அன்று வழங்கப்பட்டது பற்றி நான் ஏற்கனவே இந்தத் தொடரில் குறிப்பிட்டிருக்கிறேன். அதைத் தொடர்ந்து, ஒவ்வொரு ஆண்டும் இந்த விருதுகள் யார் யாருக்கு வழங்கப்பட்டன என்ற விவரங்களையும் தொகுத்து வழங்கிட விரும்புகின்றேன்.

1997ஆம் ஆண்டிற்கான கலைஞர் விருதுகள் திரைப்பட இயக்குநர் ஏ.எஸ்.ஏ.சாமி, பத்திரிகை ஆசிரியர் சாவி, கவிஞர் ஈரோடு தமிழன்பன் ஆகியோருக்கு 13.1.1998 அன்றும்-

1998 ஆம் ஆண்டிற்கான கலைஞர் விருதுகள் கவிஞர் சுரதா, இயக்குநர் திலகம் கே.எஸ்.கோபாலகிருஷ்ணன், இயக்குநர் பாரதி ராஜா ஆகியோருக்கு 13.1.1999 அன்றும்-

1999 ஆம் ஆண்டிற்கான கலைஞர் விருதுகள் முனைவர் வ.அய்.சுப்ரமணியம், இயக்குநர் ஸ்ரீதர், ஓவியர் கோபுலு ஆகியோருக்கு 15.1.2000 அன்றும்-

2000 ஆம் ஆண்டிற்கான கலைஞர் விருதுகள் மலேசிய அமைச்சர் டத்தோ சாமிவேலு, இயக்குநர் கே.பாலச்சந்தர், கவிப்பேரரசு வைரமுத்து ஆகியோருக்கு 27.1.2001 இன்றும்-

2001ஆம் ஆண்டிற்கான கலைஞர் விருது பெருங் கவிக்கோ வா.மு.சேதுராமன், காவியக் கவிஞர் வாலி, இசைமுரசு நாகூர் ஈ.எம்.அனிபா ஆகியோருக்கு 12.1.2002 அன்றும்-

2002ஆம் ஆண்டிற்கான கலைஞர் விருதுகள் எழுத்தாளர் சு.சமுத்திரம், மணவை முஸ்தபா, கவிஞர் கா.வேழ வேந்தன் ஆகியோருக்கு 28.6.2003 அன்றும்-

2003ஆம் ஆண்டிற்கான கலைஞர் விருதுகள் டாக்டர் பி.ராமமூர்த்தி, இயக்குநர் எஸ்.பி.முத்துராமன், சு.செல்லப்பன் ஆகியோருக்கு 20.1.2004 அன்றும்-

2004ஆம் ஆண்டிற்கான கலைஞர் விருதுகள் கணபதி ஸ்தபதியார், எழுத்தாளர் கோவி.மணிசேகரன், முரசொலி சொர்ணம் ஆகியோருக்கு 28.1.2005 அன்றும்-

2005ஆம் ஆண்டிற்கான கலைஞர் விருதுகள் எழுத்தாளர் சின்னக்குத்தூசி, கவிஞர் மு.மேத்தா, ஓவியர் ஜெயராஜ் ஆகியோருக்கு 30.1.2006 அன்றும்-

2006ஆம் ஆண்டிற்கான கலைஞர் விருதுகள் எழுத்தாளர் ஜெயகாந்தன், சிலம்பொலி செல்லப்பன், நடிகை மனோரமா ஆகியோருக்கு 30.1.2007 அன்றும்-

2007ஆம் ஆண்டிற்கான கலைஞர் விருதுகள் முனைவர் வா.செ.குழந்தைசாமி, நடிகர் நெப்போலியன், ஜே.பி.கிருஷ்ணா

ஆகியோருக்கும், முரசொலிமாறன் சிறப்பு விருது வாகை சந்திரசேகருக்கும் **15.2.2008** அன்றும் தொடர்ந்து வழங்கப்பட்டுள்ளது.

★ ★ ★

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர்களின் ஒருவரும், என்னிடம் மிகுந்த அபிமானம் கொண்டவருமான தோழர் **ஈ.எம்.எஸ்.நம்பூதிரிபாத்** சலியாத படிப்பாளி-எழுத்தாளர். மார்க்சிஸ்ட் கட்சியின் வார ஏடான **''பீப்பிள்ஸ் டெமாக்ரசி''** ஆசிரியராகவும் அவர் பணியாற்றினார். **''வேதங்களின் நாடு''**, **''இந்தியக் கம்யூனிஸ்டின் நினைவலைகள்''** என்ற தனது சுயசரிதை உட்பட பல்வேறு புத்தகங்களை எழுதியுள்ளார். பண்டித ஜவகர்லால் நேரு குறித்து **எஸ்.கோபால்** என்பவர் எழுதிய வாழ்க்கை வரலாற்றை அடிப்படையாக வைத்து **''நேரு கொள்கையும் நடைமுறையும்''** என்ற புத்தகம் எழுதியுள்ளார்.

அரசியல் வாழ்வில் பல ஆண்டுகளைச் சிறையிலும், தலைமறைவு வாழ்க்கையிலும் கழித்தவர் நம்பூதிரிபாத், இந்திய அரசியல் வானில் எந்தக் குற்றச்சாட்டுக்கும் உள்ளாகாத அப்பழுக்கற்ற தலைவராக நம்பூதிரிபாத் திகழ்ந்தார். இறுதிக்காலம் வரை **''தேசாபிமானி''**,

முரசொலி அறக்கட்டளை வழங்கிய கலைஞர் விருதுபெற்ற மற்ற கலைஞர்கள்



கவிப்பேரரசு வைரமுத்து



ஆசிரியர் சாவி



இயக்குநர் ஸ்ரீதர்


"ப்ரண்ட்லைன்" பத்திரிகைகளில் தொடர்ந்து எழுதி வந்தார். அவருக்கு 2 மகன்கள்-2 மகள்கள் உண்டு.

20.3.1998 அன்று, தமிழகச் சட்டப் பேரவையில் ஈ.எம்.எஸ்.நம்பூதிரிபாத் அவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கும் தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

இரங்கல் தீர்மானத்தில் நான் பேசும்போது, "ஈ.எம்.எஸ். என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்படுகின்ற அந்த மூன்று எழுத்துக்களுக்குச் சொந்தக்காரராக விளங்கிய தலைசிறந்த மார்க்சியவாதியும், புரட்சியாளரும், இந்தியாவின் மூத்த அரசியல் தலைவர்களுள் ஒருவருமான ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாத் அவர்களுடைய மறைவுச் செய்தி எனக்குக் கிடைத்தபோது நான் அதிர்ச்சியுற்றேன்.

"ஈ.எம்.எஸ். அவர்கள் இந்தியத் தொழிலாளர்கள் இயக்கத்தினுடைய இதயங்களில் எல்லாம் இடம் பெற்று விளங்கியவர். இந்தியாவிலேயே கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே ஜனநாயக ரீதியிலே முதன் முதலாக ஒரு அரசை நிறுவிய பெருமை அவருக்கு உண்டு. அதேபோல அரசியல் சட்டத்தினுடைய 356ஆவது பிரிவின் தாக்குதலுக்கு ஆளான பெருமையும் அவருக்கு உண்டு. அதிலே சோர்ந்து விடாமல், அடுத்து பல தேர்தல்களில் ஈடுபட்டு, ஒரு ஐக்கிய முன்னணியைக் கேரள மாநில அளவிலே உருவாக்கி, 1969 ஆம் ஆண்டு வரையிலே கேரள முதலமைச்சராகத் திகழ்ந்தார்கள்.


கணபதி ஸ்தபதி


டாக்டர் பி.ராமமூர்த்தி


உவமைக் கவிஞர் சுரதா

அந்தக் கால கட்டத்திலேதான், தமிழக அரசோடு ஒத்துழைத்து உருவாக்கப்பட்ட, பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்திலேயிருந்த சில பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு, நான் கேரளாவுக்குச் சென்று, திருவனந்த புரத்தில் அவரோடு ஒரு நாள் முழுதும் விவாதிக்கின்ற வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அந்தப் பிரச்சினையில் அதிகாரிகளோடு உட்கார்ந்து கலந்து பேசிய போது, எந்த முடிவையும் எங்களால் எடுக்க முடியவில்லை. நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்த திரு.ஈ.எம்.எஸ். அவர்கள், திடீரென்று என்னைப் பார்த்து, ''கொஞ்ச நேரம் தனியாகப் பேசினால் பிரச்சினை முடிந்து விடும். இரண்டு அரசுகளுடைய அதிகாரிகளையும் தயவு செய்து வெளியே இருக்கச் சொல்லிவிட்டு நாம் பேசுவோமா?'' என்றார். ''சரி'' என்று ஒப்புக்கொண்டேன். இருவரும் பேசினோம்-இரண்டு நிமிடங்களில் சுமுகமாக முடிவுற்றது பரம்பிக்குளம்-ஆளியாறு பிரச்சினை.

ஒரே நேரத்தில் இரண்டு மாநில முதலமைச்சர்கள் என்கிற முறையிலே மாத்திரமல்லாமல், எதிர்க்கட்சிகளுடைய தலைவர்கள் என்கின்ற முறையிலேகூட எங்கள் இருவரிடையே நீண்ட காலப் பழக்கம் உண்டு.

1975 ஆம் ஆண்டு நெருக்கடி நிலை அமலில் இருந்தபோது, சென்னையிலே நானும், ஈ.எம்.எஸ். அவர்களும் ஒரு கூட்டத்திலே பேசினோம். அப்போது அவர் பேசும்போது, ''நான் ஏன் இங்கே வந்து கருணாநிதியுடன் கூட்டத்திலே



இயக்குநர் கே.எஸ். கோபாலகிருஷ்ணன்



டத்தோ சாமிவேலு




இயக்குனர் கிருஷ்ணன் (பஞ்சு)

கலந்து கொள்கிறேன் என்றால், இந்தியாவிலே சுதந்திரக் காற்றை சுவாசிக்கக்கூடிய ஒரே இடம் இப்போது தமிழ்நாடாகத்தான் இருக்கிறது-எனவேதான் அந்தச் சுதந்திரக் காற்றை சுவாசிக்க தமிழகத்திற்கு வந்திருக்கிறேன்'' என்று அன்றைக்கு தன் வேதனையை வெளிப்படுத்தினார் என்பது போன்ற அவரது நினைவுகளை யெல்லாம் எடுத்துக் கூறினேன்.

★ ★ ★

19.4.1998 அன்று முக்கூடல் சங்கமிக்கும் குமரிமுனையில் அறிவுக் கடல் திருவள்ளுவருக்கு தி.மு.கழக அரசு, விண்முட்ட 133 அடி உயரத்தில் நிர்மாணித்து வந்த சிலை அமைக்கும் பணியினை நேரில் பார்வையிடுவதற்காகச் சென்றிருந்தேன். சிலை அமைக்கும் பணி குறித்த விபரங்களையும், அதன் நுட்பங்களையும், அந்தப் பணியை மேற்கொண்டு வெற்றிகரமாகச் செய்த அருமை நண்பர் **கணபதி ஸ்தபதி** அவர்கள் என்னிடம் கூறினார். என்னுடன் அந்தப் பயணத்தில் அமைச்சர் **ஆற்காடு வீராசாமி, துரைமுருகன், தா.கிருட்டிணன், ஆலடி அருணா, முல்லைவேந்தன், ரகுமான்கான், சமயநல்லூர் செல்வராஜ், சுரேஷ்ராஜன்** மற்றும் கழக அமைப்புச் செயலாளராக இருந்த **பொன்.முத்துராமலிங்கம், டாக்டர் ஆல்பன்** எம்.எல்.ஏ., ஆகியோரும் வந்திருந்தனர்.

★ ★ ★



கவிஞர்
வாலி




இயக்குநர்
பாரதிராஜா



நடிகை மனோரமா



இயக்குநர்
கே.பாலசந்தர்




எழுத்தாளர்
சின்னக்குத்தூசி



இசைமுரசு
நாகூர் ஹனிபா

அதே நாளில், நாகர்கோயிலில் கழக அரசு சார்பில் கட்டப்பட்டிருந்த பொதுவுடைமை வீரர் **ப.ஜீவானந்தம்** அவர்களின் நினைவு மண்டபத்தினைத் திறந்து வைத்தும்-அந்த மண்டபத்திற்குள்ளே வைக்கப்பட்டிருந்த ஜீவானந்தம் அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்தும் வணங்கினேன்.


நான் எனது வாழ்க்கையில் பேரறிஞர் அண்ணா அவர்களுக்குத் தம்பியாகி, அவரை **''அண்ணா, அண்ணா''** என்று அழைத்து மகிழ்ந்தவன் என்ற போதிலும்,விரல்விட்டு எண்ணத்தக்க வேறு சிலரைத்தான் அண்ணன் என்று அழைத்துப் பழக்கப்பட்டவன். குறிப்பாக தளபதி **அழகிரி** அவர்களை எப்படி அண்ணன் என்று அழைப்பேனோ, அதைப்போலவே பொதுவுடைமை வீரர் ஜீவா அவர்களையும் அண்ணன் என்று அழைப்பதுதான் வழக்கம். நாகர்கோவிலில்




பெருங்கவிக்கோ
வா.மு.சேதுராமன்




இயக்குநர்
ஏ.எஸ்.ஏ.சாமி




கவிஞர்
ஈரோடு தமிழன்பன்



எழுத்தாளர்
கோவி. மணிசேகரன்




ஓவியர்
சு.செல்லப்பன்




கவிக்கோ
அப்துல் ரகுமான்

ஜீவானந்தம் அவர்கள் பெயரால் ஒரு மணிமண்டபம் அமைய வேண்டுமென்று என்னிடத்தில் தனியாகவும், பேரவையிலே பேசும்போதும், கோரிக்கை வைத்தவர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் **திரு.டி.மணி** அவர்களாகும்.

அண்ணன் ஜீவானந்தம் அவர்களை நான் இளமைக் காலம் தொட்டே நன்கறிவேன். அவர் தந்தை பெரியார் வழியில் சுயமரியாதைக்காரராக விளங்கியவர். அவர் அரசியலிலே காங்கிரஸ் இயக்கத்திலே இருந்து பணியாற்றினார் என்றாலும் கூட, இறுதிக்காலம் வரையிலே சுயமரியாதைக்காரராக வாழ்ந்தவர். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஜீவா அவர்களிடம் பெருமதிப்புக் கொண்டவர். ஜீவா அவர்களின் எளிமையான வாழ்க்கை, பொது வாழ்வில்



எழுத்தாளர்
சு.சமுத்திரம்



மணவை
முஸ்தபா




கவிஞர்
மு.மேத்தா



இயக்குனர்
எஸ்.பி.முத்துராமன்



ஓவியர்
கோபுலு



வ.அய்
சுப்பிரமணியம்


ஈடுபட்டிருக்கின்ற அரசியல்வாதிகள் அத்தனை பேருக்கும் ஒரு பாடமாக அமைய வேண்டிய ஒன்றாகும்.

ஜீவானந்தம் அவர்கள் காங்கிரசிலே இருந்தபோது, வத்தலக்குண்டில் 39ஆவது தமிழ் மாநில அரசியல் மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில் அகில இந்தியக் காங்கிரசுக் கமிட்டி உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்வு நடைபெற்றது. முக்கியமான அந்தப் பொறுப்புக்கு **ராஜாஜி, சத்தியமூர்த்தி, காமராஜர்** உள்ளிட்ட அனைவரைக் காட்டிலும், அதிக வாக்குகள் பெற்று தேர்ந்தெடுக்கப்பட்டவர் அண்ணன் ஜீவானந்தம் அவர்களாகும்.

1927 ஆம் ஆண்டு ஜீவா அவர்கள் நடத்தி வந்த ஆஸ்ரமத்திற்குக் காந்தியடிகள் வருகை புரிந்தார். அப்போது ஜீவா அவர்களிடம் பேசிக்கொண்டிருந்த போது **காந்தியடிகள்** ஜீவாவிடம், ''உங்களுக்கு என்ன சொத்து இருக்கிறது?'' என்று




கவிஞர்
கா.வேழவேந்தன்



எழுத்தாளர்
ஜெயகாந்தன்



ஓவியர்
ஜெயராஜ்



சிலம்பொலி செல்லப்பன்


கேட்டபோது, ஜீவா அவர்கள், **''இந்தியா தான் என் சொத்து''** என்று பதில் கூறியிருக்கிறார். உடனே காந்தியடிகள், அதனை மறுத்து, **''இல்லை, இல்லை- நீங்கள்தான் இந்தியாவின் சொத்து''** என்று உருக்கத்தோடு கூறினாராம். இத்தகைய புகழுக்குரியவர் தான் அண்ணன் ஜீவா அவர்கள்.

1963ம் ஆண்டில் நடைபெற்ற ஒரு சம்பவம்-ஒருநாள் **''ஜனசக்தி''** அலுவலகத்தில் ஜீவானந்தம் எழுதிக் கொண்டிருக்கிறார். 17 வயதான பெண் ஒருவர் உள்ளே வந்தார். ஜீவா அந்தப் பெண்ணிடம், ''நீ யாரம்மா?'' என்றார்.

உடனே, அந்தப்பெண் ஒரு துண்டுக் காகிதத்தை ஜீவாவிடம் நீட்ட, அதில் ''என் தாத்தாவின் பெயர் குலசேகரதாஸ்-எனது அன்னையின் பெயர் **கண்ணம்மா**-உங்கள் மகள் **நான்**'' என்று எழுதியிருந்தது.

அதைப் படித்துவிட்டு, இறுதியில் ''என் மகள்தான்'' என்று அந்தத் துண்டுச் சீட்டிலேயே எழுதி, அதை அந்தப் பெண்ணிடம் திரும்பக் கொடுத்தார். அந்த வார்த்தைகளையே அந்தப் பெண் உணர்ச்சிகரமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அந்தத் துண்டு காகிதத்தை ஜீவா திரும்பக் கேட்டார். அந்தப் பெண் கொடுக்க மறுத்து விட்டார். அந்தப் பெண் வேறு யாருமில்லை. ஜீவா பெற்றெடுத்த மகள் குமுதாதான்!



முரசொலி சொர்ணம்

பிறந்தது முதல் 17 ஆண்டு காலம் தந்தையைக் காணாமல், தாயாரைப் பெற்றெடுத்த தாத்தா-பாட்டி வீட்டிலேயே இருந்து விட்டு, அப்போதுதான் தந்தையைக் காண வந்துள்ளார். ஜீவாவின் முதல் மனைவியார் திருமதி **கண்ணம்மா.** அவரது தந்தைதான் குலசேகரதாஸ். அவர்



ஈ.எம்.எஸ். இறுதி ஊர்வலத்தில் திரண்ட கூட்டம்

கடலூரிலிருந்து சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த உறுப்பினர். குமுதாவைப் பெற்றெடுத்த சில நாட்களில் தாயார் கண்ணம்மா மறைந்து விட்டதால், குமுதா தாய் மாமன் வீட்டிலே வளர்ந்து தனது 17ஆவது வயதில் தந்தையைச் சந்திக்க வந்த காட்சியைத்தான் இவ்வாறு எழுதியிருக்கிறேன்.

அதன் பின்னர் குமுதாவைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று, ஜீவா தனது இரண்டாவது மனைவியான **பத்மாவதியிடமும்**, மற்ற குழந்தைகளிடமும் அறிமுகம் செய்து வைத்தார். ஜீவானந்தம்-பத்மாவதி திருமணம் கலப்புத் திருமணம் மட்டுமல்ல, காதல் திருமணமும் கூட.

ஜீவா சிறையிலே இருந்த காலத்தில் பத்மாவதி அம்மையார் மாகாணத் தொழிற் சங்க காங்கிரஸ் அலுவலகத்தை நிர்வகித்து வந்தார். 1952இல் ஜீவா சிறை மீண்ட பிறகு, திருமதி பத்மாவதி அரசுப் பணியில் அமர்ந்தார். விடுமுறை நாட்களில் மட்டுமே கணவனும் மனைவியும் தாம்பரத்தில் இருந்த தங்கள் வீட்டில் சந்திப்பார்கள். ஜீவாவின் வாழ்க்கைக் குறிப்பு இது.

★ ★ ★

சிராவயலில் காந்தியின் பெயரால் ஜீவா அவர்கள் நடத்தி வந்த ஆசிரமத்தைக் காண **வ.உ.சிதம்பரனார்** ஒருமுறை

வந்தபோது, சிறுவர், சிறுமியர் ராட்டைச் சுற்றிக் கொண்டிருந்ததைப் பார்த்து, ''என்ன முட்டாள்தனம்? வாளேந்த வேண்டிய கைகளை நூலேந்த வைத்திருக்கிறீர்களே?'' என்று கோபமாகக் கேட்டபோது, அண்ணன் ஜீவா அவர்கள், ''தாங்கள் சொல்வது சரி-வீர வாளேந்தி இரத்தம் சிந்தினாலொழிய இந்தியாவுக்கு விடுதலையில்லை என்றால், என் போன்ற கணக்கற்ற காளைகள் களம் ஏகி, பிறந்த நாட்டிற்காகப் பெரும் தியாகங்கள் செய்யத் தயாராக இருக்கிறோம். ஆனால், வேறு வழியில்லாததால்தான் இந்தப் பணியில் இறங்கியுள்ளோம். இத்தகைய ஒரு ஸ்தாபனத்தைத் தாங்கள் ஒரேயடியாக அவமதித்துப் பேசுவது எங்களுக்கு மன வேதனையைத் தருகிறது'' என்றாராம். வ.உ.சி. அவர்களும் பிறகு அந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டாராம்.

ஜீவாவைப் பற்றி இன்னும் எழுதிக்கொண்டே செல்லலாம். எனக்கும் ஜீவாவிற்கும் உள்ள தொடர்புகள் பற்றி-குறிப்பாக அவரை நான் கலைவாணர் இல்லத்திலே சந்தித்தது பற்றியும்-அத்தகைய பெருமகன் என்னுடைய பேச்சைக் கேட்பதற்காக ஒருமுறை பரமக்குடி நகரிலே கூட்டம் நடைபெற்ற இடத்திற்கு வெகுதூரத்தில் இருந்து கேட்டது பற்றியும்-இந்தத் தொடரில் முதல் பாகத்திலேயே நான் விரிவாக எழுதி விட்ட காரணத்தால், மீண்டும் அதனை இங்கே எழுதவில்லை.

ஜீவா அவர்கள் குற்றாலத்தில் இருந்த போது, அவரைக் காண வரும் ஏழை எளிய மக்களிடம் முட்டை, நெய், பழங்கள் ஆகிய வற்றைக் கொண்டு வரும் படிச் சொல்வார். அவர்களும் கொண்டு வந்து கொடுக்கும் போது, ஒரு சிலர் ''இதென்ன பணக்காரர்களிடம் இதை யெல்லாம் கேட்காமல்,



நம்பூதிரி மறைவு குறித்து 'தினமணி' வெளியிட்ட 'கார்ட்டூன்'



நாகர் கோவிலில், கலைஞர் திறந்து வைத்த பொதுவுடைமை வீரர் ஜீவாவின் மணிமண்டபம்

ஏழைகளிடம் கேட்கிறீர்களே?'' என்று கேட்கும் போது, ''பணக்காரர்கள் என் காலடியில் கொண்டு வந்து கொட்டினாலும், அதை ஏற்கமாட்டேன்- ஏழைகள்தான், அவர்களிடம் உள்ளதில் ஒரு பங்கை மனம் உவந்து தருவார்கள்'' என்று கூறினாராம்.

ஜீவாவிற்குத் தெய்வ நம்பிக்கை இல்லை. இருந்தாலும் நண்பர்களுடன் சேர்ந்து கோவிலுக்குச் செல்வார். அங்கே சாப்பிடக் கொடுக்கும் பதார்த்தங்களை வாங்கிச் சாப்பிடுவார். ஆனால், திருநீறோ-குங்குமமோ கொடுத்தால் அதைக் கையில் வாங்கிக் கொண்டு, பிறகு தனியாகச் சென்று, அதை கீழே போட்டு விடுவாராம். கொடுப்பவர்கள் மனம் புண்பட்டு விடக்கூடாது என்பதில் அந்த அளவிற்கு கவனத்தோடு இருப்பாராம்.

★ ★ ★

ஜீவா அவர்கள் மறைந்தபோது மருத்துவமனையில், பக்கத்திலேகூட யாரும் இல்லாத சூழ்நிலையில், இரவு நேரத்தில் அவர் மறைந்து விட்டார். விடியற்காலையில், 'ஜீவா மறைந்து விட்டார், சென்னை மருத்துவமனையிலே அவருடைய உடல் இருக்கிறது' என்று எனக்குச் செய்தி வந்தது. உடனே நான் அண்ணாவினுடைய வீட்டிற்குச் சென்று, அண்ணாவை அழைத்துக் கொண்டு நானும், அண்ணாவும், என்.வி.நடராசனும் மருத்துவமனைக்கு விரைந்தோம். அங்கே அந்த எளிய மனிதர் - இரும்பு மனிதர்-எழுச்சி யுகம் காண்பதற்கு புரட்சி கீதங்களைப் பாடிய பெருமகனின் உடல் பிணக்கிடங்கிலே வைக்கப்பட்டிருந்தது. அங்கேயே இருந்து அவருடைய உடலை அடக்கம் செய்வதற்காக ஏற்பாடுகளை எல்லாம் கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்களோடு சேர்ந்து கவனித்து



கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டிருந்த காலத்தில், மாறுவேடத்தில் கலைவாணர் வீட்டிலிருந்த ஜீவானந்தத்தைக் கலைஞர் சந்தித்தார்.

விட்டு, அவர்களுக்கெல்லாம் எங்களுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து விட்டுத் திரும்பினோம்.

ஜீவா அவர்களிடம் பொதுவுடைமை இயக்கக் குணங்கள் அமைந்ததற்கு ஒரு காரணமாக ஒரு உதாரணம் கூறுவார்கள். ஜீவா தனது இளம் பிராயத்தில், அவருடைய சொந்த கிராமமான பூதப்பாண்டியிலே-கோவிலுக்குச் சென்று சுண்டல் பெற்று-அதனை தான் மட்டும் அருந்தாமல், மற்ற சிறுவர்களையெல்லாம் அழைத்து பகுத்துண்டுதான் சாப்பிடுவோம். அந்தக் குணத்தினால்தான் அவர் பெரியவராக ஆன பிறகும் சமத்துவம்-சமதர்மம் வேண்டும் என்றெல்லாம் பாடுபட்டார்.

அவருடைய மணி மண்டபத் திறப்பு விழாவிற்கு அவருடைய குடும்பத்தினர் எல்லாம் வந்திருந்தார்கள். நேரில் என்னைக் கண்டு நன்றி கூறினார்கள்.

★ ★ ★

1935ஆம் ஆண்டு கோவை ஸ்டேன்ஸ் மில்லில் ஒரு முறை வேலை நிறுத்தம். காலை 6 மணிக்குத் தொழிலாளர் கூட்டம். 5 மணிக்கு ஜீவா ஒரு பாடல் எழுதி, அந்தப் பாடல் அந்தக் கூட்டத்தில் பாடப்பட்டது. அந்தப் பாடல் தமிழகம் எங்கும் தொழிலாளர்களிடையே பரவி, அந்தப் பாடல் பாடப்படாத


இடமே இல்லை என்ற அளவிற்குப் புகழ் பெற்றது. ஜீவா எழுதிய அந்தப் புகழ் பெற்ற பாடலில் ஒரு பகுதி இதோ:-

காலுக்குச் செருப்புமில்லை
கால் வயிற்றுக்குக் கூழுமில்லை
பாழுக் குழைத்தோமடா-என் தோழனே
பசையற்றுப் போனோமடா!
குண்டிக்கொரு துண்டுமில்லை
கொல் வறுமை தாளவில்லை
ஒண்டக்குடிசையில்லை-என் தோழனே
உழைத்திளைத்துப் போனோமடா!
பாலின்றிப் பிள்ளை அழும்-
பட்டினியால் தாயழுவாள்-
வேலையின்றி நாமழுவோம்-என்
தோழனே
வீடு முச்சூடும் அழும்!
கையிலொரு காசுமில்லை
கடன் கொடுப்பார் யாருமில்லை
செய்யும் தொழில் கிட்டவில்லை-என்
தோழனே
திண்டாட்டம் கொல்லுதடா!

இப்படி எழுதிய அண்ணன் ஜீவானந்தம் அவர்கள் மறைந்தபோது, 21.3.1963 அன்று நான் எழுதி ''நம் நாடு'' இதழில் வெளியான இரங்கல் கவிதை இதோ:-

நாமணக்கும் நல்ல தமிழ் மணக்கும்
நாஞ்சில் என்ற பேர் மணக்கும்
பாமணக்கும் பூதப்பாண்டி யெனும்
ஊர் மணக்கும்
பண்பாளர் ஜீவா புகழ் பாடுகின்ற
வாய் தேன் மணக்கும்!
ஆட்டம் போடும் வாலிபத்தின்-பனி
மூட்டம் கலையா வயதினிலே
நாட்டம் கொண்டார் பொது வாழ்வினிலே
நாட்டை நினைத்தார் முதலிடமாய்!

தோட்டம் நிறையப் பூ இருந்தும்
தொலைவில் பறந்த
வண்டினைப் போல்
தொண்டே என்றன் வாழ்வென்று
சுற்றிப் பறந்தார் நாட்டினிலே
வீட்டில் சிலநாள் தங்கிடுவார்!-சிறைக்
கூட்டில் பலநாள் வதங்கிடுவார்!
மேடையில் முரசு கொட்டிடுவார் -
வாழ்வின்
கோடையில் பயணம்
சென்றிடுவார்!
''தாமரை'' மலரைத் தந்திடுவார்-
அதில்
தமிழாம் அமுதை உண்டிடுவோம்!
கையை ஓங்கிப் பேசிடுவார்-அங்கே
கடும்புயல் வீசக் கண்டிடுவோம்!
வாரீர் என்று அழைத்திடுவார்-அந்த
வாஞ்சை கண்டு
சிலிர்த்திடுவோம்!
குன்றாம் அவர்தம் தோளெங்கே?
குன்றா அவர்தம் திறமெங்கே?
நன்றாம் அவர்தம் குணமெங்கே?
நாட்டுக் குழைக்கும் பண்பெங்கே?
வீரம் செறிந்த முகம் எங்கே?
விழிகள் கொட்டும் ஒளி எங்கே?



குமரி முனையில், வான்முட்டும் திருவள்ளுவர் சிலை அமையும் பணியினைப் பார்வையிட்டார் கலைஞர்



பன்மொழிப் புலவர் சு.ரா.ஜமதக்னி மொழி பெயர்த்த
காரல் மார்க்சின் மூலதன நூலைக் கலைஞர் வெளியிட்டார்.
அருகே பேராசிரியர் மு.நாகநாதன்.

குருதியெலாம் புரட்சி மணம்
கமழுகின்ற வரிப் புலியைக்
கொள்கையிலே உறுதி கொண்ட
தமிழ்க் கவியைக்
கொள்ளையடித்து மகிழ்ந்ததோ
கொடுஞ்சாவு-எனக்கேட்டுக்
குமுறுகின்றார் நாட்டு மக்கள்!
வாழ்க ஜீவா! வாழ்க என்றும்!

ஜீவா மறைவு குறித்து பேரறிஞர் அண்ணா அவர்கள் வழங்கிய இரங்கல் செய்தியில், ''கொள்கையிலே ஜீவாவுக்கு இருந்த அழுத்தமான நம்பிக்கையும், அதனை எடுத்து விளக்குவதில் அவர் பெற்றிருந்த திறமையும் எவரும் கண்டு வியக்கத் தக்கனவாக இருந்தது. எந்தப் பொதுநலத் தொண்டரையும் கலங்க வைக்கக்கூடிய எத்தனையோ வகையான கொடுமைமிகு அடக்குமுறைகளை அவர் கண்டவர் - அவற்றைத் தாங்கிக் கொண்டவர்-வென்றவர்! அவருடைய ''சம்மட்டி அடிகளை''ப் பெற்றுச் சரித்த சூதுக் கோட்டைகள் பலப்பல! அவருடைய ஓயாத உழைப்பினால் மக்கள் மன்றம் பெற்ற உயர் தனிக்கருத்துகள் பலப்பல!

அவர் பேசாத நாள் இல்லை-
போகாத ஊர் இல்லை-
காணாத எதிர்ப்பு இல்லை-
பெறாத சீர்மிகு வெற்றியும் இல்லை!

ஒளி விடு கணைபோல் விளங்கி வந்தார். அந்த ஒளியால் தமிழகம் புதுப்பொலிவு பெற்றது! ஒளி மறைந்ததால் அவருடைய இல்லமாக அவர் கொண்டிருந்த தமிழகம் இருள் சூழ்ந்த நிலை பெற்றிருக்கிறது.''

- என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருந்தார்.

★ ★ ★

திருநெல்வேலி, கன்யாகுமரி மாவட்ட நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு சென்னை திரும்பிய நான், 2.5.1998 அன்று **காரல் மார்க்சின்** படைப்புகளான **''மூலதனம்''** மற்றும் **''மிகைமதிப்பு''** நூல்கள் வெளியீட்டு விழாவிலே கலந்து கொண்டேன்.

காரல் மார்க்ஸ் எழுதிய உலகப் புகழ் வாய்ந்த நூல்தான் **''மூலதனம்''** அதனை இந்தியாவிலேயே முதன் முதலாக நம்முடைய இந்திய மொழியில்-அதுவும் நம்முடைய தமிழ் மொழியிலே-முழுவதும் மொழியாக்கம் செய்து தந்த பெருமை, மொழிப்புலவர் **ஜமதக்னி** அவர்களைத்தான் சாரும். அந்த மொழியாக்க நூலை தமிழிலே வெளியிடுவதற்குத் தம்பி **முனைவர் நாகநாதன்**- திட்டக் குழுவின் துணைத் தலைவராக தற்போது இருப்பவர்-1998 ஆம் ஆண்டில் எடுத்துக்கொண்ட முயற்சிகள் ஏராளம்.

கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற அந்த விழாவிற்கு நான் தலைமையேற்று அந்த நூலினை வெளியிட, பொதுவுடைமை இயக்க மூத்த முன்னோடிகளில் ஒருவராக இருந்த **கே.டி.கே.தங்கமணி** அந்த முதல் நூலினைப் பெற்றுக் கொண்டார்.

ஜமதக்னி அவர்களின் மருமகன் பேராசிரியர் முனைவர் மு.நாகநாதன் விழா ஏற்பாடுகளைச் செய்து, வரவேற்

புரையாற்றினார். நிகழ்ச்சியில், முனைவர் தமிழ்க்குடிமகன், என்.சங்கரய்யா, ஆர்.நல்லக்கண்ணு, சிலம்பொலி செல்லப்பன், பேராசிரியர் முனைவர் ஜெகதீசன், வே.ஆனைமுத்து, முனைவர் செ.பாலசுப்பிரமணியம், பேராசிரியர் தீரன், முனைவர் திருமதி பி.நாகபூசணம் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர். ஜமதக்னி அவர்களின் மகளும், நாகநாதன் அவர்களின் துணைவியாருமான சாந்தி ஜமதக்னி நன்றி கூறினார்.

ஜமதக்னி அவர்கள் மொழி பெயர்த்த நூல் வெளியீட்டு விழாவில், காரல் மார்க்ஸ் பற்றியும், அவர் எழுதிய தத்துவங்கள் குறித்தும் நீண்டதோர் உரையாற்றினேன்.

34. மிகவும் பிற்படுத்தப்பட்டோர்க்கு தனி ஒதுக்கீடு!


முத்துச்சிற்பி வடிவில் அமைக்கப்பட்ட பவள விழா மேடை

திமிழ்த் தென்றல் **திரு.வி.க.**பேராசிரியர் **கல்கி** ஆகியோரின் நூல்கள் தி.மு.கழக ஆட்சியிலே நாட்டுடைமையாக்கப்பட்டு பரிவுத் தொகை வழங்கும் விழா, *15.5.1998* அன்று கலைவாணர் அரங்கில், தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சராக இருந்த **தமிழ்க்குடிமகன்** தலைமையிலே நடைபெற்றது. அந்த விழாவில் கலந்துகொண்டு இருவரது குடும்பத்தினருக்கும் தலா இருபது இலட்ச ரூபாய் பரிவுத் தொகையாக வழங்கி நான் உரையாற்றினேன். இலக்கியச் செல்வர் **குமரி அனந்தனும்,** ஆசிரியர் **சாவியும்** விழாவில் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினர். பரிவுத் தொகையைப் பெற்றுக் கொண்டு **கல்கி இராஜேந்திரனும்,** முனைவர் **வனசாட்சியும்** நன்றி கூறினார்கள்.

குறிப்பாக கல்கி ராஜேந்திரன் அந்த விழாவில் பேசும்போது, கல்கி இதழில் ''**மனோகரா**'' திரைப்படத்திற்கு நான் எழுதிய வசனம் குறித்து, கல்கி அவர்கள் எழுதிய விமர்சனத்தைக் கொண்டு வந்து நிகழ்ச்சியிலே படித்துக் காட்டினார். அந்தப் பாராட்டினை, திரைப்படம் வெளிவந்த காலத்திலேயே நான் படித்திருக்கிறேன் என்ற போதிலும், நாற்பதாண்டுகளுக்குப் பிறகு, மீண்டும் அதை அந்த விழாவில் கி.ராஜேந்திரன் கொண்டு வந்து படித்துக் காட்டியபோது, மேலும் மகிழ்ச்சியாக இருந்தது.

மனோகரா**வுக்கு** மாத்திரமல்ல-பேரறிஞர் **அண்ணா** அவர்கள் எழுதிய ''**வேலைக்காரி**'' திரைப்படம்

வெளிவந்தபோதும், கல்கி அவர்கள் அதனைப் பெரிதும் பாராட்டி, கல்கி இதழிலே விமர்சனம் எழுதியிருக்கிறார். இன்னும் கூற வேண்டுமேயானால், தஞ்சையில் அண்ணா அவர்கள் எழுதிய **''ஓர் இரவு''** நாடகத்திற்கு கல்கி அவர்கள்தான் தலைமை தாங்கினார். அந்த விழாவில் அவர் உரையாற்றும் போதுதான், அண்ணா அவர்களை **''தென்னாட்டு பெர்னாட்ஷா''** என்று பெருமை படக் குறிப்பிட்டார். பேராசிரியர் கல்கி அவர்கள், அந்த அளவிற்குப் பெருந்தன்மையோடும், எங்கே திறமை மிகுந்திருக்கிறதோ, அதை எடுத்துக் சொல்லத் தயங்காத உறுதியோடும் அவர்களைப் பாராட்டத் தவறாதவர்-மறவாதவர்.



தமிழறிஞர் திரு.வி.க., எழுத்தாளர் கல்கி - இருபெரும் சான்றோரின் நூல்களை நாட்டுடைமை ஆக்கி, இருவரின் வாரிசுகளுக்கும் தலா 20லட்சம் ரூபாய் பரிவுத் தொகை வழங்கினார், கலைஞர்

அந்தக் கல்கி அவர்கள் மறைந்த போது, **பேரறிஞர் அண்ணா** அவர்கள் *12.12.1954* தேதியிட்ட ''திராவிட நாடு'' இதழில் **''அமர தாரா போயிற்று''** என்ற தலைப்பில் பின் வருமாறு எழுதியிருந்தார்.



''தமிழ் நடையில் ஒரு நகைச் சுவையையும், சரித்திர நிகழ்ச்சிகளின் மீது சமையல் கட்டுக்குக்கூட ஒரு ஆவலையும், தூண்டி விட்ட எழுத்தாளர் அவர். அவரது எழுத்து, செயல் பற்றி கருத்து வேறுபாடுகள் நிறைய உண்டு. ஆனால், அவரது திறமை, செயல்வன்மை நிச்சயம் பாராட்டுக்குரியதாகும். தேசியக் கூடாரம் முழுவதும் எரிச்சல் கணைகளைப் பூட்டினாலும், சில சமயங்களில் நமது சேவைகளை அவர் புகழ்ந்ததும் உண்டு. எழுத்துத் துறையில்

நமது இயக்கம் உண்டாக்கியிருக்கும் மறுமலர்ச்சி, பல தேசீய எழுத்தாளருக்கு எரிச்சலையும், கோபத்தையும் உருவாக்கியிருக்கிறது. ஆனால், கல்கி வரவேற்றார்-மகிழ்ந்தார். அதேபோல மாற்றாரிடம் இருக்கும் சில நற்பண்புகளை அவர் பாராட்டத் தயங்கியதில்லை-வாழ்த்தப் பயந்ததில்லை. அதனால்தான் அவருடைய மறைவு இன்று பலருக்கும் வருத்தத்தைக் கொடுக்கிறது. அதிலும் நமக்கு அவரது மறைவு உண்மையில் வேதனையைத் தருகிறது'' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருந்தார்.

பேராசிரியர் கல்கி அவர்கள் **பொன்னியின் செல்வன், சிவகாமியின் சபதம்** போன்ற வரலாற்றுப் புதினங்களை மாத்திரமல்ல-வரலாற்றில் என்றும் நிலைத்து நிற்கக்கூடிய புதினங்களை உருவாக்கித் தந்தவர். அவருக்குத் தமிழ் மொழியின் மீது மாத்திரமல்ல-தமிழர்கள் மீதும், தமிழ் இனத்தின் மீதும் அளவற்ற பற்று உண்டு. பாரதியாருக்கு எட்டையபுரத்தில் மணிமண்டபம் கண்டவர் கல்கி அவர்கள். சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு, பலமுறை சிறைச் சாலைக்குச் சென்றவர், கல்கி அவர்கள்.

கல்கி அவர்கள் தமிழுக்காக பட்ட பாட்டினைப் பெருமைப் படுத்தும் வகையிலேதான் தி.மு.கழக அரசு அன்றைய தினம் அந்த விழாவினை எடுத்து, அவருடைய நூல்களை நாட்டுடைமையாக்குவதாக அறிவித்ததோடு, அதற்காகப் பரிவுத் தொகையாக இருபது இலட்சம் ரூபாயையும் கி.இராஜேந்திரன் அவர்களிடம் நான் வழங்கினேன்.

அதே விழாவில், தமிழ்த்தென்றல் திரு.வி.க.அவர்களது நூல்களையும் நாட்டுடைமையாக்கி, அவருடைய சந்ததியினருக்கு அரசின் பரிவுத் தொகையாக இருபது இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. 1925 ஆம் ஆண்டுதான் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிலிருந்து தந்தை பெரியார் வெளியேறினார். அந்த மாநாட்டிற்குத் தலைமை தாங்கியதே திரு.வி.க.அவர்கள்தான். அந்த மாநாட்டிலே தந்தை பெரியார் கொண்டு வந்த தீர்மானம்தான்

வகுப்புவாரி உரிமையை வலியுறுத்துகின்ற தீர்மானம். அதனை அந்த மாநாடு ஏற்றுக் கொள்ளவில்லை. மாநாட்டுத் தலைவரான திரு.வி.க. அவர்களே ஏற்றுக் கொள்ளத் தயங்கியபோதுதான். தந்தை பெரியார் காங்கிரசிலிருந்தும், அந்த மாநாட்டிலிருந்தும் வெளியேறினார்.

ஆனால், திராவிட இயக்கத்தினுடைய வெற்றிக்குச் சான்றாக-அதே தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் பெரியாருடைய வகுப்பு வாரிக் கொள்கையைப் பின்னர் ஏற்றுக்கொண்டார் என்றால், அது பெரியாரின் வெற்றியாகும்-திராவிட இயக்கத்தினுடைய வெற்றியாகும்.

மூதறிஞர் ராஜாஜி, தமிழ்த் தென்றல் திரு.வி.க.போன்ற வர்கள் அந்தக் காலத்தில் பெரியாரும், அண்ணாவும் எடுத்துச் சொன்ன **''திராவிட நாடு''** என்ற சொற்றொடரையே கூட ஏற்றுக் கொள்ளாதவர்கள்.

அந்த ராஜாஜி, பிறகு கல்கி இதழிலேயே ''திராவிட நாடு கிடைத்தால்கூட நான் அதற்காக சந்தோஷப்படுவேன். திராவிட நாட்டிற்காக நான் சண்டை போடுவேன்'' என்று எழுதுகின்ற அளவிற்கு நிலைமை ஏற்பட்டது. அதுபோலவே திராவிட நாடு என்று சொற்றொடரையே ஏற்றுக்கொள்ளாத திரு.வி.க. அவர்கள், கடலூரில் நடைபெற்ற திராவிடர் கழக மாநாட்டில் திராவிட நாடு படத்தையே திறந்து வைத்து உரையாற்றினார். திரு.வி.க. அவர்கள் எதையும் மூன்று முறை சொல்வார். அவ்வாறே அன்றைய தினமும் ''திராவிட நாடு-திராவிட நாடு-திராவிட நாடு'' என்று மூன்று முறை சொன்னார். ஆனால், அதற்குப் பிறகு அண்ணா அவர்களே திராவிட நாடு கொள்கையைக் கைவிட்ட நிகழ்ச்சி எல்லாம் தமிழகம் நன்கு அறிந்த ஒன்றாகும்.

திரு.வி.க.வின் தொண்டு பல முகப்புகளைக் கொண்டது. இலக்கியம்-சமயம்-மேடைப் பேச்சு-பத்திரிகை உலகம்-தொழிற்சங்கம் ஆகியவற்றில் வல்லவர். விடுதலை இயக்கத்தின் முரசாக அவருடைய எழுத்தும், பேச்சும் முழங்கின. அவர் அடக்கம், எளிமை ஆகிய இரண்டின் சின்னமாக விளங்கினார்.



கல்கியின் புதல்வர் கி.ராஜேந்திரனிடம் பரிவுத் தொகை ரூ. 20 லட்சத்தை வழங்கினார் கலைஞர்

அவருடைய பொது வாழ்வு, தூய்மையின் இலக்கணம்! பணத்தைப் பற்றிய நினைப்பே இல்லாமல் ஏழையாகவே வாழ்ந்தவர். அவருடைய அந்திம காலத்தில் நோய் வாய்ப்பட்டு வறுமையில் உழன்றார். அதை அறிந்த மதுரை தொழிலதிபர், தமிழ்ப் புரவலர் ஒருவர், அவருக்குக் கணிசமான தொகையை அந்தரங்கத் தூதர் மூலம் அனுப்பி வைத்தார். அந்த உதவியை இங்கிதத்துடன் மறுத்துவிட்ட திரு.வி.க.அதற்குக் கூறிய காரணம்- அவருடைய வைர நெஞ்சை வெளிப்படுத்தியது. ''என்னுடைய நெடிய பொது வாழ்வில், எவரிடமும் கைநீட்டி எந்த உதவியையும் பெற்றதில்லை. அந்த விரதத்தை என் அந்திம காலத்தில் குலைத்துக் கொள்ள விரும்பவில்லை. உதவிக்கு மிக்க நன்றி'' என்றாராம், திரு.வி.க.

பழகுவதிலும், உரையாடுவதிலும் திரு.வி.க. அவர்கள் மென்மையானவர். தூய்மையைக் காப்பதிலும் ஆர்வமுடைய வராகவே விளங்கியிருக்கிறார்.

★ ★ ★

தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் புயலாகவும் விளங்கிய காலமும் உண்டு. சென்னையில் இருந்த பி அன்ட் சி மில்லில் பணியாற்றிய 13 ஆயிரம் தொழிலாளர்களின் சங்கத்திற்குத் திரு.வி.க. தான் தலைவராக இருந்தார். இந்தியாவிலேயே முதன் முதலாக தொழிற்சங்கம் உருவானது சென்னையிலே தான். அந்தச் சங்கத்திற்குத் தலைமையேற்றிருந்தவர் திரு.வி.க. தான்.

அவர் அந்தத் தொழிற் சங்கத்தை நடத்தியபோது, பெரும் தொழிற்சங்கப் போராட்டம் நடைபெற்றது. அப்போது சென்னை மாகாணத்தின் ஆளுநராக இருந்தவர் **வெலிங்டன் பிரபு**. அவர் தொழிலாளர்களை அடக்குவதற்காக பல்வேறு அடக்குமுறைகளை ஏவிவிட்டார். அவற்றிற்கெல்லாம் தலைதாழாமல், தோள் உயர்த்தி நின்று தொழிலாளர்களை அணிவகுக்கச் செய்து, போராட்டக் களத்திலேயே நின்றவர், திரு.வி.க. அவர்கள்.

அடங்காத ஆத்திரம் அடைந்த ஆளுநர் வெலிங்டன் பிரபு, திரு.வி.க. அவர்களை நாடு கடத்த ஆணை பிறப்பித்தார். அப்போது நீதிக்கட்சியின் ஆட்சிதான் நடைபெற்றது. **பனகல் அரசர்** அன்றைய சென்னை மாகாணத்தின் முதல் அமைச்சர். அப்போது அந்தப் பதவிக்குப் பெயர் **பிரிமியர்**. திரு.வி.க ஆளுநரால் நாடு கடத்தப்பட்டார் என்ற செய்தியைக் கேள்விப்பட்டவுடன், திராவிட இயக்கத்தின் முன்னோடிகளான **பிட்டி தியாகராயர்**, டாக்டர் நடேசனார் ஆகியோர் பனகல் அரசரைச் சந்தித்து, ''நீங்கள் உடனடியாக ஆளுநரைப் போய்ப் பார்த்து, திரு.வி.க.வை நாடு கடத்துவதை திரும்பப் பெறச் செய்யுங்கள்-அதற்கு ஆளுநர் செவிமடுக்க மறுத்தால் அமைச்சரவையிலிருந்து வெளியே வந்து விடுங்கள்-ஆட்சிப் பொறுப்பு நமக்கு வேண்டாம்'' என்று சொல்லி அனுப்பினார்கள்.

அதன் பேரில் பனகல் அரசரும், அமைச்சர் பெருமக்களும், ஆளுநரைச் சந்தித்து ''திரு.வி.க.வை நாடு கடத்தக்கூடாது'' என்று கண்டிப்பாகச் சொல்ல-அதற்கு ஆளுநர், ''திரு.வி.க.நாடு கடத்தப்படக்கூடாது என்று சொல்ல நீங்கள் யார்? நாடு கடத்தியே தீருவேன்'' என்று வேகமாகப் பேசினார்.

''அப்படியா? அப்படியென்றால் இதோ எங்களுடைய பதவியின் ராஜினாமா கடிதங்கள்''-என்று கூறிய பிறகுதான் வெலிங்டன் பிரபு இறங்கி வந்து - திரு.வி.க.வை நாடு கடத்தும் உத்தரவைத் திரும்பப் பெற்றார் என்பது திரு.வி.க.வின் வாழ்க்கைச் சரித்திரமாகும்.

அந்த இரண்டு பெரும் சான்றோர்களின் நூல்களை யெல்லாம் கழக அரசு நாட்டுடைமையாக்கியதோடு, அவர்களின் சந்ததியினருக்கு 20 லட்சம் ரூபாய் வீதம் பரிவுத்தொகையும் வழங்கிப் பெருமைப்படுத்தியது.

★ ★ ★

அந்த விழா முடிந்த அடுத்த சில நாட்களிலேயே 20.5.1998 அன்று, கழகப் பொதுச்செயலாளர் **பேராசிரியர்** அவர்கள், ஒரு நீண்ட அறிக்கையினை வெளியிட்டார்.

அதில் என்னுடைய **பவள விழா** (75ஆவது பிறந்தநாள்) 3.6.1998இல் தொடங்குவதை முன்னிட்டு, அதனைக் கழக வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும்- ஓராண்டு காலத்திற்கு பல்வேறு நிகழ்ச்சிகளை கிராமங்கள் தோறும், நகரங்கள்தோறும் நடத்திட வேண்டுமென்றும்- கழகத்தின் பல்வேறு அணியினர் தனித்தனியாக விழாக்களை ஏற்பாடு செய்திட வேண்டுமென்றும்-அந்த அறிக்கையிலே கேட்டுக்கொண்டார்.

மேலும் அந்த அறிக்கையில், தமிழக அரசின் மக்கள் நல்வாழ்வுத்துறை மூலம் பார்வை இழந்தோர்க்குக் கண்ணொளி வழங்கும் முகாம்களைப் பரவலாக நடத்த வேண்டுமென்றும்- வேளாண்மைத் துறையின் மூலம் நாடெங்கும் மரக்கன்றுகளை நடும் விழாக்களை ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும்-சமூக நலத்துறையின் சார்பில் நலிந்த ஏழையெளிய மக்களுக்கு பல்வேறு வகைகளில் உதவுகின்ற திட்டங்களை நடத்திட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

பவள விழாவின் தொடக்க நிகழ்ச்சிகளாக சூன் 1ஆம் தேதியன்றும், 2ஆம் தேதியன்றும் சென்னை மாநகரில் கழகத்தின் இளைஞரணி, மகளிர் அணி, இலக்கிய அணி, மாணவர் அணி, மீனவர் அணி, உள்ளிட்ட அணிகளின் சார்பில் கருத்தரங்குகள்- சுழலும் சொற்போர்- ''கலைஞர் ஒரு காவியம்'' என்னும் நாட்டிய நாடகம்-பட்டி மன்றம்-இசை அரங்கம்-கவியரங்கம் முதலான நிகழ்ச்சிகள் நடைபெறுமென்றும் அறிவிக்கப்


பட்டது. ஜூன் திங்கள் 3ஆம் தேதியன்று சென்னை கடற்கரையில் பிரதமர் குஜ்ரால் அவர்களும், மற்றும் தோழமைக் கட்சிகளின் தலைவர்களும் கலந்து கொள்ளும் பொதுக் கூட்டம் நடைபெறும் என்றும் அறிக்கையில் தெரிவித்தார்.

★ ★ ★

1.6.1998 அன்று சென்னைத் தலைமைச் செயலகத்தில் என்னைச் சந்தித்த செய்தியாளர்கள், முதலில் எனக்குப் பவள விழா வாழ்த்துக்களைச் செய்தியாளர்கள் சார்பில் தெரிவித்த தோடு-பவள விழாச் செய்தியினையும் தர வேண்டு மென்றார்கள்-அப்போது நான் வழங்கிய பவள விழாச் செய்தி வருமாறு:-

''நிர்ணயிக்கப்படாததும், நாமே நிர்ணயித்துக் கொள்ள முடியாததுமான இயற்கையான மனித ஆயுட்காலத்தில் எழுபத்து நான்கு ஆண்டுகளைக் கடந்து, எழுபத்து ஐந்தில் நான் அடியெடுத்து வைக்கிற நாள், இந்த ஜூன் மூன்றாம் நாளாகும்.

''நான் பிறந்த பதினான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, தமிழ் மொழியும் தமிழர் உரிமையும் காத்திட மூண்டெழுந்த இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டம், 1938 ஜூன் மூன்றாம் நாள்தான் தொடங்கப்பட்டது என்பதையும், அந்நாளில் அப்போர்க்களத்து இளஞ் சிப்பாய்களில் ஒருவனாக என்னை இணைத்துக் கொண்டு பொதுவாழ்வில் புகுந்தேன் என்பதையும் எண்ணிடும்போது எத்துணையோ இன்ப அலைகள் இதயத்தில் மோதுகின்றன.''



திரு.வி.க.வின் வழித் தோன்றல் வனசாட்சியிடம் பரிவுத் தொகை ரூ. 20 இலட்சத்தை வழங்கினார் கலைஞர். அருகில் சாவி


''பாச உணர்வும், அன்புப் பிணைப்பும் கொண்ட நேசமிகு பெரியோர்களும், தாய்மார்

களும் என் உயிரினும் மேலான உடன்பிறப்புகளும் இதனை என் பவள விழா ஆண்டு எனக் கூறி வாழ்த்துகின்றனர்.''

''இந்திய நாட்டு சுதந்திரப் பொன் விழா ஆண்டின் நிறைவையும்-என்னைத் தலைவனாக ஏற்றுக்கொண்டுள்ள இந்தக் கழகத்தின் பொன்விழா ஆண்டின் முகப்பையும் இணைத்துக் கொண்டுள்ளது என் பவளவிழா என்கிறபோது ஓர் உணர்ச்சிப் பிரவாகம்-பெருமிதம் என்னுள்ளத்தைக் கொள்ளை கொள்ளத்தான் செய்கிறது.''

''உலக அளவில் சமாதானத்தையும்-நாட்டின் ஒற்றுமையையும் சமுதாய அளவில் அறிவியல் எழுச்சியையும்- அதன் தாக்கமாக அமைதி சூழ் வளமிகு எதிர்காலத் தலைமுறையையும் உருவாக்கிட, மனிதநேய அடிப்படையில் அமைந்திட வேண்டிய வலிமைசேர் மாளிகையின் அடித்தளத்துக் கற்களில் ஒருவனாக இருக்கிறோம் என்பதில் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டு, அவ்வாறு இருப்போர் அனைவரையும் என் உடன்பிறப்புக் களாகக் கருதி என் பொது வாழ்வுப் பயணத்தை நடத்திக் கொண்டிருக்கிறேன்.''

''திரு.வி.க.நாடு கடத்தப்படுவார்'' என்ற செய்தியறிந்து வெகுண்டெழுந்த திராவிட இயக்கத்தின் முன்னோடிகள்



பிட்டி தியாகராயர்



டாக்டர் நடேசனார்

''இந்தப் பயணத்தில் இடர்- துயர்- இன்பம்-துன்பம்- எதிர்ப்பு- ஆதரவு- ஏச்சு- பேச்சு- இழிவு- பழி என எத்தனையோ விதவிதமான நிகழ்ச்சி களை எதிர்கொள்ளும் போது என்னை ஆளாக்கிய பெரியாரையும், அரவணைத்து வழி நடத்திய அண்ணாவையும் நினைத்துக் கொண்டு- இலட்சியத்தில் இம்மியளவும் சறுக்கல்

இல்லாமல்-எச்சரிக்கையுடன் நடந்து கொண்டிருக்கிறேன்.''

''அறுபது இலட்சத்துக்கு மேற்பட்ட கழக உடன் பிறப்புக் களையும்-அன்பெனும் அமுதூட்டி ஆதரவுக் கரம் நீட்டித்துணை நிற்கும் கோடிக்கணக்கான தமிழ்ப் பெரு மக்களையும் - அரசியலுக்கும், கட்சிப் பிரச்சினைகளுக்கும் அப்பாற்பட்டு வாழ்த்தி அருளுகின்ற அனைத்து நெஞ்சங்களையும்-தூய துணைகளாகக் கொண்டு-எழுபத்து நான்கு ஆண்டுகளைத் தாண்டி விட்டோமே என்ற மலைப்புடன் திரும்பிப் பார்க்கிறேன். என் விழிகள் மட்டும் விரிந்திடவில்லை-பெருமூச்சு காரணமாக என் சுவாசப் பைகளும் விரிந்திடுகின்றன.''

''இந்தத் துணைகள் என்றும் இருக்கும் என்ற நம்பிக்கையுடன் - இருக்க வேண்டுமென்ற வேண்டு கோளுடன், எஞ்சியுள்ள பயணத்தைத் தொடருகிறேன். என் கடன், பணி செய்து கிடப்பதே!''

- இவ்வாறு பவள விழாச் செய்தியினை அளித்த என்னிடம் ஒரு செய்தியாளர், ''என் பிறந்த நாளினையொட்டி, ஆயுள் சிறைக் கைதிகளின் தண்டனைக் காலம் குறைக்கப்படுமா?'' என்று கேட்டார்.

அதற்கு நான், ''என்னுடைய பிறந்த நாளைக்கு அதைச் செய்வதாக இல்லை-எப்போதும் ஆண்டுதோறும் அண்ணா பிறந்தநாளின் போதுதான் அவ்வாறு அறிவிப்பது நான் மேற்கொண்டுள்ள வழக்கம். எனவே இந்த ஆண்டும் அண்ணா பிறந்தநாள் விழாவின் போது அதனை அறிவிப்பேன்'' என்று கூறினேன்.

★ ★ ★

பிறந்தநாளினையொட்டி ஏராளமான வாழ்த்துச் செய்திகள்-அதிலே என்னைக் கவர்ந்த ஒரு வாழ்த்துச் செய்தி, கர்நாடக மாநில முதலமைச்சராக அப்போதிருந்த **ஜே.எச்.பட்டேல்** அவர்கள் அனுப்பியதாகும். அதிலே அவர், ''சுதந்திரத்திற்குப் பிந்திய சரித்திரத்தில், பல்வேறு எழுச்சி களைச் சந்தித்துள்ள கருணாநிதி அவர்கள் தன்னுடைய



திரு.வி.க.நாடு
கடத்தப்பட்டால், முதல்வர்
பதவியை ராஜினாமா செய்ய
முன்வந்த பனகல் அரசர்

உறுதியான லட்சியங்கள்-மதிப்பீடுகள்-மற்றும் மக்கள்மீது கொண்டுள்ள அன்பின் காரணமாக நிலைத்து நிற்கிறார். அவருடைய தலைசிறந்த அரசியல் வாழ்க்கை அரை நூற்றாண்டுக்கு மேலான தனது பொது வாழ்வை நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு ஒப்படைத்து உயர்ந்து நிற்கும் இந்தத் தலைவரின் மீது தமிழ் மக்கள் கொண்டுள்ள அன்புக்கும், பாசத்திற்கும் அடையாளமாகும். அண்டை மாநிலங்களுடன் நல்லிணக்கத்துடன் கூடிய உறவுகளை அவர் எப்போதும் பராமரித்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். அவருடைய எதிர்கால முயற்சிகளில் இறைவன் அவரோடு இருந்து மக்களுக்கு தொண்டாற்றிட நீண்ட வாழ்வை அருள்வானாக'' என்று எழுதியிருந்தார்.

★ ★ ★

கலைவாணர் அரங்கத்திலே அமர்ந்து பல்லாயிரக்கணக்கான கழகத் தோழர்களின் வாழ்த்துக்களைப் பெற்றுக் கொண்டிருந்த நிலையிலே செய்தியாளர்களும் என்னைச் சந்தித்து வாழ்த்துக் கூறியதோடு, ஒரு சில கேள்விகளைக் கேட்க விரும்புவதாகக் கூறினர். சரி என்றேன்.

கேள்வி:- 75 வயதாகிவிட்டது-இனிமேல் பொது வாழ்க்கையிலே அக்கறை செலுத்துவீர்களா? அல்லது குடும்ப வாழ்க்கையிலே அக்கறை செலுத்துவீர்களா?

நான்:- 75 வயதுக்குமேல் நிச்சயமாக குடும்ப வாழ்க்கை இருக்க முடியாது. இனி மேல் முழுக்க முழுக்க இருக்கின்ற காலம் எல்லாம் பொது வாழ்க்கையிலேதான்.

கேள்வி:- இத்தனை ஆண்டு கால வாழ்க்கையிலே எத்தனையோ மாற்றங்களைக் கண்டிருப்பீர்கள்-எந்த மாற்றத்தை முக்கியமாகக் கருதுகிறீர்கள்?



நான்:-மாற்றங்களையும் கண்டதுண்டு-ஏமாற்றங்களையும் கண்டதுண்டு. மாற்றங்கள் என்பது நிலையானது - அதை உணர்ந்துதான் செயல்படுகிறேன்.

கேள்வி:- திராவிட இயக்கத்தாக்கம் என்பது எப்படி இருக்கும்?

நான்:-அங்கொன்றும், இங்கொன்றுமாக அதற்குச் சோதனை ஏற்படுகின்றதென்றாலும், அதைத் தூக்கி நிறுத்துகின்ற பொறுப்பை ஏற்றுக்கொண்டாக வேண்டும். வருங்காலம் உணர்வுப் பூர்வமானதாக இருக்கும். எதிர்காலத் தலைமுறை இந்த உணர்வைச் செயற்படுத்தத் தயாராக இருக்கிறது. திராவிட இயக்கத்திற்கு என்றைக்கும் தோல்வி கிடையாது.

கேள்வி:- பவள விழா நாளன்று சிறப்புச் செய்தி...?

நான்:-இந்திய மக்களுக்கும், இந்தியாவில் இருக்கின்ற தமிழ் மக்களுக்கும், உலகம் முழுவதும் இருக்கின்ற தமிழ் மக்களுக்கும் என்னுடைய இதயமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியா என்றைக்கும் ஒற்றுமையோடும், பலத்தோடும் இருக்க வேண்டும் என்பது என்னுடைய விருப்பம்.

கேள்வி:-தி.மு.கழகம் இந்த அளவிற்கு இருக்கக் காரணம் நீங்கள் தலைமை வகிப்பது தான் என்று கூறலாமா?

நான்:- 'நெய்க்கு தொன்னை ஆதாரமா? தொன்னைக்கு நெய் ஆதாரமா?' என்று ஒரு பழமொழி உண்டு. அதையே



தொண்டர்களுக்குத் தலைவர் ஆதாரம்-தலைவருக்குத் தொண்டர்கள் ஆதாரம் என்று திருப்பிச் சொல்கிறேன்.

★ ★ ★

என்னுடைய பவளவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில், தமிழக ஆளுநர் அவர்கள் டெல்லி சென்றிருந்தார். உடனே ஆட்சியைக் கவிழ்ப்பதையொட்டி, அறிக்கை பெறுவதற்காகத்தான் அவரை டெல்லியிலிருந்து வரச் சொல்லியிருக்கிறார்கள் என்று எங்கும் பேச்சு எழுந்தது. ஏடுகளும் எழுதின, எதிர்த்தரப்பினரும் தங்கள் விருப்பம் ஈடேறப் போகிறதென்ற எண்ணத்தோடு இருந்தனர்.

ஆனால், டெல்லியில் செய்தியாளர்களைச் சந்தித்த கவர்னர், ''தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு திருப்தியாக இருக்கிறது'' என்று கூறிய பிறகு, எதிர்பார்ப்போடு இருந்தவர்களுக்கு ஏமாற்றமாகப் போய்விட்டது. மேலும் ஆளுநர் அவர்களும், **மன்மோகன்சிங்** அவர்களும், **ஜார்ஜ் பெர்னாண்டஸ்** அவர்களும், **இந்திரஜித் குப்தா** அவர்களும் தொலைபேசி வாயிலாக டெல்லியிலிருந்து என்னைத் தொடர்பு கொண்டு வாழத்துத் தெரிவித்தார்கள்.

த.மா.கா.தலைவர் அருமை நண்பர் **மூப்பனார்** அவர்கள் என்னை நேரில் சந்தித்து வாழ்த்துக் கூறியதோடு, தங்கச் சங்கிலி ஒன்றையும் எனக்கு அணிவித்தார். அவரோடு அருமை நண்பர்கள் **சுதர்சனம், பீட்டர்அல்போன்ஸ், கராத்தே தியாகராஜன்** ஆகியோரும் வந்து என்னை வாழ்த்தினார்கள்.

மேலும், அந்தக் கட்சியின் சார்பில் **சோ.பாலகிருஷ்ணன், எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியம், ஏ.எஸ்.பொன்னம்மாள், வி.கே.இலட்சுமணன், சிதம்பரம் அழகிரி, சி.ஞான சேகரன், வேல்துரை, ரெங்கநாதன், ஆரூண், அமரமூர்த்தி, தலைவாசல் ராணி, பத்மா** ஆகியோரும் எனக்கு வாழ்த்துத் தெரிவித்தனர்.

முன்னாள் பிரதமர் **ஐ.கே.குஜ்ரால்** அவர்களும் கலை வாணர் அரங்கத்தில் என்னைச் சந்தித்து, பிறந்தநாள் பரிசு வழங்கி, கட்டித் தழுவி வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் **ஆர்.நல்லகண்ணு, ஏ.எம்.கோபு, ஜி.பழனிச்சாமி, கே.சுப்பராயன், நா.பெரியசாமி, வை.சிவபுண்ணியம், நாங்குநேரி கிருஷ்ணன்** ஆகியோரும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் **என்.வரதராசன், டி.கே.ரெங்கராஜன், மீனாட்சி சுந்தரம்** ஆகியோரும், எம்.ஜி.ஆர். கழகத் தலைவர் **ஆர்.எம்.வீரப்பன்**, பொதுச் செயலாளர் **ஜெகத்ரட்சகன்** ஆகியோரும், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சார்பில் **அப்துல் சமது, அப்துல் லத்தீப்**, மற்றும் **ஜி.ஏ.வடிவேலு, டேவிட், வேங்கடசாமி** எம்.எல்.ஏ., **திண்டிவனம் ராமமூர்த்தி, அன்பரசு, இல.கணேசன், மைத்ரேயன், திருநாவுக்கரசர், பேராசிரியர் தீரன்** ஆகியோரும் நேரில் வந்து என்னை வாழ்த்தினர்.

கலைத்துறையின் சார்பில் சூப்பர் ஸ்டார் **ரஜினிகாந்த்** வெளியூரிலிருந்து வாழ்த்துக் கடிதம் அனுப்பியதோடு, தொலை பேசியிலும் தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்தார்.

நேரில் சுப்ரீம் ஸ்டார் **சரத்குமார்**, டி.ராஜேந்தர், புரட்சிக் கலைஞர் **விஜயகாந்த்**, இலட்சிய நடிகர் **எஸ்.எஸ்.ராஜேந்**

திரன், ராதாரவி, வி.கே.ராமசாமி, நாகேஷ், சந்திரசேகர், தியாகு, ராதிகா, எம்.சரோஜா, எம்.எஸ்.விஸ்வநாதன், காவியக் கவிஞர் வாலி, கவிப்பேரரசு வைரமுத்து, கவிக்கோ அப்துல் ரகுமான், ஈரோடு தமிழன்பன், இசைமேதை டி.ஆர்.பாப்பா, லியாகத் அலிகான், தியாகி செங்கல்வராயன் ஆகியோரும் என்னை நேரில் வந்து வாழ்த்தினர்.

★ ★ ★

என் பவள விழாவினையொட்டி, ஜூன் 1 ஆம் தேதி முதல் மகளிர் அணியின் சார்பில் ''கருத்தரங்கம்''-மாணவர் அணியின் சார்பில் ''சுழலும் சொற்போர்''-மீனவர் அணியின் சார்பில் ''பட்டி மன்றம்''-இளைஞர் அணியின் சார்பில் ''கவியரங்கம்'' இலக்கிய அணியின் சார்பில் ''வாழ்த்தரங்கம்'' என நடந்தேறிய நிகழ்ச்சிகளுக்கெல்லாம் சிகரம் வைத்ததைப் போல, கடல் பொங்கிக் கரையில் வழிந்ததோ எனும் அளவிற்குக் கழகக் கண்மணிகளும், தமிழ்ப் பெருமக்களும் குழுமியிருந்த பவள விழாப் பொதுக் கூட்டத்தை-முத்துச்சிப்பிக்குள் இருந்து நான் வெளிவருவது போன்ற காட்சியை உருவாக்கி, வாழ்த்தலைகளின் முழக்கங்களை என் செவி குளிரக் கேட்கச் செய்து-என் சிரம் நாணிக் குனியுமளவிற்குப் பாராட்டுப் புகழ் உரைகளை வாரி வழங்கிய சீர்மிகு நிகழ்ச்சியை சென்னையில் நடத்திக் காட்டிய அன்றைய சென்னை மாவட்டக் கழகச் செயலாளர்கள் **சைதை கிட்டு, எல்.பலராமன்** ஆகியோரை அனைவரும் பாராட்டினர். இரண்டு மாவட்டக் கழகச் செயலாளர்களையும் பாராட்டி, ''**சைதை கிட்டு-செயலில் சிட்டு**'' என்ற தலைப்பில் அப்போது நான் கடிதம் ஒன்றையே முரசொலியில் எழுதியிருந்தேன்.

மாநில மாநாடுபோல அந்த விழா நடைபெற்றது. பொதுச்செயலாளர் **பேராசிரியர்** அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி அரியதோர் உரை நிகழ்த்தினார். நெருக்கடி நிலை காலத்தில், நான் அடைந்த வேதனைகளையும், சோதனைகளையும் வரிசையாக அந்தக் கூட்டத்தில் தொகுத்து

அவர் உரையாற்றினார். முன்னாள் பிரதமர் குஜ்ரால் அவர்களும் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினார். அவர் பேசிய உரையின் சுருக்கம் வருமாறு:-



கலைஞருக்குக் குவிந்த பவளவிழா வாழ்த்துகள் குறித்து 'தினமணி' வெளியிட்ட கார்ட்டூன்

''நான் இங்கே வந்திருப்பதன் பிரதான நோக்கம் என்னுடைய அருமை நண்பர் கலைஞர் அவர்கள் நெடுநாட்கள் வாழ வேண்டும்'' என்று வாழ்த்துவதற்காகத் தான். இந்த மகத்தான பூமியாகிய தமிழ் நாட்டிலிருந்து பல பெரிய மாற்றங்கள் தோன்றி இந்தியாவிற்கு வழிகாட்டியிருக்கின்றன. இன்று கலைஞர் அவர்கள் தலைமையேற்று நடத்துகிற திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு காலத்திலே பெரியார் அவர்களால் தலைமையேற்றுத் துவக்கி வைக்கப்பட்ட இயக்கமாகும். உண்மையிலேயே இந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தாயாகிய அந்த இயக்கம் ஒரு சாதாரண அரசியல் கட்சியல்ல. அது ஒரு இயக்கம். அந்த இயக்கத்தினுடைய நோக்கம் சமுதாய மாற்றம்! சமுதாயத்திலே இருக்கிறவர்கள்- ஒடுக்கப்பட்டவர்கள்- அடக்கப்பட்டவர்கள்- தீண்டத் தகாதவர்கள் ஆகியோரைக் கைதூக்கி விடுவதற்குச் சமுதாய மாற்றம் காணுவதற்காக உருவாக்கப் பட்டதுதான் அந்த மகத்தான இயக்கமாகும்.''

''இன்னும் சொல்லப்போனால் இந்தக்கட்சி வெகு காலத்திற்கு முன்பு துவங்கப்பட்ட நீதிக்கட்சியினுடைய தொடர்ச்சி என்று சொல்லலாம். இந்தக் கட்சியின் மூலாதாரக் கொள்கை பின் தங்கியவர்களைக் கைதூக்கி விடுவதாகும். சமுதாய அநீதியை நீக்குவதுதான் இந்த இயக்கத்தின் நோக்கம். இன்று முதலமைச்சர் கலைஞர் அவர்களை வாழ்த்துகிறோம் என்றால், அவர் இந்த வரலாற்றுக்குச் சொந்தக்காரர். கலைஞர்



கலைஞருக்குப் பவளவிழா வாழ்த்து தெரிவிக்கும், பேராசிரியர்

ஒரு அரசியல்வாதி மட்டு மல்ல - அரசியலுக்கு மட்டும் இந்த மாற்றத்தை அவர் பயன்படுத்தவில்லை. அவர் ஒரு இலக்கிய வாதியாகவும், நல்ல எழுத்தாளராகவும் விளங்குகிறார். அது மட்டுமல்ல-ஒரு சிந்தனை யாளராகவும், அறிவாளி யாகவும் அவர் விளங்கு கிறார். தமிழ் மக்கள் இந்தியாவில் ஒரு பகுதியில் மட்டும் வாழ்பவர்கள் அல்லர்-உலகமெங்கும் வாழ்கிறார்கள். அந்தத் தமிழர்கள் டாக்டர் கலைஞர் அவர்களுடைய எழுத்துக்களை, திரைப்படங்களை ரசித்து மகிழ்கிறார்கள்-போற்றிப் புகழ்கிறார்கள். இன்று நான் அவரை நீண்ட நாள் வாழ்க, வாழ்க என்று வாழ்த்துகிற போது-அவர் நல்ல உடல் நலத்துடன் வாழ வேண்டுமென்று வாழ்த்து தெரிவிக்கிற நேரத்தில், நான் நன்கு உணருகிறேன்-அவர் தோளில் சுமத்தப்பட்டிருக்கிற பொறுப்புக்கள் சாதாரணமானதல்ல-அவர் சுமக்கிற சுமை மிகவும் கனமானதாகும்.

"இந்த 75ஆவது பிறந்தநாளில் கலைஞர் அவர்கள் நாட்டுக்குத் தரக்கூடிய அன்பளிப்பு ஒன்று இருக்கிறதென்றால், அது ஒன்றுதான். அதுதான் சமாதான இயக்கத்திற்கு கலைஞர் அவர்கள் முன்னோடியாக விளங்க வேண்டுமென்று நான் அவரைக் கேட்டுக் கொள்கிறேன். சமாதானத்தை நாம் நிலை நாட்ட வேண்டும். சமாதான இயக்கத்தின் முன்னோடியாக இருக்குமாறு இங்கே கலைஞர் அவர்களையும், மூப்பனார் அவர்களையும், மேடையில் இருக்கக்கூடிய தலைவர்களையும் நான் வேண்டிக் கொள்கிறேன். கலைஞர் அவர்களுக்கு நல்வாழ்வும்-ஆரோக்கியமான வாழ்வும்-இலட்சியத்தை நிறைவேற்றக்கூடிய வாழ்வும் கிடைக்க வேண்டுமென்று வாழ்த்துகிறேன். தமிழ்நாடு மட்டுமல்ல-இந்தியாவும் ஒரு

நல்ல இலட்சியத்தை நோக்கி நடப்பதற்கு கலைஞர் அவர்கள் துணை நிற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்'' என்று ஐ.கே.குஜ்ரால் அவர்கள் நீண்ட பாராட்டுரை நல்கினார்.

அந்தக் கூட்டத்தில் பிரதமர் மட்டுமல்ல, தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு.மூப்பனார் அவர்களும், அகில இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் தோழர்.ஏ.பி.பரதன் அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் தோழர் என்.வரதராசன் அவர்களும், தியாகச் செம்மல் செங்கல்வராயன் அவர்களும், அப்துல் லத்தீப் அவர்களும், குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்களும், அருளாளர் ஆர்.எம்.வீ. அவர்களும், கோவை செழியன், ஜி.ஏ.வடிவேலு, பெரியவர் அய்யணன் அம்பலம், திருநாவுக்கரசர், பேராசிரியர் தீரன், பேராயர் எஸ்றா சற்குணம், வை.பாலசுந்தரம், டாக்டர் கிருஷ்ணசாமி, எழுத்தாளர் சாவி ஆகியோரும் என்னை மிகவும் பாராட்டி உரையாற்றினர்.

★ ★ ★

சென்னையில் பவளவிழா சிறப்பாக நடைபெற்று, மாவட்டக் கழகச் செயலாளர்கள் அதனைச் சீரும் சிறப்புமாக நடத்தியதை நான் பாராட்டியதும், திருச்சி மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி நேருவிற்குப்பொறுக்குமா? 7.6.1998 அன்று திருச்சியில் நடைபெற்ற பவள விழாவினையொட்டி, அவர் செய்திருந்த அலங்காரங்கள்... அப்பப்பா! சென்னையை வெற்றி கண்டு, செயலில் சிட்டு என்று அன்றைய சென்னை மாவட்டக் கழகக் செயலாளர் சைதை கிட்டுவை நான் பாராட்டியதைப் போல, ''நானும் பாராட்டைப் பெற்றுக் காட்டுகிறேன் பார்'' என்று ஏற்பாடு செய்திருந்தார், தம்பி நேரு.

அவர் செய்திருந்த அந்த அலங்காரங்களைப் பார்த்துவிட்டு, மேடையிலே மாவட்டச் செயலாளர்களுக்கு ஒரு குட்டு வைத்தேன். ''பவள விழா, பவள விழாவாக நடைபெற வேண்டும் அல்லாமல், அது பகட்டு விழாவாக நடைபெறக் கூடாது!'' என்று கூறினேன்.

திருச்சி நகரத்தையே அலங்கார விளக்குகளால் அழகுபடுத்தி இருந்தார் அவர். ஆர்வக்கோளாறு காரணமாக அவர் திருச்சியை அழகுபடுத்தியதைப் பாராட்டிய போதிலும், ''இனிமேல் அவ்வாறு ஊர் முழுவதும் அலங்காரம் செய்து எனக்குப் பவளவிழா நடத்துவதாக இருந்தால்-அது எந்த மாவட்டமாக இருந்தாலும் அந்த மாவட்டக் கழகங்களுக்கு நிச்சயமாக அனுமதி தரமாட்டேன்'' என்பதை திருச்சி விழாவிலே நான் தெளிவுபடுத்தினேன்.

அதுபற்றிக் கூறும்போது, ''பவளவிழா பகுத்தறிவு விழாவாக இருக்க வேண்டும்-வெறும் பளபளப்பு விழாவாக இருந்து பயனில்லை. பவளவிழா அரசியல் விளக்க வெளிச்சம் தரும் விழாவாக மட்டும் இருக்க வேண்டும்-ஆடம்பரத்தை அள்ளித் தெளிக்கும் விழாவாக இருப்பதை நான் அனுமதிக்கப் போவதில்லை. பவளவிழா, பகுத்தறிவு, அரசியல், சமுதாய நலம், மக்களிடையே விழிப்புணர்வு-இவைகளுக்காகப் பயன்படுகிற விழாவாகத்தான் அமைய வேண்டுமேயல்லாமல், ''விளக்கு அலங்காரங்கள் வெகுநேர்த்தி'' என்று மக்கள் பாராட்ட வேண்டும் என்பதற்காக இத்தகைய விழாக்களை நடத்த வேண்டாம்'' என்று திட்டவட்டமாகக் கூறினேன்.

''தமிழகத்திலே சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது-ஆட்சியைக் கலைக்க வேண்டும்'' என்று தீவிரமாகக் குரல் கொடுத்துக் கொண்டிருந்தவர்களுக்கும் அண்ணா அவர்கள் அடிக்கடி கூறும் கதை ஒன்றையே எடுத்துக்காட்டி, அந்தக் கூட்டத்திலே நான் பதில் கூறினேன்.

''ஒரு நரி ஆற்றோடு வெள்ளத்தில் போய்க் கொண்டிருந்ததாம். ''அய்யோ, உலகம் போய்விட்டது, உலகம் போய்விட்டது'' என்று அந்த நரி கூச்சலிட்டதாம். ஆற்றின் கரையிலே நின்று கொண்டிருந்தவர்கள், நரி என்ன இப்படி உலகம் போய்விட்டதாகச் சொல்கிறது-அதைத் தூக்கி என்னவென்று கேட்கலாம் என்று நினைத்து, வெள்ளத்தில் போய்க்கொண்டிருந்த நரியைக் காப்பாற்றி மேலே கொண்டுவந்து- ''அதென்ன உலகம் போய்விட்டது என்று கூச்சலிட்டாயே-அதற்கு என்ன பொருள்? ஏன் அப்படிக்




''தமிழ்நாடு மட்டுமல்ல - இந்தியாவும் முன்னேற கலைஞர் துணை நிற்க வேண்டும்'' என்று கட்டித் தழுவி வாழ்த்தினார், ஐ.கே. குஜ்ரால்

கூச்சலிட்டாய்?'' என்று கேட்டார்களாம். அதற்கு அந்த நரி, ''என்னை ஆறு அப்படியே அடித்துக் கொண்டு போயிருந்தால், என்னைப் பொறுத்த வரையில் உலகம் போயிருக்குமா- இல்லையா? அதைத்தான் நான் அப்படிச் சொன்னேன்'' என்று கூறியதாம். அதனைக் காப்பாற்றியவர்கள் கோபமடைந்து மீண்டும் அந்த நரியைத் தூக்கி ஆற்றிலே போட்டுவிட்டுப் போனார்களாம். அதைப்போல அரசியலிலே பாதிக்கப் பட்டவர்கள்தான் தமிழகத்திலே சட்டம் - ஒழுங்கு கெட்டுவிட்டது என்று கூச்சலிடுகிறார்கள்'' என்று அந்தக் கூட்டத்தில் கூறினேன்.

அதே நேரத்தில் அந்தக் கூட்டத்தில் பிரதமர் அவர்களுக்கும் தெரிய வேண்டும் என்பதற்காக ஒரு கதையை-அந்தக் கால கட்டத்தில், ஆந்திர மாநிலத்தில் மருத்துவமனையிலே நடந்த ஒரு கண் அறுவை சிகிச்சை பற்றிய நிகழ்ச்சியை எடுத்துக்கூறி, ''எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும்'' என்று வேண்டுகோள் விடுத்தேன்.

ஆந்திராவில் ஒரு குழந்தைக்கு ஒரு கண்ணிலே புற்றுநோய் வந்து விட்டது. ''அந்தப்புற்றுநோயை அகற்ற முடியாத நிலையில், கண்ணையே அகற்றிவிட்டால்தான், குழந்தை பிழைக்கும்-இல்லாவிட்டால் இன்னொரு கண்ணுக்கும் புற்றுநோய் பரவி குழந்தை குருடாக நேரிடும்-குழந்தை இறந்துவிடும்'' என்று மருத்துவர்கள் புற்றுநோய் தாக்கிய கண்ணை அறுவை சிகிச்சை மூலம் அகற்றிட முடிவு செய்தார்கள்.



கலைஞருக்கு பவளவிழா வாழ்த்து தெரிவிக்கிறார் இல.கணேசன்

குறிப்பிட்ட நாளன்று குழந்தையை அறுவை சிகிச்சை அறைக்கு அழைத்துச் சென்றார்கள். குழந்தைக்கு மயக்க மருந்து கொடுத்து, படுக்க வைத்து, அறுவை சிகிச்சை செய்யப்போன டாக்டரிடம், அங்கேயிருந்த யாரோ ஒருவன், தெரிந்தோ தெரியாமலோ "நோயுற்ற கண் இடது கண்" என்று சொல்லிவிட்டான். ஆனால், உண்மையில் வலது கண் தான் பாதிக்கப்பட்ட கண். டாக்டரும் புத்தி கெட்டு நன்றாக இருந்த கண்ணை அறுவை சிகிச்சை செய்து அகற்றி விட்டார். புற்றுநோய் தாக்கிய கண் அப்படியே விடப்பட்டு விட்டது. குழந்தை இரண்டு கண்ணும் போய்விட்ட நிலைக்கு ஆளாகியது.

இந்தக் கதையை அந்தக் கூட்டத்திலே நான் நினைவுபடுத்தி, "பிரதமர் அவர்களே! தமிழ்நாடு நல்ல கண்ணாக இருக்கிறது. புற்று நோய் கொண்ட கண் வேறெங்கோ இருக்கலாம். அதை விட்டுவிட்டு கண் பார்வை உள்ள கண்ணை எடுத்து விட்டால், குழந்தை மாத்திரம் குருடாகாது. ஜனநாயகமே குருடாகி விடும்!" என்று எடுத்துச் சொன்னேன்.

★ ★ ★

திருச்சியில் நடைபெற்ற பவளவிழா நிகழ்ச்சியில் ஆடம்பரங்கள் கூடாது என்று நான் எவ்வளவோ எச்சரித்த போதிலும், அதற்கடுத்த இரண்டாவது நாள் 9.6.1998 அன்று விழுப்புரத்தில் நடைபெற்ற பவளவிழா நிகழ்ச்சியிலும், விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத் திறப்பு விழாவிலும் கலந்து கொண்டேன். 7ஆம் தேதி விழாவில் நேரு

திருச்சி மாநகரைத் தான் அலங்காரம் செய்திருந்தார் என்றால், 9ஆம் தேதி விழுப்புரம் மாவட்டதையே அலங்காரம் செய்து விட்டார் தம்பி **பொன்முடி**. ''திருச்சியிலேதானே ஆடம்பரம் செய்ய வேண்டாமென்று சொன்னேன்'' என்று நான் கேட்ட போது, ''அண்ணே! அதற்கு முன்பே இந்த அலங்காரங்கள் எல்லாம் செய்யப்பட்டுவிட்டன. எதையும் எடுப்பதற்கு தொண்டர்கள் முன்வரவில்லை'' என்றார்.

திருச்சியிலிருந்து விழுப்புரம் வருவதற்கு முன்பே இடையில் 8ஆம் தேதியன்று சேலம் மாவட்டத்தில் கச்சிராயப் பாளையத்தில் ஒரு சர்க்கரை ஆலை திறப்பு விழாவிலும் கலந்து கொண்டுவிட்டு வந்தேன். விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தினைத் திறந்து வைக்கும் நிகழ்ச்சியிலே கலந்து கொண்டபோது, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கென தனி இட ஒதுக்கீடு கோரி அ.தி.மு.க.ஆட்சியிலே 1987 ஆம் ஆண்டு நடைபெற்ற போராட்டத்தில் பங்கேற்று, துப்பாக்கிச் சூட்டிலே பலியானோர் குடும்பங்களுக்கெல்லாம் தலா மூன்று இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினேன். அமைச்சர்கள் **ஆர்க்காடு வீராசாமி, தம்பி வீரபாண்டி ஆறுமுகம், தம்பி துரைமுருகன், தம்பி பொன்முடி, தம்பி எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம்** மற்றும் பேராசிரியர் **தீரன்** ஆகியோர் அந்த விழாவிலே கலந்து கொண்டனர்.

★ ★ ★

35.கைக்கு எட்டியது... ஆனால் வாய்க்கு?

மூன்று பிரதமர்கள் காலத்திலும் நான்தான் தமிழகத்தின் முதலமைச்சர் பொறுப்பிலே இருந்தேன்.

காவிரி நதி நீர் பிரச்சினையிலே மேற்கொண்ட பேச்சு வார்த்தைகள்-நடவடிக்கைகள் பற்றியெல்லாம் இந்தத் தொடரில் அவ்வப்போது எழுதி வந்திருக்கிறேன். 1998ஆம் ஆண்டுவரை காவிரி பிரச்சினைபற்றி தமிழக அரசும், கர்நாடக அரசும் 26 முறை பேச்சுவார்த்தைகள் நடத்தியும் பலனளிக்காத நிலையில், தமிழ்நாடு அரசு மத்திய அரசிடம் ஒரு நடுவர் மன்றத்தை அமைக்கக் கோரியதால்-1990 ஆம் ஆண்டு, சூன் திங்களில், நடுவர் மன்றத்தினை மத்திய அரசு ஏற்படுத்தியது. உச்சநீதிமன்றம் சட்டப்படி நடுவர் மன்றத்தினை ஏற்படுத்த ஆணை பிறப்பித்த பிறகே, மத்திய அரசு காவிரி நடுவர் மன்றத்தை ஏற்படுத்தியது.

நீண்ட சட்ட விவாதங்களுக்குப் பிறகும்-உச்ச நீதிமன்றத்தின் ஆணைப்படியும் 25.6.1991 அன்று காவிரி நடுவர் மன்றம் அதன் இடைக்கால ஆணையைத் தந்தது. அந்த ஆணையை மத்திய அரசு 10.12.1991 ஆம் நாளன்று அரசிதழில் வெளியிட்டது. இத்தனைக்கும் பிறகுகூட, நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை செயலாக்க கர்நாடகா முன்வரவில்லை.

மாறாக, 'கர்நாடக காவிரிப் படுகை பாசன பாதுகாப்பு அவசரச் சட்டம்-1991' என்று ஓர் அவசரச் சட்டத்தைப் பிறப்பித்து (பிறகு அது சட்டமாக இயற்றப்பட்டது) இடைக்கால ஆணைக்கு விளக்கம் கோரி நடுவர் மன்றத்தில்

மனுச் செய்தும் - நடுவர் மன்ற இடைக்கால ஆணை செல்லாது என்று ஆணை பிறப்பிக்கக் கோரியும்-உச்சநீதி மன்றத்தில் கர்நாடக அரசு வழக்கு தொடுத்தது.

இறுதியாக-இந்தியக் குடியரசுத் தலைவர்-உச்சநீதி மன்றத்தின் கருத்தினை அளிக்கும்படிக் கோரியதன் பேரில், கர்நாடகாவின் அவசரச் சட்டம்-அந்த அரசின் சட்டம் இயற்றும் வரம்பிற்குள் இல்லை என்றும்-அவைகள் அரசியல் சாசன சட்டத்தின்படி செல்லத்தக்கது அல்ல என்றும்-உச்சநீதி மன்றம் தெளிவுபடுத்தியது. நடுவர் மன்றத்திற்கு இடைக்கால ஆணை வழங்க அதிகாரம் உண்டு என்றும் உச்சநீதிமன்றம் கருத்து கூறியது.

நடுவர் மன்றம் மற்றும் உச்சநீதி மன்றம் ஆகியவற்றின் ஆணைகளுக்குப் பிறகும், நடுவர் மன்ற இடைக்கால ஆணையினைச் செயல்படுத்தாமல் இருப்பதில் கர்நாடகா உறுதியாக இருந்து வந்தது. அந்தச் சூழ்நிலையில் இடைக்கால ஆணையினைச் செயல்படுத்துவதற்காக ஒரு திட்டத்தைத் தீட்டி, அரசிதழில் வெளியிடுமாறு தமிழக அரசு மத்திய அரசைக் கோரி வந்தது. மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர் சட்டம், 1956, பிரிவு 6ஏ-இன்படி-நடுவர் மன்றத்தின் ஆணையினை செயலாக்குவதற்காக, ஒரு திட்டத்தை மத்திய அரசு தீட்ட, சட்டப்படி கடமைப்பட்டுள்ளது.

பிரிவு 6-நடுவர் மன்றத்தின் ஆணையை மத்திய அரசு அதன் அரசிதழில் அறிவிக்கையாக வெளியிட வேண்டும். அப்படி வெளியிடப்பட்டால் அந்த ஆணையானது-இறுதியானது



காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை அரசிதழில் வெளியிட, கலைஞர் கோரிக்கை விடுத்தார்.



மற்றும் தாவாவில் சம்பந்தப்பட்ட மாநிலங்கள் அதைச் செயற்படுத்த சட்டப்படி கட்டுப்படுத்துவதோடு மட்டு மல்லாமல், அதனைச் செயலாக்கம் செய்யவும் வேண்டும்.

பிரிவு-6ஏ(1) பிரிவு 6ன் கீழ் உள்ள ஷரத்துகளுக்குப் பாதகம் இல்லாமல், நடுவர் மன்றத்தின் தீர்ப்பினைச் செயல்படுத்தும் பொருட்டு, மத்திய அரசு ஒரு திட்டத்தைத் தீட்டி, அதை அறிவிக்கை மூலம் அரசிதழில் வெளியிடலாம்.

இந்த விவரங்களையெல்லாம் நானே ஒரு கடிதமாக எழுதி, கழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் அனுப்பினேன். நாடாளுமன்றத்திலே இந்தக் கருத்துக்களை எடுத்துரைத்து, நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்தும் திட்டத்தை அரசிதழில் வெளியிட வலியுறுத்தி உரையாற்றிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். மேலும் அவர்கள் காவிரி பிரச்சினைப் பற்றி முழு விவரங் களையும் தெரிந்திருக்க வேண்டுமென்பதற்காக அவர்களுக்கு நான் எழுதிய கடிதத்தில் அது பற்றிய விவரங்களையும் தெரிவித்தேன்.


இடைக்கால ஆணையினைச் செயற்படுத்த கர்நாடகாவிற்கு ஆணையிடவும், 1992ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்கினை, தமிழ்நாடு அரசு தொடர்ந்தது.

★ ★ ★

பல விவாதங்களுக்குப் பிறகு, கணிசமான சட்ட நுணுக்கம் மற்றும் அரசியல் அமைப்பிற்கு விளக்கங்கள் தேவை

ஏற்படுவதால் அந்த வழக்கினை உச்சநீதிமன்றத்தின் அரசியல் சாசனப் பிரிவின் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள 1997, மார்ச் மாதம் உச்சநீதி மன்றம் உத்தரவிட்டது. உச்சநீதி மன்றத்தின் அரசியல் சாசனப் பிரிவு, இந்த வழக்கின் விசாரணையை 1997, ஏப்ரல் மாதம் துவங்கியது.

உச்சநீதி மன்றத்தில் நடைபெற்ற விசாரணை மற்றும் விவாதத்தின் முடிவில், மத்திய அரசு சட்டப்படி ஒரு திட்டத்தைத் தீட்ட முன்வருகிறது என்று 9.4.1997 அன்று உச்சநீதி மன்றத்தில் மத்திய அரசின் தலைமை வழக்கறிஞர் எழுத்து மூலமாகக் கூறினார்.




''நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை பாரதீய ஜனதா கூட்டணி அரசு நடைமுறைப் படுத்தவில்லை'' என்று நாடாளுமன்றத்தில் குற்றம் சாட்டினார், முரசொலி மாறன்

உச்சநீதி மன்றத்தில் அளித்த உறுதிமொழியை நிறைவேற்றும் பொருட்டு, மத்திய அரசு ஒரு வரைவுத் திட்டத்தைத் தயாரித்து 30.5.1997 ஆம் நாளன்று சம்பந்தப்பட்ட மாநிலங்களின் கருத்தை அனுப்புமாறு கேட்டுக்கொண்டது. தமிழ்நாடு அந்த வரைவுத் திட்டத்தை சட்டத்திற்கு உட்பட்டு, ஒரு சில கருத்துக்களுடன் பொதுவாக ஏற்றுக் கொள்வதாக மத்திய அரசுக்கு 23.6.1997 அன்று தெரிவித்தது.

20.8.1997 அன்று உச்சநீதிமன்றம் திட்டத்தை மத்திய அரசு இறுதி செய்ய நடவடிக்கை மேற்கொண்டு, உச்சநீதி மன்றத்திற்குத் தெரிவிக்க வேண்டும் என்றும்-வழக்கு உச்சநீதி மன்றத்தில் மீண்டும் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்படும் என்றும் தெரிவித்தது.

நடுவர் மன்றத்தின் ஆணையை செயல்படுத்துவதில் தாமதத்தை தவிர்க்கும் வண்ணம், திட்டத்தை இறுதி செய்து அரசிதழில் வெளியிட வேண்டும் என்று 9.7.1997, 23.7.1997, 29.9.1997, 1.11.1997, 6.11.1997 ஆகிய நாட்களில் பிரதமருக்கு



''15 மாதங்கள் ஆகியும், ஏன் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை?'' என்று வினா எழுப்பினார், -டி.ஆர்.பாலு.

எழுதிய கடிதங்களிலும், 27.7.1997 மற்றும் 29.9.1997 ஆகிய நாட்களில் பிரதமரை நேரில் சந்தித்தும் வரைவுத் திட்டத்தை விரைவில் இறுதி செய்து அரசிதழில் வெளியிடும்படிக் கேட்டுக் கொண்டேன்.

10.11.1997 அன்று, மத்திய அரசு வரைவுத் திட்டத்தை இறுதி செய்து, மேற்படி திட்டத்தை அரசிதழில் வெளியிட அக்கறை செலுத்தாத நிலையில், மத்திய அரசுக்கு அப்படியொரு ஆணை பிறப்பிக்க உச்ச நீதி மன்றத்தில் கோரிக்கை வைத்து, தமிழக அரசு முறையீட்டு மனு ஒன்றைத் தாக்கல் செய்தது. அதன் பின்னரும் மத்தியஅரசு ஒரு முடிவுக்கு வராத நிலையில், 28.3.1998, 6.4.1998,மற்றும் 31.5.1998 ஆகிய நாட்களில் பிரதமருக்குக் கடிதம் மூலமாகவும் 7.4.1998 அன்று நேரில் சந்தித்தும் வரைவுத் திட்டத்தை விரைவில் இறுதி செய்து அரசிதழில் வெளியிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன்.

இந்த விவரங்களையெல்லாம் குறிப்பிட்டு கழக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கடிதம் எழுதி, பாராளுமன்றத்தில் அது குறித்து வாதிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். மேலும் 16.7.1998 அன்று, பிரதமர் வாஜ்பாய் அவர்களுக்கு நான் எழுதிய கடிதத்தில் 25.6.1991 அன்று நடுவர் மன்றம் வழங்கிய இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்தும் திட்டத்தை, ஜூலை 21 ஆம் தேதிக்குள் அதாவது உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் படுவதற்கு முன்பாக-அரசிதழில் வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன்.

ஆனால் மத்திய அரசிடமிருந்து எந்தவிதமான பதிலும் வராத நிலையில் 20.7.1998 அன்று நாடாளுமன்றத்தில் தி.மு.க.

மற்றும் த.மா.கா. உறுப்பினர்கள் இதனை வலியுறுத்தியதோடு, இரு அவைகளிலேயிருந்தும் வெளிநடப்பு செய்தனர்.

மக்களவையிலே இதுபற்றி பேசிய **முரசொலி மாறன்** ''நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவை அமல்படுத்துவது குறித்து ஐக்கிய முன்னணி அரசு ஒரு திட்டத்தை உருவாக்கியிருந்தது. ஆனால் பாரதீய ஜனதா கூட்டணி அரசு அதை நடைமுறைப்படுத்த வில்லை'' என்றார்.

தம்பி **டி.ஆர்.பாலு** ''உச்சநீதிமன்றத்தில் காவிரி நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்தும் திட்டத்தை உருவாக்கி, எட்டு வாரங்களுக்குள் மாநில அரசுகளின் கருத்தை அறிந்து இறுதி செய்யப்படுவதற்கு **அட்டார்னி ஜெனரல்** உறுதியளித்திருந்தும், 15 மாதங்கள் ஆகியும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை'' என்பதை எடுத்துக் காட்டினார்.

உச்சநீதி மன்றத்தில் காவிரி பற்றிய வழக்கு 21.7.1998 அன்று வந்து - உச்சநீதிமன்றம் அதுதான் கடைசி தவணை என்று கூறி, ஆகஸ்ட் 12ஆம் தேதிக்கு வழக்கை ஒத்தி வைத்தது. மேலும் நீதிபதிகள், ''பிரச்சினையை சுமூகமாகத் தீர்க்கப் போவதாக மத்திய அரசு உறுதியளித்து. 15 மாதம் ஆகிறது. இன்னமும் இணக்கமான திட்டம் உருவாக்கப்படவில்லை. இந்த நிலை நீடித்துக் கொண்டே போவதை அனுமதிக்க முடியாது'' என்று கூறினர்.

★ ★ ★

28.7.1998 அன்று பிரதமர் வாஜ்பாய் அவர்கள் எனக்கு எழுதிய கடிதத்தில், காவிரிப் பிரச்சினையிலே நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பினை அமல் படுத்துவது பற்றி, உச்சநீதிமன்றம் அண்மையிலே தெரிவித்த அறிவுரையின் படி, மாறுபாடுகளைக் குறைத்து, ஒப்புக் கொள்ளக்கூடிய முடிவுகளை நட்புத் தன்மையோடு எடுப்பதற்காக 6.8.1998 அன்று டெல்லியிலே உள்ள பிரதமர் அலுவலகத்தில் என்னுடனும், சம்பந்தப்பட்ட மற்ற மாநில முதல்வர்களுடனும் கலந்து பேசிட இருப்பதாகவும், அதற்கு



''டெல்லியில் பிரதமர் கூட்டிய முதல்வர்கள் மாநாட்டில், கலைஞர் பங்கேற்க வேண்டும்'' என்று அனைத்துக் கட்சித் தலைவர்களும் முடிவு செய்தனர்.

என்னுடைய முழுமனதான ஒத்துழைப்பை நாட்டின் நலன் கருதி கோரியும், சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு இடையே நீண்ட காலமாகத் தீராமல் இருக்கும் காவிரிப் பிரச்சினைக்கு இரு தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய முடிவுகளை எடுப்பதற்காக வழி வகுக்க வேண்டும் என்றும் தெரிவித் திருந்தார்.

அந்தக் கடிதத்தின் அடிப்படையில், தமிழகத்திலே உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டம் ஒன்றினை 3.8.1998 அன்று கூட்டியிருந்தேன்.

அந்தக் கூட்டம் காலை 10 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை தொடர்ந்து நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் 41 கட்சியினர் கலந்து கொண்டனர். இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதில் ''6.8.1998 அன்று பிரதமர் கூட்டியிருந்த கூட்டத்தில் நான் கலந்து கொள்ளலாம்-உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்'' என்றும் கருத்துகள் தெரிவிக்கப்பட்டன.

ஆனால், அந்தத் தீர்மானத்திற்கு எதிராக அ.தி.மு.க.சார்பில் ஜெயலலிதா விடுத்த அறிக்கையில், ''டெல்லிக் கூட்டத்திற்குச் செல்லக்கூடாது'' என்று தெரிவித்திருந்தார்.

ஆனாலும், 6ஆம் தேதி டெல்லியில் பிரதமர் கூட்டியிருந்த கூட்டத்தில், நானும், கர்நாடக முதல்வர் ஜே.எச்.பட்டேல்

அவர்களும், கேரள முதல்வர் **நாயனார்** அவர்களும், புதுவை முதல்வர் **ஜானகிராமனும்** கலந்து கொண்டோம்.

முதல் சுற்றுப்பேச்சு நான்கு மணி நேரம் நடந்தது. முதல்வர்களுடன் தனித்தனியாகவும், அதிகாரிகளுடனும் பிரதமர் விவாதித்தார். அந்தப் பேச்சு வார்த்தையில் அப்போது ராணுவத் துறை அமைச்சராக இருந்த **ஜார்ஜ் பெர்னாண்டஸ்** அவர்களும், திட்டக்குழுத் துணைத்தலைவராக இருந்த **ஜஸ்வந்த் சிங்** அவர்களும் பங்கேற்றனர். இரண்டு சுற்றுப் பேச்சு வார்த்தைக்குப் பின்னரும் சுமூகத் தீர்வு காண இயலாத காரணத்தால், இரண்டாவது நாளாக மீண்டும் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் நான் பேசிய பேச்சின் சுருக்கம் வருமாறு:-

"காவிரி நீர் (1991 ஆம் ஆண்டு ஆணை அமலாக்கல்) திட்டத்தை இறுதி செய்து அரசிதழில் வெளியிடுவதற்காக- காவிரிநதி பாயும் மாநிலங்களின் முதல் அமைச்சர்களின் கூட்டத்தைக் கூட்டும் முயற்சியில் ஈடுபட்டதற்காக முதலில் நான் பிரதமர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கின் தொடர்ச்சியாகவே இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

"காவிரி நதிநீர் தாவா நடுவர் மன்றமே உச்சநீதி மன்றத்தின் உத்தரவின் பேரிலேயே அமைக்கப்பட்டது. உச்சநீதிமன்றத்தின் குறுக்கீட்டின் பேரிலேயே நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணை பிறப்பிக்கப் பட்டது. 1956 ஆம் ஆண்டு மாநிலங்களுக் கிடையிலான நதிநீர் தாவா சட்டத்தின் 6-ஏ பிரிவின் கீழ் இந்திய அரசுக்கு சட்டப் பூர்வ கடமை இருந்த போதிலும், நடுவர் மன்றத்தின்





டெல்லியில் நடைபெற்ற கூட்டத்திற்குச் சென்ற கலைஞரை வரவேற்றார், பிரதமர் வாஜ்பாய்

ஆணையை அமல்படுத்துவதை உறுதி செய்வதற்கான திட்டம் ஒன்றை உருவாக்க மத்திய அரசு முன் வரவில்லை என்பது வேதனைக்குரிய செய்தியாகும். இது தொடர்பாக ஏழு ஆண்டுகளாக தமிழக அரசு இடைவிடாமல் மேற்கொண்டு வரும் முயற்சிகளைப் பிரதமர் அறிந்துள்ளார் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.''

''தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில்தான் உச்ச நீதிமன்றம், 1997ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9 ஆம் தேதி, உச்சநீதி மன்றத்தின் அரசியலமைப்பு பெஞ்ச் முன்னிலையில், இந்தியஅரசு தானாகவே அளித்த உறுதி மொழியை நிறைவேற்றுவது தொடர்பான கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு கடைசி ஒத்திவைப்பு இந்திய அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது.

''கர்நாடக மாநில அணைகளிலிருந்து தண்ணீர் திறந்து விடுவதில் உள்ள நிச்சயமற்ற தன்மை தமிழ்நாட்டின் காவிரி டெல்டாப் பகுதியின் பொருளாதாரத்தையே சீரழித்து விட்டது. சம்பந்தப்பட்ட மாநிலங்களிடம் விசாரணை நடத்திய பிறகுதான் நடுவர் மன்றம் அதன் இடைக்கால ஆணையை வழங்கியது. இந்த ஆணையால் வருத்தமடைந்த கர்நாடக அரசு, சில பிரச்சினைகளில் விளக்கம் கோரி நடுவர் மன்றத்தை அணுகியது. அதனால் நடுவர் மன்றம் பிரச்சினை முழுவதையும் மறுபடி ஆய்வு செய்து, கர்நாடக அரசால் எழுப்பப்பட்ட எல்லா பிரச்சினைகளுக்கும் விளக்கம் அளித்து, இடைக்கால ஆணையை உறுதி செய்தது.''

''உச்சநீதி மன்றத்தில் இந்தப் பிரச்சினை 12.8.1998 ஆம் தேதி பரிசீலனைக்கு வருவதற்கு முன்பாக, மத்திய அரசின் வரைவுத் திட்டத்தை அரசிதழில் வெளியிட பிரதமர் உதவிட

வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கின்றேன். காவிரிநதி நீர்ப் பிரச்சினையை விசாரிப்பதற்கு நடுவர் மன்றம் ஒன்றை அமைக்க இந்தியஅரசுக்கு உத்தரவிட்ட தீர்ப்பை, 1990 ஆம் ஆண்டு மே மாதம் 4ஆம் தேதி உச்சநீதிமன்றம் அளித்தபோது- நீதிபதி ரங்கநாத் மிஸ்ரா கூறிய கருத்துக்களை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.''

★ *''இதில் சட்டப்பூர்வமாக தேவைப்படும் நிர்வாக நடவடிக்கை எடுப்பதை மேலும் தாமதப்படுத்துவது உணர்வுகளை மேலும் மோசமாக்கி, மேலும் அதிக அளவில் விரோதத்தை வளர்க்கும். எனவே பிரச்சினை பெரிதாகும் முன், சட்டப் பூர்வமான அமைப்பை அமைத்து, அதைச் சட்டரீதியில் செயல்படச் செய்ய வேண்டியது அவசியம். தொடக்கத்திலேயே சீர் செய்தால் அதிக இழப்பை தவிர்க்கலாம். இது தனிப்பட்ட மனிதனுக்கு மட்டுமல்ல-ஒரு நாட்டுக்கும் இது மிகவும் பொருத்தமாக இருக்கும்'' - என்று நீதிபதி குறிப்பிட்டிருக்கிறார்.''*

''எனவே மேலும் தாமதம் ஏற்படாத வகையில், இந்தத் திட்டத்தை சட்டப்படி அரசிதழில் வெளியிடுமாறு பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்'' என்று நான் பேசினேன்.

- பிரதமர் வாஜ்பாய் அவர்கள் இரண்டு நாட்கள் நடத்திய இந்தக் கூட்டத்தின் இறுதியில், கலந்து கொண்ட மாநிலங்கள் எல்லாம் ஏற்றுக் கொண்ட அளவில், ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தின் படி இடைக்கால ஆணையில் கூறப்பட்ட 205 டி.எம்.சி. தண்ணீர் மேட்டூர் அணைக்கு விடுவிக்கப்பட வேண்டும். இதன்படி பிரதமர், காவிரி பாயும் நான்கு மாநிலங்களின் முதல்வர்கள் அடங்கிய ஆணைக்குழு ஒன்று அமைக்கப்படும். பிரதமர் அவர்கள் ஆணைக்குழுவின் தலைவராக விளங்குவார். இதுதான் அன்று முடிவான வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒப்பந்தம்.

அந்த ஒப்பந்தத்திற்கு வழிவகுத்த பிரதமர் அவர்களுக்கும், மத்திய திட்டக் குழுத் துணைத்தலைவர் ஜஸ்வந்த்சிங்



டெல்லி முதல்வர்கள் கூட்டத்தில், கர்நாடக முதல்வர் ஜே.எச். பட்டேல் அவர்களுடன் கலைஞர்

அவர்களுக்கும், மத்திய மாநில அதிகாரிகளுக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டேன். காவிரி பிரச்சினைக்கு சுமூக தீர்வு ஏற்பட்டதை பல்வேறு அரசியல் கட்சிகளும் வரவேற்று அறிக்கைகளைக் கொடுத்தன.

புதுடெல்லியில் என்னைச் சந்தித்த செய்தியாளர்கள், ''காவிரிப் பிரச்சினையில் சுமூகத் தீர்வு காணப்பட்டுள்ளதை நீங்கள் வெற்றியாகக் கருதுகிறீர்களா?'' என்று கேட்டார்கள்.

''ஏற்பட்டுள்ள முடிவில் நான்கு மாநில முதல்வர்களுக்கும் மகிழ்ச்சியே தவிர, ஒருவருக்கொருவர் வெற்றி என்று கூறிக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை'' என்று நான் கூறினேன்.

மேலும் நான் கூறும்போது, ''1990 ஆம் ஆண்டு வி.பி.சிங் பிரதமராக இருந்தபோது நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது. நடுவர் மன்றத்தினுடைய தீர்ப்பு 91 ஆம் ஆண்டு வெளியாகி, ஏழு ஆண்டு காலமாக அந்த இடைக்காலத் தீர்ப்பை நிறைவேற்ற முடியாத சூழ்நிலை இருந்தபோது, உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கின் காரணமாக இடைக்காலத் தீர்ப்பை நிறைவேற்றுவதற்கான திட்டம் குஜ்ரால் பிரதமராக இருந்தபோது வகுக்கப்பட்டது. வாஜ்பாய் பிரதமராக இருக்கும்போது அந்தத் திட்டம் அமலுக்கு வரவும், நடுவர்மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பான 205 டி.எம்.சி. தமிழகத்திற்குக் கிடைக்கவுமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த மூன்று பிரதமர்களுடைய காலத்திலும் நான் முதலமைச்சர் பொறுப்பிலே


தமிழ்நாட்டுக்கு
205 டி.எம்.சி. காவிரி நீர் வழங்க ஒப்புதல்
பிரதமர் முன் நடந்த கூட்டத்தில் ஒப்புதல்

இருந்திருக்கிறேன் என்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்'' என்று கூறினேன்.

5.8.1998 தேதிய ''தினமணி'' நாளேட்டில் வெளிவந்த தலையங்கத்தில் -

★ *''அனைத்துக் கட்சியினரின் சம்மதத்துடன் டெல்லி செல்ல முதல்வர் முடிவெடுத்ததில் தவறு ஏதுமில்லை. கட்சிகளிடையே தொடர்ந்து பொதுக் கருத்து இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் வாயிலில் காத்திருந்து. அனைத்துக்கட்சிப் பிரதிநிதிகளையும் முதல்வர் வரவேற்றார். தமிழக விவசாயிகளின் நலன் தொடர்பான பிரச்சினை அரசியலுக்கு அப்பாற் பட்டதாகத் தானே இருக்க வேண்டும்? தமிழகத்தின் ஓர் எதிர்க்கட்சியின் தலைவர் என்ற முறையிலும், வாய்ப்பாய் கூட்டணி அரசில் இடம் பெற்றுள்ள இரண்டாவது பெரிய கட்சியின் தலைவர் என்ற வகையிலும், ஜெயலலிதா இக்கூட்டத்தில் கலந்து கொண்டு ஆக்கப்பூர்வமான ஆலோசனை வழங்கியிருந்தால், பொருத்தமாக இருந்திருக்கும். இத்தனைக்கும் அவர் சென்னையில்தான் இருந்திருக்கிறார். ஆனால் தனது பிரதிநிதியை அனுப்பி வைத்த அவர், ஆகஸ்டு ஆறாம் தேதி, ''டெல்லியில் பிரதமர் கூட்டியுள்ள கூட்டத்தில் முதல்வர் கலந்து கொள்ளக்கூடாது'' என பின்னர் அறிக்கை விடுத்திருக்கிறார்.''*

''ஆனால் புதுவையில் நடந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், அந்த மாநில முதல்வர் எடுக்கும் முடிவை ஏற்பதாக அ.தி.மு.க. பிரதிநிதி ஒப்புதல் அளித்திருக்கிறார்.

இதை அப்பட்டமான சந்தர்ப்ப அரசியல் என்று தானே கருத முடியும்?''

''காவிரி நீருக்காக சென்னை மெரினா கடற்கரையில் பல நாட்கள் உண்ணாவிரதம் இருந்தவர் ஜெயலலிதா. அவர் விரும்பியிருந்தால், பா.ஜ.க.கூட்டணி அரசின் தேசிய செயல் திட்டத்திலேயே காவிரி நீர் பிரச்சினையைச் சேர்த்திருக்கலாம். இப்பிரச்சினையில் ''மத்திய அரசு காலம் தாழ்த்தவே முதல்வரின் பயணம் உதவும்'' என்ற அவரது கருத்து கற்பனை யானது-அரசியல் நோக்கம் கொண்டது. இப்பிரச்சினையைப் பயன்படுத்திக் கொண்டு, ஓர் அரசைக் கலைத்து விட்டு, அதிகாரத்தைக் கைப்பற்ற ஒருகட்சி காத்திருக்கிறது என கர்நாடக முதல்வர் **ஜே.எச்.பட்டேல்** கூறியிருப்பதை வழிமொழியும் வகையில் தான் அ.தி.மு.க.அணியின் நடவடிக்கைகள் இருக்கின்றன.''

- இவ்வாறு **''தினமணி''** தலையங்கம் எழுதியிருந்தது.

★ ★ ★

டெல்லியில் காவிரி பிரச்சினையில் ஒரு ஒப்பந்தத்தைக் கண்டுவிட்டு, 8.8.2008 அன்று சென்னை திரும்பிய என்னை, விமான நிலையத்தில் கழகப் பொதுச்செயலாளர் **பேராசிரியர்** அவர்களும், அமைச்சர்களும், கழகத் தோழர்களும், பொது மக்களும் திரண்டிருந்து வரவேற்றனர்.

விமான நிலையத்திலேயே செய்தியாளர்கள் என்னைச் சந்தத்து பல்வேறு விளக்கங்களைக் கேட்டுப் பெற்றார்கள். அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த பல தலைவர்கள் காவிரி ஒப்பந்தத்தை வரவேற்று அறிக்கை கொடுத்தனர். குறிப்பாக த.மா.கா. தலைவர் அருமை நண்பர் **ஜி.கே.மூப்பனார்**



காவிரி நதிநீர் பிரச்சினையில் ஜெயலலிதா அடித்த ''அந்தர் பல்டி''கள்

அவர்கள், நீண்ட அறிக்கை ஒன்றின் மூலம் அரசுக்கும், எனக்கும் பாராட்டுகளைத் தெரிவித்து வெளியிட்டிருந்தார்.

தமிழகத்தின் மூத்த அரசியல் தலைவர்களில் ஒருவரும், மராட்டிய மாநில ஆளுநராக இருந்தவருமான **திரு.சி.சுப்பிரமணியம்** அவர்கள் உடனடியாக எனக்கனுப்பிய வாழ்த்துக் கடிதத்தில்- ''நண்பர் கலைஞர் அவர்களுக்கு, காவிரி நதி நீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தேன். அரசியல்வாதிகளால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது என்ற என் கருத்தினை தாங்கள் பொய்ப்பித்து விட்டீர்கள். இந்த முடிவின் மூலம் லட்சக் கணக்கான விவசாயிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டுள்ளீர்கள். உங்களுக்கு என்னுடைய நல்வாழ்த்துக்கள்- அன்புடன் சி.சுப்பிரமணியம்''

வட இந்தியப் பத்திரிகைகள் எல்லாம், ''அ.தி.மு.க. கூட்டணியைத் தவிர, தமிழ்நாட்டிலுள்ள அனைவரும் மகிழ்ச்சியில் திளைக்கின்றனர். - காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பு அமல்படுத்திட கர்நாடக மாநிலம் ஒத்துக்கொண்டதே மிகப்பெரிய வெற்றி'' என்றும் எழுதின.

''**தி டைம்ஸ் ஆப் இந்தியா**'' நாளேடு, ''நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை அமல் படுத்துவதற்காக காவிரி ஆணையம் அமைப்பது பற்றி கர்நாடகம் இறங்கி வந்த காரணத்தால், நீண்ட காலமாக முடிவுறாமல்-தெற்கே உள்ள விவசாய மாநிலங்களிடையே ஏழாண்டு காலமாக விடை தெரியாமல் நிலவி வந்த பிரச்சினைக்கு ஒரு முடிவு காணப்பட்டது'' என்று எழுதியிருந்தது.

''நான்கு மாநில முதல் அமைச்சர்கள் ஏற்றுக்கொண்ட காவிரி புதிய திட்டம்'' என்ற தலைப்பில் செய்தியை வெளியிட்ட **''தி ஏசியன் ஏஜ்''** ஆங்கில நாளேடு, ''தமிழக முதல் அமைச்சர் கருணாநிதி அவர்களுக்கு காவிரி நதிநீர் பங்கீடு குறித்து கர்நாடகாவுடன் நடைபெற்ற பேச்சு வார்த்தையிலே கிடைத்துள்ள வெற்றியைப் போல வேறொன்று இருக்க முடியாது. ஏழு ஆண்டுகளுக்கு முன்பு வழங்கப்பட்ட நடுவர்



டெல்லி சென்று சென்னை திரும்பிய கலைஞரை, பேராசிரியரும், கழகத்தவரும் வரவேற்றனர்.

மன்றத்தின் இடைக்கால ஆணையில் சொல்லப் பட்ட 205 டி.எம்.சி. நீர் தமிழகத்திற்கு வழங்க கர்நாடகாவை ஒப்புக் கொள்ள வைத்தது, தமிழக முதலமைச்சரைப் பொறுத்தவரை, பேச்சு வார்த்தை மூலம் தீர்வு காணலாம் என்ற முடிவிற்கு எதிர்ப்புத் தெரிவித்த அவரது அரசியல் எதிரிகளை வெற்றி கொள்ள உதவி இருக்கின்றது. டெல்லியிலே காணப்பட்டுள்ள முடிவானது. கருணாநிதி அவர்களுக்கும், வாஜ்பாய் அவர்களுக்கும் ஒரு பெரிய தீர்வை ஏற்படுத்தியுள்ளது. இது நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை நிறைவேற்றுவதோடு-தமிழ் நாட்டில் உள்ள அனைவரையும் அதாவது கருணாநிதியின் வெற்றியினால் அதிக அளவிற்கு ஆத்திரம் அடைந்துள்ள அ.தி.மு.க. கூட்டணி கட்சியினரைத் தவிர்த்து-அனைவரையும் மகிழச் செய்யும் ஒன்றாகும்.''

''தி இந்துஸ்தான் டைம்ஸ்'' ஏடு, **"Karunanidhi Scores diplomatic victory"** என்ற தலைப்பில், ''காவிரிப் பிரச்சினை பற்றிய பேச்சுவார்த்தையின் முடிவு தமிழக முதல் அமைச்சர் மு.கருணாநிதி அவர்களுக்கு கிடைத்துள்ள மிகப்பெரிய அரசியல் வெற்றியாகும். நடுவர் மன்றத்தின் இடைக் காலத் தீர்ப்பை அமல் படுத்த கர்நாடகம் ஒத்துக் கொண்டதே மிகப்பெரிய வெற்றியாகும். ஜூன் 1990 முதல்-அதாவது


THE ASIAN AGE

4 CMs accept new Cauvery formula

கலைஞரின் இந்த வெற்றி, அதிக அளவில் ஆத்திரம் அடைந்துள்ள அ.தி.மு.க. கூட்டணியைத் தவிர்த்து, மற்ற அனைவரையும் மகிழ்விக்கவே செய்யும்!

நடுவர் மன்றம் 205 டி.எம்.சி. தண்ணீரைத் தமிழகத்திற்கு கர்நாடகம் வழங்க வேண்டும் என்று தீர்ப்பளித்த அந்த நாள் முதல்-கர்நாடகத்தில் தொடர்ந்து இருந்து வந்த அரசுகள் இடைக்காலத் தீர்ப்பை ஒத்துக் கொள்ளவும் இல்லை-ஏன், அப்படி ஒரு தீர்ப்பு இருப்பதை காட்டிக் கொள்ளவும் இல்லை. கர்நாடகத்தை இடைக்காலத் தீர்ப்பை ஏற்றுக்கொள்ளச் செய்து, நடுவர் மன்றம் தமிழகத்திற்கு வழங்கிட வேண்டிய தண்ணீரின் அளவு பற்றிய இறுதித் தீர்ப்பை வெளியிடும் போது 205 டி.எம்.சி. தண்ணீர் என்பது அடிப்படை அளவு கோலாக இருக்கும் என்பதையும் திரு.கருணாநிதி உறுதி செய்து கொண்டுள்ளார். அ.தி.மு.க.வும் அதன் தோழமைக் கட்சிகளும் ''கர்நாடகத்துடன் பேச்சு வார்த்தையே கூடாது'' என்று எடுத்திருந்த அணுகுமுறையை திரு.கருணாநிதி வெற்றிகரமாக உடைத்தெறிந்து விட்டார். அதன் மூலம் பிரச்சினைகளை வழக்குகளின் மூலம் அல்லாது, பேச்சு வார்த்தைகளின் மூலம் தீர்த்துக் கொள்வது சிறந்தது என்பதையும் நிரூபித்துக் காட்டி விட்டார். பேச்சு வார்த்தைக்குக் கதவடைக்க மறுத்ததன் மூலம், திரு.கருணாநிதி தன்னுடைய மிகப்பெரிய அரசியல் முதிர்ச்சியை வெளிக் காட்டியுள்ளார். ஆணையத்திற்குப் பிரதமரைத் தலைவராக அமைத்துக் கொண்டதன் மூலம், மத்திய அரசில் நடுவர் மன்றத் தீர்ப்பினை கர்நாடகம் அமல்படுத்துவதை உறுதி செய்து கொள்வதற்கான ஒரு உத்தரவாதத்தினை ஏற்படுத்திக் கொண்டார்'' என்று எழுதியது.


THE HINDUSTAN TIMES


has directed that Indian armed forces be strengthened to Tri-pura-Mizo check increasing mili-tancy in the state, official sources said today, reports PTI.

Karunanidhi scores diplomatic victory

From G. C. Shekhar

CHENNAI, Aug. 7

அ.தி.மு.க. ''கர்நாடகத்துடன் பேச்சுவார்த்தையே கூடாது'' என்று கூறியதை, கருணாநிதி வெற்றிகரமாக உடைத்தெறிந்து விட்டார்



தமிழக விவசாயிகளை மகிழ்வித்த, காவிரி நதிநீர் ஒப்பந்தம்

9.8.1998 அன்று சென்னைத் தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்கள் என்னைச் சந்தித்து வாழ்த்துக்களைக் கூறினர். பின்னர் கேள்விக் கணைகளைத் தொடுத்தனர். முதல் கேள்வியாக காவிரிப் பிரச்சினையில் தற்போது ஏற்பட்டுள்ள உடன்பாட்டை ஜெயலலிதா நிராகரித்திருப்பதைப் பற்றி என் கருத்தினைக் கேட்டனர்.

''மத்தியில் நடைபெற்றுக் கொண்டிருப்பது கூட்டணி ஆட்சி. அதன் தலைவராக இருப்பவர் பிரதமர் வாஜ்பாய். கூட்டணி ஆட்சியின் அமைச்சரவையில் பல கட்சிகள் இடம் பெற்றுள்ளன. அமைச்சரவைக்குக் கூட்டுப் பொறுப்பு உண்டு என்பது நியதி. மத்திய அரசுக்கு தலைமையேற்றுள்ள பிரதமர் பேச்சு வார்த்தைக்கு அழைக்கிறார் என்றால்-அதுவும் நான்கு மாநில முதல் அமைச்சர்களை அழைக்கிறார் என்றால்-கூட்டுப் பொறுப்பின் அடிப்படையில் அமைச்சரவையில் பங்கு பெற்றுள்ள எல்லா கட்சிகளுக்குமே பிரதமரின் அழைப்பில் பங்கும், பொறுப்பும் உண்டு என்றுதான் பொருள். இதற்கு மாறாக, மத்திய அரசின் அழைப்பை ஏற்கக் கூடாது என்று சொல்வதும், பிரதமரும் நான்கு மாநில முதல் அமைச்சர்களும் மூன்று நாட்களாகத் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி, 30 ஆண்டு காலமாகத் தீராதிருந்த காவிரி நீர்ப் பிரச்சினைக்கு சுமூகமானதோர் தீர்வு கண்டுள்ளதை நிராகரிக்கிறோம் என்பதும்-அந்தத் தீர்வை ஏற்க மாட்டோம் என்பதும்-கூட்டணி ஜனநாயகத்தைக் கேலி செய்வதாகும்-கூட்டுப் பொறுப்புக்கு எதிர் மறையான நிலையாகும். இந்த விநோதமான விபரீதத்தை இந்த நாடு இன்று கண்டு கொண்டிருக்கிறது. பெரும்பாலான கட்சிகளின் தலைவர்களும், ஆன்றோர்களும், தமிழக விவசாயப் பெருமக்களும் மகிழ்ச்சியுடன் இந்த நல்ல தீர்வை வரவேற்றுள்ள நிலையில்,

அரசியல் பகை காரணமாக, ஜெயலலிதாவும் அவரது குழுவினரும் காவிரி பிரச்சினையில் தெரிவித்து வரும் கருத்துக்கள், இப்போது ஏற்படுத்தப்பட்டுள்ள சுமூகமான தீர்வை நடைமுறைப்படுத்தும் போது குந்தகமான விளைவு களை ஏற்படுத்திவிடக் கூடாது என்பதுதான் எனக்குள்ள கவலையாகும்'' என்று கூறினேன்.

அதற்கடுத்த நாள் ஜெயலலிதா பத்திரிகையாளர்களைச் சந்தித்து, ''காவிரி பிரச்சினையில் பழைய திட்டத்தை வாஜ்பாய் ஏற்றுக் கொள்ளாவிட்டால், மத்திய அரசோடு கூட்டணியில் நாங்கள் இருப்பதைப் பற்றி யோசிக்க வேண்டி வரும்'' என்று மிரட்டிவிட்டு, ''கருணாநிதி வாஜ்பாய் அவர்களோடு ரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளார்- ஒப்பந்தம் செய்து கொண்டு விலை போய்விட்டார்.''

''வாஜ்பாய் கருணாநிதியின் தந்திரத்திற்கு ஆளாகி விட்டார். இரண்டு பேரும் சேர்ந்து செய்து கொண்டிருக்கின்ற உடன்பாட்டை நாங்கள் நிராகரிக்கிறோம்'' என்றார்.

10.8.1998 அன்று ''இந்து நாளேடு தனது தலையங்கத்தில்-

★ *காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவை அமல்படுத்துவதற்கான திட்டம் குறித்து, ஏற்பட்டுள்ள ஒப்பந்தம் பிரச்சினைக்குரிய மாநிலங்கள் எதார்த்த உணர்வுடன் செயல்பட்டுள்ளன என்பதைக் காட்டு வதால் பாராட்டுக்குரியது.''*

''இந்த ஒப்பந்தத்தின் மிகவும் ஆக்க பூர்வமான அம்சம், இதுவரை அங்கீகரிக்க மறுத்து வந்த நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணைக்கு மதிப்பளிக்க கர்நாடகமே உறுதி அளித்துள்ளது. இதற்கு நடைமுறை அர்த்தம், தமிழ்நாட்டுக்கு ஆண்டுதோறும் 205 டி.எம்.சி. தண்ணீர் தருவதற்கு கர்நாடகம் ஒத்துக்கொண்டுள்ளது என்பதாகும்.''

''தமிழ்நாட்டின் தரப்பில் இது ஒரு லாபம் ஆகும்'' என்று எழுதியிருந்தது.

அந்தத் தலையங்கத்திற்குத் தலைப்பே **''எ வெல்கம் அக்ரிமெண்ட்''** என்பதாகும்.

இது போலவே வேறு பல நாளேடுகளும் காவிரி ஒப்பந்தத்தைப் பாராட்டி செய்திகளை வெளியிட்டிருந்தன.

10.8.1998 தேதிய **''தினமணி''** நாளிதழ் தனது தலையங்கத்தில்-

★ *''காவிரி பிரச்சினையில் முதன் முறையாக ஆக்கப்பூர்வமான முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. பிரதமர் தலைமையில் நான்கு மாநில முதல்வர்கள் கூடி, நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்துவதற்கான* ***திட்டத்தை இறுதி செய்தது பாராட்டத்தக்க சாதனை.*** *தமிழகத்துக்கு 205டி.எம்.சி. நீர் அளிக்க கர்நாடகம் சம்மதித்திருக்கிறது. பாசன அணைகளின் மீதான கட்டுப்பாடு பறிபோய் விடுமோ என்ற கர்நாடக விவசாயிகளின் அச்சம் நீக்கப்பட்டுவிட்டது. இரு மாநில விவசாயிகளின் நலனைப் பாதுகாப்பதற்காகக் கடந்த முறை இரு மாநில முதல்வர்கள் நடத்திய பேச்சு தோல்வியடைந்த போதிலும், இந்த முறை அந்த முயற்சியில் வெற்றி கண்டு விட்டனர். விவசாயிகளுக்குக் கிடைத்த சுதந்திரப் பொன்விழா பரிசாக இந்த உடன்பாட்டைக் கூறலாம். பா.ஜ.க. அரசின் தேசிய செயல் திட்டத்தில் காவிரிப் பிரச்சினையை இடம் பெறச் செய்ய முடியாத அ.தி.மு.க.தான் இந்த உடன்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறது. மத்திய அரசு உதவியுடன் ஏற்பட்ட உடன்பாட்டை, மத்தியில் ஆளும் கூட்டணியில் அங்கம் வகித்துக் கொண்டு குறைகூறுவது நேர்மையான செயலாக இல்லை.''*

''புதிய உடன் பாட்டினால் *80* சதவீதத் தீர்வு எட்டப்பட்டுவிட்டது'' எனக் கேரள முதல்வர் நாயனார் கூறியிருப்பதை நினைவில் கொள்ள வேண்டும்'' - என்று எழுதியது.

36. தாண்டிய தடைக்கற்கள்!

அரச குடும்பத்தைச் சேர்ந்த குமாரசாமி ராஜா மக்கள் நலனுக்காக இரண்டு முறை கொடிய சிறைவாசம் அனுபவித்தார்.


காவிரிப் பிரச்சினையில் ஓர் உடன்பாடு காணப்பட்ட நேரத்தில், **சுதந்திரத் திருநாள் பொன்விழா ஆண்டு** நிறைவு விழா அரசின் சார்பிலும், தென்னகப் பண்பாட்டு மையத்தின் சார்பிலும் இணைந்து, சிறப்பாக மூன்றுநாள் நிகழ்வுகளாக சென்னை மெரினா கடற்கரையில் அமைக்கப்பட்டிருந்த சீரணி அரங்கத்தில் நடைபெற்றது.

என்னுடைய தலைமையில், முதல்நாள் தமிழக ஆளுநராக இருந்த செல்வி **பாத்திமா பீவி** அவர்கள் தொடங்கி வைத்தார்கள். சிறப்பு விருந்தினர்களாக கர்நாடக மாநில ஆளுநர் **திரு.குர்ஷித் ஆலம்கான்** அவர்களும், புதுவை துணைநிலை ஆளுநர் திருமதி **ரஜினிராய்** அவர்களும், கல்வி அமைச்சராக இருந்த பேராசிரியர் அவர்களும், அறநிலையத்துறை-தமிழ் ஆட்சி மொழி, பண்பாட்டுத் துறை அமைச்சராக இருந்த முனைவர் **தமிழ்க் குடிமகன்** அவர்களும், சென்னை மாநகர மேயராக அப்போதிருந்த தம்பி **மு.க.ஸ்டாலின்** செய்தித் துறை அமைச்சராக இருந்த தம்பி **முல்லை வேந்தன்** ஆகியோரும் தொடக்க விழா நிகழ்ச்சியிலே கலந்து கொண்டார்கள்.

அந்த விழாவில் நான் பேச்சைத் துவக்குகின்ற நிலையில்-

''இந்த விழாவில் ஒரு மாநிலம் தான் பாக்கி, தமிழ் மாநிலம், கர்நாடக மாநிலம், புதுவை மாநிலம் கலந்து கொள்ளும் விழாவில், கேரள மாநிலம் தான் வரவில்லை. அதை


ஓரளவிற்குத் தமிழ் மாநில ஆளுநர் அவர்கள் நிறைவு செய்திருக்கிறார் என்றே நான் கருதுகிறேன். (ஆளுநர் பாத்திமா பீவி கேரளாவைச் சேர்ந்தவர்) கர்நாடக மாநில ஆளுநர் மேதகு குர்ஷித் ஆலம்கான் அவர்களும் இங்கே வந்திருக்கின்ற காரணத்தால், நான் இந்தச் செய்தியை கூறும்போது அவரும் மகிழ்வார் என்பதற்காக அறிவிக்கின்றேன். I Want to inform you all that the DRAFT for the Cauvery issue has been approved and notified by the Central Government just half an hour back. I have received this information from Delhi and I want to thank all concerned, Particularly our Prime Minister of India on behalf of the people of Tamil Nadu (காவிரிப் பிரச்சினையின் வரைவுத் திட்டம் மத்திய அரசினால் ஏற்றுக்கொள்ளப் பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை உங்களுக்கெல்லாம் தெரிவிக்க விரும்புகிறேன். அரைமணி நேரத்திற்கு முன்புதான் டெல்லியிலிருந்து எனக்கு இந்தச் செய்தி கிட்டியது. இதிலே சம்பந்தப்பட்ட அனைவருக்கும் குறிப்பாக நம்முடைய இந்தியப் பிரதமர் அவர்களுக்கும் தமிழ்நாட்டு மக்கள் சார்பில் என்னுடைய நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.)



சுதந்திரப் பொன்விழா ஆண்டில், சுதந்திர தினத்தன்று கோட்டையில் கொடியேற்றிய போது...

"சுதந்திரம் பெறுவதற்கு எவ்வளவு கஷ்ட நஷ்டங்களைப் பட்டோமோ, அதைப் போலவே இந்தக் காவிரி ஒப்பந்தத்தை- இந்தத் தீர்வை- அடைவதற்கும் பல கஷ்ட நஷ்டங்களை நாம் பட்டிருக்கிறோம். சுதந்திரம் கிடைக்கின்ற நேரத்தில் எவ்வளவு இடையூறுகள் இருந்ததோ,

அதைப் போலவே காவிரிப் பிரச்சினை தீருகின்ற நேரத்திலும் பல இடை யூறுகள் விளைந்தன.



டெல்லியில் சுதந்திரப் பொன்விழா பேரணியில் பங்குபெறச் சென்ற 50 தியாகிகளுக்கு கதராடை போர்த்தி, பொற்கிழி வழங்கினேன்.

''தடைக்கற்கள் உண்டென்றாலும் தடந்தோள் உண்டெனச் சிரிப்போம்'' என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுடைய கவிதை வரிகளுக்கேற்ப தடைக் கற்களையெல்லாம் கடந்து, இன்று நதி நீர் பங்கீட்டு ஒப்பந்தத்தை நாம் உருவாக்கியிருக்கிறோம் என்பதைப் பெருந்தன்மையோடு- பெருமிதத்தோடு அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஒப்பந்தம் தமிழ்நாட்டிற்கு மாத்திரம் வெற்றி என்று நான் சொல்லமாட்டேன்-சொல்லவில்லை. இந்த ஒப்பந்தம் கர்நாடக மாநிலத்திற்கும்-கேரள மாநிலத்திற்கும்-புதுவை மாநிலத்திற்கும்-இந்த மாநிலங்களிலே உள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் கிடைத்துள்ள நல்ல செய்தி என்பதை இந்தப் பொன்விழா ஆண்டின் நிறைவு விழாவிலே அறிவிக்கிறேன்'' என்று குறிப்பிட்டேன்.

சுதந்திரப் பொன்விழா ஆண்டின் நிறைவு நாளாகவும்-51 ஆம் ஆண்டு சுதந்திர தின நாளாகவும் கொண்டாடப்பட்ட ஆகஸ்ட், 15, 1998 அன்று சென்னையில் தலைமைச் செயலகத்தில், கோட்டையில், தேசியக் கொடியினை ஏற்றி வைத்து உரையாற்றினேன்.

1972ஆம் ஆண்டு இந்திய சுதந்திரத்தின் வெள்ளி விழா கொண்டாடப்பட்டபோதும் 1997 ஆம் ஆண்டு தொடங்கி சுதந்திரப் பொன்விழா கொண்டாடப்பட்டபோதும்-தமிழகத்தின் முதல் அமைச்சராக இருந்து, அதனை நடத்திய பெருமை எனக்கு உண்டு.



தேசியக் கொடியினை ஏற்றி வைத்து நான் உரையாற்றும் போது-கழக ஆட்சிக் காலத்தில் சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு என்னென்ன சலுகைகள் வழங்கப்பட்டன என்ற பட்டியலை யெல்லாம் தொகுத்துக் கூறினேன்.

குறிப்பாக, 1997 ஆம் ஆண்டு சுதந்திர தினப்பொன்விழா ஆண்டில், திருச்சியிலிருந்து வேதாரண்யம் வரை சென்று உப்புச் சத்தியாகிரகப் போராட்டத்தை நினைவு கூரும் வகையில், யாத்திரை ஒன்றை 8.8.1997இல் திருச்சியில் நான் தொடங்கி வைத்தது குறித்தும்-

டெல்லியில் நடைபெற்ற சுதந்திரத் திருநாள் பொன்விழா பேரணியில் பங்கு பெறச் சென்ற 50 தியாகிகளுக்கு, சென்னை ராஜாஜி மண்டபத்தில் வழியனுப்பு விழா நடத்தி, அந்தத் தியாகிகள் ஒவ்வொருவருக்கும் அரசின் சார்பில் நானே கதராடையைப் போர்த்தி, பொற்கிழி வழங்கியதையும்-

திருநெல்வேலி மாவட்டத்தில், நெற்கட்டும் செவல் கிராமத்தில் **பூலித்தேவன்** மாளிகை ஒன்றை அமைக்க 50 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கியது குறித்தும்-

தியாகச் செம்மல் **கக்கன்** அவர்களுக்கு மதுரையில் 31.8.1997 அன்று சிலை திறந்தது பற்றியும்-

வீரத்தியாகி **விசுவநாததாஸ்** அவர்கள் வாழ்ந்த திருமங்கலம் வீட்டினை அவர் நினைவைப் போற்றும்

வகையில் 60 இலட்சம் ரூபாய் செலவில் திருமண மண்டபம்-நூல் நிலையம் ஆகியவைகளை அமைக்க ஒப்புதல் அளித்ததை விளக்கியும்-

சுதந்திரப் பொன்விழாவினையொட்டி, சென்னையில் **தியாகிகள் மணிமண்டபம்** ஒன்றை எழுப்ப முடிவு செய்து, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வந்ததையும்-

பொன் விழாவின் நினைவாக போர் நினைவுச் சின்னம் அருகில் **பொன்விழா நினைவுச் சின்னம்** அமைத்ததையும்-

பொதுவுடைமை வீரர் **ஜீவாவுக்கு** நாகர்கோவிலில் நினைவுச் சின்னம் உருவாக்கியதையும்-

நேதாஜிக்கு சென்னையில் காமராஜர் சாலையில் முழு உருவச் சிலை எழுப்பியதையும்-

வெள்ளையர் ஆதிக்கத்தை எதிர்த்து, தமிழ்நாட்டில் வேலூரில் 1806ஆம் ஆண்டில் நடைபெற்ற முதல் சிப்பாய் கலகத்தின் போது-உயிர் நீத்தோர் தியாகத்தைப் போற்றிட வேலூரில் நினைவுத் தூண் அமைக்க ஏற்பாடு செய்ததையும்-


எழும்பூரில் போராட்ட வீராங்கனை **ருக்குமணி லட்சுமிபதிக்குச்** சிலை திறந்து, அவர் வாழ்ந்த மார்ஷல் சாலைக்கு அவருடைய பெயரைச் சூட்டியதையும்-

ருக்மணி லட்சுமிபதிக்கும், **சர்தார் வேதரத்தினம் பிள்ளைக்கும்** அஞ்சல் தலை வெளியிடச் செய்ததையும்-

முன்னாள் முதல்வர் பெரியவர் **பக்தவத்சலம்** அவர்களுக்கு நினைவகம் அமைத்ததையும்-

முன்னாள் முதலமைச்சர் **பி.எஸ்.குமாரசாமி** ராஜாவின் நூற்றாண்டு விழாவினை ராஜபாளையத்தில் கொண்டாடி, சென்னையில் அவர் வாழ்ந்த சாலைக்கு அவர் பெயர் சூட்டியதையும்-

1995ஆம் ஆண்டிலேயே கொண்டாடி இருக்க வேண்டிய முன்னாள் முதலமைச்சர் **ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார்** அவர்களின் நூற்றாண்டு விழாவினை-கழக ஆட்சி வந்ததும்,



சுதந்திரப் பொன்விழா நினைவாக, ஒரு நினைவுச் சின்னத்தைத் திறந்து வைத்தேன்.

1997 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25 அன்று சென்னையிலே கொண்டாடியதையும், அரசினர் தோட்டத்திற்கு **ஓமந்தூரார் வளாகம்** எனப்பெயர் சூட்டியதையும்-

தமிழகத்தில் சாதி சமயப் பிணக்குகளை அகற்ற கழக ஆட்சியில் ஏற்பாடு செய்யப்பட்ட பெரியார் நினைவு சமத்துவப்புரங்கள் பற்றியும்-

தியாகிகளும், சான்றோர்களும் எழுதிய நூல்கள் எல்லாம், அரசின் சார்பில் அரசுடைமையாக்கப்பட்டு, அவர்களின் வாரிசுகளுக்குப் பரிவுத்தொகைகள் வழங்கப் பட்டதையும் தொகுத்துக் கூறினேன்.

கொடியேற்றுவதற்கு முன்பு காவல் துறையினரின் அணி வகுப்பு மரியாதையை முதல்வர் என்ற முறையில் ஏற்றுக் கொண்டேன். முப்படை அதிகாரிகள், காவல்துறை உயர் அதிகாரிகளைத் தலைமைச் செயலாளர் எனக்கு அறிமுகப் படுத்தி வைத்தார். நாட்டுடைமை ஆக்கப் பட்ட நூல்களை எழுதிய 11 தேசிய தமிழ் எழுத்தாளர்கள் குடும்பங்களுக்குப் பரிவுத் தொகைகளை அந்த நிகழ்ச்சியின் போது வழங்கினேன். 50 சுதந்திர போராட்ட தியாகிகளுக்கு பொன்னாடை அணிவித்து கவுரவித்தேன்.

★ ★ ★

1998 ஆம் ஆண்டு தி.மு.கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த போது, காவிரி டெல்டா பகுதியில் தூர் வாரும்




முன்னாள் முதல்வர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடியதோடு - அரசினர் தோட்டத்திற்கு அவரது பெயரையும் சூட்டினேன்.

பணியினை முதன் முதலாக எடுத்துக் கொண்டு, அதிலே பெரும் கவனம் செலுத்தியது. காவிரி டெல்டா பகுதியில் மொத்தம் 14,000 கிலோ மீட்டர் நீளத்திற்கு பாசன ஆதார நீர்வரத்துகளும், வடிகால் ஆதார வாய்க்கால்களும் இருக்கின்றன. இவை அனைத்திலும் 1934 ஆம் ஆண்டு மேட்டூர் அணை திறக்கப் பட்ட காலத்திலிருந்து 1997 ஆம் ஆண்டுவரை, அவ்வப்போது செய்யப் பட்ட குடிமராமத்து அளவிலான சிறு சிறு தூர் வாரும் பணிகளைத் தவிர, பெருமளவிற்குத் தூர்வாரும் பணி நடத்தப்படவே இல்லை. 98ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான்- பெருமளவில் தூர்வாரும் பணியை நிறைவேற்ற - 154 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெரும் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டது. 14ஆயிரம் கிலோ மீட்டர் நீர் வரத்து மற்றும் வடிகால் வாய்க்கால்கள் ''ஏ'' மற்றும் ''பி'' என இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டது. இரண்டுமே பொதுப் பணித்துறைக்கு உட்பட்டவை ஆகும்.

தயாரிக்கப்பட்ட 154 கோடி ரூபாய் மதிப்பீட்டுத் திட்டத்தில், முதல் கட்டமாக 1997 ஆம் ஆண்டு பத்து கோடி ரூபாய் செலவில் ஆறுகளிலும், வடிகால்களிலும் ''ஏ'' மற்றும் ''பி'' பிரிவு பாசன வாய்க்கால்களிலும்-1998ஆம் ஆண்டு 20 கோடி ரூபாய்ச் செலவில் ஆறுகளிலும், வடிகால்களிலும், பாசன கால்வாய்களிலும் தூர்வாரும் பணி மேற்கொள்ளப் பட்டு பெரும் பகுதி நிறைவேற்றப்பட்டது.

அந்த இரண்டாண்டுகளில் மட்டும் ஏறத்தாழ 4000 கிலோ மீட்டர் நீளத்திற்கு பணிகள் நிறைவேற்றப்பட்டன. 22.6.1998 அன்று தஞ்சை, திருவாரூர்,நாகை மாவட்டங்களில் காவிரியின்



மதுரையில் தியாகி கக்கன் சிலையை மூப்பனார், பேராசிரியர் முன்னிலையில் திறந்து வைத்தேன்.

கடைமடைப் பகுதிகளில் ஏரிகளிலும், வாய்க்கால்களிலும், குளங்களிலும் நடைபெற்று வந்த தூர்வாரும் பணிகளை நான் நேரடியாக நடந்தே சென்று பார்வையிட்டேன். தூர்வாரும் பணி பாதியில் நின்று விட்டால், தண்ணீர் வரும் போது பணி நின்ற இடத்தில் கால்வாயில் உடைப்பு ஏற்பட்டுவிடும் என்பதால், விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று தூர்வாரும் பணி முழுமையாக நடைபெற வேண்டும் என்பதற்காக, மேட்டூர் அணை திறப்பதை ஒரு வாரத்திற்குத் தள்ளி வைக்கச் செய்தேன்.

காவிரி பாசனப் பகுதியில் முழு வீச்சில் தூர்வாரும் பணி வரலாறு காணாத அளவில் நடைபெற்றதால்-மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டவுடன், எவ்விதத் தடங்கலும் இன்றி வேகமாக விவசாயத்திற்குத் தண்ணீர் சென்று பாய்ந்திட வழிவகை உண்டாயிற்று. திருச்சியிலிருந்து புறப்பட்டு திருவெறும்பூர், துவாக்குடி, வலத்தங்குடி, திருமலை சத்திரம், வல்லம் வழியாக தஞ்சையை அடைந்து-அங்கிருந்து பள்ளி அக்ரஹாரம், கண்டியூர், திருப்பலகம், வீர மாங்குடி ஆகிய இடங்களுக்குச் சென்று, தூர்வாரும் பணி நடைபெற்ற இடங்களையெல்லாம் பார்வையிட்டேன். பின்னர் பேரளம், பூந்தோட்டம் வழியாக திருவாரூர் மாவட்டத்தில் திருவாஞ்சியம் திருவிடைச்சேரி, நாரணமங்கலம், புத்தாறு, நெடுஞ்சேரி ஆகிய இடங்களில் நடைபெறும் பணிகளைப்


பார்வையிட்டேன். திருவாரூர் அருகே கச்சநகரம் என்ற இடத்தில் சோழவதி ஆற்றில் நடைபெற்று வரும் தூர்வாரும் பணிகளைப் பார்வையிட்ட போது செய்தியாளர்கள் என்னை அங்கேயே கண்டு பேட்டி கேட்டனர். அதன் விவரம் வருமாறு:-

செய்தியாளர்:-காவிரி டெல்டா பகுதியில் தூர்வாரும் பணிகளில் இதுவரை ஐந்து கோடி ரூபாய்க்குத் தான் பணிகள் நடைபெற்றுள்ளதாக **ஜெயலலிதா** கூறியுள்ளார். ஆனால் இந்தப் பணிகளைப் பார்வையிட நியமிக்கப்பட்ட அ.தி.மு.க. குழுவினர் 8 கோடி ரூபாய்க்குப் பணிகள் நடைபெற்றிருப் பதாகக் கூறியுள்ளனர். இது முரண்பாடாகத் தெரிகிறதே?

நான்:-நீங்களே நேரில் நடைபெற்று வரும் பணிகளைப் பார்த்துக் கொண்டு வருகிறீர்கள். இதில் நான் எதுவும் சொல்வதற்கில்லை.

செய்தியாளர்:-இந்தப் பணிகளால் என்ன என்ன நன்மைகள் ஏற்படும்?

நான்:-இத்திட்டத்தினால், பன்னிரெண்டரை இலட்சம் ஏக்கர் நிலங்கள் பயனடையும். இதில் மூன்றின் ஒரு பகுதி நிலங்கள் தற்போது நடைபெற்று வரும் பணிகளால் பயனடையும். மேலும் வெள்ளச் சேதங்கள் அடிக்கடி ஏற்படாது. பயிர்கள் பாதிக்கப்படாது. விளைச்சல் அதிகமாகும்.



சென்னையில் திறந்து வைக்கப்பட்ட நேதாஜி சிலை



நீர்ப்பாசன வசதி அதிகரிக்கும். உணவு உற்பத்தி பெருகும்.

செய்தியாளர்:- ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்தப் பணிகள் குறித்து குறை கூறியிருக்கிறாரே?

நான்:- ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில் **கோ.சி.மணியின்** புதல்வர் **மதிவாணனுக்கு** டெண்டர் கொடுத்துள்ளதாகக் குற்றம் சாட்டியிருக்கிறார். கோ.சி.மணிக்கு மதிவாணன் என்ற பெயர் கொண்ட பிள்ளையே கிடையாது. அதற்காக அமைந்த ஐந்து பேர் கொண்ட குழுவில், முன்னாள் அ.தி.மு.க. எம்.எல்.**ஏ.துரை.கோவிந்தராஜனும்** இருக்கிறார். அவரது மகன் **டி.ஜி.பாண்டியன்** என்பவர் கல்லணைக் கால்வாய் சீரமைப்புப் பணியில் பத்து கிலோமீட்டர் தூர்வார, சுமார் 14 லட்ச ரூபாய்க்குக் காண்ட்ராக்ட் எடுத்துள்ளார். அதில் அவர் இதுவரை 8 லட்ச ரூபாய் அளவிற்கான பணிகளைத் தான் முடித்திருக்கிறார். அது போல இன்னும் அ.தி.மு.க. பிரமுகர்கள் கூட காண்ட்ராக்ட் எடுத்துள்ளார்கள். சசிகலாவின் உறவினர்களும் காண்ட்ராக்ட் எடுத்துள்ளார்கள். அவர்கள் தான் இந்தப் பணிகளில் சுணக்கம் காட்டுகிறார்கள்.

செய்தியாளர்:-சசிகலாவின் உறவினர்களுக்கும், அ.தி.மு.க. வினருக்கும் எப்படி காண்ட்ராக்ட் கொடுக்கப்படுகிறது?

நான்:-நாங்கள் ஆட்சிக்கு வந்த போது ஒளிவு மறைவில்லாத திறந்த வெளி ஒப்பந்த முறைதான் கடைப்பிடிக்கப்படும் என்று கூறியிருக்கிறோம். அதன் அடிப்படையில் கட்சி வேறுபாடு இல்லாமல், இவ்வாறு ஒப்பந்தப் பணிகள் வழங்கப்படுகின்றன.



சென்னையில் எழுப்பப்பட்ட தியாகிகள் மணிமண்டபம்

- இவ்வாறு பேட்டியளித்தேன். முதல் நாள் சுமார் 400கி.மீ. தொலைவுக்குத் தூர்வாரும் பணிகளை இரவு 7 மணிவரை பார்வையிட்டேன். தொடர்ந்து மறுநாளும், அதாவது 23.6.1998 அன்றும் திருவாரூரிலிருந்து பயணத்தைத் தொடங்கி, பாப்பனாறு கால்வாய்ப் பணிகளைப் பார்வையிட்டேன். பிறகு கச்சனம் வழியாக திருக்குவளை சென்றேன். அங்கிருந்து எட்டுக்குடி சென்று, அங்கேயுள்ள வடக்கு காட்டாறில் தூர்வாரும் பணிகளைப் பார்த்தேன். பின் சீராவட்டம், அருந்தவபுலம் அடப்பாறிலும், மரைக்காகோரை யாற்றிலும், பாமணியாற்றிலும், வீரக்குறிச்சி காட்டாற்றிலும், ஒரத்தநாட்டில் காரிமுத்து ஏரியிலும் நடைபெற்று வந்த தூர்வாரும் பணிகளைப் பார்த்தேன்.

22.6.1998 தேதிய திருச்சி "மாலைமுரசு" நாளிதழ், **"100 ஆண்டுகளுக்குப் பின் தூர்வாரும் பணி செய்து விவசாயிகளுக்கு அருமருந்தானார் சரித்திர சாதனை படைத்த கலைஞர்"** என்ற தலைப்பில், தூர்வாரும் பணி குறித்து நீண்டதோர் கட்டுரையினை எழுதியிருந்தது. அந்தக் கட்டுரையின் சில பகுதிகள் நினைவில் கொள்ளத் தக்கவை.

"அகத்தியன்தான் காவிரி நதியை தனது கமண்டலத்தில் அடைத்து வைத்திருந்தான் என்றும், இந்திரன் வேண்டு கோளுக்கிணங்க, விநாயகப் பெருமான் காகம் உருவெடுத்து கமண்டல நீரைக் கொட்டிவிட, அது பிரவாகம் எடுத்து

சீறிப்பாய்ந்து, அகண்ட காரிவியாக மாறி, தமிழகத்தில் ஓடி நாட்டுக்கு வளம் சேர்த்து, காவிரிப்பூம்பட்டினத்தில் வங்கக் கடலோடு கலந்தது என்று கூறுகிறது புராண வரலாறு.''

''இந்தப் புராண வரலாற்றில் காவிரி நதிதான் மற்ற ஒன்பது நதிகளுக்கெல்லாம் சிறந்தது என்றும், மற்ற நதிகளில் வணங்கத்தக்கவள் காவிரித்தாய் என்றும் வர்ணிக்கப்படுகிறது. புராண வரலாறு ஒரு பக்கம் இருக்கட்டும். **கரிகால் சோழன்** கல்லணையைக் கட்டுவதற்கு முன்பே **சசிசேகர சோழன்** என்பவன் கல்லணை இருக்கும் இடத்தில், அந்த அணை உருவானதற்கு முன்னதாகவே, காவிரியில் வெள்ளம் வந்ததால் காவிரியில் ஐம்பொன்னால் அணையைக் கட்டினான் என்று வரலாற்றுச் செய்தி கூறுகிறது.''

''**சித்திரதன்வன்**'' என்ற சோழ மன்னன் ''**காவிரிப் புனல் கொணர்ந்த சோழன்**'' என்று அழைக்கப்படுகிறான். இவனது காலம் கி.பி.இரண்டாம் நூற்றாண்டாக இருக்கலாம். சித்திரதன்வன் காலத்தில் தடைப்பட்ட காவிரி நீரைக் கொணர்ந்து புகழ் பெற்று இருக்கிறான் இம்மன்னன். பிற்காலத்தில் சோழநாட்டை அரசாண்ட சோழன் ''**கரிகால் வளத்தான்** இன்றைய கல்லணையைக் கட்டினான்.''

''இப்படி காவிரிக்கு வளம் சேர்த்தவர்கள் வரிசையில் பல நூற்றாண்டுகள் இடைவெளிக்குப் பின்பு நமது முதலமைச்சர் கருணாநிதி இடம் பெறுகிறார். இது மிகைப்படுத்தப்பட்ட செய்தி அல்ல. எல்லோரும் வரலாற்றில் இடம் பெற்றுவிட முடியாது-அனைவராலுமே செயற்கரிய சாதனைகளைப் படைத்துவிட முடியாது.''

''இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண்விட வேண்டும்'' என்பது வள்ளுவர் கருத்து. ஆட்சிக்கு யார் வேண்டுமானாலும் வரலாம்-அவர்கள் எத்தனை ஆண்டுகள் ஆண்டார்கள் என்பதைவிட, அவர்கள் என்ன செய்தார்கள் என்பதே வரலாற்றைப் படைப்பதற்குக் கருப்பொருளாக இருக்கும்.''


''ஜெயலலிதா ஆட்சிக்காலத்தில் **சீமைக் காட்டாமணக்கு வெட்ட டெல்டா பகுதிக்கு மட்டும் ரூ.50 லட்சத்திற்கு மேல் செலவிடப்பட்டன.** சீமைக் காட்டாமணக்குச் செடியை வெட்டாமலேயே அப்போதைய ஆளும் கட்சியினர் பலர் பொதுப்பணித் துறையில் பில்களை வெட்டிப் பணம் பறித்தனர். சிலர் வெட்டினர். ஆனால் மேலோட்டமாக வெட்டி, பில் தொகையைக் கேட்டனர். பில் தொகையை அனுமதிக்க அதிகாரிகள் ஆறுகளைப் பார்வையிட்ட போது, வெட்டிய இடத்தில் முன்பிருந்த உயரத்தை விட சீமை காட்டாமணக்குச் செடிகள் அதிக உயரம் வளர்ந்திருந்தன. வெட்டாமல், பில் வெட்டியவர்கள் பயன் அடைந்தார்கள்.''



''*1989* ஆம் ஆண்டு வேளாண்மைத் துறை அமைச்சராக இருந்த **கோ.சி.மணி** வேளாண்மை பொறியியல் துறை மூலம் ஒவ்வொரு கிராமமாக எடுத்து, பாசனத்திற்கு வரும் தண்ணீர் வீணாகாமல் தடுக்க, பாசன வடிகால்களில் சிமெண்ட் தடுப்புச் சுவர்-பாசனத் தடுப்புகள்-திறப்புகள் அமைத்தார். இப்பணிகளுக்கு முதல்வருடைய முழு ஆதரவும், கோ.சி.மணிக்குக் கிடைத்தது. திட்டத்தை முழுமையாக செயல்படுத்துவதற்குள்



குமாரசாமி ராஜா நினைவிடத்தில் மலரஞ்சலி செலுத்தினேன்



''தேசத் தலைவர்களை - தேசத் தியாகிகளை - மதிக்கின்ற இயல்பு படைத்தவர் கலைஞர்'' என்றார், குமரி அனந்தன்

தி.மு.க.ஆட்சி கலைக்கப்பட்டது. அடுத்து வந்த ஜெயலலிதா விவசாயி களுக்காக என்ன செய்தார் என்பதை நாடு நன்கறியும்.''

''ஆறுகள், கால்வாய்கள் தூர் எடுத்த பகுதிகளைப் பார்வையிட முதல் அமைச்சர் கருணாநிதி இன்று தஞ்சை டெல்டா பகுதிக்கு வந்துள்ளார். நெல்லுக்கு ஆங்காங்கே இறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்கு இனி புசியாது. நெல்லுக்கு இறைத்த நீர் குறைவாக வந்தாலும், கடைமடைப் பகுதி வரைச் சென்று நெல்லுக்கே அங்கு பாயும். இனி வெள்ளம் வராது-உடைப்பு ஏற்படாது-உயிர்ச் சேதமும் இல்லை- பயிர்ச் சேதமும் வராது-உழவர்கள் மகிழ்ச்சியோடு கருணாநிதியை வரவேற்றார்கள். நெல்லுக்கு இறைத்த நீர் புல்லுக்குச் சேராதவாறு ஆறுகளை தூர் எடுத்தது போன்று இப்பணிக்கு ஒதுக்கப்பட்ட நிதியும், விழலுக்கு இறைத்த நீராக மாறாமல்-கறந்த பால் கறந்தபடி என்ற நிலையில், நூற்றுக்கு நூறு அப்பழுக்கு இன்றி நிறைவேறி இருக்கின்றன.''

''கருணாநிதியைப் பாராட்ட வேண்டும் என்ற கடமைப் பாடு எதுவும் நமக்கு இல்லை. ஆனால் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி இருந்த ஆறுகள்-கால்வாய்கள் கரையைக் கண்டறிய முடியாது இருந்த பாசன வடிகால்கள்-ஆகியவற்றை மீட்டு வெளிக் கொணர்ந்து, பாசனத்திற்கு வழி வகுத்த முதல்வர் கருணாநிதியை உழவர்களும், உழவே தலை என நம்பியிருக்கும் தமிழர்களும் பாராட்டாமல் வேறு யாரைப் பாராட்ட முடியும்?''

- இவ்வாறு தூர்வாரும் பணியைப் பற்றி திருச்சி ''மாலைமுரசு'' நீண்ட கட்டுரை தீட்டிப் பாராட்டியிருந்தது.




தமிழகம் முழுவதும் முடுக்கி விடப்பட்ட தூர்வாரும் பணிகளைப் பல நாட்கள் பார்வையிட்டு, ஆலோசனைகள் வழங்கினேன்.

மாலை முரசு மட்டுமல்ல-ஆங்கில நாளிதழ்களான **''இந்து''**, **''இந்தியன் எக்ஸ்பிரஸ்''** போன்ற ஏடுகளும் தூர்வாரும் பணியை மேற்கொண்ட கழக அரசினைப் பெரிதும் பாராட்டி எழுதியிருந்தன.

5.7.1998 அன்று மீண்டும் ஒருமுறை டெல்டா பகுதிகளுக்குச் சென்று, காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை தஞ்சை, கடலூர், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் தூர்வாரும் பணிகளைப் பார்வையிட்டேன். அதுபோலவே *8.7.1998* அன்று தென் மாவட்டங்களுக்குச் சென்று அங்கே தூர்வாரும் பணிகளை மேற்பார்வையிட்டேன்.

மதுரைக்கு தூர்வாரும் பகுதிகளைக் காணச் சென்ற நான், *9.7.1998* அன்று - மறைந்தும் மறையாமல் - நம் நெஞ்ச மெல்லாம் நிறைந்த இருக்கின்ற பெரியவர்- தேசத்தியாகி- நல்லவர்- வல்லவர்-**பி.எஸ்.குமாரசாமி ராஜா** அவர்களின் நூற்றாண்டு விழாவிலே - ராஜபாளையத்தில் கலந்து கொண்டேன்.

ராஜபாளையம் நகரமே அன்றைக்கு விழாக்கோலம் பூண்டிருந்தது. ராஜபாளையத்திற்கு வருகின்ற சாலைகள் எல்லாம் ஆர்த்தெழுந்து அலங்காரம் பூண்டு நின்றன. த.மா.கா. தலைவர் **மூப்பனார்**, குமாரசாமி ராஜா நூற்றாண்டு விழாக் குழுத்தலைவர் **பி.ஆர்.ராமசுப்பிரமணிய ராஜா**, இலக்கியச் செல்வர் **குமரிஅனந்தன்**, **அழகர் ராஜா** ஆகியோரும் அந்த



காவிரி கடைமடைப் பகுதிகளில் நடைபெறும் பணிகளை அமைச்சர்களுடன் பார்வையிட்டேன்

விழாவிலே கலந்து கொண்டனர். குமாரசாமி ராஜா அவர்களின் நூற்றாண்டு விழா வினையொட்டி மக்களுக்குப் பயன்படக்கூடிய அளவிற்குத் திருமண மண்டபம், 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறந்த நூல்கள் நிறைந்த ஒரு நூலகம்-ஆகியவையும் ராஜபாளையத்தில் திறக்கப்பட்டன.

அந்த விழாவில் பேசிய குமரி அனந்தன், ''தேசத் தலைவர்களை- தேசத் தியாகிகளை மதிக்கின்ற இயல்பு படைத்தவர் முதலமைச்சர் கலைஞர்'' என்று குறிப்பிட்டார்.

இன்று நேற்றுல்ல-என்றைக்குமே எத்தனை ஆயிரம் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும்கூட, நாட்டிற்காக- மொழிக்காக- இனத்திற்காக- தங்களை ஒப்படைத்துக் கொண்டு பாடுபட்ட வர்கள் யாராக இருந்தாலும்-அவர்களைப் போற்றுவதிலும்- புகழ்வதிலும்- அவர்களுடைய நினைவு என்றென்றும் நிலைத் திருக்க வேண்டும் என்றெண்ணி காரியமாற்றுவதிலும் -நான் என்றைக்கும் யாருக்கும் பின்வாங்கியவன் அல்லன். அந்த வகையிலே எத்தனை நினைவுச் சின்னங்கள் தமிழகத்தில் தி.மு.கழக ஆட்சியிலே ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதை சில நாட்களுக்கு முன்புகூட விரிவாக **'முரசொலி'**யில் எழுதியிருந்ததை அனைவரும் அறிவார்கள்.

இதற்குச் சான்றாக, ராமசுப்பிரமணியராஜா பேசும்போது, குமாரசாமி ராஜா அவர்களுடைய பெயரை அந்த மாவட்டத்தின் ஆட்சியர் அலுவலகத்திற்குச் சூட்டவேண்டு

மென்று கோரிக்கை வைத்ததையும், அதனை நான் 1989-90 இல் ஏற்றுக்கொண்டதையும் கூறி நன்றி தெரிவித்துக் கொண்டார்.

அப்போது செய்தித்துறை அமைச்சராக இருந்த முல்லை வேந்தன் பேசும்போது, ''குமாரசாமி ராஜாவும் சில கொள்கை களுக்காகத் தன்னுடைய பதவியை இழக்க நேரிட்டது-கலைஞரும் அவ்வாறே பதவியிழக்க நேரிட்டது'' என்று குறிப்பிட்டார்.

பதவியிழந்த ஒரு சம்பவம் மாத்திரமல்ல-இளமைக் கால சம்பவங்கள் சிலவற்றை எடுத்துக் கொண்டால், அவருக்கும், எனக்கும் சில பொருத்தமான நிகழ்வுகள் உள்ளதை அறியலாம்.

குமாரசாமி ராஜா உயர்நிலைப் பள்ளியிலே படித்தபோது, ராஜபாளையத்திலிருந்து திருவில்லிப்புத்தூருக்கு ஏழு மைல் தூரம் நடந்தே சென்றுதான் படித்தார். நானும்-ஏழு மைல் தூரம் நடந்து சென்றுதான் ரயிலேறி, திருவாரூர் சென்று படித்தேன்.

இன்னொன்று, அவரும் எஸ்.எஸ்.எல்.சி தேர்விலே பெயிலானவர்-நானும் அவ்வண்ணமே.

அவர் பெயிலானவுடன், நண்பர்கள் வருத்தப்பட்டபோது, ''ஏன் இதற்கெல்லாம் வருத்தப்படுகிறீர்கள்? இதற்கெல்லாம் வருத்தப்படலாமா?'' என்று சொன்னாராம். அதே மாதிரி தான் நானும் பெயிலானவுடன் நண்பர்களிடம், ''பெரியாரோடு சேர்ந்து நான் சுற்றுப் பயணம் போனதனால்தான் பெயிலே ஆனேன்'' என்றேன். அதைப் போலவே குமாரசாமி ராஜா அவர்களும் பொது வாழ்க்கையில் ஈடுபட்டதன் காரணமாகத் தான் பெயிலானார்.

அடுத்து குமாரசாமி ராஜாவிற்குக் கால்பந்து விளையாட்டிலேதான் அதிகப் பிரியம் என்றும், ''அந்த விளையாட்டிலே கீழே விழுந்து ஒரு பாதிப் பல்லை உடைத்துக் கொண்டேன்'' என்றும் அவருடைய இளமைக் கால வாழ்க்கை வரலாற்றில் குறிப்பிட்டிருக்கிறார். எனக்கும் கால்பந்து

விளையாட்டில் மிகுந்த ஈடுபாடு உண்டு. திருவாரூரில் படித்த காலத்தில், கால்பந்து பந்தயங்கள் பலவற்றில் கலந்து கொண்டிருக்கின்றேன். பல்லை உடைத்துக்கொள்ளவில்லை-ஆனால் நெற்றியில் ஒரு காயம் இன்றைக்கும் இருக்கிறது. கால்பந்து விளையாட்டின் போது விழுந்ததால் ஏற்பட்ட தழும்பு அது.

குமாரசாமி ராஜா-பெரிய ராஜா குடும்பத்திலே பிறந்தவர்-செல்வந்தர்-செல்வம் கொழிக்கின்ற அளவிற்கு நிலபுலன்களும் தோட்டம் துரவுகளும் கொண்டவர்! அந்த இனிய வாழ்வை-சுக வாழ்வை விரும்பாமல், ஒருமுறை ஓராண்டு காலமும், இன்னொரு முறை ஒன்பது மாத காலமும் சிறையிலே அடைக்கப்பட்டு நாட்டிற்காக-மக்களுக்காக தன்னை அர்ப்பணித்துக்கொண்டவர்.

அந்த விழாவிலே எனக்கு முன்னால் பேசியவர்கள், அமைச்சர்கள் எல்லாம் குடியிருக்கின்ற கிரீன்வேஸ் சாலைக்கு குமாரசாமி ராஜா சாலை என்று பெயர் வைக்க வேண்டுமென்று வைத்த கோரிக்கையினை ஏற்று-நான் இறுதியாக பேசும்போது ''அந்தக் கோரிக்கை ஏற்கப்படும்'' என்று அறிவித்தேன்.

அவ்வாறே அந்தக் கோரிக்கை தற்போது ஏற்கப்பட்டு, அந்தச் சாலைக்கு குமாரசாமி ராஜா சாலை என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது.

37.கூறாததைக் கூறியதாக...

கலைஞர் அரசைக் கலைக்க முயற்சிப்பது நேர்மையற்றது என்றார் வி.பி.சிங்!

தமிழகச் சட்டமன்றத்தில் ஒருமுறை டாக்டர் ஹண்டே அவர்கள் வேகமாகப் பேசியபோது குறுக்கிட்ட நான், ''தமிழகத்திலே உள்ள மிக மிக மிக என்று எத்தனை மிக வேண்டுமென்றாலும் போட்டுக் கொள்ளலாம். - அத்தகைய மிக மிகப் பின்தங்கிய சமுதாயத்திலே பிறந்தவன் நான் என்று சொல்லியிருக்கிறேன். அந்த மிக மிகப் பின் தங்கிய சமுதாயத்து மக்களை வாழ்வில் முன்னேற்ற என்னுடைய உயிரையும் பணயம் வைத்துப் பாடுபடுவேன்'' என்று கூறியதோடு மட்டுமல்லாமல், அதனைச் செயல்முறைப் படுத்திடவும் முயன்றிருக்கிறேன் என்பதற்கு ஒரு சில உதாரணங்களைத் தெரிவித்திட விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் இடஒதுக்கீட்டுக் கொள்கையை மறு ஆய்வு செய்யும் பிரச்சினை பலமுறை எழுப்பப்பட்டு வந்தாலும், முதல்முறையாக நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் 1969 ஆம் ஆண்டில், திரு.ஏ.என்.சட்டநாதன் அவர்கள் தலைமையில், 13.11.1969 அன்று பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு ஒன்று அமைக்கப்பட்டது.


பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலனுக்காகவும் அவர்தம் நிலையை மேம்படுத்தவும் அரசு அதுவரை மேற்கொண்ட நடவடிக்கைகளை ஆராயவும், கல்வி வசதிகள், அரசுப் பணிகளில் பிரதிநிதித்துவம், வீட்டு வசதி, மானிய உதவிகள், சமுதாய நல வளர்ச்சி ஆகிய முனைகளில் அவர்களுடைய

நிலையை மேம்படுத்த மாநில அரசு என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று பரிந்துரை செய்யவும், தமிழ்நாட்டு வரலாற்றில், முதன்முதலில் அமைக்கப்பட்ட குழு அதுதான்.

அக்குழு அளித்த பரிந்துரையின் அடிப்படையில், அதுவரை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 16 சதவீதம்-பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்க்கு 25 சதவீதம்-பொதுப் போட்டிக்கு 59 சதவீதம் - என்றிருந்த இடஒதுக்கீட்டு அளவை மாற்றியமைத்து, 7.6.1971 அன்று ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 18 சதவீதம் - பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 31 சதவீதம் - பொதுப் போட்டிக்கு 51 சதவீதம்- என்று ஆணை வெளியிடப்பட்டது.

பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம் பெற்றுள்ள பல்வேறு வகுப்புகள், கல்வி நிலையங்கள் மற்றும் வேலை வாய்ப்புகளில் தங்களுக்குரிய பங்கினைப் பெற முடியவில்லை யென்ற உணர்வு மேலோங்கி, மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர்க்குத் தனி ஒதுக்கீடு வேண்டு மென்ற கோரிக்கை வலுப்பெற்று வந்ததையொட்டி, பிற்படுத்தப்பட்டோருக்கான 50 சதவீத இடஒதுக்கீட்டில், மிகப்பிற்படுத்தப்பட்டார் மற்றும் சீர்மரபினர்க்கு 20 சதவீதம் ஒதுக்கியும்-மீதமுள்ள 30 சதவீதத்தைப் பிற்படுத்தப் பட்டோருக்கு ஒதுக்கியும்-நான் மூன்றாம் முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பின்னர், 28.3.1989 அன்று ஆணையிடப்பட்டது;

1990-ஆம் ஆண்டில் சென்னை உயர்நீதி மன்றத் தீர்ப்பினை யொட்டியும், தமிழ்நாட்டிலுள்ள பழங்குடியினர் மக்கள் தொகையைக் கருத்தில் கொண்டும்-பொதுப் போட்டிக்கான ஒதுக்கீட்டிலிருந்து தனியே ஒரு விழுக்காடு பழங்குடியினருக்கும்-18 விழுக்காடு தாழ்த்தப்பட்டோருக்கும் - 20 விழுக்காடு மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கும்-30 விழுக்காடு பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும்-31 விழுக்காடு பொதுப் போட்டிக்கும் என 22.6.1990 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டது.




மிக - மிக - மிகப் பின்தங்கிய சமூகத்திலே பிறந்த நான், பின்தங்கிய சமுதாய மக்களின் வாழ்வில் முன்னேற்றம் ஏற்படுத்த செயல்படுத்திய திட்டங்கள் ஏராளம்.



கழக ஆட்சியில்தான் பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கென தனியாக ஓர் இயக்குநரகம் 1969 ம் ஆண்டு கழக அரசால் தொடங்கப்பட்டது. பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கென தனியே ஓர் அமைச்சரை நியமித்ததும், அதற்கென மானியக் கோரிக்கை ஒன்றை அறிமுகப்படுத்தியதும் 1971ஆம் ஆண்டு கழக அரசியல் தான். பிற்படுத்தப்பட்டோர்- மிகப்பிற்படுத்தப்பட்டோர். நலனுக்குத் தனியே திட்டங்களையும், செயல் முறைகளையும் வகுத்தளித்திடத் தலைமைச் செயலகத்தில் தனியாக ஒரு துறை 1989 ஆம் ஆண்டிலேதான் தோற்றுவிக்கப்பட்டது.

மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கான திட்டங்களைச் செயலாக்குவதில் தனிக்கவனம் செலுத்தும் பொருட்டு, 1989ஆம் ஆண்டு மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இயக்குநரகம் கழக அரசால் தோற்றுவிக்கப் பட்டது.

1989இல் முதலமைச்சராக மூன்றாவது முறையாகப் பொறுப்பேற்றபோது, மிகப் பிற்படுத்தப்பட்டோர். சீர் மரபினருக்கு எந்தவித நிபந்தனையுமின்றி இளங்கலைப் பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வியையும் - 1990 ஆம் ஆண்டில் ஆண்டு வருமான வரம்பு 12 ஆயிரம் ரூபாய் வரையுள்ள பிற்படுத்தப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர் களுக்கு இளங்கலைப் பட்டப் படிப்பு வரை இலவசக்



அரசுத் துறைப் பணிகளில் பிற்படுத்தப் பட்டோருக்கான பிரதிநிதித்துவம் குறித்து ஆய்வு செய்ய அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் குழு ஒன்றை அமைத்தேன்

கல்வியையும்-பிறகு அந்த வருமான வரம்பை 25 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியும் சலுகை அளித்த தெல்லாம் கழக ஆட்சிதான்.

அனைத்துத் தொழில் கல்வியிலும் ஆதி திராவிட- பிற்படுத்தப்பட்ட-மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் உள்ளிட்ட கிராமப்புற மாணவர்கள் பயனடைய 15 சதவிகித தனி இட ஒதுக்கீடு செய்ததும் தி.மு.கழக ஆட்சியிலேதான். ஆனால் பின்னர் அது நீதி மன்றத்தினால் தடை செய்யப்பட்டு விட்டது.

கிராமங்களிலே உள்ளவர்கள் பயனடைய வேண்டுமென்பதற்காகப் பட்டதாரிகள் மற்றும் பட்டய தாரிகளாக அதுவரை இல்லாத குடும்பங்களைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்ட-மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் பாலிடெக்னிக்குகளில் சேர்ந்து இலவசக் கல்வி பெறுவதற்காக அதுவரை இருந்த எண்ணிக்கை வரம்பை அறவே நீக்கினோம்.

அதுவரை ஒரு பட்டதாரிகூட இல்லாத குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு-அவர்கள் எந்த வகுப்பினைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும்-மருத்துவக் கல்லூரியிலோ, பொறியியல் கல்லூரியிலோ, கால்நடை மருத்துவக் கல்லூரியிலோ, பல் மருத்துவக் கல்லூரியிலோ, வேளாண்மைக் கல்லூரியிலோ, சட்டக் கல்லூரியிலோ சேர விரும்புவார் களானால், அவர்கள் பெறும் மதிப்பெண் அடிப்படையிலே ஒவ்வொரு பிரிவிலும், முதல் பத்து இடங்களைப் பெறுபவர் களுக்கு - அவர்களின் கல்விச் செலவு முழுவதையும் அரசே ஏற்றுக்கொள்ளும் என்று அறிவித்து-அதன் மூலம் பட்ட தாரிகளே அதுவரை இல்லாத குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பயன்பெற வழிவகுத்துக் கொடுத்தோம்.



''பெரியார் விருது'' 5 சவரன் தங்கப் பதக்கம் என்பதை, படிப்படியாக உயர்த்தி - தங்கப் பதக்கத்துடன் பரிசுத் தொகையாக 1 இலட்ச ரூபாய் வழங்க உத்தரவிட்டேன்.

அதுபோலவே ஒரு பட்டதாரிகூட இல்லாத குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தொழில் கல்விக்கு விண்ணப்பிக்கும் போது, அவர்களுக்கு நுழைவுத் தேர்வில் ஐந்து மதிப்பெண்கள் கூடுதலாக அனுமதிக்கக் கழக ஆட்சியிலே அனுமதிக்கப் பட்டது. பின்னர் அந்தத் திட்டம் அடுத்து வந்த ஆட்சியிலே நீதி மன்றத்தின் பெயரால் கைவிடப்பட்டது.

பிற்படுத்தப்பட்டோர்-மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் முன்னேற்றத்திற்கு அரிய பணி ஆற்றியுள்ள ஒருவருக்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் பெரியார் விருதுக்கு 5 சவரன் தங்கப் பதக்கம் மட்டுமே என்றிருந்ததை மாற்றி, 1996 மற்றும் 1997ஆம் ஆண்டுகளில் இவ்விருது பெறுவோருக்கு ரூபாய் 20,000 ரொக்கமும், மூன்று சவரன் தங்கப் பதக்கமும் வழங்கப்பட்டு, 1998 ஆம் ஆண்டு முதல் பரிசுத் தொகை ஒரு லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டு, அத்துடன் ஒரு சவரன் தங்கப் பதக்கமும் வழங்கப்பட்டு வருகிறது. 1996 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்த அரசில் **திரு.திருவாரூர் கே.தங்கராசு, திரு.எஸ்.தவமணி இராசன், திரு.நாத்திகம் இராமசாமி, திரு.நன்னிலம் நடராசன், திரு.திருச்சி என். செல்வேந்திரன்** ஆகியோருக்குப் பெரியார் விருது வழங்கப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்டோர்-மிகப் பிற்படுத்தப்பட்டோர் பிரிவுகளைச் சார்ந்த மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகை பெறுவதற்கான பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.12,000 என்று 1989 ஆம் ஆண்டில் நிர்ணயம் செய்யப்பட்டது. அதற்குப் பிறகு, பயன் பெறுவோர் எண்ணிக்கையை உயர்த்திட வேண்டும் என்றும் நோக்கத்தில், 1996இல் ரூ.25,000 ஆகவும்-31.5.2000இல் ரூ.50,000 ஆகவும் உயர்த்தப் பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவிகள் அதிகமாகப் படிக்க முன்வர வேண்டும் என்பதை கவனத்தில் கொண்டு, அவர்களது கல்வியை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு, 1999-2000 ஆண்டிலிருந்து மூன்றாம் வகுப்பு முதல் 5ம் வகுப்புவரை படிக்கும் அறுபதாயிரம் மிகப் பிற்படுத்தப்பட்டோர், மற்றும் சீர்மரபினர் மாணவிகளுக்கு ஆண்டுதோறும் ரூ.500 என்றும், ஆறாம் வகுப்பு படிக்கும் மூப்பதாயிரம் மாணவிகளுக்கு ஆண்டுக்கு 1000 ரூபாய் என்றும் வழங்க, ஆறு கோடி ரூபாய்க்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

பிற்படுத்தப்பட்ட-மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் விடுதிகளில் சேர்வதற்குக் குடும்ப வருமான வரம்பு ரூ.15,000 என்பது ரூ.50,000 ஆக 1998-99இல் உயர்த்தப்பட்டது.

2000-2001 முதல் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரில் மேல் நிலைப் பள்ளித் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்று, தொழிற் கல்வியில் சேரும் 500 மாணவர்கள் மற்றும் 500 மாணவியர்க்கு ஆண் டொன்றுக்கு ரூ.1500 வீதம் ஐந்தாண்டுகள் அல்லது முதல் பட்டப் படிப்பு முடியும்வரையில் சிறப்பு பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.



1998இல் ராகவேந்திரா திருமண மண்டபத்தில் நடைபெற்ற பொதுக்குழுவில் கலந்து கொண்ட உறுப்பினர்கள்.



பொதுக்குழுவில் ''நீதிபதி ஜெயின் தனது இடைக்கால அறிக்கையில், எந்த ஒரு இயக்கத்தையும் தனிப்பட்ட எவரையும் குறிப்பிட்டுக் குற்றம் சுமத்தவில்லை'' என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

1998 ஆம் ஆண்டு முதல் பிற்படுத்தப் பட்டோர் - மிகப் பிற்படுத்தப்பட்டோர் பிரிவுகளைச் சார்ந்த குடும்பங்களின் முதல் நபருக்கு பாலிடெக்னிக் நிறுவனங்களில் பட்டயப் படிப்பில் (டிப்ளமா கோர்ஸ்) இலவசக் கல்வி வழங்கிட ஆணை பிறப் பிக்கப்பட்டுள்ளது.

ஐ.ஏ.எஸ்-ஐ.பி.எஸ். தேர்வுகளுக்கு பிற்படுத்தப்பட்ட-மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கும் தனிப் பயிற்சி நிலையத்தில் தங்கியுள்ள மாணவரின் மாத உணவுக் கட்டணம் ரூ.250 என்பது ரூ.500 ஆக 1996ல் உயர்த்தப் பட்டது. 1998 ல் பயிற்சி பெறுவோரின் எண்ணிக்கை 50 என்பது 100 ஆகவும் உயர்த்தப்பட்டது.

1998-99ஆம் ஆண்டிலிருந்து பிற்படுத்தப்பட்ட-மிகப் பிற்படுத்தப்பட்ட - சீர்மரபினர் பிரிவுகளைச் சேர்ந்த 2000 பேருக்கு 3 மாத பயிற்சிக் காலத்திற்கு கனரக வாகன ஓட்டுநர் பயிற்சிக்கான கட்டணத்தொகை தலா ரூ.9,000 லிருந்து ரூ.12,200 ஆக உயர்த்தி அரசால் வழங்கப்பட்டது. இந்தப் பயிற்சிக் கட்டணத்தை 30.12.1999 முதல் 15,500 ஆக உயர்த்தி, அதனால் ஏற்படும் ரூபாய் 1 கோடியே 25 லட்சம் ரூபாய் கூடுதல் செலவுத் தொகையை அரசே ஏற்பதற்கு ஒப்புதல் அளித்து ஆணையிடப் பட்டது.

2000-2001 முதல் மிகப் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சீர்மரபினர் இயற்கை எய்தினால், இறுதிச் சடங்கிற்கு ரூ.500 வழங்கப்படுகிறது.

20 விழுக்காடு இட ஒதுக்கீடுக் கோரி 1987இல் நிகழ்ந்த சமூக நீதிப் போராட்டத்தில் பலியான 23 தியாகிகளின் குடும்பங்கள்



ஒவ்வொன்றுக்கும், 3 இலட்ச ரூபாய் நிவாரண உதவியும், அவர்களின் குடும்பத்தினருக்கு மாத ஓய்வு ஊதியமாக ரூ1,500 வீதமும் அனுமதித்து 7.4.1998 அன்று ஆணையிடப்பட்டது.

அ.தி.மு.க.ஆட்சியில் தொடரப்பட்ட வழக்குகளில் ஐந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாட்டாளி மக்கள் கட்சியினர் நீதி மன்றங்களுக்கு அலைந்து கொண்டிருந்தார்கள். அந்த வழக்குகளையெல்லாம் தி.மு.க.ஆட்சிக்கு வந்ததும் ஒரே உத்தரவில் திரும்பப் பெற்றது.

ஆதி திராவிடர்களுக்கு வழங்கியது போலவே, இலவச வீட்டு மனைகள் ஒட்டர், நரிக் குறவர், முடிதிருத்துவோர், சலவைத் தொழிலாளர் ஆகிய நான்கு பிரிவினருக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்ததை விரிவுபடுத்தி-வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் அனைத்து மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கும் வழங்கிட தி.மு.கழக ஆட்சியிலேதான் உத்தரவிடப்பட்டது.

1997-98ஆம் ஆண்டு இதே திட்டத்தை மேலும் விரிவுபடுத்தி, கிராமங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் பிற்படுத்தப்பட்டோருக்கும், முன்னேறிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் வீட்டுமனை வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டதும் தி.மு.கழக ஆட்சியிலேதான்.

அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்கள் ஆகியவற்றின் பணியிடங்களில் பிற்படுத்தப்பட்டோர்-மிகப்பிற்படுத்தப்

பட்டோர் பிரதிநிதித்துவம் குறித்து ஆய்வு செய்ய பிற்படுத்தப்பட்டோர் நல அமைச்சர் தலைமையில், 1.6.1998 அன்று உயர்நிலைக்குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவில் சட்டப்பேரவை உறுப்பினர்கள் **வ.வேலுச்சாமி, மீ.அ.வைத்தியலிங்கம், வாசுகி முருகேசன், ஆர்.ஆர்.சேகரன், பி.வேல்துரை, நா.பெரியசாமி, ஏ.வி.அப்துல் நாசர், இரா.தாமரைக்கனி, ஜி.கே.மணி, எல்.சந்தானம், டி.மணி, ஆ.ராசேந்திரன் என்கிற தீரன், ஆ.வெங்கடாசலம்,** ஆகிய சட்டமன்ற அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் உறுப்பினர்களாகச் செயல்பட்டார்கள். இந்த உயர்நிலைக்குழு வழங்கிய பரிந்துரைகள் ஆய்வு செய்யப்பட்டு, பத்தும் அதற்கு மேலும் எண்ணிக்கை உள்ள பணிநிலைப் பிரிவுகளுக்கு மட்டுமே இடஒதுக்கீடு பின்பற்றப்பட வேண்டும் என்னும் விதி 21.9.1999 அன்று மாற்றப்பட்டது.

ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கை உள்ள பணி நிலைப் பிரிவுகளுக்கும் இட ஒதுக்கீட்டு முறை பின்பற்றலாம் என்று 21.9.1999 அன்றும், பணிமாறுதல் முறை மூலம் செய்யப்படும் நியமனங்களில் நிரப்பப்படாத பணியிடங்களை முன் கொணர்முறை (Carry Forward) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு உள்ளது போல், பிற்படுத்தப் பட்டோர்-மிகப் பிற்படுத்தப்பட்டோர்-மற்றும் சீர்மரபினருக்கும் விரிவுபடுத்தலாம் என்று 2.5.2000 அன்றும், நேரடி நியமன முறையில், தற்போது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கும்-மிகப் பிற்படுத்தப் பட்டோர்-மற்றும் சீர்மர பினருக்கும் உள்ள முன் கொணர் முறையை, பிற் படுத்தப்பட்டோருக்கும் விரிவுபடுத்தலாம் என்று 2.5.2000 அன்றும், இட ஒதுக்கீட்டு முறையை



''ஆதரவை வாபஸ் பெறுவேன்'' என்ற மிரட்டலுக்கு பா.ஜ.க. அரசு பணிந்தது குறித்து வெளிவந்த கார்ட்டூன்.

THE HINDU


குற்றச்சாட்டுகள் ஏதும் இல்லாத நிலையில், அ.தி.மு.க. வற்புறுத்தலால் விசாரணைக்கு பா.ஜ.க. அரசு ஒப்புதல் அளித்துள்ளது என்று ஜெயலலிதாவின் சதியைப் பறைசாற்றியது. 'இந்து' நாளேடு.

பல்கலைக் கழகங்கள், தலைமைக் கூட்டுறவு நிறுவனங்கள், வங்கிகள், பொதுத்துறை நிறுவனங்களுக்கும் விரிவுபடுத்தலாம் என்று 28.10.1999 அன்றும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்- பிற்படுத்தப் பட்டோர்-மிகப் பிற்படுத்தப்பட்டோர்-மற்றும் சீர்மரபினர் ஆகியோருக்கு உரிய பிரதிநிதித்துவம் இல்லையெனில், எத்தனை பணியிடங்கள் குறைகின்றதோ, அப்பணியிடங்களை ஒவ்வொரு பதவியிலும் 1.4.89 முதல் கணக்கில் கொண்டு அத்துறையிலுள்ள நுழைவுப் பதவியில் (Entry Level Post) படிப்படியாக ஐந்தாண்டு காலத்திற்குள் நியமனம் செய்யலாம் என்று 2.5.2000 அன்றும், எங்கெல்லாம் இடஒதுக்கீட்டு முறைக்கு வகை செய்யப்பட்டிருக்கிறதோ அங்கெல்லாம் இன சுழற்சி முறையைப் பின்பற்றாதவர்கள் மீது குடிமைப்பணி விதியின் கீழ் ஒழுங்கு நடவடிக்கை எடுத்து, கடும் தண்டனை வழங்கலாம் என்று 21.9.1999 அன்றும் முடிவு செய்யப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

அரசுப் பணிகளுக்கு நியமனம் செய்யப்படும்போது, முதல் 10 இடங்களில் மிகப்பிற்படுத்தப்பட்டோருக்கு 13.8.1992 முதல் வழங்கப்பட்டு வந்த ஒரு இடம் என்பது, 2000-2001இல், இரண்டு இடங்களாக மாற்றி அமைக்கப்பட்டது. இதன் மூலம் ஒவ்வொரு பத்து இடங்களிலும் மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இரண்டு இடங்கள் என்பது உறுதி செய்யப்பட்டது.

2000-2001 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை, 24.3.2000 அன்று சட்டமன்றப் பேரவையில் வைத்து ஆற்றிய உரையில் நான் குறிப்பிட்டபடி, மாநில அரசுப் பணியிடங்களில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்-பிற்படுத்தப்பட்டோர்- மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர்

ஆகியோரின் இடஒதுக்கீடு, அவர்களின் தற்போதைய பிரதிநிதித்துவம் மற்றும் அதன்மீது அரசு எடுத்து வருகின்ற நடவடிக்கைகள் பற்றிய வெள்ளை அறிக்கை 11.5.2000இல் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்பட்டது. இந்த அறிக்கையில் மிகப் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கான பின்னடைவுப் பணியிடங்கள் என்று தெரிவிக்கப்பட்ட 5263 பணியிடங் களை ஐந்து ஆண்டு காலத்திற்குள் நிரப்பப்படும் என்று அறிவிக்கப் பட்டதோடு, அதற்கான நடவடிக்கை களும் முறையாக மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.




கூறாததைக் கூறியதாகச் சொல்லி, குற்றமற்றவரை விசாரிக்கச் சொல்வது, அரசியல் உள்நோக்கம் கொண்டது'' என்றார், மார்க்சிஸ்ட் தலைவர் என்.சங்கரய்யா

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும்- மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் இவ்வளவு சலுகைகளையும் தி.மு.கழக ஆட்சியிலே செய்தேன் என்பது அந்த வகுப்பிலே உள்ள மக்களுக்காகப் பாடுபடு வதாகச் சொல்லிக்கொள்ளும் கட்சித் தலைவர்கள் ஞாபகத்திலே வைத்துக் கொண்டிருக்கிறார்களோ என்னவோ- அந்த வகுப்பைச் சேர்ந்த மக்களும், அந்தச் சலுகைகளைப் பயன்படுத்தி முன்னேற்றம் கண்டவர்களும், நிச்சயமாக மனதிலே வைத்துக் கொண்டிருப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்குள்ளது. அவர்கள் அவ்வாறு நினைவிலே கொள்ளா விட்டாலும் கூட அந்த மக்களுக்காக இத்தனை சலுகைகளை நாம் செய்தோம் என்ற மனத்திருப்தி எனக்குள்ளது.

★ ★ ★

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக்குழு 1.8.1998 மற்றும் 2.8.1998 ஆகிய நாட்களில், சென்னையில், ஸ்ரீராகவேந்திரா திருமணமண்டபத்தில் கூடியது. அந்தப்



"தி.மு.க. மீது எந்தக் குற்றமும் சுமத்தப்படாத நிலையில் ஜெயலலிதாவின் நிர்ப்பந்தத்திற்கு பா.ஜ.க. அரசு பணிந்துவிட்டது" என்றார், இந்தியக் கம்யூனிஸ்ட் ஆர். நல்லக்கண்ணு

பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட முதல் தீர்மானம் முக்கியமான ஒரு தீர்மானமாகும்.

ஜெயின் கமிஷனின் இறுதி அறிக்கையைத் தொடர்ந்து, தி.மு.கழகத்தின் மீது-குறிப்பாக என் மீது விசாரணை நடத்தப்படக் குழு ஒன்று அமைக்கப்படுமென்று பா.ஜ.க.அரசு முடிவு செய்ததை யொட்டி, முதல் தீர்மானம் கழகப் பொதுக் குழுவிலே நிறைவேற்றப் பட்டிருந்தது. அந்தத் தீர்மானத்தின் வாசகங்கள் வருமாறு:-

"நீதிபதி ஜெயின் தனது இடைக்கால அறிக்கையைத் தந்தபோது, அதில் எந்த ஒரு இயக்கத்தையும், தனிப்பட்ட எவரையும் குறிப்பிட்டு குற்றம் சுமத்தவில்லையென்று ஜெயின் அவர்களே தனது இறுதி அறிக்கையில் தொகுதி 6,பக்கம் 60, பத்தி 4இல் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார். (There is no indictment in the interim report of any individual or organisation or party regarding any criminal conspiracy to assassinate shri Raji Gandhi).

"இறுதி அறிக்கையிலும்கூட, தொகுதி 5, பக்கம் 361, பத்தி 7 இல் சிறப்புப் புலனாய்வுக் குழு சந்திராசாமி மற்றும் மதன் சேவாதாஸ்சிங் ஆகியோர் சம்பந்தப்பட்டிருக்கிறார்களா என்று புலன் விசாரணை செய்திருந்தால், அது இந்தக் கமிஷன் விசாரணைக்கு உதவிகரமாக இருந்திருக்கும். இவர்கள் கூறிய கதைகள் பொய்யாக இருந்திருக்குமேயானால், அது கமிஷனின் பரிசீலனைக்கு வந்திருக்காது. அல்லது சிறப்புப் புலனாய்வுக் குழுவின் விசாரணையின் அடிப்படையில் அவற்றின் உண்மைத் தன்மை கண்டறியப்பட்டிருக்கும்."

"சிறப்புப் புலனாய்வுக் குழு திருவாளர்கள் சந்திரசேகர், டி.என்.சேஷன், டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி, செல்வி ஜெயலலிதா மற்றும் பி.வி.நரசிம்மராவ் ஆகியோரையும்

விசாரிக்கவில்லை. ஏனெனில் அப்போது அது தேவையெனக் கருதப்பட வில்லை என்று டி.ஆர்.கார்த்தி கேயன் கமிஷன் முன்பு சாட்சியம் அளித்திருக்கிறார்.



பா.ஜ.க. அரசின் நடவடிக்கைகளைக் கடுமையாகக் கண்டித்தார், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்தியத் தலைவர் இந்திரஜித் குப்தா

''நீதிபதி ஜெயின் அவர்கள் தனது இறுதி அறிக்கையில் மேற்கண்டவாறு தான் குறிப்பிட்டிருக்கிறாரே தவிர, அதில் அவர் யாரையும் குறிப்பிட்டுக் குற்றம் சாட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கலைஞர் விசாரிக்கப்பட வேண்டுமென்று நீதிபதி ஜெயின் தனது இறுதி அறிக்கையிலே குறிப்பிடவில்லை. ஆனால் அவர் அப்படி கூறியிருப்பதுபோலக் கற்பனை செய்து கொண்டு, அது எந்த வகையிலே என்று முடிவு செய்ய ஒரு குழு அமைக்கப்படும் என்று பா.ஜ.க. அரசு தெரிவித்திருப்பது நிராகரிக்கத்தக்க ஒன்றாகும்.''

''ஜெயலலிதா போன்ற சிலரது நிர்ப்பந்தம் காரணமாகவே, வழியேதுமின்றி மத்திய அரசு இப்படியொரு குழுவை அமைப்பதாக அறிவித்துள்ளது என்ற உண்மை உள்ளங்கை நெல்லிக்கனிபோலத் தெளிவாகிறது.''

''மத்திய பா.ஜ.க.அரசின் சார்பில் முதலில் தயாரித்த A.T.R. நடவடிக்கை குறிப்பில் கலைஞர் அவர்களைப் பற்றி எந்த விதமான குறிப்பும் இல்லை என்றும்-தமிழகத்திலிருந்து மத்திய அமைச்சரவையிலே இடம் பெற்றுள்ள அ.தி.மு.க.வைச் சார்ந்த ஒரு சில அமைச்சர்களுடைய தூண்டுதலின் பேரில் அது போன்ற குறிப்பு-நடவடிக்கை அறிக்கையிலே பிறகு வேண்டு மென்றே சேர்க்கப்பட்டிருப்பதாகவும் டெல்லியிலிருந்து வெளிவந்த ஏடுகளிலே குறிப்பிடப்பட்டுள்ளது.

''தங்களுடைய ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஒரு சிலருடைய தூண்டுதலின் காரணமாக, இப்படிப்பட்ட

முறைகேடான செயலில் பா.ஜ.க. ஆட்சி ஈடுபட்டிருப்பதை இப்பொதுக்குழு மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறது.''

- இந்தத் தீர்மானம் பொதுச்செயலாளர் **பேராசிரியர்** அவர்களால் முன்மொழியப்பட்டு, நாடாளுமன்ற கழக உறுப்பினர் தம்பி **டி.ஆர்.பாலு**வினால் வழிமொழியப் பட்டது. அனைத்திந்திய ஏடுகள் எல்லாம் இந்தத் தீர்மானத்தை பெரும் முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டிருந்தன. இந்த முதல் தீர்மானம் தவிர வேறு பல முக்கியத்துவம் வாய்ந்த பல தீர்மானங்கள் பொதுக்குழுவிலே நிறைவேற்றப்பட்டன.

பொதுக்குழுவிற்குப் பிறகு செய்தியாளர்கள் என்னைச் சந்தித்து, ஜெயின் கமிஷன் குறித்து எழுப்பிய பல கேள்விகளுக்கு நான் விளக்கமளித்தேன். இறுதியாக அவர்கள், ''ஆட்சியைக் கலைக்க குழி வெட்டுவதாக நினைக்கிறீர்களா?'' என்று கேட்டதற்கு-

''அப்படி குழி வெட்டுவார்களானால், அந்தக் குழியிலே அவர்களே விழுவார்கள்'' என்று சொன்னேன்.


அப்போது நாடாளுமன்றக் கழகக்குழுவின் தலைவராக இருந்த தம்பி **முரசொலி மாறன்** செய்தியாளர்களை அழைத்து-ஜெயின் கமிஷன் இறுதி அறிக்கையிலே மிகக் கடுமையான குற்றச்சாட்டிற்கு ஆளாக்கப்பட்டவர்கள் என்று 21 பேர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன என்றும்-ஆனால் நாடாளுமன்றத்தில் ஜெயின் கமிஷன் இறுதி அறிக்கையோடு சேர்த்து, அரசின் சார்பிலே வைக்கப்பட்ட நடவடிக்கை அறிக்கையிலே அந்த 21 பேர்களோடு என்னுடைய பெயரையும் வேண்டுமென்று சேர்த்திருக்கிறார்கள் என்றும், அது மிகப் பெரிய மோசடி என்றும் விளக்கினார்.

2.8.1998 தேதிய **''இந்து''** நாளிதழ் - ''குற்றச்சாட்டுகளை ஜெயின் கமிஷன் நிராகரித்த பிறகும், அ.தி.மு.க வற்புறுத்தலால் கருணாநிதி மீது விசாரணைக்கு பா.ஜ.க அரசு ஒப்புதல் அளித்துள்ளது'' என்று கட்டுரை ஒன்றைத் தீட்டியிருந்தது.

''ஜெயின் கமிஷன் இறுதி அறிக்கை மீதான மத்திய அரசின் நடவடிக்கை அறிக்கை அரசியல் உள் நோக்கம் கொண்டது''

என்று அகில இந்திய காங்கிரஸ் காரியக் கமிட்டி கண்டனம் தெரிவித்தது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் **திரு.என்.சங்கரய்யா** அவர்கள் விடுத்த அறிக்கையில்- ''ஜெயின் கமிஷன் கூறாததைக் கூறியதாகச் சொல்லி கலைஞரை விசாரிக்க வேண்டுமென்பது அரசியல் உள் நோக்கம் கொண்டது'' என்று கண்டித் திருந்தார்.



''தவறான தகவல்களைக் கூறுவது காற்றில்லாத பந்தை உதைப்பது போன்றது'' என்று பா.ஜ.க.வின் அரசியலை சாடினார், வி.பி.சிங்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளராக இருந்த பெரியவர் **ஆர்.நல்லக்கண்ணு** அவர்கள், ''ஜெயின் கமிஷன் இறுதி அறிக்கையில் தி.மு.க. மீது எந்தக் குற்றமும் சுமத்தவில்லை - ஜெயலலிதாவின் நிர்ப்பந்தத்திற்கு மத்திய அரசு பணிந்து விட்டது'' என்று அறிக்கை விடுத்தார்.

அந்தக் கட்சியின் அகில இந்தியத் தலைவர் **இந்திரஜித் குப்தா** அவர்களும், அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் **ஏ.பி.பரதன்** அவர்களும் அரசின் நடவடிக்கைகளைக் கடுமையாகக் கண்டித்து பேட்டி கொடுத்தார்கள்.

முன்னாள் பிரதமர் **வி.பி.சிங்** அவர்கள் ஒரு நீண்ட அறிக்கையையே, ஜெயின் கமிஷன் அறிக்கை குறித்து வெளியிட்டிருந்தார்- அந்த அறிக்கையில் வி.பி.சிங் தெரிவித்திருந்ததாவது:-

''கடந்த டிசம்பரில் வெளிவந்த பத்திரிகைச் செய்திக்குப் பதிலளித்த போது, நீதிபதி ஜெயின் கமிஷனின் இடைக்கால அறிக்கை, காற்றில்லாத கால்பந்தை உதைப்பது போன்றது என்று நான் தெரிவித்திருந்தேன். அவர் கொடுத்த இடைக்கால அறிக்கையின் ''முடிவுகள்'' பலவற்றில் அவரே பின்

வாங்கியுள்ளார் என்பதைத் தவிர இறுதி அறிக்கையில் சிறப்பம்சம் ஏதுமில்லை.

''தமிழ்நாட்டைச் சேர்ந்த தமிழர்கள், **திரு.ராஜீவ் காந்தியின்** படுகொலைக்குக் காரணம் என்று இடைக்கால அறிக்கையில் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இறுதி அறிக்கையில் அவரே பின்வாங்கி, அது தமிழ் பேசும் தமிழர்கள் அனைவரையும் குறிப்பது அல்ல என்று விளக்கியுள்ளார்.

''அரசு தயாரித்து, நாடாளுமன்றத்திற்கு அளித்த நடவடிக்கை அறிக்கையில், ஜெயின் கமிஷனின் முடிவுகள் திரித்துக் கூறப்பட்டுள்ளன என்பதோடு, அது அப்பட்டமான அரசியல் நோக்கம் கொண்டதாகவும் உள்ளது. திரு.கருணாநிதி தலைமையிலான தமிழ்நாடு அரசை நேர்மையற்ற முறையில் கலைப்பதற்காக வந்த வற்புறுத்தல்களைப் பிரதமர் **திரு.அடல் பிகாரி வாஜ்பாய்** இது வரை தடுத்துள்ளார். இருப்பினும் நடவடிக்கை அறிக்கை வேறு விதமாகக் கூறுகிறது. இதில் வற்புறுத்தலுக்குப் பணிந்து செல்லும் அறிகுறிகள் தெரிகின்றன.

''தொகுதி 5, பாகம் 3, அத்தியாயம் 8இல் ராஜீவ்காந்தி படுகொலையில் ஐயத்திற்குரியவர்களின் பங்கு பற்றி நீதிபதி ஜெயின் விவரித்துள்ளார். இந்த அத்தியாயத்தில் திரு.கருணாநிதியின் பெயர் எந்த இடத்திலும் இடம் பெறவில்லை என்றாலும், நடவடிக்கை அறிக்கையில் திரு.கருணாநிதியின் பெயர் ராஜீவ் காந்தி படுகொலையில் ஐயத்திற்குரியவர்களின் பங்கு என்ற தலைப்பின் கீழ் இடம் பெற்றுள்ளது. இது, அவரின் பெயரைக் களங்கப்படுத்தும் நோக்கத்திற்காக வேண்டுமென்றே உண்மைகளைத் திரித்துக் கூறியதாகும். ராஜீவ்காந்தி படுகொலையில் ஐயத்திற்குரியவர்களின் பங்கு பற்றி விவரிக்கப்பட்டுள்ள அத்தியாயத்தில், திரு.கருணாநிதியின் பெயரைக் காட்டும்படி நான் அரசுக்கு அறைகூவல் விடுக்கின்றேன். இது, தவறான தகவல்களை அளிப்பதன் மூலம் கருணாநிதி அரசைக் கலைப்பற்காகப் பொது மக்களின் மனதைத் தயார்படுத்துவதற்கான ஒரு முயற்சி இல்லையா? நீதிபதி ஜெயின் செய்யத் துணியாததை கேவலமாக மத்திய அரசு செய்துள்ளது.''

''ஜெயின் கமிஷனுடைய இறுதி அறிக்கையிலே திரு.கருணாநிதி மீண்டும் விசாரணை செய்யப்பட வேண்டும் என்று எந்தவிதமான கருத்தையும் தெரிவிக்கவில்லை. ஆனால் மத்திய அரசு இவ்வாறு செய்யத் தீர்மானித்துள்ளது. இது வெறும் அரசியல் உள் நோக்கம் கொண்டது-மற்றும் பாரபட்சமுடையது.''

என்று வி.பி.சிங்கின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

★ ★ ★

இதே போன்ற அறைகூவலை நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோது தம்பி முரசொலி மாறனும் கடுமையாகத் தொடுத்து, அரசு நிலைமையை விளக்கிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

மேலும் உள்துறை அமைச்சராக இருந்த திரு.அத்வானி அவர்களுக்கு 7.8.1998 தேதியிட்டு, விவரங்களை யெல்லாம் தெளிவாக எழுதி கடிதம் மூலமாகவும் அனுப்பியிருந்தார். அந்தக் கடிதத்திற்கு உள்துறை அமைச்சர் அத்வானி அவர்கள். 19.8.1998 தேதியிட்டு பதில் கடிதம் அனுப்பியிருந்தார். அந்தக் கடிதத்தில்-

''அன்புள்ள மாறன் அவர்களுக்கு, ஜெயின் விசாரணைக் கமிஷன் இறுதி அறிக்கை மீதான நடவடிக்கை அறிக்கையில் திருத்தம் தொடர்பாக, 1998 ஆகஸ்ட் 7ஆம் தேதி தாங்கள் எழுதிய கடிதத்தை அன்புடன் கவனத்தில் கொள்ளவும். அது கவனக்குறைவால் ஏற்பட்ட தவறாகும்.''

''எனவே மக்களவை மற்றும் மாநிலங்களவையின் செயலாளர்களுக்கும் இது தொடர்பாக உரிய திருத்தங்கள் செய்யும்படி நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறோம். மக்களவை மற்றும் மாநிலங்களவைச் செயலாளர்களுக்கு எழுதப்பட்ட கடிதத்தின் நகல் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளது'' என்று எழுதியிருந்தார்.

இவ்வளவிற்கும் மேலாக, நீதிபதி எம்.சி.ஜெயின் அளித்த சிறப்புப் பேட்டியிலேயே-ராஜீவ் காந்தி கொலைச் சதி

தொடர்பான தமது விசாரணை அறிக்கையில், சந்தேகத்திற்கு உரியவர்கள் பட்டியலில் எனது பெயரை, தான் ஒரு போதும் குறிப்பிடவில்லை எனத்தெரிவித்திருந்தார். ராஜீவ் காந்தி படுகொலை சம்பவத்தின் பின்னணியில் உள்ள சதித் திட்டம் பற்றி விசாரணை நடத்திய அவர், இது தொடர்பாக அளித்த சிறப்புப் பேட்டியில், என்னுடைய பெயரை, தான் குறிப்பிடாத நிலையில், மத்திய அரசு, தனது அறிக்கையைச் சரியாகப் படிக்காமல், நடவடிக்கை அறிக்கையைத் தயார் செய்திருப்பதாகப் புகார் கூறினார். என்மீது, ''சந்தேகப்பட எவ்வித ஆதாரமும் இல்லை'' என்றும், ஜெயின் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தார்.

38. ராஜரத்னா விருது!

''ராஜரத்தினம் வாசிப்பது சிலநேரம் குழலோசை போலவும் சிலநேரம் மேல் நாட்டு இசை போலவும் இருக்கும்'' என்று பாராட்டினார் பேரறிஞர் அண்ணா.

பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாள் 15.7.1998 சென்னையில் அதற்காக எடுக்கப்பட்ட விழாவில் கலந்து கொள்வதாக உறுதி அளித்திருந்தேன். ஆனால், அதற்கு முன்பே அன்றைய தினம் திருவண்ணாமலையில் அப்போது வீட்டு வசதித் துறை அமைச்சராக இருந்த தம்பி பிச்சாண்டியின் இளவலின் திருமண விழாவில் கலந்து கொள்ள ஒப்புதல் அளித்திருந்தேன். எனவே, முதல்நாளே திருவண்ணாமலை சென்று, அருணை பொறியியல் கல்லூரி பட்டமளிப்பு விழாவிலும் பொதுக் கூட்டத்திலும் பேசிவிட்டு, அங்கே இரவு தங்கியிருந்து, மறுநாள் காலையில் திருமண விழாவிலே கலந்து கொண்டு, 15ஆம் தேதி மாலையில் சென்னையில் நடைபெறும் பெருந்தலைவர் காமராஜரின் பிறந்த நாள் விழாவிலே கலந்து கொள்வதாக ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

பிச்சாண்டியின் இளவலின் பெயர் என்னுடைய பெயர்தான்- கருணாநிதி. அந்த மணவிழாவிலே கலந்து கொள்வதற்கு முன்பு-முதல் நிகழ்ச்சியாக அங்கேயுள்ள காமராஜரின் சிலைக்கு மாலை அணிவித்து விட்டுத்தான் மற்ற நிகழ்ச்சிகளிலே கலந்து கொண்டேன். அது போலவே காமராஜரின் பிறந்த நாள் நிகழ்ச்சிக்கு வருவதற்கு முன்பு, கிண்டியில் உள்ள அவரது நினைவகத்திற்குச் சென்று, அங்கே நடைபெற்று வந்த பராமரிப்புப் பணிகளையெல்லாம் பார்த்து விட்டுத்தான் பிறந்த நாள் நிகழ்ச்சியிலே கலந்து கொண்டேன்.

அந்த விழாவிலே காமராஜர் பெயரால் ஒரு விழா மலர் தயாரிக்கப்பட்டு, அதனை **ராஜேஷ் பைலட்** அவர்கள் வெளியிட, அதனை நான் பெற்றுக் கொண்டேன். காமராஜர் பெயரால் அமைந்த விருதினை நான் அவருக்கு அந்த விழாவிலே அளித்தேன். நிகழ்ச்சியில் பேசும்போது, காமராஜர் அவர்களுக்கும், பெரியார், அண்ணா போன்றவர்களுக்கும் இடையே இருந்த நட்புறவு பற்றியும், பெருந்தலைவர் அவர்களுக்கும் எனக்கும் இடையே உள்ள உறவு- மதிப்பு- மரியாதை- குறித்தும் நீண்ட நேரம் விளக்கினேன்.

அரசியலிலே எத்தனை வேறுபாடுகள் இருந்தாலும், எதிர் எதிர் முனையில் இருந்தாலும், அவரவர்களுக்குத் தர வேண்டிய மரியாதையை எண்ணிப் பார்த்து அரசியல் நடைபெற்றது அந்தக் காலம். ஆனால், இந்தக் காலம் எப்படிப்பட்டது என்பதை படிப்பவர்களே புரிந்து கொள்ளட்டும்.

உதாரணத்திற்காக ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால், 1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் நாள், இந்தியா விடுதலை பெற்ற விழா நாடு முழுவதும் கொண்டாடப் பட்ட போது - அன்று சென்னை தலைமைச் செயலகத்தில், கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியை முதலமைச்சர் என்ற முறையில் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். ஏற்றி வைத்தார்.



காமராஜரின் பிறந்த நாள் விழாவிலே கலந்து கொண்டபோது, அவருக்கும் எனக்கும் இடையே உள்ள உறவு - மதிப்பு - மரியாதை - குறித்து விளக்கிப் பேசினேன்.

அப்போது அவர் உரையாற்றும் போது, "இந்த நேரத்தில் ஒன்றைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர் களாக இருந்தாலும், வேறு



காமராஜர் விழாவிலே 'காமராஜர் விருது' முன்னாள் மத்திய அமைச்சர் ராஜேஷ் பைலட்டுக்கு வழங்கப்பட்டது.

எந்த நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தாலும் அவர்கள் நாட்டுக்கு நல்லது செய்தால், அவர்களைப் போற்ற வேண்டியது மனிதத் தன்மை உள்ள ஒவ்வொரு வருடைய கடமையாகும். சில ஆண்டுகளுக்கு முன்பு வரை இந்தச் சுதந்திரக் கொடியை இங்கே ஏற்றி வைப்பது மேதகு ஆளுநர் என்ற முறையிலேதான் இருந்தது. அந்த முறையை மாற்ற வேண்டு மென்று கோரி, அதற்காகப் போராடி, எல்லா மாநில முதல் அமைச்சர்களுக்கும் அந்த உரிமையைப் பெற்றுத் தந்த கலைஞர் கருணாநிதி அவர்களை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்'' என்று பலத்த கைதட்டலுக்கிடையே கூறினார்.

அதைப்போலவேதான், 1998 ஆம் ஆண்டு ஜூலை 31 அன்று, சென்னையில் **எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகக்** கட்டிடத்தில், எம்.ஜி.ஆர். அவர்களின் சிலையினை அப்போது குடியரசு துணைத் தலைவராக இருந்த **கிருஷ்ண காந்த்,** தமிழக ஆளுநர் பாத்திமா பீவி ஆகியோர் முன்னிலையில் நான் திறந்து வைத்தேன்.

எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயரால் பல்கலைக் கழகம் ஒன்றைத் தொடங்குவது என்று எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதே திட்டமிடப்பட்டு, சட்டமாக சட்டப் பேரவையிலே கொண்டு வரப்பட்டது.

அதன் பின்னர்-அவர் நம்மை விட்டுப் பிரிந்த பிறகு-அந்தப் பிரச்சினையை அப்படியே போட்டு விடாமல், 1989ஆம் ஆண்டு நான் முதலமைச்சர் பொறுப்பையேற்றவுடன், அந்தப் பல்கலைக் கழகத்தைத் தொடங்க வேண்டுமென்ற முனைப்போடு முயற்சித்து-அந்த முயற்சிக்கு உறுதுணையாக மற்றவர்களும் இருந்து-அப்போது இந்தியக் குடியரசுத்



திருவண்ணாமலை அருணை பொறியியல் கல்லூரியில், மாணவ - மாணவியருக்குப் பட்டங்கள் வழங்கியபோது...

தலைவராக இருந்த **ஆர். வெங்கட்ராமன்** அவர்களை அழைத்து வந்து, எம்.ஜி.ஆர். பல்கலைக் கழகத் தொடக்க விழா நடைபெற்றது. அப்போது பல்கலைக் கழகக் கட்டிடங்களுக்கான அடிக்கல்லை நான் நாட்டினேன். அந்தக் கட்டிடப் பணிகள் முடிவுற்று, அதன் திறப்பு விழா *1988* ஆம் ஆண்டுதான் நடைபெற்றது.

அந்தப் பல்கலைக் கழகத்தினுடைய கட்டிட வடிவமைப்பைக் கூட நானேதான் அமைத்துக் கொடுத்தேன். *1990* ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். பல்கலைக்கழகத்தின் முதல் பட்டமளிப்பு விழாவிலும் நான் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டேன். அதற்குப் பிறகு, *1997* ஆம் ஆண்டிலும் அந்தப் பல்கலைக்கழகத்தின் 7வது பட்டமளிப்பு விழாவிலே கலந்து கொண்டு உரையாற்றினேன். அதன் பிறகு, *1998* ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். அவர்களின் சிலை திறப்பு விழாவிலும் கலந்து கொண்டேன்.

எம்.ஜி.ஆர். அவர்களின் சிலையை அந்த விழாவிலேதான் நான் முதன் முதலாகத் திறந்தேன் என்பது சரியல்ல. அதற்கு முன்பே அறந்தாங்கியிலே **திருநாவுக்கரசர்** அழைத்ததன் பேரிலும் - கோபிச்செட்டிப்பாளையத்தில் அருளாளர் **ஆர்.எம்.வீ.,** அவர்களின் அழைப்பின் பேரிலும் - எம்.ஜி.ஆர். நினைவகத்திலும் எம்.ஜி.ஆர். அவர்களின் சிலைகளை நான் திறந்து வைத்துள்ளேன். இவை எல்லாம் எம்.ஜி.ஆர். அவர்கள் மறைந்த பிறகும், அவரின்பால் நான் எந்த அளவிற்குப் பாசத்தோடு நடந்து கொண்டேன் என்பதற்கான சான்றுகளாகும்.

★ ★ ★



"மாநில முதல்வர்கள் சுதந்திர தினத்தில் கொடியேற்றும் உரிமையைப் பெற்றுத் தந்த கலைஞர் அவர்களை நான் பாராட்டுகிறேன்" என்றார், எம்.ஜி.ஆர்.

தி.மு.கழகத்திலே நான் எந்தக் கூட்டங்களுக்குச் சென்றாலும், எந்த விழாக்களில் கலந்து கொண்டாலும், மாவட்டக் கழகச் செயலாளர்கள், ஒன்றியக் கழகச் செயலாளர்கள், கழக அன்பர்கள் தங்களின் அன்பினை-பாசத்தினைக் காட்டுவதற்காக பல பொருட்களை- வெள்ளியாலான தங்கத்தாலானவைகளை என்னிடத்திலே வழங்குகின்றார்கள். முதலமைச்சர் என்ற முறையிலும், அரசு விழாக்களில் நான் கலந்து கொள்ளும்போது அப்படிப்பட்ட பொருட்கள் எனக்கு வழங்கப்பட்டது உண்டு. ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற நேரத்தில், அரசு விழாக்களில் வழங்கப்பட்டவைகளை அரசு தலைமைச் செயலகத்திலே அவ்வப்போது நான் ஒப்படைத்து வருகிறேன். அந்தப் பொருட்கள் தலைமைச் செயலகத்திலே வைக்கப்பட்டு வருகின்றன. அதைப்போலவே கழகச் சார்பிலே நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளில் வழங்கப்பட்ட எந்தப் பொருளானாலும் கழகத்திற்கே உரியது என்ற அளவிலே தலைமைக் கழகத்தில் வழங்கி வந்திருக்கிறேன்.

அவ்வாறே 98ஆம் ஆண்டுக்கு முன்பு நடைபெற்ற என்னுடைய பவள விழாவினை முன்னிட்டு வழக்கம்போல் வைக்கப்பட்ட நிதி வசூல் உண்டியலில், ஏறத்தாழ 11 இலட்சரூபாய்க்கு மேல் நிதி சேர்ந்தது. கழகத்தலைவர் என்கின்ற முறையிலே அளிக்கப் பட்ட நிதியாக அது இருந்தபோதிலும், அப்போது நான் முதலமைச்சராக இருந்த காரணத்தினால், அந்த 11 லட்சம் ரூபாய் நிதியினை முதலமைச்சர் நிவாரண நிதிக்காக அரசாங்கத்திடம் நிதித் துறையிலே ஒப்படைத்து விட்டேன்.

அதுபோலவே கழகத் தலைவர் என்ற முறையிலே எனக்கு வழங்கப்பட்டிருந்த 26 லட்சத்து 3 ஆயிரத்து 607 ரூபாய்க்கான நகைகள் மற்றும் பொருட்களை 1.8.1998 அன்று நடைபெற்ற பொதுக் குழுவிலே பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களிடம் ஒப்படைத்து கழகப் பொருளாளரிடமிருந்து அதற்கான ரசீதையும் பெற்றுக் கொண்டேன்.

17.8.1998 அன்று மதுரையில் எனக்கு பவளவிழா நடத்தப்பட்ட போது, மதுரை மாநகர மாவட்டக் கழகத்தின் சார்பில், மூன்று இலட்ச ரூபாய் என்னிடம் வழங்கப்பட்டதை, மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் அறக்கட்டளை ஒன்று தொடங்கிட, பல்கலைக் கழகத்தின் பதிவாளர் திரு.ராமசாமி அவர்களிடம் அளித்தேன்.

★ ★ ★

தமிழகத்தின் முன்னாள் முதல் அமைச்சர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்களின் நூற்றாண்டு விழாவிலே 25.8.1998 அன்று கலந்து கொண்டேன். அந்த விழா அன்றைய தினம் கொண்டாடப்பட்டதற்கே ஒரு காரணம் உண்டு. ராஜபாளையத்தில் குமாரசாமி ராஜா நூற்றாண்டு விழா நடைபெற்றபோது, மேடையிலே நான் குமாரசாமி ராஜா பற்றிய மலர் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தேன். அந்த மலரில் குமாரசாமி ராஜா அவர்கள் ராஜபாளையத்தில்



எம்.ஜி.ஆர். சிலையை, எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தில் அப்போதைய குடியரசு துணைத் தலைவர் கிருஷ்ணகாந்த் - தமிழக ஆளுநர் பாத்திமா பீவி முன்னிலையில் திறந்து வைத்தபோது...



கழகத் தலைவர் என்ற முறையில், வழங்கப்பட்ட தங்கம் - வெள்ளியிலான பரிசுப் பொருட்களை கழகத்திற்கே உரியது என்ற அளவில், அறிவாலயத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது.

நடத்திய காங்கிரஸ் கட்சி மாநாட்டிற்கு அவரே வரவேற்பாளராக இருந்தார் என்றும்-அந்த மாநாட்டில் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாரும், பெருந்தலைவர்

காமராஜரும், மற்றவர்களும் கலந்து கொண்டார்கள் என்ற ஒரு செய்திக் குறிப்பும் இடம் பெற்றிருந்தது.


அப்போது நான், அருகிலே இருந்த மூப்பனார் அவர்களிடம், ''ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் நூற்றாண்டு விழா எப்போது?'' என்று கேட்ட நேரத்தில், ''ஏற்கனவே அவருடைய நூற்றாண்டு விழா முடிந்திருக்க வேண்டுமே'' என்று கூறியதன் பேரில், அதைப்பற்றி மேடையில் இருந்த வாறே விசாரித்து, அந்த விழா நடத்தப்படாமல் விடப்பட்டுவிட்டது என்றும், 1995 ஆம் ஆண்டிலேயே-அ.தி.மு.க. ஆட்சியிலேயே அவருடைய விழா நடத்தப் பட்டிருக்க வேண்டுமென்றும், அந்த விழா அரசின் சார்பில் நடத்துவதற்காக 3 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டும் கூட அந்த விழா நடத்தப்படவில்லை என்பதையும் அறிந்து, அந்த விழாவினை தற்போது தமிழக அரசு நடத்தும் என்று குறிப்பிட்டு, அந்த அடிப்படையிலேதான் 25.8.1998 அன்று அந்த விழா வள்ளுவர் கோட்டத்திலே நடைபெற்றது.

அந்த விழாவிலே நான் பேசும்போது, ''காலம் கடந்து அந்த விழா நடத்தப்படுவதற்குக் காரணம், ஓமந்தூரார் காலங்களைக் கடந்த தலைவர் என்பதால்தான்'' என்று பலத்த கைதட்டலுக்கிடையே கூறினேன்.

அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலேயே நடைபெற்றிருக்க வேண்டிய விழா எப்படியோ தவிர்க்கப்பட்டு-முன்னாள் முதலமைச்சராக இருந்த ஓமந்தூராருக்கு விழா எடுக்கும் வாய்ப்பு எனக்கே கிடைத்தது.

அவருக்கு மட்டுமல்ல-**பேரறிஞர் அண்ணா** அவர்கள் தி.மு.கழகத்தின் முதல் முதலமைச்சர். அவர் மறைந்த பிறகு, அவருக்கு நினைவு மண்டபங்கள்-நினைவுச் சின்னங்கள்-அவர் பெயரால் என்றைக்கும் அவர் பெயரை எண்ணிக்கொள்ளக் கூடிய அளவிற்கு நினைவகங்களை தமிழகத்திலே உருவாக்கும் வாய்ப்பினை நான் பெற்றேன்.

அதுபோலவே பெருந் தலைவர் **காமராஜர்** அவர்கள் தமிழகத்தின் முதல் அமைச்சராக இருந்தவர். அவர் மறைந்து



எனக்கு வழங்கப்பட்ட 26,03,607 ரூபாயை ராகவேந்திரா திருமண மண்டபத்தில் நடைபெற்ற பொதுக் குழுவில், பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களிடம் ஒப்படைத்தபோது...

விட்டாலும், என்றைக்கும் மறையாத உருவமாக நம் உள்ளத்தில் இருப்பார் என்ற நம்பிக்கையோடு, அவருக்கு நினைவு மண்டபம் எழுப்புகின்ற அந்த வாய்ப்பும்-அந்தப் பேறும் எனக்கே கிட்டியது.

மூதறிஞர் **ராஜாஜி** அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக இரண்டு முறை இருந்தவர். அகில இந்திய அரசியலிலே நிரந்தரமான இடத்தைப் பிடித்திருந்தவர். என்னிடம் தனிப்பட்ட முறையிலே அன்பு கொண்டவர். அவர் மறைந்த பிறகு அவருடைய நினைவு நிலைத்திருக்கும் வகையில், நினைவகம் எழுப்பிய பெருமையும், இன்னும் சொல்லப் போனால் அந்த நினைவகத்தின் கோபுரம் எவ்வாறு இருக்க வேண்டுமென்று நிர்மாணிக்கும் வாய்ப்பையும் நான்தான் பெற்றிருந்தேன்.

பெரியவர் **பக்தவத்சலம்** அவர்கள் முதல்வராக இருந்தபோது, அரசியல் ரீதியாக எனக்கும், அவருக்கும் எவ்வளவோ கருத்து மாறுபாடுகள் இருந்தாலும்கூட, நிர்வாகத் துறையில் அவருடைய அரும்பணிகள் என்னால் இன்றைக்கும் பாராட்டக் கூடியவை. அவருக்கு நினைவு மண்டபம் எழுப்புகின்ற வாய்ப்பும்-பேறும் எனக்கேதான் கிட்டியது.


தியாகச் சீலராக வாழ்ந்த தமிழகத்தினுடைய முன்னாள் முதல்வர்களிலே ஒருவரான **குமாரசாமி ராஜாவின்** நூற்றாண்டு விழா நிகழ்ச்சி ராஜபாளையத்தில் நடைபெற்ற போது, அதிலே கலந்து கொள்ளவும், அவருடைய பெயரால்

நினைவு சின்னம் எழுப்பவுமான பாக்கியமும் எனக்குக் கிட்டியது.

அதுபோலவே **ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார்** அவர்களின் நூற்றாண்டு விழா தி.மு.கழக ஆட்சியிலே வராவிட்டாலும், அப்போது ஆட்சியிலே இருந்தவர்கள் அதனைக் கொண்டாடத் தவறியதால்-தி.மு.கழக ஆட்சியில் அவருக்கு விழா எடுத்துக் கொண்டாடியதோடு சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதிகள் மற்றும் ராஜாஜி மண்டபம், கலைவாணர் அரங்கம் போன்றவைகளை உள்ளடக்கிய அரசினர் தோட்டத்திற்கு **''ஓமந்தூரார் அரசினர் தோட்டம்''** என்று அந்த விழாவிலே பெயர் சூட்டிப் பெருமை பெற்றேன்.

அத்தகைய ஓமந்தூரார் பற்றி பேரறிஞர் அண்ணா அவர்கள் **''திராவிடநாடு''** இதழிலே ஒரு கட்டுரையே தீட்டியிருந்தார். அந்தக் கட்டுரையின் தலைப்பு- **''காந்தி ராமசாமியும்-பெரியார் ராமசாமியும்''** என்பதாகும். அந்தக் கட்டுரையிலே அண்ணா:-

''கள்ளம் கபடமற்ற கிராமவாசி-அரசியல் சூதாட்டத்திற்கு அப்பாற்பட்டவர்-தியாக முத்திரையை அரசியல் சந்தையிலே விற்கத் துணியும் வணிகராக இருக்க மறுப்பவர்-சொந்த வாழ்க்கையையும், நலனையும் மிக மிகக் குறைவான அளவினதாக ஆக்கிக் கொண்ட துறவு மனப் போக்கினர்-நெடுங்காலமாக நாட்டுப்புற வாழ்வை நேரடியாக அவர்களுடன் பழகியது மட்டுமின்றி, அவர்களில் ஒருவராக இருந்து அறிந்து கொண்டவர்-உள்ளொன்று வைத்து வெளி ஒன்று கொண்டுழலும் உலுத்தர் போலன்றி, ''ஊருக்கு உழைப்பேன்-அதனால் வந்துறும் இன்னலுக்குப்



சென்னை கிண்டியில் காமராஜர் நினைவாக எழுப்பப்பட்ட நினைவு மண்டபம்.



தி.மு.க. அரசால், சென்னையில் அமைக்கப்பட்ட ராஜாஜி அவர்களின் நினைவகம்

பொறுப்பேற்பேன்'' என்ற உறுதி படைத்த உள்ளத்தினர் எளிய வாழ்க்கையும், சீரிய குணங்களும் கொண்டவர்-இவரே நம் முதலமைச்சர் என்று சொன்னால் ஒழிய, யாராலும் அவ்வளவு பெரிய பதவியில் அமர்ந்து இருப்பவர் என்று கண்டதும் உணரக்கூடிய விதமான உருவமோ-உடையோ-நடையோ கொண்டவர் அல்லர்-தன்னடக்கம் உள்ள தமிழர் ஓமந்தூரார்.''

என்று எழுதினார்.

இப்போது தமிழ்நாடு அரசாங்கத்தின் சின்னமாக இருக்கிறதே-அந்தக் **கோபுரச் சின்னம்**-அந்தச் சின்னத்தை யார் உருவாக்கினார்கள் என்று பலருக்குத் தெரியாது. சென்னை அரசாங்கத்திற்கு ஒரு இலச்சினை வேண்டும்-(இலச்சினை என்றால் அடையாளச் சின்னம்) என்று விரும்பியபோது, இப்போதிருக்கின்ற அந்தச் சின்னத்தை உருவாக்கி, ''இப்படி இருக்கட்டும்'' என்று வழங்கியவர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்கள்தான்.

அதை ஓமந்தூரார் அறிவித்தவுடன், ''ஒரு குறிப்பிட்ட சமயத்தாரின் சின்னம் அது-எனவே அது சமய சார்பற்ற அரசுக்கு நல்லதல்ல-கோபுரச் சின்னம் கூடாது-அதனை இந்திய அரசு அனுமதிக்கக்கூடாது!'' என்று **பண்டித ஜவகர்லால் நேரு** அவர்களுக்குச் சிலர் கடிதம் எழுதியதன் பேரில்-நேரு அவர்கள் முறையீடுகள் வந்திருப்பதைச் சுட்டிக்காட்டி, ஓமந்தூராருக்கு விளக்கம் கேட்டுக் கடிதம் எழுதினார்.

அதற்கு ஓமந்தூரார் எழுதிய பதிலில்:-

''கோபுரம் என்பது சமயச் சின்னம் அன்று-இந்த மாநிலத்தின் தனிச்சிறப்பாக விளங்கும் **திராவிடக் கட்டிடக் கலையின் அடையாளம். காந்தி அடிகளின்** இனிய நண்பரும், கிறித்தவப் பெருமகனுமான மேனாட்டார் **சி.எப்.ஆண்ட்ரூஸ்** என்ற வணக்கத்துக்குரிய மதகுருவின் ஆதரவோடு, வடஆற்காடு மாவட்டம், திருப்பத்தூரில் **கோபுரத்துடன் கூடிய தேவாலயம்** கட்டப்பட்டு இருப்பதையும் இந்தியப் பிரதம மந்திரிக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்'' என்று தெரிவித்து, நேருவின் மௌனத்தைப் பதிலாகப் பெற்றார்.

ஓமந்தூராரின் அஞ்சா நெஞ்சத்திற்கு, ஆற்றலுக்கு ஓர் எடுத்துக்காட்டு - புதுவையை அடுத்த சொர்ணாவூரில் காங்கிரஸ் மாநாடு ஒன்றை அவர் ஏற்பாடு செய்தார். அந்த மாநாட்டில், குழிகள் தோண்டப்பட்டு, மரங்கள் நடப்பட்டு, அதிலே காங்கிரஸ் கொடிகளைப் பறக்கவிடக் கூடாதென்று ஆங்கிலேய சர்க்கார் ஆணை பிறப்பித்தது. ''குழிகள் தோண்டி மரங்கள் நட்டுக் கொடிகளை கட்டக்கூடாது என்கிறாய்-பரவாயில்லை'' என்று காங்கிரஸ் கொடிகளை எல்லாம் அங்கிருந்த பனைமரங்கள் தென்னை மரங்கள்-மற்ற மரங்களின் கிளைகளில் எல்லாம் கட்டி, அந்த மாநாட்டை எழில் பெறச் செய்தவர் ஓமந்தூரார்.

1934ஆம் ஆண்டிலேயே மேல் சாதி, கீழ் சாதிக் கொடுமை கூடாது என்பதற்காக ஆதி திராவிடர்களை அழைத்துக் கொண்டு சிதம்பரம், ஓமந்தூர் போன்ற இடங்களிலே உள்ள ஆலயங்களுக்குள் ஆலயப் பிரவேசம் செய்து காட்டிய பெருமையும் அவருக்கு உண்டு.

உப்புச் சத்தியாகிரகத்திலே ஈடுபட்டு-அந்த யாத்திரையில் வேதாரண்யம் வரையில் ராஜாஜியின் தலைமையிலே சென்று சிறைப்பட்டவர்.

42ஆம் ஆண்டு **''வெள்ளையனே வெளியேறு''** இயக்கத்திலும் கலந்து கொண்டு 15 மாதங்கள் வேலூர், தஞ்சை, திருச்சி ஆகிய சிறைகளிலே தண்டனையை அனுபவித்தார். அவருடைய சொந்த குடும்ப வாழ்க்கையிலும் பல



ஆண்டுதோறும் முத்தமிழ்ப் பேரவை விழாவில், சிறந்த இசை மேதைகளுக்கு 'ராஜரத்னா' விருது வழங்கப்பட்டு வருகிறது.

துயரங்களை அனுபவித்தவர் அவர். இளமையிலேயே அவருடைய மனைவியை இழந்தவர்-அடுத்து தன் பெண் குழந்தையை இழந்தவர்-அதற்குப் பிறகு வாலிப வயது வரையிலே வளர்க்கப்பட்ட தன் மகன் சுந்தரத்தையும் இழந்தவர். சோக மயமான அந்த வாழ்க்கையைப் பற்றி அதிகக் கவலைப்படாமல், 'மகன் பெங்களூரிலே இறந்து விட்டான்' என்று கேள்விப்பட்ட பிறகும், அங்கே செல்லாமல், துயரத்தை மறைத்துக் கொண்டு பணிகளிலே ஈடுபட்ட பெருமகன் தான் ஓமந்தூரார்.

அவருடைய மகன் இளம் பிராயத்தில் சேரன்மாதேவி குருகுலத்தில் சேர்க்கப்பட்டிருந்தான். வ.வே.சு.அய்யரால் நடத்தப்பட்ட அந்தக் குருகுலத்தில் சாதிப் பாகுபாடு - உயர்ச் சாதிக்காரர்கள், உயர் சாதி அல்லாதவர்கள் என்று பிரிக்கப்பட்டு- உயர்ச் சாதிக்காரர்கள் குடிக்கின்ற தண்ணீர் பானையிலே கூட-மற்றவர்கள் தண்ணீர் மொண்டு குடிக்கக் கூடாது என்கிற அளவிற்கு விதிமுறைகள் இருந்தன. அதன் காரணமாக அங்கே கிளர்ச்சி ஏற்பட்டது. தந்தை பெரியார் அவர்கள் முன்னின்று அந்தக் கிளர்ச்சியை நடத்தினார் என்பதெல்லாம் வரலாறு!

அந்தக் குருகுலத்தில் ஓமந்தூராரின் மகன் சுந்தரம் படித்துக் கொண்டிருந்த போது, ஒருநாள் தன் தந்தையாரிடம், ''அப்பா!

அங்கே தண்ணீர் பானை தனித்தனியாக வைத்திருக்கிறார்கள். எங்களுக்கொரு பானை-உயர் சாதிக்காரர்களுக்கு ஒரு பானை என்று வைத்திருக்கிறார்கள். நான் உயர்ச் சாதிக்காரர்களுக்காக வைக்கப்பட்ட பானை என்று தெரியாமல், அதிலிருந்து ஒரு குவளை தண்ணீர் மொண்டு, பாதி தண்ணீர் குடிப்பதற்குள்- அங்கே வந்த உயர் சாதிக்கார ஆசிரியர் என் கன்னத்திலே பளார் என்று அடித்துவிட்டார். 'அந்தப் பானையைத் தீட்டாக்கி விட்டாயே' என்று சொல்லி அடித்தார். அப்பா! தீட்டு, தீட்டு என்று சொல்லி அடித்தாரே, தீட்டு என்றால் என்ன அப்பா?'' என்று கேட்டான்.



''ஹம்ஸத்வனி'' சார்பில் நடத்தப்பட்ட திருவாவடுதுறை ராஜரத்தினம் பிள்ளையின் நூற்றாண்டு விழாவில், அதன் செயலாளர் இராமச்சந்திரன் சால்வை அணிவித்து வாழ்த்தினார்.

அதைக் கேட்டதும் ஓமந்தூராருடைய முகம் சிவந்தது. தாங்க முடியாத வேதனைப் பட்டார். அதன் விளைவாகத்தான் பெரியார், டாக்டர் வரதராஜுலு நாயுடு, திரு.வி.க. போன்றவர்களோடு ஓ.பி.ஆரும் சேர்ந்து சேரன்மாதேவி போராட்டத்தில் கலந்து கொண்டதன் காரணமாக- தன்னுடைய மகனையே அங்கிருந்து வெளியேறச் செய்து, வேறு பள்ளியிலே சேர்க்கச் செய்தார்.

பாரதியின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டதற்கு ஓமந்தூரார்தான் காரணம். அவருடைய ஆட்சிக் காலத்திலே தான் பாரதியின் நூல்கள் அரசுடைமையாக்கப்பட்டு, பரிவுத் தொகையாக 15 ஆயிரம் ரூபாய் அந்தக் காலத்திலே வழங்கப்பட்டது.



என்னுடைய மைத்துனர் - இசைச் சித்தர் சி.எஸ். ஜெயராமனுடைய தங்கை பத்மாவதிக்கும் எனக்கும் 1944இல் திருமணம் நடைபெற்றது.

வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற ஓமந்தூராரின் நூற்றாண்டு விழாவிலே த.மா.கா. தலைவர் மூப்பனார், நீதியரசர் என்.கிருஷ்ணசாமி ரெட்டியார், திண்டிவனம் இராமமூர்த்தி, கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். அவருடைய திருவுருவப் படத்தினை நான் திறந்து வைத்துப் பேசினேன்.

அதற்கடுத்த நாள், சென்னையில் "ஹம்ஸத்வனி" அமைப்பின் சார்பில் சிறப்பாகக் கொண்டாடப்பட்ட திருவாவடுதுறை டி.என்.ராஜரத்தினம் பிள்ளையின் நூற்றாண்டு விழாவிலே கலந்து கொண்டேன். அந்த விழாவில் செம்மங்குடி சீனிவாச அய்யர், எம்.ஏ.எம்.ராமசாமி, நல்லி குப்புசாமி ஆகியோரும் என்னுடன் கலந்து கொண்டார்கள்.

திருவாவடுதுறை டி.என்.ஆர்.என்று சுருக்கமாக அழைக்கப்பட்ட, டி.என்.ராஜரத்தினம் பிள்ளை 1898 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 27ஆம் நாள் பிறந்தவர். அவர் தன்னுடைய 58ஆவது வயதிலே 1956 ஆம் ஆண்டு இயற்கை அடைந்தார். அவர் மறைந்தே 52 ஆண்டுகளாகின்றன. அவருடைய நூற்றாண்டு விழாவினை அவர் பிறந்த தேதியிலேயே நடத்தியாக வேண்டுமென்ற விழைவுடன் ஹம்சத்வனி

அமைப்பின் செயலாளர் **இராமச்சந்திரன்** என்னை வலியுறுத்த, நானும் ஒப்புக்கொண்டு அந்த விழாவிலே கலந்து கொண்டேன்.

டி.என்.ராஜரத்தினம் பிள்ளை அவர்களை எல்லோரும் அறிந்ததைப்போல அல்ல-மிகவும் நெருங்கி அறிந்தவர்களிலே நான் ஒருவன். அவரைப் பற்றிக் கூறும்போது, எந்த ஒரு நிகழ்ச்சிக்கும், கச்சேரிக்காக வந்து சேருகின்ற வரையில்-அவர் வருவாரா, கலந்து கொள்வாரா என்பது சந்தேகம்தான்.

அரசியலிலேகூட-பொதுக் கூட்ட நிகழ்ச்சிகளுக்கு அண்ணா அவர்கள் ஒப்புக்கொண்டால்-நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தவர்களைப் பல மணி நேரம் காக்க வைத்து விடுவார். பல நிகழ்ச்சிகளிலே காலம் தாழ்ந்து வந்து கலந்து கொள்வார். சில நிகழ்ச்சிகளிலே வராமலேகூட இருந்து விடுவார். அரசியல் துறையிலே அண்ணா இருந்ததைப் போலத் தான் இசைத் துறையிலே டி.என்.ஆர். விளங்கினார்.

அண்ணா அவர்களைப் போலவே, டி.என்.ஆர். அவர்களும் நிகழ்ச்சியிலே வந்து கலந்து கொண்டு வாசிக்க ஆரம்பித்து விட்டால், ஐந்து நிமிட நேரத்தில் அங்கேயுள்ள அத்தனை பேரையும் தன் இசையால் கட்டுப்படுத்தி விடுவார். அதைப் போலவேதான் அண்ணா அவர்கள் பேச ஆரம்பித்தால், ஐந்து நிமிட நேரத்திற்குள், அவரது பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்கும் அத்தனை பேரையும் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விடுவார். அந்த அண்ணா அவர்களே டி.என்.ஆர். அவர்களைப் பாராட்டியதை நான் கேட்டு சிந்தை மகிழ்ந்திருக்கிறேன்.

★ ★ ★

சென்னை மாநகரத்தில் **எஸ்.எஸ்.பி.லிங்கம்** என்பவர் அண்ணா அவர்களின் நெருங்கிய நண்பர். ஒருமுறை அவர் இல்லத்தில் ஒரு காதணி விழா. அந்த விழாவிலே ராஜரத்தினம் பிள்ளையின் கச்சேரி. ''ஒரு மணி நேரம்தான் வாசிக்கப் போகிறேன்'' என்று சொன்னவர். மூன்று மணி நேரத்திற்குமேல் வாசித்தார்.

அந்த விழாவிற்கு வந்திருந்த அண்ணா அவர்கள் உரையாற்றும் போது, ''மேல் நாட்டுக்காரர்களின் ஆர்க்கெஸ்ட்ரா குழுவில், ஒவ்வொரு வாத்தியங்களில் வாசிக்கும்போது கேட்கின்ற அந்த இசை இன்பம் வேறு-அவை அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்து வாசிக்கும்பொழுது கேட்கின்ற இசை இன்பம் வேறு. அதைப்போல தொலைவில் இருந்து கேட்டால், ராஜரத்தினம் வாசிப்பது சில நேரங்களில் குழலோசைபோல இருக்கும்-சில நேரங்களில் நாயனமாகத் தெரியும்-சில நேரங்களில் ஆர்க்கெஸ்ட்ரா குழுவினுடைய இசையாகத் தெரியும்-இந்தத் திறமை உலகத்திலே வேறு எந்த சங்கீத மேதைக்கும் கிடையாது. ராஜரத்தினம் ஒருவருக்குத் தான் உண்டு'' என்று குறிப்பிட்டார்.

டி.என்.ராஜரத்தினம் அவர்கள், நடுத்தர சாதாரண குடும்பத்திலேதான் பிறந்தார். இசைக் குடும்பம் என்றாலே சாதாரண எளிய குடும்பங்கள்தான். சமுதாயத்திலே இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு பெரிய மதிப்பு-மரியாதை என்றெல்லாம் கிடையாது. மற்றவர்கள் கூறினால் தவறாகப் பொருள் கொள்ளப்படும். நானே எழுதுவதால் தவறாகாது.

இந்தச் சமுதாயத்தில் பிறந்து அவர்கள் எவ்வளவு பெரிய வித்வான்களாக இருந்தாலும் கூட, அந்தக் காலத்தில் அவர்கள் சட்டை அணிந்து கொண்டு நிகழ்ச்சியிலே கலந்து கொள்ள முடியாது. இன்னும் சொல்லப் போனால், மேல் துண்டுகூட அணிந்து நிகழ்ச்சிகளிலே கலந்து கொள்ள இயலாது. மேலும் நாயன வித்துவான்களாக இருந்தாலும், அவர்கள் எல்லாம் தலையில் குடுமிதான் வைத்துக் கொள்ள வேண்டும். இதனை யெல்லாம் மாற்றி- ''குடுமி வைத்துக் கொண்டால்தான் நாயனம் வாசிக்க முடியும்? கிராப்பு வைத்துக் கொண்டு நான் வாசிக்கிறேன் பார்!'' என்று வாசித்தவர்தான் டி.என்.ஆர்.

அதைப்போலவே ''சட்டை போட்டுக் கொண்டு நாயனம் வாசித்தால், அந்த நாதம் நாயனத்தில் வராதா? ஆலாபனம் செய்ய முடியாதா? ஆடைகளில்தான் ஆலாபனம்

இருக்கிறதா?'' என்று கேட்டு, சட்டை போட்டுக் கொண்டு நாயனம் வாசித்தார்.

காலணிகூட அணிந்து கொள்ளக் கூடாது என்று இருந்த அந்தக் காலக் கட்டத்தில் அவர் கால்களில் பூட்ஸ்களே போட்டுக் கொண்டு நாயனம் வாசித்தார். மகாராஜாக்களின் தர்பாரிலே டி.என்.ஆர். கச்சேரி வாசிக்கும்போது, மகாராஜாவைப் போல தலைப்பாகை அணிந்து, அவர்களைப் போலவே ஷேர்வானி உடுத்தி, உயர்ந்த அலங்கார ஆடைகளை அணிந்து, அவர்களுக்கு நிகராக மேடையிலே அமர்ந்து வாசித்த பெருமையும் ராஜரத்தினம் பிள்ளை அவர்களுக்கு உண்டு. அவருடைய இந்தச் சுயமரியாதைத் தன்மை என்னை மிகவும் கவர்ந்த ஒன்று.

காரணம்-நான் சிறுவனாக இருந்த போது, சங்கீதம் கற்றுக்கொள்ள என்னுடைய பெற்றோரால் உறவினர் ஒருவரிடம் அனுப்பப்பட்டேன். ஆனால், நான் அந்தப் பயிற்சியை மூன்று மாத காலத்திற்குப் பிறகு தொடரவில்லை.

வீட்டிற்கு திரும்பி வந்து- ''இனி நான் அந்தப் பயிற்சி பெறப் போக முடியாது'' என்றேன். தந்தையார் ஆத்திரத்தோடு ''ஏன்?'' என்றார்.

நான் சொன்னேன்- ''எனக்குப் பயிற்சி கொடுக்கின்ற வித்துவான் இந்த ஊரில் உங்களைப் போல இன்னொரு பெரிய வித்துவான். அவர் இந்த ஊரிலே மடாலயத்திலே கார்வார் வேலை பார்க்கின்ற ஒருவர் தெருவிலே வந்தால்-தன்னுடைய தோளிலே போட்டிருக்கின்ற துண்டை எடுத்து இடுப்பிலே கட்டிக் கொள்கிறார். காலில் உள்ள செருப்பை நின்ற இடத்திலேயே கழற்றி வைத்துவிட்டு வெறும் காலோடு நின்று வணங்குகிறார். நானும் பெரிய வித்துவானாக வந்தால், இப்படித்தானே நடந்து கொள்ள வேண்டும்? இப்படி யெல்லாம் சுயமரியாதை இல்லாமல் என்னால் இருக்க முடியாது-எனவே இந்தப் பயிற்சிக்கு நான் போகமாட்டேன்'' என்று கூறினேன்.

அதற்குப் பிறகு என்னைப் படிக்க வைப்பதாகக் கூறி திருவாரூருக்கு அனுப்பி வைக்கப்பட்டேன். அதைப்பற்றி யெல்லாம் இந்தத் தொடரின் முதல் பாகத்திலேயே விரிவாக எழுதியுள்ளேன். என்னுடைய இளமைப் பருவத்திலேயே என்னுடன் ஊன்றிய அந்த சுயமரியாதை உணர்வுதான், இன்றளவும் என்னோடு இணை பிரியாமல் இருந்து வருகின்றது.

ஒருமுறை டி.என்.ராஜரத்தினம் அவர்களோடு சிதம்பரத்திலே இருந்து காஞ்சிபுரம் வரையிலே பயணம் செய்கின்ற பேறு எனக்குக் கிடைத்தது. **சிதம்பரம் ஜெயராமன்** அவர்கள்-இசைச் சித்தர் என்னுடைய மைத்துனர்-1944 ஆம் ஆண்டு அவருடைய தங்கை **பத்மாவதியை** நான் மணந்தவன். 1945 ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தில் அறிஞர் அண்ணா அவர்களும், **பொன்னப்பா** என்ற நண்பரும் சேர்ந்து இசைவிழா என்று அந்த நிகழ்ச்சிக்குப் பெயர். அந்த நிகழ்ச்சிகள் தொடர்ந்து பத்துநாட்கள் நடைபெற்றன. அந்த நிகழ்ச்சியிலே கலந்து கொள்ள டி.என்.ஆரும் அழைக்கப்பட்டிருந்தார். சி.எஸ்.ஜெயராமன் அவர்களும் அழைக்கப்பட்டிருந்தார். நானும் அந்த நிகழ்ச்சிக்கு அவர்களோடு செல்ல நேரிட்டது. வழி எல்லாம் அவர்கள் இருவரும் பேசிய இசைப்பற்றிய அந்த விவாதங்களில் முழுமையாக என்னால் கலந்து கொள்ளக்கூடிய ஆற்றல் எனக்கு இல்லாவிட்டாலுங்கூட, அதைக் கேட்டுக் கேட்டு நான் இன்புற்றேன்.

திருச்சியிலே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய முதல் மாநில மாநாடு, திருவாவடுதுறையாரின் நாயன இசையுடன் தான் தொடங்கியது. இந்தியாவின் முதல் சுதந்திர இன்னிசை ராஜரத்தினம் அவர்களுடையதுதான்.

1947 ஆம் ஆண்டு, ஆகஸ்டு 15 அன்று முதல் சுதந்திரப் பிரகடனம் செய்தபோது, நாதஸ்வரம் வாசித்த இசைமேதை அவர்தான்.

டி.என்.ஆர். அவர்கள் மறைந்த ஆண்டில், அவருடைய படத்திறப்பு திரு.சி.சுப்பிரமணியம் அவர்களின் தலைமையில் ஆர்.ஆர்.சபாவில் நடைபெற்றது. அந்த விழாவிற்கு அழைக்கப்பட்டிருந்த நான் பேசும்போது, அமைச்சரிடமும், விழா நடத்தியவர்களிடமும், ''அகில இந்திய அளவில் பாரதரத்னா விருது வழங்கப்படுவதைப்போல-இசைமேதைக்கு ''ராஜரத்னா'' என்ற பெயரில் ஒரு விருதினை ஆண்டுதோறும் வழங்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டேன். ஆனால் அந்தக் கோரிக்கை நிறைவேறாத கோரிக்கையாகவே பல ஆண்டுகள் இருந்து-பின்னர் நான் முதலமைச்சராக வந்த பிறகு ஆண்டு தோறும் நடத்தப்படுகின்ற முத்தமிழ்ப் பேரவை விழாக்களில் ''ராஜரத்னா'' விருது என்ற பெயரில் ஒன்றினை வழங்க வேண்டுமென்று கூறி-அது ஒவ்வொரு ஆண்டும் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது.

டி.என்.ராஜரத்தினம் பிள்ளை அவர்களின் நூற்றாண்டு விழாவில், என்னுடன் கலந்து கொண்ட பெரியவர் செம்மங்குடி சீனிவாசய்யர் தமிழக அரசையும்-குறிப்பாக என்னையும் பலபடப் பாராட்டி ஆற்றிய உரை என்றைக்கும் நினைவிலே கொள்ளத்தக்க ஒன்றாகும்.

39. "எதையும் வெல்லும் எழுத்து வல்லமை!"

தமிழினமே! கலைஞரை உன் தலைமகனை - என் அன்பு நண்பனை - வாழ்த்துங்கள்! உங்களோடு நானும் சேர்ந்து கொள்கிறேன்" என்று பாராட்டினார், சிவாஜி கணேசன்.

என்னுடைய அன்புப் பெயர்த்தியும்-மு.க.அழகிரியின் இளைய மகளுமான **அஞ்சுகச்செல்விக்கும்** மதுரை டாக்டர் **ஆர். இரத்தினவேலு** அவர்களின் இரண்டாவது மகன் **விவேக்கிற்கும்** *9.9.1998* அன்று, சென்னை அண்ணா சாலையில் உள்ள காமராஜர் அரங்கத்தில் மணவிழா, கழகப் பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்கள் தலைமையிலே நடைபெற்றது. கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் தம்பி முரசொலி மாறன் வரவேற்புரையாற்றினார்.

மணமக்களை வாழ்த்தி த.மா.கா. தலைவர் **மூப்பனார்,** எம்.ஜி.ஆர். கழகத் தலைவர் **ஆர்.எம்.வீரப்பன், நாஞ்சிலார்,** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவரான ராஜா, **கவிப்பேரரசு வைரமுத்து, அப்துல் சமது, சுப்ரீம் ஸ்டார் சரத்குமார், அப்துல் லத்தீப், அய்யண்ணன் அம்பலம்,** பேராயர் எஸ்றா சற்குணம், கோவை செழியன், அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் சோ.பாலகிருஷ்ணன், பேராசிரியர் **தீரன், திண்டிவனம் ராமமூர்த்தி, இயக்குநர் பாரதிராஜா,** பி.டி.ஆர். பழனிவேல்ராஜன், எஸ்.திருநாவுக்கரசர், இலக்கியச் செல்வர் குமரிஅனந்தன், தியாகி செங்கல்வராயன், சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்த், ஜி.ஏ.வடிவேலு, புதுவை முதல்வர் ஆர்.வி.ஜானகிராமன்,

பா.ஜ.க.வின் மாநிலச் செயலாளர் **இல.கணேசன்** ஆகியோர் உரையாற்றினர். இறுதியாக நான் நன்றி கூறினேன்.

மணமக்களுக்குக் குடியரசுத் தலைவர் **கே.ஆர்.நாராயணன்,** முன்னாள் பிரதமர் **வி.பி.சிங்,** முன்னாள் பிரதமர் **ஐ.கே.குஜ்ரால்,** முன்னாள் பிரதமர் **தேவகவுடா,** மராட்டிய மாநில ஆளுநர் **பி.சி. அலெக்சாண்டர்,** மேற்கு வங்க முதல்வர் **ஜோதிபாசு, ஜஸ்வந்த்சிங்,** மற்றும் பல்வேறு மாநில முதலமைச்சர்கள் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார்கள்.

மணவிழாவில் முன்னாள் ஆளுநர் சி.சுப்பிரமணியம், தமிழக தலைவர் **வீரமணி, தனுஷ்கோடி ஆதித்தன், கருமுத்து கண்ணன், ஆனூர் ஜெகதீசன்,** நடிகர் **பார்த்திபன்,** நடிகர் **நெப்போலியன், ''துக்ளக்'' ஆசிரியர் சோ,** நடிகர் **நாகேஷ்,** நடிகர் **விஜயகுமார், சுதர்சனம் எம்.எல்.ஏ., ஜி.பழனிச்சாமி எம்.எல்.ஏ.,** நடிகர் **தியாகு,** திரைப்படத் தயாரிப்பாளர் **கே.டி.குஞ்சுமோன்**- மற்றும் சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.

முதல்நாள் மாலை நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சியில் ஆளுநர் **பாத்திமா பீவி, எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியம், பீட்டர் அல்போன்ஸ் எம்.பி, கோபண்ணா, ஆர்.சொக்கர், தெய்வநாயகம், அழகர் ராஜா, ப.ரங்கநாதன், டாக்டர் ராமன், பொள்ளாச்சி மகாலிங்கம், நல்லி குப்புசாமி, எம்.ஜி.முத்து, ஜே.கே.கே.சுந்தரம், நீதியரசர் கோகுல கிருஷ்ணன், க.ராஜாராம், ப.உ.சண்முகம், வி.சி.குழந்தை சாமி, வின்சென்ட் சின்னதுரை, சிலம்பொலி செல்லப்பன்**-மற்றும் கலை உலகத்தைச் சேர்ந்த நடிகர் **திலகம் சிவாஜி கணேசன், கமலா அம்மாள், ஏ.வி.எம். சரவணன், ஏ.வி.எம். ராஜேஸ்வரி, ஏ.வி.எம்.குமரன், சிந்தாமணி முருகேசன், எஸ்.பி.முத்துராமன், சந்திரசேகர், ஐ.வி.சசி, சங்கர் கணேஷ், லியாகத் அலிகான், ஜெய்சங்கர், சிவகுமார், விஜயகாந்த், ஜெயராமன், அரவிந்த்சாமி,

விஜய், அருண் குமார் மற்றும் பலர் வந்திருந்து மண மக்களை வாழ்த்தினர்.

★ ★ ★


கழகத்தின் பொன் விழாவினையொட்டி, தொடக்க சிறப்பு மாநாட்டினை நெல்லையிலே 1998 ஆம் ஆண்டு, செப்டம்பர் 17,18 ஆகிய நாட்களில் நடத்துவதென்று முடிவெடுத்து- அப்போது நெல்லை மாவட்டக் கழகச் செயலாளராக இருந்த இன்றைய சட்டப் பேரவைத் தலைவர் ஆவுடையப்பனை வரவேற்புக் குழுத் தலைவராகவும்-அமைப்புச் செயலாளராக இருந்த **பொன்.முத்துராமலிங்கத்தை** மாநாட்டுப் பொறுப்பாளருமாக அறிவிக்கப்பட்டனர்.



கலைஞரை, மக்களின் இதய சிம்மாசனத்தில் உயர்த்தி உட்கார வைத்துப் போற்றச் செய்தது, அவரது எழுத்தாற்றல்தான் என்று எழுதியது "தினமணி"

மாநாட்டுப் பணிகளை முதற்கட்டமாகப் பார்வையிட பொருளாளர் **ஆர்க்காடு வீராசாமி, துரைமுருகன், கே.என்.நேரு** ஆகியோர் நெல்லை சென்று வந்தனர்.

அந்த நெல்லை மாவட்டச் சிறப்பு மாநாட்டின் தலைமைப் பொறுப்பினை ஏற்றிடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தபோது, 1949ஆம் ஆண்டு, செப்டம்பர் 17இல் கழகம் தொடங்கப்



எனது பெயர்த்தியும் - மு.க.அழகிரியின் மகளுமான அஞ்சுகச் செல்வி - விவேக் திருமணம் சென்னையில் நடைபெற்றது.

பட்டு - அதற்கடுத்த அக்டோபர் மாதம் 17 ஆம் நாள் - தமிழகம் முழுவதும் கழகக் கிளைகளின் துவக்க விழாக்கள் நடத்தப்பட்ட போது, அண்ணா அவர்கள் என்னை ஒன்றுபட்டிருந்த நெல்லை மாவட்டத்திற்குச் சென்று, 17.10.1949 அன்று தூத்துக்குடியிலும், 18.10.1949 அன்று கோவில்பட்டியிலும் கழகக் கிளைகளைத் தொடங்க ஆணையிட்டது தான் ஞாபகத்திற்கு வந்தது.

அதே நெல்லைச் சீமையில்-பாளையங்கோட்டை தனிமைச் சிறைச்சாலையின் கதவுகள் என்னை இழுத்துச் சாத்திக் கொண்டு **''தன்னை வெல்வான், தரணியை வெல்வான்''** எனும் அறிவுரை கூறின!

அந்தக் கதவுகளின் அனுமதி பெற்று என்னைக் காண வந்த பேரறிஞர் அண்ணாவின் கண்ணீரையும்-அதே நாள் அந்த நகரில் அவர் பேசிய பொதுக் கூட்டத்தில்- **''என் தம்பி கருணாநிதி அடைப்பட்டிருக்கும் பாளையங்கோட்டை சிறைச்சாலை எனக்கு யாத்திரை ஸ்தலம்''** என்று என் இதயத்தில் தெளித்தாரே-அந்தப் பன்னீரையும் ஒருக்கணம் எண்ணினாலே அந்த அன்புத் தலைவனின் ஆறுதலும், அரவணைப்பும் கிடைப்பதற்குக் காரணமாக இருந்த அந்த மண்ணை எடுத்துக் கண்ணில் ஒற்றிக் கொள்ளத் துடிக்கத்தானே செய்யும் என் நெஞ்சம்!

★ ★ ★

அண்ணா அவர்கள் தன் கைப்பட எனக்கொரு கடிதத்தை **1951**ஆம் ஆண்டு எழுதினார்கள். மூதறிஞர் **ராஜாஜி**

அவர்கள் கவர்னர் ஜெனரலாக இருந்தபோது தஞ்சாவூர் வந்த நேரத்தில் கழகத்தின் தீர்மானப்படி அறவழியில் கறுப்புக்கொடி காட்டுவதற்கு நாங்கள் முனைந்து முற்பட்டபோதுதான், அந்த அறப்போர் எப்படி நடைபெற வேண்டுமெனக் குறிப்பிட்டு **அண்ணா** அவர்கள், **''அன்புள்ள தம்பி''** என விளித்து அந்தக் கடிதத்தை எனக்கு எழுதினார்.

அந்தக் கடிதத்தை என் நண்பன் திருவாரூர் **தென்னன்,** நீண்ட நாள் பாதுகாப்பாக வைத்திருந்து, பின்னர் ஒரு வார இதழுக்கு அந்தக் கடிதத்தைக் கொடுத்து - அந்த ஏடு அந்தக் கடிதத்தை அப்படியே அண்ணாவின் கையெழுத்தோடு வெளியிட்டிருந்தது. அந்தக் கடிதத்தின் வாசகங்களை ஏற்கனவே ஒருமுறை **''முரசொலி''**யிலே எழுதியிருக்கிறேன் என்ற போதிலும்- இந்தத் தொடரில் அந்த வாசகங்கள் இடம்பெறுவது பொருத்தம் தானே?

அன்புள்ள தம்பி,

தோழர் **என்.எஸ்.இளங்கோவும்,** நீயும் தஞ்சை மாவட்டத்திலே தக்க ஏற்பாடுகள் செய்து வருவது கண்டு நம்பிக்கையும், மகிழ்ச்சியுமடைகிறேன், திருவையாறு நிகழ்ச்சியின்போது கருப்புக்கொடி காட்டுவதை விட, அதற்காக ஆச்சாரியார் செல்கிறபோது பள்ளியக் கிரகாரத்திலோ அல்லது வேறு தக்க இடத்திலோ கருப்புக்கொடி காட்டுவதுதான் சிறந்த முறை.



நெல்லை மாவட்டம், பொன்னாக்குடியில்
சமத்துவபுரத்தைத் திறந்து வைத்தேன்.



நெல்லை பாளையங்கோட்டையில் தந்தை பெரியார் சிலையைத் திறந்து வைத்தேன். அருகே, முரசொலி மாறன் ஆலடி அருணா.

ஆர்வம் போதுமான அளவு கிடைக்கும் என்ற நம்பிக்கை உண்டு-கட்டுப்பாடாகவும், கண்ணியம் கெடாத முறையிலும், காரியத்தை நடத்த வேண்டுகிறேன். தஞ்சை மாவட்டம், அடித்து அடித்துப் பழகிப் போன போலீஸ்படை இருக்கும் இடம்-தூண்டிவிடும் பார்ப்பனத் தலைவர்கள் வாழும் இடம்-காங்கிரசிடம் புதிய மோகம் கொண்டுள்ள மிட்டா மிராசுகள் உள்ள மாவட்டம்-எனவே, அங்கு அடக்குமுறை பல உருவில் வெளிப்படக்கூடும். நிலைமையை நன்கு அறிந்து நடந்து கொள்ள வேண்டுகிறேன்.

ஏதாவது ஓர் இடத்தில் மட்டும் கருப்புக்கொடி காட்டினால் போதும்.

போலீஸ் பரேடின் போது வேண்டாம்.

விழாப் பந்தலுக்கருகிலேயும் வேண்டாம்.

''திரும்பிப்போ'' என்பது தவிர வேறு ஆபாசக் கூச்சலிட யாரையும் அனுமதிக்காதீர்கள்.

பலாத்காரம் துளியும் தலைகாட்டக்கூடாது. தோழர்களிடம் இதைக் கண்டிப்பாகக் கூறவும்,

முன்கூட்டியே கைது செய்தால் பரவாயில்லை. பொறுப்பான காரியம்-இதைத் தக்க விதத்திலே நடத்தித் தருவதற்கு ஏற்ற ஆற்றலும், பண்பும் உள்ளவர்கள் எனது

தம்பிமார்கள் என்ற பூரிப்பும் நம்பிக்கையும் எனக்கு நிரம்ப நிரம்ப!

உடனுக்குடன் தகவல் கொடுங்கள்!

26ஆம் தேதி நான் திருச்சியில் இருக்கிறேன்.

தகவல் அங்கும், சென்னை "மாலை மணி"க்கும் தரவும்


அன்பன்,
அண்ணாதுரை

-இவ்வாறு எனக்குப் பாசத்தோடும் பற்றோடும், என்னுடைய 27ஆம் வயதில் கடிதம் எழுதிய அண்ணனுக்கு, 1998 ஆம் ஆண்டு, செப்டம்பர் 15 அன்று 90ஆவது பிறந்தநாள்.

★ ★ ★

அண்ணாவின் 90ஆவது பிறந்த நாளினையொட்டி, பத்தாண்டு காலம் தண்டனை முடிந்த 109 ஆயுள் தண்டனைக் கைதிகள் விடுதலை செய்யப்பட கழக அரசின் சார்பில் முதல்வர் என்ற முறையில் ஆணை பிறப்பித்தேன். தி.மு.கழகம் ஆட்சியிலே எப்போதெல்லாம் இருக்கிறதோ- அப்போதெல்லாம் ஒவ்வொரு ஆண்டும் பேரறிஞர் அண்ணா அவர்களின் ஒவ்வொரு பிறந்த நாளுக்கும் ஆயுள் கைதிகளை இவ்வாறு விடுதலை செய்து கொண்டிருக்கிறது. ஏன், இந்த ஆண்டு-அண்ணா அவர்களின் நூற்றாண்டு என்பதால், பத்தாண்டு காலம் தண்டனை முடிந்த ஆயுள் கைதிகள் என்பதற்குப் பதிலாக -ஏழு ஆண்டு காலம் தண்டனை முடிந்த ஆயுள் கைதிகளையும் விடுதலை செய்திட ஆணை பிறப்பிக்கப்பட்டு, அதன் காரணமாக, 1405 கைதிகள் விடுதலை செய்யப்பட்டார்கள்.

ஆனால் **ஜெயலலிதா** முதலமைச்சராக இருந்தபோது தன்னுடைய பிறந்த நாளையொட்டியே சிறைக் கைதிகளை விடுதலை செய்த கொடுமையும் இந்த நாட்டிலே உண்டு! அப்படிப்பட்ட அவர் இந்த ஆண்டு அண்ணாவின் பிறந்த நாளையொட்டி, சிறைக் கைதிகள் விடுதலை



நெல்லை மாநாட்டில், மு.க.ஸ்டாலின் தலைமையில்
நடந்த பேரணி 16 மணி நேரம் தொடர்ந்து நடைபெற்றது.

செய்யப்பட்டதற்கு-யாரோ ஓரிரு தி.மு.க.வினரை விடுதலை செய்வதற்காகத்தான் பத்தாண்டு காலம் சிறைத் தண்டனை என்பதை ஏழு ஆண்டுகள் என்று குறைத்ததாக அறிக்கை விடுத்தார்கள். அரசின் சார்பில் அதற்கான விளக்கமும் தரப்பட்டது.

★ ★ ★

அறிஞர் அண்ணாவின் 90ஆவது பிறந்த நாளையொட்டி, 15.9.1998 அன்று வள்ளுவர் கோட்ட முகப்பிலே உள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து வணங்கினேன். பொதுச்செயலாளர் பேராசிரியரும், மற்றும் கழக முன்னணியினரும் என்னுடன் வந்திருந்தார்கள். வழக்கம் போல் தொண்டர் அணியினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு, சிறப்பாகப் பணியாற்றிய தொண்டர் அணி அமைப்பாளர்களுக்கு பதக்கங்களை அளித்தேன்.

பின்னர் அண்ணா சாலையில் அமைந்துள்ள அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கும் மாலை அணிவித்து வணங்கினோம்.

அந்த ஆண்டு முப்பெரும் விழாவினையொட்டி வழங்கப்படும் பெரியார் விருது பூவாளூர் பி.சின்னத் துரைக்கும்- அண்ணா விருது திரு.வைகுண்டம் செகவீர ராசேந்திரனுக்கும்-கலைஞர் விருது கோவை மணியனுக்கும்

வழங்கிச் சிறப்பிக்கப் பட்டது. கடற்கரையில் அண்ணன் துயில் கொள்ளும் நினைவிடத்தில், 33 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட அருங் காட்சியகத்தை அன்றைய தினம் திறந்து வைத்தேன்.



நெல்லை மாநாட்டில் மீதப்பட்ட தொகை 86 லட்சம் ரூபாய் கட்சி நிதியாகத் தரப்பட்டது.

சென்னையில் மேலே அண்ணனின் 90ஆவது பிறந்தநாளை கொண்டாடி முடித்துவிட்டு, நெல்லையிலே 17 மற்றும் 18 ஆகிய நாட்களில் நடைபெறவிருந்த பொன்விழா மாநாட்டில் கலந்து கொள்ளப் புறப்பட்டேன். 16ஆம் தேதியே நெல்லையை அடைந்து சமத்துவபுரம் திறப்பு உட்பட அரசு நிகழ்ச்சிகள் சிலவற்றில் கலந்து கொண்டேன். 17 ஆம் தேதியன்று, இளைஞர் அணிச் செயலாளர் தம்பி. மு.க.ஸ்டாலின் தலைமையில், 25 லட்சம் பேர் கலந்து கொண்ட பிரம்மாண்டமான பொன்விழாப் பேரணி நடைபெற்றது. நெல்லை மாநகரம் மட்டுமல்ல-நெல்லை மாவட்டமே ஸ்தம்பித்தது. மதுரையிலிருந்து நெல்லைவரை கழகத்தினரின் வாகனங்கள் ஊர்வலமாகவே வந்தடைந்தன.

நெல்லைப் பேரணி குறித்து **''தினமணி''** நாளிதழ் **''16 மணி நேர தி.மு.க.பேரணி''** என்ற தலைப்பில் வெளியிட்ட செய்தியில்-

''திருநெல்வேலியில் தி.மு.க.பொன்விழா தொடக்கச் சிறப்பு மாநாட்டையொட்டிய பேரணி 16 மணி நேரம் நடந்தது. பிற்பகல் 3 மணிக்குப் பேரணி தொடங்கும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் 2.30 மணிக்கே பேரணி தொடங்கி விட்டது. வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்குத் தொடங்கிய பேரணி, வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு முடிவடைந்தது. பேரணி விடிய விடிய நடந்த போதிலும், தொண்டர்கள் இடைவெளி இல்லாமல் தொடர்ந்து வந்த

வண்ணம் இருந்தனர். பேரணி ஓர் இடத்தைக் கடக்க 11 மணி நேரம் ஆயிற்று'' என்று எழுதியிருந்தது.

இளைஞர் அணிச் செயலாளர் தம்பி ஸ்டாலின் தலைமையிலே புறப்பட்ட அந்தப் பேரணி முடிவில்லாமல் வந்து கொண்டே இருந்தது. ஒவ்வொரு மாவட்டமும் வரிசையாக ஒரு மாவட்டத்தை மற்றொரு மாவட்டம் மிஞ்சுகின்ற வகையிலே அந்த அணிவகுப்பு நடைபெற்றது. அந்த ஊர்வலத்தில் **சுப்ரீம் ஸ்டார் சரத்குமார், நெப்போலியன், சந்திரசேகர், தியாகு** ஆகியோரும் திறந்த ஜீப்பில் கலந்து கொண்டார்கள். மாலை 4 மணி அளவில் தொடங்கிய பேரணி, மறுநாள் காலை 7 மணிவரை சுமார் 15 மணி நேரம் நடைபெற்றது.

மாநாட்டின் இரண்டாம் நாள் காலையில், 75 அடி உயரக் கொடிக் கம்பத்தில் கழகக் கொடியினை நான் ஏற்றி வைத்தேன். இசை முரசு **நாகூர் அனீபாவின்** வழக்கமான இசை நிகழ்ச்சியுடன் நிகழ்ச்சிகள் தொடங்கின. வரவேற்புக் குழுத் தலைவர் தம்பி **ஆவுடையப்பன்** வரவேற்புரையாற்றினார். என்னை மாநாட்டிற்குத் தலைமையேற்கக் கேட்டு அவர் முன்மொழிய, மூத்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் தம்பி **வீரபாண்டி ஆறுமுகம்**, தம்பி **கோ.சி.மணி**, தம்பி **பொன்.முத்துராமலிங்கம்**, தம்பி **என்.பெரியசாமி** ஆகியோர் வழி மொழிந்தனர்.



''என் தம்பி அடைப்பட்டிருக்கும் பாளைச் சிறைதான் எனக்கு யாத்திரை ஸ்தலம்'' என்று அண்ணா பேசியதை நினைவுபடுத்திய அலங்கார ஊர்தி

பின்னர் படத்திறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்று, கழகச் சொற்பொழிவாளர்களின் உரைகள் தொடர்ந்து- பொதுச் செயலாளர் **பேராசிரியர்** அவர்கள் மாநாட்டினைத் திறந்து வைத்து உரையாற்றினார். மாலையில்

கழக முன்னணியினர் சிறப்புரையாற்றிட, துணைப்பொதுச் செயலாளர் **நாஞ்சிலார்,** பொருளாளர் **ஆர்க்காடு வீராசாமி, முரசொலி மாறன்** ஆகியோர் உரையாற்றிய பின்னர் நான் தலைமையுரையாற்றினேன்.

மாநாட்டுக்கான ஏற்பாடுகளை மாநாட்டுப் பொறுப்பாளர், அமைப்புச் செயலாளர் **பொன்.முத்துராமலிங்கம்,** வரவேற்புக்குழுத் தலைவர் **இரா.ஆவுடையப்பன்,** மாநாட்டுப் பொருளாளர் அமைச்சர் **ஆலடி அருணா,** மாநாட்டுச் செயலாளர்கள். **என்.பெரியசாமி,** டாக்டர் வே.ஆல்பன் மற்றும் பல்வேறு குழுக்களைச் சேர்ந்தவர்கள் சிறப்பாகச் செய்திருந்தார்கள். தி.மு.கழக வரலாற்றில் நெல்லை மாநாடு முத்திரை பதிக்கும் வகையில் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

கட்டணம் செலுத்தி சிறப்புக் கூட்டங்களுக்கு, மாநாடுகளுக்கு வருவது திராவிட முன்னேற்றக் கழகத்தில் மாத்திரமே வெற்றிகரமாக நடைபெறுகின்ற ஒன்றாகும். அந்த ஆர்வம் அந்த மாநாட்டில் மிக அதிகமாக இருந்ததைக் காண முடிந்தது. கழகப் பொன்விழா சிறப்பு மாநாட்டில் வசூலான தொகை *146* லட்சம். அதிலே செலவுத் தொகை *60* லட்சம் போக மீதப்பட்ட தொகை *86* லட்சம் ரூபாய்.

*1998*இல் நெல்லையில் நடைபெற்ற அந்த மாநாட்டை, *2007*இல் நடைபெற்ற இளைஞர் அணியின் மாநில மாநாடுதான் வெற்றி கொண்டது என்பதைப் பின்னர் எழுதுகிறேன்.

நெல்லை மாநாட்டினை வெற்றிகரமாக முடித்து சென்னை திரும்பியதும், எனது ஐம்பதாண்டு கால கலையுலகப் பணியை முன்னிட்டும்-*75*ஆவது வயது தொடக்கத்தை முன்னிட்டும் முறையே பொன்விழா - பவளவிழா என விழா நடத்த வேண்டுமென்றும், அதிலே நான் கலந்து கொள்ள வேண்டு மென்றும் கலைத்துறையினர் தேதி கேட்டு வலியுறுத்தியதால், *27.9.1998* அன்று கலந்து கொள்வதாக ஒப்புதல் தெரிவித்திருந்தேன்.



கலை உலகினர் எனக்கு நடத்திய பவள விழாவில் 110 கிலோ எடையுள்ள ரோஜா மாலையை அணிவித்தனர்.

அந்த விழாவினை நடத்திய கலைத்துறையினர் தேர்ந்தெடுத்து- விளம்பரங்கள் செய்து- அழைப்பிதழ்களிலும் குறிப்பிட்ட இடம்- சென்னை நேரு ஸ்டேடியம்! அதே நேரு ஸ்டேடியத்தில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பிறந்த நாள் கொண்டாட்ட நிகழ்ச்சிகள் 24.2.1994இல் நடைபெற்று, அதிலே ஜெயலலிதாவே கலந்து கொண்டதைத் தொடர்ந்து, 98ஆம் ஆண்டிலும் அதே இடத்தில் எனக்கும் விழா நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தார்கள்.

அம்மையாரால் பொறுத்துக்கொள்ள முடியுமா? உடனே நேரு ஸ்டேடியத்திலே என்னுடைய விழா நடைபெற்றால், ஸ்டேடியம் பாழாகிவிடும் என்று ஜெயலலிதா சென்னை உயர்நீதி மன்றத்தில் 14.9.1998 அன்று ஒரு வழக்கு தொடர்ந்தார். அந்த வழக்கில் எந்தவொரு முடிவும் தெரியாத நிலையில், 21.9.1998 அன்று நான் விடுத்த அறிக்கையில்- வழக்கு முடிவடையாத நிலையில் யாருக்கும் என்னால் தர்ம சங்கடம் ஏற்படக்கூடாது என்பதற்காக 27ஆம் தேதி நேரு ஸ்டேடிய விழாவினை ஒத்தி வைத்து, வேறொரு நாள் வேறொரு இடத்தில் நடத்திக் கொள்ளுமாறு கலையுலகத் தினரைக் கேட்டுக் கொள்கிறேன் என்றும்-என்மீது கலை உலகப் பெருமக்கள் கொண்டுள்ள அன்பும், பாசமும் போதுமானது என்றும்-விழாவே தேவையில்லை என்பது என் தாழ்மையான வேண்டுகோளாகும் என்றும் குறிப்பிட்டிருந்தேன்.

ஆனால், பவள விழாக்குழுத் தலைவர் **ஏ.வி.எம். சரவணன்**, திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கத் தலைவர் **கே.ஆர்.ஜி.**, விநியோகஸ்தர்கள் சங்கத் தலைவர் **சிந்தாமணி முருகேசன்**, திரையரங்கு உரிமையாளர்கள் சங்கத் தலைவர்



கலையுலகப் பணியைப் பாராட்டி, எனக்கு அளிக்கப்பட்ட 52 சவரன் தங்கச் சங்கிலியைக் கழற்றவே கூடாது - என்று தடுத்தார், நடிகர் திலகம் சிவாஜி

அண்ணாமலை, அபிராமி ராமநாதன், விநியோகஸ்தர்கள் கவுன்சில் தலைவர் சுரேஷ், தயாரிப்பாளர்கள் சங்கச் செயலாளர் விஜயகுமார், கவிப்பேரரசு வைரமுத்து ஆகியோர் என்னை வந்து சந்தித்து- ''விழா திட்டமிட்டபடி நடக்க வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். எங்கள் உணர்வுகளைப் புரிந்து கொண்டு, அதே தேதியில்- அதே இடத்தில் விழா நிகழ நீங்கள் ஒப்புதல் தரவேண்டும்'' என்று வலியுறுத்தினார்கள்.

இதற்கிடையே ஜெயலலிதா தொடர்ந்த வழக்கில், ''நேரு ஸ்டேடியத்திலேயே விழா நடத்தத் தடையில்லை'' என்று நீதியரசர் தீர்ப்பு கூறிவிட்டார். தீர்ப்பு வந்ததும் திரைப்பட உலகத்தினர் என்னை மீண்டும் சந்தித்து கடிதம் ஒன்றையே கைப்படக் கொடுத்தார்கள்.

அந்தக் கடிதத்தில்-

''தமிழகத்தின் மாண்புமிகு முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு, கலையுலகத்தார் எழுதும் கனிவான கடிதம் இது. நேற்று கலை உலகுக்கு தாங்கள் விடுத்த வேண்டுகோளைக் கண்டு அதிர்ச்சி அடைந்தோம். எங்கள் உணர்வுகளை உடனே பகிர்ந்து கொள்ளவும், நீதிமன்றத் தீர்ப்பு கலை உலகுக்குச் சாதகமாக இருக்கும் என்ற நம்பிக்கையோடு தங்களை நேற்று சந்தித்தோம். எங்கள் நம்பிக்கை வீண் போகவில்லை. இன்றைய நீதிமன்றத் தீர்ப்பு எந்த நிபந்தனையுமின்றி, கலையுலகுக்குச் சாதகமாகக் கிட்டியிருக்கிறது.''



பவள விழாக் குழுவினர் எனக்கு வழங்கிய 5 அடி உயரமுள்ள எனது உருவ வெள்ளிச் சிலை

''தங்கள் அறிக்கையில் யாருக்கும் என்னால் தர்ம சங்கடம் ஏற்படக்கூடாது என்று சொன்ன தங்கள் நல்லுள்ளத்திற்கு நன்றி சொல்கிறோம். ஆனால், அதே வேளையில் இந்த விழா நிகழ்ந்தாக வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். தங்களின் வேண்டுகோளின்படி நேற்று முதல் எங்கள் பணிகளை நிறுத்தி வைத்திருந்தோம். நீதி மன்றத்தின் சாதகமான தீர்ப்புக்குப் பிறகு, எங்கள் பணிகள் மீண்டும் தொடர, தங்களின் அன்பான ஒப்புதலுக்காகக் காத்திருக்கிறோம். பவளவிழா காணும் தாங்கள், தங்கள் வாழ்வின் அறுபது ஆண்டுகளைப் பொதுப் பணிக்கும் கலைப் பணிக்கும் அர்ப்பணித்திருக்கிறீர்கள். கலையுலகத்தின் எல்லாத் துறைகளும் ஒன்றிணைந்து தங்களுக்கு நன்றி பாராட்டுவதே இந்த விழாவின் லட்சியம்.''

''எனவே தடைகள் தாண்டி வந்திருக்கும் எங்கள் உணர்வுகளைப் புரிந்து கொண்டு, அதே செப்டம்பர் 27ஆம் நாள்-அதே நேரு விளையாட்டரங்கில் தங்களுக்கான எங்கள் விழா நிகழத் தாங்கள் மீண்டும் ஒப்புதல் தர வேண்டும். தாங்கள் கலந்து கொண்டு எங்களை மகிழ்விக்க வேண்டும் என்று நெகிழ்ந்த நெஞ்சோடு கேட்கிறோம். கலை உலகத்தின் மொத்தக் குரலாக இதைக் கருத வேண்டும் என்றும் வேண்டுகிறோம். நிச்சயம் ஒப்புதல் தருவீர்கள் என்று கனத்த நம்பிக்கையோடு காத்திருக்கிறோம்'' என்று எழுதி இருந்தார்கள்.

இந்தக் கடிதத்திற்கு என்னுடைய ஒப்புதல் கிடைப்பதற்கு முன்பாகவே, அவர்களே செய்தியாளர்களை அழைத்து, 27ஆம்

தேதி திட்டமிட்டபடி நேரு அரங்கில் விழா நடைபெறும் என்றும் தெரிவித்து விட்டார்கள்.



கர்நாடக முதல்வர் ஜே.எச்.படேல் எனக்கு அளித்த சந்தனச் சிலை. அருகே புதுச்சேரி முதல்வர் ஜானகிராமன்.

அவ்வாறே 27.9.1998 அன்று, சென்னை நேரு, அரங்கத்தில் உள்ள உள்விளையாட்டரங்கில் எனது பவளவிழாவும், 52 ஆண்டு கலைப்பணி பாராட்டு விழாவும் நடைபெற்றது. மாலை 4.15 மணி முதல் 6 மணி வரை இசை அமைப்பாளர்கள் இசைஞானி **இளையராஜா**, மெல்லிசை மன்னர் **எம்.எஸ்.விசுவநாதன்** குழுவினரின் இசையில் பாடகர்கள் பாடல்களைப் பாடினார்கள்.

மாலை 5 மணி அளவில்தான் நான் விழா மேடைக்குச் சென்றேன். என்னை **விஜயகாந்த்**, **சரத்குமார்**, **பாரதிராஜா** மற்றும் திரை உலகினர் வரவேற்று அழைத்துச் சென்றனர்.

சூப்பர் ஸ்டார் **ரஜினிகாந்த்** என் பக்கத்து இருக்கையில் அமர்ந்து, பல நிகழ்ச்சிகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்.

நடைபெற்ற இன்னிசை நிகழ்ச்சியின் முத்தாய்ப்பாக, இசைஞானி அந்த நிகழ்ச்சிக்காகவே எனக்காகவே இசை அமைத்த **''தமிழுக்குத் தன்னைத் தந்தானே''** என்ற பாடலும்-அதைப் போலவே எம்.எஸ்.விசுவநாதன் இசை அமைத்த **''கலைஞர் வாழ்கவே''** என்ற பாடலும் அனைவரையும் ஈர்த்தது.

அந்த நிகழ்ச்சியில் பங்கு பெறுவதற்காகவே கர்நாடக முதலமைச்சராக அப்போதிருந்த **ஜே.எச்.பட்டேல்** வருகை தந்திருந்தார். புதுவை மாநில முதல் அமைச்சராக இருந்த **ஆர்.வி.ஜானகிராமனும்** அந்த நிகழ்ச்சியில் பங்கேற்றார். இசை நிகழ்ச்சிக்குப் பிறகு, டான்ஸ் மாஸ்டர் **கலா** குழுவினரின் நடன நிகழ்ச்சி நடைபெற்றது.



விழா மேடையில் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்துடன்

அதனை கங்கை அமரனும், ஊர்வசியும் தொகுத்து வழங்கினார்கள்.

விழாவில் திரைப்படத் தயாரிப்பாளர்கள் ஏ.வி.எம்.சரவணன், கே.ஆர்.ஜி., சிந்தாமணி முருகேசன், ஆர்.எம்.எம். அண்ணாமலை, அபிராமி ராமநாதன், எம்.வி.ராமு, கே.விஜயகுமார், ஜி.விஜயகுமார், எல்.சுரேஷ், கே.முரளிதரன், ஏ.எல்.அழகப்பன், பழனியப்பச் செட்டியார், ஆர்.பி.சவுத்ரி, பிரமிட் வி.நடராசன், கே.ராஜன், கே.எஸ்.சீனிவாசன், விஷ்ணுராம், சுப்பு பஞ்சு, ஜே.வி.ருக்மாங்கதன், சந்திரபிரகாஷ் ஜெயின், செ.கண்ணப்பன், எஸ்.எல்.துரைராஜ், ஆனந்தி பிலிம்ஸ் நடராஜன், கோவைத் தம்பி, நாகராஜ ராஜா, சத்யஜோதி ஜி.தியாகராஜன், சிவசக்தி பாண்டியன், டி.சி.விஜயன், என்.ராமதுரை, கே.கண்ணன், சூரியநாராயணன், இயக்குநர்கள் கே.பாலச்சந்தர், பாரதிராஜா, மணிரத்தினம், எஸ்.பி.முத்துராமன், ராம.நாராயணன், அமிர்தம், எஸ்.ஏ.சந்திரசேகரன், பாலுமகேந்திரா, கே.சுபாஷ், ஆர்.கே.செல்வமணி, 'யார்' கண்ணன், விக்ரமன், சேரன், வி.சேகர், மற்றும் நடிகர்கள் சரத்குமார், விஜயகாந்த், பிரபு, விஜய், நெப்போலியன், சந்திரசேகர், அர்ஜுன், சிவகுமார், முரளி, ராம்கி, சூர்யா, பார்த்திபன், ராதாரவி, பாண்டியராஜன், அருண்குமார், தியாகராஜன், மணிவண்ணன், விஜயகுமார், ராஜேஷ், பிரபுதேவா, ஆனந்தராஜ், ரகுமான், ராஜா, மன்சூர் அலிகான், அலெக்ஸ், தியாகு, பாண்டியன், ஆர்.சுந்தர்ராஜன், தேவிகா, மீனா, ஜெயசித்ரா, கனகா, சுவலட்சுமி, தேவயானி, சீதா, நக்மா, ப்ரீதா, ரசிகா என மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.

என்னுடைய அருமை நண்பர் செவாலியே நடிகர் திலகம் சிவாஜி விழாவிற்குத் தலைமை தாங்கினார். தலைமை தாங்கிய நடிகர் திலகம் சிவாஜி உரையாற்றிப் பேசும்போது, மிகவும் உணர்ச்சிப் பூர்வமாக தனக்கும், எனக்கும் உள்ள நட்பைப் பற்றி விளக்கிக் கூறி வந்தார்.

அவரது பேச்சின் சில பகுதிகள் வருமாறு:-

''தமிழே! உன் தலைமகனை-என் அருமை நண்பனை-இந்த நாட்டின் சிறந்த அறிவாளியை -உயர்ந்த அரசியல்வாதியை-வாழவை. தமிழினமே! கலைஞரை வாழ்த்துங்கள். உங்களோடு நானும் சேர்ந்து கொள்கிறேன்-தமிழ்த் திரையுலகம் கலைஞர் அவர்களுக்கு-என் உயிர் நண்பனுக்கு ஒரு சிறந்த விழா எடுத்து, எவ்வளவோ பெரியவர்கள் இருந்தும், இதற்கு என்னைத் தலைமை தாங்கப் பணித்தார்களே, இதைவிட அவர்கள் எனக்கு மாபெரும் சிறப்பினைச் செய்ய முடியாது. கோடி கோடியாக எனக்குக் கொட்டிக் கொடுத்தாலும் இதைவிடச் சிறப்பு எனக்கு கிடைக்காது.

''எப்போது கலை உலகம் கலைஞர் அவர்களுக்கு மாபெரும் கலை விழா எடுப்பது? நான் எப்போது அதற்குத் தலைமை தாங்குவது? அப்படி ஒரு சந்தர்ப்பம் அவருக்குக் கிடைக்கலாம்- எனக்குக் கிடைக்கிறதோ-இல்லையோ? இந்த விழாவிற்குக் கலைஞர் அவர்கள் சிவாஜி தலைமை தாங்கலாம் என்று பெருமையோடு ஒரு நண்பனுக்கு வாய்ப்பு கொடுத்தாரே-அதை நான் மனமார வரவேற்கிறேன்.''

இப்படித்தான் அவர் தன் பேச்சைத் தொடங்கினார். உண்மையான கலைஞனின் வாக்கு பொய்க்காது என்பார்கள். அதைப்போலத்தான் அந்தக் கலைஞன் அன்றைய தினம் சொன்னதைப்போல, அதற்குப் பிறகும் கலை உலகம் எனக்கு விழா எடுத்தது. ஆனால், அதற்குத் தலைமை தாங்கத்தான் என் நண்பர் இல்லாமல் போய்விட்டார்.

உணர்ச்சிகரமான ஓர் பேச்சினை, உரையாற்றி முடித்துவிட்டு தனது இருக்கைக்குத் திரும்பிய அவர், திடீரென்று எழுந்து வந்து என்னைக் கட்டித் தழுவிக் கொண்டு

உணர்ச்சி மிகுதியால் விம்மி, விம்மி அழுத காட்சி, இன்னமும் அப்படியே என் கண்களிலே நிற்கின்றது. அவர் அன்று அழுதார்-நானும் அழுதேன். பிறகு என்னை சுதாரித்துக் கொண்டேன். இன்று இதனை நான் எழுதும்போது அவரை நினைத்துக் கொண்டு அழுகிறேன்.

பவள விழாக் குழு சார்பில், ஐந்து அடி உயர என்னுடைய **வெள்ளிச் சிலை** ஒன்றை வழங்கினார்கள். என்னுடைய 52 ஆண்டு திரையுலக சேவையைப் பாராட்டி, 52 சவரன் தங்கச் சங்கிலி ஒன்றை எனக்கு அணிவித்தார்கள். மேலும், முதலமைச்சர் நிவாரண நிதிக்காக 52 லட்சம் ரூபாய்க்கான காசோலையினையும் விழாக் குழுவினர் வழங்கினார்கள்.

என் கழுத்திலே போடப்பட்ட அந்தச் சங்கிலியை நான் கழற்ற முனைந்தபோது, சிவாஜி தடுத்து, அதனை நான் கழற்றக் கூடாது என்று கூறியதோடு, அதனை நான் கழற்றி விடாமலும் பார்த்துக் கொண்டார். எனவே அந்த விழா முடிகின்ற வரை நான் அதனை அணிந்து கொண்டேயிருந்தேன்.

அந்த விழாவில் குஜராத் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்னிடம் 1,11,111 ரூபாய்க்கான காசோலை ஒன்றினை முதலமைச்சர் நிவாரண நிதிக்காக அளித்தார்கள். அந்தக் காசோலையைப் பெற்றுக் கொண்ட நான், அதிலே வரிசையாக ஒன்று ஒன்று ஒன்று என்று இருந்த காரணத்தால், எவ்வளவு ரூபாய் என்று எண்ணிப் பார்த்துக் கொண்டிருந்ததைப் பார்த்து, பக்கத்திலிருந்த சிவாஜி கிண்டலாக என்னிடம், ''பழைய பொருளாளர் நினைப்புப் போகவில்லையா?'' என்று கேட்டது கூட எனக்கு நினைவிலே உள்ளது.

இயக்குநர் பாலச்சந்தர் விழாவிற்கு வந்தவர்கள் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார்.

நடிகர் சிவகுமார், பாண்டியராஜன், சந்திரசேகர், நடிகை ஊர்வசி, இயக்குநர் மணிவண்ணன், ஆனந்தராஜ், விஜயகுமார், அர்ஜுன், நடிகை மீனா, பார்த்திபன், ராஜேஷ், நடிகை எம்.என்.ராஜம், சரோஜா தங்கவேல், பாலுமகேந்திரா, விஜயகாந்த், சரத்குமார், ராதாரவி,

இயக்குநர் பாரதிராஜா, கலைஞானி கமலஹாசன், சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், கவிப்பேரரசு வைரமுத்து, இயக்குநர் மணிரத்தினம், கர்நாடக அமைச்சராக இருந்த அனந்தநாக், நடிகர் திலகம் செவாலியே சிவாஜி கணேசன், புதுவை முதல்வர் ஆர்.வி.ஜானகிராமன், கர்நாடக முதலமைச்சர் ஜே.எச்.பட்டேல் ஆகியோர் என்னை வாழ்த்திப் பேசினர். நிறைவாக நான் அனைவருக்கும் நன்றி தெரிவித்து ஏற்புரை ஆற்றினேன். இயக்குநர் எஸ்.பி.முத்துராமன் விழாக் குழு சார்பாக நன்றி கூறினார்.

அந்த விழாவில் பேசிய இயக்குநர் பாரதிராஜா அவர்கள், அந்த விழாவிற்கு இடையிலே ஏற்பட்ட சில தடங்கல்களையெல்லாம் குறிப்பிட்டு, அந்தத் தடைகளுக்குப் பிறகு விழா நடைபெறுவதாகக் கூறினார். அதைப்பற்றி நான் விழாவில் பேசும்போது ஒரு நிகழ்ச்சியைச் சுட்டிக் காட்டினேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் வாழ்ந்த காலத்தில், ஒரு போராட்டத்தில் நான் சிறையிலே அடைக்கப்பட்டு, திருச்சி சிறைச்சாலையிலிருந்து வெளி வந்தேன். அப்போது என்னை வரவேற்க பேரறிஞர் அண்ணா அவர்கள் திருச்சி சிறைச் சாலைக்கே வந்து, சிறைவாசலில் என்னை வரவேற்றார். அன்றைக்கு திருச்சியிலே எனக்குப் பாராட்டுக் கூட்டம்- அதற்கடுத்த நாள் சென்னையிலே அண்ணா தலைமையிலே பாராட்டுக் கூட்டம்.

அண்ணா சொன்னார்- ''நீ திருச்சியிலே பேசிவிட்டு, நாளைக்கு காஞ்சிபுரம் வந்து விடு, அங்கே வீட்டில் உனக்கு விருந்து, இருவரும் சேர்ந்து சென்னை பாராட்டு விழாவுக்குச் செல்லலாம்'' என்று சொன்னார். அதன்படி நான் திருச்சி விழாவிலே கலந்து கொண்டு விட்டு, மறுநாள் காலையிலே காஞ்சிபுரம் சென்று, மதிய உணவு அண்ணா வீட்டில் சாப்பிட்டுவிட்டு, மாலையிலே இருவரும் புறப்பட்டு சென்னைக்கு விழாவிற்கு வந்தபோது-வருகிற வழியிலே

அன்பகத்திலிருந்து எங்களை வரவேற்று ஊர்வலம் புறப்பட்டுவிட்டது.

அண்ணாவும், நானும் ஒரு ரதத்திலே அமர்த்தி வைக்கப்பட்டு, ஊர்வலம் கடற்கரைக்குச் சென்றது. அங்கே விழா நடைபெற்றது. அண்ணா பாராட்டிப் பேசினார். இரவு 10 மணிக்குமேல் அண்ணாவும், நானும் இல்லத்திற்குத் திரும்பினோம். அப்போது என்னுடைய அன்னையார் அஞ்சுகம் அம்மையார் அவர்கள் எங்களை வரவேற்று, கூடத்திலே அமர வைத்தார்.

அண்ணா, அம்மாவைப் பார்த்து ''என்னம்மா சௌக்கியமா?'' என்று கேட்டார்.

அப்போது, அம்மா, அண்ணா அவர்களைப் பார்த்து, ''ஏன் தம்பி, நீங்கள் வேலூர் சிறையிலிருந்து விடுதலையானீர்கள். விடுதலையானவுடன் காஞ்சிபுரம் சென்று உங்கள் அம்மாவைப் பார்த்தீர்கள். அம்மாவைப் பார்த்துவிட்டு மறுபடியும் திரும்பி வேலூருக்குச் சென்று கூட்டத்தில் பேசினீர்கள்-இல்லையா?'' என்று கேட்டார்.

''ஆமாம், அம்மா'' என்றார் அண்ணா.

''உங்களை உங்கள் அம்மா ஒருநாள் கஷ்டப்பட்டு-ஒருநாள் பிரசவ வேதனைப் பட்டு பெற்றிருக்கிறார்கள் போலும் நான் என் பிள்ளையை 26 நாள் கஷ்டப்பட்டு, பிரசவ வேதனைப்பட்டு பெற்றேன். அதனால்தான் என் பிள்ளை திருச்சியிலே விடுதலை பெற்று-திருச்சி கூட்டத்திலே பேசிவிட்டு-காஞ்சிபுரம் வந்து -பிறகு சென்னைக்கு வந்தும் வீட்டுக்கு வராமல்-உங்களோடு கடற்கரைக் கூட்டத்திலே பேசிவிட்டு- இப்போதுதான் என்னைப் பார்க்க வந்திருக்கிறான்'' என்று சொன்னார்கள்.

அப்போது அண்ணா கலகல வென்று சிரித்தார். இதை ஏன் இந்த நிகழ்ச்சியிலே சொல்கிறேன் என்றால், நான் பிறப்பதற்கே 26 நாள் கஷ்டம்-பிறந்ததே ஒரு போராட்டம்! பிறப்பதற்கே போராட்டம் நடத்தி வெளி வந்தவன்-அதே வழியில்தான் ஒரு விழாவிலே-அதுவும் பாராட்டு விழாவிலே கலந்து கொள்ள

வேண்டுமென்றால், பல தடைகளைக் கடந்து வர வேண்டுயுள்ளது என்று குறிப்பிட்டேன்.

கலையுலகம் நடத்திய அந்தப் பாராட்டு விழாவினை யொட்டி, ''தினமணி'' நாளேட்டில் **''காலத்தை வென்ற கலைஞரின் திரைப்படங்கள்''** என்ற தலைப்பில் அருமையானதொரு கட்டுரையை வெளியிட்டிருந்தது.

அந்தக் கட்டுரையின் தொடக்கம் இதோ:-

''கலைஞரின் இன்றைய வெற்றிக்கு எதுவெல்லாம் காரணம் என்று பட்டியல் போட்டுப் பார்த்தால், அவருடைய எதிரிகள்கூட ரசித்து ஏற்றுக்கொள்ளும் அம்சம், அவருடைய எழுத்தாற்றலைத்தான்!

''அதிலும், குறிப்பாக அவருடைய திரைப்பட வசனங்களுக்குக் கைதட்டாமல் தப்பி வந்த கரங்களின் எண்ணிக்கை சொற்பமே. பொது வாழ்க்கை-அரசியல் வாழ்க்கை-இலக்கிய வாழ்க்கை-கலை வாழ்க்கை-என அனைத்திலும் இவருக்கென்று ஒரு சிம்மாசனம் தனித்தனியே இருந்தாலும் -இவரை மக்களின் இதய சிம்மாசனத்துக்கு உயர்த்தி உட்கார வைத்துப் போற்ற வைத்தது எழுத்தாற்றல்தான்.

''இனம், மொழி, பண்பாடு, மனித நேய உணர்வுகள் இவரது எழுத்துகளில் மிகுந்து இருந்தன. திரைப்படங்கள் வசனத்துக்காக ஓடியதும்-வெளிவந்த பல படங்களைத் தடை செய்ய வேண்டுமென்று எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்தியதும்-இவரது வசனத்துக்காகத்தான். ஒரு ஆட்சி மாற்றத்தையே நிகழ்த்தி விடக்கூடிய சக்தி இவரது எழுத்துகளுக்கு உண்டு என்பதை அன்றைய ஆட்சியாளர்கள் நம்பினார்கள்''

-என்று ''தினமணி'' எழுதி இருந்தது.

40. பீகாரும்-பெர்னாண்டசும்

"இருள் மண்டிய வேளையில், கலங்கரை விளக்கம் போல், அரசியல் சட்டம் 356ஆவது பிரிவுபற்றிய அம்பேத்கரின் கருத்தை நிலைநாட்டி விட்டீர்கள்" - என்று குடியரசுத் தலைவர் கே.ஆர்.நாராயணனைப் பாராட்டினார், முரசொலி மாறன்.

ராப்ரிதேவி தலைமையில் நடைபெற்ற பீகார் மாநில அரசைக் கலைக்கும்படி மத்திய அமைச்சரவை, 22.9.1998 அன்று குடியரசுத் தலைவருக்குப் பரிந்துரை செய்தது. பீகார் மாநில ஆளுநராக அப்போது இருந்த பண்டாரி அளித்த அறிக்கையின் அடிப்படையில், ரப்ரிதேவி தலைமையிலான ராஷ்ட்ரீய ஜனதாதள ஆட்சியைக் கலைக்கப் பரிந்துரை செய்யலாம் என்று அமைச்சரவை முடிவு செய்தது. பிரதமர் வாஜ்பாய், உள்துறை அமைச்சர் அத்வானி, பாதுகாப்புத் துறை அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் ஆகியோர் குடியரசுத் தலைவர் கே.ஆர்.நாராயணனைச் சந்தித்து அமைச்சரவையின் முடிவினைத் தெரிவித்தார்கள். அத்வானி செய்தியாளர்களிடம் கூறும்போது, சட்டப் பேரவையைக் கலைக்காமல் முடக்கி வைக்கப் பரிந்துரை செய்திருப்பதாகக் கூறினார்.

முன்னாள் பிரதமர் ஐ.கே.குஜ்ரால் தலைமையில் ஜனதாளம் கட்சித் தலைவர்கள் ஜெய்பால்ரெட்டி, எஸ்.ஆர்.பொம்மை, சுரேந்திரமோகன் ஆகிய நான்கு பேரும் குடியரசுத் தலைவரைச் சந்தித்து, "பீகார் அரசைக் கலைக்கக் கூடாது" என்று வலியுறுத்தினார்கள். மத்திய

அரசுக்கு காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகளும் தங்கள் கண்டனத்தைத் தெரிவித்தார்கள்.

இந்த முடிவு குறித்து கலந்து பேசுவதற்காக, **25.9.1998** அன்று தி.மு.கழக அலுவலகத்தில் தோழமைக் கட்சிகளின் கூட்டத்தை அவசரமாகக் கூட்டினேன். **ஜெயலலிதா,** ''பீகார் மாநில அரசைக் கலைப்பதற்கு பா.ஜ.க. அரசு கூறியுள்ள காரணங்களைவிட அதிகமான காரணங்கள் தமிழக அரசைக் கலைப்பதற்கு இருக்கின்றன!'' என்று அறிக்கை விடுத்தார்.

''அ.தி.மு.க.வின் அந்த வஞ்சகப் போக்கினை ஜனநாயக சக்திகள் எல்லாம் கண்டிக்க வேண்டும்'' என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளராக அப்போதிருந்த பெரியவர் **நல்லகண்ணு** அவர்கள் அறிக்கை விடுத்தார்.

மாநில அரசுகளைக் கலைக்க வகை செய்யும் அரசியல் சட்டத்தின் 356ஆவது பிரிவு பற்றி தி.மு.கழகத்தின் கருத்து எப்போதும் ஒன்றுதான். ஆளுங்கட்சியாக இருந்தால் ஒரு கருத்து-எதிர்க்கட்சியாக இருந்தால் ஒரு கருத்து என்பதில்லை. உதாரணமாகச் சொல்ல வேண்டுமேயானால், 1974 ஆம்




நான் கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் ''ஜனநாயகத்திற்கு விரோதமாக பீகாரில் ராப்ரிதேவியின் அரசைக் கலைக்கக்கூடாது'' என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



பீகார் அரசைக் கலைக்க, 2வது முறையாக குடியரசுத் தலைவரை சந்திக்கச் செல்லும் அத்வானியுடன் ஜார்ஜ் பெர்னாண்டஸ்

ஆண்டு தமிழகச் சட்டப் பேரவையில் மாநில சுயாட்சித் தீர்மானத்தை முன்மொழிந்து நிறை வேற்றிய போது, நான் முதலமைச்சர். அப்போதும் 356ஆவது பிரிவு கூடாது என்பதே நமது கொள்கை. 1983ஆம் ஆண்டு தி.மு.க. எதிர்க்கட்சியாக இருந்த போது, பேரவையிலே நான் உரையாற்றிய போதும் அதே கொள் கையைத்தான் எதிரொலித்தேன். 1998ஆம் ஆண்டு பீகார் மாநில அரசைக் கலைத்திட முயற்சி நடைபெற்ற போதும், ''அது ஜனநாயகத்திற்குக் களங்கம் விளைவிக்கும் செயல்'' என்று நான் அறிவித்தேன்.

25.9.1998 அன்று அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில், த.மா.கா. தலைவர் **ஜி.கே.மூப்பனார்,** மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் **என்.சங்கரய்யா,** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் **ஆர்.நல்லகண்ணு,** தமிழக ஜனதாதளத் தலைவர் **ஜி.ஏ.வடிவேலு,** முரசொலி மாறன் எம்.பி., **என்.வரத ராசன், ஏ.எம்.கோபு** ஆகியோர் கலந்து கொண் டனர்.




ஜனநாயக விரோத மாகவும், கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிராகவும் மத்திய பா.ஜ.க. அரசு, பீகாரில் பெரும்பான்மை ஆதரவுடன் ஆட்சி

நடத்தும் திருமதி ராப்ரிதேவியின் ஆட்சியைக் கலைக்குமாறு முடிவு செய்து, குடியரசுத் தலைவருக்குச் சிபாரிசு செய்திருப்பதை அந்தக் கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதுடன்-அந்தச் செயலுக்கு தமிழ்நாட்டு மக்களின் எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில், 28.9.1998 அன்று காலை 6 மணி முதல் பிற்பகல் 1 மணி வரையில் கடையடைப்பு, வேலை நிறுத்தம் நடைபெறும்!'' என்று அந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

★ ★ ★


ஆனால், இந்தியத் திருநாடே மகிழ்ச்சியில் திளைக்கத் தக்க வகையில், குடியரசுத் தலைவர் **கே.ஆர்.நாராயணன்** அவர்கள் பீகார் அரசைக் கலைக்க மத்திய அரசு எடுத்த முடிவைத் திருப்பி அனுப்பினார்.

அதைப் பற்றி செய்தியாளர்கள் என் கருத்தைக் கேட்டபோது, ''டாக்டர் **அம்பேத்கருடைய** கருத்தைக் குடியரசுத் தலைவர் **திரு.கே.ஆர்.நாராயணன்** அப்படியே பிரதிபலித்திருக்கிறார். 356ஆவது பிரிவை துஷ்பிரயோகம் செய்யக்கூடாது என்றும், அப்படி துஷ்பிரயோகம் செய்தால், அந்தப் பிரிவையே தூக்கி எறிந்து விடலாம் என்றும் அம்பேத்கர் சொன்னார். அதை நெஞ்சில் பதிய வைத்துக் கொண்டு, இப்போது குடியரசுத் தலைவர் நாராயணன் அவர்கள் சட்டப் பேரவையில் பெரும் பான்மை பலம் இருக்கும்



''தமிழ்நாட்டில் தி.மு.க. அரசைக் கலைக்க நிறைய காரணங்கள் இருக்கின்றன'' -என்று பொய் அறிக்கை விடுத்தார், ஜெயலலிதா

பீகார் மாநில அரசைக் கலைப்பதை ஏற்றுக் கொள்ளாமல் திருப்பி அனுப்பியிருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்'' என்று நான் கூறினேன்.



''அ.தி.மு.க.வின் வஞ்சகப் போக்கினை, ஜனநாயக சக்திகள் எல்லாமே கண்டிக்க வேண்டும்'' - என்றார், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஆர்.நல்லகண்ணு

''குடியரசுத் தலைவர் திருப்பி அனுப்பினாலும் மீண்டும் சிபாரிசு செய்து வலியுறுத்துவோம் என்று சில பா.ஜ.க. தலைவர்கள் சொல்லுகிறார்களே?'' என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு-

''அப்படி அவர்கள் செய்யக்கூடாது என்பது என் கருத்து. முன்பு இப்படித் தான் குஜ்ரால் அரசு, உ.பி. அரசைக் கலைப்பதற்குச் சிபாரிசு செய்தது. இதே கே.ஆர்.நாராயணன் அவர்கள் அதைத் திருப்பி அனுப்பினார். அதை மீண்டும் அனுப்பக்கூடிய வாய்ப்பைப் பயன்படுத்தக்கூடாது என்று தி.மு.கழகம் குஜ்ரால் அரசை வற்புறுத்தியது. குஜ்ரால் அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த தி.மு.க.அமைச்சர் முரசொலி மாறனும் ''அப்படி மீண்டும் வலியுறுத்துவதைக் கைவிட வேண்டும்'' என்று நாடாளுமன்றத்தில் கடுமையாக எதிர்த்தார்.

எனவே, குஜ்ரால் அரசு அந்தத் தவறை மீண்டும் செய்யாமல், உத்திரப்பிரதேச அரசைக் கலைக்காமல் விட்டு விட்டது. அப்போது **வாஜ்பாய்** போன்ற பா.ஜ.க. தலைவர்கள் தி.மு.க.விற்குப் பாராட்டும், வாழ்த்தும் தெரிவித்தார்கள். அதை மறந்துவிடாமல் இன்றைய சூழ்நிலையில் குடியரசுத் தலைவர் திருப்பி அனுப்பியதை ஏற்றுக் கொண்டு, பீகார் அரசைக் கலைக்க வேண்டுமென்று மீண்டும் பா.ஜ.க.அரசு வலியுறுத்தக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்'' என்று கூறினேன்.

''அப்படியென்றால் நீங்கள் அறிவித்துள்ள ''பந்த்'' நடக்குமா?'' என்று கேட்டதற்கு-

Indian Express

''அண்ணா அவாகள், மத்திய - மாநில அரசுகளுக்கிடையே நல்ல ஒத்துழைப்பு இருக்க வேண்டும்'' என்று சொன்னார் - ''அந்த நிலையிலிருந்து தி.மு.க.மாறாது'' என்று 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஏட்டுக்கு பேட்டியளித்தேன்.

''எதிர்க் கட்சிகளின் நியாயமான கோரிக்கைக்கு வெற்றி கிடைப்பதுதான் சிறந்த ஜனநாயகம். அந்த ஜனநாயகத்தைக் காப்பாற்றிய குடியரசுத் தலைவருக்கும் அவரது கருத்தை ஏற்றுக் கொண்ட மத்திய அரசுக்கும் நன்றி கூறுகிறேன். இந்த முடிவைப் பாராட்டி வரவேற்று, 28 ஆம் தேதி நடைபெறவிருந்த கடையடைப்பு-வேலை நிறுத்தம் திரும்பப் பெறப்படுகிறது என்பதை அறிவித்துக்கொள்கிறேன்'' என்று கூறினேன்.

நாடாளுமன்றக் கழகக் குழுவின் தலைவராக இருந்த முரசொலி மாறன் குடியரசுத் தலைவருக்கு எழுதிய கடிதத்தில், ''நம்முடைய இந்திய நாட்டில் ஆரோக்கியமான மரபுகளை வளர்ப்பதில் கவனம் செலுத்துபவர்களின் சார்பாக, மீண்டும் ஒரு முறை ஜனநாயகத்தையும், கூட்டாட்சி முறையையும் காக்கும் சூழ்நிலையை உருவாக்கியிருக்கும் உங்களைப் பாராட்டுகிறேன். 356ஆவது பிரிவைப் பற்றி டாக்டர் அம்பேத்கர் அவர்கள் என்ன நினைத்திருந்தார்களோ, அதை நீங்கள் நிலைநாட்டி விட்டீர்கள். 356வது பிரிவு ஜனநாயகத்திற்கு விரோதமான கொள்கை. அதை அரசியலமைப்புச் சட்டத்திலிருந்து நீக்குவதற்காக தி.மு.கழகம் கடுமையாகப் போராடி வருகிறது. அதுவரை அம்பேத்கர் விரும்பிய படியே அது முகவரி இல்லாத கடிதமாகவே இருக்கட்டும். இரண்டாவது முறையாக நீங்கள் சரித்திரம் படைத்திருப்பீர்கள். உத்தரப்பிரதேச மாநிலம் தொடர்பாக மத்திய அமைச்சரவையின் பரிந்துரையைத் திருப்பி அனுப்பினீர்கள். அது குறித்து நீண்ட நேரம் விவாதம் நடந்த போதிலும், ஐக்கிய முன்னணி அரசு அதை கவுரவத்துடன் ஏற்றுக் கொண்டது. அந்த விவாதத்தில் என்னுடைய பங்கை நான் நினைவு கூர்கிறேன். அப்போது உங்களுடைய சரியான முடிவு குறித்து பா.ஜ.க.தலைமை மகிழ்ச்சியடைந்தது. அதே போன்று அவர்களும் கூட தவறான கவுரவத்தைப் பற்றிக்


கொண்டிருக்கக் கூடாது என்று நான் விரும்புகிறேன். மீண்டும் ஒரு முறை என்னுடைய கட்சியின் சார்பிலும், என் சார்பிலும் இருள் மண்டிய வேளையில் கலங்கரை விளக்கம் போன்ற தங்களுடைய சரித்திரப் பூர்வ முடிவுக்காக நான் இதயப் பூர்வமாகப் பாராட்டுகிறேன்'' என்று எழுதியிருந்தார்.

★ ★ ★

அ.தி.மு.கவும், அதன் தலைவி ஜெயலலிதாவும் படாத பாடுபட்டு, எப்படியாவது தமிழகத்திலே உள்ள தி.மு.கழக அரசைக் கலைக்க வேண்டுமென்று முயற்சித்த நிலையில்- ''மத்தியிலே உள்ள ஆட்சியே போகின்ற நிலைமை வந்தாலும், அதற்காகப் பெரும்பான்மை பலத்துடன் நடைபெற்று வரும் தி.மு.கழக ஆட்சியைக் கலைக்க மாட்டோம் என்பதில் பா.ஜ.கவும் அதன் தலைவர்களும் உறுதியாகக் கடைசி வரை நடந்து கொண்ட காரணத்தினால், திராவிட முன்னேற்றக் கழகம் பின்னர் தனது வரலாற்றிலே ஒரு களங்கத்தைச் சுமக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அப்போது கூட தி.மு.க.தன்னிச்சையாக அந்தத் தவறை செய்துவிடவில்லை என்பதையும், பலத்த நிபந்தனைகளோடு தான் அந்த முடிவினை எடுக்க நேரிட்டது என்பதையும், ஏன் அப்படிப் பட்டதொரு முடிவினை எடுக்க நேர்ந்தது?'' என்பது பற்றியும் நான் பின்னர் விரிவாக எழுதுகின்றேன்.

இதற்கு முன்னோடியாக **''இந்தியன் எக்ஸ்பிரஸ்''** நாளேட்டில் என்னுடைய பேட்டி **98**ஆம் ஆண்டு, செப்டம்பர் **14** மற்றும் **15** ஆகிய நாட்களில் வெளிவந்ததில் பல விவரங்களை நான் தெரிவித்திருந்தேன். அந்தப் பேட்டியின் சில முக்கிய பகுதிகள் வருமாறு:-






என்மீது மிகுந்த அன்பு கொண்ட ஐ.கே. குஜ்ரால், இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காணப் பெரிதும் முயற்சித்தவர்

செய்தியாளர்:- ஐக்கிய முன்னணியின் தற்போதைய நிலை என்ன? நீங்கள் அதன் தூண்களில் ஒருவராக இருந்தீர்கள். இப்போது அது எங்கே இருக்கிறது?

நான்:- ஒரு மாதத்திற்கு முன்பு வரை ஐக்கிய முன்னணி நல்ல முறையில் செயல்படும் என்று நான் நம்பிக்கை கொண்டிருந்தேன். அதில் பல கட்சிகள் இருந்தாலும், குறைந்த பட்சம் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, தி.மு.கழகம், த.மா.கா. ஆகிய கட்சிகள் தேசிய அளவில் தொடர்ந்து இணைந்து செயல்படும் என்று நான் நம்பிக்கை கொண்டிருந்தேன். கூட்டங்கள் நடைபெற்று, கூட்டாக முடிவுகள் எடுக்கப்பட்டன. இப்போது அத்தகைய நம்பிக்கையை நான் பெற்றிருக்கவில்லை. இது இன்றைய சூழ்நிலை-இப்போது ஐக்கிய முன்னணி இல்லை.

செய்தியாளர்:-மத்திய அரசுடன் உள்ள உறவு குறித்து?

நான்:-எங்கள் தலைவர் அண்ணா அவர்கள், மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்கும் இடையே நல்ல ஒத்துழைப்பு இருக்க வேண்டும் என்று கூறியிருந்தார். சில தலைவர்கள் மத்திய அரசுடன் மோதல் ஏற்படுத்திக் கொள்ளலாம்-ஆனால் தி.மு.கழக அரசு மத்திய அரசுடன் மோதிக்கொள்ளாது. எங்கள் கருத்துக்களையும், கொள்கைகளையும் வலியுறுத்துவது என்பது வேறு-மத்திய அரசுடன் நாட்டின் நிர்வாகம் தொடர்பாக ஒத்துழைப்பு அளிப்பது என்பது வேறு. நாங்கள் அண்ணாவின் நிலையிலிருந்து மாறிவிடவில்லை. இது சிலரால் தவறாகத் திரித்துக் கூறப்படுகிறது. அவர்கள் தான் பா.ஜ.கவும்., தி.மு.க.வும் ஓர் உடன்பாடு கொண்டுள்ளன என்ற வதந்தியைப் பரப்புகின்றனர்.




''அரசியலில் ஆதரித்தாலும் - எதிர்த்தாலும் உறுதியாக இருப்பார் கருணாநிதி'' என்று சொன்னார், இந்திரா காந்தி.

செய்தியாளர்: பா.ஜ.க.அரசு மதச்சார்பின்மைக்கு ஓர் அச்சுறுத்தலாக இருப்பதால், மிக விரைவாக அது அகற்றப்பட வேண்டுமென்று இடதுசாரிகள் கருதுகின்றனர். மதச் சார்பின்மையின் அடிப்படையில் காங்கிரஸ் தலைமையிலான அரசை ஆதரிக்கவும் அவர்கள் விரும்பு கின்றனர். காங்கிரசால் குறைவான தீமையாக இருப்பதால், இதே போன்றதோர் நிலையை தி.மு.கழகமும் பின்பற்றுமா?

நான்:-இதை நான் விரிவாக விளக்க வேண்டும். ஐக்கிய முன்னணி ஆட்சியின் போது, ஆட்சியில் காங்கிரஸ் பங்கு பெறும் திட்டத்தை கம்யூனிஸ்டுகள் எதிர்த்தன. அது எல்லோரும் அறிந்த உண்மை. இப்போது மத்தியில் காங்கிரஸ் கட்சியை ஆதரிக்கலாம் என்று சொல்லுகிறார்கள். பா.ஜ.க. ஒரு வகுப்புவாதக் கட்சி-காங்கிரஸ் ஒரு மதச் சார்பற்ற ஆட்சியை அளிக்க முடியும் என்றும் கூறுகிறார்கள். அவர்கள் எங்களைக் கலந்து ஆலோசிக்காமல், ஒரு தலைப் பட்சமாகவே பேசி வருகிறார்கள். என்ன நடக்கிறது என்று நாங்கள் பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

செய்தியாளர்:- காங்கிரஸ் தலைமையிலான மாற்று அரசு மத்தியிலே ஆட்சிக்கு வந்து, **சோனியா காந்தி** பிரதமரானால் தி.மு.க.ஆதரவு அளிக்குமா?

நான்:-எந்த அரசாக இருந்தாலும், அது வாஜ்பாய் தலைமையிலோ-சில தரப்பினர் உருவாக்க முயற்சிப்பதைப் போல சோனியா காந்தி தலைமையிலோ - அல்லது வேறு ஒரு அரசோ-எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும், மீண்டும் புதிதாகத் தேர்தல் நடத்தத் தேவை ஏற்படாமல், ஐந்தாண்டுகள் தொடர வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து.



எனது கோரிக்கையை ஏற்று, சென்னை விமான நிலையத்திற்கு அண்ணா-காமராஜர் பெயர்களைச் சூட்டினார், வி.பி.சிங்

செய்தியாளர்:- பா.ஜ.க. அரசில் சேருவது பற்றியோ,அதை ஆதரிப்பது பற்றியோ தி.மு.கழகம் பரிசீலனை செய்யுமா?

நான்:-இந்துக்கள், முஸ்லீம்கள், கிறித்தவர்கள் மற்றும் இதர சிறுபான்மை சமூகத்தினர் அனைவரும் இந்தியர்கள்தான். அவர்களுக்கிடையே எந்த பேதமும் இருக்கக் கூடாது என்று நம்புகிற மதச் சார்பற்ற நிலையை ஏற்றுக் கொள்கிற எவரையும் நான் ஆதரிப்பேன். அவர்கள் தங்கள் நிலையை மாற்றிக் கொள்ள வேண்டும். இன்றுகூட, அயோத்திப் பிரச்சினையிலே அவர்களுடைய நிலை மாறாமலே உள்ளது. அங்கு ராமர் கோயில் கட்டும் பிரச்சினை உள்ளது. பா.ஜ.க.தான் ஒரு மதச்சார்பற்ற அமைப்பு என்பதை நிரூபிக்கவேண்டும். அது அவ்வாறு நிரூபித்தால்-அத்தகைய மாற்றம் ஏற்பட்டால்- அதன் பிறகு இந்தியாவின் நலனுக்காக-ஜனநாயகத்தின் நலனுக்காக அவர்களை நாங்கள் ஆதரிப்போம்.

செய்தியாளர்:- மத்தியில் ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால், நிலைத்த தன்மை என்ற அடிப்படையில் பா.ஜ.க.அரசை ஆதரிக்க தி.மு.க. தயாராக உள்ளதா?

நான்:-நிலைத்த தன்மை பற்றிய கேள்வியில் மதச் சார்பின்மை என்ற பிரச்சினையும் அடங்கியுள்ளது. அதை மறந்து விடக்கூடாது. அரசின் நிலைத்த தன்மை மட்டுமே முக்கியமானதல்ல-மிகவும் முக்கியமானது எதுவென்றால் நாட்டின் நிலைத்த தன்மைதான். நாட்டின் நிலைத்த தன்மைக்கு மதச் சார்பின்மைதான் அடித்தளம் அமைக்கிறது.

செய்தியாளர்:- வேறு சொற்களில் கூறுவதானால் நீங்கள் ஆதரவு அளிப்பது பற்றி பரிசீலிக்க வேண்டுமானால்-பா.ஜ.க.

சிறுபான்மை சமூகத்தினருக்கு உத்தரவாதங்களும், சிறப்புச் சலுகைகளும் அளிக்க வேண்டும்-அது அவர்களைப் பாதுகாக்க வேண்டும்-மதச்சார்பின்மையை அதன் கொள்கையாக ஏற்றுக் கொள்ள வேண்டும்-என்கிறீர்களா?

நான்:-மதச் சார்பின்மை தொடர்பாக பா.ஜ.க.தன்னுடைய அணுகுமுறையை முற்றிலும் மாற்றிக் கொள்ள வேண்டும். பா.ஜ.க. ஒரு மதச்சார்பற்ற அமைப்புதான் என்று மக்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில் அவர்கள் செயல்பட வேண்டும். அதன் பிறகுதான் ஆதரவு அளிப்பது பற்றி பரிசீலிக்க தி.மு.க.வால் இயலும்.

செய்தியாளர்:-பா.ஜ.க.வுக்கும், தி.மு.க.வுக்கும் இடையிலான ரகசிய உடன்பாட்டின் விளைவாக-உங்களுக்கு உதவி செய்வதற்காகவே பிரதமர் காவிரி உடன்பாட்டைக் கொண்டு வந்தார் என்று அ.தி.மு.க. குற்றம் சாட்டுகிறது. இதற்கு உங்கள் பதில் என்ன?

நான்:-இது முற்றிலும் தவறானது. கேரள முதலமைச்சர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர். கர்நாடக முதலமைச்சர் ஜனதாதளத்தைச் சேர்ந்தவர். தி.மு.க.சார்பில் இரண்டு முதலமைச்சர்கள்-நானும் பாண்டிச்சேரி முதலமைச்சர் ஆர்.வி.ஜானகிராமனும் இடம் பெற்றிருந்தோம். எல்லோரும் பா.ஜ.க.விலிருந்து வேறுபட்ட கட்சிகளைச் சேர்ந்தவர்கள்.





என்னுடைய வேண்டுகோளையேற்று, மத்தியப் பணியிலிருந்த கே.ஏ.நம்பியாரை தமிழ்நாட்டுத் தலைமைச் செயலாளராக நியமித்தார் நரசிம்மராவ்

செய்தியாளர்:- மக்களவைத் தேர்தலுக்கு முன்பு சோனியா காந்தியை "ஒரு வெளிநாட்டுக்காரர்- அவர் நாட்டை ஆளக் கூடாது" என்று கூறிய ஜெயலலிதா, இப்போது அவருடனும் காங்கிரஸ் கட்சியுடனும் உறவு ஏற்படுத்திக் கொள்ள முயன்று வருகிறார். இந்த மாற்றம் பற்றி என்ன கருதுகிறீர்கள்?

நான்:-இது பற்றி சோனியா காந்திதான் பதில் சொல்ல வேண்டும்.

செய்தியாளர்:- கடந்த மக்களவைத் தேர்தலில் உங்கள் கூட்டணி மோசமாகத் தோல்வி அடைந்தது. கடைசி நேரத்தில் கூட்டணியில் சேர்க்கப்படாத கட்சிகளை அடுத்த தேர்தலில் சேர்த்துக் கொள்ள நீங்கள் கருதியிருக்கிறீர்களா?

நான்:-ஆமாம். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, ஜனதாதளம் போன்ற கட்சிகளைச் சேர்த்துக் கொள்ளாதது தவறு என்று நாங்கள் உணர்ந்து கொண்டோம். அடுத்த தேர்தலில் தமிழ்நாடு அளவில் மட்டுமாவது, கூட்டணியில் ஒரு சில கட்சிகளை சேர்த்துக் கொள்ள நாங்கள் திட்ட மிட்டுள்ளோம்.

செய்தியாளர்:- உங்கள் அரசைக் கலைப்பதை வை.கோ. எதிர்ப்பதாக நீங்கள் கருதுகிறீர்களா?

நான்:-தி.மு.க.வைப்போலவே வை.கோ.வும் அரசியல் சட்டத்தை 356ஆவது பிரிவைப் பயன்படுத்துவதை எதிர்க்கிறார்.

செய்தியாளர்:-பொதுப் பிரச்சினைகளிலோ-அல்லது திராவிட இயக்கப் பிரச்சினைகளிலோ ம.தி.மு.க.வுடன் இணைந்து செயல்பட வாய்ப்பு இருப்பதாகக் கருதுகிறீர்களா?

நான்:-பொதுப் பிரச்சினைகளிலோ-திராவிட இயக்கத்திற்குப் பொதுவான பிரச்சினைகளிலோ ஒன்றுபடுவதில் தவறு எதுவும் இல்லை.


செய்தியாளர்:- ஐக்கிய முன்னணி மற்றும் பா.ஜ.க.கூட்டணி அரசுகளை நீங்கள் எவ்வாறு ஒப்பிடுகிறீர்கள்?

நான்:-ஐக்கிய முன்னணியிலும் சில பிரச்சினைகள் இருந்தன-எனினும் இதைப் போல் அல்ல. ஆனால் பா.ஜ.க. தலைமையிலான கூட்டணியில் குடியரசுத் தலைவருக்கு ஆதரவுக் கடிதம் அனுப்புவதிலிருந்து, ஒவ்வொரு நாளும் ஜீவ மரணப் போராட்டமாக உள்ளது. இத்தகைய சூழ்நிலையில் வாஜ்பாய் என்ன-எந்த ஆட்சியாளராலும் எதையும் சாதிக்க முடியாது.

செய்தியாளர்:-உங்களுடைய 75 ஆண்டு கால நீண்ட பொது வாழ்வில் எத்தனையோ அரசியல் சம்பவங்கள் நிகழ்ந்திருக்கும். சரித்திரத்தின் பக்கங்களைப் பின்னோக்கிப் பார்த்து, சில சம்பவங்களைத் தவிர்த்திருக்கலாம் என்று நீங்கள் இப்போது கருதுகிறீர்களா?

நான்:-மறைந்த **எம்.ஜி.ஆர்.** அவர்களை தி.மு.க.விலிருந்து நீக்குவது பற்றி நாங்கள் பேசிக் கொண்டிருந்த போதே, அன்றைய தி.மு.க.பொதுச் செயலாளர் நாவலர் அவர்கள் அவசரப்பட்டு, பத்திரிகையாளர்களிடம் எம்.ஜி.ஆர். நீக்கப்பட்டிருப்பதாக அறிவித்தார். விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்த சேப்பாக்கம் விருந்தினர் மாளிகைக்குப் பத்திரிகை நிருபர்களை மீண்டும் அழைக்க நானும், மற்றவர்களும் முயற்சித்தபோது, காலம் கடந்து விட்டது என்பதும், அதைத் தடுத்து நிறுத்த நாங்கள் முயன்றோம் என்பதும் எல்லோருக்கும் தெரியும்-எம்.ஜி.ராமச்சந்திரனும் அறிவார். அது ஒரு தவிர்த்திருக்கக் கூடிய சம்பவம்.

செய்தியாளர்:- இந்திரா காந்தியில் தொடங்கி, பிரதமர்களுடன் உங்களுடைய தொடர்பு பற்றிச் சுருக்கமாகக் கூற முடியுமா?



என்னுடைய அழைப்பையேற்று, இலங்கைப் பிரச்சினை தொடர்பாக, மதுரையில் நடந்த கூட்டத்திற்கு வருகை தந்தார், வாஜ்பாய்

நான்:- இந்திரா காந்தி - ''அரசியலில் நண்பராக இருந்தாலும் எதிரியாக இருந்தாலும் நான் மிகவும் உறுதியாக இருப்பவன்'' என்பது அவர் என்னைப் பற்றி கொண்டிருந்த கருத்து. அவர் என்மீதும் என் குடும்பத்தினர் மீதும் மிகவும் அன்பு கொண்டிருந்தார். நான் டெல்லி செல்லும் போதெல்லாம் அவர் என்னையும், என் குடும்பத்தாரையும், உணவு உண்ண அவர் இல்லத்திற்கு அழைப்பார்.

அவரது இரண்டாவது மகன் **சஞ்சய் காந்தி** (அப்போது **ராஜீவ் காந்தி** அரசியலில் ஈடுபடாததால் அவரை நான் நன்றாக அறியவில்லை) - டெல்லியில் நான் தங்கியிருந்த மாறன் இல்லத்திற்கு ஆலோசனைக்காக அடிக்கடி வருவார். அவர் ஒரு அன்பார்ந்த நண்பராக இருந்தார். நான் இந்திராகாந்தியுடன் அவ்வப்போது கருத்து வேறுபாடு கொண்டிருந்தேன் என்பதும் சில வேளைகளில் மோதல் ஏற்பட்டதும் உண்டு என்பதும் எல்லோரும் அறிந்ததே.

மொரார்ஜி தேசாய்- கடுமையான, நேர்மையான மனிதர். அவருக்குக் கூட்டணித் தலைவர்களால் சிரமங்கள் ஏற்பட்டதில்லை. ஆனால் அவருடைய அமைச்சர்களாலேயே சிரமங்கள் ஏற்பட்டு ஆட்சியை இழந்தார். **1973**ஆம் ஆண்டு நான் முதல்வராக இருந்தபோது, பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு அளிப்பது பற்றி ஆராய கமிஷன் ஒன்றை அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தி, அலகாபாத்தில் நடத்தப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் மாநாட்டில் **ராஜ் நாராயணனின்** அழைப்பில் கலந்து கொண்டேன். அதன்பிறகு மண்டல் கமிஷன் அமைக்கப்பட்டு **12** ஆண்டுகளுக்குப் பிறகு **வி.பி.சிங்கால்** அமல்படுத்தப்பட்டது.

சரண்சிங்:-நீண்ட காலம் ஆட்சியில் இல்லை. எனவே அவர் எவ்வாறு பிரதமராகச் செயல்பட்டார் என்பதை என்னால் கூற முடியவில்லை. சரண்சிங் விவசாயிகளின் பிரச்சினைகளை வெகுவாக வெளிப் படுத்தினார்.

சந்திரசேகர்-இவரும் குறைந்த காலமே ஆட்சியில் இருந்த போதிலும்-எங்கள் அரசைக் கலைத்தார். ஆனால், வேறு வகையில் அவருடன் எனக்கு எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை.

ராஜீவ் காந்தி-இவர் என்னை அன்புடன் நடத்தினார். 1989ஆம் ஆண்டு எனக்கு எதிராக அவர் கடுமையான தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டபோதிலும், நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற உடனேயே, மரியாதை நிமித்தம் அவரைச் சந்திப்பதற்காக நான் டெல்லி சென்றேன். அப்போது அவர் மிகுந்த அன்புடன் நடத்தி, - டெல்லியிலே மேலும் சில நாட்கள் தங்கும்படிக் கூறினார்.

இலங்கைப் பிரச்சினையைத் தீர்க்கும்படி ராஜீவ் என்னைக் கேட்டுக் கொண்டார். பல்வேறு காரணங்களால் அது வெற்றி பெறா விட்டாலும் அது தொடர்பான அமைச்சர்களையும், அதிகாரிகளையும் என்னுடன் விவாதிக்கும்படி அவர் கூறினார்.

பிரபாகரனைச் சந்திக்க வை.கோ. ரகசியமாக இலங்கைக்குச் சென்றது பற்றி நான் அவரிடம் வருத்தம் தெரிவித்த போது, அவர் எத்தகைய பெருந்தன்மையான மனம் கொண்டவர் என்பதை மெய்ப்பிக்கும் வகையில், ''அதை, நான் ஒரு பெரிய பிரச்சினையாக்கப் போவதில்லை-வை.கோ. பத்திரமாக வந்து சேரவேண்டும்!'' என்றும் கவலை தெரிவித்தார்.

பின்னர் ஜெயலலிதாவின் தூண்டுதலால், சந்திரசேகர் மூலம் எங்கள் அரசு ஜனநாயக விரோதமான முறையில் கலைக்கப் பட்டது. அப்போதுகூட இதுதான் அரசியல் என்று நான் கருதினேனே தவிர, ராஜீவ் மீது வருத்தம் கொள்ளவில்லை.

வி.பி.சிங்-என் சகோதரர் போன்றவர். நாங்கள் ஒரு போதும் பிரதமர்-முதல்வர் என்ற நிலையில், அல்லது ஒரு

முன்னணியின் தலைவர்-அதன் தோழமைக் கட்சித் தலைவர் என்ற நிலையில் பழகியதில்லை. ஒருவரை ஒருவர் நண்பராக மதித்தோம். காவிரிப் பிரச்சினையில், என் கோரிக்கையை ஏற்று, அவர் ஒரு நடுவர் மன்றத்தை அமைத்தார். அவருடைய ஆட்சிக் காலத்தில் அவர் தமிழ்நாட்டிற்காக நிறையப் பணிகளை ஆற்றினார். சென்னையில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் சென்னை விமான நிலைய டெர்மினல்களுக்கு **அண்ணா** மற்றும் **காமராஜர்** பெயர்களைச் சூட்ட வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையை உடனடியாக ஏற்று, மகிழ்ச்சியோடு அறிவித்தார்.

பி.வி.நரசிம்மராவ்- இந்திராகாந்தி அமைச்சரவையில் ஏற்கனவே அவர் வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்தபோது, அவர் நல்ல நெருங்கிய நண்பராக இருந்தார். நான் முதல்வராகப் பொறுப்பேற்ற பிறகு, பிரதமர் பதவியிலிருந்து விலகிய அவர், பாதுகாப்புத் துறைச் செயலாளராக இருந்த **கே.ஏ.நம்பியாரை** தமிழ்நாட்டின் தலைமைச் செயலாளராக நியமிக்க அனுமதிக்க வேண்டும்- என்ற என்னுடைய கோரிக்கையை உடனடியாக ஏற்றுக் கொண்டார். எப்போதும் நரசிம்மராவ் என்னை மிகவும் மரியாதையுடன் நடத்தினார்.

எச்.டி.தேவகவுடா- அவர் நீண்ட காலம் பிரதமராக இல்லாவிட்டாலும், ஒரு நல்ல நண்பர்.

ஐ.கே.குஜ்ரால்-அவரும் சில நாட்கள்தான் பிரதமராக இருந்தார். என்மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தவர். இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காணப் பெரிதும் முயற்சித்தவர்.

ஏ.பி.வாஜ்பாய்-அவரை நான் நெருக்கடி நிலை காலத்திலிருந்து நன்றாக அறிவேன். நெருக்கடி நிலையால் ஏற்பட்ட பிரச்சினை பற்றி விவாதிப்பதற்காக டெல்லியில் **இரா.செழியன்** வீட்டில் நடந்த கூட்டத்தில் நான் வாஜ்பாயுடன் கலந்து கொண்டேன். பின்னர் அவர் என்னுடைய அழைப்பையேற்று தமிழ் ஈழ ஆதரவாளர்கள்

சங்கக் கூட்டத்தில் கலந்து கொள்ள மதுரைக்கு வருகை தந்தார். நாங்கள் மிகவும் நல்ல நண்பர்கள். தனிப்பட்ட முறையில், அரசியல்-கலாச்சாரம் மற்றும் கௌரவத்தின் அடிப்படையிலான உறவுகளைக் கொண்டிருக்கிறோம். வாஜ்பாயும், அத்வானியும் மிகவும் நல்ல மனிதர்கள்-நான் அவர்களை நேசிக்கிறேன்-ஆனால் அவர்களுடைய கட்சியை அல்ல. இதை நான் முன்னரே கூட கூறியிருக்கிறேன். நட்பு வேறு-அரசியல் வேறு. இன்னமும் நாங்கள் நல்ல நண்பர்களாக இருக்கிறோம்.

- என்னுடைய இந்த நீண்ட பேட்டி அப்போதுள்ள அரசியல் நிலைமைகளுக்கெல்லாம் ஒரு விளக்கமாக அமைந்தது.

★ ★ ★

பீகார் ஆட்சிக் கலைப்புக்கு முன்னதாகவே, 356ஆவது பிரிவைப் பயன்படுத்தி தமிழக அரசைக் கலைத்திருக்க வேண்டுமென்று ஜெயலலிதா அவசர, அவசரமாக ஓர் அறிக்கை விடுத்தார். அதற்குப் பதிலளித்து நான் ஓர் அறிக்கை விடுத்தேன். அதில்- ''1992 இல் பொதுக் குழுவைக் கூட்டி, ''356ஆவது பிரிவைப் பயன்படுத்துவோம்-என மத்திய அரசு மிரட்டுவது கூட்டாட்சி முறைக்கு ஒவ்வாது-இது போன்ற அத்துமீறல்கள் இந்திய ஒருமைப்பாட்டுக்கே ஊறு தேடும்'' என்று கடுமையாகத் தீர்மானம் நிறைவேற்றியவர் ஜெயலலிதா. அதை ஒரு கனவு போல் மறந்துவிட்டு, தி.மு.க.அரசைக் கலைப்பதற்கு மத்திய பா.ஜ.க.அரசை நோக்கி மிரட்டல் கணைகளைப் பொழியத் தொடங்கியிருக்கிறார்.

''தமிழக அரசைக் கலைப்பதற்கு அதிக காரணங்கள் இருக்கின்றன'' என்கிறார், ஜெயலலிதா. அப்படி எந்தவொரு காரணமும் இல்லை. ஜெயலலிதாவுக்கு உள்ள ஒரே காரணம், தி.மு.க.அரசைக் கலைத்து விட்டால், அவர் மீதுள்ள பல கோடி ரூபாய் ஊழல் கொள்ளைகளுக்கான வழக்குகளும் இளைத்துவிடும் என்பதுதான்'' என்று கூறினேன்.

இவ்வாறு மத்திய ஆட்சியிலே பங்கேற்ற அ.தி.மு.க. ஆட்சி அமைத்த கட்சியான பா.ஜ.க.வுடன் முரண்பட்டு நின்றதோடு மட்டுமல்லாமல், தமிழகத்தில் தேர்தல் நேரத்தில் தோழமை

வைத்திருந்த ம.தி.மு.க. போன்ற கட்சிகளோடும் உறவாக இல்லை. தான் விடுத்த அறிக்கை ஒன்றில், ''ம.தி.மு.க., ஐந்து ஆண்டுக் குழந்தை'' என்று கிண்டல் செய்திருந்தார்.

மேலும் 98ஆம் ஆண்டு அண்ணா பிறந்த நாளினையொட்டி, ம.தி.மு.க. சார்பில் நடத்தப்பட்ட பேரணியில் கலந்து கொள்வதாக ஒப்புதல் அளித்த ஜெயலலிதா, கலந்து கொள்ளவில்லை. அதைப்பற்றி அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் வைகோ-

8.4.1998 அன்று, தான் டெல்லியில் ஜெயலலிதாவை சந்தித்தபோது, பேரணியில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்ததாகவும், ஜெயலலிதா வருவதாக ஒப்புக் கொண்டதாகவும், மற்ற தோழமைக் கட்சித் தலைவர்களையும் அழைக்க இருப்பதாகக் கூறியதாகவும் சொன்னார். விழாவிற்கு வருவதற்கு ஜெயலலிதாவும் ஒப்புக் கொண்டார். அதன்பிறகு, ***15.8.2008*** அன்று பேசியபோது, பேரணிக்கு வருவதற்கில்லை என்று கூறியதாகவும்-வாஜ்பாய், ஜெயலலிதா ஆகியோரின் படங்களுடன் கூடிய ***3000*** அழைப்பிதழ்களை ஏற்கனவே தயார் செய்து விட்டதாகவும்-எனவே முடிவினைப் பரிசீலனை செய்யுமாறு கேட்டுக் கொண்டதாகவும் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ம.தி.மு.க.நடத்திய அண்ணா பிறந்த நாள் விழாப் பேரணியில் கலந்து கொள்வதற்காக விமானம் மூலம் சென்னைக்கு வருகை தந்த பிரதமர் வாஜ்பாய் அவர்களை முதலமைச்சர் என்ற முறையில் வரவேற்க நான் மீனம்பாக்கம் விமான நிலையம் சென்றபோது-பிரதமரை வரவேற்க வந்த வை.கோ., ஐந்தாண்டு காலத்திற்குப் பிறகு என்னை நேரில் சந்திக்க நேரிட்டது. செய்தியாளர்களும், புகைப்படக் காரர்களும் அதற்குப் பெரிதும் முக்கியத்துவம் தந்து அந்தச் செய்தியினை வெளியிட்டனர்.

நான் வை.கோ.வைச் சந்தித்த நேரத்தில் பக்கத்தில் இருந்த பிரதமர் வாஜ்பாய் அவர்களும் அதனை ஆச்சரியத்தோடு பார்த்த நேரத்தில்- ''ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு நாங்கள்

சந்திக்கிறோம்'' என்று பிரதமரிடம் நான் கூற- அவரும் ''ஓ, அப்படியா? மகிழ்ச்சி!'' என்று புன்னகைத்தார். பின்னர் பிரதமரை வழியனுப்ப விமான நிலையத்திற்குச் சென்றபோதும் வை.கோ. என்னைச் சந்தித்தார்.

சென்னை வந்த பிரதமர் வாஜ்பாய் அவர்களை ஆளுநர் மாளிகையில் செய்தியாளர்கள் சந்தித்தபோது, ஜெயலலிதா நடந்து கொள்ளும் முறை பற்றி யெல்லாம் பல கேள்விகளைக் கேட்ட நேரத்தில், பிரதமர் அவற்றுக்கெல்லாம் பதில் அளிக்காமல், புன்னகையையே பதிலாகத் தந்தார்.

''அ.தி.மு.க. உறுதியான-நம்பத் தகுந்த கூட்டாளியா என்பதை எதிர்காலம்தான் தீர்மானிக்கும்'' என்று கூறிய பிரதமர், ''மத்திய ஆட்சிக்கு தி.மு.க. போன்ற கட்சிகள் ஆதரவு தர முன்வந்தால், அதை நாங்கள் ஏற்போம்-ஆதரவு வேண்டாம் என்று கூற மாட்டோம்-ஆதரவுபற்றி தி.மு.க.வுடன் நாங்கள் இதுவரை பேச்சு வார்த்தை நடத்தவில்லை'' என்று கூறினார்.

''மதச் சார்பற்ற கட்சி என்று பா.ஜ.க.நிரூபித்தால், அதற்கு ஆதரவு தரத்தயார்'' என்று கருணாநிதி கூறியுள்ளார். அவரை நான் சந்தித்தபோது அது குறித்துக்கேட்டேன். ''பா.ஜ.க.ஒரு மதச் சார்பற்ற கட்சிதான்'' என்று வாஜ்பாய் செய்தியாளர்களிடமும் விளக்கமளித்தார்.

★ ★ ★

சென்னையில் **19.9.1998** அன்று நடைபெற்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிப் பேரணியில் கலந்து கொள்ள வந்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் **பரதன்,** செயலாளர் **டி.ராஜா,** தமிழ் மாநிலச் செயலாளர் **ஆர்.நல்லகண்ணு, ஏ.எம்.கோபு** ஆகியோர் அதே நாளில் என்னை இல்லத்தில் வந்து சந்தித்தனர்.

அதற்குச் சில நாட்களுக்கு முன்பு, மார்க்சிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் **ஹர்கிஷன் சிங் சுர்ஜித்** சென்னையில்

என்னைச் சந்தித்து, மூன்றாவது அணி ஒன்றினை அகில இந்திய அளவில் அமைப்பது குறித்துப் பேசினார்.

அதன் தொடர்ச்சியாகத்தான் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களின் பேச்சும் அமைந்தது. பேச்சின் தொடர்ச்சியாக மீண்டும் டெல்லியில் சந்தித்துப் பேசுவதென்று முடிவெடுத்தோம்.

இந்த அணியில் சேருவது குறித்து **மூப்பனார்**, **லல்லு பிரசாத் யாதவ்**, **முலாயம்சிங் யாதவ்** ஆகியோருடன் தொடர்ந்து பேசுவதென்றும் முடிவு செய்தோம்.

41. பொன்முடியின் புத்தகம்

பெரியார் திடலுக்கு நான் போனாலும்,போகா விட்டாலும் பெரியார் என் நெஞ்சை விட்டுப் போக மாட்டார்.


தென் எழுபத்து ஐந்தாம் ஆண்டு அகவையையொட்டி பவள விழா என்ற பெயரில், ஒவ்வொரு மாவட்டத் தலைநகரங்களிலும் விழாக் கொண்டாட முடிவு செய்து, சில மாவட்டங்களில் கொண்டாடி முடித்துள்ள நிலையில், 1.11.1998 அன்று நான் ஒரு அறிக்கை விடுத்தேன். அந்த அறிக்கையில், கழகத் தோழர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தேன். அதுவரை கொண்டாடப்பட்ட இடங்களில் செய்யப்பட்ட தேவையில்லாத ஆடம்பரங்களையும், அலங்காரங்களையும் அந்த விழா மேடைகளிலேயே நான் கண்டித்து, அவற்றை நிறுத்துமாறு கேட்டுக் கொண்டேன். ஆனாலும், அந்த ஆடம்பர ஏற்பாடுகள் தொடர்ந்த காரணத்தால் அந்த அறிக்கையினை நான் விட நேர்ந்தது.

''நூறு கழகக் கொடிகளை வரிசையாகக் காணும்போது எனக்கு ஏற்படுகின்ற எழுச்சியும், மகிழ்ச்சியும், ஆயிரம் அலங்கார விளக்குகளைக் காணும்போது ஏற்படவில்லை- என்று கோவை நிகழ்ச்சியில் நான் குறிப்பிட்டதை ஏடுகளில் நீங்கள் படித்திருப்பீர்கள். பவள விழா நிகழ்ச்சியென்பது அதில் கலந்து கொள்கிற கழக முன்னணியினர் மற்றும் சொற்பொழிவாளர்கள் அனைவரது உரைகளுமே என்னையே சுற்றிச் சுற்றி அமைகிறதேயன்றி, நாட்டு நடப்பு-அரசியல் நிலவரம்-நமது இயக்கக் கொள்கை விளக்கங்கள்-கழக அரசின் சாதனைகள்-அரசு பற்றிய விமர்சனங்களுக்கு ஆதார

பூர்வமான விளக்கங்கள்-என்பன போன்ற பலவற்றை மக்கள் மனதில் பதிய வைக்கத் தவறி விடுவதை நான் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் கண்டு மிகுந்த வேதனைப்படுகிறேன்.''

''எனவேதான் நான் திடமாக முடிவெடுத்து இப்போது அறிவிக்கிறேன், இனி என்னை அழைத்து என் பவளவிழா நிகழ்ச்சிகளை நடத்த வேண்டாம் என்று! பவளவிழா என்ற பெயரில் நிகழ்ச்சிகளை அமைக்காமல், பொதுக் கூட்டங்களில் என்னைக் கலந்து கொள்ளச் செய்தால்-நானும், அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் முன்னணியினர், மற்றும் சொற்பொழிவாளர்களும் கழகத்தின் அரசியல்-சமுதாய பொருளாதாரக் கொள்கைகளைப் பற்றிய விளக்கங்களை அளிக்க முடியும்-பொது மக்களுக்கும் அவை பயனுடையதாக அமையும். என்னைப் பற்றித் தான் தமிழ்ப் பெருமக்களுக்கு அறுபது ஆண்டுகளாகத் தெரியுமே-அதையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருப்பதும், இறுதியாக அந்த நிகழ்ச்சியில் நான் ஏற்புரை ஆற்றிடுவதும் தேவையில்லை-தேவையே இல்லை.''

''எனவே இனி என்னை மாவட்டங்களில் பொதுக்கூட்ட நிகழ்ச்சியென்று அழைத்தால் தான் அவற்றில் கலந்து கொள்வதாக இருக்கிறேன். அந்த நிகழ்ச்சிகளே சமுதாயத்துக்கும், நாட்டுக்கும் பயன்படும் கருத்துப் பூங்காவாக விளங்கிட முடியும் என்பது என் எண்ணம்.''



பாளையங்கோட்டை தனிமைச் சிறையில் நான் அடைக்கப்பட்டிருந்தபோது அண்ணா என்னைக் கட்டித் தழுவி கண்ணீர் உகுத்தாரே - அந்த நிகழ்ச்சியை என்னால் மறக்கவே முடியாது'' என்று குமுதம் இதழுக்குப் பேட்டி அளித்தேன்

இவ்வாறு அந்த அறிக்கையில் நான் கேட்டுக் கொண்டேன்.

★ ★ ★


ஜெயலலிதாமீதான ஊழல் வழக்குகளை விசாரிக்க
அரசு அமைத்த தனி நீதிமன்றம் செல்லும்
சென்னை உயர் நீதிமன்ற
டிவிஷன் பெஞ்ச் தீர்ப்பு

அதே நவம்பர் திங்கள் முதல் வாரத்தில் என்னைச் சந்தித்த செய்தியாளர்கள், **ஜெயலலிதா** மீது போடப்பட்ட ஊழல் வழக்குகளை விசாரிக்க தனி நீதிபதி விசாரணை அமைத்ததை ''எதிர்த்து, ஜெயலலிதா போட்டிருந்த வழக்கைத் தள்ளுபடி செய்து ''உயர்நீதி மன்ற பெஞ்ச் தீர்ப்பளித்ததைப் பற்றி என் கருத்து என்ன?'' என்று கேட்டார்கள்.

அதற்கு நான், ''ஜெயலலிதா மீதும் அவருடைய அமைச்சரவையில் இருந்த முன்னாள் அமைச்சர்கள் சிலர் மீதும் வழக்கு தொடரப்பட்ட நிலையில், முன் ஜாமீன் கேட்டு அவர்கள் உயர்நீதிமன்றத்திற்குச் சென்றபோதே, நீதிபதி சிவப்பா போன்றவர்கள் அளித்த தீர்ப்பில், அந்த வழக்குகள் ஜெயலலிதாவின் கூற்றுப்படி, வேண்டுமென்றே அரசாங்கம் தொடர்ந்த வழக்குகள் அல்ல என்றும், பூர்வாங்க ஆதாரங்கள் அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு இருக்கின்றன என்றும் தீர்ப்பளித்து, முன் ஜாமீன் மனுக்களைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள்.''

''ஆனால் ஜெயலலிதாவும், அவரைச் சார்ந்தவர்களும் தனி நீதிபதிகள் விசாரணை கூடாது என்றும், இவை வேண்டு மென்றே தொடரப்பட்ட வழக்குகள் என்றும் உயர் நீதிமன்றத்தில் முறையீடு செய்து-தனி நீதிபதிகள் விசாரணையை விலக்கிக் கொள்ள வேண்டுமென்று வைத்த கோரிக்கை தள்ளுபடி செய்யப் பட்டிருக்கின்றது.''

"There was no malafide on the part of the state govenment" *(மாநில அரசுக்கு இதிலே எந்த விதமான கெட்ட நோக்கமும் கிடையாது)* என்று உயர் நீதிமன்றம் தெளிவாகவே அந்தத் தீர்ப்பில் தெரிவித்திருக்கிறது'' என்று பதில் அளித்தேன்.


தனி நீதிமன்றம் அமைத்தது செல்லும் என்ற உயர்நீதிமன்ற
தீர்ப்பால் நீதித்துறையின் கவுரவம் காப்பாற்றப்பட்டுவிட்ட
"ஸ்டேட்ஸ்மென்" ஆங்கில ஏடு கட்டுரை
The Statesman

இந்தத் தீர்ப்பு பற்றி **5.11.1998** தேதிய **"ஸ்டேட்ஸ்மென்"** இதழில் ஒரு சிறப்புக் கட்டுரை வெளி வந்தது. அந்தக் கட்டுரையின் சில முக்கியப் பகுதிகள் வருமாறு:-

"தமிழக முன்னாள் முதலமைச்சர் **ஜெயலலிதா**, அவருடைய முன்னாள் அமைச்சரவை சகாக்களில் பெரும்பாலோர், மற்றும் சில உயர் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மீதான ஊழல் வழக்குகளை விசாரிக்க மூன்று தனி நீதிபதிகளைத் தமிழக அரசு நியமனம் செய்தது செல்லும் என்று தலைமை **நீதிபதி மன்மோகன் சிங் லிபரான், நீதிபதி ஈ.பத்மனாபன்** அடங்கிய சென்னை உயர் நீதிமன்ற டிவிஷன் பெஞ்ச் நவம்பர் 3ஆம் தேதி அளித்த தீர்ப்பு, உயர்நீதித் துறையின் சுதந்திரத்தையும், நேர்மையையும் உறுதிப் படுத்தியுள்ளது."

"**1997** ஆம் ஆண்டு **ஏப்ரல் 17** ஆம் தேதி மூன்று கூடுதல் செசன்ஸ் நீதி மன்றங்கள் உருவாக்கப்பட்டதும், **1997 ஏப்ரல் 30ஆம் தேதி** மூன்று தனி நீதிபதிகள் நியமிக்கப்பட்டதும் செல்லும் என்றும், உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் ஜெயலலிதா குற்றம் சாற்றியபடி சட்டப்படியோ, உண்மையாகவோ, தமிழக அரசுக்குத் தீயநோக்கம் எதுவும் இல்லை என்றும் டிவிஷன் பெஞ்ச் கூறியுள்ளது."

"தொடக்கத்தில் இருந்தே, "முதலமைச்சர் கருணாநிதியால் அரசியல் பழி தீர்க்கும் நோக்கத்துடன் குற்றச் சாட்டுகள் சாற்றப்பட்டுள்ளன" என்று கூறி வந்த ஜெயலலிதா, அவற்றை துணிச்சலுடன் எதிர்த்து நின்று-தான் குற்றமற்றவர் என்று நிரூபிப்பதற்குப் பதிலாக, உயர்நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யத் தயாராகி வருகிறார்."


கண்ணிலேயே
நிற்கும் கண்மணி!
ரூசோ மறைவுக்கு முதல்வர் இரங்கல்
பாசத்திற்குரிய பண்பாளன் ரூசோ
கொடியோரின் கொலைவெறிக்குப்
பலியானது என் நெஞ்சைப் பிளந்தது

''உயர்நீதி மன்றம் தன்னுடைய தீர்ப்பில், ''விசாரணையின் மூலம் தவறான தோற்றத்தை உருவாக்கி, தவறான பிரச்சாரம் செய்து, தங்களை அரசியல் ரீதியில் சீர்குலைப்பதற்கான முயற்சி என்று மனுதாரர்கள் செய்யும் வாதம் ஏற்கத்தக்க தகுதியைப் பெற்றிருக்கவில்லை என்று கூறியிருப்பதோடு, இது கடந்த காலத் தவறுகளை நியாயப்படுத்துவதற்கான முயற்சி என்றும், தாங்கள் சிக்கியிருக்கும் நிலையிலிருந்து விடுபடுவதற்காகச் செய்யப்படும் முயற்சியுமாகும்'' என்று கூறியுள்ளது.''

''பொதுப் பணத்தை பெருமளவில் கையாடியதாகவும், லஞ்ச ஒழிப்புச் சட்டத்தின் கீழான குற்றங்களுக்காகவும், மனுதாரர்கள் குற்றம் சாற்றப்படும் பொழுது உயர் பதவிகளை வகித்து, பொதுப் பணத்தை பாதுகாக்கக் கடமைப் பட்டிருந்தவர்கள் விசாரணையை சந்தித்து, தாங்கள் குற்றமற்றவர்கள் என்பதை நிரூபித்துத் தூய்மையுடன் வெளிவரவேண்டும்'' என்று நீதிபதிகள் கூறியுள்ளனர்.''

''இப்போது ஜெயலலிதா செய்து கொண்டிருப்பதெல்லாம் விசாரணையைத் தாமதப்படுத்தி, பா.ஜ.க.அரசிடம் அவர் வலியுறுத்தி வருகின்ற ஒரே ஒரு கோரிக்கையான தி.மு.க. அரசைக் கலைக்க வேண்டும் என்பது ஏற்கப்பட்டு, தி.மு.க.அரசு கலைக்கப்பட்டு, இடைத்தேர்தல் வராத பட்சத்தில், 2001 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் தமிழ்நாடு சட்டப் பேரவைத் தேர்தலுக்குள் தனக்கு தேர்தலில் போட்டியிடத் தகுதி இல்லை




கழகத்தை வளர்த்த முன்னோடி – மூத்த தலைவர் – வேலூர் வி.எம்.தேவராஜ் உடலுக்கு மலரஞ்சலி

என்ற நிலை ஏற்பட்டு விடாமல் தவிர்ப்பதற்காகத்தான் போராடிக் கொண்டிருக்கிறார்.

''**1991** ஆம் ஆண்டு முதல் **1996**ஆம் ஆண்டுவரை ஆட்சியில் இருந்த ஜெயலலிதாவின் அரசு சுதந்திர இந்தியாவில் இருந்த அரசுகளிலேயே மிக மோசமாக லஞ்சமும், ஊழலும் நிரம்பியதாக இருந்தது.''

''ஜெயலலிதா தன்னுடைய புகழ்பெற்ற புது டெல்லி தேனீர் விருந்தை, இந்தியாவின் தலைமை நீதிபதியாக **ஏ.எஸ்.ஆனந்த்** பதவி ஏற்கும் வேளையில் ஏற்பாடு செய்தார். அவருடைய பதவியேற்பு விழாவிற்கு அழைப்பிதழைப் பெறும் முயற்சியில் தோல்வியடைந்த ஜெயலலிதா, தலைமை நீதிபதியை அவருடைய இல்லத்தில் சந்தித்து, அவருக்கு மலர்ச்செண்டு வழங்கினார். அந்நிகழ்ச்சியை ஏராளமான புகைப்பட கேமராக்களும், தொலைக்காட்சி கேமராக்களும் படம் பிடித்தன. அதன் நோக்கம், குறிப்பாக உயிர் நீதிமன்றத்தில் உள்ளவர்களுக்கு, தான் புதிய தலைமை நீதிபதிக்கு நெருக்கமானவர் என்ற செய்தியைத் தெரிவிப்பதுதான்.



மூப்பனார் - பி.டி.ஆர். பழனிவேல்ராஜன் இருவரும் அரசியல்வாதிகள் மட்டுமல்ல... ஆழ்ந்த பக்திமான்கள் - அவர்கள் இருவரும் கோயில்களில் தமிழிலேயே அர்ச்சனை செய்யப்பட வேண்டுமென்று குரல் கொடுத்தார்கள்.

தாமதமாக அளிக்கப்பட்ட போதிலும், இந்தத் தீர்ப்பு சட்டத்தின் மேன்மையை உயர்த்தியிருப்பதோடு, நீதி பாரபட்சமற்றது என்பதையும் நிரூபித்துள்ளது.''

என்று ''ஸ்டேட்ஸ்மென்'' ஏடு கட்டுரை தீட்டியிருந்தது.

சென்னை உயர்நீதி மன்றம் **3.11.1998** அன்று அளித்த தீர்ப்பை எதிர்த்து ஜெயலலிதா உச்சநீதி மன்றத்தில் அப்பீல் செய்தார். தலைமை நீதிபதி **ஏ.எஸ்.ஆனந்த்,** நீதிபதி **வி.என்.நரே,** நீதிபதி **எம்.சீனிவாசன்** ஆகியோர் அடங்கிய டிவிஷன் பெஞ்ச் முன்பு இந்த அப்பீல் மனு **6.11.2008**இல் தாக்கல் செய்யப்பட்டது.

தனி நீதிபதி விசாரணைக்கு இடைக்காலத் தடை விதிக்க வேண்டும் என்ற ஜெயலலிதாவின் கோரிக்கையை நீதிபதிகள் நிராகரித்தனர். ''எந்த அடிப்படையிலும் தனி நீதிமன்றத்தில் உள்ள வழக்கு விசாரணைக்கு நாங்கள் தடை விதிக்க மாட்டோம். எனவே இடைக்காலத் தடைவிதிக்க வேண்டும் என்ற கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது'' என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் கூறினார்கள்.

★ ★ ★



''கோயில் கூடாது என்பதல்ல என் கொள்கை - கோயில் கொடியோரின் கூடாரமாக இருக்கக்கூடாது'' என்று நான் 'பராசக்தி' படத்தில் வசனம் எழுதினேன்

சிவகங்கை மாவட்டக் கழக இளைஞர் அணி அமைப்பாளராக செம்மையுடன் பணியாற்றி வந்த **வே.ரூசோ, 8.11.1998** அன்று இரவு தேவகோட்டையில் கொடூரமாகக் கொல்லப் பட்டார் என்ற செய்தி, 8ஆம் தேதி நள்ளிரவில் எனக்குக் கிடைத்து, உடனடியாக தம்பி **மு.க.ஸ்டாலினைத்** தொடர்பு கொண்டு, அந்த இளைஞனுக்கு அஞ்சலி செலுத்திடச் செல்லுமாறு பணித்தேன்.

ரூசோ சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் இயக்குனராகவும், துணைத் தலைவராகவும் அப்போது பணியாற்றி வந்தார். வயது **39** தான். ரூசோ தேவகோட்டையில், திருப்பத்தூர் சாலையில், புனித மரியன்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு எதிரே உள்ள அண்ணா சாலையில் வசித்து வந்தார்.

8ஆம் தேதியன்று இரவு ரூசோ தனது அலுவலகத்தில் இருந்து காரில் வீட்டிற்குச் சென்றிருக்கிறார். செந்தில் குமார் என்பவர் காரை ஓட்டிச் சென்றுள்ளார். கார் ரூசோவின் வீட்டிற்கு அருகே வந்துள்ளது. சாலையின் குறுக்கே மொபட் பைக் ஒன்றை நிறுத்தி, இரண்டு பேர் பழுது பார்ப்பதுபோலப் பாசாங்கு செய்து கொண்டிருந்திருக்கிறார்கள். ரூசோவின் கார் அந்த வழியாகத்தான் செல்ல வேண்டும். ஓட்டுநர் காரின் ஹாரனைத் தொடர்ந்து அடித்தும், அந்த இரண்டு நபர்களும் வழி விடுவதாக இல்லை.

இதனால் ரூசோ காரில் இருந்து இறங்கி, அந்த நபர்களை நோக்கிச் சென்றுள்ளார். அப்போது சாலையின் இரண்டு பகுதிகளிலும் மறைந்திருந்த ஒரு கும்பல், பயங்கர

ஆயுதங்களோடு சூசோவின் மீது பாய்ந்தது. அதைக் கண்ட சூசோ தப்பிக்க எண்ணி, ஓடிச் சென்று காருக்குள் நுழைந்துள்ளார். ஓட்டுநர் காரை வேகமாக ஓட்டிச் சென்று விடலாமென எண்ணிட, கும்பல் காரை அடித்து நொறுக்கியது. செந்தில்குமார் தலையில் உருட்டுக்கட்டையால் தாக்கியது. செந்தில்குமார் அங்கிருந்து தப்பியோடினார். அதன் பிறகு அந்தக் கும்பலின் பிடியில் சூசோ வசமாக மாட்டிக் கொண்டார். கொலைக் கும்பல் சூசோவை சரமாரியாக வெட்டித் தள்ளிவிட்டு, மோட்டார் சைக்கிளில் ஏறித் தப்பிச் சென்று விட்டனர்.

அதன் பின்னர் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் சூசோவை உடனடியாக தேவகோட்டை மருத்துவமனைக்குத் தூக்கிச் சென்றனர். முதல் உதவி சிகிச்சை செய்து, தீவிர சிகிச்சைக்காக சூசோவை மதுரைக்கு எடுத்துச் சென்றபோது, வழியிலேயே அவர் இறந்து விட்டார்.

சூசோவின் உடலுக்கு தலைமைக் கழகத்தில் சார்பில் இளைஞரணிச் செயலாளர் மேயர் மு.க.ஸ்டாலின், நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக இருந்த தா.கிருட்டிணன், இந்து அறநிலையத் துறை அமைச்சர் தமிழ்க்குடிமகன், உணவுத் துறை அமைச்சர் கே.என்.நேரு, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் ரகுமான்கான், மு.க.அழகிரி, தென் சென்னை மாவட்டக் கழகச் செயலாளராக இருந்த சைதை கிட்டு, திருப்பத்தூர் சிவராமன் உள்ளிட்ட ஏராளமானோர் தேவகோட்டைக்கு விரைந்து சென்று, சூசோவின் உடலுக்கு மலர் மாலைகள் வைத்து கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்.

சூசோவின் மறைவுச் செய்தியினைக் கேட்டு, சென்னையிலிருந்து தேவகோட்டைக்கு அவரது குடும்பத்தினர் காரில் புறப்பட்டுச் சென்றார்கள். திருச்சி அருகே அவர்கள் சென்ற கார் விபத்திலே சிக்கியது. அந்த விபத்திலே சூசோவின் மாமியார் இறந்துவிட்டார். சூசோவின் மனைவி மற்றும் குழந்தைகள் படுகாயமடைந்தனர்.

சூசோ மறைவுக்கு நான் எழுதிய இரங்கல் செய்தி-



அண்ணாவின் புதல்வர் கௌதமனின் மகள் சரிதா- சிவகுமார் திருமணத்தை நான் நடத்தி வைத்தேன்

''கண்ணிலேயே நிற்கிறது அந்த உருவம் என்பார்களே, அது போல கண்ணிலேயே நிற்கும் உருவத்துக்குச் சொந்தக் காரனான அந்தக் கழகக் கண்மணி 'கயவர்களால் வெட்டுண்டு வீழ்ந்து மடிந்தான்' எனும் செய்தி கேட்டு, இரவு முழுதும் நான் தூங்கவில்லை. இமைகளை மூடினால், கண்ணீர்த் துளிகள்தான் முட்டிக்கொண்டு வெளிவந்தன.

''சிவகங்கை மாவட்டக் கழக இளைஞர் அணி அமைப்பாளர்-சமுதாய ஒப்பந்தம் தீட்டிய சிந்தனையாளர் ரூசோவின் பெயரைக் கொண்டவன்-அந்த ரூசோவைத்தான் துடிக்கத் துடிக்க வெட்டிக் கொன்றிருக்கின்றனர், வெறியர்கள்! இளைஞர்களின் அன்பைப் பெற்று-மக்களின் நம்பிக்கையைப் பெற்று-கழகத் தலைமையின் கனிவான ஆதரவைப் பெற்று-மாவட்டத்து முன்னணியினரின் பாசத்துக்குரிய பண்பாளனாக வளர்ந்து கொண்டிருந்த அந்த அடலேறு, மனித நேயத்துக்கு அப்பாற்பட்ட மிருகங்கள் சிலரது கொலை வெறிக்கு ஆளாகியிருப்பது என் நெஞ்சைப் பிளக்கிறது. அந்த வாலிப வேங்கையை வட்டமிட்டுக் கொண்டே வாஞ்சையுடன் இந்த இயக்கம் வெற்றி நடைபோடுவதற்கு நாளும் உழைத்துக் கொண்டிருந்த இளைஞர் அணித் தம்பிமார்களுக்கும், கழக முன்னோடிகளுக்கும், குடும்பத்



பொன்முடி எழுதிய ''திராவிடர் இயக்கமும் கறுப்பர் இயக்கமும்'' என்ற நூலை பேராசிரியர் முன்னிலையில் நான் வெளியிட, முரசொலி மாறன் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

தினருக்கும், சூசோவின் இழப்பு எனக்கே பேரிழப்பு என்பதைத் தெரிவித்து, ஆழ்ந்த இரங்கலைக் கூறுகிறேன்.''

இளைஞர் சூசோ மறைந்த செய்தியைத் தொடர்ந்து, துக்கம் துணையோடு வரும் என்பதைப்போல மறுநாளே-வேலூர் மாவட்டத்தில் கழகம் வளர்த்த முன்னோடியும், மூத்த தலைவர்களில் ஒருவருமான **வி.எம்.தேவராஜ்** இயற்கை எய்தினார் என்ற செய்தி வந்தது. சில நாட்கள் நோய் வாய்ப்பட்டிருந்த நிலையில், சிகிச்சை பலன் அளிக்காமல் அவர் மறைவெய்தினார்.

வேலூர் மாவட்டத்தில் அனைத்துக் கழகத் தோழர்களாலும் ''அப்பா'' என்று தான் அன்பொழுக அழைக்கப்படுவார் அவர். விலைவாசிப் போராட்டத்தின் போது, அண்ணாவுடன் வேலூர் மத்திய சிறைச்சாலையில் இருந்தவர் என்ற பெருமையும் வேலூர் தேவராஜ் அவர்களுக்கு உண்டு. 25 ஆண்டுகள் வேலூர் நகர் மன்ற உறுப்பினராகவும்-ஆறு ஆண்டுகள் சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், ஆறு ஆண்டுகள் வேலூர் நகர்மன்றத் தலைவராகவும், மூன்று முறை சட்டப்பேரவை உறுப்பினராகவும் இருந்து அரும்பணி ஆற்றியவர். அவர் மறைந்த செய்தி அறிந்ததும், நான் உடனடியாக வேலூர் சென்று அவருக்கு அஞ்சலி செலுத்தினேன். என்னுடன் **ஆர்க்காடு வீராசாமி,**

துரைமுருகன், பொன்முடி, ரகுமான்கான், கு.பிச்சாண்டி ஆகியோர் வந்தனர். அவரது மறைவு குறித்து நான் தெரிவித்த இரங்கல் செய்தியில்-

''தேவ்! தேவ்! என்று அறிஞர் அண்ணா அவர்களாலும், கழக உடன்பிறப்புக்களாலும், வேலூர் பெருமக்களாலும் அன்பொழுக அழைக்கப்பட்ட வி.எம்.தேவராஜ் மறைந்து விட்டார். மதுரை முத்து, அன்பில் தர்மலிங்கம், மன்னை நாராயணசாமி, சி.வி.எம். அண்ணாமலை எனும் மூத்த தலைவர்களின் வரிசையில் நின்று கழகம் வளர்த்தவர் வி.எம்.தேவராஜ்! வேலூர் வட்டாரத்துப் பிரச்சினை யென்றாலோ, நிகழ்ச்சி என்றாலோ, ''சாரதியையும், தேவராஜையும் கேளுங்கள்'' என்று அண்ணா அவர்கள் அந்த இருவரையும் தனது தளகர்த்தர்களாக அடையாளம் காட்டிய அந்த நாள் முதல், நான் வி.எம்.தேவராஜை அறிவேன்.''

''அந்தப் படை முகத்துப் பெருவீரன் பங்கேற்காத அறப் போர்க்களம் எதுவுமில்லை. நெருக்கடி கால ''மிசா''க் கொடுமையேற்று, ஓராண்டு காலம் சிறையில் அடை பட்டிருந்த அந்தச் சிங்கம், தன்னோடு அடைபட்டிருந்த நூற்றுக்கணக்கான கழகக் கண்மணிகளை எப்படி அரவணைத்துக் கொண்டு, அடக்குமுறை நெருப்பைத் தாண்டினார் என்ற நிகழ்ச்சிகளைக் கேள்வியுற்று, எத்தனையோ முறை நெஞ்சு நெகிழ்ந்து போயிருக்கிறேன். வேலூர் நகராட்சித் தலைவராகவும், சட்டமன்ற உறுப் பினராகவும், கழகப் பாசறையின் பாதுகாப்பு அரணாகவும் அவர் திகழ்ந்ததும்-அவர் பொறுப்பில் இருந்தபோது அந்த வட்டாரத்து மக்களுக்கு நல்லவை பல நிகழ்ந்ததும்-அவரது வரலாற்றுக் குறிப்பில் வைர வரிகளாகும். அந்த வேலூர் வேங்கை விடைபெற்றுக் கொண்டதை எண்ணி, விழி நீர் பெருக்காதார் அந்த வட்டாரத்தில் யாருமில்லை. அந்தப் பெருமகனை இழந்து வாடும் அவரது குடும்பத் தினருக்கும் கழக உடன் பிறப்புகளுக்கும் என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று எழுதியிருந்தேன்.

★ ★ ★

''குமுதம்'' வார இதழ் சார்பில், **நவம்பர் 98**இல் என்னைச் சந்தித்து, நீண்ட பேட்டி ஒன்று வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். அந்தப் பேட்டியில் சில கேள்விகள் நெஞ்சில் என்றும் நிற்கக் கூடியவை. அவர்களில் முதல் கேள்வியே-

''50 ஆண்டுகால தி.மு.க.சரித்திரத்தில் உங்களின் நினைவை விட்டு அகலாத முக்கிய நிகழ்ச்சி ஒன்றைக் கூறுங்கள்'' என்பதுதான்!

அந்தக் கேள்விக்கு விடையாக ''எத்தனையோ நிகழ்ச்சிகள் உண்டு. ஒரு நிகழ்ச்சியைப் பற்றி மட்டுமே கேள்வி இருப்பதால்-பாளையங்கோட்டை தனிமைச் சிறையில் மொழிப் போராட்டத்தின் போது நான் அடைக்கப்பட்டிருந்த நேரத்தில், பல்வேறு தடைகளுக்கிடையே அறிஞர் அண்ணா அவர்கள் வந்து என்னைச் சந்தித்த நிகழ்ச்சி என் நினைவைவிட்டு அகலாத முக்கிய நிகழ்ச்சியாகும். ''தலைவனின் கண்ணீரைப் பரிசாகப் பெறுகிற அளவுக்கு சாவு ஏற்படின், அந்தச் சாவை யாசித்தாவது பெற வேண்டும்'' என்ற கருத்தமைந்த ''புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு இரந்துகோள் தக்கது உடைத்து'' எனும் திருக்குறளை நான் மேடைகளில் அடிக்கடி கூறியிருக்கிறேன். ஆனால், அந்த வாய்ப்பு எனக்கு-நான் உயிரோடு இருக்கும்போதே, பாளையங்கோட்டை சிறைச்சாலையில் கிட்டியது. சுமார் **25** கொட்டடிகள் உள்ள அந்தச் சிறைப் பிரிவில் எல்லாக் கொட்டடிகளும் காலியாக இருந்திட, நான் ஒருவன் மட்டும் தனியாக அடைக்கப்பட்டிருந்ததைக் கண்டு, அண்ணா அவர்கள் என்னைத் தழுவிக் கொண்டு கண்ணீர் உகுத்தாரே, அந்த நிகழ்ச்சியை இப்போது நினைத்தாலும் புல்லரிக்கிறது'' என்று கூறினேன்.

மற்றொரு முக்கியக் கேள்வி-

''உங்களுடன் சேர்ந்து தி.மு.க.வுக்கு உழைத்த சகாக்களில் கட்சியை விட்டு நீங்கியவர்களில் யாருடைய பிரிவு உங்களை மிகவும் பாதித்தது?'' என்பதாகும்.

அதற்கு, ''யாருடைய பிரிவையும் நான் தாங்கிக் கொண்டதில்லை. எத்தனை இருந்தாலும் அவர்களுடன் பழகிய பொற்காலத்தை எண்ணி இப்போதும் வேதனைப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறேன். உங்களின் கேள்விக்கு மட்டும் பதில் சொல்ல வேண்டுமானால், அப்படி மிகவும் என் இதயத்தைப் பாதித்த பிரிவு **எம்.ஜி.ஆர்., நாவலர், வை.கோ.** ஆகியோரின் பிரிவு என்று எடுத்துக்கொள்ளலாம்'' என்று பதிலளித்தேன்.

வேறு சில கேள்விகளும், அதற்கு நான் அளித்த பதில்களும் வருமாறு:-

குமுதம்:- முதல்வர் பதவி என்பது சுமையா? சுகமா?

நான்:-முதல்வர் பதவி என்பது **''சூழ்நிலையின் கைதி''** என்று அண்ணா கூறியதைத்தான் அடிக்கடி நினைவு படுத்திக் கொள்கிறேன்.

குமுதம்:- எப்போதும் ஏன் ஆர்க்காட்டார் உங்களின் நிழல் போலவே இருக்கிறார்?

நான்:- நான் குள்ளமானவன். சூரியனுக்கு முன்னால் என் நிழல் உயரமாகத்தான் தெரியும்.

குமுதம்:- தாயிற் சிறந்தொரு கோயில் இல்லை என்ற வாக்குக்கு ஏற்ப நெறிமுறைகளை அமைத்துச் செயல்படும் உங்களை ஒரு ''ஆத்திகர்'' என்று சொல்ல முன்வந்தால் அதை ஏற்பீர்களா?

நான்:- ''கோயில் கூடாது என்பதல்ல என் கொள்கை-கோயில் கொடியவர்களின் கூடாரமாக இருக்கக் கூடாது என்பதே என் கொள்கை'' என்று சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே ''பராசக்தி'' படத்தில் வசனம் எழுதியவனாயிற்றே நான்! ஒரு மனிதன் மனிதனுக்குரிய இலக்கணங்களுடன் வாழ்க்கை நடத்துவானேயானால், அவனை ஆத்திகன் என்றழைத்தாலும், நாத்திகன் என்று அழைத்தாலும் இரண்டும் சரியே என்பது என் கருத்து. ஒருவன் தன்னை ஆத்திகன் என்று சொல்லிக்கொண்டு பக்தர்களையும்-

ஒருவன் தன்னை நாத்திகன் என்று சொல்லிக்கொண்டு பகுத்தறிவாளர்களையும்-ஏமாற்றுவதுதான் பெரும் குற்றம்.

குமுதம்:- திருக்குவளை பற்றி சில வரிகள் சொல்லுங்களேன்?

நான்:-காஞ்சிக்கும், ஈரோடுக்கும் பயணிக்குமளவுக்கு கருணாநிதிக்கு உயிரோட்டம் தந்த கருப்பை.

குமுதம்:- சமீபத்தில் ரசித்த கவிதை?

நான்:- ''உன் இலட்சிய வெறி

கிளப்பும் தீப்பொறி...
மூங்கில் காட்டில் விழாமல்
பார்த்துக் கொள்....
.....
முதுகுக்குப் பின்னால்
கண் வளர்த்து வை;
சூழ்ச்சிகள் அறி;
சகுனிகள் எத்தனை பேர்?
கணக்கெடு!''

இந்தக் கவிதையை மிகவும் ரசித்து அதில் ஒன்றிப் போனேன். இதை எழுதியவர் யார் தெரியுமா? பெயர் கபிலன்! கபிலன் யார் தெரியுமா? கவிஞர் வைரமுத்துவின் மகன்!

குமுதம்:- ஜெ.மீண்டும் நடித்தால் நீங்கள் வசனம் எழுதத் தயாரா?

நான்:- ''மீண்டும் நடித்தால்'' என்ற கேள்விக்கே இடமில்லை. இப்போதும் அரசியலில் அதைத்தானே செய்து கொண்டிருக்கிறார். கதை, வசனம், இசை, பாடல், இயக்கம், தயாரிப்பு, முக்கியமாக ''விநியோகம்'' எல்லாமே அவராக இருக்கும்போது என் போன்ற பழைய எழுத்தாளர்கள் எதற்காக?

குமுதம்:- இராவணனை எப்படி திராவிடர் என்கிறீர்கள்? அவன் நான்கு வேதங்களையும் கற்ற பிராமணன் என்று ஆன்மீக சொற்பொழிவாளர்கள் கூறுகிறார்களே?

நான்:- ''இராமாயணம் திராவிடர்க்கும், ஆரியர்க்கும் நடந்த போராட்டத்தை அடிப்படையாகக் கொண்டது'' என்று பண்டித நேரு அவர்கள் எழுதியிருக்கிறார். **பி.டி.சீனிவாச அய்யங்கார்** போன்ற வரலாற்று ஆசிரியர்கள் கூறியிருக்கிறார்கள். இப்போது உங்களின் கேள்விப்படி, அவர் திராவிடனா - அல்லவா என்ற ஆராய்ச்சி பிறகு இருக்கட்டும்- ''அவன் நான்கு வேதங்களையும் கற்று பிராமணன் என்று ஆன்மீகச் சொற்பொழிவாளர்கள் கூறுகிறார்கள்'' என்கிறீர்கள்- அப்படியானால் நான்கு வேதங்களையும் கற்ற பிராமணன், அசுரனாக-அரக்கனாக-வேதமோதும் வேள்விகளை அழித்தவனாகச் சித்தரிக்கப்படுவது எப்படி-என்ற கேள்விக்கு என்ன பதில் கூற முடியும்?

குமுதம்:- சமஸ்கிருத அர்ச்சனைக்கு எதிராக பக்தர்கள் யாருமே பிரச்சினை கிளப்பாத போது, அரசியல்வாதிகள்- அதுவும் பகுத்தறிவாளர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் இந்தப் பிரச்சினையை ஊதி விடுவது ஏன்? இதைவிட, இந்துக் கோயில்களுக்குச் சொந்தமான ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை அரசியல்வாதிகள் பல ஆண்டுகளாக ஆக்கிரமித்துக் கொண்டு, அறநிலையத் துறைக்கு வரவேண்டிய பெரிய வருமானத்தைத் தடுத்து வருவது பற்றி ஏன் யாரும் பேசவில்லை?

நான்:- தமிழில் அர்ச்சனை வேண்டுமெனத் தடந்தோள் தட்டிப் போர்க் குரல் எழுப்பி வருகிற தமிழறிஞர்களில் பெரும்பாலோர் பக்தர்கள்தான் என்பதை மறந்துவிடக் கூடாது. பகுத்தறிவாளர்கள் கோயிலுக்குச் சென்று அர்ச்சனை செய்யாதவர்களாக இருக்கலாம். அது அவர்கள் கடைப் பிடிக்கும் கொள்கை-ஆனால், தாய் மொழி தமிழுக்கு ஆலயங்களில் மதிப்பும், மரியாதையும் வேண்டும் என்பது உரிமைக்குரல்!

இரண்டுக்குமுள்ள வேறுபாட்டை புரிந்து கொள்ள வேண்டும். அர்ச்சனை விவகாரத்தை அரசியல்வாதிகள் கிளப்புவதாகக் கூறுகிறீர்கள். **திரு.மூப்பனார்** அவர்களும், **திரு.பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்களும் அரசியல்

வாதிகள் மட்டுமல்ல; ஆழ்ந்த பக்திமான்கள்-அவர்கள் தமிழ் அர்ச்சனைக்காகக் குரல் கொடுப்பதை மறந்து விட்டீர்களா? அற நிலையத்துறை அமைச்சராக அரும்பணியாற்றிய மறைந்த **கே.பி.கே.** அவர்களும் ஒரு ஆன்மீகவாதிதான். அவர் காலத்திலேயே தமிழ் அர்ச்சனைக்கான குரல் வலுவடைந்ததை அனைவரும் அறிவர்.

இந்து கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களைப் பலர் ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதைக் கழக அரசு கண்டுபிடித்து, இந்த இரண்டாண்டுகளில் மட்டும் **160** கோடி ரூபாய் மதிப்புள்ள சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கரை (மனை-கடை-நிலம் உட்பட) மீண்டும் ஆலயங்களுக்கு உரிமையாக்கியுள்ளது. மேலும்- இந்த மீட்புப் பணி தொடர்கிறது. உதாரணமாக, சென்னையில் ஒரு இடத்தில் மட்டும் ***313*** கிரவுண்டு-கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள ஆலய நிலம் மீட்கப்பட்டுள்ளது.

குமுதம்:- திராவிடர் கழகத் தலைவர் **கி.வீரமணி** அவர்களுக்கும், தங்களுக்கும் தந்தை பெரியாரின் கொள்கைகளைப் பரப்ப வேண்டும் என்ற நோக்கத்தில் கருத்து வேறுபாடு இருப்பதாகத் தெரியவில்லை. பெரியாரின் கொள்கைகளுக்கு சம்பந்தமில்லாமல், கி.வீரமணி, ஜெயலலிதா அணியிலே இருக்கிறார் என்று சிலரின் கருத்தை ஏற்கிறீர்களா? நீங்கள் இருவரும் இணைய வாய்ப்பே இல்லையா? தாங்கள் பெரியார் திடலுக்கு அஞ்சலி செலுத்தப் போனால், புதிய திருப்பம் ஏற்படலாம் அல்லவா?

நான்:- வீரமணி எங்கிருந்தாலும் பெரியார் கொள்கைகளை விட்டுக் கொடுக்கமாட்டார். பெரியார் திடலுக்கு நான் போகாவிட்டாலும், பெரியார் என் நெஞ்சத்தை விட்டுப் போகமாட்டார்.

★ ★ ★

பேரறிஞர் **அண்ணா** அவர்களின் பெயர்த்தியும்-தம்பி டாக்டர் **சி.என்.ஏ.பரிமளத்தின்** இளவல் **சி.என்.ஏ. கௌதமனின்** மகளுமான **சரிதா-எம்.சிவகுமார்**

ஆகியோரின் மணவிழாவினை **27.11.1998** அன்று நான் தலைமை தாங்கி நடத்தி வைத்தேன்.

அந்த மணவிழாவிலே பேசிய **கோவை செழியன்,** மணவிழா அழைப்பிதழில் தி.மு.கழகத்தின் உள்ள எல்லோருடைய பெயர்களும் போடப்பட்டுள்ளன. ஆனால் தங்களுடைய பெயர்களையும், **ஆர்.எம்.வீ.** போன்றவர்களின் பெயர்களையும் போடவில்லையே என்று தம்பி பரிமளத்தைப் பார்த்துக் கேட்டார்-குறைபட்டுக் கொண்டார். அவரைத் திருப்தி செய்கின்ற அளவிற்கு- ''பெயர் போட்டாலும் போடாவிட்டாலும், நீங்கள் வருவீர்கள் என்ற நம்பிக்கையுடன் தான் அழைப்பிதழில் பெயர் போடப்பட வில்லை'' என்று நான் சிரித்துக் கொண்டே சமாதானம் செய்தேன். இதனைக் கூறிய நான், ''இதிலும்கூட நாம் அண்ணா அவர்களைப் பின்பற்ற வேண்டும்'' என்று கூறினேன்.

எல்லோரும் கவனித்தபோது, தம்பி பரிமளத்திற்காக மயிலாடுதுறையில், சரோஜாவைப் பெண் பார்த்து நிச்சயதார்த்தம் நடைபெற்றது. அதற்கு அண்ணா அவர்களும் சென்றிருந்தார்கள். அதே நாளில்தான் திருவண்ணாமலைத் தொகுதி இடைத் தேர்தல். தி.மு.கழகத்தின் சார்பாக வேட்பாளராக நின்ற அருமை நண்பர் ப.உ.சண்முகம் வெற்றி பெற்ற செய்தி வந்து கொண்டிருந்தது. நான் சென்னையிலிருந்து மயிலாடுதுறைக்கு அதே நாளில் மூவலூர் மூதாட்டி ராமாமிர்தம் அம்மையார் மறைந்த முதலாண்டு நினைவாக-அவருடைய படத்திறப்பு நிகழ்ச்சிக்குச் சென்று கொண்டிருந்தேன். செல்லுகிற வழியிலேயே மயிலாடு துறையை நெருங்கிய நிலையிலே-ப.உ.சண்முகம் வெற்றி பெற்று விட்டார் என்ற செய்தி கிடைத்தது. அந்தச் செய்தி யோடு நான் மயிலாடுதுறைக்குள்ளே நுழைந்த நேரத்தில், ஐம்பது அல்லது அறுபது பேர் கையிலே தட்டுக்களை ஏந்திக்கொண்டு சரோஜா இல்லத்திற்கு அருகில் நின்று கொண்டிருந்தார்கள். என்னவென்று விசாரித்தேன்.

''பரிமளத்திற்காக நிச்சயதார்த்தம் நடைபெறுகிறது. அண்ணா அவர்கள் வந்திருக்கிறார்'' என்று சொன்னவுடன்,

நிச்சயதார்த்தத்திற்காக அழைப்பு வராவிட்டாலும்கூட, அண்ணா இல்லத்து நிச்சயதார்த்தம் என்ற காரணத்தால் நான் சரோஜா இல்லத்திற்குச் சென்றேன். அங்கே அண்ணா அவர்களைச் சந்தித்தேன்.

''நீ எப்போது வந்தாய்? இங்கு ஏன் வந்தாய்?'' என்று அண்ணா கேட்டார்.

''இன்றைக்கு மயிலாடுதுறையில் ராமாமிர்தம் அம்மையார் முதலாண்டு நினைவுநாள் படத்திறப்பு நிகழ்ச்சி-அதற்காக அழைத்தார்கள்-வந்திருக்கிறேன்'' என்று சொல்லிவிட்டு-திருவண்ணாமலையிலே தி.மு.க.வெற்றி பெற்ற செய்தியையும் சொன்னேன்.

பிறகு நிச்சயதார்த்தம் முடிந்து படத்திறப்பு நிகழ்ச்சிக்குப் புறப்பட்டேன். அண்ணா அவர்கள் ''நானும் வருகிறேன்'' என்றார்.

''என்ன அண்ணா, உங்கள் பெயர் போடவில்லையே-விழா ஏற்பாடு செய்தவர்களுக்கு இன்று நீங்கள் வருவது தெரியாத காரணத்தால், என்னுடைய பெயரை மாத்திரம் தான் போட்டிருக்கிறார்கள்'' என்று சொன்னேன்.

''பரவாயில்லை-நானும் வருகிறேன்'' என்று சொல்லி, அண்ணாவினுடைய பெயர் போடாத ஒரு நிகழ்ச்சிக்கு - என் பெயர் மாத்திரமே போடப்பட்ட அந்த நிகழ்ச்சிக்கு-அண்ணா அவர்களும் வந்து கலந்து கொண்டார்கள் என்றால், அவர்தான் அண்ணா என்று அந்த மணவிழாவிலே நான் எடுத்துக் கூறி, **கோவை செழியனை**யும் அந்த விழாவிற்கு வந்திருந்த ஹண்டே போன்றவர்களையும் சமாதானம் செய்தேன்.

27.11.1998 அன்று காலையில் மணவிழா நிகழ்ச்சியிலே கலந்து கொண்ட நான்-அதற்கடுத்த நாள், ***28.11.1998*** அன்று மாலையில், அப்போது போக்குவரத்துத் துறை அமைச்சராகவும், தற்போது உயர்கல்வித் துறை அமைச்சராகவும் உள்ள தம்பி டாக்டர் **க.பொன்முடி** எழுதிய **''திராவிடர் இயக்கமும், கறுப்பர் இயக்கமும்''** என்ற ஆங்கில நூலினை அப்போது கல்வி அமைச்சராக இருந்த

பேராசிரியர் முன்னிலையில் வெளியிட்டேன். நூலின் முதல் பிரதியை தம்பி **முரசொலி மாறன், எம்.பி.,** பெற்றுக் கொண்டார். அமைச்சர்கள் **ஆர்க்காடு வீராசாமி, துரைமுருகன், முனைவர் தமிழ்க் குடிமகன், சைதை கா.கிட்டு எம்.எல்.ஏ., தொழிலதிபர் எம்.ஏ.எம்.ராமசாமி** ஆகியோர் அந்த விழாவிலே கலந்து கொண்டனர்.

அந்த நூல் வெளியீட்டு விழாவிற்குக் கலைவாணர் அரங்கமே நிரம்பி வழிந்தது. அதைப்பற்றி நான் அந்த விழாவிலே பேசும் போதே குறிப்பிட்டேன். ''எந்தவொரு நூல் வெளியீட்டு விழாவிற்கும் இல்லாத அளவிற்கு அரங்கம் நிரம்பி வழிந்து கொண்டிருக்கின்றது-இதற்குக் காரணம், இந்த விழாவிலே நாங்கள் எல்லாம் கலந்து கொண்டிருக்கிறோம் என்பதற்காக அல்ல. இந்த அளவிற்கு மக்கள் திரண்டிருக்கக் காரணம்-இந்த நூலின் பெயரில் ''திராவிடர் இயக்கம்'' என்ற சொற்றொடர் இடம் பெற்றிருப்பதுதான்'' என்று கூறினேன்.

அந்த விழாவிலே பேசிய தம்பி **துரைமுருகன்**- ''தம்பிமார்கள் இத்தகைய முயற்சிகளிலே ஈடுபட்டு வெற்றி பெற்றால், தலைவர் மிகுந்த மகிழ்ச்சி அடைவார். நாங்கள் செய்யாத காரியத்தை பொன்முடி இன்றைக்குச் செய்திருக்கிறார்-இனி மேலாவது நாங்கள் செய்வோம்'' என்று குறிப்பிட்டார்.

அதுபற்றி நான் பேசும்போது- ''இன்று நேற்றல்ல, ஐந்தாறு ஆண்டு காலமாக துரைமுருகன் என்னிடம் ஒரு தொகுப்பு நூல் தயாரித்துக் கொண்டிருப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார். நான் 'எங்கே, இதுவரையில் எழுதியதைக் கொண்டு வா, பார்க்கலாம்'' என்று கேட்கவில்லை. கேட்டால் வருத்தப்படுவார் என்பதற்காக நான் கேட்கவில்லை. அவ்வளவு விடாமுயற்சி அவரிடத்திலே'' என்று கூறினேன்.

துரைமுருகனைப் பற்றி மட்டும் நான் அங்கே குறிப்பிடவில்லை. தம்பி **முரசொலி மாறனைப்** பற்றியும் குறிப்பிட்டு - ''தம்பி முரசொலி மாறன் **'ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்'** எழுதிய அந்தக் காலத்திலும் சரி-பிறகு

மாநில சுயாட்சி என்கிற ஒரு பெரிய புத்தகத்தை எழுதி வெளியிட்ட அந்த நேரத்திலும் சரி -திராவிட இயக்க வரலாறு என்ற புத்தகத்தின் முதல் பகுதியைத்தான் எழுதி முடித்திருக்கிறாய்-மற்ற பகுதிகளையும் எழுது-எழுதிய நூல்களையும் ஆங்கிலத்திலே மொழி பெயர்த்துக் கொடு-என்று நான் கேட்கும்போதெல்லாம், தன்னுடைய சோம்பேறித்தனத்தைத்தான் எனக்கு விடையாகத் தருகிறார்'' என்று பேசினேன்.

அந்த விழாவிலே நான் தொடர்ந்து பேசும்போது அண்ணா அவர்கள் பேச்சிலிருந்து பல குறிப்புகளை எடுத்துச் சொல்லி-திராவிட இயக்கத்தின் சரித்திரங்களையெல்லாம் எடுத்து விளக்கி-கறுப்பு இனத்தவர்களையும், திராவிடர் இயக்கத்தவர்களையும் ஒப்பிட்டுக் காட்டி-மற்றும் பிராமணர், பிராமணீயம், தமிழ் அர்ச்சனை போன்றவைகளைப் பற்றியெல்லாம் நீண்ட நேரம் உரையாற்றினேன்.

தம்பி பொன்முடியின் அந்த முயற்சி பற்றி நீண்ட நேரம் அந்த விழாவிலே பாராட்டினேன் என்ற போதிலும், அதிகமாகவும் பாராட்டிவிடக்கூடாது என்பதற்காக, என் பேச்சின் இறுதியில் அவருக்கு அப்போது நான் ஒரு குட்டு வைத்தேன். இதோ அது:-

''தம்பி பொன்முடி இந்த இயக்கத்திலே தன்னை ஒப்படைத்துக்கொண்டு-இளைஞர் அணியிலே பணியாற்றி-ஆசிரியராகப் பணியாற்றி-டாக்டர் பட்டம் பெற்று-உங்கள் எல்லோராலும் புகழப் படுகின்ற அளவிற்கு வளர்ந்திருக்கிறார் என்றால், அதற்காக நீங்கள் மகிழ்வதைப்போல ஆயிரம் மடங்கு அதிகமாக நான் மகிழ்ச்சி அடைகிறேன். என் தம்பிக்குக் கிடைக்கின்ற பாராட்டெல்லாம் எனக்குக் கிடைக்கின்ற பாராட்டாகவே எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன்.

''ஆனால் அழகான முகத்திற்குக் கூட ஒரு சிறிய கறுப்புப் பொட்டு வைக்கவேண்டும். திருஷ்டி பரிகாரம் என்பார்கள். அதையும் சொல்லி என் பேச்சை முடிக்க விரும்புகிறேன். பக்கம்

208 இல் பொன்முடி திராவிட இயக்கங்களின் பத்திரிகைகளைப் பற்றி எழுதுகிறார்-

"The circulation of kudi Arasu increased from 6000 in 1942 to 7000 in 1945. The circulation of Dravida Nadu published by Anna increased further more from 2000 in 1942 to 12000 in 1945. Apart from these News Papers, Several Weeklies like Dravida Nadu, Dravidan, Tamil ulagam, Manram, Puduvazhvu - Published by Anna, N.V.Natarajan, T.M.Parthasarathi, V.R.Nedunchezhian and Perasiriyar K.Anbazhagan respectively mobilised educated youths of the Non - Brahmin Community."

- என்று எழுதியிருக்கிறார். இதிலே "முரசொலி"யை மட்டும் காணோமே-ஏம்பா?"

இதே பாணியிலேதான் நான் இன்றைக்கும் என் தம்பிகள் நல்லவைகளைச் செய்யும்போது பாராட்டியும், தவறு செய்யும்போது அதனைக் கிண்டலாக எடுத்துக்காட்டியும் வருகின்றேன்.

42. சோனியா காந்தியின் அரசியல் பிரவேசம்

"ஈராக் மீது நடைபெற்ற தாக்குதல் மனிதாபிமானத்திற்கு எதிரானது - இதனால் ஒரு பெரும் நாகரிகமே அழியும்" என்றார் முரசொலி மாறன்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணியினரில் ஒருவரான **திருப்பூர் சுப்பராயன்** அவர்கள், ***23.11.1998*** அன்று தமிழகச் சட்டப்பேரவையில் ஒரு சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தார். காஞ்சிபுரத்தில் ***25.11.1998*** அன்று நடைபெறவிருந்த ஒரு ரயில்வே விழாவுக்கான அழைப்பிதழ், மதச்சார்புள்ள முறையிலே தயாரிக்கப்பட்டுள்ளது என்றும், அந்த அழைப்பிதழ் திருத்தப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். காரணம் அந்த அழைப்பிதழில் **சங்கராச்சாரியாரின்** பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. முதலமைச்சர் என்ற முறையில் அதற்கு நான் பதிலளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

சங்கராச்சாரியாரிடத்தில் நமக்கு எப்பகையும், வெறுப்பும் கிடையாது. எல்லா மதக் குருமார்களிடத்திலும் என்ன மதிப்பு வைத்திருக்கிறோமோ, அதே மதிப்பு சங்கராச்சாரியாரிடத்திலும், அவருக்கு அடுத்த நிலையிலே உள்ளவர்களிடத்திலும் நமக்கு உண்டு. அப்படி மதிப்பு என்பது வேறு-அதே நேரத்தில் அரசு நிகழ்ச்சியில் மதத்தைப் புகுத்துவதை ஏற்பதா, இல்லையா என்பது வேறு-எனவே நான் அவையிலே பதில் கூறும்போது, "தி.மு.க.வும், தி.மு.க.அரசும் ஒருக்காலும் மதச்சார்பற்ற நிலைக்கு மாறான எந்த

நடவடிக்கையையும் ஏற்றுக் கொள்ளாது'' என்று குறிப்பிட்டேன்.

மதச் சார்புடையவர்கள் கலந்து கொள்ள வேண்டுமென்று ரயில்வேயும், டெல்லியிலே உள்ள அமைச்சர்களும்- இங்கேயுள்ள ரயில்வே அதிகாரிகளும் விரும்பியிருந்தால், அதில் இஸ்லாமிய, கிறித்துவப் பெரியவர்களையும் கலந்து கொள்ளச் செய்திருக்க வேண்டும். அப்போது எல்லா மதத்தினரும் கலந்து கொண்டார்கள் என்ற நிலை ஏற்பட்டிருக்கும்.

அப்படிச் செய்யாமல், சங்கராச்சாரியாரை மட்டும் அழைப்பது என்பது, இன்றைக்கு பா.ஜ.க.வின் மீது தெரிவிக்கப்படுகிற குற்றச்சாட்டுக்கு அவர்களை இலக்கு ஆக்குவதாகும். இதற்காக அவையில் கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்றனர்.

''தீர்மானம் தேவையில்லை. நாளைக்குள் அழைப்பிதழில் உரிய திருத்தம் செய்யாவிட்டால், அழைப்பிதழில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழகப் போக்குவரத்துத்துறை அமைச்சர்



1998ஆம் ஆண்டு தமிழக அரசின் பாரதியார் விருதுக்குத் தேர்வு செய்யப்பட்ட குமரி அனந்தன், என்னைச் சந்தித்து நன்றி தெரிவித்தார்.


டிச.11- பொது வேலை நிறுத்தத்துக்கு
தமிழக மக்களே முழு ஆதரவு தாரீர்
முதல்வர் கலைஞர்- ஜி.கே.மூப்பனார்
அனைத்துக் கட்சித் தலைவர்கள் வேண்டுகோள்

பா.ஜ.க. அரசின் செயல்பாடுகளைக் கண்டித்து, 1998இல் அறிவிக்கப்பட்ட அகில இந்தியப் பொது வேலை நிறுத்தத்திற்கு, மூப்பனார் உள்ளிட்ட தலைவர்கள் அழைப்பு விடுத்தோம்.

க.பொன்முடி அந்த விழாவில் கலந்து கொள்ளமாட்டார்'' என்று அவையிலே அறிவித்தேன்.

எனது இந்த அறிவிப்புக்குப் பிறகு, ரயில்வே விழாவிற்கான அழைப்பிதழில் மாற்றம் செய்யப்பட்டது. ரயில்வே துறை சார்பில் அதிகாரி ஒருவர், ''தமிழக அரசின் கருத்துக்கு மதிப்பளித்து, காஞ்சிபுரத்தில் நடைபெறுகின்ற அகல ரயில் பாதைத் திட்டத் துவக்க விழாவில், காஞ்சிபுரத்தைச் சேர்ந்த தென்னிந்திய திருச்சபை ஆலயப் போதகர் மார்ட்டின் ஜே.பிலிப் அவர்களும், ஜும்மா மசூதித்தலைவர் ஜனாப் அஸ்லாம் பாஷா அவர்களும் கலந்துகொள்வார்கள்- அவர்களுடைய பெயர்களும் அழைப்பிதழில் சேர்த்து புதிதாக அழைப்பிதழ் அச்சடிக்கப்படும்'' என்றும் அறிவித்து, அவ்வாறே செய்தார்.

அதன் பின்னர் அந்த விழாவில் அமைச்சர் பொன்முடி அவர்களும், மத்திய ரயில்வே அமைச்சராக இருந்த நிதீஷ்குமார் அவர்களும், அழைப்பிதழில் புதிதாகச் சேர்க்கப்பட்ட மதத் தலைவர்களும் கலந்து கொண்டார்கள். ஆனால் விழா தொடங்கும்வரை சங்கராச்சாரியாரின் வருகை எதிர்ப்பார்க்கப்பட்ட போதிலும், அவருக்காக தனி இருக்கை போடப்பட்டிருந்தும் அவர் விழாவிற்கு வரவில்லை.

ஆனால் விழா முடிந்ததும், மத்திய அமைச்சர் நிதீஷ்குமார் அவர்கள் காமாட்சி அம்மன் கோயிலுக்குச் சென்றபோது,

அங்கே விஜயேந்திர சரஸ்வதி சுவாமி அவர்கள் அமைச்சரை வரவேற்று கோயிலைச் சுற்றிக் காட்டினார். அதன்பின் அமைச்சர் சங்கரமடம் சென்று சங்கராச்சாரியாரைச் சந்தித்து விட்டுச் சென்றார். அதன் பின்னர் சங்கராச்சாரியார் விழா நடைபெற்ற மேடைக்கு வந்து அடிக்கல் நாட்டு விழா கல்வெட்டுக்கு குங்குமப் பொட்டு வைத்தார் என்று செய்தி வெளிவந்தது.

★ ★ ★

மத்தியில் பா.ஜ.க ஆட்சியின் கொள்கைகளையும், மற்றும் செயல்பாடுகளையும் கண்டித்து அகில இந்திய அளவில் அறிவிக்கப்பட்ட பொது வேலை நிறுத்தத்தையொட்டி, தமிழ்நாட்டிலும் தொழிற்சங்கங்களும், விவசாயச் சங்கங்களும், மாணவர், இளைஞர் மற்றும் மகளிர் அமைப்புகளும் இணைந்து உருவாக்கிய தேசிய மேடையின் சார்பில், விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்திடவும்-இந்தியப் பொருளாதாரச் சுயச்சார்புச் தன்மையைக் காத்திடவும்-பொதுத் துறைகளைக் காப்பாற்றிடவும் - ஆலை மூடல், ஆட்குறைப்பைத் தடுத்திடவும்-விவசாயத் தொழிலாளர் நலன் காக்கச் சட்டங்கள் இயற்றிடவும்-வேலையின்மையைப் போக்கி, வேலை வாய்ப்புகளை உருவாக்கிடவும்-அனைவருக்கும் தொடக்கக் கல்வி, அடிப்படை சுகாதார வசதிகள் கிடைத்திடவும்-**பெண்களுக்கு *33*** சதவிகித இட ஒதுக்கீட்டுக் கான சட்டம் நிறைவேற்றிடவும்-ஆதிதிராவிடர், பழங்குடியினர் உரிமைகளைப் பாதுகாத்திடவும்-வகுப்புவாத சக்திகளின் சீர்குலைவு முயற்சிகளைத் தடுத்து நிறுத்திடவும்-மத்திய பா.ஜ.க. அரசின் கொள்கைகளை எதிர்த்தும் ***98*ஆம்** ஆண்டு டிசம்பர் ***11***ஆம் தேதி பொது வேலைநிறுத்தம் செய்திட முடிவு செய்யப்பட்டது.

இதனை ஆதரித்து நானும், த.மா.கா. தலைவர் அருமை நண்பர் **மூப்பனார்,** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் **ஆர்.நல்லகண்ணு,** மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் **என்.சங்கரய்யா,** தமிழக ஜனதாதளத் தலைவர்

ஜி.ஏ.வடிவேலு ஆகியோர் **4.12.1998** அன்று பொது வேலை நிறுத்தத்திற்கு தமிழக மக்கள் முழு ஆதரவு தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டோம்.

பொது வேலை நிறுத்தம் குறித்து **7.12.1998** அன்று அண்ணா அறிவாலயத்தில் ஆலோசனைக் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தினில், **பொதுச் செயலாளர் பேராசிரியர், பொருளாளர் ஆர்க்காடுவீராசாமி, மூப்பனார், என்.சங்கரய்யா, ஆர்.நல்லகண்ணு, எம்.சி.டேவிட், மற்றும் எஸ்.எஸ்.தியாகராசன், ஏ.எம்.கோபு, என்.வரதராஜன், டி.கே.ரங்கராசன், கி.வரதராசன், ஜி.கே.தாஸ்** ஆகியோர் கலந்து கொண்டனர்.

பொது வேலை நிறுத்தத்தை அமைதியாக நடத்த வேண்டுமென்று அனைவரின் சார்பிலும் வேண்டுகோள் அறிக்கை விடப்பட்டது.

அவ்வாறே தமிழகம் முழுவதும் பொது வேலை நிறுத்தம் வெற்றிகரமாக நிறைவேறியது. மாநிலம் முழுவதும் அசம்பாவிதச் சம்பவம் எதுவுமின்றி பொது வேலை நிறுத்தம் தமிழகத்தில் முழு அமைதியுடன் நடைபெற்றது.

★ ★ ★

தமிழக அரசின் சார்பில் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்ற பெரியார் விருது, அம்பேத்கர் விருது, திரு.வி.க.விருது, பாரதியார் விருது, பாரதிதாசன் விருது ஆகிய ஐந்து விருதுகளை - முறையே **திரு.நாத்திகம் ராமசாமி, திரு.எல்.இளையபெருமாள், புலவர் திரு.மருதவாணன், திரு.குமரி அனந்தன், மலேசியக் கவிஞர் திரு.முரசு.நெடுமாறன்** ஆகியோருக்கு வழங்கப்படும் என்று அறிவித்தேன்.

அதற்கான விழா **24.12.1998** அன்று கலைவாணர் அரங்கத்தில், பேராசிரியர் தலைமையில் நடைபெற்றது. அமைச்சர்கள் முனைவர் **மு.தமிழ்க்குடிமகன், எம்.ஆர்.கே.பன்னீர்ச்செல்வம், சமயநல்லூர் செல்வராஜ், வ.முல்லை வேந்தன்** ஆகியோர் விழாவிலே கலந்து கொண்டு

உரையாற்றினார். அந்தத் துறையின் செயலாளராக இருந்த **ராஜரெத்தினம் ஐ.ஏ.எஸ்.**நன்றி கூறினார்.

விழாவிலே கலந்து கொள்வதற்கு முன்பு, அன்றைய தினம் காலையில் எனக்குக் கடுமையாக உடல் நலம் சரியில்லை. அந்த விழாவிற்குச் செல்ல முடியுமா என்பதே கேள்விக் குறியாக இருந்தது. மருத்துவர்கள் எல்லாம் ஒரு நாள் ஓய்வெடுத்துக் கொள்ளும்படிக் கூறியபோதிலும் கேட்காமல் விழாவிலே கலந்து கொண்டேன்.

★ ★ ★

ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், டெல்லி, மிஜோரம் ஆகிய நான்கு மாநிலங்களில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க. தோற்று, காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றவுடன், மத்தியிலே உள்ள பா.ஜ.க. அரசைப் பதவி விலகக் கோரி மக்களவையில் சமாஜ்வாடி, ஆர்.ஜே.டி. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் ரகளையில் ஈடுபட்டதால், ***30.11.1998*** அன்று மக்களவை செயலிழந்தது. பிரதமரைப் பதவி விலகக் கோரி எதிர்க் கட்சியினர் கோஷமிட்டனர்.

இந்தத் தேர்தல் முடிவுகளை வைத்து பா.ஜ.க. அரசைப் பதவி விலக வேண்டும் என்று கோருவதைப் பற்றி செய்தியாளர்கள் தலைமைச் செயலகத்தில் என்னைச் சந்தித்துக் கேட்டபோது, "எப்போதுமே வாக்காளப் பெருமக்கள் நாடாளுமன்ற இடைத்தேர்தலுக்கும் - சட்டப் பேரவை இடைத் தேர்தலுக்கும் ஒரே விதமான கருத்தோட்டத்துடன் வாக்களிப்பதில்லை. ***1998***ஆம் ஆண்டு பிப்ரவரி,



பொது வேலைநிறுத்தம் பற்றி ஆலோசிக்க, அறிவாலயத்தில் நான் கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டம்

மார்ச்சில் நடைபெற்ற நாடாளுமன்ற இடைத் தேர்தலில், தி.மு.க.கூட்டணி பத்து இடங்களை மட்டுமே பெற்றபோது-தி.மு.க.அரசு பதவி விலக வேண்டு மென்று சிலர் குரல் எழுப்பியபோது நான் அளித்த பதிலை மறந்து விடவில்லை. நாடாளுமன்ற இடைத்தேர்தலில் தோல்வி அடைந்தால் சட்டப்பேரவையைக் கலைக்க வேண்டு மென்பதும்-சட்டப்பேரவை இடைத்தேர்தலில் தோல்வி அடைந்தால் நாடாளுமன்றத்தைக் கலைக்க வேண்டு மென்பதும் சரியல்ல என்றும் நான் கூறியிருக்கிறேன். அது இப்போதும் பொருந்தும். எப்போதும் பொருந்தும். மத்தியில் நிலையான ஆட்சி என்ற பா.ஜ.க.வின் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்ற முடியாமல், கூட்டணிக் கட்சிகள் நித்ய கண்ட ஆட்சி என்ற நிலையை ஏற்படுத்திவிட்டன. சோனியா காந்தியின் அரசியல் பிரவேசம் காங்கிரஸ் கட்சித் தொண்டர்கள் இடையே ஒரு புதிய உற்சாகத்தையும், ஊக்கத்தையும் உருவாக்கியுள்ளது'' என்று கூறினேன்.

இதைப்பற்றி கருத்து தெரிவித்த பிரதமர் வாஜ்பாய் அவர்கள், ''நான்கு மாநிலப் பேரவைத் தேர்தல்களில் பா.ஜ.க. தோல்வி அடைந்ததால், மத்தியிலே உள்ள பா.ஜ.க. அரசு விலக வேண்டிய அவசியம் இல்லை-சட்டப் பேரவைத் தேர்தலில் கட்சி தோல்வி அடைந்ததற்காக மத்தியில் உள்ள அரசு பதவி விலகியதாக வரலாறே கிடையாது'' என்று கூறினார்.

★ ★ ★


ஐதராபாத் ஓய்வுக்குச் சென்று விட்டு, சென்னை திரும்பிய ஜெயலலிதா விமான நிலையத்தில் **7.12.1998** அன்றிரவு செய்தியாளர்களிடம், ''அ.தி.மு.க. யாருடனும் கூட்டணி பற்றிப் பேசவில்லை-மற்றவர்கள் பேசியுள்ளனர்-அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைக்கத் தேடி வருகின்றனர்-கூட்டணி பற்றி சோனியா காந்தியுடன் பேசவில்லை-எங்களுடன் கூட்டணி பற்றி அவர்கள் பேசினர்-காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி வருமா என்ற கேள்வி இப்போது எழவில்லை-தற்போது பா.ஜ.க. கூட்டணியில் இருக்கிறோம்-கூட்டணி பற்றி த.மா.காவுடன் பேச நான் யாரையும்

அனுப்பவில்லை-அவர்கள் பேசவந்தால் பரிசீலிப்போம்-அ.தி.மு.க. கூட்டணியில் இன்னமும் இருப்பதாக பா.ம.க., ம.தி.மு.க., கூறுவது பற்றி எனக்குப் புரியவில்லை. ஜனதாகட்சி அ.தி.மு.க. கூட்டணியில் உள்ளது. பா.ஜ.க. அரசு செயல்பாடு பற்றி திருப்தி இல்லை. பலமுறை இதுபற்றி தெரிவித்துள்ளேன். மத்திய அமைச்சரவை விரிவாக்கம் பற்றி அ.தி.மு.க. அதிருப்தி கொண்டுள்ளது. இதனால் மத்திய அமைச்சரவையிலிருந்து அ.தி.மு.க.விலகாது. மக்களவைக்கு இடைத் தேர்தல் வந்தால் அதற்கு அ.தி.மு.க பொறுப்பாகாது'' என்றெல்லாம் கூறினார்.

மக்களவையின் துணைத்தலைவராக யாரைத் தேர்ந்தெடுப்பது என்று ஒரு பிரச்சினை அப்போது எழுந்தது. பா.ஜ.க.வின் தோழமைக் கட்சியாக இருந்த ஜெயலலிதா, ''மக்களவைத் துணைத் தலைவராக எதிர்க்கட்சிகளே தேர்ந்தெடுக்க வேண்டும்-பா.ஜ.க. யாரையும் நியமிக்கக் கூடாது'' என்றார்.

அதே கால கட்டத்தில் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவரான திருமதி **சோனியா காந்தி,** ''மத்தியில் உள்ள பா.ஜ.க. கூட்டணி அரசைக் கவிழ்த்துவிட்டு, மாற்று அரசை அமைப்பதற்கு காங்கிரஸ் முன்னுரிமை அளிக்கவில்லை. பல மாநிலங்களில் நடைபெறவுள்ள பேரவைத் தேர்தல்களில் வெற்றி பெறுவதே கட்சியின் முன்னுரிமை'' என்று கூறினார்.

★ ★ ★



பொது வேலை நிறுத்தத்தின் போது சென்னை நகரம்
வெறிச்சோடிக் கிடந்தது



சோனியா காந்தியின் அரசியல் பிரவேசம், காங்கிரசாரிடையே புதிய உற்சாகத்தையும், ஊக்கத்தையும் உருவாக்கி இருக்கிறது.

மத்திய ஆளுங்கட்சியோடு தோழமை கொண்டு, மத்திய அமைச்சர்களாகவும் பொறுப்பேற்றிருந்த நிலையில், அ.தி.மு.க. மத்திய அரசுக்கு எதிராக அகில இந்திய அளவில் ***11.12.1998*** அன்று நடத்தப்பட்ட பொது வேலை நிறுத்தத்தில், அ.தி.மு.க.வும் பங்கேற்கு மென்றும் ஜெயலலிதா அறிவித்தார். அதைப் பற்றி செய்தியாளர் கேட்டதற்கு, ''இது மத்திய அரசுக்கு எதிரான நடவடிக்கை அல்ல-தொழிற் சங்கங்களுக்கு ஆதரவான நடவடிக்கை'' என்றார்.

இது பற்றி ***11.12.1998*** தேதிய ***''தினமணி''*** நாளிதழ் எழுதிய தலையங்கத்தில்-

''காங்கிரசல்லாத எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து பொது வேலை நிறுத்தத்துக்கு ஆதரவு தெரிவித்த ஜெயலலிதா, இப்போது மக்களவைத் துணைத்தலைவர் தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளரை ஆதரிக்க முடிவெடுத்து விட்டார். அமைச்சரவையில் பங்கேற்றாலும்கூட வாஜ்பாய் அரசு நெடுநாள் நீடிக்காது என்ற தோற்றத்தை ஏற்படுத்த அவர் முனைந்திருக்கிறார். தயக்கத்துடன் இருக்கும் காங்கிரசை எப்படியாவது மாற்று அரசை அமைக்க ஆயத்தமாக்கிவிட வேண்டும் என்ற அவசர உணர்வு அவருக்கு ஏற்பட்டிருப் பதாகத் தோன்றுகிறது. பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்ததில், மத்தியில் பெயருக்கு இரு அமைச்சர்கள் இருக்கிறார்கள் என்பதைத் தவிர அ.தி.மு.க.வுக்கு எவ்வித லாபமும் இல்லை என ஜெயலலிதா நினைத்திருக்கலாம்.''

''மத்தியில் வழக்கமான தோழமைக் கட்சியான காங்கிரசை விடுத்து பா.ஜ.க.வுடன் ஜெயலலிதா கூட்டணி அமைத்ததற்குக் காரணம் உண்டு. சரியான தலைமை இல்லாமல் பலவீனமாக நிலையில் அப்போது காங்கிரஸ் கட்சி இருந்தது. ஏற்கனவே சில

வட மாநிலங்களில் ஆளுங்கட்சியாக இருந்த பா.ஜ.க.மத்தியில் ஆட்சி அமைக்க வாய்ப்பு இருந்ததால், அதைத் தனக்குச் சாதகமாகப் பயன் படுத்திக் கொண்டார் ஜெயலலிதா.''

''கூட்டணி ஆட்சி ஏற்பட்டவுடன் தன் மீதும் தனக்கு நெருக்க மானவர்கள் மீதும் உள்ள ஊழல் வழக்குகளைக் கைவிடச் செய்யலாம் - அதற்கு முன் **356**ஆவது பிரிவைப் பயன்படுத்தி தி.மு.க. ஆட்சியைக் கலைத்து விடலாம் என அவர் நினைத்திருக்கலாம். கோவைக்குண்டு வெடிப்புச் சம்பவங்கள், ஜெயின் கமிஷன் இறுதி அறிக்கை மீதான அரசின் நடவடிக்கை அறிக்கை ஆகிய இரு வாய்ப்புகளையும் வாஜ்பாய் அரசு நழுவ விட்டதாக நினைத்து ஜெயலலிதா கோபமடைந்தார்.''



''கூட்டணிக் கட்சிகளுடனுள்ள உறவை, விருப்பப்படி முறிப்பது ஜெயலலிதாவின் தொடர் வியாதி'' என்றார், வாழப்பாடி ராமமூர்த்தி

''மேலும் ஜெயின் அறிக்கை மீதான நடவடிக்கை அறிக்கையில் சந்தேகத்துக்குரியவர்களின் பங்கு என்ற தலைப்பில் **கருணாநிதியின்** பெயர் தவறுதலாகச் சேர்க்கப்பட்டு விட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் **முரசொலி மாறனுக்கு** உள்துறை அமைச்சர் அத்வானி கடிதம் எழுதியதும் அவருக்கு எரிச்சலை ஏற்படுத்தியிருக்கலாம். **சேடப்பட்டி முத்தையாவை** மத்திய அமைச்சரவையிலிருந்து விலக்கிக் கொள்ள பிரதமர் வாஜ்பாய் முடிவெடுத்த போதே ஊழல் வழக்குகளிலிருந்து தப்பிக்க இயலாது என்பது ஜெயலலிதாவுக்குத் தெரிந்துவிட்டது. அதனால்தான் அப்பிரச்சினை அப்போது பூதாகாரமாக உருவெடுத்தது. வழக்கு விசாரணை துரிதப்பட்டிருப்பதால், ஒரு வழக்கில் தண்டனை கிடைத்தாலும் மீண்டும் ஆட்சிக்கு வர முடியாத நிலை ஏற்படலாம். இதை எப்படியாவது தவிர்க்கவே

காங்கிரசுடனான பழைய உறவைப் புதுப்பிக்க நினைக்கிறார் ஜெயலலிதா'' என்று எழுதியது.

ஆனால் ஜெயலலிதாவோடு அதுவரை கூட்டணி அமைத்து வெற்றி பெற்று, மத்தியிலும் பெட்ரோலியத்துறை அமைச்சராக இருந்த **வாழப்பாடி ராமமூர்த்தி 98 ஆம் ஆண்டு, டிசம்பர் 12**ஆம் தேதியன்று அளித்த பேட்டியில், ''பொது வேலை நிறுத்தத்தை ஆதரித்துள்ள ஜெயலலிதா, வாஜ்பாய் அரசாங்கத்தில் பங்கேற்பது முறையல்ல. மனைவி பிடிக்கவில்லை என்றால் விலகி விடுதல் அல்லது விவாகரத்துப் பெறுதலே சரியான அணுகுமுறையாக இருக்கும்'' என்றார்.

மேலும் அவர், ''நாளை வருகிற பலாப்பழத்தை எண்ணிக் கொண்டு இன்று இருக்கிற கிலாப் பழத்தை வாரிக் கொட்டிக் கொண்டிருக்கிறார். இதற்கு முன்பும் கூட்டணிக் கட்சிகளுடன் உள்ள உறவை இஷ்டப்படி முறித்து வந்தார். அவருக்குள்ள தொடர் வியாதி இது'' என்றும் கூறினார்.

★ ★ ★

இந்திய அரசியல் இவ்வாறு இக்கட்டான சூழ்நிலையில் இருந்த நேரத்தில், ***16.12.1998*** அன்று **அமெரிக்க, பிரிட்டன்** போர் விமானங்கள் **இராக்** மீது சரமாரியாக ஏவுகணைத் தாக்குதலை நடத்தின. அதில் **5** பேர் கொல்லப்பட்டனர். ***30*** **பேர்** காயமடைந்தனர். இராக் நாட்டின் தலைநகரான **பாக்தாத்** மீது நூற்றுக்கும் அதிகமான ஏவுகணைகளைப் போர் விமானங்கள் வீசித் தாக்குதல் நடத்தின. அணு ஆயுதச் சோதனை தொடர்பாக, ஐக்கிய நாடுகள் சபை ஆய்வாளர்களுடன் ஒத்துழைக்க இராக் தவறியதை அடுத்து,



ஜெயலலிதா காங்கிரசுடன் கூட்டணி பேரம் நடத்தியதுபற்றி ''தினமணி'' வெளியிட்ட கார்ட்டூன்



அந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக அமெரிக்கா அப்போது கூறியது. அமெரிக்க அதிபர் பில்கிளிண்டன் பலமாகத் தாக்குதல் நடத்தும்படி உத்தரவிட்டதைத் தொடர்ந்து தாக்குதல் தொடங்கியது. அமெரிக்காவின் **''ஆபரேஷன் டெஸர்ட் ஃபாக்ஸ்'' - ''பாலைவன நரியை அழித்தல்''** நடவடிக்கையில் **பிரிட்டனும்** இணைந்து கொண்டதாக லண்டனிலிருந்து வெளியான செய்தி தெரிவித்தது.

பாக்தாத் மீது டொமஹாக் ரக ஏவுகணைகளை அமெரிக்க, பிரிட்டன் விமானங்கள் அதிகாலை **3.20** மணிக்கு வீசித் தாக்குதலைத் தொடங்கின. ஏவுகணைகளில் ஒன்று அதிபர் **சதாம் ஹுசேன்** மாளிகை அருகில் விழுந்தது. அதிபர் மாளிகை அருகே அரசு அலுவலகம் இயங்கும் கட்டிடம் புகை மண்டல மாகக் காட்சி அளித்ததாகப் பொதுமக்கள் கூறினர்.

சர்வதேச ஆயுதச் சோதனைக் குழுவுடன் ஒத்துழைக்க வில்லை என்று காரணம் காட்டி, இராக்மீது தாக்குதல் நடத்தியிருப் பதற்கு இந்திய நாடாளுமன்றத்தில் இரு அவைகளும் கடும் கண்டனத்தைத் தெரிவித்தன. இந்தப் பிரச்சினை குறித்து கழகத்தின் சார்பில் மக்களவையில் உரையாற்றிய தம்பி **முரசொலி மாறன்-**


''ஈராக்கில் நடந்து வரும் கொடூரத் தாக்குதல் நாகரிக உலகின் மனசாட்சியை அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளது. ஈராக்கைத் தண்டிக்கப் போவதாக அமெரிக்க அரசின் அதிகாரி ஒருவர் கூறியிருப்பதை நான் பார்த்தேன். குறிப்பிட்ட ராணுவ இலக்கை நோக்கி நடத்தப்படும் தாக்குதல் என்று இதைக்

கூறிவிட முடியாது. மாறாக மனிதாபிமான இலக்கிற்கு எதிரான தாக்குதல் என்றுதான் இதைக் கூற வேண்டும். இது ஒரு கண்டிக்கத் தக்க குண்டு வீச்சுத் தாக்குதலாகும். அதிகார வெறி கொண்டவர்களின் தாக்குதல் இது. அமெரிக்கா ஒன்றும் உலகைக் காவல் காக்கும் போலீஸ்காரர் அல்ல. மனிதாபிமானத்தை எதிர்த்துத் தாக்குதல் நடத்த அமெரிக்காவிற்கு யாரும் உரிமம் வழங்கவில்லை. இதனால் ஒரு பெரும் நாகரிகம் அழியப் போகிறது'' என்று கூறினார்.


''ஐ.நா.வின் எண்ணங்களுக்கு எதிரான நடவடிக்கை இது'' என்று ரஷ்யாவும், சீனாவும் கூறியதோடு, தாக்குதலை உடனடியாக நிறுத்த வேண்டுமென்றும் கூறின.

இராக் அதிபர் **சதாம் ஹுசேன்** கடவுளின் எதிரிகளை எதிர்த்துப் போராடும்படி மக்களைக் கேட்டுக் கொண்டார். ''அமெரிக்கா, பிரிட்டன் தாக்குதல் எதிர்பார்த்ததுதான்- **8** ஆண்டுகளுக்குப் பின் இராக் மண்ணைக் கோழைகள் மீண்டும் தாக்கியுள்ளனர்-அவர்களை எதிர்ப்பதுடன், கடவுள் மற்றும் நாட்டின் எதிரிகளை எப்போதும் போல் எதிர்த்துப் போராட வேண்டும்'' என்றும் கூறினார்.

தொடர்ந்து **17.12.1998** அன்றும், இரண்டாவது நாளாக அமெரிக்க, பிரிட்டிஷ் படைகள் இராக்மீது தாக்குதலை நடத்தின. முதல்நாள் தாக்குதலை விட மறுநாள் தாக்குதல் கடுமையாக இருந்தது. மருத்துவமனைகள், கல்லூரிகள் மீதும் முக்கிய துறைமுகமான **உம்கசார்** மீதும் தாக்குதல் நடைபெற்றது. அந்தத் தாக்குதலில் **25** பேர் கொல்லப்பட்டதாகவும், **75** பேர் காயமடைந்ததாகவும்



அண்ணா அறிவாலயத்தில் கலைஞர் அரங்கம் எழுப்புவதற்காக வேலூர் மாவட்டத்தின் சார்பில் ரூ.40 இலட்சம் வழங்கப்பட்டது



வேலூர் சிப்பாய்க் கலகத்தில் உயிர் நீத்த தமிழக வீரர்கள் நினைவாக நினைவுத் தூணைத் திறந்து வைத்தேன்.

செய்திகள் வந்தன. டீகோ கார்ஸியா தளத்திலிருந்து அமெரிக்க குண்டு வீசும் விமானங்களும், யு.எஸ். எண்டர்பிரைசஸ் கடற்படை கப்பல் தளத்திலிருந்து ஜெட் போர் விமானங்களும் தாக்குதலில் ஈடுபட்டன: குவைத் தளத்திலிருந்து பிரிட்டிஷ் டொரண்டோ ஜெட் விமானங்கள் இரண்டாம் நாள் தாக்குதலில் ஈடுபட்டன.

★ ★ ★

இந்திய அரசின் நீதித் துறையில், 98ஆம் ஆண்டு இறுதியில் நடைபெற்ற சில சம்பவங்கள் முக்கியமானவை யாகும். நீதித்துறை வட்டாரங் களில் மிக முக்கியத்துவம் வாய்ந்தவர்களாகப் பேசப்பட்ட இருவர் மாறுதலுக்கு ஆளா னார்கள். ஒருவர் சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி மன்மோகன்சிங் லிபரான். மற்றொருவர் நீதிபதி டி.ராஜு இவர்களின் பெயர் திடீரென்று அனைத்து ஏடுகளிலும் இடம் பெறுவதற்கு மூன்று சம்பவங்கள் தொடர் புடையதாக அமைந்தன.

முதல் சம்பவம், முன்னாள் முதல் அமைச்சர் ஜெயலலிதாவுக்கு எதிரான லஞ்ச ஊழல் வழக்குகளை விசாரிக்க தனி நீதிமன்றம் அமைத்ததை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட மனுவை இவர்கள் விசாரித்த தாகும். இரண்டாவது சம்பவம், பா.ஜ.க. ஆட்சியில் அமர்ந்ததும்,

சட்ட அமைச்சகம் தனக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி அதனை அ.தி.மு.க. பெற்றது - சட்டத் துறையில் மிகவும் நிபுணர் என்ற பெருமைப்படும் அளவுக்கு அ.தி.மு.க. வில் யாரும் எம்.பி.யாக இல்லாத நிலையில் கூட அந்தப் பதவி அந்தக் கட்சிக்குக் கிடைத்தது- அதன் காரணமாக மிகத் திறமையான வழக்கறிஞரான **ராம் ஜெத்மலானி** வீட்டு வசதித் துறைக்கு அமைச்சராக நேர்ந்தது. மூன்றாவது சம்பவம், இந்த நீதிபதிகள் இருவருமே வேறு உயர்நீதி மன்றத்துக்கு மாற்றப்பட்ட சம்பவம். சிறப்பு நீதிமன்றத்தை எதிர்த்து ஜெயலலிதா தாக்கல் செய்த மனுவைப் பாதி விசாரித்து முடித்த நிலையில், மாற்றலுக்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.

அவர்கள் இருவரின் மாற்றலுக்கான உத்தரவைப் பிறப்பித்தவர் உச்சநீதிமன்றத்தின் அப்போதைய தலைமை நீதிபதி **எம்.எம்.பூஞ்சி**. தனக்கு அளிக்கப்பட்ட மாற்றல் உத்தரவை நீதிபதி **ராஜு** ஏற்றுக் கொண்டதால் அதிலே பிரச்சினை உருவாகவில்லை. ஆனால் **லிபரான்** விஷயத்தில் பிரச்சினை உருவெடுத்தது.

சக நீதிபதிகளைக் கலந்தாலோசிக்காமல் நீதிபதி பூஞ்சி இந்த உத்தரவைப் பிறப்பித்தார் என்று கருதப்பட்டதே அதற்குக் காரணம். அதே காரணத்தைக் காட்டி, அவர் பிறப்பித்த மாற்றல் உத்தரவை வாஜ்பாய் அரசு எதிர்த்தது. மிகப்பெரிய சட்டப் பிரச்சினையில் ஒரு பகுதியாக இந்த மாற்றல் கருதப்பட்டது. நீதிபதிகள் மாற்றல் விஷயத்தில் உச்சநீதி மன்றத் தலைமை நீதிபதி, தானே முடிவெடுக்க முடியுமா-அல்லது தனது சகாக்களைக் கலந்து ஆலோசித்து முடிவெடுக்க வேண்டுமா-என்பதைத் தெளிவாக்குமாறு உச்சநீதிமன்றத்தை மத்திய அரசு கேட்டுக் கொண்டது.

மாற்றல் விஷயத்தில் கருத்து தெரிவித்தவர்களில் பூஞ்சிக்குப் பின் தலைமை நீதிபதியான **ஏ.எஸ்.ஆனந்தின்** கருத்து மத்திய அரசுக்கு அதிகாரப் பூர்வமாகத் தெரிவிக்கப்படவில்லை என்று கூறப்பட்டது. மாற்றப்படுவதற்கு முன்னதாக லிபரானின் கருத்தையும் தலைமை நீதிபதி பூஞ்சி கேட்கவில்லை என்று உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்தது.

நீதிபதிகளின் மாற்றலுக்கு முன்னதாக தன்னுடைய சகாக்களைத் தலைமை நீதிபதி கலந்தாலோசித்து அவர்களின் கருத்துக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டதன் மூலம் பிரச்சினை முடிவுக்கு வந்து, லிபரானின் மாற்றல் ஒருமுறை ரத்து செய்யப்பட்டது.

பூஞ்சி ஓய்வு பெற்றபின் தலைமை நீதிபதியாக உச்ச நீதிமன்றத்தில் பொறுப்பேற்றவர் ஏ.எஸ்.ஆனந்த், அவரைச் சந்தித்தவர்களில் முதல் இடத்தைப் பெற்றவர் ஜெயலலிதா. ஜெயலலிதா மீது சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிற நிலையிலும்-இது தொடர்பாக இரண்டு நீதிபதிகள் இட மாறுதல் பெற்றிருக்கின்ற நிலையிலும்-அந்தச் சந்திப்பு அப்போது நடைபெற்றது. அந்தச் சந்திப்பு மரியாதை நிமித்தமான சந்திப்பு என்று தெரிவிக்கப்பட்ட போதிலும், அப்போது அது பலரின் கவனத்தை ஈர்த்தது.

நீதிபதி இ.பத்மநாபனுடன் இணைந்து மறு விசாரணை நடத்திய நீதிபதி லிபரான், ''ஜெயலலிதா மீதான வழக்குகளை விசாரிக்க சிறப்பு நீதி மன்றங்கள் அமைக்கப் பட்டது சரியே'' என்று தீர்ப்பு வழங்கிய ஆறுவார காலத்திற்குள் லிபரான் மாற்றப்பட்டார். மாறுதல் உத்தரவைக் கூட வழக்கமான முறைப்படி தமிழகத் தலைமைச் செயலாளர் மூலம் அனுப்பாமல், நேரடியாக லிபரானுக்கு அனுப்பும் அளவுக்கு மத்திய சட்ட அமைச்சகம் மிகுந்த ஆர்வத்துடன் அப்போது செயல்பட்டது. இதுபற்றியெல்லாம் அந்த நேரத்தில் செய்தியேடுகள் அனைத்தும் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து செய்திகளை வெளியிட்டன.

அதனையொட்டி ***19.12.1998*** அன்று நான் ஒரு அறிக்கை வெளியிட்டேன். அதன் விவரம் வருமாறு:-


''முன்னாள் முதல்வர் ஜெயலலிதா, மற்றும் முன்னாள் அமைச்சர்கள், அதிகாரிகள் ஆகியோர் மீதுள்ள பல கோடி ரூபாய் ஊழல் வழக்குகளில் பா.ஜ.க. அரசு இரட்டை நிலை மேற் கொண்டுள்ளது. ஜெயலலிதா மற்றும் அமைச்சர்கள் மீதான ஊழல் வழக்குகளை விசாரிப்பதற்கான மூன்று சிறப்பு நீதிபதிகளை சென்னையில் நியமித்ததை எதிர்த்து உயர்நீதி

மன்றத்தில் தாக்கலான மனுக்களில், மத்திய அரசின் அதிகாரி ஒருவர், ''தமிழக அரசின் ஆணை சரியானது'' என்று எழுத்து மூல உறுதிமொழி அளித்திருக்கும் நிலையில், வழக்குகளை ஒரு நீதிமன்றத்திலிருந்து மற்றொரு நீதிமன்றத்திற்கு மாற்றி உத்தரவிடுவதற்கான அதிகாரம் மத்திய அரசுக்கே இருப்பதாக திடீரென்று பா.ஜ.க. அரசு சொல்வது ஆச்சரியப்பட வைக்கிறது.''

''இவ்வாறு பா.ஜ.க. அரசு எடுத்துள்ள இரட்டை நிலை, தனக்கு வேண்டப்பட்டவர்கள் பெருமளவு ஊழல் குற்றம் செய்ததற்கான முகாந்திரம் இருப்பதாக நீதிமன்றங்களால் குற்றம் சாட்டப்பட்டவர்களாக இருந்தாலும், அவர்களைக் காப்பாற்றுவதற்குத் தயங்காது என்பதனையே காட்டுகிறது. இந்தச் சூழ்நிலையில் நேர்மை விரும்பும் மக்கள் மனதில் எழும் வினாக்கள்:

''சில வழக்குகள் எந்த நீதி மன்றத்தில் விசாரிக்கப்பட வேண்டும் என்று கூறுவதற்கு தனக்கு அதிகாரம் இருப்பதாக பி.ஜே.பி. மத்திய அரசு எடுத்துக் கூறுவதற்கான அவசியம் என்ன?''

''எந்த வழக்குகளுக்காக அவர்கள் கவலைப் படுகிறார்கள்? புதிய சட்ட அமைச்சர் பதவியேற்றவுடன், மத்திய அரசின் வழக்குகளைக் கையாளும் அரசு வழக்கறிஞர்கள் அனைவரும் ஒட்டு மொத்தமாக மாற்றப்பட்டதாக எழுந்த குற்றச் சாட்டுகளுக்கு தகுந்த உடனடி நடவடிக்கைகள் எடுக்கப் பட்டனவா?''



ஈராக் மீது போர் தொடுக்க அமெரிக்க அனுப்பிய ராணுவ டாங்கிகள்

''புதிதாக நியமிக்கப்பட்ட மத்திய அரசின் வழக்கறிஞர்கள், மத்திய அரசினால் போடப்பட்ட வழக்குகளுக்கு உள்ளானவர்களின் வீட்டிலேயே சென்று, தங்களது நியமன உத்தரவுகளைப் பெற்றுக் கொண்டதாக எழுந்த குற்றச்சாட்டுகளுக்கு பா.ஜ.க. அரசு பதிலளித்ததா?''

''சி.பி.ஐ. போலீசாரால் தொடுக்கப்படும் அனைத்து வழக்குகளையும் விசாரிப்பதற்கான சிறப்பு நீதி மன்றங்களை நியமிப்பதற்கு மத்திய அரசு, மாநில அரசினையே நாடியுள்ளது. உதாரணமாக ***1983, 1995,1997*** ஆகிய ஆண்டுகளில் இத்தகைய நீதிமன்றங்களை மாநில அரசே நியமித்திருக்கிறது. ஆனால் மத்திய அரசு தற்போது மாநில சி.ஐ.டி,, மற்றும் விஜிலன்ஸ் போலீசாரால் தொடுக்கப்பட்ட வழக்குகளில் தலையிட்டு குழப்ப முயற்சிப்பதன் காரணம் என்ன?''

என்று எனது அறிக்கையிலே நான் குறிப்பிட்டிருந்தேன்.

★ ★ ★

பிரதமர் அலுவலகத்திலிருந்து வெளியிட்ட அறிக்கைக்கு விளக்கமாகப் பதிலளித்து ***21.12.1998*** அன்று வேலூரில் நடைபெற்ற பிரமாண்டமான பொதுக்கூட்டத்தில், ஏராளமான ஆதாரங்களோடு, பல நீதி மன்றத் தீர்ப்புகளை யெல்லாம் சுட்டிக்காட்டி நான் உரையாற்றினேன்.



அமெரிக்கக் குண்டுவீச்சால் பாழான ஒரு மருத்துவமனை

அந்தக் கூட்டத்தில்தான் அண்ணா அறிவாலயத்தில் கலைஞர் அரங்கம் எழுப்புவதற்காக, வேலூர் மாவட்டக் கழகத்தின் சார்பில் 40 லட்சம் ரூபாய் நிதியினை மாவட்டக் கழகச் செயலாளர் **தி.அ.முகமதுசகி,** அமைச்சர் **துரைமுருகன், ஆர்க்காடு வீராசாமி,** மாவட்டக் கழக நிர்வாகிகள், **மா.மாரப்பன், ஆர்.காந்தி,** எம்.எல்.ஏ., **பூபாலன்** மற்றும் கழகத்தினர் என்னிடம் வழங்கினார்கள்.

அதே நாளில் பொதுக் கூட்டத்திற்கு முன்பாக, வேலூர் நகரில் **"சிப்பாய்க் கலகம்"** என்ற முதல் சுதந்திரப் போராட்ட நினைவுத் தூணை நான் திறந்து வைத்தேன். விடுதலைப் போரிட்ட தியாகிகளைக் கழக அரசு எந்த அளவிற்கு மதித்து வருகிறது என்பதற்கான பல்வேறு சான்றுகளைக் குறிப்பிட்டேன்.

43. தமிழன்னைக்கு மகுடம்!

சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழ் மொழியை வழக்கு மொழியாக அறிமுகப் படுத்த கழக அரசு தொடர்ந்து பாடுபட்டு வருகிறது!

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலிருந்த போது, **24.1.1968** அன்று பிறப்பித்த அரசாணை எண். **105**இன்படி தமிழ்நாட்டில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் இரு மொழிக் கொள்கையின்படி பள்ளிகளில் நடைமுறைக்கு வந்த மொழிக் கொள்கை பின்வரும் விதத்தில் அமைந்திருந்தது.

பகுதி அ: வட்டார மொழி (Regional Language) அல்லது தாய் மொழி (வட்டார மொழியில் இருந்து மாறுபடும் போது) (1-5 வரை)

பகுதி ஆ: ஆங்கிலம் அல்லது இந்திய மொழி அல்லாத பிறமொழி (1-5)

கல்விக் கூடங்களில் பின்பற்றப்பட வேண்டிய மொழிக் கொள்கையை உருவாக்கிட அறிஞர் அண்ணா அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளின் தொடர்ச்சியாக-

தமிழ் பாட மொழி குறித்து முடிவெடுப்பதற்காக என்னுடைய முன்னிலையில் அப்போது கல்வித் துறை அமைச்சராக இருந்த **பேராசிரியர்,** தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் **தமிழ்க்குடிமகன்** மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டு, **16.11.1998** அன்று நடைபெற்றக் கூட்டத்தில் பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டது.

1. தமிழை ஒரு பாடமாகச் சொல்லித் தரும் (As a subject) பள்ளிகளுக்குத்தான் ஏற்பளிக்கப்படும்.

2. 1999-2000ஆம் ஆண்டு முதல் பூகோளம், வரலாறு, கணிதம், சமூக அறிவியல் போன்ற பாடங்களைத் தமிழ் வழியில் (through the medium of Tamil) கற்பிக்க வேண்டும்.

3. தமிழ்மொழி வழியில் பல மழலையர் பள்ளிகள் இயங்குகின்றன. அவற்றிற்கு (அ) ஏற்புக் கட்டணத்தைப் பாதியாகக் குறைத்தல் (ஆ) இவ்வகைப் பள்ளிகளுக்கும் அரசின் பாடநூல்களை இலவசமாக விநியோகித்தல் ஆகிய சலுகைகள் வழங்கப்படும்.

4. ஏற்கனவே உள்ள விதிகள் 37(அ) யின்படி, அரசின் ஏற்பு பெறாத பள்ளிகளில் கல்வி பயிலும் குழந்தைகளை, அரசு ஏற்புப் பெற்ற பள்ளிகளில் சேர்க்கக்கூடாது என உள்ளது. இந்த விதியில் எந்த வகையான தளர்வும் செய்யாமல், தொடர்ந்து கடைப் பிடிக்கப்படும். 1.1.1998 அன்று வெளியிட்ட விளம்பரத்தின் அடிப்படையில் தமிழகத்தில் அரசின் ஒப்புதல் பெறாத மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகள் தொடர்ந்து இயங்குவதை அரசு அனுமதிக்காது.

5. தமிழகத்தில் தமிழ் படிக்காமலேயே ஆங்கிலத்தோடு தத்தம் தாய்மொழியை மட்டுமே படிக்கும் தொடக்க-மற்றும் நடுநிலைப் பள்ளிகள் மொத்தம் 1008. இந்தப் பள்ளிகள் அனைத்திலும் தமிழ் ஆசிரியர்கள் அமர்த்தப்பட்டு, அவரவர் தாய்மொழி, தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றைக் கற்றுக் கொள்ள வகை செய்யப்படும். அதற்கான வகுப்பு நேரங்களை அனைத்துத் தரப்பினரின் கலந்துரையாடலுக்குப் பின்னர் முடிவு செய்யப்படும்.

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் சார்பில், தமிழ் ஒரு பாடமாக சொல்லித் தரும் மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளுக்கு மட்டுமே இனி அங்கீகாரம், மற்றும் சலுகைகள் வழங்கப்படும் என்ற அரசின் அறிவிப்புக்குப் பாராட்டு தெரிவிக்கப்பட்டது. அது போலவே தமிழக தமிழாசிரியர் கழகத்தின் சார்பிலும் வரவேற்கப்பட்டு அறிக்கை வெளியிடப்பட்டது.


இவ்வாறு பலராலும் வரவேற்கப்பட்ட அந்த முடிவுகளின் மீது சிலர் அய்யங்களை எழுப்பியிருந்தார்கள். அவைகளைப் பற்றி ஆய்வு செய்திட 12.1.1999 அன்று என்னுடைய தலைமையில் ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் அமைச்சர்கள் **பேராசிரியர், ஆர்க்காடு வீராசாமி, துரைமுருகன்,** முனைவர் **தமிழ்க்குடிமகன், முனைவர் க.பொன்முடி, தா.கிருட்டிணன், இரகுமான் கான்** மற்றும் முன்னாள் துணை வேந்தர்கள், **வா.செ.குழந்தைசாமி, அனந்த கிருஷ்ணன்** ஆகியோர் கலந்து கொண்டார்கள். அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் வருமாறு:-

16.11.1998 அன்று தமிழக அரசின் சார்பில் அறிவித்தவாறு, மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளில் தமிழ் மொழியை ஒரு பாடமாக நடத்துவதோடு, பிற பாடங்களை ஆங்கில மொழியில் நடத்துவதை மாற்றி, குறைந்தது மூன்றில் இரண்டு பாடங்களையாவது- அதாவது சமூகவியல் (பூகோளம், வரலாறு உள்ளடங்கிய), கணிதம், அறிவியல் ஆகிய மூன்றில் இரண்டு பாடங்களைத் தமிழ் வழியில் (Through the Medium of Tamil) அடுத்தக் கல்வி ஆண்டு முதல் கற்பிக்க வேண்டுமென்று அரசு வலியுறுத்துகிறது.



தமிழன்னைக்கு மகுடம் சூட்ட, அனைத்துத் துறைகளிலும் நான் மேற் கொண்ட முயற்சிகள் என்றும் தொடரும்

ஏற்கனவே கல்வித் துறையினுடைய ஏற்பு பெற்ற மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிகளானாலும் அடுத்தக் கல்வி ஆண்டில்


முன்றில் இரண்டு பாடங்களையாவது தமிழ் வழியில்
பயிற்றுவிக்கும் பள்ளிகளுக்கே ஏற்பு வழங்கப்படும்
முதல்வர் கலைஞர் தலைமையில் கூடிய ஆலோசனைக் கூட்டத்தில் முடிவு

மூன்றில் இரண்டு பாடங்களை தமிழில் பயிற்றுவிக்க முன் வருகின்ற பள்ளிகளுக்குத்தான் தொடர்ந்து ஏற்பு வழங்கப்படும்.

இவ்வாறு ஏற்பு வழங்கப்பட்ட பள்ளிகளில் படிக்கிற-படித்த மாணவ மாணவியர்தான் அரசு அங்கீகரித்த பள்ளிகளில் சேருவதற்குத் தகுதி பெற்றவர்கள் ஆவார்கள். ஏற்பு பெறாத பள்ளிகளில் படித்தவர்கள் யாராயினும், அவர்கள் சேர விரும்புகிற பள்ளிகளில் நடத்தப்படுகின்ற தேர்வின் அடிப்படையில்தான் உரிய வகுப்புகளில் சேர்க்கப்படுவார்கள்.

தமிழ் மொழி வழியில் இயங்குகின்ற மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளுக்கு ஏற்புக் கட்டணம் பாதியாகக் குறைக்கப்படுவதோடு, இப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்குப் பாட நூல்கள் அரசின் சார்பில் இலவசமாக வழங்கப்படும்.

இத்தகைய அறிவிப்புகளைச் செய்த போதிலும், தமிழ் மொழிக் கல்விக்கு எதிராக ஒரு தரப்பினரால் தொடர்ந்து பிரச்சாரம் செய்யப்பட்டு, அதனை ஏடுகளும் பெரிது படுத்தி வெளியிட்டுக் கொண்டே வந்தன. ஆனால், மழலையர் பள்ளி உட்பட உயர் கல்விவரை தமிழ் மொழியைப் பயிற்று மொழியாகச் செயல்படுத்தக் கோரி, தமிழ்ச் சான்றோர்கள் தொடர்ந்து கோரிக்கை அளித்து வந்ததை அடுத்து, நீதியரசர் திரு.எஸ்.மோகன் அவர்கள் தலைமையில்-***3.5.1999*** அன்று கழக ஆட்சியில் அரசாணை எண். ***117***இன் படி குழு ஒன்று அமைக்கப்பட்டது. பின்னர் அந்தக் குழு கழக அரசுக்குச்

சமர்ப்பித்த பரிந்துரைகள் முறையாகப் பரிசீலிக்கப்பட்டு, அரசாணை எண் **324** பள்ளிக் கல்வித்துறை, நாள் **19.11.1999** இல் பின் வருமாறு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.

1. அரசின் பயிற்று மொழிக் கொள்கை குறித்து வெளியிடப்பட்ட அரசாணைகள் செல்லும் என நீதி மன்றங்களால் முடிவு செய்யப்பட்டுள்ளதால், மொழிக் கொள்கைக்கு சட்டப்பூர்வமான அங்கீகாரம் அளிக்கப்பட வேண்டிய அவசியமில்லை என அரசு கருதுகிறது. தொடர்ந்து அரசு ஆணைகள் மூலமே மொழிக்கொள்கை முடிவுகள் வெளியிடப்படும்.

2. அனைத்துப் பள்ளிகளிலும் (மெட்ரிகுலேஷன் பள்ளிகள், மாநில அரசு மற்றும் நிதியுதவி பெறும் பள்ளிகள், மற்றும் அரசினுடைய நிதியுதவி பெறாத ஏற்பளிக்கப்பட்ட பள்ளிகள் அனைத்திலும்) தமிழ் அல்லது தாய்மொழியே முதல் மொழியாகப் பயிற்றுவிக்கப்பட வேண்டும்.

3. முதல் வகுப்பிலிருந்து 5ஆம் வகுப்புவரை அனைத்து மெட்ரிகுலேஷன் மற்றும் மாநில அரசு (State Board) பாடமுறை பின்பற்றும் பள்ளிகளில், தாய்மொழி அல்லது தமிழ் மட்டுமே பயிற்று மொழியாக இருக்க வேண்டும்.

4. மூன்றாண்டு காலத்திற்குள் அனைத்துப் பள்ளிகளிலும் 1 முதல் 5 வகுப்புகளில் தாய்மொழி அல்லது தமிழைப் பயிற்று மொழியாக மாற்றியமைக்க வேண்டும். 2000-2001 ஆண்டு முதல், முதல் வகுப்பில் தாய்மொழி அல்லது தமிழே பயிற்று மொழியாக இருக்க வேண்டும். படிப்படியாக மேல் வகுப்புகளுக்கும் பயிற்று மொழி மாற்றம் செய்யப்பட வேண்டும்.

5. ஆறாம் வகுப்பில் மாணவர்கள் சேர்க்கை குறித்து தற்போதுள்ள நடைமுறையே தொடர்ந்து கடைப்பிடிக்கப் படும். ஏற்பளிக்கப்படாத/ அங்கீகாரம் அளிக்கப்படாத பள்ளிகளில் படித்தவர்களுக்கும், தனியே பயின்றவர்களுக்கும் சம்பந்தப்பட்ட பள்ளிகள் அளவிலேயே நுழைவுத் தேர்வு நடத்தித் திறமை தகுதி கண்டு மாணவர்கள் சேர்க்கப்பட வேண்டும்.



தமிழ் பயிற்று மொழி குறித்து முடிவெடுக்க, என் தலைமையில் நடந்த ஆலோசனைக் கூட்டம்

6. மெட்ரிகுலேஷன் வாரிய விதிகளில் ஆங்கிலத்துடன் தமிழ் மற்றும் தாய் மொழியும் பயிற்று மொழியாகச் சேர்க்கப்படும். இதற்கான மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் விதிகளுக்குத் திருத்தங்கள் தனியாக வெளியிடப்படும்.

7. அனைத்து அரசு மற்றும் நிதியுதவி பெறும் பள்ளிகளிலும், அரசு நிதி உதவி பெறாத பள்ளிகளிலும், ஏற்பளிக்கப்பட்ட பள்ளிகளிலும், மெட்ரிகுலேஷன் பள்ளிகளிலும் முதன்மை மொழி அல்லது தாய்மொழி என்று பள்ளிகளின் மொழி பற்றிய விதி மாற்றி அமைக்கப்படும்.

மெட்ரிகுலேஷன் பள்ளிகளைப் பொறுத்தவரை 3 ஆண்டு காலத்திற்குள் 1 முதல் 5 ஆம் வகுப்புவரை தமிழ்மொழி அல்லது தாய்மொழியில் பயிற்றுவிக்க வேண்டும் என்பதற்கான மேற்படி அரசாணையை செல்லுபடி அற்றதென விலக்கக் கோரி (Quash) தமிழ்நாடு மழலையர், தொடக்க, மெட்ரிகுலேஷன் மற்றும் மேல்நிலை நிர்வாகிகள் சங்கங்களும், மற்றும் சில பெற்றோர்களும் சென்னை உயர்நீதி மன்றத்தில் பல்வேறு 'ரிட்' மனு தாக்கல் செய்யப்பட்டதில், உயர்நீதிமன்றம் பயிற்றுமொழித் தொடர்பான அரசு ஆணை நிலை எண்.**324** பள்ளிக் கல்வி, நாள் **19.11.1999**ஐ ரத்து செய்து, **20.4.2000** அன்று தீர்ப்பு வழங்கியது. பின்வரும் காரணங்களை அடிப்படையாகக் கொண்டு உயர் நீதிமன்றம் மேற்கூறிய ஆணையை ரத்து செய்தது:

1. அரசு ஆணை முறையற்றது-ஆதாரமற்றது.

2. ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள், மத்திய வாரிய செயல்பாட்டின் கீழ் வரும் பள்ளிகள் (CBSE) ஆகியவற்றில் ஆங்கிலத்தை தாய் மொழியாகக் கொண்டில்லாதவர்களும் ஆங்கில வழியில் படிக்க வாய்ப்பிருப்பதால், மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் தமிழிலேயே கற்பிக்கப்பட வேண்டும் என்பது அரசியல் அமைப்பின் சட்டத்தின் கீழ் அனைவரும் ஒரே சமமாகப் பாவிக்கப்பட வேண்டும் என்றும் அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 14க்கு இவ்வரசாணை முரணாக உள்ளது.



மழலையர் பள்ளி முதல் உயர் கல்வி வரை தமிழ் மொழியைப் பயிற்று மொழியாக்க, நீதிபதி எஸ்.மோகன் தலைமையில் குழு அமைக்கப்பட்டது.

3. பல ஆண்டுகளாக இக்கல்வி நிலையங்கள் செயல்பட்டு வருவதால், தொடர்ந்து ஆங்கிலத்தில் கற்பிக்க அனுமதி உண்டு என்ற எதிர்பார்ப்பு நியாயமானதாகக் கருதப்படுவதால், ஆணை வெளியிடுவதற்கு முன் அனைத்துப் பள்ளி நிர்வாகிகளும், பெற்றோர்களும் கலந்தாலோசிக்கப்பட்டிருக்க வேண்டும்.

4. மத்திய அரசு பன்னாட்டு மனித உரிமை ஒப்பந்தத்தை ஏற்றுள்ளது. அதில் நம் குழந்தைகள் எத்தகைய கல்வி பெற வேண்டுமென்பது பெற்றோரின் உரிமை என்று குறிப்பிட்டுள்ளதால், அரசியல் அமைப்புச் சட்டத்தில் 16வது பிரிவின் கீழ் வெளியிடப்படும் ஆணை சட்டமாகக் கருத இயலாது.


5. ஒரு மனிதனுக்குக் ''கல்வி'' என்பது அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் அடிப்படை உரிமை என உச்சநீதிமன்றம் சமீபத்தில் தீர்ப்பளித்துள்ளது. அவ்வாறு கல்வி அடிப்படை உரிமையாகக் கருதப்படும் பொழுது, அதனுடன் பயிற்று மொழி என்பதும் அடங்கியதாகக் கருதப்படவேண்டும்.

அதனால் கற்பிக்கும் மொழியைத் தேர்ந்தெடுப்பது அடிப்படை உரிமையாகவே கருதப்பட வேண்டும்.

6. சிறுபான்மைக் கல்வி நிறுவனங்கள் மதத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும், மொழியை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும், அவர்கள் விரும்பும் எந்த வகையான கல்வியைக் கற்பிக்கவும் முழு உரிமை உள்ளது. மொழி வழிக் கல்வியை நிர்ணயிக்கும் வழக்கில் உள்ள அரசின் ஆணை சிறுபான்மையினரின் உரிமையைப் பாதிப்பதாகக் கருதப்படும்.

உயர்நீதிமன்றத்தின் மேற்படி தீர்ப்பிற்கு எதிராக அரசு சார்பில் உச்சநீதி மன்றத்தில் சிறப்பு அனுமதி மனுக்கள் (SLP) *10.7.2000* அன்று (SLP. Civil No: *13299-13301/2000)* தாக்கல் செய்யப்பட்டன. ***31.7.2000*** அன்று மேற்படி சிறப்பு அனுமதி மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, எதிர்வாத உரை (Counter Affidavit) நான்கு வாரத்திற்குள் தாக்கல் செய்ய ஆணை பிறப்பித்து, வழக்கை உச்ச நீதிமன்றம் தள்ளி வைத்தது.

சென்னை உயர்நீதிமன்றத்தினுடைய *20.4.2000* நாளிட்ட தீர்ப்புக்கு, அரசு தடையாணை கோரியிருந்ததை உச்ச நீதிமன்றம் ஏற்கவில்லை. தமிழ்ச் சான்றோர் பேரவை தாக்கல் செய்துள்ள சிறப்பு அனுமதி மனு, ஏற்கனவே அரசு தாக்கல் செய்த சிறப்பு அனுமதி மனுவிற்கு மாறுபட்டதாக இல்லாத பட்சத்தில், அதனை ஏற்றுக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கலாம் என புதுடெல்லியில் உள்ள அரசு வழக்கறிஞர் அறிவுறுத்தப்பட்டார். பிரதிவாதிகள் தாக்கல் செய்த பிரதிவாத மனுமீது மறுப்பு பதில் ***2.1.2002*** அன்று



தாக்கல் செய்யப்பட்டது. மேல் முறையீட்டு மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்த முகாந்தரங்களின் அடிப்படையில் வழக்கினை வாதிடுமாறு, புதுடெல்லியில் உள்ள தமிழ்நாடு அரசு வழக்கறிஞருக்குக் கடிதம் எழுதப்பட்டது. மாநில அரசால் உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்ட வழக்கு நிலுவையிலிருந்து வருகிறது.

நமது மாநில மொழிக் கொள்கையை ஒரு சிலர் பிற மாநிலங்களின் மொழிக் கொள்கையோடு-குறிப்பாக மராட்டியம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பேசி வருகின்றனர்.

தமிழ்நாட்டின் மொழிக் கொள்கையினைப் பிற மாநில மொழிக் கொள்கையுடன்-அதாவது மராட்டிய மாநில மொழிக் கொள்கையுடன் ஒப்பிட இயலாது. மராட்டிய மாநிலத்தில் மும்மொழிக் கொள்கை பின்பற்றப்பட்டு வருகின்றது. மராட்டிய அரசு, மராத்தி அல்லாத பள்ளிகளில் மராட்டிய மொழியினை ஐந்தாம் வகுப்பிலிருந்து கட்டாயமாகக் கற்றுக் கொடுக்க வேண்டுமென ஆணை பிறப்பித்தது. மும்மொழிக் கொள்கைக்கு எதிராக, குஜராத்தி மொழி பேசும் மொழிச் சிறுபான்மையினரால் நடத்தப்படும் ஆங்கிலப் பள்ளிகளில் 4 மொழிகளில் பாடம் நடத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. (இந்தி, ஆங்கிலம், மராத்தி, தாய்மொழி) இதனை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் மராட்டிய அரசின் கொள்கை முடிவு சரியானதென உச்சநீதிமன்றம் 5.5.2004 ல் ஆணை பிறப்பித்தது.

இத்தகைய மொழிக் கொள்கைகளில், உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் கர்நாடக அரசு **30.5.2002**இல் திருத்தங்கள் செய்து ஆணை வெளியிட்டுள்ளது. அதன்படி தற்போதைய நிலவரம் என்னவெனில் -

அ. மாணவர்களின் தாய்மொழியான கன்னடம், தமிழ், தெலுங்கு, மலையாளம், மராத்தி, இந்தி, உருது, ஆங்கிலம் (அ) கன்னட மொழியில் 1 முதல் 5 வகுப்புகளில் பயிற்று மொழி


தமிழை கட்டாயப பாடமாக்கும் சட்டம் ★ சுயநிதிக்கல்லூரிகளில் 69 சதவிகித இடஒதுக்கீடு

வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டங்கள் நிறைவேறிய இந்நாள்

பொன்னாள் என்பதில் பெருமை கொள்கிறேன்

சட்டப்பேரவையில் முதல்வர் கலைஞர் உரை

இருக்கும். 6ஆம் வகுப்பிலிருந்து ஆங்கில வழிக் கல்வி அனுமதிக்கப்படும்.

ஆ. 6ஆம் வகுப்பிலிருந்து முறையாக இரண்டாம் மொழி அறிமுகப் படுத்தப்படும். அவ்வாறான நிலையில் கன்னடம், தமிழ், தெலுங்கு, மலையாளம், மராத்தி, இந்தி, உருது, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஏதேனும் ஒரு மொழியை இரண்டாவது மொழியாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். கன்னடமொழியை முதல் மொழியாக எடுக்க இயலாத குழந்தைகள் அம்மொழியை இரண்டாவது மொழியாக அவசியம் பயில வேண்டும்.

இ. முதல்மொழி மற்றும் இரண்டாம் மொழி தவிர, 6 ஆம் வகுப்பிலிருந்து மூன்றாம் மொழி பயிலவும் வழிவகை செய்யப்படும். அத்தகைய மொழியானது கன்னடம், தமிழ்,தெலுங்கு, மலையாளம், மராத்தி, இந்தி, உருது, ஆங்கிலம், சமஸ்கிருதம், அராபிக், பெர்சியன் ஆகிய மொழிகள் அடங்கும். மூன்றாம் மொழியில் தேர்வு நடைபெறும். அதில் தேர்ச்சி பெறும் கட்டாயமோ-மாணவர்களின் தரம் வரிசைப்படுத்தவோ கணக்கிடப்பட மாட்டாது.

ஈ. இடைநிலைக் கல்வி நிலையில் அதாவது 8.10 வகுப்புவரை மூன்று மொழிகள் கட்டாயமாகும். அவற்றில் ஒன்று கன்னட மொழியாக அவசியம் இருத்தல் வேண்டும்.


தமிழ்நாட்டின் எல்லாப் பள்ளிகளிலும் தமிழைக் கட்டாயப் பாடமாக்கி ஆணை பிறப்பித்த

முதல்வர் கலைஞரை ஐந்து கண்டத்திலுள்ள

தமிழ் அமைப்புகளும் வாழ்த்துகின்றன!

திருமாவேள் (அமெரிக்கா), இலண்டன், நார்வே, அபுதாபி (ஐக்கிய அரபு அமீரகம்), குவைத், ஆஸ்திரேலியா) மொரிஷியஸ், சிங்கப்பூர் (ஆசியா) ஆகிய நாடுகளிலுள்ள தமிழ் தூதரகங்கள் முதலமைச்சர்

இந்த நடவடிக்கையினால் தமிழ்ச் சமுதாயம், தமிழறிந்த சான்றோர், தமிழினப் பற்றாளர்கள், திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கையே மிகப்பெரிய இலட்சியவாதிகள் என

ஏற்று இதற்காகத் தமிழருக்கு இந்த ஆங்கிலேயர் கிடைத்து இருக்கிறது. மகிழ்கிறோம்; பாராட்டுகிறோம்'' என்று தெரிவித்திருக்கிறார். சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் சமூகத்தின் சார்பில்

மூன்று மொழிகளிலும் தேர்வுகள் நடத்தப் படுவதோடு, அவற்றினில் தேர்ச்சி பெறுவதும் அவசியமாகும்.

தமிழ்நாட்டில் எந்தவொரு மாணவ, மாணவியரும் தமிழ்மொழி கற்காமல் பள்ளியை விட்டு வெளியேறக் கூடாதென்பதை உறுதிப்படுத்தும் வகையில் **''அறிவியல் தமிழ்''** என்ற பாடத்தினை அறிமுகப்படுத்தி, 2003-2004 கல்வி ஆண்டு முதல் அனைத்து வகைப் பள்ளிகளிலும் எல்.கே.ஜி. முதல் +2 வரை மற்ற பாடங்களுடன் அறிவியல் தமிழ் என்ற பாடத்தினை கற்பிக்க ஆணையிட்டு, அதற்கெனப் பாடப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்பட்டன. எனினும் இந்தத் திட்டம் முழுமையாக நடைமுறைக்கு வரவில்லை.

இதுவரை நடைபெற்ற அனைத்தையும் கருத்திலே கொண்டுதான் தி.மு.க. அரசு ஐந்தாம் முறையாக, **2006**ஆம் ஆண்டில் பொறுப்பேற்றதற்குப் பிறகு, **9.6.2006**அன்று தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் கற்பிக்கப்படும் பாடங்களில் ஒன்றாக, தமிழைக் கற்றுக் கொள்வதற்கு வகை செய்கின்ற சட்டம் ஒன்றை இயற்றியது. அந்தச் சட்டத்தின் பெயர் **''2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ் கற்பதற்கான சட்டம்''** என்பதாகும். இந்தச் சட்டத்தின் முக்கிய கூறுகளாவன:-

தமிழ் அனைத்துப் பள்ளிகளிலும் 1 முதல் 10 வரையிலான வகுப்புகளில் ஒரு பாடமாக - 1ஆம் வகுப்பிற்கு 2006-2007 ஆம் கல்வி ஆண்டில் இருந்தும், 1 மற்றும் 2 ஆம் வகுப்புகளுக்கு 2007-2008 ஆம் கல்வியாண்டில் இருந்தும் தொடங்கி,

படிப்படியான முறையில் கற்பிக்கப்படுதல் வேண்டும். மற்றும் அதைப் போன்றே பத்தாம் வகுப்பு வரையிலும் நீட்டிக்கப் படுதல் வேண்டும்.

கல்வி வடிவமைப்பானது பின்வருமாறு இருத்தல் வேண்டும்:-


பகுதி I - தமிழ் (கட்டாயம்)

பகுதி II - ஆங்கிலம் (கட்டாயம்)

பகுதி III - (கணிதம், அறிவியல், சமூக அறிவியல் முதலான) பிற பாடங்கள்.

பகுதி IV- தமிழ் அல்லது ஆங்கிலத்தைத் தமது தாய்மொழியாகக் கொண்டிராத மாணவர்கள் அவர்தம் தாய்மொழியை ஒரு விருப்பப் பாடமாகக் கற்கலாம்.

அரசு இவ்வாறு சட்டம் இயற்றிய பின்னர், இந்தப் பிரச்சினையில் எந்த விதமான பின்னடைவும் ஏற்படாமல் நல்ல முறையிலே செயல்பட்டு வருகிறது. மாணவர்களின் கல்வி முறையில் தமிழைத் தவறாமல், கற்றுக் கொள்வதற்கான இத்தகைய முயற்சிகளில் ஈடுபட்ட கழக அரசு, சென்னை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புகள், தீர்ப்பாணைகள் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளிலும் தமிழ்நாட்டின் ஆட்சி மொழியாகிய தமிழை அறிமுகப்படுத்துவது தொடர்பாகவும் தொடர்ந்து பாடுபட்டு வருகிறது.



''உயர் நீதி மன்றத்தின் கீழுள்ள எல்லா நீதிமன்றங்களிலும் தீர்ப்புகள் அனைத்தும் தமிழிலேயே இருந்திட வேண்டும்'' என்று உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியால் சுற்றறிக்கை அனுப்பப்பட்டது.

அந்த வகையில் தற்போது ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, இதன் அடிப்படையில் ***11.3.2007*** அன்று பிரதமர் டாக்டர் மன்மோகன்


தமிழக மக்களின் உணர்வுகளை மதித்து உரிமையை நிலைநாட்டிடுவீர்!

சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு மொழியாக தமிழை பயன்படுத்த


குடியரசுத்தலைவரின் ஒப்புதலை விரைவில் பெற்றுத் தாரீர்!

பிரதமருக்கு முதல்வர் கலைஞர் கடிதம்

சிங் அவர்களுக்கும், மத்திய உள்துறை அமைச்சராக அப்போது இருந்த சிவராஜ் பட்டீல், சட்டத்துறை அமைச்சர் பரத்வாஜ் ஆகியோருக்கும் விரிவாக ஒரு கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்த முக்கிய விவரங்கள் வருமாறு:-

"1969 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல், தமிழகத்திலுள்ள உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள் அனைத்திலும் பதிவு செய்யப்படும் சாட்சியங்கள் தமிழிலேயே இருந்து வருகின்றன. உயர்நீதிமன்றத்தின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் தமிழைப் பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில், தமிழ்நாடு ஆட்சி மொழிச் சட்டத்தில், 1976ஆம் ஆண்டு உரிய திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு, அவை நடைமுறையில் இருந்து வருகின்றன. இந்தத் திருத்தங்களையும், அறிவிக்கைகளையும் எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நீதிப் பேராணை மனுக்கள் (Writ Petitions) அனைத்தையும் முழு ஆயம் (Full Bench) 21.4.1994 அன்று தள்ளுபடி செய்தது.

"தமிழ்நாடு ஆட்சி மொழிச் சட்டத்தின் 4-ஆ பிரிவின்படி உயர்நீதிமன்றத்தின் கீழுள்ள அனைத்து நீதிமன்றங்களிலும், தீர்ப்பாயங்களிலும் தீர்ப்புகள் மற்றும் தீர்ப்பாணைகள் தமிழிலேயே இருந்திட வேண்டும்" என்று சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி மாண்புமிகு



மத்திய சட்டத்துறை அமைச்சர் பரத்வாஜ், ''சென்னை உயர் நீதிமன்றத்தில், தமிழை வழக்கு மொழியாக்க வேண்டும் - என்ற எனது கோரிக்கைக்கு கூடிய விரைவில் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற முயற்சிக்கிறேன்'' என்று எனக்குக் கடிதம் எழுதினார்.

கே.ஏ.சுவாமி அவர்கள் 5.1.1994 அன்று சுற்றறிக்கை ஒன்றை அனுப்பினார். எனினும், தமிழ்நாட்டின் ஆட்சி மொழியாக இருந்துவரும் தமிழ் சென்னை உயர்நீதிமன்றத்தில் பயன்படுத்தப்படாமல் இருந்து வருவது குறித்து, பொதுவாகத் தமிழர்களும், தமிழ்ச் சான்றோர்களும், குறிப்பாக தமிழ்நாட்டின் வழக்கறிஞர்களும் நீண்ட காலமாகவே போராடி வருகின்கிறார்கள்.

''சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள், தமிழ் மன்றச் செயலாளர், மேதகு ஆளுநர் அவர்களுக்கு முகவரியிட்ட மனுவில்- தமிழ் மொழியைப் பயன்படுத்தக் கோரி, உயர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் தமிழ் மன்றம் சார்பாக 2001 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் டபிள்யூ.ப்பி.எண் 16939/2001 என்ற ரிட் மனு சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தாகவும், அந்த ரிட் மனுவைத் தள்ளுபடி செய்த உயர்நீதிமன்றம் இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 348(2) ன் கீழ் அதற்கான ஆணை பிறப்பிக்கக் கூடிய அதிகாரம் ஆளுநருக்கு மட்டுமே உண்டு என்றும், அதில் நீதிமன்றம் தலையிட முடியாது என்றும் கருத்துரைத்த நிகழ்வு குறிப்பிடப்பட்டிருந்தது.''

''இவை அனைத்தையும் கருத்தில் கொண்டும், இலட்சக் கணக்கான தமிழர்கள் நீண்ட நெடுங்காலமாகக் கொண்டிருக்கும் பேராவலை நிறைவேற்றிடும் வகையிலும், குறிப்பாகவும், சிறப்பாகவும் இந்திய மொழிகளிலேயே முதல்மொழியாகத் தமிழ்மொழியை மத்தியிலுள்ள ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு செம்மொழி எனப்

பிரகடனப்படுத்தியிருக்கும் சூழலில், இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவு 348(2) உடன் இணைந்த **1963** ஆம் ஆண்டு ஆட்சி மொழி சட்டப் பிரிவு 7ன்படி, சென்னை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புகள்-தீர்ப்பாணைகள் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளிலும் மாநில ஆட்சிமொழியாகிய தமிழை அறிமுகப்படுத்துவதற்கு உரிய தீர்மானம் ஒன்று **6.12.2006** அன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் என்னால் கொண்டு வரப்பட்டு, அந்தத் தீர்மானம் மிகுந்த உற்சாகத்துடனும், எதிர்பார்ப்புடனும் ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது.''

''பின்னர், அந்தத் தீர்மானத்திற்கு மேதகு தமிழ்நாடு ஆளுநரின் பரிந்துரையையும், சென்னை உயர்நீதிமன்றத்தின் கொள்கை ரீதியிலான ஒப்புதலையும் பெற்று மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதற்கு மேதகு குடியரசுத் தலைவரின் மேலான ஒப்புதலைப் பெற்றுத் தர வேண்டுமென்று மத்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டது. 'சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழை அறிமுகப்படுத்துவது சட்டப்படி சரியான நடவடிக்கையே' என்று மேதகு தமிழக ஆளுநர் கருதினார். அவ்வாறே சென்னை உயர் நீதிமன்றமும் கருதியது.''

''தற்பொழுது, மத்திய அரசு அனுப்பியுள்ள கடிதத்தில்-தமிழக அரசின் முன்மொழிவுகள் உச்ச நீதிமன்றத்துடன் கலந்தாலோசிக்கப் பட்டதாகவும், உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புகள், தீர்ப்பாணைகள் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளிலும் வட்டார மொழியை அறிமுகம் செய்வது தற்போதைக்குச் சரியாக இருக்காது என்றும்; உச்ச நீதிமன்றத்தின் மாண்புமிகு தலைமை நீதிபதி கருதுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சட்டப் புத்தகத்தில் உரிய பகுதிகள் எவ்வித மாற்றமுமின்றி அப்படியே இருந்து வரும் நிலையில்; மத்திய அரசின் கடிதத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள வினோதமான நிலைப்பாடு, சம்பந்தப்பட்ட அனைவரையும் ஆச்சரியத்திலும், அதிர்ச்சியிலும் ஆழ்த்தியுள்ளது.''

''இந்திய அரசமைப்புச் சட்டம் பிரிவு 348(2), ஆட்சி மொழிச் சட்டம் பிரிவு 7 ஆகிய இரண்டும் தெளிவான பொருள் கொண்டவை; அவற்றை இரு வெவ்வேறான வகைகளில் அர்த்தப்படுத்திக் கொள்ள முடியாது. அவை இரண்டும் மாநிலத்தின் ஆட்சி மொழியை உயர் நீதிமன்றத்தில் பயன்படுத்திக் கொள்ள அனுமதித்திடும் நிலையில்; இந்தியாவில் உள்ள எந்த மாநிலமும் அவற்றின் துணையை நாடிப் பயன்படுத்திக் கொள்ள இயலும். அந்த இரண்டு சட்டப்பிரிவுகளின் துணையைக் கொண்டுதான் பீகார், உத்திரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களின் உயர் நீதிமன்றங்களில் இந்தியைப் பயன்படுத்திக் கொள்ள வழிவகை செய்யப்பட்டது (**12.12.2005** அன்று டெல்லி மாநிலங்கள் அவையில் விடையளிக்கப்பட்ட நட்சத்திரக் குறியிட்ட வினா எண்.279 மற்றும் அதற்கான விடை ஆகியவற்றைக் காண்க) எனவே, உயர் நீதிமன்றத்தில் பயன்படுத்தப்படும் மொழியைக் குறித்து இந்த நான்கு மாநிலங்களுக்கு ஒரு நிலைப்பாடும் தமிழ்நாட்டுக்கென ஒரு நிலைப்பாடும் மேற்கொண்டிட முடியாது.

''உயர்நீதிமன்றத்தில் பயன்படுத்தப்படும் மொழியைப் பற்றி **1965**ஆம் ஆண்டில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டதாகத் தெரிகிறது. **1965**ஆம் ஆண்டிற்குப் பிறகு, இந்தியாவில் அனைத்துத் துறைகளிலும் நிலைமைகள் முற்றிலுமாக மாறிவிட்டன. மனப்போக்கு, கண்ணோட்டம், பழக்க வழக்கங்கள் அனைத்தும் மாறிவிட்டன. வட்டார விருப்பங்கள் மேலோங்கி அவை முதன்மை பெற்று விட்டன. பல மொழிகள் பேசப்படும் இந்தியா போன்ற ஒரு நாட்டில், மொழிப் பயன்பாடு பற்றி நிரந்தரமான இலக்கணம் எதனையும் வகுத்திட இயலாது.''

''18ஆம் நூற்றாண்டில் **இங்கிலாந்து** நாட்டில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளை நாம் அறிவோம். துல்லியமும் செறிவும் நிறைந்த கலை, அறிவியல் சொற்கள் ஏராளமானவற்றை பிரெஞ்சு மொழி பெற்றிருந்தும் கூட, நீதிமன்ற நடவடிக்கைகளில் அந்த

மொழி இறுதியில் ஆங்கில மொழிக்கு வழிவிட வேண்டிய தாயிற்று. ஐந்து நூற்றாண்டுப் போராட்டத்திற்குப் பிறகு, இங்கிலாந்து நாட்டில் மாற்றம் ஏற்பட்டது. அந்த மாற்றம் இறுதியானதாகவும், உறுதியானதாகவும் அமைந்தது. எனவே, மாற்றம் என்பது தவிர்த்திட இயலாதது.''

''இந்திய அரசமைப்புச் சட்டம் பிரிவு 348(2) மற்றும் ஆட்சி மொழிச் சட்டம் பிரிவு 7 ஆகியவற்றைப் பொறுத்த வரையில் பீகார், உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களுக்குச் சமமாக நடத்தப்பட வேண்டும் என தமிழ்நாடு விரும்புகிறது. 6.12.2006 அன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் தெளிவாக அறிவிக்கப்பட்டுள்ள தமிழக மக்களின் வேட்கையை நிறைவேற்றித் தருவதற்கு உடனடி நடவடிக்கைகளைத் தாங்கள் மேற்கொள்வீர்கள் என்ற உறுதி எனக்கு உண்டு. தமிழ்நாட்டின் சட்டப் பூர்வமான கோரிக்கை யைத் தாங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் என்று நான் நம்புகிறேன். எனவே, சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழைப் பயன்படுத்துவதற்கு; மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களின் மேலான ஒப்புதலை வெகு விரைவில் பெற்றுத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு **11.3.2007** அன்று நான் அனுப்பிய கடிதத்திற்கு உடனடியாக **12.3.2007** அன்றே மத்திய சட்டம்-மற்றும் நீதித் துறை அமைச்சர் மாண்புமிகு பரத்வாஜ் அவர்கள் எனக்கு-

Dear Shri M.Karunanidhiji,

"I thank you very much for your letter dated 11.3.2007 regarding introduction of Tamil as the Official Language for Proceedings in the Madras High Court in terms of Article 348 (2) of the Constitution of India."

"I have carefully gone through the letter and i have asked my department to process the matter afresh keeping in view the points raised by you in this ,matter and obtain the consent of the President of India as expeditiously as possible."

With kind regards,"

-என்று பதில் எழுதினார்.

கடிதப் பரிவர்த்தனையோடு விட்டுவிடாமல், மத்திய அரசுக்கும், பிரதமருக்கும் இந்தப் பிரச்சினை குறித்து வலியுறுத்தி வருவதோடு, ஆளுநர் உரை, நிதி நிலை அறிக்கை வாயிலாகவும் தொடர்ந்து நினைவூட்டி வருகிறோம்.


44. மண்மீட்ட போராளிகளை மறக்க முடியுமா?

மதுரையில் தியாகி விசுவநாததாஸ் நினைவகம், நூலகம் மற்றும் திருமண மண்டபம் ஆகியவற்றின் திறப்பு விழாவிலே கலந்து கொள்வதற்காக நான் 27.12.1998 அன்று மதுரைக்குச் சென்றேன். என்னுடன் ஆர்க்காடு வீராசாமி வந்தார்.

மதுரை மாநகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது. விமான நிலையத்தில் சட்டப்பேரவைத் தலைவர் பி.டி.ஆர் பழனிவேல்ராசன், அமைச்சர்கள் துரைமுருகன், தா.கிருட்டிணன், ரகுமான்கான், முல்லைவேந்தன், ஐ.பெரியசாமி, சமயநல்லூர் செல்வராசு, மற்றும் மு.க.அழகிரி, பொன்.முத்துராமலிங்கம், தென்னவன், காவேரி மணியம், அக்னிராஜ் எம்.பி., சுப.தங்கவேலன், கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், வேலுச்சாமி, செ.ராமச்சந்திரன், ஆசையன், தங்கம்தென்னரசு, சொ.பால்ராஜ், காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி, கம்பம் செல்வேந்திரன், மிசா பாண்டியன், பி.எம்.மன்னன், பட்டுராசன், துரை.எழில்விழியன், கரு.தியாகராசன், போடி முத்துமனோகரன், வி.கே.குருசாமி, ஏ.ஆர்.சந்திரன், வெ.முனியாண்டி உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டு என்னை வரவேற்றனர்.

மதுரை மாநகர மக்கள்-குறிப்பாக மருத்துவ சமூகத்தைச் சேர்ந்த மக்கள், தங்கள் சமுதாயத்தின் சார்பில் நடத்தும் மாநாடாகக் கருதிக் கொண்டு, அங்கே திரண்டிருந்தனர். அவர்களுடைய சங்கத்தின் மஞ்சள் கொடிகளை அவர்கள்


கையில் ஏந்தியவாறு நின்றிருந்த அந்தக் காட்சி இன்னமும் கூட என் கண்ணெதிரே நிற்கின்றது.



20 முறைக்குமேல் சிறைப்பட்ட வீரத்தியாகி விசுவநாததாஸ் தனது கலை உணர்வினை, சுதந்திர வேட்கையை உருவாக்கப் பயன்படுத்தினார்

விமான நிலையத்திலிருந்து நேராக திருமங்கலம் சென்று தியாகி விசுவ நாததாஸ் நினைவகத்தைத் திறந்து வைத்தேன். வீரத்தியாகி விசுவநாத தாஸ் சுதந்திரத்திற்காகத் தன்னுடைய உயிரையே கொடுத்தவர். தன்னுடைய கலை உணர்வை-கலை ஆர்வத்தை-சுதந்திரக் கனலை உருவாக்குவதற் காகப் பயன்படுத்தியவர். உத்தமர் காந்தி அடிகளிடத்தில் பாராட்டுப் பெற்றவர். வெள்ளைக்கார அரசாங் கத்தால் பலமுறை சிறைப்பட்டவர். ஏறத்தாழ இருபது முறைக்கு மேல் சிறைப்பட்டவர். தமிழகம் முழுவதும் உள்ள மருத்துவர்கள் அன்று தங்களுடைய வேலையை நிறுத்தி விட்டு - கடைகளை மூடிவிட்டு-அந்த விழாவிற்காகவே வந்திருந்தார்கள்.

நான் பல முறை சொல்லியிருக்கிற வாறு, முடிதிருத்தும் நிலையங்கள் தான் திராவிட இயக்கத்தின் தொட்டில்களாக அந்தக் காலத்தில் இருந்தன. ஏனென்றால், நாட்டில் இருக்கின்ற ஒவ்வொரு மனிதனுடைய முடிகளை மாத்திரமல்ல- நாட்டிலே ஆளுகின்றவர்களுடைய ''முடி''யையும் திருத்த வேண்டியது அவசியமாகும். அதற்கு நாற்றங்காலாக-தொட்டிலாக இருந்த இடம், எங்களைப் பொறுத்தவரை- திராவிட இயக்கத்தைப் பொறுத்தவரை-அறிஞர் அண்ணாவின் குறிக்கோள்



புரட்சிவீரன் பூலித்தேவனின் வீரத்தை-தியாகத்தை - சுதந்திரக் கனவைப் பாராட்டிப் பேசினேன்.




இப்படிப் பாழ்பட்டுக் கிடந்த விசுவநாததாஸ் இல்லத்தை...

களைப் பொறுத்தவரை- எங்களுடைய செயல் பாடுகளைப் பொறுத் தவரை அத்தகைய தொட்டிலாக அமைந் திருந்த இடம் மருத்துவர் களின் கடைகளே.

நான் ஆரூரில் படித்துக் கொண்டிருந்தபோது- தெற்கு வீதியில் புகழ் பெற்ற **ஏ.என்.ரத்தினம் அண்ட் கோ** என்ற ஒரு பெரிய வியாபார ஸ்தலம் உண்டு. அதற்குப் பக்கத்தில் ஒரு மூலையில் ஒரு முடி திருத்தகம் உண்டு. அந்த முடி திருத்தகத்தின் அதிபர் சிங்கப்பூர் சென்று வந்தவர்.

அப்போதெல்லாம் சிங்கப்பூர் சென்றவர்களை **''சிங்கப்பூர் சவராளி''** என்பார்கள். அவருடைய இயற்பெயர் **ராமச்சந்திரன்.** தங்கப்பல் கட்டியிருப்பார். சிலபேர் பல் இல்லாத காரணத்தால் தங்கத்தின் பல் வைத்துக் கட்டிக் கொள்வது உண்டு-பல் இருப்பவர்களேகூட, தங்கத்தால் பல்லின்மீது தங்கத்தகடு கட்டிக் கொள்வதும் உண்டு. இதில் அந்தக் கடையின் முதலாளி ராமச்சந்திரன் இரண்டாம் வகையைச் சேர்ந்தவர்.

நான் சிறுவனாக இருந்தபோது, அவருடைய கடைக்கு முடிதிருத்திக் கொள் வதற்காக மாத்திரமல்ல- அவரோடு உரையாடு வதற்காகவும் செல்வேன். அந்தக் கடையிலே தான் அந்தக் காலத்திலே யாரும் படிக்கப் பயப்படு கின்ற பச்சை அட்டை **''குடியரசு''** பத்திரிகை கிடைக்கும். **''பகுத்தறிவு''**




இவ்விதம் அழகுறச் சீர்செய்தேன்

பத்திரிகை படிக்கக் கிடைக்கும். ராமச்சந்திரன் என்னைத் "தம்பி, தம்பி" என்று அன்பொழுக அழைப்பார். குடியரசு, பகுத்தறிவு போன்ற பத்திரிகைகளை வாங்கி, அவர்-தான் படிப்பதோடு மட்டுமின்றி, தன் கடைக்கு வருபவர்களிடம் அந்த இதழ்களைக் கொடுத்துப் படிக்கவும் செய்வார். கடைக்கு வருவோர் முடியை மாத்திரம் திருத்திக் கொண்டு போகமாட்டார்கள். - தங்கள் மூளையையும் திருத்திக்கொண்டு போகிற அளவிற்கு அவர்களைப் பக்குவப் படுத்தக்கூடிய திறமையாளர், **இராமச்சந்திரன்.**

இப்போது அவர் உயிருடன் இல்லை. இருந்தாலும் அவ்வப்போது அவரை நினைவு கூர்வது என் வழக்கம். இப்படி ஒவ்வொரு மருத்துவருடைய கடையிலும், அன்றைக்குப் படித்தால் ஆபத்து என்றெல்லாம் இருந்த சூழ்நிலையில் குடியரசு, பகுத்தறிவு, திராவிட நாடு பத்திரிகைகளைப் படிக்க முடியுமென்ற நிலை இருந்தது. நூல் நிலையங்களில் அந்த ஏடுகளுக்கு அப்போது அனுமதி கிடையாது. அந்தக் காலத்தில் எங்களைப் போன்றவர்களுக்கு இத்தகைய ஏடுகளைப் படிக்க வாய்ப்பு தரும் நூல் நிலையங்களாக மருத்துவர்களின் கடைகள்தான் விளங்கின.

அத்தகைய மருத்துவ சமுதாயத்திலே பிறந்து தியாகத் திருவிளக்காக-இந்தியாவின் விடுதலைக்காகப் போரிட்ட மாபெரும் கலைஞராக வாழ்ந்தவர்தான் தியாகி விசுவநாததாஸ். அந்தத் தியாகியின் நினைவாக ஒரு நினைவில்லத்தை உருவாக்க வேண்டும் - அதுவும் அவர் வாழ்ந்த இடத்தையே நினைவு இல்லமாக ஆக்க வேண்டும் என்ற ஒரு நிலை ஏன் எனக்கு ஏற்பட்டது என்றால் நான் அநேகமாக எல்லாப் பத்திரிகைகளையும் படிக்கும் பழக்கம் உள்ளவன்-அது நாளேடாக இருந்தாலும் சரி, வார ஏடாக இருந்தாலும் சரி, எல்லா ஏடுகளையும் படிக்கக் கூடியவன்-சில ஏடுகள் வேண்டுமென்றே எதிர்த்து எழுதுகிற ஏடுகளாக இருக்கும்-என்னைப் பற்றியும், என்னைத் தலைவனாக ஏற்றுக் கொண்டிருக்கின்ற கழகத்தைப் பற்றியும், அல்லது என் தலைமையிலான ஆட்சியைப் பற்றியும் வேண்டுமென்றே



இப்படி சிதிலமாகிக் கிடந்த பூலித்தேவன் மாளிகையை

வெறுப்போடு எழுதக் கூடிய ஏடுகளும் உண்டு- அத்தகைய ஏடுகளை நான் படிக்க வேண்டா மெனக் கருதி, என் உதவி யாளர்கள் கூட என் பார்வைக்கு வைக்கத் தயங்குவார்கள்.

இருந்தாலும் நான், 'அவர்கள் என்னதான் சொல்கிறார்கள்- எழுதுகிறார்கள்' என்று பார்ப்பதற்காகவே அந்த ஏடுகளையும் கொண்டு வரச் சொல்லி, அவைகளைத் தொடர்ந்து படிக்கும் பழக்கம் உடையதால்- ஒருநாள் **'குமுதம்''** பத்திரிகையில் இலக்கியச் செல்வர் **குமரி அனந்தன்** அவர்கள் எழுதிய கட்டுரை ஒன்றினைப் படித்தபோது, அதிலே அவர் வீரத்தியாகி விசுவநாததாஸ் அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டு எழுதியிருப்பதைக் காண நேரிட்டது.

அதற்கு முன்பேகூட, **''ஆனந்த விகடன்''** வார இதழில், **வீரன் சுந்தரலிங்கத்தைப்** பற்றிய ஒரு கட்டுரையைப் படித்தேன். **வீரபாண்டிய கட்டபொம்மனுடைய** தளபதிகளில் ஒருவர்தான் **வீரன் சுந்தரலிங்கம்.** கழக அரசு காலத்தில் வீரபாண்டிய கட்டபொம்மனின் வாரிசுதாரர்களுக் கெல்லாம் வீடுகள் கட்டிக் கொடுத்து-வசதிகளைச் செய்து கொடுத்திருந்தது. ஆனால் கட்ட பொம்மனின் தளபதியாக இருந்த சுந்தரலிங்கத்தின் வாரிசுதாரர்கள்- வழித் தோன்றல்கள் வீடுகள் இல்லாமல் கஷ்டப்படு கிறார்கள் என்று விகடன் கட்டுரையில் படித்ததும், உடனடியாக நான் அந்த வாரிசுதாரர்களுக்கு அரசின் சார்பில் கடிதம் எழுதச்



இவ்விதம் மாற்றிப் புதுப்பித்தேன்

செய்து, அவர்களை வரவழைத்துப் பேசச் செய்து, சுந்தரலிங்கம் பெயரால் கட்டபொம்மன் கோட்டைக்குப் பக்கத்திலேயே **''வீரன் சுந்தரலிங்கனார் நகர்''** என்ற ஒன்றை அமைத்து, அங்கே 200 வீடுகளைக் கொண்டு ஒரு நகரத்தையே நிர்மாணிக்கச் செய்து, அங்கே அடிப்படை வசதிகளையும் செய்து கொடுத்து, சுந்தரலிங்கத்தினுடைய வழித்தோன்றல் களைக் குடி அமர்த்தச் செய்தேன்.

அதைப்போல இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் எழுதிய கட்டுரையைப் படித்தவுடன், அதற்கடுத்த நாளான ஆகஸ்ட் 15 ஆம் தேதியன்று, சென்னை கோட்டை கொத்தளத்திலே தேசியக் கொடியை ஏற்றி வைத்து நான் உரையாற்றியபோது, வீரத்தியாகி விசுவநாததாசுக்கு அவர் வாழ்ந்த இடத்திலேயே- அந்த வீட்டிலேயே நினைவகம் அமைக்கப்படும் என்று அறிவித்தேன். அறிவித்ததோடு மாத்திரமல்லாமல், நான் மாவட்ட ஆட்சித் தலைவருடன் தொடர்பு கொண்டு பேசிய போதெல்லாம் இது குறித்து நினைவூட்டி, விரைவுப் படுத்திடவே, அவரும் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார்.

விசுவநாததாஸ் அவர்கள் வாழ்ந்த வீட்டைப் பற்றி விசாரிக்க முற்பட்டபோது அந்த இல்லத்தின் பேரில் கடன் வாங்கப்பட்டு அந்த இல்லமே கடனில் மூழ்கிய காரணத்தால்-ஒருவர் அந்த இல்லத்தை ஏலத்தில் 2000 ரூபாய் அளவிற்கு எடுத்து, தன் வசப்படுத்தி வைத்திருந்தார்.

அரசாங்கம் அவரோடு பேச்சுவார்த்தை நடத்தி, கடைசியில் 11 இலட்சம் ரூபாய் அந்த இல்லத்திற்காகத் தந்து, அதனை வாங்கி, மேலும் 50 லட்ச ரூபாய் அரசின் சார்பில் செலவழித்து, விசுவநாததாஸ் அவர்களின் நினைவில்லம் கட்டப்பட்டு, அதனைத் திறந்து வைக்கும் நிகழ்ச்சியிலும் நானே கலந்து கொண்டேன்.

நினைவில்லத்தைத் திறந்து வைத்தது மாத்திரமல்ல-தியாகி விசுவநாததாஸ் அவர்களின் வாரிசுகளையும் கழக அரசு கைவிட்டு விடவில்லை. விசுவநாததாஸ் அவர்களின் முதலாவது மகன், தியாகி **சுப்பிரமணியதாஸ்** காலமாகி விட்டார். அவரது துணைவியார் திருமதி **கண்ணம்மாளுக்கு**



நெல்லை மாவட்டம், பாண்டியபுரத்தில் நான் திறந்து வைத்த சமத்துவபுரம்

மத்திய அரசின் தொடர் ஓய்வூதியமாக **3000** ரூபாய் கிடைத்துக் கொண்டு வந்தது. அவர்களுக்கு மாநில அரசு ஓய்வூதியமாக **500** ரூபாயும், மருத்துவப் படியாக **15** ரூபாயும் தொடர்ந்து கிடைக்கக் கழக அரசு ஆணையிட்டது.

விசுவநாததாஸ் அவர்களின் மகள் திருமதி **பிச்சம்மாள்**. அவருக்கு மாநில அரசு தொடர் ஓய்வூதியமாக மாதம் **1500** ரூபாயும், மருத்துவப் படியாக மாதம் **15** ரூபாயும் அளிக்கவும்- விசுவநாததாஸ் அவர்களின் மகன் **காசிநாதனின்** மகள் திருமதி **பாப்பாத்தி அம்மாள்** என்பவருக்கு மாநில அரசு தொடர் ஓய்வூதியமாக **1500** ரூபாயும், மருத்துவப்படியாக **15** ரூபாயும் அளிக்கவும்-அடுத்து அவரது மகள் **தங்கத்தாய்** என்பவருக்கும் மாநில அரசு தொடர் ஓய்வூதியமாக **1500** ரூபாயும், மருத்துவப்படியாக **15**ரூபாய் அளிக்கவும் -அடுத்து அவருடைய மகன் முத்தையாதாஸ் அவர்களுக்கு மாநில அரசின் தொடர் ஓய்வூதியமாக **1500** ரூபாயும், மருத்துவப்படியாக **15** ரூபாயும் அளிக்கவும் ஆணைகளைப் பிறப்பிக்கச் செய்தேன். விசுவநாததாசின் மகனான **முத்தையா தாசுக்கு** திருவல்லிப்புத்தூர் வட்டம், பாட்டக்குளம், கல்லிப்பட்டி கிராமத்தில் அமைக்கப்பட்ட சமத்துவபுரத்தில் ஒரு வீடும் ஒதுக்கப்பட்டது. விசுவநாததாசின் பேரன் **குணசேகரனுக்கு** சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், **40** ஆயிரம் ரூபாய் நிதி உதவியும் வழங்கப்பட்டது. விசுவநாததாசின் பேத்தி **நிர்மலாதேவியின்** கணவரான **கே.கணேசனுக்கு** ரெடிமேடு ஆடைகள் தயாரிக்க ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் **20** ஆயிரம் ரூபாய் நிதியும் வழங்கப்பட்டது.

விசுவநாததாசின் பேரன் **குணசேகரனுக்கும்**, பேரன்களின் மனைவியரான திருமதி **கிருஷ்ணவேணி**, திருமதி. **உமாராணி** ஆகியோருக்கும் பேத்திகள் **சரஸ்வதி, பாக்கிய லட்சுமி, பஞ்சவர்ணம், நிர்மலாதேவி** ஆகியோருக்கும் இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் அரசினால் வழங்கப்பட்டன. தூத்துக்குடி மாவட்டத்தில் வாழ்ந்த வந்த விசுவநாததாசின் மகள் திருமதி பிச்சம்மாளின் பேத்தி திருமதி **அமலம் புஷ்பத்திற்கு 3500** ரூபாய் செலவிலே ஒரு தையல் இயந்திரம் அரசின் சார்பில் வழங்கப்பட்டது. அதைப் போலவே, விசுவநாததாசின் மற்றொரு மகள் திருமதி தங்கத்தாயின் பேத்தி திருமதி **எலிசபெத் ராணிக்கும்** ஒரு தையல் இயந்திரம் அரசின் சார்பில் அந்த விழாவிலே வழங்கப்பட்டது.

தியாகி விசுவநாததாசின் நினைவில்லத்திறப்பு விழாவிலே கலந்து கொண்ட இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் பேசும்போது-

"இந்தியத் திருநாட்டிலே எத்தனையோ மாநிலங்கள் இருந்த போதிலும்கூட, தமிழ் மண்ணிலே விடுதலைக்காகத் தியாகம் செய்தவர்களையெல்லாம் நெஞ்சத்திலே வைத்து, இந்தியாவிலே எந்த முதலமைச்சரும் செய்யாத பெருமையினை தியாகிகளுக்குச் செய்த முதலமைச்சர் கலைஞர் அவர்களை நாம் பெரிதும் எந்த நேரத்திலும் நெஞ்சு நிறைய வாழ்த்துகின்றோம். இந்தியா முழுவதும் சுற்றி வந்த அனுபவத்திலே சொல்கிறேன்-வேறு எந்த மாநிலத்திலும் தியாகிகளுக்கு இந்த அளவுக்கு சிறப்புக்களைச் செய்யவே இல்லை. இப்படிப்பட்ட மிகப்பெரிய பணியைச் செய்து கொண்டிருக்கின்ற முதல்வர் கலைஞர் அவர்களுக்கு நாம் எப்படி நன்றி சொல்வதென்று தெரியவில்லை. விசுவநாததாஸ் போன்றவர்களுக்கெல்லாம் நினைவுச் சின்னம் எழுப்பி, இந்த நாட்டிலே தியாகிகளையெல்லாம் மதிக்கின்ற நீங்கள், தியாகிகளின் நெஞ்சம் இருப்பதுவரை மட்டுமல்ல-தியாகிகளுடைய நினைவு இந்த நாட்டிலே இருக்கும்வரை-உங்களுடைய நினைவும் இருக்கும் என்று பெருமையோடு


சொல்லிக் கொள்கிறேன். உங்களுக்குக் கோடி நன்றி சொல்லிக் கொள்கிறேன்'' என்றார்.

விசுவநாததாஸ் அவர்கள் எந்த அளவிற்கு பல ஏகாதிபத்தியங்களால் வெறுக்கப்பட்டவர் - அல்லது எத்தனை ஏகாதிபத்தியங்களுக்கு அச்சுறுத்தலாக இருந்தவர் என்பதற்கு ஓர் உதாரணம் கூற வேண்டுமேயானால்-**பண்டித நேரு** அவர்கள், **இந்திரா காந்தி** அம்மையாரோடு ஒருமுறை இலங்கைக்குச் சென்றார். அவர்கள் சென்ற அதே கப்பலில் விசுவநாத தாசும் அவருடைய குழுவினரோடு கலை நிகழ்ச்சி நடத்துவதற்காக இலங்கை சென்றார்.

தலைமன்னாரில் போய் கப்பல் நின்றதும், நேரு அவர்களையும், இந்திரா காந்தி அவர்களையும் இலங்கையிலே இறங்க, அந்த நாட்டு அரசு ஒப்புதல் அளித்தது. ஆனால் விசுவநாததாசையும், அவரது குழுவினரையும் அங்கே இறங்கக் கூடாது என்று திரும்ப இந்தியாவுக்கே அனுப்பி வைத்தது. அதற்குக் காரணம், அவர்கள் அங்கே வந்து கலை நிகழ்ச்சி நடத்தினால் பெரிய புரட்சி ஏற்படும் என்ற காரணமாக அவர்களை அந்த நாட்டு அரசு திரும்ப அனுப்பி வைத்தது.

இத்தகைய புகழுக்குச் சொந்தக்காரரான தியாகி விசுவநாததாசின் நினைவில்லத்தை உருவாக்க தி.மு.கழக அரசு பாடுபட்டது. அண்மையிலே கூட அந்த இல்லம் சரியாகப் பராமரிக்கப்படவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டு, ஒரு ஏட்டிலே வெளி வந்ததும், நானே மதுரை மாவட்ட ஆட்சியருக்குப் போன் செய்து விசாரித்தேன். அவர் அந்தச் செய்தியை மறுத்ததோடு, செய்தியாளர்களை எல்லாம் அந்த இல்லத்திற்கே அழைத்துச் சென்று, உண்மையில் அந்த இல்லம் எவ்வாறு பராமரிக்கப் பட்டு வருகிறது என்பதையும் நேரிலே காட்டினார். கழக அரசு எந்த அளவிற்குத் தியாகிகளை மறவாமல் செயல்பட்டு வருகிறது என்பதற்கு இதுவும் ஒரு சான்றல்லவா?

விசுவநாததாஸ் அவர்களின் நினைவில்லத் திறப்பு விழாவில் கலந்து கொண்ட நான், அன்றைய தினம் மதுரையில் கிறித்துவ



"நாட்டு விடுதலைக்குத் தியாகம் செய்தவர்களுக்கு நினைவில்லங்கள் அமைத்துவரும் கலைஞருக்கு கோடி நன்றி" என்றார், இலக்கியச் செல்வர் குமரி அனந்தன்

சமுதாயத்தின் சார்பில் நடத்தப்பட்ட மதுரை மறை மாநில வைர விழா - சமுதாய நல்லிணக்க விழாவிலும் கலந்து கொண்டேன். மதுரைப் பேராயர் **ஆரோக்கியசாமி, அருள் மேம்ஸ்,** மதுரைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் **சாலிஹூ, எஸ்றா சற்குணம், மதுரை மேயர் பெ.குழந்தைவேலு,** சட்டப் பேரவைத் தலைவர் **பி.டி.ஆர்.பழனி வேல்ராஜன், குன்றக்குடி பொன்னம் பல அடிகளார்,** மதுரை மாவட்டப் பேராயர் **எஸ்.எஸ்.செல்வராஜ்** ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அதற்கடுத்த நாள் நெல்லை மாவட்டம் சென்று, அழகிய பாண்டியபுரம் கிராமத்தில் கட்டப்பட்டிருந்த சமத்துவ புரத்தைத் திறந்து வைத்தேன். அதனைத் தொடர்ந்து நெற்கட்டும் செவலில் **வீரன் பூலித்தேவன்** மாளிகை திறப்பு விழாவிலே கலந்து கொண்டேன். "நேர்மையில் வீரம் நிமிர்ந்து காட்டும் நெற் கட்டும் செவல் கோட்டையன்றோ?" என்று புகழ்ந்து பாடப் படுகின்ற பூலித்தேவனுடைய கோட்டையைப் புதுப்பித்து, பூலித்தேவனுடைய சிலையைத் திறந்து வைத்து, பூலித்தேவனுடைய வீரத்தைப் பாராட்டி-தியாகத்தைப் பாராட்டி-சுதந்திரக் கனலைப் பாராட்டி-உரையாற்றினேன்.

★ ★ ★

தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் அரசியல் விவகாரக் குழு, அதே டிசம்பர் திங்களில் நடைபெற்று, சில முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றியது. த.மா.கா. தலைவர் அருமை நண்பர் **மூப்பனார்** அவர்கள் செய்தியாளர்களுக்குத் தீர்மானங்களை விளக்கினார். அதிலே முக்கிய தீர்மானமாக-

''உச்ச நீதிமன்றம் உட்பட அனைத்து நீதிமன்றங்களும், **ஜெயலலிதா** மற்றும் அவரது அமைச்சரவையில் இருந்த அமைச்சர்கள் மீதுள்ள வழக்குகளில், வழக்குத் தொடர போதிய சாட்சியம் இருக்கிறது என்று சொல்லியுள்ளன. அதன் பிறகும்கூட பிரதமர் அலுவலகம் இந்த வழக்குகளைப் பழி வாங்கும் செயல் என்று அறிவித்திருக்கிறது. பதவியைக் காப்பாற்றிக் கொள்ள பா.ஜ.க. அரசு எதற்கும் தயாராக இருக்கிறது என்பதைத்தான் இது காட்டுகிறது.''



''ஜெயலலிதாவின் ஊழல் விவகாரம் உலகம் முழுவதும் அறிந்த ஒன்று - தொட்டில் குழந்தை திட்டம் முதல், சுடுகாட்டுக் கொட்டகைத் திட்டம் வரை ஊழல் செய்திருக்கிறார்'' என்றார், மூப்பனார்.

''*1991* இலிருந்து *1996* வரை தமிழகத்தை ஆண்டு வந்த ஜெயலலிதா அரசின் ஊழல், உலகம் முழுவதும் அறிந்த ஒன்று. தொட்டில் குழந்தைகள் திட்டத்திலிருந்து சுடுகாட்டுக் கொட்டகை வரை அரசின் அத்தனை திட்டங்களிலும் ஊழல் செய்த ஜெயலலிதா மற்றும் அவரது அமைச்சர்கள் மீதும் பல வழக்குகள் தொடங்கப்பட்டு, தற்போது தனி நீதிமன்றங்களில் விசாரணை நடைபெறு கின்றன.''

''ஜெயலலிதா மீதுள்ள வழக்குகளை விசாரித்து வந்த வருமான வரித்துறை அதிகாரிகளை மாற்றினார். அ.தி.மு.க.வைச் சேர்ந்த மத்திய அமைச்சர் **கடம்பூர் ஜனார்த்தனம்.** ஜெயலலிதா மீதுள்ள வழக்குகளை நடத்தி வந்த வழக்கறிஞர்களை மத்திய சட்ட அமைச்சர் **தம்பிதுரை** மாற்றினார். அதன் பின்னர் நீதிபதிகளையே மாற்றும் முயற்சி நடந்து, இப்போது பிரதமரின் அலுவலகத்தின் நேரடி மேற்பார்வையில், நீதிமன்றங்களையே மாற்றும் முயற்சியை மேற்கொண்டிருப்பது நேர்மையான நிர்வாகத்தின் மீது நம்பிக்கை வைத்துள்ள அனைவரையும் நெஞ்சம் பதற

வைத்துள்ளது'' என்ற தீர்மானத்தை மூப்பனார் அவர்களே செய்தியாளர்களிடம் விளக்கியதோடு, மத்திய அரசுக்கும் தனது கண்டனத்தைத் தெரிவித்துக் கொண்டார்.


த.மா.கா.மாத்திரமல்லாமல், ***21.12.1998*** அன்று திருச்சியிலே கூடிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்திலும், ''ஜெயலலிதாவைக் காப்பாற்ற மத்திய அரசு முயற்சி செய்கிறது'' என்று தீர்மானம் நிறைவேற்றினார்கள். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளராக இருந்த தோழர் **நல்லகண்ணு** அவர்களும் மத்திய அரசின் செயல்பாட்டிற்குக் கண்டனம் தெரிவித்து அறிக்கை விடுத்தார்.

கட்சிகள் எல்லாம் இந்த அளவிற்குக் கடும் எதிர்ப்பைத் தெரிவித்த நேரத்தில், ஏடுகளும் அவ்வாறே செய்திகளை வெளியிட்டன. குறிப்பாக, *22.12.1998* தேதிய ''**இந்துஸ்தான் டைம்ஸ்**'' நாளேட்டில் அதன் செய்தியாளர் **ஜி.சி.சேகர்** பின்வருமாறு எழுதியிருந்தார்:-

''தன்னுடைய புனிதத் தன்மையிலிருந்து பா.ஜ.க.வலுக் கட்டாயமாக விலகிச் செல்லக்கூடிய வகையில் அதன் கூட்டணிக் கட்சிகளிடையே கோரிக்கை எழுந்துள்ளது. எனவே ஊழலுக்கு எதிராக செயல்படுவதை விட, ஊழல் குற்றங்களுக்கு ஆளானவர்களோடு இணைந்து செயல்படக் கூடிய நிலையை பா.ஜ.க.தேர்வு செய்துள்ளது. வழக்குகளைத் தாமதப்படுத்த-அதற்கேற்ப நீதிமன்றத்தில் **வாஜ்பாய்** அரசு



நாடகத்தை அரங்கேற்றி வருகிறது. அந்த நாடகத்தின் கதையை அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதாவின் வழக்கறிஞர்கள் எழுதியுள்ளனர். ஆனால் அதில் நடிக்கப் போகிறவர்கள் இந்திய அரசின் தலைமை வழக்கறிஞர் அட்டர்னி ஜெனரலும், மத்திய சட்ட அமைச்சரும், ஏன் பிரதமரின் அலுவலக அதிகாரிகளும் கூட, அதன் முதல் கட்டமாகத்தான் மத்திய அரசு- அல்லது அ.தி.மு.க. அமைச்சர் தம்பிதுரை தலைமையிலான மத்திய சட்ட அமைச்சகம் கடந்த வாரம் உச்ச நீதிமன்றத்தில் கடுமையாக செயல் பட்ட விதமாகும்.''



''கூட்டணிக் கட்சிகளால் பா.ஜ.க. அரசுக்கு தலை குனிவு ஏற்படுகிறது'' என்று அ.தி.மு.க. பற்றிக் குறை கூறினார், அத்வானி

''சிறப்பு நீதிமன்றங்கள் அமைத்ததை ஏற்றுக் கொண்ட சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி, அவசர அவசரமாக ஆந்திரப் பிரதேசத்துக்கு மாறுதல் செய்யப் பட்டுள்ளார். அது மட்டுமின்றி, அவர் அங்கு டிசம்பர் 31ஆம் தேதிக்கள் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.''

''இந்த முழு நடவடிக்கைகளின் பின்னணியில் உள்ளவற்றைப் புரிந்து கொண்ட தமிழக முதல்வர் கருணாநிதி அவர்கள், ''ஜெயலலிதாவைப் பாதுகாக்க மத்திய அரசு முயற்சித்து வருகிறது'' என்று சரியாகவே விமர்சித்துள்ளார். அரசியலில் பழி வாங்கவே ஜெயலலிதா மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகப் பிரதமரின் அலுவலகம் விநோதமாகக் குறிப்பிட்டுள்ளது. இந்தவொரு கருத்தின் மூலமே, அரசியல் காரணங்களுக்காகத்தான் உச்சநீதிமன்றத்தில் சட்டரீதியாக மத்திய அரசு விளையாடுகிறது என்பதை வாஜ்பாய் நிரூபித்துவிட்டார்.''

- என்று அந்த ஏடு குறிப்பிட்டது.

★ ★ ★

''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' நாளேடும், **''இந்து''** நாளேடும் இதே பாணியில் ''குற்றவாளி விருப்பப்படி நீதிபதி நியமனமா?'' என்ற தலைப்பில் மத்திய அரசின் போக்கைக் கடுமையாகக் கண்டித்து நீண்ட கட்டுரை தீட்டியிருந்தன.

எல்லாவற்றுக்கும் மேலாக **''துக்ளக்''** நாளேடு, **30.12.1998** தேதிய இதழில் எழுதிய தலையங்கத்தில் சில பகுதிகள் நினைவில் கொள்ளப்பட வேண்டியவையாகும்.

''ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் வரக்கூடிய குற்றங்களை விசாரிக்க, விசேஷ நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரம் மத்திய அரசுக்கும் உண்டு-மாநில அரசுக்கும் உண்டு. மத்திய அரசு இந்த உரிமை எங்களுக்கு இருக்கிறது என்று கூறியதோடு மட்டும் நிறுத்தியிருந்தால், சட்டத்தின் தெளிவின்மையால் அவர்கள் வைத்த தவறான வாதம் இது என்று கூறிவிடலாம். ஆனால், மத்திய அரசோ தனது உரிமையை வலியுறுத்தியதோடு நிறுத்தாமல், ''ஒருவரைப் பழி வாங்குவதையும், இம்சை செய்வதையும் நாங்கள் அனுமதிக்க முடியாது'' என்று கூறியிருக்கிறது. இதனால்தான் மத்திய அரசின் நோக்கம் பற்றிய சந்தேகமே வருகிறது.''

''அவர்களுடைய தவறான வாதத்திற்கு, சட்டத்தின் தெளிவின்மை மட்டும் காரணமல்ல-ஊழலில் சிக்கியவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற தவறான நோக்கமும் கூட இதற்கு ஒரு காரணமோ என்ற சந்தேகம் வருகிறது. பழி வாங்குதல்-இம்சை என்று மத்திய அரசு எதைச் சொல்கிறது? ஊழல் குற்றச்சாட்டுக்களில் சிக்கியவர்கள் மீது வழக்கு நடத்துவதே பழி வாங்குதலா? பழி வாங்குதல்-இம்சை என்று கூறியதன் மூலம், மத்திய அரசு தனது நோக்கத்தை முழுமையாகத் தெளிவுபடுத்திவிட்டது. ஊழல் தடுப்புச் சட்டத்தை, தமிழகத்தைப் பொறுத்த வரையில், ஊழல் பாதுகாப்புச் சட்டமாக மாற்ற வேண்டும் என்பதே மத்திய அரசின் நோக்கம்.''

- இப்படி **''துக்ளக்''** எழுதியது.

இவ்வாறு பல நாளேடுகளும், அரசியல் கட்சிகளும் கூறியதற்குப் பிறகும், மத்திய அரசு இதில் தலையிட்டு, **5.2.1999** அன்று தனி நீதிமன்ற வழக்குகளை வேறு நீதி மன்றத்திற்கு மாற்றி உத்தரவிட்டது. ஜெயலலிதா மீது தொடரப்பட்ட வழக்குகளைத் தனி நீதிமன்றங்களில் இருந்து வேறு நீதிமன்றங்களுக்கு மத்திய அரசு மாற்றியிருப்பது கண்டனத்துக்குரியது என்றும்-ஜெயலலிதாவை ஊழல் வழக்குகளில் இருந்து பாதுகாக்கவே மத்திய அரசு இந்த உத்தரவை பிறப்பித்திருக்கிறது என்றும்- இது சட்ட விரோத மானது என்றும்-ஊழலற்ற ஆட்சியைக் கொடுப்போம் என்று கூறிய பாரதீய ஜனதா அரசு ஊழலுக்குத் துணை போய்விட்டது என்றும்-அரசியல் சட்டத்தை மத்திய அரசு தவறாகப் பயன்படுத்தி ஊழல்களை மறைக்க உச்சக் கட்டத்திற்கே சென்று விட்டது என்றும்-எதிர்க்கட்சிகள் எல்லாம் தங்கள் கண்டனத்தை மத்திய அரசுக்குத் தெரிவித்தன.

குறிப்பாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் **டி.ராஜா** அவர்களும், ஜனதாதளத்தின் மூத்த தலைவராக இருந்த ராம் **விலாஸ் பஸ்வான்** அவர்களும் **ஆர்.நல்லக்கண்ணு** அவர்களும், **ஆர்.எம்.வீரப்பன்** அவர்ளும் மத்திய அரசின் செயலைக் கண்டித்து அறிக்கைகளை விடுத்தனர். பார் அசோசியேஷன் தலைவர் **பி.என்.லேகி**, மூத்த வழக்கறிஞர்கள்-**அபிஷேக் மனு சிங்வி, பிரசாந்த் பூஷன்** போன்றவர்கள் எல்லாம் ''மத்திய அரசின் நடவடிக்கை ஜெயலலிதாவைப் பாதுகாப்பதற்காகவே எடுக்கப்பட்டது-மத்திய அரசின் அறிக்கை தனி நீதிபதியின் வரம்பை ஒரு போதும் கட்டுப்படுத்தாது'' என்றும் கருத்து தெரிவித்தனர்.

8.2.1999 தேதிய **''டைம்ஸ் ஆப் இந்தியா'' - ''டெக்கான் கிரானிக்கல்'' - ''பயனீர்''- ''பிசினஸ் ஸ்டாண்டர்டு'' ''தி இந்துஸ்தான் டைம்ஸ்''** போன்ற புகழ் பெற்ற ஆங்கில ஏடுகள் எல்லாம் ஜெயலலிதா மீதான வழக்குகளை மாற்றம் செய்திருப்பது ''அரசியல் உள் நோக்கத்தோடு உச்ச நீதிமன்றத்தை அவமதிக்கும் நடவடிக்கை'' என்று பக்கம் பக்கமாகக் கண்டித்து எழுதின.



''வெட்கம் - வேதனை'' என்ற தலைப்பில் ஜெயலலிதா - மற்றும் சகாக்கள் மீது 46 ஊழல் வழக்குகள் உள்ளன.'' - என்று எழுதியது 'தினமணி'

''தினமணி'' நாளேடு 9.2.1999 அன்று ''வெட்கம்- வேதனை'' என்ற தலைப்பில் தலையங்கம் ஒன்றையே எழுதியிருந்தது. அதில், ''ஒருவருடைய நிழல் அவருடன் கூடவே தொடர்வது போல, அவர் செய்த தீவினைகளும் அவரை விடாமல் தொடரும் என்பது குறள். குறள் நெறியை மெய்ப்பிப்பது போல, ஜெயலலிதா ஆட்சியில் தாண்டவமாடிய ஊழல்கள், அவருடைய ஆட்சியைக் கவிழ்த்தது மட்டுமன்றி, பதவியிழந்த பிறகும் ஜெயலலிதாவை விடாமல் தொடர்ந்து பல்வேறு வழக்குகளின் உருவத்தில் சூழ்ந்து கொண்டன. அவருக்கு எதிராகவும், அவருடைய அமைச்சர்களுக்கு எதிராகவுமான 46 ஊழல் வழக்குகள் 3 சிறப்பு நீதிமன்றங்களில் இருந்து வருகின்றன. வாக்காளர்களுக்கு அளிக்கப்பட்ட தேர்தல் வாக்குறுதியின் அடிப்படையில் இத்தகைய விசாரணை நடக்கிறது.''

''சிறப்பு நீதிமன்றங்கள் நிறுவப்படுவதன் நோக்கம் என்ன? ஊழல் வழக்குகள் சாதாரண நடைமுறையில் - பொதுவான நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டால், அவற்றில் நீதி வழங்குவதில் தாமதம் ஏற்படும். ஏன்-ஆண்டுக்கணக்கில் இழுபறியாகக் கூடும். 3 சிறப்பு நீதி மன்றங்களும் வேகமாகவும் முறையாகவும் செயல்படத் தொடங்கின. இவ்வழக்குகளின் தீர்ப்பு விரைவில் வெளிவரக்கூடிய ''ஆபத்தைக்'' கண்டு கொண்ட ஜெயலலிதா, விசாரணையைத் தாமதப்படுத்தவும், முடக்கவும் பல தந்திரங்களைக் கையாண்டு பார்த்தார். சிறப்பு நீதிபதிகள் அசைந்து கொடுக்கவில்லை. அந்த நீதிபதிகளை மாநில அரசு நியமித்ததே செல்லாது என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கிலும் ஏமாற்ற மடைந்தார்.''

''சிறப்பு நீதிபதிகள் நியமனம் சட்டப்படி முறையானதே- செல்லத்தக்கதே'' என்று தீர்ப்பும் வழங்கப்பட்டுவிட்டது.

''இந்தத் தீர்ப்பை எதிர்த்து ஜெயலலிதா செய்துகொண்ட மேல்முறையீடு உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வரவிருக்கிறது. இந்நிலையில், சிறப்பு நீதிமன்றங்களின் நடவடிக்கைகளில் மத்திய அரசு தலையிட்டு, சிறப்பு நீதிமன்றங்களில் நடைபெற்றுவரும் வழக்குகளை பல்வேறு செஷன்ஸ் நீதிமன்றங்களுக்கு மாற்றுவதாக அரசாணை வெளியிட்டுள்ளது. இந்த அவசர ஆணையை வெளியிட்டு இருப்பது மத்தியப் பணியாளர் அமைச்சகம். இந்த அமைச்சகம் பிரதமர் மற்றும் அ.தி.மு.க. அமைச்சர் கடம்பூர் **ஜனார்த்தனம்** ஆகியோரின் பொறுப்பில் உள்ளது.

''சிறப்பு நீதிபதிகள் நியமனம் செல்லக் கூடியதே என்ற சென்னை உயர் நீதிமன்றத்தீர்ப்பே, உச்ச நீதிமன்றத்தால் மாற்றப்படாத வரையில், நடைமுறையில் இருக்கக்கூடியது. அப்படியிருக்க, மத்திய அரசு இப்படித் தடாலடியாக நடந்து கொண்டிருப்பது முறையாகாது. இது நீதிமன்றத்தையே அவமதிப்பதாக எண்ணுவதற்கு இடம் அளிக்கிறது. தூய்மையான பொது வாழ்வு கொண்ட வாஜ்பேயியின் அரசு இப்படி நடந்து கொண்டிருப்பது அல்லது நடந்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியிருப்பது வேதனைக் குரியது மட்டுமல்ல-வெட்கக்கேடானதும் கூட'' என்று குறிப்பிட்டிருந்தது.

★ ★ ★

மத்திய அரசின் இந்த முடிவினை எதிர்த்து, ***14.2.1999*** அன்று தமிழகம் முழுவதும் கண்டனக் கூட்டங்கள் கழகத்தின் சார்பில் நடைபெறும் என்று பொதுச் செயலாளர் அறிவித்து, அவ்வாறே கண்டனக் கூட்டங்கள் நடைபெற்றன. மேலும் ***9.2.1999*** அன்று தி.மு.க. மற்றும் அதன் தோழமைக் கட்சியினர் இணைந்து, மாநிலம் எங்கும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்தினார்கள்.

மத்திய அரசு பிறப்பித்த உத்தரவின் நகல்களை ஜெயலலிதாவின் வழக்கறிஞர்கள் தனி நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, விசாரணையைத் தொடர்ந்து நடத்தக் கூடாது என்று கோரினார்கள். இதைத் தனி நீதிமன்றம் ஏற்க மறுத்து,


அவர்களது கோரிக்கையைத் தள்ளுபடி செய்தது. அந்த நிலையில் ஜெயலலிதாவின் அப்பீல் வழக்கு, உச்ச நீதிமன்றத்தில் டிவிஷன் பெஞ்ச் நீதிபதிகள் ஜி.டி.நானாவதி, **எஸ்.பி.குர்துகர்** ஆகியோரின் முன்பு **15.2.1999** அன்று விசாரணைக்கு வந்தது.

அப்போது தமிழக அரசின் சார்பில் மூத்த வழக்கறிஞர்கள் **நாரிமன், சாந்திபூஷன்** ஆகியோரும், ஜெயலலிதா தரப்பில் **கே.கே.வேணுகோபால்** அவர்களும் வாதாடினார்கள்.

விசாரணையின் போது குறுக்கிட்ட நீதிபதிகள் மத்திய அரசின் வழக்கறிஞர்களைப் பார்த்து-

''ஒரு நீதிமன்றத்திலிருந்து மற்றொரு நீதிமன்றத்திற்கு வழக்குகளை மாற்றவது என்பது முழுவதும் நீதித்துறையின் பணி, மத்திய அரசு நிர்வாகம் எப்படி இதில் தலையிட்டு வழக்குகளைப் பிரித்து 5ஆம் தேதி அறிவிப்பு வெளியிட்டது? நீதித் துறையின் தனிப்பட்ட உரிமையை மத்திய அரசு எப்படிப் பயன்படுத்த முடியும்?'' என்றெல்லாம் வினாக்களைத் தொடுத்தார்.

மத்திய அரசின் ஆணைக்கு எதிராக மூத்த வழக்கறிஞர் **கே.எம்.விஜயன்** அந்த உத்தரவு சட்ட வீரோதமானது என்று அறிவிக்கக் கோரி ''ரிட்'' மனு ஒன்றினைத் தாக்கல் செய்தார். தனி நீதிமன்ற வழக்கை மாற்றிய மத்திய அரசின் அறிக்கையை உடனே ரத்து செய்ய வேண்டுமென்று உச்ச நீதி மன்றத்தில் தமிழக அரசின் சார்பில், *18.02.1999* அன்று மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவினை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட உச்ச நீதிமன்ற நீதிபதிகள் அதன் மீதுள்ள விசாரணையை ***8.3.1999***க்கு ஒத்தி வைத்தனர்.



''ஊழல் தடுப்புச் சட்டத்தை, அ.தி.மு.க.விற்காக 'ஊழல் பாதுகாப்புச் சட்டம்' என மாற்ற வேண்டும் என்பதே பா.ஜ.க. அரசின் நோக்கம்'' என்றது 'துக்ளக்'

இந்த நிலையில் மத்திய உள் துறை அமைச்சராக இருந்த **எல்.கே.அத்வானி** அவர்கள் ***14.2.1999*** அன்று ஒரு கூட்டத்தில்

பேசும் போது, ''கூட்டணிக் கட்சிகளால் பா.ஜ.க. அரசுக்குத் தலைக் குனிவு ஏற்படுகின்றது-கூட்டணிக் கட்சிகளின் மிரட்டலால் திறமையாகச் செயல்பட முடியாத நிலை உள்ளது'' என்று குறிப்பிட்டார்.

அப்போது மத்திய செய்தி - ஒலி பரப் புத்துறை அமைச்சராக இருந்த **பிரமோத் மகாஜன்** கோவையில் செய்தியாளர்களைச் சந்தித்தபோது, ''பீகாரைப் போன்று தமிழக அரசையும் கலைக்க வேண்டுமென்று ஜெயலலிதா கோரியுள்ளதை தான் ஆமோதிக்கவில்லை-சட்டம் ஒழுங்கு பிரச்சினையில் தமிழகத்தை பீகார் நிலைமையோடு ஒப்பிட முடியாது'' என்று தெரிவித்தார். பீகார் அரசு கலைப்பு பற்றி நாடாளுமன்றத்தில் தீர்மானம் வரும்போது, காங்கிரஸ் கட்சி அந்தத் தீர்மானத்தை எதிர்க்கும் என்றும், ஆட்சிக் கலைப்புக்கு ஆதரவு தராது என்றும் அறிவிக்கப்பட்டது.

''காங்கிரஸ் கட்சியின் அந்த முடிவு பாராட்டுக்குரியது-இந்திய அரசியல் வரலாற்றில் அது நல்ல திருப்புமுனையாகும்'' என்று செய்தியாளர்கள் கேட்டபோது நான் கருத்துக் கூறினேன்.

அ.தி.மு.கவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் 26.2.1999 அன்று பிரதமர் வாஜ்பாய் அவர்களைச் சந்தித்து, **வாழப்பாடி** ராமமூர்த்தியிடம் இருந்த பெட்ரோலியத் துறையை அ.தி.மு.க. வுக்கு ஒதுக்க வேண்டுமென்று வலியுறுத்தினர்.

அதே 26 ஆம் தேதியன்றுதான் மக்களவையில் பீகார் தீர்மானம் வாக்கெடுப்புக்காக வர இருந்தது. இதற்கிடையே தெலுங்கு தேசக் கட்சியின் ஆதரவை வாஜ்பாய் அவர்களும், பிரமோத் மகாஜன் அவர்களும், ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்களும் பெறுவதற்கான முயற்சியில் ஈடுபட்டார்கள். பீகாரில் **ராப்ரி தேவி** தலைமையிலான ராஷ்ட்ரிய ஜனதாதள அரசை மீண்டும் பதவியில் அமர்த்த வேண்டுமென்று தெலுங்கு தேசம் நிபந்தனை வைத்து, அதனைப் பிரதமர் அவர்கள் ஏற்றுக் கொண்டதன் பேரில் மக்களவையில் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களிப்பதாக தெலுங்கு தேசம் ஒப்புக்



"குற்றவாளி விருப்பப்படி நீதிபதி நியமனமா?"என்று கேட்டது 'இந்து நாளேடு'

கொண்டது. அதன் காரணமாக **26**ஆம் தேதி மக்களவையில் வாக்கெடுப்பு நடைபெற்றபோது, தீர்மானத்திற்கு ஆதரவாக **279** வாக்குகளும், எதிர்ப்பாக **250** வாக்குகளும் கிடைத்தன.

மாநிலங்களவையில் காங்கிரஸ் கட்சிக்கே பெரும் பான்மையான இடங்கள் இருந்ததால், அங்கே அந்தத்தீர்மானம் நிறைவேறுமா என்பது கேள்விக்குறியாக இருந்தது. பா.ஜ.க.அரசு அந்தத் தீர்மானத்தை மாநிலங்கள் அவைக்கே கொண்டு வராமல் இருந்ததால், வேறு எந்தப் பணியையும் மேற்கொள்ள முடியாத நிலைமை மாநிலங்களவையில் இருந்தது. அந்த நிலையில் கடைசி முயற்சியாக மாநிலங்களவையில் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு, காங்கிரஸ் கட்சியின் ஆதரவைப் பெறும்பொருட்டு, காங்கிரஸ் தலைவி **சோனியா காந்தியைப்** பிரதமர் வாஜ்பாய் தனது இல்லத்திற்கு அழைத்துப் பேச்சு வார்த்தை நடத்தினார்.

இந்தப் பேச்சு வார்த்தையில் மத்திய உள்துறை அமைச்சர் **எல்.கே.அத்வானி,** மாநிலங்களவை காங்கிரஸ் கட்சித் தலைவர் **மன்மோகன்சிங்** ஆகியோரும் கலந்து கொண்டனர். வாஜ்பாய் அவர்களின் கோரிக்கையை சோனியா காந்தி ஏற்க மறுத்துவிட்டார் என்று காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

அதன் பின்னர் அமைச்சரவை பிரதமர் வாஜ்பாய் தலைமையில் கூடி எடுத்த முடிவினை மக்களவையில் உள்துறை அமைச்சர் அறிவித்தார். பீகார் மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியை ரத்து செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளது என்றும், அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அத்வானி அவையிலே அறிவித்தபோது, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மேஜையைத் தட்டி வரவேற்றனர்.

மத்திய அரசின் அந்த முடிவு குறித்து செய்தியாளர்கள் என்னைச் சந்தித்து கருத்து கேட்டனர்.

''பல ஆண்டுகாலமாக அரசியல் சட்டத்திலே உள்ள எந்த 356வது பிரிவை எதிர்த்து தி.மு.க.குரல் கொடுத்து வருகிறதோ- அந்தப் பிரிவு ஜனநாயகத்தின் முன்னால் முடங்கிப்போய் விட்டது என்பதைக் கேட்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். நாடாளுமன்றத்தில் பீகார் கலைப்பு மசோதாவை ஆதரிப்பதில்லை என்று இந்தியத் தேசியக் காங்கிரஸ் கட்சி முடிவெடுத்தபோதே, நான் அதை இந்திய வரலாற்றில் ஒரு திருப்புமுனை என்று குறிப்பிட்டேன். இப்போதும் காங்கிரஸ் கட்சியும், அதன் தலைவர் திருமதி சோனியா காந்தியும் முதலில் எடுத்த முடிவில் உறுதியாக இருந்து 356 இன் மூக்கை அறுத்ததற்காகப் பெருமகிழ்ச்சி அடைகிறேன்'' என்று கூறினேன்.

உடனே செய்தியாளர், ''பீகாரிலேயே அரசு கவிழ்ப்பு நடக்க முடியாத நிலையில், தமிழ் நாட்டிலும் 356ஆவது பிரிவைப் பயன்படுத்தி ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்று சில பேர் சொல்லிக்கொண்டிருக்கிறார்களே–அதைப்பற்றி என்ன கூறுகிறீர்கள்?'' என்று கேட்டனர்.

''கீழ்ப்பாக்கம் மருத்துவமனை வழியாகச் சென்றால், உள்ளேயிருந்து எத்தனையோ குரல்கள் கேட்கும். அதற்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. அது செல்பவர்கள் குற்றமே தவிர, உள்ளேயிருந்து குரல் கொடுப்பவர்களின் குற்றமல்ல'' என்று நான் பதிலளித்தேன்.

45. சிங்கை-மலேசியா நிகழ்ச்சிகள்!

"இந்தப் பெருங் கூட்டம் கலைஞரைத் தவிர வேறு யாருக்குக் கூடும்?" என்று வியந்தார். கவிப் பேரரசு வைரமுத்து.

நெல்லை, குமரி மாவட்டங்களில் மூன்றுநாள் நிகழ்ச்சிகளை முடித்துவிட்டு, 31.12.1998 அன்று சென்னை திரும்பினேன்.

3.1.1999 அன்று நான் மலேசியா-சிங்கப்பூர் நாடுகளுக்குச் செல்லவிருந்ததையொட்டி-31.12.1998 தலைமைச் செயலகத்தில், அதிகாரிகள் எல்லாம் என்னைச் சந்தித்து வாழ்த்துக் கூறினார்கள். சிங்கப்பூரிலிருந்து சென்னை வந்திருந்த "தமிழ் முரசு" ஆசிரியர் திருநாவுக்கரசு-இவரும் திருவாரூர்க்காரர்தான்-அன்று காலையில் என் இல்லத்தில் சந்தித்தார்.

அப்போது அவரிடம், "சிங்கப்பூரில் பத்திரிகை சுதந்திரம் எப்படி?" என்று கேட்டேன்.

அதற்கு அவர், "அங்கே செய்திகளை ஜாக்கிரதையாக எழுத வேண்டும்-கண்டதை எழுத முடியாது!" என்றும் கூறினார்.

நான் உடனே அவரிடம், "எங்கள் நாட்டில் (இந்தியாவில்) காணாததை எல்லாம் எழுதுகிறார்கள்-உங்கள் நாட்டிலே கண்டதை எழுதக் கூடாது என்று சொல்கிறீர்களே?" என்று சிரித்துக்கொண்டே கேட்டேன்.

இந்தியாவிற்கே முன்னோடியாகத் தமிழகம் திகழும் வண்ணம் ஏராளமாக - ஆக்கப்பூர்வமாக திட்டங்களைத் தீட்டி அதனை வெற்றிகரமாக செயல்படுத்திய கழக அரசு 2.1.1999 அன்று சென்னையில்-குறிப்பாக சேப்பாக்கம் தொகுதியில்-

மகளிர் சிறு வணிகக்கடன் திட்டத்தை கூட்டுறவுத் துறையின் சார்பில் தொடங்கி வைத்தேன்.

நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறத்தில் வாழும் ஏழை எளிய மக்கள், சிறு வியாபாரம் செய்து, அதன் வாயிலாக தமது வருமானத்தைப் பெருக்கிடப் போதுமான கடன் வசதிகள் முழுமையாகக் கிடைக்கப் பெறாமல் இருந்ததை எண்ணிப் பார்த்து, அத்தகைய ஏழை எளிய மக்கள், அதிக வட்டிக்குக் கடன் பெற்று, அல்லல்பட்டு தொழில் செய்து, வருங் காலத்திற்கு சேமிக்கவும் இயலாத நிலையில் இருப்பதனைப் போக்க வேண்டுமென்பதற்காகவே குறைந்த வட்டியில் சிறு கடன்கள் கூட்டுறவுத் துறையின் வாயிலாக வழங்கிட முடிவு செய்தது. எந்தவொரு சிறு தொழில் தொடங்க வேண்டுமென்று விரும்புவோருக்கும் அந்தக் கடன் உதவி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த விழாவிற்கு அன்றைய கூட்டுறவுத் துறை அமைச்சர் தம்பி கே.என்.நேரு தலைமை தாங்கினார். தம்பி முரசொலிமாறன் முன்னிலை வகித்தார். டி.ஆர்.பாலு எம்.பி., சென்னை மாநகர மேயர் மு.க.ஸ்டாலின், செ.குப்புசாமி எம்.பி., ப.ரெங்கநாதன் எம்.எல்.ஏ., சட்டப்பேரவை துணைத்தலைவர் பரிதி இளம்வழுதி, அமைச்சர்கள் ஆற்காடு வீராசாமி, சற்குணப் பாண்டியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்.

★ ★ ★

1996இல் கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பிருந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் தொழில்துறை பெரும் பின்னடைவை அடைந்திருந்தது. கழகம் 96இல் பொறுப்பேற்ற பிறகுதான் தமிழகம் தொழில் துறையில் மூன்றாவது இடத்திற்கு வந்தது.

அந்த நேரத்தில்தான் 14.11.1998 அன்று சிங்கப்பூர் நாட்டுத் தகவல், கலை மற்றும் தொழில் வர்த்தகத்துறை அமைச்சராக இருந்த திரு.ஜார்ஜ் இயோ அவர்கள் தமிழ்நாட்டிற்கும், சிங்கப்பூருக்கும் இடையே வேகமாக வளர்ந்து தழைத்துவரும்

பொருளாதார உறவுகளை மேலும் வலுப்படுத்த உதவிடும் வகையில், சிங்கப்பூர் நாட்டிற்கு என்னை வரவேண்டுமென்று அழைப்பு விடுத்திருந்தார்.

அதைப்போலவே மலேசிய நாட்டுத் தொழில் முனைவோரில் பலர் கட்டமைப்பு வசதி உள்ளிட்ட பல திட்டங்களில் முதலீடு செய்யத் தயாராக இருப்பதாகவும், நான் ஒரு முறை வருகை தந்தால், அது இரு நாட்டிற்கும் இடையேயான உறவை மேலும் வளர்த்திட உதவும் என்றும், *16.11.1998* அன்று மலேசிய நாட்டின் பொதுப்பணித்துறை அமைச்சர் **டத்தோ ஸ்ரீசாமிவேலு** அவர்களும், அந்த நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சர் டத்தோ **ஸ்ரீஅப்துல்லா ஹாஜி அஹ்மத் படாவி** அவர்களும் அழைப்பு விடுத்திருந்தனர்.

எனவே அந்த அழைப்புகளையேற்று, தமிழகத்திற்கு வெளிநாட்டு முதலீடுகளைத் தேடிப் பெறுகின்ற நோக்கத்தோடு சிங்கப்பூர்-மலேசியா நாடுகளில் ஒரு வாரகாலம் சுற்றுப் பயணம் செய்திட முடிவெடுத்து, *3.1.1999* அன்றிரவு சென்னையிலிருந்து புறப்பட்டேன்.



என்னை வரவேற்ற சிங்கப்பூர் பிரதமர் கோ சோக் டோங் அவர்களுக்கு வள்ளுவர் கோட்டத்தின் மாதிரி உருவப் பரிசினை வழங்கினேன்.

விமான நிலையத்திற்கு **பேராசிரியர்** உள்ளிட்ட அமைச்சர்களும், அதிகாரிகளும், முக்கிய பிரமுகர்களும், சட்டப் பேரவைத் தலைவராக இருந்த **பி.டி.ஆர்.பழனி வேல் ராஜன்** அவர்களும், தோழமைக் கட்சித் தலைவர்களும், வருகை தந்து என்னை வாழ்த்தி வழியனுப்பினர். என்னுடன் எனது மனைவி **ராஜாத்தியும்**, அமைச்சர் **ஆற்காடு வீராசாமியும்**, தொழில்

துறைச் செயலாளர் **எம்.எஸ்.சீனிவாசன் ஐ.ஏ.எஸ்.,** அவர்களும் வந்திருந்தனர்.

சிங்கப்பூர் விமான நிலையத்திற்கு ***4.1.1999*** அன்று விடியற்காலையில் சென்றடைந்த எனக்கு சிங்கப்பூரில் உள்ள தமிழ் அமைப்புகளின் சார்பிலும், இந்தியத் தூதரகத்தின் சார்பிலும் சிறப்பாக வரவேற்பளிக்கப்பட்டது.



மலேசியப் பிரதமர் மகாத்தீர் முகம்மது அவர்களுக்கு 'சங்கத் தமிழ்' 'குறளோவியம்' ஆங்கில மொழிபெயர்ப்பு நூல்களை வழங்கினேன்.

வர்த்தக வளர்ச்சிக் கழகம் சார்பில் **டான் வீ வென், ஓ பூன் குவான்** ஆகியோர் எனக்குப் பூங்கொத்து கொடுத்து வரவேற்றனர்.

தூதுவரகத்தின் சார்பில் இந்தியத் தூதர் **பிரேம் சிங்,** அதிகாரி **சந்திரசேகரன்** ஆகியோர் வரவேற்றனர்.

''தமிழ் முரசு'' பத்திரிகை சார்பில் ஆசிரியர் **திருநாவுக்கரசு,** தமிழ் எழுத்தாளர் கழகத் தலைவர் **அமலதாசன்,** தமிழ்மொழி பண்பாட்டுக் கழகத் தலைவர் **அரிகிருஷ்ணன்** மற்றும் **நா.ஆண்டியப்பன், கிருஷ்ணன், இந்திரா கிருஷ்ணன்** ஆகியோரும் சால்வை அணிவித்து வரவேற்றனர்.

அந்த நேரத்தில் சிங்கப்பூர் நகரில் வாழ்ந்து கொண்டிருந்த என் மகள் **கனிமொழியும்,** மருமகன் **அரவிந்தனும்** விமான நிலையத்திற்கு வந்திருந்தனர்.


விமான நிலையத்தில் திரண்டிருந்த செய்தியாளர்களிடம் கூறும்போது, ''நீண்ட காலமாக தமிழகத்திற்கும், சிங்கப்பூருக்கும் கலாச்சாரத் தொடர்பு இருந்து வருகிறது. இந்தத் தொடர்பை மேலும் உறுதிப்படுத்துகின்ற வகையில், என்னுடைய இந்தப் பயணம் அமையும் என்று நம்புகிறேன். இந்தப் பயணத்தில் இங்குள்ள தமிழக மக்களைச்

சந்திப்பதிலும், பொதுவாக சிங்கப்பூர் பொதுமக்களைச் சந்திப்பதிலும் மிகுந்த மகிழ்ச்சி அடைவதோடு, அரசாங்கத்தின் முக்கியப் பிரமுகர்கள், தொழில் முனைவர்களுடனான சந்திப்பும் பயன் உடையதாக இருக்குமென்று கருதுகிறேன். சிங்கப்பூர் பயணம் என்பது என்னுடைய நீண்டகாலக் கனவு, அது இன்று நிறைவேறுவதில் பூரிப்பு கொள்கிறேன்'' என்று குறிப்பிட்டேன்.

''சிங்கப்பூருக்கு வருவது என் நீண்டகாலக் கனவு'' என்று நான் அந்தப் பேட்டியிலே குறிப்பிட்டதுபற்றி **கவிப்பேரரசு வைரமுத்து** அவர்கள், **''சிங்கப்பூர் மலேசியாவில் சங்கத் தமிழ்''** என்ற தலைப்பில் எழுதிய ஒரு கட்டுரையில்-

''சிங்கப்பூருக்கு வருவது என் நீண்ட காலக்கனவு என்று சிங்கப்பூர் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் கலைஞர் குறிப்பிட்டிருக்கிறார். அது ஒருவர் கண்ட கனவு-ஆனால், சிங்கப்பூருக்கு கலைஞர் வர வேண்டும் என்பது பல்லாயிரம் தமிழர்கள் கண்ட கனவு. இரு தரப்புக் கனவுகளும் ஒரு பொழுதில் பலித்தன'' என்று எழுதியிருந்தார்.

சிங்கப்பூர் சென்றடைந்த அதே நாளில் ஓய்வெடுக்கக்கூட நேரம் இல்லாமல், சிங்கப்பூர் தொலைக்காட்சி சார்பில் சிறப்புப் பேட்டிக்காக வந்து காத்திருப்பதாகக் கூறினார்கள். முழுப் பேட்டியும் மிகவும் நீளமானது என்பதால், முக்கிய மான சிலவற்றை மட்டும் இங்கே குறிப்பிடுகிறேன்.



தூதுவரகத்தின் சார்பில், இந்தியத் தூதர் பிரேம்சிங் என்னை வரவேற்றார்

செய்தியாளர்:- சிங்கப்பூருக்குத் தங்கள் குழுவுடன் வந்திருக்கிறீர்கள். சிங்கப்பூர்-தமிழ்நாடு என்ற இரண்டு நாடுகளுக்கும் இடையே எந்த விதமான வர்த்தக வாய்ப்புகளை உருவாக்கப்போகிறீர்கள்?

நான்:- நான் சிங்கப்பூருக்கும், மலேசியாவுக்கும் வந்திருப்பது நீண்டகாலக் கனவாகும். மலேசியாவுக்காவது ஒருமுறை வந்திருக்கிறேன். சிங்கப்பூருக்கு நான் இதுவரை வந்தது இல்லை. இப்போது வந்திருப்பது தொழில் தொடர்புக்காக மாத்திரமல்ல - சிங்கப்பூருக்கும், தமிழ்நாட்டிற்கும் உள்ள கலாச்சாரத் தொடர்பை உறுதிப்படுத்திக் கொள்ள என் வருகை பயன்படும் என்ற நம்பிக்கையோடு வந்திருக்கிறேன். இந்தக் கலாச்சாரத் தொடர்பு மேலும், மேலும் வளர வேண்டும் என்ற அந்த நம்பிக்கையோடு, சிங்கப்பூர்-மலேசியாவிலுள்ள தொழில் முனைவோருடைய உதவியும், ஒத்தாசையும் தமிழ்நாட்டிற்கு மேலும் தொழில் வளரக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது.

செய்தியாளர்:- தமிழ்நாட்டில் எத்தகைய தொழில் முதலீடு செய்ய முன்னுரிமை அளிப்பீர்கள்?

நான்:-எல்லா வகையான தொழில்களுக்கும் தான்! தமிழ்நாட்டில் இப்போது எங்களுக்கு மிக அதிகமாகத் தேவைப்படுவது மின் உற்பத்தி, எனவே நாங்கள் தொழில் வளர்ச்சிக்காக முனைப்பு காட்டுவது, மின் உற்பத்தி செய்ய வருகிறவர்களை வரவேற்பதில்தான். அடுத்து மோட்டார் கார் உற்பத்தித் தொழில், தமிழ்நாட்டில் மிக அதிகமாக வளரக்கூடிய சூழ்நிலை உருவாகி இருக்கிறது. ஒரே ஆண்டு காலத்தில் **ஹூண்டாய்** கார் உற்பத்தித் தொழிற்சாலை தொடங்கப்பட்டு நிறைவடைந்து, இப்போது கார் உற்பத்தி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அடிப்படைக் கட்டுமான வசதிகள் பலவற்றை எல்லாத் தொழில்களுக்கும் தேவையான வகையில் செய்து கொண்டிருக்கிறோம். தொழில் முனைவோர் எந்தெந்த தொழில் தொடங்க வேண்டுமென்று விரும்புகிறார்



சிங்கப்பூரில் குடியிருந்த எனது மகள் கனிமொழியின் இல்லத்திற்கு என் துணைவியாருடன் சென்று, அவரது பிறந்த நாளில் வாழ்த்தினேன். அருகே மருமகன் அரவிந்தன்

களோ அதற்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்க தமிழ் நாடு அரசு தயாராக இருக்கிறது.

செய்தியாளர்:- தமிழ் நாட்டில் சிங்கப்பூர் சாளரம் என்ற பேச்சு அதிகமாக அடிபட்டது. ஆனால், அது பெங்களூருக்குப் போய் விட்டது. அதைப் போலவே வேறொன்று தமிழ் நாட்டில் மீண்டும் வர வாய்ப்புண்டா?

நான்:-சிங்கப்பூர் தாழ்வாரம் 1996 ஆம் ஆண்டுக்கு முன்பு அப்போது நடைபெற்ற ஆட்சிக் காலத்தில் பேசப்பட்ட ஒன்றாகும். அது தமிழகத்திற்கு வரும் என்று வெகுவாக எதிர்பார்க்கப்பட்டது. நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தாலும், தமிழ்நாடு தொழில் வளம் பெற வேண்டும் என்ற ஆர்வத்தோடு எதிர் பார்த்துக் கொண்டிருந்தோம். அது வரவில்லை. என்ன காரணத்தாலோ கர்நாடகத்திற்குப் போய்விட்டது. ஆனால், அங்கு எப்படிச் செயல்படுகிறதென்று தெரியவில்லை. சிங்கப்பூர் தாழ்வாரம் நமக்குக் கிடைக்காமல் போய் விட்டாலும், **சிங்கப்பூர் கூடமாவது** தமிழ்நாட்டிற்கு வர வேண்டுமென்ற ஆசை எனக்குள்ளது.

செய்தியாளர்:- சிங்கப்பூரில் உள்ள தமிழர்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய அதிக ஆர்வம் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், நடைமுறை சிரமம் காரணமாகத் தயக்கம் ஏற்படுகிறது. எனவே, சிங்கப்பூர் சார்பாக தொழில் தொடங்க வருபவர்களுக்குத் தனி வசதி செய்து தரப்படுமா?

நான்:-நான் சிங்கப்பூரிலும், மலேசியாவிலும், உள்ள தொழில் முனைபவர்களைச் சந்திக்க இருக்கிறேன். இன்றுகூடச் சிலரை சந்திக்க உள்ளேன். 9ஆம் தேதிவரை தொடர்ந்து

சந்திக்கவிருக்கிறேன். அவர்கள் என்னென்ன சலுகைகளை எதிர்பார்க்கிறார்கள் என்பதை அவர்கள் மூலமாகக் கேட்டுத் தெரிந்து கொண்டு, நிச்சயமாகத் தட்டிக் கழிக்க மாட்டேன். தமிழ்நாட்டில் தொழில் வளர வேண்டும் என்ற ஆர்வத்துடன் இருப்பதால் தட்டிக் கழிக்காமல் உரிய உதவிகளைச் செய்வேன்.

★ ★ ★


நான் சிங்கப்பூர் தொலைக்காட்சிக்கான சிறப்புப் பேட்டியை முடித்ததுதான் தாமதம் - சிங்கப்பூர் வானொலிக்கும் சிறப்புப் பேட்டி என்று வந்து விட்டார்கள். அவர்களின் கோரிக்கையையும் நிறைவேற்றினேன்.

அடுத்து இந்திய வர்த்தகக் குழுத்தலைவர் **தேவேந்தர் சிங்,** நான் தங்கியிருந்த **மாண்டரின்** ஓட்டலுக்கு வந்த என்னைச் சந்தித்தார். அவருடன் சிங்கப்பூரில் உள்ள இந்தியத்தூதர் **பிரேம் சிங்** அவர்களும் வந்திருந்தார். மதிய உணவு சாப்பிட அரைமணி நேரத்தைத் தாராளமாக ஒதுக்கினார்கள்.

பிற்பகல் 2 மணிக்கு சிங்கப்பூர் நாட்டுத் தகவல் தொடர்புத் துறை அமைச்சர் **மா.போ.டான்** அவர்கள் வந்திருப்பதாகவும், அவரைச் சந்திக்க வேண்டுமென்றும் கூறினார்கள். அவரைச் சந்தித்தபின்,சிங்கப்பூர் துறைமுகக் கழகத்தின் துணைத்தலைவர் **திரு.கூன் கோக் லூன்** அவர்களுடனும், துறைமுகக் கழகத் தினருடனும் உரையாடினேன். சிங்கப்பூர் துறைமுக வளாகம் முழுவதையும் சுற்றிப் பார்த்தேன். அங்கிருந்து புறப்படும் போது, சிங்கப்பூர் துறைமுக ஆணையத்தின் துணைத்தலைவர் **கூன் கோக் லூன்** அவர்கள் சிங்கப்பூர் துறைமுக வளர்ச்சி குறித்து தொகுப்பு ஒன்றையும், அழகான "டை" ஒன்றையும் என்னிடம் வழங்கினார்.

அதைப் பெற்றுக் கொண்ட நான்-தமிழகத்திற்கும் சிங்கப்பூருக்கும் இடையே தொழில் வளர்ச்சிக்கு "டை" *(முடிச்சு)* போடுவதற்காக வந்துள்ள எனக்கு நீங்கள் "டை" அளித்திருப்பது பொருத்தம்தான்" என்று கூறினேன்.

★ ★ ★



சிங்கப்பூர் துறைமுக ஆணையத்தின் துணைத் தலைவர் கூன் கோக் லூன் எனக்கு அழகான டை ஒன்றை வழங்கினார்.

என் மகள் கனிமொழிக்கு **5.1.1999** அன்று பிறந்த தினம் என்பதால்-அன்று காலையிலேயே நானும், என் மனைவியும் புறப்பட்டு, சிங்கப்பூருக்கு வெளியே ஒரு பலமாடிக் கட்டிடத்தில் குடியிருந்த அவரது வீட்டிற்குச் சென்று வாழ்த்து கூறினேன். பிறந்த நாளன்று நான் அவருடைய வீட்டிற்கு வந்ததில் மகளுக்கும், மாப்பிள்ளைக்கும் பெரிய மகிழ்ச்சி. பகல் உணவை அவர்கள் இல்லத்தில் வைத்துக் கொள்ள வலியுறுத்தினார்கள்.

இருந்தாலும் 5.1.1999 அன்று பகல் ஒரு மணிக்கு சிங்கப்பூர் நாட்டின் கலை, தகவல் மற்றும் தொழில் துறை அமைச்சர் **திரு.ஜார்ஜ் இயோ** அவர்கள் அளித்த விருந்தில் கலந்து கொள்ள ஒப்புதல் தெரிவித்திருந்ததால், நிலைமையை விளக்கி விட்டுப்புறப்பட்டோம்.

மதிய விருந்தின்போது அமைச்சர் ஜார்ஜ் இயோ பேச்சின் இடையே-சென்னை மாநகர மேயரைப் பற்றித் தான் கேள்விப் பட்டிருப்பதாகவும், சிங்கப்பூரைப் பார்வையிட அவரை அனுப்பி வைக்க வேண்டுமென்றும் என்னிடம் கேட்டுக் கொண்டார்.

அந்த விருந்தில் கலந்து கொண்டிருந்த சிங்கப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் **சின்னக் கருப்பன்**, சிங்கப்பூர் அமைச்சரிடம் சென்னை மாநகர மேயராக முதலமைச்சர் கலைஞரின் மகன் **மு.க.ஸ்டாலின்** தான் பதவி வகிப்பதாகத் தெரிவித்ததும், அமைச்சர் தனது பெருமகிழ்ச்சியை வெளியிட்டார்.

அன்று மாலையில் சிங்கப்பூர் இந்தியத் தொழில் மற்றும் வர்த்தகக் கழகம் ஏற்பாடு செய்த கூட்டத்தில் கலந்து கொண்டு,

தமிழ்நாட்டில் நடைபெற்று வந்த தொழில் வளர்ச்சி குறித்து விரிவாக நீண்ட நேரம் உரையாற்றினேன். சிங்கப்பூர் தொழில் அதிபர்கள் பலர் அந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு, தமிழகத்திலே தொழில் தொடங்குவது பற்றியும், என்னென்ன சலுகைகள் வழங்கப்படும் என்பது பற்றியும் நீண்ட நேரம் கேள்வி கேட்டு பதிலைப் பெற்றனர்.

அதே நாளில் சிங்கப்பூரில் உள்ள பத்திரிகையாளர்களுக் கெல்லாம் ஒரு நீண்ட பேட்டியும் கொடுத்தேன்.

சிங்கப்பூர் நாட்டின் மூத்த தொழில் வர்த்தகத்துறை அமைச்சர் திரு.ஜார்ஜ் இயோ அளித்த பகல் விருந்தில் கலந்து கொண்ட போது, தமிழகத்தின் தொழில் வளர்ச்சி குறித்தும், அதற்கு சிங்கப்பூர் அரசு எந்த வகையில் எல்லாம் உதவிடலாம் என்பது பற்றியும், அவ்வாறு உதவிட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டேன்.

5ஆம் தேதி மாலை **4 மணிக்கு,** சிங்கப்பூர் நாட்டின் பிரதமர் **திரு.கோ.சோக் டோங்** அவர்களைச் சந்தித்து 45 நிமிடங்கள் உரையாடினேன். இந்தியநாட்டின் பொருளா தாரக் கொள்கை குறித்தும், அரசியல் நிலவரங்களைப் பற்றியும் விரிவாக உரையாடினோம். வேலை வாய்ப்பு தேடி சிங்கப்பூருக்கு வந்து அவதிப்படும் இளைஞர்களைப் பற்றி பிரதமரிடம் விளக்கி, அவர்களுக்கு உதவிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். பிரதமருக்கு தமிழகத்தின் சார்பில் சந்தன மாலை அணிவித்ததோடு, சந்தனத்தால் செய்யப்பட்ட **வள்ளுவர் கோட்டத்தின்** உருவ அமைப்பினைப் பரிசாக வழங்கினேன்.

6.1.1999 அன்று காலையில், இந்திய வர்த்தகக் குழு ஏற்பாடு செய்திருந்த நெறிகாட்டும் குழுவினருடன் நடந்த கலந்துரையாடல் கூட்டத்தில் பங்கு கொண்ட நான், தொழில் முனைவோர் எழுப்பிய கேள்விகளுக்கும் அய்யப்பாடுகளுக்கும் தெளிவுரைகளைத் தந்தேன்.

வெளிநாட்டில் வாழும் இந்தியர், இந்தியாவில் முதலீடு செய்வது குறித்து மத்திய அரசு அப்போது வெளியிட்டிருந்த அறிக்கை ஒன்றையும் அவர்களிடம் அளித்தேன்.



இந்திய வர்த்தகக் கழகம் ஏற்பாடு செய்திருந்த கலந்துரையாடல் கூட்டத்தில் தொழில் முனைவோரின் கேள்விகளுக்குப்பதில்அளித்தேன்.

எனது சிங்கப்பூர் வருகையையொட்டி தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் இலக்கிய உரை ஒன்றினை நான் ஆற்ற வேண்டுமென்ற விருப்பத்துடன் 6.1.1999 அன்று அதற்கு ஏற்பாடு செய்திருந்தனர். சிங்கப்பூரில் உள்ள பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களும் அந்த விழாவிற்கு வருகை தந்திருந்தனர். சிங்கப்பூர் சரித்திரத்திலேயே அந்த அளவிற்கு ஓட்டு மொத்தமாக பெரும் கூட்டம் ஒரு நிகழ்ச்சிக்கு வந்ததில்லை என்று அடுத்தநாள் அங்குள்ள ஏடுகள் எல்லாம் செய்தி வெளியிட்டன.

அரசியல் கலப்பற்ற முறையில் ஒருமணி நேரத்திற்கு மேல் அந்தக் கூட்டத்தில் நான் உரையாற்றினேன். கூட்டம் தொடங்குவதற்கு சில மணி நேரங்களுக்கு முன் பலத்த மழை பொழிந்தபோதிலும், அதனைப் பொருட்படுத்தாமல், தமிழ்ப் பெருங்குடி மக்கள் அந்த விழாவிற்கு வருகை தந்திருந்தனர்.

கூட்டம் தொடங்குவதற்கு இரண்டு மணி நேரத்திற்கு முன்பாகவே என்னை அங்கே அழைத்துச் சென்று, தனியானதொரு ஹாலில் அமரச் செய்து, பல்வேறு தமிழ் அமைப்புகளின் சார்பில் பொன்னாடைகளும், சால்வைகளும், மலர் மாலைகளும், பூங்கொத்துகளுமாக வழங்கிய நிகழ்ச்சி முடியவே இரண்டு மணி நேரம் ஆயிற்று.

மேடை புதுமையான வகையில் நன்றாக அலங்கரிக்கப் பட்டிருந்தது. ஒரு நாற்காலி கூட மேடையிலே போடப்பட வில்லை. விழாப் பொறுப்புகளை தலைமையேற்று நடத்திய

திருநாவுக்கரசு மேடைக்குச் சென்று என்னை உரையாற்றுமாறு கேட்டுக் கொண்டார்.

அந்த நிகழ்ச்சி குறித்து தம்பி வைரமுத்து தன் கட்டுரையில்-

''நிமிடங்கள் பொன்னாகும் சிங்கப்பூரில் ஒரு வேலை நாளில், பிற்பகல் 4.30 மணிக்கு அத்தனை பெரிய திருக்கூட்டம் கலைஞருக்கன்றி வேறு யாருக்குக் கூடக்கூடும்? அரங்கில் ஒலி முழங்க-அத்தனை கண்களிலும் மின்னல் துலங்க - அத்தனை கரங்களும் அனிச்சைச் செயலாய்க் கரவொலி வழங்க- ஆனந்தத்துக்கும், அழுகைக்கும் மத்தியில் இதயம் குழைய-சிங்கப்பூர்த் தமிழர்களின் கனவு மெல்ல மெல்ல நடந்து மேடையேறுகிறது! நாற்காலியற்ற-ஒலிபெருக்கி மட்டுமே கொண்ட தனிப்பெரும் மேடையில் தமிழ் பேசத் தொடங்குகிறது, தமிழ்! சிங்கைத் தமிழர்களுக்கு கலைஞரைப் பார்த்த பரவசம்-கலைஞருக்கோ சிங்கைத் தமிழர்களின் பாசம் கண்டு பரவசம்! கண்ணீரில் நீந்திக் கரையேற முடியாமல் வார்த்தைகள் மூழ்கி மூழ்கித் தலைகாட்டுகின்றன.''

''இப்போது உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன். பேசாமல் உங்களையெல்லாம் பார்த்துக் கொண்டேயிருக்கலாம் போலிருக்கிறது'' என்று தொடங்குகிறார். நிறைந்து போயிருந்த அவை நெகிழ்ந்து போய் நிற்கிறது. ''என்னை நீங்கள் தன்னந்தனியாக நிறுத்தினாலும், உங்களை



கோலாலம்பூரில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சியில், என்னைப் பற்றிய நிகழ்ச்சித் தொகுப்பு ஒன்று ஒளிபரப்பப்பட்டது



'மலேசிய நண்பன்' இதழில் ''மலேசியாவுக்கும் தமிழகத்திற்கும் இடையே இருவழி வர்த்தகம் காண கலைஞரின் வருகை நல்ல தொடக்கம்'' என்று எழுதியிருந்தார், அதன் ஆசிரியர் அ.ஆதிகுமணன்

நான் தன்னந்தனியனாக ஆக்கமாட்டேன்'' என்று அவர் உறவு மொழியால் கொடுத்த உறுதி மொழியை என் சிங்கப்பூர் நண்பர்கள் தொலைபேசியில் சொல்லிச் சொல்லித் திளைக்கிறார்கள்.''

- என்றெல்லாம் எழுதி விட்டு, அந்தக் கட்டுரையை முடிக்கும்போது, ''அன்று கடாரம் கொண்டவன் கூட அந்த மண்ணை மட்டுமே வென்றான்- கலைஞரோ மனங்களை வென்றிருக்கிறார். மண்ணை வென்றவன் தற்காலிக வெற்றி பெறுகிறான். மனங்களை வெல்லுகிறவனே நிரந்தர வெற்றி பெறுகிறான். கலைஞர் வெற்றி -நிரந்தர வெற்றி'' என்று குறிப்பிட்டிருந்தார்.

அன்றைய தினம் நான் ஆற்றிய உரையை சிங்கப்பூர் தமிழ்முரசு ஏடு ***''கலைஞர் பொழிந்த தமிழ் மழை''*** என்று புகழ்ந்து செய்தி வெளியிட்டிருந்தது. அந்தச் செய்திக் கட்டுரையின் சில பகுதிகள் மட்டும் இதோ:-

''வெளியில் மழை கொட்டியது. அதில் நனைந்தபடி சிங்கப்பூர் உள்ளரங்கில் குவிந்த 6000 தமிழ் மக்கள் கலைஞர் மு.கருணாநிதியின் இலக்கியச் சுவை நிறைந்த சொல் மழையில் மீண்டும் நனைந்தனர். நகைச்சுவையும், உணர்வும் செறிந்த கலைஞரின் சொல் மழையில் மக்கள் மெய் சிலிர்த்தனர். அவருடைய 75 நிமிட பேச்சின் போது, இடையிடையே கையொலி எழுப்பி, அவர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர். மூன்று நாள் அதிகாரப்பூர்வ வருகை மேற்கொண்டு வந்த பயணத்தின் கடைசி நாளான நேற்று, தமிழ் முகங்கள் பல்லாயிரத்தை ஒரு சேரக் கண்டதில் தமிழக முதல்வர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

கல்விமான்கள், இலக்கியவாதிகள், ரசிகர்கள் என அனைத்துத் தரப்பினரும் வந்தனர்.''

''சிலர் குடும்பத்தோடு, சின்னஞ்சிறுசுகளை அழைத்து வந்தனர். இளமையிலேயே இலக்கியத்தில் ஆர்வத்தை ஏற்படுத்தி விடலாம் என்பது அந்தப் பெற்றோர்களின் எண்ணமாக இருக்கும்.''

''தமிழ் மொழியின் இனிமையையும், பழமையையும் சுட்டிக்காட்டி தம் பேச்சைத் தொடங்கிய கலைஞர் கருணாநிதி, திருக்குறள், அகநானூறு, புறநானூறு, புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் ஆகியோரின் பாடல்களை மேற்கோள் காட்டினார். தமிழ் இலக்கியச் சிறப்பை எளிமையாகவும், சுவையாகவும் விளக்கி, அவையில் குழுமியிருந்த தமிழ் உள்ளங்களைக் கவர்ந்தார்.''

''என் உயிரினும் மேலான உடன்பிறப்புகளே'' என்று கலைஞர் வாய் நிறைய அழைத்தது அவையில் கூடியிருந்த தமிழ் உள்ளங்களை அன்பு மழையில் நனைத்தது. கலைஞர் கருணாநிதி, தமிழக சுகாதார மின்சார அமைச்சர் ஆற்காடு வீராசாமியுடன் மற்றும் தமது மனைவி மகளுடனும் கெட்டி மேளம் முழங்க அரங்கினுள் வந்து சேர்ந்தார். அப்போது கெட்டி மேள முழக்கத்திற்குப் போட்டியாக முழங்கியது, தமிழ்மக்களின் கரவோசையும் சீட்டி ஒலியும்!''

''இலக்கியச் சொற்பொழிவைத் தொடங்குவதற்கு மேடை ஏறிய கலைஞர் சற்றுத் திகைத்துப் போனார். ''பொது விழாவில் கலந்து கொள்ளும் போதும் அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும்போதும் மேடையில் அமைச்சர்களும், அதிகாரிகளும் நிரம்பியிருப்பது வழக்கம். ஆனால், இன்றோ தன்னந்தனியாக என்னை அனைவரும் விட்டுவிட்டனர். ஆனால், நானோ என்றும் என் இனிய தமிழ் மக்களைத் தனியாக விட்டுவிடமாட்டேன்- என்ற கலைஞரின் வாசகம் மனதைத் தொட்டது. நடைமுறைக்கு ஏற்ப சங்க காலப்பாடல்களை அவர் எடுத்துரைத்த முறை மிக நன்று. முதியவர்களுக்கு மட்டுமே முதல்வர் பேச்சு சுவைக்கும் என்று

நினைத்திருந்த எனது அறியாமை நேற்றைய உரையைக் கேட்டபின் விலகியது.''

''கலைஞரின் பேச்சு முடிந்த பிறகு உயர்நிலை மூன்றாம் வகுப்பில் பயிலும் மாணவி **கமலாவை** அணுகி, அவரது கருத்தைக் கேட்டேன். ''முதல்வரின் பேச்சு எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அதோடு நான் இதுவரை படித்து முழுமையாகப் புரிந்து கொள்ளாத **திருக்குறள்** இப்போது எனக்கு மனதில் ஆழமாகப் பதிந்து விட்டது. ஒரு மணி நேரத்திற்கு மேல் கலைஞர் பேசும்போது ''போதும்'' என்று எண்ணாமல், ''இன்னும் கொஞ்சம் பேசியிருக்கலாமே'' என்ற ஆதங்கமே எல்லோரது நெஞ்சிலும் மிஞ்சியிருந்தது.'' என்று தமிழ் முரசு ஏடு அந்த கட்டுரையை முடிந்திருந்தது.

★ ★ ★

சிங்கப்பூரில் 6ஆம் தேதி மாலையில் நடைபெற்ற இந்த விழாவினை முடித்துக்கொண்டு, மறுநாள் 7ஆம் தேதியன்று காலையில் சிங்கப்பூரிலிருந்து புறப்பட்டு, மலேசிய நாட்டிற்கு வந்து சேர்ந்தேன்.

விமான நிலையத்தில் மலேசிய பொதுப்பணித்துறை அமைச்சர் டத்தோ சாமிவேலு அவர்கள் தலைமையில் இந்தியத் தூதுவர் சகாய் மற்றும் அதிகாரிகள் உட்பட பலரும் வருகை தந்து வரவேற்றனர்.

''தமிழ் நேசன்'' பத்திரிகை முழுவதிலும் என்னை வரவேற்று பல்வேறு விளம்பரங்கள் வெளிவந்திருந்தன. ''மலேசியாவுக்கும், தமிழகத்திற்கும் இடையிலான இருவழி வர்த்தகம் ஏற்றம் காண்பதற்கு கலைஞரின் வருகை நல்ல தொடக்கம்'' என்ற தலைப்பில் கட்டுரை



கோலாலம்பூரில் மலேசியாவின் வாணிபம்- தொழில்துறை அமைச்சர் ரபீதா அஜீஸ் அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்து உரையாடினேன்



டத்தோ சாமிவேலு தனது குடும்பத்தினருடன் என் குடும்பத்தினருக்கு விருந்தளித்தார்.

ஒன்றும் அந்த இதழில் இடம் பெற்றிருந்தது. மலேசியநாட்டின் இன்னொரு இதழ் **அ.ஆதி குமணன்** அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் **''மலேசிய நண்பன்''**- அதிலும் பக்கம் பக்கமாக எனது வருகை பற்றி கட்டுரைகளும், விளம்பரங்களும் இடம் பெற்றிருந்தன.

மலேசிய பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த டத்தோ சாமிவேலு அவர்கள் அவரது இல்லத்தில், **7.1.1999** அன்று எனக்கும், என்னுடன் வந்தவர்களுக்கும் மதிய விருந்தளித்தார்.

அன்று மாலையில் மலேசிய நாட்டின் பன்னாட்டு வாணிபம் மற்றும் தொழில்துறை அமைச்சர் **டத்தோ ஸ்ரீ ரபீதா அஜீஸ்** அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்து உரையாடினேன்.

மலேசிய பொதுப்பணித்துறை அமைச்சரின் அலுவலகத் திற்கு **8.1.1999** அன்று காலையில் நான் சென்று பொதுப்பணித் துறை அமைச்சருடனும், மற்றும் பொதுப்பணித்துறை துணை அமைச்சர், செயலாளர், அதிகாரிகள் ஆகியோருடனும், சென்னையில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க ஒரு திட்டத்தை நிறைவேற்றுவது குறித்தும்-குறிப்பாக சென்னை துறைமுகத்திலிருந்து விமான நிலையம் வரை கோயம்பேடு வழியாக **உயரச் சாலை** அமைக்கும் திட்டம் குறித்தும் விவாதித்தேன்.

சிங்கப்பூர் நகரில் **6ஆம்** தேதி நடைபெற்ற இலக்கிய நிகழ்ச்சியினை மிஞ்சும் வகையில், 8ஆம் தேதியன்று மாலையில் மலேசிய நாட்டின் தலைநகரான கோலாலம்பூரில் புத்ரா உலக வணிக மையத்தில், **''மெர்தேகா''** அரங்கத்தில், பொது வரவேற்பு நிகழ்ச்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அங்கேயும் நிகழ்ச்சி 6 மணிக்குத்தான் தொடங்கப்படும் என்ற அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், மாலை 4 மணி அளவிலேயே அனைத்துச் சாலைகளும் போக்குவரத்து நெரிசல் காரணமாக நின்றுவிட்டன. கூட்டம் நடைபெற்ற உள்ளரங்கமும் மாலை 4 மணி அளவிலேயே நிரம்பிவிட்ட காரணத்தால்-அரங்கத்திற்கு வெளியே உடனடியாக தொலைக்காட்சிப் பெட்டிகள் கொண்டு வரப்பட்டு, அங்கேயும் மக்கள் அமர வசதிகள் செய்யப்பட்டன. கூட்டம் 6 மணிக்குத்தான் என்ற அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் மாலை 5 மணி அளவிலேயே டத்தோ சாமிவேலு அவர்கள் நான் தங்கியிருந்த இடத்திற்கு தொலைபேசியிலே தொடர் கொண்டு, உடனடியாக மேடைக்கு வர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

அவ்வாறே நான் புறப்பட்ட போதிலும் போக்குவரத்து நின்றுவிட்ட நிலையில், என்னை அழைத்துச் செல்ல காவல் துறையினர் மிகவும் சிரமப்பட்டனர். வாயிற்புற வழியாக உள்ளே நுழைய முடியாத அளவிற்குக் கூட்டம் இருந்ததால்-பின்புற வழியாக நான் அழைத்துச் செல்லப்பட்டேன். 15 நிமிட நேரத்தில் வரவேண்டிய எனக்கு மேடையை அடைந்திடவே ஒரு மணி நேரம் ஆயிற்று.

நிகழ்ச்சி தொடங்கப்படுவதற்கு முன்பு வீடியோவில் என்னைப் பற்றித் தயாரிக்கப்பட்டிருந்த நிகழ்ச்சித் தொகுப்பு ஒன்று பத்து நிமிட நேரம் காட்டப்பட்டது. பின்னர் மலேசியக் கவிஞர் டாக்டர் **ப.பூபாலன்** என்னை வரவேற்றுக் கவிதை ஒன்றினைப் படித்தார்.

மலேசியா அமைச்சர் டத்தோ சாமிவேலு அவர்கள் வரவேற்புரையாற்றி, **''இப்போது தமிழ்க்கடல் வரப் போகிறது''** என்று கூறி என்னை உரையாற்ற அழைத்தார்.



சென்னையில் துறைமுகத்திலிருந்து விமான நிலையம் வரை 'உயரச் சாலை' அமைக்கும் திட்டம் குறித்து அமைச்சர் டத்தோ சாமிவேலுவுடன் விவாதித்தேன்.

அதையே என் உரைக்குத் தொடக்கமாக எடுத்துக் கொண்டேன். பெருமதிப்புக்கும், மரியாதைக்கும், பாசத்திற்கும் உரிய டத்தோ சாமிவேலு அவர்கள், ''தமிழ்க்கடல் வரப் போகிறது'' என்று கூறினார்கள். ஆமாம்-என் எதிரே கடலே வந்து நிற்கிறது. இந்தக் கடலில் நான் இருக்கின்ற இந்த மேடை ஒரு தெப்பமாக மிதந்து கொண்டிருக் கிறது'' என்று கூறி உரையைத் தொடங் கினேன். இங்கேயும் ஒரு மணி நேரத்திற்கு மேலாக அரசியல் கலப்பற்ற இலக்கிய உரையினை ஆற்றினேன்.

அன்றிரவு 8.30மணிக்கு மலேசிய - இந்திய வர்த்தகத் தொழில் கூட்டுறவுக் கழகம் ஏற்பாடு செய்திருந்த தொழில் முனைவோர் கூட்டத்தில் உரையாற்றினேன்.

மலேசிய நாட்டின் பிரதமர் டாக்டர் மகாத்தீர் முகமது அவர்களை 9ஆம் தேதி காலை 10மணி அளவில் நான் சந்தித்தேன். பிரதமருக்குப் பொன்னாடையையும், சந்தன மாலையையும் அணிவித்து, சந்தனத்தால் ஆன **வள்ளுவர் கோட்ட** மாதிரி ஒன்றையும், **சங்கத் தமிழ்**, **குறளோவியம்** ஆகிய ஆங்கில மொழி பெயர்ப்பு நூல்களையும் வழங்கினேன்.

மலேசிய நாட்டுத் தொழில் முனைவோருடன் இரண்டு நாட்களாக நடத்திய பேச்சுவார்த்தைகள் பற்றி பிரதமரிடம் விளக்கினேன். தமிழ் நாட்டிற்கும், மலேசியாவிற்கும் வெகுகாலமாக நிலவி வரும் வலுவான சமூக மற்றும் கலாச்சார தொடர்புகளை வரலாற்றுச் சான்றுகளோடு நான் கூறியபோது, மலேசியப் பிரதமர் ஆர்வத்தோடு அதனைக் கேட்டார். அவருடன் நான் நடத்திய பேச்சு வார்த்தை நேச உணர்வுடனும், மகிழ்ச்சி தருவதாகவும் அமைந்தது.

★ ★ ★



வேர்ல்டுடெல் நிறுவனத் தலைவர் சாம் பிட்ரோடா தமிழகம் முழுவதும் இன்டர்நெட் மையங்கள் அமைப்பது தொடர்பான அறிக்கையை அளித்தார். அருகே முரசொலி மாறன்.

இவ்வாறு ஆறு நாட்கள் சிங்கப்பூரிலும், மலேசியாவிலும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு, அங்குள்ள தொழில் முனைவோரைத் தமிழ்நாட்டுக்கு வந்து தொழில் தொடங்கிட அழைப்பு விடுத்த நான், 9.1.1999 அன்றிரவு தாயகம் திரும்பினேன்.

சென்னை விமான நிலையத்தில் பல்லாயிரக் கணக்கான கழகத் தோழர்கள் திரண்டு என்னை வரவேற்றனர். சுமார் ஒன்றரை மணி நேரம் ஆயிற்று, அவர்களின் வரவேற்பினை ஏற்றுக்கொள்ளவே! அதன் பின்னர் 12.30 மணியளவில்தான் இல்லத்திற்கு வந்து சேர முடிந்தது.

நான் மேற்கொண்ட இந்தச் சுற்றுப்பயணம் குறித்து **''சிங்கப்பூர்-மலேசிய நாடுகளில் சில நாட்கள்''** என்ற தலைப்பில் தம்பி **ராஜமாணிக்கம் ஐ.ஏ.எஸ்., ''இராஜராஜன்''** என்ற புனைப்பெயரில் நீண்டதோர் தொடர் கட்டுரையை அப்போதே எழுதியிருந்தார்.

செய்தியாளர் **நக்கீரன் காமராஜ்** அவர்களும், புகைப்பட நிபுணர் **யோகா** அவர்களும், என்னுடைய அந்தச் சுற்றுப்பயணத்தை பற்றிய தகவல்களைச் சேகரிக்கவும்,

புகைப்படம் எடுப்பதற்காகவுமே தங்கள் சொந்தச் செலவிலேயே இரண்டு நாடுகளுக்கும் வந்திருந்தனர்.

★ ★ ★

99ஆம் ஆண்டின் தொடக்கம் மலேசிய-சிங்கப்பூர் நாடுகளில் சுற்றுப் பயணம் என்ற அளவில் அமைந்ததைத் தொடர்ந்து-பிப்ரவரி திங்கள் 7 மற்றும் 8 ஆகிய நாட்களில் சென்னையில் **''தமிழ்நெட் 99''** என்கிற உலகத் தமிழ் இணையக் கருத்தரங்க மாநாடு ஒன்றினை நடத்தினோம். இண்டர்நெட் மற்றும் சாப்ட்வேர்களில் பயன்படுத்தப்படும் தமிழுக்கு ஒரு தரப்படுத்தப்பட்ட முறையை உருவாக்குவதை முதன்மையாகக் கொண்டு, அந்த மாநாடு சிறப்பாக நடைபெற்றது.

அந்த மாநாட்டினை நான்தான் தொடங்கி வைத்தேன். சென்னை, ராஜா அண்ணாமலைபுரம் எம்.ஆர்.சி., நகரில் அமைந்துள்ள ''இமேஜ்'' அரங்கத்தில்தான் மாநாடு நடைபெற்றது.

தமிழ் இணையம் 99-மாநாட்டிற்கு வரவேற்புக் குழுத் தலைவர் தம்பி **முரசொலி மாறன்**. அவர்தான் வரவேற்புரையாற்றினார். அப்போது, தமிழக ஆளுநராக இருந்த **பாத்திமா பீவி** அவர்கள் மாநாட்டிற்குத் தலைமை தாங்கி உரையாற்றினார். தமிழ் இணையம் 99 கருத்தரங்கைத் தொடங்கி வைத்து நான் உரையாற்றினேன். **பேராசிரியர்** தொடக்க உரையாற்றினார். 7ஆம் தேதி மாநாட்டில் மலேசிய


சிங்கப்பூர்–மலேசிய நாடுகளில் சில நாட்கள்

எனது சிங்கப்பூர்-மலேசியப் பயணம்பற்றி 'ராஜராஜன்' என்ற புனைப்பெயரில் ராஜமாணிக்கம் ஐ.ஏ.எஸ். தொடர்கட்டுரை ஒன்றை 'முரசொலி'யில் எழுதினார்

பொதுப்பணித்துறை அமைச்சர் **டத்தோ ஸ்ரீ சாமிவேலு,** இலங்கை கால்நடை வளர்ப்பு மற்றும் தோட்டக் கட்டுமானத்துறை அமைச்சர் **எஸ்.தொண்டைமான்,** புதுவை மாநில முதல்வராக இருந்த தம்பி **ஆர்.வி.ஜானகிராமன்** ஆகியோர் உரையாற்றினர்.

8ஆம் தேதியன்று மாலையில் உலகத் தமிழ் இணையக் கருத்தரங்க மாநாட்டின் பரிந்துரைகளைத் தமிழகத் தகவல் தொழில் நுட்பத்துணைக்குழுத் தலைவர் டாக்டர் **எம்.அனந்த கிருஷ்ணன்** வெளியிட்டார். **வேர்ல்டுடெல்** நிறுவனத்தின் தலைவர் டாக்டர் சாம் பிட்ரோடா சிறப்புரை ஆற்றினார். இறுதியாக நான் நிறைவுரையாற்றினேன்.

46. நிகழ்வுகளும் நினைவுகளும்!

ராஜகம்பீரமாக வாழ்ந்த எனது நண்பர் அய்யண்ணன் அம்பலம் அவர்களின் மணி மண்டபத்தை ராஜ கம்பீரம் என்ற கிராமத்தில் திறந்து வைத்தேன்.

வாஜ்பாய் அவர்கள், 1998-99 ஆம் ஆண்டுகளில் எந்த அளவிற்குக் கூட்டணிக் கட்சிகளால் அவதிப்பட்டார் என்பதற்கு ஒரேயொரு உதாரணம் சொல்ல வேண்டுமென்றால், தனது அமைச்சரவையை விரிவுபடுத்தும் முயற்சியில் பலமுறை தோல்வியுற்றார். அமைச்சரவையில் யார் இடம் பெற வேண்டும்-யாருக்கு எந்தத் துறையை ஒதுக்க வேண்டும் என்பதைக்கூட முடிவு செய்ய முடியாத நிலையில் பிரதமராக அவர் இருந்தார்.

1998ஆம் ஆண்டு, அக்டோபர் மாதத்தில் அமைச்சரவையை விரிவுபடுத்த அவர் முதலில் திட்டமிட்டார். அதற்கான தேதிகூட நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், கடைசி நிமிடத்தில் அந்த முயற்சியில் அவர் வெற்றி பெறவில்லை. அமைச்சர் அவையை விரிவுபடுத்தப் போவதாக பிரதமர் ஒரு போதும் அறிவிக்கவில்லை. பத்திரிகைகளில் தான் அப்படிச் செய்தி வெளிவந்தது என்று அரசுத் தரப்பில் தங்களுக்குத் தாங்களே சமாதானம் செய்து கொண்டார்கள்.

அதன் பின்னர், 98 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், அமைச்சரவை விரிவாக்கம் என்று பா.ஜ.க. தலைவர்கள் கூறினார்கள். அதுவும் நடைபெறவில்லை. பிரதமர் வாஜ்பாய் அவர்கள் லக்னோ நகருக்கு ஒரு நிகழ்ச்சிக்காகச் சென்றிருந்த போது, 1999 ஆம் ஆண்டு, ஜனவரி 15 ஆம் தேதியன்று அமைச்சரவை விரிவாக்கம் செய்யப்படும் என்று வெளிப்படையாகக்

கூறியிருந்தார். இந்தியப் பிரதமர்களிலேயே மிகவும் சக்தி வாய்ந்தவராக இருந்த **இந்திராகாந்தி** அம்மையார் அவர்கள் கூட அமைச்சரவை விரிவாக்கம் குறித்து, முன்கூட்டி எப்போதும் அறிவித்ததில்லை. ஆனால், தன் கட்சியினர்- மற்றும் கூட்டணிக் கட்சிகளின் நிர்ப்பந்தங்களால், எத்தகைய உறுதியான முடிவையும் எடுக்க முடியாத நிலையில் இருந்த வாஜ்பாய் அவர்கள் அமைச்சரவை விரிவாக்கம் குறித்து வெளிப்படையாக அறிவித்த நேரத்தில் அது பலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

அமைச்சரவையில் இடம் பெறுவோர் குறித்து முடிவெடுக்கும் உரிமை பிரதமருக்குத்தான் உரியது-என்று பா.ஜ.க. வினர் மட்டுமின்றி, கூட்டணிக் கட்சித் தலைவர்கள் கூறியபோதும் உண்மை அதற்கு நேர் மாறாக இருந்தது. ரயில்வே துறையைத் தனக்கு ஒதுக்க வேண்டும் என்று திரிணாமுல் காங்கிரஸ் தலைவி **மம்தா பானர்ஜி** நிர்ப்பந்தம் செய்தார். ஆனால், அந்த ரயில்வே துறையை விட்டுக் கொடுக்க சமதா கட்சி தயாராக இல்லை.

வாழப்பாடி ராமமூர்த்தியிடம் இருந்த பெட்ரோலியத் துறையை அ.தி.மு.க.விற்குக் கொடுக்க வேண்டும் என்று ஜெயலலிதா நிர்ப்பந்தம் செய்தார். செய்தி ஒலிபரப்புத் துறையிலும் தனது கட்சியைச் சேர்ந்தவர்தான் இருக்க வேண்டுமென்று அவர் வலியுறுத்துவதாக பா.ஜ.க.வைச் சேர்ந்தவர்கள் கூறிவந்தார்கள்.

அமைச்சரவையில் திரிணாமுல் காங்கிரஸ் சேர வேண்டு மென்பதற்கான முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டவர் **ஜார்ஜ் பெர்னாண்டஸ்**. அவர் பிரதமரைச் சந்தித்து அமைச்சரவை விரிவாக்கம் குறித்துப் பேசினார். அப்போது, ''யார் அமைச்சரவையில் இடம் பெற வேண்டும் என்பதை மட்டும் கூட்டணிக் கட்சிகள் தெரிவித்தால் போதுமானது- அவர்களை எந்தத் துறைக்கு அமைச்சராக்க வேண்டுமென்பதை முடிவெடுக்கும் எனது அதிகாரத்தில் யாரும் தலையிடக் கூடாது'' என்று பெர்னாண்டசிடம் பிரதமரே தெரிவித்து விட்டார் என்று அப்போது கூறப்பட்டது.

இத்தகைய நிலையில்தான் ஜனவரி 15 ஆம் தேதி அமைச்சரவை விரிவாக்கம் இருக்கும் என்று பிரதமர் வெளிப்படையாக அறிவித்தார். ஆனால், இந்த முறையும் கூட்டணிக் கட்சிகள் தங்கள் கோரிக்கையை விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. கூட்டணிக் கட்சிகள், தங்கள் கட்சிக்குள் நிலவும் உள் கட்சி மோதல்களுக்குத் தீர்வு காண்பதற்காக, பல பேருக்கு அமைச்சரவையில் இடம் கேட்டு வலியுறுத்தியதால், பிரதமர் வாஜ்பாய் நினைப்பதைவிட அதிக எண்ணிக்கையில் அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ள வேண்டிய நெருக்கடி யெல்லாம் அப்போது அவருக்கு ஏற்பட்டது.

★ ★ ★

முத்தமிழ்ப் பேரவையின் 24ஆவது ஆண்டு இசை விழா 1.2.1999 அன்று தொடங்கி, 4.2.1999 வரை, சென்னையில் மயிலாப்பூரில், ரசிக ரஞ்சனி சபாவில் சிறப்பாக நடைபெற்றது. தொடக்க விழாவில் நான் கலந்து கொண்டு விருதுகளை வழங்கினேன். முத்தமிழ்ப் பேரவையின் சிறப்புகளைக் கூற வேண்டுமானால், அந்தப் பேரவையின் ஒவ்வொரு ஆண்டு தொடக்க விழா நிகழ்ச்சியிலும் - அந்தப் பேரவை தொடங்கப்பட்டது முதல் இந்த ஆண்டுவரை தொடர்ந்து கலந்து கொண்டிருக்கிறேன். அந்தப் பேரவையைத் தொடங்குவதற்கும், அதிலே விருதுகளை வழங்குவதற்கும் நான் ஒரு காரணம் என்ற வகையில், ஒவ்வொரு ஆண்டும் அதன் அமைப்பாளர்கள் என்னை அழைக்கத் தவறியதில்லை- நானும் கலந்து கொள்ளத் தவறியதில்லை.

99ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில், அந்த ஆண்டு தொடக்க விழாவிற்கு என்னுடைய அருமை நண்பர் நடிகர் திலகம் **செவாலியே சிவாஜி** அவர்கள் தலைமை தாங்கினார். அந்த ஆண்டு விழாவில், தவில் வித்துவான் **வலையப்பட்டி ஏ.ஆர்.சுப்பிரமணியத்திற்கு** ''**ராஜ ரத்னா**'' **விருதும்,** முனைவர் **எம்.நன்னனுக்கு** ''**இயல் செல்வம்**'' விருதும், திருவாரூர் திருமதி **பி.ஆர். திலகத்திற்கு** ''**இசைச் செல்வம்**'' விருதும், நடிகர் **விசுவிற்கு** ''**நாடகச் செல்வம்**'' விருதும், கோட்டூர் **என்.வீராசாமிக்கு** ''**நாதஸ்வரச் செல்வம்**''

விருதும், திருக்கோகர்ணம் கே.செல்லையாவுக்கு "தவில் செல்வம்" விருதும், திருமதி மீனாட்சி சித்தரஞ்சனுக்கு ''நாட்டியச் செல்வம்'' விருதும், சிக்கல் ஆர்.பாஸ்கரனுக்கு ''வயலின் செல்வம்'' விருதும் என்னால் வழங்கப் பட்டது.

விழாவில் அமைச்சர் முனைவர் தமிழ்க்குடிமகன், சங்கீத கலாநிதி கே.வி.நாராயணசாமி, கவிப்பேரரசு வைரமுத்து ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மேலும் ஒரு சிறப்பாக, அந்த ஆண்டு விழாவில் நான் எழுதிய ''ஒரு தலைக்காதல்'' என்ற சங்க இலக்கிய நூல், கவிப்பேரரசு வைரமுத்து அவர்களால் வெளியிடப் பட்டு, நடிகர் திலகம் சிவாஜி அவர்கள் முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டார். அவர் அந்த விழாவில் என்னைப் பற்றிப் பெருமைப்படுத்திப் பேசியது என்றும் என் நினைவில் நிற்கக்கூடியது. அதன் ஒரு பகுதி மட்டும் இதோ:-



முத்தமிழ்ப் பேரவை விழாவில், ''எனக்குச் சூட்டப்பட்ட 'சிவாஜி' என்ற பட்டத்தை, நான் வாழ்நாள் முழுவதும் சுமக்க வேண்டும்- என்று எனக்குக் கிரீடம் சூட்டினார் கலைஞர்'' என்றார் சிவாஜி கணேசன்

''இந்த முத்தமிழ்ப் பேரவை விழாவிற்கு என் அருமைக் கண்மணி அமிர்தம் என்னை அழைத்தபோது, ''விழாவிற்கு யார் யார் வருகிறார்கள்?'' என்று விவரம் கேட்டேன்.



முத்தமிழ்ப் பேரவை தொடங்குவதற்கும், கலைஞர்களுக்கு விருதுகள் வழங்குவதற்கும் நானே காரணம் -என்பதால், ஒவ்வொரு ஆண்டும் நான் அந்த விழாவிலே தவறாமல் கலந்து கொள்கிறேன்.

இங்கே வந்து அமர்ந்திருக்கும் பெரியவர்கள் பெயர்களை எல்லாம் முதலில் சொல்லிவிட்டு, பிறகு ''கலைஞர் அவர்களும் வருகிறார்கள்'' என்று சொன்னார், அமிர்தம்.

''நான் கேட்டேன், ''அது தான் முத்தமிழே வருகிறதே-என்னை ஏன் அழைக்கிறீர்கள்?'' என்று!

அதற்கு அவர், ''அந்த முத்தமிழோடு சேர்ந்து நீங்களும் வெகு காலமாக இருக்கிறீர்களே-அதனால்தான் நான் உங்களை அழைத்தேன்'' என்றார்.

''புரியவில்லை'' என்றேன்.

''நீங்கள் நாடகத் தமிழாயிற்றே-உங்களை விட்டுவிட்டு நாங்கள் வேறு யாரை அழைப்பது?'' என்றார்.

''ஓகோ நான் நாடகக்காரனோ -ஆரம்பத்திலிருந்து கலைஞரோடு இருப்பவனே என்ற ஞாபகம் அப்போது வந்தது. சில நேரங்களில் சில பேர் சில விஷயத்தை ஞாபகப்படுத்திய பிறகுதான் நமக்கே ஞாபகம் வருகிறது. கலைஞர் அவர்களுடைய இந்த மாபெரும் கலைப் பொக்கிஷத்தை வெளிக்கொண்டு வருகிற இந்த விழாவிலே அருமைத் தம்பி வைரமுத்து ''ஒரு தலைக்காதல்'' நூலினை வெளியிட, என்னைப் பெற்றுக்கொள்ளச் சொன்னார்கள். நான்

அப்போதே சொன்னேன். ஒரு தலைக்காதல் என்று புத்தகத்தை எழுதிவிட்டு, பெயர் வைக்கும்போது கலைஞருக்கு என் ஞாபகம் வந்து விட்டதோ, அதனால்தான் அப்படிப் பெயர் வைத்தாரோ-என்று. நான் அவர்மீது வைத்திருப்பது ஒரு தலைக்காதல்-தெரியாதவர்கள் தெரிந்து கொள்ளுங்கள். இப்படியொரு மாபெரும் விழாவினை ஏற்படுத்தி, பெரிய மேதைகளை-அருமைப் பெருமக்களை எல்லாம் இங்கு அழைத்து, அதற்கு என்னைத் தலைமை தாங்க வைத்திருக்கிறார் அருமைக் கண்மணி அமிர்தம் என்றால், என்னைவிடப் பெருமைப்படுகிறவர்கள் யார் இருக்க முடியும்? நான் பேசுவது அத்தனையும் வார்த்தைக்கு வார்த்தை சத்தியம். உண்மை.''

''55 ஆண்டுகளுக்கு முன்பாக எனக்கு நினைவு வருகிறது. சிவாஜி என்ற பட்டத்தை **அய்யா** அவர்களை வைத்துக் கொடுத்து என்னைப் பெருமைப்படுத்தியதும் **கலைஞர்** அவர்களின் வீடுதான். வாழ்நாள் முழுவதும் அந்தப் பட்டத்தை நீ சுமந்து கொண்டிரு- என்ற வகையில் இன்றைக்கு எனக்குக் கிரிடம் சூட்டி அதை நிலைக்கச் செய்ததும் கலைஞர் வீடுதான். நான் மிகவும் நன்றிக் கடன்பட்டிருப்பவன். ''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்-உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு'' என்பதை நான் படித்தவன். அதை சில நேரம் வெளியிலே காட்டாமல் இருக்கலாம். காட்டாமல் இருப்பதும் உங்களுக்காகத்தான். ஒரு நண்பன் உயர்ந்த இடத்தில் இருக்கும்போது, அந்த நண்பன் அடைகிற புகழை-மரியாதையை இவைகளையெல்லாம் பார்த்து இன்னொரு நண்பன் எந்த இடத்தில் கீழே இருந்தாலும், பெருமைப்பட்டுக் கொண்டே இருக்க வேண்டுமே ஒழிய, அந்த நண்பனின் பக்கத்தில் சென்று அமர வேண்டும் என நினைப்பதைப் போல முட்டாள்தனம் வேறு கிடையாது என்பதை உணர்ந்தவன் நான். அதனால் பல நேரங்களில் பிரிந்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. மற்றவர்களுக்கு பயந்து ஒன்று மில்லை.''

''இங்கே பேசிய சாரதா நம்பி **ஆரூரன்,** கலைஞர் வசனத்தை ஒப்புவிப்பதற்கு வேறு ஆள் இல்லை என்று சொன்னார். அது ஒப்புவிப்பதல்ல. சிவாஜியை எந்த இடத்தில் அடிக்க வேண்டும் என்று கலைஞருக்குத் தெரியும். எந்த இடத்தில் அடித்தால், எந்த உணர்ச்சியை வெளியில் கொண்டு வர முடியும் என்பதும் தெரியும். அவர் அடித்தார்-என்னிடம் உணர்ச்சி வந்தது. அவ்வளவுதான். சிவாஜி என்ற இந்த வெறியனுக்குக் கலைஞர் என்ற மேதை பேச வேண்டும் என்ற வெறி இருக்கிறது. ஆகவே பேச்சைக் குறைத்துக் கொள்கிறேன். அதற்கு முன்பு கலைஞரிடம் ஒரு சின்ன வேண்டுகோள். **பாஞ்சாலங்குறிச்சியில்** அரசாங்கம் பெரிய மாளிகை கட்டி, **கட்டபொம்மனு**டைய விழாவை நடத்தி வருகிறது. அவன் தூக்குப் போடப்பட்ட **கயத்தாறு** என்ற இடத்தில், கலைஞர் அவர்களுடைய காலத்தில் ஒரு பெரிய சிறப்பான விழா-அரசாங்கம் நடத்தும் விழாவாக நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த எனது வேண்டுகோள் கலைஞரின் புகழ் மகுடத்தில் ஓர் அழகான பச்சை வைரத்தினைப் பதித்தது போலாகும்'' என்றார்.


நடிகர் திலகத்தின் இந்தக் கோரிக்கை குறித்து நான் விழாவிலே பேசும்போது சொன்னேன்.

''நடிகர் திலகம் சிவாஜி அவர்கள் ஒரு வேண்டுகோளை இங்கே வைத்தார்கள். வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட கயத்தாற்றில் ஒரு விழா நடத்த வேண்டுமென்று கூறினார். கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டு 200 ஆண்டுகள் ஆனதை நினைவூட்டுகின்ற வகையில், அந்த விழா சிவாஜியினுடைய அன்பு வேண்டுகோளுக்கிணங்க, அரசின் சார்பில் நடத்தப்படும் என்ற உறுதியை இங்கே அறிவிக்கின்றேன். அந்த விழாவில் அறிஞர் பெருமக்கள் கலந்து கொள்வார்கள். அவர்களில் ஒருவராக நடிகர் திலகம் சிவாஜி அவர்களும் கலந்து கொள்வார்கள் என்ற உறுதியை நான் உங்களுக்கு அளிக்கிறேன்.''

என்று நான் இவ்வாறு கூறியபோது, சிவாஜியே எழுந்து நின்று நீண்ட நேரம் கை தட்டிக் கொண்டே இருந்தார்.

அந்த விழாவிலே ''ஒரு தலைக்காதல்'' நூலை வெளியிட்டு உரையாற்றிய தம்பி கவிப்பேரரசு வைரமுத்து, அந்தப் புதினத்தைப் பற்றி மிக அழகாக அங்கே உரையாற்றியதோடு, இறுதியில் முடிக்கும்போது, ''தமிழ் மொழியின் கடைசி எழுத்து இருக்கும் வரையில், தமிழனின் கடைசி சுவாசம் இருக்கும் வரையில், கலைஞருடைய புகழும், தமிழும் நின்று நிலைக்கும்'' என்று கூறினார்.

முத்தமிழ்ப் பேரவையின் விழாவினைத் தொடர்ந்து, ஒவ்வொரு நாளும் பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டேன். 99ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்களில்-முதல் 13 நாட்களில் நான் கலந்து கொண்ட நிகழ்ச்சிகளைப் பார்த்தாலே எந்த அளவிற்கு அப்போதெல்லாம் நான் உழைத்தேன் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். குறிப்பாக, பிப்ரவரி முதல் நாளிலேயே சென்னை மாநகராட்சி சார்பில் சென்னை மாநகரில், 10 புதிய மேம்பாலங்களைக் கட்டுகின்ற பணியின் தொடக்க விழா நடைபெற்றது. அந்தப் பத்து மேம்பாலங்களும் தொடக்க விழாவோடு நின்று விடாமல், அப்போது மேயராக இருந்த தம்பி **ஸ்டாலின்** முயற்சியால், ஒரு பாலத்தைத் தவிர மற்ற ஒன்பது பாலங்களும் தி.மு.கழக ஆட்சியிலே திறந்து வைக்கப்பட்டன. 116 கோடி ரூபாயில் அந்தப் பத்து பாலங்களும் கட்டத் திட்டமிட்டு, அதுவரை இல்லாத வகையில் மதிப்பிடப் பட்ட தொகையிலே மீதப் படுகின்ற அளவிற்கு அந்தப் பாலங்கள் எல்லாம் கட்டி முடிக்கப் பட்டன.



அந்த விழாவிலே நான் எழுதிய 'ஒரு தலைக்காதல்' என்ற சங்க இலக்கிய நூலினை, கவிப்பேரரசு வைரமுத்து வெளியிட, சிவாஜி பெற்றுக் கொண்டார்.

மேம்பாலங்களைப் பொறுத்தவரை தி.மு.கழக அரசுக்கும், பாலங்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. 1969 ஆம் ஆண்டு, நான்

முதலமைச்சராகப் பொறுப்பேற்ற காலம் முதல், நான் எப்போதெல்லாம் முதலமைச்சராகப் பொறுப்பிலே இருந்திருக்கிறேனோ, அப்போதெல்லாம் தான் தமிழகத்திலே உள்ள முக்கிய பாலங்கள் எல்லாம் கட்டப் பட்டுள்ளன.



''முத்தமிழ்ப் பேரவை விழாவிலே முத்தமிழாகிய கலைஞரே வரும் போது, என்னை ஏன் அழைக்கிறீர்கள்?''... என்று கேட்டார் சிவாஜி.

அந்த வரிசையில், 1973 ஆம் ஆண்டு **அண்ணாமேம்பாலம்** சென்னையில் முதன் முதலாகப் பெரிய அளவில் எழுப்பப்பட்டது. அண்ணா மேம் பாலத்தைப் போலவே மயிலாடு துறையில் வாழ்ந்து மொழிக்காக உயிர் விட்ட மாணவன் **சாரங்கபாணியின்** பெயரால் அந்த நகரத்திலே ஒரு பெரிய மேம்பாலம் எழுப்பப்பட்டு, அதனை நான்தான் திறந்து வைத்தேன். கோவையிலே உள்ள மேம்பாலம்-நெல்லையிலே உள்ள ஈரடுக்குப் பாலம் ஆகியவையும் தி.மு.கழக ஆட்சியிலே கட்டப்பட்டவைதான். நெல்லை பாலத்திற்கு **திருக்குறள் பாலம்-திருவள்ளுவர் பாலம்** என்று பெயர் சூட்டியதே நான்தான். இன்னும் சொல்லப் போனால், நான் முதன் முதலில் சட்டப்பேரவை உறுப்பினராக இருந்த குளித்தலைத் தொகுதியிலே நான் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் குளித்தலை-முசிறி ஆகிய நகரங்களை இணைக்கும் வகையில் நீண்ட பாலம் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு நிறைவேறிய ஒன்றாகும். திருமானூர் பாலம் பெரியவர் **பக்தவத்சலம்** முதல்வராக இருந்தபோது அடிக்கல் நாட்டப் பட்டது. ஆனால், தி.மு.கழகம் ஆட்சிக்கு வந்த பிறகுதான் கட்டி முடிக்கப்பட்டது. இப்படி எண்ணற்ற பாலங்கள் கழக ஆட்சிக் காலத்தில் தமிழகத்திலே கட்டப்பட்டன.

★ ★ ★

தலைமைக் கழகத்தின் சொற்பொழிவாளர்களை எல்லாம், அப்போது கழகக் கொள்கைப் பரப்புச்செயலாளராக இருந்த தம்பி **விஜய டி. ராஜேந்தர் 2.2.1999** அன்று அண்ணா அறிவாலயத்திற்கு அழைத்து-என்னையும், பொதுச் செயலாளரையும் வைத்து கலந்துரையாடல் கூட்டம் ஒன்றினை நடத்தினார். தலைமைக் கழகப் பேச்சாளர்கள் எந்த அளவிற்குக் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காத்து மேடைகளிலே பேச வேண்டும் என்பதைப் பற்றி நானும், பொதுச் செயலாளரும் பல கருத்துக்களை அந்தக் கூட்டத்திலே எடுத்துக் கூறினோம்.

★ ★ ★

அதற்கடுத்த நாள் 3.2.1999 அன்று **பேரறிஞர் அண்ணா** அவர்களின் நினைவு நாள் என்பதையொட்டி, தமிழகம் முழுவதும் ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் நடத்தப் பட்டன. சென்னையிலே **நானும்**, வேலூரில் **பேராசிரியரும்**, காஞ்சிபுரத்தில் **பொருளாளரும்**, திருவள்ளூரில் **நாஞ்சிலாரும்** செங்கற்பட்டில் தம்பி **மு.க.ஸ்டாலினும்** பொதுக் கூட்டங்களில் கலந்து கொண்டு மதவெறி-தீண்டாமை-வன்முறை பற்றி உரையாற்றினோம்.

அதே 3ஆம் தேதியன்று மாலையில், சென்னை **மணவழகர் மன்றத்தின்** சார்பில், கோகலே மண்டபத்தில் நடைபெற்ற விழாவிலே கலந்து கொண்டு, **"மனித நேயம்"** என்ற தலைப்பிலே நீண்ட தோர் உரையாற்றினேன். முன்னாள் தலைமை நீதிபதி டாக்டர் **பு.ரா. கோகுலகிருஷ்ணன்**, அண்ணாமலைப் பல்கலைக் கழக இணைவேந்தர் **எம்.ஏ. எம்.ராமசாமி** ஆகியோர் அந்த விழாவில் கலந்து கொண்டனர்.




"நீங்கள் நாடகத் தமிழ் ஆயிற்றே - அதனால் தான் உங்களை அழைக்கிறேன்" என்றார் அமிர்தம்.

★ ★ ★

இத்தனை நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு விட்டு, 4 ஆம் தேதியன்று

மதுரையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக 3 ஆம் தேதி யன்று புகைவண்டியில் புறப்பட்டேன்.



வாஜ்பாய் அவர்கள் அவரது கூட்டணியில் இடம் பெற்றிருந்த ஜெயலலிதாவால் பெரிதும் அவதிப்பட்டார்.

மதுரையில்-குறிப்பாக 4ஆம் தேதி யன்று **அய்யணன் அம்பலம்** அவர்களின் **மணிமண்டபத் திறப்பு விழா** அந்த விழா மதுரை ஒத்தக்கடை பகுதியில் ''ராஜ கம்பீரம்'' என்ற இடத்திலே நடைபெற்றது. ''ராஜ கம்பீரமாக வாழ்ந்த அய்யணன் அம்பலத்திற்கு, ராஜ கம்பீரத்தில் விழா எடுப்பது மிகவும் பொருத்தம்'' என்று அங்கே நான் என் உரையைத் தொடங்கினேன்.

''அய்யணன் அம்பலம் அவர்களின் உருவத் தோற்றமே அனைவரையும் கவரக்கூடிய ஒன்றாகும். இப்படிச் சொல்கிற காரணத்தால், மணிமகுடம் தரித்து, மார்பகத்திலே பதக்கம், கைகளில் கட்டாரியோ, போர்வாளோ வைத்துக் கொண்டு தோற்றம் அளிப்பார் என்று கருதத் தேவையில்லை. மிகவும் எளிமையான கதர்ச் சட்டை அணிந்து-எளிமைக்கு இதைவிட வேறு ஒரு எல்லை கிடையாது என்ற அளவில், பெருந்தலைவர் காமராஜரை நினைவூட்டத் தக்க வகையில், உலவியவர்தான் அய்யணன் அம்பலம்.''

''நான் பிறந்த **1924**ஆம் ஆண்டிலே பிறந்தவர்தான் அய்யணன் அம்பலம். ஆனால், அவர் என்னை முந்திக் கொண்டு மறைந்து விட்டார். அவரது மறைவு அந்தச் சமுதாய மக்களுக்கு மாத்திரமல்ல-அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சிக்கு மாத்திரமல்ல - திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் பேரிழப்பு. தனிப்பட்ட முறையிலே எனக்குத் தாங்க முடியாத இழப்பு. காரணம், எந்த நிலையிலும் முகம் கோணாமல், இன்முகத்தோடு என்னை ஒவ்வொரு முறையும் அணுகுவார். **தேவர் திருமகனுக்குப்** பிறகு, **மூக்கையா தேவர்** என்னிடம் எந்த அளவிற்கு நெருங்கிப் பழகுவாரோ, அதைப்போலவே

அய்யணன் அம்பலம் அவர்களும் என்னிடம் நெருங்கிப் பழகியவர்.''

''ஆளுங்கட்சியாக தி.மு.க.இல்லாத நிலையிலும், தி.மு.க.வின் உற்றத் தோழமைக் கட்சிகளில் ஒன்றாக அகில இந்திய பார்வர்டு பிளாக் விளங்கியதற்கு அய்யணன் அம்பலம் அவர்கள் நீங்காத் துணையாக இருந்தவர்.''

''அவரின் அன்புக்கு ஒரு உதாரணம் சொல்ல வேண்டுமேயானால்- எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்த கால கட்டத்தில், அய்யணன் அம்பலம் அவர்களை ஒரு விழாவிற்கு அழைத்திருந்தார்கள். அப்போது நான் முதல்வராகவும் இல்லை- அந்த விழாவிலும் கலந்து கொள்ளவில்லை. இருந்தாலும், அய்யணன் அம்பலம் பேசும்போது தன்னையறியாமல், **''முதலமைச்சர் கலைஞர் அவர்களே''** என்று அழைத்து, அதன் பிறகும் அதனைத் திருத்திக் கொள்ளாமல், தன் உரையைத் தொடர்ந்தார். அந்த அளவிற்கு மறந்தும் என் பெயரை மறக்காத பெருமகன் அவர்''

- என்று அவரது நினைவால் கட்டப்பட்ட அந்த மணிமண்டபத்தினை நான் திறந்து வைத்து, அவரது பெருமைகளை எடுத்துக் கூறினேன்.

அய்யணன் அம்பலம் அவர்களின் மணிமண்டபத் திறப்புவிழாவிற்கு முன்னதாக, தேனி மாவட்டத்தில் கவிப்பேரரசு தம்பி வைரமுத்துவின் சொந்த ஊரான வடுகப்பட்டியில் அவரது முயற்சியால் அரசின் சார்பில் எழுப்பப்பட்ட **கவிஞர் கண்ணதாசன் நூலகத்தை** பேரவைத் தலைவராக இருந்த **பி.டி.ஆர். பழனிவேல்ராஜன்** அவர்கள் தலைமையில், **ஐ.பெரியசாமி,** வைரமுத்து ஆகியோர் முன்னிலையில் நான் திறந்து வைத்தேன்.

வடுகப்பட்டியில் அன்றைய தினம் நடைபெற்ற விழா ஒரு நூலகத்தின் திறப்பு விழா என்பதைப் போல நடைபெற வில்லை. நான் அந்த விழாவிலே குறிப்பிட்டதைப்போல, கவிஞர் வைரமுத்து அவர்களை வரவேற்பாளராகக் கொண்ட கவிஞர்களின் மாநில மாநாடு போல நடைபெற்றது.

சென்னையிலே வைரமுத்து எழுதிய ''தண்ணீர் தேசம்'' என்ற நூல் வெளியீட்டு விழாவில், மன்றத்தில் கூடியிருந்த பலரும் அந்த நூலை விலை கொடுத்துப் பெற்றுக் கொண்டார்கள். அப்படி விலை கொடுத்த பெற்றுக் கொண்டபோது, சேர்ந்த தொகை ஒரு இலட்சத்தைத் தாண்டியது.

அந்த நிகழ்ச்சியிலே வைரமுத்து பேசும்போது, ''தண்ணீர் தேசம்'' நூல் விற்பனையிலே ஒரு இலட்சரூபாய்க்கு மேல் கிடைத்துள்ளது. அந்தத் தொகையை என்னுடைய சொந்த ஊரிலே, கண்ணதாசன் பெயரால் நூல் நிலையம் அமைக்கப் பயன்படுத்துவேன். நூலகக் கட்டிடம் ஒன்றைக் கட்டித்தர கலைஞர் ஆவன செய்ய வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

அந்த விழாவிலேயே ''கவிஞரின் விருப்பம் நிறைவேற்றப் படும்'' என்று நான் அளித்த உறுதிமொழியின் சாட்சியாகத் தான், அந்தக் கட்டிடம் எழுந்து, திறப்பு விழா நடைபெற்றது. அந்தக் கட்டிடத்தின் மதிப்பு 13 லட்சம் ரூபாய். என் ஆருயிர் நண்பர் கவியரசு கண்ணதாசன் பெயரில், கவிப்பேரரசு வைரமுத்து அவர்களின் சொந்தக் கிராமத்தில் எழுந்த நூலகத்தினை நான் திறந்து வைத்ததில் மிகுந்த பெருமை யடைந்தேன்.

★ ★ ★

அன்று காலையில் முன்னாள் அமைச்சரும், கழக அமைப்புச் செயலாளருமான தம்பி **பொன்.முத்துராமலிங்கம்** இல்ல மணவிழாவிலே கலந்து கொண்டேன். பொன்.முத்து ராமலிங்கத்தின் அன்பு மகன் **சேதுராமலிங்கத்திற்கும்**, இந்தியக் கடற்படை லெப்டினென்ட் கமாண்டர் வீ.வீராசாமி அவர்களின் மகள் **மலர்க்கொடிக்கும்** மணவிழாவினை நடத்தி வைத்தேன்.

பொன்.முத்துராமலிங்கம் மதுரை மாவட்டத்திற்கு மாத்திரமல்ல-தமிழகத்திலே உள்ள தி.மு.கழகத்தின் உடன் பிறப்புக்கள் அத்தனை பேரும் அறிந்த ஒரு தளகர்த்தர்.



ஸ்டாலின் மேயராக இருந்த போது, சென்னை மாநகரில் 116 கோடி ரூபாயில், 10 புதிய மேம்பாலங்கள் கட்டும் நிகழ்ச்சியை நான் தொடங்கி வைத்தேன்.

இடையில் சில நாட்கள் அவர் கழகத்திலே இல்லை. அதுகூட அண்ணா சொல்வாரே- ''நான்தான் அந்தக் கட்சி எப்படி இருக்கிறது-என்று பார்த்து வருவதற்காக துப்பறிபவராக அவரை அனுப்பி வைத்தேன்''-என்று - அதைப் போலத்தான் நானும் அனுப்பிவைத்தேன்- என்று பொன்.முத்து ராமலிங்கத்தைப் பற்றியும் அந்த மண விழாவில் குறிப்பிட்டேன். அந்த மண விழாவிலே பேசிய தம்பி **டி.ஆர்.பாலு,** பொன்.முத்துராமலிங்கம் வேறு கட்சிக்குச் சென்று விட்டுத் திரும்ப வந்த உடனேயே, அவருக்குக் கழகத்தின் அமைப்புச் செயலாளர் பதவியை நான் அளித்ததைப் பற்றிக் குறிப்பிட்டார். அதைப்பற்றி நான் என் பேச்சிலே குறிப்பிடும்போது- ''நம்முடைய கையிலே ஐந்து விரல்கள் இருக்கின்றன என்றால், அந்த ஒவ்வொரு விரலும் ஒவ்வொன்றுக்குப் பயன்படுகிறது. நாம் காது குடைய வேண்டுமென்றால், கட்டை விரலைப் பயன்படுத்திக் காது குடைவதில்லை. ஏனென்றால், காது சுண்டு விரல் நுழைகின்ற அளவிற்குத்தான் இருக்கும். எனவே சுண்டு விரலை அதற்குப் பயன்படுத்துகிறோம். கணையாழி அணிய ஒரு விரல்-ஆட்காட்டி விரல்-சுட்டு விரல்-வில்லை நாணேற்ற வேண்டு மென்றால் கட்டை விரல், என்று பயன்படுத்துகிறோம். கட்டை விரல் இல்லாமல் நாணேற்ற முடியாது. அதனால் தான் துரோணாச்சாரியார் ஏகலைவனுடைய கட்டை விரலையே காணிக்கையாகக் கேட்டார். கட்டை விரலுக்கு அந்த அளவிற்கு முக்கியத்துவம் உண்டு. அதைப் போல என்னுடைய கையில்



தேனி மாவட்டம் வடுகப்பட்டியில், நான் திறந்து வைத்த
கவிஞர் கண்ணதாசன் நூலகக் கட்டிடம்

இருக்கிற கட்டை விரல்தான், பொன்.முத்துராமலிங்கம் என்ற முறையிலேதான் அந்த விரலுக்குத் தர வேண்டிய கடமையை நான் தந்திருக்கிறேன்'' என்று கூறினேன்.

★ ★ ★

அன்றைய தினம் மதுரையிலே அந்த ஒரு திருமணம் மாத்திரமல்ல-மதுரை புறநகர் மாவட்டக் கழகச் செயலாளராக இருந்த **அக்னிராஜ்** இல்ல மணவிழாவிலும் கலந்து கொண்டேன். அக்னிராஜ் அவர்களின் மகன் **செந்தில் ராஜனுக்கும்,** மேலூர் கன்னையா அவர்களின் மகள் **சுசித்ரா** விற்கும் நடைபெற்ற மணவிழாவிற்கும் தலைமையேற்று நடத்தி வைத்தேன். தம்பி அக்னிராஜ் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து அரசியல் சட்டத்தை எரிக்க வேண்டுமென்று அண்ணா அவர்கள் ஆணையிட்டபோது, மதுரை மாநகரிலே அந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ள முன் வந்தவர்களில் ஒருவர். மிசாவிலே பல கொடுமைகளை அனுபவித்தவர். இளமைக் காலம் முதல் கழகத்திலே



பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளில் அவரது நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினோம்



நீதிபதி, பு.ரா. கோகுலகிருஷ்ணன், எம்.ஏ.எம்.ராமசாமி - ஆகியோர் முன்னிலையில், மணவழகர் மன்ற விழாவில் 'மனிதநேயம்' என்ற தலைப்பில் உரையாற்றினேன்

தன்னை ஒப்படைத்துக் கொண்டவர். பெரியாருக்குச் சீடராக-அண்ணாவிற்குத் தம்பியாக -எங்களுக்கெல்லாம் தோழனாகப் பணியாற்றிய- பணியாற்றுகின்ற தம்பிதான் அக்னிராஜ். அவரது இல்லமண விழாவிலேயும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தியதோடு, அக்னிராஜ் அவர்களின் தொண்டினைப் பாராட்டினேன். உடல் தளர்ந்துள்ள அந்த நிலையிலும், முக்கிய நாட்களில் தொலைபேசி வாயிலாக என்னைத் தொடர்பு கொண்டு வாழ்த்ததுப் பெறத் தவறவே மாட்டார்.

தேனி மாவட்டத்தில், **இராசிங்கபுரம்** என்ற இடத்திலும், **ஓடைப்பட்டி** என்ற இடத்திலும் கட்டப் பட்டிருந்த பெரியார் நினைவு சமத்துவ புரங்களை 5ஆம் தேதி காலையில் பேரவைத் தலைவர் பி.டி.ஆர் பழனிவேல்ராஜன் அவர்கள் தலைமையில் நான் திறந்து வைத்தேன்.



நான் கலந்து கொண்ட உலகத் தமிழ் இணையக் கருத்தரங்க மாநாடு.



பேராசிரியரின் பேத்தி பிரியாவின் திருமணம்

அன்று மாலையில், திருநெல்வேலி சென்று எம்.ஜி.ஆர். கழகம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த **எம்.ஜி.ஆர்.** சிலை திறப்பு விழா நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு, எம்.ஜி.ஆர். அவர்களின் சிலையினைத் திறந்து வைத்தேன்.

★ ★ ★

நெல்லை நிகழ்ச்சியை முடித்துக்கொண்டு, 6ஆம் தேதி சென்னை திரும்பி, தலைமைச் செயலகத்தில் **செயின்ட் கோபைன்** தொழில் நிறுவனத் தலைவரையும், அவரது குழுவினரையும் சந்தித்து, தொழில் தொடங்குவது பற்றிய உரையாடலில் கலந்து கொண்டேன்.

அதற்கடுத்து பிப்ரவரி 7 மற்றும் 8 ஆகிய நாட்களில், சென்னை மாநகரில் நடைபெற்ற **உலகத் தமிழ் இணையம்** கருத்தரங்கு மாநாட்டு நிகழ்ச்சிகளிலே கலந்து கொண்டேன். மீண்டும் 9ஆம் தேதியன்று சென்னையிலிருந்து புறப்பட்டு, 10 ஆம் தேதி காலையில் நாமக்கல் நகரிலே நடைபெற்ற என்

1999 – பிப்ரவரி திங்களில்...



அக்னிராஜ்வின் மகன் செந்தில் ராஜனின் திருமணம்

பொன் முத்துராமலிங்கத்தின் மகன் சேதுராமலிங்கத்தின் திருமணம்

கயல் தினகரனின் மகள் தமிழ்ச் செல்வனின் திருமணம்

நான் நடத்தி வைத்த திருமணங்கள்



என் மைத்துனர் கோவில்திருமாகாளம்
கோ.தெட்சிணாமூர்த்தியின் பேத்தி தைலம்மையின் திருமணம்

மைத்துனர் கோவில்திருமாகாளம் **கோ.தெட்சிணாமூர்த்தி** அவர்களின் இல்லத் திருமணத்திற்குத் தலைமை தாங்கி, அந்த மணவிழாவினை நடத்தி வைத்தேன். அன்று மாலை 5 மணியளவில் **மேட்டுப்பட்டி, குன்னமலை** ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டிருந்த பெரியார் நினைவு சமத்துவபுரங்களைத் திறந்து வைக்கும் விழாக்களில் கலந்து கொண்டேன். அதனை முடித்துக் கொண்டு, நாமக்கல் நகரம் சென்று, அங்கே பேரறிஞர் **அண்ணா** அவர்களின் சிலை திறப்பு விழாவிலே கலந்து கொண்டேன்.

★ ★ ★

10ஆம் தேதி இரவு 11 மணிவரை நாமக்கல் நிகழ்ச்சியிலே கலந்து கொண்டுவிட்டு, மறுநாள் காலையில் காரிலே புறப்பட்டு பிற்பகலில் தஞ்சை நகரத்தைச் சென்றடைந்து,



சென்னையில் நான் திறந்து வைத்த மியாட் மருத்துவமனை

மாலை 4.30 மணியளவில் நடைபெற்ற **தென்னகப் பண்பாட்டு மையத்தின்** கட்டிடக் கால்கோள் விழாவில் கலந்து கொண்டேன்.

தொடர்ச்சியாக 5.30 மணியளவில் **''ஜித்து''** இல்ல மணவிழாவிலே கலந்து கொண்டேன்.

அதனை முடித்துக்கொண்டு, புகைவண்டி மூலமாக 12 ஆம் தேதி காலையில் சென்னையை அடைந்து, வடசென்னை மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் **இராதாகிருஷ்ணன்** இல்ல மணவிழாவிற்குத் தலைமையேற்று மணவிழாவினை நடத்தி வைத்தேன். அன்று பிற்பகலில் சென்னையில் **எம்.ஐ.ஓ.டி. மருத்துவமனை** திறப்பு விழாவிலே கலந்து கொண்டு அதனைத் திறந்து வைத்தேன்.

★ ★ ★

தலைமைச் செயலகத்தில் **13.2.1999** அன்று, நிதி நிலைக்குழு கூட்டத்தில் அமைச்சர்களுடனும், அதிகாரி களுடனும் முழுநாளும் கலந்து கொண்டேன்.

அதற்கடுத்த நாள், பொதுச்செயலாளர் **பேராசிரியர்** அவர்களின் பேத்தியும், டாக்டர் **சொக்கலிங்கத்தின்** மகளுமாகிய **பிரியாவின்** மணவிழாவில் கலந்து கொண்டேன். தொடர்ந்து **கயல் தினகரன்** மகன் திருமண விழாவிலே கலந்து கொண்டு, மணவிழாவினை நடத்தி வைத்தேன்.

அன்று மாலையில் வண்டலூரில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியிலும், அதற்கடுத்த நாள் அமைச்சரவைக் கூட்டத்திலும் என்று இப்படியே தொடர்ந்து என்னுடைய நிகழ்ச்சிகள் ஒவ்வொரு நாளும் ஓய்வில்லாமல் இருந்தன.

எந்த அளவிற்கு ஒருநாள்கூட ஓய்வில்லாமல் நான் அப்போது பணியாற்றினேன் என்பதற்கு உதாரணமாகத்தான் இந்தப் பதினைந்து நாள் நிகழ்ச்சிகளை இங்கே தொகுத்துள்ளேன்.

இப்படியெல்லாம் உழைத்த என்னைத்தான், இப்போது சிலர் **''ஓய்வெடுத்துக்கொள்''** என்று அன்போடு (?) வேண்டுகோள் விடுத்துப் பார்க்கிறார்கள்.

47. நம்ப முடியாதது; ஆனால் நடந்தது!

அருந்ததியினருக்கு இட ஒதுக்கீடு வழங்க வழி வகுத்துத் தந்தமைக்காக, அந்தச் சமுதாயத்தினர் என்னைச் சந்தித்து "உங்களுக்கு என்றும் துணையாக நிற்போம்" என்று நன்றி கூறினார்கள்.

பீகார் மாநிலத்தில், ரன்வீர்சேனா என்கிற வன்முறை அமைப்பு ஒன்று செயல்பட்டு வந்தது. அந்த அமைப்புக்கு பீகார் மாநில அரசு தடை விதித்திருந்தது. அந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள், அப்பாவி மக்களைக் கொடூரமான முறையில் தாக்கிக் கொலை செய்தார்கள். பீகார் மாநிலத்தில், ஜெகனாபாத் மாவட்டத்தில் தூங்கிக் கொண்டிருந்த ஆதிதிராவிட மக்களின்மீது ரன்வீர்சேனா அமைப்பினர், **25.1.1999** அன்று துப்பாக்கியால் சுட்டும், அரிவாளால் வெட்டியும் 22 பேரைக் கொன்றுவிட்டார்கள்.

இந்தச் சம்பவம் அப்போது இந்தியா முழுவதும் கடுமையாகப் பேசப்பட்டது. அந்தப் பரபரப்பு அடங்குவதற்கு முன்பே, அதே ஜெகனாபாத் மாவட்டத்தில், நாராயணபூர் என்ற கிராமத்தில், 10.2.1999 அன்று, 12 அப்பாவி ஆதிதிராவிட மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். அந்தக் கொடூரச் செயலில் ஈடுபட்டதும் ரன்வீர்சேனா அமைப்பினர் தான்.

"நிலச்சுவான்தார்களின் நிலத்தில் குறைந்த கூலிக்கு வேலைக்குப் போகக்கூடாது-என்று ஆதி திராவிட மக்களை கம்யூனிஸ்ட் கட்சிகள் கூறியதால், நிலச்சுவான்தார்களின்

கூலிப்படையான ரன்வீர்சேனாவினர் ஆதிதிராவிட மக்களைச் சுட்டுக் கொன்றார்கள்!'' என்று அப்போது கூறப்பட்டது.

பீகார் மாநிலத்தில் நடைபெற்ற இந்தக் கொடூரத் தாக்குதலைத் தொடர்ந்து, புதுடெல்லியில் பீகார் மாநில சட்டம்-ஒழுங்கு நிலைமை குறித்து ஆலோசிக்க, மத்திய அமைச்சரவை 12.2.1999 அன்று கூடியது. மத்திய உள்துறை அமைச்சர் **எல்.கே.அத்வானி** தலைமையில் கூடிய அமைச்சரவை, பீகார் மாநிலத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த **லல்லு பிரசாத் யாதவ்** அவர்களின் துணைவியார் **ராப்ரி தேவியின்** அரசைக் கலைக்கக் குடியரசுத் தலைவருக்குப் பரிந்துரை செய்தும்-அங்கே குடியரசுத் தலைவர் ஆட்சியைப் பிரகடனப்படுத்த குடியரசுத் தலைவரைக் கேட்டுக் கொண்டும் தீர்மானம் நிறைவேற்றியது. அந்த முடிவினை அப்போது ஜமைக்கா நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த பிரதமர் **வாஜ்பாய்க்கும்** தெரிவித்தார்கள். அமைச்சரவையின் முடிவு மேற்கு வங்க மாநிலம், கொல்கத்தாவில் சுற்றுப் பயணம் மேற் கொண்டிருந்த குடியரசுத் தலைவர் **கே.ஆர்.நாராயணன்** அவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டு, அவர் பீகார் மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல் படுத்தி, ஆணை பிறப்பித்தார்.

பீகார் மாநிலத்தில் வன்முறைச் சம்பவம் நடைபெற்ற போதே, அதனைக் கண்டித்து அறிக்கை விட்ட நான், ''பல்வேறு மாநிலங்களில் இது போன்ற தீவிரவாதிகளே சட்டத்தைக் கையிலே எடுத்துக் கொண்டு செய்து வரும் கொடுமையான கொலைகளை ஒடுக்குவதற்கு மத்திய அரசு மற்ற மாநில அரசுகளையும் கலந்தாலோசித்து, தீவிரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டேன். ஆனால், அந்தச் சம்பவத்திற்காக பீகார் மாநில அரசை மத்திய அரசு கலைத்துக் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல் செய்ய ஆணை பிறப்பித்ததையும், கண்டித்து அறிக்கை விடுத்தேன்.

அந்த அறிக்கையில், ''பீகாரில் நிலப்பிரபுக்களின் கூலிப்பட்டாளம் தொடர்ந்து தாழ்த்தப்பட்ட மக்களைத்

துப்பாக்கிச் சூடு நடத்திக் கொன்று குவிப்பது பெரிய அநியாயம். அதற்காக மத்திய அரசு அந்த மாநில ஆட்சிமீது **356** என்ற துப்பாக்கிச் சூட்டை நடத்தி, அதை வீழ்த்தி உள்ளதை நியாயப்படுத்த முடியாது'' என்று கூறி இருந்தேன்.

பீகார் அரசு கலைக்கப்பட்டதற்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையில், **16.2.1999** அன்று பீகார் மாநிலம் முழுவதும் முழு அடைப்பு நடத்தப்பட்டது. லல்லூ பிரசாத்யாதவும், ராப்ரி தேவியும், கட்சியின் தொண்டர்களும் தங்கள் வீட்டிலிருந்து ஆளுநர் மாளிகைக்கு ஊர்வலமாகச் சென்றனர். தடையை மீறி ஆளுநர் மாளிகை அருகே மறியலில் அவர்கள் ஈடுபட்டதால், லல்லு பிரசாத், ராப்ரி தேவி உள்பட 100 பேரைப் போலீசார் கைது செய்தனர்.

பீகாரில் ஆட்சிக் கலைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டதும், தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு கெட்டு விட்டதாகக் கூறி, ''தமிழக அரசையும் கலைக்க வேண்டும்'' என்று ஜெயலலிதா அவசர அவசரமாக ஒரு அறிக்கையை 13.2.1999 அன்று விடுத்தார்.

அந்த அறிக்கைக்கு அரசு சார்பில் அளிக்கப்பட்ட பதிலில், ''சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதில் எந்தவித பாரபட்சமும் இன்றி காவல்துறை நடந்து கொள்ள வேண்டுமென்று அரசு அறிவித்துள்ளது. கோவை குண்டு வெடிப்புச் சம்பவத்தில், புலன் விசாரணையைத் தமிழகக் காவல்துறை மிகவும் செம்மையாகச் செய்து, 176 குற்றவாளிகளை ஏற்கனவே கைது செய்து, முதற்கட்டக் குற்றப்பத்திரிகைத் தாக்கல் செய்துள்ளது குறித்து மத்திய அரசும்,



பீகார் மாநில ஆட்சி கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழகத்திலும் தி.மு.க. அரசைக் கலைக்கச் சொல்லி வற்புறுத்தினார்கள், ஜெயலலிதாவும் - சுப்பிரமணிய சுவாமியும்.

மத்திய அரசு நிறுவனங்களும், தமிழக அரசுக்கும், காவல் துறைக்கும் தமது பாராட்டுதலைத் தெரிவித்துள்ளன. ***29.12.1998*** அன்று மத்திய உள்துறை செயலாளர் எழுதிய கடிதத்தில்- ''***1997***ஆம் ஆண்டு இந்தியாவில், சென்னை மாநகரத்தில் தான், குற்ற நிகழ்வுகள் மிகவும் குறைவாக உள்ளன என்று புள்ளி விவரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. சென்னை நகரில் குற்ற நிகழ்வுகள் ஒரு லட்சம் மக்களுக்கு ***18.31.*** ஆனால், டெல்லி நகரில் குற்ற நிகழ்வுகள் ஒரு இலட்சம் மக்களுக்கு ***56.45.*** மும்பை நகரத்தில் ***30.82.1998*** இல் கடந்த ஆண்டைவிடத் தமிழகத்தில் குற்றங்கள் மேலும் குறைந்துள்ளன. தமிழகத்தில் குற்றங்கள் கூடியுள்ளன - என்று கூறுவது சரியல்ல'' என்று விளக்கம் தரப்பட்டது.



1999-2000 ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்ய சட்டப்பேரவைக்கு நிதியமைச்சர் பேராசிரியருடன் வருதல்

பீகாரிலே ***8.3.1999*** அன்று குடியரசுத் தலைவர் ஆட்சி ரத்து செய்யப்பட்டது. அதன் காரணமாக ***24*** நாட்களாக பீகாரில் அமலில் இருந்த குடியரசுத் தலைவர் ஆட்சி முடிவுக்கு வந்தது. அரசியல் அமைப்புச் சட்டத்தின் ***356***ஆவது பிரிவின் கீழ் ஒரு மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி பிறப்பிக்கப்பட்டு, அது ரத்து செய்யப்படுவது என்பது அதுதான் முதல் முறை.


இது குறித்து செய்தியாளர்கள் என்னைக் கேட்டபோது, ''அரசியல் சட்டப்பிரிவு ***356***ஐ எதிர்த்துப் பல ஆண்டுகாலமாக தி.மு.க.குரல் கொடுத்து வந்துள்ளது. அப்பிரிவு இன்று ஜனநாயகத்திற்கு முன்பு முடங்கிப் போய் விட்டது என்பதைக் கேட்டு மகிழ்ச்சியடைகிறேன். பீகார் கலைப்பு மசோதாவை ஆதரிப்பதில்லை என்று காங்கிரஸ் கட்சி முடிவு எடுத்தபோதே, இந்திய வரலாற்றில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டு விட்டது. காங்கிரஸ் கட்சியும், அதன் தலைவர் சோனியா காந்தியும்

இறுதிவரைத் தங்களது முடிவில் உறுதியாக இருந்து, 356ஆவது பிரிவின் மூக்கை அறுத்ததற்காகப் பெருமகிழ்ச்சியடைகிறேன். அரசியல் பிரிவு 356 ஐக் கொண்டு, தமிழக அரசைக் கலைக்க வேண்டும் என்று சில கட்சிகள் வற்புறுத்துவதற்குப் பதில் சொல்ல வேண்டியதில்லை. கீழ்ப்பாக்கம் வழியாகச் சென்றால் உள்ளேயிருந்து எத்தனையோ குரல்கள் கேட்கும்- அதற்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டிருக்க முடியாது - அது செல்பவர்களின் குற்றமே தவிர, உள்ளேயிருந்து குரல் கொடுப்பவர்களின் குற்றமில்லை'' என்று கூறினேன்.

★ ★ ★

தமிழகச் சட்டப் பேரவையில் ஆளுநர் நீதிபதி செல்வி பாத்திமா பீவி அவர்கள், 17.2.1999 அன்று உரை நிகழ்த்தினார். அவரது உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்தில், அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த 38 உறுப்பினர்கள் உரையாற்றிய பிறகு, 23.2.1999 அன்று நான் ஒன்றரை மணி நேரம் பதில் உரையாற்றினேன்.

அருந்ததியருக்காகப் பாடுபடுபவர்கள் நாங்கள் தான் என்றும்-அவர்களின் நல்வாழ்வுக்காகக் குரல் கொடுத்ததில்



ஏராளமான சலுகைகளையும், அறிவிப்புகளையும் உள்ளடக்கிய நிதிநிலை அறிக்கையைப் படித்தேன்.


நாங்கள்தான் அனைவரையும் முந்திக் கொண்டு குரல் கொடுத்ததாகவும் இப்போது பல பேர் குரல் எழுப்புகிறார்களே 23.2.1999 அன்று நான் ஆளுநர் உரைக்குப் பதில் உரை ஆற்றியபோதே- ''மனிதக் கழிவை மனிதன் சுமக்கும் இழிவைப் போக்குவது தி.மு.க. அரசின் முக்கியமான கொள்கை-அதற்கான சட்டத்தைக் கழக அரசே நிறைவேற்றும்'' என்று உறுதி கூறியிருக்கிறேன். பேரவையின் நடவடிக்கைக் குறிப்பை, யார் வேண்டுமானாலும் படித்துப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். அந்த ஆண்டு ஆளுநர் உரையிலேயே அந்தத் திட்டம் பற்றிக் கூறப்பட்டிருந்தது.

இன்னும் சொல்லப் போனால் அந்த ஆண்டு ஆளுநர் உரையாற்றி, அது ஏடுகளில் வெளிவந்த மறுநாளே **''தினமணி''** பத்திரிகையிலே ஆசிரியர் கடிதத்தில் ஒரு கடிதம் வெளிவந்தது. அந்தக் கடிதத்தின் வாசகங்கள் இந்தத் தொடரில் இடம் பெற வேண்டிய ஒன்றாகும்!

★ *''இந்த ஆண்டு ஆளுநர் உரையில் பாராட்டத்தக்க அம்சங்கள் பல இருக்கலாம். ஆனால், என் நெஞ்சைத் தொட்ட ஓர் அறிவிப்பு-இனம் அறிய இயலாத ஒரு மனநிறைவு அங்கம் முழுவதும் அலை போலப் பரவச் செய்த ஒரு பிரகடனம்- ''மனிதக் கழிவுகளை மனிதன் சுமக்கும் அவலம் தமிழ் மண்ணிலே இருந்து விரைவில் மறையும்'' என்பது தான். மாந்தர் கழித்ததை மாந்தர் சுமக்கும் அவலத்தை அகற்றும் இந்த முடிவு, ஒரு நிகழ்ச்சியை என் நினைவிற்குக் கொண்டு வருகிறது. 1989-90 நிதியாண்டில் கலைஞர் தலைமையில் நடந்த தமிழகத் திட்டக் குழுக் கூட்டம் ஒன்றில், இக்கொடுமை ஒழிக்கப் பட வேண்டும் என்ற கருத்து முன் வைக்கப் பட்டது. அப்போது மைய*



''மனிதன் கழித்ததை மனிதனே சுமக்கும் அவலத்தை - கங்கை வெள்ளமே கழுவ இயலாத களங்கத்தை - துடைக்கும் கலைஞரின் அறிவிப்பால், வைக்கம் வீரரின் ஆவி வாழ்த்தும்'' என்று வா.செ. குழந்தைசாமி 'தினமணி'யில் கடிதம் எழுதினார்.



தேசிய அளவில் இந்த கொடுமையை ஒழிக்கும் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த இருப்பதாக அன்றைய மத்திய அமைச்சர் முரசொலி மாறன் கூறினார்.

அரசின் நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சராக இருந்த முரசொலி மாறன், தேசிய அளவில் அந்தப் பழக்கத்தை ஒழிக்கும் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த இருப்பதை முதல்வர் கலைஞரிடம் கூறினார். எனவே, அதைப்பற்றிக் குழு விவாதிக்கவில்லை. பின்னர் மைய அரசு கவிழ்ந்தது. மாநில அரசும் கலைக்கப்பட்டது. இந்த சாபக்கேடு தொடர்ந்தது. கங்கை வெள்ளமும் கழுவ இயலாத இந்தக் களங்கத்தைத் தலைமுறை தலைமுறையாகச் சுமந்து, வயிற்றைக் கழுவி, வாழ்க்கை நடத்தும் அப்பாவி மக்களின் உள்ளக் குமுறல்களின் உருவகமாக அமைந்தது.

''மாந்தர் கழித்தலை மாந்தர் சுமந்திடும்
வாழ்வு தொடர்ந்திடும் நாட்டினிலே-
போந்த சுதந்திரம், பேசும் சமத்துவம்
பொய்யடா; யாவையும் ஏட்டினிலே''

★ ''ஆளுநர் உரையில் ஒரு நீண்ட வாக்கியத்தின் சிறுபகுதியாக மட்டுமே இடம் பெற்றிருக்கும் இந்த அறிவிப்பு, ஒரு சாதாரணத் திட்டம் அன்று- தாழ்த்தப் பட்ட மக்களின் சமுதாய வாழ்வில் ஒரு மகத்தான திருப்பம்-வரலாறு பதிவு செய்யத் தவறாது இதனை, இதன் தாக்கம் மற்ற மாநிலங்களிலும் எதிரொலிக்கும். வைதீக மொழியில் கூறுவதானால், ***''வைக்கம் வீரரின் ஆவி வாழ்த்தும்''*** என்று அந்தக் கடிதத்தில் எழுதப் பட்டிருந்தது.

அந்தக் கடிதத்தை எழுதியது யார் தெரியுமா? அண்ணா பல்கலைக் கழகத்திலும், இந்திராகாந்தி பல்கலைக்கழகத்திலும் துணைவேந்தராகப் பணியாற்றிய பெருந்தகை **வா.செ. குழந்தைசாமி** அவர்கள் தான் அதனை எழுதி இருந்தார். கழக

ஆட்சிக்கு அவர் தந்த நற்சான்றாக அதனை நான் எடுத்துக் கொண்டேன். அவர் கூறியவாறே, 1989 இல் கனவு கண்ட அந்தத் திட்டம்-1999 இல் ஆளுநர் உரையில் இடம் பெற்ற அந்தத் திட்டம்-2009 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வரவுள்ளது என்பதை எண்ணும்போது எத்தகைய மகிழ்ச்சி எனக்கு ஏற்பட்டது என்பதை என்னால் உணரமுடியும்.



கழக அரசின் அறிக்கையைப் பாராட்டி சி.சுப்பிரமணியம் தன் கைப்படவே எனக்குக் கடிதம் எழுதினார்.

அந்தச் சமூகத்தினரைக் கைதூக்கிவிட வேண்டு மென்பதற்காகவே, **எம்.எஸ். ஜனார்த்தனம்** தலைமையில் விசாரணைக் குழு அமைத்து- அமைச்சரவையிலும் விவாதித்து- அதற்கான ஆணையைப் பிறப்பிப்பது குறித்து, தலைமைச் செயலாளரிடம் பேசிக் கொண்டிருந்த போது, ''இத்திட்டத்தை சில நாட்கள் கழித்து அறிவிக்கலாமே'' என்று எனக்கு அதிகாரிகள் யோசனை கூறிய நேரத்தில், ''முடியாது. இப்போதே அறிவிக்க வேண்டும்'' என்று வலியுறுத்தி, அதனை நடைமுறைக்கு வரச் செய்தேன் என்பதை எண்ணும்போது எனக்கு இனிக்கிறது. அரசியலில் எத்தனையோ பேர் என்னைப் பாராட்டுகிறார்கள்- எத்தனையோ பேர் தூற்றுகிறார்கள்- அதைப்பற்றி எல்லாம் நான் கவலைப்படுவதில்லை. அருந்ததியச் சமுதாயத்தினர் முன்னேற வேண்டும் என்பதற்காக நான் இதைச் செய்தேன் என்று என் மனச்சாட்சிக்குத் தெரிகிறதே அது போதும்!

அண்மையில் அருந்ததியருக்கு உள் ஒதுக்கீட்டிற்கு வழி வகுத்து, அரசு சார்பில் அறிவித்ததற்கு நன்றி தெரிவிக்க, அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த மாநிலம் முழுவதும் உள்ள 50 பிரதிநிதிகள் என்னைத் தலைமைச் செயலகத்திலே சந்தித்தார்கள். அப்போது, அவர்கள் ஒட்டுமொத்தமாக-

★ *''தாங்கள் எடுத்துள்ள இந்த முயற்சியில் அருந்ததியச் சமுதாயம் உங்களுக்குத் துணையாக என்றும் பின்*



வீரபாண்டியக் கட்டபொம்மனின் 200ஆவது நினைவு நாளை அரசு விழாவாக அறிவித்ததற்கு சிவாஜி எனக்கு நன்றி கூறினார்.

நிற்கும்'' என்று என்னிடம் கூறியது இன்னமும் என் காதுகளில் ரீங்கார மிட்டுக் கொண்டு தான் இருக்கின்றது.

★ ★ ★

1999-2000 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையினை, 17.3.1999 அன்று நிதி அமைச்சர் என்ற முறையில் தாக்கல் செய்தேன். ஏராளமான அறிவிப்புகளையும், சலுகைகளையும் உள்ளடக்கியதாக நிதி நிலை அறிக்கை அமைந்தது. த.மா.கா., சி.பி.எம்., சி.பி.ஐ., எம்.ஜி.ஆர்.அ.தி.மு.க., எம்.ஜி.ஆர்.கழகம், திராவிடர் கழகம், அகில இந்திய பார்வர்டு பிளாக், தமிழ் பாட்டாளி மக்கள் கழகம்-ஆகிய கட்சிகளின் சார்பில் நிதிநிலை அறிக்கையை வரவேற்று அறிக்கை கொடுத்தனர்.

அந்த நிதி நிலை அறிக்கையைப் பெரிதும் பாராட்டி, மத்திய அரசின் முன்னாள் நிதி அமைச்சரும், மராட்டிய மாநில முன்னாள் ஆளுநருமான **சி.சுப்பிரமணியம்** தன் கைப்படவே ஒரு கடிதம் எழுதியிருந்தார். நடிகர் திலகம் **சிவாஜி** அவர்கள், நிதிநிலை அறிக்கையில்-அவர் ஏற்கனவே ஒரு விழாவிலே கேட்டுக்கொண்டதற்கிணங்க, **வீரபாண்டிய கட்ட பொம்மனின் 200ஆவது** நினைவு நாளை அரசு விழாவாக நடத்தப்படும் என்று அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதியிருந்தார்.

நிதி நிலை அறிக்கையின் கூட்டத் தொடரின்போது, தமிழகச் சட்டப்பேரவையில் 25.3.1999 அன்று, உறுப்பினர்கள் **புரசை ரெங்கநாதன், கே.சுப்பராயன், நிஜாமுதீன், ஜி.கே.மணி, எல்.சந்தானம், எஸ்.திருநாவுக்கரசு, டி.மணி, வேலாயுதம், பி.வெங்கடசாமி, டாக்டர் கிருஷ்ணசாமி, பேராசிரியர் தீரன்** ஆகியோர் ஒருகவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்தனர்.

என்ன பிரச்சினை குறித்து என்றால், ''ஜெயலலிதாவிடம் ஆடிட்டராகப் பணியாற்றிக் கொண்டிருந்த **ராஜசேகரன்** என்பவரைத் தோட்டத்திற்கு அழைத்து ஜெயலலிதாவும், சசிகலாவும் காலணிகளால் அடித்ததாகவும்-அதன் பின்னர் **மகாதேவன்** என்பவர் தடியுடன் வந்து ராஜசேகரனைத் தாக்கியதாகவும்-வெள்ளைப் பேப்பரில் கையெழுத்திட்டுத் தருமாறு வலியுறுத்தியதாகவும்-**தேனாம்பேட்டை காவல் நிலையத்தில்** கொடுத்த புகார் குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்தது?'' என்பதற்கு விளக்கம் கேட்டிருந்தனர்.

இந்தப் பிரச்சினையில் பேசிய அனைவரும் தங்கள் கருத்துக்களைச் சிறப்பாக எடுத்துக் கூறினார்கள் என்ற போதிலும், எம்.ஜி.ஆர்.அ.தி.மு.க. சார்பில் பேசிய திருநாவுக்கரசரின் பேச்சு நினைவில் கொள்ளத்தக்கது. அவரது நீண்ட பேச்சின் சில பகுதிகள் வருமாறு:-


★ *''ஒரு ஆடிட்டர் வீட்டிலே புறப்பட்டுக் கொண்டிருக்கிறார். அவருடைய மனைவி, ''எங்கே போகிறீர்கள்?'' என்று கேட்கிறார். உடனே ஆடிட்டர், ''நான் யாருக்குப் பணியாற்றுகிறேனோ, அவர் வரச்சொல்லியிருக்கிறார்-பார்க்கப் போகிறேன்'' என்று சொல்கிறார். உடனே அவருடைய மனைவி, ''போகாதே, போகாதே என் கணவா-பொல்லாத சொப்பனம் நானும் கண்டேன் என்று சொல்லி, போக வேண்டாமென்று தடுத்து, பாட்டுப் பாடுவதாக நண்பர் சோ அவர்கள் தன்னுடைய 'துக்ளக்' பத்திரிகையிலே அட்டைப் படத்திலே கார்ட்டூன் வெளியிட்டிருப்பதை இங்கே நினைவு கூரக் கடமைப் பட்டிருக்கிறேன்.''*

★ *''சமீபத்தில் ஒரு நீதிபதி வீட்டுத் திருமணத்திற்குப் போய் உட்கார்ந்திருந்தேன். சுற்றி சில வழக்கறிஞர்கள் இருந்தார்கள்-சில நீதிபதிகளும் இருந்தார்கள். அதிலே ஒரு வழக்கறிஞர் விளையாட்டாகச் சொன்னார். ''முதல் டர்ன் ஆடிட்டர்-அது முடிந்திருக்கிறது. அடுத்த டர்ன்-வழக்கறிஞர்களுக்கு வரப் போகிறது'' என்று சொன்ன உடனே, அந்த வழக்கறிஞர்களும், நீதிபதிகளும்*


விழுந்து விழுந்து சிரித்தனர். இதை நான் சொல்லக் காரணம், ஆடிட்டர் சங்கத்தின் சார்பிலே அவர்களுக்கு வந்த செய்தியின் அடிப்படையில், அவர்கள் சென்று ராஜசேகரனைப் பார்த்துவிட்டு, ஒரு கண்டன அறிக்கையையும் கொடுத்திருக்கிறார்கள். ''நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று அந்தச் சங்கம் வலியுறுத்தியிருக்கிறது.''

★ ''ஆடிட்டர் நல்ல சிவப்பு ஐயர்-அடிபட்டபின் 'கறுப்பு ஐய'ராக மாறியிருக்கிறார். காலிலே இருந்து அடி-எங்கே பார்த்தாலும் கன்னிப் போய் இருக்கிறது. உடம்பெல்லாம் தடித்துத் தடித்து மிகவும் பரிதாபகரமான நிலையில் படுத்திருந்தார். பயப்படுகிறார். அவருடைய சகோதரரும் உடன் இருந்தார். அவர் ஆடிட்டரைவிட அதிகம் பயப்படுகிறார்.''

★ ''ஒரு முன்னாள் அமைச்சர் திருச்சியிலே பேசியிருக்கிறார்- ''ஆடிட்டருடைய குடும்பத்தையே கொலை செய்து விடுவோம்-தொலைத்து விடுவோம்-காணாமல் ஆக்கிவிடுவோம்- அம்மா கண் அசைத்தாலேபோதும்-விரல் அசைத்தாலே போதும்-ஆடிட்டர் குடும்பமே காணாமல் போய்விடும்'' என்று பேசியிருக்கிறார். இன்னொருவர் ''எங்க அம்மாவா அடிக்க வேண்டும்? நான்கு ஆட்களை அனுப்பி, இரண்டு போடு போட்டுவிட்டு வாங்கடா என்றால், போட்டுவிட்டுப் போகிறார்கள்!'' என்று துணைப்



ஜி.கே.மணி, கே.சுப்பராயன், டாக்டர் கிருஷ்ணசாமி உள்ளிட்ட பலர், ஜெயலலிதா தனது ஆடிட்டரைத் தாக்கியதுபற்றி கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தனர்.



ஆடிட்டர் ராஜசேகரன் மட்டுமல்ல - வக்கீல் சண்முகசுந்தரம் தாக்குதல் - ஏ.ஆர்.லெட்சுமணன் மருமகன் மீது கஞ்சா வழக்கு - இவைகளைத் தொடர்ந்து ஜெயலலிதா நடத்திய அராஜகங்களை நீண்ட பட்டியலிட்டார், அவரது கட்சியின் முன்னாள் பொருளாளர் திருநாவுக்கரசர்

பொதுச் செயலாளர் பொறுப்பில் இருக்கிற ஒருவர் அறிக்கை விடுகிறார்.''

★ *''இதையெல்லாம் பார்த்து, நாம் அடிபட்டது மட்டுமல்லாமல், எங்கே தன்னுடைய குடும்பத்தினரும் பாதிக்கப்பட்டு விடுவார்களோ என்ற சூழ்நிலையில், ஆடிட்டர் ராஜசேகரன் பயந்து போயிருக்கிறார். கொடுமையான சம்பவம் போயஸ் தோட்டத்திற் குள்ளே நடைபெற்றிருக்கிறது.''*

சில பேர் ''போயஸ் தோட்டத்திற் குள்ளே இப்படி நடக்குமா? அந்த அம்மா பெண் ஆயிற்றே- இப்படி யெல்லாம் செய்யக் கூடியவரா? காலணி கொண்டு அடித்து ஒரு மனிதனைக் காயப்படுத்த முடியுமா?'' என்று இப்படிப்பட்ட வியப்புக்குரிய கேள்விகள் வெளியே சிலரால் கேட்கப் படுகின்றன. போயஸ் தோட்டத்தில் இதுமாதிரி பல சம்பவங்கள் நடந்திருக்கின்றன. எனக்கு எதுவும் நடக்க வில்லை- அதற்கான துணிச்சல் அந்த அம்மாவுக்குக் கிடையாது. அப்பாவிகள் பல பேர் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள்.''

''இன்னும் சொல்ல வேண்டுமானால், பத்திரிகையில் வந்த ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். புரட்சித் தலைவர் **எம்.ஜி.ஆர்.** மறைந்த உடனே, முன்னாள் எம்.எல்.ஏ.**பாப்பா சுப்பிரமணியம்**-இப்போது பாட்டாளி மக்கள் கட்சியில் இருக்கிறார்- அவருடைய வீட்டுக் கல்யாணத்திற்குச் சென்று வந்தோம். நானும், பண்ருட்டியாரும் காரின் பின் பக்கத்திலே அமர்ந்திருந்தோம். அந்த அம்மா காரின் முன் பக்கத்திலே அமர்ந்திருந்தார்கள். வழியிலே தஞ்சாவூர் பக்கத்தில், ரோட்டில் விவசாயிகள் கட்டு அடித்துக் கொண்டிருந்தார்கள்.


அப்போது அந்த அம்மா வண்டியை நிறுத்தி, ''எவ்வளவு கூலி வாங்குகிறீர்கள்?'' என்று விசாரித்துக் கொண்டிருந்தார். அவர் இறங்கிச் சென்றபோது, அவரது செக்யூரிட்டி ஆட்கள் அவர் பின்னாலே ஓடுகிறார்கள். எங்களது காருக்குப் பின்னால் வந்த ஆட்களும் இறங்கி ஓடுகிறார்கள். அப்படி ஓடும்போது, ஒருவருக்கொருவர் கால் இடறி விழுந்து விடுகிறார்கள். அவர்களுக்கிடையே பிரச்சினை ஏற்படுகிறது. அதிலே பண்ருட்டியாரின் உதவியாளர் **மோகன்**, ஜெயலலிதாவிட மிருந்த **சசிகலா** நியமித்த ஒரு ஆள்மீது மோதிவிட, அவர் கீழே விழுந்து விடுகிறார். சிலநாட்கள் கழித்து பொதுக்குழு நடைபெறுகிறது.''

★ *''ஜெயலலிதாவிற்கு உதவியாக நடராஜன் நியமித்தவர்கள் பத்து, பதினைந்து பேர் அவரிடம் வேலை பார்த்தார்கள். புதுக்கோட்டையிலிருந்து பத்து பதினைந்து பேரை நாங்கள் பாதுகாவலுக்காக நியமித்திருந்தோம். நடராஜன் நியமித்த ஆட்கள், நாங்கள் போட்டிருந்த ஆட்களிடம், ''பொதுக் குழுவிற்குப் போய்விட்டு வரும்போது, பண்ருட்டி யாரின் உதவியாளர் மோகனை வசமாக அடித்து விடுங்கள்-என்று ஜெயலலிதாவும் சசிகலாவும், சொல்லி யிருக்கிறார்கள்!'' என்று தெரிவிக்க-அவர்கள் அப்படியே அடிக்க மறுத்த காரணத்தால், வீடு திரும்பியவுடன், ''ஏன் அடிக்கவில்லை?'' என்று கேட்டு அவரை அடித்திருக்கிறார்கள்.''*

★ *''இன்னொரு சம்பவம் சொல்கிறேன் -உப்பிலியாபுரம் சட்டமன்ற உறுப்பினர் ரவிச்சந்திரன் ஆதி திராவிட சமூகத்தைச் சேர்ந்தவர்-அப்போது முதலமைச்சராக இருந்த ஜெயலலிதாவைப் பார்த்து விட்டுக் கீழே இறங்கினார். அங்கேயிருந்த நான், ''என்ன பதட்டமாக இருக்கிறீர்கள்?'' என்று கேட்டேன். ''நான் போனேன்-அந்த அம்மா என்னை அடித்து விட்டார்கள்'' என்றார். ''ஏன்?'' என்று கேட்டேன். காவல் நிலையத்திற்குச் சென்று, கைதாகி இருந்த தன் கட்சிக்காரர்கள் சிலரை*

மீட்டு வந்ததற்காக அவருக்கு இந்தத் தண்டனையாம்-இது மாதிரி பல சம்பவங்கள்.''


★ ''தன்னைக் கண்ணியத்திற்குரிய பெண்மணி என்று பேட்டி கொடுப்பார். அவர் சொன்ன பொய்களை அடுக்கிக் கொண்டே போகலாம்-நேரம் கருதிச் சுருக்கமாகச் சொல்கிறேன்.''



அத்வானிக்கு 'செலக்டிவ் அம்னீஷியா' நோய் என்று கிண்டல் செய்தார், ஜெயலலிதா.

★ ''முதல் பொய், எம்.ஜி.ஆர். இறந்தவுடனே ''நான் ஓர் அனாதை'' என்றார். அவருக்குக் கூடப்பிறந்த அண்ணன், அண்ணி, பிள்ளைகள் எல்லாம் இருக்கிறார்கள். அண்ணன் ஜெயக்குமார் கொஞ்ச காலத்திற்கு முன்புதான் இறந்தார். ''எம்.ஜி.ஆர். நான் வளருவதைப் பொறுக்காமல், என்னை அரசியல் ரீதியாக அழிக்கப் பார்க்கிறார்'' என்று பிரதமருக்கு அவர் கைப்படவே எழுதினார். பிறகு அவரே என்ன சொன்னார் என்றால், ''எம்.ஜி.ஆர். என்னைக் கூப்பிட்டு, நான் இறக்கப்போகிறேன்- கட்சியை நீதான் வளர்க்க வேண்டும்-வெளியிலே போய் விடமாட்டேன் என்ற சத்தியம் வாங்கினார்!'' என்று அடுத்த பொய்யைக் கூறினார்.''

★ ''திருச்சியில் அவர் ஒரு கூட்டத்தில் பேசும் போது ஒரு சிறு அசம்பாவிதம். உடனே ''அதற்குக் காரணம் த.மா.கா.தலைவர் மூப்பனார் தான்'' என்று முதல் நாள் சொன்னார். அதற்கடுத்த நாள் ''நான் அவ்வாறு சொல்லவில்லை-பத்திரிகையிலே தவறாக வந்து விட்டது'' என்றார். இதற்கடுத்து வன்முறைகள் எவை என்று பார்த்தால், வக்கீல் சண்முகசுந்தரம் தாக்கப் பட்டது-விஜயன் தாக்கப்பட்டது-ஏன், முத்து கைது செய்யப்பட்டது-என்ற விவகாரத்திற்குள் சென்றால், மிக




'திருச்சியில் ஜெயலலிதா பேசிய கூட்டத்தில் நிகழ்ந்த அசம்பாவிதத்திற்கு மூப்பனார் தான் காரணம்.' என்று ஜெயலலிதா பழி சுமத்தினார்.

அசிங்கமாக இருக்கும். முத்து கஞ்சா வழக்கிலே உள்ளே போடப்பட்டார். தீதிபதி. ஏ.ஆர்.லெட்சுமணன் மரு மகனை கஞ்சா வழக்கிலே போட் டார்கள். பின்னர் விடுதலை செய்தார் கள். அதற்குப் பிறகு பார்த்தால், மதுராந்தகம் சொக்கலிங்கம் எம்.எல்.ஏ., உப்பிலியாபுரம் ரவிச் சந்திரன் எம்.எல்.ஏ., தூத்துக்குடி ரமேஷ், காட்பாடி மோகன் என்று ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப் பினர்கள் எல்லாம் அடி வாங்கினார் கள். மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர் சொக்கலிங்கம் தாக்கப் பட்ட போது, நான் சட்டமன்றத்திலே அதைப் பற்றிய பிரச்சினையை எழுப்பினேன். அப்போது ஜெயலலிதா எழுந்து, ''என் கட்சி சட்டமன்ற உறுப்பினர் அடி வாங்கினால் இவருக்கு என்ன?'' என்று கேட்டார். அதற்கு நான், ''சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் தாக்கப்பட்டால், எந்த சட்டமன்ற உறுப்பினரும் அதைப்பற்றி அவையிலே கேட்கலாம்'' என்று பதில் கூறினேன்.''

★ ''அதே மாதிரி சேஷன்-அவர் ஒரு காலத்திலே இந்தியாவையே ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தவர். அவர் சென்னையிலே வந்து இறங்கி 'ஆடி'ப் போனார். விமான நிலையத்திற்குள்ளேயே காக்க வைத்தது, அதற்குப் பின்னாலே அவர் தங்கியிருந்த ஓட்டல் அடித்து நொறுக்கப்பட்டது. தலைமைத் தேர்தல் கமிஷனருக்கே இந்தக் கதி!''

★ ''சகோதரர் சுப்பிரமணியன் சுவாமி -அவர் வெளிநாடு எல்லாம் போனவர். அவர் ''இங்கே நான் வந்து பார்த்த காட்சிகளை, வேறு எந்த நாட்டிலேயும் பார்க்கவில்லை!'' என்று சொல்லக் கூடிய அளவிற்கு அவரைப்



"ஒரு நாட்டின் பிரதமர் இரவு 10 மணிக்கே தூங்கப் போகலாமா?" என்று ராஜீவ்காந்தியை இழிவுபடுத்தினார், ஜெயலலிதா.

பயமுறுத்தி-போகிற இடத்தில் எல்லாம் அடித்து- கல்வீசி- பல சம்பவங்கள் நடந்தன. சுப்பிரமணியன் சுவாமி திருச்சியில் ரயில் ஏறினார். அவரைத் தாக்குவதற்காக அ.தி.மு.க. குண்டர்கள் மன்னார்குடியிலிருந்து அனுப்பப்படுகிறார்கள். செய்தி அறிந்த காவல் துறை அதிகாரி காவலர்களை அனுப்பிக் காப்பாற்றினார். ஆனால், அந்த அதிகாரி-அவர் கக்கன் அவர்களின் உறவினர் - அங்கிருந்து மாற்றப்பட்டார். அவர் மாற்றப்பட்டது பற்றி நான் அவையிலே கேட்ட போது "அதிகாரிகள் மாற்றலை எல்லாம் திருநாவுக்கரசைக் கேட்டு கொண்டு போட முடியுமா?" என்று முதலமைச்சர் கேட்டார்."


★ "திருமதி சந்திரலேகா ஐ.ஏ.எஸ். அதிகாரி-அவர் மீது ஆசிட் வீசப் பட்டது. முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம், அடைக்கலராஜ் போன்றவர்கள் திருச்சியிலே தாக்கப்பட்டார்கள். அதெல்லாம் வெளியிலே தெரிந்த உண்மை."

★ "மதுரையில் ராஜா முத்தையா மண்டபத்திலே எம்.ஜி.ஆர். அறக்கட்டளை தொடங்க இருந்தோம். அங்கே இரவில் புகுந்து அடித்து, மண்டபத்தை மூடினார்கள். பண்ருட்டியார் இந்தச் சட்ட மன்றத்திலேயே தாக்கப்பட்டார். "அருமை நண்பர் முன்னாள் அமைச்சர் அருணாசலம், ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர். அவர் அம்மையார் செல்லும் தனி விமானத்தில் ஏறப் புறப்பட்ட போது, என்னையும் கூப்பிட்டார். நான் அவரிடம் விளையாட்டாக, "அந்த

அம்மாள் என்னிடம் கோபமாக இருக்கிறார். கண்டிப்பாக நீங்கள் போய்ச் சேருவீர்களா என்பது சந்தேகம். நான் வந்தேன் என்றால், என்னை விமானத்திலிருந்து கீழே தள்ளிவிட்டு, தற்கொலை செய்து கொண்டார் என்று சொன்னாலும் சொல்லுவார்-நான் வரவில்லை-நீங்கள் போங்கள்'' என்று சொல்லிவிட்டு நான் போய் விட்டேன். அன்று மாலையில், அருணாசலம் எனக்கு போன் செய்து, ''என்ன திருநாவுக்கரசு- நீங்கள் சொன்னது போலவே நடந்துவிட்டது- நல்லவேளை- நீங்கள் வரவில்லை!'' என்று சொன்னார். அந்த அளவிற்கு அருணாசலம் விமானத்திற்குள் சென்றவுடன், சத்தம் போட்டு, காவல்துறை அதிகாரியான விஜயகுமாரை அழைத்து, "Who is he?" அவரை எப்படி ஏற்றினீர்கள்?'' என்றெல்லாம் கூறி, விமானத்திலிருந்து இறக்கி விட்டார்.''

★ ''அதேபோல் ராஜீவ்காந்தி-அவர் பிரதமர்-இந்த அம்மாள் போன் செய்தபோது அவர் கிடைக்க வில்லையாம். **''இந்த நாட்டின் பிரதமர் 10 மணிக்குத் தூங்கப் போகலாமா?''** என்று கேட்டார். பிரதமர் நரசிம்மராவைப் பற்றி **''செயலற்ற பிரதமர்''** என்றார். **அத்வானிக்கு ''செலக்டிவ் அம்னீஷியா''** என்றார். அவருடைய கட்சியில் **ஆர்.கே.குமார்** என்பவர் அமைச்சராக இருந்தார். திடீரென்று பார்த்தால் அவர் மருத்துவமனையிலே படுத்துக் கிடக்கிறார். ''பணியாற்ற முடியாது-ராஜினாமா செய்கிறேன்'' என்று செய்தி வருகிறது. ஆனால் டெல்லியில் விசாரித்தால், குமார் நல்ல உடல் நலத்தோடு இருக்கிறார் என்று கூறுகிறார்கள். நடமாடும் பல்கலைக்கழகம் நாவலரைப் பார்த்து **''உதிர்ந்த மயிர்-தெரு நாய்''** என்றெல்லாம் விமர்சனம் செய்தது அனைவருக்கும் தெரியும். ஆளுநர் சென்னா ரெட்டி அவர்களை, ''என்னிடம் தகாத முறையிலே நடக்க முயன்றார்'' என்று சொன்னார். அவர் சென்ற காரைத்

திண்டிவனத்திற்கு அருகில் அடித்து நொறுக்கினார்கள். இந்தச் சம்பவம் எல்லாம் ஜெயலலிதாவிற்குத் தெரியாமல் நடந்திருக்க முடியுமா? சோனியா காந்தி அம்மையாரை ''வெளிநாட்டுக்காரப் பெண்மணி-அவர் எப்படி கட்சிக்குத் தலைவராக வரலாம்?'' என்று கேட்டார். பிறகு தூதுக்கு மேல் தூது விட்டுக் கொண்டிருந்தார். நீதிபதிகளையும் அவர் விட்டு வைக்கவில்லை.''



''வெளிநாட்டுப் பெண்மணி எப்படி ஒரு கட்சிக்கு தலைவராக முடியும்?'' என சோனியாகாந்தியைத் தூற்றினார் ஜெயலலிதா.

★ ''ஒருமுறை பொதுக்குழுவிலே **கே.கே.எஸ்.எஸ்.ஆர்.** ஒரு தீர்மானத்தை முன் மொழிந்தார். ''அ.தி.மு.க.வைக் காப்பாற்றுவதற்காக அண்டா, குண்டா, நகை எல்லாம் விற்றுக் கட்சியை நடத்திய புரட்சித் தலைவிக்குப் பாராட்டு!'' என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால், அதன் பின்னர் போலீஸ் ரெய்டுக்குப் போனபோது, தங்கமும், வெள்ளியும் கோடிக்கணக்கான ரூபாய்க்கு உள்ளே இருந்தது. எப்படி என்றால், ''மைசூர் மகாராஜா எங்களுடைய தாத்தாவிற்குக் கொடுத்தது'' என்று சொன்னார். மகாராஜா தாத்தாவிற்கு ஒட்டியாணம், வளையல் ஆகியவைகளையெல்லாம் கொடுத்திருக்கிறாராம்- அப்படி அவர் செய்த-மோசடிகள் ஏராளம்!''

★ ''இந்தியாவிலேயே-உலகத்திலேயே எந்த அரசியல் கட்சித் தலைவரும், கட்சிப் பணத்தை தங்களுடைய குடும்பச் செலவிற்காகவும், தங்களுடைய தோழிக்காகவும் கையாடியிருக்க மாட்டார்கள். **1989**ஆம் ஆண்டு அங்கு நான் பொருளாளர்-என் பெயரிலும் அவர் பெயரிலும் சேர்ந்து ''ஜாயிண்ட்'' அக்கவுண்ட். மூன்றரை

கோடி ரூபாய் பணம் போடப்பட்டது. டிக்கெட் கேட்கிறவர்கள் எல்லாம் பணம் கட்டுகிறார்கள். கட்சி தோற்றுப் போய் 26 பேர்தான் வருகிறோம். இதற்கிடையில் அந்த மூன்றரை கோடி ரூபாய் எடுத்துச் செலவழிக்கப்பட்டுவிட்டது. ஆனால், நான் கையெழுத்து போடவில்லை. கட்சி தோற்றவுடன் எல்லோரும் என்னிடம் வந்து "எனக்கு சீட்டு கொடுக்க வில்லை-பணத்தைக் கொடு" என்று கேட்டு தகராறு-பின்னர் அப்போது, அங்கேயிருந்த மாதவன் அவர்களிடம் கூறி, எம்.ஜி.ஆர். கட்சிக் கணக்கிலே இருந்த பணத்தை எடுத்து, நிலைமை சரிக்கட்டப்பட்டது. எனவே இப்படியெல்லாம் செய்யக்கூடியவர் தான் அவர்."

★ "நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்கிறேன். நீங்கள் மிகவும் யோசித்து, யோசித்து காரியங்களைச் செய்கிறீர்கள். அதனாலே தான் பல பேர் தப்பியிருக்கிறார்கள். முன்னாள் முதலமைச்சர் என்ற முறையில் அவரைக் கைது செய்ய வேண்டாம். சசிகலாவிற்கு என்ன வந்தது? அவரை ஏன் நீங்கள் பிடிக்கக் கூடாது? மகாதேவனுக்கு முன்னால் அமைச்சர்கள் எல்லாம் போய் நிற்கிறார்கள். அந்த "மகாதேவன் குடும்பத்தாலேதான் கெட்டப்பெயர் வந்தது. அந்தக் குடும்பத்தைத் தள்ளி வைக்கிறேன் - ஒதுக்கி வைக்கிறேன்" என்று ஜெயலலிதா ஆட்சி போனவுடனே அறிக்கை கொடுத்தார். ஆனால், இப்போது அந்த உடன்பிறவாச் சகோதரியிலிருந்து அத்தனை பேரையும் வீட்டிற்குள்ளேயே வைத்துக் கொண்டிருக்கிறார். ஆடிட்டர் ராஜசேகரன் அடிபட்ட அந்த விவகாரத்தில், அரசு நிச்சயமாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களைக் கைது செய்ய வேண்டும். ஜெயலலிதாவைக் கைது செய்யவில்லை என்றால் விட்டு விடுங்கள். ஏற்கனவே பண்ணியது போதும்-இருந்து விட்டு வந்தாகிவிட்டது. பிறகு அதை வைத்துக்கொண்டு ஊருக்கு ஊராக அழுது-அது ஒரு நாடகம் நடக்கும். மற்ற

குற்றவாளிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.''

-திருநாவுக்கரசர் பேசியதை மட்டும் இங்கே குறிப்பிட்டுள்ளேன். ஆனால், அன்றைய தினம் அவையிலே பேசிய அத்தனை எதிர்க்கட்சி உறுப்பினர்களும் இதே கருத்தைத்தான் தெரிவித்தார்கள். காவல்துறையின் பொறுப்பை ஏற்றிருந்தவன் என்ற முறையில், நான் அந்தச் சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குப் பதில் அளிக்க வேண்டிய பொறுப்பிலே இருந்தேன். நான் என்னுடைய பதிலை, திருநாவுக்கரசின் பேச்சின் அடிப்படையிலே தொடங்கினேன்.

★ *''திருநாவுக்கரசு அவர்கள் ஒரு நீண்ட நெடிய வரலாற்றை-வரலாற்றுச் சம்பவங்களை-இங்கே அடுக்கடுக்காக எடுத்துக் காட்டியிருக்கிறார். மகாபாரதத்தை எழுதிய வேதவியாசர் அந்த மகாபாரதச் சம்பவங்களில் ஒரு கதாபாத்திரமாக இருந்த காரணத்தால், அந்த மகாபாரதம் மிக அருமையாக அமைந்தது என்று பாராட்டுவது உண்டு. அதே போல, வேதவியாசர் எழுதிய மகாபாரதத்தைப்போல, நம்முடைய தம்பி திருநாவுக்கரசு அனைவரின் கவனத்தையும் ஈர்க்கத் தக்க உரையினை ஆற்றியிருக்கிறார். பா.ஜ.க.சார்பில் பேசிய வேலாயுதம், ''சட்டம் தன்னுடைய கடமையை செய்யட்டும்'' என்றார். பா.ம.க.சார்பில் பேசிய ஜி.கே.மணி, ''ஒரு பெண்மணி இப்படிச் செய்வார் என்று நம்ப முடிகிறதா?'' என்று கேட்டார். பெண்மணி நிச்சயமாக செய்ய மாட்டார். சந்தேகத்தைக் கேட்ட ஜி.கே.மணிக்கு ஒரு அறிக்கையினைப் படித்துக் காட்டுகிறேன்.*

★ *''ஒரு சில தலைவர்களுக்குக் கூட்டம் போடத்தெரியும்-ஊர்வலம் நடத்தத் தெரியும்-தொண்டர்களைத் தூண்டிவிட்டு வன்முறையிலே ஈடுபடச் செய்து பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கவும் தெரியும்! ஆனால், காவல்துறை சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க*

ஆரம்பித்து விட்டால், அவர்கள் பேசிய வசனங்கள் காற்றில் பறந்தோடிவிடும். தொண்டர்களின் நினைவு மறந்துவிடும். சிறையின் அசௌகரியங்களை சிறிது நேரம்கூடத் தாங்கிக்கொள்ள முடியாமல், எப்படியாவது வெளியே வந்துவிடத் தோன்றும். அதற்குத் தயாராக இடுப்புவலி-தலைவலி-திருகு வலி-நெஞ்சு வலி-என்று இது வரையில்லாத வலிகள் எல்லாம் திடீரென முளைத்துவிடும்.''

''டாக்டர் **ராமதாசைக்** கைது செய்து ரிமாண்டு செய்யும்போது, அதை எப்படியும் தடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில், திடீரென இடுப்பு வலி, நெஞ்சுவலி என்று மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல ஏற்பாடு செய்தனர்.''

''அங்கு மருத்துவப் பரிசோதனையிலே அவருக்கு ஒன்றுமில்லை என்று தெரிந்த பின்பு, காவலர்கள் அவரை ரிமாண்டு செய்ய முற்பட்டவுடன், வேறு வழியின்றி சிறையில் உள்ள அசௌகரியங்களைப் பொறுத்துக் கொள்ள முடியாமலும், பழகிப்போன சுகங்களை விட்டு கொடுக்க முடியாமலும், தன்னை உடனே விடுவிக்க ஏற்பாடு செய்யும்படி தனது மனைவி மூலமாக எனக்கு ஒரு வேண்டுகோள் அனுப்பியிருக்கிறார்.''

''டாக்டர் இராமதாசின் மனைவி எனக்கு அளித்துள்ள வேண்டுகோளை ஏற்று, ஒரு பெண்மணியின் துயரை இன்னொரு பெண்மணியால்தான் புரிந்து கொள்ள முடியும் என்பதால், டாக்டர் **இராமதாசை** உடனடியாக வேலூர் சிறைச்சாலையிலிருந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்கக் காவல் துறைக்கு ஆணை பிறப்பித்துள்ளேன்'' என்கிறது அந்த அறிக்கை.''

★ *''இந்த அறிக்கை நாகரிகம் தெரிந்த-நயத்தகு நாகரிகம் கற்ற-அவரா இப்படிச் செய்திருப்பார் என்று நண்பர் மணி அவர்களால் இங்கே ஐயப்பாட்டோடு வினா எழுப்பப்பட்டது - அம்மையார் ஜெயலலிதா முதல் அமைச்சராக இருந்தபோது, விடுத்த அறிக்கை அது.*

அதனை மறுத்து டாக்டர் ராமதாஸ் அவர்களுடைய துணைவியார்- ''நான் அப்படி ஒன்றும் மன்னிப்பு கேட்கவும் இல்லை-என் கணவருக்காக வேண்டுகோள் விடுக்கவும் இல்லை'' என்று அப்போது அறிக்கை வெளியிட்டார்.

★ *''ஆடிட்டர் ராஜசேகரன் தாக்கப்பட்டது குறித்து எழுத்து மூலமாகப் புகார் கொடுத்துள்ளார். அதிலே விவரமாக, தான் தாக்கப்பட்டது பற்றிய முழு விவரமும் உள்ளது. எழுத்து மூலமாக அந்தப் புகாரின் அடிப்படையில், தேனாம்பேட்டை காவல் நிலையத்தில், 13.3.1999 அன்று வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. ''குற்றம் சாட்டப்பட்டவர்களை ஏன் கைது செய்யவில்லை?'' என்று கேட்டிருக்கிறார்கள். நியாயமான கேள்வியாக இருந்தாலும்கூட, புலன்விசாரணை முழுமையாக முடிவுற்ற பிறகு எடுக்கப்பட வேண்டிய சட்டப் பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.''*

- இவ்வாறு எனது பதிலுரையைப் பேரவையிலே கூறினேன்.

48. ஒரு வாக்கு வித்தியாசத்தில் உச்ச கட்ட சோகம்

''தி.மு.க.வின் உதவியோடு தான் திருமதி இந்திராகாந்தி, மன்னர் மானியத்தை ஒழித்தார் - வங்கிகளை தேசிய மயமாக்கினார் - பொறுப்புள்ள வகையில் தி.மு.க. தன் பங்கினை அளித்திருக்கிறது.'' என்று பாராளுமன்றத்தில் முழங்கினார் முரசொலி மாறன்.

1999ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் இறுதியில் என்னைச் சந்தித்த செய்தியாளர்கள், ''சுப்பிரமணியன் சுவாமி டெல்லியில் அளித்த ஒரு தேநீர் விருந்தில் ஜெயலலிதா, சோனியா காந்தியைச் சந்தித்து உரையாடி பிறகு, மத்திய ஆட்சியிலே பொறுப்பேற்றிருந்த அ.தி.மு.க அமைச்சர்களை ராஜினாமா செய்யுமாறு கட்டளையிட்டுள்ளாரே'' என்று என்னைக் கேட்டபோது-

''ஓராண்டுக் காலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற கோமாளிக்கூத்தில் இது ஒரு காட்சி'' என்று கூறினேன். இதற்கிடையே பிரதமராக இருந்த வாஜ்பாய், உள்துறை அமைச்சராக இருந்த அத்வானி போன்றவர்கள் என்னைத் தொலைபேசியிலே தொடர்பு கொண்டு, ஜெயலலிதா பா.ஜ.க. ஆட்சியிலே இருந்துகொண்டே காங்கிரசோடு உறவு கொள்ள முயற்சிப்பது குறித்தும், அதற்காகவே சோனியா காந்தி அம்மையாரிடம் பேசியிருப்பது குறித்தும் விளக்கி, ''தி.மு.கழகம் பா.ஜ.க.ஆட்சிக்குத் துணைபுரிய வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்கள்.

மேலும் பா.ஜ.க.வைச் சேர்ந்த தமிழ்நாட்டுத் தலைவர்களும் என்னை நேரிலே சந்தித்துப் பேசினார்கள். அதைப்பற்றி செய்தியாளர்கள் என்னிடம் விவரம் கேட்டபோது- ''நான் தனியாக ஒன்றும் சொல்ல முடியாது-எங்கள் கட்சியின் செயற்குழுவையோ-நிர்வாகக் குழுவையோ பொதுக் குழுவையோ கூட்டி அதிலே கலந்து பேசித்தான் எந்த முடிவையும் அறிவிக்க முடியும்'' என்று கூறினேன்.

''பா.ஜ.க.வானது தி.மு.க.கொள்கைக்கு எதிரானது-எப்படி ஆதரவு தரமுடியும்?'' என்று விளக்கம் கேட்டபோது -''அதைப்பற்றிய வாதம் எங்கள் செயற்குழுவிலோ, பொதுக்குழுவிலோ நடைபெறும் என்றும், அதன் பிறகுதான் முடிவெடுப்போம்'' என்றும் கூறினேன்.

''காங்கிரஸ் கட்சியோடு ஜெயலலிதா உடன்பாடு கொள்ளும் நேரத்தில், தி.மு.கழகமும் காங்கிரசோடு உறவு கொண்டிருக்குமா?'' என்று மேலும் அவர்கள் விளக்கம் கேட்டபோது, ''ஜெயலலிதா இருக்கின்ற இடத்தில் நாங்கள் எப்படி இருக்க முடியும்?'' என்று கூறினேன்.

அப்போதிருந்த அரசியல் சூழ்நிலையில் கழகம் என்ன முடிவெடுப்பது என்பதைப் பற்றி ஆய்வு செய்திட, *13.4.1999*



''தி.மு.க.ஆட்சியைக் கலையுங்கள் - என்று பாரதீய ஜனதா அரசை வற்புறுத்துவதால், எல்லா ஆபத்துகளையும்விட 'ஜெயலலிதா ஆபத்தே' நாட்டிற்குப் பேராபத்து'' என்று தீர்மானம் நிறைவேற்றியது, தி.மு.க. தலைமைச்செயற்குழு



''தன் மேல் சுமத்தப்பட்ட வழக்குகளில் இருந்து தப்ப முடியாமல் போனதால், பா.ஜ.க. அரசைக் கவிழ்த்தது அ.தி.மு.க.'' என்றது 'தினமணி'

அன்று கழகத்தின் தலைமைச் செயற்குழுக் கூட்டம், அண்ணா அறிவாலயத்தில் என்னுடைய தலைமையிலே நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:-

★ *''இந்திய அரசியலில்- குறிப்பாக மத்திய அரசில் உருவாகியுள்ள நிலைமைகள் குறித்து செயற்குழு விரிவாக விவாதித்தது. கடந்த 1998 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின்போது, மத்தியில் நிலையான ஆட்சி அமைப்போம் என்று மக்களுக்கு உத்தரவாதமளித்து- வாக்குகளைப் பெற்று- பாரதீய ஜனதா தலைமையில் கூட்டணி ஆட்சி ஒன்று அமைந்தது. ஆனால், அந்த ஆட்சி அமைவதற்கு முன்பே அந்தக் கூட்டணியின் சார்பில் வெற்றி பெற்ற அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா மத்தியில் நிலையற்ற தன்மை உருவாகிடக் காரணமாக விளங்கியதையும்- குடியரசுத் தலைவருக்கு அனுப்ப வேண்டிய ஆதரவுக் கடிதத்தைக் கூட அனுப்பி வைக்காமல் முரண்டு பிடித்ததையும் அந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து ஜெயலலிதாவின் சுயநலத்துக்காகவும் அவர் மீதுள்ள ஊழல் மற்றும் அந்நியச் செலாவணி வழக்குகளைத் திரும்பப் பெற வேண்டும் என்பதற்காகவும், நித்தம், நித்தம் ஏதாவதொரு பிரச்சினையை எழுப்பி, பா.ஜ.க. அரசு செயல்பட முடியாத அரசாக ஆகிவிட்டதற்கு அவரும் ஒரு முக்கிய காரணம் என்பதை நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள்.''*

''1996இல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், ஜெயலலிதாவும், அவரது கூட்டத்தாரும் செய்த இமாலய ஊழல்கள் தமிழக மக்கள் முன் வைக்கப்பட்டு, அவற்றுக்குச் சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதுதான் நமது கூட்டணி தமிழக மக்களிடம் எடுத்து வைத்த உறுதிமொழியாகும். அந்த ஒரே அடிப்படையில்தான் 1996 சட்டமன்றத் தேர்தலே நடைபெற்றது. அதற்கு மக்கள் அளித்த மகத்தான உத்தரவை நிறைவேற்றுவதற்காகவே, அரசு சட்டப்பூர்வ நடவடிக்கைகளை மேற்கொண்டது. இன்னும் சொல்லப்போனால், நமது அணியின் நன்கு அறிமுகமில்லாத ஒரு வேட்பாளர் அன்றைய முதல்வர் ஜெயலலிதாவையே தோற்கடித்தார் என்பது மக்கள் அவர்மீது கொண்டிருந்த கோபத்திற்கு அடையாளமாகும்.''

★ *''எனவே, மக்கள் உத்தரவின் அடிப்படையில் தொடுக்கப் பட்ட வழக்குகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வது ஒன்றை மட்டும் குறிக்கோளாகக் கொண்டுதான் அந்த அம்மையார் இன்று பாரதிய ஜனதா அரசைக் கவிழ்த்திடும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார் என்பது நாடறிந்த உண்மையாகும். திடீரென்று அவர் மதவாத அரசியலை எதிர்க்கிறார் என்று கூறினால், அதனைச் சிறு பிள்ளையும் ஒப்புக் கொள்ளாது, ஜெயலலிதாவின் முயற்சி, மேற் சொன்ன சுயநலத்தை முழுக்க, முழுக்க அடிப்படையாகக் கொண்டது என்பதாலும், 1991 முதல் 1996 வரையில், தமிழக நலன்களைத் தரைமட்டமாக்கி*



பா.ஜ.க. அரசுக்கு அ.தி.மு.க. கொடுத்த நெருக்கடி பற்றி ஏராளமான பத்திரிகையாளர்கள் என்னைச் சந்தித்து, கேள்வி கணைகளைத் தொடுத்தனர்.

விட்டு, தழைத்துச் செழித்துக் கொழித்துள்ள லஞ்ச லாவண்ய ஊழல் கொள்ளைக்கு இனியும் தமிழ் நாட்டில் இடம் தரக்கூடாது என்பதாலும், தமிழ்நாட்டில் நடைபெற்றுவரும் அப்பழுக்கற்ற கழக ஆட்சிக்கு எப்படியும் தீங்கு விளைவிக்க வேண்டும் என்பதுதான் அவரது ஒரே ஒரு திட்டம் (The one and only agenda) என்பதாலும், இவை அனைத்தையும் திராவிட முன்னேற்றக் கழகம் கருதிப் பார்க்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆட்பட்டிருக்கிறது.''

''இத்தகைய பின்னணியில் இதர ஆபத்துகளைவிட, **ஜெயலலிதா ஆபத்தே** நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும் பெரிய ஆபத்து என்றும் தி.மு.கழகம் கருதுகிறது. அதை எப்படியும் தடுத்து நிறுத்திட வேண்டும் என்றும், அதற்கே முன்னுரிமை தர வேண்டும் என்றும் தி.மு.கழகம் உணருகிறது.''

''எனவே, கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் அண்மையில் செய்தியாளர்கள் பேட்டியில் கூறியது போல, ஒரு தீய சக்தியான ஜெயலலிதா இருக்கும் அணியிலோ - அல்லது அவர் வேறு எந்த வகையில் ஆதரவு தந்தாலும் அதைப் பெறும் அணியிலோ-தி.மு.கழகம் இடம் பெறுவது என்பது நினைத்துக் கூடப் பார்க்க முடியாத ஒன்று என்பதை இச்செயற்குழு திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறது. மேற்கொண்டு எடுக்க வேண்டிய முடிவுகளுக்கும் அதிகாரத்தைக் கழகத் தலைவர் கலைஞருக்கும், பொதுச் செயலாளர் பேராசிரியருக்கும் இச்செயற்குழு வழங்குகிறது.'' - என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

★ ★ ★


செய்தியாளர்கள், ''ஜெயலலிதாவிடமிருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்காக **நாடாளுமன்றத்தில் பா.ஜ.க.அரசை ஆதரிப்பீர்களா?**'' என்று கேட்டனர். அதற்கு, ''இந்தக் கேள்விக்கு இப்போது நான் பதில் சொல்ல முடியாது. எந்த முடிவை எடுப்பது என்பதற்குத்தான் எனக்கும் **பொதுச் செயலாளருக்கும்** அதிகாரம் வழங்கப்பட்டிருக்கின்றது.

நாங்கள் இருவரும் கலந்து பேசி, டெல்லியிலே தொடர்பு கொண்டு, அங்கே உள்ள நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர் முரசொலி மாறனிடத்திலே சொல்லி, எந்த நடவடிக்கை எடுப்பது உசிதமோ அந்த நடவடிக்கையை எடுக்குமாறு அவருக்கு ஆணையிடுவோம்.

''ஜெயலலிதாவின் ஊழல்களுக்காக பெரியார், அண்ணா ஆகியோரின் திராவிடக் கொள்கைகளுக்கு எதிராக பா.ஜ.க.விற்கு ஆதரவு கொடுக்கலாமா?'' என்று செய்தியாளர் ஒருவர் மிகுந்த அக்கறையோடு கேட்டார்.

''நாங்கள் அரசியல் கட்சி நடத்துகிறோம். இந்த நேரத்தில் எங்கள் கட்சியைக் காப்பாற்ற வேண்டும்-எங்கள் ஆட்சியையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்-எங்களுடைய தமிழ்நாட்டையும் காப்பாற்ற வேண்டும்-அகில இந்தியாவையும் காப்பாற்ற வேண்டும்-எனவே எந்த முடிவானாலும் சிந்தித்து எடுப்போம்'' என்றேன்.

''கடந்த ஓராண்டு காலமாக பார்க்கும்போது, அது மதவாத சக்திகளுக்கு ஊக்கம் அளித்ததாக நினைக் கிறீர்களா?'' என்று கேட்ட போது, ''அதற்கான முயற்சிகளில் நேரடியாக ஈடுபடாவிட்டாலும் அவர்களுக்குப் பின்னால் இருக்கும் சில சக்திகள் சங்க் பரிவார் போன்ற அமைப்புகள்-அப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபட் டார்கள். அதை அவ்வப் போது கண்டித்திருக்கி றோம். எதிர்த்துக் குரல் கொடுத்திருக்கிறோம்'' என்றும் நான் கூறினேன்.


Remarks
1) Suspension of Mr. Haribhakar MP (from Chief Sec) to be revoked
2) Suspension of Mr. C. Ramachandran MP to be revoked
3) Commemorative Stamp in honour of Freedom Fighter Sankaram for 50th Death Anniversary
4) Suspension of Mr. Bhupathi (Former CMD of Neyveli Lignite Corpn to be revoked and I.T. Dept to be instructed to accept his I.T. returns.

தன் கைப்பட எழுதிய ஏராளமான கோரிக்கைகளை வைத்து, வாஜ்பாய் அரசை நிர்ப்பந்தித்தார் ஜெயலலிதா.



ஜெயலலிதாவின் டில்லி விஜயத்தை இப்படி கேலிச்சித்திரம் வரைந்து கிண்டல் செய்தது 'தி பயோனியர்' ஆங்கில நாளிதழ்.

இதற்கிடையே ஜெயலலிதா குடியரசுத் தலைவரைச் சந்தித்து, பா.ஜ.க. ஆட்சிக்கு அளித்து வந்த தனது ஆதரவைத் திரும்பப் பெற்றார். அந்தச் செய்தி வந்தவுடன் செய்தியாளர்கள் என்னைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்தார்கள். அப்போது அவர்கள் கேட்ட சில முக்கியமான கேள்வி களும், அதற்கு நான் அளித்த பதில்களும் வருமாறு:-

செய்தியாளர்:- ஜெயலலிதா குடியரசுத் தலைவரைச் சந்தித்து, ஆட்சிக்குத் தனது ஆதரவை வாபஸ் வாங்குவதாகச் செய்தி வந்திருக்கிறது. அதுபற்றி தங்கள் கருத்து?

நான்:- எதிர்பார்த்தது தான். நாடாளுமன்றத்தில் நிலையற்ற தன்மையை எப்படியோ உருவாக்கி விட்டார்கள். நாடாளு மன்றம் தொடர்ந்து நடந்தால்-குறிப்பாக தமிழ்நாட்டிற்குக் கிடைத் திருக்க வேண்டிய 29 சதவிகித வரிப் பங்கீடு மசோதா நிறைவேறி யிருக்கும். அதன் மூலம் நம் மாநிலத்திற்குக் கூடுதலாகக் கிடைக்க வேண்டிய சுமார் **540** கோடி ரூபாய் கிடைத்திருக்கும். இந்தச் சூழ்நிலையால், அந்த **29** சதவிகித வரிப்பங்கீடு மசோதா நிறைவேறுவது கேள்விக்குறியாக நிற்கிறது. இதன் மூலம் தமிழ்நாடு மாத்திரமல்ல-எல்லா மாநிலங்களுமே இந்தப் பாதிப்பை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

செய்தியாளர்:-வாஜ்பாய் அரசை எதிர்த்து ஜெயலலிதா டெல்லியில் எடுத்துவரும் நடவடிக்கைகள் பற்றி தி.மு.க. என்ன செய்வது என்று இறுதி முடிவு எடுத்து விட்டதா? அந்த நடவடிக்கைகளை ஆதரிப்பீர்களா? அல்லது எதிர்ப்பீர்களா?

நான்:- தி.மு.கழக ஆட்சியைக் கலைப்பது என ஒரே அம்சத் திட்டத்துடன் ஜெயலலிதா டெல்லியில் முகாமிட்டு

வாஜ்பாய் அரசுக்குப் பதிலாக-மற்ற கட்சிகளின் கூட்டணியை உருவாக்க முயற்சிக்கிறார். அந்த முயற்சியை ஆதரித்தால், எங்கள் தலையில் நாங்களே மண்ணைப் போட்டுக் கொள்வதாக ஆகிவிடும். எனவே அந்த முயற்சிக்கு ஆதரவு தரமுடியாது.

செய்தியாளர்:- நாட்டிலே ஒரு நிலையான ஆட்சி இருக்கவேண்டுமென்று சொல்லி வந்தீர்களே...?

நான்:- இப்போதும் சொல்கிறேன். ஒரு நிலையான ஆட்சிதான் ஜனநாயகத்தில் இருக்க வேண்டும். ஆனால், அந்த ஆட்சி யாருடைய ஆதரவுடன் அமைக்கப்பட்டதென்றால், தி.மு.கழக ஆட்சியைக் கலைக்க வேண்டும் என எப்போதும் சொல்லிக் கொண்டிருந்த ஜெயலலிதா தான் அந்தக் கூட்டணியில் முக்கிய இடம் பெற்றிருந்தார். ஜெயலலிதாவின் முதல் கோரிக்கையே தி.மு.கழக ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்பதுதான். அவருடைய இரண்டாவது நோக்கம், அவர் மீதிருந்த ஊழல் வழக்குகள் எல்லாம் ஒன்றும் இல்லாமல் போக வேண்டும்-அதற்காகத்தான் அவர் பாடுபட்டாரே தவிர, அவர் இந்தியாவிற்காகவோ, மாநிலத்திற்காகவோ எதுவும் செய்ய வில்லை. அதற்காகக் கவலைப்படவும் இல்லை.

செய்தியாளர்:- மத்திய பா.ஜ.க.அரசு, ஜெயலலிதா தமிழக ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்று கேட்டதற்கு பணிய வில்லை அல்லவா?

நான்:- ஜெயலலிதாவின் கோபத்திற்கு-பா.ஜ.க. பணியாததும் ஒரு காரணம்.

செய்தியாளர்:-அப்படிப்பட்ட பா.ஜ.க. ஆட்சியின் பிரதமர்-நல்ல மனிதர் என்று நீங்களே பாராட்டியவரின் ஆட்சியை இழப்பதற்கு தி.மு.க.காரணமாக இருக்கலாமா?

நான்:- அவரை நான் பாராட்டியபோது இருந்தச் சூழ்நிலை இப்போது இல்லை. அவர் பிரதமராக ஆவதற்கு முன்பே கூட அவர் நல்ல மனிதர் என்று சொல்லியிருக்கிறேன். அவர் பிரதமராக ஆன பிறகுகூட அவரைப் பற்றி பாராட்டிச்



"48 பெட்டிகளை எடுத்துக் கொண்டு டில்லி சென்றார், ஜெயலலிதா." - என்று தகவல்கள் வெளிவந்தன.

சொல்லியிருக்கிறேன். எந்த ஆட்சியாக இருந்தாலும் ஐந்தாண்டு காலம் நீடிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். அதனால்தான் **356**ஆவது அரசியல் சட்டப் பிரிவே கூடாது என்றும் சொல்லியிருக்கிறேன்.

செய்தியாளர்:- பா.ஜ.க.அரசு தி.மு.கழக அரசைக் கலைக்கவில்லை- ஜெயலலிதாவின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை-மேலும் நீங்கள் ஒரு ஆட்சி ஐந்தாண்டு காலம் நீடிக்க வேண்டுமென்ற கொள்கையை உடையவர்கள்-இந்த நிலையிலே பா.ஜ.க.அரசு நீடிக்க நீங்கள் உதவுவீர்களா?

நான்:- நீங்கள் இதனை அடிப்படைக் காரணங்களைச் சொல்லி இந்தக் கேள்வியைக் கேட்கின்ற காரணத்தால், இதையெல்லாம் சிந்தித்து நாங்கள் முடிவெடுக்கிறோம்.

15.4.1999 அன்று ஏராளமான செய்தியாளர்கள் என்னைச் சந்தித்து, பா.ஜ.க. அரசுக்கு ஜெயலலிதா கொடுத்த நிர்ப்பந்தம் பற்றி கேள்விக் கணைகளைத் தொடுத்த போது, அவர்களிடம் நான் ஒரு நீண்ட அறிக்கையினை அளித்தேன். அதன் சுருக்கத்தை இப்போது குறிப்பிடுகிறேன்.

"பா.ஜ.க.கூட்டணி அரசில் இடம் பெற்றிருந்த அ.தி.மு.க.வின் தலைவி நாட்டுக்காகவும், மாநிலத்திற்காகவும் பா.ஜ.க. அரசின் முன்னால் வைத்த கோரிக்கைகள்-

1. **அரிபாஸ்கர் ஐ.ஏ.எஸ்** (முன்னாள் தலைமைச் செயலாளர்) அவர்களின் தற்காலிக வேலை நீக்கம் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும்.

2. **சி.ராமச்சந்திரன் ஐ.ஏ.எஸ்.** அவர்களின் தற்காலிக வேலை நீக்கம் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும்.

3. சுதந்திரப் போராட்ட தியாகி **சாந்தாராமின்** ஐம்பதாண்டு மறைவு தினத்தையொட்டி மரியாதை தெரிவிக்கும் வகையில், அஞ்சல் தலை வெளியிட வேண்டும்.

4. நெய்வேலி நிலக்கரி நிறுவன முன்னாள் தலைவரும், நிர்வாக இயக்குனருமான **பூபதி** அவர்களின் இடைக்கால வேலை நீக்கத்தை ரத்து செய்ய வேண்டும். அவரது வருமான வரிக்கணக்கை ஏற்றுக்கொள்ள, வருமான வரித்துறையினருக்கு உத்தரவிட வேண்டும்.

5. பின்வரும் துறைமுக அதிகாரிகள் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட வேண்டும். தூத்துக்குடி துறைமுகக் கழகத் தலைவர் **எஸ்.மச்சேந்திரநாதன்** பாரதீப் துறைமுகத்துக்கும், நியூ மங்களூர் துறைமுகக் கழகத் துணை துறைமுகத் தலைவர் **பி.கே.மொஹாந்தி** தூத்துக்குடி துறைமுகத்திற்கும், பாரதீப் துறைமுகத் தலைவர் **எஸ்.கே.மகாபத்ரா** நியூ மங்களூர் துறைமுகத்திற்கும், நியூ மங்களூர் துறைமுகத் தலைவர் **ஆர்.ராம்குமார்** காண்ட்லா துறைமுகத்துக்கும் மாற்றப்பட வேண்டும்.

6. ஏற்கனவே அளித்துள்ள பட்டியலின் அடிப்படையில் பின் வரும் நிறுவனங்களுக்கு அதிகாரப் பூர்வமற்ற இயக்குநர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

ஷிப்பிங் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா, டிரட்ஜிங் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா, கொச்சின் ஷிப்யார்டு லிமிடெட், இந்துஸ்தான் ஷிப்யார்டு லிமிடெட், ஹூக்ளிடக் அண்ட் போர்ட் இஞ்சினீயர்ஸ் லிமிடெட், சென்ட்ரல் இன்லெண்ட் வாட்டர் டிரான்ஸ் போர்ட் கார்ப்ப ரேஷன் லிமிடெட்.



நிலையான அரசு அமைக்க பா.ஜ.க.வுக்கு உதவுவதாக உறுதியளித்த ஜெயலலிதா, பிறகு... அந்த அரசையே கவிழ்த்தார்.

1. மும்பையில் இணை இயக்குநராக (ஆய்வு)



ஒரு வாக்கு வித்தியாசத்தில் ஆட்சி கவிழ்ந்தபின், பாராளுமன்றத்தில் இருந்து வெளிவரும் வாஜ்பாய் - அருகே எல்.கே.அத்வானி

உள்ள **எஸ்.கே.மண்டல்** பெங்களூரில் கம்பெனிப் பதிவாளராக நியமிக்கப் படவேண்டும்.

2. பெங்களூரில் கம்பெனிப் பதிவாளராக உள்ள **பி.கே.பன்சால்** மும்பையில் இணை இயக்குநராக (நிர்வாகம்) நியமிக்கப்பட வேண்டும்.

3. சென்னையில் உதவி ஆய்வு அதிகாரியாக உள்ள **சுக்லா** பெங்களூரில் உதவி கம்பெனிப் பதிவாளராக நியமிக்கப்பட வேண்டும்.

4. டெல்லியில் பொது இணை இயக்குநராக (புலனாய்வு) உள்ள **தன்ராஜ்** ஐதராபாத் கம்பெனிப் பதிவாளர் அலுவலகத்திற்கும், பம்பாய் அலுவலகத்தில் துணை கம்பெனிப்பதிவாளராக உள்ள **ஜெயசேகர்**, ஐதராபாத் உதவி கம்பெனிப் பதிவாளராகவும், அகமதா பாத்தில் ஓ.எல்.ஆக இருக்கும் **பிரிஜ் கிஷோர்** மும்பை கம்பெனிப் பதிவாளராகவும் மாறுதல் செய்யப்பட வேண்டும்.


5. கல்கத்தாவில் இணை இயக்குநராக (சட்டம்) உள்ள **பிரமோத்** சென்னை கம்பெனிப் பதிவாளர் அலுவலகத் திற்கும், புதுவையில் கம்பெனிகளுக்கானப் பதிவாளர் **ராமநாதன்** சென்னையில் உதவிப் பதிவாளராகவும், சென்னையில் கூடுதல் பதிவாளராக உள்ள **ஹென்றி ரிச்சர்ட்**

என்பவரை துணை இயக்குநர் (ஆய்வு) பதவிக்கும், கல்கத்தாவில் கம்பெனி பிராசிகியூட்டராக (கிரேடு 1) உள்ள **மனுநீதி சோழன்** சென்னையில் கூடுதல் பதிவாளராகவும், சென்னையில் உதவிப் பதிவாளராக உள்ள **திருமலைமுத்து,** புதுவை கம்பெனிப் பதிவாளராகவும் நியமிக்கப்பட வேண்டும்.

6. கோவை கம்பெனிப் பதிவாளர் அலுவலகம் மூன்று மாதங்களுக்குப் பிறகு மாற்றப்பட வேண்டும்.

7. ஐதராபாத்தில் உதவி கம்பெனிப் பதிவாளர் அலுவலராக உள்ள **விஜய பாஸ்கர்** சென்னையில் பெஞ்ச் அதிகாரியாக நியமிக்கப்பட வேண்டும்.

8. சென்னையில் கம்பெனிப் பதிவாளர் அலுவலராக உள்ள **விஜய மேனன்** சென்னை கணக்குப் பதிவு அலுவலகத்தில் இணை இயக்குநராகவும், துணை இயக்குநர் (கணக்குப் பதிவு) அதிகாரி **சுப்பராயலு** கான்பூருக்கு இணை இயக்குநராகவும், ஐதராபாத் கம்பெனி பதிவாளர் **செல்வராஜ்** கல்கத்தாவில் இணை இயக்குநராகவும், சென்னையில் உள்ள பெஞ்ச் அதிகாரி **சந்தானமுத்து** நாக்பூருக்கு ஓ.எல்.ஆகவும், மும்பையில் இணை இயக்குநர் (ஐ) **ஆர்.வாசுதேவன்** கல்கத்தாவில் இணை இயக்குநராகவும், மும்பையில் உதவி ஆய்வு அதிகாரியாக உள்ள **டி.பாண்டியன்** கல்கத்தாவில் தணிக்கை அதிகாரியாகவும் மாறுதல் செய்யப்பட வேண்டும்.



"தி.மு.கழகம் பா.ஜ.க. ஆட்சிக்குத் துணைபுரிய வேண்டும்"
– என்றார் வாஜ்பாய்.

இந்த அளவிற்கு சிபாரிசுத் தலைவியாக விளங்கி-தன்னைப் பயங்கரமான பல கோடி ரூபாய் ஊழல் வழக்குகளிலேயிருந்து விடுவித்துக் கொள்ள முயன்று, அதில் தோல்வியுற்ற காரணத்தால், பா.ஜ.க.அரசின் மீது கொண்டுள்ள கோபத்தில் ஆதரவை விலக்கிக் கொண்டு-அதற்கு மற்ற கட்சிகளையும் துணை சேர்த்துக் கொள்ள எடுத்துள்ள முயற்சிக்கு திராவிட முன்னேற்றக் கழகம் துணை போகாது என்பதை திட்ட வட்டமாகத் தெரிவிப்பதோடு மற்ற கட்சிகளும் உண்மை உணர்ந்து ஜெயலலிதா வலையில் சிக்காதிருக்குமாறு வேண்டுகிறேன்.''

இவ்வாறு அந்த அறிக்கையிலே தெரிவித்திருந்தேன்.

அதனைப் படித்த செய்தியாளர்கள், ''அந்த அம்மையார் தன் கைப்பட எழுதிய அந்தப் பரிந்துரைகளை எல்லாம் எப்படி வெளியே கொண்டு வந்தீர்கள்? அதையும் ஒரு ''பால் கமிஷன் அறிக்கை போலத் தெரிவித்திருக்கிறீர்களே?'' என்று கேட்டதற்கு- ''அதே பதில்தான்-பால் கமிஷன் அறிக்கை கிடைத்ததைப் போலத்தான் இதுவும் கிடைத்தது'' என்று கூறினேன்.

தொடர்ந்து செய்தியாளர்கள், ''ஜெயலலிதா டெல்லி சென்றபோது அவருடன் 48 பெட்டிகள் எடுத்துச்



வாஜ்பாயை வீழ்த்திய பின் ஜெயலலிதா காங்கிரசுடன் இணைந்து விட நடத்திய சாகசம்.

சென்றதாகவும், அதில் கோடிக்கணக்கில் பணத்தைத் தான் கொண்டு போனதாகவும் பரவலாகப் பேசப்படுகிறதே-அந்தப் பண பலம் வெற்றிபெறும் என்று கருதுகிறீர்களா?'' என்று கேட்டதற்கு, ''அவர் எடுத்துக்கொண்டு போனது பணமா என்று எனக்குத் தெரியாது'' என்று கூறினேன்.

ஜெயலலிதாவின் செயல்பாடுகள் குறித்து அகில இந்திய ஏடுகள் எல்லாம் கடுமையாக விமர்சனம் செய்திருந்தன. குறிப்பாக **''தினமணி''** நாளேட்டில் 15.4.1999 அன்று வெளிவந்த தலையங்கம் வருமாறு:-

★ *''வாஜ்பாய் அரசுக்கு அளித்து வந்துள்ள ஆதரவை விலக்கிக் கொள்ளப்போவதாக ஒரு வார காலமாய் மிரட்டி வந்த ஜெயலலிதா கடைசியில் விலக்கிக் கொண்டேவிட்டார்! இது எதிர்பாராததல்ல-எனினும் இதை அவர் செய்த விதம் எதிர்பாராததே! ஒரு வாரத்துக்கு முன், அ.தி.மு.க. அமைச்சர்கள் தம்பித் துரையையும், கடம்பூர் ஜனார்த்தனத்தையும் மத்திய அமைச்சரவையிலிருந்து விலகச் செய்தார். அதன் பிறகு, மூன்று நாட்கள் கழித்து பா.ஜ.க. கூட்டணியின் ஒருங்கிணைப்புக் குழுவிலிருந்து அ.தி.மு.க.வை இழுத்துக் கொண்டார். இவை அனைத்துக்கும் முத்தாய்ப்பாக, தில்லிக்குச் சென்று, குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணனைச் சந்தித்து, வாஜ்பாய் அரசுக்கு அளித்து வந்த ஆதரவை விலக்கிக் கொள்ளும் கடிதத்தை அளித்து விட்டார். பா.ஜ.க. கூட்டணியிலிருந்து வெளியேறுவதற்கான அரசியல் நாடகத்தின் கடைசிக் காட்சி முடிந்து விட்டது. ஆயினும், இக்காட்சியின் முடிவில், வீர வசனம் பேச அவர் தயங்கவில்லை. நாட்டின் இறையாண்மையையும், பாதுகாப்பையும் கட்டிக் காப்பதற்காகவே இம்முடிவைச் செய்துள்ளாராம்! 'வாஜ்பாய்-அரசு தேசத்தின் பாதுகாப்புக்கே அச்சுறுத்தல் ஆகிவிட்டது. நாட்டின் இறையாண்மையைக் கட்டிக் காப்பதில் அதற்கு அக்கறையில்லை' என்பது சுவையான காரணம்.*



பா.ஜ.க. அரசைக் கலைத்து விட்டு சோனியாகாந்திக்குத் தனது விஷ நாக்கை நீட்டினார், ஜெயலலிதா.

''இரண்டு வாரங்களுக்கு முன் **சுப்பிரமணியன் சுவாமி** அளித்த தேநீர் விருந்தில்- **சோனியா காந்தியைச்** சந்திப்பதுவரையில், வாஜ்பாய் அரசு நாட்டின் பாதுகாப்பைப் பேணக்கூடிய ஆட்சியாகத்தான் இருந்தது. அடுத்த ஓரிரு நாட்களில், அந்த அரசு பாதுகாப்புக்கே ஆபத்தாகி விட்டதாம்! எந்த அடிப்படையில் இந்த அவதூறைக் கூறுகிறார்? அது அவருக்கே வெளிச்சம்.''

-இவ்வாறு **'தினமணி'** ஜெயலலிதாவை நிறம் பிரித்துக் காட்டியது.

★ ★ ★

வாஜ்பாய் தலைமையிலான பா.ஜ.க. அரசுக்கு அளித்து வந்த ஆதரவை அ.தி.மு.க. திரும்பப் பெற்றுக் கொண்டதை அடுத்து, குடியரசுத் தலைவர் கே.ஆர்.நாராயணன் அவர்கள் நம்பிக்கை வாக்கினைக் கோரும்படி பிரதமர் வாஜ்பாயைக் கேட்டுக் கொண்டார். அவ்வாறு *15.4.1999* அன்று பிரதமர் வாஜ்பாய் நம்பிக்கை கோரும் தீர்மானத்தை மக்களவையில் தாக்கல் செய்தார். அதன்மீது இரண்டு நாட்கள் விவாதம் நடைபெற்றது.

16.4.1999 அன்று நாடாளுமன்ற மக்களவையில், பிரதமர் வாஜ்பாய் அவர்கள் நம்பிக்கை கோரும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் நாடாளு மன்ற கழகக் குழுத்தலைவர் **முரசொலி மாறன்** கலந்து கொண்டார். அப்போது அவர் ஆற்றிய உரை தி.மு.கழகத்தின் ஒட்டுமொத்தக் கருத்தாக அமைந்த உரையாகும். அந்த உரையின் சுருக்கம் வருமாறு:-

★ *''நான் பழைய நண்பர்களுக்கும், புதிய நண்பர்களுக்கும் என் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனெனில் பிசாசு இடம் மாறிவிட்டது. எனவே அதற்காக நான் வருத்தப்படுகிறேன். என்னுடைய ஆழ்ந்த துயரத்தை எப்படி வர்ணிப்பது என்று எனக்குத் தெரியவில்லை. நான் நாடாளுமன்ற உறுப்பினராக இந்த அவையிலும், மாநிலங்களவையிலும் கடந்த 31 ஆண்டுகளாக இருந்து வருகிறேன். எங்களுடைய அன்பிற்குரிய தலைவர் அறிஞர் அண்ணா அவர்களால், இங்கு 1967 ஆம் ஆண்டில் அனுப்பப் பட்டேன். கடந்த 31 ஆண்டுகளில் நான் பல விஷயங்களை இந்த அவையிலும், மாநிலங்களவையிலும் பார்த்திருக்கிறேன். அப்போது தி.மு.க. 25 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. நான் பெருமையுடன் கூற விரும்புகிறேன். அந்த 25 தி.மு.கழக எம்.பி.க்கள் மற்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் உதவியோடும், திருமதி இந்திரா காந்தி தனது சிறுபான்மை அரசை அமைத்தார். திருமதி இந்திரா காந்தி தி.மு.க.வின் உதவியோடுதான் மன்னர் மானியத்தை ஒழித்தார். தி.மு.க.வின் ஆதரவோடுதான் வங்கிகளை தேசிய மயமாக்கினார். மக்கள் தேசிய நலனுக்காகப் பயன்படுத்துவதற்காக எங்களுக்கு அதிகாரத்தை அளித்தார். அதன்படி பொறுப்புள்ள வகையில் தி.மு.க.தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி வருகிறது. எந்தக் காலத்திலும் யாரையும் 'பினாமி மெயில்' செய்ய அதைப் பயன்படுத்தியதில்லை.''*

★ *''நெருக்கடி நிலையின்போது நாங்கள் காங்கிரஸ் கட்சியை விட்டு விலகி விட்டோம். அதற்காக நான் மிகவும் வருத்தப்படுகிறேன். ஆனால் அப்போது என்ன நடந்தது? நாங்களும், பா.ஜ.க. உறுப்பினர்களும், மார்க்சிஸ்ட் தோழர்களும் சிறைத் தோழர்களானோம். நாங்களும், பா.ஜ.க.உறுப்பினர்களும் பத்தாண்டுகளுக்கு மேலாக காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபோது*

எதிர்க்கட்சிகளாக இருந்தோம். நானும் ஆளுங்கட்சி வரிசையிலே இருந்திருக்கிறேன். பா.ஜ.க.மற்றும் மார்க்சிஸ்ட் கட்சி ஆதரவோடு வி.பி.சிங் பிரதமராக இருந்தபோது நானும் இங்கே ஒரு அமைச்சராக இருந்திருக்கிறேன். அவர்கள் இருவருமே அந்த அரசை ஆதரித்தனர். பின்னர் ஐக்கிய முன்னணி ஆட்சியின்போது நான் அமைச்சராக இருந்தேன். மார்க்சிஸ்ட் கட்சியும், காங்கிரஸ் கட்சியும் உதவி செய்தன. அவர்கள் ஆதரவளிக்காமல் இருந்திருந்தால் அந்த ஆட்சி நீடித்திருக்க முடியாது. இப்போது எல்லா இடத்திலும் எனக்கு நண்பர்கள் இருக்கிறார்கள். இப்போது அவர்களில் யாரை ஆதரிப்பது என்பதைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அது மிகவும் கடினமான தேவையாகும்.

★ ''கடந்த வாரம்வரை மூன்றாவது அணி என்று கூறப்படும் அணியில் நான் இருந்தேன். அது தீவிரமாக இருந்தது. தீவிரமாக இருக்கும் என்று நம்புகிறேன். திடீரென்று ஒரு மாற்றம் ஏற்பட்டது. எங்களை விட்டு விலகி விட்டார்கள். எனவே தேசிய மற்றும் மாநில நலன்களைக் கருத்தில் கொண்டு, நாங்களாகவே முடிவெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.''

★ ''எங்களுடைய நீண்ட கால அரசியல் வரலாற்றில், காரணம் எதுவாக இருந்தாலும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் சிறுபான்மையினருக்கும் ஆதரவு அளித்து பாதுகாத்து வந்திருக்கிறோம். அந்தப் பெருமைகளில் யாரும் எங்களைச் சந்தேகப்பட முடியாது. அவ்வாறு செய்வதற்கு நாங்கள் ஏற்றுக்க கொண்டுள்ள உறுதியை இன்று மீண்டும் உறுதிப்படுத்துகிறோம். ஏனெனில் எங்களுடைய இயக்கம் 1916இல் சிறுபான்மையினரையும், பிற்படுத்தப்பட்டவர்களையும் உயர்வடையச் செய்வதற் காகவே ஏற்படுத்தப்பட்டது. அது எங்களுடைய உறுதிமொழி. அதை மீண்டும் உறுதிப்படுத்துகிறேன். அதை நாங்கள் தொடர்ந்து செய்வோம்.

★ *''அதே நேரத்தில், நான் சில கேள்விகளைக் கேட்க விரும்புகிறேன். தேவகவுடாவும் இங்கே இருக்கிறார்-குஜ்ரால்ஜியும் இருக்கிறார்-மூப்பனார் போன்ற மூத்த தலைவர்களும் நம்முடன் இருந்தனர். ஐக்கிய முன்னணி ஆட்சியின் போது காங்கிரஸ் கட்சி ஆட்சியில் பங்கு பெற வேண்டுமென்று எல்லோரும் விரும்பினர். ஒரு நிலையான அரசை அமைக்க வேண்டும் என்பதற்காக எல்லோருமே காங்கிரஸ் ஆட்சியில் பங்கு பெற வேண்டுமென்று விரும்பினர். மூப்பனார் எப்போதுமே காங்கிரஸ் பங்கு பெற வேண்டுமென்று வலியுறுத்தி வந்தார். ஆனால், என்னுடைய இடதுசாரி நண்பர்கள் அதை மிகக் கடுமையாக எதிர்த்தனர் என்பதைக் குறிப்பிட நான் வருந்துகிறேன். அப்போது அதை நாங்கள் நிறைவேற்றியிருந்தால் நிலைமைகள் மாறியிருக்கும். பிரச்சினைகள் வேறாக இருந்திருக்கும். அதை நாங்கள் நிறைவேற்ற முடியவில்லை. அது சரித்திரத்தில் இடம் பெற்றுள்ளது.*

★ *''நேற்று வரை நான் இந்த அரசை எதிர்த்து வந்தேன். காவிரிப் பிரச்சினைச் சிக்கலைத் தீர்த்த இந்த அரசுக்குரிய பெருமையைத் தவிர, இந்த அரசின் எந்தச் சாதனைகளையும் நான் பாராட்ட முடியாது. இன்றுகூட பல பிரச்சினைகளில் என்னால் நேருக்கு நேர் சந்திக்க முடியவில்லை. ஆனால், அ.தி.மு.க.புதிய நண்பர்களின் ஆதரவோடு மேற்கொண்டுள்ள முயற்சி, மாநிலத்தின் நலனுக்கும், தேசத்தின் நலனுக்கும் எதிரானது. எனவே, தற்போதைய அரசு தொடர்வதை நாங்கள் ஆதரிக்கிறோம். எங்களுக்கு வேறு வழியில்லை. நாங்கள் அடல்ஜியை ஆதரிக்கிறோம். ஒரு போதும் ஊழலின் தாயை நாங்கள் ஆதரிக்க முடியாது.''*

இவ்வாறு முரசொலி மாறன் நாடாளுமன்றத்தில் தி.மு.கழகத்தின் கருத்தினை எடுத்து வைத்தார்.

★ ★ ★

அதன் பின்னர் செய்தியாளர்கள் என்னைச் சந்தித்தனர். ''திராவிட இயக்கத்தின் மூத்த முன்னோடித் தலைவர் என்ற முறையில் தாங்கள் இப்போது எடுத்துள்ள முடிவு வருங்காலத்தில் எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தும் என்று நினைக்கிறீர்கள்?'' என்று கேள்வி கேட்டனர்.

அதற்கு நான், ''ஜெயலலிதாவின் ஊழலை விட மதவாதம் என்பது கொடுமையானதல்ல-என்று நான் சொல்லியிருக்கிறேன். அதனால் மதவாதம் இனிமையானது என்று பொருள் அல்ல. பாம்பைவிட மோசம் என்று ஒரு பெண்ணையோ, ஆணையோ சொன்னால் என்ன அர்த்தம்? பாம்பு நல்லது என்று அர்த்தமா? பாம்புக்கும் விஷம் உண்டு என்றுதான் அர்த்தம். அதைப் போலத்தான் இதுவும்! தமிழ்நாட்டில் கடந்த ஆட்சியில் எவ்வளவு தீமைகள் நடைபெற்றன என்பதையும் லஞ்ச லாவண்யங்கள்-ஊழல்கள் எவ்வளவு நடைபெற்றன என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்'' என்று பதிலளித்தேன்.

16.4.1999 அன்று நாடாளுமன்றத்தில், விவாதம் விடிய விடிய **17**ஆம் தேதி காலை **5.30** மணிவரை நடைபெற்றது. தொடர்ந்து **17** ஆம் தேதி காலை **11** மணி அளவில் விவாதத்திற்குப் பதிலளித்து பிரதமர் வாஜ்பாய் பேசினார்.

அதைத் தொடர்ந்து, ''ஓரிசா முதலமைச்சர் **கிரீதர் கோமங்காவை** வாக்களிக்க அனுமதிக்கலாமா?'' என்பதற்கான ஒரு விவாதம் நடைபெற்றது. ''நாடாளுமன்றத்திலே நடைபெற்ற விவாதத்திலே முதலமைச்சர் ஒருவர் வாக்களிக்கலாமா?'' என்பதற்கான விவாதம் நடைபெற்றது, ''அவர் வாக்களிக்கலாம்'' என்று மக்களவைத் தலைவராக இருந்த பாலயோகி தீர்ப்பளித்த பிறகு, வாக்கெடுப்பு நடைபெற்றது.

வாஜ்பாய் அவர்களின் தீர்மானத்திற்கு ஆதரவாக **269** வாக்குகளும், எதிராக **270** வாக்குகளும் கிடைத்து, வாஜ்பாய் அரசு ஒரு வாக்கில் தோல்வியடைந்தது. ஓரிசா முதலமைச்சரை வாக்களிக்க அனுமதித்திருக்காவிட்டால், தீர்மானத்திற்கு ஆதரவாகவும், எதிராகவும் **269** வாக்குகள் சமமாகக்

கிடைத்திருக்கும். எனவே அந்த நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்றவர் என்று யாரையும் சொல்ல முடியாத நிலை. மயிரிழை வித்தியாசம் என்பார்களே-அதைப்போல வாஜ்பாய் அரசு தோல்வி அடைந்ததைப் பற்றி பத்திரிகைகள் எல்லாம் பல விதமாக எழுதின.

''பா.ஜ.க.அரசு கவிழ என்ன காரணம்?'' என்று செய்தியாளர்கள் என்னிடம் கேட்டதற்கு, ''ஓரிசா மாநில முதலமைச்சரை ஓட்டுப் போட அனுமதித்த பெருந் தன்மைக்குக் கிடைத்த பரிசுதான் இந்தத் தோல்வி-ஜனநாயகத்தில் வெற்றி தோல்வி என்பதெல்லாம் சகஜம்'' என்று நான் பதிலளித்தேன்.

இந்துஸ்தான் டைம்ஸ் 18.4.1999 தேதிய இதழில், ''பல மாதங்களுக்கு முன்பே மாநில அரசுக்கு தலைமை தாங்கிச் சென்று விட்ட ஓரிசா முதலமைச்சரை, நாடாளுமன்றத்திற்கு வாக்களிக்க கொண்டு வந்ததன் மூலம், அரசு தோற்கடிக்கப் பட்டுள்ளது என்பது மகிழ்ச்சியைத் தரும் விஷயமல்ல!'' என்று எழுதியது.

மேலும் அந்த ஆங்கில நாளிதழ், **''ஜெயலலிதா, சுப்பிரமணிய சுவாமி** என்ற இரட்டை அழிவு சக்தியால் செயற்கையாக உருவாக்கப்பட்ட நம்பிக்கைத் தீர்மானத்தின் மூலம் ஓர் அரசு வெளியேற்றப்படுவது இந்திய ஜனநாயகத்தின் உச்ச கட்ட சோகமாகும். ஒரு தேசிய அரசை வீழ்த்த மாநிலக் கட்சித் தலைவர் ஒருவரின் குறுகிய, சுயநல வேட்கைகளைத் தடையேதுமின்றி ஏற்றுக் கொள்ள நேரிட்டது இந்நாட்டின் ஜனநாயக எதிர்க் கட்சிகளுக்கு ஏற்பட்டுள்ள, தோல்வியாகும்.'' என்று எழுதியது.

ஆம்-ஜெயலலிதாவையும், சுப்ரமணியசுவாமியையும் அந்த நேரத்தில் இரட்டை அழிவு சக்திகள் என்றே அந்த ஏடு எழுதியிருந்தது.

மேலும் அந்த இதழ், ''இழிவாகப் பேசப்பட்ட இரு பெண்மணிகளால் வாஜ்பாய் அரசு தோல்வி அடைந்துள்ளது. அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா இந்த இக்கட்டான சூழலை

தோற்றுவித்தார் என்றால், பி.எஸ்.பி. தலைவி மாயாவதி கடைசித் தாக்குதல் நடத்தியுள்ளார். முதல் நாள் இரவு தாங்கள் யாருக்கும் ஓட்டளிக்கப் போவதில்லை என்று அறிவித்து, அதன் மூலம் அரசாங்கத்தை தூங்க வைத்துவிட்டு, கடைசி நேரத்தில் மாயாவதி தன்னுடைய பாதையை மாற்றிக் கொண்டு அரசுக்கு எதிராக ஓட்டளித்து விட்டார். மேலும் எதிர்பாராத வகையில் ஒரிசா முதல்வர் பிரச்சினை வந்துவிட்டது. அதில் நாடாளுமன்றத் தலைவர் மேற்கொண்ட முடிவு எல்லா எதிர்ப்பார்ப்புகளையும் சாய்த்து விட்டது. அப்படி ஒரு முடிவு ஏற்பட்டிருக்காவிட்டால் ஆளும் கூட்டணிக்கும், எதிர்க்கட்சிகளுக்கும் சம எண்ணிக்கை கிடைத்திருக்கும். நாடாளுமன்றத் தலைவரும் தனது வாக்கைச் செலுத்தி கௌரவத்தைக் காத்திருப்பார்'' என்றும் எழுதியது.

''டெக்கான் ஹெரால்ட்'' இதழ் ''மக்கள் எல்லோரும் ஒரே மாதிரியாக ஜெயலலிதா மீது தமக்குள்ள வெறுப்பை வெளிப்படுத்தினர்'' என்றும்-

''தி பயோனியர் நாளேடு'', ''பா.ஜ.க அணியிலிருந்து ஜெயலலிதா, அரசை 'பிளாக் மெயில்' செய்ததும், முதுகில் குத்தியதும் எந்த நெறிமுறைக்கும் உகந்தது அல்ல. ஜெயலலிதாவிடம் சரி எது-தவறு எது-என்று பிரித்துப் பார்த்து நடந்து கொள்ளக்கூடிய குணம் கிடையாது. பதவியைத் தவறாகப் பயன்படுத்தி, பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு ஆளானவர் அவர்'' என்றும் ஜெயலலிதாவிற்கு **'புகழாரங்கள்'** சூட்டியிருந்தன.

சென்னையில் ***21.4.1999*** அன்று த.மா.காவும் இடதுசாரிக் கட்சிகளும், தனியாக ஒரு கூட்டம் கூட்டி, ''பா.ஜ.க.விற்குத் தி.மு.கழகம் ஆதரவு தெரிவித்ததை மறுபரிசீலனை செய்ய வேண்டும்'' என வேண்டுகோள் ஒன்று வெளியிட்டிருந்தார்கள்.

அதைப்பற்றி என்னிடம் செய்தியாளர்கள் கேட்டபோது, ''அவர்கள் தற்போது கூட்டிய கூட்டத்தை, அந்தக் கட்சிகளின் தலைவர்கள் எல்லாம் சேர்ந்து, நாடாளுமன்றத்தின் நம்பிக்கை தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடந்ததே-அதற்கு முன்பே

கூட்டி, தி.மு.கழகத்தையும் அதிலே கலந்து கொள்கிற சூழ்நிலையை உருவாக்கியிருப்பார்களேயானால், நான் மகிழ்ச்சி அடைந்திருப்பேன். கூட்டம் என்று நடத்தா விட்டாலும், இந்திய தேசீய லீக் தவிர மற்ற தோழமைக் கட்சித் தலைவர்களோடு நான் சந்தித்த போதெல்லாம் -ஜெயலலிதா இருக்கும் அணியை ஆதரித்து ஜெயலலிதா நடத்திய ஊழல் கொள்ளைக்கும், அதன் காரணமாக நடைபெறுகின்ற வழக்குகளுக்கும் அந்த அம்மையாருக்குப் பாதுகாப்பு வேலியாக நாம் இருக்க வேண்டுமா? என்று கேள்வி எழுப்பியிருக்கிறேன். அவர்களும் என்னுடைய உணர்வை ஒத்துக்கொண்டுதான் என்னோடு பேசினார்கள்.

திரு அருணன் எழுதிய புத்தக வெளியீட்டு விழாவிலும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களிடம் இதுபற்றிப் பேசியபோது அவர்களும் என் கருத்துக்கு மறுப்பு தெரிவிக்கவில்லை. என்ன முடிவெடுக்க வேண்டும் என்பதைப் பற்றி என்னிடம் கூறாமலேயே அவர்களாக முடிவெடுத்துச் செயல் பட்டுவிட்டு, இப்போது கூட்டம் நடத்தி அதுபற்றிப் பேசுவதிலே என்ன பயன் இருக்க முடியும்? எங்களைப் பொறுத்தவரை பா.ஜ.க. அரசுக்கு நம்பிக்கை வாக்கெடுப்பில் ஆதரவு தெரிவித்தோம் என்பதை விட, ஜெயலலிதாவின் உள்ளார்ந்த நோக்கத்தைப் புரிந்து கொண்டு அதற்கெதிராக செயல்பட்டோம் என்பதுதான் உண்மை'' என்று கூறினேன்.

தொடர்ந்து செய்தியாளர்கள், ''காங்கிரஸ் கட்சி சார்பாக உங்களிடம் ஆதரவு கேட்டு யாராவது தொடர்பு கொண்டார்களா?'' என்று கேட்டபோது-

''அதுவரையில் யாரும் காங்கிரஸ் தரப்பிலிருந்து என்னிடத்திலே வரவும் இல்லை-பேசவும் இல்லை'' என்று கூறினேன்.

மேலும் தொடர்ந்து, ''தி.மு.கழகம் என்றைக்கும் சிறுபான்மைச் சமுதாயத்தின் பாதுகாப்பு அரணாகத் தான் இருக்கும்-மத வெறியை மாய்ப்பதில் நாங்கள் யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல-அது எங்கள் குருதியோட்டத்தோடு கலந்த ஒன்று'' என்றும் குறிப்பிட்டேன்.

49. ஏரி உடைப்பும்; என் கடமையும்!

செங்குன்றம் ஏரியில் உடைப்பு ஏற்பட்டு - சென்னைக்கே மாபெரும் ஆபத்து உண்டாகவிருந்த செய்தியறிந்து, அதிகாலையிலேயே ஓடி அவ்விபத்தைத் தடுத்து நிறுத்தினேன்

வாஜ்பாய் அரசு தோல்வியடைந்ததையொட்டி, மாற்று அரசு அமைப்பது யார் என்ற கேள்வி எழுந்தது. பல்வேறு கட்சித் தலைவர்களிடையே தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. அந்த நிலையில், குடியரசுத்தலைவர் **கே.ஆர்.நாராயணன்** அவர்களை அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவரான திருமதி **சோனியா காந்தி** சந்தித்துப் பேசினார்.

அப்போது குடியரசுத் தலைவர் மாற்று அரசு அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்படிச் **சோனியா காந்தியிடம்** தெரிவித்தார். அதன் பின்னர் செய்தியாளர்களிடம் திருமதி சோனியா காந்தி, ''காங்கிரஸ் கட்சி தனியாக ஆட்சி அமைக்கும்- தோழமைக்கட்சிகள் வெளியிலிருந்து ஆதரவளிப்பார்கள்!'' என்று கூறினார்.

அதற்கு காங்கிரசின் ஆதரவுக் கட்சிகளிடைய கடும் எதிர்ப்பு தோன்றியது. என்றாலும், காங்கிரஸ் அவர்களுடைய கோரிக்கையை ஏற்கவில்லை. அப்போது 20 உறுப்பினர்களைக் கொண்ட சமாஜ்வாடி கட்சித் தலைவர் **முலாயம் சிங் யாதவ்** குடியரசுத் தலைவரைச் சந்தித்து, ''காங்கிரஸ் உட்பட எந்தக் கட்சிக்கும் எங்கள் கட்சி ஆதரவு அளிக்கவில்லை'' என்று தெரிவித்தார். மேலும் இடதுசாரிக் கட்சிகளான **புரட்சி சோஷலிஸ்ட் கட்சி, பார்வர்டு பிளாக் கட்சி** ஆகியவற்றின்

பிரதிநிதிகள் குடியரசுத் தலைவரைச் சந்தித்து, ''காங்கிரஸ் கட்சி மாற்று அரசு அமைத்தால், ''நாங்கள் அதற்கு ஆதரவு அளிக்க மாட்டோம்'' என்று தெரிவித்தனர். குடியரசுத் தலைவர் சட்ட வல்லுநர்களை அழைத்து, ''என்ன செய்யலாம்?'' என்பதைப் பற்றி ஆலோசனை நடத்தினார்.

நிலையான ஆட்சி ஒன்று மத்தியில் நடைபெற்று வந்ததை மாற்றி, தமிழகத்தைச் சேர்ந்த **ஜெயலலிதா** தனது பிடிவாதம் காரணமாக நிலைகுலைந்த ஒரு நிலைமையைத் தோற்று வித்தார். அதன் காரணமாக, தி.மு.க., பா.ஜ.க.விற்கு ஆதரவு காட்ட வேண்டிய ஒரு கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டது. பா.ஜ.க. ஆட்சிக்கு தி.மு.கழகம் அப்போது அளித்த ஆதரவு தேர்தல் கூட்டணியில் போய் முடியுமா? என்ற ஒரு கேள்வி எழுந்தபோது -

''இந்தச் சூழ்நிலையிலே தி.மு.க.அப்படியொரு நிலை எடுத்திருக்கிறது-தேர்தல் வருகின்ற நேரத்தில் கலந்து பேசி கூட்டணி எப்படி அமைப்பது என்பதைப் பற்றி யோசிப்போம்!'' என்று கூறினேன்.

மேலும் தொடர்ந்து, ''எங்கள் இயக்கம் சுயமரியாதை இயக்கத்தின் அடிப்படையில் உருவானது. சுயமரியாதை இயக்கத்தின் கொள்கை-கடவுளைப்பற்றி, மதத்தைப்பற்றி,



செங்குன்றம் ஏரியில் ஏற்பட்ட இந்த அபாயகரமான உடைப்பை, அடைக்க, தொழிலாளர்கள் போராடினார்கள்.



ஏரி உடைப்புச் சரி செய்ய தீவிரப் பணி

சாதிகளைப் பற்றி-இவைகளைப்பற்றிச் சொல்லுகிற வழிகளாக இருந்தாலும்-நாங்கள் எங்களுடைய சுயமரியாதையை-தனிப்பட்ட கருணாநிதியின் சுயமரியாதையை அல்ல-தி.மு.கழகம் எனும் இந்த அமைப்பின் சுயமரியாதையை இழந்துவிட முடியாது. அதையும் சேர்த்துத்தான் நாங்கள் சுயமரியாதை இயக்கம் என்று சொல்கிறோம். அப்படிப்பட்ட ஒரு இயக்கத்தை ஒரு பேச்சு வார்த்தைக்குக்கூட காங்கிரஸ் இயக்கம் அழைக்கவில்லையே-என்பதை நாங்கள் எப்படி எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியும்? அது உள்ளபடியே எங்களுக்கு வேதனை தரக்கூடிய செய்திதான்'' என்று நான் கூறினேன்.

அப்படியென்றால், ''பா.ஜ.க.வுடன் தேர்தல் கூட்டணி ஏற்பட வாய்ப்புள்ளது என்கிறீர்களா?'' என்று செய்தியாளர் தொடர்ந்தார்.

அதற்கு நான், ''நான் இப்போதே இல்லை என்றும் சொல்ல முடியாது-உண்டு என்றும் சொல்ல முடியாது. அதை எங்களுடைய செயற்குழு, பொதுக்குழு தான் தீர்மானிக்கும்'' என்று கூறினேன்.

அப்போது ஆந்திர முதலமைச்சரும், தெலுங்கு தேசக் கட்சித் தலைவருமான சந்திரபாபு நாயுடு, தங்களுடைய ஆதரவு

பா.ஜ.க. அரசுக்குத்தான் என்றும், பா.ஜ.க.என்ற கட்சிக்கு அல்ல என்றும் ஒரு கருத்தை வெளியிட்டார்.

அதைக் குறிப்பிட்டு செய்தியாளர், ''நீங்களும் அப்படித் தானா?'' என்று வினா எழுப்பியபோது-

''நாங்கள் எடுக்கிற நிலையும் அரசு அமைப்பது குறித்த நிலையாகத்தான் இருக்க முடியும். கொள்கை அளவில் நாங்கள் பா.ஜ.க.வுடன் சமரசம் செய்து கொள்ளும் அளவிலே இருக்காது. அந்த அரசுக்கு ஆதரவாக இருப்போம். அரசிலே இருந்துகொண்டு எங்கள் கொள்கைக்கு மாறாக நடந்தால், அது குறித்து விவாதிப்போம்-என்று எப்படி 1998 இல் கூட்டணியில் இருந்துகொண்டே, சில புரட்சிகரமான கட்சிகள் கருத்து சொன்னார்களோ, அதே நிலையைத்தான் எடுக்க வேண்டியிருக்கும்'' என்று கூறினேன்.

★ ★ ★

கணிப்பொறி இணையத்தின் மூலம் **''இந்தியா வேர்ல்டு சமாச்சார்''** பத்திரிகை ஒரு கருத்துக் கணிப்பினை அந்த நேரத்தில் நடத்தியது. அதில், **''இந்தியாவில் ஏற்பட்ட அந்த நிலைக்கு முக்கிய காரணமான வில்லன் யார்?''** என்பதுதான் தலைப்பு. **8.352** பேர் அதிலே கலந்துகொண்டு, தங்கள் கருத்துக்களை அனுப்பியிருந்தனர். அவர்களில் **5,588** பேர் **''ஜெயலலிதாதான் முக்கிய காரணம்''** என்று தங்கள் கருத்துக்களை வெளியிட்டிருந்தனர் என்றால், எந்த அளவிற்கு அவருடைய **'பெருமை'** (?) ஓங்கியிருந்தது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

கொள்கை மாறுபாடு கொண்ட தி.மு.க.-பா.ஜ.கவிற்கு எந்தக் கட்டத்தில் எப்படி ஆதரவு அளிக்க முன்வந்தது என்பது பெரிய பிரச்சினையாக அப்போது ஏடுகளில் எழுதப்பட்டது. என்னிடமும் செய்தியாளர்கள் தொடர்ந்து கேள்விகளைக் கேட்டார்கள். அவர்களிடம் நான் அளித்த விளக்கத்தின் சுருக்கம்:-

★ *''எங்கள் கூட்டணிக் கட்சிகள் எங்களோடு கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளத் தயாராக இல்லை.*

ஆங்காங்கு அவ்வப்போது கூடிப்பேசுகிற நிலைமையில் இல்லை. சந்திக்கும் இடத்திலே இந்தக் கருத்துக்களைச் சொன்னபோது - அதாவது ஜெயலலிதா இருக்கின்ற அணியிலே இருக்கக்கூடாது என்ற கருத்தை அவர்களும் வலியுறுத்திச் சொன்னார்கள். நானும் அந்தக் கருத்தை வலியுறுத்திச் சொன்னேன். அதற்கு யாரும் மறுப்புச் சொல்லவில்லை. தமிழ் நாட்டிலே உள்ள தோழமைக் கட்சிகள், த.மா.கா. வாக இருந்தாலும், சி.பி.எம்.ஆக இருந்தாலும், சி.பி.ஐ.ஆக இருந்தாலும், யாரும் இந்தக் கருத்தை மறுத்துச் சொல்லவில்லை. என்னுடைய கருத்தை ஆதரிப்பது போல்தான் பேசினார்கள். அவர்கள் முடிவெடுப்பதற்கு முன்புகூட, இன்ன முடிவெடுக்கப் போகிறோம் என்று யாரும் என்னிடத்திலே சொல்லவில்லை.

★ ''இதற்கிடையில், ஜெயலலிதா டெல்லிக்குச் சென்று, எங்களுடைய தமிழ்நாட்டிலே உள்ள கூட்டணிக் கட்சிகளின் மேல்மட்டத்தலைவர்களைச் சந்திக்கின்ற செய்திகள் எல்லாம் வர ஆரம்பித்து விட்டன. அப்போது கூட அவர்கள் யாரும் எங்களைக் கலந்து பேசவில்லை. எங்களை ஓரம் கட்டி விட்டார்கள் என்றுதான் சொல்லவேண்டும்.

★ ''இதையெல்லாம் விட நாங்கள் ஏன் காங்கிரசை ஆதரிக்கவில்லை என்றுகூட நீங்கள் கேட்கலாம். காங்கிரஸ் கட்சியின் தலைமையிடமிருந்து ஒரு தொலைபேசிச் செய்தி கூட எனக்குக் கிடையாது. சென்னையிலே தொலைபேசியிலே அழைக்கா விட்டாலும்கூட, டெல்லியிலே உள்ள முரசொலி மாறன் இடத்திலேகூட அவர்கள் யாரும் அதைப் பற்றிப் பேசவில்லை. அவர்கள் த.மா.கா. தலைவரை அழைத்துப் பேசக்கூடிய வாய்ப்பை உருவாக்கிக் கொண்டபோது கூட என்னை யாரும் தொடர்பு கொள்ளவில்லை.

★ ''எங்களைப் பொறுத்தவரையிலே, நாங்கள் மொராஜிதேசாய் தலைமையிலே ஜனதா கட்சி ஆட்சி

அமைத்த போது-அப்போதும் நாங்கள் மொராஜ்ஜி தேசாய் அவர்களின் ஜனதா கட்சியை ஆதரித்த நிலை இருந்தது. அப்போது, ஜனதா கட்சியை ஆதரித்த கட்சி **வாஜ்பாய்** அவர்களின் ஜனசங்கம் கட்சி.




ஏரிப் பகுதியில் சீரமைப்புப் பணிகளைப் பார்வையிடும் மேயர் மு.க.ஸ்டாலின் - மற்றும் அமைச்சர்கள்

★ *"அதற்குப் பிறகு* **வி.பி.சிங்** *அவர்களின் தேசிய முன்னணியில் இருந்தோம். அந்த தேசிய முன்னணி ஆட்சிக்கு வெளியே இருந்து ஆதரவு கொடுத்தது. பா.ஜ.க.எனவே நாங்கள் இருந்த ஒவ்வொரு அணியிலும் பா.ஜ.க.இருந்திருக்கிறது. எனவே இப்போது ஒன்றும் புதிதல்ல-அதாவது, வாஜ்பாய் தலைமையிலே உள்ள அணியிலே நாங்கள் இருந்தால், அது ஒன்றும் புதுமையல்ல. வாஜ்பாய் அணியோடு நாங்கள் இருந்திருக்கிறோம். இன்னும் நாங்கள் முடிவெடுக்க வில்லை. தொடர்ந்து இருந்தால் அது ஒன்றும் புதிதல்ல" என்று பதிலளித்தேன்.*

செய்தியாளர்:-மூன்றாவது அணியிலே இடம் பெற்றிருந்த உங்களிடம் பேசாமல், **ஜோதிபாசு, சுர்ஜித், பரதன், முலாயம்,** லல்லு போன்றவர்கள் அந்த அணியிலே இல்லாத ஜெயலலிதாவிடம் பேசியது பற்றி உங்கள் கருத்து என்ன?

நான்:- நான் முலாயம், லல்லுபற்றி எதுவும் சொல்ல விரும்பவில்லை. ஏனென்றால், ஜெயலலிதாவை அவர்கள் நேரடியாக எதிர்த்துப் பேசியவர்கள் அல்லர். அதனால் அவர்கள் ஜெயலலிதாவைச் சந்தித்தது என்பது இயல்பான ஒன்றாகக் கூட இருக்கலாம். ஆனால், சி.பி.எம்., சி.பி.ஐ. கட்சிகள் எங்களோடு சேர்ந்து ஜெயலலிதாவை அவருடைய செயல்களை-அவருடைய அமைச்சர்கள் இருவர் பா.ஜ.க.



"அதிகாலையிலேயே எழுந்து சென்று ஏரி உடைப்பை அடைக்க அளப்பரிய காரியங்களைச் செய்த முதல்வர் கலைஞரை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது. பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் அவரை மனதாரப் பாராட்டுகிறேன்."
- என்றார் கோ.க.மணி

அரசில் இருந்து கொண்டு செய்த சேட்டைகளை-தொடர்ந்து கண்டித்து வந்தவர்கள். இந்தச்சூழ் நிலையில் குறைந்த வாக்குகளில் பா.ஜ.க. அரசு கவிழ்கிறது என்பதற்காக மாத்திரம் ஜெயலலிதாவை அவர்கள் அழைத்துப் பேசியது எனக்கு வருத்தம் அளிக்கக் கூடியதுதான். பழகிக் கொண்டிருந்த நம்மைப் புறக்கணித்து விட்டு, நம்மோடு சேர்ந்து கடைசி நிமிடம்வரை எந்தக் கருத்தைத் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார்களோ, அந்தக் கருத்துக்கு மாறாக, டெல்லியிலே ஜெயலலிதாவை சுர்ஜித் சந்தித்துப் பேசியது, அவர்களோடு சேர்ந்து ஒரு அரசைக் கவிழ்க்க முனைந்தது என்பதிலேகூட அல்ல- ஜெயலலிதாவோடு சேர்ந்து கொண்டு என்கிற போதுதான் என்னுடைய மனதிற்கு வேதனையைத் தருகிறது. ஊழலின் ஒரு உலைக்களத்தை தமிழ்நாட்டில் மறுபடியும் உலவவிடலாம் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினரும், சி.பி.ஐ.தோழர்களும் எப்படி அனுமதித்தார்கள் என்றுதான் எனக்குப் புரியவில்லை. அதிலே எனக்கு மிகுந்த மன வேதனை உண்டு.

செய்தியாளர்:- அ.தி.மு.க.தலைவர்களின் 46 வழக்குகள் இருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் அ.தி.மு.க.வுடன் காங்கிரஸ் உறவு வைத்துக்கொண்டால் அது எவ்வாறு இருக்கும்?

நான்:- அது மக்களிடத்தில் நிச்சயமாக எடுபடாது என்பதுதான் என்னுடைய கருத்தாகும்.


செய்தியாளர்:- பா.ஜ.க.அரசுக்கு ஆதரவு தருவது என்று ஒரு முடிவு எடுத்தது எந்தக் கட்டத்தில்? ஜெயலலிதா, சோனியா காந்தி, சுப்பிரமணிய சுவாமி அளித்த தேநீர்

விருந்தில் கலந்து கொண்ட பிறகா? அல்லது **அத்வானி** அவர்களும், **வாஜ்பாய்** அவர்களும் உங்களுடன் தொலை பேசியில் பேசிய பிறகா?


நான்:- பா.ஜ.வின் கொள்கையில் நாங்கள் சமரசமாகி, அந்த அடிப்படையில் இந்த முடிவை எடுக்கவில்லை. தி.மு. கழகத்தின் கொள்கை, கோட்பாடுகள் அப்படியே இருக்கின்றன. அவைகளை அப்படியே சிந்தாமல், சிதறாமல் காப்பாற்றக்கூடிய பொறுப்பும், கடமையும் எங்களுக்கு என்றைக்கும் உறுதியாக உண்டு. அதே நேரத்தில், இந்தியாவினுடைய அரசியலில்-ஜனநாயகத்தில்-எங்களுக்கு ஒரு உறுதியான நிலை இருக்க வேண்டுமென்ற கோட்பாடும் உண்டு. வாஜ்பாய் அவர்களைப் பொறுத்தவரை தனிப்பட்ட முறையில் எனக்கு நல்ல அபிப்பிராயம் உண்டு. அவர் ஒரு நல்ல மனிதர் என்று பலமுறை சொல்லியிருக்கிறேன். பா.ஜ.க.விற்கும் எங்களுக்கும் கொள்கை வேறுபாடுகள் இருந்தாலும், அவருடைய குணத்தால் நான் ஈர்க்கப்பட்டவன்.

இதற்கிடையே, பா.ஜ.க. அரசு கவிழ வாக்களித்த கட்சிகளில் ஒரு கட்சியாக இருந்த த.மா.கா. தலைவர்களில் ஒருவரான நண்பர் **ப.சிதம்பரம்** அவர்கள், ''மத்தியில் காங்கிரஸ் ஆட்சி அமைந்து, அதிலே அ.தி.மு.க.பங்கேற்றால், அதனை எதிர்த்து வாக்களிப்போம்!'' என்று கூறினார்.

மூப்பனார் அவர்களோ, ''காங்கிரஸ் ஆட்சிக்கு மற்றக்கட்சிகள் வெளியிலேயிருந்து ஆதரிக்கட்டும்'' என்றார்.



''வாஜ்பாய் ஆட்சி கவிழக் காரணமான வில்லன் யார்?'' என்று கருத்துக்கணிப்பு நடத்தி 'ஜெயலலிதா தான் முக்கிய காரணம்' என்று கேலிச்சித்திரம் வெளியிட்டது. 'இந்தியா வேல்ட் சமாச்சார்' ஆங்கில ஏடு.



வாஜ்பாய் ஒரு நல்ல மனிதர் - பா.ஜ.க.விற்கும் எங்களுக்கும் கொள்கை வேறுபாடுகள் இருந்தாலும் அவரது உயரிய குணத்தால் ஈர்க்கப்பட்டவன் நான்.

''காங்கிரஸ் தலைமையில் மாற்று அரசு அமைப்பதற்கு ஆதரவு அளிக்க முடியாது!'' என்று புரட்சிகர சோஷலிசக் கட்சி, பார்வர்டு பிளாக் கட்சிகள் திட்ட வட்டமாக அறிவித்தன.

மாற்று அரசில் தாங்களும் வேண்டும் என்று ஜெயலலிதா, முலாயம்சிங், லாலு பிரசாத் ஆகியோர் பிடிவாதமாகத் தெரிவித்தனர். அதனால் புதிய அரசு அமைக்கும் முயற்சிகளுக்கு பின்னடைவு ஏற்பட்டது. காங்கிரஸ் தலைமையில் அமையும் சிறுபான்மை அரசுக்குப் பிற கட்சிகள் வெளியிலிருந்து ஆதரவு அளிக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் வலியுறுத்தின.

இதற்கிடையே, செய்தியாளர்களிடம் ஜெயலலிதா, ''மாற்று அரசுக்கு தலைமையேற்று பிரதமராக ஜோதிபாசு முன் வந்தால் அ.தி.மு.க. அவருக்கு முழுமையான ஆதரவை அளிக்கும்!'' என்றார்.

நம்பிக்கை வாக்கெடுப்பின் போது, வாஜ்பாய் அரசுக்கு ஆதரவளித்த தி.மு.க, இந்திய தேசிய லோக்தளம், தெலுங்கு தேசம் போன்ற கட்சிகள் வாஜ்பாய் தலைமைக்குத் தொடர்ந்து ஆதரவைத் தருவோம் என்ற முடிவிலே இருந்தன. உள்துறை அமைச்சர் அத்வானி, ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வை.கோ., பா.ம.க.நிறுவனத் தலைவர் டாக்டர் ராம்தாஸ், அகாலித்தளத் தலைவர் சுர்ஜித் சிங் பர்னாலா, ஜனதாதளத் தலைவர் நவீன் பட்நாயக், தெலுங்கு தேசத்தைச் சேர்ந்த எரன் நாயுடு ஆகியோர் ஒன்றாகக் கூடி, வாஜ்பாய் தலைமைக்கு ஆதரவு தருவதாக அறிவித்தனர். அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளாவிட்டாலும், சென்னையிலிருந்து

முரசொலி மாறன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, தி.மு.கழகத்தின் ஆதரவை உறுதி செய்தார். அதன் அடிப்படையில் அத்வானி அவர்கள் குடியரசுத் தலைவரைச் சந்தித்து, 270 ஆதரவு உறுப்பினர்களின் பட்டியலை அளித்தார்.

★ ★ ★

தொடர்ந்து பல நாட்கள் டெல்லியிலேயே முகாமிட்டிருந்த ஜெயலலிதா, 24.4.1999 அன்று **குடியரசுத் தலைவரையும், சோனியா காந்தியையும், ஜோதிபாசுவையும்** மாறி மாறி சந்தித்துவிட்டு, செய்தியாளர்களிடம், "மாற்று அரசு அமைக்க காங்கிரஸ் கட்சியால் போதுமான பலத்தைத் திரட்ட முடியவில்லை. எனவே, சோனியா காந்தி தலைமையில் காங்கிரஸ் சிறுபான்மை அரசு அமைப்பதற்கு வாய்ப்புகள் முழுமையாக இல்லை. எனவே, காங்கிரஸ் கட்சி வெளியேயிருந்து அளிக்கும் ஆதரவுடன், மூன்றாவது அணி ஆட்சி அமைப்பதற்கான வாய்ப்பு மட்டுமே உள்ளது. அது குறித்து சோனியா காந்திதான் முடிவைத் தெரிவிக்க வேண்டும்!" என்றார்.

டெல்லியிலே முறையாக நடைபெற்று வந்த மத்திய அரசை- 'தேன் கூட்டைக் கலைத்தே தீருவேன்' என்று



"தேன் கூட்டைக் கலைத்தே தீருவேன்." என்று வாஜ்பாய் அரசைக் கலைத்துவிட்டுப் பலனடையச் சதி செய்த ஜெயலலிதா தானே வீழ்ந்தார்.


சூளுரைத்து, அங்கேயே முகாமிட்டு, மத்திய அரசு தன்னுடைய துணையோடு நடைபெறும் என்றும், அங்கே தன் மீதான வழக்குகளை யெல்லாம் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் நம்பிக்கையோடு, டெல்லி சென்று பல நாட்கள் முகாமிட்டிருந்த ஜெயலலிதா, தேன் கூட்டைக் கலைத்தும் தேன் கிடைக்கவில்லை என்று ஆதங்கத்தோடு சென்னை திரும்பினார்.

அதுகுறித்து செய்தியாளர்களிடம் அவர் கூறும்போது, மாற்று அரசு அமைந்திட-தான் கடுமையாகப் பாடுபட்ட தாகவும், ஆனால் அந்த முயற்சியில் தோற்று விட்டதாகவும், வெளியிலிருந்து மாற்று அரசுக்கு ஆதரவு கொடுக்கக்கூடத் தயாராக இருந்ததாகவும், ஆனால் நடைபெறவில்லை என்றும் கூறினார்.

''தினமணி'' நாளிதழ் வெளியிட்ட **கார்ட்டூன்** படத்தில், ஜெயலலிதா-சுப்பிரமணியன் சுவாமி ஆகியோரின் படத்தைப் போட்டு, அவர்கள் **''விரைவில் வருகிறது அரசியல் பூகம்பம்''** என்று சொல்லிவிட்டு டெல்லி சென்றதையும், அதன் பிறகு அந்தப் பூகம்பத்தில் அவர்களே சிக்கிக்கொண்டு, கீழே விழுவதைப் போலவும் வெளியிட்டிருந்தார்கள்.

முலயாம்சிங் யாதவ், ஜெயலலிதா போன்றவர்கள் மூன்றாவது அணி என்று ஒன்றை அமைத்து, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஜோதிபாசுவைப் பிரதமராக்கும் திட்டத்தைக் கொண்டு வர முயற்சித்தனர். ஆனால், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் உச்சகட்ட அமைப்பு அந்தக் கோரிக்கையை நிராகரித்துவிட்டது. அந்த நிலையில் சோனியா காந்தி அவர்கள் குடியரசுத் தலைவரைச் சந்தித்து, மாற்று அரசு அமைப்பதற்குத் தேவையான ஆதரவைத் தன்னால் திரட்ட முடியவில்லை என்று கூறினார்.

அதன்பின் குடியரசுத் தலைவர் பிரதமர் வாஜ்பாய் அவர்களை அழைத்தார். அவர்கள் பேசியதைத் தொடர்ந்து, பிரதமர் வாஜ்பாய் தலைமையிலான அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்று, அந்தக் கூட்டத்தில் மக்களவையைக் கலைத்து



விட்டுத் தேர்தலை நடத்தக் குடியரசுத் தலைவருக்குப் பரிந்துரை செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதனையேற்று குடியரசுத் தலைவர் நாடாளுமன்றத்தைக் கலைத்து, தேர்தல் நடத்த உத்தரவிட்டார்.

இதற்கிடையே, **''இந்தியன் எக்ஸ்பிரஸ்''** செய்தியாளர், ரெங்கராஜன் என்னைச் சந்தித்தார். அந்தப் பேட்டியின் விவரம் வருமாறு:-

செய்தியாளர்:- தேசிய முன்னணி அல்லது மூன்றாவது அணி உங்களுக்குத் தாய் வீடு என்றால், பா.ஜ.க. ஆதரவு, புகுந்த வீடு என்று கொள்ளலாமா?

நான்:- ஜனதா ஆட்சிக் காலத்தில் மொரார்ஜி தேசாயை ஆதரித்தோம். அப்போது ஜனதாக்கட்சியை வாஜ்பாயின் ஜனசங்கம் கட்சி ஆதரித்தது. அதற்குப் பிறகு, வி.பி.சிங்கின் தேசிய முன்னணியில் அங்கம் வகித்தோம். அதற்கு வெளியிலிருந்து ஆதரவளித்தது பா.ஜ.க. அந்த வகையில் வாஜ்பாய் அணியில் நாங்கள் இருப்பது புதுமையல்ல. அது குறித்து இன்னும் முடிவெடுக்கவில்லை. கூட்டணி தொடர்ந்தால், அது ஒன்றும் புதிதல்ல.

செய்தியாளர்:- திராவிட இயக்கக் கட்சிகள் ஒரு காலத்தில் பா.ஜ.க.வுடன் உறவு என்பது நினைத்துக் கூடப் பார்க்க முடியாத ஒன்றாக இருந்தது. ஆனால், அ.தி.மு.க., ம.தி.மு.க-தற்போது பா.ஜ.கவுடன் தி.மு.க.வும் உறவு வைத்துக் கொள்ளும் நிலை ஏன்?

நான்:- அரசு நிலையாக இருக்க வேண்டும்-அப்போதுதான் மக்கள் சங்கடங்களுக்கு ஆளாகாமல் இருக்க முடியும்-என்ற அந்தச் சூழ்நிலைதான்.

செய்தியாளர்:- நாட்டின் ஸ்திரத்தன்மையைக் கருதி பா.ஜ.க.வுடன் உறவு வைத்துக் கொண்டீர்களா?

நான்:- நாட்டின் ஸ்திரத்தன்மை என்பது நாட்டின் பொருளாதர ஸ்திரத்தன்மை-சமூக வாழ்வின் ஸ்திரத்தன்மை-இவைகள் எல்லாம் அடங்கியதுதான். அதற்குப் புறம்பாக ஆட்சி அடிக்கடி கவிழ்வதும், அடிக்கடித் தேர்தல் வருவதும் நல்லதல்ல-என்ற கருத்தின் அடிப்படையில்தான்.

செய்தியாளர்:- வாஜ்பாய் அரசு ஒரு வாக்கு வித்தியாசத்தில் தோற்றதால், மக்களின் அனுதாபம் அவருக்கு இருப்பதாக உங்களுக்குத் தகவல் கிடைத்துள்ளதா?




அமைச்சர் பதவிக்கு ஆசைப்பட்டு, வாஜ்பாய் அரசு கலைப்புக்கு உதவிய சுப்பிரமணியன் சுவாமி.

நான்:- பொது மக்களிடத்திலே வாஜ்பாய்க்கு நிறைய அனுதாபம் உள்ளது. ஒரு வாக்கு வித்தியாசம்கூட இல்லை. சபாநாயகரின் வாக்கைச் சேர்த்துக் கொண்டால், இரண்டு பக்கமும் **270**தான்.

செய்தியாளர்:- முரசொலிமாறனும் வை.கோ.வும் ஒரே காரில் சென்று குடியரசுத் தலைவரைச்

சந்தித்திருக்கிறார்கள். ம.தி.மு.க.வுடன் கூட்டணி ஏற்படுவதற்கு இது முன்னோடியா?

நான்:- மாறனும், வை.கோ.வும் ஒரே காரில் செல்வது வழக்கமான ஒன்றுதான். அது இடையில் தடைபட்டிருந்தது. எதிர்காலத்தில் வை.கோ. ம.தி.மு.க. என்ற நிலையிலும், நாங்கள் தி.மு.க.என்ற நிலையிலும், ஒரே வண்டியில் பயணிக்கச் சாத்தியம் உள்ளது.



டில்லியிலே முகாமிட்டு புதிய கூட்டணி அமைக்கும் சதியில் ஈடுபட்டார் ஜெயலலிதா.

செய்தியாளர்:- மூன்றாவது அணியிலே இடம் பெற்றிருந்த உங்களிடம் பேசாமல் **ஜோதிபாசு, சுர்ஜித், முலாயம், லாலு** போன்றவர்கள் அந்த அணியிலே இல்லாத ஜெயலலிதாவிடம் பேசியது குறித்து உங்கள் கருத்து என்ன?

நான்:- நான் முலாயம், லாலு பற்றி எதுவும் சொல்ல விரும்பவில்லை ஏனென்றால் ஜெயலலிதாவை அவர்கள் நேரடியாக எதிர்த்துப் பேசியவர்கள் அல்லர். அதனால் அவர்கள் ஜெயலலிதாவைச் சந்தித்தது இயல்பான ஒன்றாகக் கூட இருக்கலாம். ஆனால், சி.பி.எம்., சி.பி.ஐ., கட்சிகள் எங்களோடு ஜெயலலிதாவை-அவருடைய செயல்களை-அவருடைய அமைச்சர்கள் இருவர் பா.ஜ.க.அரசிலே இருந்து கொண்டே செய்த சேட்டைகளை-தொடர்ந்து கண்டித்து வந்தவர்கள். இந்தச் சூழ்நிலையில் குறைந்த வாக்குகளில் பா.ஜ.க. அரசு கவிழ்கிறது என்பதற்காக மாத்திரம் ஜெயலலிதாவை அவர்கள் அழைத்துப் பேசியது எனக்கு வருத்தம் அளிக்கக் கூடியதுதான்.

- இவ்வாறு செய்தியாளர் ரெங்கராஜனின் கேள்விகளுக்கு நான் பதில் அளித்தேன்.

★ ★ ★

1.4.1999 அன்று காலையில், சேலம் சென்று ஒரு தொழிற்சாலைத் திறப்பு விழாவிலே கலந்து கொள்வதற்கு ஏற்கனவே ஒப்புதல் அளித்திருந்த நான், முதல்நாள் இரவு 11 மணிக்கெல்லாம் படுக்கைக்குச் சென்று விட்டேன்.

1 ஆம் தேதி விடியற்காலை 4.30 மணி அளவில், புலனாய்வுத் துறை ஐ.ஜி.யால் மிகுந்த அவசரமான செய்தி என்ற பரபரப்புடன் எழுப்பப் பட்டேன்.

சென்னையை அடுத்துள்ள செங்குன்றம் ஏரிக்கரை உடையும் அபாயத்தில் இருப்பதாகவும்-அதன் காரணமாக சென்னையும், அதன் சுற்றுப்புறங்களும் மிகப்பெரிய அளவிலே பாதிக்கப்படக்கூடிய நிலை ஏற்படலாம் என்றும் எனக்குத் தெரிவிக்கப்பட்டது. நான் மிகவும் அதிர்ச்சியடைந்து, உடனடியாகத் தலைமைச் செயலாளருக்கும், காவல்துறை அதிகாரிகளுக்கும், பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கும், திருவள்ளூர் மாவட்டக் கலெக்டருக்கும் தொடர்பு கொண்டு, உடனே முன் எச்சரிக்கைப் பணிகளை மேற்கொள்ளும்படி-தாழ்வான பகுதியிலே மேற்கொள்ளும்படியும்-தாழ்வான பகுதியிலே உள்ள மக்களையெல்லாம் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லும்படியும் எச்சரித்த தோடு-5 மணி அளவில் தலைமைச் செயலகத் திற்கு விரைந்தேன். அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த சோ.பாலகிருஷ்ணன், அவர்களையும், அமைச்சர்கள் ஆர்க்காடு வீராசாமி, கோ.சி.மணி, தலைமைச் செயலாளர், உள்துறை செயலாளர் ஆகியாரையும் அழைத்து அவசரக் கூட்டம் நடத்தினேன்.



"தானே பிரதமராகிவிடலாம்" என்ற நப்பாசையில் நயவஞ்சக நாடகம் நடத்தினார். ஜெயலலிதா

அப்போது அந்த மாவட்ட அமைச்சராக இருந்த சுந்தரம், உடனடியாக உடைப்பு ஏற்பட்ட இடத்திற்குச் சென்று, அங்கிருந்து எனக்கு தொலைபேசி மூலம் தகவல் கொடுத்தார்.

செங்குன்றம் ஏரியில், 31ஆம் தேதி இரவு 10 மணியளவில் புழல்-அம்பத்தூர் சாலையில், வேலம்மாள் பாலிடெக்னிக் கட்டிடத்திற்கும், செங்குன்றத்தில் உள்ள சென்னை குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கும் இடையே 30 அடி அகலம், 25 அடி ஆழத்திற்கு ஏரிக்கரையில் அந்த உடைப்பு ஏற்பட்டது. அந்த உடைப்பு ஏற்பட்ட போது, ஏரியில் அதன் கொள்ளளவான 300 கோடி கன அடி தண்ணீர் முழுவதுமாக ஏரி நிரம்பி இருந்தது. இரவோடு இரவாக அதிகாரிகள் அளவில் உடனடியாக நடவடிக்கை எடுத்து, பக்கத்தில் இருந்த காவாங்குளம், கொளத்தூர், லட்சுமிபுரம், தணிகாசலம் நகர், கொடுங்கையூர் ஆகிய ஊர்களில் உள்ள மக்களுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தது. இரவில் சிறு கசிவு என்று நிலையில் இருந்ததால், பெரிய அளவில் பாதிப்பு ஏற்படாது என்று அதிகாரிகள் அன்றிரவு எனக்குத் தெரிவிக்காமல் இருந்து விட்டார்கள். நள்ளிரவுக்குப் பிறகுதான் நிலைமை மோசமாகும் போல் தெரிந்ததால், என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்கள்.


ராணுவத்திற்கும் தகவல் உடனடியாகத் தெரிவிக்கப்பட்டு, அவர்களும் தயார் நிலையில் இருக்குமாறு கூறப்பட்டார்கள். பின்னர் காலை 6.30 மணி அளவில், தலைமைச் செயலகத்திலிருந்து நானும், அமைச்சர்களும், சென்னை மாநகர மேயராக இருந்த தம்பி மு.க.ஸ்டாலினும், தலைமைச் செயலாளரும், நேராக செங்குன்றம் சென்று உடைப்பெடுத்த இடத்தைப் பார்வையிடலாம் என்று புறப்பட்டோம்

காவல்துறை அதிகாரிகள் சிலர் என்னிடம் நெருங்கி வந்து, நான் அங்கே வரவேண்டாமென்றும், மற்றவர்கள் மட்டும் சென்று நிலைமையை அறிந்து வருவதாகவும் கூறினார்கள். அவர்களின் பேச்சை அலட்சியப்படுத்திவிட்டு, அவர்களோடு சேர்ந்து நானும் புறப்பட்டுச் சென்று, உடைப்பெடுத்த இடத்தைப் பார்த்தபோது, சென்னைக்கு ஏற்படவிருந்த

மாபெரும் விபத்து தவிர்க்கப்பட்டது நன்றாகத் தெரிந்தது. ஏரியின் கரை ஒரு ஆறு அளவுக்கு இடையில் உடைந்திருந்த நிலையில் இருந்தது. ஏரியிலே இருந்த உபரிநீரை உடனடியாகக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. சென்னை, திருவள்ளூர் மாவட்டக் காவல் துறையினர், டி.ஜி.பி. சென்னை மாநகர ஆணையர் ஆகியோர் தலைமையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அப்போது உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த தம்பி **கோ.சி.மணி** தலைமையில், குடிநீர் வாரிய அதிகாரிகளும், பொதுப்பணித்துறை அதிகாரிகளும் போர்க்கால நடவடிக்கை களில் முழுமையாக ஈடுபட்டனர்.

தமிழக அமைச்சர்களாக இருந்த **தா.கிருட்டிணன், பிச்சாண்டி, ஐ.பெரியசாமி, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்** மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் **புரசை ரெங்கநாதன், செங்கை சிவம், திருவொற்றியூர் விஜயன்** ஆகியோருடன் நாடாளுமன்ற உறுப்பினர் **ஆரூண்** அவர்களும் அங்கே இருந்தார்கள்.

பொதுப்பணித்துறை அமைச்சர் தம்பி **துரைமுருகனின்** மாமனார் அதற்கு முதல்நாள் இரவு மறைந்த செய்தி கேட்டுத் துக்கத்திற்காக சென்றவர், வழியிலேயே இந்தச் செய்தியைக் கேட்டு, சென்னைக்கு வந்து கொண்டிருக்கிறார் என்ற தகவல் அறிந்து, நான் அவரைத் தொலைபேசியிலே தொடர்பு கொண்டு, இங்கே ஆபத்து தவிர்க்கப்பட்டு விட்டது என்றும்,



பிரதமராகி விடலாம் என்ற வெறியில் ஜெயலலிதா நடத்திய சதி பேரங்கள் ஏராளம்.

இரங்கல் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் என்றும் கூறி அவரைத் திருப்பி அனுப்பினேன்.

சென்னை மாநகருக்கு ஏற்பட விருந்த பேராபத்து அரசு மேற்கொண்ட முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் காரணமாகத் தவிர்க்கப்பட்டதோடு, சென்னை மாநகருக்கு எதிர்காலத்தில் குடிநீர் பற்றாக்குறை ஏற்படாத அளவிற்கும் காப்பாற்றப் பட்டது.

இதைப்பற்றி, **''நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்''** ஆங்கில ஏடு, **''அதிகாலையில் அவசரக் கூட்டம்''** என்ற தலைப்பில் வெளியிட்ட செய்தியில்:-


★ *''செங்குன்றம் புழல் ஏரியில் ஏற்பட்ட உடைப்பு பற்றிய செய்தியைக் கேள்விப்பட்டவுடன், அதிகாலை 5 மணிக்கே மாநில அரசின் தலைமைச் செயலகத்திற்கு வந்து விட்டதன் மூலம், முதல்வர் முத்துவேல் கருணாநிதிக்குப் பொழுது மிகவும் விடியற் காலையிலேயே தொடங்கிவிட்டது. 75 வயதான முதல்வருக்கு விடியற்காலை 4.30 மணிக்கு, அவரை அவசரமாக எழுப்புவதற்கான அழைப்பு, சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் முக்கிய ஏரியில் உடைப்பு ஏற்பட்டதால் உருவானது. உடனடியாக அவர், தலைமைச் செயலாளர் ஏ.பி.முத்துசாமி, காவல்துறை அதிகாரிகள், பொதுப்பணித்துறை அதிகாரிகள் ஆகியோருடன் தொடர்பு கொண்டு, ஏரி உடைப்பு அடைக்கத் தொலைபேசி மூலம் உத்தரவுகளைப் பிறப்பித்தார்.''*

★ *''காலை 7.30 மணியளவில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கு பெறுவதற்காக மாநில அரசு விமானம் மூலம் சேலத்திற்குப் புறப்படவிருந்த அவர், அதற்குப் பதிலாக தலைமைச் செயலகத்திற்குச் சென்றார். அவருடைய பாதுகாப்பு அதிகாரியும், சில அதிரடிப்படை வீரர்களும் மட்டுமே அவருடன் வந்தனர். அவருடைய செயலாளர் கூட அவருடன் வரவில்லை. அந்த அதிகாலை நேரத்தில்*

"லிப்ட்" ஆப்பரேட்டர் யாரும் தலைமைச் செயலகத்தில் இல்லாததால், அவருடைய முதல்மாடி அறைக்குச் செல்வதற்காக முதல்வரின் பாதுகாப்பு அலுவலர்களே "லிப்டை" இயக்க முயற்சித்தபோது, முதல்வரின் பரபரப்பு வெளிப்படையாகத் தெரிந்தது. அவர் படிக்கட்டுகளிலேயே ஏறிச் சென்றார். சில சமயம் ஒரே நேரத்தில் இரு படிகளையும் தாண்டிச் சென்றார்."

★ *"ஒரு கோப்பை காப்பியோ, காலைச் சிற்றுண்டியோகூட உண்ணாமல், அவர் காலை 6.30 மணிக்கே நேரடியாகச் செங்குன்றம் ஏரிக்கு உடைப்பு ஏற்பட்ட பகுதியில் நடந்துவரும் நடவடிக்கைகளை மேற்பார்வையிடச் சென்றார். காலை 8 மணி அளவில்தான் குளித்துத் தயாராவதற்காக அவர் தனது இல்லம் திரும்பினார். சம்பவம் பற்றி சட்டப் பேரவையில் தகவல் தெரிவிப்பதற்காக முதல்வர் மீண்டும் காலை 9.15 மணிக்கு தலைமைச் செயலகத்திற்கு வந்தார்"-என்று எழுதியிருந்தது.*

பேரவையில் இந்த நிகழ்வு குறித்து நான் விளக்கம் அளித்தபோது, பா.ம.க.சார்பில் பேசிய நண்பர் கோ.க.மணி, "ஏரி உடைப்பு சம்பவத்தில் முதல்வர் அவர்கள் தன்னுடைய வயதான காலத்திலேயும்கூட, நாட்டு நலன் கருதி, மக்கள்



மாற்று அரசு அமைப்பது பற்றி, மார்க்சிஸ்ட் தலைவர் ஜோதிபாசுவைச் சந்தித்துப் பேசினார் சோனியாகாந்தி.

நலன்கருதி, அதிகாலையிலேயே எழுந்து, அதிகாரிகளை முடுக்கிவிட்டு, அளப்பரியக் காரியங்களைச் செய்ததை இதயம் உள்ள யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது என்ற காரணத்தினாலேயே, "செயற்கரிய செய்வார் பெரியர், சிறியர் செயற்கரிய செய்கலாதார்" என்று சொன்னார் வள்ளுவர். அதைப் போல, அவர்களுடைய பணியைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே, இதயம் உள்ள நாங்கள் பாராட்டுகிறோம்" என்று கூறினார். எப்படியோ, சென்னைக்கு வரவிருந்த மாபெரும் ஆபத்து ஒன்று சரியான நேரத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்ட காரணத்தால் தவிர்க்கப்பட்டது.

50. ஆறாம் பாகம் ஆரம்பமாகும்!

தேர்தல் பணிகளுக்கு இடையேயும் நான் எழுதிவரும் 'நெஞ்சுக்கு நீதி' - எனது வாழ்க்கை வரலாறு மட்டுமல்ல... என் வாழ்வோடு இணைந்த இயக்கத்தின் வரலாறு!

நாடாளுமன்றத் தேர்தல் வரவிருந்ததை யொட்டி, கழகத்தின் நிர்வாகக் குழு என்னுடைய தலைமையில், சென்னையில் 1.5.1999 அன்று கூடியது. அன்றைய தினம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் முக்கிய பகுதி வருமாறு :-

★ *"இந்தியத் திருநாட்டின் 12ஆவது நாடாளு மன்றம் கலைக்கப்பட்டு, நாட்டின் அரசியல் - சமுதாய - பொருளாதாரத் துறையில் ஒரு நிலையற்ற தன்மை சூழ்ந்துள்ள ஒரு நெருக்கடியான நேரத்தில், உலகத்தின் பெரிய ஜனநாயக நாடுகளில் ஒன்றான இந்த நாட்டின் மக்கள், அடுத்து இந்த பொதுத் தேர்தலை எதிர் நோக்கியிருக்கும் ஒரு முக்கியமான கட்டத்தில், கழகத்தின் நிர்வாகக் குழு ஆழ்ந்த சிந்தனையுடன் பல்வேறு பிரச்சினைகள் குறித்து விவாதித்தது.*

★ *"ஜெயலலிதா, தி.மு.க ஆட்சியைக் கலைத்துவிட்டுத் தன்மீதுள்ள பயங்கரமான ஊழல் வழக்குகளில் இருந்து விடுபடுவதற்கு வகை செய்யக்கூடிய ஒரு மாற்று ஆட்சியை மத்தியில் அமைப்பதற்கான சுயநலம் நிறைந்த மோசடி நோக்கத்துடனேயே மத்தியில் இருந்த வாஜ்பாய் ஆட்சியைக் கவிழ்ந்திட முனைகிறார் என்ற சதித் திட்டத்தைப் புரிந்து கொண்டுள்ள தி.மு.கழகம், பாரதீய ஜனதா கட்சிமீது கொள்கை ரீதியான - மாறுபாடான கருத்துக்கள் இருந்த போதிலும், இந்தச் சதித் திட்டத்தில்*



இந்தியாவின் 12ஆவது நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது குறித்து - தி.மு.க.வின் நிர்வாகக்குழு கூடி - அப்பிரச்சினைபற்றி விவாதித்தது.

ஜெயலலிதா வெற்றி பெற விடக்கூடாது என்ற நிலை எடுத்து, அதற்கான ஒப்புதலைச் செயற்குழுவிலும் ஏக மனதாகப் பெற்று, கழகத்தின் தோழமைக் கட்சிகளின் தலைவர்களிடம் ஜெயலலிதாவின் உள் நோக்கத்தை மிகத் தெளிவாக விளக்கி உள்ளது.

★ ''திரு.முரசொலி மாறன் மார்க்சிஸ்ட் தலைவர் திரு.சுர்ஜித் அவர்களைச் சந்தித்து, சுமார் 45 நிமிடங்கள் உரையாடி, ''ஜெயலலிதா கட்சி இருக்கும் இடத்தில் தி.மு.க. இருக்க இயலாது!'' என்பதைத் தெள்ளத் தெளிவாக எடுத்துரைத்திருக்கிறார். அப்போது, அந்த விளக்கத்தை அவரும் ஏற்றுக் கொண்டதாகத் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது. இந்தக் கருத்து திரு.ஜோதிபாசுவின் முதல் அறிக்கையில் வெளியாகியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. தோழமைக் கட்சிகளின் தலைவர்களான திரு.மூப்பனார் அவர்கள், திரு.சங்கரய்யா அவர்கள், திரு.நல்லகண்ணு அவர்கள், திரு.அப்துல் லத்தீப் அவர்கள், கழகத் தலைவர் கலைஞர் அவர்களிடம் தனித்தனியாகப் பேசும் போது, ஜெயலலிதாவின் சூழ்ச்சித் திட்டத்தைப் புரிந்து கொண்டிருப்பதாகவே கருத்து வெளியிட்டனர்.

★ ''இத்தகைய கலந்துரையாடல்கள் ஏப்ரல் 10ஆம் தேதி முதல் ஏப்ரல் 15ஆம் தேதிவரையில் தனித்தனி சந்திப்பின் மூலமும், தொலைபேசி உரையாடல் மூலமும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே, டெல்லியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித்

தலைவர்களான சுர்ஜித் அவர்களும், ஜோதிபாசு அவர்களும், ஜெயலலிதா மற்றும் சுப்பிரமணியன் சுவாமி ஆகியோரைச் சந்தித்து, ஜெயலலிதாவின் முயற்சிக்குப் பச்சைக் கொடி காட்டிவிட்ட செய்திகள் பத்திரிகைகளில் படங்களுடன் வெளிவந்துவிட்டன. நம்மைக் கலக்காமல் அல்ல; நமக்குத் தெரிவிக்கப் படாமல் எடுக்கப்பட்ட இந்தத் திடீர் முடிவு நமது சுயமரியாதை உணர்வுகளைப் புண்படுத்தி, நம்மை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது.

★ அது மட்டுமின்றி, ''ஜெயலலிதா இருக்குமிடத்தில் இருக்க மாட்டோம் - என்று தி.மு.க. தலைவர் சொல்வதைப் பார்த்தால், அவருக்கு ஏதோ கோளாறு (சம்திங் ராங்)'' என்று சுர்ஜித் அவர்கள் செய்தியாளர்களிடத்தில் விமர்சித்துப் பேசிய வேதனையான நிகழ்ச்சியும் ஏடுகளில் வெளிவந்தன. இது இலட்சக்கணக்கான கழகச் செயல் வீரர்களை நேரடியாகப் புண்படுத்தியது மட்டுமின்றி, அவர்கள் எங்களை உதறிவிட முடிவு செய்துவிட்டார்கள் என்பதையும் உலகத்திற்குப் பறை சாற்றியது.


★ ''பா.ஜ.க. அரசு மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வருவதோ - அந்த அரசை எதிர்ப்பதோ - இறக்குவதோ - என்பதைத் தோழமைக் கட்சிகள்



கழக அரசைக் கலைக்க ஜெயலலிதா பின்னிடும் சதி வலையில் சிக்காதிருக்க, வாஜ்பாய் அரசை ஆதரிக்கும் முடிவுபற்றி நிர்வாகக் குழுவிலே விளக்கினேன்

கூட்டாக எடுக்கும் முயற்சியைப் பொறுத்து அமைய வேண்டும் என்கிற கருத்தினை தி.மு.க. கொண்டிருந்தது என்பதும் அனைவரும் அறிந்ததே. ஊழல் வழக்குகளில் இருந்து தப்புவதற்காக, கழக அரசைச் சீர் குலைக்கும் குறிக்கோளுடன், ஜெயலலிதா பின்னிடும் சதி வலையில் சிக்கக்கூடாது என்றுதான் வாஜ்பாய் அரசுக்கு எதிராக ஜெயலலிதா எடுக்கும் கவிழ்ப்பு நடவடிக்கைக்கு ஆதரவு அளித்திட இயலாது - என்று தொடக்கம் முதல் தொடர்ந்து கழகம் அறிவித்து வந்துள்ளது. தோழமைக் கட்சிகள் இதனை எண்ணிப் பார்த்து, எங்கள் வாதத்தை ஏற்பதுபோல உறுதி அளித்துவிட்டுப் பிறகு எங்களுக்கு அறிவிப்புகூடச் செய்யாமல், தாங்களாவே ஒரு நிலை எடுத்து விட்டதால் தி.மு.கழகம், வாஜ்பாய் அரசுக்கு ஆதரவாக நம்பிக்கைத் தீர்மானத்தில் வாக்களிக்கும் முடிவெடுக்க வேண்டியதாயிற்று.


★ ''மார்க்சிஸ்ட் உள்ளிட்ட ஐந்து கட்சிகள் தமிழகத்தில் தி.மு.க.வுக்கு அழைப்புவிடும் அதே சமயத்தில், இந்திய மார்க்சிஸ்ட் கட்சியின் பொலிட் பீரோ உறுப்பினர் திரு.பிரகாஷ் காரத் அவர்கள், ''தி.மு.க.வுடன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தேர்தல் உடன்பாடு கிடையாது'' என அறிக்கை விட்டுள்ள செய்தியும் வெளிவந்துள்ளது. (இதிலிருந்தே தி.மு.க.மீது பிரகாஷ் காரத் அவர்களுக்கு ஒரு ''அலர்ஜி'' அந்தக் காலத்திலிருந்தே இருந்திருக்கிறது என்பதைப் புரிந்து



கொள்ளலாம்.) தி.மு.க எந்த முடிவும் எடுக்காத நிலையில் அவர் நம்மை **''வெளியே தள்ளி கதவை மூடியிருப்பது''** - குதிரை மீதே தள்ளியது மட்டுமின்றி, குழியும் பறித்த கதைபோல் இருப்பதை வேதனையுடன் குறிப்பிட வேண்டியவர் களாக இருக்கிறோம்.

★ ''இந்தச் சூழ்நிலையில், பழைய தோழமைக் கட்சிகளுடன் தி.மு.க. இருப்பதா - அல்லது தான் கொண்டிருக்கும் கொள்கைகளை நிலைநாட்டிட கழகத்தின் வலிவுக்காகவும், நாட்டின் நிலைத்த தன்மை - ஜனநாயக மாண்பு - சமூக நீதிப் பாதுகாப்பு - சாதி வேறுபாடற்ற சமத்துவ நிலை - சமதர்மக் கோட்பாடு - சிறுபான்மை சமுதாய மக்களின் நிரந்தரமான நலன் - மத நல்லிணக்கம் - மாநில உரிமைகள் - தமிழ் மொழி ஆக்கம் - இவற்றுக்காகவும் தொடர்ந்து பாடுபட தமிழகத்தில் புதிய அணி அமைப்பதா என்பது குறித்தும் இந்த நிர்வாகக் குழு விரிவாக விவாதித்துள்ளது.

★ ''அரசியல் சூழ்நிலைகளில் எத்தகைய மாற்றங்கள் ஏற்பட்டாலும், தி.மு.கழகம் எப்போதும் போல் சிறுபான்மையினருக்கு, அவர்கள் நலன் நாடும் தோழனாக - தொண்டனாக - துணைவனாக - உயிரைக் கொடுத்து உதவும் பாதுகாவலனாக - இருந்து தனது வரலாற்றுக் கடமையினை ஆற்றும் என்கிற உறுதி மொழியை இந்த நிர்வாகக் குழு அவர்களுக்கு மீண்டும் அளிப்பதில் பெருமைப்படுகிறது. எனவே அவர்கள் இது குறித்துச் சிறிதும் சந்தேகப்பட வேண்டிய அவசியமில்லை - என்று இந்த நிர்வாகக் குழு அவர்களை விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறது. இனிமேல் யாரிடமிருந்தும் எந்த விளக்கமும் பெறத் தேவையில்லை. நமக்கு நாமே - நமது இலட்சியத்திற்கேற்ப - நமது சமுதாயத்திற்கேற்ப - நமது மாநிலத்திற்கேற்ப - நமது நாட்டிற்கேற்ப - முடிவினை மேற்கொள்ள வேண்டிய அவசியத்திற்கு ஆட்படுத்தப்பட்டிருக்கிறோம்.''



பா.ஜ.க.வின் ஆட்சி தொடர - தி.மு.க. வாக்களிக்க முன்வந்ததற்கு நன்றி தெரிவித்தார், வாழப்பாடி ராமமூர்த்தி.

- இதன் தொடர்ச்சியாக வெகு விரைவில் கழகச் செயற்குழுவும், பொதுக்குழுவும் கூட்டப் பெற்று, தி.மு.க கூட்டணி பற்றிய முடிவை எடுத்து அறிவிப்பது என்றும் நிர்வாகக் குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

★ ★ ★

தி.மு.கழக வரலாற்றில் இன்றளவும் சொல்லப் படுகிற ஒரு குற்றச்சாட்டாக இருந்துவரும் பா.ஜ.க.வுடன் தி.மு.க. உறவு கொள்ள நேர்ந்ததற்கான காரணத்தை அந்த நிர்வாகக்குழுவின் தீர்மானத்தைப் பார்த்தால் உணர்ந்து கொள்ள முடியும். அனைத்துக் கட்சிகளும் கூடி தி.மு.கழகத்தை பா.ஜ.க.வின் பக்கம் தள்ளி விட்டார்களே தவிர - தி.மு.கழகத்திற்கு வேறு வழியில்லாமல் செய்தார்களே தவிர - தி.மு.கழகமாக அந்த நிலையை எடுக்கவில்லை என்பதையும், சந்தர்ப்பமும், சூழ்நிலையும், பிற கட்சிகளின் செயல்பாடுகளும், அத்தகைய நிலைமைக்குத் தி.மு.க.வைத் தள்ளிவிட்டது என்பதையும் விளக்குவதற்காகத்தான் இந்த நிகழ்ச்சிகளைப்பற்றி நான் சற்று விரிவாக எழுத நேர்ந்தது.

தி.மு.கழக நிர்வாகக் குழுவின் இந்தத் தீர்மானம்கூட தன்னிச்சையாக எழுதப்பட்டு விடவில்லை. தி.மு.கழகம் தேர்தலில் போட்டியிடலாமா? கூடாதா? என்பதற்கு எப்படி


அண்ணா அவர்கள் திருச்சி மாநாட்டில் வாக்கெடுப்பு நடத்தி முடிவெடுத்தார்களோ, அதைப்போலவே நிர்வாகக் குழுவிற்கு வந்திருந்த அனைவரிடமும் ஒரு கேள்விப் பட்டியல் கொடுக்கப்பட்டு, அந்தப் பட்டியலுக்கு நிர்வாகக் குழு உறுப்பினர்கள் அளித்த பதில்களை அடிப்படையாக வைத்துத்தான் நிர்வாகக் குழுவின் தீர்மானமே தயாரிக்கப் பட்டது.

அந்தத் தீர்மானத்தைப் படித்துவிட்டுச் செய்தியாளர்கள், ''உங்களுடைய பழைய கூட்டணிக் கட்சிகளுக்கு இனி உங்கள் கதவு மூடப்பட்டு விட்டதா?'' என்று கேட்டதற்கு -

''அது உங்கள் கருத்தாக இருக்கலாம், நாங்கள் செய்யுளை எழுதியிருக்கிறோம். அதற்கு பதவுரை - பொழிப்புரை எழுத வேண்டியது உங்களுடைய திறமையைப் பொறுத்தது!'' என்று கூறினேன்.

அடுத்து செய்தியாளர், ''தி.மு.கழகம் சந்தர்ப்ப வாத இயக்கம் என்று மார்க்சிஸ்ட்டுகள் கூறியிருக்கிறார்களே...?'' என்று கேட்டதற்கு விளக்கம் அளித்தேன்.

''சந்தர்ப்பவாதக் கட்சி எது என்பதை வரலாற்றைப் படித்தவர்கள் தெளிவாகப் புரிந்து கொள்வார்கள் - இந்த நாட்டு அரசியல் வரலாற்றைப் பார்த்தால், சந்தர்ப்பவாதக் கட்சி எது என்பது நன்றாகத் தெரியும். 1998ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம், 5ஆம் தேதி முதல் 11ஆம் தேதி வரையில் கல்கத்தாவில் நடைபெற்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டில் என்ன தீர்மானம் நிறைவேற்றினார்கள்? ''மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையில், பா.ஜ.க.வும், காங்கிரசும் ஒன்றுதான். ஒன்றுக்கொன்று சளைத்ததல்ல; இரண்டையும் நாங்கள் ஒன்றுபோல் கருதி எதிர்க்கிறோம்!'' என்று தீர்மானம் போட்டவர்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர். தி.மு.க.வோடு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கலந்து கொண்ட எந்தவொரு அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கும் முஸ்லீம் லீக் தலைவர்கள் வரக் கூடாது என்று கண்டிப்பாக தெரிவித்தவர்கள் மார்க்சிஸ்ட்டுகள்!''



1999ஆம் ஆண்டு, மே மாதம், என் இல்லத்திற்கு வந்த டாக்டர் ராமதாஸ், ''இது மிகவும் மகிழ்ச்சிகரமான சந்திப்பு - கூட்டணிபற்றிப் பேசியிருக்கிறேன்'' என்று கூறினார்

- என்று கூறியதோடு, அவர்கள் எப்படிப்பட்ட சந்தர்ப்பவாதிகள் என்பதற்கான பல எடுத்துக் காட்டுகளையும் அன்றைய தினம் நான் செய்தி யாளர்களிடம் எடுத்து விளக்கினேன்.

★ ★ ★

நிர்வாகக் குழுவிற்குப் பிறகு - அதுவரை ஜெயலலிதா அணியில் இருந்த தமிழக ராஜீவ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் **வாழப்பாடி ராமமூர்த்தி** அவர்கள், 2.5.1999 அன்று என் இல்லத்தில் என்னைச் சந்தித்தார். அதன் பின்னர் செய்தியாளர்களிடம் வாழப்பாடியார் கூறும் போது, ''கடந்த நாடாளு மன்ற வாக்கெடுப்பின் போது, நாட்டின் நலன் கருதி பா.ஜ.க. ஆட்சி தொடர வேண்டுமென்பதற்காக தி.மு.கழகத்தின் வாக்குகளை அளிப்பதற்கு முன்வந்ததற்கு நன்றி தெரிவிப்பதற்காகச் சந்தித்தேன்'' என்றும், ''தமிழகத்தைப் பொறுத்தவரை தி.மு.கழகம் இந்தக் கூட்டணியிலே பங்கேற்குமானால், அது தலைமையேற்று தொடர்ந்து நடத்துவதற்கு நாங்கள் பெரிதும் விருப்பப் படுகிறோம்!'' என்று சொன்னார்.

''தி.மு.கழகத் தலைமையில் தமிழகத்தில் பா.ஜ.க., பா.ம.க., தமிழக ராஜீவ் காங்கிரஸ், ம.தி.மு.க., ஆகிய கட்சிகள் ஓரணியில் போட்டியிட்டு, பா.ஜ.க. மத்தியில் ஆட்சிப் பொறுப்பை ஏற்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும்'' என்றும் அவர் என்னைக் கேட்டுக் கொண்டார்.

வாழப்பாடியாரிடம் செய்தியாளர்கள், ''கடந்த காலத்தில் கலைஞர்மீது நீங்கள் கூறிய குற்றச் சாட்டுகள்பற்றி தற்போது என்ன கூறுகிறீர்கள்?'' என்று கேட்டதற்கு,

''அவைகளையெல்லாம் கெட்ட கனவாக மறந்து விடுங்கள்'' என்றார்.

★ ★ ★

அதற்கடுத்த நாளே, பா.ம.க. நிறுவனர் டாக்டர் **ராமதாஸ்** அவர்களும், நண்பர் **கோ.க.மணி** அவர்களும் என் இல்லத்திற்கு வந்து என்னைச் சந்தித்தார்கள். சந்திப்பிற்குப்பின் டாக்டர் ராமதாஸ் செய்தியாளர்களிடம், ''அன்று மகிழ்ச்சிகரமான சந்திப்பு'' என்று தொடங்கி, ''நாங்கள் நீண்ட நாள் நண்பர்கள். இடையில் கொஞ்ச நாள் அரசியல் ரீதியாகச் சந்திக்க முடியவில்லை. இப்போது அரசியல் ரீதியாகவும் சந்தித்திருக்கிறோம். இன்று ஆரம்பக் கட்டப் பேச்சுவார்த்தையை நடத்தியிருக்கிறோம். இந்தப் பேச்சுவார்த்தையை எங்கள் கட்சியின் மாவட்டச் செயலாளர்கள், தலைவர்களுடைய கருத்துக்களை நான் கேட்ட பிறகு, அதனுடைய அடிப்படையில் நடத்தியிருக்கிறேன்'' என்றார்.

''வருகிற தேர்தலில் தி.மு.க.வும், பா.ம.க.வும் ஒன்றாகப் போட்டியிடுமா?'' என்ற கேட்டதற்கு, ''நாங்கள் சந்திப்பது பிறகு எதற்காக? தனித் தனியாகப் போட்டியிடுவதற்கா?'' என்றார்.

அன்றைய தினம் மாலையில், மத்திய அரசின் மின்துறை அமைச்சரும், பா.ஜ.க.வின் தமிழகத் தலைவர்களில் ஒருவராக இருந்தவருமான **ரெங்கராஜன் குமாரமங்கலம்** அவர்களும்,



1999 ஜூன் மாதம், 2ஆம் நாள், அறிவாலயத்தில் 'கலைஞர் அரங்கம்' திறப்பு விழாவின் போது நடைபெற்ற பொதுக்குழுவில், தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தி.மு.க.வும் சேர்வது என்று முடிவெடுக்கப்பட்டது.



டெல்லியில் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தேர்தல் அறிக்கையை வெளியிட்டார், வாஜ்பாய்

அந்தக் கட்சியின் வேறு சிலரும் என்னைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

''பா.ஜ.க.வினால் கூட்டணி ஆட்சி மூலம் இந்தியாவிற்கு ஸ்திரமான ஆட்சியைத் தர முடியுமென்று கருதுகிறீர்களா?'' என்று பத்திரிகையாளர் கேட்டபோது, ''இப்போது அப்படித்தான் நாங்கள் கருதுகிறோம்'' என்று பதில் கூறினேன்.

★ ★ ★

நாடாளுமன்றத்தில் நம்பிக்கை கோரும் வாக்களிப்பில் ஆதரவளித்த கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்ட பா.ஜ.க. ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், பிரதமர் வாஜ்பாய் தலைமையில் **''தேசிய ஜனநாயகக் கூட்டணி''** (National Democratic Alliance - NDA) ஒன்றை உருவாக்கிட முடிவெடுக்கப்பட்டது. அந்தக் கூட்டத்தில், தேர்தல் அறிக்கையைத் தயாரிக்க **எல்.கே.அத்வானி** தலைமையில், **முரசொலி மாறன், ஜஸ்வந்த் சிங், ஜார்ஜ் பெர்னாண்டஸ்** ஆகியோர் அடங்கிய குழுவை அமைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் **வைகோ, மு.கண்ணப்பன், எல்.கணேசன், செஞ்சி ராமச்சந்திரன்** ஆகியோர், *19.5.1999* அன்று என் இல்லத்தில் என்னைச் சந்தித்தார்கள். அப்போது அவர்களுடன் கூட்டணி பற்றிப் பேசியதோடு, பின்னர்




தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தேர்தல் பிரச்சாரக் கூட்டம்

தொடர்ந்து விளக்கமாகப் பேசலாம் என்று முடிவெடுக்கப் பட்டது.

★ ★ ★

1999ஆம் ஆண்டு, ஜூன் 2ஆம் தேதியன்று, கழகப் பொதுக்குழு கூடியது. பொதுக்குழுவில் முக்கியமாக அடல் பிகாரி வாஜ்பாய் அவர்களின் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இடம்பெறுவது பற்றிய விவாதம் நடைபெற்று, முக்கியமான தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. கழகம் ஏன் அந்த நிலைமையை மேற்கொள்ள நேரிட்டது என்பதை விளக்குகின்ற வகையில் அந்தத் தீர்மான வாசகங்கள்





மீண்டும் பிரதமராகத் தோவு செய்யப்பட்ட வாஜ்பாயை, நான் வாழ்த்தினேன்

அமைந்திருந்தன. அந்தத் தீர்மானத்தின் முக்கியப் பகுதிகள் வருமாறு :-

★ *"இந்திய அரசியல், நாம் விரும்பியோ, விரும் பாமலோ இங்கிலாந்து, அமெரிக்கா போல முற்றிலும் இரு கட்சி அரசியலாக மாறா விட்டாலும், ஏறத்தாழ இரு வேறு அணிகளாக உருவாகும் நிலை ஏற்பட்டிருக்கிறது (Indian Political Party. System is becoming increasingly bi -polar) இத்தகைய சூழ்நிலை யில், இந்தியாவின் மிகவும் தொன்மையான மாநிலக் கட்சி என்கிற வரலாற்றுப் பெருமை பெற்ற தி.மு.கழகம், தான் கொண்டிருக்கிற கொள்கைக்குச் சிறிதும் பாதகம் ஏற்படாத வகையில், வரவிருக்கும் 13ஆவது நாடாளு மன்றத் தேர்தலில், தனது பாதையைத் தேர்ந்தெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.*

★ *"எனவே, எந்த அணி மாநிலக் கட்சிகளை மதித்து நடப்பதாகத் தனது நடை முறையை வகுத்துக் கொண்டிருக்கிறதோ -*

★ *"எந்த அணி யதேச்சாதிகாரமாக நடக்காமல், ஜனநாயகத்திற்கு மதிப்பளித்து, ஒத்த கருத்துடையோரை அழைத்துப் பேசும் பண் பாட்டைக் (Culture) கொண்டிருக்கிறதோ -*

★ *"எந்த அணி மாநிலக் கட்சிகளை மதிப்பதன் மூலம் இந்த 'பன்மைச் சமுதாயத்தை' (Plural Society) மதித்து, அதை ஒற்றுமையுடன் மேலும் நடத்திச் செல்லும் சாதனம் கூட்டாட்சி (Federalism) என்று கூறுகிறதோ -*

★ *"மேற்கூறியவற்றின் அடையாளமாக எந்த அணி, தனி ஒரு கட்சிக்குப் பெரும்பான்மை கிடைத்தாலும்,*

மாநிலக் கட்சிகளுடனும் சேர்ந்து கூட்டணி ஆட்சி அமைப்பதாகத் தேர்தலுக்கு முன்பே பிரகடனம் செய்திருக்கிறதோ -

★ "எந்த அணியில் எல்லைப்புறத்தில் பீரங்கிகள் முழங்கும் நெருக்கடி மிகுந்த இந்த நேரத்தில், திறமையும் - அனுபவமும் - தியாக வரலாறும் பெற்ற தலைவர் இருக்கிறாரோ -

★ "அந்த அணியோடு கூட்டுச் சேர்வதுதான் தி.மு.க. பயணம் மேற்கொள்வதற்கேற்ற நல்ல துணை என்று கருதுவதோடு; அதுவே நாட்டின் நன்மைக்கும், ஜனநாயகத்திற்கும் கூட்டாட்சி நடைமுறைக்கும் உகந்தது என்றும் உணர்கிறது.

★ "எனவே, நல்லவரும், வல்லவருமான (Gentleman Politician) ஆகத் திகழ்கிற **திரு.அடல் பிகாரி வாஜ்பாய்** தலைமையில் செயல் பட முனைந்திருக்கும் **தேசிய ஜனநாயகக் கூட்டணி** (National Democratic Alliance) என்கிற அமைப்பில், தி.மு.கழகமும் சேர்வதென்கிற முடிவினை இப்பொதுக்குழு முழு மனதுடன் ஆதரித்து ஏற்றுக் கொள்கிறது.

★ "இந்த N.D.A. என்பது முற்றிலும் புதிய அமைப்பு (A New Entry) அது முற்றிலும் மதச் சார்பற்று இயங்கும் என்பதில் நாங்கள் முழு நம்பிக்கை வைத்திருக்கிறோம்.

★ "இது, முதறிஞர் ராஜாஜி தலைமையில் இயங்கிய சுதந்திராக் கட்சியோடு முன்பு பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் இயங்கிய தி.மு.க. தேர்தல் உடன்பாடு செய்து கொண்டது போன்றதுதான்.

★ "அதை அப்போதே தந்தை பெரியாரே - ஏன்; இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும்கூட - திராவிடர் இயக்கத்தைப் பேரறிஞர் அண்ணா தனது 'குலவைரி'யான ராஜாஜியிடம் அடகு வைத்து, அடிமையாகிவிட்டதாக வர்ணித்தது நினைவிருக்கலாம்.

★ "அத்தகைய பிரச்சாரம் இப்போதும் செய்யப் படுகிறது. முடிவில் அறிஞர் அண்ணா அவர்களோ - அவருக்குப் பின் தி.மு.க.வின் தலைமைப் பொறுப்பேற்ற கலைஞர் அவர்களோ திராவிடர் இயக்க இலட்சியத்தில் கடுகளவையும், விட்டுக் கொடுக்கவில்லை என்பது வரலாற்று உண்மையாகும்.

★ "அன்று 1967இல் அந்தப் பிரச்சாரம் எப்படி மக்களால் தோற்கடிக்கப்பட்டதோ, அதுபோலவே இன்றும் இந்தப் பிரச்சாரம் கண்டிப்பாகத் தோற்கடிக்கப்படும் என்று நாங்கள் நம்புகிறோம். ஏனெனில், சமூகத் தீண்டாமை (Social Untouchability) எவ்வளவு தீங்கானதோ - அது போன்றதே அரசியல் தீண்டாமையும் (Political Untouchability) ஆகும்.

★ "இந்திய அரசியல் வானில் உதயசூரியனாய் உதித்திருக்கும் N.D.A. என்கிற புதிய அரசியல் அமைப்பு குறித்தும், இந்திய அரசு ஏறத்தாழ இரு அணிகளாக (bi-polar) மாறி வருவது குறித்தும், இந்திய ஜனநாயத்தில் அக்கறை கொண்டோர் அகமகிழ்வு கொள்ள வேண்டுமே தவிர; அதைச் சாக்காக வைத்துக் கொண்டு தெரிந்தோ தெரியாமலோ இன்னொரு வித மத வெறிக்குத் துணை போவது - தூபம் போடுவது சரியல்ல - என்கிற கருத்தினையும் இப்பொதுக்குழு பணிவன்புடன் மக்கள்முன் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறது.

★ "அது போலவே, சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த அருமைச் சகோதர, சகோதரிகளுக்கு இந்தப் பொதுக்குழு ஒன்றைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறது.

★ "சிறுபான்மையினரின் தோழனாக - தொண்டனாக - பாதுகாவலனாகத் தி.மு.கழகம் தொடர்ந்து செயல்படும் என்கிற உறுதிமொழியை தி.மு.கழகம் மீண்டும் ஏற்றுக்கொண்டு, அவர்களுக்கு ஒரு தீங்கென்றால், கழகத்தின் ஒவ்வொரு செயல்வீரனும் பொங்கியெழுந்து,

தன் உயிரையும் கொடுத்துப் போராடுவான் என்கிற வாக்குறுதியையும் மீண்டும் அளிக்கிறது.


★ "இந்தியாவில் உருவாகியிருக்கும் இந்தப் புதிய சூழ்நிலைகளைப் புரிந்து கொண்டு - புதிய கொள்கைத் திட்டத்தோடு, சுமார் நூறு கோடி மக்கள் வாழும் துணைக் கண்டம்போல் பரந்து கிடக்கும் இந்நாட்டை ஆள்வதற்குத் தகுதியும் அனுபவமும் பெற்ற ஒரு ஆற்றலாளர் தலைமையில் புதிதாக உருவாக்கப் பட்டிருக்கும் இந்த தேசிய ஜனநாயகக் கூட்டணிக்குத் தமிழக மக்கள் தங்கள் முழு ஆதரவையும் நல்கிட வேண்டும் என்று தமிழ்நாட்டு மக்களை இப்பொதுக்குழு விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறது.

★ "சில சந்தேகங்களுக்கு, விளக்கம் சொல்லிக் கொள்கிறோம் - சிறுபான்மையினருக்கு எப்பக்கமிருந்து தீங்கு வந்தாலும், அதை தி.மு.க. பார்த்துக் கொண்டிருக்காது; ஆட்சிப் பொறுப்பையும் தூக்கி யெறிந்துவிட்டு அவர்களுக்குக் கவசமாக இருக்கும் - என்கிற எங்கள் வாக்குறுதியை மீண்டும் அளித்து; இந்தத் தேசிய ஜனநாயகக் கூட்டமைப்பு என்கிற புதிய பேரமைப்பினைத் தமிழ்நாட்டு மக்களிடம் அர்ப்பணிக்கிறோம்"

★ ★ ★

2.8.1999 அன்று அண்ணா அறிவாலயக் கழக அலுவலகத்தில், தி.மு.க., பா.ம.க., தமிழக ராஜீவ் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுக்கிடையேயான தொகுதிப் பங்கீடுகள் குறித்து பேச்சுவார்த்தை நடைபெற்று, அந்த இரண்டு கட்சிகளுக்குமாக 1. மயிலாடுதுறை, 2.சிதம்பரம், 3.வந்தவாசி, 4. வேலூர், 5.தர்மபுரி, 6. பாண்டிச்சேரி, 7.செங்கற் பட்டு, 8.ராசிபுரம், 9. சேலம் ஆகிய தொகுதிகள் பகிர்ந்து கொள்ளப்பட்டன.

3.8.1999 அன்று தி.மு.கழகத்திற்கும், பா.ஜ.க. விற்கும் இடையே பேச்சு வார்த்தை நடைபெற்று, 1. திருச்சி, 2. கோவை, 3. நீலகிரி, 4.நாகர்கோவில், 5.தென்காசி, 6.சிவகங்கை



சோனியாவுடன் பேசவிருந்த கூட்டத்தை, ஜெயலலிதா புறக்கணித்தது குறித்து - 'தினமணி' வெளியிட்ட கேலிச் சித்திரம்.

ஆகிய தொகுதிகளில் பா.ஜ.க. போட்டியிடுவதென்று முடிவெடுக்கப் பட்டது.

அரக்கோணம் தொகுதியில் எம்.ஜி.ஆர். கழகத்தின் சார்பில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுவதென்றும் **ஆர்.எம். வீரப்பன்** அவர்களோடு ஒப்பந்தம் செய்து கொள்ளப் பட்டது. அதுபோலவே எம்.ஜி.ஆர். அ.தி.மு.க.வுடன் பேசி, புதுக்கோட்டைத் தொகுதியில் அந்தக் கட்சியின் சார்பில் போட்டியிட ஒப்பந்தம் செய்து கொள்ளப் பட்டது.

7.8.1999 அன்று நாடாளுமன்றத் தேர்தலில் *12* தொகுதிகளுக்கான கழக வேட்பாளர்களின் முதல் பட்டியல் அறிவிக்கப்பட்டது. *8.8.1999* அன்று தி.மு.க., ம.தி.மு.க. இடையே பேச்சு வார்த்தை நடைபெற்று, *1.* சிவகாசி, *2.*திண்டிவனம், *3.*பழனி, *4.*திருச்செங்கோடு, *5.*பொள்ளாச்சி ஆகிய தொகுதிகள் ம.தி.மு.க.விற்கு என்று பகிர்ந்து கொள்ளப் பட்டது.

*1999*ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், எந்தெந்த கட்சிகள் - எந்தெந்த கூட்டணியில் இடம் பெற்றன

என்ற விவரங்களை நான் இவ்வாறு கூறுவதற்குப் பதிலாக, 21.8.1999 தேதிய "தினமணி" தலையங்கத்தைக் குறிப்பிட்டாலே இந்த விவரங்களை அறிந்து கொள்ளலாம். அது வருமாறு:-

★ "நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான அணிகள் தமிழ் நாட்டில் அமைந்து விட்டன. இவற்றை முழுமையான கூட்டணிகள் என்று கூறுவதைவிட, தொகுதி உடன்பாடு கண்டுள்ள கட்சிகளின் அணிகள் என்பதே பொருத்தமாக இருக்கும்.

★ "தொகுதிகளைப் பிரித்துக் கொள்வதில் சற்றுத் தாமதம் ஏற்பட்டாலும், தமிழ்நாட்டில் தி.மு.க. தலைமையிலான அணியே முதலில் உருவானது. அதில் இடம் பெற்றுள்ள கட்சிகள் தொடக்கத்தில் இருந்து தமது நிலையில் தெளிவாக இருந்தன. தொகுதிப் பங்கீட்டில் பா.ம.க., பா.ஜ.க., ம.தி.மு.க., த.ரா.கா., ஆகிய ஒவ்வொன்றும் கடந்த தேர்தலில் தாம் போட்டியிட்டதைவிட, மிகுதியான தொகுதிகளைக் கேட்டுப் பெற்றுள்ளன. ஆர்.எம்.வீரப்பன், எஸ்.திருநாவுக்கரசு தலைமையிலான கட்சிகளுக்கும் ஒவ்வொரு தொகுதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால், தி.மு.க. கடந்த தேர்தலில் போட்டியிட்ட 18 தொகுதிகளில் மட்டுமே போட்டியிடுகிறது. இம்முறை தி.மு.க. தலைவரும், முதல்வருமான கருணாநிதி, பரந்த அடிப்படையிலான உறவு ஏற்படப் பெருந்தன்மையுடன் நடந்து கொண்டிருக்கிறார் என்றுதான் கூற வேண்டும். வாஜ்பாய்தான் பிரதமர் என்பதை முன்னரே சொல்ல முடிந்துள்ளது. அத்துடன், வெற்றிபெற்றால் மாநிலக் கட்சிகள் உள்ளிட்டக் கூட்டணி ஆட்சிதான் என்று திட்ட வட்டமாக அறிவித்திருப்பதும், செயல் திட்டத்தை வெளிப்படுத்தி இருப்பதும் இந்த அணிக்கு வலு சேர்த்திருக்கிறது.

★ "அ.தி.மு.க. அணி முதலிலேயே பங்கீட்டை முடித்து விட்ட போதிலும், அவர்களுக்குள் உடன்பாடு என்பது ஜெயலலிதாவின் அறிவிப்புகள்தான். அ.தி.மு.க.விடம்

அடைக்கலம் புகுந்த பல கட்சிகளுக்குத் தொகுதிகள் ஒதுக்கப்படவில்லை. இதனால் ஜனதா தளம், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் போன்ற கட்சிகள் வெளியேற வேண்டிய தாயிற்று. தனிக்கட்சி ஆட்சி அமைக்க விழையும் காங்கிரஸ், ஆட்சியில் பங்கு கொண்டு தன்னைக் காத்துக் கொள்ளத் துடிக்கும் அ.தி.மு.க., வெளியிலிருந்தே ஆதரவு தர முயலும் கம்யூனிஸ்டு கட்சிகள் என்ற இந்த அணியில் உள்ள கட்சிகளின் நிலைகள் வேறு வேறாக உள்ளன. ஆட்சிக்கு வந்தால் என்ன செய்யப் போகிறோம் என்பதை அவர்களால் தெளிவாக விளக்க முடியவில்லை''

- இதுவே **''தினமணி''** தலையங்கம்.

★ ★ ★

தி.மு.கழகம் இடம் பெற்ற தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தேர்தல் அறிக்கை வெளியீட்டு விழா, *16.8.1999* அன்று டெல்லியில் நடைபெற்றது. பிரதமர் வாஜ்பாய் அவர்கள் தேர்தல் அறிக்கையினை வெளியிட்டார். அந்த நிகழ்ச்சியில் கழகத்தின் சார்பில் **நானும்**, தம்பி **முரசொலி மாறனும்** பா.ம.க. சார்பில் **டாக்டர் இராமதாஸ்**, ம.தி.மு.க. சார்பில் **வை.கோ**, தமிழக ராஜீவ் காங்கிரஸ் சார்பில் **வாழப்பாடி ராமமூர்த்தி**, **பிஜூ ஜனதாதளம்** சார்பில் **நவீன் பட்நாயக்**, லோக் சக்தி சார்பில் **இராமகிருஷ்ண ஹெக்டே**, அகாலிதளம் சார்பில் **பிரகாஷ் சிங் பாதல்**, சமதா கட்சியின் சார்பில் **ஜார்ஜ் பெர்னாண்டஸ்**, சிவசேனா சார்பில் **பால் தாக்கரே**, தேசிய மாநாட்டுக் கட்சியின் சார்பில் **பரூக் அப்துல்லா**, மற்றும் **மேனகா காந்தி** ஆகியோர் கலந்து கொண்டோம். மேலும், மத்திய அமைச்சராக இருந்த **எல்.கே.அத்வானி**, பா.ஜ.க. தலைவர் **குஷாபால் தாக்கரே**, **சிக்கந்தர் பக்த்**, **சுர்ஜித் சிங் பர்னாலா**, **ஜஸ்வந்த் சிங்** ஆகியோரும் கலந்து கொண்டார்கள். டெல்லியிலிருந்து திரும்பிய நான், *18.8.1999* முதல் செப்டம்பர் 9ஆம் தேதிவரை, தமிழகம் முழுவதும் தேர்தல் சுற்றுப் பயணத்தில் ஈடுபட்டேன்.

22.8.1999 அன்று தி.மு.கழகத்தின் தேர்தல் அறிக்கையை வெளியிட்டேன்.

★ ★ ★

23.8.1999 அன்று விழுப்புரத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் சோனியா காந்தியும், ஜெயலலிதாவும் கலந்து கொள்வதாக பெரும் ஏற்பாடுகளும் விளம்பரங்களும் செய்யப் பட்டிருந்தன. 24ஆம் தேதி வெளிவந்த ஏடுகளில் சோனியா காந்தி கலந்து கொண்ட மேடையில், ஜெயலலிதாவிற்காகப் போடப்பட்டிருந்த நாற்காலி காலியாக இருந்ததையும் எடுத்துக்காட்டி, **''சோனியா கூட்டத்தை ஜெ.புறக்கணிப்பு''** என்றே எடுத்துக் காட்டியிருந்தார்கள்.

சோனியா காந்தியின் கூட்டத்தை ஜெயலலிதா புறக்கணித்ததற்கான காரணங்கள் என்று ஏடுகள் வெளியிட்டிருந்ததில் முதல் காரணம் - தொலைக்காட்சி பேட்டி ஒன்றில், ''ஜெயலலிதாவாக இருந்தாலும் சரி - லாலுவாக இருந்தாலும் சரி - ஊழல் குற்றச்சாட்டு நிரூபிக்கப் பட்டால், யாராக இருந்தாலும் தண்டனை அடைந்துதான் தீர வேண்டும். காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தாலும், ஊழல்வாதி களைத் தப்பவிடமாட்டோம்'' என்று **மன்மோகன் சிங்** அப்போது கூறியதுதான் என்று ஏடுகள் வெளியிட்டிருந்தன.

''தொண்டர்கள் அதிர்ச்சி; அதிருப்தி'' என்ற தலைப்பில் **''தினமணி''** ஜெயலலிதாவின் புறக்கணிப்பு பற்றி எழுதும்போது -

''ஒரே கூட்டணியில் இருந்தாலும், அ.தி.மு.க. - காங்கிரஸ் இடையே மறைமுகமாக இருந்த கசப்புணர்வு, இப்போது வெளிப்படையாகத் தெரியத் தொடங்கியுள்ளது. விழுப்புரம் கூட்டத்தில் ஜெயலலிதா பேசுவார் என்று காங்கிரஸ் சார்பில் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அதை அவர் புறக்கணித்தது தொண்டர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே அறிவிக்கப் பட்டிருந்தபடியே, 22ஆம் தேதி மதியம் 12 மணிக்கு அவர் தனது பயணத்தைத் துவக்கவில்லை. மூன்றரை மணிக்குத்தான் துவக்கினார். காங் கிரஸ் கட்சிக்கு

முக்கியத்துவம் தந்து பிரச்சாரம் செய்வதை இக்கூட்டணி ஏற்பட்ட நாள் முதலாகவே ஜெயலலிதா தவிர்த்து வருகிறார். திருச்சி கூட்டத்தில், தி.மு.க.வை சோனியா காந்தி விமர்சிக்காததும் ஜெயலலிதாவுக்குக் கோபத்தை ஏற்படுத்தியிருக்கிறது. விழுப்புரத்தில் 4 மணி கூட்டத்துக்குச் சென்னையிலிருந்து 3.21 மணிக்குத்தான் ஜெயலலிதா புறப்பட்டார். ஜெயலலிதா பேசிய கூட்டங்களில், ''காங்கிரஸ் கட்சியால் நிலையான ஆட்சியைத் தர முடியும்'' என்று அவர் பேசவில்லை. ''சோனியாதான் பிரதமர்'' என்றும் ஜெயலலிதா குறிப்பிடவில்லை என்று காங்கிரசார் வருத்தப்படுகின்றனர். ஓரணி தான் என்றாலும், இரு கட்சிகளின் தலைமைகளுக்கு இடையே உள்ள கருத்து வேறுபாடு நீங்கவில்லை. இதன் வெளிப்பாடுதான் விழுப்புரம் சம்பவம்'' என்று **''தினமணி''** எழுதியிருந்தது.

காங்கிரஸ் கட்சியோடு தேர்தல் கூட்டணி கொண்டபோது எந்த அளவிற்கு அ.தி.மு.க.வும், அதன் தலைவியும் நடந்து கொண்டார்கள் என்பதற்கு இந்த ஒரு சம்பவமே அப்போது சான்றாகத் திகழ்ந்தது.

★ ★ ★

1999ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.கழகம், பா.ஜ.க.வுடன் தோழமை கொண்டு போட்டியிட்ட காரணத்தால், தமிழகத்திலே உள்ள எதிர்க்கட்சிகள், ''தி.மு.கழகம் இனி சிறுபான்மையினருக்கு எதிராகத்தான் செயல்படும்!'' என்று பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டனர்.

அது உண்மையோ என்றஞ்சி, தமிழகத்தைச் சேர்ந்த சிறுபான்மை சமுதாயத்தினரின் பிரதிநிதிகள் சிலர் என்னைச் சந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதின் பேரில், 27-9-1999 அன்று என் இல்லத்தில் தமிழக சிறுபான்மையினர் ஐக்கியப் பேரவை - தமிழக ஆயர் பேரவை - தமிழக துறவியர் பேரவை - மற்றும் தமிழக கிறித்தவர்கள் சார்பாக சென்னை பேராயர் **அருள் தாஸ் ஜேம்ஸ்**, பாண்டிச்சேரி பேராயர் **மைக்கேல் அகஸ்டின்**, துணை ஆயர் **லாரன்ஸ் பயஸ்**,

அருட்திரு **எபனேசர் இம்மானுவேல்**, அருட் தந்தை **வின்சென்ட் சின்னதுரை**, அருட்தந்தை **சாமுவேல் ஜேக்கப்**, அருட்தந்தை **ஆரோக்கிய தாஸ்**, **எபினேசர் சுந்தர்ராஜ்**, அருட் சகோதரி **எல்சா**, அருட் சகோதரி **டெய்சி** மற்றும் **வலம்புரி ஜான்** ஆகியோர் என்னைச் சந்தித்தனர். அவர்களுடைய கோரிக்கைகளையெல்லாம் கேட்டறிந்த நான், தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தேர்தல் அறிக்கையில் -

"தேசிய ஜனநாயகக் கூட்டணி என்பது வேறு யாருடைய அரசியல் கரமும் அல்ல - அது இந்திய மக்களின் ஒன்றாக இணைந்த அரசியல் கரம். எனவே யாரும் ஒதுக்கி வைக்கப்படமாட்டார்கள். அனைவருக்கும் நீதியும் நேர்மையும் வழங்கப்படும். எவர் ஒருவருக்கும் எந்த அளவு பார பட்சமும் ஏற்படுத்தப்படமாட்டாது" என்று குறிப்பிட்டிருப்பதை விளக்கிக் கூறினேன்.

"தி.மு.கழகத்தைப் பொறுத்தவரை சிறு பான்மையினரின் நலன்கள் பாதுகாக்கப்பட என்றைக்கும் பாடுபடும்!" என்றும் உறுதியளித்தேன்.

★ ★ ★

செப்டம்பர் மாதம், 5 மற்றும் 11 ஆகிய நாட்களில் இரண்டு கட்டமாக தமிழகத்தில் தேர்தல் முடிவுற்று, அக்டோபர் 6ந் தேதியன்று வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன. தமிழகத்தில் தி.மு.கழகக் கூட்டணி 26 இடங்களிலும், அ.தி.மு.க. கூட்டணி 13 இடங்களிலும் வெற்றி பெற்றன. அகில இந்திய அளவில் தி.மு.க. இடம் பெற்ற தேசிய ஜனநாயகக் கூட்டணி 303 இடங்களிலும், காங்கிரஸ் கூட்டணி 134 இடங்களிலும், இடதுசாரிக் கட்சிகள் 42 இடங்களிலும், மற்றவர்கள் 58 இடங்களிலும் வெற்றி பெற்றனர்.

8-10-2009 அன்று டெல்லியில் நடைபெற்ற தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கூட்டத்தில் நான் கலந்து கொண்டேன். முரசொலி மாறனும், ஆர்க்காடு வீராசாமியும் என்னுடன் வந்திருந்தார்கள். குடியரசுத் தலைவரைச் சந்தித்து,

ஆட்சி அமைக்க உரிமை கோருவதென்று அந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

10ஆம் தேதியன்று, தேசிய ஜனநாயகக் கூட்டணியின் நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர்கள், வாஜ்பாய் அவர்களை நாடாளு மன்றக் கட்சித் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுத்தனர்.

12-10-1999 அன்று, டெல்லியில் உள்ள தமிழ் நாடு மாளிகையில் கழக எம்.பி.க்களின் கூட்டம் நடைபெற்று, முரசொலி மாறன் நாடாளுமன்றத் தி.மு.க. கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

13-10-1999 அன்று வாஜ்பாய் தலைமையில் புதிய மத்திய அமைச்சரவை குடியரசுத் தலைவர் மாளிகையில் பதவியேற்றது. குடியரசுத் தலைவர் கே.ஆர்.நாராயணன் பதவிப் பிரமாணமும், ரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார். பதவியேற்பு விழாவில் குடியரசுத் துணைத் தலைவராக இருந்த கிருஷ்ணகாந்த், காங்கிரஸ் தலைவர் திருமதி சோனியா காந்தி, முன்னாள் பிரதமர் குஜ்ரால் ஆகியவர்களோடு, நானும், சந்திரபாபு நாயுடு, பரூக் அப்துல்லா, பிரகாஷ் சிங் பாதல் ஆகியோரும் கலந்து கொண்டோம். கழகத்தின் சார்பில் முரசொலி மாறன், டி.ஆர். பாலு, ஆ.ராஜா ஆகியோரும், ம.தி.மு.க. சார்பில் மு.கண்ணப்பன், செஞ்சி ராமச்சந்திரன் ஆகியோரும், பா.ம.க. சார்பில் என்.டி.சண்முகம், ஈ.பொன்னுசாமி ஆகியோரும், பா.ஜ.க. சார்பில் ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்களும் மத்திய அமைச்சர்களாகப் பொறுப்பேற்றனர்.

★ ★ ★

கடந்த ஓராண்டு காலமாக வாரந்தோறும் நான் எழுதி வந்த ''நெஞ்சுக்கு நீதி''யின் ஐந்தாவது பாகம், இந்த 50ஆவது அத்தியாயத்துடன் நிறைவு பெறுகிறது. ஆட்சிப் பொறுப்பில் இருந்து கொண்டு, கோப்புகளின் மத்தியில் இதற்கும் நேரம் கிடைக்குமா என்ற அய்யப்பாட்டோடு தொடங்கப்பட்டு, இந்தக் கடைசி இரண்டு மாத காலம் என்னுடைய உடல்

நிலையையும் ஆபத்தான அறுவை சிகிச்சையினால் மோசமாக இருந்த நேரத்திலேகூட, இந்தத் தொடரைத் தொடர்ந்து எழுதி, இந்தக் கிழமையோடு தற்காலிகமாக சற்று இடைவெளி விடவிரும்புகிறேன்.

மூன்றாவது பாகம் நூலாக வெளிவந்தபோது, அதற்கு நான் எழுதிய முன்னுரையில், ''நான்காவது பாகத்தை நான் எழுதுவேனா?'' என்று கேட்டிருந்தாலும், நான்காவது பாகத்தையும் எழுதி, அது நூலாகவும் வெளிவந்து, தற்போது ஐந்தாவது பாகத்தையும் தொடர்ந்து எழுதிட இயற்கை உதவியிருக்கிறது.

இந்த ஐந்தாவது பாகத்தை 1999ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளோடு முடித்திருக்கிறேன்.

15ஆவது நாடாளுமன்றத் தேர்தலைச் சந்திக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்ற நான் - என் உடல் நிலையையும் சமாளித்துக் கொண்டு - கழக வேட்பாளர்களின் நேர்காணலில் - நான் சிறிது நேரம் மட்டுமே இருந்துவிட்டுச் சென்றால் போதும் - நாங்கள் பார்த்துக் கொள்கிறோமென்று கழக முன்னணியினர் எல்லாம் தெரிவித்த நேரத்தில் - தேர்தல் வெற்றியை எனது உடல் நிலை தடுத்து விடக்கூடாது என்பதற்காக - சக்கர நாற்காலியிலேயே ஐந்து மணி நேரம் - ஆறு மணி நேரம் என்று தொடர்ச்சியாக அமர்ந்திருந்து - கழக வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும் பணியிலே பகலிலே ஈடுபட்டு - இரவிலே இந்தத் தொடரை எழுதுகிறேன்.

எனது ''வாழ்க்கை வரலாற்று நூல்'' என்ற தலைப்பில் இது எழுதப்பட்டாலும் - என்னுடைய வாழ்க்கையோடு இணைந்து நம்முடைய இயக்கத்தின் வரலாறும், அந்த இயக்கம் இடம் பெற்றுள்ள இந்த நாட்டின் வரலாறும் ஒன்றிக் கலந்துதான் - இதனை எழுதி வருகிறேன்.

நான்காம் பாகத்தை, 1996ஆம் ஆண்டு தி.மு. கழகம் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்ததையொட்டி முடித்த நான் - இந்த ஐந்தாம் பாகத்தை, 1996ஆம் ஆண்டில்

தொடங்கி, 1999ஆம் ஆண்டு இறுதியில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலையொட்டி முடித்திருக்கிறேன்.

சில மாதங்கள் இடைவெளிக்குப்பின், பா.ஜ.க. அரசின் ஆட்சியில் தி.மு.கழகம் எந்த அளவிற்குப் பணியாற்ற முடிந்தது - அடிப்படைக் கொள்கையிலே எதிரெதிராக இருந்த நிலையில் எவ்விதம் பணியாற்றியது - பின்னர் அடிப்படைக் கொள்கை மாற்றம் காரணமாக எப்படி வெளியேற நேர்ந்தது என்பதை "நெஞ்சுக்கு நீதி" தொடரின் ஆறாவது பாகத்தில் தொடங்கி எழுதுவேன்.

(ஐந்தாம் பாகம் முற்றிற்று)

கலைஞர் அவர்களின்
90ஆம் ஆண்டு பிறந்த நாள்
விழாவின் போது
வெளியிடப்பட்டது.

